Government of Madras.

©

MADRAS GOVERNMENT ORIGINAL SERIES No. CLXIII.

சிவபுராணாதி தோத்திர மஞ்சரி

SIVAPURĀṆĀDI
TŌTTIRA MAÑJARI

SIVAPURANADI
TOTTIRA MANJARI

சிவபுராணாதி
தோத்திர
மஞ்சரி

Government Oriental
Manuscripts Library
MADRAS.

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय, हरिद्वार
पुस्तकालय

विषय संख्या
पुस्तक संख्या
आगत पंजिका संख्या

पुस्तक पर किसी प्रकार का निशान लगाना वर्जित है। कृपया १५ दिन से अधिक समय तक पुस्तक अपने पास न रखें।

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
हरिद्वार

पुस्तकालय
(विज्ञान विभाग)
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय, हरिद्वार

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
हरिद्वार

पुस्तक-वितरण की तिथि नीचे अंकित है । इस तिथि सहित १५वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए । अन्यथा ५ पैसे प्रतिदिन के हिसाब से विलम्ब-दण्ड लगेगा ।

Government of Madras.

©

COMPLEMENTARY COPY

MADRAS
Government Oriental Series.

Published under the authority
of
The Government of Madras.

CHECKED 1973
Initial

General Editor :
SRI T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Government Oriental
Manuscripts Library, Madras.

No. CLXXIII

சிவபுராணாதி தோத்திர மஞ்சரி

S'IVAPURAṆĀDI TOTTIRA MAŇJARI

EDITED BY

VIDVĀN SRI V. KUNJITAPADAM

Vidvān, Dharmapura Ādhīnam.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY,
MADRAS.

1961

Price Rs. 15-25

[illegible]
पुस्तक सं०.................
आगत सं०.................
दिनांक.................
गुरुकुल संग्रहालय कांगड़ी

INTRODUCTION

The public are perhaps aware of the fact that the Government of Madras have launched upon a scheme of publication of rare manuscripts treasured in two premier institutions of this State, namely; the Madras Government Oriental Manuscripts Library, Madras, and the Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library, Tanjore. Financial help has also been extended to Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, Madras, for similar purpose. Though the publication of rare manuscripts was started as early as 1909 by this library, only 12 works were taken up for publication till 1942. Of these, the printing of three works has not yet been completed.

Only in the year 1949—50 a regular scheme for the publication of manuscripts was prepared and accepted by the Government of Madras under the MADRAS GOVERNMENT ORIENTAL SERIES. This scheme included the manuscripts in all the South Indian Languages in which there are manuscripts in the library. Till now 158 manuscripts in different languages have been printed. Of these, 35 manuscripts are from Tanjore Maharaja's Serfoji's Saraswathi Mahal Library, Tanjore, and three from Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar. In addition, four manuscripts, three from this library and one from Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, are in the press.

All the manuscripts under the Madras Government Oriental Series were edited by various scholars drawn from different learned institutions. The publication of manuscripts under the Madras Government Oriental Manuscripts Series was resumed in the year 1950—51. All the manuscripts published under this series before 1942 were in Sanskrit. But since 1950—51 the manuscripts in other languages also were included. These are edited by the Curator with the assistance of the Pandits in the respective languages. Till now 60 works have been printed including 51 works since 1951.

The Government of India also have decided upon a programme of printing rare and useful manuscripts in the different languages of India. For this purpose the Ministry of Scientific Research and Cultural Affairs have come forward with grants-in-aid for some of manuscripts libraries maintained by the State Governments and also for certain reputed private libraries. In the year 1959—60, the Government of Madras in G. O. No. 51859 E6/59—15 Education dated 5th January, 1960 sanctioned the publication of the following seven manuscripts.

1. **Tanippadarrirattu.**
2. **Keraladesa Varalaru.**
3. **Kattabomman Varalaru.**
4. **Kalambakakkottu.**
5. **Uttara Ramayana Natakam.**
6. **Yapparumkalam.**
7. **Palamolittirattu.**

Of these, the last one was dropped as it was found to contain a large number of colloquial terms. The printing of the other six manuscripts has been completed in the Madras Government Oriental Manuscripts Series as numbers 55, 56, 67, 68, 69 and 66.

During the year 1960—61 the Government of Madras have sanctioned in Memorandum No. 47522-E6/60-9 Education dated 30—12—60 and in G. O. No. 2749 Education, dated 31—12—60 the publication of the following manuscripts.

TAMIL

1. S ivapurānatoṯtiramañjari.
2. Tiruvaymoli-Ittupraves'a Saṅgraham.
3. Vētālakkathai.
4. Homer's Iliad.
5. Saptarishi Nāḍi—Kanyā lagnam.
6. Kunṟakkudi Kumaran Perīl Kīrtanaikal.
7. Divya Probanda Akarādi.

PERSIAN

8. Tarikh-i-Hafeezullakhan.
9. Bahare-i-Azamzahe.
10. Sawanihat—i—Mumtaz.

SANSKRIT

11. Nyāyaratna Dīpāvali.
15. Nyāyasara.
13. Stotrārṇavam.
14. Brahmasiddhi.

CATALOGUES

15. Triennial Catalogue of Tamil Mss. Vol. 12.
16. do do do 13.
17. Descriptive catalogue of Marāṭhi Mss. Vol. 3.

The Government of India will be contributing 50% of the cost for the printing of the above works, which has to be completed by the end of March, 1961. With the exception of Brahmasiddhi in sanskrit and the Catalogue of the

Marathi manuscripts, the other works may be printed before the end of the financial year. Except the Catalogues and Stotrārṇava in Sanskrit, all the other works have been edited by outside scholars and hence they have been issued under the Madras Government Oriental Series as numbers 166 to 177. Stotrārṇavam in Sanskrit is edited by the Curator himself under the Madras Government Oriental Manuscripts Series as number 70.

The Government of Madras have constituted an Expert Committee for each South Indian Language in which there are manuscripts in the Government Oriental Manuscripts Library, for the purpose of selecting rare and important manuscripts for publication in the Madras Government Oriental Series Till now the following number of manuscripts have been published in different languages.

Tamil	...	34
Sanskrit	...	23
Telugu	...	20
Malayalam	...	20
Kannada	...	14
Persian	...	8
Arabic	...	1

Under the same series the number of works published from the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore is as follows.

Tamil	...	12
Sanskrit	...	10
Telugu	...	5
Marathi	...	6

The Dr. V. Swaminatha Iyer Library, Adyar has published under this series their Tamil works.

An Editorial Committee has been formed under the orders of the Director of Public Instruction, Madras, for selecting manuscripts in different South Indian Languages for publication in the Madras Government Oriental Manuscripts Series. The number of manuscripts published by this Library in this series is as follows.

Tamil	...	21
Sanskrit	...	18
Telugu	...	7
Malayalam	...	9
Kannada	...	7
Marathi	...	2
Persian	...	3

All the manuscripts in this series are edited by the Curator of this library with the help of the staff in different languages except the Stotrārṇavam that is edited by the Curator himself.

The present edition of Sivapurāṇaditōttira mañjari is based on a paper manuscript preserved in this library in three volumes described under Nos. R. 5748 (Volume I), R. 5749 (Volume II) and R. 5750 (Volume III). The size of the volume is 12½ x 8½ inches. There are 463 pages in Volume I 462 pages in Volume II and 467 pages in Volume III, with 15-20 lines on a page. This presented in the year 1955-56 by the Bhavanandam Academy, Madras.

This work contains benedictory and descriptive verses relating to the holy places in south Indian and the meanings of the verses are also given in this work.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the library and consequently the mistakes that are found in them could not be corrected by collating them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself in square brackets.

The Government of India and the Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee and the Editorial Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

It is hoped that the Government of India will be continuing their financial grant to this library year after year for undertaking the printing of other manuscripts.

Madras
21st February 1961.

T. CHANDRASEKHARAN,
Curator,
Govt. Oriental Manuscripts Library.

ஓம்

முகவுரை

பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

என்று அப்பர் அடிகள் அருளிச் செய்த மேலைத் திருத்தாண்டகத்தால் சிவபெருமான் அடியார்களைப் பாமாலை பாடப் பயில்வித்து, அவர்கள் பத்திமையாற் பாடும் பாமாலைகளைக் கேட்டு மகிழ்தலில் விருப்புடையவன் என்பது புலனாகும். அதனாற்றான் அப்பர் பாடிய திருத்தாண்டகத்தைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குத் 'திருநாவுக்கரசு' என்னும் பெயர் சூட்டியருளினார்.

மேலும், திருவாதவூரடிகள் பாடிய திருவாசகம் சிவபெருமானுக்கு மிகவும் இன்பந் தந்ததால் அவருக்கு 'மாணிக்கவாசகன்' என்னும் பெயர் சூட்டி மகிழ்ந்தார் என்னுஞ் செய்தி மேற்கூறியதை உறுதிப் படுத்துவது காண்க. இம்மட்டோ! அம்பலக்கூத்தர், மாணிக்கவாசகர் தில்லைக்கு வந்த காலையில் அவரிடம் ஒரு முதியவர் வடிவுடன் சென்று திருவாசகப் பாடல்களைக் கூறச் செய்து, அவற்றைத் தம் கையால் எழுதிக்கொண்டு, 'பாவைப் பாடிய வாயால் ஒரு கோவை பாடெ'னக் கேட்டு அதனையும் எழுதிமுடித்து, வாதவூரன் கூற அழகிய சிற்றம்பலமுடையார் எழுதியதென்று கைச் சாத்திட்டு வைத்தா ரென்றால் ஆண்டவனுக்குப் பக்தர்கள் பாடும் தோத்திரப்பாமாலையில் உள்ள ஆர்வத்தை அளவிட்டுக் கூறவும் முடியுமோ ?

சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட் கொண்ட போது, யாது கூறினாரென்பதைச் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்துள்,

"மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு" கென்றார் தூமறை பாடும் வாயார்.

என்னும் பாடலில், 'வேதம்பாடும் வாயினையுடைய சிவபெருமான் சுந்தரரைப் பார்த்து, அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் தமிழ்ப் பாடல்களைப் பாடுக' என்று கட்டளையிட்டதாகக் கூறியுள்ளார்; அதுமட்டுமா ? பாடுவதற்குப் 'பித்தா' என்று அடியும் எடுத்துக் கொடுத்தார்.

மற்றும் சுந்தரர் தில்லைசென்று தேவாரம் பாடியபோது அம்பலக் கூத்தர் ஆட்டத்தை நிறுத்தி, நின்று கேட்டார் என்று சேக்கிழார் பெருமான் அம்பலக்

கூத்தர் கூற்ருக வைத்து, ''சிவபூசை முடிவில் திருச்சிலம் பொலி கேட்பிக்கக் காலம் நீட்டிக்கும்படி யான் செய்த பிழை யாதோ''? என்று வினவிய சேரமான் பெருமாள் நாயனாருக்கு அசரீரியின் வாயிலாக, ''மன்றினிடை நங்கூத்தாடல் வந்து வணங்கி வன்தொண்டன், ஒன்றும் உணர்வால் நமைப் போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால், நின்று கேட்டு வரத்தாழ்த்தோம்'' என்று விடையிறுத்ததாகக் கூறியுள்ளார்.

இதுகாறுஞ் சிவபெருமான் அன்பர் பாடுந் தோத்திரத்தில் பெருவிருப்புடையன் என்பதை விளக்கினோம். இனி, தோத்திரப் பாடல்களைக் கேட்டு அடியவர்க்கு யாது அருள் செய்தார் இறைவன் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்றதும், முத்துப்பந்தர் முத்துச்சிவிகை பெற்றதும், படிக்காசு பெற்றதும், தந்தை யாகஞ் செய்ய ஆயிரம் பொன் பெற்றதும், திருமறைக்காட்டில் கதவை அடைக்கச் செய்ததும், பாண்டியன் உடலில் வெப்பு நோய் பற்றச் செய்ததும், அதனை நீக்கியதும், வைகை நதியில் ஏடு எதிர் ஏறிச்செல்லச் செய்ததும், தீயில் ஏடு எரியாமல் இருக்கச் செய்ததும், ஆண்பனையைப் பெண் பனையாக்கியதும், வணிகன் விடந்தீர்த்ததும், என்பைப் பெண்ணுருவாக்கியதும் முதலான அற்புதங்களெல்லாம் ஆண்டவன் திருவருளால் நிகழ்ந்தனவே.

அப்பர் நீற்றறையைக் குளிரச் செய்ததும், கொல்லும் யானையைக் குனிந்து பணியச் செய்ததும், நஞ்சை அமுதாக்கியதும், கல்லைத் தெப்பமாக்கியதும், மறைக்காட்டில் கதவைத் திறப்பித்ததும், அரவின் விடந்தீர்த்ததும், சிவபெருமானைப் பொதிசோறு சுமக்கச் செய்ததும், முதலான அருட் செயல்கள் ஆண்டவன் அருளால் நிகழ்ந்தனவே.

சுந்தரர் முதலைவாய்ப்பிள்ளையை வரவழைத்ததும், செங்கற்களைச் செம்பொன்னாக்கியதும், பன்னீராயிரம் பசும்பொன்னை ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுத்ததும், நெல்மலை பெற்றதும், காவிரி வெள்ளத்தை வழிவிடச்செய்ததும், தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலான அற்புதங்களெல்லாம் இறைவன் திருவருள் பெற்றுப் பாடிய தேவாரத் தோத்திரப்பாக்களால் நிகழ்ந்தனவே.

மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசச் செய்து புத்தர் வினாக்களுக்கு விடையிறுக்கச் செய்ததும், சிவபெருமானைப் பரியை நரியாக்கச் செய்ததும், நரியைப் பரியாக்கச் செய்ததும், பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி படச்செய்ததும் முதலான அற்புத அருள் நிகழ்ச்சிகளெல்லாம் சிவன் விரும்புந் திருவாசகத்தால் நிகழ்ந்த தென்க.

இத்தகைய தெய்வத்தன்மை வாய்ந்த பாடல்களைப் பெருமக்கள் நேரே பாடக் கேட்டு, இறைவன் மகிழ்ந்து அருள் செய்தது போலவே அப்பாடல்களை யார் அன்புடன் பாடினாலும் கேட்டு அருள் செய்வான் என்பதை, 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசனும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை' என்னுந் தொடர்களால் நமக்குச் சுந்தரர் விளக்கியுள்ளார். ஆகவே தோத்திரப் பாடல்களே இறைவன் அருளைப் பெறுதற்குச் சிறந்த கருவியா மென்பது தெற்றெனப் புலனாதல் காண்க.

ஆலய வழிபாட்டிற்குச் செல்வோர் விநாயகர், பரமசிவன், பார்வதி, முருகன் முதலான தெய்வங்களின் சந்நிதியில் சென்று வழிபடும் போது ஒவ்வொரு தெய்வத்தையுந் தனித்தனியே போற்றித் துதித்தற்குத் தோத்திரப் பாடல்கள் மிகமிக இன்றியமையாதன. இத்தகைய தோத்திரப் பாடல்களடங்கிய நூல் ஒன்றும் இதுவரையும் சீரிய முறையில் வெளிவரவில்லை. இக்குறையை நீக்கத் தமிழ் நாட்டு அரசாங்க ஏட்டுச் சுவடி நிலையத்தார் ‘புராணாதி தோத்திர மஞ்சரி’ என்னும் பெயருடைய நூலொன்றை உரையுடன் வெளியிட முற்பட்டது பெரிதும் பாராட்டத் தக்க தொன்றாம்.

புராணாதி தோத்திர மஞ்சரி என்பதற்குப் பற்பல புராணங்கள், இதிகாசங்கள், சாத்திரங்கள் முதலான நூல்களிலிருந்து தேர்ந்தெடுத்து தொகுக்கப் பெற்ற தோத்திரப் பூங்கொத்து என்பது பொருள்.

இத்தொகுப்பில் விநாயகக் கடவுள் வணக்கம் முதல் சுந்தரமூர்த்தி வணக்கம் ஈறாக 31 தலைப்புக்களின் கீழ் 1040. புராணங்களிலிருந்து தேர்ந்து எடுக்கப் பெற்ற 1274 பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விரிவைப் பொருளடக்கம் என்ற பகுதியிலும், நூலினுள்ளுங் கண்டு கொள்க.

இத் தோத்திர மஞ்சரி பெறுதற்கரிய ஒரு கருவூலமாகும். இந்நூலில் நூற்றுக் கணக்கான கவிஞர்களின் கவித்திறன்களையும், கற்பனா சக்திகளையும் கண்டு மகிழலாம். சொற்சுவை பொருட் சுவைகளைச் சுவைத்து இன்புறலாம். பற்பல சிவத் தலங்களிலுள்ள கடவுளர்களின் பெயர்கள், அற்புதங்கள், ஐதிகங்கள், வரலாறுகள் முதலானவற்றை அறியலாம். பாக்கள் தோறும் பக்திச்சுவை பெருக்கெடுத்தோடுவதைக் காணலாம்.

இத்தகைய அற்புதமான தோத்திரமாலையை அடியேனை ஆய்ந்து அச்சிட ஏட்டுச் சுவடி நிலையத்தலைவரவர்கள் ஆணையிட்டார்கள். எனக்குத் தோத்திர நூல்களில் சிறிது பயிற்சியும் ஆர்வமும் உண்டாகலின் அப்பணிதலை மேற் கொண்டேன். ஆனால், காலந்தான் ஆராய்வதற்குப் போதவில்லை.

இத்தோத்திர மஞ்சரியைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும், உரையெழுதினோரும் இன்னாரென்று எழுதப் பெறவில்லை. ஆனாலும், இது சென்னையிலுள்ள பவாநந்தர் கழகத்திலிருந்து கிடைத்ததாக ஏட்டுச் சுவடி நிலையத்தலைவர் உயர்திரு. டி. சந்திரசேகர ஐயர் எம். ஏ., எல். டி., அவர்கள் கூறினார்கள். ஆகலின், இவ்வரிய நூலைத் தொகுத்துதவிய, அக்கழகத்தார்க்குத் தமிழகச் சார்பில் நன்றி கூறுங்கடப்பாடுடையேன், இந்நூல் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தொகுக்கப் பெற்றிருக்கலாமென்று தெரிகின்றது.

இத்தோத்திரமஞ்சரியுள் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கல்லாடம் முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருமயிலைத் தலபுராணம் ஈறாகவுள்ள நூல்களின் பாடல்கள் காணப்படுகின்றன. இருபத்திரண்டாவது தலைப்பின் கீழமைந்துள்ள திருமகள் வணக்கக் காசி காண்டச் செய்யுட்கள் ஏழுங் கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந்தகையனவாயுள்ளன. இதில் அகத்திய முனிவன் திருமகளைத் தோத்திரஞ்செய்வதும் அது கேட்டுத் திருமகள் வரங்கொடுப்பதுங் கூறப் பெற்றுள்ளன.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் மேலனவாக அமைந்துள்ள வணக்கப் பாடல்களும் அற்புதமான கற்பனை நயமும் பத்திச் சுவையும் நிறைந்து விளங்குகின்றன. இப்பாடல்கள் கற்போருள்ளத்தைக் கவருந் தன்மையன. ஏனைய விநாயகர், பரமசிவன், பார்வதி, முருகன், நந்திதேவர் முதலியோர் மேலதாக அமைந்துள்ள பாடங்களின் அழகுக்கோர் அளவேயில்லை.

இத்தோத்திர மஞ்சரிக்குப் பழுத்த சைவப்புலவர் ஒருவரால் பொழிப்புரையும், ஆங்காங்கே அரும்பத விசேடவுரையும் 1048 பாடல்கள் வரை எழுதப் பெற்றுள்ளன. என் சிற்றறிவுக் கெட்டியவரை உரை எழுதப் பெறாத பாடல்களுக்கு உரை யெழுதியுள்ளேன். அதற்குள் விரைவில் குறிப்பிட்ட காலத்தில் நூல் அச்சாகி முடியவேண்டுமென நூல் நிலையத்தலைவரவர்கள் தெரிவித்தபடியால் சில பாடல்களுக்கு உரையெழுதாமல் விடப்பட்டது.

தொல்காப்பியம், சங்கற்ப நிராகரணம் போன்ற நூல்களிலிருந்து எடுக்கப் பெற்றதாக வந்துள்ள பாடல்கள் தொல்காப்பிய மென்னும் இலக்கண நூலிலும், சங்கற்ப நிராகரணம் என்னும் சித்தாந்த நூலிலுங் காணப் பெறவில்லை. ஆயினும், இப்பாடல்கள் இப்பெயருடைய வேறு எந்த நூல்களிலிருந்து தொகுக்கப் பெற்றன வென்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய நூல்களுங் கிடைக்கவில்லை, காலமும் போதவில்லை. ஆதலால் அவை அப்படியே விடப்பட்டன.

எல்லாவகைகளிலும் சிறப்புற்று விளங்கும் இத்தோத்திரமஞ்சரி தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தக்க அரியநூல் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறந்த தெய்விகத் தோத்திர நூலை அச்சிடும் பணியில் அடியேனை ஆட்கொண்டு வாய்ப்பளித்த தமிழ்நாட்டு அரசினர் கீழ்த்திசைக்கலை ஏட்டுச்சுவடி நூல்நிலையத் தலைவர் உயர்திரு T. சந்திரசேகரன் M.A., L.T., அவர்கட்கும், இந்திய அரசினர்க்கும், தமிழ் நாட்டு அரசினர்க்கும் எனது உளமார்ந்த நன்றியறிதலையும், வணக்கத்தையுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இத்தொண்டினைப் புரியத் தோன்றாத் துணையாயிருந்து ஊக்கிய இறைவனை மனமொழிமெய்களால் வணங்கி வாழ்த்துகின்றேன்.

இதிற்காணுங் குற்றங் குறைகளை மன்னிக்குமாறு அறிஞர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

27—2—1961.

இங்ஙனம்,
வெ. குஞ்சிதபாதம்.

ஆராய்ச்சி செய்வதற்குக் கிடைத்த நூல்கள்

1. திருக்கழுக் குன்றப் புராணம்
2. சிவதருமோத்தரம்
3. திருமயிலைத்தல புராணம். (தணிகாசல முதலியார்)
4. சங்கரநாராயண சுவாமிகோயிற் புராணம்
5. திருமயிலைத்தல புராணம் (அமிர்தலிங்கத்தம் பிரான்)
6. உபதேச காண்டம்
7. சூதசங்கிதை
8. சீகாளத்திப் புராணம்
9. கடம்பவனப் புராணம்
10. விருத்தாசல புராணம்
11. திருவாப்பனூர்ப் புராணம்
12. திருக்காளத்திப் புராணம்
13. விநாயக புராணம்
14. பெரிய புராணம்
15. கந்த புராணம்
16. காஞ்சிப் புராணம்
17. திருவிளையாடற் புராணம்
18. சம்பந்தர் தேவாரம்
19. அப்பர் தேவாரம்
20. சுந்தரர் தேவாரம்
21. திருவாசகம்
22. திருக் கோவையார்
23. சிவஞான சித்தியார் (மூலம்)
24. சிவப்பிரகாசம் (மூலம்)
25. திருவருட்பயன்
26. சிவஞான சித்தியார் (திருவிளங்கம் உரை)
27. சிவப்பிரகாசம் (திருவிளங்கம் உரை)
28. சேக்கிழார் புராணம்
29. மகா பாரதம்
30. நைடதம்
31. பிரபுலிங்கலீலை

சிவபுராணாதி தோத்திர மஞ்சரி

பொருளடக்கம்

வரிசை எண்		புராணங்களின் தொகை	பாடற்றொகையின் தொடர்ச்சி எண்	தனித் தனியாக பாடற்றொகை
1.	விநாயகக் கடவுள் வணக்கம்	160	1 —249	249
2.	பரசிவ வணக்கம்	112	250—421	172
3.	பராசத்தி வணக்கம்	110	422—588	137
4.	சபாநாயகர் வணக்கம்	75	559—647	89
5.	சிவகாமியம்மை வணக்கம்	41	648—688	41
6.	தட்சிணாமூர்த்தி வணக்கம்	30	689—719	31
7.	வைரவக் கடவுள் வணக்கம்	31	720—751	32
8.	துர்க்கா தேவி வணக்கம்	4	752—755	4
9.	வீரபத்திரக்கடவுள் வணக்கம்	11	756—767	12
10.	காளியம்மை வணக்கம்	3	768—770	3
11.	சுப்பிரமணியக் கடவுள் வணக்கம்	118	771—916	146
12.	தெய்வயானையம்மை வள்ளியம்மை வணக்கம்	5	917—927	11
13.	திருநந்திதேவர் வணக்கம்	58	928—985	58
14.	இடபதேவர் வணக்கம்	1	986—	1
15.	ஐயனார் வணக்கம்	1	987—	1
16.	நவவீரர் வணக்கம்	5	988—992	5
17.	வீரவாகு தேவர் வணக்கம்	2	993—994	2
18.	வேல்மயில் சேவல் வணக்கம்	3	995—997	3
19.	மயில் வணக்கம்	1	998—	1
20.	சேவல் வணக்கம்	1	999—	1
21.	திருமால் வணக்கம்	11	1000—1011	12

வரிசை எண்		புராணங் களின் தொகை	பாடற் றொகையின் தொடர்ச்சி எண்	தனித் தனியாகப் பாடற் றொகை
22.	திருமகள் வணக்கம்	5	1012—1022	11
23.	பிரமதேவர் வணக்கம்	1	1023—	1
24.	கலைமகள் வணக்கம்	22	1024—1045	22
25.	சூரியமூர்த்தியாதியர் வணக்கம்	3	1046—1048	3
26.	கங்காதேவி வணக்கம்	1	1049—	1
27.	காவேரியம்மை வணக்கம்	1	1050—	1
28.	துவாரபாலகர் வணக்கம்	1	1051—	1
29.	திருஞானசம்பந்த மூர்த்தி வணக்கம்	74	1052—1125	74
30.	வாகீசமூர்த்தி வணக்கம்	74	1126—1199	74
31.	சுந்தரமூர்த்தி வணக்கம்	75	1200—1274	75
		1040		1274

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

சிவபுராணாதி தோத்திர மஞ்சரி

காப்பு

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு *வாணிபதம் நாடு.

(எ-து.) ஆனைமுகன் - விநாயகக் கடவுளையும், ஆறுமுகன் - சுப்பிரமண்யக் கடவுளையும், அம்பிகை - பார்வதியம்மையையும், பொன்னம்பலவன் - நடராசப் பெருமானையும், ஞானகுரு - (குருநாதனாகிய) தட்சிணாமூர்த்தியையும், வாணி - சரச்சுவதியம்மையையும் (ஆயவிவர்களுடைய), பதம் - திருவடிகளை, நாடு - துதிப்பாயாக. (எ - று.)

விநாயகப் பெருமானையும், சுப்பிரமண்யக் கடவுளையும், பார்வதியம்மையையும், தட்சிணாமூர்த்தியையும், சரச்சுவதியம்மையையும் ஆய இவர்களுடைய பாதங்களைத் துதிப்பாயாக வென்பதாம். (எ - று.)

விநாயகக் கடவுள்

1. பெரிய புராணம்

1. எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துளி ருத்துவாம்.

(எ - து.) எடுக்கும் - எடுத்துச் சொல்லும்படியான, மாக்கதை - பெரிய புராணக் கதைகள், இன்தமிழ்ச் செய்யுளாய் - இனிமையான தமிழ்ப்பாக்களாக, நடக்கும் மேன்மை - (நாவில்) நடைபெற்றுவருங் கீர்த்தியை, நமக்கு அருள் செய்திட - நம்மவர்க்கெல்லாங் கிருபா நோக்கஞ் செய்திட, தடக்கை ஐந்து உடை - ஐங்கரங்களையுடைய, தாழ்செவி - பரந்த செவிகளும், நீள்முடி - நீண்ட திருமுடியுமுடைய, கடக்களிற்றை - விநாயகக் கடவுளை, கருத்துள் இருத்துவாம் - சிந்தை செய்வோம். (எ - று.)

எடுத்துச் சொல்லும்படியான பெரிய புராணக் கதைகள், இனிமையான தமிழ்ப் பாக்களாக, நாக்கில் நடைபெற்று வருங் கீர்த்தியை, நம்மவர்க்கெல்லாங் கிருபா நோக்கஞ் செய்திட ஐங்கரங்களையுடைய், பரந்த செவிகளும், நீண்ட திருமுடியுமுடைய விநாயகக் கடவுளைச் சிந்தை செய்வோம்.

---

* வாணியையுள் நாடு—என்ற பாடபேதமும் உண்டு.

2. கந்தபுராணம்

2. திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

இதன் பொருள் : விளங்கும் பத்துக் கைகளையும், செப்பமாகிய முகங்கள் ஐந்தையுமுடையனாகிய சிவபிரானது நிலமாகிய தேரிற் பூட்டப்பட்ட (சக்கரம்) உருளையாகிய, (தாமரை நாயகன்) தாமரைக்குத் தலைவனாகிய சூரியன் வயிற்றினிடமாக, அசங்கச் செய்யாநிற்கும் உதர பந்தனமாகிய நாகரத்தினம் போன்று உறைகின்ற விகடச் சக்கர விநாயகருடைய நிலைபேறான திருவடிகளைத் துதிப்போம் என்றவாறு.

(அரும்பதம்) திகழ் + தசக்கரம் = திகட சக்கரம்.
சகடம் = சக்கரம்.
அகடு = வயிறு.

குறிப்புரை :— *விகடசக்கர விநாயகர் என்னும் பெயர் காஞ்சிபுரத்திலுள்ள விநாயகருக்கு உரிய பெயராகும். அப்பெயர் வந்ததற்குரிய வரலாற்றைக் கீழே காண்க:

தக்கன் யாகம் அழிந்தபொழுது விட்டுணு விடுத்த சக்கரத்தை வீரபத்திரக் கடவுள் பூண்ட வெண்டலையொன்று கௌவியது. விட்டுணுவின் பொருட்டு அச்சக்கரத்தைப் பெறக்கருதி, அவருடைய சேனாபதியாகிய விடுவசேனன் காஞ்சிபுரத்திற்சென்று, சிவலிங்கந்தாபித்துப் பூசை செய்தான். வீரபத்திரக் கடவுள் அங்கெழுந்தருளிய பொழுது விடுவசேனன் அச்சக்கரத்தைத் தரும்படி பிரார்த்திக்க, அவர் "சக்கரம் நமது கையிலில்லை; கபாலம் கௌவியதாகலின் எவ்விதத்திலாயினும் அதுவே தரப்பெற்றுக்கொள்" என்றார். விடுவசேனன், காலிரண்டையும் கையிரண்டையும் வளைத்து வாயையும் நாசியையும் கண்களையும் சுரித்து அசைத்துப் பற்கள் தோன்ற விகடக் கூத்தாடினான். அதனைக் கண்டோரெல்லாரும் நகைக்க, வெண்டலையும் நகைத்தது. நகைத்தலும், சக்கரம் அதன் வாயினின்றும் பூமியில் விழ, விநாயகக் கடவுள் அதனை விரைந்து கவர்ந்துகொண்டு ஒன்றும் அறியாதார் போன்றிருந்தார். விடுவசேனன் அதுகண்டு, அவர் திருமுன்னும் விகடக்கூத்தாடி வேண்ட, அவர் அச்சக்கரத்தை அவன் கைக்கொடுத்தருளினார். இக்காரணத்தால் அவ்விநாயகக் கடவுளுக்கு விகட சக்கர விநாயகர் என்னும் திருநாமம் உண்டாயிற்று.

3. உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

(இ – பொ.) சென்னியிலே கிரீடம் விளங்கவும், நெற்றியிலே பட்டம் பிரகாசிக்கவும், ஒன்றியாயுள்ள கோட்டிலே வைரக் கற்கள் பதித்த கிம்புரி ஜொலிக்கவும், உண்மையான செவிகளென்னும் சாமரைகள் தொங்கவும், சிறப்பமைந்த

யானை முகங்கொண்டெழுந்தருளிய காஞ்சி மாநகரத்துள்ள விகட சக்கர கணபதிக்குப் பத்திமை புரிவாம். (எ - று.)

(அ - ப.) ஓடை - நெற்றிப்பட்டம்.
கிம்புரி - யானையின் தந்தத்தில் கட்டும் பூண்.

4. மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

(இ - பொ.) பிரபஞ்சத்தின்கண் பிறப்பாகிய அல்லல் தீரவும், கோரிக் கொண்ட வரமெல்லாம் சுலபமாகச் சித்தியாகவும், நெற்றிக் கண்ணுடையதோர் யானை மாமுகக் கடவுளின் மலரடிகளைப் பணிந்து துதிப்போம். (எ-று.)

(அ - ப.) மாசு = குற்றம்.
பண்ணவன் = கடவுள்.

---

3. உபதேச காண்டம்

5. குழவி வெண்பிறை மிலைச்சியோற் குணித்தமா தவத்தி
னிழைத டம்புன லருவிதா ழிமயமீன் றளித்த
மழைம தர்த்தகண் மரகதப் பசும்பிடி பயந்த
தழைம டற்செவித் தந்திபொற் சரணமே சரணம்.

(இ - பொ.) இளமைத் தன்மை வாய்ந்த வெள்ளிய சந்திரனைத் தரித்தருளும் சிவபிரானைக் குறித்தியற்றிய சிறந்த தவத்தினால், ஊறுகின்ற மிக்க ஜலமானது அருவியாயொழுகும் இமயமலை பெற்ற, குளிர்ச்சியையும் களிப்பையுமுடைய நேத்திரங்களைக் கொண்ட மரகதமணியை யொத்த பசுமை நிறம் அமைந்த பெண் யானை போலும் உமாதேவியார் ஈன்றருளிய, தழைத்த மடலை நிகர்த்த செவிகளமைந்த யானைமுகக் கடவுளின் பொன்மயமான திருவடிகளே எமக்குப் புகலிடம். (எ-று.)

---

4. கோயிற் புராணம்

6. தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளு
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற் பகம்போற்றி.

(இ - பொ.) மன்னவனாகிய சிவபெருமான் நடனஞ்செய்கின்ற சிதம்பரத்தில், மதிலோங்கிய மேற்குக் கோபுர வாயிலுக்கு முன்பாகத் தனக்குத் தானே வொப்பாகிய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளையும், தளிரினுஞ் சிறந்த கரங்களையும், ஒளியுடைய முகத்தினையும், கொம்பினையும் பொருந்திய முக்கண் மலர்களையும் உடையவராய் மிக்க அழகுடன் விளங்குகின்ற கற்பக விநாயகக் கடவுளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) சாகை = புஜம், - கரம்.

---

5. தேவாங்க புராணம்

7. புகழ்வளர் மதிதோய் பொலங்குவட் டிமவான்
பொருப்பிடைப் பிறந்தணி பொருந்தித்
திகழ்தரு கயிலைப் பவளநன் னிறத்துத்
திறற்பெருங் களிற்றினைச் சேர்ந்து
தகரமென் கூந்தற் பசும்பிடி யீன்ற
தடங்கரத் தருண்மதத் தனிக்கோட்
டகல்செவிச் சிறுகட் குஞ்சரக் கன்றி
னடிமலர் முடிமிசை யணிவாம்.

(இ - பொ.) கீர்த்தி மிகுந்த சந்திரனுறையும் பொன்பொடிகளையுடைய சிகரங்களுள்ள இமயமாகிய பெரிய மலையின்கண்ணவதரித்து, அழகு வாய்ந்து விளங்குகின்ற கயிலை மலையினிடத் தெழுந்தருளிய, பவளம் போலும் நல்ல வண்ணத்தையுடைய, வலிமையும் பெருமையுமுடைய ஆண் யானையாகிய சிவ பெருமானைக்கூடி, மயிர்ச்சாந்தை யணிந்த மென்மையாகிய கூந்தலையுடைய, பசுமை நிறத்தையுடைய பெண் யானையாகிய பார்வதி தேவியார் பெற்றருளிய, விசாலமாகிய துதிக்கையும், கிருபையாகிய மதமும், ஒற்றைக் கொம்பும், (அகல் செவி) பெரிய காதுகளும், சிறிய கண்களுமுடைய யானைக்கன்றாகிய விநாயகக் கடவுளுடைய தாமரை மலர் போலுந் திருவடிகளை எமது சிரசின்மீது ஆபரணமாக அணிந்து கொள்வோம். (எ-று.)

(அ - ப.) பொலன் = பொன்பொடி.
குவடு = சிகரம்.
இமவான் = இமயம்.
பொருப்பு = மலை.
குஞ்சரம் = யானை.

8. எத்திக்குஞ் சரமாதி மற்றெவையு மீன்றெடுத்த
சத்திக்குஞ் சரவிதழி வேணியற்கு மோர்தனயன்
முத்திக்குஞ் சரம்பெருவித் தெனவாகி முளைத்தெழுந்த
சித்திக்குஞ் சரமுகனை நாடோறுந் துதிசெய்வாம்.

(இ - பொ.) எந்தத் திசைகளையும், சரவுயிர் முதலாக அசர வுயிரிறுதியாக எப்பொருள்களையும் பெற்றருளிய பார்வதி தேவியாருக்கும், கொன்றைப் பூமாலையை யணிந்த சடையையுடைய சிவபெருமானுக்கும் ஒப்பற்ற குமாரனாய்த் தம்மையடைந்தோர் பெறும் வீட்டிற்கு மணிமாலைபோன்ற பெரிய விதையென்னும் விதமாகித் திருவவதாரஞ்செய்து விளங்கா நின்ற, யானை முகத்தையுடைய சித்தி விநாயகனை ஒவ்வொரு நாளும் தோத்திரஞ்செய்வோம். (எ - று.)

(அ - ப.) வேணி = சடை.
தனயன் = மகன்.

9. பிஞ்சுமதிச் சடர்மகுடப் பெருமானைப் பிரியாத
வஞ்சியிம் வான்றவத்தின் வருபேடை மயிலுதவு
மஞ்சிறைவண் டிரைத்துவிழு மருவிமத மொழுகுகவுட்
குஞ்சரவெம் புகர்முகத்துக் குரிசிலடி யிணைதொழுவாம்.

(இ - பொ.) இளம்பிறையணிந்த சடைமுடியினையுடைய சிவபெருமானை இணைபிரியாத பெண்ணும், இமவான் தவத்தில் வந்த பெண்மயில் போன்றவளுமான பார்வதி யளித்த, அழகிய சிறகினையுடைய வண்டுகள் ஒலித்துக்கொண்டு மொய்க்கும்படியாக மதசலம் ஒழுகும்படியான கதுப்பினையுடைய விரும்பத்தக்க யானைமுகமுடைய விநாயகக் கடவுளைத் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) வஞ்சி = பெண்.
புகர் = கபில நிறம்.
குரிசில் = ஆண்களிற்சிறந்தவன்.—ஈண்டு விநாயகரைக் குறித்தது.

---

6. சேக்கிழார் நாயனார் புராணம்

10. வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

(இ - பொ.) வானுலகத்தாரும், மண்ணுலகத்தாரும் வாழவும், வேதங்கள் வாழவும், சிறப்பைத்தருஞ் செவ்விய தமிழ்மொழி உலகத்தின்கண் விளங்கவும், இச்சை, ஞானம், கிரியை என்னும் மும்மதத்தனாய், ஐங்கரங்களை யுடையவனாய், முக்கண்ணனாய், தொங்குகின்ற வாயனாய் (உள்ள) ஆனைமுகனாகிய விநாயகக் கடவுளைப் பாடிப் பணிவாம். (எ-று.)

(அ - ப.) பான்மை = சிறப்பு, குணம்.
பரவல் = வழிபடல்.

11. மலரவனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றின் நிரைமலர்த்தா ளிணைபோற்றி.

(இ - பொ.) பிரம்மவிஷ்ணுக்கள் காணமுடியாமல் மதிமயங்கவும், வியாக்கிரபாதரும் பதஞ்சலியுங்கண்டு தரிசிக்கவும், சடாபாரத்தையுடைய பரம சிவன் குலாவி நடிக்கின்ற சிதம்பரத்தின் மேலைக்கோபுர வாயிலில் எழுந்தருளிய கற்பக விநாயகரது பாதாரவிந்தங்களைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) புலிமுனி = வியாக்கிரபாதர்.
குடதிசை = மேற்குத்திக்கு.
நிலவிய = எழுந்தருளிய.

7: திருவாதவூரர் புராணம்

12. பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற் பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றாடிய பரமன் சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற் றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த கடவுளை நினைந்துகை தொழுவாம்

(இ - பொ.) பவழமலையின் மேல் நிலவு பிரகாசித்தாற்போல, விசாலமான திருநீற்றினழகு பசிய உடம்பில் துவள, மகேஸ்வரியுடன் நின்று நடனம் ஆடிய பரமசிவனுடைய புதல்வனை, மகாபாரதத்தை வெள்ளிய தந்தங்களிலொன்றை யொடித்துத் தமது திருக்கரமொன்றில் (எழுத்தாணியாகத்) தாங்கி, வடமேருவை (ஏடாகக்) கொண்டெழுதும், யானையினது திருமுகமுடைய விநாயகக் கடவுளைத் தியானித்து, இருகரங்களாலும் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) வரை = மலை.
திவளல் = துவளல்.
தவளம் = வெண்மை.

8. அருணகிரிப் புராணம்

13. கரண மாபுல னணவ காமிய
மரண மாகத் திகழ்ந்த மருப்புடன்
முரண மாகைச் சிலம்படி முண்டக
மரண மாவெம் மிதயத் தணிகுவாம்.

(இ - பொ.) கருவி கரணாதிகளையும், ஐம்புலன்களையும், ஆணவ காமிய மாயா மலங்களையும் நசிக்கும்படியாகப் பிரகாசிக்காநின்ற தந்தங்களோடுங் கூடிய யானைமுகக் கடவுளது சிலம்பணிந்த திருவடித் தாமரையை எம்முடைய இருதயத்தில் காவலாக அணிவாம். (எ - று.)

கரணம் 4: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
புலன் 5: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
(அ - ப.) முரண் = மாறுபாடு.
மருப்பு = தந்தம்.

14. சாதக வல்வினை தானறவே தாரக மாமுன தாளருளாய்
போதக னெல்லியி னாடிடுவான் பூரண ணான்மறை பாடிடுவான்
மோதக னன்புமை யாள்கணவன் மூவுலகும் முயமுன் னுதவும்
வேதக செல்வவி நாயகனே வேறும லாதவி நாயகனே.

(இ - பொ.) பிறப்பிறப்பாகிய துன்பங்கள் பற்றறும்படியாக, ஆதாரமுடைய கால்களை மாற்றியருளி (திருவம்பலத்தின்கண்ணே) நடிப்பவனும், பூரணமான நான்கு வேதங்களையும் பாடுபவனும், இணக்கமாகிய அன்புடைய பார்வதி பாகனும் (ஆன பரமசிவன்) தாம் மூன்று லோகங்களும் உய்யும்படியாக உதவியருளிய யானைமுகமுடைய செல்வவிநாயகக் கடவுளே தமக்குமேல் வேறொரு நாயகனில்லாத விநாயகன். (எ - று.)

(அ - ப.) மோதகம் = இணக்கம்.

9. திருவிளையாடற் புராணம்

15. உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வருவினைக டீர்ப்பாம்.

(இ - பொ.) மனமென்று சொல்லுங்கூடத்திலே, மனவுறுதி யென்னுங் கட்டுத்தறியை நட்டு, ஒழித்தற்கரிய வுண்மை யன்பென்னுஞ் சங்கிலியைக் கட்டுத் தறியிற் பூட்டி, அதனில் அகப்படுத்தி, (தீமைசெய்தலில்)அஞ்சுதலிலாத ஆணவ மலத்தோ டொன்றாகிய வஞ்ச வினைகளையுடைய சீவபோதமாகிய கவளங்களை யுண்பிக்கச் சந்தோஷித்துப் புசித்துக் கிருபையென்னும் மதவெள்ளத்தைப் பொழிகின்ற யானையாகிய சித்தி விநாயகக் கடவுளைத் தியானித்து, வருகின்ற தீவினைகளை விலக்குவாம். (எ - று.)

(அ - ப.) கூடம் = யானை கட்டுமிடம்.
தறி = யானை கட்டுந்தம்பம்.
கவளம் = யானையுண்ணும் வாய் கொண்டவுணவு.

10. சிதம்பர புராணம்

16. வான நாடர்கண் மாதவர் நாடரு
மோன ஞான முழுதுமு ணர்ந்திடத்
தான மேவுந் தடவிக டாசலத்
தானை மாமுகத் தண்ணலை யேத்துவாம்.

(இ - பொ.) சுவர்க்கலோக வாசிகளாகிய தேவர்களும், பெரிய தவத்தை யுடைய முனிவர்களுந் தேடுதற்கரிய மௌன நிலையோடு கூடிய ஞான முழுமை யும் (ஆன்மாக்களாகிய நாம்) அறியும்பொருட்டு, (மதஜலம் பொருந்திய) விகடக் கூத்தை விரும்பிய விசாலமாகிய மலைபோன்ற பெரிய யானைமுகத்தை யுடைய விநாயகக் கடவுளைத் துதிப்பாம். (எ - று.)

17. நெடியவெழு பவக்கடலை யுழக்கிவினைக் கிரிநூறி நீங்கா தோங்குங்
கொடியகுணம் புலன்கரண முதலான பகைப்படையைக் குலைய மோதி
யடியவர்தங் கருத்தளிசூழ்ந் தாலிக்கக் கருணைமத வாறு பாயும்
படிபுகழுந் தில்லைவனக் கற்பகக்குஞ் சரத்திருதாள் பணிதல் செய்வாம்.

(இ - பொ.) நீண்ட எழுவகைப்பட்ட பிறவியாகிய கடலைக் கலக்கி, இரு வினைகளாகிய மலையை யழித்து, எப்பொழுதும் நீங்காது உயர்கின்ற கொடுமை யாகிய முக்குணம் ஐம்புலன் திரிகரணங்களாகிய பகைப்படைகளைச் சிதறும்படி முறித்து, அடியவர்களது மனமென்னும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்க, கிருபை யாகிய மதஜலம் ஆறுபோலப் பாய்கின்ற பூலோகத்தாரால் துதிக்கப்படுந் தில்லை வனத்தில் எழுந்தருளியிருக்கின்ற கற்பக விநாயகக் கடவுளாகிய யானையினது இரண்டு திருவடிகளையும் வணங்குவாம். (எ-று.)

11. சேது புராணம்

18. திங்களங் குழவி யென்னத் திகழொரு மருப்பிற் சோதி
தங்குகிம் புரிவ யங்கத் தடாமணி மகுடந் தாங்கித்
துங்கநல் வரங்க ணல்குந் தூயசீ ரிராம சேதுப்
புங்கவர் வணங்கும் யானை முகத்தனைப் போற்றல் செய்வாம்.

(இ - பொ.) மூன்றாம்பிறைச் சந்திரனென்னப் பிரகாசிக்கும் ஒரு தந்தத்தின் சோதி தங்கிய பூணானது துலங்க, ஒப்பற்ற நவரத்தினங்களை முடியிற்

ருங்கி, உயர்ந்த நல்வரங்களைக் கொடுக்காநின்ற, பரிசுத்தமான ஸ்ரீராமேஸ்வரமென்று சொல்லுஞ் சேதுத் தலத்தில் வானோர்களும் வணங்கும் யானைமுகக் கடவுளைப் போற்றுதல் செய்வாம். (எ – று.)

(அ - ப.) புங்கவர் = வானோர்.

19. தொடர்கின்ற விடுக்கண் வெற்புத் துகள்படத் துளைக்கு மேலோ
னடர்கின்ற வதற்கு நாத னாகிய வைங்கை முக்கட்
படர்வென்றிப் பகவன் முன்னைப் பவமுதற் படியி னெல்லா
விடர்நின்றும் புரக்க வெம்மை யெங்கணு மெந்த ஞான்றும்.

(இ - பொ.) தொடர்ந்து வருகின்ற துன்பமாகிய மலையைத் தூளாகும் படி துளைக்கானின்ற மேலோனாய், அடர்ந்து வருகின்ற அத்துன்பம் போக்கற்கு நாயகனாகிய, ஐங்கரங்களையும் மூன்று கண்களையும் படர்ந்த வெற்றியையுமுடைய பகவானாகிய விநாயகக் கடவுள், பூர்வவினை முதல் பூமியில் எல்லாவிடரினின்றும் நீக்கி, எங்களை எவ்விடத்தும், எந்நாளுங் காப்பாராக. (எ - று.)

(அ - ப.) இடுக்கண் = துன்பம்.
வெற்பு = மலை.
இடர் = இடுக்கண்.
புரத்தல் = காத்தல்.

20. வேணிமுடிப் பகீரதிநீர் புழைக்கை வாங்கி
விடுத்தயன்வெண் டலையுருட்டி மிளிர்வெண் கோட்டாற்
கோணிளைய மதிக்குழவி யுழுதுமேருக் கொடுமுடியிற்
கிளைத்த வெண்டோள் குழையத் தாக்கித்
தாணெடிய விடைமுனிந்து கயிலை முக்கட்
டாதையொடும் விளையாடித் தன்பா லன்பர்
மாணிலவு மனத்தறி நின்றுலாவுந் தெய்வ
வாரணத்தை நினைந்திறைஞ்சி வழுத்தல் செய்வாம்.

(இ - பொ.) திருக்கயிலையில் வீற்றிருக்கும் முக்கட்பெருமானாகிய சிவபெருமானது சடைமுடியிலுள்ள கங்கைநீரைத் தனது துதிக்கையால் உறிஞ்சி உமிழ்ந்தும், அவனது கையிலுள்ள பிரம கபாலத்தை உருட்டியும், தனது ஒளிவீசும்படியான கொம்பினால் அப்பெருமானது தலையிலணிந்துள்ள வளைந்த இளம்பிறைச் சந்திரனைக் கிண்டியும், அவனது மேருமலைபோல் விளங்கும் எட்டுத் தோள்களும் குழையும்படியாகத் தாக்கியும், அவனது ஊர்தியாகிய நீண்ட கால்களையுடைய விடையோடு சண்டையிட்டும் விளையாடி, தன்பால் அன்புடைய அடியார்களுடைய மாட்சிமை தங்கிய மனமாகிய தறியினிடத்தே நின்று உலாவி விளையாடும் விநாயகப்பெருமானை, மனத்தால் நினைந்து காயத்தால் வணங்கி வாயால் வாழ்த்துதல் செய்வாம். (எ-று.)

12. திருப்பரங்கிரிப் புராணம்

21. நலந்த ழைத்திடு நற்பத நீழலைக்
கலந்த வர்க்குக் கருணைய ரும்பிநின்
றலர்ந்த வானந்தத் தேனுக வானன
மலர்ந்த கற்பக வேழத்தை வாழ்த்துவாம்.

(இ - பொ.) திருவருள் அரும்பிப் பூத்த ஞானானந்தத் தேனானது தேக்கெடுத்த முகமலர்ந்த கற்பக விநாயகக் கடவுளை (வாயார) வாழ்த்துவாம். (ஏனென்றால், அப்பிள்ளையாரது நல்ல திருவடிநீழலைச் சேர்ந்தவர்க்கு நன்மையுண்டாக்குமாம். (எ - று.)

(அ - ப.) ஆனனம் = முகம்.
வேழம் = யானை.

22. வஞ்சகத்தி லொன்றானைத் துதிக்கைமிகத் திரண்டானை வணங்கா ருள்ளே
யஞ்சரண மூன்றானை மறைசொலு நால்வாயானை யத்த னாகித்
துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி யாறானைத் துகளெ ழானைச்
செஞ்சொன்மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ் கற்பகத்தைச் சிந்தை செய்வாம்.

(இ - பொ.) வஞ்சக மனத்திலொட்டாதவனை, தும்பிக்கையில் மிகவும் திரண்டவனை, (தன்னை) வணங்காருள்ளத்தே திருவடிகள், ஊன்றாதவனை, வேதங்களைப் பொழியுந் தொங்குகின்ற வாயவனை, முதல்வனாய் நின்று, அசுரர்க்கு அஞ்சாதவனை, முடியில் நதியணிந்தவனை, குற்றமில்லாதவனை, செவ்விய வேதவாக்குக் கெட்டப்படாதவனை, திருப்பரங்கிரி வாழும் கற்பக விநாயகக் கடவுளைத் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) மறை = வேதம்.
அத்தன் = கடவுள்.
சென்னி = முடி.
துகள் = குற்றம் (தூசி).

இப்பாடலில் சிலேடை நயம்பட ஒன்றுமுதல் எட்டு எண்ணுப்பெயர்களும், ஆனை என்னும் எட்டுச் சொற்களும் வந்துள்ளன. யானைமுகக் கடவுளை வாழ்த்தும் பாடலில் இவ்விதம் யானை எனுஞ்சொல் எட்டுமுறை வரும்படி பாடியிருப்பது இன்புறுதற்குரியது. இச் செய்யுளில் எண்ணலங்காரமும் சொற்பின் வருநிலையணியும் அமைந்து அழகு செய்கின்றன. எண்ணுப்பெயருடன் ஆனை என்ற சொல்லைச் சேர்த்துச் சிலேடை வகையில் எட்டு ஆனைகளைக் கூறியிருப்பது மிக்க நயமுடையதாகும்.

13. திருவாரூர்ப் புராணம்

23. உலகமுழு தீன்றபசுங் கன்னியிளம் பிடியினிடத் துதித்து வேதக்
குலவுமொளி மணிக்கூடத் துபநிடதத் தலைமருவிக் குடிலை யென்னு
மிலகுதனிக் கம்பத்தி னின்றன்பர் மனத்தண்டத் தினிது லாவு
*மலர்மகளன் புறுமாரூர் வாதாவி வாரணத்தை வணங்கி வாழ்வாம்.

(இ - பொ.) சகலாண்டங்களையும் பெற்ற பச்சிளங்கிள்ளையாகிய பார்வதியினிடமாகப் பிறந்து, வேதம் குலவாநின்ற ஒளி மண்டபத்து, உபநிடத

குறிப்பு :— * திருமகள் சிவபெருமானை வழிபட்ட திருத்தலம் திருஆரூர் என்று அறிக. இதன் விரிவைத் திருவாரூர்த் தல புராணத்திற் காண்க. இதனாற்றான் மலர்மகள் அன்புறும் ஆரூர் என்று சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளது. திரு+ஆர்+ஊர் = இலக்குமி என்றும் பொருந்தியுள்ள ஊர்.

மென்னுந்தளையில் பொருந்திப் பிரணவ மென்னும் ஒளிவீசும் தனிக்கம்பத்தில் வீற்றிருந்து, அடியார்கள் உள்ளத்தினிடமாக அன்போடுலவி வரும் இலட்சுமி விலாசம் பொருந்திய திருவாரூரின்கண் எழுந்தருளியிருக்கும் வாதாவி விநாயகரைப் பணிந்து வாழ்வாமாக. (எ - று.)

(அ - ப.) குடிலை = பிரணவம்.
மலர்மகள் = இலட்சுமி.

24. திருமன்னு வேள்விமறை முனிவர்மனப் புலத்தெழுந்து சிறப்பி னோங்கிக்
கருணைதழைத் தறமரும்பி ஞானம்பூத் தகல்வியினைக் காய்த்துத் தொல்லை
யிருளகன்ற முத்திபழுத் தின்பநறுஞ் சுவையென்று மினிது நல்கு
மருமலிபூம் பொழிலாரூர் மாற்றுரைத்த கற்பகத்தை வணங்கி வாழ்வாம்.

(இ - பொ.) மங்கள மலிந்த யாகங்கள் செய்யாநின்ற வேதப் பிராமணர் தம்முடைய உள்ளத்தெழுந்தருளி, சிறப்போடும் ஓங்கி, திருவருள் தழைத்து, அறம் (முதல் நான்கையும்) அரும்புவிடச் செய்து, (உடனே) ஞானத்தைப்பூப்பித்து, (அதனாலாய) கல்வியைக் காய்ப்பித்து, பழமையான மாயவிருள் விடுபட்ட முத்தியாய்ப் பழுத்து, இன்பம் பொருந்திய சுவை யெந்நாளும் இனிது தந்தருளும், வாசம் நிறைந்த பூங்காவனஞ் சூழும் திருவாரூரின்கண் (ஆயிரத்தெட்டு) மாற்றபரஞ்சியை யொத்த கற்பக விநாயகக் கடவுளை வணங்கி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) வேள்வி = யாகம்.
அபரஞ்சி = பொன்.

---

14. இலிங்கபுராணம் பூருவகாண்டம்

25. பிறைதவழு மெழிறோன்றிப் பிறங்குகதிர் வெண்கோட்டாற்
செறிகதிர்செய் தடங்குடுமிச் செம்பொன்மால் வரைவாய்ப்ப
மறைபுகழுஞ் சவுந்தரிய லகரியினை வகுத்தெழுதும்
விறல்கெழுமு வேழமுகன் விரைமலர்த்தா ளிணைதொழுவாம்.

(இ - பொ.) வானில் தவழும் பிறைமதிபோல் வளைந்து அழகுடன் தோன்றி ஒளிவீசும்படியான வெள்ளிய கொம்பினால் ஒளிநிறைந்த பெரிய சிகரத்திணையுடைய சிவந்த பொன்மயமான மகாமேருமலையை ஏடாகக்கொண்டு, வேதங்களால் புகழப்பெறும் சவுந்தரிய லகரியினை முறைப்படுத்தி எழுதும் வெற்றி பொருந்திய விநாயகக் கடவுளுடைய மணம்பொருந்திய தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளையும் வணங்குவாம். (எ-று.)

26. படர்தரு சிறகர் முன்போற் படைத்தகொல் லென்ன நோக்கி
மிடல்கெழு வயிர வொள்வாள் விண்ணவர்க் கிறைவ னேந்தத்
தடவரை பிடுங்கி வானிற் றாழிருங் கரத்தால் வீசுங்
கடவுண்மா களிற்றின் செய்ய கனைகழல் வழுத்து வாமே.

(இ-பொ.) விண்ணவர் தலைவனாகிய இந்திரன் மலைகளெல்லாம் முன்போல் விரிந்த சிறகுகளைப் பெற்றுவிட்டனவோ என்று நோக்கி வலிமைபொருந்திய வச்சிரவாளை ஏந்தி நிற்கப் பெரிய மலையைப் பெயர்த்து ஆகாயத்தில் தமது

நீண்ட கையால் வீசும் தெய்வத்தன்மை பொருந்திய யானைமுகக் கடவுளின் சிவந்த வீரக்கழலை அணிந்துள்ள திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

குறிப்பு : விநாயகப்பெருமான் மேருமலையை ஏடாக விரித்துக்கொண்டு சவுந்தரிய லகரியை எழுதுவது கண்டு இந்திரன் அவ்வேட்டை மேருமலையினிடம் தோன்றிய சிறகென ஐயுற்று அதனை அரிய வச்சிரவாளைத் தாங்க, அதுகண்ட விநாயகப்பெருமான் அவன்மீது மலையைப் பிடுங்கி வீசினாரென்க.

ஷ உத்தர காண்டம்

27. நீர்கொண்ட செஞ்சடில நிமலனிடப் பாகமெலா நிறைந்து வாழுங்
கார்கொண்ட மலர்க்கூந்தற் கன்னன்மொழிக் கவுரிதிரு வயிறு வாய்த்த
ஏர்கொண்ட வெள்ளைமதி யிளங்கொழுந்து மருட்டுதனி யெழில்வெண் கோட்டுச்
சீர்கொண்ட மதகளிற்றின் சேவடிப்பூங் கமலமலர் சென்னி சேர்ப்பாம்.

(இ - பொ.) கங்கையைச் சடாபாரத்திற்றாங்கிய நிர்மலனாகிய பரமசிவனுடைய இடப்பாகத்திலிருந்து வாழும் மேகத்தைப் போன்ற பூங்குழலையும், கரும்பை யொத்த இனிய சொல்லினையுமுடைய பார்வதியின் திருவயிறுதித்த, அழகான மூன்றாம் பிறைச் சந்திரனைப் பழித்த தந்தங்களையுடைய, சிறப்புப்பொருந்திய யானைமுகக் கடவுளது சிவந்த திருவடியாகிய அழகிய தாமரை மலர்களைச் சிரத்தில் சூட்டிக்கொள்வோம். (எ - று.)

(அ - ப.) சடிலம் = சடை.
களிறு = ஆண்யானை.

15. பிரமோத்தர காண்டம்

28. நல்ல சொற்பொரு ஞளு நடாத்தவு
மெல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வாழ்த்துவாம்.

(இ - பொ.) நல்லதாகிய சொல்லும் பொருளும் எந்நாளும் நடைபெற்று வரவும், எல்லைகாணுதற்கரிய பேரின்ப வநுபூதியுண்டாகவும், வெற்றிதரக்கூடிய யானைமுகத்தினைக்கொண்டு வாழும் வல்லபைக் கணேசனைத் தோத்தரிப்பாம். (எ - று.)

(அ - ப.) மேவி = அடைந்து.
உரியவன் = உரிமையுடையவன், நாயகன்.

16. கூர்மபுராணம் பூருவகாண்டம்

29. வெண்ணிலாக் கற்றை கான்று விளங்குமோர் பிறைக்கோ டின்றி
யெண்ணிலோர் பாகங் கூந்தற் பிடியென விருந்த வாற்றாற்
பெண்ணொரு பாகம் வைத்த பிஞ்ஞக னுருவு காட்டு
மண்ணலங் களிநல் யானை யடிமலர் சென்னி வைப்பாம்.

(இ - பொ.) வெள்ளிய நிலவொளி வீசி விளங்கும்படியான பிறைபோன்று வளைந்த ஒரு கொம்பின்றி இருந்த பாகத்தைப் பார்க்குமிடத்துப் பெண் யானை போல் காட்சியளித்த காரணத்தால், அத்தோற்றம் உமா தேவியை இடப் பாகத்தில் வைத்துள்ள சிவபெருமானுடைய திருவுருவைக் காட்டும்படியான பெருமையிற் சிறந்த களிக்கும் நல்ல விநாயகப் பெருமானுடைய திருவடி மலர்களைத் தலைமேற் கொண்டு வணங்குவாம். (எ-று.)

குறிப்பு : விநாயகப் பெருமான் மகாபாரதத்தை மேருமலையில் எழுதும் பொருட்டுத் தமது கொம்பொன்றை ஒடித்து எழுத்தாணியாகக் கொண்ட காரணத்தால் விநாயகப் பெருமான் 'ஒரு கோட்டன்' என்று அழைக்கப்பெறுகின்றார். "ஒரு கோட்டன்" என்று துவங்கும் சிவஞானசித்திக் காப்புச் செய்யுளும் இக் கருத்தை வலியுறுத்துவது காண்க.

30. மற்றைய கடவுட் போற்றி வரம்பெற விடையூ றெய்தா
தொற்றை வெண்கோட்டு வேழ முவப்பமுன் வழுத்து கின்றோர்
முற்றுமக் களிற்றை யேத்தி முன்னிய யாவும் வாளா
பெற்றிலா தயலார்ப் போற்றும் பேதைமை யென்கொன் மாதோ.

(இ - பொ) வேறு தெய்வங்களைப் புகழ்ந்துபாடி வரம்பெறுதற்கு இடையூறு உண்டாகாவண்ணம் ஒற்றை வெண்கொம்பினையுடைய விநாயகப் பெருமான் மகிழும்படி முதலில் விநாயக வணக்கம் பாடுகின்ற புலவர்கள் முழுதும் அவ் விநாயகப் பெருமானையே துதித்துப்பாடி நினைத்த காரியங்களையெல்லாம் எளிதில் பெறுவதை விடுத்து வேறு தெய்வங்களைப் போற்றுகின்ற அறியாமை என்கொலோ? (எ-று.)

குறிப்பு : இப் பாடலில் விநாயகப் பெருமானின் பரத்துவம் மிகவும் அழகாக வற்புறுத்தப் பெற்றுள்ளது. நாம் எந்தக் காரியம் தொடங்கும்போதும் இடையூறு நேராவண்ணம் முதலில் விநாயகப் பெருமானை வழிபட்டு வாழ்த்தி வணங்கித் தொடங்குகின்றோம். அப்படியிருக்க, அவ் விநாயகரையே போற்றாமல் மற்றைக் கடவுளரைப் போற்றும் பேதைமை ஏன்? என்று இதன் ஆசிரியர் வினவுகின்றார்.

விநாயகப் பெருமானே எல்லாம் வல்ல பரம்பொருள் என்பதைப் பதினோராந் திருமுறையிலுள்ள கீழ்வருஞ் செய்யுள் உறுதிப்படுத்துவது காண்க :

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து."

௸ உத்தர காண்டம்

31. விழைவொடுந் தந்தை சென்னி மிலைந்தகூன் பிறையை நோக்கி
முழுமதி செய்து மென்றோர் கோட்டினை முறித்துத் தாங்கித்
தொழுதகு மன்ப ருள்ளத் தறியினிற் றுவக்குண் டோங்கு
மழைமதக் களிற்றின் செய்ய மலரடி வணங்கல் செய்வாம்.

(இ - பொ.) அன்போடுங் கூடித் தந்தையாகிய சிவபெருமான் தமது சிரத்திலணிந்த மூன்றாம் பிறையைப் பார்த்துப் பூரணசந்திரோதயஞ் செய்யக்கூடுமென்று, ஒரு தந்தத்தை யொடித்துத் தாங்கி, அலங்கரித்துப் பாடுமன்பர்களுடைய இருதயத்தறியினில் சம்பந்தப்பட்டோங்கும், மத மிகுந்த கணேசரது செவ்விய திருமலரடியைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) விழைவு = ஆசை.
மிலைந்த = அணிந்த.
தறி = கட்டுத்தறி.
துவக்கு = சம்பந்தம்.
மழை = குளிர்ச்சி, மிகுதி.

17. காசி காண்டம்

32. மாற்றரிய தொல்பிறவி மறிகடலி னிடைப்பட்டுப்
போற்றுறுதன் குரைகழற்றாட் புணைபற்றிக் கிடந்தோரைச்
சாற்றரிய தனிமுத்தித் தடங்கரையின் மிசையுய்ப்பக்
காற்றெறியுந் தழைசெவிய கடாக்களிற்றை வணங்குவாம்.

(இ - பொ.) மாற்றுதற்கரிய பழைய சென்ம மழுங்குங் கடலிடைப்பட்டுத் (தாளாமல்) தன்னை வந்தடைந்து திருவடியே கதியெனப் போற்றினாரை, செப்புதற்கரிய சாயுச்சிய பதவி யென்னும் கரையேற்றி, அதில் உய்ப்ப உயிர்ப்பு தரும் தழைத்த செவியுடைய கஜானனக் கடவுளைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) தொல் பிறவி = பழைய சென்மம்.
மறி = அழுங்கல்.

33. கரைபொரு கங்கை யாற்றிற் காளிந்தி மடுப்ப தென்னச்
சொரிமதக் கலுழி வெள்ளஞ் சுழித்துவார்ந் தொழுகக் காசித்
திருநக ரினிது வைகுந் திங்களங் குழவிக் கோட்டு
வரைபுரை களிநல் யானை மலரடி வணங்கு வாமே.

இ - பொ.) கரையை மோதிக்கொண்டு வருகிற கங்கையாற்றில் காளிந்தி நதி வந்து கலப்பதுபோலச் சொரிகின்ற மதசலமாகிய வெள்ளம் சுழித்து ஒழுகக் காசியாகிய அழகிய நகரில் இனிதாக வீற்றிருக்கும் பிறைச்சந்திரனை யொத்த வளைந்த வெள்ளிய கோட்டினையுடைய மலையை ஒத்த களிப்பினையுடைய விநாயகக் கடவுளுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

18. வாயு சங்கிதை பூருவகாண்டம்

34. கார்தவழ் கயிலை வலியுடை யரக்கன் கையினா லலைவுறா வண்ண
மேற்பெறத் திணிபூண் கட்டிய தேய்ப்ப விரும்பெரும் பணைநெடுங் கரத்தா
லார்வுறத் தழுவி முகிலென முழங்கி யடியவர்க் காரருள் புரியுந்
தாரணி மவுலி யைங்கரக் கடவு டாளிணை தலையி னாற்பணிவாம்.

(இ - பொ.) மேகங்கள் சஞ்சரிக்கா நின்ற கைலாயமலை, வல்லரக்கனை இராவணனால் பேர்ந்தலையாவாறு, திண்ணிய வழகுபெற்ற பூண்கட்டிப் போட்ட தொப்ப, தனது திரண்டுருண்ட பனைமரம் போன்ற நீண்ட தும்பிக்கையால் அழுத்த தொப்ப, தனது திரண்டுருண்ட பனைமரம் போன்ற நீண்ட தும்பிக்கையால் அழுத்த மாகத் தழுவிப் பிடித்துக் கொண்டமுக்கி, மேகமென முழங்கி அடியவர்களுக்குக் கருணா கடாட்சம்புரியும் ஐங்கரக் கடவுளின் ஸ்ரீசிரோபூஷணமான திருவடிகளைச் சாஷ்டாங்கமாய்ப் பணிவாம். (எ-று.)

(அ - ப.) அரக்கன் = இராவணன்.
திணி = திண்மை.
முகில் = மேகம்.
தார் அணி மவுலி = ஸ்ரீசிரோபூஷணம்.

35. மாகமூ டியங்கு முப்புர மெரித்த மணிமிடற் றிறையைவீழ்ந் திறைஞ்சும்
பாகசா தனன்றன் மெய்யினை யலர்ந்த பங்கயக் காடென வெண்ணி
யாகமோர் பாகத் துமையொடு மண்ணா னகைத்திட வடிபெயர்த் தோடி
வேகமா யுழக்கும் புகர்முகக் கடவுள் விரைமலர்த் தாள்பணிந் திடுவாம்.

(இ - பொ.) ஆகாயத்தை யளாவிய முப்புரங்களையும் நகைசெய்தெரித்த நீலகண்ட சிவத்தின் திருவடிகளில் விழுந்து சேவிக்கும்படியான தேவேந்திரனுடைய சரீரத்தைத் தாமரைக் காடென நினைத்து, தமது சரீரத்தில் இடப்பாகத்தில் இடங்கொண்டு விளங்கும் உமையொடும் சிவபெருமான் நகைக்கக் கால்பெயர்த்தோடி வேகமாய் மேல் வீழ்ந்து புரண்டெழும் யானைமுகக் கடவுளுடைய வாசனை பொருந்திய திருவடித் தாமரைகளைப் பணிவாம். (எ-று.)

(அ – ப.) மாகம் = ஆகாயம்.
மணிமிடறு = நீலகண்டம்.
பாகசாதனன் = இந்திரன்.
பங்கயம் = தாமரை.
உழக்கல் = புரளல்.

ஷ உத்தர காண்டம்

36. மேருமால் வரையைப் புழைக்கையாற் பழமென் றெடுத்தலும் விரிகதிர்ப் பரிதி
யேர்பெறு வெயில் தானியங் கிடாதொருபா லிருண்டது கண்டு மற்றிதுதா
னார்தர வின்னும் பழுத்தில தெனத்தன் னகத்திடை யெண்ணியாங் கதனைச்
சீர்பெற முன்போல் வைத்தய னடக்குங் கயமுகன் சேவடி தொழுவாம்.

(இ - பொ.) மேருமலையைத் துதிக்கையால் பழம் என்று எடுத்தவுடன் சூரியன் ஒளி பரவாது ஒரு பக்கம் இருண்டது கண்டு, மற்று இப்பழம் உண்பதற்கேற்றபடி இன்னும் நன்கு பழுக்கவில்லையெனத் தம் மனத்தில் நினைத்து, அவ்விடத்தே அம் மேருமலையைச் சீர்பெற முன்போல வைத்துவிட்டுப் பக்கத்தே நடந்து செல்லும் விநாயகப் பெருமானுடைய திருவடிகளைத் தொழுவாம். (எ-று.)

(அ - ப.) புழைக்கை = துதிக்கை.
பரிதி = சூரியன்.

19. மச்ச புராணம்

37. தழைத்தமலர்க் கொன்றைபுனை சடாமகுடத் தெம்மானைத் தழுவிக் கொங்கை
குழைத்தமலை மகளீன்ற கழைசுளிக்குஞ் சிறுபிறை வெண்கோட்டு நால்வாய்
மழைத்தடக்கார் மேகமென வூற்றிருந்தா றுவட்டிமத தாரை சிந்தும்
புழைத்தடக்கை விகடதடக் கும்பமத களிற்றிணைதாள் போற்றல் செய்வாம்.

(இ - பொ.) தழைத்து மலர்ந்த கொன்றைப் பூமாலை சூடிய சடாதரக் கடவுளைத் தழுவிக் கொங்கையால் குழைவித்த மலைமகள் பெற்ற, கழை சுளிக்குஞ் சிறிய பிறை போன்ற தந்தமும், நால்வாயும், மழையைப் பொழியாநின்ற கருங் கொண்டலென ஊற்றுப் பெருக்கெடுத்து மத மழையினைப் பெய்யும் தும்பிக்கையுடைய விகடாயனராகிய கும்பமத விநாயகரது திருவடிகளிரண்டையும் துதி செய்வாம். (எ-று.)

20. சங்கர நாராயணர் கோயிற் புராணம்

38. ஒருமுலை சுரந்த தீம்பா லுண்புழி மழலைத் தீஞ்சொன்
முருகனுக் கென்றே யீன்ற முதல்விவைத் திருந்த மற்றைத்
திருமுலை வருடு வான்போற் றிரள்புழைக் கரத்தா லுண்ணும்
வரிநுதற் களிற்றின் செந்தா மரையடி வணங்கு வாமே.

(இ - பொ.) ஒரு திருமுலையினிடம் சுரந்த இனிய பாலை உண்ணும்போது, மழலை மொழியினையுடைய முருகனுக்கென்றே ஈன்ற தாயான பார்வதி வைத்திருந்த மற்றைத் திருமுலையைத் தடவுவான்போல் திரண்டுருண்ட தும்பிக்கையாலுண்ணும் வரிநுதற் படிந்த விநாயகக் கடவுளது செந்தாமரை போன்ற திருவடியை வணங்குவாம். (எ-று.)

21. சிவதருமோத்திரம்

39. மலைக்குமகள் பெற்றமக னைக்கயமு கத்தனைம னத்தெழுதியான்
அலற்பிணிபி றப்பறவ ணுக்களைய கத்தியமு னிக்கருளினான்
உலப்பில்கரு ணைக்கடலு ருத்திரனு ருத்தனிலு தித்தகுமரன்
இலக்குமிய லைக்கலியி னைக்கவுமு ரைப்பலுல கிட்டமுறவே.

(இ - பொ.) யான், மலையரையன் மகள் பெற்ற மைந்தனாகிய யானை முகத்தையுடைய விநாயகனை மனத்திலே தியானித்து வற்றாத கிருபாசமுத்திரமாகிய உருத்திரனது திருமேனியிற் றோன்றிய பிள்ளையார் தமது அருளினால் ஆன்மாக்கட்கு ஆணவாதியாலுண்டான பிறவி நோய் தீர்த்தற் பொருட்டு அகத்திய முனிவருக் குபதேசித்த சிவ தருமோத்திரத்தைக் கலிவலி கெடவும் உலகம் கதிபெறவும் உரைக்கிறேன். (எ-று.)

(அ - ப.) அணு - ஆன்மா.
ஆணவாதி - ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள். அணுக்களை என்னும் ஐயுருபு ஈண்டு நான்கனுருபாய் மயங்கிற்று.

22. தக்ஷிண கைலாச புராணம்

40. உதய மால்வரை யொண்கதி ரென்னவென்
னிதய தாமரை மீதி லிலங்குவ
மதக டாமழை வாரண மாமுக
முதல்வ னைங்கர மூர்த்தி பதாம்புயம்.

(இ - பொ.) மும்மதங்களையும் மேகம்போல் பொழியாநின்ற யானை மாமுகமுடைய முதல்வனாகிய ஐங்கர விநாயக மூர்த்தியின் பாதாம்புயமானது (எத்தகைய தென்றால்) உதயகாலத்திலே யுண்டான சூரியனைப்போல, என்னுடைய இருதய கமலத்தின்மீது பிரகாசிப்பது. (எ-று.)

(அ - ப.) தக்ஷிண கைலாசம் = திருக்கோணமாமலை.

41. செம்முளரி யுங்கதையுஞ் சக்கரமும் வெண்கோடுஞ் சிலையும் பாம்பும்
விம்முமணிப் பொற்குடமுங் கழுநீரு முத்தலையும் விளங்குந் தந்தித்
தம்முகமு மாதுளமுந் தரித்தொருபால் வல்லபையுந் தரித்த சோதிக்
கைம்முகனை மறவா தென்னிதயமு மென்புந்தியு மென்கருத்துந் தாமே.

(இ-பொ.) செந்தாமரை மலரும், கதாயுதமும், சக்கரமும், வெள்ளிய தந்தங்களும், அம்பும், அரவமும், விம்முகின்ற மாணிக்கப் பொற்குடம் போன்ற தொப்பையும், செங்கழுநீர்ப் பூவும், முத்தலைச் சூலமும், விளங்காநின்ற யானை முகமும், மாதுளம் பழம் தரித்தவொரு பக்கம் வல்லபையும் கொண்டருளிய பரஞ்சோதியாகிய கஜானன வரதனை என் மனோவாக்குக் காயம் மறவாது. (எ-று.)

(அ - ப.) முளரி = செந்தாமரை.
இதயம் = இருதயம்.
புந்தி = புத்தி.

23. பிரபுலிங்க லீலை

42. சுரகு லாதிபன் றுய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம்.

(இ-பொ.) தேவரது குலத்துக்குத் தலைவனாகிய இந்திரனது தூய மலர்களையுடைய பூங்காவானது, ஓங்கும்படியாக நெடிய கடலைப் பெய்த வயிற்றையுடையோனாகிய அகத்திய முனிவனது கமண்டலத்திலுள்ள நீரைக் கவிழ்த்த மத யானையினது திருவடியை எந்நாளும் தலைக்கு (யாம்) அணியாகச் செய்து கொள்ளுவாம். (எ-று.)

(அ-ப.) நந்தனம் = நந்தவனம்.

43. மார னெடுத்து வளைக்கு மொருகரும்பை யொடித்து மலர்சிதறி
நாரி யடுத்த வளிமாலை குலையத் துரந்து நயந்தோடி
வீர மனத்து வினைப்பாகர் குறிப்பி னொழுகி விளையாடு
மீர மதிச்செஞ் சடைக்களி நல்யானை யிணைத்தா ளேத்துவாம்.

(இ-பொ.) மன்மதனாலே எடுத்து வளைக்கப்பட்ட, ஒப்பற்ற கரும்பு வில்லாகிய ஒரு கரும்பையொடித்து, (அவ் வில்லினெய்யப்படு மலரம்புகளாகிய) மலர்களை யிறைத்து, அவ்வில்லுக்கு நாணையடுத்த (வண்டொழுங்காகிய) வண்டுக் கூட்டத்தைக் கலைந்து போகத் துரத்தி விரும்பியோடி, வீரத்தன்மை பொருந்திய மனத்தையுடைய இருவினையொப்பினராகிய, அஞ்சாமை பொருந்திய மனத்தைக் கொண்டு செய்யப்படுகின்ற தொழிலையுடைய ஆதோரணரது கருத்தின்படி சென்று விளையாடுகின்ற குளிர்ச்சி பொருந்திய பிறையைத் தாங்கிய செய்ய சடையையும், களிப்பையுமுடைய நல்ல யானையினது உபயபாதங்களையும் துதி செய்வாம். (எ-று.)

---

24. திருக்கூவப் புராணம்

44. *குவளத் தந்தக் குளிர்விண் வளத்துறக்
கவளத் தந்தக் கரண மிருத்திய
பவளத் தந்தப் படிவ நிகர்த்தொளிர்
தவளத் தந்தத் தலைவனை வாழ்த்துவாம்.

(இ-பொ.) மகிழும்படி தந்தக் குளிர்ச்சியும், சிதாகாச ஞான வளப்பமும் உண்டாக, ஒரு கவளத்து (நமது) அந்தர்முகமாகிய திரிகரணங்களையும் உள்ளத்திலிருத்திய பவளம் போன்ற அழகான வடிவத்தையொத்து ஒளிவீசும் படியான வெண் தந்தங்களையுடைய தலைவனாகிய விநாயகக் கடவுளை வணங்கி வாழ்த்துவாம். (எ-று.)

(அ - ப.) தவளம் = வெண்மை.

45. நச்சி றுத்த நயனக் குவிமுலைப்
பொச்சி றுத்த நுசுப்பினர்ப் போற்றிவாய்
மிச்சி றுத்த விரகிலிக் காங்கொலோ
வச்சி றுத்த வடிக ளடிகளே.

(இ-பொ.) நஞ்சை வடிகட்டிய கண்ணும், குவிந்த முலையுஞ், சின்னஞ் சிறுத்த விடையுமுடையாரைப் புகழ்ந்து, அவர்கள் வாய் எச்சில் புசித்தல், பிரிதல் முதலிய வில்லாத அடியேனுக்கு ஆகுமோ, சிவபெருமானுடைய இரதத்தின் அச்சுமுறித்த தெய்வநாயகனாகிய விநாயகக் கடவுளுடைய திருவடிகள். (எ-று.)

(அ-ப.) நச்சு = நஞ்சு.
நயனம் = கண்.
நுசுப்பு = இடை.
மிச்சில் = எச்சில்.
துத்தல் = புசித்தல்.
அடிகள் = கடவுள்.

---

*குவளய வளத்தும் குளிர்விண் வளத்தும் உற, எனவே இகபர லோக இன்பம் நுகர்தலுக்குமாம்.

46. கற்றைநெடுஞ் சடாமவுலிப் பிறையுமொரு தன்கோடுங் கரத்திற் சேர்த்தி
மற்றைநிறை மதியாக்க மறுவிகந்து வல்லபைதன் வடிவு பூத்த
நெற்றிநிகர்த் தமையன்றி யழகொழுகு திருமுகத்தை நிகர்ப்ப நேயம்
பெற்றமழ களிற்றைமனச் சேவகத்தி னிறுவியிடர்ப் பிறவி தீர்ப்பாம்.

(இ - பொ.) நெடிய கற்றைச் சடாபாரத்தில் அணிந்துள்ள மூன்றாம் பிறைச் சந்திரனையும், அதற்கிணையாகத் தன் ஒற்றைக் கொம்பையும் கையில் வைத்துச் சேர்த்துப் பூரணசந்திரனாக்க, களங்கம் நீங்கப்பெற்று வல்லபைதன் வடிவுடைய நெற்றிக்கு நேரானதல்லாமல், அழகிய திருமுகத்தையும் நிகராக, விசுவாசங்கொண்ட இளங்கன்றாகிய விநாயகக் கடவுளை, மனவணக்கத்தில் நிறுத்தி, பிறவித் துன்பங்களை யொழிப்பாம். (எ-று.)

(அ - ப.) மவுலி = முடி.
மறு = மாசு.
இகந்து = நீங்கி.
நிகர்ப்ப = ஒப்ப.
மழகளிறு = இளங்கன்று.
சேவகம் = வணக்கம்.
நிறுவி = நிறுத்தி.

25. விருத்தாசல புராணம்

47. திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

(இ - பொ.) செல்வமும் கல்வியுஞ் சிறப்பான வாழ்வுந் தழைக்கவும், சீவ காருண்யம் பூத்துவரவும், தீமையைச் சுட்டெரித்து விடவும், பரிபக்குவ காலமாய் நம்முடைய உள்ளம் சீவன் முத்தியடையவும், வளர்ந்தோங்கிய பெரிய விருத்தாசல மண்டபத்தெழுந்தருளிய பிள்ளையாருடைய சரணங்களைப் பூசிப்பாம். (எ-று.)

48. ஒருமலையாற் புரமலையு மொருமைந்தன் றிருமைந்த
னிருமலையுந் தும்மலையு மெதிர்மலையும் வினைமலையும்
பொருமலையும் விம்மலையும் பொய்ம்மலையும் புடைத்தருளிக்
கருமலையும் பெருமலையிற் கைம்மலையைக் கைதொழுவாம்.

(இ-பொ.) மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரமெரித்த விமலரது மூத்த குமாரரும், [ஒவ்வொரு மயக்கத்தினால் உலகம் அலையும்படியான] கக்குவாய் நோயையும், காசத்தையும், எதிர்நோக்கும்படியான இருவினையையும், அழுகுரலையும், தேம்பலையும், பொய்யான எண்ணங்களையும் நீக்கிப் பாதுகாத்தருளி, [ஒரு பிறப்பிலேயே யல்லாமல் இகபர மிரண்டிலும்] இவ்வாறே கருமாற்றி வரும் நமது விருத்தாசலத் தெழுந்தருளிய கடவுளாகிய விநாயகமூர்த்தியைக் கைதொழுவாம். (எ - று.)

(அ - ப.) பொருமல் = அழல்.
விம்மல் = தேம்பல்.

26. திருவையாற்றுப் புராணம்

49. ஞால மெல்லா நயந்து திறையிடுங்
கால னஞ்சுங் கடும்பிணி நீங்கிடும்
கோல நல்குங் குறையா நிதிதரு
மோல மென்ற களிற்றினை யுள்குவாம்.

(இ - பொ.) உலகமெல்லாம் நயந்து [கட்டியாளும்படிக்கும்] மறுமொழி கூறும்படிக்கும், எமன் பயப்படும்படிக்கும், கொடிய நோயானது நீங்கிடும்படிக்கும், அழகான வடிவந் தரும்படிக்கும், குறைவற்ற செல்வம் கொடுக்கும்படிக்கும், அபயக்குரல் கொடுத்தழைத்த விநாயகக் கடவுளை யெண்ணுவாம். (எ - று.)

(அ – ப.) ஞாலம் = உலகம்.
எல்லாம் = எல்லாரும்.
காலன் = எமன்.
பிணி = நோய்.
நல்கும் = தரும்.
நிதி = செல்வம்.
ஓலம் = அபயம்.
உள்கல் = நினைதல்.

50. காளி யஞ்சிட வாடா தாடிய காவ லன்றரு தேவே நீயெனை
யாளி கழ்ந்துவி டாதே வேதவி யாச னன்புகெ டாதே பாரதம்
வாளி லங்கிய வேடா மேருவின் வாய்வ ரைந்தபி ரானே வாழிய
கோளி யம்பதி தாள்வீழ் வார்பதி கோயில் கொண்ட பிரானே வாழிய.

(இ - பொ.) காளிமாதேவி யச்சப்பட, நடனஞ்செய்த சிவபெருமான் தரும் விநாயகக் கடவுளே, நீயெனை யாள்வாயாக. இனி அடியேனை யிகழ்ந்து விட்டுவிடாதே. முன்னே வேதவியாசன் அன்புக்கிரங்கி, மகாபாரதத்தை ஒளிபொருந்திய மேருவையே ஏடாகக்கொண்டு, அதில் (தந்தத்தை எழுத்தாணியாய் எடுத்து) எழுதிய பெருமானே, நீ வாழ்வாயாக. மேலும் திருவையாற்றிலே சேவிக்கும் அன்பர்களுடைய இருதயமே கோயிலாகக்கொண்ட பெரிய பெருமானே வாழ்வாயாக. (எ-று.)

(அ - ப.) அஞ்சிட = நாண.
இகழ்ந்து = அசட்டைசெய்து.
வரைதல் = எழுதுதல்.

---

27. நல்லூர்ப் புராணம்

51. எழில்சி றந்த விருநிலங் கற்பகப்
பொழிலினெ ருங்கிய பொன்னுல காதிய
தழைய வன்றரன் றந்தரு ளைங்கர
மழைம தம்பொழி மாமுகற் போற்றுவாம்,

(இ - பொ.) அழகு நிறைந்த பூமண்டலமும் கற்பகச் சோலைகள் நெருங்கிய தேவலோக முதலானவையும், க்ஷேமமடையும் பொருட்டுச் சிவபெருமான் தந்தருளிய ஐங்கரனாகிய மும்மதங்களைப் பொழியும் யானைமுகத்தவனைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) எழில் = அழகு.
இருநிலம் = பெரிய உலகம்.
பொழில் = சோலை.

52. மாலு நான்முகத் தொருவனு மற்றை வானவருந்
தால மீதுறை வார்களுந் தம்வினை நிரம்பக்
கோல நாண்மலர் கொண்டருச் சனைசெயுங் கோமான்
மேலை நாளுமை யவளருள் விநாயகற் றொழுவாம்.

(இ - பொ.) பிரம்ம விஷ்ணுக்களும், இதர தேவர்களும், பூலோக வாசிகளும், தத்தம் நித்திய கடமைப்படியே சரியை கிரியையோக சாதன முற்றும், புல் அறுகு வில்வ முதலான பத்திர புஷ்பங்களால் பூசிக்கும்படியான கோமானும், முன்னாள் உமையவள் அருளிய சீமானுமான விநாயகக் கடவுளை வணங்குவோம். (எ - று.)

(அ - ப.) மால் = விஷ்ணு.
நான்முகன் = பிரமன்.
தாலம் = ஞாலம் (பூமி).
அர்ச்சனை = பூசனை.

28. வீரசிங்காதன புராணம்

53. தழைபெ ரும்புகழ் தன்னடி யுன்னிடில்
விழைத ரும்பொரு ளியாவும் விளைத்திடு
மழைம தர்த்தகண் மாதுமை நல்கிய
புழைநெ டுங்கரப் போதக வேழமே.*

(இ - பொ.) குளிர்ச்சி பொருந்திய கண்களையுடைய உமாதேவி யீன்ற, நீண்ட துதிக்கையுடைய இளங்கன்றாகிய விநாயகக் கடவுளையே சிந்தித்து (அவரது) தழைத்துப் பெருத்துக் கீர்த்தி பெற்ற திருவடிகளைப் போற்றினால், நமக்குச் சேரவேண்டிய எல்லாச் சம்பத்தும் உண்டாகும். (எ - று.)

(அ - ப.) மழை = குளிர்ச்சி.
மதர்த்த = மிகுத்த.

54. மாழையம் பொற்றை யேடா வைந்நுதி யாணி கோடா
வாழிசூ ழுலக வேந்த ரைவர்சீர் வரைந்த பிள்ளை
யேழையேன் மனவன் கல்லிற் றன்னுரு வெழுதி வைத்துத்
தாழ்வற வதனை நோக்கத் தந்தருள் புரியு மன்றே.

(இ-பொ.) பொன்மயமாகிய அழகிய மேருமலையை ஏடாகவும், தன்னுடைய கொம்பையே எழுத்தாணியாகவுங் கொண்டு, சமுத்திரத்தால் சூழ்ந்த பார் மன்ன

---

* உமா வல்லவ தேவராலும் சில சருக்கம் பாடிய படியாம்.

ராகிய பஞ்ச பாண்டவர்கள் சரிதங் கூறும் பாரதத்தை யெழுதிய விநாயகமூர்த்தி ஏழையேனாகிய என்னுடைய கல் மனதில் தன்னுடைய பிரணவ வடிவத்தைத் தீட்டி யாதொரு குறைவுமில்லாமல் அவ்வுருவத்தையே நோக்கி நிற்க அருள் தந்தாட்கொள்ளும். (எ - று.)

(அ - ப.) மாழை = பொன்.
வைந்நுதியாணி = எழுத்தாணி.
பொற்றை—மலை.

29. சீகாளத்திப் புராணம்

55. தருமஞ் சந்திகழ் தாமரை யோன்பதங்
கருமஞ் சந்தி கடுப்பவர் வாழ்பதந்
துருமஞ் சந்திரற் றேய்திருக் காளத்தி
வருமஞ் சந்தி மழைமத யானையே.

(இ - பொ.) கற்பகத் தருவைப் போலச் சந்திரகாந்தி தரும் திருக்காளத்தியில் வந்து எழுந்தருளிய (அஞ்சந்தி) கரிமுகனாகிய விநாயகக் கடவுள் [அடியார்களுக்குத் தன் பதத்தையே தருவதல்லாமல் இன்னும்] முத்துதிரா நின்ற செந்தாமரையில் வந்த பிரம்மதேவன் பதவியையும், கருங்கடல் வண்ணனாகிய மகாவிஷ்ணு பதவியையும் தர வல்லவராம். (எ - று.)

(அ - ப.) மஞ்சம் = மஞ்சரம் (முத்து).
மஞ்சம் = கடல்.
துருமம் = கற்பகம்.

56. தாய்குறங் கேறித் தந்தை சடையிடை மதிகே துப்பேர்க்
காய்சின வரவென் றஞ்சிக் கடுக்கையுட் புகக்கை நீட்டிப்
பாய்புனன் முகந்து நின்று பழிச்சுநர் வாயி லீன்றோர்
வாய்நகை தழைப்ப வீசு மழைமதக் களிற்றைத் தாழ்வாம்.

(இ - பொ.) தாயாகிய பார்வதியின் தொடையில் ஏறித் தந்தையாம் சிவபெருமானுடைய சடையிலுள்ள சந்திரனருகே துதிக்கையை நீட்ட, சந்திரன் அத் துதிக்கையைக் கேதுவாகிய பாம்பென்று அஞ்சிக் கொன்றை மாலையுட்புக, அத் துதிக்கையால் அப்பெருமான் சடையிலுள்ள கங்கை நீரை முகந்து தம்மை வழிபடுகின்ற பக்தர்கள்மீது தம்மைப் பெற்றோர் சிரித்து மகிழும்படியாக வீசுகின்ற விநாயகப் பெருமானை வணங்குவாம். (எ-று.)

30. திருக்கழுக்குன்றப் புராணம்

57. வாழத் தானநத் தான்மக வான்கட
லாழத் தானநத் தானரு மாதவர்
சூழத் தானநத் தானச் சுரர்தொழும்
வேழத் தானநத் தான்பத மேற்கொள்வாம்.

(இ - பொ.) பிரம்மா, இந்திரன், திருமால், அருமையான மாதவர்கள், மற்றுமுள்ள தேவர்களெல்லாஞ் சூழ்ந்து, தாம் வாழும் பொருட்டாகத் தைய—

தானன—தானன வெனத் தொழுது கொண்டாடும் வேழ மாமுகத்தனின் சரண கமலத்தைச் சிரமேற்கொள்வோம். (எ - று.)

(அ - ப.) அனத்தான் = பிரமன்.
மகவான் = இந்திரன்.
கடலாழத்தான் = விஷ்ணு.
ஆனநம் = முகம்.

58. **பூவேழம் போதிகளாம் புரவேழம் பூவழியிற் பொழியும் பைந்தேன்**
காவேழம் புதமென்னுங் கருவேழம் பரத்தினெடுங் காக்குங் காவற்
கோ*வேழம் பயந்தமுத்தங் கொடுத்தகனிக் கடுத்தகனிக் குவையோ டப்ப
மாவேழம் படைத்தவண்டு வனவேழம் புரக்கவென்று வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) உலகமேழும், கடல்கள் ஏழும், அவற்றைச் சூழ்ந்த சோலைகளேழும், மேகங்களேழு மாகியவைகளை ஆகாயத்தினோடும் காக்குங் காவலையுடைய இந்திரன் [முன்னாள் சிவபெருமான் கொடுத்த பழத்துக்கு அடுத்துக் கொடுத்தாற் போல] முக்கனிக் குவைகளோடு, அப்பமும், கரும்புகளும் படைத்துப் பூசித்த வண்டுவனப் பிள்ளையார் நம்மைக் காப்பாராக என்று வணக்கஞ் செய்வோம். (எ - று.)

(அ - ப.) அம்போதி = சமுத்திரம்.
அம்புதம் = மேகம்.
மாவேழம் = கரும்பு.
வண்டுவனம் = சங்கு தீர்த்தம்.
புரத்தல் = காத்தல்.

31. திருக்காளத்திப் புராணம்

59. **செஞ்சந்தங் களபக் கொங்கைச் செழுமலை யிமய மங்கை**
கஞ்சந்தங் கியபொன் போற்றுங் கருணைஞா னப்பூங் கோதை
நஞ்சந்தெள் ளமிர்தா வுண்ட நாதரோடு வந்து பெற்ற
வஞ்சந்திப் பிள்ளை செம்பொ னடிமலர் முடிமேற் கொள்வாம்.

(இ - பொ.) செவ்விய சந்தனங் கலவைச் சாந்தணிந்த கொங்கைகளையுடைய இமாசலன் புத்திரியும், தாமரை மலரில் வாழும் இலக்குமி போற்றுங் கருணையையுடையவளுமாகிய ஞானப்பூங்கோதையம்மன் ஆலகாலத்தையும் அமுதமாக வுண்ட பரமசிவனைச் சேர்ந்து பெற்றெடுத்த கரிமுகனாகிய விநாயகக் கடவுள் செம்பொன்னடி மலரை நமது சிரமேற்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) சந்தம் = சந்தனம்
களபம் = கலவைச் சாந்து.
நஞ்சம் = விஷம்.

60. **செஞ்சந்தச் சேறளவிச் செழுந்திதலை பொதிந்தமுலைப்**
பஞ்சஞ்சு மெல்லடியின் பனிவரைமா மகளுயிர்த்த
வஞ்சந்திப் பிள்ளையெனு மருவிமத மழகளிற்றை
நெஞ்சந்தங் கியவுவப்பான் முச்சந்தி தொறுநினைவாம்.

---

* வேழம் பயந்த முத்தம் = திருநெல்வேலியில் சிவபெருமான் மூங்கிலில்வெளிப்பட்டமையின் இப் பெயர் வந்தது.

(இ - பொ.) செஞ்சந்தனச் சேற்றைப் பூசிய செழுமையான தேமல் படர்ந்த முலையும், பஞ்சினு மிருதுவாகிய மெல்லிய அடியுமுடைய பருவத வர்த்தனி பெற்ற கரிமுக விநாயகரை, நெஞ்சத்தில் தங்கியிருந்த உவப்பினால், முக்காலமும் சந்து சந்துக்கு நினைவாம். (எ - று.)

(அ - ப.) திதலை = தேமல்.
உவப்பு = விருப்பு.

32. செவ்வந்திப் புராணம்

61. அருளெனுங் கடன்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை யுதவுசெவ் வந்தி யானையின்
றிருவடி யிணைமலர் சென்னி சேர்த்துவாம்.

(இ - பொ.) அருட்பெருங் கடலை மொண்டு, பக்தர்களுடைய சிந்தையென்னும் உண்மையான நிலத்தில், சிவானந்த போகம் விளையும்படி வரமாகிய மழையைச் சொரிந்து உதவி செய்கின்ற செவ்வந்தியி லெழுந்தருளும் விநாயகக் கடவுளின் திருவடி மலர்களைச் சிரமேற் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) முகத்தல் = மொள்ளல்.

62. மருப்ப தாமெழுத் தாணியா லாயிர மாற்றுப்
பொருப்ப தாந்தனி யேட்டிலே பாரதப் பொருளை
விருப்ப தாம்படி யெழுதிய கரிமுக விமலன்
றிருப்ப தாம்புய மலரினை யிறைஞ்சுவாஞ் சிரத்தால்.

(இ - பொ.) தந்தக் கோடாகிய எழுத்தாணியால், ஆயிரமாற்றுத் தங்கத்திற்குச் சமானமாகிய மேருகிரி யென்னும் ஏட்டிலே ஸ்ரீமத் மகாபாரதத்தை, அதி விருப்பத்தினோடும் எழுதி யருளிய யானைமுகக் கடவுளுடைய திருப்பதாம்புய மலரைச் சென்னி கொண்டு துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) அம்புயம் = தாமரை.

33. அருணாசல புராணம்

63. மதமூன்று மாறாக வருங்களிற்று முகத்தானை மனத்தினி லேதான்
பதமூன்று மருந்தவர்க்குப் பதமூன்றுங் கடந்தபதம் பாலிப் பானை
விதமூன்று புரங்கடிந்தா ரளித்தருளு மொருமுதலை வேரோ டேசஞ்
சிதமூன்று பிறப்பொழிக்கு மானைதிறை கொண்டவனைச் சிந்தை
[சேர்ப்பாம்.

(இ - பொ.) மும் மதங்களும் ஆறாகி ஓடிவருகின்ற யானை முகமுள்ளவரும், மனதில் தம்முடைய திருவடிகளை நாட்டிச் சிந்திக்கின்ற அரிய தவத்தையுடையவர்களுக்குச் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் மூன்று பதங்களுக்கும் மேற்பட்ட நான்காம் பதமாகிய சாயுச்சியத்தைக் கொடுப்பவரும், முப்புரத்தை நீறு செய்த சிவபெருமானீன்றருளிய ஒப்பற்ற முதல் கடவுளும், சஞ்சிதம்,

பிராரத்தம், ஆகாமிய மென்னும் மூவகைப்பட்ட வினைகாரணமாக உண்டாகும் பிறவித் துன்பத்தை யடியோடு நீக்குபவருமாகிய யானை திறை கொண்டவரென்னும் விநாயகக் கடவுளை மனத்திற் சேர்த்துக் கொள்வாம். (எ - று.)

மதம் மூன்றாவன :—1. கர்ண மதம்.
2. கபோல மதம்.
3. பீச மதம்.

34. திருவெண்காட்டுப் புராணம்

64. கரியநா ரணனார்க்குங் கரியநா ரணனளித்த கமலத் தார்க்கு
மரியநா யகரைவலம் புரிந்துசெழுங் கனிவாங்கி யருந்தி ஞானத்
தெரியுநான் மறைமுனிவர் மகம்புரியு முழக்கமருத் திருவெண் காட்டிற்
பெரியநா யகியளித்த பெரியவா ரணத்தையன் பாற்பேணு வாமே.

(இ-பொ.) மகாவிஷ்ணுவுக்கும், அவர் பெற்றெடுத்த பிரம்மதேவர்க்கும் அறிய முடியாத சிவபெருமானை (முன்னொருகால்) வலம் வந்து செழுங்கனி வாங்கி யுண்டவனை, தெரிந்த நான்கு வேதங்களை யுணர்ந்த முனிவர்கள் செய்யும் யாகமும் வேத ஒலியும் இடைவிடாத திருவெண்காட்டில், பெரிய நாயகியம்மன் பெற்றருளிய விநாயகனைப் பேணி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) நாரணன் = நாராயணன், விஷ்ணு.
கமலத்தான் = பிரமன்.
முழக்கம் = ஒலி.

35. திருவிரிஞ்சைப் புராணம்

65. மலையேற்று நிரைபுரந்தோ னயன்பரவு
வழித்துணைவர் மகிழுஞ் சேயைக்
கலையேற்று மடமயிலு மலர்க்குயிலுந்
தொழுமுமையாள் களிக்கும் வாழ்வை
விலையேற்றம் படைத்தமணி வெயில்விரிக்கு
மெயில்புடைசூழ் விரிஞ்சை மேவு
மலையேற்று மதக்களிற்று முகத்தானை
யடிவணங்கி யன்பு கூர்வாம்.

(இ-பொ.) கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துப் பசுக்களைக் காத்த கோபாலனும், நான்முகனும் போற்றும் பரமசிவன் மகிழும்படியான குழந்தையை, சரஸ்வதியும் இலட்சுமியும் போற்றும் உமாதேவி மகிழும்படியான செல்வத்தை, விலையேறப்பெற்ற மாணிக்கங்களைப்போலச் சொலிக்கும் மதில்கள் சூழ்ந்த திருவிரிஞ்சைத் தலத்தில் எழுந்தருளிய மலைபோன்ற ஆனைமுகக் கடவுளைத் திருவடி பணிந்து அன்பு செலுத்துவாம். (எ – று.)

(அ - ப.) வழித் துணைவர் = மார்க்க சகாயப் பெருமான்.
கலைமயில் = சரச்சுவதி.
மலர்க் குயில் = இலட்சுமி.
எயில் = மதில்.

36. தீர்த்தகிரிப் புராணம்

66. தீர்த்த வெற்புறை களிற்றினைத் திருந்தவே ழுலகும்
பூத்த வெற்பருள் கொடிதருங் கனிதனைப் புயங்கங்
கோத்த வெற்பணிக் கடறரு மமுதினைக் குகற்கு
மூத்த வெற்பினைப் பணிந்துநாம் நினைத்தது முடிப்பாம்.

(இ – பொ.) தீர்த்தகிரியில் வசிக்கப்பட்ட கரிமுகனை, திருத்தமான ஏழுலகமும் பூத்த மலைவளர் காதலி தந்த கனி போன்றவனை, வாசுகியைக் கோத்த மந்தரகிரி கடைச்சலில் உண்டான கடலமுதினை, குகப் பெருமானாகிய சுப்ரமணியனுக்கு மூத்த பிள்ளையாகிய விநாயகனைப் பணிந்து, நாம் எண்ணிய வெண்ணம் ஈடேற்றிக்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) வெற்பு = மலை.
புயங்கம் = பாம்பு.
குகன் = முருகன்.

37. பழைய காஞ்சிப் புராணம்

67. அருள்பெறுவீ ரத்திறைவ ரணிதவள முண்டநகைத் தருளு மாழி
விரவவது பதத்தடக்கி யிருப்பதனைக் கண்டு பண்டு விடுவசேனன்
புரவிகட நடம்புரியச் சக்கரமங் கவற்குதவும் பொற்பா லப்பேர்
வரு*விகட சக்கரமுக் கட்கடவுண் மலரடியை வணக்கஞ் செய்வாம்.

(இ-பொ.) சிவனருள் பெற்ற வீரபத்திரக் கடவுள் அணிந்துள்ள வெண்டலை சிரித்ததால் கீழே விழுந்த திருமாலினுடைய சக்ராயுதத்தைப் பாதத்தில் அடக்கி வைத்திருப்ப, அதனைக் கண்டு முன்பொரு சமயம் விடுவசேனன் விகடக் கூத்தாடி வேண்ட, அவனுக்கு அச் சக்கரத்தைக் கொடுத்த காரணத்தால் விகட சக்கர விநாயகர் என்னும் பெயர் பெற்ற முக்கட் பெருமானாகிய விநாயகக் கடவுளது தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) வீரத் திறை = வீரபத்திரக் கடவுள்.
தவள முண்டம் = வெண்டலை.
ஆழி = சக்கரம்.
விகட நடம் = விகடக் கூத்து.

38. கந்தபுராணச் சுருக்கம்

68. மாவேலை யாலமதை யடக்கித் தன்னுண்
மண்டுலக மண்டமெலாம் வளர்ந்து தானோர்
காவேயின் முன்னுதித்த வரசிற் றோன்றிக்
கடம்புபுனை குருந்தினுக்குத் துணைய தாகித்

---

* 'விகட சக்கர விநாயகர்' என்று விநாயகப் பெருமானுக்குப் பெயர் வந்த வரலாறு 'திகட சக்கர' என்று தொடங்கும் கந்தபுராணக் காப்புச் செய்யுளின் அடிக் குறிப்பில் தரப்பட்டுள்ளது. அங்கே காண்க.

தூவேதந் தலைகாண்டற் கரிய தாகித்
துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர் வெய்யி
லாவேனைத் தன்னடியாம் நிழலிற் சேர்த்த
வத்திதனைப் பத்திசெய்து முத்தி சேர்வாம்.

(இ - பொ.) அலைகடலில் உண்டாகிய ஆலகால விஷத்தைக் கண்டத் தானத்துளடக்கித் தன்னுள் உலகமெல்லாம் (அண்டமெலாம்) வளர்ந்து தானோர் மூங்கில் குருத்தில் தோன்றிய சிவபெருமானிடமாகப் பிறந்து கடப்ப மலர் மாலையை அணிந்துள்ள குழந்தையாம் முருகனுக்குத் தமையனாகி, வேதங்களாலறியவொண்ணாத் தலைமைபெற்று, துன்பத்தைத் தருகின்ற பிறவி யென்னும் புழுதி மண் சேர்ந்த வெய்யிலிலடிபடுவேனை, தம்முடைய திருவடி நிழலிற் சேர்த்த அத்தி முகனைப் பத்தி செலுத்தி முத்தி வாழ்வை யடைவாம். (எ - று.)

(அ - ப.) வேலை = சமுத்திரம்.
ஆலம் = விஷம்.
அரசு = இறைவன்.
கடம்பு = கடப்ப மலர்.
குருந்து = குழந்தை.
துகள் = புழுதி.
அத்தி = ஆனை.

39. திருவாவடுதுறைப் புராணம்

69. சிந்தைநினை வுறுதியுஞ்சொற் றமிழ்ச்சுவையும்
பொருட்சுவையுந் தெளிவும் பாச
பந்தமறுத் திடும்போதப் பரிவுமளித்
துடனிகழ்வென் பாலிற் றேன்றச்
சுந்தரக்கன் றுருவாகிக் கயிலைவிட்டுத்
தாய்ப்பசுவின் றுணையாய்க் கூட
வந்தருண்மும் மதத்துதிக்கை வாரணத்தி
னிருமலர்த்தாள் வழுத்தல் செய்வாம்.

(இ - பொ.) உறுதியாய் எண்ணும் எண்ணமும், தமிழின் சொற் சுவை பொருட் சுவையும், தெள்ளிய தெளிவும், பாச பந்தங்களைப் பற்றறுத்திடும் தீவிர அறிவும் கொடுத்து, உடனே எனக்குத் தரிசனந் தரும் பொருட்டாகச் சுந்தரமான கன்றுருவமாகிக் கைலாசத்தை விட்டுத் தாய்ப் பசுவாகிய பார்வதியம்மன் துணையோடுங் கூடி வந்தருளும், மும்மதத் துதிக்கையுடைய விநாயகக் கடவுளின் இரண்டு தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தோத்திரஞ் செய்வாம். (எ - று.)

(அ - ப.) பாச பந்தம் = மல பந்தம்.
வாரணம் = யானை.

40. காஞ்சிப் புராணம்

70. இருங்க வுட்டுளை வாக்குகார்க் கடங்களிங் குலிகக்
குருநி றத்திழி தோற்றமுன் குலாய்த்தவழ்ந் தேறிப்

பரிதி மார்பினிற் சமனொடு காளிந்தி* பயிலுங்
திருநி கர்த்தசீ லைங்கரக் களிற்றினைச் சேர்வாம்.

(இ - பொ.) இரு காதுகளின் துளைகளிலிருந்து ஊற்றும்படியான மத நீர் ஒழுக்குகள் சாதிலிங்கத்தின் நிறத்தினை ஒத்த சிவந்த மார்பினிடத்தே பாயுந் தோற்றம் முன்பொரு சமயம் சூரியன் மார்பில் இயமனும் காளிந்தியும் குலாவித் தவழ்ந்து விளையாடும் அழகினை ஒத்து விளங்கும்படியான சிறப்புப் பொருந்திய ஐந்து கரங்களையுடைய விநாயகக் கடவுளை இடைவிடாது துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) கவுள் = கன்னம், காது.
கடம் = மதநீர்.
இங்குலிகம் = சாதிலிங்கம்.
குரு = நிறம்.
நிறம் = மார்பு.

71. விகட சக்கர வாரணந் தொடர்வரும் வித்தக முகில்வீற
விகட சக்கர விந்தமன் னவன்றனக் கருளுமெய்த் தலைவாகு
விகட சக்கர வாகமென் முலையுமை கான்முளை யென்னுச்சே
விகட சக்கர ரெந்திர மெனச்சுழல் வெம்பவக் கடல்நெஞ்சே.

(இ - பொ.) நெஞ்சமே நீ, விகட சக்கர விநாயகர் என்னும் பெயரையுடையவனே! வேதங்கள் தொடர்தற்கரிய ஞான மூர்த்தியே! மேகத்தின் பெருமையைப் போக்கிய மத நீரை உடையவனே! செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய திருமாலுக்கு அருள்புரிந்த உண்மைத் தலைவனே! குவிந்த குடமும் சக்கரவாகப் புள்ளும் போன்ற மென்மையான முலையினையுடைய உமையம்மையின் புதல்வனே! என்று வணங்கி, குயவர் சக்கரம்போல் சுழலுதற்கு ஏதுவாகிய கொடிய பிறவிக் கடலைக் கடப்பாயாக. (எ - று.)

(அ - ப.) ஆரணம் = வேதம்.
வித்தகன் = ஞானமூர்த்தி.
அக்கு = கண்.
கடம் = குடம்.
சக்கரவாளம் = ஒரு பறவை.
கான்முளை = புத்திரன்.
சக்கரர் = குயவர்.
பவக் கடல் = பிறவிக் கடல்.

72. விழிமலர்ப்பூ சனையுஞற்றித் திருநெடுமால் பெறுமாழி மீள வாங்கி
வழியொழுகாச் சலந்தரன் மெய்க்குருதிபடி முடைநாற்ற மாறு மாற்றாற்
பொழிமதநீர் விரையேற்றி விகடநடப் பூசைகொண்டு புதிதா நல்கிப்
பழிதபுதன் றாதையினும் புகழ்படைத்த மதமாவைப் பணிதல் செய்வாம்.

(இ - பொ.) கண்ணாகிய தாமரை மலரைக்கொண்டு அருச்சித்துப் பூசனை செய்து திருமால் சிவபெருமானிடம் பெற்ற சக்கரத்தைத் திரும்பவும்

---

*இயமனும் கானிந்தியும் சூரியனுடைய மக்கள் என்ப.

வாங்கி * நன்னெறியில் ஒழுகாத சலந்தரனுடைய உடலிலுள்ள இரத்தம் படிந்த புலால் நாற்றம் மாறும்படி பொழிகின்ற மத நீரால் மணமேற்றி, விடுவசேனன் செய்த விகட நட வழிபாட்டை ஏற்றுக்கொண்டு அச் சக்கரத்தைப் புதிதாகக் கொடுத்துப் பழியில்லாத தந்தையாம் சிவபெருமானைவிடப் புகழ்படைத்த விநாயகப் பெருமானைப் பணிவாம். (எ - று.)

ஷை இரண்டாங் காண்டம்

73. பகட சக்கர முதற்பல பவமெனுந் துயரி
னிகட சக்கரங் கடத்திடு நெடும்புணை விண்போழ்
முகட சக்கர வாளத்திற் சூழ்வினை முடிக்கும்
விகட சக்கர தந்திமென் மலரடித் துணையே.

(இ - பொ.) மாயப் பிரபஞ்ச முதலாகப் பல பிறப்பென்னுந் துயரத்தில் நிகழாநின்ற தச வித வியசனத்தையும் கடக்கும்படியான நெடிய தெப்பமானது ஆகாயத்தைப் பிளந்துகொண்டு, உச்சியுள்ள சக்கரவாள கிரியில், இருவினையொப்பு மலபரிபாகமாக்கிக் கொள்ளும் விகட சக்கர விநாயகர் மெல்லிய மலரடித் துணையாம். (எ - று.)

(அ - ப.) தசக்கரம் = பத்துக்கரம் : வலப் புறம்—சூலம், மழு, வாள், வச்சிரம், அக்கினி. இடப்புறம்—அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம்.

41. விநாயக புராணம்

74. அகரமென வறிவாகி யுலக மெங்கு மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப் பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ணான்கினையு மிடர்தீர்ந் தெய்தப் போற்றுநருக் கருட்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

(இ - பொ.) அகர வுயிர்போல அறிவாகி, யுலகமெங்கு நிறைந்து, அகார, உகார, மகாரங்கள் தம்மால் சொல்லும்படியானவொரு ஓங்காரமாகி, வேறு பலவாகி, வெவ்வேறு திருமேனி தரித்துக்கொண்டு, குற்றமில்லாத அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையும், துன்பம் நீங்கி எய்தப்பெற்றுத் துதிப்பாருக்குக் கருணா கடாட்சம் செய்தும், மற்றவருக்கு ஒப்பில்லாத மறக் கருணை புரிந்தும் ஆட்கொள்ளும்படியான நின்மலனாகிய கணபதியை நினைந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) புகர் = குற்றம்.

---

* திருமால் சக்கரம் பெற்ற வரலாற்றைக் காஞ்சிப் புராணம் - திருமாற்போற்றுப் படலத்திலும், பிள்ளையார் அதனைப் புதிதாக நல்கிய வரலாற்றை விடுவசேனப் படலத்திலுங் காண்க.

42. திருத்தணிகைப் புராணம்

75. மும்ம தத்தனென் றொருபெயர் தனக்குமொய் கூந்தற்
கொம்மை வெம்முலைக் கோற்றொடிக் கொடிச்சியை யிலைவேற்
கைம்ம லர்த்தனி யிளவற்குங் கஃறெனுங் கானத்
தம்ம முந்துபுக் குறுத்தவ னடிமலர் பணிவாம்.

(இ – பொ.) கர்ன, கபோல, கோசமாய மும்மதத்தன் என்ற பெயர் தமக்கும், (வண்டுகள் மொய்த்த கூந்தலும் கொம்மை வெம்முலைக்கொடி யிடையு முடைய பார்வதி பெற்ற) தம் தம்பியாகிய ஐயிலை வேலாயுதனுக்கும் உண் டென்று காட்டுவான் கருதிய (திருவிளையாடலாய்) தினைப் புனத்தில் வள்ளியம் மன் எதிர்ப்புகுந்து முக முறுத்திய விநாயகப் பெருமானுடைய திருவடி மலரை வணங்குவாம். (எ - று.)

76. ஊற்றிருக்கு மதக்கலுழி யுன்னுமடி யாருளத்துக் கறையை மண்ணக்
கூற்றிருக்குங் கூர்நுதிவெண் கோடுவெளிற் றறிவிரண்டுங் குமைப்ப மேனி
தோற்றிருக்கு மளப்பரிய சுடர்நிறைப்பத் தோரணக்கம் பத்தெஞ் ஞான்றும்
வீற்றிருக்கும் பெருமானை விரைமலர்த்தூய்ப் பணிந்தெழுந்தெம்
[மெலிவு தீர்வாம்.

(இ - பொ.) பெருகிவரும்படியான மத நீரானது தம்மை நினைக்கும் அடியா ரது உள்ளக் கறையைக் கழுவ, இரு கூருவிருக்கும் கூரிய முனையுடைய வெண் தந்தங்கள், பசுஞானம், பாச ஞானம் ஆகிய இரண்டையும் சிதைப்ப, திருமேனி யில் தோன்றும் அளவில்லாத பேரொளியானது பதி ஞானத்தை அருள, திருத் தணிகையில் தோரணக் கம்பத்தினடியில் எப்பொழுதும் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை மணம் மிக்க மலர் கொண்டு அருச்சித்து வணங்கி யெழுந்து எம் துன்பத்தைத் தீர்த்துக்கொள்வாம். (எ - று.)

77. பண்ணிய மேந்துங் கரந்தனக் காக்கிப் பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி யரதனக் கலச வியன்கரந் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக் கரிசினேற் கிருகையு மாக்கு
மண்ணலைத் தணிகை வரைவள ராபச் சகாயனை யகந்தழீஇக் களிப்பாம்.

(இ – பொ.) அப்ப முப்பலகாரங்களை யேந்தும் திருக் கரத்தைத் தம தாக்கிக்கொண்டும், பால் நிலாப் போன்ற தந்தங்களையுடைய திருக் கரத்தைத் தேவர்களுக்கு ஆக்கிக்கொண்டும், இரத்தின கலசமுடைய திருக் கரத்தைத் தாய் தந்தையர்க்காக்கிக்கொண்டும், நிகரில்லாத ஆணவ மல மாதியவற்றைக் கட்டி யடக்கி அடியேனுக்கு (முத்தி தர) இரு கரமும் ஆக்கிக்கொண்ட அண்ண லைத் தணிகாசலத்தில் வளர் ஆபத் சகாயனை உள்ளத்திருத்தி உவப்பாம். (எ - று.)

(அ - ப.) பண்ணியம் = பலகாரம்.
அரதனக் கலசம் = ஆபரண வகை.
கரிசினேன் = அன்புடையேன்.

43. பேரூர்ப் புராணம்

78. கங்கையும் பனிவெண் டிங்களும் விரைத்த கடுக்கையந் தொங்கலு மரவுந்
தங்குபொற் சடையு முக்கணுந் தாதை தாணுவென் றுணர்த்தமென் மலர்க்கை
யங்குச பாச மணிந்து வெற்புயிர்த்த வாரணங் கன்னையென் றுணர்த்தி
வெங்கலி முழுதுந் துமித்தருள் பட்டி விநாயகன் சேவடி பணிவாம்.

(இ - பொ.) தகப்பன் சிவபெருமானென்று உணர்த்தற் பொருட்டும், தாய் பார்வதியென்று உணர்த்திடவும், கங்கை, பனி வெண் திங்கள், கொன்றை மாலை, அரவாபரணம், பொன்னிறச் சடாமுடி, முக்கண், அங்குசபாச முதலியன வணிந்து, வெவ்விய வினை முழுவதையும் அறுத்து மென் மலர்க் கரத்தால் ஆண்டருளும் பேரூர்ப் பட்டீச்சுரத்தில் எழுந்தருளி யுள்ள விநாயகப் பெருமானுடைய பாதாரவிந்தத்தைப் பணிதல் செய்வாம். (எ - று.)

(அ - ப.) கடுக்கை = கொன்றை.
பட்டி = பிள்ளை, பட்டீச்சுரம்.

79. கற்றை வெண்கதிர் மேருவி னொழுக்கிய காட்சியின் மணிமார்பி
னுற்ற முப்புரி நூல்கர டத்தினின் றுகுமதத் துருவேறாய்ப்
பெற்ற தாதைபோற் றேவர்தஞ் சிகைகொலோ பூண்டன ரிவரென்னும்
பெற்றி நித்தலும் விளைக்குமைங் கரன்கழற் பிரசமாமலர் போற்றி.

(இ - பொ.) தொகுதியான வெண்மையாகிய ஒளிக் கதிர் மேருமலையினிடத்தே ஒழுகிவருங் காட்சிபோல அழகிய மார்பில் அணிந்துள்ள முப்புரி நூலாலும், கவுளினின்று உகும் மத சலத்தாலும் உரு வேறுபட்டு, தம்மைப் பெற்ற தந்தையாம் சிவபெருமான்போல, தேவர்களது சிகையினைப் பூண்டனரோ இவர் என்னுந் தன்மையை நாளும் உண்டுபண்ணும் விநாயகப் பெருமானது திருவடி மலர்களைத் துதிப்பாம். (எ - று).

44. திருவானைக்காப் புராணம்

80. நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த நாயகனார் நிருதர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென் றியம்புபதப் பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்ந்தமழ விளங்களிற்றை வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) உலகங் கொண்டாடும் குளிர்ச்சியான சந்திரனை யணிந்த சாம்பசிவனார் இராட்சதர் வாழுந் திரிபுரத்தைத் தகனஞ்செய்யு நாளையில் தாமும் மெய்யடியார்கள் கொண்டாடும் விநாயகப் பிரபாவத்தை நிலைநாட்டி, பூசை முதலானவை செய்து, செயமடையத்தக்க இரதத்தை யூர்ந்தனர். (அவ்விதப் பெருமை வாய்ந்த) விநாயகக் கடவுளை நாமும் துதிசெய்வாம். (எ - று).

81. விண்ணாடர் தமக்கிரங்கி வேழமுகத் தவுணனுயிர் வீட்ட வீட்டற்
கொண்ணாத வொருசாங்க முபாங்கமென மலர்க்கரத்தி னொளிரக்
[கொண்டோய்
கண்ணாற்பன் மொழிகேட்கு மணிப்பூணோய் கமழ்கந்தங் கையான் மோக்கு
மண்ணாவென் றுரைத்தாதிப் பெருஞ்செல்வ விநாயகனை யடுத்து வாழ்வாம்.

(இ - பொ.) தேவர்களுக்காக இரக்கங்கொண்டு, கயமுகாசூரன் உடலையழிக்கும்போது, அதில் அழிக்கக்கூடாத தன் சாயலாகிய தந்தக்கோடுகள் இருக்கக்கண்டு கரபூஷணமாகக் கொண்டவனே! கண்ணையே செவியாகக் கொண்டு கேட்கும் பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளவனே! வாசனைப் பொருள்களைத் துதிக்கையால் மோந்து பார்க்கும் தலைவனே! என்று துதித்து ஆதிப்பெருஞ் செல்வ விநாயகனை இடைவிடாமல் துதித்து வாழ்வாம். (எ - று.)

(அ -ப.) சாங்கம் = சாயல்.

45. பூவாளூர்ப் புராணம்

82. திருமாலும் பிரமருமற் றமரருந்தா மலர்வேதச் சிரத்தெஞ் ஞான்று
மொருவாத பிரணவத்தி னுரியபொரு ளொருதானென் றுலகந் தேற
மருவாரு மலர்க்கொன்றை மன்னவனப் பிரணவமால் களிருய்த் தந்த
பெருவாழ்வு தருங்களிற்றுக் கிடமாகு மெனதுள்ளப் பிறங்கன் மாதோ.

(இ - பொ.) திருமாலும், பிரமரும், அமரர் முதலானோரும், வேதபாராயணத் துவக்கத்தில் எந்நாளும் (மறந்தும்) விட்டு விடாத பிரணவத்தின் உரிமையான பொருள் ஒன்று தானென்று, உலகத்தார் ஐயந்திரிபற உணரும்படி, வாசனை கமழும் கொன்றை மலர்சூடிய பரமசிவன், அத்தாரக வடிவமாய்த் தந்த பெரிய வாழ்வுடைய விநாயகக் கடவுளுக்கு, என்னுடைய உள்ளமாகிய மலை தங்குதற்கிடமாகும். (எ – று.)

(அ -ப.) அமரர் = தேவர்.
பிரணவம் = தாரகம்.

83. அள்ளிலைய ஞாங்கர்மழு வாதிக ளிருந்து
மொள்ளுகிர்க ணுதியி னுறுபகை கடந்த
வள்ளலென வேயொரு மருப்பினிகல் வென்ற
வெள்ளைமத வாரணமென் மெய்வினை முடிக்கும்.

(இ-பொ.) இலைவடிவாகிய வேல் மழு முதலிய ஆயுதங்களிருந்தும் ஒளிபொருந்திய நகம் கண் முதலியவற்றால் மிக்க பகைவர்களை வென்றருளிய சிவபெருமானைப் போலவே ஒற்றைக் கொம்பினால் பகைவரை வென்ற, வெள்ளைமத வாரணம் என்னும் பெயரையுடைய விநாயகப் பெருமான் எனது மெய்ம்மையான வினைகளை முடித்து வைப்பான். (எ-று.)

46. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

84. கருணைமத முவட்டெடுப்ப முத்திவனத் திடைதிரிந்து காள மேகத்
தருணமதி யுதயமெனுந் திலகநுத னித்திலப்பூ ணழகு செய்ய
மருணனிசேர் தைவிகமுற் பவுதிகமான் மிகவிருத்த மாறத் தேவர்
பொருணிறைபூ சனையுவந்த வலம்புரிக்கைக் களிற்றிருதாள் போற்றி வாழ்வாம்.

(இ – பொ.) திருவருளாகிய மதம் பெருக்கெடுக்க, முத்தியாகிய நந்தவனத்தைச் சூழ்ந்து, கரியமேகத்திலே சூரியனும், சந்திரனும் உதயமானாற்போல நெற்றியில் நித்திலப் பொட்டு அழகு செய்யவும், மருள் நிறைந்த ஆதி தைவிகம்,

ஆதி பவுதிகம், ஆதியான்மிகம் இவைகள் மாறிவிடவும், தேவர்கள் செய்யும் உண்மை நிறைந்த பூசனையை விரும்பிய வலம்புரி விநாயகரது இரண்டு திருவடித் தாமரைகளைப் போற்றி வாழ்வாம். (எ – று.)

(அ - ப.) பிறவிகள்
தைவிகம் = தேவதை சம்பந்தம்.
பவுதிகம் = பூத சம்பந்தம்.
ஆன்மிகம் = மானிட சம்பந்தம், (ஆன்ம சம்பந்தம்)

85. முன்ன வாவிய பழம்பொரு ளியாவையு முனிந்து
பின்ன வாவிய பெரும்பொருள் யாவையு நல்கும்
பொன்ன வாஞ்சடைப் பாடலேச் சுரனருள் புதல்வன்
சொன்ன வாறறி களிற்றெழிற் றுணைமலர்ச் சரணே.

(இ - பொ.) அநாதியே பந்தித்துவந்தமும் மலங்கள் யாவையும் நீக்கி, பிற்பாடு கோரிவந்த பெரிய மோட்ச சாம்பிராச்சியம் யாவையும் கொடுக்கும் பொன்னிறத்தவாஞ் சடையுடைய பாடலேச்சுரன் புதல்வனான விநாயகக் கடவுளின் அழகிய இரண்டு தாமரை மலர் போன்ற திருவடிகளே நமக்குச் சரண். (எ – று).

86. நந்தார் கரத்தோ னயன்கபில னும் புரிபூசனையு வந்து
கொந்தா ரளகச் சித்திபுத்தி கொங்கைக் குடத்து ளமுதருந்தி
யைந்தார் கரத்திற் கோடுகனி கலசம் பாசாங் குசமவிரச்
சிந்தா மணியை யணிபுலிசைத் தெய்வக் களிற்றை வணங்குவாம்.

(இ - பொ.) சங்கமேந்திய மகாவிஷ்ணுவும், பிரம தேவரும், கபிலரும் எந்நாளும் புரியும் பூசனைக்கு மகிழ்ந்தும், பரிமளமான பூங்குழலுடைய சித்தி, புத்தி என்பவர்களது கொங்கையாகிய குடத்துள் அமுதம் அருந்தியும், ஐங்கரத்தில் தந்தக்கொம்பு, கனி, கலசம், அங்குச பாசம் ஒளிரவும் விளங்கும் சிந்தாமணியணிந்த விநாயகக் கடவுளை வணங்குவாம். (எ-று.)

(அ - பொ.)
நந்து = சங்கு.
கொந்து = பூங்கொத்து.
அளகம் = கூந்தல்.
அவிர = ஒளிர.

47. திருச்செந்தூர்ப் புராணம்

87. ஊற்றெ டுத்துவண் டோலிடு மும்மதத்
தாற்றெ ழுக்கி னருவியஞ் சாரல்வா
யேற்று கைக்கு மிறைவற்கு முந்திய
மாற்றி லாக்களி யானையை வாழ்த்துவாம்.

(இ - பொ.) ஊற்றுப் பெருக்கெடுத்து வண்டுக் கூட்டங்கள் ஒலித்து மொய்க்கும் மும்மத ஆற்று அருவி பாயும்படியான வாயினையுடைய எருதினை வாகனமாகக் கொண்டு செலுத்தும்படியான சிவபெருமானுக்கும் முற்பட்ட ஒப்பில்லாத விநாயகக் கடவுளை வாழ்த்துவாம். (எ-று.)

48. கடம்பவனப் புராணம்

88. கதத்தானை நீண்டகுர கதத்தானை யிராவணனைக் கடிந்தோன் காணாப்
பதத்தானை முதலினர்முற் பதத்தானை வெள்ளையிபப் பாகன் போற்று
மிதத்தானை பொறியிலர்கட் கிதத்தானைக் கடம்பவனத் திருக்குந் தேவை
மதத்தானை முகனைவென்ற மதத்தானை முகத்தானை வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) சினம் மிக்க யானைப்படை, பெரிய குதிரைப் படைகளையுடைய இராவணனைக் கொன்ற திருமால் காணாப் பாதத்தையுடைய சிவபெருமான் முதலியவர்கட்கு முற்பட்ட பதத்தினை உடையவனை, வெள்ளை யானையையுடைய இந்திரன் போற்றுதற்குரியவனை, ஐம்பொறிகளை வென்றவர்களுக்கு இன்பஞ் செய்பவனை, கடம்பவனத்தில் எழுந்தருளியிருக்குந் தேவனை, கயமுகாசூரனை வென்ற விக்கினேச்சுரனைத் துதி செய்வாம். (எ - று.)

(அ - ப.) கதம் = கோபம்.
குரகதம் = குதிரை.
இராவணனைக் கடிந்தோன் = இராமன்.
இபம் = யானை.

---

49. உத்தரகோச மங்கைப் புராணம்

89. தளராத பேரன்புத் தளைபிணித்தி யோகமெனுந் தறியிற் சேர்த்தி
யுளமாய பெருங்கூடத் தணைத்தெனதென் கவளமளித் துவந்து போற்றி
வளையாழி மடையுடைந்த தெனக்கடாந் திறந்தொழுகு மதமா ருத
துளையார்கைப் பொருப்பைமலைக் கொடிபயந்த கற்பகத்தைத் தொழுது வாழ்வாம்.

(இ - பொ.) தளர்ச்சியடையாத பேரன்பென்னும் தளையில் சேர்த்து, நிஷ்டையென்னுந் தூணில் கட்டி, உள்ளமாகிய பெரிய கூடஸ்தபிரம்மத்தில் கூட்டி, சுயம்பிரகாசக் கவளத்தைக் கொடுத்து, (அடியேனை) மகிழ்ச்சியுடன் காப்பாற்றிய, வளைந்த கடல் உடைந்தாற் போல, மதநீர் பாய்ந்து ஒழுகா நின்ற தும்பிக்கையுடையவனை, மலைவளர் காதலி பெற்ற கற்பக விநாயகக் கடவுளைக் கருதி வாழ்வாம். (எ - று.)

(அ - ப,) தறி = தூண்.
யோகம் = நிஷ்டை.
கூடம் = கூடஸ்தபிரம்மம்.
ஆழி = கடல்.

---

50. கடம்பர் கோயிற் புராணம்

90. பொருளுஞ் சித்தியும் போகமும் யோகமுந்
தெருளுஞ் சித்தித் திடமலத் தெவ்வினான்
மருளுஞ் சித்திய மானனென் பார்க்கெலா
மருளுஞ் சித்திநல் லானையைப் போற்றுவாம்.

(இ - பொ.) பொருளும், சித்தியும், போகமும், யோகமும், தெளிவும் சித்தித்திருக்க, மலமாயா கன்மத்தினால் மயங்கிய சிற்றறிவுடைய ஆன்மாக்கட்கெல்லாம் அருள் தந்தாட்கொள்ளுஞ் சித்தி விநாயகனைச் சேவிப்பாம். (எ-று.)

(அ - ப.) தெருள் = தெளிவு.
இயமானன் = ஆன்மா.

91. உந்து கார்க்கடாந் திருவுரு விருபுறத் துறலா
லிந்தி ரைக்கிறை யுமைவல மிடம்பெற விருந்த
தந்தை போல்வளர் தந்திதாட் டாமரை தமியேன்
சிந்தை கண்சிர மீதினுஞ் சிறந்துசேர்ந் தனவே.

(இ - பொ.) உயர்ந்த விநாயகத் திருவுருவமானது, கரியமேனிக்கும், காப்புமாகிய விரண்டு பட்சத்தும் ஒத்துவருதலால், ஒருவகையில் மகாவிஷ்ணுவுக்குச் சமமாகவும், மற்றொரு வகையில் சிவபெருமானின் வாமபாகமும் இடப்பாகமும் பெற்றவர்போல (தாமும் பெற்றோர் மடியிலிருந்து வலத் தொடையிலும், இடத் தொடையிலுமாக மாறி வளர்ந்தமையால்) உமா மகேஸ்வரிக்குச் சமானமாகவும் விளங்கும் யானைமுகக் கடவுளுடைய திருவடித் தாமரைகள் அடியேனுடைய சிந்தை மீதினும், கண்கள் மீதினும்,சிரசின் மீதினும் சேர்ந்து சிறப்பித்தன.(எ-று.)

(அ -ப.) உந்து = உச்சி.
இந்திரை = இலட்சுமி.

51. வசவ புராணம்

92. மாதங்க ளாண்டுகங்கண் மாறிநின்று மாருத
மாதங்க வரைக்கரத்தான் மனத்தருளு மலையாளா
மாதங்கந் தோன்றநம்பால் வந்தாளு மதியுநல்க
மாதங்க முகத்தானை மறவாமல் வழுத்துவாம்.

(இ - பொ.) மாதங்கள், வருடங்கள், யுகங்கள் என இங்ஙனம் காலங்கள் மாறுபட்டும், தம்மியல்பு மாறுபடாத பெருமைபெற்ற, பொன்மலையை வில்லாகக் கரத்திலேந்திய சிவபெருமானுடைய திருவுளக் கிருபையும், அக்கடவுள் ஒரு பாகத்தே அம்பிகை திகழ நம்பால் எழுந்தருளி வந்து, அடிமை கொள்ளுதற் கேதுவாகிய ஞானமும் பாலிக்கும்படி யானைமுகக் கடவுளை இடையீடின்றித் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) மாதங்கம் = தங்கமயம்.
மாது + அங்கம் = மாதங்கம்.

52. சரப புராணம்

93. தற்ப ரத்தொடு சார்ந்து மலந்தபு
மற்பு தத்தை யடைந்தடைந் தின்புற
முற்ப வக்கடல் சாடிய மும்மதக்
கற்ப கத்தைக் கருத்து ளிருத்துவாம்.

(இ - பொ.) தற்பர விஸ்வாதீதமாகிய தன்னிலேயே சாரவைத்து, மலபரிபாகமாகும் அற்புதத்தை இடைவிடாமலின்புற்றடையும்படி, பூர்வ வினையாகிய பிறவிக் கடலை ஜாடைகாட்டி நீக்கிய மும்மதமுடைய கற்பக விநாயகக் கடவுளைச் சிந்தையுளிருத்திச் சேவிப்பாம். (எ-று).

(அ ப.) தபுதல் = விட்டொழிதல்.

94. சிந்தையிடர்க் கடனீந்திச் சிவானந்த முணர்ந்திடவுஞ் சிவானு பூதிப்
பந்தமுறச் சிவானந்தப் பரவையிடைப் படிந்திடவும் பற்று நல்கு
மிந்திரியப் பகைதடிந்தி யானெனது நீங்குமல ரிதய மேவு
மைந்துகரத் தந்திமுகத் தெந்தையிரு பதாம்புயங்க ளகத்துள் வைப்பாம்.

(இ - பொ.) மனக்கவலையாகிய கடலை நீந்திச் சிவானந்தம் உணர்ந்திடவும், சிவநிஷ்டைத் தொடர்பாய்ச் சிவானந்த சாகரத்தில் படிந்திடவும், பற்றுக் கோடாக வரும் பஞ்சேந்திரியங்களின் பகையை மின்னல்போலப் பறக்கச் செய்து யான், எனதென்னும் அகங்கார மமகாரங்களை நீக்கியவர்களுடைய இருதயத்தில் விளங்கும் ஐங்கரனாகிய ஆனைமுகமுடைய எமது சுவாமியாகிய விநாயகக் கடவுளின் பாதபங்கயங்களிரண்டையும் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) அநுபூதி = நிஷ்டை.
தடிதல் = மின்னென நீங்கல்.

53. சிவராத்திரிப் புராணம்

95. ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா யிருப்பானை யுரக வேந்தன்
றாங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந் தளித்தானைப் பசும்பொற் றோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து கரத்தானைப் போற்றல் செய்வாம்.

(இ - பொ.) ஓங்கி எழுந்த ஒற்றைக்கொம்பனை, உயிருக்குயிராய் இருக்கப் பட்டவனை, (ஆதிசேடனால் தாங்கும் இவ்வுலகத்து) கயமுகாசூரனைக் கொன்றவனை, உமாதேவியைப் பாகத்தில் வைத்து மழுவாயுதத்தைக் கையிலேந்திய சிவபெருமானளித்த மைந்தனை, பசும்பொன்னாலான இதழ்களையுடைய அழகிய தாமரை மலர் போன்ற பாதத்தவனை, ஒப்புவமையில்லா ஐங்கரத்தானைப் போற்றித் துதி செய்வாம். (எ - று.)

(அ - ப.) உரகவேந்தன் = ஆதிசேடன்.
பொருவு = ஒப்பு.

96. சொற்பகர்நா வினுக்கடங்கா வளங்குலவு தில்லைமன்றிற் றுலங்கு கோயிற்
பொற்பகலாக் குடபுலக்கோ புரத்தமரர் கணத்தலைவர் போற்ற மேவி
யற்பகனாண் மலரிறைத்துத் தொழுமடியார் கேட்டவர மளித்த லாலே
கற்பகநா மம்பெறுமே ரம்பனையோர் கொம்பனையுட் கருதி வாழ்வாம்.

(இ - பொ.) நாவினால் சொல்லமுடியாத வளப்பங்கள் நிறைந்த தில்லையம்பலத்தில் விளங்கும் அலங்காரம் விட்டுப் பிரியாத மேலைப் புலத்துக் கோபுரத்தருகே தேவர்களும், கணநாதர்களும் போற்ற வெழுந்தருளி, இரவும் பகலும் நாண்முகப் புல்லாலும், புதிய மலர்களாலும் பூசித்துத் தோத்தரிக்கும், அடியார்கள் தாம் விரும்பிக்கேட்ட வரங்களையளித்து வரலாலே கற்பக விநாயகமென்னும் பேருடைய கஜானனாகிய ஒரு கொம்புடையவனை உள்ளத்துள் கோரி வாழ்ந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) வளம் = வளப்பம்.
தில்லைமன்று = சிதம்பரம்.

பொற்பு = அலங்காரம்.
அல்—பகல் = இராப்பகல்.
நாண் = நாண்முகப்புல்.

54. சிவராத்திரிப் புராணச் சுருக்கம்

97. வேக மானெறி சேரும் வினைகளுந்
தாக சோகம் விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியி னால்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.

(இ - பொ.) வேகமாகச் சிலிர்த்தோடிச் சேரும் இருவினைகளும், அவற்றால் தாக தாப வேட்கையான சோகமும், தொடர்ந்து வரும் தளர்ச்சியும் முதலாகிய துன்ப வாரிதி யாவும் போய்விடும் பொருட்டாக (நமது) யானைமுக விநாயகனைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) நெறித்தல் = சிலிர்த்தல்.

55. சீகாழிப் புராணம்

98. பொன்னா ரிதழி மதுமாலைப் புனிதன் மருமமிசை மேவி
மின்னா ருமையா ணுதற்பிறையின் வேணிப் பிறையைச் சேர்த்திலகும்
பன்னா ணிறைந்த மதியமெனப் பார்த்து மகிழ்ந்து முகமலருந்
தென்னார் காழி யாண்டபிள்ளை செந்தா மரைத்தா ளிணைபணிவாம்.

(இ - பொ.) பொன்போலும் பிரகாசிக்கப்பட்ட கொன்றைப் பூமாலையைச் சூடிய பரமசிவனுடைய மார்பைத் தழுவிய மின்னலைப் போலும் பிரகாசிக்கும் உமையவள் நெற்றிப் பிறையினோடு, மூன்றாம் பிறைச் சந்திரனைச் சேர்த்து ஒளி வீசும் பூரண சந்திரனாக, அதனைப் பார்த்து மகிழ்ந்து முகமலர்ச்சியடையும்படியான சீகாழியில் உள்ள பிள்ளையாருடைய செந்தாமரைப் பாதங்களைப் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) இதழி = கொன்றை.
மருமம் = மார்பு.

99. நீண்டவ ரைவர்மீது நிறைகுணத்தோன் சொல்பனுவல்
பூண்டதனி மருப்பாரப் புனைந்தெழுதி நினைந்தவெலா
மீண்டவரும் பழவடியார்க் கின்பமுட னருள்காழி
யாண்டகண பதிதுணைத்தா ளம்புயங்கள் வணங்குவாம்.

(இ - பொ.) நீண்ட புகழுடையோராகிய ஐவர்கள்தம்மீது வேத வியாசர் சொல்லிய பாரதக் கதையை மேருமலையின்மீது தம்முடைய ஒற்றைக் கொம்பினால் பூரணமாக வெழுதி, எண்ணிய வெண்ணங்களெல்லாம் இனிது முடியும்படியாகப் பழைய வடியார்கட்கு இன்பமுடன் கிருபா கடாட்சம் செய்யும் சீகாழியில் எழுந்தருளியுள்ள விக்கின விநாயகருடைய திருவடியிணைத் தாமரைகளைத் தியானஞ் செய்வாம். (எ - று.)

(அ - ப.) ஐவர் = பஞ்சபாண்டவர்கள்.

56. திருவேற்காட்டுப் புராணம்

100. அண்டரிடர்க் கடல்சுருக்கி யசுரரிடர்க் கடல்பெருக்கி யவனி வாரி
யுண்டவனைக் கழங்கெனவே யோடியெடுத் தெறிந்தாடி யுமையாள் கேள்வன்
றொண்டர்களன் பளிமுரன்று துதைந்திடவே கருணைமதஞ் சொரியா நின்றே
கொண்டல்விளங் கெழில்காட்டுங் குஞ்சரன்றா ணிதமுடிமேற் கொள்ளு வாமே.

(இ – பொ.) தேவர்களுடைய துன்பக்கடலைப் போக்கியும், அரக்கர்களுடைய துன்பக்கடலைப் பெருக்கித் தள்ளியும், உலகமுண்ட வாயனாகிய விஷ்ணுவையோர் திருவிளையாடலாக வோடி (கழற்சிக்காயெடுத் தெறிந்தாடுவதேபோல்) எடுத்தும் மேலே எறிந்தும் ஆடியும், உமையவள் பாகனாகிய பரமசிவனுடைய தொண்டர்களன்புக்கு வரங்கொடுத்தும், நெருக்கமான கருணையாகிய மதஞ்சொரிந்து கொண்டே மேகநிறத்தைப் போன்ற அழகு காட்டும் யானைமுகக் கடவுளுடைய திருவடிகளை நமது முடிமேற்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) அவனி = பூமி.
துதைதல் = நெருங்கல்.
கொண்டல் = மேகம்.

57. சாணந்த கணேச புராணம்

101. மறைமுடிக் கரிய வெங்கோன் வளர்சடைத் தரங்க நீரை
முறைமுறை புழைக்க ரத்தான் முகந்துவிண் ணவர்கண் மீது
நிறைமகிழ் பூப்பத் தூவு நெடுமதக் களிநல் யானை
நறைகமழ் கமலத் தாளை நாடொறு மிறைஞ்சல் செய்வாம்.

(இ – பொ.) வேத முடிபுக்கும் அருமையான, எம்முடைய பரமசிவனுடைய சடாபாரத்திருக்கும் அலைகளையுடைய நீரைத் துதிக்கையால் பலமுறையும் மொண்டு, தேவர்கள் (முதலானோர்) மீது, நிறைந்த மகிழ்ச்சியுண்டாக வாரிச் சொரியும் நெடிய மதமுடைய யானைமுகப் பிள்ளையாரின் வெண்டாமரைப் பாதங்களை நாள்தோறும் வணக்கம் செய்வாம். (எ - று.)

(அ - ப.) தரங்கம் = அலை.
புழைக்கரம் = தும்பிக்கை.

58. கணேச புராணம்

102. சீர்பூத்த கோகனத மலரயன்மா லாதியராந் தேவாய் மிக்க
வேர்பூத்த சிருட்டிமுதற் றொழிலவைக்குக் காரணமா யிலங்கா நின்ற
பேர்பூத்த மறைமுடியி னொளிர்குடிலை தனிலுதித்த பெரு மானாகுங்
கார்பூத்த மதகளிற்று முகக்கடவு ளடிக்கமலங் கருத்துள் வைப்பாம்.

(இ - பொ.) தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மா, விஷ்ணு முதலான தேவர்களாய், சிருஷ்டி, திதி முதலான தொழில்களை நடத்துங் காரணகர்த்தாவாய், விளங்கப்பட்ட பேர்பூத்த வேத முடிவில் பிரகாசிக்கும் பிரணவந்தனிலுற்பவித்த பெருமானாகிய, கார்பூத்த மதம் பொழியும் விநாயகக் கடவுளுடைய திருவடிக் கமலங்களைக் கருத்துள் வைப்பாம். (எ - று.)

(அ - ப.) கோகனதம் = தாமரை.
குடிலை = பிரணவம்.

59. திருவாப்பனூர்ப் புராணம்

103. திருநான் மறைச்சங் கிலிகொண்டு நில்லா துசெக மேழுலாய்
வருஞான மதமூற மணியாக வுதயாத்த மனவெற் பையே
யிருபாலு மணியாப்ப னூரானை யாளா நமிடை யன்பொடு
மொருநூலின் யாப்பின்க ணிற்கின்ற திதுபோலு முளதி யாதரோ.

(இ-பொ) அழகிய நான்கு வேதங்களாகிய சங்கிலியைக்கொண்டு கட்டியும் நிலைத்திடாமல், ஏழுலகங்களில் உலாவி விளங்குவதாய், பொங்கிப்பெருகும் ஞானமாகிய அமுது ஊற்றெடுத்துப் பெருக, நல்ல மணி போன்ற தூய உள்ளத்தில் (தோன்றக் கட்டிய) உதயகிரியையும் அஸ்தகிரியையும் ஒத்த இரு பக்கத்தும் (இரவும் பகலும்) அழகிய திருவாப்பனூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனை, தக்க துணையாக, நம்மிடத்தில் அன்போடு, ஒப்பற்றதாய்ச் செய்யப்படும் நூலின்கண் உள்ள செய்யுட்களிடத்துக் குற்றமறக் காத்து நிலைத்திருக்கின்ற இத்தெய்வம் போலும் காப்புக்கடவுளாக உள்ள தெய்வம் வேறு யாது? வேறில்லை. (எ—று.)

விநாயகப் பெருமான் பிரணவாகார சொரூபி. பிரணவம் வேதங்களுக்கும் முந்தியது. ஆதலால் வேதங்களால் கட்டப்படாதது. நான்கு வேதங்களையும் நான்கு சங்கிலிகளாக உருவகித்தார். கட்டப்படாதவராகவே ஏழுலகங்களிலும் உலாவுகிறார்—எனவே சர்வ வியாபி என்றபடி. விநாயகர் யானை உருவினர் ஆதலின் ஞானமே அவருக்கு மதநீர். 'ஞான மத்தகஜம்' என்றார் தாயுமானவரும். தூய மணி போன்றவர் என்றார் ஒளிதருபவர் என்பதைப் புலப்படுத்த. சூரியன் உதிக்கும் மலையும் அஸ்தமிக்கும் மலையும் வடிவிற்கும் நிறத்திற்கும் உவமை. ஆதலின் வண்ணமும் வடிவும் பற்றி வந்த உவமை என்க.

60. திருப்பூவனப் புராணம்

104. திகழ்வரைமின் னனைவதனச் செங்கமலர் தளையவிழ்க்குந் திவாக ரஞ்செய்
மகிழொருவெண் மதிமருப்பின் வயிர மணிக்கிம் புரிசூழ் வாரணஞ்சீர்
நிகழுமடி யார்க்கன்பு நீடுமறம் பொருளின்பம் வீடு நல்கும்
புகழ்தருநற் கற்பகத்தின் பொற்பதத்தை யெஞ்ஞான்றும் போற்றல் செய்வாம்.

(இ - பொ.) மலைவளர் காதலியைப் போல (தயவு கொண்டு ஆன்மாக்களின்) முகாரவிந்தத்தை மலரச் செய்யுஞ் சூரிய நாராயணனாய், மகிழ்ச்சி செய்யும்படியான வெள்ளிய சந்திர பிறையைப் போன்ற தந்தக் கொம்பினுடன், வைரத்தாலும், மாணிக்கத்தாலும் கட்டிய தோளணியும் பூண்ட யானையாய், சீராக நடக்கின்ற அடியார்களுக்கு அன்பாகி நீடித்த தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் இவைகளைத் தரும்படியான கீர்த்தி வாய்ந்த கற்பக விநாயகக் கடவுளின் பொன்னடியை எந்நாளும் போற்றிக் கொண்டு வருவாம். (எ - று.)

(அ - ப.) வதனம் = முகம்.
திவாகரம் = சூரியன்.
கிம்புரி = தோளணி.
மின்னனை = திருப்பூவனத்துத் தேவி திருநாமம்.

61. மயூரகிரிப் புராணம்

105. சீர்கொண்ட தாதையைப்போன் மதன்றனுவைப் பார்ப்பளவிற் சிதைய நூறு
நீர்கொண்ட நல்வாயன் கரிமுகன்வெண் கோட்டினன் செந்நிறத்தன் வாய்த்த
வேர்கொண்ட கொன்றைபுனை செஞ்சடையோ னன்பர்மனத் திருக்கு நீபத்
தார்கொண்ட திறன்முருகன் றன்முன்னோ னிருசரணந் தலைமேற் கொள்வாம்.

(இ - பொ.) சீர் கொண்ட (தகப்பனாகிய) பரமசிவனைப் போல மன்மதனுடைய வில்லைப் பார்த்த மாத்திரத்தில் சிதைத்தழிக்கக் கூடிய (வல்லவனும்), நீர்கொண்ட நால்வாயனும், யானை முகத்தனும், வெண்கொம்பினனும், அந்தி வண்ணனாய், கொன்றை சூடியாய், சடாதரனாயுள்ள சிவபெருமான்தம் அன்பர்களுடைய மனத்தகத்திருந்தினிக்கும் கடப்ப மலர் மாலையணிந்த வெற்றி வேலனுக்கு முன்னோனுமாகிய விநாயகக் கடவுளின் சரணங்களிரண்டையும் தலைமாலையாகக் கொண்டு வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) நீபம் = கடப்ப மலர்.

62. திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

106. அங்கழுநீ ரமணரொடு மாலவா யரனோடு
வெங்கழுநீ ரெதிரேற்று மெய்த்தமிழின் மணங்குலவும்
பைங்கழுநீர் நறுஞ்சுனைக்கட் பகன்மலருந் தணிகைவரைச்
செங்கழுநீ ரைங்கரன்றாள் சென்னிமிசைப் புனைந்திடுவாம்.

(இ - பொ.) அழுமியல்புள்ள அமணரை வெவ்விய கழுமரத்தினும், திருவாலவாயான் திருவேட்டை நீரினும், எதிரேற்றும்படியான திருநெறித்தமிழ் வேதத்தின் பாராயண வாசனை குலவாநின்ற (நறுஞ்சுனைக்கண் பைங்கழுநீர் பகல்மலரும்) தணிகாசலத்தில் எழுந்தருளிய செங்கழுநீர் விநாயகருடைய திருவடித்தாமரைகளைச் சிரத்தின்மீது புனைந்து கொள்வாம். (எ - று.)

(அ - ப.) ஆலவாய் = மதுரை.
அரன் = சிவன்.

63. திருமயிலைப் புராணம்

107. கஞ்சரா னநத்தவர் கதிர்பொங் காழிகா
னஞ்சரா னநத்தவர் நாளும் வாழ்ந்திடுங்
குஞ்சரா னநப்பெருங் கோவின் பொற்சரண்
வஞ்சரா னநற்கவி வழாது போற்றுவாம்.

(இ – பொ.) செங்கமலத்துற்பவித்த பிரமதேவரும், கடலிற் பிறந்த ஆலகால விஷத்தை யொத்த நீலமேக சரீரனும், நித்திய காலமும் வாழ்த்தி வரும்படியான யானைமுகக் கடவுளின் பொன்னடிகளை வணக்கமான நல்ல பாக்களால் வழுவாது வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ப.) கஞ்சர் ஆனநத்தவன் = பிரமன்.
நஞ்சர் ஆனநத்தவன் = விஷ்ணு.
குஞ்சர் ஆனநம் = யானைமுகம்.
வஞ்சர் = வணங்கல்.

64. ஆதிபுரிப் புராணம்

108. கற்றையிள நிலவுபொழி பிறைமருப்பு நால்வாயைங் கரமு நீண்ட
நெற்றிவிழி யுந்திரண்ட குறுந்தாளும் பெருந்தொந்தி நிறைவு நீங்கா
வெற்றிதரு மங்குசமும் வீசுபா சமுந்தாங்கி விளங்கி யோங்கு
மொற்றிநக ரமர்ந்தருளுங் குணாலயக்குஞ் சரத்திருதா ளுளத்துள் வைப்பாம்.

(இ - பொ.) மூன்றாம் பிறைச் சந்திரனையொத்த தந்தங்களும், நான்ற வாயும், ஐந்துகரமும், நீண்ட கபாலமும், நெற்றிக் கண்ணும், திரண்டுருண்ட குறுந்தாள்களும், பெருந்தொப்பையின் பூரணமும், என்றும் வெற்றியே தரும் அங்குசமும், பாசக் கயிறு தாங்கி, விளங்கியோங்கும் திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் குணாலயக் குஞ்சர விநாயகருடைய திருவடிகளை நமது உள்ளத்தில் வைத்துப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) தொந்தி = வயிறு.

---

65. திருவொற்றியூர்ப் புராணம்

109. விலகருமென் னெடுந்துயரும் வினைப்பயில்வு மென்மனத்தி
னிலகியெழு புன்றொடையு மெளிதின்முடிப் பதுகுறித்துப்
பலர்புகழு மொற்றியூர்ப் பருமணிப்பொற் கோபுரத்திற்
குலவியமுக் கட்களிற்றுக் குணாலயன்றாள் குறிக்கொள்வாம்.

(இ - பொ.) விலங்கற்கரிய வென்னுடைய நெடிய துயரத்தையும், இருவினைப் பாசத்தையும், சுலபமாகவே வொழித்துக் கொள்வதற்காக, அடியேன் மனதில் ஆனந்தப் பரவசத்தாலெழும் பாடல்களை எளிதில்முடிக்க, பலரால் புகழப்படும் திருவொற்றியூரில் பருத்த மாணிக்கமிழைத்த பொற்கோபுரவாயிலில் குலாவுகின்ற முக்கண்ணுடைய குணாலயக் குஞ்சரனாகிய விநாயகன் திருவடிகளை மனத்திற் கொள்ளுவாம்.(எ- று.)

---

66. திருவாலங்காட்டுப் புராணம்

110. நீர்விளை யாட்டிற் றீம்பாற் கடலிடை நெடுங்கை நீட்டிக்
கார்நிறத் தவனை வெள்ளை யரவொடு கலந்து வாரிச்
சீர்தரு விசும்பின் வீசத் திங்களு மருவு மென்னப்
பேர்தரு மாலங் காட்டுப் பிள்ளைதாள் வணக்கஞ் செய்வாம்.

(இ – பொ.) முன்னொரு நாள் பாற்கடலிடையே நீர்விளையாடல் புரிந்த வமயத்து, நெடிய தும்பிக்கை நீட்டி, கரியமாலை ஆதிசேஷனோடுஞ் சேர்த்து வாரிப் பரந்த ஆகாசத்தில் வீச, அக்காட்சி, சந்திரனும் அதிலுள்ள களங்கமும் போல் விளங்கும் திருவாலங்காட்டில் எழுந்தருளிய பிள்ளையாருடைய திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப) கார்நிறத்தவன் = கரியமால்.
வெள்ளையரவு = ஆதிசேஷன்.
விசும்பு = ஆகாசம்.

111. விரிதரு பசும்பொற் குன்றிற் பாரதம் விளங்கத் தீட்டி
வரிசெயு மருப்புத் துண்டம் வளர்சடைச் செருகி யாங்குத்
தெரிதரக் குழவித் திங்கள் சென்னிசேர்த் தாலங் காட்டிற்
பரிவுசெய் மூலத் தானக் கரியினைப் பணிதல் செய்வாம்.

(இ - பொ.) விரிந்த பொன்னொளி யுண்ட வட மேருவை ஏடாகக் கொண்டு அதில் பாரதத்தை விளங்கும்படி வரி வரியாக எழுதிய தந்தக் கொம்பைச் (சிவபெருமானுடைய) சடாபாரத்தில் சொருகிவிட்டு, ஆங்குள்ள மூன்றாம் பிறைச்சந்திரனைத் திருமுடியில் அணிந்துகொண்டு திருவாலங் காட்டில் மூலத்தானத் தருகில் எழுந்தருளிய கரிமுக விநாயகனைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) பரிவு = அன்பு.

67. அவிநாசிப் புராணம்

112. நூபுரச்சே வடியெடுத்து வலியமுய லகன்முறிய நோன்றா ளூன்றி
மீபுரளா தமுதகதிர் வேணிவைத்தற் புதக்கூத்து வெளிநின் றாடி
மாபுரநீ றெழநகைத்த புக்கொளியார் மிக்கொளியார் மணிசூழ்ச் செம்பொற்
கோபுரவா யிலையமர்ந்த குஞ்சரத்தை நெஞ்சிருத்திக் குறைக டீர்வாம்.

(இ - பொ.) வீரகண்டாமணி யணிந்த சேவடியை எடுத்து முயலகன் முதுகின்மேல் வைத்தூன்றிக் கொண்டு, மேலே ஆகாச கங்கையைச் சடா பாரத்தில் வைத்து அற்புதக் கூத்தாடி, புன்சிரிப்பால் திரிபுரங்களையும் எரித்த அவிநாசிச் சிவபெருமான் எழுந்தருளும் செம்பொன்மணிக் கோபுர வாயிலில் அமர்ந்த விநாயகக் கடவுளை நெஞ்சில் நினைத்து நமது குறைகளைத் தீர்த்துக் கொள்வாம். (எ - று.)

68. திருமுருகன் பூண்டிப் புராணம்

113. ஊனை நாடி யுழல்பிற விக்கொடுங்
கானை நீங்கிக் கதியடைந் தானந்தத்
தேனை மாந்தித் திளைத்திட மாமகத்
தியானை மாமுகத் தானை யிறைஞ்சுவாம்.

(இ - பொ) ஊனசரீரத்தை யொட்டி யுழன்று வரும்படியான பிறவியாகிய கொடிய கானகத்தைவிட்டு, நற்கதியை யடைந்து, சுகானந்தத் தேனைப் பருகிப் பரிபூரணமாகப் பாரிய திருவுருவம் வாய்ந்த யானைமுக விநாயகக் கடவுளை வேண்டிக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) ஊன் = மாமிசம், ஊனம்.
கான் = கானகம்.
மாந்தல் = குடித்தல்.
திளைத்தல் = அழுந்தல்.
மகம் = தேகம்.

114. நீல மால்வரைக் குடுமியிற் றவளவா ணிலவுகால் வதுபோல்வெண்
கோல மாமணி மருப்பினை யேந்திய குஞ்சர முகத்தானைச்
சீல மாமனத் திருத்திநன் மலர்கொடு திருந்துபூ சனையாற்றிக்
கால பாசமும் பிறப்பும்வே ரறுத்துயர் கதியிலின் புறவாழ்வோம்.

(இ - பொ.) நீலகிரி மலையின் மேலே வெண்ணிலா ஒளி பரப்பியது போல, வெண்மாமணிக் கோலமான தந்தங்களை யேந்திய யானை முகத்தானை, ஆன்மசுத்தியோடுங் கூடியிருத்தி நல்ல பத்திர புஷ்பங்களால் செவ்வையான பூசனைகள் செய்து, காலனுடைய பாசக் கயிற்றையும், பிறப்பையும் அறுத்துத் தள்ளி விட்டு உயர்ந்த சாயுச்சிய பதவியில் இன்பமாக வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) குடுமி = (மலை) உச்சி.
தவளம் = வெண்மை.
கால்வது = காய்வது.

69. பவானி கூடற் புராணம்

115. நல்லவை நீடி மல்கத் தீயவை நலிய நாயேன்
சொல்லவை நல்லோர் சூழல் துலங்கிடத் திருந ணுவாழ்
வல்லபை யிடத்து வைத்த வாரண முகவன் றெய்வப்
பல்லவ மருட்டும் பைம்பொற் பதயுகம் பணிதல் செய்வாம்.

(இ - பொ.) சன்மார்க்கமான காரியங்கள் நீடித்து வளரவும், துன்மார்க்கமான காரியங்கள் நலிந்து விலகவும், அடியேனுடைய சொல் பொருளவை நல்லோர்கள் கூட்டத்து விளங்கிடவும், தெய்வத் தன்மை பொருந்திய வல்லபையை இடப் பாகமாக (வைத்து)க் கொண்ட யானைமுகமுடைய விநாயகக் கடவுளின் தளிரையும் மயக்கும் பொன்னடிகளைப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) மல்கல் = பெருகல்.
நலிதல் = கெடல்.
திருநணு = பவானி.

70. கருவூர்ப் புராணம்

116. இன்னதிப் பெற்றித் தென்றற் கேற்பன விவையென் றேது
மன்னுமப் பொருளி யாவு மலைவறத் தெரியு மாறு
முன்னவன் புழைக்கை நால்வாய் முக்கணன் செக்கர் மேனிப்
பொன்னவிர் கமலம் பூத்த பூங்கழல் போற்றல் செய்வாம்.

(இ - பொ.) (மல மாயா கன்மம் ஆகிய) பாசம் இன்ன தென்றும், (பிரளயாகலர், விஞ்ஞானகலர், சகலர் ஆகிய பசுக்கள் இத்தன்மைத் தென்றும், பரிபாகப்பட்டு அடைதற்கு ஏற்புடைக் கடவுளான) பதியின்ன தென்றும், அவ்வுண்மைப் பொருள்கள் யாவையும் ஐயந்திரிபற உபதேசம் செய்யும்படியான தும்பிக்கையும், நான்றவாயும், மூன்று கண்ணுமுடைய முன்னவனுகிய விநாயகக் கடவுளின் செம்பொன் அவிழ்ந்த தாமரைப் பூங்கழலைச் சேவித்துக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) பெற்றி = தன்மை.
புழைக்கை = தும்பிக்கை.

117. அஞ்சுளா ரணியெ ழுத்தோ ராறுளார் சடையிற் கண்ட
நஞ்சுளா ரணிய பாக நயந்துளார் ஞானம் பூத்த
நெஞ்சுளா ரணிப யந்த நிறைமதக் கவுட்டு நால்வாய்
வஞ்சுளா ரணிய மேவுங் களிற்றினை வழுத்தல் செய்வாம்.

(இ – பொ.) ந-ம-சிவாயவென்னும் பஞ்சாட்சர முடையவரும், சடையில் கங்கையைத் தரித்தவரும், ஆலகாலத்தை நீலகண்டத் தணிந்தவரும், பார்வதியை வாமபாகம் பெற்றவரும், ஞானத் திருவருளே திருமேனியாகவுடையவருமாகிய பரமசிவன் பெற்றெடுத்த நிறைந்த மும்மதக் கதுப்புகளையும், கவிழ்ந்து நான்ற வாயினையுங் கொண்டு விளங்கும் விநாயகக் கடவுளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) கவுள் = கதுப்பு.

71. திருமாணிக்குழிப் புராணம்

118. மணிகொண்ட கிம்புரிக்கோ டைங்கரநால் வாய்மும்மை மதம்வாய்ந் தோங்குங்
கணிகொண்ட கூவிளமு நறையிதழிப் பூந்தொடையுங் கலந்து சூடிப்
பணிகொண்டெவ் வுயிர்களையு மிகம்பரம்வீ டிவையுதவிப் பாரின் மீதே
யணிகொண்ட வாமனவூர்ச் செல்வவினா யகன்றிருத்தா ளகத்துள் வைப்பாம்.

(இ - பொ.) மாணிக்கத்தால் பூண்போட்ட தந்தங்களும், ஐந்து கரங்களும், நான்ற வாயும், மூன்று மதமும் கொண்டோங்குவதுடன், கணக் கெடுத்த வில்வமும், மணமுடைய கொன்றைப் பூ மாலையுஞ் சூட்டி, எவ்வுயிர்களையும் கலந்து பணி கொண்டு, இகத்திலும், பரத்திலும் மோட்சங் கொடுத்து, உலகத்தின் மீது அலங்காரமாயுள்ள வாமனவூரிலெழுந்தருளும் செல்வ விநாயகனுடைய திருவடிகளைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) கிம்புரி = பூணுபரணம்.
கூவிளம் = வில்வம்.
இதழி = கொன்றை.
இகம் = இம்மை.
பரம் = மறுமை.

72. திருவோத்தூர்ப் புராணம்

119. கடமசும்புங் கவுட்டுளையிற் கலவுமணி வண்டினங்கள் கலவா தோடத்
தடமணிச்செஞ் செவியெறியும் வளிமாந்தி யராக்கலன்க டழைப்ப வேணி
யிடமிருந்த நறுங்கங்கை பருகியயர் வுயிர்க்குமணி யெழிற்பொற் குன்றை
மடமகற்றும் வேதபுரி யொப்பிலா மணிக்களிற்றை வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) மதம் மோதும்படியான கதுப்புத் துளையருகில் கலந்து நெருங்கிய வண்டுக் கூட்டங்கள் கலவாமல் ஓடும்படி, கம்பீரமான செவிகளையசைத்தலால் உண்டாகுங் காற்றைப் புசித்த அரவாகிய ஆபரணங்கள் மனந்தழைப்ப, சடாபாரத்திலே யிருந்த சுவையான கங்கை நீரைக் குடித்து ஆயாசந் தீர்க்கும் அழகிய பொற்குன்று போல்பவனை, வேதபுரி வாசனுன ஒப்பிலா மணி விநாயகக் கடவுளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அசும்பல் = மோதல்.
வளி = காற்று.
மாந்தல் = உட்கொள்ளல்.
அராக்கலன் = அரவாபரணம்.
அயர்வுயிர்த்தல் = ஆயாசந்தீர்த்தல்.

73. திருச்சுழியற் புராணம்

120. நீதிக் குஞ்சர நீர்மை யசரமாய்ப்
பேதிக் குஞ்சர மாய்ப்புகும் பேறதாஞ்
சோதிக் குஞ்சரக் கண்ணுமைக் குஞ்சுதப்
போதிக் குஞ்சரப் பொன்னடி போற்றுவாம்.

(இ - பொ.) நீதி பயக்கும் அசையும் பொருளின் குணம் அசையாப் பொருளாகவும் பேதிக்கச் செய்யும் (ஆகையால்) அசையும் பொருளாக வரும் பேறதுவே சோதிக்குஞ்சரக்காம் என்று போதிக்கும் பார்வதி தனயனாகிய விக்கினேச்சுரருடைய பொன்னடிகளைப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) நீர்மை = குணம்.

121. காமனைப்போற் கரும்பெடுத்துத் தருமனைப்போற்
கயிறேந்திக் கமழ்பூங் கொன்றைத்
தாமனைப்போன் மதிசூடித் தம்பியைப்போன்
முகமாறுந் தகைமை பூண்டு
மாமனைப்போற் கோடேந்திக் குறுமுனிபோற்
கடலையெலாம் வாரித் துய்த்துப்
பூமனைப்போ லெழுதிவைக்கும் புகழுடைவே
லடிக்களிற்றைப் போற்றல் செய்வாம்.

(இ - பொ.) மன்மதனைப் போலக் கரும்பெடுத்துண்டும், எமதருமனைப் போலக் கச்சைக் கயிற்றை யேந்தியும், மணம் தரும் கொன்றை சூடியைப் போல மதிப்புச் சூடியும், தம்பி ஆறுமுகத்தைப் போலப் பெருமை பூண்டும், மாமன் கோபாலனைப் போலக் கையில்(கோல்) கொம்பு ஏந்தியும், அகத்திய முனிவரைப் போலக் கடலை யெல்லாம் வாரிப் புசித்தும், பிரம்மதேவனைப் போல (மகாபாரதம்) எழுதிவைத்தும் புகழ் பெற்ற வேலடி விநாயகரைத் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) தருமன் = எமதருமன்.
தகைமை = பெருமை.
துய்த்து = புசித்து.
பூமன் = பிரமன்.

அழகு, ஒழுங்கு, குணம், தகுதி, தன்மை, பெருமை ஆய தகைமை ஆறும் உடைமையால் ஆறுமுகமென்றும் ஆனைமுகமாதலால் மாறு முகமென்றுமாம். ஒன்று கடலை, மற்றொன்று கடலையை.

74. மருதூர்ப் புராணம்

122. மலைவளைத்த தந்தைமடி மிசையிருந்து சடையடவி மலிதண் கங்கை
யலைவளைத்த பாணிபுழைக் கரமடுத்து மறிகடனீ ரருந்து காரிற்
கொலைவளைத்த நுதல்விழி வெங்கோடை குளிர்ந்திடப் பொழிந்தகுணங் கண்
[டம்பை
தலைவளைத்து முத்தமிடு மருதவனப் பிள்ளைபதந் தலைமேற் கொள்வாம்.

(இ - பொ.) மலையை வில்லாக வளைத்த பரமசிவனுடைய மடிமீதிருந்து கொண்டே சடாபாரத்தில் தரித்த கங்கை நீரை (கடலை வளைத்த கையாகிய) தும்பிக்கையால் உண்டு, அழுங்கிய கடல் நீரையருந்தும் மேக மண்டலத்தில், நெற்றிக் கண்ணால் கொலை வளைத்த வெவ்விய கோடைக் கானலை குளிர்மையாக்கும்படியாகப் பொழிந்த குணத்தைக் கண்டு, பார்வதியம்மன் தலையை வளைத்து முத்தமிடுகின்ற, மருதவனத்துப் பிள்ளையாருடைய திருவடிகளைத் தலைமேற்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) அடவி = காடு.
மறி = அழுங்கு.
கோடை = கானல்.

75. ஆதித்தபுரிப் புராணம்

123. சித்தி புத்தி திருவரு ளாற்பெறு
முத்தி சொற்பொருண் முற்றும் பலம்பெறப்
பத்தி யாளர் பரவருட் கற்பக
வத்தி செய்ய வடிமலர் சேர்வாம்.

(இ - பொ.) சித்தியும், புத்தியும் திருவருளால் உண்டாகும் முத்தியும், அதன்றன் சொற்பொருள் முடிவும், பலனடையும்படி பக்திமான்கள் யாவரும் பரவித் தொழும் காருண்ணியமுடைய கற்பக விநாயகக் கடவுளின் திருவடி மலரைச் சேர்வாம். (எ - று.)

(அ - ப.) பரவல் = வணங்கல்.
அத்தி = யானை.

124. நந்தவனந் தவிர்க்கவரு ணதிதருவ தெனச்சுவர்க்க நாதன் வைத்த
நந்தவனஞ் செழிக்கமுனி கமண்டலநன் னீருதவு நாதன் சோதி
நந்தவனம் புயன்மகிழக் கருப்பறிய லூருவந்த நல்லோன் வல்லா
னந்தவனம் வடிவான வரந்தருமைங் கரன்மலர்தா ணண்ணி வாழ்வாம்.

(இ - பொ.) நம் தாபங்களை நிவர்த்திக்கும் அருளுடைய காவிரி நதியைத் தருவதென, இந்திரன் வைத்த நந்தவனஞ்செழிக்கும்படியாய் அகத்திய முனியின் கமண்டல ஜலத்தை யுதவிய நாதனும், வெண்சங்க மேந்திய திருமாலும், தாமரை யாசனாகிய பிரம்மனும், மகிழ்ந்து கொண்டாடும் திருக்கருப்பறியலூரில் விரும்பி வந்தெழுந்தருளும் நல்லவனும், வல்லவனும், அதிகரித்த இச்சைவடிவமான வரங்களைத் தரும் ஐங்கரனுமான கணாதிபதியின் திருவடித் தாமரைகளை நண்ணி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) நம் தவனம் = நம்முடைய தாபம்.

76. திருக்குற்றாலப் புராணம்

125. புயல்காட்டும் பனிவரையின் பிடிதழுவுஞ் சிவவேழம் பொருப்பில் வானி
லியல்காட்டு மிருபிடிசேர் முந்நாலு துதிக்கையன்முன் னீன்ற ஞானச்
செயல்காட்டு மொருகோட்டி னிருகோட்டு வெண்பிறைவாழ் செக்கர் வானை
மயல்காட்டுந் திருமேனி மழைமதச்சண் பகக்களிற்றை மனத்துள் வைப்பாம்.

(இ - பொ.) மேகங்கள் தவழும் மேருமலையில் வந்த பார்வதியைத் தழுவும்படியான சிவபெருமான், வள்ளி தெய்வ யானையைத் திருமணங்கொண்ட பன்னிரண்டு கையனாகிய சுப்ரமண்யனுக்கு முன்னமேயே பெற்றெடுத்த, திருவருட் செயல் காட்டு மொரு கொம்பனை, இரண்டு தந்தக் கொம்புகள் சேர்ந்தது போன்ற சந்திரபிறை வாழுஞ் செவ்விய ஆகாசத்தை மயக்கப்படுத்தும் திருமேனியையுடைய சண்பக விநாயகக் கடவுளை மனத்தியானத்துள் மனனஞ் செய்வாம். (எ - று.)

(அ - ப.) புயல் = மேகம்.
வரை = மலை.
முந்நாலு துதிக்கையன் = 3 × 4 = 12 கையுடைய சுப்ரமண்யன்.
பொருப்பிலியல் காட்டும் பிடி = வள்ளியம்மை.
வானில் இயல் காட்டும் பிடி = தெய்வயானை.

126. கங்கையா ராம்பலைப்பூங் கவுரிநுதற் சிந்துரத்தைக் கயிலை யாளி
செங்கையார் மாதங்கத் திருமுனியை முனிவரர்கள் தேவ வேந்தர்
பங்கயா சனன்முதலோர் முடிமலர்த்தும் பியைவலவை பருவப் பாரக்
கொங்கையார் களபத்தைச் சண்பகக்குஞ் சரத்தை மனக்கூடஞ் சேர்ப்பாம்.

(இ - பொ.) கங்கைநீரிற் பூத்த ஆம்பல் மலரை பார்வதியம்மன் நெற்றியிலிட்ட நித்திலத்தை, கைலாசபதியின் திருக்கரத்துள்ள யானையினிளங் கன்றை, முனிவர்களும், தேவர்களும், பிரம்மர் முதலானவர்களும் முடியிற் சூட்டிக் கொள்ளும் விநாயகப்பெருமானை, பருவமுடைய வல்லபையின் தனபாரத்திலணிந்த கலவைச் சாந்தை, சண்பக விநாயகக் கடவுளை மனமாகிய கூடத்தில் துதிப்பாம். (எ – று.)

(அ - ப.) ஆம்பல்
சிந்துரம்
மாதங்கம்
(திரு)முனி
தும்பி
களபம்
} இவை ஆறும் யானையென்னும் ஒரு பொருளைக் குறித்த பல சொல்.

பங்கயாசனன் = பிரமன்.

---

77. திருநெல்வேலிப் புராணம்

127. சீர்பூத்த விதழிபுனை சிற்பரனா ரற்புதனார் சிவையோர் பாகர்
நீர்பூத்த திருவுளத்தி னினைத்தபடி வேதமுனி நிகழ்த்த லோடு
மேர்பூத்த வொருகோட்டா லிலகுபா ரதமேரு விடத்தே தீட்டும்
போர்பூத்த நெடுந்தடக்கைப் பொல்லாத பிள்ளைபதம் போற்றல் செய்வாம்.

(இ-பொ.) பூத்துச்சிறந்த கொன்றைப் பூமாலையை யணிந்த சிறப்பாளரும், அற்புதனாரும், பார்வதி வாமபாகருமான பரமசிவன் திருவுளத்தில் அருளோடுங் கூடி நினைத்தபடியே, வேதவியாசர் சொல்லிக்கொண்டுவர, அழகு பொருந்திய ஒரு கொம்பினால், மேரு மலையிடத்தே மகாபாரதத்தையெழுதும் போர்பூத்த நெடிய தும்பிக்கையுடைய சுயம்பு மூர்த்தியான பொல்லாப் பிள்ளையாருடைய பாதங்களைப்போற்றல் செய்து வருவாம். (எ - று.)

(அ - ப.) வேதமுனி = வியாசர்.
பொல்லாத = பொள்ளாத (உளியால் பொளியாத)

128. கல்லாத மூடனுக்குங் கல்விதருங் கற்றறிந்தோ
ரெல்லாரு மனமகிழ விசைத்தமிழி னியல்புதரு
நல்லாரை யுறவாக்கு நலந்தருநன் னெறியுதவும்
பொல்லாத வினைதீர்க்கும் பொல்லாத குஞ்சரமே.

(இ - பொ.) (நெல்லையிலெழுந்தருளிய) பொல்லாப் பிள்ளையார், கல்வியில்லாத மூடனுக்கும் கல்வி நலத்தைக் கொடுப்பார்; கற்றறிந்தவரெல்லோரும் மனமகிழ்ச்சியடைய (இயல்-இசை-நாடகமென்ற) முத் தமிழையுங் கொடுப்பார்; நல்லோர்களை உறவினராக்கும் நலத்தைக் கொடுப்பார்; நல்லொழுக்கத்தைக் கொடுப்பார்; பொல்லாத வினையையும் தீர்ப்பார். (எ - று.)

78. திருப்பாச்சூர்ப் புராணம்

129. நலம்புரி யருண்மெய்ஞ் ஞான நண்ணவு மன்னி நின்ற
மலம்புரி வினைக ணீங்கி வாழவுந் தாழ்வொன் றில்லாப்
புலம்புரி பாசூர் மேய புனிதனன் றினிது நல்கும்
வலம்புரிப் பிள்ளை யார்பொன் மலரடி வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) நலந்தருகின்ற திருவருள் மெய்ஞ்ஞானங்கிட்டவும், சேர்ந்து நின்ற திரிமலங்களுஞ் செய்யும் இருவினைகளை நீங்கி வாழவும், யாதொரு குறைவுமில்லாமல் இடமகன்ற திருப்பாச்சூரில் எழுந்தருளும் பரமசிவன் அநாதியே இனிது தந்த வலம்புரிப் பிள்ளையார்தம் திருவடிப் பொற்றாமரைகளை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) வலம்புரி - நந்தியாவட்டம்.

79. மருதவன புராணம்

130. உலகமுணர்ந் திடுகருணை யதனொடுநெஞ் சகமதினீ டுவகை யெய்தி
யலகில்புக ழுறுகவிகை நிழலதின்மெய் யன்பர்குல மதனைக் காக்கக்
குலவுமுப நிடதவரி யணைமீது பரசெழிற்செங் கோல்கைக் கொண்டாங்
கிலகுமிடை மருதாண்ட விநாயகனை யெப்பொழுது மிறைஞ்சி வாழ்வாம்.

(இ - பொ.) உலகமெலாமுணர்ந்து வரும் திருக்கருணையோடுங் கூடி, நெஞ்சகத்திற் பொங்கும் விருப்பம் கொண்டு அளவில்லாத புகழுடைய குடைநிழலில் மெய்யான அன்பர் குலமதனைக்காக்கும் பொருட்டாகக் குலவிய வேதத்தின் உட்பொருளாகிய சிங்காதனத்தின் மீது, மழுப்போன்ற செங்கோலைச் செலுத்தி விளங்கும், இடைமருது ஆண்ட விநாயகனை எப்பொழுதும் துதித்து வாழ்வாம். (எ - று.)

(அ-ப.) கவிகை = குடை.
உபநிடதம் = வேதத்தின் உட்பொருள்.
அரியணை = சிம்மாசனம்.
பரசு = மழு.

80. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

131. பூமேவு பிரமனொடு நாரணனு மகவானும் பொற்பின் மிக்க
தேமேவு மலர்த்தொடையல் வானவரும் பிறருமெதிர் செறிந்து நின்று
நாமேவு துதிபுகல வவரவர்க ணினைத்தவெலா நல்கி வாழு
மாமேவு பொழின்மணவை வழித்துணைக்குஞ் சரத்தினையாம் வணங்கி
வாழ்வாம்.

(இ – பொ.) பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் யாவரும் (சன்னிதானத்துக்கு) எதிரே நிறைந்து நின்றுகொண்டு, பூ வகுப்பாலும் நறுமணத்தாலும் நிறைந்த பக்திமாலைகளை அலங்காரமாய்ச் சிங்காரித்து, வாயாரத் துதிகளை வாழ்த்த, அவரவர்கள் கோரியவெல்லாங் கொடுத்துப் பூம்பொழில் நிறைந்த மணவையில் வாழும் வழித்துணைப் பிள்ளையாரை வணங்கி வாழ்வாம். (எ – று.)

(அ – ப.) மகவான் = இந்திரன்.
பொற்பு = அலங்காரம்.
தொடையல் = மாலை.

81. மயூராசலப் புராணம்

132. பத்திவினா ணசலமராப் படைத்தபர னருண்முன்னோன் பனைக்கை வன்
கோட்
டத்திவினா சம்பெறவே யொருகோட்டாற் றடிந்துவள மமரர்க் கீந்து
முத்திவினா வியமுனிவர்க் கருள்புரிந்து மயிலைமலை முகட்டில் வாழுஞ்
சித்திவிநா யகனடியை நித்தியநாந் தொழுதுபவஞ் சிதைத்தல் செய்வாம்.

(இ - பொ.) (ஒழுங்கான வில்லும் நாணத்தக்க) கைலாசத்தில், அரவாபரணமணிந்த பரமசிவன் அருளிய முன்னவனாய், பனையைப் போன்ற தும்பிக்கையும் வலிமையான கொம்புமுடைய கயமுகாசூரனை ஒரு கொம்பினால் குத்தி வினாசஞ் செய்து, தேவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுத்தும், முத்தி சாம்ராஜ்யத்தைக் கோரிய முனிவர்களுக்கு மோட்சத்தை யருள் புரிந்தும், மயூரகிரியின் உச்சியில் வாழுஞ் சித்தி விநாயகன் திருவடியைத் தினந்தோறுஞ் சிந்தித்து நாம் நம்முடைய பிறவியை வேரறுத்துக்கொள்வாம். (எ-று.)

(அ - ப.) அசலம் = கைலாச மலை.
தடிதல் = உயிர் வாங்கல்.
முகடு = உச்சி.

82. திருப்பெருந்துறைப் புராணம்

133. மாமேவு புயனிறத்து மோட்டாமை முதுகொருகை வாங்கித் தற்குப்
பாமேவு *வயிறிரண்டென் றருச்சிப்பார் கொள்ளாத படியென் பாதி
தாமேவு தந்தையகன் மார்பணிந்து புகழொன்றே தான்கைக் கொண்டு
நாமேவு கருணையின்வாழ் களிற்றுமுகப் பெருமானை நயந்து வாழ்வாம்.

(இ - பொ.) மேகத்தைப் போலக் கருநிறங்கொண்ட முறட்டாமை முதுகோடொன்றைக் கையில் வாங்கியதும், தனக்கு வயிறு இரண்டென்று, அருச்சிக்கும் அடியார்கள் சிந்தைகொள்ளா வண்ணம், பொங்கரவுந்தோல் எலும்பாதியவுமணிந்த தந்தையாகிய பரமசிவனுடைய அகன்ற மார்பில் பூட்டி, அப் புகழையே தனக்குக் கைக் கடகமாகக் கொண்டு நமக்காகிய கருணையில் வாழ்ந்து வரும்படியாகிய ஆனைமுகப் பெருமானை விரும்பி வழுத்தி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) மா = கறுப்பு.
பா = பரப்பு.
மோட்டாமை = முறட்டாமை.

134. இலவுவந்த செவ்வாயெம் பெருமாட்டி பார்வையொடு மிருக்கு முன்னூல்
சொலவுவந்த நம்பெருமான் பார்வையுமேற் றமர்சிறப்புத் தோற்றி யாங்குப்
பலவுவந்த பொழில்வளஞ்சால் குருந்துறையும் பெருந்துறையிற் பண்பு கூரு
நிலவுவந்த முடியினொடும் வெயிலுவந்த மெய்க்களிற்றை நினைந்து வாழ்வாம்.

(இ – பொ.) பஞ்சின் மெல்லடியையும், செவ்விய வாயையுமுடைய பார்வதியம்மன் பக்கமாக விருக்கும், (வேதத்திற் சொல்லப்பட்ட) நம்முடைய பரமசிவன் திருவருட்பார்வையை ஏற்றுக்கொள்ளும்படியாய் அங்கே அமர்ந்து சிறப்புயர்வைத் தோற்றுவித்துப் பல பட்சியினங்கள் உற்சாகங்கொண்ட வளம் நிறைந்த குருந்தமரச்சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையில், நிலாவணிந்த கிரீடத்துடன் வேனிலை விரும்பிய உண்மையாகிய விநாயகக் கடவுளை நினைத்து வாழ்வாம்.(எ–று.)

(அ-ப.) இலவு = இலவம் பஞ்சு.
முன்னூல் = வேதம்.
அமர் = அமர்தல்.
குருந்து = குருந்தமரம்.

83. காசிரகசியம்

135. பூமேவு கங்கைநதி யெடுத்தெறிகொக் கரையெனவொண் புனிற்று லோனுங்
தூமேவு முத்தமென வதுகாலுஞ் சுவையமுதத் துளியும் வேணி
யோமேவு மெய்வயங்கக் காசியிலங் நதிக்கோட்டி னொளிர மேவு
மாமேவு மொருகோட்டுத் துண்டிரா சக்களிற்றை வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) உலகத்துக்கு விருப்பமான கங்கைநதி யெடுத்தெறிந்த சங்கமென்ன ஒள்ளிய இளஞ்சந்திரனையும், தூவிச் சிந்தின முத்துக்களன்ன மின்னுகின்ற அமுத தாரைகளையும், சடாபாரத்திலணிந்த மெய்யனாகிய பரமசிவன் பெற்

---

* விநாயகர் வயிறு ஆமையோடு போலுமாம்

றெடுக்க, காசி க்ஷேத்திரத்தின் கங்காநதி தீரத்திலே ஒளிதர விளங்கும் ஒரு கொம்புடைய துண்டி விநாயகக் கடவுளை வணங்குவாம். (எ-று.)

(அ-ப.) கொக்கரை = சங்கு.
புனிற்றுலோன் = இளம்பிறைச் சந்திரன்.

136. விண்டி ராசதந் தாமத மொழிதர விரும்புசத் துவமொன்றே
கொண்டி ராசதந் தாழ்தர முத்திகை கூடினீர் மதுவுண்ட
வண்டி ராசதந் தாதித ழுட்டுயின் மருவுதீம் புனற்காசித்
துண்டி ராசதந் தாவளத் தினையடி தொழினுல குள்ளீரே.

(இ - பொ.) உலகினரே! மதுவுண்ட வண்டு, இரவிலே நூற்றிதழ்த் தாமரைகளில் நித்திரை செய்கின்ற நீர்வளமுள்ள காசியிலமரும் துண்டிராஜ விநாயகக் கடவுளை அடிதொழின், இராசதம் தாமதமென்னும் குணங்கள் விண்டொழிதர, சத்துவ குணமொன்றே கொண்டீராய், ஆணவ மலமாகிய ஆசு அதமாகித் தன் செயலிழக்க முத்தியைப் பெற்றீராவீர். (எ-று.)

(அ-ப.) தந்தாவளம் = யானை.

84. திருநாகைக்காரோணப் புராணம்

137. மாமேவு தந்தையொரு மருப்பையென விளித்திடத்தன் மௌலி யாய
தூமேவு பிறையொருபாற் சொருகாவத் தந்தையெதிர் தோன்று நின்று
பாமேவு மொருமருப்ப னியானோநீ யோதெரிந்து பகரா யென்று
பூமேவு நகைகொளுநா காபரணக் களிற்றிருதாள் போற்றி வாழ்வாம்.

(இ - பொ.) அழகு மேவுஞ் சிவபெருமான், ஒரு கொம்பை உடையவனே என்று அழைத்திட, தம் சடாபாரத்தில் சொருகிய மூன்றும் பிறைச் சந்திரனைக் கண்டு, அத்தந்தை யெதிர் வந்து நின்று, 'அப்பனே! பாய்ந்து மேவிய ஒற்றைக் கொம்பன் யானோ நீயோ தெரிந்து சொல்ல வேண்டு' மென்று புன்சிரிப்பாக நகை செய்யும் நாகாபரண விநாயகருடைய திருவடிகளிரண்டையும் போற்றி வாழ்வோம். (எ - று.)

(அ - ப.) விளித்திட = அழைத்திட.
மௌலி = சடை.

138. அலகோட்டு பெருங்கருணைத் தந்தையைச்சூழ்ந் தேற்றதுமொன்
றமையா தென்றே
வலகோட்டு மிசைப்படுநீர்ப் பொன்னியிற்றேம் படுபல்கனி வழங்க லோர்ந்து
நலகோட்டு மதிசடைநின் றெழுக்குவதாற் சடையனைத்து நனைவுற் றேங்கு
பலகோட்டு மாவடிவா ழொருகோட்டு மாவடியைப் பரவி வாழ்வாம்.

(இ - பொ.) எண்ணிறந்த திருவருட் பெருங்கருணையுடைய தந்தையாகிய பரமசிவனைச் சுற்றி வலம் வந்து, ஏற்றுக்கொண்டவொரு பழமே போதாதென்று, வலிய கரையின் மேல் அலைநீர் அடிக்கின்ற பொன்னி யாற்றங்கரையில் அதி மதுரமான பழங்கள் கிடைப்பதை யறிந்து, நல்லதொரு கோடு கிழித்தாற் போன்ற மூன்றும் பிறைச் சந்திரனை யணிந்த (சிவபெருமான்) சடையினின்றும்

ஒழுகும் (படியான கங்கை நீர்த்) துளிகளால் வேர்கள் முழுமையும் நனைந்தூறி ஓங்கும் பல கிளைகளையுடைய ஒரு மாவடி வாழும் ஒரு கொம்புடைய விநாயகப் பெருமானைப் பராவி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அலகோட்டு = எண்ணிறந்த.
சடை = வேர்.

139. தண்ணியரும் வெய்யவருந் தன்னோக்காற் பயனடையிற் சமமா வாரென்
றெண்ணியரு மறையுரைத்தன் மெய்ம்மையெனத் தெரித்தாங்கன் பில்லார் சாத்துங்
கண்ணியருஞ் சடைமுடியிற் றண்மதியும் வெவ்வரவுங் கலப்ப மேவி
நண்ணியருந் தவர்க்கருணா காபரண மழகளிற்றை நயந்து வாழ்வாம்.

(இ - பொ) அன்புடையவர்களும், அன்பில்லாதவர்களும், தத்தம் சந்திப்பால் பயனடைவதில் சமமாவார்களென்று, அரிய வேதங்களெல்லாம் எண்ணியுரைத்தல் மெய்ம்மையேயெனத் தெரிவித்தது (போலும்) அடியார்களே யன்றி மற்றவர்களுஞ் சாத்தி வரும்படியான கொன்றைப் பூ மாலையணிந்த சிவனுடைய சடை முடியிற் சந்திரனும், பாம்பும் ஒன்ருகக் கூடியுள்ளன. (அதுபோல) நட்புப் பாராட்டி அரிய தவஞ் செய்வார்க்கு அருளும்படியான நாகாபரண விநாயகக் கடவுளை வணங்கி வாழ்ந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) தண்ணியர் = அன்புடையார்.
வெய்யவர் = அன்பிலார்.

85. திருக்குடந்தைப் புராணம்

140. பூமேவு தமதருளா லுயருமுயர் விலதுமெனப் புவனங் கூறு
மாமேவு மொழிக்கியைய வுயர்திணையி னஃறிணைமா வதனங் கொண்டோர்
பாமேவு முறையிணைந்து மருளமைந்து பயில்வதுபோற் பயிலா தென்றுந்
தாமேவு மருளமைந்த வாதிவிநா யகர்சரணஞ் சார்ந்து வாழ்வாம்.

(இ - பொ.) இயற்கையாகவே உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதியென்று உலகத்தார் கூறும் பழமொழிக்கிணங்க, உயர்ந்த குலத்தில் அஃறிணை வகுப்பாகிய ஆனைமுகங்கொண்டு திரியு மொவ்வொரு மதமயக்கம் பிடித்த காட்டானைகளைப் போலல்லாமல், தாயைப் போலுந் திருவருளுடைய ஆதி (ஆனையாகிய) விநாயகர் சரணங்களைச் சார்ந்திருந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) புவனம் = பூலோகம்.
மருள் = மயக்கம்.

141. உருகிருக்குந் தகைப்பவஞ்ச விடயபோ கங்களெலா மொழித்தா னந்தம்
பருகிருக்கு முரைப்பதெவன் றந்தையார் பிரியமுளம் படர்ந்து மேன்மேற்
பெருகிருக்கு மறைமுடியு மணுகரிய கும்பேசர் பிறங்கு கோயி
லருகிருக்குஞ் சபைக்களிற்றை யகத்திருக்கு முழுதொழிய வடுத்து வாழ்வாம்.

(இ - பொ.) ஒழிக்க வேண்டிய வஞ்சக முருகிக்கொண்டிருக்கும் விஷய போகங்களையெல்லாம் ஒழித்துவிட்டு, ஆனந்தம் குடிகொண்டிருக்கப் பிரியப்படும் உள்ளம் படர்ந்து, மேன்மேலும் பெருகி வருவதும், வேதங்களால் அறியப்

படாததுமான, அப்பனாகிய கும்பேச்சுரருடைய ஆலயத்தின் சமீபமாக எழுந்தருளி யிருக்கும் விநாயகப் பெருமானை (மலமாதிய வெல்லாமொழிய) அடுத்துப் பூசித்து வாழ்ந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) தகைப்பல் = ஒழித்தல்,

142. ஆணுருவும் பெண்ணுருவு மாயவுல கந்தோற்று மறிவ னென்றற்
காணுருவும் பெண்ணுருவு மொருமருப்பு முகத்தேய்ந் தமையா வண்ண
மாணுருவும் பெண்ணுருவு முள்ளாரென் றுணர்த்தற்கோ ரணங்கோர் பாற்கொண்
டாணுருவும் பெண்ணுருவுந் தொழுதெழவீற் றிருப்பாருக் கன்பு செய்வாம்.

(இ - பொ.) ஆண் பெண் உருவமாய்த் தோன்றும் உலகத்திற்கு அறிவான கர்த்தன், தான் ஆணா, பெண்ணாவென்பதை முகத்தில் தந்தங்கள் இருக்கின்றன-இல்லை யென்றதினால் மாத்திரமே அறிவதல்லாமல், ஆணுருவும் பெண்ணுருவும் உடையவரென்பதை உணர்த்தற்கு வல்லபை யென்றவோர் பெண்ணாயகமுமுள்ளதெனத் தெரிய வல்லபை விநாயகனாய், ஆண் மக்களும் பெண்மக்களும் தொழுதெழ வீற்றிருக்கப்பட்டவருக்கு அன்பைச் செலுத்துவாம். (எ - று.)

143. உண்மையுரு வுணர்ந்தறிஞ ருரைத்திடுகா ரணத்தானோ வுற்றார் மாட்டுத்
தண்மையுரு வமைந்தமையுந் தகையானோ மறையுணராத் தன்னோர் பாகம்
பெண்மையுரு வான்றளிவாய் வெளியமர்த லானோவிப் பேர்பெற் றாயென்
றண்மையடி யார்துதிக்க மகிழ்முற்ற வெளியாரை யகத்துள் வைப்பாம்.

(இ - பொ.) மறைவின்றி முழுதும் வெளிப்பொருளாகத் தரிசிக்க, நாதாக்களுக்குப் பிரசன்னமான காரணத்தினாலோ, தன்னையடைந்தடைக்கலம் புகுந்தவர்களிடத்துத் தயவோடு இரக்கங் கொண்டருளும் பெருந்தகைமையினாலோ, வேதங்களால் அறியப்படாதவனாய், பார்வதியை வாமபாகங் கொண்டவனாய் உள்ள பரமசிவனுடைய சந்நிதிக்கு வெளிப்புறமாக எழுந்தருளியதனாலோ, இத்திரு நாமம் வந்த வரலாறு என்று அடியவர்களெல்லாஞ் சமீபமாகத் துதித்து மகிழாநின்ற முற்ற வெளியா ரென்னும் விநாயகனைத் தொழுவாம். (எ - று.)

(அ-ப.) முற்றும் வெளியார் =
முற்ற + எளியார் =
வெளி + (ஆ) + முற்றம் =
} முற்றவெளியார்
தளி—கோயில்

144. அருகரும்புத் தரும்வியப்ப வவனியொரு கோட்டுநுனி யமைத்துத் தீயோர்
திருகரும்புக் கிடங்கொடாச் செங்கண்வரா கமுமகிழத் தேவே யென்று
வருகரும்புட் குலமுழக்கு மலர்கேழற் புனற்கோட்டோர் வணிகன் பாங்க
ரொருகரும்புக் காயிரங்கொண் டுறுகரும்பா யிரக்களிற்றை யுளங்கொள்
வாமே.

(இ - பொ.) ஆருகதரும், புத்தரும் வியக்கும்படியாக (அடிமுடி காணும் அவதாரத்து) உலகத்தை மூக்குக் கொம்பொன்றின் நுனியினால் கிண்டிக்கிளறி, அத்தீயர்க்கு அரும்பளவும் இடங்கொடுக்காத (வராக அவதாரம் எடுத்த) செங்கண்மாலால் வழிபடப் பெற்றுப் பூசித்த, (வண்டுகள் நிறைந்த) வராக தீர்த்தக் கரையில் ஒரு வணிகனுடைய கருப்பங் காட்டில் கரும்பொன்றுக்காக

ஆயிரங் கரும்பைக்கொண்டு கொடுத்த அண்ட கரிய சரீரத்தையுடைய விநாயகக் கடவுளைக் கருத்துட்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) கரும்புள் = வண்டு.
கேழல் = பன்றி, வராகம்.
பாயிரம் = சரீரம், வரலாறு.

145. படவரவ மரைக்கசைத்த பரமனைமுன் விடுத்திடம்பின் பற்று வோரே
யிடமிகுபல் லிடங்களினு மேலாவ ரென்றெளிய விந்து வாம
குடமுடியுங் குடவயிறுங் குடமூக்கிற் குடமதிலிற் குடபா லுங்கொண்
டடரொளியி னமராதித் தடவிகட மழகளிற்றை யடுத்து வாழ்வாம்.

(இ - பொ.) படமெடுத்தாடும் பாம்பை அரைக்கச்சையாக வணிந்த பரமசிவனைச் சதா தியானித்து வருபவர்களே எவ்வெவ்விடங்களிலும் மேலானவர் களென்று தெரிதர, சந்திரனை யணிந்த மகுட முடியும், குடத்தைப் போன்ற வயிறுங் கொண்டு கும்பகோணத்தில் மேலைக் கோபுர வாயிலில், மேற்கு முகமாக நிறைந்த வெளியோடுங்கூடி அமர்ந்துள்ள ஆதித்தட விகட விநாயகப் பெருமானை அடுத்திருந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அசைத்தல் = கட்டல்.
குடமூக்கு = குடந்தை.
குடபால் = மேற்கு.

86. மாயூரப் புராணம்

146. பூமேவு தன்னடியார் தமைவிளக்கி முந்திருக்கை புணர்த்தல் வல்ல
தேமேவு பெருங்கருணை யாளனென றெரிப்பமறைத் திருநா மங்கள்
பாமேவு பலவிருக்க வகத்தியமால் களிறெனும்பேர் பரித்து நாளு
மாமேவு மயிலாடு துறைத்தளிவாழ் பெருமானை வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) உலகத்திலுள்ள சிவனடியார் கூட்டங்களை விளங்கச் செய்து, தான் முதன்மையாயிருக்கும் வல்லப முணர்த்திய தெய்வமயமான பெருங் கருணையாளன் என்று வேதம் முழங்கும் திருநாமங்கள் பலவாயிருக்க எழுந் தருளும் அகத்திய விநாயகரென்று மாயூரத்தில் வாழும் பெருமானை வணங்குவாம், (எ - று.)

(அ - ப.) அகத்தியமால் களிறு = அகத்திய விநாயகன்.

147. மன்னியபே ருருவாய்ந்த மதாசலமா முடிமேக்கு மருத நாமே
துன்னியபே ருருவாய்ந்த பூதத்தி னடிகிழக்குந் தோய்தற் கேற்ப
மின்னியபே ருருவாய்ந்து பெரியவா ரணமெனும் பேர்விளங்கப் பூண்டு
பன்னியபே ருருவாய்ந்த மாமயிலைத் தளியமரும் பரன்ருள் போற்றி.

(இ-பொ.) நிலைத்த பெரிய வடிவம் பொருந்தப் பெற்ற மதத்தைப் பொழியும் மலையின் சிறந்த தலைக்கு மாருக, நம்மைப் போன்றே நிறைந்த பெரிய வடிவம் பொருந்தப் பெற்ற பூதத்தின் பாதங்கள் பூமியில் பொருந்துவதற்குத் தகுதியாக, ஒளி பொருந்திய பெரிய வடிவங்கொண்டு, பெரிய வாரணம் என்ற பெயரையும் உலகத்துள்ளோர் கூறத் தரித்து, சிறப்பித்துக் கூறப்பட்ட வடிவம் பெற்று விளங்

கும் சிறந்த மாயூரத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் மேலான விநாயகக் கடவுளின் அருளைத் துதிப்போமாக. (எ - று.)

விநாயகக் கடவுளுக்குப் பெயர்—பெரியவாரணப் பிள்ளையார். திருமுடி மதநீரைப் பொழியும் மலையை ஒத்த யானை முகம். மனிதர் வடிவத்தினும் பெரிய வடிவம் வாய்ந்த பூதத்தின் கால்கள்—அவை பூமியில் பொருந்துதற்கேற்ப அமைந்தன என்பது முதலிரண்டடிகளின் பொருள்.

148. உயர்திணையு மஃறிணையு மாயவொரு திருவுருவ முற்று மேவும்
பெயர்வில்கரு ணைக்கிணங்க வவ்விரண்டு திணையுயிரும் பேணித் தாங்க
லயர்வுலகந் தெரிப்பவிள மதியுமுது வரவுமுடி யிலங்கத் தாங்கி
மயர்வுதப வீற்றிருக்கு மகத்தியவா ரணத்தடிகள் வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) உயர்திணையாகிய பரத்துவமும், அஃறிணையாகிய விலங்கினமும் ஆன ஒரு யானைத் திருவுருவம் முழுவதுங்கொண்ட பெயர்தலில்லாத திருக்கருணைக்கு இணங்கும்படியான அத்திணை இரண்டிற்கும், இரண்டு உயிர்களை உலகத்தார் கண்கள் சிதறும்படி அடையாளமாகக் காட்டலாகிய, இளஞ் சந்திரனையும், முதிர்ந்த அரவத்தையும் முடிமேலணிந்து மயக்கந் தீர்ந்திட எழுந்தருளியிருக்கும் அகத்திய விநாயகன் திருவடிகளை வணக்கஞ் செய்வோம். (எ - று.)

(அ - ப.) பெயர்வு = பெயர்தல்.
மயர்வு = மயக்கம்.

87. உறையூர்ப் புராணம்

149. நிலவுவெள் மருப்பி லொன்றினை முறித்து
நெடுங்கையிற் படையெனத் தாங்கி
வலவுடற் பகையைச் செற்றபி னமரர்
மஞ்சன மாட்டிடப் பெற்றுக்
கலவுறிற் தகைகைக் கோடலா மென்று
கதிர்ச்சடை யம்மருப் பமைத்தாங்
குலவுமொண் பிறைவைத் தெவர்க்குமங் கலஞ்செ
யுத்தமக் களிற்றையேத் தெடுப்பாம்.

(இ – பொ.) நிலாவைப் போன்ற வெள்ளிய தந்தக் கோடொன்றையொடித்து, நெடிய தும்பிக்கையில் ஆயுதமாகக் கொண்டு வலிய தேகத்தைப் பொருந்திய சத்துருவான கபமுகாசூரனை அழித்தபின், தேவர்களால் திருமஞ்சனம் ஆட்டுவிக்கப்பெற்று, (பழையபடியே) போர் நேரிடும் பட்சத்தில் கையில் கொள்ளலாமென்ற துணிவுடன், (சிவனுடைய) சடாபாரத்தில் தம் தந்தக் கொம்பை வைத்துவிட்டு, அச்சடைமுடியிலே உலவும் இளஞ் சந்திரனை யெடுத்துத் தம் முடியிலே வைத்துக்கொண்டு ஆன்மகோடிகளுக்கெல்லாம் மங்களகரஞ் செய்யும்படியான உத்தம விநாயகப் பெருமானைப் போற்றிக் கொண்டு வருவோம். (எ - று.)

(அ – ப.) முறித்து = ஒடித்து.
செற்றல் = அழித்தல்.

150. மறுவறு கயிலைக் கோபுர வாய்தன் மருவியொண் புழைக்கர நீட்டிச்
சிறுவளி விடுதல் வாங்குதல் பல்காற் செய்திளங் கோக்களைச் சுமந்தாங்
குறுபற வைகளண் டச்சுவர் காறு முற்றிடப் போக்கியு மீட்டும்
பெறுசிறு படமென் ருடல்செய் கணேசப் பிள்ளைதா ளுள்ளிவாழ்ந் திடுவாம்.

(இ-பொ.) திருக்கைலாய கோபுர வாயிலில் எழுந்தருளியிருந்து, ஒள்ளிய துதிக்கையை நீட்டிப் பல முறை சிறுசிறு மூச்சுக்கள் விட்டும் வாங்கியும், பிரம்ம விஷ்ணுக்கள் ஊர்ந்திடும் அன்னத்தையும், கருடனையும், அண்டமுகடு வரையில் போக்கியும் நிறுத்தியும், சிறுசிறு காற்ருடிகள் போலத் திருவிளையாடல் செய்யாநின்ற கணபதியினுடைய திருவடிகளைச் சிந்தித்து வாழ்ந்திடுவாம். (எ-று.)

(அ-ப.) இளங்கோக்கள் = பிரம்மா, விஷ்ணு.
பறவைகள் = அன்னமும், கருடனும்.
படம் = காற்ருடி.

151. வருத்தவரு மவுணன்விடங் கனிகளெனப் புரிந்துதவ வாங்கி வாங்கிப்
பொருத்தமுற மகிழ்ந்துண்டு புத்தேளிர் குலமுழுதும் பொன்றி டாமே
யுருத்தவிட மொருதிரளை யாக்கியயி றந்தையினு முறுசீர் கொண்ட
நிருத்தகய மருத்தபத மருத்திகொடு கருத்தினிடை நிறுத்தி வாழ்வாம்.

(இ-பொ.) வருத்தஞ்செய்து கொண்டுவரும் அவுணனுகிய நாரந்தகள் ஏவலால் பிரமரை கொடுத்த விஷங்கலந்த பலகாரங்களையெல்லாம் வாங்கி வாங்கி ஆலகால மோர் கவளமாகக் கொண்டுண்ணுந் தந்தையாகிய நீலகண்ட பரமசிவத்தைப்பார்க்கிலும் அதிக இனிப்பாக அப்ப முப்பழம்போல அமுதுசெய்து தேவர்களுடைய வம்சம் முழுவதும் அழியாமற் காத்திருந்த விநாயகக் கடவுளுடைய பொன்னடிப் பிரசாதத்தை அன்போடு தியானஞ்செய்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) புத்தேளிர் = தேவர்கள்.
பொன்றிடாமே = அழியாமே.
திரளை = கவளம்.
அயின் = உண்.
அருத்தபதம் = பொன்னடி.
அருத்தி = அன்பு.

88. திருவம்பர்ப் புராணம்

152. சீர்பூத்த மணங்கவரும் பொறிதனைச் சார்ந்தொன்றி யமர்திறமு நாளு
மேர்பூத்த விடுதல்பிறி தொன்றனுக்கின் மையுமிதயத் தெண்ணி யந்த
நீர்பூத்த பொறியுலப்ப வுரிவிடய மிடமணங்கூர் நிலந்து ழாவும்
வார்பூத்த புழைத்தடக்கை யொருகோட்டு வாரணத்தை வணங்கி வாழ்வாம்.

(இ-பொ.) சிறப்பு விளங்கிய நறுமணத்தைக் கொள்ளுகிற, விடுகிற, பொறியாகிய மூக்கினைத் துதிக்கையாக அடையப்பெற்றுப் பொருந்தி எழுந்தருளியிருக்கும் தன்மையைத் தினந்தோறும் மனத்தில் நினைத்து, அது வேறு ஒன்றினுக்கும் இல்லாதிருப்பதையும் எண்ணி, அந்தத் தன்மை விளங்கும் பொறியானது (முகர்ச்சி) வருத்தமுற அழிய, தக்கதான விஷயங்களை இடமாகக்கொண்டு,

மணத்தோடுகூடிய நிலத்தினைத் தடவும் நீண்டு விளங்கும் துவாரத்தை உடைய விசாலமான துதிக்கையையுடைய ஒற்றைக் கொம்பினைப்பெற்ற யானைமுகக் கடவுளை வணங்கி வாழ்வோம். (எ—று.)

மணத்தைக் கவரும் பொறி மூக்கு. யானை முகத்தை உடைய விநாயகருக்குத் துதிக்கையே மூக்கு. அவ்வாறான துதிக்கையால் பற்றுதலும் விடுதலும் பிறிதொரு விலங்கிற்கு இல்லை. கையும் மூக்கும் ஒன்றாகப் பற்றுதல் விடுதல் இரண்டினை ஒரே பொறி செய்கின்றது. இதனை மனத்தில் கொண்டால், அந்த உறுப்பு வருந்தும்படியாக, சிறந்த விஷயங்களைத் தன்னிடங்கொண்டதும், மணம் உடையதுமான பூமியின்மேல் புரளக் கூடியதாக அமைந்த, நீண்டு விளங்கும் விசாலமான கையையும் ஒற்றைக் கொம்பையும் உடையவர் விநாயகப் பெருமான். அன்னவரை வணங்கி வாழ்வாம். பூமிக்கு மணம் உண்டு என்பது தருக்க சங்கிரக தீபிகையால் அறியலாம். மணம் இருப்பதினிடத்தில் விஷயம் (பொருள்) இருக்கும். அவ்விஷயங்களைக் கையாலும் மூக்காலும் உணர்பவர் விநாயகர். அவரை வணங்கினால் நமக்கு எவ்விஷயமும் குறைவில்லை.

153. அடிக்காசு மனமாற்றா ரடர்ந்தூறு செயினகல லன்றி யாவி
மடிக்காசு குணத்தீரென் றடியார்முன் னொடியாமுன் மருவுந் தோன்றல்
கடிக்காசு வளர்படப்பூண் முடிக்காசு மதியொடணி கடவு ளெங்கள்
குடிக்காசு தவிர்த்தருள்செய் படிக்காசு மழகளிற்றைக் குறித்து வாழ்வாம்.

(இ - பொ.) அடியார்கள்முன் பழைய விரோதமுடைய பகையாளிகள் நெருங்கி ஓர் துன்பஞ் செய்தால், விட்டுப் பிரியாமல், 'சற்குணமுடையீர் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டா' மென்று அபயக் குரலோசை கொடுத்து, இமைப்பொழுதுக்கெல்லாம் வந்து காப்பாற்றும் பகவானாய், ஒளிபொருந்திய இரத்தினம் வளரும்படியான ஆதிசேடனின் படத்தினுச்சியிலுள்ள மாணிக்கத்தோடு பிறைச்சந்திரனையும் தலையில் அணியுங் கடவுளுமாய் நமது குடித்தனத்துக்குக் குற்றம் முதலானவற்றைப் போக்கித் திருவருள் செய்துவரும் படிக்காசு விநாயகக் கடவுளைத் துதித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அடிக்காசு = பழம் பகை.
கடி = இருப்பு.
ஆசு = குற்றம்.

154. பாதகங்கைக் கொண்டுழலும் படிறர்தமக் கொருஞான்றும் பாலி யாது
போதகங்கைக் கொண்டருச்சித் திடையறாப் பேரன்பு புரித லாய
வேதகங்கைக் கொண்டவர்க்கே யுவப்புதவக் கொண்டமரும் விதமா லென்ன
மோதகங்கைக் கொண்டமரும் படிக்காசு மழகளிற்றை முன்னி வாழ்வாம்.

(இ - பொ.) பாதகமே கொண்டு உழலும்படியான வஞ்சகரை ஒருநாளும் பரிபாலிக்காது, (ஞானாசிரியனிடம்) உபதேசம் பெற்றுக்கொண்டு, இடையறாமல் வழிபடும் பேரன்பைப் புரிவித்தலாகிய கற்பூர தீபாராதனையைக் கைக்கொண்டவர்களுக்கே பேரின்பத்தையுதவிட, கையில் மோதகக்கனியைக் கைக்கொண்டருளியபடிக்காசு விநாயகனை முன்னதாகத் துதித்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) போதகம் = உபதேசம்.
வேதகம் = கற்பூரம்.

89. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

155. பூமேவு புழைக்கையகத் தொழுகுமதம் விளர்த்திருக்கும் புதுமை யாதென்
றுமேவு நிலவுலகும் பொலவுலகு மிறும்பூ துற்றைய மேவத்
தாமேவு நீராட னயந்தநாட் பாற்கடலுட் டதைய வாங்கி
மாமேவு வெளிவிடுத்த சித்திவிநா யகர்மலர்த்தாள் வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) பூவையேந்திய தும்பிக்கையின் மூலமாய் ஒழுகும்படியான மதவெள்ளம் வெளுத்திருக்கும் புதுமை யாதென்று, ஆன்ம வர்க்கங்கள் நிறைந்த மண்ணுலகமும் விண்ணுலகமும் ஆச்சரியப்பட்டுச் சந்தேகத்தையடைய, (அதற்குச் சமாதானமாக) முன்னொரு நாள் பாற்கடலுள் நீராடுகையில், உள்ளுக்கு வாங்கி வெளிவிடுத்த விளையாடலாம் இதனை மேற்கொண்டுள்ள சித்தி விநாயகருடைய திருவடிமலரை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) விளர்த்தல் = வெளுத்தல்.
இறும்பூது = ஆச்சரியம்.
ததைதல் = செலுத்தல்.

156. படைப்பவன் படைக்கும் போதும் பரிப்பவன் பரிக்கும் போதுந்
துடைப்பவன் றுடைக்கும் போதுந் துதிகமழ் பூசை யாற்ற
வுடைப்பவ னுடைக்கு மூற்றை யுற்றவெஞ் சன்ம வாயி
லடைப்பவன் சித்தி நாமத் தண்ணலே யெண்ணு வாமே.

(இ - பொ.) ஆன்மாக்களைப் படைக்கப்பட்ட பிரமன் படைக்கும்பொழுதும், பரிபாலிக்கப்பட்ட விஷ்ணு பரிபாலிக்கும்பொழுதும், துடைத்துச் சம்மரிக்கப்பட்ட சிவன் சம்மாரஞ் செய்யும்பொழுதும், தோத்திர மணந்த பூசனை செய்ய, கடைசியில் உடைப்பவனாகிய எமன் உடைக்கும்படியான ஊற்றைச் சரீரமெடுத்து வருஞ் ஜன்மவாசலையும் அடைப்பவன் சித்தி விநாயகப் பெருமான் ஆகையால் அவனை எண்ணி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பரிப்பவன் = காத்தற் கடவுளாகிய திருமால்.
படைப்பவன் = பிரமன்.
துடைப்பவன் = சிவன்.

90. விளத்தொட்டிப் புராணம்

157. பூமேவு முத்தொழில்செய் மூவருக்கு மொருமூல புருடன் றானென்
றுமேவு நிலமுணர வருசெவிக ளொருதுதிக்கை யகத்தே யன்னார்
தாமேவு பொலிவின் வரும்படி யுதவி யருள்சுரந்து தழையுமூர்த்தி
நாமேவு மாபத்துக் காத்தபிரான் றிருவடிக ணயந்து வாழ்வாம்.

(இ - பொ.) உலகில் நடைபெற்று வரும் சிருஷ்டி, திதி, சம்மாரம் ஆய முத்தொழில் செய்யும் மூவருக்கும் மூலபுருடன் ஒருவன்தானே என்றுணர்தர (பிரம்ம விஷ்ணு ருத்திரர்களைப் படைத்து), அவர்களும் முத்தொழிலினியல்பை உணர்த்துமாறு, (ஒரு விஸ்வ ரூபங்கொண்டு) தமது தும்பிக்கை வழியே யுள் வாங்கி (சகல சராசரங்களையுங் காட்டி), உடனே பிரம்மதேவரைத் துதிக்கை வழியாலும், விஷ்ணு ருத்திரரைச் செவி வழியாலும் வெளிப்படுத்தி அம்மூவர்க்கும் முச்சக்திகளை யுண்டாக்கிக் கொடுத்தருளிய மூர்த்தியும், நம்முடைய அபா

யத்தைக் காத்து இரட்சிப்பவருமான விநாயகரின் திருவடிகளை வணக்கம் செய்து வாழ்வாம். (எ - று.)

158. சோத்த நாயக னேயென்று தொல்புவி
பூத்த நாயகன் பொன்மகள் பூமகட்
காத்த நாயக னஞ்சிக்கு மாபத்துக்
காத்த நாயகன் கான்மலர் போற்றுவாம்.

(இ - பொ.) தோத்திர நாயகனே யென்று, உலகத்தைப் படைத்த பிரம்மனும், (அவன் மனைவி) சரஸ்வதியும், இலட்சுமியும், (அவட்குக் கூட்டாளியாகிய) விஷ்ணுவும் பயப்படும் ஆபத்துக்களைக் காத்தருளிய விநாயகப் பெருமானுடைய திருவடிக் கமலங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) சோத்தம் = தோத்திரம்.
ஆத்தன் = ஆப்தன்.

---

91. கோயிலூர்ப் புராணம்

159. சீர்பூத்த மெய்யறிவின் புருவெனற்கோர் குறியீடு தெரித்த லேய்ப்பக்
கார்பூத்த விருகவுருத் தெய்வவுருப் பூதவுருக் கலப்பத் தோன்றித்
தார்பூத்த நசையாலுந் தாங்கொடுத்த வரத்தாலுந் தணவா தென்று
மேர்பூத்த சமிநிழல்வாழ் வன்னிவிநா யகர்மலர்த்தா ளிறைஞ்சி வாழ்வாம்.

(இ - பொ.) சீர்மைபூத்த மெய்யறிவின் இன்பமாகிய திருவுருவமென்பதற்கோர் அடையாளம் தெரியும் பொருட்டாகக் கரிய மேனியான மிருகவுருவமும், தெய்வவுருவமும், பூததயாள உருவமும் கலந்துவரத் தோன்றி, உலகத்தார் கொண்ட உள்ளன்புக் கேற்றபடி வரங்களைக் கொடுத்துவிட்டுப் பிரியாமலென்றும், சமிமந்தார மர நிழலில் வாழும்படியான வன்னி விநாயகருடைய திருவடித் தாமரைகளை இறைஞ்சுதல் செய்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) விருகம் = மிருகம்.
நசை = அன்பு.
தணவாது = பிரியாது.
சமி = வன்னி.

160. அடைபவர்க டவிர்கோசங் கரங்காட்ட வதற்கமைசா தனந்தோள் காட்ட
வுடைதருகீ ழவத்தைவிழி காட்டமே லவத்தைமத வூற்றங் காட்ட
நடைகெழுமற் றவர்புரியும் பாவனையை மருப்பெடுத்து நன்கு காட்டத்
தடைதவிர்பே ரருள்கொழிக்கும் வன்னிவிநா யகர்மலர்த்தாள் சார்ந்து
வாழ்வாம்.

(இ - பொ.) அடைக்கலம் புகுந்த அடியார்களுடைய பஞ்ச கோசங்களையுந் தவிர்ப்பவனெனத் தெரிய ஐங்கரமும், அக்கோச நிவர்த்திக்குரிய நான்கு சாதனங்களைக் காட்டுவான் எனத் தெரியச் சதுர்ப்புஜங்களும், அச்சாதன வழி நிற்ப, கீழவத்தை மூன்றையுந் தொலைப்பான் குறித்த முக்கண்ணும், மேலே துரியம் துரியாதீதத்தில் நிட்டை கூட்டுவான் குறிக்கும் இருமதப் பெருக்கும், அந் நிட்டை மேவிய அத்துவிதப் பெரும்பேற்றை அளிப்பான் குறிக்குமோர் கொம்பாஞ்

செங்கோலுங் கொண்டு விளங்கும் வன்னி விநாயகருடைய திருவடி மலர்த் தாமரைகளைச் சார்ந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பஞ்சகோசம் = அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்த மயம்.
சாதனம் = சரியை, கிரியை, யோகம்.
கீழவத்தை = ஞானம், சாக்கிரதம், சொப்பனம்.
மேலவத்தை = துரியம், துரியாதீதம்.

92. திருக்குறுக்கைப் புராணம்

161. நீர்கொண்ட மழைதவழ்மால் வரைச்சாரற் றினைப்புனத்து நீபத் தொண்பூந்
தார்கொண்ட பன்னிருதோட் டம்பியார் பெருங்காதற் றணிப்பா னன்பர்க்
கேர்கொண்ட தன்னுறுப்பொன் றிரண்டிரண்டு மூன்றுமுன் றிரண்டி ரண்டு
பார்கொண்ட நான்கைந்தொன் ருகவரு குஞ்சரத்தைப் பரவி வாழ்வாம்.

(இ - பொ.) மழைநீர் கொண்ட பெரிய மழைச்சாரலில் தவழ்கின்ற திணைப்புனத்தில், கடப்பமலர் மாலையணிந்த பன்னிரு தோளுடைய தம்பியாராகிய சிவசுப்பிரமணியக் கடவுளின் பெரிய காதலைத் தணிப்பவனும் அடியார்களுக்காகத் தான் கொண்ட ஒரு கொம்பு, இருமதம், முக்கண், இருபதம், ஐங்கரமென்னும் உறுப்புக்களை முறையே இருகொம்பு, மும்மதம், இருகண், நாற்பதம் ஒரு (தும்பி) கரமெனக் கொண்டு வருபவனுமான யானைமுகப் பெருமானைப் பணிந்து வாழ்வாம். (எ - று.)

162. இருதிணையு நிறைந்துறைவ தொருதானே யெனல்புவனத் தியாருந் தேரக்
கருதிணையி லத்திணைசேர்ந் தாகியவோர் மூர்த்தியகங் கதிர்ப்ப மேவி
மருதிணைகொன் றவனயனு தியர்வணங்கி வாழ்த்துதொறும் வரங்க ணல்கி
ன்யொருதிணையும் வழுவாது நடாத்துகுறுக்கைக்களிற்றை யுளங்கொள் வாமே.

(இ - பொ.) உயர்திணைக் கீர்த்தியும், அஃறிணை வடிவமும் சேர்ந்திருப்பது ஒன்றுதானேயென்று உலகத்தாரெல்லாந் தெரியும்படிக்கு, ஒப்பற்ற அஃறிணையைச் சார்ந்த யானை வடிவமுடைய மூர்த்தியாகி ஞான ஒளி வீச வீற்றிருந்து, மருதவடிவாய் வந்த இரண்டு அசுரர்களைக் கொன்ற திருமால், பிரமன் முதலியவர்கள் வாழ்த்தி வணங்குந்தோறும் வரங்கள் அளித்து, எத்திணையும் வழுவாது வாழச்செய்யுங் குறுக்கை விநாயகரை உளத்திற்கொண்டு வணங்குவாம். (எ-று.)

93. தனியூர்ப் புராணம்

163. புகழ்பூத்த சிவபெருமான் புண்டரிக முரித்துடுத்துப் பொலிந்த ஞான்று
திகழ்பூத்த பல்லுகிரு மணைத்துமழப் பணியாப்பொன் செறிந்திட் டென்ன
வகழ்பூத்த மதிற்றனியூ ரகம்பகன்றை மலர்த்தொடைபூண் டமர்ந்துள் வாருக்
கிகழ்பூத்த மலந்துமிக்கும் யானைமுகப் பெருமானை இறைஞ்சி வாழ்வாம்.

(இ - பொ.) புகழ்பரந்த சிவபெருமான் புண்டரிகமென்னும் யானையையுரித்து, அதன் தோலைப்போர்த்து மகிழ்ந்த நாளையிலே, இருந்த தந்தங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, சிறுசிறு பொன் ஆபரணங்கள் செய்து, செறிந்து விளங்கும் கொன்றைப் பூமாலையை அணிந்து, அகழி சூழ்ந்த மதிலுள்ள திருத்தனியூரில்

இருந்து துதிப்பவர்களுக்கு, இகழ்ச்சியான மல மாயா கன்மத்தையறுக்கும் யானை முகப் பெருமானைத் தியானித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பகன்றை = கொன்றை.
துமிக்கும் = அறுக்கும்.

164. மண்ணவர்க் கிகமும் பரமுமத் துவித முத்தியும் வயங்குகற் பகத்தார்
விண்ணவர்க் கமையும் பரமுமுத் தியுமேல் விளம்பிய விரண்டு மெண்ணுத
பண்ணவர்க் கின்ப முத்தியு மாய படர்புழு கீச்சரத் தமர்ந்து
கண்ணவர்க் கினிய புரிதரு வரதக் களிமத யானைபொற் பதமே.

(இ - பொ.) பூலோகத்தார்க்கு இகசாதனமும், பரபோகமும், அத்துவித முத்தியும் ஆய மூன்றும், கற்பக நிழலுடைய வானுலகத்தவர்க்குப் பரபோகமும், அத்துவித முத்தியுமாகிய விரண்டும், முன் கூறிய (இம்மை மறுமையென்னும்) இகபர மிரண்டையுமெண்ணுத ஞானிகளுக்கு அத்துவித முத்தியொன்றும் ஆகிய முறைப்படி, தனியூர்ப் புழுகீச்சரமமர்ந்து தம்மை நினைத்தவர்களுக்கு இனிய அருள் புரிந்தொழுகுவது, அபய வரதனாகிய விநாயகக் கடவுளுடைய திருவடி பொற் பாதமே. (எ - று.)

---

94. சூதசங்கிதை பூருவகாண்டம், உத்தரகாண்டம்

165. மாமேவு நந்தொழிலும் வல்லனெனத் தந்தையுள மகிழ்ச்சி பூப்பப்
பூமேவு திறத்தவனைப் பொறிமேவு நிறத்தவனைப் புழைக்கை யூடு
தூமேவு கடலாடு நாளொடுக்கி மீட்டும்வெளித் தோற்றிக் காத்த
தேமேவு கடுக்கைமுடிக் குஞ்சரப்பொற் செஞ்சரணஞ் சென்னி சேர்ப்பாம்.

(இ - பொ.) பரிசுத்தமான கடலில் நீராடும் நாளில், பிரம்மனையும் விஷ்ணுவையும் தும்பிக்கை மூலமாக உள்ளுக்கு இழுத்து, (தன் கர்ப்பத் துள்ள அண்ட சராசரங்களை யெல்லாங் காட்டித்) திரும்பவும், (பெருத்த நம் செயலிலும் வல்லவனெனத் தந்தையாகிய சிவபெருமானும் மகிழ்ச்சியடைய) வெளியே விட்டுக் காத்து இரட்சித்த மணம் மிகுந்த கொன்றை மலர் மாலை யணிந்த யானைமுகக் கடவுளின் சரணாரவிந்தங்களைச் சிரத்திலணிந்து கொள் வாம். (எ - று.)

166. நுதிக்கோடு முகங்கொடம ரொருங்கோடச் சுரரடர்க்கு நூழில் யானை
மதிக்கோடு தலைக்கழித்த வசிக்கோடு கரத்தேற்று வழுத்துந் தொண்டர்
துதிக்கோடு மருள்சுரந்து பவக்கோடு கடலழுந்தித் துளையா தின்பக்
கதிக்கோடு களித்துவரத் திருகோட்டு மொருகோட்டுக் களிற்றை யுள்வாம்.

(இ - பொ.) துதிக்கையினையுங் கோட்டையும் முகத்திற் கொண்டு தேவர்களெல்லாம் ஒருங்கே அஞ்சியோடப் போர்புரியும் யானை வடிவினனாகித் தலையினின்றும் நீக்கிய பிறைச் சந்திரனாகிய கோட்டைக் கையில் ஏற்றுத் தம்மைத் துதிக்குந் தொண்டர்கள் துதிப்பாடல்களுக்கு அருள்சுரந்து, அவர்கள் பிறவிக் கடலில் அழுந்தித் துளைந்துகொண்டிராமல் முத்தியாங் கரையை அடைந்து களிக்கும்படியாக அவர்களுடைய அறியாமையைப் போக்கும்படியான ஒற்றைக் கொம்பினையுடைய விநாயகக் கடவுளைச் சிந்திப்பாம். (எ-று.)

167. பொருள்படு பிரணவத்தின் பொருளொரு தானே யென்று
மருள்செறி மனத்தினாரும் வயங்குற வுணர்பாக் கம்பொற்
சுருள்விரி கடுக்கைவாசத் தொங்கல்செஞ் சடையிற் சூடு
மருள்பொழி முக்கணால்வா யைங்கரக் களிற்றை யுள்வாம்.

(இ - பொ.) உண்மையான பிரணவப் பொருள் ஒன்றுதானே யென்று மயங்கி நின்ற மனத்தினரும் நன்றாக உணரும்பொருட்டு அழகிய பொற்சுருள் போலும் பிரணவ வடிவாக விரிந்த கொன்றை மலர்மாலையைச் சடாபாரத்தி லணிந்து திருவருள் பேற்றை மழையைப்போல் பொழிகின்ற முக்கண்ணும், நான்ற வாயும், ஐங்கரமும் உடைய விநாயகக் கடவுளைப் போற்றுவாம். (எ - று.)

168. அண்டர்தம் பெருமான் சடைமுடிப் பிறையோ
டம்மைதன் குழன்மணிப் பிறையைத்
தண்டையங் குறுந்தாள் பெயர்த்தரு கணைந்து
தடங்கரத் தெடுத்துறச் சேர்த்துக்
கண்டவர் முழுமா மதியென வியப்பக்
கனவினன் காடல்செய் நீற்றுப்
புண்டர நுதற்குஞ் சரமழக் கன்று
பொலிந்தென துளங்குடி கொளுமே.

(இ - பொ.) தேவ தேவனாகிய சிவபெருமானுடைய சடைமுடிப் பிறை யோடு, பார்வதியம்மன் தம்முடைய கூந்தலில் அணிந்த சந்திரப் பிறையையும், தம் தண்டையணிந்த குறுகிய அடிகளைக் கொண்டு நடந்து அருகேயணைந்து தமது நீண்ட கரத்தால் எடுத்து ஒன்றாகச் சேர்த்துக் கண்டவர்கள் பூரணச் சந்திரனென்று வியப்ப, எனது கனவில் நல்ல திருவிளையாடல்களைச் செய்யா நின்ற திருநீற்றுப் புண்டரமணிந்த நெற்றியையுடைய விநாயகக் கடவுள் பொலிந்து எனது உள்ளத்திற் குடிகொள்ளுவார். (எ - று.)

(அ - ப.) புண்டரம் = திரிபுண்டரம்.

169. மதிவளர் சடையு மணிமுடிப் போகி
வயங்குமொள் ளரையுமோர் கோடுந்
துதிவளர் தருபொற் குழையுமெவ் வுயிருந்
தொகப்புரி நிழலுமன் பராகம்
பொதிவள ரின்ப மரும்புநன் பூவும்
புகரறக் கொண்டு பன்னாளுங்
கதிவளர் பலமிக் களிக்குமம் பகட்டுக்
கற்பகந் தனையடுத் துய்வாம்.

(இ - பொ.) வளர்மதிச் சந்திரனை யணிந்த சடையும், சிரசில் மாணிக்க முடைய பாம்பைப் பூண்ட இடுப்பும், (கையில்) ஓர் கொம்பும், அன்பர்கள் துதி வளரும் (காதில்) குண்டலமும், எல்லா உயிர்களுஞ் சேர்ந்து தங்கக்கூடிய நிழலு மாய், அன்பர்களுடைய உள்ளன்பாகிய திருவம்பலத்தின்கண்ணே வளர்தரும் இன்பத்தைத் தோற்றச் செய்யும் பூவினையும், குற்றமில்லாமல் கொண்டு எந்த நாளும் நற்கதியாகிய பழத்தினை நமக்கு அளிக்கும்படியான அழகிய கற்பக விநா யகப் பெருமானுக்கு அடிமை செய்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அரும்பல் = தோன்றல்.
புகர் = குற்றம்.

குறிப்பு :— இப் பாடலில் சிலேடை நயம் பொருந்த விநாயகப் பெருமானை ஒரு கற்பகத் தருவாகக் கவிஞர் உருவகஞ் செய்துள்ளார்.

170. ஆரணமா கமம்பரவு மமலனா னந்தனருள்
பூரணமாம் பரம்பொருளைப் புண்ணியர்கள் பெருவாழ்வைக்
காரணமா வெத்தொழிற்குங் கதிக்குமொரு செழுஞ்சுடரை
வாரணமா முகத்தேவை வணங்கிவளம் பெற்றிடுவாம்.

(இ - பொ.) வேதாகமங்கள் கொண்டாடும் சுத்தப் பிரம்மானந்தனாகிய பரமசிவன் அருளிய பரிபூரண வஸ்துவாய், புண்ணியவான்களுடைய பெரிய வாழ்க்கையாய், (சிருஷ்டி முதல் அநுக்கிரக மீறான) பஞ்சகிருத்தியங்கள் எவைக்குங் காரண பூதமாய் உதயமாகும் ஒரு செழுஞ் சுடரான யானைமுகப் பெருமானை வணங்கி, மோட்ச வளப்பத்தைப் பெற்று வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அமலனானந்தன் = சிவன்.

171. உயர்திணையு மஃறிணையும் படைத்தளித்துத் துடைக்குமுத லொருதா னேயென்
றயர்வறவெத் தகையோரு மறிந்துய்யத் தெரிக்குமடை யாள மேய்ப்பப்
பெயர்கொளுயர் திணையுமஃ றிணையும்விர வியவுருவிற் பிறங்கு வானை
மயர்வடியர்க் ககற்றுமொரு மருப்பானை விநாயகனை வணங்கு வாமால்.

(இ - பொ.) (மக்கள், தேவர், நரகர் ஆய) உயர்திணையையும், மற்றுயிருள்ளவும் இல்லவும் ஆகிய அஃறிணையையும் ஆக்கி, அளித்து, அழிக்கும் முதல்வன் ஒருவன் தானேயென்று எல்லாப் பக்குவிகளும் சந்தேகமில்லாமல் அறியும்படி தெரிவிக்கும் அடையாளத்துக்குத் தக்க, உயர்திணையும் அஃறிணையுமான பேர் கொண்டு கலந்த திருவுருவில் அன்பர்கள் மயக்க அறிவை அகற்றும்படியான ஒரு கொம்புடைய விநாயகக் கடவுளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) பிறங்குவான் = பிரசன்னமாவான், விளங்குவான்.
தெரிக்கும் = தெரிவிக்கும்.

172. நத்தனயன் விண்ணிறைதந் நவைதீரப் பணிந்தேத்துஞ்
சித்திபுத்தி யெனுநாமச் செழுங்கொடிகள் படர்ந்தோங்கு
முத்திமுகக் கற்பகத்தி னடிமலரைப் பணிந்திடுவாஞ்
சத்தமுத லைந்தடக்குந் தனிவாழ்வு பெறுமாறே.

(இ - பொ.) விஷ்ணு, பிரமன் முதலியோர் விண்ணுலகத்திலுண்டான தம்முடைய கஷ்டம் நீங்கும் பொருட்டுப் பணிந்தேத்தும்படியான சித்தி—புத்தி யென்னுந் திருநாமமுடைய செழிய பெண்ணென்னும் கொடியிடைகள் சுற்றிப் படர்ந்தோடுவதுமான ஆனைமுகமுடைய கற்பக விநாயகர்தந் திருவடி மலரை, (சத்தாதி ஐம்புலனையுமடக்கும் தன்னிகரில்லாப் பெருவாழ்வடைவதற்கு) வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) நத்தன் = நந்தன் = விஷ்ணு.
நவை = கஷ்டம்.
அயன் = பிரமன்.

95. புலியூர்ப் புராணம்

173. முந்திநினைப் பவர்வினைகண் முடிந்திடநீ ளருள்புரிந்து முரணி வந்த
தந்திமுக வசுரனுட லொருகோட்டா லிருபிளவாத் தடிந்து சார்ந்த
வெந்தகையின் மாங்கனியை யேருலவு மண்டமெலா நொடியினேகுங்
கந்தனின்முன் வலம்வந்து கைக்கொள்ளுங் கற்பகத்தைக் கருத்துட் சேர்ப்பாம்.

(இ - பொ.) முதல் முதல் தன்னை வழிபடுவார்தம் இருவினைகளையும் நீக்கித் திருவருள் புரிந்தும், எதிர்த்து வந்த கயமுகா சூரனுடைய உடலை ஒரு கொம்பால் (குத்தி) இருபிளவாகப் பிளந்து சாய்த்தும், சிவபெருமான் கையிலுள்ள மாம்பழத்தை, உலகமெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் போய்வருங் கந்தனுக்கு முன்பாகத் திருவலம் வந்து கைக்கொள்ளும் கற்பக விநாயகக் கடவுளைத் தியானஞ் செய்வாம். (எ - று.)

96. திருக்கோவலூர்ப் புராணம்

174. மடியாத பெரும்பாச வலையறுத்துப் பவக்கடலைப்
பொடியாகச் சுவற்றியெமைப் பொருகாலன் படைதுரந்து
குடியாகத் திருக்கோவற் புரங்குலவும் பனிக்குன்றப்
பிடியானை யளித்தருளும் பெரியானைக் கழல்போற்றி.

(இ - பொ.) இறவாத பெரும் பாசமாகிய (ஆணவம், மாயை, காமியம்) என்கின்ற வலையை யறுத்து, பிறவியாகிய கடலைச் சூரணம் போல வற்றச் செய்து, எம்மைக் கொல்லவருங் கால தண்டத்தை நீக்கி, திருக் கோவலூரை உறைவிடமாய்க் கொண்டு விளங்கும் மலைமகளாகிய பெண்யானை பெற்றருளிய பெரிய யானைமுகக் கடவுள் திருவடிகளைப் போற்றுவோமாக. (எ - று.)

(அ - ப.) சுவற்றல் = வற்றச்செய்தல்

97. திருத்தினைநகர்ப் புராணம்

175. வருமருப்பங் கயத்தோனைத் தருமுருமைப் புயலனைய மாலாங் கோலப்
பருமருப்பங் கமதிலணி விரைமலர்ப்பூங் கொன்றைமுடிப் பரம னீன்ற
விருமருப்பங் களியானை முகத்தவுண னிறக்கவுருத் தெறிந்த வெங்கூ
ரொருமருப்பங் கயமுகத்துப் பொய்யாத பிள்ளையடி யுளத்துள் வைப்பாம்.

(இ - பொ.) மணம் வரும்படியான தாமரையில் வாழும் பிரம்மதேவனைத் தந்த நீல மேக சரீரனாகிய விஷ்ணுவின் (பன்றிக்) கொம்பை முறித்து அங்கத்தில் அணிந்து கொண்ட கொன்றைப் பூவணிந்த சடாமுடியுடைய பரமசிவன் அருளிய (இரண்டு தந்தங்களுடைய கயமுகாசூரன் இறக்கும்படியாக வெங்கூர் மருப்பொன்றை எடுத்து ஓங்கிக் குத்திப் பிளந்த, யானை முகத்தை யுடைய மெய்யான பிரணவ வடிவத்தை உள்ளத்துள் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) கோலம் = பன்றி.

98. இருடிவிந்தத்தலப் புராணம்

176. நகக்கொடி வதன கஞ்ச நகையுற வலர்த்தும் பானு
மிகத்தொழு மன்பர் தங்கண் மேதகு மிதய கூடத்
தகப்படு மொருகோட் டும்ப லருட்கடல் குணக்குன் றெங்கோன்
சுகத்தளி ரணைய தாளைத் தொழுதுயர் விழுமந் தீர்வாம்.

(இ - பொ.) மலைக்கொடியாகிய பார்வதியின் தாமரை மலர் போன்ற முகத்தை நகைத்து மகிழச் செய்யும் (உதயகால) சூரியனும், அதிகமாகத் தொழும் அடியார்களுடைய இருதய கூடத்துத் தங்கும்படியான ஒற்றைக் கொம்பினையும் யானை முகத்தினையுமுடைய, அருட்கடலும் குணக்குன்றுமாக விளங்கும் எம் தலைவனாகிய விநாயகமூர்த்தியினுடைய இன்பந்தரும்படியான தளிரணைய திருவடிகளைத் தொழுது நமது துன்பத்தைத் தீர்வாம். (எ - று.)

(அ - ப.) நகம் = மலை.
கொடி = (கொடி) யிடை.
வதனம் = முகம்.
கஞ்சம் = தாமரை.
பானு = சூரியன்.
விழுமம் = துன்பம்

99. திரிசூலகிரிப் புராணம்

177. உலகெலா மொருங்குயிர்த் துவக்கு மன்னையா
மலைதரு மகண்முதன் மதலை யாகிவந்
தலகிலன் பர்களுளத் தமர்ந்த நல்கியே
யிலகுமும் மதமலை யடிக ளேத்துவாம்.

(இ - பொ.) உலகமெல்லாம் ஒருமிக்க ஈன்று களிக்காநின்ற தாயாகிய பார்வதிக்கு மூத்த புத்திரனாக வந்து, அளவில்லாத அன்பர்களுடைய உள்ளத்தில் அவாவிய வரங்களைக் கொடுத்துக் கொண்டே வரும், மூன்று மதங்களைப் பொழிகின்ற விநாயகக் கடவுளின் திருவடிகளை ஏத்திவருவாம். (எ - று.)

100. புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

178. ஏராரும் பிறைமருப்புஞ் சிந்துரச்சிந் துரமுகமு மிலகச் செம்பொன்
வாராருங் களபமுலை மாதுதைய லுமையளித்த மைந்த னாகிக்
காராரும் பொழில்புடைசூழ் புள்ளூரிற் கருணைமதஞ் சொரிந்தெந் நாளுந்
தீராத கொடும்பாச வினைதீர்த்த பிள்ளைபதஞ் சிரமேற் கொள்வாம்.

(இ - பொ.) அழகுடைய மூன்றாம் பிறைச் சந்திரனை யொத்த தந்தக் கோடும், சிந்துரப்பொட்டணிந்த யானை முகமும் விளங்க, செம்பொன் வாராரும் களபமுலை மாதரசியாகிய உமையம்மை தந்தருளிய புத்திரனாகி, மேகந்தங்கிய சோலைகள் சூழப்பெற்றுள்ள புள்ளிருக்குவேளூரில் (அடியார்களுக்கு) எந்நாளும் கருணா கடாட்சம் செய்து, விட்டுப் பிரியாத கொடிய வினைப் பாசத்தைத் தீர்த்து இரட்சித்த பிள்ளையாருடைய திருவடிகளை நமது சென்னி மேற்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) சிந்துரம் = பொட்டு, யானை.

179. முத்திவிநா யகன்மகிழு மன்பனுக்கிவ் வுலகினிருண் முழுது நீக்கு
மத்திவிநா யகனெனவே யகத்திருளை நீக்குவர மளித்து மன்னு
மெத்திவிநா யகன்மேலாஞ் சிவஞானச் செல்வனிவ னெனவே செய்யுஞ்
சித்திவிநா யகன்வேளூர்க் குடைவரைவி நாயகன்றாள் சிரமேற் கொள்வாம்.

(இ - பொ.) தன்னை வழிபடுகின்ற அன்பனெவனோ அவனுக்கு, இவ்வுலகின் மாயாவிருளை முற்றும் போக்கி முத்தியைத் தரும் முத்தி விநாயகனும், மல மாயா கன்மங்களைப் போக்கிக் கோரிய வரத்தை உண்மையாகக் கொடுக்கும் அத்தி விநாயகனும், தான் மேலாகிய சிவஞானச் செல்வனெனச் செய்து காட்டும், விகடாயன விநாயகனும், (சர்வ) சித்தி விநாயகனுமான புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளிய குடைவரை விநாயகனுடைய திருவடிகளைச் சிரமேற் கொண்டு வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) எத்தி = எத்து வாதம் (அகடவிகடம்).

101. திருவேரகப் புராணம்

180. பெற்றபரன் றாழ்சடைக்கா னகத்துலவி வெள்ளநதிப் பெருநீ ராடிச்
சுற்றுமெழில் வல்லபையின் றுணைமுலைக்கோ டுழக்கிவினைத் துருமஞ் சாடிப்
பற்றுமறைக் கூடத்தி னணைந்தடியர் மனத்தறியிற் பரிவிற் சாரு
மொற்றைமருப் பிருசெவிமும் மதநால்வாய் மழகளிற்றை யுன்னி வாழ்வாம்.

(இ - பொ.) பெற்ற பரமசிவனுடைய தாழ்சடைக்காட்டிலே உலா வந்து, அவண் பெருகிய கங்கையில் நீராடியும், முழுதுமழகுடைய வல்லபையின் இரண்டு மார்பும் பொருந்தத் தழுவியும், இருவினையென்னும் மனக்கலக்கத்தைப் போக்கடித்தும், இரகசியமான சிற்றம்பலத்தின்கண்ணே சேர்ந்து அடியவர்கள் மனமாகிய கட்டுத்தறியில் அன்பாகப் படும்படியான கொம்பொன்றும், செவியிரண்டும், மதமூன்றும், நால்வாயுமுடைய விநாயகக் கடவுளைத் தியானித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) கானகம் = காடு.
உழக்கல் = அழுந்தத் தழுவுதல்
துருமம் = மனக்கலக்கம்.

102. பழனிப் புராணம்

181. வீதி வேழமா வுலாவுமா வினன்குடி வேத
மோதி வேழமா மூலமென் றுரைத்தவன் போற்று
மாதி வேழமா தொருபிடி யாகவந் துதித்த
சோதி வேழமா முகவனைத் துதித்திடல் செய்வாம்.

(இ - பொ.) திருவீதியிலே யானையாகிய விலங்கு வந்து உலாவும்படியான திருவாவினன்குடியில் வேதத்தை ஓதும்படியான பிரமன், விநாயகப் பெருமானே மூலப் பொருள் என்று உரைத்து, அவன் போற்றும் ஆதியாம் சிவபெருமான் ஆண் யானையாகவும் உமை பெண் யானையாகவும் வந்து காட்சியளிக்கத் தோன்றிய ஒளிமயமாக விளங்கும் விநாயகப்பெருமானைத் துதி செய்வாம். (எ-று.)

குறிப்பு :— ‘‘பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை யிறையே’’

என்னும் திருஞான சம்பந்தர் தேவாரம் மேலே கண்ட செய்யுளுக்கு மூலக் கருத்தாக விளங்குகின்றதென்பது இங்கே ஒப்புநோக்கி உணர்வார்க்கு இனிது விளங்கும்.

103. திருச்செங்கோட்டுப் புராணம்

182. புரந்த ரன்கண முனிவர்கந் தருவர்புத் தேளிர்பூ தலமாக்க
ணிரந்த ரந்தரந் தருவினை யகன்றிட நினைத்தன நிலையாகத்
தரந்த ரந்தர மாகவந் தடிதொழத் தகுந்திருச் செங்கோட்டில்
வரந்த ருந்திரு வட்டவைங் கரக்கரி மாமுகன் பதம்போற்றி.

(இ - பொ.) இந்திராதி தேவர்களும், முனிவர்களும், கந்தருவரும், மற்றும் உண்டான தெய்வங்களும், பூலோக வாசிகளும், தத்தம் அச்சந்தரும் இருவினைகள் விட்டு நீங்கவும், சிந்தித்தவெல்லாம் சித்தியாகவும், நாள்தோறும் வரிசை முறையாக வந்து சேவிக்கத் தகுதியான திருச்செங்கோட்டில் வரந்தரும் திரு வட்ட ஐங்கரனென்னும் யானை மாமுகன் திருவடிகளைத் துதிப்பாம். (எ –று.)

(அ - ப.) புரந்தரன் = இந்திரன்.
புத்தேளிர் = தெய்வங்கள்.

104. சுசீந்திரப் புராணம்

183. முன்னுறு தவள வண்டின் முகம்பொரு கொம்பு மும்பர்
பின்னுற முன்வந் தெய்திப் பிரமரஞ் சலித்து வேதம்
பன்னுற வளிசூழ் கண்ணும் பரம்புதே னிரம்பு தாரு
மன்னுறு மெழில்சேர் தும்பி வதனனை வணங்கு வோமே.

(இ - பொ.) முகத்துக்கு முன்னதாக விளங்கும் வெண்சங்கின் முகத்தை ஒத்த கொம்பும், வானவர்கள் பின் தொடர்ந்து வர, முன் வந்த பிரம்மதேவர் கைகூப்பியவராய் வேதபாராயணஞ் செய்ய, அவர்களுக்குத் திருவருள் புரியும் கண்களும், மிகுதியும் வண்டுகள் மொய்க்கும் மலர்மாலையும் கொண்டு விளங்கும் அழகுடைய ஆனைமுகக் கடவுளை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) தவளம் = வெண்மை.
வண்டு = சங்கு.
பொரு = ஒத்த.
உம்பர் = வானவர்.
அஞ்சலித்து = கை குவித்து.
பரம்பு = பரவிய.
தார் = மாலை.

184. தேவரு முனிவருந் தரிசித் தேத்துமம்
மூவரு மியற்றுமுத் தொழிற்கு முன்னமே
மேவருந் திறல்பெறும் வேழா மாமுகன்
பூவரும் பதத்தையெப் போதும் போற்றுவாம்

(இ - பொ.) தேவர்களும், முனிவர்களும் தரிசனம் செய்து துதிக்காநின்ற (பிரம்ம-விஷ்ணு-ருத்திரராய) மூவர்களும் நடத்தும் (சிருஷ்டி, திதி, சம்மாரம் என்ற) முத்தொழிலுக்கும், அனாதியே வல்லமை கொண்டுள்ள ஆனைமாமுகனுடைய மலரடிகளை எப்பொழுதும் போற்றி வருவாம். (எ-று.)

(அ - ப.) மேவுதல் = விரும்புதல்.
திறல் = வல்லமை.

105. திருப்பைஞ்ஞீலிப் புராணம்

185. வானப்போ தகமுயன்மா னுடன்வளரம் புலியுமற்றோர் மானும் பூமே
லானப்போ தனை யுதவுந் திறலரியோ டுதித்ததுரந் தரியும் வேத
ஞானப்போ தனைவிடையும் வளர்கருணை மலைநயந்த நடன பாதத்
தானப்போ தகத்தினிரு சரணப்போ தகஞ்சிரமேற் றரித்து வாழ்வாம்.

(இ - பொ.) வாயுவேகமுடைய முயலும், மானும், இளஞ்சந்திரனும், கங்கையும், தாமரையிலுதித்த பிரம்ம தேவனைப் பெற்ற மகாவிஷ்ணுவின் கூடப் பிறந்த பார்வதியம்மனும், சிவஞானபோதமும், இடபவாகனமும் வளர்ந்தோங்கி மலைபோலுங் கருணையுடைய நடராச மூர்த்தியின் (இளங்கன்றாகிய) யானை முகக் கடவுளுடைய சரணகமலங்களைத் தலைமேல் தரித்துக்கொண்டு வாழ்வாம். (எ-று)

(அ - ப.) போதகம் = யானைக்கன்று.
போது + அகம் = தாமரை.

106. குளத்தூர்ப் புராணம்

186. திரசித்தியு முயர்வுந்திகழ் செங்கேழ்க்கம லப்பெண்
ணரசித்திரு வருளும்புகழ் மெய்ஞ்ஞானமு மணிசா
லூரசித்திர மணிமாளிகை யொளிருங்குள நகர்வாழ்
வரசித்திம தம்பாயிப வதனற்றொழு தடைவாம்.

(இ - பொ.) உறுதியும் பலனும், (உயர்வான) மரியாதையும், (செங்கமலத் துதித்த) இலட்சுமியின் கிருபா கடாட்சமும், கீர்த்தியும், மெய்ஞ்ஞானமும், அலங்காரமாக நடைபெற, நவமணிகளிழைத்த மாளிகைகள் சூழ்ந்த குளத்தூரில் வாழ்ந்து வரும் வரசித்தி விநாயகக் கடவுளைத் தொழுது மோட்சமடைவாம். (எ-று.)

(அ - ப.) திரம் = உறுதி.
சித்தி = பலன்.
இப வதனம் = வேழமுகம்.

187. காதலுறு தந்தையிப வுரிப்போர்வை
கொண்டுதன் மேற்கவித்தன் னோன்றன்
போதலர்ச்செஞ் சடைப்பிறைகொண் டிற்றமணிக்
கோட்டினொடு பொருத்திப் பூங்கை
யாதரவிற் கீழூன்றி யத்தியெனத்
தவழ்ந்துவிளை யாடி யீன்ற
நாதனுக்கு மம்பிகைக்கு நகைவிளைக்குங்
கரிமுகன்றா ணயந்து வாழ்வாம்.

(இ - பொ.) அன்புடைய அப்பனாகிய சிவபெருமான் போர்த்துக் கொண்ட யானைத் தோலைத் தன்மேல் போர்த்துக்கொண்டும், அன்னவன்றன் கொன்றை மலரணிந்த சடாபாரத்திலுள்ள மூன்றாம் பிறையை, ஒடிந்த தந்தக் கொம்புக்குப் பதிலாகப் பூண்டும், ஆதரவாகிய பூங்கரங்களைத் தரையில் ஊன்றிக்கொண்டு மலைபோலுந் தவழ்ந்து விளையாடிப் பார்வதிக்கும், பரமசிவனுக்கும் நகைப்புண்டாக்கும் யானை முகமுடைய விநாயகக் கடவுளுடைய திருவடிகளை நயமொழிகளால் பூசித்து வாழ்ந்து வருவாம். (எ-று.)

(அ - ப.) இற்ற = ஒடிந்த.
அத்தி = மலை, யானை.
அம்பிகை = கௌரி.

107. திருநாவலூர்ப் புராணம்

188. கங்கை வேணிய னுள்ளங் களிப்புறத்
திங்க ளானன வம்பிகை யூடறீர்ந்
தங்கை யாற்புல்ல வெள்ளிவெற் பாட்டுநற்
றுங்க வேழத் துணையடி யேத்துவாம்.

(இ - பொ.) சடையிற் கங்கை யணிந்த சிவபெருமானின் உள்ளங்களிக்குமாறு, மதிமுகம் படைத்த பார்வதி ஆசைதீர அங்கையாற் கட்டியணைத்துப் பெற்ற (வெள்ளியங்கிரியையும் ஆட்டியசைக்க வல்ல) யானைமுகவிநாயகனுடைய பாதங்களைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) வெள்ளிவெற்பு = வெள்ளியங்கிரி.

189. அற்பகலு நினைக்குமடி யவர்பிறவி யெனுமிருளை யகற்று ஞான
நற்பகலோ னெனுமொருவி நாயகனை யைங்கரனை நகுபொன் மேரு
விற்பகவ னுமைமகனை வேலவற்கு முன்னவனை விண்ணோர் போற்றுங்
கற்பகவி நாயகனைக் கைதொழுவார் வினைக்கடலைக் கடந்துய் வாரால்.

(இ - பொ.) இரவும் பகலுமாகத் தியானிக்கும் அடியார்களுடைய பிறப்பென்னும் மாயாவிருளைப் போக்கவல்ல ஞான சூரியப் பிரகாசனென்னும் ஓர் தற்பரனாய், ஐங்கரங்களையுடையவனாய், பொன்மயமான மேருவை வில்லாகக் கொண்ட பகவனுக்கும், பகவதிக்கும் புத்திரனாய், வேல் முருகனுக்கு மூத்த பிள்ளையாராய் விளங்கும், வானோர் வாழ்த்தும் கற்பக விநாயகக் கடவுளைக்

கைதொழுவார் யாவரும், இருவினைகளென்னும் அலைகள் மோதும் பிறவிக் கடலைத் தாண்டிப் பிழைப்பார்கள். (எ - று.)

(அ - ப.) அல்—பகல் = இராப்பகல்.

108. திருப்பனந்தாட் புராணம்

190. மருவிவரும் பிறவியெனும் வேலைதனைக் கலக்கிவினை வனத்தைச் சாடிக்
கருதரிய தமியன்மனத் திருந்துதமிழ் மதம்பொழியுங் கருணை யாள
னருமறையுந் தொழவரிய னைந்துகரன் றொந்திவயிற் றண்ண லான
பெருகுவளத் திருப்பனந்தா ளாண்டபிள்ளை யருட்பாதம் பேணி வாழ்வாம்.

(இ - பொ.) தொடர்ந்து வரும்படியான பிறப்பென்னும் கடலைக் கலக்கியும், இருவினையென்னும் காட்டையழித்தும், அடியேனுடைய இருதயத்தின் கண் இருந்து எண்ணற்கரிய முத்தமிழையும் மும்மதம் போலப் பொழியுங் கருணையாளனும், வேதங்களால் துதிக்கப்பட்டவனும், ஐங்கரனும், தொப்பையப்பனுமான, (வளப்பம் நிறைந்த) திருப்பனந்தாள் ஆண்ட பிள்ளையாருடைய திருவருட் பாதங்களைப் பூசித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) வேலை = கடல்.
வனம் = காடு.
சாடல் = அழித்தல்.
தமியன் = தனியன் (அடியேன்).
தொந்தி = தொப்பை.

109. காவேரிப் புராணம்

191. ஆனையோ ரெட்டு மாசையெட் டடைய
வடர்ந்தெதி ரானைக்கொம் பொசித்தோ
ரானையைப் புரந்தோன் கமடமா யளக்க
ரலைத்திட வச்செய லறிந்தே
யானையை யுரித்தோ னாணையாற் கடலோ
டாமையைத் துதிக்கையாற் கவர்ந்த
வானைமா முகவன் சரணபங் கயங்கட்
கன்புவைத் தினிதிறைஞ் சிடுவாம்.

(இ - பொ.) எண்டிசை யானைகள் எண்டிசைகளை அடைந்திருப்பவும், அடர்ந்தெதிர்த்த கய முகா சூரன் என்னும் யானையின் கொம்பையொடித்து, கஜேந்திரனைக் காத்த மகாவிஷ்ணு கூர்மாவதாரங் கொண்டு கடலைக் கலக்குகிறதைக் கண்டு, ஆனைத்தோலுரித்த பரமசிவன் ஆக்கினையால், அக்கூர்மத்தின் (ஆமையின்) ஓட்டைப் பிளந்து துதிக்கையிலேந்திய ஆனைமுகப் பிள்ளையாருடைய திருவடித் தாமரைகளை அன்பு செலுத்தி இனிமையாகத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) ஆசை = திசை.
ஒசித்து = ஒடித்து.
புரத்தல் = காத்தல்.
கமடம் = ஆமை.
அளக்கர் = கடல்.
அலைத்தல் = கலக்கல்
கவர்தல் = பற்றுதல்.

இதிகாசாதிகள்

110. சிவரகசியம்

192. பொன்னிமயப் பிடியானை தருமானை முகத்தானைப் பொருவி லானைச்
சொன்னயஞ் சேர்தாரகத்தி னுருவானை யன்பருளச் சோதி யானைச்
சென்னியிலா றுடையானைத் தந்தையெனப் படைத்தானைத் திகழோ ராறு
முன்னுமுகன் றுணையானை வல்லபையின் பத்தானை வணங்கி வாழ்வாம்.

(இ - பொ.) பொன்மயமான இமாசலத்துப் பிறந்த பார்வதி தரும் ஆனை முகனாய், ஒப்பில்லாதவனாய், ஓங்காரப் பிரணவ வடிவனாய், அடியார்கள் மனத்தில் ஒளி வடிவாய்த் திகழ்பவனாய், தலையில் கங்கையைத் தரித்த பரமசிவனைத் தகப்பனெனக் கொண்டவனாய், ஆறுமுகக் கடவுளுக்குத் துணைவனாய், வல்லபையின் மனோகரனாய் விளங்கும் விநாயகக் கடவுளை வணங்கியும் வாழ்த்தியும் வருவாம். (எ - று.)

(அ - ப.) பொருவல் = ஒப்பல்.
தாரகம் = பிரணவம்.
சென்னி = தலை.

193. பவளவரைச் சிகரமதிற் பயிறருவெண் பிறைபோலப் பணைக்கோ டோங்கத்
தவழருவி யெனக்கன்ன மததாரை பொழிந்திழியத் தாம மோலி
யுவமையில்சூ ரியருதித்தா லெனவொளிர வீற்றிருக்கு மொருசெஞ் சோதிக்
கவளயா னையன்முகத்துக் கணபதிசே வடிக்கமலங் கருத்துட் கொள்வாம்.

(இ - பொ.) பவள மலையின் உச்சியில் விளையாடும் இளஞ் சந்திரனைப் போன்ற திரண்டுருண்ட தந்தக்கொம்புகள் ஓங்கி நிற்கவும், தவழ்ந்தோடி வரும் படியான அருவி நீரெனக் கன்னமதம் பொழிந்து வழியவும், மணிமாலை யணிந்த முடியானது ஒப்பில்லாத (பல கோடி) சூரியர்கள் உதித்தாற்போலப் பிரகாசிக்கவுமாக எழுந்தருளியிருக்கும், ஒரு பரஞ்சோதியான யானைமாமுகத்துக் கணபதியின் செங்கமலச் சேவடிகளைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) சிகரம் = உச்சி.
தாமம் = மணிமாலை.
மோலி = முடி.

111. மகாபாரதம்

194. நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநா
ளேடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ.

(இ - பொ.) நெடிய கடல் சூழ்ந்த உலகத்தின்கண் வேதம் நாலாகவும், அதனொடு ஐந்தாம் வேதமாக நிலை நிற்கும்படியாக, அழியாத தவ வலிமை வாய்ந்த வேதவியாசர் மகா பாரதத்தைத் திருவாய் மலர்ந்தருளிய நாளில், மகாமேரு கிரியை ஏடாகவும், தந்தக் கொம்பையே எழுத்தாணியாகவும் கொண்டெழுதும் விநாயகப் பெருமானைச் சேவித்து அன்பு மிகப் பெறுவாம். (எ - று.)

(அ - ப.) ஐந்து என்று = ஐந்தாம் வேதம் என்று.
முனிராசன் = வியாசன்.
மாபாரதம் = மகா பாரதம்.

195. முருகார் மலர்த்தாம முடியோனை யடியார்மு யற்சித்திறந்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரு
மொருகோடி பூதேவ ருங்கைதொ ழுங்கோவை யுறவுன்னுவாம்.

(இ - பொ.) நறுமணம் கமழும் மலர்மாலை யணிந்த முடியினை உடையவனும், அடியார்கள் செய்யும் முயற்சிகள் கெடாமல் கைகூடச் செய்யும் ஆனைமுகமுடைய செழுமையான மலைபோன்றவனும், இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், ஒருகோடி வேதப் பிராமணர்களும், கரங்களைக் குவித்துத் துதிக்கும்படியானவனுமாகிய விநாயகக் கடவுளை மனத்தில் நன்கு பொருந்தச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) முருகு = நறுமணம்.
புருகூதன் = இந்திரன்.
பூதேவர் = பிராமணர்.

112. இரகுவம்சம்

196. உதையமா வலரி யெண்ணி லுதித்தன வொளியிற் றூய
சிதைவிலா நிலவுச் செக்கர்ச் செவ்வந்தி மெய்யார் தந்த
புதைகொண்மா மதத்த வாம்ப லானனப் புனிதப் பொற்றே
னிதையவா ரிசத்த தானா லெக்கலை மணவா தெற்கே.

(இ - பொ.) எண்ணில்லாத சூரியப் பிரகாசங்கள் (ஒருங்கே) உதித்தாலன்ன ஒளியுடன், சிதையாமல் நிலவிய செவ்வந்தி மலர் போன்று சிவந்த மேனியையுடைய பரமசிவன் தந்தருளிய (மறைவான மிக்க மதமுடைய) யானை முகக் கடவுளென்னும் பொன் வண்டு அடியேனுடைய இதயத் தாமரையில் படிந்ததானால், ஏழைக்கு எந்தக் கலைஞானம்தான் கைகூடி வராது? (எ-று.)

(அ - ப.) அலரி = சூரியன்.
நிலவு = நிலவல்.

செக்கர் = சிவப்பு.
செவ்வந்தி மெய்யார் = அந்தி வண்ணனாகிய சிவபெருமான்
புதை = மறைவு.
ஆம்பல் = ஆனை.
ஆனனம் = முகம்.
பொன்தேன் = பொன்வண்டு.
வாரிசம் = தாமரை.
மணவாது = கூடிவராது ?
எற்கே = எனக்கே

113. நைடதம்

197. தழைவிரி கடுக்கை மாலைத் தனிமுதல் சடையிற் சூடுங்
குழவிவெண் டிங்க ளிற்ற கோட்டது குறையென் றெண்ணிப்
புழைநெடுங் கரத்தாற் பற்றிப் பொற்புற விணைத்து நோக்கு
மழைமதக் களிற்றின் செய்ய மலரடி சென்னி வைப்பாம்.

(இ - பொ.) முன் பாரதம் எழுதுவதற்காக ஒடித்துவிட்ட தந்தக் கொம்பு குறையாயிருப்பதை யெண்ணி, கொன்றைப் பூமாலையைச் சூடிய பரமசிவன் சடையில் அணிந்த இளஞ் சந்திரனைத் தும்பிக்கையால் பிடித்து, அழகுதரப் பூண்டு கொள்ளும் (மழைபோலும் மதம் பொழியாநின்ற) விநாயகக் கடவுளின் சிவந்த மலரடிகளைச் சிரசில் முடித்துக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) கடுக்கை = கொன்றை.
புழைநெடுங்கரம் = தும்பிக்கை.

114. அரிச்சந்திர புராணம்

198. வையாம்பன் முகத்தானை மறலியையோ டத்துரந்து வாழ்வ தென்று
மெய்யாம்பன் முகத்தாலும் வேதத்து மாகமத்தும் விரித்த தென்றே
மொய்யாம்பன் முகத்தானைப் பொடியாகப் பொருதுவினை முடித்து நீண்ட
கையாம்பன் முகத்தானைக் காலையினு மாலையினுங் கருது வோர்க்கே.

(இ - பொ.) வலிய கயமுகா சூரனை வென்று, தேவர்கள் புளகிக்க, அவர்கள் துயர் தீர்த்த, நீண்ட துதிக்கையையுடைய யானைமுகக் கடவுளைக் காலை மாலை வேளைகளில் கருத்தாகப் பூசிப்பவர்களே கூரிய கோர தந்தங்களுடைய எமனை ஓடச் செய்து, என்றும் வாழ்வது சத்தியம். இது வேதாகமங்களில் பல விடத்தும் விவரித்துரைக்கப் பட்டதுமாம். (எ - று.)

(அ - ப.) வை - ஆம் - பல் = கூரிய பற்கள்.
மறலி = யமன்.
விரித்தது = விவரித்தது.
மொய் = முழுதும்.
ஆம்பல் = ஆனை.
பொடியாக = புளகமாக.
பொருது = வென்று.

115. தொல்காப்பியம்

199. தன்றோ ணான்கி னொன்று கைம்மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

(இ - பொ.) தோள்கள் நான்குடன் தும்பிக்கை ஒன்றுங் கூட்டி ஆக ஐங்கரமுடைய விநாயகக் கடவுள் (காடு வாழ்ந்ததாகக்) காட்டானை போலானாலும், திருவுருவத்தில் பெரிதும் சிறந்ததால் அன்பைச் செலுத்துவாய் நெஞ்சே. (எ - று.)

---

116. கல்லாடம்

200. திங்கண்முடி பொறுத்த பொன்மலை யருவி
கருமணி கொழித்த தோற்றம் போல
விருகவுள் கவிழ்த்த மதநதி யுவட்டின்
வண்டினம் புரளும் வயங்குபுகர் முகத்த
செங்கதிர்த் திரளெழு கருங்கடல் போல
முக்கண்மேற் பொங்கும் வெள்ளமெறி கடத்த
பெருமலைச் சென்னியிற் சிறுமதி கிடந்தெனக்
கண்ணரு ணிறைந்த கவின்பெறு மெயிற்ற
வாறிரண் டருக்க ரவிர்கதிர்க் கனலும்
வெள்ளைமதி முடித்த செஞ்சடை யொருத்த
னுடலுயி ராட வாடுறு மனலமுந்
தென்கீழ்த் திசையோன் றெறுதரு தீயு
மூழித் தீப்படர்ந் துடற்றுபு சிகையும்
பாசக் கரகம் விதியுடை முக்கோன்
முறிக்கலைச் சுருக்குக் கரம்பெறு முனிவர்
விழிவிடு மெரியுஞ் சாபவாய் நெருப்பும்
நிலைவிட்டுப் படராது காணியி னிலைக்கச்
சிறுகாற் றுழலு மசைகுழைச் செவிய
வாம்பன்முக வரக்கன் கிளையொடு மறியப்
பெருங்காற்று விடுத்த நெடும்புழைக் கரத்த
கருமிடற்றுக் கடவுளைச் செங்கனி வேண்டி
யிடங்கொண் ஞாலத்து வலங்கொளும் பதத்த
குண்டுநீ ருடுத்த நெடும்பா ரெண்ணமு
மெண்ணா விலக்கமொடு நண்ணிடு துயரமு
மளந்து கொடுமுடித் தனின்கட னுதலின்
வரியுடல் சூழக் குடம்பைநூ றெற்றிப்
போக்குவழி படையா துள்ளுயிர் விடுத்தலி
னறிவுபுறம் போய வுலண்டது போலக்
கடற்றிரை சிறுக மலக்குதுயர் காட்டு

முடலெனும் வாயிற் சிறைநடுவு புக்குப்
போகா துணங்குறும் வெள்ளறி வேமு
மாரணம் போற்றுநின் காலுற வணங்குதுங்
கான்முக மேற்றதுளை கொள்வாய்க் கறங்கும்
விசைத்த நடைபோகுஞ் சகடக் காலு
நீட்டிவலி தள்ளிய நெடுங்கயிற் றூசலு
மலமரு காலு மலகைத் தேருங்
குறைதரு பிறவியி னிறைதரு கலக்கமு
மென்மனத் தெழுந்த புன்மொழித் தொடையு
மருள்பொழி கடைக்கண் டாக்கித்
தெருளுற வைய முடிப்பையின் றெனவே.

(இ - பொ.) பிறையைச் சிரத்தில் தாங்கிய, பொன்மலையினின்றும் வீழ்கின்ற அருவியானது, நீலமணியைக் கொழிக்கின்ற காட்சிபோல, இரண்டு கவுள்களும் கொட்டின மதமாகிய நதியின் பெருக்கில் வண்டுக் கூட்டங்கள் புரளுதற்கிடமாகி விளங்குகின்ற புள்ளிகளோடு கூடிய முகத்தினையுடையோய்! செங்கதிரின் கூட்டம் எழுகின்ற கரிய கடல் வெள்ள மெறிந்தாற்போல மூன்று கண்களினிடத்தும் எழாநின்ற பெருக்காகச் சிந்துகிற மதநீரினையுடையோய்! பெரிய மலையின் உச்சியில் இளம்பிறைகிடந்தாற்போல, அருட் பார்வையுடைய முகத்தில் நிரம்பின அழகுபெற்ற கொம்பினை யுடையோய்! பன்னிரண்டென்னுந் தொகையையுடைய சூரியர்களது பிரகாசிக்காநின்ற கிரணாக்கினியும், வெண் பிறையைச் சூடின சிவந்த சடாபாரத்தையுடைய ஒப்பற்றவனாகிய சிவபெருமான் உடலுயிர் நடுங்கும்படி நடித்தற்கிடமாகிய பிரளய காலாக்கினியும், தென்கீழ்த் திக்கினைத் தனக்கிடமாக உடையோனாகிய தீக்கடவுள் (தன்னைச் சேர்ந்த எல்லாப் பொருள்களையும் எரிக்கிற நெருப்பும்) வருத்தாநின்று, உலகமுழுதும் பரக்கச் சிகையினையுடைய பிரளய காலாக்கினியும், உறிக்கயிற்றிற் றங்கிய கமண்டலத்தையும், வேதவிதிப்படியே தாங்கப்பெற்ற திரிதண்டத்தையும், முறிக் கலையின் சுருக்கினையும், தமது கையிற்றாங்கிய முனிவரது கண்கள் வெளிப் படுத்துகிற சினத்தீயும், சபித்தலையுடைய வாய்த்தீயும், தத்தம் நிலையி னின்றும் நீங்கிப் பரவா வண்ணம், தத்தம் காணியில் நிலைபெற்றிருக்கும்படி, சிறு காற்றுலவாநின்று அசையாநின்ற குழையை யணிந்த திருச்செவியினை யுடையோய்! யானையின் முகத்தினையுடைய அரக்கனானவன், தன் சுற்றத்தாருடன் தடுமாற, பெருங்காற்றினை வெளிப்படுத்திய நெடிய துளையையுடைய துதிக்கை யினையுடையோய்! செங்கனியை விரும்பி நீலகண்டத்தையுடைய கடவுளாகிய சிவபெருமானை இடமகன்ற இவ்வுலகத்தில் வலம் வந்த திருவடியுடையோய்! கடலினைப் புடைசூழப் பெற்ற பெரிதாகிய உலகிலுள்ளாரது எண்ணங்களையும் எண்ணப்படாத விலக்கத்தோடு கூடிய துன்பங்களையும், அளவிட்டுக் கொண்டு முடிவு செய்தல் உன் கடமையாதலால், காற்றினைத் தன்னிடத்தேற்ற துளையைக் கொண்ட வாயினையுடைய காற்றாடியையும், வேகமாகிய நடையோடு செல்லு கின்ற பண்டியினுருளையையும் நீளச் செலுத்தித் திணிவினால் தள்ளப்பட்ட நெடிய கயிற்றிற் பிணித்த ஊசலும், சுழற்காற்றும், பேய்த்தேரும் தாழ்த்தற்குரிய நிறைந்த பிறப்புத் தரும் மாற்றத்தையும், என்னுள்ளத்திற்றோன்றின புல்லிய சொற்றொடையினையும், அருள் மழையைப் பொழிகின்ற கடைக்கண் பார்வை

செலுத்தி இப்பொழுது, ஐயனே தெளிவு பொருந்த முடிப்பாயே என்று கருதி, நூலினால் கீற்றுக்களையுடைய தன்னுடம்பை வளையக் கூட்டினை யுண்டாக்கித் தான் போதற்குரிய வழியை உண்டாக்கிக் கொள்ளாது, அக்கூட்டினுள்ளே உயிர் விடுத்தலால், அறிவு புறம்போய கோற்புழுப்போல, கடலின் அலைகள் சிறுகும்படி கலங்குதற் கேதுவாகிய, துன்பத்தை யுண்டாக்குகிற, உடம்பென்கிற சிறை நடுவே புகுந்து வாயிலிற் செல்லாது வருந்துகின்ற வெள்ளறிவினை யுடையே மாகிய யாமும், வேதங்கள் போற்றுகின்ற உன் திருவடியை மிகுதியாகவணங்கா நின்றேம்.

தான் வெளிப்படும் வழியை யுண்டாக்காது தன் வரியுடலைச் சூழக் கூடொன்றை நூலால் பின்னி அறிவிழந்ததாய் உள்ளே உயிர் விடுத்தலினையுடைய புழுவைப்போல, அலை கடலுஞ் சிறிதென மயக்குந் துயரை விளைவிக்கின்ற உடலெனுஞ் சிறைச் சாலை நடுவுட்பட்டு, (சுழிமுனை) என்னும் வாயிலில் செல்லாது துக்கப்படும் சிற்றறிவுடையேமும், வேதங்கள் போற்றுநின்ற உமது திருவடிகளே தஞ்சமென்று வணங்குதும். (எ - று.)

(அ - ப.) கவுள் = கன்னம்.
*ஆறிரண்டருக்கர் = பன்னிரு சூரியர்.
பொறுத்த = தரித்த.
கொழித்த = ஒதுக்கிய.
உவட்டு = பெருக்கு.
புகர் = கபிலவண்ணம்.
எயிற்ற ! = கொம்ப !
தென்கீழ்த்திசையோன் = அக்கினி பகவான்.
சிகை = சுடர்.
குடம்பை = கூண்டு (முட்டை.)
நூல் தெற்றி = நூல் நூற்று.
உலண்டு = புழு.
ஆரணம் = வேதம்.
கறங்கு = காற்றுடி.
சகடம் = சக்கரம்.
ஊசல் = ஊஞ்சல்.
அலகை = பேய்.

117. திருத்தில்லை யமக வந்தாதி

201. கற்பகப் பாவடி வாரணம் பாற்கடந்தோன் செந்தமிழ்க்
கற்பகப் பாவடி வாரணங் கண்டவர்கோ னருள்வி
கற்பகப் பாவடி வாரணங்கார் மலர்க்காமொய் தில்லைக்
கற்பகப் பாவடி வாரணம் யான்பெறக் காட்டிடுமே.

---

* தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவசுவான், பூஷன், சவித்துரு, துவட்டன் என்பவர்.

(இ - பொ.) வலிமை பொருந்திய திரிபுரத்தினரின் மதிலை, கடலிற் படுத்துறங்கும் விட்டுணுவாகிய கூர்மை பொருந்திய அம்பினால் வென்றவனும், செந்தமிழ்க் கல்விக்கு உட்பாவாகிய அழகிய வேதத்தைச்செய்தருளிய திருஞான சம்பந்தர் முதலியோரின் தலைவனுமாகிய சிவபெருமான் அருளிய, வேறுபட்ட கிளைகளில் உண்டாகி மலர்களை உடைய சோலைகள் நிறைந்த, தெய்வங்கள் மிகுந்த திருத்தில்லையில் உள்ள கற்பக விநாயகர் யான் நலனடைய வழிகாட்டுவாராக. (எ - று.)

(அ - ப.) கற்பு = வலிமை பொருந்திய.
அகப்பா = மதில்
வார் = கடல்.
அண் = பொருந்திய.
வடிவம் பால் = கூரிய அம்பால்.
செந்தமிழ்க்கற்பு = செந்தமிழ்க்கல்வி.
அகப்பா = உட்பா.
வடிவு = அழகிய.
ஆரணம் = வேதம்.
கப்பு ஆ = கிளைகளில் உண்டாகி.
வடி = தேன்.
வார் = ஒழுகும்.
அணங்கு ஆர் = தெய்வங்கள் நிறைந்த.
மலர்க்கா = பூஞ்சோலை.

ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்

118. கற்பக விநாயகம்

202. பூமேவு முகமணியாய்ப் புகழ்க்கோடு குடஞ்சுட்டா
யாமேவு கடமுகலா யணிமேவு கரந்தருவாய்ப்
பாமேவு பதநிதியாய்ப் பழவடியர் மிடிதுரந்து
காமேவு பெருங்கருணைக் கற்பகக்கன் றினைத்தொழுவாம்.

(இ - பொ.) நாம் எடுத்த சரீர பந்தத்தைக் கழற்றத் தக்கதான, கை கண்ட பாடல்களையே இருநிதியாகக் கொண்டு, தொண்டர் குழாங்களுடைய வறுமையை நீக்கி யருளும், உலக ரட்சக முக முடையவனாய், கொடுந்தமிழ் நாட்டு மருத நிலத்தூராகிய குடங்கற்காவில் புகழ் கொண்டு விளங்கும் பெருங்கருணையை யுடைய கற்பக விநாயகரைக் கைதொழுவாம். (எ - று.)

(அ - ப.) கோடு = கொள்ளும்.
குடம் = குடங்கற்கா.
கடம் = சரீரம்.
உகல் = கழலல்.
மிடி = வறுமை.

119. பட்டீச்சுரப் புராணம்

203. பூமேவு குழைச்செவிதம் புடையினெழு கடாங்கவரும் பொருட்டு மேன்மேற்
றாமேவு வண்டரெலாந் துரப்பவகத் தொருகருவி தகக்கொண் டாங்கு
மாமேவு பொன்பொதிந்த காற்கவரி தூங்கியொளி வயங்க மேவும்
காமேவு மைந்தடக்கை யானைமுகப் பெருமானைக் கருத்துள் வைப்பாம்.

(இ - பொ.) கூர்மை மேவும் குழைந்த செவிகளின் வழி யுண்டாகும் மத தாரைகளைக் கிரகித்தற் பொருட்டுக் கவி வாணரெல்லாம் மேன்மேலுந் தாம் கோரிய (வீணையால்) தம்முள்ளன்பைச் செலுத்த, அதைத் தக்கபடியே, மிகுதியும் அழகு நிறைந்த விசிறி போன்ற செவியிடமாகக் கொண்டு, அசைந்தாடித் திருவருள் துணையான பாதுகாப்பை அடியார்களுக்குத் தரும் ஐங்கரனாகிய ஆனைமுகப் பெருமானைக் கருத்துள் வைப்பாம். (எ - று.)

(அ - ப.) பூ = கூர்மை.
கடாம் = மதம்.
வண்டர் = வாணர்.
பொன் = அழகு.
கால்கவரி = கவரிகால் = (விசிறிபோன்ற).
தூங்கி = அசைந்தாடி.

204. சீர்பூத்த பலபுவனத் தெவ்வுயிரு முனிவறத்தஞ் சிரமேற் கோட
லார்பூத்த நமதாணை யென்றெரிப்ப வானை விநாயகரென் றோர்பேர்
நீர்பூத்த குணத்தமைந்து வன்னியடிப் பொடிமூடு நெருப்பு மான
வேர்பூத்த செம்மேனி வெண்ணீற்றோட் டமர்பவர்தா ளிறைஞ்சி வாழ்வாம்.

(இ - பொ.) சிறப்பு வாய்ந்த பல கோடி யுலகத்து வாழும் எல்லாவுயிர்களையும் (இஷ்ட காமியார்த்தங்களைக் கொடுத்து இரட்சித்துக்) கொள்ளலும், (மீட்டும் சம்மரித்துப்) போக்கி நீக்கலும், நம்முடைய ஆக்கிஞா சக்கரமென்று பிரகாசிக்க, ஆனை விநாயக ரென்றொரு திருநாமம், திருவருளோடுங்கூடி யமையப் பெற்று, வன்னி மரத்தின் கீழ்க் கதிரவனை மறைக்கும் காரிருள் போன்ற திருமேனியுடன், விபூதி தூளிதராயிருப்பவர்தம் பாத சேவை செய்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) முனிவல் = நீக்கல்.
ஆணை = ஆக்கினை.
எரிப்ப = பிரகாசிப்ப.
வன்னி = வன்னி மரம்.

205. நாமதவா ரணங்குறித்த படிகொடுதீ வளர்த்துமென நவிலுந் தக்க
நாமதவா ரணங்குசிவ மிகப்பினென வுங்கொள்ளா நண்ணா மாற்றெண்
ணாமதலா ரணங்குமிறுந் தடப்பட்டீச் சரம்புகுந்து நலியச் செய்தா
ணாமதவா ரணங்குளிர்ப்பூந் தாளருள வின்பநல நண்ணி ணேமால்.

(இ-பொ.) வேதங்கள் கூறுகிறபடி வேள்வித்தீ வளர்ப்போம் என்ற தக்கனுடைய மகள் பார்வதியை மணந்தவரும் தம்மை மதியாது செய்த தக்கனது வேள்வியை அழிக்கச் செய்தவருமான சிவபெருமான் ஈன்றளித்த விநாயக பெருமானுடைய குளிர்ச்சி பொருந்திய திருவடிகளை நன்மைகளை நாடி வணங்குவாம். (எ - று.)

120. திருவரன்குளப் புராணம்

206. சீர்பூத்த நறியமண முகமுன்வழி படுமன்பர் தேவ ராவா
ரேர்பூத்த முகத்துநடுக் காட்டல் போலாது முகத்தியையு மோர்கை
வார்பூத்த நுனிக்காட்டி மகிழ்வுறீஇ யவர்வேண்டும் வரங்க ணல்கும்
கார்பூத்த சித்திமத குஞ்சரப்பொற் செஞ்சரணம் பணிந்து வாழ்வாம்.

(இ - பொ.) சீராகப் பூத்து நல்ல மணம் தரும் மலர்களால் முன்னதாகப் பூசித்து வழிபடும் அன்பர்கள் தேவர்களாகப் பிறப்பர். (அல்லாமலும்) நெற்றி முகத்துக்கு நேராகக் காட்டும் பாவனையாய்த் துதிக்கையின் நுனியைக் காட்டி (அத்துவிதமென்ன) மகிழச் செய்து, அவ்வடியார்கள் வேண்டும் வரங்களைத் தரும் சித்தி விநாயகருடைய செம்பொற் சரணங்களைச் சேவித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) நறியது = நல்லது.

121. சிவஞான போதம்

207. கல்லா னிழன்மலை—வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்—நல்லார் புனைவரே.

(இ - பொ.) அருள் வடிவாகிய கல்லால நிழலின்கண்ணே எழுந்தருளியிருந்து நந்தி எம்பெருமானுக்கு இந்நூலான் மலைவு தீர்த்தருளிய முதலாசாரியர் மேன்மேற் கருணை கூர்ந்தருளுதற் பொருட்டு, பொல்லாத பிள்ளையாருடைய ஞானசத்தி கிரியா சத்தி யென்னும் இரண்டு திருவடித் தாமரைகளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்தம்முடைய ஞானசத்தி கிரியா சத்திகட்கு வியாபகமாகக் கொண்டு தாடலை போல் அடங்கி நிற்பர். (எ - று.)

122. சிவஞான சித்தியார்

208. ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றருமொருவா ரணத்தின் றாள்க
ளுருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன் றேவென்னச் செய்யுந் தேவே.

(இ - பொ.) கடவுள் தானே, ஒரு கொம்பன், இருசெவியன், மும்மதத்தன், நால்வாயன், ஐங்கரத்தன், கங்கை நிலவு கொன்றை யிவற்றைச் சடையிலணிந்த பரமசிவன் தந்த விநாயகப் பெருமான் திருவடிகளை 108, 1008 என்று சொல்லப்படும் கணக்குப்படியே உரு செபித்து அன்போடுங் கூடி வணங்கி, இரவும் பகலும் இடைவிடாமல் தியானிப்பவர்களுக்கு, மிகுதியும் ஆவலைத் தரும் சத்திய லோகம், வைகுண்டங் கூடவா ஒரு செல்வம் என வெறுப்புண்டாகும். (எ - று.)

(அ - ப.) ஓவாது = இடைவிடாது.
அயன் = பிரமன்.
திருமால் = விஷ்ணு.

123. சிவப்பிரகாசம்

209. ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழஞுளு மறவாம
லளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

(இ - பொ.) ஒள்ளிய திருமேனியெல்லாம் மதநீர் பொங்கவரும் ஆனை முகத்தினுடைய சரணங்களை எந்நாளும் மறக்காமல் மணமுடைய மலர்களால் பூசிக்கும் அடியார்கள் உள்ளத்தை, பகிரங்கமாய் வலிமை பெற்ற இருவினை யானது கூடித் தொடர நினையாது. (எ - று.)

(அ - ப.) கழல் – சரணகமலம்.

---

124. திருவருட்பயன்

210. நேசத் தடியர் நினைந்துருகி நின்றிட்ட
வாசத் தளைகடக்க மாட்டாது—பாசத்
திருகோட்டு முக்கட் சிவபெருமா னீந்த
வொருகோட்டு நால்வா யுவா.

(இ - பொ.) பரந்த பாசத்திரியை யோட்டும் முக்கண்ணுடைய சிவபெருமான் தந்த (ஒரு கொம்பும் நான்ற வாயுமுடைய யானைமுக) விநாயகப் பெருமான், நினைந்துருகி நின்றிட்ட நேசத்தடியார்களுடைய உறைவிடமாகிய நெஞ்சகத்தை விட்டுக் கடக்க மாட்டார். (எ - று.)

(அ - ப.) உவா = யானை.

211. நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

(இ - பொ.) நல்ல (குஞ்சரக்கன்றாகிய) விநாயகப் பெருமானை நட்புக் கொண்டால், சகல கலாஞானமுங் கற்றுக் கொள்ளுஞ் சரக்கல்லவாம். (எ - று.) [எனவே விநாயகனுடைய அருள் மட்டும் இருக்குமானால் சகல கலைஞானமுந் தானே வரும் என்பதாம்.]

---

125. சங்கற்ப நிராகரணம்

212. திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி ம்ழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந் தேசுறு மெயிறெண்

கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்கதங் கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

(இ - பொ.) திருத்தமாகிய அரிய தவங்களை யனுட்டிக்கும் பல முனிவர்கள் அடங்கா மகிழ்ச்சியால் ஓயாமல் துதிக்கும் ஒப்பிலாத செவ்விய கபில நிறத்தோடுங்கூடி யெழுந்தருளிய, இளஞ்சந்திரப் பிறை போன்ற ஒரு பெருந்தந்தக் கொம்பைத் தழுவிய செவிகளும், மழைபோல் மதம் பொழியும் தும்பிக்கையும், வாளைப் போன்ற மூன்று கண்களும், நான்ற வாயும், பாசம், அங்குசம், தந்தக் கொம்பு, மாங்கனி இவை தாங்கும் நாற்கரங்களும், தோளணி, கடகம், இரத்தினாரம், மாணிக்கம் வைத்த நெற்றிச் சுட்டி, அரவாபரணம் இவை பூண்டு கொண்ட பெரிய தொப்பையும், குறுகிய தாள்களுமுடைய விநாயகக் கடவுளின் இரு பாதங்களையும் கருதி அறியாமையாலுண்டான துயரத்தை விட்டோமானால் பெரிய சுகமாம். (எ - று)

பண்டி = வயிறு.
அங்கதம் = தோளணி.
சுடிகை = (நெற்றிச்) சுட்டி.

213. செய்ய வுருவன் விநாயகன்றாள் சிந்திப்பாம்
மையலற வாய்க்கநல் வாக்கு.

(இ - பொ.) மங்களகரமான திருவுருவம் வாய்ந்த விநாயகனுடைய திருவடியை, நல்வாக்கு வாய்க்கவும், மாயாவிருள் நீங்கவும் சிந்தித்து வருவாம். (எ - று.)

(அ - ப.) செய்ய = மங்களகரமான.
மை = மாயாவிருள்.
அலற = அலறியோட.

214. எநாயகனே யென்னவிட ரெல்லாங் கடியும்
விநாயகனைத் தாள்பணிவாம் வீழ்ந்து.

(இ - பொ.) எமக்கு நாயகமாயுள்ளவனே என்று துதிப்ப, இடைஞ்சலெல்லாம் போக்கவல்ல விநாயகனுடைய திருவடிகளில் விழுந்து பணிவாம். (எ - று.)

(அ - ப.) எநாயகனே = எம் + நாயகனே.
கடியும் = நீக்கும்.

126. சிவானந்த மாலை

215. பீடுதருங் காளத்தி பேணுங் கடகளிறே
தேடுமிடம் வாடுமிடஞ் செல்லுமிட—நீடுபகற்
றுஞ்சந்தி யானேதுந் தோன்றாத முத்திவர
வஞ்சந்தி யானே யருள்.

(இ - பொ.) தேடக் கூடிய தலமும், செல்லக்கூடிய தலமுமாய் மிகுதியும் பெருமையைத் தருந் திருக்காளத்தியில் ஆசையைப் பெருக்கும் அஞ்சந்தி விநாயகமே! கங்குல் பகலற நின்ற வெல்லையில், ஒன்றும் தோன்றாமல் சும்மாயிருக்கும் முத்தியை (அடியேனுக்கு) அருளிச் செய். (எ - று.)

(அ - ப.) பீடு = பெருமை.
பேணும் = ஆசைதரும்.

127. ஞானாமிர்தம்

216. முக்கட் டிருகவுட்டு நால்வாய்த் துரகத்துச்
செக்கர்த் தடித்தடுத்த செஞ்சடைத்து—பக்கத்து
பூதத் தருநடத்து பொற்பித்தென் னுள்ளத்து
நாதத்து நின்ற நலம்.

(இ - பொ.) குதிரையைப் போன்ற செம்மை நிறமாய்த் தடித்தடுத்த செஞ்சடையனும், பேயோடாடியுமான பரமசிவன் அடியேனுடைய உள்ளத்தில் நலம் பொருந்தி நின்ற நாயகமாய் அலங்கரித்தது எதுவென்றால், கதுப்புகளுடைய நால்வாய் முக்கண் முதல்வனாய விநாயக மூர்த்தியே. (எ - று.)

(அ - ப.) துரகம் = குதிரை.
செக்கர் = செம்மை.
பொற்பித்து = சிங்காரித்து.
நாதம் = நாயகம்.

128. சைவசமயநெறி

217. நல்லார் தொழும்வெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துட்
பொல்லார்தாள் யாஞ்சூடும் போது.

(இ - பொ.) நல்லவர்கள் தொழும்படியான திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துள் (எழுந்தருளிய) பொல்லாப் பிள்ளையாருடைய திருவடிகளே அடியேங்கள் சூடிக்கொள்ளும் மலராகும். (எ - று.)

(அ - ப.) பொல்லார் = பொள்ளாப்பிள்ளையார்.
போது = மலர்.

218. அடியரிடர் தீர்த்தருளு மானைமுகன் பாதங்
கடிமலர்தூய்க் கைதொழுவாங் கண்டு.

(இ - பொ.) அடியார்களுடைய துன்பங்களைத் தவிர்த்து இரட்சிக்கும் ஆனைமுக விநாயகருடைய பாதங்களைத் தேடி மணமுள்ள மலர்களைக் கொண்டு பூசித்துக் கைகூப்பித் தொழுது வருவாம். (எ - று.)

(அ - ப.) இடர் = இடைஞ்சல்.
கடி = மணம்.

129. பரமததிமிரபானு

219. ஆனைமுகன் செம்பவள மெய்யனடி பணிவா
மூனமற ஞானமுதித் துள்.

(இ - பொ.) ஊனக்கண் மறையவும், ஞானக் கண் உதயமாகவும், உள்ளத்துள்ளே மெய்யனாகிய ஆனை மாமுகனுடைய செம்பவளம் போன்ற திருவடிகளைப் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) ஊனமற = ஊனக்கண் நீங்க (சரீரம் நீங்கவும்).

220. கரிமுகவன் செங்கமலத் தாளைக் கருத
வரியவர மீங்கெளிதி னும்.

(இ - பொ.) யானைமுக விநாயகனுடைய செந்தாமரை மலர் போன்ற பாதங்களைச் சிந்திக்க அரியபெரிய வரங்களெல்லாம் இகத்துக்கே யல்லாமல் பரத்துக்கும் எளிதில் உண்டாம். (எ - று.)

(அ - ப.) செங்கமலம் = செந்தாமரை.

130. இறைவனூற் பயன்

221. மலையான் மகள்பெற்ற வாரணத்தை வாழ்த்த
வெலையாம்வீ டேனையமூன் றும்.

(இ - பொ.) மலையரயன் மகளாகிய உமாதேவி பெற்றெடுத்த ஆனைமுகப் பிள்ளையாரை வாழ்த்திவர, அறம், பொருள், இன்பத்துடன் வீடும் கிடைக்குமாம். (எ - று.)

(அ - ப.) மலையான் = மலையரயன்.
மகள் = உமாதேவி.
எலையாம் = முடிவாம்.
வீடேனைய மூன்றும் = வீட்டுடன் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும்.

131. சிவராத்திரி கற்பம்

222. உலகம் புரிய வுமைபெற்ற வைங்கை
மலையினடி வாரஞ்சேர் வாம்.

(இ - பொ.) உலகத்தை இரட்சிக்கும்படி உமாமகேசுவரி ஈன்ற ஐங்கர விநாயகனுடைய திருவடிக்கு அன்பு பூண்டொழுகுவாம். (எ - று.)

(அ - ப.) புரிய = இரட்சிக்க, நடத்துவிக்க.
ஐங்கைமலை = ஐங்கரன்.

132. சோமவார கற்பம்

223. எல்லாந்தா மென்னவுறு மீச னிறைவியருள்
பொல்லார்நல் லாரெமக்கிப் போது.

(இ - பொ.) பார்வதியும், பரமசிவனும் அருளிய பொல்லாப்பிள்ளை யாராகிய நல்லவரே எம் போல்வார்க்கு இப்பொழுதுக்கு எல்லாமுமா மெனப் பட்டது. (எ - று.)

(அ - ப.) எல்லாம் = (என்றதால்) அஷ்ட ஐஸ்வரியம், ஆயுளாரோக்கியம், தனு, கரண, புவன, போகம், தர்மார்த்த காம மோட்சம் முதலானவுமாமென விரியும்.

133. வருத்தமறவுய்யும் வழி

224. செம்பவள மெய்யன் சிவன்சுத னைங்கரனை
நம்பவள மாமே நமக்கு.

(இ - பொ.) செம்பவளம் போலும் சிவந்த திருமேனியுடைய சிவபெருமானின் நன்மகனாகிய ஐங்கரக் கடவுளை நம்பி, பக்தி செலுத்திவர, நம் எல்லார்க்கும் பதவியுண்டாம். (எ - று.)

(அ - ப.) வளம் = பதவி.

134. உருத்திராக்க விசிட்டம்

225. செக்க ரிரவித் திருவுருவ ஞானைமுகன்
விக்கினங்கள் வீட்டுந்தன் மெய்யன்பர்க்—கெக்கண்ணுங்
காட்டு மமலன் கமலவடி தன்கண்ணா
லோட்டு மலமூலத் துரம்.

(இ - பொ.) செவ்விய சூரியப்பிரகாசம் போன்ற ஞானமே திருமேனியாக உடைய ஆனைமுக விநாயகன் தன்னடியார்களுக்கு யாதொரு துன்பமும் வரவொட்டாமல் போக்குபவன், எத்திசையினும் இரட்சித்துக் காக்கும் நிர்மலன், தன் பாத பங்கயத்தினால் மூல மல வன்மையையும் ஓட்டுபவன். (எ - று.)

(அ - ப.) விக்கினம் = துன்பம்.
மலமூலம் = மூலமலம் (ஆணவம்).
உரம் = திண்மை.

226. செய்யன் கரிமுகன்வெண் கோட்டன் றிகழைந்து
கையுடைய னன்ப ரிடர்கடிவான் — மையலினை
மாற்றுவான் பாதம் வணங்குவமெம் முள்ளத்துந்
தேற்றுவா மேலாஞ் சிவம்.

(இ - பொ.) மங்களகரனாய், யானைமுகனாய், வெண்தந்தக் கொம்பனாய், ஐங்கரனாய், அடியார்களுடைய துன்பங்களை நீக்குபவனாய், மாய்கையை மாற்ற

வல்ல விநாயக மூர்த்தியினுடைய பாதங்களை எம்முள்ளத்து அளவிலா ஆனந்தங் கொண்டு வணங்கி வருவாம். (எ - று.)

(அ - ப.) தேற்றல் = அதிகமாக்கல்.
சிவம் = ஆனந்தம்.

135. பஞ்சாக்கர மாலை

227. வாரம் பரிவுபெற வந்தித்து முப்பொழுதா
நேரம் பணிந்து நினைந்துருகி—யேரம்ப
னஞ்சுமுகச் சிந்துரனுக் காளானாற் சண்டன்மக
னஞ்சுமெழுத் தஞ்சுமர ணாம்.

(இ - பொ.) அழகிய ஆனைமுகனாய் ஏரம்பனான சுமுகாயனனுக்கு அன்பைப் பரிபக்குவமாகச் செலுத்தி, முப்போதும் வணக்கமாகப் பணிந்து நினைந்துருகி அடிமையானோமானால் எமனுடைய (அஞ்சு) பஞ்ச பூதங்களும் பயப்படும்படியான காவலாம். (எ - று.)

(அ - ப.) வாரம் = அன்பு.
பரிவு = பரிபாகம்.
சுமுகம் = சுமுகாயனம்.
சிந்துரம் = ஆனை
சண்டன் = எமன்
அரண் = காவல்.

136. சிற்றம்பல நாடி மாலை

228. செய்யபுகழ் மேனியனைத் தேவர் தொழுந்தேவை
மெய்யருளும் பொய்யா விநாயகனை—வையமெலாங்
காத்தானை யார்க்கு மிளையானைக் கந்தனுக்கு
மூத்தானை நாவே மொழி.

(இ - பொ.) மகாகீர்த்தி வாய்ந்த திருமேனியனாய், தேவர்களால் தொழப்படுந் தேவனாய், மெய்யாகவே திருவருள் துணையாகின்ற சத்திய விநாயகனாய், எல்லா உலகங்களையும் காத்தவனாய், எத்தகைய அசுரர்களுக்கும் இளைக்காதவனாய், கந்தனுக்கு மூத்தவனாய் உள்ள முன்னவனை நாவினால் துதி. (எ - று.)

(அ - ப.) வையம் - உலகம்.

137. அதிரகசியம்

229. மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங்
கரைகாண்பான் முதிர்ந்த நாலாம்
பாகமெனு மலர்கொண்டு பத்தியெனும்
புனலாட்டிப் பரிந்து சாத்திச்

சோகமெனப் பாவித்துத் துரியமெனும்
விளக்கேற்றிச் சோக நீங்கி
யாகமெனுங் கோயிலின்க ணறிவென்னுங்
கணபதிக்கே யன்பு செய்வாம்.

(இ - பொ.) மோக சாகரத்தைக்கடந்து, மோட்ச சாம்ராச்சியமென்னும் அக்கரையைக் கண்டு அடையும் பொருட்டு, நமது சரீர மென்னுங் கோவிலில் (எழுந்தருளிய) அறிவாகிய கணபதிக்குப் பத்திமையென்னும் நீரினால் அபிஷேகம் செய்தும், (முன்னோர் பாடி வந்த) சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என்னும் நான்கு பாகுபாடான மலர்களைக் கொண்டு வணக்கமாய் அலங்கரித்து, (சோடசோபசாரங்களுஞ் செய்து) களையாற்றிய பின்னர், சுத்த நிலையென்னும் விளக்கேற்றியதில் நமக்கு பிறப்பு இறப்புத் துன்பமில்லை யெனத் தள்ளி நிற்கப் பார்க்கும்படியான அன்பில் ஒழுகி வருவாம். (எ - று.)

(அ - ப.)			
	ஆகம்	= தேகம்.	
	பாகம்	= சொற்பாகுபாடு.	
	சுண்ணம்	= நாலடி.	செய்யுளில்
	சுரிதகம்	= எட்டடி.	செய்யுளில்
	வண்ணம்	= பதினாறடி	செய்யுளில்
	வரிதகம்	= முப்பத்திரண்டடி.	செய்யுளில்
	பத்தி	= பத்திமை.	
	துரியம்	= சுத்தநிலை.	
	சோகம்நீக்கி	= களைபோக்கி.	

138. தேவிகாலோத்திரம்

230. முத்திவிநா யகன்மனத்தின் முரணறவே
முடுகி நிலமுதல் விளக்கு
மத்திவிநா யகனெனவந் தவித்தையியல்
பனைத்துமழித் தரத்தை யாக்குஞ்
சத்திவிநா யகனுயர்ந்த தாணுவிநா
யகன்றேற்றந் தருமோ ரட்ட
சித்திவிநா யகன்மதுரைச் சித்திவிநா
யகனிருதாள் சிரத்தில் வைப்பாம்.

(இ - பொ.) முத்தியைக் கொடுக்கப்பட்ட விநாயகனும், மனத்தின் கலவரத்தைப் போக்கி, நிலவரமான திடத்தை விளக்கும் (பார்வதி தனய) விநாயகனும், அஞ்ஞானமென வந்த இருளனைத்தையுமழித்து, அறத்தை வளர்த்து வரும் வல்லபை விநாயகனும், உயர்ந்த பரமசிவன் (பிள்ளையாய் வந்த) விநாயகனும், அட்டமாசித்தியைச் சத்தியமாகத் தரும் விநாயகனுமான மதுரைச் சித்தி விநாயகனுடைய திருவடி யிணைகளைச் சிரமேற் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) மனமுரண் = கலவரம்.
நில முதல் = நிலவரம்.

அத்தி = பார்வதி. (ஆண்பால்—அத்தன்.)
அவித்தை = அஞ்ஞானம்.
சத்தி = வல்லபை.
தாணு = உருத்திரன்

139. சித்தாந்த சிகாமணி

231. மனவ னத்தின் மதமெனும் யானையைச்
சினவி நிற்குந் திகழிள வெண்மதிப்
புனைநு தற்கட் புராரி யளித்தரு
ணனைக வுட்களி நாகிள வேழமே.

(இ - பொ.) இளமை தங்கிய வெண்ணிலாவைச் சூடும் நெற்றிக் கண்ணனும் திரிபுரதகனன் பெற்றருள் மதத் தேன் களிக்கும் விநாயகக் கடவுள்தான் (நமது) மனமெனும் பெரிய மத்த யானையைக் கோபங் காட்டி வசமடக்கி நிற்கும். (எ - று.)

(அ - ப.) சினவி = கோபங்காட்டி.
வெண்மதி = வெண்ணிலா.
நுதற்கண் = நெற்றிக் கண்.
புராரி = புரமூன்றெரித்தோன்.
நாகு = இளமை.

140. வேதாந்த சூடாமணி

232. தருணமா துமைமுகத் தாம ரைக்கெழு
மருணனு மெனவுதித் தடியர் பாற்புரி
கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்
சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம்.

(இ - பொ.) உமாமகேசுவரியின் முகத் தாமரை மலர், உதயமாகும் சூரியனெனத் தோன்றி, அடியார்களிடத்தில் மதநீர்போல் பொழிகின்ற திருக்கருணையைக் காட்டும் ஆனைமாமுகனுடைய சரண பங்கயங்களைத் தலை மேற்கொண்டு விளங்குவாம். (எ – று.) உமையின் தாமரையைப் போன்ற முலைப்பாலை யுண்ணவெழும் ஆனையாம் எனினும் பொருந்தும்.

(அ – ப.) மாமுகன் = யானைமுகன்.
வாரிசம் = தாமரை.

141. சிவப்பிரகாச விகாசம்

233. எடாக்க ரத்தி லெழிலங் குசமகப்
படாக்க ருத்தறப் பாகரைத் தாள்களாற்
றடாக்க ழற்றித் தளைவிடுஞ் சிற்சிவக்
கடாக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்.

(இ-பொ.) அழகுபொருந்திய அங்குசத்தை எடுத்துத் தம்மிடத்து அகப்படாத கருத்து ஒன்றுமில்லை என்று சொல்லும்படி செய்து, பாகரைத் தாள்களாலே தடுத்து, அடியாருடைய தளையையும் கழற்றிவிடுகின்ற, சிற்சிவமாகிய சிவபெருமானின் புதல்வனுகிய மதயானையாம் விநாயகரைக் கருத்துள் நினைவாம். (எ-று.)

142. சதமணி மாலை

234. ஞான மாமத—யானை மேவுறின்
மான மாயையஞ் — சேனை யேர்டுமே.

(இ – பொ.) ஞானுந்தமாம் மதயானையாகிய விநாயக மூர்த்தி நமக்கு ஆதரவாகும் பட்சத்தில் மலமாயாகன்ம மென்னுஞ் சேனைகள் நம்மை விட்டோடி விடும். (எ - று.)

143. சிவஞான தீபம்

235. விரைமருவுங் கமலமலர் விரிஞ்சன் வாழ்வும்
விண்ணவர்கோ னரும்பதமு மிக்கோர் வாழ்வுந்
திரைமருவு நதிபதியிற் றிருவின் கேள்வன்
செல்வமுமா னுதபெருஞ் சித்தி யாவும்
பரையுதவுங் கரிமுகவன் செம்பொற் பாதம்
பற்றுகத் தம்போதப் பற்று நீங்கி
வரைவருமன் பினிற்றெழுமெய் யடியார் பாதம்
வணங்குமடி யாரடியார் மதித்தி டாரே.

(இ – பொ.) பராசபரையருளிய யானைமுகனுடைய செம்பொன்னடிகளையே பற்றுக் கோடான ஆதரவாகக் கொண்டு, தமது அஞ்ஞானமென்னும் பற்றை ஒழித்து, மலைபோலும் அன்பு பாராட்டித் தொழுதுவரும் மெய்யான அடியவர்கள் பாதங்களை வணங்கும், அடியார்க் கடியாராயுள்ளவர்கள் (ஒரு காலத்திலும்) மணங் கமழுந் தாமரை மலரிலுதித்த பிரம்ம தேவனுடைய சத்தியலோக வாழ்க்கையையும், தேவேந்திரனுடைய பொன்னுலக வாழ்க்கையையும், மிக்க சம்பத்துடைய குபேரபுரி வாழ்க்கையையும், அலைகளையுடைய கடலிற் பிறந்த இலட்சுமி காந்தனுகிய மகாவிஷ்ணுவின் பரமபத வாழ்க்கையையும் மதிக்க மாட்டார்களாம். (எ – று.)

(அ – ப.) விரை = மணம்.
விரிஞ்சன் = பிரமன்.
விண்ணவர்கோன் = இந்திரன்.
நதிபதி = கடல்.
திருவின்கேள்வன் = மகாவிஷ்ணு.
பரை = பார்வதி.
வரை = மலை.

144. பரமரகசிய சடத்தலம்

236. வாக்கொடு நினைவுக் கெட்டா வளரொளி யாகி யைந்து
பாக்கியத் தலைவி யாகும் பராபரை யிடத்திற் றோன்றி
நீக்கரும் களிப்பி னாலே நிலைபெற வுலகெ லாமுண்
டாக்கமும் மதத்தோ னெந்தை யடியிணை தலைமேற் கொள்வாம்.

(இ - பொ.) வாக்கு மனோதீதத்துக்கு எட்டாத பரஞ்சோதியாகியும், உருத்திராக்கம், தண்டு கமண்டலம், காவிப் புடைவை, சடை, விபூதியாகிய ஐந்து சம்பத்துக்களுக்கு முதல்வியாகி விளங்கும் பராபரையிடத்தில் தோன்றி, உலகத்தாரையெல்லாம் பேரன்பினாலே நிலைபெற்று வாழத் திருவருள் பாலிக்கும் எம் தந்தையாகிய மும்மத விநாயகருடைய திருவடியிணைகளைத் தலையாலே வணங்கி வருவாம். (எ - று.)

(அ - ப.) ஐந்து பாக்கியத் தலைவி = பஞ்சவண்ணக் கிளிக்குமாம்.

145. வீராகமம்

237. அரிய சஞ்சித மகலவும் — புரியு டம்பிட ரொழியவும்
விரியு நம்பவ மிரியவும் — கரிமு கன்கழல் கருதுவாம்.

(இ - பொ.) அற்பமாகிய சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் ஆயவை விட்டு நீங்கும்படியாகவும், இடர் புரிகின்ற உடம்பு ஒழியும்படியாகவும், மேல் வரும் படியான நமது பிறப்பு சாபல்யமாகும்படியாகவும் யானைமுகன் திருவடிகளைக் கண்டு கை தொழுவாம். (எ - று.)

(அ - ப.) சஞ்சிதம் = கட்டுப்பட்ட வினை.
பிராரத்துவம் = அநுபவிக்கும் கர்மம்.
ஆகாமியம் = வினைக் கீடான காயம்.

146. கொலை மறுத்தல்

238. இன்ப மாய தருதிடை யோங்கவுந்
துன்ப மாயது தூரத்து னீங்கவு
முன்ப ராபரன் மொய்குழ லோடணைந்
தன்பி னீன்றவோ ரானையைப் போற்றுவாம்.

(இ - பொ.) மனோரதமான நன்மைகள் மேன்மேலும் உண்டாகவும், இடையூறுகள் தூரத்தின்கண்ணே நீங்கவும், ஆதிகாலத்திலே பரமசிவன் பராசத்தியோடு கூடி அன்புடனே பெற்றருளிய ஒப்பிலாத விக்கினேசுரனாகிய யானையைத் துதிப்பாம். (எ - று.)

147. மகா ராஜா துறவு

239. தொய்யின் மலைக்கோ டிரண்டுக வான்றுதிக் கைமூன்று விழிதுரிசில்
துய்ய சைவமுதன் மதமுந் துலங்க வருமொண் பிடியுலக
முய்ய வுதவு மொருகளிற் றையுலவா விருத்த சைலத்தில்
வையம் பரவு மாழத்து வாழைங் கரனை மனநினைவாம்.

(இ - பொ.) குற்றமில்லாத சைவ சமயம் முதலாக அளவில் சமயங்களும் விளங்க வந்தருளும் முக்கண் மூர்த்தியும், ஆகாசமெல்லாம் மணம் வீசத் துதிக்கும் கலவைச் சாந்து அணிந்த தன பாரங்களுடைய பார்வதியம்மனும், உலகத்தார் உய்யும்படியாக உதவிய யானைமுகமாய், விருத்தாசலமென்னும் பேர் வழங்கும் மலையின் அடிவாரத்தில் வையகம் தொழுதுவர வாழும் ஐங்கரமூர்த்தியைத் தியானிப்பாம். (எ – று.)

(அ - ப.) தொய்யில் = கலவைச் சாந்து.
துரிசு = குற்றம்.
உக = சொரிய.
ஆழத்து = மலைஅடிவாரத்தில்.

148. அத்துவிதவுண்மை

240. பொங்கர வதுவு மிந்தும் புரிசடை யதனிற் சேர்த்தி
யங்கரந் தனிலி டத்தி லழகிய மானை யேந்துஞ்
சங்கரன் சேயெம் பாசந் தகர்த்தைந்து மொருங்க றுக்க
வைங்கரங் கொண்ட வாழத் தையனை வணக்கஞ் செய்வாம்.

(இ - பொ.) பொங்கிவரும் கங்கையும், பாம்பும், சந்திரனும் சடாபாரத்தில் சூடி, அழகிய கரத்தினிடமாக மான் (மழு) தாங்கும் சங்கரனுடைய மகனாய், எம்முடைய பாசபந்தங்களைப் பொடித்து, மாயை ஐந்தையும் ஒருங்கே அறுத்து வந்த ஐங்கரமுடைய மலை அடிவார விநாயகனை வணங்குவாம். (எ - று.)

(அ – ப.) ஐந்தும் = தமம், மாயை, மோகம், அவித்தை, அநிரதம்.
பொங்கு = பொங்குங் கங்கை.
அரவு = பாம்பு.
சேய் = பிள்ளை.
இந்து = நிலா.

149. பஞ்சதிகார விளக்கம்

241. முகமதியுங் கட்கடுவுங் கரவளையு முத்தரிய முகப டாத்துப்
புகர்மதமா மழகளிறுங் கரமலர்க்கற் பகத்தருவும் பொருவில் பாதத்
திகழுறுபங் கயநிதியுந் தோன்றுபரைப் பாற்கடலிற் சிறந்து தோன்று
முகலருமைங் கரவமுதை யுளங்குளிரப் பூரித்தே யுவகை பூப்பாம்.

(இ-பொ.) பாற்கடலிலே மதி, கடு, சங்கு (சங்கநிதி), முத்து, கற்பகமரம், பதுமநிதி முதலியவை தோன்றின. உமாதேவியாகிய பாற்கடலில் முகமாகிய சந்திரனும், கண்ணாகிய விடமும், கையில் உள்ள வளையல்களாகிய சங்கும், முத்

துக்களையுடைய முகபடாம் அணிந்த இளயானையாகிய விநாயகரும், கைகளாகிய கற்பகமும், பாதங்களாகிய பங்கயநிதியும் தோன்றுகின்றன வாதலால், உமா மகேசுவரி பாற்கடல் போன்றவள். அத்தகைய பாற்கடலில் தோன்றிய அமுதம் போன்றவர் ஐந்துகரத்து ஆனைமுகராகிய விநாயகர். அந்த விநாயகரை மனங் குளிரப் பூசித்து மகிழ்வோம். (எ-று.)

(அ-ப.) பரை - மேலான தெய்வம், உமாதேவி.

242. கவுட்குழிமா மதகுதிறந் தருண்மதநீர்ப் பாய்ச்சிக்
கருதுறுமெய் யடியருளப் புலத்தஞ்சக் கரமா
நவப்பெருவித் திட்டதனி னெழுமன்பா முளையை
நசைவிடயக் கிளிகணறுக் காதவகை காத்திங்
கவக்களைகட் டருண்ஞானப் பயிரேற்றி யென்றும்
யானெனுமா ணவவேழ மணுகாது துரத்தி
யுவப்புறுமெய்ச் சிவபோகம் விளைவிக்குங் களிற்றை
யுறவுமனக் கூடத்திற் பிரிவறவைத் திடுவாம்.

(இ - பொ.) குளிர்ந்த கதுப்பின் மதகைத் திறந்து, அருளென்னும் மதநீரைப் பாய்ச்சி, கருதுகின்ற மெய்யடியார்களுடைய உள்ளமாகிய நிலத்தில் பஞ்சாட்சரமென்னும் நட்பாம் பெரிய விதைகளை விதைத்து, அதினின்றெழும் அன்பென்னும் முளையை விஷய வாசனைகளென்னும் தீங்கிழைக்கும் வெட்டுக் கிளிகள் நறுக்கிப் பாழாக்காத வண்ணங் காத்து, (களை பிடுங்கி நாற்று நட்டு) அருளென்னும் ஞானப் பயிரை விளையச் செய்து, யான் எனது என்னும் அகங்கார மமகார யானை நெருங்காமல் துரத்தி, இன்பத்தைத் தரும் மெய்யாகிய சிவ போகம் விளைவிக்காநின்ற விநாயகப் பெருமானைப் பிரியாமல் மவுனமாகவே தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) புலம் = நிலம்.
அஞ்சக்கரம் = பஞ்சாட்சரம்.
நவம் = இணக்கம்.
கிளிகள் = வெட்டுக் கிளிகள்.
அவக்களை கட்டு = தீமையாகிய களை பிடுங்கி.

150. ஒழிவிலொடுக்க உரைக் காப்பு

243. நிம்ப நிழற்பா — லும்பன் முகத்தான்
செம்பது மத்தா — ணம்பு கருத்தே.

(இ - பொ.) மனமே! வேப்ப மர நிழலின்கீழ் எழுந்தருளிய யானைமுக விநாயகருடைய செந்தாமரைபோலுந் திருவடிகளை நம்பித் தியானித்து வருவாயாக. (எ - று.)

(அ - ப.) நிம்பம் = வேம்பு.
உம்பல் = யானை.
பதுமம் = தாமரை.

151. வைராக்கியசதக உரைக் காப்பு

244. முக்கணிறை தருகரியை முன்னடத்திப் பின்னதன்ருட்
பக்கமறைந் தேகுநர்வெம் பாசவிக ணாசமுற
மிக்கவமர் விளைத்திளையா வீரரெனப் பூரணவூர்ப்
புக்கிணையில் பரானந்தப் பூவையையு மேவுவரால்.

(இ - பொ.) முக்கண் மூர்த்தியாகிய பரமசிவம் தந்தருளிய விநாயக மென்னும் யானையை முன்னே நடக்கவிட்டு, அதன் பின்னங்கால்களின் பக்கமாக நடந்து சென்று பூசிக்கப் பட்டவர்கள், பாசபந்தமென்னும் பகை நாசமடையும்படி மிகுதியான சமர் செய்து, வீரரெனச் சொர்க்கலோக மடைவதேயல்லாமல், ஒப்பில்லாத பரமானந்த பதவியையும் அடைவார்கள். (எ - று.)

(அ - ப.) இகல் = பகை.
அமர் = சமர்.
பூரணவூர் = வீர சொர்க்கம்.
புக்கு = புகுந்து.
பரானந்தம் = பரமானந்தம்
பூவை = பதவி
மேவல் = அடைதல்.

245. நிம்ப நிழற்களி — றம்பொன் மலர்த்தாள்
நம்புது முத்திந — லின்பம் வரற்கே.

(இ - பொ.) முத்தி வீடாகிய பேரின்பம் வருவதற்கே, வேம்படி விநாயகரின் அழகிய பொன்போன்ற மலரடிகளை நம்பிப் பூசித்து வருதும். (எ-று.)

---

152. வைராக்கியதீப உரைக் காப்பு

246. ஆரண முகம்புகழ் — வாரணந் துதிசெயக்
காரண சுகபரி — பூரணம் வருமே.

(இ - பொ.) வேதாகமங்களிலே கொண்டாடத்தக்க விநாயகக் கடவுளைத் துதி செய்துவந்தால், சுக பரிபூரணமான காரணங் கைகூடி வரும். (எ - று.)

---

153. அவிரோதவுந்தியார் உரைக் காப்பு

247. சமரபுரி மாநிம்பத் தண்ணிழற்பா லும்ப
லமரர் தொழவிருந்த தன்றித்—திமிரமலம்
போக்கியெம துள்ளின்பப் பூரணமா யெவ்விடத்துந்
தேக்கறிவு மாயிருந்த தே.

(இ - பொ.) திருப்போரூரின்கண் எழுந்தருளிய வேம்படி விநாயகம் தேவர்களால் தொழப் பெற்றதல்லாமல், எம்முடைய ஆணவ மலத்தையும் போக்கி, உள்ளம் எங்கணும் பரிபூரணமா யறிவுக் கறிவாய் நிறைந்திருந்தது. (எ-று.)

(அ - ப.) சமரபுரி = திருப்போரூர்.
திமிரம் = இருள்.
தேக்கறிவு = பூர்த்தியான அறிவு.

154. நிஷ்டானுபூதி

248. அரியானை யயன்மாலுக் ககண்டபே ரொளியானைத்
தெரியானை யன்பிலர்தந் தேகமன வாக்கவற்றிற்
குரியானை யன்பர்தமக் குயர்பெரியா ளீன்றெடுத்த
பெரியானைக் கணபதியைப் பிறங்கியபொற் பதம்பணிவாம்.

(இ - பொ.) பிரம்ம விஷ்ணுக்களுக்கு அருமையானவனாய், அகண்டிதாகாரச் சுயம்பிரகாசனாய், அன்பில்லாதவர்களின் மனோ வாக்குக் காயங்கட் கெட்டப்படாதவனாய், அன்புடையவர்களுக்கு உரிமையானவனாய், பெரியம்மையாகிய பார்வதி பெற்றெடுத்த பெரும் யானையான கணபதியின் பெருமை பொருந்திய பொன்னடிகளைப் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) தேக மனவாக்கு = மனோ வாக்குக் காயம்.
பிறங்கிய = பெருமை பொருந்திய.

155. சிவ புண்ணியத் தெளிவு

249. பழகிய பதித்துவப் பான்மை யெய்தவு
முழுகிய பசுத்துவ முற்று நீங்கவு
மொழுகிய மும்மதத் தொளிகொண் ஞானமா
ரழகிய பிள்ளையா ரடிகள் போற்றுவாம்.

(இ - பொ.) பழகிவந்த பதிஞானத் தன்மையடையவும், வினையின் முழுகிவிட்ட பசுத்துவம் முழுதும் நீங்கி விடவும், மும்மதமொழுகிய ஓங்கார ஞான வடிவாம் அழகிய பிள்ளையாருடைய திருவடிகளைப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) பதித்துவம் = பதிஞானம்.
பான்மை = தன்மை.
பசுத்துவம் = பசுஞானம்.

156. உபநிடதம்

250. மெய்யுடைய வடியார்மேல் விருப்புடையான்
கருப்பூர விளக்குப் போலென்
பொய்யுடைய வருள்போதப் பொருளுடையா
னருளுடையான் பொறியைந் தாலு
மையுடைய மனத்தாலு மயக்குடையார்
மதங்களைத்தா மதங்க ளாக்குங்
கையுடைய முகமுடையா னகமுடையான்
றனைக்கருத்தி விருத்தல் செய்வாம்.

(இ - பொ.) மெய்யான அடியார்கள்மேல் விருப்பமுடையவனும், கற்பூர தீபம்போல, அடியேனுடைய நான் என்னும் பொய்வேடம் உடைபட்டு நீங்க அருளும் உபதேசப் பொருள்களையுடையவனும், கருணாகரனும், ஐம்பொறிகளாலும், தீயமனத்தாலும், மயக்குடையவர்களுடைய மதக்கோட்பாடுகளைத் தாமத குணத்துக்குப் பாத்திரராக்கும் கன கரமுடையவனும், முகமலர்ச்சியுடையவனும், உள்ளன்புள்ளவனுமான விநாயகப் பெருமானைக் கருத்திலிருத்திப் பூசை செய்வாம். (எ – று.)

(அ - ப.) பொய் = வேடம்.
பொறி = ஐம்பொறி.
மை = மாசு.

சித்திபுத்திகள் வணக்கம்

157. விநாயக புராணம்

251. கருணைமதம் பொழிமுகத்துக் கணேசரவர்
தமக்கறிவுந் தொழிலு மான
வருளெனுமுண் மையையெவரு மறியவவ
ருமையினவ தரித்த ஞான்று
மொருமுனியோம் பியதழலி னவதரித்த
ஞான்றுமுட னாகித் தோன்றித்
திருவுளத்தின் வழிநிற்குஞ் சித்திபுத்தி
யெனுமிவர்தாள் சென்னி சேர்ப்பாம்.

(இ - பொ.) அருள் மதம் பொழியும் முகத்தையுடைய விநாயகப் பெருமானுக்கு அறிவுந் தொழிலுமான அருள் உண்மையை யாவரும் அறிய அப்பெருமான் உமையினிடந் தோன்றியபோதும், ஒரு முனிவன் செய்த யாக குண்டத்தினிடம் தோன்றியபோதும், தொழிலும் சித்தியுமான சத்திகள் உடன் தோன்றி அவர் திருவுள வழி நிற்கும் அச்சித்தி புத்தி யென்னும் இவர்கள் திருவடிகளைச் சிரமேற் கொண்டு வணங்குவாம். (எ–று.)

(அ - ப.) ஞான்று = போது.
தழல் = யாகத்தீ.
சென்னி = தலை.

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் பகுதி

பரமசிவ வணக்கம்

1. கந்த புராணம்

252. திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
யருவந் தனையு முருவத்தையு மன்றி நின்றா
னொருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம். (1)

(இ - பொ.) செல்வமிக்க பழமையான இந்நிலவுலகத்தாருடன், வானுலகத்துள்ளாருந் துதித்து, விசேட வழிபாடியற்றியும் தரிசித்தற்கேலாத தன்மையடைந்து, அருவத் தன்மையும், உருவத் தன்மையும் நீங்கி விளக்கும், ஒப்பற்ற பரமசிவத்தின் திருவடிகளை மனத்திலிருத்துவாம். (எ - று.)

---

2. தேவாங்க புராணம்

253. ஆதிநடு வந்தமின்றி யலர்தலைப்பற் பலபுவன
மீதினுமல் குயிர்தொறும்பூ விரைமணிவா ளுரைபொருள்போன்
றோதியமா மறைத்தொகைக்கு உணர்வரிதா யுறைந்தபரஞ்
சோதிதிரு வருளையுன்னித் தொடர்மனத்தி னிடர்தவிர்ப்பாம். (2)

(இ - பொ.) முதலிடை யீறில்லாமல் விரிந்த இடத்தையுடைய பலப் பலவாகிய உலகங்களெவ்விடத்தும் நிறைந்த ஆன்மாக்களெவற்றின்கண்ணும், மலரின் மணமும், மணியினொளியும், சொற்களின் பொருளும் ஆகிய இக்குணங்கள் அவ்வப் பொருளினின்றும் நீங்காமையை ஒத்து, (தமது திருவருளால்) சொல்லியருளிய பெருமையினையுடைய நான்கு வேதங்களுக்கும், (உணர்வு) அறிதல் முடியாதாகி அறிவாகி எழுந்தருளிய மேன்மையாகிய சிவபிரானுடைய மங்கலமாகிய அருளைத் தியானித்து, ஐம்பொறிகளின் வழியாகப் புலன்களைப் பற்றுகின்ற மனத்தின் கண்ணுள்ள அஞ்ஞானமாகிய துன்பத்தை ஒழிப்போம். (எ—று.)

254. ஊனாகி யூனு ளுயிரா யுயிர்தோறு மாகி
வானாதி யான பொருளாய் மதியாகி வெய்யோன்
றானாகி யாண்பெண் ணுருவாகிச் சராச ரங்க
ளானான் சிவன்மற் றவனீள் கழற்கன்பு செய்வாம். (3)

(இ - பொ.) சரீரங்களாகியும், அச்சரீரங்களுள் வசிக்கும் ஆன்மாவாகியும், அவ்வான்மாக்கள் தோறும் வசிக்கும் பரமான்மாவாகியும், ஆகாய முதலாகச் சொல்லும் ஐம்பூதங்களாகியும், சந்திராதித்தராகியும், ஆண் பெண்

வடிவங்களாகியும், அசையும் பொருள் அசையாப் பொருளாக விளங்கும் சிவ பெருமானது பெருமைமிக்க திருவடிகளுக்குப் பத்திமை புரிவாம். (எ—று.)

(அ - ப.) சரம் = அசையும் பொருள்.
அசரம் = அசையாப் பொருள்.

255. பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம். (4)

(இ - பொ) பிறத்தலும், இறத்தலும், மாறுபடுதலும், மறத்தலும், நினைத்தலும், உருவெடுத்தலும் ஆகிய இவையனைத்தையும் நீக்கலும், நீக்காதிருத்தலும், மற்றுமுள்ள தன்மைகளும் பொருந்தாத மேன்மையுடைய சிவபிரானது திருவடிகளைச் சிரசிற் சூடுவாம். (எ - று.)

256. பூமலர் மிசைவரு புனித னுதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம். (5)

(இ - பொ.) அழகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மதேவன் முதலியோர் அறிதற்கரிய ஒப்பற்ற முழுமுதற்றன்மை வாய்ந்து, சிறந்த வேதத்திற்கு முதலாகிய பிரணவத்திற்கு ஓருருவமாகிய சிவபிரானது அழகிய செந்தாமரை மலரினையொத்த திருவடிகளைத் துதிப்பாம். (எ—று.)

(அ - ப.) புனிதன் = தூயவன்.

257. பங்கயன் முகுந்தனும் பரமென் றுன்னியே
தங்களி லிருவருஞ் சமர்செய் துற்றுழி
யங்கவர் வெருவர வங்கி யாயெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம். (6)

(இ - பொ.) பிரம்மனும் திருமாலும் தாம் தாமே பரம்பொருளென்று கருதி, இருவரும் போர் புரியுமிடத்தில், அங்குள்ள அவ்விருவரும் அச்சம் எய்தும்படி, அக்கினி மலையாய்த் தோன்றும் சிவபிரானது தாமரை மலர்போலுந் திருவடியைத் துதி புரிவாம். (எ—று.)

(அ - ப.) பங்கயன் = பிரமன்.
முகுந்தன் = விட்டுணு.
அங்கி = அனல்.
புங்கவன் = சிவபெருமான்.

258. காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
மாண்புடை யோனுமாய் வலிகொள் வான்றொடர்
பூண்பதின் றுய்நயம் புணர்க்கும் புங்கவன்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம். (7)

(இ - பொ.) காண்பான் முதலிய மூவிதத் தன்மைகளையும் காட்டுபவராயும், பெருமை அமைந்தவராயுமிருந்தும், தம்மைப் பந்திக்கும்படி தொடக்குடைமை

இல்லாராய், சர்வான்மாக்கட்கும் பாலிக்கும் நிரதிசயானந்தமுடையவராகிய சிவபெருமானது அதி தூரத்தில் விளங்கும் அழகிய பஞ்சகிருத்திய நடனத்தைத் துதிப்பாம். (எ - று.)

---

3. அருணகிரிப் புராணம்

259. பூமீது பயில்வானும் புனன்மீது துயில்வானும் புவனி மாது
நாமீது திகழணங்கு நாரணியும் பணிந்தேத்த நயப்பான் சாதந்
தோமீது துடைமினிது துடைத்தற்குச் சுருதிசொலு நீதி யேது
வாமீது புரிமினெனு மருணகிரி யமலனடி பணிவா மன்பால். (8)

(இ - பொ.) பிரம்மாவும், விட்டுணுவும், பூமிதேவியும், நாமகளும், நாராயணியும் பணிந்து கொண்டாடும்படியாக, ''பிறவிப் பெருங் குற்றத்தைத் துடைமின்கள். ஈது துடைத்தற்கு வேத சிவாகமங்களிலே நயப்பாகச் சொல்லும் அறநெறிகளைச் செய்து வாருங்கள்'' என்னும் திருவண்ணாமலைச் சிவபிரானுடைய திருவடியை அன்பாகப் பணிவாம். (எ—று)

(அ - ப.) பூமீது பயில்வான் = பிரம்மன்.
புனல் மீது துயில்வான் = விட்டுணு.
நாமீது திகழ் அணங்கு = சரஸ்வதி.
சாதம் = பிறப்பு.
தோம் = பொல்லாப்பு.
சுருதி = வேதம்.

260. பளிங்கனைய மேனியனைப் பால்பவள
மைகனகம் படிக மென்ன
விளங்குமுக மைந்துவிழி மூவைந்து
முடையானை வேணி தன்னி
லிளம்பிறையு மணிந்திலங்குஞ் சதாசிவனைப்
பதமிரண்டை யிருதோ ளானை
யுளங்குளிர வருணகிரிச் சாரலினா
லயத்திலங்கத் துன்னு வாமே. (9)

(இ - பொ.) பளிங்கு போன்ற திருமேனியனாய், பால், பவளம், மை, படிகம், கனகம் என விளங்கும்படியான ஐம்முகமுடையவனாய், பதினைந்து திருநேத்திரங்கள் உடையவனாய், சடாபாரத்தில் இளம் பிறையைச் சூடித்துலங்கும் சதாசிவனாய், பதாம்புயங்கள் இரண்டுடையவனாய், இரண்டு திருக் கரங்கள் உடையவனாய், திருவண்ணாமலைத் திருவாலயத்தில் (எழுந்தருளியிருக்கும்) சிவலிங்க மூர்த்தியை உள்ளங் குளிர்ந்து துதிப்பாம். (எ—று.)

(அ - பு.) ஐம்முகம் = ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்.
இலிங்கம்-3 = பெண்—ஆண்—அலியெனும் பெற்றியினதால் ஸ்ரீலிங்கம், புல் லிங்கம், நபும்ச லிங்கம் என மூவகைப்படும்.

261. புகழும்பெரும் புலவர்க்கிரு நிதியின்னருள் புரியு
மகிழும்படி சிவலோகமும் வழங்குந்திட மண்ணை
யகழுந்திரு மாலுக்கரி தாகும்மென துள்ளே
திகழுந்திரு வண்ணாமலைப் பெருமானடி சிறந்தே. (10)

(இ - பொ.) (அடி முடி தேடிய அவதாரத்து) மண்ணை யகழ்ந்து தேடிய விட்டுணுவுக்கும் அரியதாய், அடியேனுடைய உள்ளக் கமலத்தில் பிரகாசிக்கும் திருவண்ணாமலைச் சிவபெருமானுடைய சிறந்த திருவடிகள், பெரும் புலவர் சிகாமணிகளுக்குப் புகழும்படியான சங்கநிதி பதுமநிதி இரண்டும் கனிந்தருள் புரிந்து, (இன்னும்) மகிழ்ச்சி தரும்படியான சிவலோகமுந் தரும். (எ—று.)

(அ - ப.) இருநிதி = சங்க நிதி, பதும நிதி.

4. திருவிளையாடற் புராணம்

262. வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுத மூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி யாடு மறைச்சிலம் படிகள் போற்றி. (11)

(இ - பொ.) ஐந்து உட் புலன்களையும் வென்றொழித்தவருடைய உண்மையை அறிந்த உள்ளங்களிலெல்லாஞ் சென்று, அவருள்ளத்திலே (சிவானந்தமாகிய)அமுதத்தைப் பொழிகின்ற திருவருட்செயல் (அடியேனைக்) காக்க. வெள்ளி மலை போலும் இடப வாகனத்தின் மீது ஆரோகணித்துக் காட்சியளித்தருளும் திருவருட் கோலங் காக்க. அம்பலத்தினிடத்திலே மாறியாடியருளும் வேதங்களாகிய சிலம்பணிந்த திருவடிகள் காக்க. (எ—று.)

(அ - ப.) புலன் = ஐம்புலன்கள்.
மன்று = வெள்ளியம்பலம்.

263. பூவண்ணம் பூவின்மணம் போலமெய்ப் போத வின்ப
மாவண்ண மெய்கொண் டவன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம். (12)

(இ - பொ.) பூவும், பூவினிறமும், பூவின் மணமும் அபேதமாயிருத்தல் போலச் சத்து சித்து ஆனந்தமே தமது திருமேனியாகக் கொண்டருளிய சிவபெருமான் தமது சத்தி பேதங்களைத் தாங்கிப் பிரம்மன், விட்டுணு, உருத்திரன் என்னுந் திரிமூர்த்திகளும், தமது திரு முன்னர்ச் சிருட்டி, திதி, சங்காரமென்னும் மூன்று தொழில்களையும் இயற்றச் சலனமின்றி விளங்கும் கடவுள் ஆதலின், அப்பெருமானது திருவிளையாடல்களாற் பிறவியாகிய வினையை ஒழிப்பாம். (எ—று.)

264. பூவி ணாயகன் பூமக ணாயகன்
காவி ணாயக ணாதிக் கடவுளர்க்
காவி நாயக னங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம். (13)

7

(இ - பொ.) தாமரை மலரில் வீற்றிருக்கின்ற தலைவனாகிய பிரம்மதேவன், பூமி தேவிக்குக் கணவனாகிய திருமால், கற்பகச் சோலைக்கு அதிபனாகிய இந்திரன் முதலிய தேவர்கட் கெல்லாம் உயிராக விளங்கும் மகாதேவனும், அழகிய கயற்கெண்டை போலுந் திருவிழியையுடைய மீனாட்சியாகிய மகாதேவியாருக்குக் கணவருமான சொக்கலிங்கப் பெருமானது சிவந்த திருவடியைத் துதி செய்வாம். (எ—று.)

(அ - ப.) பூவின் நாயகன் = பிரம்மன்.
பூமகள் நாயகன் விட்டுணு.
காவின் நாயகன் = இந்திரன்.

265. சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட
சுந்தரனை வணக்கஞ் செய்வாம். (14)

(இ - பொ.) சடை முடியை மறைத்து, ஒளி வீசும் நவரத்தினக் கிரீடமணிந்து, மணம் தங்கிய அழகிய கொன்றை மாலையை நீக்கி, வேப்ப மலர் மாலை சூடி, விடம் பொருந்திய நாகாபரணத்தை விலக்கி மாணிக்க மிழைத்த பிரகாசங்தங்கிய பொற்பூணணிந்து, இடபக் கொடியை விடுத்து, மீனக்கொடிதாங்கி, மலயத்துவச பாண்டியனுக்கு மருமகனாக, மீன் போன்ற கண்களையுடைய தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் புரிந்து, உலக முழுவதையும் அரசு புரிந்த சோமசுந்தரக் கடவுளைத் துதி செய்வாம். (எ—று.)

(அ - ப.) நறும் = மணக்கும்.
தணந்து = நீங்கி.
தொடை = மாலை.
கலன் = ஆபரணம்.
வழுதி = பாண்டியன்.
மடவரல் = பிராட்டி.

---

5. சேது புராணம்.

266. பூந்தவிசி னிருந்தபிரான் முதலோர் காணப்
புண்டரிக மகள்கொழுநன் புகழி லங்கை
வேந்தனுயிர்ப் பழிகழுவு முகத்தால் யார்க்கும்
விடையவனே யுடையவனும் வேத வாய்மை
யாந்தரங்கம் வெளிசெய்வா னனைவ ரோடு
மணைந்துகந்த மாதனத்தி லருச்சித் தேத்து
மேந்துபுனற் சடிலமுடி யிராம நாத
னிணையடிச்செந் தாமரைக ளிறைஞ்சி வாழ்வாம். (15)

(இ-பொ.) பதுமாசனத்தில் இருந்த பிரம்ம தேவன் முதலானோர் காண, (பங்கயவல்லியான) சீதாப் பிராட்டியின் கணவனான இராமன் இலங்கா புரிக்கிறையவனாகிய இராவணனுயிர் போக்கிய பிரம்மகத்தி தோஷத்தால் இலட்சுமணர் முதலானவர்களுடன் புறப்பட்டுக் கந்தமாதன பருவதத்தை அடைந்து, பூசனை செய்தேத்திப் போற்றும் கங்காதரனான இராமலிங்கனாய், எவர்க்கும் வேதாகம இரகசியத்தை உபதேசிக்க விடை மேல் வந்து தரிசனந்தருபவனுடைய செந்தாமரைத் திருவடியிணைகளைச் சேவித்து வாழ்வாம். (எ—று.)

(அ-ப.) பூந்தவிசு = பதும ஆசனம்.
புண்டரிக மகள் = பங்கயவல்லியான சீதை.
கொழுநன் = கணவன்.
இலங்கை வேந்தன் = இராவணன்.
ஆந்தரங்கம் = அந்தரங்கம்.

6. திருப்பரங்கிரிப் புராணம்

267. உலகெ லாநிறைந் துள்ளும் புறம்புமா
யிலகு பேரொளி யின்பமுந் துன்பமும்
விலகி நின்ற விமலன்ப ரங்கிரித்
தலைவன் பாதந் தலைமிசை யேற்றுவாம். (16)

(இ-பொ.) எல்லாவுலகங்களும் பரிபூரணமாய் நிறைந்து, உள்ளும் புறமும் விளங்கும் பேரொளியும், இன்பமுந் துன்பமும் இல்லாத விமலனுமான திருப்பரங்கிரித் தலைவனுடைய சீர்பாதங்களைத் தலைமேற் கொள்வாம். (எ—று.)

7. திருவாரூர்ப் புராணம்

268. பூமேவு திருமடந்தை பொன்முகத்தா மரைமலரப் புவிவி ளங்க
நாமேவு சுருதியிசை முனிஞிமிறு ஞானமண நனியுண் டார்ப்பக்
காமேவு தபனியநாட் டமரர்மனக் கவலையிருட் கங்கு னீங்கத்
தேமேவு பொழிலாரூர்ப் புற்றிடங்கொண் டெழுசுடரைச் சிந்தை செய்வாம்.(17)

(இ-பொ) நாவினால் பாடும் தாளராகத்திற் கிணங்க யாழிசை வல்ல தும்புரு நாரதர் வாசிக்கும் கானாமிருத ஞானம் மிகுதியாக ஒலிக்க, கற்பகச் சோலை சூழ்ந்த பொன்னாட்டுத் தேவர்கள் மனக்கவலை நீங்கவும், பங்கயவல்லியாகிய இலட்சுமியின் பொற்றாமரை முகம் மலர்ந்ததென்று சொல்லும்படியாய்ப் பூலோகம் விளங்கி வாழவும், பூங்கா வனங்கள் நிறைந்த திருவாரூரில் புற்றிடங் கொண்ட ஈச்சுரரைச் சிந்திப்பாம். (எ—று.)

(அ-ப.) இசை முனி = தும்புரு நாரதர்.
ஞிமிறல் = மீட்டி யொலித்தல்.
ஆர்ப்ப = ஒலிப்ப.
தபனியம் = தமனியம் (பொன்).

269. கார்பொருவுங் கருங்கூந்தற் செவ்வாய்வெண்
ணகைப்பச்சைக் கன்னி யோடுந்
தார்கமழ்பூங் காந்தளந்தோட் குமரனொடு
மணிச்சிங்கா தனத்து மேவிச்
சீர்பரவும் வான்புலவர் நினைந்தனயா
வையுநல்கிச் சிறப்பின் வைகும்
வார்புனல்சூழ் வயற்கமலைத் தேவர்கள்சிந்
தாமணியை மனத்துள் வைப்பாம். (18)

(இ - பொ.) மேகத்தைப் பழிக்காநின்ற கரிய கூந்தலும், சிவந்த வாயும், வெண்முத்த நகையும் (கூடிய) பச்சிளங்கிள்ளையான பார்வதியோடும், மணமுடைய கார்த்திகைப் பூ மாலையை அணியுந் தோள்களையுடைய முருகனோடும் மாணிக்கச் சிங்காதனத்தில் வீற்றிருந்து, செவ்வனே வழிபடும் மகத்துவம் பொருந்திய (அகத்தியர் முதலான) புலவர்கள் கோரிய எல்லா வரங்களையும் கொடுத்துச் சேமமாக வைத்திருக்கும், நீர் வளஞ் சூழ்ந்த வயல்களையுடைய திருவாரூர் (தெய்வலோகத்து) சிந்தாமணித் தியாகரைத் தியானிப்போம். (எ—று.)

(அ - ப.) பொருவும் = ஒவ்வும்.
வெண் நகை = வெண்ணகைப் பற்கள்.
பச்சை = பச்சிளங்கிள்ளை.
காந்தள் = கார்த்திகை மலர்.
குமரன் = முருகன்
மணி = மாணிக்கம்.
வான்புலவர் = தெய்வப் புலவர்.
கமலை = திருவாரூர்.
சிந்தாமணி = சிந்தாமணித் தியாகர்.

8. இலிங்க புராணம் பூருவகாண்டம்

270. சீர்பூத்த முத்தொழிலுந் திறம்பாது நின்றியற்று
மேர்பூத்த முத்தேவு மியாமேயென் றிசைப்பதுபோற்
போர்பூத்த முத்தலைவேல் பூங்கமலக் கரத்தேந்துங்
கார்பூத்த மிடற்றிறைவன் கனைகழற்றாள் வணங்குவாம். (19)

(இ - பொ.) சிருட்டி, திதி, சம்மாரமாய செயல்கள் மூன்றும் தவறாதபடி நின்று செய்து வரும் பிரம்ம, விஷ்ணு, உருத்திரராய (தெய்வங்கள் மூன்றும், யாம் தாமேயேன்று பொருந்தச் சொல்வது போல், (போர்க்குரித்தாகிய) சூலாயுதத்தைப் பூங்கமலக் கரத்தில் ஏந்தும் நீலகண்டனாகிய பரமசிவனுடைய திருவடிகளைச் சேவிப்பாம். (எ—று.)

(அ - ப.) திறம்பாது = தவறாது
இயற்றும் = இயக்கும்.
முத்தலைவேல் = சூலம்.
மிடறு = கண்டம்.

ஷ உத்தரகாண்டம்

271. சீர்கெழு முமையாள் சிறுமருங் கொசிப்பத்
திரண்டவெம் முலையொடு மிகலி
யேர்பெற நின்ற தெனவுளத் தெண்ணி
யெறிகதிர்ப் பசும்பொன்மால் வரையை
வார்சிலை யாக விருகடை குழைத்த
மதிமுகி ழணிந்தவார் சடையோன்
காரிருள் கழியக் கதிர்விடு பசும்பொற்
கழலிணை சென்னியிற் புனைவாம். (20)

(இ - பொ.) உமாமகேசுவரியின் சிற்றிடையொடியும்படி, திரட்சியான தனபாரங்களோடு மாறுபட்டு அழகு பொருந்த நின்றதெனத் திருவுள்ளத்தில் எண்ணி, பசும்பொன் கதிர் எறியும் மகாமேருமலையை நீண்ட வில்லாக இரண்டு பக்கங்களையும் வளைத்த, பிஞ்சு மதி சடா மகுடப் பெருமானுடைய வீர கண்டை யணிந்த திருவடிகளை நமது மாயாவிருள் மறையச் சிரமேற் பூண்பாம். (எ - று.)

(அ-ப.) மருங்கு = இடுப்பு.
ஒசிப்ப = ஒடிய.
இகலி = பகைத்து.
இருகடை = இரண்டு ஓரங்கள்

9. கூர்ம புராணம் உத்தரகாண்டம்

272. சீர்கெழு மமிர்தந் தெய்வ மடந்தையர் நாக லோகத்
தேர்கெழு மகளிர்க் கீயப் பணாமணி யிமையோர் நாட்டு
வார்முலை யவர்க்கு நாக மடந்தையர் வழங்கச் செம்பொன்
மேருவிற் குழைய வாங்கும் விண்ணவற் போற்றல் செய்வாம். (21)

(இ-பொ.) தெய்வலோகத்துப் பெண்கள் (நாகலோகத்து) நாக கன்னிகைகளுக்குத் தேவாமிர்தம் பங்கிட்டது போலவும், (கைம்மாறாய்) நாகலோகத்துப் பெண்கள், தெய்வலோகத்துப் பெண்களுக்குச் சிரோமாணிக்கங்களைக் கொடுத்தது போலவும், செம்பொன் மயமான மேருகிரியைச் சேரவளைக்கும் சிவ பெருமானைப் போற்றுதல் செய்து வருவாம். (எ-று.)

(அ-ப.) தெய்வ மடந்தையர் = தேவ கன்னிகைகள்.
பணாமணி = சிரோமணி.
நாகமடந்தையர் = நாக கன்னிகள்.

10. காசிகாண்டம்

273. சீர்பூத்த செழுந்தரங்கத் தீம்புனன்மந்
தாகினிதண் டேனார் கொன்றைத்
தார்பூத்த செஞ்சடையி லணிந்துமதன்
மேல்விழைவு தணியா னாகிக்

கார்பூத்த விருவிசும்பிற் கங்கைநதி
சூழ்கிடந்த காசி வாழு
மேர்பூத்த தனிமுதலி னிணையடிப்பூங்
கமலமல ரேத்து வாமே. (22)

(இ-பொ). குமிழ்களெடுத்துச் சிற்றலைகளை வீசுஞ் சுவை நீருடைய கங்கையைக் குளிர்ச்சி பொருந்திய தேனரும்பும் கொன்றைப் பூ மாலையணிந்த சடாபாரத்தி லணிந்து கொண்டிருந்தும் அக்கங்கையின் மேல் கொண்ட காதல் தணியாதவனாய், மேகங்கள் படர்ந்து விண்மாரி பொழியும் மணிமுத்தா நதி வளஞ் சூழ் காசியம்பதியில் வாழ்ந்து வரும் விசுவநாதருடைய துணை பாத பதுமங்களை ஏத்தி வருவாம். (எ-று.)

(அ-ப.) தரங்கம் = அலை.
மந்தாகினி = கங்கை.
விழைவு = காதல்.
விசும்பு = விண்.

11. வாயு சங்கிதை உத்தர காண்டம்

274. ஆடகப் பசும்பொ னணிபெற வணிந்த
வலர்மலர்ப் பூவணை யதனி
லூடிய வுமையா ளூடநீர்த் தருள்வா
னொளிதிகழ் பூஞ்சிலம் போடு
பாடக மணிந்த சீறடிப் பஞ்சி
யொளியினாற் பனிமதி சிவப்பத்
தோடவிழ் கொன்றை மவுலிதாழ்த் திறைஞ்சுஞ்
சுடர்மழு வண்ணலைத் தொழுவாம். (23)

(இ-பொ.) மலர்கள் பரப்பிய இலவம் பஞ்சு மெத்தையில், தங்கத்தாலிழைத்த ஆபரணங்களை யணிந்து, ஊடிய உமையவளின் பிரிவைத்தவிர்த்துக்கூடி முயங்கியருளுஞ் சந்தர்ப்பத்தில், செம்பொற் சிலம்பும், பாடகமும் அணிந்த பஞ்சின் மெல்லடிப் பங்கயத்தின் ஒளியால், பனிமாமதி சிவக்கும்படியாக இதழ் விரிந்த கொன்றைப் பூ மாலை யணிந்த முடியைத் தாழ்த்தி வணங்கும்படியான, மழுவாயுதமுடைய பரமசிவனைத் தொழுது வருவாம். (எ-று.)

(அ-ப.) ஆடகம் = பொன்.
ஊடிய = பிணங்கிய.
ஊடல் = பிரிவு.
தோடு = பூவிதழ்.
மவுலி = முடி.

12. மச்சபுராணம்

275. மாமறையின் முழுமுத லாய்வள ரொளியா மயமா யன்பர்
தாமகிழு நுண்ணுணர்வாய்ப் பூரணமா யகிலசரா சரங்க ளாகிப்
பூமலிபைந் துணர்க்கடுக்கை மதிநதிதாங் கியசடிலப் பொருளின் செய்ய
தேமருவு சததளப்பூஞ் செழுங்கமலப் பொற்பாதஞ் சிந்தை செய்வாம். (24)

(இ-பொ.) வேதாகமங்களின் முழு முதலாய், வளரொளியாய், ஆனந்த மயமாய், அன்பர்கள் தாம் மகிழும் நுட்பமான அறிவாய், பரிபூரணமாய், அண்ட சராசரங்களுமாகி, கொன்றைப் பூங்கொத்தும், சந்திரனும், கங்கையும் சடையில் தாங்கிய பரம்பொருளின் செவ்விய மணம் நிறைந்த நூற்றிதழ்த் தாமரைப் பொன்னடிகளைச் சிந்தித்து வருவாம். (எ-று.)

(அ-ப.) மயம் = வியாபகம்.
அகிலம் = அண்டமெலாம்.
பூமலிபைந்துணர் = பூங்கொத்து.
கடுக்கை = கொன்றை.
சடிலம் = சடை.
பொருள் = பரம்பொருள்.
சததளம் = நூறு இதழ்.

13. சங்கரநாராயணர் கோயிற் புராணம்

276. நீர்கொண்ட செழுஞ்சடைமே னிலவுமிழ்வெண்
பிறைவயங்க நெடுவான் பூத்த
வேர்கொண்ட தாரகையி னிடையிடையே
தவளமுகை யீன்று தோன்றுங்
கார்கொண்ட புன்னைவனங் காமுற்று
வாழ்கருணைக் கடலை மல்லற்
சீர்கொண்ட சீராசைத் திருநகர்வாழ்
சிவக்கொழுந்தைச் சிந்தை செய்வாம். (25)

(இ-பொ.) நெடிய ஆகாயத்தில் அழகுடன் பூத்திடும் நட்சத்திரங்களின் இடையிடையே பளிச்சுப்பளிச்சென்று புன்னை மலர்கள் அரும்பிப் பூக்கும் சிங்காரங் கொண்ட புன்னை வனத்தில் களிப்புடன் வாழ் கருணையங் கடலாய் மிகுதியுஞ் சீர்கொள் சங்கர நாராயணர் கோவிலில் எழுந்தருளும் சிவக்கொழுந்தைச் சிந்தித்து வருவாம். (எ-று.)

(அ-ப.) தாரகை = நட்சத்திரம்.
தவள முகை = வெண்மொக்கு.
மல்லல் = மிகுதி.

14. தக்ஷிணகைலாச புராணம்

277. சீர்கொண்ட கருமுகிலுஞ் சதுர்வேதச்
செம்முகிலுஞ் சிறந்து பேண
நீர்கொண்ட செஞ்சடையி னிமிரரவுங்
கூனிலவு நிரந்து சூழத்
தார்கொண்ட திருமார்பில் வெண்ணூலும்
பசுங்கொடியுந் தயங்கத் தோற்று
மேர்கொண்ட கயிலைமலை யொருமுதல்வ
னிருசரண மிறைஞ்சி வாழ்வாம். (26)

(இ-பொ.) நீலமேக சரீரனாகிய விட்டுணுவும், செம்மேனியனாகிய சதுர்வேதனும் விமரிசையாகப் போற்றிவர, நீரணிந்த செஞ்சடையில் படமெடுத்த பாம்பும், வளைந்த நிலவும் நிறைந்து சூழத் திருமார்பில் பூணூல் மாலையும், பசுங்கொடியினளாகிய பார்வதியும் மகிழும்படி தோற்றும், உயரமான கயிலாய மலை வாசனாகிய பரமசிவனுடைய இரண்டு சரணங்களையும் இறைஞ்சி வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) கருமுகில் = விஷ்ணு.
செம்முகில் = பிரமன்.
கூன் = வளைவு.
நிரந்து = நிறைந்து.
வெண்ணூல் = பூணூல்.
பசுங்கொடி = பார்வதி.

15. பிரபுலிங்க லீலை

278. பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன் கைகான் முடங்கு பொறியிலித
னாவா யொழுகிற் றெனவுலக மளந்த மாலு நான்முகனுங்
காவா யெனநின் றேத்தெடுப்பத் தானேவந் தெங்கர தலத்தின்
மேவா வமர்ந்த மாமணியைத் தொழுது வினைக்குவிடை கொடுப்பாம். (27)

(இ-பொ.) மலைகள் பொருந்திய நெடிய மரக் கொம்பினது நுனியின் கண்ணே தங்கிய பசிய தேனானது, தன்னைப் பெறத் தகுதியுடையவனுக்குக் கிடைக்காமல், கைகளுங் கால்களுமுடங்கிய அறிவில்லாதவனது நாவினிடத்துத் தானே வந்து ஒழுகினாலதுபோல, உலகமளந்த மகாவிஷ்ணுவும், நான்முகனும், அடியேங்களைக் காத்தருளுவாய் என்று பெறுதற்குரிய வழியிலே நின்று துதி செய்யாநிற்க, அவரிடத்தில் செல்லாமல் தம்மைப்பெற முயலுதற்குச் சாதனங்களில்லாத, எமது உள்ளங்கையினிடத்து விரும்பி எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கத்தைத் தொழுது, எம்மைப் பிறவியில் அழுத்துகின்ற கருமத்தை விட்டொழிப்போம். (எ-று.)

(அ-ப.) கோடு = கொம்பு.
மாமணி = மாணிக்கம்.

16. திருக்கூவப் புராணம்

279. நீர்கொண்ட சடையொடுநம் பெருங்காமத்
தழலவிப்ப நிற்கின் றானைக்
கூர்கொண்ட கனன்மழுமா னாண்மையும்பெண்
மையுமாய கூற்றிற் கேற்பச்
சீர்கொண்ட வலனிடங்கொ ணாயகனைப்
புகலியிறைச் செந்த மிழ்ப்பூந்
தார்கொண்ட திருவிற்கோ லப்பெருமான்
றனை யிதயத் தவிசின் வைப்பாம். (28)

(இ-பொ.) நீரணிந்த சடாபாரத்தினோடு நமது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆய ஆறுவித விகாரமாம் நெருப்பை அவித்துத் தணிக்கின்றவனாய், பெண் ஆண் என்னுங் கூறுபாட்டிற்கேற்ப, சிறந்த வலக்கரத்தில் மானையும், இடக்கரத்தில் மழுவாயுதத்தையும் தாங்கினவனாய், சீகாழி—திருஞான சம்பந்த மூர்த்தியின் செந்தமிழ்ப் பாமாலையைப் பூண்ட திருக் கூவத்தில் கோலங்கொண்ட சிவபெருமான்றன்னை நமது இருதயாசனத்தில் வைத்துப் பூசிப்பாம். (எ-று.)

(அ-ப.) அழல் = அனல்.
மழு = கனல்.
கூற்று = கூறுபாடு.
புகலி – சீகாழி.
திருவு = திருக் கூவம்.

17. விருத்தாசலப் புராணம்

280. திருமாலு நான்முகனுந் தேவர் கோவுந்
தேவர்க ளுமியாவர் களுஞ்சிந் தையாலு
மருவாய மறையாலு மளவை யாலு
மளக்கரிதா யகண்டிதமாய் நின்ற மூர்த்தி
யுருவாய கிரிவடிவா யனந்தங் கோடி
யொளியுடைய கொடுமுடிக ளாகி நின்ற
பெருவாழ்வைத் திருமுதுகுன் றுடையான் றன்னைப்
பெருங்கருணை யாளனையாம் வணங்க லுற்றாம். (29)

(இ-பொ.) பிரம்மா, விட்டுணு, இந்திரன், மற்றுமுண்டான தேவர்கள் யாவரும், சிந்தையினாலும், வேதாகமத்தினாலும், பிரமாணத்தினாலும் அளந்து பார்த்தற்கரிதான அகண்டிதாகாரப்பொருளாய் நின்ற பெருங்கருணையாளனாய் மலையுருவ வடிவமாய்க் கோடானு கோடிப் பிரகாச முள்ள சிகரங்கள் தெரியும் பெரிய வாழ்வு தருகின்ற திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியவனை, யாங்கள் வணங்க லுற்றனம். (எ-று.)

(அ-ப.) அளவை = பிரமாணம்.
கொடுமுடி = சிகரம்.
திருமுதுகுன்றம் = விருத்தாசலம்.

18. நல்லூர்ப் புராணம்

281. திருவளர் சடைமேற் பான்மதிக் கொழுந்துந்
தேனவிழ் கடுக்கையுந் திகழு
மருவள ரளக மரகதக் கொடியாண்
மன்னிவாழ் வுறுமிடப்புறமுங்

கருவள ரெனது பவப்பிணி யகலக்
கடிகொள்வில் வாடவி தனில்வாழ்
பொருவரு நல்ல நாயக மூலப்
பொருட்பதாம் புயம்பணிந் திடுவாம். (30)

(இ-பொ.) சந்திரப் பிறையும், தேனரும்பிய கொன்றைப் பூங்கொத்தும், மேற்பக்கமாய் வளர்ந்த சடாபாரமும், மருவளர் அளகபாரந் திகழும் மரகதக் கொடியாளாகிய பார்வதி மன்னி வாழ்ந்திடும் வாம பாகமும் சிறப்பாகக் கொண்டு அடியேனது கருவளரும் பிறவிப் பிணியை நீக்கும் பொருட்டு, வில்வக் காடாகிய திருநல்லூரின்கண் எழுந்தருளும் மூல நாயகனாகிய பரம்பொருளின் பதாம் புயங்களைப் பணிந்து வருவாம். (எ-று.)

(அ-ப.) கடுக்கை = கொன்றைப்பூ.
அளகம் = கூந்தல்.
கடி = சிறப்பு.
அடவி = காடு.

19. வீரசிங்காதனப் புராணம்

282. பொன்னோங்கு செஞ்சடைமேற் புனைந்தமதி
தன்னுருவிற் புரிந்து மாறுய்க்
கொன்னோங்கு வயின்பந்தம் வெருவிமார்
பகத்தமைந்த கொள்கை யென்ன
முன்னோங்கு மொருகேழன் முடக்கோடு
புனைந்தருளு முக்க ணெம்மான்
தன்னோங்கு சேவடியென் றலைமனத்து
நாடோறுந் தரித்து வாழ்வாம். (31)

(இ-பொ.) பொன் வண்ணங் கொண்ட செஞ்சடையின் மேல் பூண்ட சந்திரன் தன்னுருவின் கிரணத்தைப் பிடித்து மாறுகக் கொண்டு வரும் பாம்புக்கு அஞ்சி மார்பைத்தழுவிய கொள்கை யென்ன, முன்னொரு காலத்தில் பன்றி ஒன்றின் கொம்பை யொடித்துப் புனைந்தருளிய முக்கண் மூர்த்தியின் ஓங்கிய சேவடிகளை அடியேனுடைய தலையினும், மனத்தினும் நாடோறுஞ் சூடி வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) வயின் பந்தம் = நாகபந்தம்.
கேழல் = பன்றி.

20. சீகாளத்திப் புராணம்

283. நீர்கொண்ட பொலம்பூங் கொன்றை நெடுஞ்சடை வனத்து டுத்த
சீர்கொண்ட புலித்தோற் கஞ்சிச் சென்றுபுக் கொளிப்பத் தாவு
மேர்கொண்ட வுழையி னங்கன் றிலங்கிய திருக்க ரத்துக்
கார்கொண்ட பொழிற்கா ளத்திக் கடவுளை மனத்துள் வைப்பாம். (32)

(இ-பொ.) கங்கையினையும் பொன்போன்ற அழகிய கொன்றை மலரினையும் அணிந்துள்ள நீண்ட சடைக்காட்டினிடத்தே, அரையில் உடுத்தியுள்ள சிறப்

புப் பொருந்திய புலித் தோலுக்கு அஞ்சிப்புகுந்து தாவும்படியான அழகு பொருந்திய இளம் மான் கன்று விளங்கும் அழகிய கையிணையுடைய மேகம் படிந்துள்ள சோலையிணையுடைய காளத்தி மலையில் வீற்றிருக்கும் காளத்தி நாதரை மனத்துள் சிந்தித்து வணங்குவாம். (எ - று.)

21. திருக்கழுக்குன்றப் புராணம்

284. சீர்பூத்த வுருவகைநான் கருவகைநான்
கிருவகையின் செயற்கை யொன்று
யேர்பூத்த நலப்பொருட்கு முதற்பொருளா
மொருபொருள்வந் தெம்மைக் காப்பான்
வேர்பூத்த கிளைகிளைத்து மெய்ஞ்ஞான
மணம்பொதுளி வெளிநின் றோங்குஞ்
சூர்பூத்த வோதமலை வேதமலைக்
கொழுந்தைமுடி சூடிக் கொள்வாம். (33)

(அ-பொ.) பிரம்மா, விட்டுணு, உருத்திரன், மகேச்சுரன் ஆய உருவங்கள் நாலும், சிவம், சத்தி, விந்து, நாதம் என்ற அருவங்கள் நாலும், சதாசிவமென்னும் அருவுருவம் ஒன்றும் ஆகிய ஒன்பது மூர்த்தங்கட்கும், முதற்பரம்பொருளாம் ஒரு தலைமைப் பொருள் வந்து எம்மைக்காக்கும் பொருட்டு, (காப்பென்னும்) அடிவேரூன்றிய கிளைகளோடி, மெய்ஞ்ஞான மணம் வீசி, பர வெளியில் நின்று, ஓங்கி வளரும் தெய்வமயமான குளிர்ச்சி பொருந்திய வேதகிரீசுவரர் (திருவடிகளை) முடியில் சூட்டிக்கொண்டு வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) காப்பான் = காக்கும் பொருட்டு.
பொதுளி = வீசி.
சூர் = தெய்வம்.
ஓதம் = குளிர்ச்சி.
ஓதமலை = பாடல் பெற்ற வேதகிரியுமாம்.

22. திருக்காளத்திப் புராணம்

285. சீர்பூத்த பேரொளியாய்ச் சித்துருவாய் நித்தமாய்ச் சிவமா யொன்று
யேர்பூத்த சத்தாகி நித்தியமா யநாதியா யெங்கு மாகிப்
பேர்பூத்த வகளமா யகண்டமா யுயிர்க்குயிராய்ப் பிரியா தோங்குங்
கார்பூத்த காவுசூழ் காளத்திப் பரம்பொருளைக் கருத்துள் வைப்பாம். (34)

(இ-பொ.) கிரணங்களைப் பரப்பிய பேரொளியாய், அட்டமாசித்துருவ வடிவமாய், சதாசிவமாய், ஒரே மயமான உண்மையாய், நித்தியமாய், அநாதியாய், எங்கும் பரிபூரணமாகி, அகளங்க மூர்த்தியாய், பரந்த வியாபகமாய், உயிர்க்குயிராய் விட்டுப் பிரியாதோங்கும் பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்காளத்திப் பரம்பொருளைக் கருத்துள் வைத்துப் பூசிப்பாம். (எ-று.)

(அ-ப.) நித்தமாய்ச் சிவம் = சதாசிவம்.
சத்து = உண்மை.

அநாதி = ஆதியந்த மற்ற நடுநிலை.
அகளம் = அகளங்கம் (மூர்த்தி.)
அகண்டம் = பரந்த வியாபகம்.
காவு = நந்தவனம்.

23. செவ்வந்திப் புராணம்

286. சொற்கொண்ட கிளியனையா ரனங்கனுக்குத்
துணையா கித்துணைப் புருர
விற்கொண்டு விளையாடுந் திரிசிரா
மலையிலுறை விமலன் றன்னைப்
பொற்கொண்ட நிறத்தானுங் கரியமுகி
னிகர்வானும் புலரா வண்ண
மற்கொண்ட மிடற்றானைச் செவ்வந்திப்
பெருமானை யகத்திற் சேர்ப்பாம். (35)

(இ-பொ.) பிரமதேவனும், மகாவிஷ்ணுவும் காய்ந்து தீய்ந்து போகா வண்ணம், ஆலகால விடத்தை யடக்கிய நீலகண்டனான, கிளிமொழியனைய மங்கையர்கள் மன்மதனுக்குத் துணையாகி, புருவமாகிய வில்லைக்கொண்டு, வேலைப் போலுங் கண்களைச் செலுத்தி விளையாடிவரும் திருச்சிராப்பள்ளியில் வசிக்கும் விமலனான, செவ்வந்திப் பூவணிந்த சிவபெருமானைத் தியானிப்பாம். (எ-று.)

(அ-ப.) கிளியனையார் = கிளிமொழியார்.
அநங்கன் = மன்மதன்.
புருரம் – புருவம்.
திரிசிராமலை – திரிசிரன் ஆண்டமலை.
புலர்தல் = காய்தல்.

287. துரிசி ராமலை யடைந்திட வேண்டியே துதிக்கும்
பரிசி ராமலை வயற்கணே கயற்கணம் பாய
மரிசி ராமலை மதனிரு கணைகளால் வயங்குந்
திரிசி ராமலை யிறையவர் மலர்ப்பதஞ் சேர்மின். (36)

(இ-பொ.) பண்பில்லாத மலைவாகிய வயலின் கண்ணே, கயற்கண்டைகள் போலும் கண்ணுடைய மாதர்கள் துள்ளிப்பாயப் பொறுக்க முடியாத மன்மதபாணங்களால் அடிபடும் மலக்குற்றம் இல்லாமையை அடைய வேண்டித் திரிசிராமலைத் தாயுமானேச்சுரரின் திருவடிகளைச் சேர்ந்தொழுகுங்கள். (எ-று.)

(அ-ப.) துரிசு = மலக்குற்றம்.
பரிசு = பண்பு.
மலை = மலைவு.
மரிசு = மரிசிதம் (பொறுமை).
மலைமதன் = மன்மதன்.

24. அருணாசலப் புராணம்

288. உறவொடு பகையறு மொருமுத லெவனவ
னிறுதியி லுலகரு ளிறையவ னெவனவன்
மறைமுடி வினினடம் வளர்பவ னெவனவ
னறிவினி லறிபவ னடியிணை தொழுதனம். (37)

(இ - பொ.) உறவும், பகையுமில்லாத ஒப்பற்ற முதன்மையானவன் எவன்? சருவசங்காரமான பின்பு உலகத்தை யுண்டாக்குகிற தலைவன் எவன்? வேத அந்தத்திலே நடனஞ் செய்கின்றவனெவன்? தன்னியற்கை யறிவினாலே எல்லாவற்றையும் அறிகிறவன் எவன்?—(பரமசிவம்). அப்படிப்பட்ட தன்மையை யுடைய பரமசிவனது திருவடிகளை யாம் வணங்கினோம். (எ - று.)

(அ - ப.) நடம் = நடனம்.

289. மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளருந்
திருமாலு மறையி னோனும்
பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து
மீதலத்தும் பரிந்து தேட
வணிகொண்ட பிரமாண்ட கோளகைபொற்
கோளகையா யழகு காட்டக்
கணிகொண்ட வொருவரையா மொருவரையா
மகலாது கருத்துட் சேர்ப்பாம். (38)

(இ - பொ.) இரத்தினங்களுக் கிருப்பிடமாகிய பரந்த கடலிலே யோக நித்திரை செய்கின்ற விட்டுணு மூர்த்தியும், வேதங்களை வெளியிட்ட பிரம்ம தேவரும், நாகங்கள் வாசஞ் செய்கின்ற பாதளத்திலும், பூமியிலும், மேலுலகத்திலும் வருந்தித்தேட, (அவர்களால் எட்டப்படாமல்) அழகாகிய பிரமாண்ட கோளகையானது பொன்னாற் செய்யப்பட்ட கோளகை போலாகி, அழகு காண்பிக்க எண்ணங் கொண்ட ஒப்பற்ற அக்கினி மலையாகிய பரமசிவத்தை யாங்கள் நீங்காது இருதய கமலத்திற் சேர்த்துக் கொள்வோம். (எ - று.)

(அ - ப.) கோளகை = உருண்டை.

290. ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தினில்வைத் துலக மேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப்
பொருமானை மகிழ வேறும்
பெரும்மானை யருணகிரிப் பெம்மானை
யடிபணிந்து பிறவி தீர்ப்பாம். (39)

(இ - பொ.) தாருகாவனத்து முனிவர்கள் வரவிட்ட மானைக் கையிலே வைத்தும், ஒரு மான்போன்ற விழியிணையுடைய கங்கையை முடியில் வைத்தும், ஏழு லோகத்தையும் பெற்றருளிய உமாதேவியை வாமபாகத்தில் வைத்தும், அடியார்க்கு அருள் செய்கின்றவரும், உன்னதமாகிய பவளமலையைப்

போல வருகின்ற ஆனைமுகத்தையுடைய கணபதியைப் பெற்றவரும், போர் செய்கின்ற இடப வாகனத்தில் எழுந்தருளுகின்ற ஆண்டவருமாகிய, அருணாசல தலத்தில் வீற்றிருக்கின்ற, பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி இனிவரும் பிறப்பைத் தீர்த்துக் கொள்வோம். (எ - று.)

(அ - ப.) சயிலம் = மலை.
பொரும்ஆன் = போர் செய்கின்ற இடபம்.

25. திருவெண்காட்டுப் புராணம்

291. சொற்கண்டு பசுங்கிளியுங் கருங்குயிலுங் கடலமுதுஞ் சுவை யருத
கற்கண்டுந் திறையளக்கு மலர்த்திருவின் பெருமானுங் கமலத் தானு
மற்கண்ட விடம்பிறந்த தலைநாளி லிறவாம லருள்செய் தானைப்
பொற்கொண்ட லனையவனைச் சுவேதவனப் பெருமானைப் போற்று வாமே. (40)

(இ - பொ.) பசுங்கிளிமொழியும், கருங்குயில் குரலும், கடல் அமிர்தமும், தெவிட்டாத கற்கண்டுந் தோற்கும்படியான இனிய சொற்களையுடைய இலக்குமியின் காந்தனான திருமாலும், பிரம்மதேவனும் முன்னாள் பிறந்த ஆலகால விடத்தினால் இறவாமல் காப்பாற்றினவனாய், மேகத்தைப் போலும் பொன்னருள் புரிபவனாய், திருவெண்காட்டில் எழுந்தருளிய சிவபெருமானைப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) திறையளக்கும் = இறைகொடுக்கும்.
கொண்டல் = மேகம்.
சுவேதவனம் = திருவெண்காடு.

26. தீருவிரிஞ்சைப் புராணம்

292. தொன்மையுடன் புதுமையின்றிக் குணம்வே றின்றித்
தோற்றமுட னாசமின்றித் தொடர்ச்சி யின்றி
நன்மையுடன் றீமையின்றி முதலீ றின்றி
நடுவுமின்றிப் பரவிந்து நாத நீங்கி
யுன்மனையுங் கடந்துசுக வுருவா யெல்லா
வுயிர்க்குயிரா யொளியாகி வொளியா யோங்குஞ்
சின்மயனைக் கரபுரியி லமருங் கோவைச்
சிந்திப்போங் கரங்களினால் வந்திப் போமே. (41)

(இ - பொ.) பழமையுடன் புதுமையில்லாமல், குணத்துடன் குற்றமில்லாமல், உற்பத்தியுடன் அழிவில்லாமல், தொடர்தலுடன் விலகுதலில்லாமல், நன்மையுடன் தீமையில்லாமல், முதல், நடு, ஈறின்றிப் பரவிந்து பராநந்தங்களை நீங்கி, பரவித்தையையும் கடந்து, பரமசுகவடிவாய் எல்லா உயிர்க்கும் உயிராகி, ஒளிக்கும் ஒளியாகி, வெளிக்கு வெளியாகி ஓங்கியிருக்குஞ் சிற்பரனும் திருவிரிஞ்சையிலிருக்கும் ஈச்சுரனைக் கரங்கள் கூப்பி வந்தனஞ் செய்து தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) தொன்மை = பழமை,

293. முளைத்தவரை முனையிடத்தின் முழுத்தவரை
மகிழ்ந்தவரை முருகன் வேலாற்
றுளைத்தவரை யெனவெனது பழவினையை
யலைத்தவரைச் சுடர்க்குன் றுகக்
கிளைத்தவரை வளைத்தவரை யொருசிறுவன்
கிளையோடு கிளரச் சென்னி
வளைத்தவரை வணிகனுக்கு வழித்துணையாய்
நடந்தவரை வழுத்து வோமே. (42)

(இ - பொ.) மூங்கிலில் உற்பவித்தவராய், கைலாச வாசியாய், முருகக் கடவுள் வேலாயுதத்தினால் கிரவுஞ்சமென்னும் மலையைத் துளைத்ததுபோல் அடியேனுடைய பூர்வவினையை அலைத்தோட்டினவராய், அக்கினி மலையாகவும், அடிமுடி காண நெருங்கிய பிரம்ம விஷ்ணுக்களைத் தடுத்தாட் கொண்டவராய், சீராளனுடைய அவயவங்களையெல்லாம் பாகஞ்செய்து வைக்கத் தலை குனிந்து புசித்தவராய், தனபால செட்டிக்காக வழித்துணையாக நடந்துவந்தவராய் விளங்கும் சிவபெருமானை வாயாரப் பாடுவாம். (எ - று.)

(அ - ப.) முளை = மூங்கில்.
முழுத்த வரை = கைலாயமலை.
துளைத்த வரை = கிரவுஞ்சம்.
பழவினை = பூர்வவினை.
சுடர்க்குன்று = அண்ணுமலை.
கிளைத்தவர் = நெருங்கினவர்.
வளைத்தவர் = தடுத்தாண்டவர்.
ஒருசிறுவன் = சீராளன்.
கிளை = உறுப்பு.
கிளர = சமையல் செய்ய.
வழுத்தல் = வாழ்த்தல்.

27. தீர்த்தகிரிப் புராணம்

294. நீர்கொண்ட கடலுடுத்த வுலகமுதற்
படைத்தோனு நெடிய மாலுந்
தார்கொண்ட மணிமவுலிச் சதமகனுந்
தெரிவரிய தன்மை யானை
வார்கொண்ட தனத்துமைசேர் மலைமருந்தை
யலைமருந்தை வானோர்க் கீந்து
கார்கொண்ட மிடற்றிறையைத் தீர்த்தமலைப்
பெருமானைக் கருத்துட் சேர்ப்பாம். (43)

(இ – பொ.) நீர்கொண்ட கடலால் சூழப்பட்ட உலகமுதல் எல்லா உயிர்களையும் படைத்த பிரம்மனும், விஷ்ணுவும், இரத்தினக் கிரீடந்தரித்த இந்திரனும் அறிதற்கரிய அற்புதமானவனாய், உமாமகேசுவரியின் தனபாரங்களைச் சேரும் மலைபடும் மணப் பொருளாய், அமுதத்தைத் தேவர்களுக்குத் தந்து விடத்தை உட்கொண்ட நீலகண்ட மூர்த்தியாய், தீர்த்த மலையின்கண் எழுந்தருளிய சிவபெருமானைக் குறித்துத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) சதமகன் = இந்திரன்.
மலைமருந்து = கைலாசபதி.
அலைமருந்து = அமுதம்.

28. பழைய காஞ்சிப் புராணம்

295. சீர்பரவு பரஞான வொளியாகி வெளியாகித் தெளித றேற்று
வேர்பரவி யுருவெனவு மருவெனவு முருவருவ மெனவுந் தானும்
நீர்பரவி மறைமுடிவுக் கப்பாலா யானந்த நிருத்தஞ் செய்தே
பார்பரவ வருமேகாம் பரத்தொருவ ரிருபதம பணிதல் செய்வாம். (44)

(இ - பொ.) சீர்பரவிய பதிஞான வெளியாகி, வெளியரங்கப் பொருளாகி, தெள்ளிதின் அறியமுடியாத வல்லபம் பொருந்தி, உருவம், அருவம், உருவருவம் தானும் தன்மையுடன் பரவி, வேதாந்தத்துக் கப்பாலாய், (சைவசித்தாந்த) ஆனந்த நடனஞ் செய்துகொண்டே, உலகம் தொழுதுவர வரும் ஏகாம்பர நாதரது இரண்டு பாதங்களையும் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) நீர் = நீர்மை, தன்மை.

29. கந்த புராணச் சுருக்கம்

296. சீர்கொண்ட வானந்த மாகி யெங்குஞ்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
யேர்கொண்ட கருணைதிரு வுருவ மாகி
யெழில்கொண்ட மலைமகளை யிடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்தனாதிக் கடவுளர்
வந்தடி பரவுங் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவ னடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம். (45)

(இ - பொ.) எங்கும் நிறைந்த பரிபூரணானந்தமாகி, பராபரப்பொருளாகி, திருவருட் செயலுருவமாகி, அழகுடைய பார்வதியை வாம பாகங்கொண்டவனும், கரிய நிறங்கொண்ட விட்டுணு முதலான தேவர்கள் வந்து வழிபடும் கடவுளுமான, கொன்றைப் பூமாலையை யணிந்த சடாமகுட பரமசிவத்தின் திருவடிகளைத் தாழ்ந்து பணிந்து மேலான நற்கதியில் வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) மலைமகள் = பார்வதி.
முகுந்தன் = விட்டுணு.

30. திருவாவடுதுறைப் புராணம்

297. ஆசிலாத் தென்றுறைசை யரசடியின்
முளைத்தெழுந்த வமுதை ஞானத்
தேசுலா வுங்கருணைச் சிவக்கொழுந்தைப்
பரபோகத் திரளை யார்க்கும்
பேசொணாச் சுகந்தருமுக் கட்கனியை
யன்பரின்பப் பெருக்கிற் றேன்று
மாசிலா மணியினைக்கண் மணிகுளிரக்
கண்டுதினம் வணங்கி வாழ்வாம். (46)

(இ - பொ.) குற்றமில்லாத திருவாவடுதுறையின் அரச மரத்தடியில் எழுந்தருளிய அமுதமாய், ஞானப்பிரகாசக் கருணை யுலவிவருஞ் சிவக்கொழுந்தாய், சிவபோகத்திரளாய், பேசாத ஆனந்த நிட்டையை எல்லார்க்கும் தரும் முக்கண் மூர்த்தியாய், அன்பர்களுடைய மகிழ்ச்சிக் கடலில் உண்டாகும் மாசிலாமணீச்சுரனை நாள்தோறும் கண்குளிரக் கண்டு வணங்கி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) ஆசு = குற்றம்.
துறைசை = திருவாவடுதுறை.

298. அரவணைமேற் றிருமறுமார் பன்கிடக்கும் (1)
பயோததியை யரும்புற் பாதன்
றருமகவின் பசிக்களித்த கருணையனைத்
திருஞான சம்பந் தற்கிங்
குரிமையுடன் பாமொழிகேட் (2)டுலவாப்பொற்
கிழியினிலா யிரம்பொன் னுய்த்த
திரவியப்பொற் றியாகனைத்தென் றுறைசைநக
ராதிபனைத் தரிசித் துய்வாம். (47)

(இ-பொ.) ஆதிசேடனாகிய பள்ளியின்மேல் திருமகள் தங்கிய மார்பினையுடைய திருமால் துயிலும் பாற்கடலை அரிய தவத்தினையுடைய வியாக்கிரபாத முனிவர் புதல்வராகிய உபமனிய முனிவருக்கு அளித்த கருணையனும், திருஞான சம்பந்தருக்கு உரிமையுடன் தேவாரப் பதிகங் கேட்டுப் பொற்கிழியில் ஆயிரம் பொன் வைத்தருளியவனுமாகிய ‘திரவியப் பொற்றியாகன்’ என்னும் பெயருடையவனை, தென்பாலுள்ள திருவாவடுதுறை என்னும் நகரில் எழுந்தருளியுள்ள தலைவனும் சிவபெருமானை வணங்கி உய்வாம். (எ-று.)

குறிப்பு: (1) உபமனிய முனிவர் குழந்தையாயிருந்தபோது பசியாலழ, அப்போது அம்பலக் கூத்தர் பாற்கடலை வரவழைத்து அக்குழந்தைக்கு அளித்தார் என்பது வரலாறு. இந்நிகழ்ச்சியைச் ‘சேந்தனார்’ தாம் பாடிய திருப்பல்லாண்டுப் பதிகத்தில் “பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்” என்று பாராட்டியிருத்தல் காண்க.

(2) திருஞான சம்பந்தர் தம் தந்தையாம் சிவபாத இருதயர் செய்யும் யாகத்திற்குப் பொருள் வேண்டி ‘இடரினும் தளரினும்’ என்னும் தேவாரப் பதிகம் பாடியபோது, துறைசைப் பெருமான் ஆயிரம் பொன் அடங்கிய பொற்கிழியளித்தார். இவ்வரலாற்றைப் பெரிய புராணத்திற் காண்க. இந் நிகழ்ச்சியைக் “கழுமலவூரர்க்கம் பொன் ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே” என்று திருநாவுக்கரசர் தாம் பாடிய தேவாரத்தில் பாராட்டியுள்ளார்.

31. காஞ்சிப் புராணம்—முதற் காண்டம்

299. தணந்தபெருந் துயர்க்கடன்மீக் கூர்தலினுன்
மலைபயந்த தரள மூரற்
கணங்குழையாள் புரிபூசை முடிவளவுந்
தரியாம லிடையே கம்பை

யணங்கினைத்தூ தெனவிடுத்து வலிந்திறுகத்
தழீஇக்கொள்ள வமையாக் காதன்
மணந்தருளிக் குறிபூண்ட வொருமாவிற்
பெருமானை வணக்கஞ் செய்வாம். (48)

(இ - பொ.) உமாதேவியார் தம்மை விட்டுப் பிரிந்திருப்பதால் உண்டாகிய துன்பம் மிகுதிப்படுதலால், மலைமகளாகிய முத்துப் போன்ற பற்களையும் கணவிய குழையினையுமுடைய அவ்வுமாதேவியார் கம்பா நதியின் நடுவே செய்து கொண்டிருந்த சிவபூசை முடியுமளவும் பொறுத்துக் கொண்டிராமல், கம்பாநதியாகிய பெண்ணைத் தூதாகப் பொங்கி வரும்படி அனுப்ப, அதுகண்டு அம்மை சிவலிங்கப் பெருமானை இறுகத் தழுவியெடுக்க, அளவுபடாத காதலுடன் கலந்தருளி, வளைத்தழும்பும் முலைத்தழும்பும் பூண்ட ஒப்பற்ற மாவடியில் வீற்றிருந்த பெருமானை வணங்குவாம். (எ-று.)

குறிப்பு :—உமாதேவி தழுவ இறைவன் குழைந்த வரலாற்றைக் காஞ்சிப் புராணம் 'தழுவக் குழைந்த படலத்' திற் காண்க. இந்நிகழ்ச்சியைச் சுந்தரர் பாடிய திருவேகம்பத்தக்கேசிப் பதிகத்தில் "உகந்துமை வழிபடச் சென்று நின்றவாகண்டு, வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி வெருவியோடித் தழுவ வெளிப்பட்ட கள்ளக்கம்பனை" என்று குறிப்பிட்டிருத்தலறிக.

ஷ இரண்டாங் காண்டம்

300. மழலைவண் டிமிருங் கொன்றை மாலிகை துவற்றுந் தேனுங்
குழவிவெண் மதியு நீருந் தருகுளிர்க் குடைந்தான் மானத்
தழல்விழித் தலத்து மங்கைத் தலத்தினு மேந்தி யாடு
மழகனைத் திருவே கம்பத் தடிகளை வணக்கஞ் செய்வாம். (49)

(இ - பொ.) வண்டுகள் மழலை பாடும் கொன்றைப் பூமாலையின் நிறைந்த தேனும், வெண்ணிலா வெளிச்சமும், கங்கையும் தாரானின்ற குளிர் பனிக்கு நெக்குடைந்தால், அதை நீக்க நெற்றிக் கண்ணிலும், உள்ளங்கையிலுமாக நெருப்பைத் தாங்கி விளையாடும் அழகனுய்த் திருவேகம்பத் தெழுந்தருளிய கடவுளைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) மழலை = கீதம்.
இமிரும் = பாடும்.
மாலிகை = மாலை.
துவற்றும் = நிறையும்.
குழவிவெண்மதி = பிறைச்சந்திரன்.
நீர் = கங்கை.
உடைந்தால் = தளர்ந்தால்.
மான = நீக்க.
தழல் = தணல்.
அடிகள் = கடவுள்.

32. விநாயக புராணம்

301. பூமாது தனைமணந்த புயல்வண்ணப் பெருமாளும் புலவர் போற்று
நாமாது தனைமணந்த நான்முகனும் போர்மாது நயக்கு மெண்டோட்
கோமானுந் தானேயென் றுணர்த்துதற்கே பிரணவகுஞ் சரமாய்த் தோன்றி
மாமாவின் முகத்தானை யுயிர்த்தானை நினைந்திறைஞ்சி வழுத்து வாமே. (50)

(இ - பொ.) பூமிதேவியை மணந்த மேகம்போன்ற கரிய நிறத்தையுடைய திருமாலும், புலவர்கள் துதிக்கும்படியான நாமகளை மணந்த பிரமனும், துர்க்கையை விரும்பும் சிவபெருமானும் தானே என்று உணர்த்துதற்கே பிரணவ வடிவமாகிய யானையாய்த் தோன்றி விநாயகப் பெருமானை ஈன்றெடுத்த இறைவனை நினைந்து வணங்கித் துதிப்போம். (எ – று.)

(அ - ப.) மாமா = யானை.

302. தேரேறி வரும்பரிதி மண்டலத்துஞ் செழுமதி மண்டலத்துஞ் சீர்கொண்
டேரேறி வருங்கனன்மண் டலஞ்சத்தி மண்டலத்து மெண்க ணனு
நீரேறி வருமரியு முருத்திரனு மகேச்சுரனு நிலவச் செய்து
நாரேறி வருமவர்த முளத்தமரெண் குணத்தானை நயந்து வாழ்வாம். (51)

(இ - பொ.) சத்திய லோகத்துக்குப் பிரம்ம தேவனையும், சூரிய மண்டலத்திற்கு நாராயணனையும், அக்கினி மண்டலத்திற்கு உருத்திரனையும், சந்திர மண்டலத்துக்கு மகேச்சுரனையும் நிலைநிற்கச் செய்து, அன்புமீக் கொண்டுவரும் அடியார்களுடைய இருதயத்தமர்ந்த எண்குணமுடைய பரமசிவனை வழிபட்டு வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பரிதி = சூரியன்.
எண்கண்ணன் = நான்முகன்.
நார் = அன்பு.
எண்குணன் = ஞானம், காட்சி, இன்பம், ஆற்றல், நித்தியத்துவம், அந்தரியாமம், பரமசுகம், சாட்சி பூதம்.

---

33. பேரூர்ப் புராணம்

303. கடல்சூழ்ந்த வுலகுண்ட கனிவாய
 னிருந்தொழிலுங் கமழ்ந்த தெய்வ
மடல்சூழ்ந்த மலர்க்குரிசின் முதற்றொழிலு
 மவரோடு மடிக்கு ஞான்றவ்
வடல்சூழ்ந்த வரன்வழியே மீட்டும்வரப்
 பணித்தருளி யாவிக் கெல்லா
மிடல்சூழ்ந்த விருடணிக்கு மாதிநகர்ப்
 பட்டீசர் விரைத்தாள் போற்றி. (52)

(இ - பொ.) பதுமாசனத்தில் வரும் பிரம்மனுடைய படைப்புத் தொழிலையும், கடல் சூழ்ந்த உலகத்தை ஒரே வாயாக உண்ட விஷ்ணுவின் காப்புத் தொழிலையும் சேர்த்து அப் பிரம்ம விஷ்ணுக்களையுங்கூடச் சம்மரிக்குங் காலத்தும், அவ்வழித்தலைச் செய்யும் உருத்திரன் மூலமாகவே மீட்டும் படைப்பு முதலான செயல்

கள் நடத்திவரும்படி ஆணை செலுத்தி ஆன்மாக்களுக்கெல்லாம், வலியான மாய விருளை நீக்கும் ஆதிநகர்ப் பட்டீச்சுரரின் திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) அடல் = அழித்தல்.
மிடல் = வலி.

34. திருவானைக்காப் புராணம்

304. மதிவளம் படைத்து நாளும் வளரிருள் நீக்கு மாபோற்
கதிவளம் படைக்குந் தூய கருணையெவ் வுயிரின் மாட்டும்
பதிவளம் படைத்துப் பாசம் பாற்றவெய் யவனிற் ரேன்றிப்
பொதிவளம் படைக்கு மின்பப் பூரணப் பொருளின் வாழ்வாம். (53)

(இ - பொ.) நிலவானது சோடச கலையும் விரித்து எந்த நாளிலும் அந்தகார விருளை நீக்குமாறுபோல, சூரியப் பிரகாசம் போன்ற பதிஞானம் பெற்று, எல்லா உயிர்களின் மாட்டும் பற்றிய பாசவிருள் நீங்க, நற்கதியாகிய செல்வத்தை அளிக்கும்படியான, தூய காருண்யம் பொருந்திய பேரின்பாதீதப் பூரண பரம் பொருளை நம்பி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பாற்ற = ஓட்ட.
வெய்யவன் = சூரியன்.

305. மணிபூத்த நறும்பொகுட்டு மலர்த்தவிசு
நாகணையு மாகத் தும்பர்ப்
பணிபூத்த கயிலாய நெடுஞ்சிலம்பு
மொருமூவர் பணிந்து வைக
வணிபூத்த வவருளமுந் திருவானைக்
காவுமினி தமர்ந்தெல்லோர்க்கும்
பிணிபூத்த மலந்துரக்குஞ் சம்புநா
யகர்மலர்த்தாள் பேணி வாழ்வாம். (54)

(இ - பொ.) (முத்துக்கள் போன்று நீர் நிற்கும் மணமுடைய) தாமரையினிடத்தும், அரவணையிலும், வானவர்கள் திருத்தொண்டு செய்யும் திருக்கயிலாயத்தினிடத்தும், சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவர் பணிந்து பாடித் தங்குதற்கு அழகாக விளங்கும் உள்ளத்திலும் திருவானைக்காவிலும் எழுந்தருளி, சர்வான்மாக்களுக்கும் பிறவிப் பிணியாகிய மூலமலத்தைப் பற்றற நீக்கும் சம்பு நாயகருடைய திருவடி மலர்களைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பொகுட்டு = தாமரைக் கொட்டை.
நாகணை = அரவணை.
மாகம் = வானம்.
உம்பர் = தேவர்.

35. பூவாளூர்ப் புராணம்

306. செம்பொன்னை வளர்தழலிற் செறித்துநவை
தீர்த்தெடுக்குஞ் செல்வர் போல
வம்பொன்செய் மணிமவுலி யரிக்குமலர்த்
தவிசிருக்கை யயற்கு மேனைப்
பைம்பொன்செ யுலகினர்க்கும் பாரினர்க்கும்
பலவுயிர்க்கும் பவங்க ணல்கித்
தம்பொன்செய் பதமருளுந் தனிமுதல்வ
ரெவரவரைச் சார்ந்து வாழ்வாம். (55)

(இ - பொ) செவ்விய பொன்னை நெருப்பில் வைத்து உருக்கிக் களிம்பெடுத்துச் சுத்தம் செய்யும் தட்டாரைப் போல, (மாணிக்கம் பதித்த பொன் முடியுடைய) விட்டுணுவுக்கும், (பத்மாசனத்திலிருக்கும்) பிரம்மனுக்கும், (பொன்னுலகத்து இந்திரன் முதலான) தேவர்களுக்கும், பூலோகத்தாருக்கும், மற்றும் பல உயிரினங்களுக்கும், பவபூதிகளைக் கொடுத்துத் தமது பொன்னடிகளையும் தரும் ஒரு முதற் கடவுள் எவரோ அவரை அடைக்கலம் புகுந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) தழல் = தணல்.
செறித்தல் = உருக்கல்.
நவை = குற்றம், மாசு.
செல்வர் = தட்டார்.
பவம் = பவபூதி (செல்வம்).

307. பொன்பூத்த மணிமார்பன் வளியழலுங்
கணையாகப் புவிதே ராக
மின்பூத்த விருசுடரு முருளாக
வெளிவழியா விரைந்து கங்கை
கொன்பூத்த சடைதுளும்பப் பகைகடந்தெண்
வடிவுமொரு கோல மெய்யின்
றென்பூத்த வுறுப்பாக்குந் திருமூல
நாதர்பதஞ் சேர்ந்து வாழ்வாம். (56)

(இ - பொ.) (பொன் போன்ற துளசிமணி மார்பனாகிய) விட்டுணுவை அக்கினிமுக அஸ்திரமாகவும், பூமியைத் தேராகவும், சூரிய சந்திராதிகளைத் தேர் உருளைகளாகவும் கொண்டு, அந்தரத்தில் நின்று, சடாபாரத்தின் கங்கை சற்றுத் தளும்பினாலன்ன பிறைபோல், பகையாகிய முப்புரத்தை நகைத்தெரித்து, ஒரு கூர்மாவதாரத்தின் கொம்பணிந்த பூவாளூர் திருமூல நாதருடைய பாதங்களைச் சேர்ந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) வளியழலுங்கணை = அக்கினிமுகாஸ்திரம்.
இருசுடர் = இரவி, மதி.
வெளிவழி = அந்தரம்.
துளும்ப = தளும்ப.

பகை = முப்புரப்பகை.
எண்வடிவும் = அஷ்டாங்கமும்.
ஒருகோல = ஒன்றுக.

---

36. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

308. பூமேவு பாதிரிவிண் படர்ந்தகன்ற
மணிக்கோயிற் பொலிய மேவி
மாமேவு மாலயனு மூவிலைவே
லம்மானும் வணங்கி யேத்தத்
தாமேவு தொழிலைந்தும் பரையியற்ற
வனைத்துயிருந் தழைப்ப வைகுங்
காமேவு புகழ்புலிசைப் பாடலேச்
சுரன்பதத்தைக் கருதி வாழ்வாம். **(57)**

(இ - பொ.) திருமாலும், பங்கயனும், சூலாயுதபாணியும் வணங்கித் தோத்திரஞ் செய்யும்படி படைப்பு முதல் ஐந்தொழில்களும் தம்முடைய (இச்சா ஞானக் கிரியையாய) சத்திகளால் நடைபெற எல்லா உயிர்களையும் தழைத்து வாழும்படி இரட்சிக்கும், (பூங்காவனங்கள் நிறைந்த திருப்பாதிரிப்புலியூரின்கண் ஆகாயத்தை ஊடுருவிய மணிக்கோபுர வாயிலில் வீற்றிருந்த) பாடலேச்சுரன் திருவடிகளைக் கருதி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) பாதிரி புலிசை = திருப்பாதிரிப்புலியூர்.
ஐந்தொழில் = சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரகம்.
பரை = பராசத்திகள்.
வைகல் = இரட்சித்தல்.
பதம் = பதவி.

---

37. திருச்செந்தூர்ப் புராணம்

309. இருப்பதப் பிரணவத் தியல்பென் றுலமே
சருப்பதச் செய்கைய தாக்கித் தங்கவான்
பருப்பதச் சிலைக்கரப் பரமன் றுமரைத்
திருப்பதத் துணைமலர் சென்னி சேர்த்துவாம். **(58)**

(இ - பொ.) (சருப்பதோபத்திரமென்னுஞ் செய்யுட்பந்தமாகிய) நாகத்துக்கு எப்படி விடந் தங்கி யிருக்குமோ, அதுபோல ஆலகால விடம் கண்டத்தானமாயிருப்பது அப்பரம்பொருளின் இயற்கையென்று பேர்வர, அதை நாகாஸ்திரமாகக் கொண்டு, நெடிய மேருவை வளைத்த வில்லைக் கையேந்தும் பரமசிவனுடைய திருவடித் தாமரை மலர்களைத் தலையில் சூடிக்கொள்வாம். (எ-று.)

(அ - ப.) பரமன் = பரமசிவன்.
இயல்பு = இயற்கை.
ஆலம் = விடம்.
சருப்பம் = பாம்பு.
பருப்பதம் = மலை.

38. கடம்பவன புராணம்

310. திருவோங்கு பேரொளியாய்ப் பராபரமாய்ச்
சிவமாய்ச் சூக்குமமு மாகி
யுருவோங்கு மனுபவநித் தியநிமல
மானசதா சிவமு மாகி
யுருவோங்கு தொழிற்படுமன் னுயிர்க்குயிரா
மமுதலிங்க வுருவாந் தொன்மை
மருவோங்கு மலர்க்கடம்ப வனத்தமர்சுந்
தரன்றுணைத்தாள் வழுத்தல் செய்வாம். (59)

(இ - பொ.) பேரொளிப் பிரகாசமாய், பராபரப்பொருளாய், சூட்சுமாகாரமாய், நித்தியானுபவ நிர்மலமான சதாசிவமுமாய், அளவிலாத நாம ரூபக்கிரியைகளையுடைய மன்னுயிர்களுக்கு, உயிர்க்குயிராம் (பழமையான கடம்பவனத்தில் எழுந்தருளிய) அமுதலிங்கச் சுந்தரேசனுடைய துணையடிகளைப் போற்றி வருவாம். (எ-று.)

(அ - ப.) தொன்மை = பழமை.
வழுத்தல் = வாழ்த்துக் கூறுதல்.

39. உத்தரகோச மங்கைப் புராணம்

311. ஒருபொருளாய்ப் பலவுருவா யொளியாகி
யானந்த வுண்மை யாகிக்
கருதரிதாய்த் தெரிவரிதாய்க் காரணகா
ரியங்கடந்த கருணை யாகிப்
பொருவின்மறைக் கொழுந்தாகி யுபநிடதப்
பொருளாகிப் புவனி போற்ற
வருதிருவுத் தரகோச மங்கையர
னடிக்கமலம் வணங்கல் செய்வாம். (60)

(இ - பொ.) ஒரே பரம்பொருளாய், பல வடிவங்களாய், ஒளி விளக்கமாய், சச்சிதானந்த உண்மையாகி, கருதவொண்ணாததாய், அறியப்படாததாய், காரியா காரணங்களைக் கடந்த கருணாகரமாகி, வேதப்பிரமாணமான சிவக்கொழுந்தாகி, உபநிடதார்த்தமாகி, பூலோகம் போற்றிவரத் திருவுத்தரகோசமங்கையில் உள்ள அரனுடைய திருவடிக் கமலங்களை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) பொருவு = ஒப்பு.
புவனி = புவனம்.

40. கடம்பர்கோயிற் புராணம்

312. சீர்கொண்ட விருசரணும் வரதமழு
மானபயத் திருக்கை நான்குங்
கார்கொண்ட மணிமிடறுஞ் சின்மயமா
மமர்முகமுங் கருணை நோக்கும்

நீர்கொண்ட சடைமுடியு மாவுடையா
ளொருபாலு நிறைபூங் கொன்றைத்
தார்கொண்ட வுருக்கொண்ட கடம்பவனத்
தனிப்பொருளைச் சார்ந்து வாழ்வாம். (61)

(இ - பொ.) உபயசரணாரவிந்தங்களும், வரப்பிரசாதம், அபயாஸ்தம், மான், மழு தரித்த நான்கு திருக்கரங்களும், நீலகண்டமும், ஞான மயமாய் மலர்ந்த முகமும், காருண்ணிய நோக்கமும், கங்கைநீர்ச்சடாமுடியும், பார்வதி வாமபாகமும், நிறைந்த கொன்றைப் பூமாலையுமான பாதாதிகேச அடையாளங்கொண்ட மதுரை சொக்கநாதக்கடவுளின் திருவடியைச் சார்ந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) வரதம் = வரப்பிரசாதம்.
அபயம் = அபயாஸ்தம்.
மிடறு = கழுத்து.
சின்மயம் = ஞானமயம்.
ஆவுடையாள் = உமையாள்.
கடம்பவனம் = மதுரை.

41. வசவ புராணம்

313. அளவில் வானவ ராரண நாவினர்
புளக மெய்யிற் பொருந்துந் தபோதனர்
வளர்ப ருப்பதம் வாழ்மல்லி கார்ச்சுன
னுளமு றும்படி யுன்னிநின் றுய்குவாம். (62)

(இ - பொ.) அளவில்லாத தேவர்களும், வேதபாராயண முனிவர்களும், தபோதனர்களும் வாழும்படியான மல்லிகார்ச்சுன மலையில் பரமானந்தப் பரவசனாய் வளரும் சிவபெருமானை உளமுறுத்தும்படி நினைத்து நிலையாக வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) புளகம் = புளகாங்கிதம்.
உறும்படி = உறுத்தும்படி.

42. சரப புராணம்

314. இருள்விளையாட் டொளிவிளையாட் டெனவுணர்த்தி
மறைத்துமலத் தூடு நீங்கா
மருள்விளையாட் டாருயிர்கண் மயங்காம
லகிலமெலா மகிழ்ந்து போற்றி
யருள்விளையாட் டெனவியப்ப வருந்தமிழ்நாட்
டணிமதுரை யதனு ளெண்ணெண்
டிருவிளையாட் டுடையபிரான் செங்கமலப்
பொற்பாதஞ் சென்னி சேர்ப்பாம். (63)

(இ - பொ.) நள்ளிருள் (நிழலில்) ஞானப் பிரகாசத் தோற்றமென உணர்த்தி, ஆன்மாக்களை மலசம்பந்தப்பட்ட மாயா லீலையில் மயங்காமலிருக்கத்

திரோபவத்தில் மறைத்து, உடனேயவை உலகமெலாம் திருவருட்செயலென வியந்து கொண்டாட, மகிழ்ந்து காப்பாற்றிவரும் தமிழ் நாட்டு மதுரையில் அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்த சிவபிரானுடைய செங்கமலப் பொன்னடிகளைச் சிரத்திலணிவாம். (எ-று.)

(அ - ப.) மருள் = மயக்கம்.
அகிலம் = உலகம்.

43. சீர்காழிப் புராணம்

315. சீர்பூத்த பேரொளியோ யுயிர்க்குயிரா
யகண்டிதமாய் நிறைவாய் நீங்காப்
பேர்பூத்த குணங்குறிக ளிகந்தபழ
மறைக்கொழுந்தாய்ப் பெருமை சான்ற
பார்பூத்த பரையினொடு கலந்துகுரு
வாதிமும்மைப் படிவ மாகிச்
சீர்பூத்த காழிநக ரமர்ந்தபிர
மேசனையாஞ் சிந்தை செய்வாம். **(64)**

(இ - பொ.) பேரானந்த ஒளியாய், உயிர்களுக்குயிராய், கண்டிக்கப் படாததாய், பரிபூரணமாய், பிரியாப் பேர்பெற்ற குணங்குறிகளைக் கடந்த பழைய ஞானக்கொழுந்தாய், பெருமையுடைய பார்வதி திருமணத்தோடு, தட்சிணாமூர்த்தி முதலாய் மும்மூர்த்திகள் வடிவமாகிச் சீர்காழியிலெழுந்தருளும் பிரமேசனை நாம் சிந்திப்பாம். (எ-று.)

(அ - ப.) இகந்த = கடந்த.
படிவம் = வடிவம்.

316. அரிய நாயக னாரண நாயக னணங்கரா முடிவாய்ந்த
கரிய நாயகன் காணரு நாயகன் கவுணிய முனிகாட்டத்
தெரியு நாயகன் றோணிமே லோங்குயர் தெய்வநா யகன்காழிப்
பெரிய நாயக னனகமணி நூபுரம் பிறங்குசே வடிபோற்றி. **(65)**

(இ - பொ.) கங்கையும் சருப்பமும் சடாமுடியிலணிந்த உருத்திரனும், பிரம்மதேவனும், மகாவிஷ்ணுவும் காணற்கரிய நாயகனும், சம்பந்த சுவாமிகள் காட்டத் தெரிவரும் நாயகனும், தோணியப்பராக வந்த தெய்வநாயகனுமான சீகாழிப் பெரிய நாயகனுடைய மணியொளிச் சதங்கை பூண்ட சேவடிகட்கு வணக்கம். (எ-று.)

(அ - ப.) கவுணியமுனி = சம்பந்தன்.
நூபுரம் = சதங்கை.
அரியநாயகன் = உருத்திரன்.
ஆரணநாயகன் = பிரமன்.
கரியநாயகன் = திருமால்.

44. திருவேற்காட்டுப் புராணம்

317. மணிகொண்ட நெடுங்கடலிற் கண்டுயிலுந்
தண்டுளப மார்பத் தோனுங்
கணிகொண்ட மறையவனுங் காண்பரிய
சுடருருவங் காட்டி வானும்
பணிகொண்ட குவலயமும் பணிந்தேத்தச்
சிருட்டிபரம் பரையா யோங்க
வணிகொண்ட வேற்காட்டி லருள்பொழிவேற்
காடனையா மகத்துள் வைப்பாம். (66)

(இ - பொ.) முத்து முதலான கொண்டுள்ள நெடிய கடலில் கண்துயிலும் மகாவிஷ்ணுவும், கணித்துப் படைக்கும் பிரம்மதேவனும் காணுதற்கரிய அக்கினி மகாவடிவங் காண்பித்து, வானவர்களையும், பணிவிடைகொண்ட பூலோகத்தார் பணிந்தேத்திவரவும், படைப்பு முதலான ஐந்தொழில்களும் ஓங்கி நடைபெறவும், அலங்காரமுடைய திருவேற்காட்டில் அருள்மாரி பொழியும் பரமசிவத்தை நாம் தியானிப்பாம். (எ-று.)

(அ - ப.) மணி = மும்மணி. அவை முத்து, பவளம், சங்கு.
தண்துளபன் = துளசீதரன்.
மறையவன் = வேதன்.
குவலயம் = பூமி.
பரம்பரை = வரிசை.
அணி = அலங்காரம்.
வேல்கு ஆள் தனை = சூலபாணியை.

---

45. சானந்தகணேசர் புராணம்

318. பருதி மதிதீ யெனுமூன்றும் பார்வை யாகத்திகழ்ந் திடினுங்
கருகு திமிரம் புலராத களத்தெம் பெருமான்மலை வில்லோன்
சுருதி பரவு மிமையமக டுணைவ னாமப் புணைபற்றிப்
பெருகு துயரத் திரையொழியாப் பிறவிக் கடலை யகற்றுவாம். (67)

(இ - பொ.) மலையை வில்லாகத் தரித்த எம்பெருமானாகிய (வேதங்களால் வழிபடும் இமயவரசன் புத்திரியான பார்வதி பாகனும்) சிவபெருமானுடைய சிவ நாமாவளியென்னும் (புஷ்பகவிமானத்) துணையைப் பற்றிக்கொண்டு, சோம சூரியாக்கினியாம் முக்கண்படைத்த உருத்திரனாய், சாரூப்பிய பதவியையடைந்தாலும், கருகிய ஆணவ மலமாகிய உலராதவிஷத்தில் பெருகிய இருவினை என்னும் திரையை, ஒழியாத பிறவிப் பெருங்கடலை ஒழித்துக் கொள்வாம். (எ-று.)

(அ - ப.) திமிரம் = இருள் (மூலமலம்)
புலர்தல் = உலர்தல்.
சுருதி = வேதம்.
புணை = தெப்பம்.
திரை = அலை.

46. திருவாப்பனூர்ப் புராணம்

319. நீர்பூத்த கடற்கணலை திவலைநுரை
புற்புதத்தி னெறிபோ லெண்ணில்
பார்பூத்த வகிலாண்ட முதித்தொடுங்குங்
கருப்பொருளைப் பரந்தா மப்போர்க்
கார்பூத்த திருவுருவத் தரிபிரமா
தியர்கருத்துங் கடந்து நின்ற
சீர்பூத்த திருவாப்ப னூருடைய
தனிமுதலைச் சிந்தை செய்வாம். (68)

(இ - பொ.) நீர்மயமான கடலின்கண் அலைந்து தேங்காநின்ற நுரைகளும், குமிழிகளும் போன்ற நெறியே, எண்ணில்லாத அண்டகோடிகளையெல்லாம் தோற்றி மறைக்கும் மூலகாரணப் பொருளாம் வைகுந்தவாசனுன நீலமேக சரீரன், பிரம்மன் முதலானவர்களுடைய கருத்தையுங் கடந்து நின்றவோர் சிறப்புப்பெற்ற திருவாப்பனூர் குடிகொண்ட தனி முதற் கடவுளைச் சிந்திப்பாம். (எ-று.)

(அ - ப.) புற்புதம் = குமிழி.
பரந்தாமம் = வைகுந்தம்.
கார்பூத்த திருவுருவம் = நீலமேக சரீரம்.

320. காப்புடையா ரமரர்மணி மகுடகோ
டிகளுரிஞ்சிக் கழற்கால் சேக்குஞ்
சேப்புடையார் கனகவரைச் சிலையுடையா
ரணிசருமந் திருத்தார் மூன்றும்
பாப்புடையா ரெனத்தரிக்கும் பண்புடையார்
வைகைவட பான்மிக் கோங்கு
மாப்புடையார் திருவடித்தா மரையையருட்
டேன்றதும்ப வகத்துள் வைப்பாம். (69)

(இ - பொ.) கோடானுகோடி தேவர்களுடைய மணி மகுடங்களைத் தேய்த்துத் தம் திருவடிகளில் சேர்த்துக்கொள்ளும் காய்ப்பேறினவரும், செவ்வண்ணமேனியுடையவரும், மேரு மலையை வில்லாகத் தாங்கினவரும் (சொர்க்க, மத்திய பாதாளமென்கிற) மூன்று லோகங்களும் பாதுகாப்புடையரெனுங் கீர்த்தி வகித்தவருமான (வைகையாற்றுக்கு வடபாரிசமாக ஓங்கி வளரும்) திருவாப்பனூருடையாரின் திருவருள் என்னுந் தேன் பொங்கிப்பொழியும் திருவடித் தாமரையை மனத்துள் வைத்துப் போற்றுவாம். (எ-று.)

(அ – ப.) காப்பு = காய்ப்பு.
மகுடம் = கிரீடம்.
உரிஞ்சல் = தேய்த்தல்.
சேக்கும் = சேர்க்கும்.
சேப்பு = சிவப்பு.
திருத்தார் மூன்றும் = திரிலோகமும்.
பாப்பு = பாதுகாப்பு.
ஆப்பு = திருவாப்பனூர்.

1. கனகவரைச் சிலை (யுருவம்) உடைய ஆரணி சருமஞ்சேர்ப்புடையார் (வாமபாகம்)
2. திருத்தார் மூன்றும் (எனஆ) தரிக்கும் பண்புடையார்.
3. பாம்புடையார்—எனவும் வுரைதரும்.

---

47. திருப்பூவணப் புராணம்

321. பூமாது மகிழ்துளவப் புயல்வண்ண
நெடுமாலும் புகழ்வெண் கஞ்ச
நாமாது நடனமிடு நான்மறைதேர்
நான்முகனு நயப்ப நன்னீர்த்
தேமாது செழும்பவளச் சடையிருப்பத்
திங்களிரு டுரப்ப வெற்பின்
மாமாது வடிவிலங்க மன்னியபூ
வணத்தரன்றாள் சென்னி சேர்ப்பாம். (70)

(இ - பொ.) பிருந்தையை மகிழும் நீலமேக சரீரனான நெடிய மாலும், வெண்டாமரை நாமகள் நாவில் நடனஞ் செய்ய நால் வேதங்களும் உணர் நான்முகனும் நயந்து வாழ்த்தவும், செழும் பவளச் சடையில் கங்கை நீர் இருக்கவும், இருள் துரந்த மதிமுகமுடைய பார்வதி இடப் பாகத்தில் வீற்றிருந்த திருப்பூவணத்துச் சிவபெருமானுடைய சேவடிகளைச் சென்னி சூட்டுவாம். (எ - று.)

(அ - ப.) துளவப் பூமாது = பிருந்தை.
வெண்கஞ்சம் = வெண்டாமரை.
நாமாது = நாமகள்.
நன்னீர்த்தேமாது = கங்கை.

322. ஒருபொருளா யுயிர்க்குயிரா யுருவநான்
கருவநான் குபய மொன்றா
யருள்வடிவா யகண்டிதமா யசஞ்சலமா
யாதிநடு வந்த மின்றாய்க்
கருதரிதாய்ச் செல்கதியாய்க் காண்பரிதாய்க்
காரணகா ரியங் கடந்த
பொருவில்ப ரிபூரணமாம் பூவணத்தெம்
புனிதனையாம் போற்று வாமே. (71)

(இ - பொ.) ஒரே பரம்பொருளாய், ஜீவாதார மூர்த்தியாய், உருவம் 4, அருவம் 4, உருவாருவம் 1 ஆக 9 அருள்மய வடிவமாய், முழுதும் நிறைந்ததாய், நித்தியானந்தமாய், முதல் நடு ஈறில்லா அநாதியாய், கருதவொண்ணாததாய், செல்லுமோர் நற்கதியாய், காண்டற்கரியதுமாய், காரண காரியங்களைக் கடந்த ஒப்பில்லாத பரிபூரணமான திருப்பூவணத்தெம் சிவபெருமானை யாம் போற்றி வருவாம். (எ-று.)

(அ - ப.) அகண்டிதம் = முழுதும்.
அசஞ்சலம் = சஞ்சலமற்றது (சுகம்.)

ஆதிநடு அந்தமற்றது = அனாதி.
பொருவு = ஒப்பு.
புனிதன் = தூய்மையான சிவபெருமான்.

323. திங்களணி சடாமவுலித் தென்கூடற் சிவபெருமான் சித்த ராகிப்
பங்கமுறு கருந்தாது பைம்பொன்னாங் குளிகையருள் பான்மை யாலே
பொங்கரவ வகலல்குற் பொன்னனையாள் கண்டுவந்து போற்று நீரா
ரங்கணால கம்புகழு மழகியநா யகர்பாத மகத்துள் வைப்பாம். (72)

(இ-பொ.) சந்திரனையணிந்த சடாபாரத்தினையுடைய தென்னாட்டிலுள்ள மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் எல்லாம்வல்ல சித்தராகி, மாசு பொருந்திய கரிய இரும்பினைப் பசும்பொன்னாகும்படி இரசகுளிகை அருளிய தன்மையாலே, பாம்பின் படத்தையொத்த அல்குலினையுடைய பொன்னனையாள் என்னும் பெயரினையுடைய உருத்திரகணிகை, அப்பெருமான் உருவத்தைப் பொன்னால் வார்த்தெடுத்து "அழகிய பிரானே" என்று சொல்லி அள்ளி முத்தங் கொண்டு போற்றிய தன்மையால், இவ்வுலகத்தவரால் 'அழகிய நாதர்' என்று கொண்டாடப்பெறும் எல்லாம்வல்ல சித்தராகிய சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிகளை மனத்தில் வைத்துப் போற்றுவாம். (எ-று.)

குறிப்பு:— பொன்னனையாள் பொருட்டுச் சிவபெருமான் எல்லாம்வல்ல சித்தராக எழுந்தருளி இரசவாதஞ் செய்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்துள் முப்பத்தாறாவது இரசவாதஞ்செய்த படலத்திற் கண்டுகொள்க.

(அ - ப.) சித்தர் = எல்லாம்வல்ல சித்தர்.
கருந்தாது = இரும்பு,
குளிகை = இரசகுளிகை.
அல்குல் = நிதம்பம்.

48. மயூரகிரிப் புராணம்

324. அருளரும்பி யிதயமதி லான்மாக்கண் மலமதனை யகற்ற வேண்டிப்
பெருகியதத் துவங்கூட்டிக் கன்மமெலாம் புசிப்பித்துப் பெயர்த்துப் பின்னை
நிருமலஞ்செய் திணையடிக்கீழ் நிறுத்திவிளை யாட்டயரு நிமல ஞானப்
பரமசிவன் றிருவடிகள் புந்தியுஞ்சென் னியும்வைத்துப் பரவு வாமே. (73)

(இ - பொ.) கருணையை மேற்கொண்டு, ஆன்மாக்களுடைய மும்மலத்தையும் அகற்றுவதற்காகப் பெருகிய முப்பத்தாறு தத்துவங்களையுங் கூட்டிக் கன்மங்களையெல்லாம் நுகரச்செய்து, பெயர்த்துப் பின்னர் ஆணவ மலத்தையும் போக்கித் தம் திருவடியிணைக்கீழ் நிலைநிறுத்தித் திருவிளையாடல் புரியும் பரிசுத்த ஞானமுடைய பரமசிவன் திருவடிகளை வாக்குமனோதீதமாக வைத்து வழிபடுவாம். (எ-று.)

(அ - ப.) தத்துவம் = முப்பத்தாறு தத்துவங்கள்.
அயர்தல் = செய்தல்.
தத்துவம் முப்பத்தாறு:—சுத்த தத்துவம் 5, சுத்தாசுத்தத் தத்துவம் 7, அசுத்தத் தத்துவம் 24 ஆக 36.

49. திருமயிலைப் புராணம்

325. பொன்பூத்த கமலமலர்ப் புத்தேளும்
பூவைவண்ணப் புனித னாதி
தென்பூத்த கடவுளருஞ் சதுர்மறையும்
பரவவருட் டிமிலேற் றண்ணல்
கொன்பூத்த மயிலைநகர்ப் பூம்பாவை
யீசனெனுங் குழகன் ஞான
மின்பூத்த திருவடித்தா மரையையன்பின்
வணங்கியென்றும் வியந்து வாழ்வாம். (74)

(இ - பொ.) கமலாசனப் பிரம்மன், காயாம்பூ மேனியனாகிய விட்டுணு, இயம தருமன், சதுர்வேத முனிவர் முதலானவர்கள் வழிபடும் இடபாரூடரான திருமயிலைப் பூம்பாவை யீசனென்னும் சிவபெருமானுடைய ஞானானந்தத் திருவடித் தாமரையை எந்நாளும் அன்பாகத் தலைவணங்கி மகிழ்ந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) புத்தேள் = கடவுள்.
பூவை = காயாம்பூ.
தென்பூத்த கடவுள் = இயமதருமன்.
திமிலேறு = இடபம்.
குழகன் = சிவன்.

---

50. ஆதிபுரிப் புராணம்

326. மணிகொண்ட செழுந்திருப்பாற் கடற்றுயிலும்
பசுந்துளப மார்பத் தோனுங்
கணிகொண்ட நெட்டிதழ்த்தா மரைப்பொகுட்டி
னுறையயனுங் கடவு ளோரும்
பணிகொண்ட குவலயமும் பணிந்தேத்தத்
திருநோக்கம் பாலித் தோங்கு
மணிகொண்ட பெருங்கருணை யாதிபுரி
நாதனையா மகத்துள் வைப்பாம். (75)

(இ - பொ.) மும்மணிகளுமுடைய திருப்பாற் கடலிற்றுயிலும் துளசிமாலையினையணிந்த விட்டுணுவும், கணக்குக் கடுத்த சததளத் தாமரை மலரில் வசிக்கும் பிரம்மனும், தொண்டினை மேற்கொண்டொழுகும் பூலோகத்தாரும் பணிந்தேத்தத் திருவருள் பாலித்தருளும் அழகிய பெருங் கருணையினையுடைய ஆதிபுரி நாயகனை நாம் மனத்துள் வைப்பாம். (எ-று.)

(அ - ப.) குவலயம் = பூமி.

327. மகிழமனம் வாக்கிலகு துதிசெய்யச் சிரமீது மலர்க்கை கூப்பி
நிகழடியார் பணிந்திறைஞ்சி நின்றுபர வசமாகி நிறைபே ரின்பப்
புகழரிய வானந்தக் கடற்படிந்து பூரிப்பப் புவன முய்யத்
திகழநடம் புரிந்தருளுந் தியாகேசன் மலர்ப்பாதஞ் சிந்தை செய்வாம். (76)

(இ - பொ.) சந்தான பரம்பரையாக வரும் அடியார் கூட்டங்கள்தாம் மகிழ்வாக மனத்தாலும் வாக்காலும் உண்டாகும் துதிகளைத் துதித்துக்கொண்டே மலர்க்கரங்களைச் சிரமீது கூப்பிப் பாடிப் பணிந்து, ஆனந்தப் பரவசம் நிறைந்து புகழ்தற்கரிய பேரின்பக் கடலாகிய பிரம்மானந்தத்தில் அழுந்திப் பூரிப்பவும் உலகம் உய்யவும் நடனஞ் செய்தருளும் தியாகராயருடைய மலர்ப் பாதங்களைச் சிந்திப்பாம். (எ-று.)

(அ - ப.) பரவசம் = தன்னைத்தான் மறத்தல்.
புவனம் = உலகம்.

---

51. திருவொற்றியூர்ப் புராணம்

328. சீராரு நான்முகன்மால் தேடிக்காணாத் திருவுருவா
யருவாகி யிரண்டு மன்றிப்
பேராத வுலகமுத லைந்துமாகிப் பெறுவானுந்
தருவானுந் தாமே யாகி
யாராயும் வேதமுதலெல் லாமாகி யவைதமக்குந்
தோற்றாம லப்பா லாகி
யேராருந் திருவொற்றி யூரின்வாழு மெழுத்தறிவார்
பதகமலஞ் சிரமேல் வைப்பாம். (77)

(இ - பொ.) நான்முகனுந் திருமாலும் தேடிக் காணப்படாத திருவுருவமாய், அருவமாய், இரண்டுமல்லாத அருவுருவமாய், மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐவகைப் பூதமாய், பெறுவானும் பேறுந் தாமேயாகி, சதுர்வேத வேதாங்கமாகி அவை எல்லாவற்றிற்குந் தோன்றாமல் அப்பாற்படும், திருவொற்றியூர்வாழ் எழுத்தறியும் பெருமானுடைய பாதகமலங்களைச் சிரத்தின்மேல் சூடுவாம். (எ-று.)

(அ - ப.) ஐந்துமாகி = பஞ்சபூதமாகி.
வேதமுதல் எல்லாம் = வேதம், வேதாங்கம், சாத்திரம், ஆகமம், புராணம், உபபுராணம், இதிகாசம், கலைஞானம்.

329. காராரு மாலயனார் கைத்தாள முழவொலிப்ப
வாராருந் தனத்துமையாள் கண்டுவந்து மனமுருகத்
தாராருஞ் சடையசையப் பதுமதாண் டவமாடுஞ்
சீராரு மாதிபுரித் தியாகர்திரு வடிபோற்றி. (78)

(இ - பொ.) கரியமால் மேளம் வாசிக்கவும், பிரமன் தாளம் போடவும், கச்சணிந்த தனமுடைய காளியானவள் கண்டு மனமுவந்துருகவும், விரிந்த சடாபாரம் பூமியில் புரளவும் பதுமதாண்டவம் புரியும் திருவொற்றியூர் மாணிக்கத் தியாகருடைய திருவடிகள் போற்றி. (எ-று.)

(அ - ப.) காராருமால் = கரியமால்.
முழவு = மத்தளம்.
ஆதிபுரி = திருவொற்றியூர்.

52. அவிநாசிப் புராணம்

330. பருவவிநா சித்திரநேர் பாவகமார் பூவகமின் பயிலா வீதி
யுருவவிநா சிக்குரிய வொண்சிறுதே ரெனுமுலவை யுலவா முன்றின்
மருவவிநா சிப்பவன மாதவர்தா ரணைபிரியா மாட கூடத்
திருவவிநா சிப்பரமர் செங்கமலப் பொற்பாதஞ் சென்னி சேர்ப்பாம். (79)

(இ - பொ.) மன்மதன் தனக்குரிய பருவப் பிராயமுடைய சித்திரப் பாவையைப் போன்ற தோற்றமுடைய, பூவை மின்னார்களென்னும் குதிரைகளைப் பழக்கி, தென்றற் காற்ருகியதோர் சிறு தேரேறி யுலவாநின்ற முற்றத்தில் மருவிய அக்கினிக் காற்றையும் விக்கும் மாதவர்கள் நிலைபிரியாத மாடமுங் கூடமும் வாய்ந்த அவிநாசிப் பரமசிவனுடைய செங்கமலப் பாதங்களைச் சென்னி சேர்ப்பாம். (எ-று.)

(அ - ப.) பருவவிநா = பருவ வினை, பருவ வயது.
பாவகம் = தோற்றம்.
பூவகமின்னர் = பூவைமின்னர்.
பயிலா = பழக்கி.
வீதி = குதிரை.
உருவவிநாசி = அநங்கன்.
உலவை = தென்றல் காற்று.
முன்றில் = முற்றம்.
நாசி = நாசி கேது (நெருப்பு).
பவனம் = காற்று.
தாரணை = நிலை.
நாசிப்பவனம் = மன்மத பாணம்.

---

53. திருமுருகன் பூண்டிப் புராணம்

331. பூமகள் வதன மென்னப் பொலிந்தருண் மலிந்த காட்சித்
தாமரு முருகன் பூண்டித் தலத்தினி லநாதி யாய
காமரு விலிங்க மாகிக் கதிசெய்மா தவிவ னேசன்
றேமரு செம்பொற் கஞ்சத் திருவடி யிணைகள் போற்றி. (80)

(இ - பொ.) பூந்தாமரை முகத்தாளாகிய இலட்சுமி குடிகொண்டு விளங்கும் செல்வமுடைய திருமுருகன் பூண்டித் தலத்தினில், அநாதியே காத்து இரட்சித்துவரும் இலிங்கமூர்த்தியாகி, பார்வதி வாம பாகனுகும் தெய்வநாயகனுடைய செம்பொற்ருமரைத் திருவடியிணைகள் போற்றி. (எ-று.)

(அ - ப.) வதனம் = முகம்.
வனேசன் = வல்நேசன்.
தே = தெய்வம்.
கஞ்சம் = தாமரை.

332. பாவல னாவ லூரன் பரிசெலாம் பரவை சூழ்ந்த
பூவுல கனைத்து நாளும் புகழ்பெற விளங்கி யோங்கத்
தாவருஞ் சிலைகைத் தாங்கித் தடங்கொணா கரிசூழ் வைப்பின்
மேவிமுன் பறித்த கள்வ வேடனார் வேடம் போற்றி. (81)

(இ - பொ.) நீரால் சூழப்பட்ட நெடியவுலகம் அநவரதமும் புகழ்பெற்று விளங்கியோங்கும்படியாக, தாவி வளைத்தற்கரிய வில்லைக் கையில் தாங்கி, குருக்கத்தி மரங்கள் சூழ்ந்த சாலைப் பக்கத்தில் முன்னொருகால் தங்கியிருந்து, பாவலராகிய திருநாவலூரரின் செல்வத்தை யெல்லாம் கொள்ளையடித்த கள்ள வேடனாகிய பரமசிவத்தின் வேடம் போற்றி. (எ-று.)

(அ - ப.) பரிசு = செல்வம்.
பரவை = கடல்.
தடம் = சாலை.
நாகரி = குருக்கத்தி.
வைப்பு = ஊர்ப்பக்கம்.

---

54. பவானி கூடற் புராணம்

333. பண்ணாரு மறையோனும் பாலாழி துயின்றோனும் படிவம் வேறாய்
விண்ணாடி மண்ணிடந்துங் காண்பரிய பேரொளியாய் மெய்யன் புள்ளோ
ருண்ணாடும் பூரணமாய்ப் புவனசரா சரவுயிருக் குயிராய் ஞானக்
கண்ணாகி நண்ணாவில் வீற்றிருந்த சிவக்கொழுந்தைக் கருத்துள் வைப்பாம். (82)

(இ - பொ.) பண்ணிசை பொருந்திய வேதமோதும் பிரம்மனும், பாற்கடலிற் பள்ளிகொண்ட மகாவிஷ்ணுவும், அம்ச கூர்மாவதாரங்களை யெடுத்து ஆகாயத்தில் பறந்தும், மண்ணைத் தோண்டியும் காணுதற்கரிய பேரொளியாய், மெய்யான உள்ளன்புடையோர்கள் நாடிவரும் பரிபூரணமாய், அண்டசராசர ஆன்மாக்கட் காதாரமாய், ஞானக் கண்ணாகி, பவானிகூடலில் எழுந்தருளிய கொழுந்து திகழ் வெண்பிறைக்கோவைக் கருத்துள் வைத்துக் கொள்வாம் (எ-று.)

(அ - ப.) பண் = இசை.
மறையோன் = வேதன், பிரமன்.
பாலாழி = பாற்கடல்.
படிவம் = வடிவம்.
வேறாய் = அன்னம், பன்றியாய்.
விண்ணாடி மண்ணிடந்தும் = அடிமுடி தேடியும்.
நண்ணா = திருநணா, பவானி கூடல்.

334. அழலான விழியின்மதன் புரம்பொடித்து முப்புரந்தூ ளாக்கு மூரற்
றழலானை யானிரைகள் செவிமடுப்ப வின்னிசைக டயக்குஞ் செல்வேய்ங்
குழலானைக் கொடியாகக் கொண்டானைக் கூற்றினுயிர் குடித்த செம்பொற்
கழலானைக் கனியிலந்தை நிழலானைப் பிறவியறக் கருதி வாழ்வாம். (83)

(இ - பொ.) நெற்றிக் கண்ணால் மன்மதனுடைய சரீரத்தை யெரித்து நீறாக்கி, அதேமாதிரி முப்புரத்தையும் சிறுநகை நகைத்துக் கொளுத்தித் தூளாக்கினவனாய், பசுக்கூட்டங்கள் இன்னிசை கேட்டுப் பூரிக்கும்படியான புல்லாங்குழலினால் வேணுகானஞ் செய்யும் கோபாலனைக் கொடியிடை நாயகியாகக் கொண்டவனாய், எமனை உதைத்து உயிர் குடிக்கத்தக்க பாதத்தானாகிய இலந்தை மரத்து நிழலில் வீற்றிருக்கும் பரமசிவனைத் துதித்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) புரம் = உடல்.
மூரல் = புன்சிரிப்பு.
ஆனிரை = பசுக்கூட்டம்.
தயக்கும் = பூரிக்கும்.
வேய்ங்குழல் = புல்லாங்குழல்.
கொடி = கொடியிடை, மனைவி.
கூற்று = எமன்.

55. கருவூர்ப் புராணம்

335. மேவருதத் துவசித்தி யடைந்துதத்த மெய்யுணர்ந்து விமல ஞான
மூவகையா ருயிர்விளங்கி முதிருமன்பால் வழங்குமொரு முத்தி வாழ்வைப்
பாவனைகள் கடந்துநின்ற பரஞ்சுடரைப் பசுபதிநா யகனை முன்னைத்
தேவர்கடே வைக்கருவூர்ச் சிவக்கொழுந்தை யிதயமலர்த் திகழ வைப்பாம்.(84)

(இ - பொ) எல்லாத் தத்துவங்களும் ஒன்றுபட்டு வரும்படியான அறிவடைந்து, தம்மைத் தாமுணர்ந்து,' விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என விளங்கி முதிரும் அன்பினால் அரசாட்சி நடத்துமோர் மோட்ச சாம்பிராச்சியமானவனாய், வாக்கு மனோதீதமாய் நின்ற பரஞ்சுடராம் பசுபதி நாயகனும், தேவாதி தேவனும் கருவூர்ச் சிவக்கொழுந்தை இதய தாமரையில் விளங்க வைப்பாம். (எ-று.)

(அ – ப.) தத்துவம் = பிருதிவி முதலிய முப்பத்தாறு தத்துவங்கள்.
சித்தி = அறிவு.
மூவகை உயிர் — விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்.

56. திருமாணிக்குழிப் புராணம்

336. சீர்பூத்த நீலகிரித் திருமாணிக் குழிவளருந் தெய்வக் கோயில்
வார்பூத்த களபமுலை மோகினிமா தினைத்தடந்தோண் மகிழப் புல்லுங்
கார்பூத்த கந்தரமுக் கண்ணான்கு கரந்திங்கட் கங்கை வேணி
யோபூத்த வாமனேச் சுரனுதவி நாயகனை யேத்தி வாழ்வாம். (85)

(இ - பொ.) கச்சுப்பொருந்திய கலவைச் சாந்தணிந்த முலைகளுடைய மோகினி யவதாரமெடுக்கும் பெருமாளை மார்புறத்தழுவிச் சங்கர நாராயணரென மகிழும் நீலகண்டமும், முக்கண்ணும், சதுர்ப்புஜமும், திங்களும், கங்கையும், சடையுமாய் அலங்காரங்கொண்ட நீலகிரித் திருமாணிக்குழித் திருக்கோவிலில் வளருங் குலதெய்வமாகிய வாமனேச்சுர சகாய புருஷனை ஏத்தி வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) தடந்தோள் = பெரிய தோள்.
கந்தரம் = கழுத்து.

57. திருவோத்தூர்ப் புராணம்

337. மதிகொண்ட பொலன்சடிலத் திருமுடியுஞ்
சேவடியு மலரி னானும்
துதிகொண்ட பசுந்துளபத் தோன்றலும்பண்
டிகலினராய்த் துருவிக் காணாக்
கதிகொண்ட பேரொளியை வேதமம
ரருக்குரைத்த கருணை யானைப்
பதிகொண்ட வேதபுரத் தினிலமர்ந்த
பராபரனைப் பணிந்து வாழ்வாம். (86)

(இ - பொ.) சந்திர சடாதரத் திருமுடியையும், செம்பொன்னடியையும், பூர்வம் பிரம்மதேவனும், துளபமாலையை யணிந்த மகாவிஷ்ணுவும், ஒருவரோடொருவர் சபதங்கூறினவராய், மேலே வட்டமிட்டும், கீழே ஊடுருவியும், கண்டறியாத பேரொளிப் பிழம்பாயிருப்பவனை, வேதப் பொருளைத் தேவர்களுக்கு உரைத்த கருணையுடையவனை, வேதபுரத்திலெழுந்தருளும் பராபரப் பொருளைப் பணிந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) பொலன் = பொன்னிறம்.
பண்டு = பூர்வம்.
இகல் = போர்.
துருவல் = ஊடுருவல்.
காணா = கண்டறியா.
பிழம்பு = அக்கினித் தம்பம், தாணு.

338. உரத்தானை யுரித்தானை யுடைத்தானை
யெனப்புலித்தோ லுடுத்த வைந்து
சிரத்தானை நடத்தானை யுடைத்தானைப்
பகட்டேறுஞ் சிறந்த தண்டக்
கரத்தானை யுதைத்தானைக் களிற்றானை
யளித்தானைக் கழறும் வேத
புரத்தானை யிளமுலைதோய் புயத்தானைத்
தொழுதெமது புன்மை தீர்ப்பாம். (87)

(இ - பொ.) வலிமைமிக்க யானையை உரித்த தோலைப் போர்வையாக உடையவனாய், புலித்தோலுடுத்து, ஐந்து முகமுள்ளவனாய், நடத்துகின்ற இடப வாகன முடைத்தானவனாய், எருமைமேலேறுந் தண்டக்கரனான எமனை உதைத்தவனாய், கணபதியை அருளியவனாய்ச் சொல்லாநின்ற வேதபுரத்தவனாகிய பார்வதி வாமபாகனைத் தொழுது எமது பிறவிப் பிணியைத் தீர்த்துக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) தானை = ஆடை
ஆணை = இடபத்தை.
பகடு = எருமை.
தண்டக்கரன் = எமன்.

---

58. திருச்சுழியற் புராணம்

339. விடங்காட்டித் திருமிடற்றிற் பிறைகாட்டிப்
படர்சடையில் விரிந்த நாகப்
படங்காட்டி யரையினிடைப் புலியதளி
னுடைகாட்டிப் பவள வாயா
ளிடங்காட்டித் தழற்கணிச்சி வலங்காட்டிக்
கௌதமர்க்கன் றிரங்கித் தில்லை
நடங்காட்டி மணக்கோலங் காட்டியபூ
மீசனடி நம்பு வோமால். (88)

(இ - பொ.) கண்டத்தினிடமாக ஆலகால விடத்தைக் காண்பித்தும், சடாபாரத்தில் மூன்றும் பிறையைக் காண்பித்தும், அரையினில் விரிந்த நாகப் படங்காண்பித்தும், இடையில் புலித்தோல் ஆடை காண்பித்தும், தில்லையில் கௌதமர்க்கோர் விசை இரக்கங்கொண்டு நடனங் காண்பித்தும், மழுவாயுதத்தை வலக்கைக் காண்பித்தும், பவளம் போன்ற வாயினையுடைய பார்வதியை வாம பாகமாகக்கொண்டு திருமணக் கோலங்காட்டியும் திருச்சுழியல் நகரில் உறையும் பூமீச்சுரன் திருவடியை நம்பி வாழ்வோமாக. (எ - று.)

(அ - ப.) மிடறு = கழுத்து.
அரையின் = அரையினில்.
இடை = இடுப்பில்.
இடம் = இடப்பாகம்.
கணிச்சி = மழுப்படை.
கௌ-தமர் = பசுங் குழாங்கள் (ஆன்மாக்கள்).

340. உருச்சுழிக்குஞ் சூலைதவிர்த் தொருபுலவன் றனையாண்டான்
மருச்சுழிக்குந் திருமுடிக்கு மணந்தருகே தகைவேண்டான்
கருச்சுழிக்கு ளடியார்க ளமிழ்ந்தாமற் கரையேற்றுந்
திருச்சுழிக்குட் பரஞ்சுடரைத் தினந்தினமும் பணிகுவமால். (89)

(இ - பொ.) அதிகமாய்க் குடையும் சூலை நோயைத் தவிர்த்து, அப்பர் சுவாமிகளை ஆட்கொண்டவனும், மருவிச் சுழியானின்ற கங்கையை அணிந்த சடாமுடிக்கு மணம் பொருந்திய தாழம்பூவை வேண்டாதவனும், பிறவிக் கடலுள் அடியவர்கள் மூழ்கிப் போகாமல் கரையேற்றுபவனுமாகிய திருச்சுழியல் பரம சிவத்தை நாள்தோறும் வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) உரு = அதிகம்.
சுழிக்கும் = குடையும்.
மருச்சுழிக்கும் = மருவிச் சுழிக்கும்.
மணந்து = கட்டிக் கொண்டு.
கருச்சுழி = பிறவிக்கடல்.

59. மருதூர்ப் புராணம்

341. பூமேவு பொன்வளரு மணிமார்பன்
    பாரதிப்பெண் புணருங் கேள்வன்
மாமேவு புருகூதன் வானவர்மா
    தவமுனிவர் மற்றை நல்லோர்
தேமேவு மிதயதட மலர்ந்துசச்சி
    தானந்தச் செழுந்தேன் பில்குங்
காமேவு திருமருதூர் நாகலிங்க
    ரிணைமணித்தாட் கமலம் போற்றி. (90)

(இ - பொ.) தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி தங்கிய அழகிய மார்பினையுடைய திருமாலும், கலைமகளை மணந்த நான்முகனும், இந்திரனும், தேவர்களும், மாதவ முனிவர்களும், மற்றுமுண்டான நல்லோர்களுமாகியோர் இதயத்தாமரையாகிய உள்ளன்பிலமர்ந்து வரும் சச்சிதானந்தச் செழுந்தேனைக் குடிக்குஞ் சோலைகள் சூழ்ந்த திருமருதூர்—நாகலிங்கப் பெருமானுடைய திருவடியிணைக் கமலங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) பாரதி = சரச்சுவதி.
பில்கும் = பிலிற்றும்.

60. ஆதித்தபுரிப் புராணம்

342. தற்பதத்தின் பொருளாகித் தொம்பதத்துக்
    கசிப்பொருளைச் சார நல்கு
மற்புதத்த னுதித்த புரத்தன்மதி
    முன்பணிவா னுழி யோசை
புற்புதத்தி னுற்பவம்போற் சந்நிதியி
    லுலகியற்றும் புனிதன் வாமச்
சிற்பரைக்கா கமப்பொருளை யருள்பரம
    தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம். (91)

(இ - பொ.) ஏகபதப் பொருளாகித் துவிதத்துக்கு அத்துவிதப் பொருளைச் சார்ந்துவர வருளும் அற்புதனும், அநாதியே நிலவணிந்தவனும், ஒலிகடலிலுண்டாகும் குமிழி தோன்றி மறைவதற்குள்ளே உலகத்தை நடத்தும் பரிசுத்தனும், வாமபாகத்துள்ள பார்வதிக்கு ஆகமார்த்தத்தை உபதேசிக்கும் பரமாசாரியனுமான ஆதித்தபுரிப் பரமசிவத்தினுடைய திருவடிகளைச் சென்னி சேர்ப்பாம். (எ - று.)

(அ - ப.) தற்பதம் = ஏகம்.
தொம்பதம் = துவிதம்.
அசிபொருள் = அத்துவிதம்.
அசி = ஏகம், துவிதம்
புற்புதம் = குமிழி.
புனிதன் = பரிசுத்தன்.

61. திருக்குற்றாலப் புராணம்

343. பூமேவு சதுர்முகத்துப் புத்தேளு
மவனை யுந் திபூத்த தேவுந்
தேமேவு நிலமேவி வான்மேவித்
தினந்தேடத் திரிகூ டத்துக்
கோமேவு பழம்பொருளைக் குற்றாலப்
பரஞ்சுடரைக் குறும்ப லாவின்
மாமேவு மறைக்கொழுந்தைப் பிறைக்கொழுந்தை
வனைந்தானை வணக்கஞ் செய்வாம். (92)

(இ-பொ.) பூந்தாமரைமேவுஞ் சதுர்முகப் பிரம்மனும், பிரம்மனை உந்திக் கமலத்திற்பெற்ற திருமாலும், அடி முடிக்காய் ஆகாயத்திலும், பூமியிலுமாக நாள்தோறும் தேடத் திரிகூடமலையில் சேவை தரும் பழம் பொருளாய், வேதமுதல்வனாய், மூன்றாம் பிறைச் சந்திரனை யணிந்தவனாய், குற்றாலக்குறும் பலாமரத்தின்கீழ் எழுந்தருளும் பரஞ்சுடரை வணங்கி, வினையைத் தீர்த்தல் செய்வாம். (எ-று.)

(அ-ப.) திரிகூடம் = திரிகூடமலை.
மறை = வேதம்.

344. பொன்பூத்த நறையிதழிப் பூமாலை
பொன்னரிய மாலை யாகக்
கொன்பூத்த புயங்கவெள்ளிக் கொடிவேய்ந்த
சடைபவளக் கொடியா வீடு
மன்பூத்த மணவறையா மதிவிளக்கா
மலர்கண் மதுத்தாரை வார்ப்பத்
தென்பூத்த நதிமாதைச் சீர்வேட்குந்
திரிகூடச் சிவன்சீர் வேட்பாம். (93)

(இ-பொ.) மணம்கமழும் கொன்றைப்பூ மாலையைப் பொற்றாலியாகவும், நீண்டகயிறு போன்று பாம்பேறிய சடையையே பவளக் கொடித்தோரணங்களாகவும், திருமேனியையே மணவறைப் பந்தராகவும், நிலவையே விளக்காகவும், திருவருள் நோக்கத்தையே பிரசாதமாகவும், உலகத்தையே தத்தம் செய்து கொடுத்ததாகவும் கொண்டு கங்கையை மணம் புரியும் திரிகூடச் சிவபெருமானுடைய திருமணக் கோலத்தைக் கண்டு மகிழ்வாம். (எ-று.)

(அ-ப.) நறை = மணம்.
பொன்னரியமாலை = மங்கலநாண்.
மது = பிரசாதம்.
புயங்கம் = பாம்பு.
மலர்கண் = திருவருள் நோக்கம்
வீடு = சரீரம், திருமேனி.
நதிமாது = கங்கை.

62. திருநெல்வேலிப் புராணம்

345. ஏர்கொண்ட பரவெளியா யொருவித்தாய் முளைத்தகில மெங்கு மாகி
நீர்கொண்ட வுயிர்க்குயிரா யற்புதமாய் நின்மலமாய் நிறைந்து காட்டும்
பார்கொண்ட பேரொளியைச் சிற்பரனைப் பரம்பொருளைப் பரையோர் பாகச்
சீர்கொண்ட சிவக்கொழுந்தைத் திருமூல நாயகனைச் சிந்தை செய்வாம். (94)

(இ-பொ.) பராகாச வெட்ட வெளியாய், பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணாந்தமாய், உயிர்க்குயிராய், கடல் போன்ற வியாபகமுடையதாய், பரிசுத்தமானதாய்க் காட்டி நிறைந்த, கண்ணுடைய வள்ளலாய், சிரசுகோதய விலாசமாய், பரப்பிரம்மப்பொருளாய், பராபரையை வாமபாகங் கொண்ட சிவக் கொழுந்தான திருமூல நாயகனைச் சிந்திப்பாம். (எ-று.)

(அ-ப.) ஒருவித்தல் = நீக்கல்.
நீர்கொண்ட அற்புதம் = கடலின் வியாபகம்.
நின்மலம் = (மலம் நீங்கல் ஆகவே) பரிசுத்தம்.
பார்கொண்ட = பார்வை மேற்கொண்ட.
பேரொளி = பரஞ்சோதி.

346. பிரசமல ரிதழியறு கரவு தும்பை
பிறைமுடித்த சடைமுடியின் மகுடஞ் சூடி
யிரசதவெற் பெனவிரண் டாயிரங் கொம்பேந்து
மிபமேறி யிலகுசிங்கா தனத்தி லேறிப்
பரசுதரித் திடுகரத்திற் செங்கோ லேந்திப்
பரைகவுரி வடிவுடைய பாவை யோடு
மரசுபுரிந் தருள்கருணையமல ராதி
யநவரத தானர்பத மகத்துள் வைப்பாம். (95)

(இ-பொ.) தேன் மலர்ந்த கொன்றைப் பூங்கொத்தும், அறுகும், தும்பை மலரும், பாம்பும், மூன்றும் பிறைச் சந்திரனும் முடித்த சடாபாரத்தில் கிரீடந் தரித்துக் கொண்டு, வெள்ளியங்கிரியென இரண்டாயிரங் கொம்பேந்தும் யானையைப் போன்ற வேலைப்பாடு செய்துள்ள சிங்காதனத்திலேறி, மழுவுடைய கரத்தில் செங்கோலைத் தாங்கி, வடிவுடைய மாணிக்கமாகிய பார்வதியினோடும் அரசாண்டு வரும் சீவகாருண்யரான திருநெல்வேலி ஆதியநவரதப்பெருமான் பதங்களைப் போற்றுவாம். (எ-று.)

(அ-ப.) பிரசம் = தேன்.
அறுகு = அறுகம்புல்.
இரசதம் = வெள்ளி.
பரசு = மழு.
அநவரதர் = அநாதரட்சகர் (நித்தியர்).

---

63. மருதவன புராணம்

347. பூமேவு திசைமுகன்மா லெனுமவரும்
போற்றரிதாய்ப் பொருவி லாதாய்
நாமேவு செழுமறையி னுட்பொருளா
யகண்டிதமாய் நளின மென்னு

மாமேவு மலர்வாவிக் கயல்வாவிக்
கனியுதிர்க்கும் வளத்தி னீடு
தேமேவு பொழில்புடைசூ ழிடைமருதின்
வளரொளியைச் சிந்தை செய்வாம். (96)

(இ-பொ.) நான்முகனும் திருமாலுங் கண்டு போற்றற்கரியதாய், ஒப்பில்லாததாய், வேதாகம இரகசியமாய், பரிபூரணமாய், திருமகள் தங்கும்படியான செந்தாமரை மலர்கள் மலர்ந்துள்ள தடாகத்தினிடத்தே வாழும் மீன்கள் தாவிக் குதித்துக் கனிகளை உதிர்க்கும்படியான, வளப்பம் மிக்க சோலைகள் சூழ்ந்துள்ள திருவிடைமருதூரில், ஒளிவடிவாய் விளங்கும் மகாலிங்கப் பெருமானைச் சிந்திப்பாம். (எ-று.)

(அ-ப.) பொருவிலாதாய் = ஒப்பிலாததாய்
மறை = சதுர்வேதம்.
உட்பொருள் = இரகசியம்.
அகண்டிதம் = வியாபகம்.
நளினம் = தாமரை.
மலர்வாவி = தாமரைத்தடாகம்
வாவி = தாவி.
வளம் = வளப்பம்.
தேமேவு = தேன்பொருந்திய.
பொழில் = பூஞ்சோலை.

348. தேறுபுக ழிடைமருதி லுறையேக நாயகன்றன் செய்ய தாளு
மூறுமது மலர்க்கூந்தற் பசியமயி லுறையிடமு மோங்கு கங்கை
யாறிலகு சடைமுடியு மைம்முகமு நாற்றோளு மணிமுக் கண்ணுங்
கூறுதிற லிருமானு மொருமழுவு மனவரதங் குறித்து வாழ்வாம். (97)

(இ-பொ.) மிக்க புகழுடைய திருவிடை மருதூரில் எழுந்தருளும் மருதவாணருடைய திருவடிகளையும், வாமபாகத்தில் மலர் மணமூறிய கூந்தலையுடைய பார்வதியையும், கங்கையுள்ள சடாமுடியையும், ஐந்துமுகத்தையும் சதுர்ப்புஜத்தையும், முக்கண்ணையும், மான்மழுவையும் சதாகாலமும் ஓர் அடையாளமாகக் கொண்டு நினைந்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) ஏகநாயகன் = ஒப்பற்ற தலைவன்.
பசியமயில் = மயில் போன்ற சாயலையுடைய பார்வதி.

349. ஒருதவள மால்விடைமேற் புகலவுறு
மொருசிருட்டி யுதயந் தன்னிற்
பொருதனிவான் சிலைநுதல்வேற் றடங்கணுமை
யணங்கினெடு புவன முய்யக்
கருதிமையோர் கணம்புடைசூழ் கயிலையினின்
றணைந்தனைய கயிலை யென்னு
மருதநிழ லிடத்துறையு மருதவாணக்
கடவுண் மலர்த்தாள் போற்றி. (98)

(இ-பொ.) ஆணும் பெண்ணுமான மிதுன லக்கனம் புறப்பட்டாற் போல, ஒரு பெரிய வெள்ளி இடபத்தின் மேல், வில்லைப் போன்ற புருவமும், வேலைப் போன்ற கண்களுமுடைய உமா மகேசுவரியுடன், பூலோகம் சுகப்படும்படி தேவர் முதலான யாவர்களும் சூழ்ந்து வரத் திருக்கயிலாயக் கொடுமுடியினின்றும் பிரயாணமாகி வந்து, அடிமுடியாகிய திருவிடை மருதூர் என்னும் கயிலாயத்தில் வசிக்கும் மருதவாணருடைய திருவடிகள் போற்றி. (எ-று.)

(அ-ப.) தவளம் = வெண்மை.
கயிலை = கபிலை (யைப் போன்றும் அறமுதலான நாற்பாலையும் ஊட்டுங் கடவுள் குடியிருப்பால்)
விடைமேல் புகலவுறும் ஒரு சிருஷ்டி = இடபத்துக்கு அப்பால் மிதுன லக்கனமெனக் கொள்க. இதன் வடிவந்தான் பெண்ணும், ஆணும் போன்றது.

64. திருவையாற்றுப் புராணம்

350. ஞாலமுத லுதாந்த புவனத் துள்ள
நல்லுயிர்க ளெல்லையறப் பிறந்து மாய
மாலயனே கடவுள் வர்க்கம் வந்து
வந்து வாரிமண லளவு மாயுங்
காலமொரு கணமாகிப் புறங்கை யங்கை
காட்டுவான் போலெவையுங் காட்டி மீட்டுச்
சீலமுற விளையாடுஞ் செம்பொற் சோதி
திருவையா றுடையானைச் சிந்தை செய்வாம். (99)

(இ-பொ.) பிரிதிவி முதலாகாய மீருகவுள்ள பஞ்ச பூதவான்மாக்கள் எண்ணிலாதன வந்து பிறந்து மரிக்கவும், அவைகளைப் பிரம்ம, விஷ்ணுக்கள் முதலான தேவகூட்டங்கள் ஓடோடியும் வந்து வாரியெடுத்து மணல் கணக்காக ஆய்ந்த காலத்தை ஒரு கணப்பொழுதுக்குள்ளே மந்திரக்காரனைப்போல, (இரு கரங்களையும் பார் என்று நன்ருகத் திறந்து காட்டி, மறுபடியும் மூடி) எவ்வுயிரையுங் காண்பித்து, இந்திர சாலம், மகேந்திர சாலஞ் செய்யும் திருவையாற்றுப் பரஞ்சுடர் சிவத்தைச் சிந்தித்துப் புகழ்வாம். (எ—று.)

(அ-ப.) வருக்கம் = கூட்டம்.
மணலளவு காலம் = கோடானு கோடிகாலம்.
புறங்கையங்கை காட்டுவான் = மந்திரக்காரன்.

351. மெய்யாறு புடைபுரளத் திங்க ளோட
மேலோடப் பெரும்பாம்பு கிடந்து சீறக்
கையாறு காலேறிக் கீதம் பாடுங்
கடிகமழுந் திருமுடி மேற்கன்ன லாறு
நெய்யாறும் பாலாறும் பசுந்தே னுறு
நிறைபசுவின் றயிராறு நிறைய வாட்டி
யையாற ரையாற ரென்பார்க் கன்றே
யவனியெல்லா மொருகுடைக்கீ ழாள லாமே. (100)

(இ - பொ.) வண்டுகள் கீதம் பாடும், மணமுடைய கொன்றைப் பூந்திரு முடிமேல், கங்கைநீர் பொங்கவும், ஓடத்தைப் போன்ற திங்கள் வளர்பிறை படவும், நாகம் இரத்தினத்தைக் கக்கவும், மேல் வெள்ளம் வந்தாற்போன்ற யாற்றுப் பெருக்கெனக் கன்னலாலும், நெய்யாலும், பாலாலும், தேனாலும், தயிராலும் நிறைய அபிஷேகஞ் செய்து, "ஐயாரு! திருவையாரு!" வென்று போற்றுநருக்கே பூலோகமெல்லாம் ஒரு குடைக்கீழிருந்து ஆளும் பாக்கியமாம். (எ - று.)

(அ - ப.) திங்கள் ஓட மேலோட = நிலவு மேன்மேலும் வளர்ந்தோட (அதாவது) பூரண பிம்பமாக.
பாம்பு கிடந்து சீற = பாம்பு படத்தையெடுத்து மாணிக் கங்கக்க.
ஆறுகால் = வண்டு.
ஆட்டி = அபிஷேகஞ்செய்து.

---

65. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

352. நீர்கொண்ட நெடுஞ்சடைமே லிளமதிதண்
ணிலவெறிப்ப நிலவு செம்பொன்
வார்கொண்ட துணைப்புளக முலைத்திருவெண்
ணீற்றுமையாள் வாமத் தோங்கக்
கூர்கொண்ட படைத்திகிரி மான்முதல்வா
னவர்போற்றக் கோதி லாத
சீர்கொண்ட மணவைவளர் சிவலோகத்
தியாகர்பதஞ் சென்னி சேர்ப்பாம். (101)

(இ - பொ.) கங்கைநீர் பொருந்திய சடாபாரத்தின்மேல் மூன்றும் பிறைச் சந்திரன் பிரகாசிக்கவும், திருவாபரணமும், இரவிக்கையும் சூடிய புளகாங்கிதத் துணை முலையுடைய (விபூதி தரித்து) பார்வதி வாமபாகம் வளரவும், சக்கர கதாகட்கங்களை ஏந்திய மகா விஷ்ணு முதலான தேவர்கள் போற்றி வரவுமாகத் திருநல்லூர்ப் பெருமணத்தில் விளங்கும் சிவலோகத் தியாகர் பதாம்புயம் சென்னி சேர்த்து அணிவாம். (எ - று.)

(அ - ப.) நிலவு செம்பொன் = திருவாபரணம்.
கூர்கொண்ட படை = கதை, கட்கம்.
திகிரி = சக்கரம்.
கோதிலாத = குற்றமில்லாத.
மணவை = திருநல்லூர்ப்பெருமணம்.

353. மதகரட வரையினுரி போர்த்துழுவை
யதளுடுத்து வானோர் போற்ற
நதிவளர்செஞ் சடையதன்மே லுரகமெழி
லறுகினொடு நறுந்தா தோங்கு
மிதழிமதி யணிந்துபெரு மணத்தின்வளர்
பாதாள வீசர் செம்பொற்
பதமலரைப் பணிபவரைப் பணிகுவதென்
றனுக்கிசைந்த பணிய தாமே. (102)

(இ - பொ.) முதுகில் யானைத்தோலைப் போர்த்தும், அரையில் புலித் தோலுடுத்தும், சடையில் கங்கை, நாகம், கொன்றைப் பூங்கொத்து, சந்திரன் இவைகளை யணிந்தும் திருநல்லூர்ப் பெருமணத்தில் எழுந்தருளிய பாதாள வீச்சுரனுடைய பொற்பாத கமலங்கள் பணியும் பத்திமான்களைப் பணிவதே அடியேனுக்கிசைந்த தொண்டாகும். (எ - று.)

(அ - ப.) மத கரடம் = மத யானை.
உழுவை = புலி.
அதள் = தோல்.
நதிவளர் = வளர்நதி (கங்கை).
உரகம் = பாம்பு.

66. மயூராசலப் புராணம்

354. அனைத்துலகு மனைத்துயிரு மவற்றினுண
வாதியுமா யலவு மாகி
நினைத்திடுதற் கரிதாகி நிருமலஞா
னானந்த நிறையு மோனர்
மனத்தினொளிர் பேரொளியாய் மலருமலர்
மணமெனவே மருவி நின்று
மெனத்துணையு மினைத்தனவென் றுணரவொணாப்
பரம்பொருளை யேத்து வாமே. (103)

(இ - பொ.) உலகுயிரனைத்துக்கும் ஆகாரபுவனமாய், மல மாயா கன்மங்களிற் சம்பந்தப் படுத்தாவண்ணம், ஆன்மாக்களுக்கோர் அரிய பெரிய சுத்தாத்துவித ஞானாநந்தம் நிறைந்த மௌனிகளின் இருதயத் தொளிரும் பரஞ்சுடராய், பூவும் மணமும் போலக் கலந்திருந்து, எந்த விதத்திலும் இந்த விதம் என்று அறியப்படாத மாயூரகிரிப் பராபரப்பொருளை ஏத்தி வருவாம். (எ - று.)

(அ - ப.) அனைத்தவற்றின் அலவுமாகி = மலசம்பந்தப் படுத்தாவண்ணமாய்.
உணவாதி = உண்டி, உடை முதலான.
நிருமலஞானம் = சுத்தாத்துவித ஞானம்.

355. பசுவேசற் பதியடங்கும் பாசமறி
வெனப்பகர்ந்த பால னாஞ்சித்
தசுவேசப் புங்கவனை யேயதற்குச்
சான்றாகத் தன்பால் வைத்தோன்
முசுவேசிற் பொழிருவு மயிலைமலை
விசாலாட்சி முதல்வி பாகன்
விசுவேசப் பெயரிலிங்க வடிவுடைப்பெம்
மான்சரணம் விரும்பி வாழ்வாம். (104)

(இ - பொ.) பாசம் பற்றறத் தொலைந்ததும், பசு (வாகிய ஆன்மா) தானே (சென்று) பதியைச் சேருமென மொழிந்த பிள்ளையாராகிய சுவேதவனம் மெய்

கண்டதேவனைத் தன்னிடத்தில் சைவசித்தாந்தத்திற்கோர் தலைவனாக நியமித்துக் கொண்டவனும், குளிர்ந்த நிழலைத் தரும் பூஞ்சோலைகள் தாவிய மயிலாசல விசாலாட்சியம்மனின் வாமபாகனுமான வடிவுடைய விசுவேசலிங்கப் பெருமானுடைய சரணங்களை விரும்பி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) சற்பதி = பசுபதி.
பாலன் = பரிபாலகன்.
சுவேசம் = சுவேதம்.
சித்தபுங்கவன் = மெய்கண்டதேவன்.
ஏயதனக்கு = ஏயதற்கு = சைவ சமயத்திற்கு.
பெம்மான் = பெருமான்.
அதற்குச்சான்றாக = சுத்தாத்துவிதச் சைவ சித்தாந்த முத்திக்குச் சாட்சியமாக.

---

67. திருப்பெருந்துறைப் புராணம்

356. கார்பூத்த வண்டகம்பாய் முண்டகஞ்சார்
நான்முகனுங் கவுத்து வப்பேர்த்
தார்பூத்த வோர்பானு மார்பானுங்
கயிலாய சைலத் தானு
நார்பூத்த துதியெடுப்பக் குருந்துறையும்
பெருந்துறையி னயந்து மேவி
யார்பூத்த வருள்கொழிக்கு மான்மநாதக்
கடவு ளடிதாழ்ந் துய்வாம். (105)

(இ- பொ.) வண்டுகள் மொய்யாநின்ற தாமரைப் பூவிலுதித்த பிரம்மதேவனும், கவுத்துவாபரண மாலையணிந்த இலட்சுமி மார்பனான மகா விஷ்ணுவும், கயிலாசபதியாகிய பரமசிவனும் ஆகிய மூர்த்திச் சொரூப மெல்லாந் தாமேயென்று (அன்போடு உலகம்) அறியும்படியாகத் திருப்பெருந்துறை குருந்த மரத்தடியில் எழுந்தருளி, ஆருயிர்க்கான திருவருள் சுரக்கும் ஆன்மநாதக் கடவுளின் திருவடிகளைப் பணிந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) கவுத்துவம் = துளசி மணி.
முண்டகம் = தாமரை.
பானு = அழகு, இலட்சுமிக்கும்.
நார் = அன்பு.
ஆர் = உயிர்.
கொழிக்கும் = சுரக்கும்.
எடுப்ப = எடுத்தறிய.

357. கரியவனுங் கலத்தலரும் பாதமவன்
மனைவியுடல் கலப்பத் தோன்றிப்
பிரியமிக வெழுந்தருளி வந்துதிரு
வாதவூர்ப் பெரியர் போற்றித்

துரியநிலை கடந்துசிவ போகமது
வுண்டுகளி துயின்ற நீழல்
விரியவுயர் குருந்தடியி லிருந்தருளும்
பெருவாழ்வை விளம்பி வாழ்வாம். (106)

(இ - பொ.) திருமாலும் கண்டடைதற்கரிய, அவன் மனைவி இலக்குமியின் திருமேனிக் கொத்த செம்மை நிறங் காட்டிடும் சீர்பாதத்தால் மிகப் பிரியத்துடன் எழுந்தருளித் திருவாதவூர் வந்து மாணிக்கவாசகர் முதலிய மகான்கள் துதித்தும், சித்தாந்த முத்தியான சிவாநந்த போகத்தை யுண்டும், யோக நித்திரை செய்யாநின்ற நிழல் படர்ந்துயர் குருந்த மரத்தடியில் வீற்றிருந்தருளும் பேரின்ப வாழ்வைப் பாடிக் கொண்டாடி வாழ்வாம். (எ - று.)

(அ - ப) கரியவன் = திருமால்.
துரியநிலை கடந்தது = சித்தாந்த முத்தி.
அவன் மனைவி யுடல் கலப்பப் பாதந் தோன்றி = இலக்குமி பிறந்த தாமரையைப் போன்ற பாதம் (தோன்றிக்) காட்டும்.

358. அரியமறை மேலானென் றுரைப்பதனைக் கற்றவர்நூ லளவை யானே
தெரியவல ரல்லாதார் தெரிவர்கொலோ யாவர்களுந் தெரியு மாறு
பிரியமிகு மொருவருக்காத் தலைச்சாத்து முதலியவை பிறங்க நாளு
முரியவொரு பரியேறி யுலாயசே வகன்மலர்த்தா ளுள்ளத் துள்வாம். (107)

(இ -பொ.) வேதங்களெல்லாம் மேலான பரம்பொருள் என்றுரைப்பக் கேள்விப்பட்டவர்கள், நூல் பிரமாணத்தானே தெரிந்து கொள்ளத் தக்கவர்களல்லர். ஆகையினால், தேவர் மூவர் யாவருந்தெரிந்து கொள்ளுமாறு, மிகுந்த பிரியந்தரும் மாணிக்கவாசகருக்காய், தலைப்பாகை அங்கி முதலான விளங்கப் பழக்கமானதோர் குதிரை மேலேறி யுலாவி வந்த பரிமேலழகர் திருவடித்தாமரைகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) அளவை = பிரமாணம்.
ஒருவருக்கா = திருவாதவூரருக்காக.
தலைச்சாத்து = பாகை.
பரி = குதிரை.
சேவகன் = காப்பாற்றுவோன்.

68. காசி ரகசியம்

359. சீர்பூத்த விடப்பாலும் வலப்பாலும் பசிதாகஞ் செகத்திற் கோம்பும்
பார்பூத்த வன்னபூ ரணிமந்தா கினிதழுவப் பதுமன் மாயோ
னார்பூத்த பனிமலர்தூய்ப் போற்றெடுப்பக் காசிநகர் தழைப்ப மேவு
மேர்பூத்த விச்சுவநா யகனடித்தா மரைமலர்க ளிறைஞ்சி வாழ்வாம். (108)

(இ - பொ.) அகில லோகங்களுக்கும், திருவருட் பிரசாதம் விரும்பி அளிக்கும் கிருபா நோக்கங்கொண்ட அன்னபூரணியம்மன் இடப் பாகமாக, கங்கையம்மன் வலப் பாகமாகத் தழுவ, பிரம்மனும் விஷ்ணுவும் பனிமாமலர்

தூவித் தண்டஞ் சமர்ப்பிக்கும், காசித்தல மெழுந்தருளிய விச்சுவநாதன் திருவடித் தாமரை மலர்களை இறைஞ்சி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) ஓம்பும் = விரும்பி அளிக்கும்.
பசிதாகம் = பசியுந்தாகமும்.
பார்பூத்த = கிருபா நோக்கங் கொண்ட.
மந்தாகினி = கங்கை.
தூய் = தூவி.

69. திருநாகைக் காரோணப் புராணம்

360. சீர்பூத்த வானவரு மோனவருந் தவராசச் செல்வ வேந்தும்
பார்பூத்த வாரணனு நாரணனுங் காரணனும் படியுள் ளோர்ந்து
நார்பூத்த வழிபாடு கழிபாடு கொளாதியற்றி நயக்க மேவுங்
கார்பூத்த கடனாகைக் காயாரோ கணப்பெருமான் கழலுட் கொள்வாம். (109)

(இ - பொ.) நான்முகனும், நாராயணனும், இந்திரன் முதலான தேவர்களும், மோன ஞானிகளும், தவராசச் செல்வர்களும் விடாமல் உள்ளபடியே அன்பு செலுத்தி வந்தனை வழிபாடு புரிந்து மகாமங்கள வைபவமாயிருக்கும் (கடலை அடுத்துள்ள) திருநாகைக்காயாரோகணப் பெருமானுடைய கழல் உட்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) மோனவர் = மோன ஞானிகள்.
கழிபாடு கொளாது = விடாது, நாள்தோறும்.
நயக்கமேவும் = வைபவமாயிருக்கும்.

361. அருவமுத லொருமூன்றுள் கட்புலனா வனவிரண்டா லவற்று ளெல்லா
வுருவமுமுண் டாக்கிடும்வித் துபயமேயென் றெறித்தாங் கொலித்துப் பொங்கி
வெருவவெழு கடலெழுங்கா லிலிங்கமா யதினின்றும் வேருய்க் காட்சி
மருவமுனி வரர்க்குதவு மாதிபுரா ணப்பெருமான் மலர்த்தாள் போற்றி. (110)

(இ - பொ.) அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்றினாலும் உண்டாகும் கண்கள் இரண்டாகையினால், அவற்றில் கண்ணொளியாயிருந்தெல்லா வுருவத்தையுந் தோற்றுவிக்கும், வமிச வழியான மகிபனெனப் பிரகாசித்து, பொங்கி யொலித்து அலைகளெழும் கடல் வியாபகம் போல் அடையாளமாய் நின்று, அதிற்ருனே வேருகத் தோன்றி முனிவர்களுக்குச் சத்தியஞான தரிசனைகள் உதவி வரும் ஆதிபுராதனப் பெருமானுடைய மலர்த்தாள்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) மூன்றுள் = மூன்றுளும்.
இரண்டால் = இரண்டாகையினால்.
வித்து = வமிசவழி.
உபயம் = மகிமை, மகிபன்.
இலிங்கம் = அடையாளம்.
புராணம் = புராதனம்.

362. கழகவிடங் கரையிலவா நாகநக ரகமேல் கீழ்க்கண்ணுங் கோறல்
பழகவிடங் கரைமாய்த்தான் மணிமார்பு நறுமுறுப்பப் பன்னாள் சென்றுங்
குழகவிடங் கரையாது களத்தமைத்தா யென்றமரர் கூற மேய
வழகவிடங் கரைமாயைப் படங்கரைய மடங்கரைய வடுத்து வாழ்வாம். **(111)**

(இ-பொ.) “பல்லூழிக் காலஞ் சென்றும், நீங்காத இளமை யுடையவரே ! விடம் கரையாது நிற்பக் கண்டத் தமைத்தவரே !” எனத் தேவர்கள் ஒரு பக்கம் நின்று இறைஞ்சவும், கீழ்த்திசை யானையாகிய கசேந்திரன் மேல் எதிர்த்துக் கொல்ல வந்த முதலையைச் சக்கரத்தால் சம்மரித்து மாய்த்த மகாவிஷ்ணு மற்றொரு பக்கம் நின்று தம் குறைகளை எடுத்துச் சொல்லவும், அளவிலாத மாட மாளிகைகள் நிறைந்த திருநாகைக்காரோணத்தில் எழுந்தருளிய அழகவிடங் கரை, நமது மாயா படலங் கரையவும், மடமை நீங்கவும் அடைக்கலம் புக்கு வாழ்ந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) கழகவிடம் = வாசத்தானம்.
நாகநகர் = திருநாகைக் காரோணம்.
கோறல் = கொல்லல்.
இடங்கர் = முதலை.
மணிமார்பு = துளசிமணி மார்பனுகிய விட்டுணு.
நறுமுறுப்ப = குறையிரந்து வேண்ட.
குழக ! = குமர !
களம் = கண்டம்.
மேய = மேவிய.
படம் = படலம்.
மடம் = மடமை.

---

70. திருக்குடந்தைப் புராணம்

363. பூமேய வாரணனு நாரணனும் வாரணனும் பொற்பூ மாலைத்
தேமேய விண்ணவரு நண்ணரும் பதமுதலாஞ் சிறப்பு நல்கி
மாமேய குடமூக்கி னிடமூக்கின் பார்கருணை வடிவின் மேய
பாமேய புகழாதி கும்பேசர் தாமரைத்தாள் பணிந்து வாழ்வாம். **(112)**

(இ - பொ.) பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள், பாதாதி கேசமாகப் பாமாலையும், பூமாலையுஞ் சூட்டி வழிபட்டு வரும் திருக்குடந்தையில் இடப்பாகங் கொண்டு விளங்கும் பார்வதி சமேதரான ஆதிகும்பேச்சுரர் திருவடித் தாமரைகளை மகா பெரிய பன்னிரு திருமுறைகளால் துதித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) ஆரணன் = பிரம்மன்
வாரணன் = ஐராவதன், இந்திரன்.
பதமுதலாஞ் சிறப்பு = பாதாதி கேசம் பாடுவது.
குடமூக்கு = கும்பகோணம்.
இடம் ஊக்கு இன்பு ஆர் = உற்சாகமாக இடப் பாகங் கொண்டு விளங்கும்.
மாமேய = மகா பெரிய.
பாமேய புகழ் = பன்னிரு திருமுறை.

364. இடைமருதர் முதலாவோ ரைவர்நா கேசர் நடமியற்ற வல்லார்
கடையணுகாச் சோமேசர் காரோண ரபிமுகர் நற்கவுத மேசர்
தடையிலருட் பாணபுரி யார்சுதரி சனர்சார்ங்க தரர்வ ராக
ரடைவரத ரிவர்சூழ வமர்கும்ப லிங்கேச ரடிகள் போற்றி. (113)

(இ - பொ.) பாணபுரியார், சுதரிசனர், சாரங்கதரர், வராகர், வரதர் இவர்கள் முதலான ஐவர் சூழ, இடை மருதர், நாகேசுவரர், நடேசுவரர், சோமேசுவரர், காரோணேச்சுரர், அபிமுகேசுவரர், கவுதமேசுவரர் ஆகிய ஏழு மூர்த்த முடையவராய் அமர்ந்தொளிரும் கும்பலிங்கேசர் திருவடிகளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) நடமியற்றவல்லார் = நடேசர்.
கடையணுகாத் தடையிலருளடை = கடாட்சிக்கும் அருள் வடிவே மூர்த்தமும் அடைந்து.

(அ - ம்.) இவர் முதலாவோரைவர் சூழ.

71. மாயூரப் புராணம்

365. சீர்பூத்த விமையாரு மமையாருந் தோட்சசி சேர் செல்வ வேந்தும்
பார்பூத்த திருவானும் பெருவானும் புகழ்புரவு பண்ணு வானுங்
கூர்பூத்த வேனோருந் தேனோரு மலரிறைப்பக் குறித்த நல்கி
யேர்பூத்த மயிலாடு துறையமரும் வள்ளலா ரிருதாள் போற்றி. (114)

(இ – பொ.) இமயவரையிற் பிறந்த (அம்மையாராம்) பார்வதி தோளை மருவும் செல்வநாயகனும், பெரியவானைப் பார்க்கிலும் அதிகமாகத் திருவிக் கடைந்தெடுத்த அமுதத்தை மேன்மேலும் பங்கிடப் பண்ணுவானும், கூரியஞான முடையோர்கள் மணம் நிறைந்த மலர்களால் பூசிக்க, அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து மயிலாடுதுறையில் எழுந்தருளியவனுமான வள்ளலின் திருவடிகள் போற்றி. (எ - று)

(அ - ப.) இமையாரும் = இமயமலையில் பொருந்திய.
அமையாரும் = மூங்கில் போன்ற
சசி = பார்வதி
திருவான் = திருவிக் கடைந்த அமுதம்,
புரவு = கொடை.

366. இச்சையறி வுறுதொழிலாய்ப் பரையாதி யாதியா யெண்ணி லாத
விச்சைசெயா ரணிமுதலாய்ச் சத்திவிந்து வாதியாய் வேரூ யின்னு
மச்சையினி தோம்பிடுவா னளவாத கருணையிற்பல் லண்ட மீனும்
பச்சைமயில் போற்றெடுக்க மாவடிவீற் றிருப்பாரைப் பரவி வாழ்வாம். (115)

(இ - பொ.) விருப்பத்துக்குத்தக்க திருவருட்செயலாய், சந்தான பரம்பரையாய், எண்ணில்லாத விஞ்சய மந்திரங்களைச் செய்யும் தலைமையான வேதவல்லியாய், ஆதி சுயம் பராசத்தியாய், வேரூன்றி வரும் பிறவியினியெடாமற்படிக்கான காருண்ணியத்தினால் பாதுகாக்கும் பொருட்டுப் பலவழிகளை ஏற்படுத்தியிருக்கும் பச்சை மயிலணங்காகிய பார்வதி வாமபாகமிருக்க, மயிலாடுதுறையில் எழுந்தருளும் பரமசிவத்தை வழிபட்டு வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) அறிவுறுதொழில் = திருவருட் செயலாய்.
பரையாதியாதியாய் = சந்தான பரம்பரையாய்.

(அ - ம்.) வேறாயின்னும் அச்சையினிது அளவாத கருணையில் ஓம்பிடு வான் பல்லண்டமீனும் பச்சை மயில்.

---

72. உறையூர்ப் புராணம்

367. சீர்பூத்த மாலயனிந் திரனமரர் முதன்மற்றைச் செம்மை யோரு
மேர்பூத்த மலர்பலவற் றினுமதிகம் வில்வமென்றிட் டிறைஞ்சப் பெற்றுந்
தார்பூத்த நறியவதன் மேல்வைத்த பெருவிழைவு தணியா னாகிப்
பார்பூத்த திருவுறையூர் வில்வவனத் தமர்ந்தானைப் பரவி வாழ்வாம். (116)

(இ - பொ.) திருமாலும், பங்கயனும், தேவேந்திரனும், மற்றைய தேவர்கள் முதல் யாவர்களாலும், மலர்கள் பலவற்றினும் சிறப்பாக அதிகரித்தது வில்வதளமொன்றே யென்று பூசிக்கப்பட்டும், பெருமையுடைய அவ்வில்வத்தின் மேல் வைத்த பேரன்பையாற்றாதவனாய், திருவுறையூர் வில்வ வனத்தில் எழுந்தருளிய பரமசிவனை யடிபணிந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) பெருவிழைவு = பேரன்பு.

368. கைவண்ணத் துடையாற்குங் கதிர்வண்ணத்
தாமரை யிற்கலந் துளாற்கு
மெய்வண்ணப் பெருமறைக்கும் வெளிவண்ண
மாகானை விள்ளா வன்பர்க்
குய்வண்ணப் பொருந்தலன்றி நைவண்ணப்
பொருந்தானை யுறையூர் மேவு
மைவண்ணப் பெருமானை யலர்வண்ணப்
புதுமலர்தூ யகத்துள் வைப்பாம். (117)

(இ - பொ.) கையில் திருமுகங்கொண்டு தூதுசென்ற மகாவிஷ்ணுவுக்கும், சூரியக் கிரணங்களைப் போன்று விரியும் தாமரையாசனத்திலமர்ந்த பிரம்மதேவருக்கும் வெளிப்படையாக அறியப்படாதவனாய், நம்பி வரும் அடியார்களுக்கு யாதொரு துன்பமும் வராமற்படி திரோபவத்திற்கு மப்பாற்பட்ட அனுக்கிரகத்தில் வாழும்வண்ணம் அருள்பவனான உறையூர் ஐவண்ணப் பெருமானைப் புது மலர்கள் கொண்டு அர்ச்சித்துப் போற்றுவாம். (எ-று.)

(அ - ப.) கைவண்ணம் = திருமுகம், தூதோலை.
பெருமறை = திரோபவம்.
மெய்வண்ணம் = அனுக்கிரகம்.
கைவள்நத்து உடையான் = கையில் சங்கினைக் கொண்டுள்ள திருமால்.
மெய்வண்ணப் பெருமறை = உண்மைப் பொருளுடைய பெரிய வேதம்.
விள்ளா = விட்டுப்பிரியா.

(அ - ம்) விள்ளா அன்பர்க்கு நைவண்ணம் பொருந்தலன்றிப் பெருமறைக்கும் மெய்வண்ண முய்வண்ணம் பொருந்தானை.

---

73. திருவம்பர்ப் புராணம்

369. பூமேவு கற்பகநாட் டிமையவரு மமையவரும் புகழ்சால் வேந்தும்
பாமேவு மறையானு முறையானுந் திக்கணயன் படைத்து ளானு
மாமேவு மற்றையரு முற்றையரும் பணியேற்று வரங்க ணல்கிக்
காமேவு திருவம்ப ரமர்பிரம புரேசர்ப தங்கருதி வாழ்வாம். (118)

(இ - பொ.) (மேலுலகமாகிய கற்பக நாட்டுத் தேவர்கள் புடைசூழ வரும்) தேவேந்திரனும், சதுர்வேதனும், அவனை (நாபிக் கமலத்தில் படைத்த) மகாவிஷ்ணுவும், மற்றும் பல பெரியோர்களுஞ் செய்யும் ஆன்ம சுத்தி, பூசுத்தி, மந்திர சுத்தி, திரவிய சுத்தி, இலிங்க சுத்தியாக ஐவகையால் முற்றும் பூசைகளை யேற்றுக்கொண்டு, (அவர்கட்குத் தக்க) வரங்களைக் கொடுத்து இரட்சிக்கும், திருவம்பர் (மாகாள) மேவிய பிரமபுரேசர் பதாம்புயத்தை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) இமையவர் = வானவர்.
அமைய வரும் = புடைசூழ வரும்.
பாமேவு மறையானும் முறையான் = வேதபாராயண முறை சொல் பிரமன்.
உந்திக்கண் அயன்படைத்துளான் = விஷ்ணு.
முற்று-ஐ-அரும்பணி = பஞ்ச சுத்தியால் முற்றுப் பெறும் பூசை.

370. கள்ளமணுத் துணையுமுருப் பேரன்பின்
மிகப்பொலி செங்கண் ணினூர்த
முள்ளமென வவரியற்று கோயிலெலா
முவந்ததன்றி யுவகை மேன்மே
னள்ளமிளிர் தரும்பிரம வரைக்கோயி
லகம்புகுந்து நவில்வார் பாசந்
தள்ளவளர் பெருங்கருணைப் பிரமலிங்கப்
பெருமானைச் சரணஞ் சார்வாம். (119)

(இ – பொ.) உள்ளதுள்ளபடியே உண்டான பேரன்பினுல் மேம்பட்டு விளங்கிய கோச்செங்கட் சோழர் தம் உள்ளம்போல் கட்டிய கோயில்களில் விரும்பி வீற்றிருந்ததல்லாமல், திருப்பிரமவரைக் கோயிலிலும் எழுந்தருளி மேன் மேலும் ஆனந்த முண்டாகத் துதிப்பவர் பாசத்தையறுத்துத் தள்ளப் பெருங் கருணை வளர்ந்தோங்கும் பிரமலிங்கப் பெருமானைச் சரணஞ் செய்வாம். (எ-று.)

(அ - ப.) கள்ளம் அணுத்துணையும் உரு = அணுவளவுங் கபட வேடமில்லாத.
(அ - ம்.) உவகைமேன்மேல் நள்ள நவில்வார் பாசந்தள்ள வளர்பெருங் கருணை.

74. திருவாளொளி புற்றூர்ப் புராணம்

371. சீர்பூத்த நறுங்கமல மேலவனு மாலவனுஞ் செம்பொ னுய
வூர்பூத்த சுதன்மசபை யானுமொளி யீனுமுடி யும்ப ராரு
நார்பூத்த புவியாருங் குவியாரும் வந்திறைஞ்ச நாளு நல்கி
யேர்பூத்த வாளொளிபுற் றூரமர்மா ணிக்கலிங்க ரிருதாள் போற்றி. (120)

(இ - பொ.) மகாவிஷ்ணுவும், பதுமாசனப் பிரமனும், பொன்னகர்க்கிறைவனான இந்திரனும், இரத்தினக் கிரீடங்கள் தரித்த தேவர்களும், பூலோகத்தவர்களும், உள்ளன்போடு வந்து கைகுவித்திறைஞ்சப் புலவர்கட்கு எந்நாளும் நல்ல வரங்களைத் தந்து, திருவாளொளிப்புற்றூர் எழுந்தருளும் மாணிக்கலிங்கருடைய திருவடிகள் போற்றி. (எ-று.)

(அ - ப.) சுதன்மம் = இந்திரனுடைய பொன்னகர்.
நார்பூத்த குவியாரு மிறைஞ்ச = உள்ளன்போடு கைகூப்பி யிறைஞ்ச.

75. விளத்தொட்டிப் புராணம்

372. சீர்பூத்த விச்சாஞா னக்கிரியை நீங்காமை தெரித்தா லென்னப்
பார்பூத்த மூவிலைவில்வா ரணியத் தினிதமர்ந்து பரவிப் போற்றுந்
தார்பூத்த புயத்தயன்மா லாதியருக் கருள்சுரந்து தழையா நிற்குங்
கார்பூத்த மணிமிடற்றுப் பிரமபுரீ சரைநாளுங் கருதி வாழ்வாம். (121)

(இ -பொ.) இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி ஆய மூன்றும்தம்மில் பிரியாமையைத் தெரிவித்ததென்ன மூன்றிதழ்கொண்டு செழித்த வில்வாரணியத்தில், நீங்காமல் எழுந்தருளித் தம்மை வழிபடும்படியான பிரம்ம விஷ்ணுக்கள் முதலானவர்களுக்குத் தமது வெற்றி மாலையணிந்த பூச்சக்கரத்தால் திருவருள் பாலித்து வாழவைக்கும் நீலகண்டமுடைய பிரமபுரீசரை எந்நாளும் போற்றி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) தெரித்தால் = தெரிவித்தால்.
(அ - ம்.) தார்பூத்த புயத்தருள் சுரந்து.

76. கோயிலூர்ப் புராணம்

373. மாமேவு கோகனத மரும்பன் மலருதல் குவிதன் மருவத் தோயாத்
தூமேவு பரிதி யெனத்தன் முனர்முத் தொழினடப்பத் தோயா தான்றோர்
பாமேவு மிடங்கொள் வன்னி யிரண்டலமூன் றெனவமரர் பரவ மேவுங்
கோமேவு வன்னிவனக் கொற்ற வாளீசர் பதங்கு றித்து வாழ்வாம். (122)

(இ - பொ.) செந்தாமரை மலர் அரும்புதலுக்கும், மலருதலுக்கும், குவிதலுக்கும், மருவித்தோயாநின்ற சூரியப்பிரகாசம்போல, தம் சன்னதி முன்பு, படைப்பு முதலாகிய முத்தொழில் நடைபெற்றுவர, கவிவாணர்களுடைய வாக்கினின்று உண்டாகும் பானு, மதியைப் போன்ற இரண்டு நெருப்புகளல்லவெனத் தேவர்கள் மூன்றாவதாகத் துதிக்கத்தகும் திருக்கோயிலூர் வன்னிவனக் கொற்ற வாளீசர் பாதம் கும்பிடுவாம். (எ-று.)

(அ - ப.) கோகனதம் = தாமரை.
வன்னி = நெருப்பு.

374. தன்னிகரி றலப்பெருமை தனையுணர்ந்தோ மாதவர்தஞ் சங்க நாளு
மன்னிவசிப் பதுதெரிந்தோ கழனிநகர் கைலையென வயங்க றோர்ந்தோ
பொன்னிநதிக் கரைமுதற்பற் பலவிருக்க மதுக்குடிஞைப் பொலிதீ ரத்து
வன்னிவனத் திடைப்புகுந்த கயிலாய நாதர்பதம் வணங்கி வாழ்வாம். (123)

(இ - பொ.) தனக்குத்தானே நிகராகிய தலமகாத்மியந்தனை யுணர்ந்தும், மாதவர்களுடைய திருக்கூட்டம் எந்நாளும் நிலைத்து வசிப்பதறிந்தும், திருக்கோயிலூர் கயிலாயம்போல விளங்குவது தெரிந்தும், பொன்னியாற்றங்கரையோரம் பற்பல மரங்களடர்ந்த மருதநிலத்தூரின் பக்கமாம் வன்னிவனத்தில் கயிலாயநாதர் குடிபுகுந்தார் ஆகையால் அவர் பாதத்தை நாம் வணங்கி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) கழனிநகர் = கோவிலூர்.
விருக்கம் = மரம்.
குடிஞை = ஆறு.

77. திருக்குறுக்கைப் புராணம்

375. பூமேவு நறுங்கமலத் திருமுனியுந் தருமுனியும் புழைக்கைத் தானத்
தாமேவு கடாக்களிறு காத்தவனும் பூத்தவனு மாயி ஞனுந்
தூமேவு மகவானும் புகவானும் பிறவுமருள் சுரந்து நல்கி
மாமேவு குறுக்கையமர் வீரட்டே சுரர்மலர்த்தாள் வணங்கி வாழ்வாம். (124)

(இ - பொ.) மரத்தையும் வேரோடு முறிக்கவல்ல தும்பிக்கையையுடைய கசேந்திரனைக் காத்து இரட்சித்த பெருமாளும், மணமுடைய தாமரை மலரில் மேவிய நான்முகனும், தேவேந்திரனும், மற்றவர்களும் அன்பு செலுத்த, அவர்களுக்குத் திருவருள் கொடுத்துப் பாதுகாக்கும் திருக்குறுக்கை வீரட்டேச்சுரருடைய திருவடி மலர்களைப் பணிந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) கமலத் திருமுனி = பிரமன்.
தருமுனியும் = மரமுறிக்கும்.
களிறுகாத்தவன் = கசேந்திர வரதன்.
மகவான் = இந்திரன்.
புகவானும் = வானும்புக = உள்ளன்பு செலுத்த.
பிறவும் = பிறரும்.

376. எங்குமவ னன்றியோ ரணுவுமசை யாதென்ப தியாருந் தேரத்
தங்குசிவ யோகிருந்த ஞான்றுயிரெ லாமிருந்த தன்மை தேர்ந்துங்
கொங்குமலர் மலரென்று கருதாதிட் டவன்சேர்ந்தார்க் கொல்லி யாகப்
பொங்குறுதல் விழிமலர்ந்த பரமகுரு சாமிபொற்றாள் போற்றி வாழ்வாம். (125)

(இ - பொ.) எவ்விடத்திலும் அவனையல்லாமல் ஓரணுக்கூட அசையாதென்பதை எல்லாருந் தெரிவதற்காகச் சிவயோகங் கொண்டிருந்த நாளில், எல்லாவுயிர்களும் யோகத்திருப்பதுணர்ந்தும் யோசியாமல் கொங்குமலரெடுத்துவிட்ட மன்மதனுடைய சரீரம் எரியும்படியாக நெற்றிக்கண் திறந்திடும் குறுக்கை பரம குருசுவாமிப் பொன்னடிகளைப் போற்றி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) யோகு = யோகம்.
கருதாது இட்டவன் = மன்மதன்.
சேர்ந்தார்க் கொல்லி = நெருப்பு.

78. தனியூர்ப் புராணம்

377. பூமேவு தூயவனு மாயவனுந் தொழுதெழவெண் பொடியே கொள்வேந்
தூமேவு விரையெனவே யுரையெனவே தாகமமுன் சொற்றும் வேறு
பாமேவு விதங்கொடுவா னனியூரிற் றனியூரிற் பரவோர் பூசை
மாமேவு பேரன்புண் முழுகீசர் புழுகீசர் மலர்த்தாள் போற்றி. (126)

(இ - பொ.) பரிசுத்தமான அர்த்தத்துடன் வேதாகமங்கள் முன்னே விரைந்து சொன்னதும், மற்றத் திருப்பாடல்களிலே கட்டளையிட்டதுமான திருவெண்ணீற்றையே தொழுதெழுந்து பூசிக்கொள்ளும் பிரமதேவரும், மகாவிஷ்ணுவும் பரவி வழிபடும் பூசையாகிய பேரன்பில் முழுகியெழும் ஈசரான தனியூர் என்னும் புனித தலத்தில் விளங்கும் புனுகு சட்டநாத வள்ளலார் மலரடிகள் போற்றி. (எ-று.)

(அ - ப.) வெண்பொடி = விபூதி.
விரை = விரைவு.
சொற்றும் = சொன்னதும்.
வேறு. = மற்றும்.
பரவோர் = பரவுவோர்.
புழுகு = புனுகு.

(அ - ம்.) 1. தூமேவு விரையெனவே உரையென வேதாகமங்கள் சொற்றும்.
2. வேறு பாமேவுவிதங் கொடு, வான்வேம் வெண்
பொடியே தொழுதெழ
பூமேவு தூயவனும், மாயவனும் பரவுஓர்
பூசைமாமேவு பேரன்புள் முழுகீசர்.
3. நனியூர் தனியூரில் புழுகீசர்.

---

79. சூத சங்கிதை பூருவ காண்டம் உத்தரகாண்டம்

378. பொன்பூத்த பரிதிகொழுங் கதிரினிரு
ளிரித்துலகப் பொருளி னோடு
கொன்பூத்த தனையும்விழிக் குணர்த்திமகி
ழுறுத்தலெனக் குலவுண் மாசு
மின்பூத்த வருளினிரித் தறிவுயிரைத்
தனையுணர்த்தி விளக்க மேய்த்துத்
தென்பூத்த வின்பமகிழ் வுறுக்குமொரு
பரஞ்சுடரைச் சேர்ந்து வாழ்வாம். (127)

(இ - பொ.) உதயகாலச் சூரியன் தன் கொழுத்த காந்தியினால் இருளைப் போக்கி உலகத்திலுள்ள பொருள்கள் தெரியும்படி தன்னையும் நேர்முகமாக அறிவித்து மகிழ்விப்பதுபோல, மனத்தகத்துள்ள மலமாயாவிருளையும் திருவருட் பரஞ்சோதியினால் போக்கி, ஆன்மாவுக்குத் தன்னைத் தானுணர்த்திப் பூரண

பருவம் போலாய பேரின்பத்தில் உறுத்தும் ஒப்பற்றவொரு பரஞ்சுடரையுன்னி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) பொன்பூத்த = வெள்ளி முளைத்த திசையில் உதித்த.
தென்பூத்த வின்பம் = பேரின்பம்.

379. மேலாய வறுசமயர் விளம்புபொருள் களுமாகி வேறு மாகி
நாலாய வாரணமா கமநவிலுங் குறிகடந்த நலத்த தாகிச்
சேலாய திருநெடுங்க ணன்னையுமத் தனுமாகிச் செறிவோ லாது
பாலாய வெவற்றுநிறைந் தொளிருமொரு பரம்பொருளைப் பற்றி வழ்வாம். (**128**)

(இ - பொ.) மேலான அறுவகைச் சமயத்தார் கூறும் சாத்திரமாகியும், வேருகியும், நான்கு வேதங்களும் இருபத்தெட்டாகமங்களும் சொல்லுமோர் சொல் முடிவுக்கு அப்பாற்பட்டதோர் நன்மையுடைத்தாகியும், கருணை நோக்கமுடைய அம்மையப்பனுகியும், ஒரு நீக்கமும் உருமல், பார்க்குமிடமெவற்றும் நிறைந்தொளிரும் பரம்பொருளைச் சரணுகதியாகப் பிடித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அறுசமயர் = சைவம், வைணவம், சாத்தம், சௌரம், காணுபத்தியம், கௌமாரம்.
நவிலுங்குறி = புராண இதிகாச முதல் வேறுமுள கலைகளெல்லாம் எனவும் படும்.
அன்னையுமத்தன் = அம்மையப்பன்.

380. பத்தியின் விளையும் பரம்பொரு ளாகிப் பசுவறி வொழிதரார் தொடரா
நித்திய நிமலப் பேரொளி யாகி நிகரிலி யாகியெவ் வுயிர்க்கும்
புத்தியு மினிய முத்தியும் புணர்க்கும் புண்ணிய மூர்த்தியு மாகி
முத்தியு மாகி விளங்கிடு மனுதி முழுமுத லவனடி தொழுவாம். (129)

(இ - பொ.) பத்திமையில் விளையும் பரம்பொருளாகியும், பசுஞானம் நீங்கப் பெருதவர் அடைய முடியாத நித்தியசுத்தப் பேரொளியாகியும், தனக்குத்தானே சமானத்துவமாகியும், சகல ஆன்மாக்களுக்கும், புத்திபூர்வ முத்திமுடிவைப் புணர்த்தித் தரும் புண்ணிய மூர்த்தியுமாகி, முத்திப்பொருளாகவும் விளங்கும் அனுதி முழு முதல்வனடி தொழுது வாழ்வாம். (எ - று.)

(அ – ப.) புத்தியும் = பூத்திபூர்வம்.
முத்தியும் = முத்திமுடிவும்.
முத்தி = முத்திப்பேறு.

381. தோற்றமுறு தன்முனர்ப்பங் கயங்காந்த மறன்மலர்தல் சுடர்தீக் காலன்
மாற்றரிய சுவறலுற வுஞ்சிறிதும் விகாரமரு வாப்பொன் னேய்ப்பச்
சாற்றலுறு தன்முனர்முத் தொழிலுலக மருவவுந்தன் னமும்வி கார
மேற்றலில தாயொளிருஞ் சிவச்சுடரைப் பந்நாளு மிறைஞ்சி வாழ்வாம். (130)

(இ – பொ.) சூரியன் தன்னிடமாகத் தாமரை விரிந்து மலருதல் போலவும், சுடர்தீக்கனலில் அதிகமாகக் காயினும் தன்னொளி சிறிதுங்கெடாத பொன்னே போலவும், தமது சன்னிதான முன்பு உலகமானது படைப்பு முதலாகிய முத்தொழில் அடைந்தாலும், தமக்குக் கொஞ்சமும் கவலையில்லாதவராய் விளங்குஞ் சிவபரஞ்சுடரை எந்நாளுந் தோத்திரஞ் செய்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) காந்தம் = சூரியன்.
சுவறல் = காய்தல்.
தன்னம் = சொற்பம்.
தன்னமும் = சிறிதும்.
விகாரம் = கவலை.

80. திருக்கோவலூர்ப் புராணம்

382. பரிதிமதி வலம்புரியும் பராரைபரு வரைகுனித்தங்
கரிசிதமால் வரையிலிருந் திமயவரை யுயிர்த்தமணி
மரகதமால் வரையினிரு வனச்சொர்க்க வரையையெண்டோட்*
டிருவரையிற் புணர்கோவல் வீரட்ட னடிசேர்வாம். (131)

(இ - பொ.) சூரியசந்திரர்கள் வலம்வரும்படியான மேருமலையை வில்லாக வளைத்து, வெள்ளியங்கிரியில் இருந்து தேவர்களை உயிர்ப்பித்த மணிகண்டனும், மரகதவல்லியாகிய பார்வதியின் இரண்டு வனப்புடைய கும்ப கலசங்களை எட்டுத் தோள்களும் நெருங்கப் புணர்வானுமான திருக்கோவல் வீரட்டேசனுடைய திருவடி சேர்வாம். (எ - று.)

(அ - ப.) பராரைபருவரை = மேருமலை
குனித்து = வளைத்து.

81. திருத்தினைநகர்ப் புராணம்

383. நீர்கொண்ட மழைமுகில்போ னிறங்கொண்ட
திருமேனி நெடிய மாலுக்
நேர்கொண்ட வயமடுவெங் திறல்கொண்ட
முரன்முதலா யிசைக்கும் வென்றிக்
கூர்கொண்ட படையரக்கர் தமைமண்டிப்
பொருதிடுவான் கொடுத்த கோவைச்
சீர்கொண்ட சுருதிமுடிப் பேர்கொண்ட
சிவக்கொழுந்தைச் சிந்தை செய்வாம். (132)

(இ - பொ.) நீருண்டமேகம் போல் நீலநிறத் திருமேனியனான நெடிய மாலுக்கு (மச்சமாதி தசாவதாரத்துக்கும் உதவும்படியானதாகவும், அரக்கர்களைக் கொன்று ஜெயமடையும் பொருட்டாகவும், வெற்றிகொண்ட சக்கராயுதத்தைக் கொடுத்த கோமானான (வேதாகம முடிவில் வீற்றிருக்கும்) சிவக்கொழுந்தைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) முரல் = மின்.
படை = சக்கராயுதம்.
மண்டிப்பொருதிடுவான் = நெருங்கிக்கொல்லும் பொருட்டு.

---

* எண்டோள் எப்படியென்றால்:—பார்வதியின் நான்கு புஜங்களும், பரமசிவன் நான்குபுஜங்களும் கூட எட்டாம்.

384. பரித்தவரை வரைத்தவரைப் *பரித்தவரை
முடிக்கணரைப் பனிவெண் டிங்க
டரித்தவரை மதனெரிய விழித்தவரைப்
பொதுவினடித் தவரைக் கைம்மா
வுரித்தவரைப் பிரமகத்தி யரித்தவரைத்
தவப்பிருங்கிக் குற்ற சாப
மிரித்தவரைச் செழுந்தினையை விதைத்தவரைத்
தொழுதுபவ மிரித்து வாழ்வாம். (133)

(இ - பொ.) உயர்ந்த வடமேருவில் பாரதமெழுதிய விநாயகக் கடவுளைப் பரிந்தளித்தவராய், சடாமுடியில் பிறைச் சந்திரனையணிந்தவராய், மன்மதன் எரியும்படி நெற்றிக்கண் திறந்தவராய், திருச்சிற்றம்பலத் திருப்பொதுவில் நடித்தருளுபவராய், ஆனையுரித்தவராய், (இராமனுடைய) பிரம்மகத்தி தோஷம் போக்கிக் காப்பாற்றினவராய், பிருங்கி மாமுனிக்கு வந்த சாபத்தை ஒழித்தவராய் விளங்கும் திருத்தினை நகர் சிவக்கொழுந்தை வணங்கி, நம் பிறவியை நீங்கி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) வரைத்த = வரைந்த.
கைம்மா = யானை.
அரித்தல் = போக்கல்.
இரித்தல் = நீக்கல்.

385. நவக்கொழுந்தா மரையன்முத லாமமரர்
தலைக்கொழுந்தை நவைதீர் மேலோர்
தவக்கொழுந்தைக் காசிமுதற் றலங்களின்வா
ழிலிங்கங் கடமக் கெலாமுற்
பவக்கொழுந்தென் றருமறைக ளெடுத்தியம்பு
மொருபொருளாய்ப் பரமாய் மேய
சிவக்கொழுந்தைத் தொழுமவரைத் தொழுதெமது
பவக்கொழுந்தைச் சிதைத்து வாழ்வாம். (134)

(இ - பொ.) வெண்சிவப்பாக விளங்கும் தாமரைக் கமலாசன பிரம்மதேவன் முதலாய எல்லாத் தேவர்களுக்கும், சூடிக்கொள்ளுமோர் தலைக்கொழுந்தாய், பரிசுத்த நாதாக்களுடைய தவக்கொழுந்தாய், காசி முதலாய தலங்களில் வாழ் இலிங்கங்கள் தமக்கெல்லாம், முற்பவக் கொழுந்தென்று அரிய வேதங்கள் முறையிடும்படியானவோர் பரம்பொருளாய் மேவும் சிவக்கொழுந்தைத் தொழும் அடியார்களைத் துதித்து நமது பிறவியைத் தொலைப்பாம். (எ - று.)

386. பூமலி குழன்மா வாணி புலோமசை முதலோர் கண்டத்
தேமமங் கலநாண் மாறா திலகவன் கடுவ யின்ற
காமரு கயிலை யாளி கருணைவா ரிதிமின் பாகன்
றாமரை யனைய பொற்றா டலைமிசை யிருத்தி வாழ்வாம். (135)

(இ – பொ.) பூங்குழலுடையாராகிய இலக்குமி, சரச்சுவதி, இந்திராணி முதலானவர்களுடைய கழுத்தின் தாலிக் கயிறு சுபமாயிருக்க, ஆலகால விடத்தையுண்ட திருக்கயிலாச வாசியான கருணையங்கடலாகிய பார்வதி வாமபாகனுடைய திருவடித் தாமரைகளைத் தலைமேற் சூடி வாழ்வாம். (எ - று.)

---

* யந்தவரை எனவும் இடம்.

(அ - ப.) மா = இலக்குமி.
வாணி = சரச்சுவதி.
புலோமிசை = இந்திராணி.
அயின்ற = உண்ட.
வாரிதி = கடல்.

---

82. திரிசூலகிரிப் புராணம்

387. பூமாது மகிழ்நன்மது வொழுகுங் கஞ்சப்
பொகுட்டிறைவிண் முகட்டுறையும் புலவர் வேள்விக்
கோமான்மற் றெவராலுங் குறித்தற் கொண்ணாக்
குணக்கடலை மணக்கடுக்கை வேணி யானை
வாமானற் றுவசத்து வள்ள றன்னை
மதிப்பாரைப் பதிப்பால்வைத் தருளு மன்னைக்
காமாரி தனைமறியார் கரத்தி னானைக்
கந்தபொருப் பானையென்றுஞ் சிந்தை செய்வாம். (136)

(இ - பொ.) இலட்சுமிபதியாகிய விஷ்ணுவும், தேன்சொட்டும் பங்கயாசனனாகிய பிரம்மனும், உச்சிமேலுறையும் முனிவர்களும், வேள்வி நாயகனாகிய இந்திரனும், மற்றவர்களும் குறிப்பாயறிதற்கொண்ணாத குணசாகரமாய், மணம் பொருந்திய கொன்றைச் சடையனாய், இடபக்கொடியுடைய வள்ளலாகி, வழிபடுவார்களைப் பதிஞானம் கொடுத்து இரட்சிக்கும் மன்னவனாகி, காமாரியாய், மானேந்திய கையனான திரிசூலகிரிச் சிவபெருமானை எந்நாளுஞ் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) மகிழ்நன் = மணவாளன்.
பொகுட்டு இறை = பிரமன்.
முகடு = உச்சி.
வேள்விக்கோமான் = வேள்வி நாயகன் (இந்திரன்).
காமாரி = காமதகனன்.
மறி = மான்.

388. செய்யவளை யாழிதந்த செய்யவடன் கொழுநன்
றேடரிய பரஞ்சுடரைச் சிவனையரி வையர்பா
லையமெனச் சென்றுமத னையலரீந் தவனை
யையவிடை யாள்பாகத் தையனை யெண்குணனை
மெய்யிலகும் பூதியனை மெய்யிலகு மடியார்
மேயவினை போயகல வீடருள்வோன் றன்னை
பையரவந் தரிக்கநெடு மையரவந் தரித்தாண்
மல்லிகார்ச் சுனனையுன்னி வரும்பவத்தைச் சிதைப்பாம். (137)

(இ - பொ.) பரந்து வளைந்த கடல் தந்த இலட்சுமிகாந்தனாகிய திருமாலும், தேடற்கரிய பரஞ்சுடராய், தாருகா வனத்து இருடி பத்தினிகளாம் அரிவையர்களிடம் பிச்சை கேட்கச்சென்று, மன்மதனைப் போலப் பஞ்சபாணங்கள் வளைந்து தொடுத்த பிட்சாடனனாகி, உண்டோ இல்லையோவென்று ஐயுறத் தக்க மெல்லிடையுடைய பார்வதியம்மனை வாமபாகமாகவுடைய ஐயனாகி, தன் வயத்தனாதல் முதலாய எட்டுக் குணங்களுடையவனும், திருமேனியெல்லாம்

விபூதியுத்தூளனனாகி, உண்மையாக வழிபடும் அன்பர்களுடைய இருவினை கழன்றதும், உடனே முத்தி வீடு தந்தருள்பவனாய், தமிழ்ப்பாடல் கேட்டிரங்குவோனெனுங் குறிக்கிணையாகி அரவாபரணம் பூண்ட மல்லிகார்ச்சுன மலைப் பரமசிவனைத் தியானித்துப் பிறவியை வேரறுப்பாம். (எ - று.)

(அ - ப.) ஐஅலர் = வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம்.
அரவம் = தமிழ்.

389. விரிசூல மாதுவயி றுளைந்து நொந்து
வெருவிமிகக் கலுழ்போதிற் றாயா னானை
யெரிசூலை மாற்றியன்பற் கினிதினெய்தி யியற்றொடை
யையெமக் குதவென் றிசைத்தோ னைப்போர்
புரிசூல கரசூரன் மாயச் செய்த
பொறிமஞ்ஞை யூர்தியனுக் கருள்வோன் றன்னைத்
திரிசூல பருப்பதநா தனையுள்ளத் துஞ்சிரத்
துஞ்சேர்த் திரும்பிறவித் திருக்கை வெல்வாம். (138)

(இ - பொ.) பத்து மாதமும் நிறைந்த கர்ப்ப மாது பிரசவ வேதனைப்பட்டு அஞ்சியழும்போது தாயாய் வந்தாண்டவனாய், அப்பர் சுவாமிகளுக்குச் சூலைநோயை மாற்றியருளியவனாய்த் தன்மேல் "கூற்றாயினவாறு" முதலாய தேவாரங்களைப் பாடும்படி கட்டளையிட்டவனாய், சூரபதுமன் முதலாய அசுரர்களை மாளச் செய்த புள்ளி மயில் வாகனனாகிய சுப்ரமணியனைப் பெற்றெடுத்தவனாய் விளங்கும் திரிசூலகிரிச் சிவபெருமானைப் போற்றிப் பிறவிக்குற்றம் வென்றொழிப்பாம். (எ-று.)

(அ - ப.) விரிசூலமாது = நிறைந்த கர்ப்பமுடைய பெண்.
வயிறுளைந்து = பிரசவ வேதனைப்பட்டு.
வெருவி = அஞ்சி.
கலுழ்போது = அழும்போது.
அன்பன் = அப்பர்.
தொடை = பாமாலை (பதிகம்).
சூரன் = சூரபதுமன்.
பொறிமஞ்ஞை = புள்ளி மயில்.
பருப்பதம் = மலை.
திருக்கு = குற்றம்.

83. புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

390. திருமாலும் பதுமம்வள ரயன்முதலாங்
கடவுளருந் திகழு மேன்மை
தருமாலி னிழலுறையுஞ் சனகாதி
யரும்வேளூர் தன்னிற் போற்றக்
கருமாலின் றொடர்பகற்றிப் பதவிபெற
மருந்தளித்துக் கருணை செய்யும்
வருமாலை யிளம்பிறைசேர் வைத்தியலிங்கன்
பொன்னடியை வணக்கஞ் செய்வாம். (139)

(இ - பொ.) திருமாலும், பதுமாசனனாகிய பிரமன் முதலான தேவர்களும், கல்லால மரத்தின் நிழலின் கீழ் வசிக்கும் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரராகிய இந்நால்வரும் போற்றிவர, அவர்க்கு மணிமந்திர அவுடதங்களைக் கொடுத்து மாயாவிருள் தொடக்கை நீக்கிப் பேரின்ப முத்தியடையும்படி கருணை செய்யும் சந்திரசேகரனாகிய வைத்தியலிங்கன் பொன்னடியை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) மருந்து = அமுதம்.
இளம்பிறைசேர்வரும்மால் = சந்திரசேகரன்.
வைத்தியலிங்கம் = வைத்திய + ஆலிங்கனம்.

84. திருவேரகப் புராணம்

391. முந்தாதி காரணகா ரியங்கடந்த
சிவமாகு மூர்த்தி யாகிப்
பந்தாரு முலைவிமலை யிடம்பொருந்தி
யுலகமெலாம் படைத்து நீக்கி
மந்தார மலர்மாலை நிலவெறிப்பக்
கங்கைநதி வழிந்து பாயுங்
கொந்தாருஞ் சடைத்திருவே ரகமுடையா
னடிபணிந்து குழைந்து வாழ்வாம். (140)

(இ - பொ.) அனாதியே காரண காரியங் கடந்த பரசிவமாகும் மூர்த்தியாய், பந்தைப்போன்ற தனமுடைய பார்வதி இடப் பாகம் பொருந்தி, உலகங்களையெல்லாம் படைத்தழித்து மந்தார மாலையும் பிறைச் சந்திரனும் ஒளிவீச, கங்கை நீர் வழிந்து பாயும் கொன்றைப் பூங்கொத்தணிந்த சடாபாரமுடைய திருவேரகத்து எழுந்தருளியுள்ள சிவபெருமான் அடிபணிந்து துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) முந்தாதி = முதன் முதல் அனாதி.
கொந்து = கொத்து.
குழைந்து = கலந்து.

85. பழனிப் புராணம்

392. ஒளிவந்து திகழுமனத் தறிநிறுவி யுணர்வுகயி றொருங்க வீக்கிக்
களிவந்து கடையவெழுந் தெள்ளமுதை யளியில்விளை கனியை யுள்ளே*
யளிவந்த வந்தனையா ரனந்தபர வசராகி யருந்து ஞானத்
தெளிவந்த செழுந்தேனைச் சிவலோக நாயகனைச் சிந்தை செய்வாம். (141)

(இ - பொ.) (மந்தரகிரியைப் போல) மனமாகிய தம்பத்தை நிறுத்தி, உணர்வாகிய கயிற்றால் சுற்றிக்கட்டி, பேரின்பத்தைக் கடையும் பொருட்டு வரும் தெள்ளமுதாய், அருளில் விளைந்த முப்பழமாய், உள்ளன்போடு வழிபடுபவர்கள் ஆநந்தப் பரவசராகி அருந்தும்படியான தெளிந்த ஞானச் செழுந்தேனான பழனி சிவலோக நாயகனைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) தறி = தம்பம்.
நிறுவி = நிறுத்தி.
வீக்கி = கட்டி.

---

*வரத்தையளிக்கும்படியான கனிகரமுடையவனாய் எனவும் உரைதரும்.

86. திருச்செங்கோட்டுப் புராணம்

393. அருவாயு முருவாயு மருவுருவ
மாகியவை யல்லா தாயுந்
திருமாலு நான்முகனுந் திருவடியுந்
திருமுடியுந் தேடிக் காணு
விருசாய லோருருவா யெவ்வுயிர்க்குந்
தாய்தந்தை யாமே யென்னு
மருவாருங் கொடிமாடச் செங்குன்றூர்
நின்றவன்றாள் வணக்கஞ் செய்வாம். (142)

(இ - பொ.) அருவமாகியும், உருவமாகியும், உருவாருவமாகியும், அப்படிக் கல்லாததோர் சுத்த சூன்யமாகியும், பிரம்ம விஷ்ணுக்கள் தேடியும் காணப் படாத அடிமுடியின் இரண்டு மாதிரியும் ஒரே வடிவமாய், எல்லாவுயிர்களுக்கும் யாமே தாய்தந்தையென்னுங் கொடி கட்டிய மாடவீதி வருஞ் செங்குன்றூர் பரம சிவன் திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) சாயல் = மாதிரி.

87. சுசீந்திரப் புராணம்

394. பூமா துபொருந் தியமார் பினது
நாமா துதிருந் தியநா வினனுந்
தாமா தரனுஞ் சிவதா ணுவெனுஞ்
சீமா னைநினைந் துதினம் பணிவாம். (143)

(இ – பொ.) இலட்சுமி மார்பணுகிய திருமாலுக்கும், நாவில் நாமகளை யுடைய நான்முகனுக்கும், ஆதாரகர்த்தனும் சிவபெருமான் என்னும் செல்வ நாயகனை நாள்தோறும் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) பூமாது = இலக்குமி.
நாமாது = சரஸ்வதி.
சீமான் = செல்வந்தன், தலைவன்.

88. திருப்பைஞ்ஞீலிப் புராணம்

395. பாதார விந்தபரா பரையொடுமா யாதருவுற் பத்தி யாகிப்
பூதாதி நாதமுடி வாம்பணைகள் விரித்தகில புவன கோடி
மீதான கனிகளைத்தந் துயிர்வரிவண் டினங்களுண்டு விளங்க நோக்கி
யாதார மாகியபஞ் ஞீலிநித்த னடிவணங்கி யருள்பெற் றுய்வாம். (144)

(இ - பொ.) தாமரையைப் போலுந் திருவடியுடைய பார்வதியம்மனுடன் கூடி, சித்தமறியாதபடி சித்தத்தில் நின்றிலகு திவ்விய தேசோமயமான அணு வாய், பூதமுதலாகவே நாதபரியந்தமுமாம் கிளைகளை விரித்து, அதிலெல்லாம் ஆகாரபுவனமென்னும் கரங்களைக் கனியவைத்து, உயிர்களாகிய வண்டுக் கூட்டங்கள் உண்ணும்படிக்கு அருள் நோக்கம் புரிந்து, ஆதாரபூதமாய் விளங்

கிய திருப்பைஞ்ஞீலி சிவபெருமான் சேவடிகளை வணங்கிச் சிவமயமாய் விடுவாம். (எ-று.)

(அ - ப.) பணை = கிளை.

---

89. குளத்தூர்ப் புராணம்

396. சீர்கொண்ட தாம்விழுங்கத் தகுசோ மன்வாய்ச்
சென்றிடல்போல் வெண்டலையி னடியூ டேகி
நார்கொண்ட வடியருடற் பாசந் தீர்க்கு
நலத்தின்ம றைதொல்லுரியைக் கழற்றி நெஞ்சி
னேர்கொண்ட மகிழ்கூரு மணிவாய் செஞ்சூட்
டிலகரவ வணிபரிக்கு மெம்பி ரானைப்
பேர்கொண்ட குளந்தையில் வாழ்சோம நாதப்
பெருமானை மதித்தி றைஞ்சித் துதித்து வாழ்வாம். (145)

(இ - பொ.) மதியை விழுங்குவதுபோல் வெண்டலையினடியே நுழைந்தும், அன்புமிக்க அடியாருடைய பாசத்தை இறைவன் நீக்குவதுபோல் தனது சட்டையைக் கழற்றியும், அழகுடன் விளங்கும் மாணிக்கச் சூட்டுடன் திகழும் பாம்பினை அணிந்த பெருமானைப் புகழ் பெற்ற குளத்தூரில் வாழும் சோமநாதப் பெருமானை வணங்கித் துதித்து வாழ்வாம். (எ - று.)

---

90. திருநாவலூர்ப் புராணம்

397. கங்கைமதி திகழ்சடையுங் கருணைபொழி
திருமுகமுங் கண்கள் மூன்றுஞ்
செங்கையுறை மழுமானுஞ் செம்பவள
மேனியணி சிறந்த நீறும்
பொங்கரவா பரணமுமொண் மணிமிடறும்
புலித்தோலும் புரிமுந் நூலு
மங்கையிடப் பாகமுமா விளங்குசிவ
மாமணியை மனத்துள் வைப்பாம். (146)

(இ - பொ.) கங்கையுஞ் சந்திரனும் விளங்கும் சடையும், திருவருள் சொரியும் திருமுகமும், மூன்று கண்களும், மழு மானுடைய செங்கமலக் கரங்களும், திருநீறணிந்த செவ்விதாம் பவழத் திருமேனியும், பொங்கிய அரவாபரணமும், திருநீல கண்டமும், புலித்தோலுடையும், முப்புரி நூல் மார்பும், பார்வதி வாம பாகமுமாகத் திருநாவலூர் வரும் சிவபெருமானைத் தியானிப்பாம். (எ-று.)

(அ - ப.) மணி = விடம்.
புரிமுந்நூல் = முப்புரி நூல்.

---

91. திருப்பனந்தாட் புராணம்

398. தேர்கொண்ட நெடுஞ்சிகரச் செழுங்களப
முலைவனிதை சிறந்து காண
நீர்கொண்ட சடைமௌலி நிலவெறிப்ப
விரியயனு நிரந்து போற்றப்

பார்கொண்ட முனிவர் தொழப்பொது
வினிடமினிய நடம்பயிலா நிற்குஞ்
சீர்கொண்ட திருப்பனந்தா ளமர்ந்தபரஞ்
செழுஞ்சுடரைச் சிந்தை செய்வாம். (147)

(இ - பொ.) தேரின் உச்சியில் விளங்கும் கலசம்போன்ற கலவைச் சாந்தணி முலைகளையுடைய பார்வதி (காளி) வேடிக்கை பார்க்கவும், கங்காதரச் சடாமுடியில் நிலவு பிரகாசிக்கவும், பிரம்ம விஷ்ணுக்கள் ஒழுங்காய் நின்று தொழவும், முனிவர்களெல்லாந் துதிக்கவும், திருச்சிற்றம்பலத்தின் கண்ணே தாண்டவமாடி வரும் திருப்பனந்தாள் சிவபெருமானைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) வனிதை = சிறப்புடையவள்.
நிரந்து = வரிசையாய் நின்று.

92. வேப்பத்தூர்த் திருவிளையாடற் புராணம்

399. அரியசடை முடிபோற்றி யருள்பொழி செம்முகம் போற்றி
விரையிதழி மலரணிநூல் விளங்குயர் மார்பகம் போற்றி
மருவுமுயர் பேரழகு வளரு தரநிலை போற்றி
திருவமர்செந் தமிழ்ச்சொக்கன் திருவடித் தாமரை போற்றி. (148)

(இ - பொ.) செந்தமிழ்ப் பாமாலை கேட்கும் சொக்கநாதக் கடவுளுடைய அருமையான சடாமுடிக்கும், திருவருள் பொழியுந் திருமுகத்துக்கும், கொன்றைப் பூமாலையும், முப்புரி நூலு மணிந்த திருமார்புக்கும், உயர்ந்த பேரழகு வாய்ந்து வளர் மணி வயிற்றுக்கும், திருவடித்தாமரைகட்கும் வணக்கம். (எ - று.)

(அ - ப.) உதரநிலை = வயிறு.

93. காவேரிப் புராணம்

400. திங்களந் தெரியல் சூடித் தீம்புனற் கங்கை வேய்ந்து
பிங்கள மேனி வாய்ந்து பிறங்குமான் மழுப்பி டித்தே
யெங்களஞ் சனம லத்தை யெறிந்தருட் குணங்க ளீயு
மங்களஞ் மறைசை நாதன் மலரடி வணக்கஞ் செய்வாம். (149)

(இ - பொ.) (சடாபாரத்தில்) நிலவுங் கொன்றைப் பூமாலையும், கங்கை நீரும் தரித்தும், பொன் வண்ணமான திருமேனி கொண்டும், கரத்தில் மான் மழு வேந்தியும், நம்முடைய இருள் மலத்தைப் போக்கி, திருவருட் செயலைத் தரும் (மங்களமான) வேதாரணியச் சிவபெருமான் மலரடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) தெரியல் = பூமாலை.
பிங்களம் = (பிங்கலம்) பொன்.
அஞ்சன மலம் = இருள் மலம்.
மறைசை = திருமறைக்காடு, வேதாரண்ணியம்.

94. சிவரகசியம்

401. உலகனைத்து முளனாகி யிலனாகி யுண்மையா யுலப்பி லானா
யலகிலுயிர்க் குயிராகி யற்புதமா யாரமுதா யறிவுற் றோர்பா
னிலவியமர்ந் தனுபூதி நெறிவிளங்க விளங்கவர் நேயத் துள்ளே
குலவியபே ரொளியாகுங் கோமானைக் குணக்குன்றைக் குறித்து
வாழ்வாம். (150)

(இ - பொ.) ஒரு துரும்பும் விடாமல் உலகனைத்தும் நிறைந்துள்ளவனாய், பிறப்பு இறப்பில்லாதவனாய், சர்வஜீவதயாபரனாய், அற்புதமான தேவாமிர்தம் போலப் பேரறிவுடையோர்களிடம் கூடியிருந்து, நிஷ்டையின் நெறி விளங்கும்படி நேயமாக விளங்கிக் குலவிய பரஞ்சுடராம் சிவபெருமானை வணங்கி வாழ்வாம். (எ - று.)

(அ – ப.) இலனாகி = துரும்பும் விட்டிலனாகி.
உண்மை யுலப்பு = பிறப்பிறப்பு.
அநுபூதி = நிட்டை.

95. இரகு வம்சம்

402. உலகம் யாவையு நிற்பன வுந்தொழில்
விலக லாது விளைத்தும் விளைத்திலா
திலகு நீர்மைய தெப்பொரு ளெப்பொரு
ளலகி லாத வருட்கடன் மூழ்குவாம். (151)

(இ-பொ.) உலகம் யாவும் நிலைபெறும்படி திருவருட் செயலால் இடைவிடாமல் நடப்பிக்கும், தானே கனிந்த கனி எப்பரம்பொருளோ, அப்பரம்பொருளின் பரந்த கருணையங் கடலில் முழுகுவாம். (எ - று.)

(அ – ப.) நிற்பனவும் = நிலைபெறவும்.
விலகலாது = இடைவிடாமல்.
விளைத்தும் = நடப்பிக்கும்.
விளைத்திலாது இலகும் நீர்மையது = தானே கனிந்த கனி.
அகிலாத = எல்லையில்லாத.

96. சிவதருமோத்தரம்

403. திருமாலும் போதினனுந் தேவருமா
முனிவருமே செறிந்து போற்ற
மருவாரும் பொழினிலவுந் தில்லைமணி
மன்ருடன் மகிழ்வான் றன்னை
யுருவாகித் தானுயிர்கட் குருவாக்கி
யளித்தடக்கி யுய்யச் செய்யும்
பெருமானை நிருமலனைச் சிவனையடி
பணிந்துளத்திற் பேணு வாமே. (152)

(இ - பொ.) நாரணனும் பரமனுந் தேவரும் முனிவரும் நெருங்கி நின்று துதி செய, மணம் நிறைந்த சோலைகள் சூழுந் தில்லை மணி மன்றின்கண் நின்று நடனம் செய்தலை மகிழ்வோனுமாய்த் தானே திருமேனி தரித்து, ஆன்மாக்களைப் படைத்துக் காத்துச் சங்கரித்து அனுக்கிரகஞ் செய்யும் பெருமானுமாய், அனாதி மல முத்தனுமாயிருக்கிற சிவனை யவனது சீபாத கமலத்தில் யாம் வணங்கி எமதுள்ளத்தில் தியானிப்பாம். (எ - று.).

(அ - ப.) போதினன் = தாமரையில் வாழும் பிரமன்.

404. ஆதி யாயனு வாயல வாயரு
ணீதி யாய்நிப மாய்நிப மாவதற்
கேதி லாதவ ரெவ்வெவ ரவ்வவர்
பாத தாமரை சென்னி பரிக்குவாம்.* (153)

(இ - பொ.) அனாதியாய், அருரூபியாய், கருணாகரமாய், காரணமாய், பூத காரணமாயிருக்கப் பட்டவரெவர் எவரோ, அப்பெரியவர் திருவடிக் கமலங்களைச் சிரமேல் தரிப்பாம். (எ - று.)

(அ - ப.) ஆதியாய் அலவாய் = அனாதியாய்.
நிபம் = காரணம்.
பரிக்குவாம் = தரிப்பாம்.

97. அரிச்சந்திர புராணம்

405. சீர்கொண்ட செழுங்கமலத் திசைமுகனு
நெடுமாலுஞ் சிவனு மென்னப்
பேர்கொண்ட மூவுருவு மீருருவு
மோருருவாய்ப் பிறங்குந் தொல்லை
நீர்கொண்ட வண்டத்துந் தாவரத்துஞ்
சங்கமத்து நிறைந்து நின்றோன்
றார்கொண்ட தாளிணைக டழைகொண்ட
வன்பினொடு தலைமேற் கொள்வாம். (154)

(இ - பொ.) நான்முகப் பிரம்மனும், திருநெடுமாலும், உருத்திரனுமென்னப் பேர்கொண்ட மும்மூர்த்தி வடிவத்தும், ஆண் பெண் என்ற உடலம் இரண்டாகவும், உயிர் ஒன்றாகவுந் தோற்றும் நீர்சூழ்ந்த உலகத்துத் தாவர சங்கமத்தும் நிறைந்து நின்ற பரமசிவனுடைய துணைத் தாள் மலர்களைத் தழைந்த அன்பினோடு தலையிற் சூடுவாம். (எ - று.)

(அ - ப.) திசைமுகன் = நான்முகன்.
நெடுமால் = திருமால்.
ஈருரு = ஆண் பெண் இரண்டுடலுரு.
ஓருரு = உயிரொன்று.
தொல்லை = பழைய.

---

* இச்செய்யுள் சிவதருமோத்தரம் என்னும் நூலிற் காணப்படவில்லை.

98. தொல்காப்பியம்

406. ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.*

(இ - பொ.) மெய்ஞ்ஞான போத முத்தியைப் பெறும் பொருட்டாகவே, ஆதி காலத்தில் அகத்தியற்குத் தமிழ் நூல் பயிற்றுவித்த உமாபதியை வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ப.) மாதொரு பாகன் = நாரிபாகன்.
வழுத்துதும் = வாழ்த்துதும்.

407. சின்மயனைச் சிவனைமல வலிதொலைய
விஞ்ஞான கலர்க்குஞ் செப்புஞ்
சொன்மயனைத் துகளிலியைத் துலையிலியைப்
புலியரவுஞ் சுரர்க்கொப் பாரும்
பொன்மயனும் புகழவருள் புரிவானை
அனைத்துயிரும் பொருந்திப் பேத
மின்மயனைப் பதம்பணிவா ரெணியவரம்
எணியபடி எய்து வாரே.** (156)

(இ - பொ.) ஞான மயனுமாய், மலவலி கெடப் பிரவணர் முதலிய விஞ்ஞானகலர்க்கு மருளிச் செய்ததில் ஆகம வடிவாயுடையவனுமாய், மலரகிதனுமாய், ஒப்பில்லாதவனுமாய், வியாக்கிரபாத பதஞ்சலிகளுக்குந் தேவர்களுக்குங் காப்பாகிய தில்லை மூவாயிரவரும், மற்றுள்ளோரும் பணிய அவர்களுக்கனுக்கிரகஞ் செய்வோனுமாய்ச் சர்வான்மாக்களிடத்து மிரண்டற வியாபித்துப் பேதமற்றிருப்போனுமாயிருக்கிற சிவனை யவனது சீபாத கமலத்திற் பணியுமவர்கள் கருதின வரத்தைக் கருதினபடியே பெறுவார்கள். (எ - று.)

99. சிவஞான சித்தியார்

408. அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்
கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம். (157)

(இ - பொ.) ஆறுவகையான உட்சமயத்தோர்க்கும், தனித்தனியான நம்பிக்கையாய், வெவ்வேறான மூர்த்த வடிவங்களை யுடைத்தாய், வேதாந்தமாய், சைவசித்தாந்த சமரச நன்னிலையினில், திருவருளால் நிறைந்து, பார்வதி யம்மனோடு அப்பனாகிப் பிரிவருதிருக்கும் சிவபெருமான் திருவடி மலரைச் சிரசின்மேல் முடிப்பாம். (எ - று.)

---

*இச்செய்யுள் 'தொல்காப்பியம்' என்னும் இலக்கண நூலில் இல்லை.

**இச்செய்யுளும் தொல்காப்பியம் என்னுந் தலைப்பின் கீழ் வந்துள்ளது. இத்தொல்காப்பியம் எது வென்று விளங்கவில்லை.

(அ - ப.) உட்சமயம் = சைவம், வைணவம், சாத்தம், கௌரம், காணாபத்தியம், கௌமாரம்,
பொருள் = உண்மை.
வேதக்குறி யிறந்து = வேதாந்தம்.
ஆகமங்களின் அறிவு = சைவசித்தாந்தம்.
அம்மை = அம்மன்.
அப்பன் = ஐயன்.

100. சைவ சமய நெறி

409. உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை. (158)

(இ - பொ.) உலகத்திலுள்ள சர்வான்மாக்களிலும், உயிர்க்கு உயிராய் வியாபித்து ஓங்கி விளங்கும் சிவபெருமானே நம் கடவுள். (எ - று.)

(அ - ப.) சிவன் = சீவகாருண்ணியமுள்ளவன்.
இறை = இறைவன்.
ஒன்றி நிறைந்து = உயிர்க்குயிராயிருந்து.

101. பரமதிமிரபானு

410. அனாதிமல முத்தன் சிவனெனுமெய் யன்பர்க்
கெனாதியரு ளாதவர மேது.* (159)

(இ - பொ.) அனாதி மலமுத்த சித்துருவமே! சிவமே! எனத் துதிக்கும் மெய்யான அடியார்களுக்கு முதன் முதல் அருளானின்ற வரம் அறிவானந்தம். (எ - று.)

(அ - ப.) மலமுத்தன் = பரிசுத்தன்.
எனாதி = முதலாவது.
அருளாத = அருளும்.

102. இறைவனாற் பயன்

411. முதல்வ னுயிருக் கனாதிமல முத்தன்
பதமலரெஞ் சென்னியில்வைப் பாம். (160)

(இ - பொ.) ஆன்மாக்களுடைய மூலமலம் முற்றுமற யுத்தம் புரிந்தவனும் முதல்வனாகிய பரமசிவத்தின் மலரடிகளை நம் சிரசில் வைத்து முடிப்பாம். (எ - று.)

(அ - ப.) அனாதி மல = ஆணவாதி மும்மலம்.
முத்தன் = முற்று மொழிக்க யுத்தமானவன், முத்துத்தாண்டவனுக்கும்.

---

* முதலாவது அருளிச் செய்யாத வரம் எது? எது? (எது இருக்கிறதெனவே) எல்லாம் அருளிச் செய்தபடியாம் எனவும் உரைவரும்.

103. ஈசுர கீதை

412. பூத மைந்தோ டிரவிமதி புருட னாகிப் புணர்ந்தென்றும்
பேத மில்லா வறிவுருவாய்ப் பிறங்கு கின்ற பேரொளியோ
னாதி மூவர்க் கறிவரியோ ணரிவை பாகனா மமலன்
பாத பங்க யங்கடலை வைத்தே பணியும் பரிசினனால். (161)

(இ - பொ.) எந்த நாளையினும், சூரியனை மதிக்கத் தக்க புருடோத்தம னாகிப் பஞ்ச பூதங்களிலும் கலந்து, அறிவானந்தமாய் விளங்கும் சித்தாந்தப் பேரொளியெனும், மும்மூர்த்திகளால் அறிய அருமையானவனும், நாரிபாகனுமான பரமசிவனுடைய பாதபங்கயங்களை அடியேன் என் தலையில் வைத்து வணங்கும் பரிசுடையேன் ஆவேன். (எ - று.)

(அ - ப.) மதி = மதிப்பிடக்கூடிய.
இரவிமதி புருடன் = சூரியகுலச் க்ஷத்திரியன் போலக் காப்பவன் எனினும் தகும்.
பங்கயங்கடலை = பங்கயங்கள் + தலை.

104. பரம கீதை

413. இரவியு மதியும் வானும் வாயுவு மனலு மப்பு
முரவிய மண்ணு மற்றை யுணர்பவன் றானு மாகிப்
பரவிடுங் கரணம் பன்னான் காயமன் றாயு நின்றே
யுரைமன மிறந்து ளோங்கு மொளியினை வணங்கல் செய்வாம். (162)

(இ - பொ.) சூரியனுக்கு ஒளியாய், சந்திரனுக்குக் குளிர்ச்சியாய், வானுக்கு மழையாய், வாயுக்குச் செயலாய், அனலுக்குச் சூடாய், அப்புக்கு உப்பாய், மண்ணுக்கு விளைவாய், மற்றவற்றிற்கும் உற்றபடியே கலந்துணர்வானாகியும், பலவிதமாகிப் பரவிய அந்தக்கரணங்கள் நான்காயிருந்தும், அகங்கார மட்டுமற்ற திரிகரண சுத்தியாய் நின்று, பேச்சு மூச்சில்லாப் பேரின்ப மௌனப் பிரகாசத்தை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) மனம் = புத்தி, சித்தம், அகங்காரம்.
அன்று ஆய = திரிகரணம், மனோவாக்குக் காயம்.
உரை மனம் = பேச்சும், மூச்சும்.
இறந்துளோங்கும் ஒளி = மவுனம்.

414. கண்முதற் புலன்க ளந்தக் கரணங்கள் விளங்கு மெத்தாற்
றண்மதி யருக்க ணங்கி தாரகை விளங்கு மெத்தால்
விண்முதற் பூதமி யாவும் விளங்கிடு மெத்தா லந்த
வுண்மையைச் சிவப்ர காச வொளியினை யுளத்துள் வைப்பாம். (163)

(இ - பொ.) கண் முதலாகிய பொறி புலன்கள், அந்தக்கரணங்கள், விளங்குவதெதனால்? சூரியன், சந்திரன், நட்சத்திரம், அங்காரகன் முதலியவை விளங்குவதெதனால்? பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற பஞ்சபூதங்கள் விளங்குவதெதனால்? அச்சாட்சி அனுபவ மேல்கொண்டு சிவப்பிரகாசக் கடவுளாகிய தீபத்தை உள்ளத்திலேற்றி வைப்பாம். (எ - று.)

(அ - ப.) ஐம்பொறி = மெய், வாய், கண், மூக்கு, செவி.
ஐம்புலன் = சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
எத்து = உபாயம் (காசிப் பிரமாணம்.)
அருக்கன் = சூரியன்.
அங்கி = அக்னி.
தாரகை = நட்சத்திரம்.

105. சித்தாந்த தரிசனம்

415. அம்மையப்ப னுயிருக் காதார மாய்நிறைந்த
செம்மைசிவன் றாளென் சிரம். (164)

(இ - பொ.) ஆன்மாக்களுக்கு ஆதாரமாய் நிறைந்த அம்மையப்பனும் பரமசிவனுடைய தாள் தாமரைகளே அடியேன் சிரோரத்தினம். (எ - று.)

(அ - ப.) அம்மையப்பன் = தாய் தந்தை.

106. அதிரகசியம்

416. கண்ணோரா யிரத்தானுங் கதிராழிப் படையானுந்
தண்ணாரும் பூங்கமலத் தவிசுறையும் பிரமாவும்
பெண்ணாருந் திருமேனிப் பெருமானுங் கைகூப்பி
யுண்ணாடும் பரம்பொருளை யுண்ணாடி வணங்குவாம். (165)

(இ - பொ.) ஆயிரங் கண்ணனாகிய இந்திரனும், செங்கமலாசனனாகிய பிரமனும், சக்கராயுதபாணியாகிய விட்டுணுவும், தத்தம் கரங்களைக் கூப்பியுள் நாடி வழிபடும்படியான உமையவள் பங்கனும் சிவபெருமானைப் பூசித்து வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) பெருமானும் பரம் பொருளை = பெருமானுமாம் பரம்பொருளை.
கண் ஓர் ஆயிரத்தான் = ஆயிரங்கண்ணன், இந்திரன்.
கதிராழிப்படையான் = சக்கரபாணி, விட்டுணு.

417. ஈசனாய்ப் பரம தத்துவ னாகி யீறிடை முதலில னாகி
யேசறு மணியா யெவைக்குமா தார மாகியே தனக்கவை யிலையாய்ப்
பாசமோ சகனா யனாதிமுத் தனுமாய்ப் பகருஞா னானந்தக் கடலா
யாசையாற் காண்போர்க் கற்புத வடிவா மம்பிகா பதியினைப் பணிவாம். (166)

(இ - பொ.) மகேசனாய், ஆதிமத்தியாந்த மில்லாத தத்துவார்த்தனாய், மாசிலா மாணிக்கம் போல சர்வஜீவ தயாபரனாய், தனக்கென ஒன்றில்லானாய், பாசத் துறவியாய், அனாதியாய், முத்துத்தாண்டவனாய், சிவானந்த சாகரமாய், காண்போர் அன்புக்கு அதிசயமானவனாய், பார்வதி தலைவனாய் விளங்கும் பரம சிவனைப் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) ஏசு அறு = குற்றமற்ற.
தனக்கவையிலையாய் = எல்லாமுடையவனாய்.
மோசகன் = துறவி.
முத்தன் = முத்துத்தாண்டவன்.
அம்பிகை + பதி = அம்பிகாபதி.

107. சித்தாந்த சிகாமணி

418. உலகமெனு மோவியங்க டிகழ்த்துமொரு
படமாகி யொளிக ளெல்லா
மிலகுபர வொளியாகிச் சச்சிதா
னந்தமா யேக மாகிப்
பலகலைகள் பரப்பிரமம் பரசிவமா
லிங்கமெனப் பகரா நின்ற
திலகநுத லுமைகணவன் றிருவடித்தா
மரைவணக்கஞ் செய்து வாழ்வாம். (167)

(இ - பொ.) உலகமென்னுஞ் சித்திரங்களை விளக்குமொரு படமாகியும், மறைந்தொளித்துக் கொண்டதை யெல்லாம் காட்டும் பரஞ்சோதியாகியும், சர்வ பரிபூரண சச்சிதானந்தமாகியும், பல்கலை ஞானங்களாலும், பரப்பிரம்மாநந்த சிவமகாலிங்க மெனப் பகரும் உமாபதியாகியும் விளங்கும் பரமசிவன் திருவடித் தாமரைகளை வணங்கி வழிபடுவாம். (எ - று.)

(அ - ப.) ஓவியம் = சித்திரம்.
கலைகள் = கலைஞானங்கள்.
பகரானின்ற = பகரும்.
திலகநுதல் = திலகவதி.
உமைகணவன் = உமாபதி.

108. அறிவானந்த சித்தியார்

419. நிரவய னின்மல னிர்க்குண னித்த னிரஞ்சனன்மெய்
பரவிய நிர்த்தொந்தன் பற்றிலி சுத்தன் பரமனந்தன்
விரவிய பூரண னேகன்பே ரின்பன் வியாபகனென்
கரவுளங் கோயில்கொண் டானெழில் போற்றுவன் காதலித்தே. (168)

(இ - பொ.) நிரவயவனாய், நின்மலனாய், நிர்க்குணனாய், நித்தியனாய், நிரஞ்சனனாய், மெய்யனாய், நிர்த்தொந்தனாய், பற்றற்றவனாய், அநந்தவிலோசனனாய், பரிபூரணனாய், ஏகாதிபத்தியனாய், பேரின்ப வியாபகனாய், அடியேன் அன்பென்னுந் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமானை வாயார வாழ்த்துவன். (எ - று.)

(அ - ப.) நிரு + அவயவன் = நிருவகித்த அவயவங்களையுடையவன்.
(அவயவ நிருவாகமுடையவன்)
நின்மலன் = நிமலன் = சுத்தன்.
நிர்க்குணன் = குணமற்றவன்
நிர்த்தொந்தன் = தன்னந்தனியன்.
விலோசனம் = கண்.
ஏகன் = ஏகாதிபத்தியன்.

109. வைராக்கிய தீபம்

420. திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன்
றிகழ்தரு முலகெலாந் தன்பான்
மருவுசிற் சத்தி யெனுங்கிர ணத்தால்
வந்தெழு கானனீ ராக
விருமையா மதிமாய்த் தறிஞராங் காந்தத்
திடையருட் சுடருமிழ்ந் திலங்கு
மொருசிவா தித்தன் றனைநம திருள்போ
யொழியநா டொறுமிறைஞ் சிடுவாம். (169)

(இ - பொ.) பங்கயாசனப் பிரம்மன் படைத்த இப்பிரபஞ்சத்தின் கண் சஞ்சரித்து வரும் சர்வ ஆன்மாக்களுக்கும், கானல்நீர் போல வந்துண்டாகும் இம்மை மறுமையாம் மதிமயக்கத்தைத் தன்பால் மருவிய சிற்சத்தியென்னுங் கிரணத்தினால் மாய்த்து, அறிவினரென்னுங் காந்தக் கற்களினிடம் அருள் நோக்கமாம் அக்கினியைத் தோன்றச் செய்து விளங்கும் பாஸ்கர சிவனை நாள் தோறும் நம் மாயாவிருள் ஒழியத் துதிப்பாம். (எ-று.)

(அ - ப.) உலகெலாம் = உலகத்து ஆருயிரெலாம் (ஆன்மா)
இருமை = இம்மை மறுமை.

421. துன்னியா ணவப்பாம் பெமதறி வெனுமோர் சுடர்கெழு பூரண மதியை
முன்னமே தீண்டிற் றொளிவெளிப் படலான் மோசன காலமெய் தியதாற்
றன்னிடத் தீசன் முதற்புவி முடிவெண் டருநுரை யாதிவந் தொடுங்கப்
பின்னைய பினையாந் திரைகள்வீ சிடுமோர் பிரமவே லையிலினிப் படிவாம். (170)

(இ - பொ.) எமது அறிவென்னும் ஓர் பரிபூரணச் சந்திரனை, ஆணவமாகிய அரவம், அனாதியே நெருங்கி மறைத்தது. இப்போது ஞானப் பிரகாசம் விளங்குதலான விடுதலைக் காலம் வந்து பொருந்தியது. ஆகையால் தன்னிடத்து நாத தத்துவ முதல் பிருதிவி தத்துவமீறாக எண்ணப்பட்ட நுரை, திவலை, குமிழிகள் தோன்றி யொடுங்கும்படி பின்னா சத்தி, அப்பின்னா சத்திகளாகிய இரண்டலைகளை வீசும் பிரம்மாநந்தக் கடலில் இனி எந்நாளும் மூழ்கியெழுவாம். (எ-று.)

(அ - ப.) துன்னி = நெருங்கி.
கெழு = நிறை.
முன்னமே = அனாதியே.
மோசனம் = விடுதலை.
தீண்டிற்று = தொட்டுப் பிடித்து மறைத்தது.
பின்னைய பினையாம் = ஒன்றின்பின் ஒன்றாக அடிக்கும்.
வேலை = கடல்.

110. திருக்கோவலூர்ப் புராணம்

422. சீர்பூத்த செஞ்சடையிற் சுரநதியுங் கரமதியுஞ் செறிந்தி லங்க
வார்பூத்த குயவனிதை யொருபுறத்திற் பசந்தொளிர வாரி யுண்ட
கார்பூத்த மணிவண்ணன் கட்கமல மிணைக்கமலக் கழலின் மேவ
வேர்பூத்த கோவலில்வாழ் வீரட்டத் தொருமுதலை யிறைஞ்சு வோமே. (171)

(இ - பொ.) கொன்றைப்பூ மாலையணிந்த சடாபாரத்தில் ஆகாய கங்கையும், மூன்றாம் பிறைச் சந்திரனும், நெருங்கி விளங்கவும், கும்பத் தனமுடைய பார்வதியம்மன் ஒரு பக்கம் கலந்து மகிழவும், மண்ணை வாரி வாரியுண்ட நீல மேக சரீரனாகிய மகாவிஷ்ணு ஒரு குறைக்காகத் தன் செந்தாமரைக் கண்ணைக் கொண்டு திருவடிகளில் பூசிக்கவுமாகத் திருக்கோவலூர் வீரட்டானத்தில் எழுந்தருளும் ஒரு முதல்வனைப் போற்றுவோம். (எ - று.)

(அ - ப.) சுரநதி = சுரதநதி.
கரம் = கிரணம்.
செறிந்து = அடர்ந்து.
இலங்க = விளங்க.
வனிதை = பார்வதி.
பசந்து = இணைந்து.
கட்கமலம் = செந்தாமரைக்கண்.
முதலை = முதல்வனை.
குயம் = குசம்.

மணி வாரியுண்ட கார்பூத்த வண்ணன் என அன்வயிக்க.

111. சித்தாந்தப் பிரகாசிகை

423. இயங்கியற் பொருளு நிலையியற் பொருளும்
படைத்துடன் விராய்ப் பசுபாச மாற்றிய
முப்புரப் பகைஞன் முழங்குகழ னோன்றாண்
மெய்ப்படப் பரசுதும் வீடுபெறற் பொருட்டே. (172)

(இ - பொ.) இயல்பாகவே அசையும் பொருளையும் நிலையாகவே அசையாப் பொருளையும் படைப்பித்து, கூடக் கலந்து வந்த பசுவாகிய ஆன்மாவைப் பாபத்தினின்றும் மாற்றியருளிய, திரிபுர தகனனாம் பரமசிவனுடைய திருவடிகளை (நாம் முத்தியடைதற்காகவே) பூமியில் சரீரம் படும்படியாகத் துதிப்பாம். (எ-று.)

(அ - ப.) இயங்கியல் = அசையுந் தன்மையுடையது.
நிலையியல் = அசையாதது.
விராய் = விரவி.
பரசுதும் = பரவுதும்.
வீடு = விடுதலை, முத்தி.

இணங்கிய பதி, பசு, பாச முப்பொருளும், நிலையாக நடைபெற்றுவரும் அறம்-பொருள்-இன்பம்-வீடு ஆகிய நாற்பொருளும் படைத்து எனினும் ஒவ்வும்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

மூன்றாம் பகுதி

பராசத்தி வணக்கம்

1. கந்த புராணம்

424. செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம். (1)

(இ - பொ.) உலகில் நிறைந்த ஆன்மாக்கள் தோறும் பிரகாசித்து நிலைபேறான, குற்றமற்ற சிவபிரானிடத்தில் முறைமையாக வீற்றிருந்தருளி, சண்மதங் கட்குரிய மார்க்கங்களும், மற்றுள்ளனவும் வளர்த்தருளிய தலைவியாகிய உமா தேவியாரது தாமரை மலர் போலும் திருவடிகளைப் பணிந்து துதிப்பாம். (எ-று.)

---

2. அருணாகிரிப் புராணம்

425. அருக்கனொடு பிரியாத வவிரொளியைப் போன்றுமலத் தனாதி முத்த
னொருத்தனவ னொடுபிரியா துறைந்துலக மாக்கியளித் தொடுக்கி யானென்
செருக்குமறுத் துயிர்க்குமல பாகத்திற் சிவனடியுந் தரிசிப் பித்தே
யிரக்கமுட னருள்புரியும் பராசத்தி பதமுமனத் தெண்ணு வாமே. (2)

(இ - பொ.) சூரியனைவிட்டுப் பிரியாத பிரகாசம் போல, அனாதி மலமுத்தனும் ஒன்றான பரமசிவனை விட்டுப் பிரியாதிழைந் திருந்தும், உலகம் யாவையும் படைத்துக் காத்து, மறைத்து, யானென்னும் அகங்காரத்தைப் பற்றற அறுத்தும், ஆன்மாக்களுக்கு மலபரிபாக காலத்திற் சிவனடியைத் தரிசிப்பிக்கச் செய்தும், தயா விருத்தியுடன் கிருபா கடாட்சம் செய்யும் பராசத்தியின் பாதாம்புயங்களைத் தோத்தரிப்பாம். (எ - று.)

(அ - ப.) அருக்கன் = சூரியன்.
முத்தன் = முத்துத் தாண்டவன்.
செருக்கு = அகங்காரம்.

426. பண்ணார் மறைபயின் றேநமக் குறுதிப்பெ ரும்பயனை
விண்ணா டரும்பணிந் தேத்திட விதியா லருள்விமலை
பெண்ணா ணலியெனும் பிள்ளைகள் பெற்றே யவர்தம்மா
லுண்ணா முலையுமை யாள்பதம் பணிவா முளத்துகந்தே. (3)

(இ - பொ.) தேவர்களும் பணிந்தேத்தும்படியாக, நமக்கு வேதாத்தியயனம் ஓதுவித்து, அதன் உறுதியான பேருபகாரப் பலனை விதிப்படியே அருள் புரிகின்ற அம்மையும், அவன்-அவள்-அதுவாகத் தோற்றும் பிள்ளைகளைப் பெற்று,

அவைகள் தம்மால் உண்ணப் படாநின்ற முலைப்பால் உய்ந்த உமையவளுமாம் மகேசுவரியின் திருவடியை உள்ளன்போடு பணிவாம். (எ - று.)

(அ - ப.) பண்ணூர்மறை = வேதாத்தியயனம்.
பெண்-ஆண்-அலி = அவன்-அவள்-அது.
உகந்து = இணங்கி.

3. திருவிளையாடற் புராணம்

427. சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த கலசம் போற்றி
யிரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட வங்கயற்க ணெம்பி ராட்டி
யரும்புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு மடிகள் போற்றி. (4)

(இ - பொ.) இரும்பை நிகர்த்த எனது மனதைக் குழையச் செய்து, (மல பந்தமுற்றிருந்த) அடியேனை எடுத்து ஆட்கொண்ட அங்கயற் கண்ணம்மையாராகிய எமது பிராட்டியாருடைய, வண்டுகள் பண்பாடும் மணம் தங்கிய மலர் மாலை யணிந்த அழகிய அளகபாரம் அடியேனைக் காக்க. மேற்போர்வையும் கொடியையுமணிந்த திருத்தோள்கள் காக்க. வில்லையொத்த கரிய புருவம் காக்க. கவுணிய கோத்திரத்தில் திருவவதாரஞ் செய்த ஆளுடைய பிள்ளையாருக்குச் சிவஞானப்பால் சுரந்தருளிய பொற்கலசம்போன்ற திருத்தனங்கள் காக்க. அரும்புகின்ற திருப்புன்சிரிப்புக் காக்க. வேதமாகிய சிலம்புகள் ஒலிக்கின்ற திருவடிகள் காக்க. (எ - று.)

(அ - ப.) முரல் = பாடல்.
உத்தரியம் = மேற்போர்வை.
பிராட்டி = பிரிய ஆட்சி (கண்) உடையவள்.
நூபுரம் = சதங்கை, தண்டை.

428. அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லா
மண்டங்க ளாகப் பெரிதாய்ச் சிறிதாயி னானு
மண்டங்க ளுள்ளும் புறம்புங் கரியாயி னானு
மண்டங்க ளீன்ற டுணையென்ப ரறிந்த நல்லோர். (5)

(இ - பொ.) (தனதுருவத்தைக் கணிக்கையில்) பல்லாயிரங் கோடி அண்டங்களும் அணுவாகும்படி பெரிதானவனும், அணுக்களெல்லாம் அண்டங்களாகும்படி சிறிதானவனும், அண்டங்களின் உள்ளும் புறமும் சாட்சியாயுள்ளவனுமாகிய பரமசிவன், சர்வாண்டங்களையு மீன்ற சிற்சத்தி துணையாகக் கொண்டு கிருத்தியங்களை இயற்றுவன் என்று, வேதாகம நூல்களை ஐயம், திரிபு, அறியாமை யகலக் கற்ற மேலோர் கூறுவர். (எ - று.)

(அ - ப.) கரி = சாட்சி.

429. பங்கயற்க ணரியபரம் பரனுருவே தனக்குரிய படிவ மாகி
யிங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த சராசரங்க ளீன்றுந் தாழாக்
கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண் டியன்மகள் போற்கோலங் கொண்ட
வங்கயற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது மகத்துள் வைப்பாம். (6)

(இ - பொ.) கமலாசனத்தில் வீற்றிருக்கும் பிரம்மதேவனுக்கும் கிடைத்தற்கரிய சிவபெருமானது, திருவடிவமே தனக்குரிய திருவுருவமாகவும், இவ்வண்டத்தையும், அயலிடமாகிய இடம் பரந்த பகிரண்டத்தையும், அவற்றிலுள்ள அளவில்லாத சராசரப் பொருள்களையும், பெருது பெற்றருளியும், தலைவணங்காத திருத்தனங்களையும், அருள்போன்ற தேன் சொரியும் அளகபாரத்தையுமுடைய கன்னிகையாய் மலயத்துவச பாண்டியனது திருமகள் போலத் திருவுருக் கொண்டருளிய அங்கயற்கண்ணியம்மையாரது திருவடித் தாமரையை எப்பொழுதும் மனதில் இருக்கச் செய்வாம். (எ - று.)

(அ - ப.) படிவம் = வடிவம்.

430. செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித் தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி யடிக்கமலந் தலைமேல் வைப்பாம். (7)

(இ - பொ.) பாண்டியர் பெருமானாகிய மலயத்துவசனது தவப்புதல்வியாய்த் திருவவதாரஞ்செய்து (வேதாகம முதலிய அறுபத்து நான்கு) கலைகளையுங் கற்றறிந்து, கிரீட மணியப் பெற்று, அறமுறைப்படி அரசுபுரிந்து, உலகின் கண்ணுள்ள எல்லாரையுந் தம்மடிப் படுத்தி, அவர்கள்பாற் கப்பமும் பெற்று, திக்குவிசயஞ் செய்து, இந்திராதி திசைக் காவலர்களை வென்று, அவரவர் வளங்களையுங்கொண்டு, திருக்கயிலை மலையிற்றம்மை யெதிர்த்த திருநந்தி கணத்தவரையும் போர் செய்து திருப்பி, பிரம்மேந்திராதியரால் வணங்கத் தக்க நாயகராகிய சிவபெருமானுக்குத் திருமணமாலை தரித்துத் தமது கிரீடத்தையும் அணிவித்துச் செல்வந் தழைத்தோங்கும் தமது அரசுரிமையையும் கொடுத்தருளிய பெண்ணரசியாகிய தடாதகைப் பிராட்டியாரது திருவடித் தாமரைகளைச் சிரமேலணிந்து கொள்வாம். (எ - று.)

(அ - ப.) செழியாபிரான் = மலையத்துவசன்.
ஓச்சி = செலுத்தி.
திறை = கப்பம்.

4. சேது புராணம்

431. தண்ணெனவும் வெச்செனவுந் தந்து சாயாத்
தகைபயின்று விடநீக்கித் தலைவற் கென்று
முண்ணமுதந் தனையுதவி யிமைய மேரு
வுயர்சிகர மந்தரத்தை யொருவிச் சேர்ந்துங்
கண்ணுதலை விளர்ப்புறலாற் கயிலை யெள்ளிக்
கௌணியர்க்குத் தமிழ்சுரக்குங் காட்சி யாலே
வண்ணமுலை மலயமலை மானுங் கன்னி
மலைவளர்கா தலிமலர்த்தாண் மனத்துள் வைப்பாம். (8)

(இ - பொ.) தம் நாயகற்குத் தண்ணளியையும், விரகாக்கினியையும் மூட்டிச் சுரத லீலைகளைச் செய்தும், முன்னுண்ட ஆலகால விடத்தைப்போக்கி, எப்போழ்துமே அதராமுதத்தையுண்ணும்படி உதவியும், இமோத்துகிரிப் பருவதத்

தின்மேல் தமக்கு வலப்பாகமாகச் சேர்ந்திருக்குங் கண்ணுதற் கடவுளோடு இடபவாகனாரூடராய்ப் புறப்பட்டுச் சம்பந்த சுவாமிகளுக்குத் திருஞானத் தமிழ்சுரந்தளிப்பதுமான திருஷ்டாந்தத்தாலே, (வண்ணமுலை மலைமான் குமரியாகிய) மலைவளர் காதலியின் திருவடித் தாமரைகளைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) தண் = தண்ணளி.
வெச்சு = வெம்மை.
அமுதம் = அதராமுதம்.
ஒருவி = நீங்கி.
விளர்ப்பு = வெள்ளை (இடபம்.)
கௌணியன் = காழியன்—திருஞான சம்பந்தர்.
தமிழ் = அமுது, பால்

5. திருப்பரங்கிரிப் புராணம்

432. பொழியருவி யெனவொழுகக் கருணைவெள்ள மடைதிறக்கும் பூங்கண் மாதை
மழலையமு தம்பொழியப் பேசுமொரு பசுங்கிளியை மருவி நாளும்
பழமறைக ளோலிடவே பதம்பெயர்க்கும் பொலங்கொடியைப் பார்க்குந் தோறு
மழகொழுக நின்றவளைப் பரங்குன்றி லாவுடையை யகத்துள் வைப்பாம். (9)

(இ - பொ.) மழை பொழியுங்கால் மழை வீழருவியெனக் கருணானந்த வெள்ள மடையைத் திறக்குங் கண்ணம்மையாய், மதலையைப்போலும், அமுர்த வார்த்தைகளைப் பேசும் பஞ்ச வண்ணக் கிளியாய், திருவடியிற் பூண்டு மருவிய வேதங்களெல்லாம் எந்நாளும் ஒலிக்கும் பசுங் கொடியாய், திருப்பரங்குன்றில் அழகொழுக நின்றவளாம் ஆவுடையாளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) மழலை = மதலை, குதலை.
மடை = முகத்துவாரம்.
ஓலிட = ஒலிக்க.
பொலங்கொடி = பொற்கொடி.

6. திருவாரூர்ப் புராணம்

433. அறந்தழையக் கலைத்தெரிவை வனப்பெய்தச் சசியெனும் பேரரிவை வாழ
நிறங்கெழுபூ மடந்தையொடு நிலமடந்தை மங்கலத்தி னிறைந்து மல்கப்
பிறங்குமுயிர்த் தொகையனைத்துங் களிகூரத் தவம்புரியும் பீடு சான்ற
சிறந்தகம லாலயநா யகிசெம்பொற் சேவடிகள் சென்னி சேர்ப்பாம். (10)

(இ - பொ.) சரஸ்வதி அறமுதல் நான்குந் தழையும்படி இந்திராணி, இலக்குமி, பூமாதேவி இவர்கள் மங்களகரமாய் வாழ்ந்து வரவும், சர்வான்மாக்களும் மகிழும்படியும், திருவாரூரில் பெருமையோடு தவஞ்செய்யும் கமலாலய நாயகியின் செம்பொற் சேவடிகளைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) கலைத் தெரிவை = கலைமகள்.
சசி அரிவை = இந்திராணி.
பூ மடந்தை = இலக்குமி.
நிலமடந்தை = பூமி தேவி.
மல்க = செழிக்க
பீடு = பெருமை.

434. தொல்லைமா ஞால மாதித் தொகையிலா வண்ட நல்கிச்
செல்வமாண் கருணை யாகுஞ் சிறகரா லணைத்துப் போற்று
மல்லலஞ் செழுநீர் வாவி வண்கம லால யத்து
ளல்லியங் கோதை யென்னு மன்னத்தை யகத்துள் வைப்பாம். (11)

(இ - பொ.) பழமையான பிரபஞ்ச முதலாக எண்ணில்லாத அண்ட கோடிகளைப் படைத்து, அவைகளை யெல்லாம் கருணை கடாட்ச மென்னுஞ் சிறகினால் அணைத்து அடைகாக்கும் (வளமான செழுநீர் வாவியுடைய) கமலாலயத்து எழுந்தருளும் ஆயர்குடிக் குலமகளாகிய அன்னபூரணியம்மனை அடி வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) தொல்லை = பழமை.
ஞாலம் = பூமி.
சிறகர் = சிறகு.
மல்லல் = வளப்பம், மிகுதி.
அணைத்துப் போற்றும் = அவையம் காக்கும்.
அல்லியம் = ஆயர்குடி.
கோதை = கோதி முடித்த கொண்டையை உடையாள்.
அன்னம் = அன்னபூரணி.

7. இலிங்க புராணம் பூருவகாண்டம்

435. புயலி னின்றதிர் புழைக்கைவா ரணமுகத் தவுணன்
செயல்க டந்தடு சிறுகண்வா ரணமுகத் தவனை
யயிலி லங்குவேன் முருகனை யணியெழில் வாய்ப்ப
வயிறு வாய்த்தவண் மலரடி வணங்குதல் செய்வாம். (12)

(இ - பொ.) மேகத்தைப் போன்று கர்ச்சிக்கும் தும்பிக்கையையுடைய கயமுகாசூரனைப் பாவச் செயல்கள் கடக்கும்படியாக, அடுத்துச் சம்மரித்த கணபதியாகிய யானைக் கன்றையும், கூரிய வேலாயுதமுடைய முருகனையும். அலங்காரமாகப் பெற்றெடுக்க வயிறு வாய்த்த பார்வதியின் மலரடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அதிர் = இடி.
அயில் = கூர்மை.

ஷ உத்தர காண்டம்

436. ஊடறீர்ங் தொழிய மழுவலான் முகிழ்த்த
கரத்திலோர் கனியுள தென்று
நாடியைங் கரத்தோன் விரைந்தனன் சென்று
நசையுளந் தழைந்திட விரித்த
லோடரித் தடங்கட் கடையினு னேக்கி
யுமிழ்நிலா நகைமுகிழ்த் தருளுங்
தோடுலாங் கூந்தன் மலைமகள் பசும்பொற்
றுணையடித் தாமரை தொழுவாம். (13)

(இ - பொ.) மழுவாயுத மேந்திய சிவபெருமான் திருக்கரத்தில் கனிந்ததோர் கனியுளதென்று ஐங்கரக் கடவுள் நாடி வேண்டு முன்னமேயே களிகூர்ந்து கொடுக்கவும், மேன்மை பொருந்திய கடைக் கண்களால் பார்த்து (தம் நாயகனை) ஊடுருவியூடாடு நிமித்தம் இளநிலா போன்று நகை மகிழ்வு காட்டும்படியான (கூந்தல் மணம் மேவும்) பார்வதியின் பசும் பொற்றாமரை யடியிணைகளைப் பணிவாம். (எ - று.)

(அ-ப.) ஊடல் = ஊடாடுதல், பிணங்குதல்.
முகிழ்த்தகனி = கனிந்த கனி.
நசையுளம் = உள்ளன்பு.

8. கூர்ம புராணம் பூருவ காண்டம்

437. புலவியி லுடைந்த சங்கம் புரிசடைத் திங்கட் கீற்றின்
மலைவற விணைக்கு மேல்வை மழுவலான் குறித்து நோக்க
முலைமுகங் கோட்டி நோக்கி நாணொடு முறுவல் பூத்துக்
கலைநிறை மதியிற் செய்யுங் கௌரிதாள் சென்னி வைப்பாம். (14)

(இ - பொ.) புலவி நுணுக்கத்தில் உடைபடப் பேசுஞ் சங்கத் தமிழைச் சடா முடியில் விளங்கும் மூன்றாம் பிறைச் சந்திரனோடு (மயக்கந்தீர) சேர்த்திணைக்கும் (மேலான) மழு வாயுதமுடைய பரமசிவன் ஜாடையாகப் பார்க்கும்படி, தம் கொங்கைகள் இரண்டையுஞ் சுற்றி வளைத்துப் பார்த்து, தலையிரக்கத்துடன் புன்சிரிப்புக் காட்டிப் பூரண சந்திரனைப்போல முகவிலாச தரிசனம் தரும் கௌரியம்மையின் திருவடித் தாமரைகளைச் சென்னி சூடுவாம். (எ - று).

(அ - ப.) புலவி = ஊடலின் மிகுதி.
சங்கம் = சங்கத் தமிழ்.
மேல்வை = மேலான.
கோட்டி = சுற்றி வளைத்து.
முறுவல் = புன்னகை.
கலை = முகவிலாசம்.

ஷை உத்தர காண்டம்

438. திங்கண்மா மணியிற் செய்த நிலத்தினிற் றெய்வ நன்னீர்க்
கங்கைமென் றிவலை மாந்திக் கண்கவ ரழகு பூத்துக்
கொங்குகொப் பளிக்கும் பொன்னனங் கொடிநிக ரிமய வல்லி
பங்கய மருட்டுஞ் செய்ய பதமலர் சென்னி வைப்பாம். (15)

(இ - பொ.) சந்திர காந்தக் கல்லின்மேல் தெய்வமயம் பொருந்திய கங்காதீரத்தைப் புசித்த பரமசிவன் கண்களையும் கவளீகரிக்கும்படியான பேரழகு பெற்றுத் தேன் பொங்கி வழியும் பொற்கொடியை நிகர் இமய வல்லியாகிய பார்வதியின் பாதபங்கயங்களைச் சிரமேல் வைத்து முடிப்பாம். (எ - று.)

(அ - ப.) கண் = நாயகனுடைய கண்களை.
கொங்கு = தேன்.

கொப்பளிக்கும் = பொங்கும்.
பொன்னங்கொடி = பொற்கொடி போலும் இடை.

9. காசி காண்டம்

439. அலகிலாக் கருணை யென்னு மந்தளி ரீன்று தொல்லை
யுலகெலாம் பூத்துக் கங்கை யுவட்டெடுத் தொழுகுஞ் சென்னி
மலையினிற் படர்ந்த பச்சை மரகதக் கொடியை ஞானக்
கலையமு தொழுகு தீஞ்சொற் கனியினைக் கருத்துள் வைப்பாம். (16)

(இ - பொ.) தொல்லுலக மெல்லாம் அளவில்லாத ஜீவகாருண்ய மென்னும் துளிர் விட்டுப் பூத்து, கங்கா நதி பெருக் கெடுத்தொழுகும் திருக்கயிலாயமலை (சிவபெருமான்) மேல் படர்ந்தோடிய மரகதப்பசுங் கொடியாம் அமுத கலாஞானக் கனி மொழியாளாகிய பார்வதியைக் கை குவித்துப் போற்றுவாம்.

(அ - ப.) தளிர் = துளிர்.
உவட்டு = பெருக்கு.
கலையமு தொழுகுதீஞ் சொற்கனி = அமுதகலா ஞானக் கனிமொழி.

10. வாயு சங்கிதை

440. கட்டழ குடைய முகத்தினுக் குடைந்த கதிர்மதி கண்டுறச் சாம்பு
மட்டவிழ் கமல நின்முகத் தெழிலை வாய்க்கவும் பெறுங்கொலோ வென்று
விட்டலர் கடுக்கை நறுமலர்த் தொடையல் புனைந்தவன் வியந்தெடுத் துரைப்ப
வட்டவாண் முகஞ்சாய்த் திளநகை புரியு மலைமக டாள்வணங் கிடுவாம். (17)

(இ - பொ.) கட்டழகுள்ள பருவத்தையுடைய, பூரண சந்திரனுங் கண்டொளிந் தடங்கும்படியான செந்தாமரை போலும் நின் முக வடிவழகை, யானும் பெற்று வாழ்வேனோ வென்று, கொன்றைப் பூமாலையைச் சூடிய பரமசிவன் காதற் சிறப்பால் நலம் புனைந்துரைக்கவும், முகாரவிந்தங் குனிய, இளநகை புரியும் உமாமகேசுவரியின் திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) உடைந்த = தோற்ற.
சாம்பும் = அடங்கும்.
தொடையல் = தொங்கல் (மாலை.)

ஷ உத்தரகாண்டம்

441. பரவி வணங்கு மடியவர்தம் பாச மனைத்தும் பற்றொழிந்தே
யிரிய நூறித் தன்றுணைத்தா ளேர்சா னிழலி னிடைவைக்குங்
கரிய மிடற்று மறைமுதல்வன் கருணை வாரிக் காரன்னம்
புரையு முமையா ளிருகமலப் பொற்றாள் பணிந்து போற்றுவாம். (18)

(இ - பொ.) வணங்கி வழிபடுந் தொண்டர்கள் தம் பாசபந்தம் அனைத்தும் பற்றற ஒழிந்தோட அழித்துத் தமது திருவடி நீழலின்கண் வைத்து வளர்க்கும் நீலகண்டப் பரமசிவனாகிய கருணையங் கடலின் அருட்சத்தியாகிய அன்னத்தைப் போலும் நடையினளாகிய உமாதேவியாரின் பொற்றாமரைத் திருவடிகளைப் போற்றிப் பணிவாம், (எ - று.)

(அ - ப.) இரிய = ஓடி விட.
நூறி = துரத்தியடித் தழித்து.
புரையும் = போலும்.

11. மச்ச புராணம்

442. பூரணசிற் பரமான மெய்ப்பொருளி னிடப்பாகம் பொருந்தி யாதி
காரணசித் துருவாகி யனைத்துலகும் விளக்கொளியாக் கருணை பூத்த
வாரணவித் தாகிமல ரயன்முதலா முலகமெலா மருளினீன்ற
வாரணவு களபமுலை வடிவுடைய கௌரிபதம் மனத்துள் வைப்பாம். (19)

(இ - பொ.) சிற்பராநந்த பரிபூரணமான பரம்பொருளின் இடப்பாகமாகப் பொருந்தியிருந்து, அரூப ஞான வடிவத்தின் ஆதிகாரணியாய், திசையெங்கும் தீப தரிசனத்தைப் போலக் காருண்யம் மலரும் வேதநாயகியாகி, பிரம்மன் முதலான சர்வாண்ட கோடிகளையும் படைத்தருளிய, கலவைச் சாந்தணி முலையாளாகிய வடிவுடையம்மனின் பதாம்புயங்களைப் போற்றுவாம். (எ - று.)

12. சங்கர நாராயணர் கோயிற் புராணம்

443. நாவினிற் பரவிப் பல்கா னனைகமழ் நறுந்தண் போது
தூவிவீழ்ந் திறைஞ்சு நாகச் சூட்டொளிர் மணியின் சோதி
மேவலாற் பஞ்சி யூட்டி விளங்கிய வண்ணங் காட்டு
மாவுடை மாது செம்பொ னடித்துணை சென்னி வைப்பாம். (20)

(இ – பொ.) நாவினால் துதித்துப் போற்றிப் பன்முறையும் தேன் பொருந்திய நறுமண மலர் கொண்டருச்சித்து அடியில் வீழ்ந்து வணங்கும் ஆதிசேடன் தலையிலுள்ள மாணிக்கத்தின் ஒளி திருவடிகளில் பரவுதலால், செம்பஞ்சிக் குழம்பு ஊட்டப் பெற்றுச் சிவந்து விளங்கும் திருவடியினியல்பைத் தோற்றுவிக்கும் ஆவுடையம்பிகையின் பொன்போன்ற திருவடிகளைத் தலைமேற்கொண்டு வணங்குவாம். (எ - று.)

அம்பிகையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய ஆதிசேடன் தலையிலுள்ள மாணிக்கத்தின் செவ்வொளி, அம்பிகையின் திருவடிகளில் பரவுதலால், அவ்வடிகள் செம்பஞ்சிக் குழம்பு ஊட்டப் பெற்றனபோல் காணப்பெற்றனவென்க.

13. தக்ஷிண கைலாச புராணம்

444. பார்புரந்த திருவடியு மடியவர்க ளீடேறும் படிக்குப் பைம்பொற்
றார்புரந்த வடிவழகு மழகெழுமங் கலநாணுந் தயங்குஞ் சோதிக்
கார்புரந்த கருங்குழலும் வெண்ணகையுஞ் செவ்விதழுங் கருணைக் கண்ணுஞ்
சீர்புரந்த பிடியன்ன மென்னடையம் பிகைபாதஞ் சிந்தை செய்வாம். (21)

(இ–பொ.) உலகை யெல்லாம் காத்தருளுந் திருவடிகளும், அடியவர்களை உய்விக்கும் பைம்பொற்றாரணிந்த வடிவழகும், அழகிய மங்கல நாணும், காரையொத்த கருங்குழலும், முத்தன்ன வெண்ணகையும், கொவ்வைக் கனி

போன்ற செவ்விய உதடுகளும், கருணைபொழியும் கண்களும், அழகிய பெண் அன்னத்தை யொத்த நடையுமுடைய பார்வதியினுடைய திருவடிகளைச் சிந்தையிற்கொண்டு பரவுவாம். (எ - று.)

14. பிரபுலிங்க லீலை

445. ஆதி பகவன் றனதூட றணிப்பான் பணிய வவ்விறைவன்
பாத மிறைஞ்சு மதற்குநெற்றிப் பகையு மல்குற் பகையுமாஞ்
சீத மதியு மரவும் விழுஞ்செயற்கு முவகை செயாமலலை
மாது பணியு மதற்குமன மகிழு முமையை வணங்குவாம். (22)

(இ - பொ.) கடவுள் தம்மிடத்துண்டாகிய பிணக்கைத் தணித்தற் பொருட்டு வணங்க, அந்தத் தலைவன் தம் பாதங்களை வணங்குகின்ற செயலுக்காகவும், தமது நெற்றியினாலே பகைக்கப்பட்டதும், அல்குலாலே பகைக்கப்பட்டதும் ஆகிய குளிர்ச்சி பொருந்திய பிறையும் பாம்பும் வணங்குகின்ற செயலுக்காகவும் மகிழ்ச்சி செய்யாமல், தம் மாற்றாளாகிய கங்காதேவி வணங்குகின்ற செயலுக்காகவே திருவுளமகிழ்கின்ற உமையை வணங்குவாம். (எ-று.)

15. திருக்கூவப் புராணம்

446. பைத்தசிறு மணியரவந் தாழ்ந்துமதி கவர்கின்ற பரிச தென்ன
மெய்த்தவிரும் புகழ்த்திருவிற் கோலநா யகன்மகிழ விற்கோ லத்தை
யொத்தநறு நுதலிடைப்பொற் சுட்டியின்கீழ் வெண்டிலக மொளிரத் தீட்டி
வைத்தருளு மெழிலுடைப்பை யரவல்கு லம்மைபதம் வணக்கஞ் செய்வாம்.(23)

(இ - பொ.) சிறிது பச்சை நிறமான மாணிக்கமுடைய பாம்பானது சந்திரனை மெதுவாகப் பிடிக்கும் பான்மை போலத் திருக்கூவத்தில் தம் திருமேனியை இடப்பாகங்கொண்டு தொட்டுப் பயிலாநிற்கும் கோலநாயகனாகிய பரமசிவன் மகிழும்படியாக, வில்லைப்போலும் வளைந்த புருவ மத்தியிற்றுலங்கும் சுட்டியின் கீழ்ப்பக்கம் வெண்ணீற்றை வெளுக்கப் பூசியருளும் பையரவல்குலுடைய பார்வதியம்மனின் பாதாம்புயத்தை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) கவர்தல் = பிடித்தல்.
பரிசு = பண்பு.
திருவில் = திருக்கூவத்தில்.
பொற்சுட்டி = குங்குமப்பொட்டு.
வெண்டிலகம் = வெண்ணீறு.

16. விருத்தாசல புராணம்

447. பச்சைமலை பவளமலை தனிற்றோற்றம் போலப்
வுடைய திருவடிவு மம்மலை மேலுற்ற
மெச்சுமதித் திருமுகமும் பொய்ச்சதிரு விடையும்
விழிமூன்றுங் கரநான்கும் பெரிய நாயகியார்

கச்சிருந்த முலைத்தடமு மமுதவாக்குங் கருங்குழலும்
வெண்ணகையுஞ் செய்ய வாயு
நச்சுமடி யவர்பிறவி யறுக்குந்தாளு நைந்துருகிப்
புந்தியினிற் சிந்தை செய்வாம். (24)

(இ - பொ.) பவழ மலையின்மீது பச்சைமலை உதித்த காட்சியே போல் விளங்கும் பெரிய நாயகியாரின் பரிவான வடிவழகும், அப்பவள மலைமேல் எழுந்த சந்திரபிம்பம் போன்ற முகாரவிந்தமும், இல்லையென்று சொல்லும்படியான பொய்க் கோலமான இடுப்பும், முக்கண் பார்வையும், சதுர்ப்புஜமும், இரவிக்கை பூண்ட தடமுலையும், அமிர்தமான வார்த்தையும், கரிய பூங்குழலளகமும், வெண் முத்த நகையும், சிவந்த வாயும், நம்பி வழிபடும்படியான அன்பர்களுடைய பிறவியை வேரறுக்குந் திருவடிகளும் கண்டு தரிசித்துக் கைகுவிப்பாம். (எ-று.)

(அ - ப.) பவழமலை = பவழம்போலும் சிவப்புடைய சிவன்.
(உ-ம்) அந்தி வண்ணன்.
பச்சைமலை = பார்வதிக்கு உருவகம்.
முலைத்தடம் = தடமுலை.
வெண்நகை = வெண்முத்தநகை.
கச்சு = கஞ்சுகம் (இரவிக்கை).
செய்யவாய் = சிவந்த வாய்.
நச்சும் = நத்தி வேண்டும்.

17. திருவையாற்றுப் புராணம்

448. வளங்கிளரு மண்டங்க ளனந்த கோடி
வாழுமுயி ரேழ்கடலின்* மணலு மொவ்வா
வுளங்குளிர வுயர்ந்தோர்க்குந் தக்க தேயா
வுயர்துணையில் லாவுயிர்க்குந் தக்க தேயாத்
தளர்ந்தொருவ ருண்டியால் வருந்தா வண்ணஞ்
சைவநா யகனையா றுடைய நாத
னளந்தபடி யிருநாழி நெல்லுங் கொண்டே
யறம்வளர்த்த வன்னைபதஞ் சென்னி வைப்பாம். (25)

(இ- பொ.) ஏழு கடலின் மணலையும் கணக்கெடுத்தாலன்ன, சகல அண்டங்களிலும் வாழ் அனந்தகோடி ஜிவராசிகளுக்கும் ஒவ்வுதலாகவும், உயர்ந்த மேதாவிகளின் உள்ளங் குளிரத்தக்கதாகவும், திக்கில்லாதவர்களுக்குத் தகுதியான உபசாரமாகவும், இப்படித் தளர்ந்த யாரொருவரும் உணவுக்காக வருந்தியலையா வண்ணம், திருவையாற்றின்கண் எழுந்தருளும் சைவசமயத் தலைவனும் பரமசிவன் படியளந்து கொடுத்த இருநாழி நெல்லுங்கொண்டு, அறநெறி வளர்த்த அன்ன பூரணியின் பதாம்புயத்தைச் சிரமுடிப்பாம். (எ-று.)

(அ - ப.) வளங்கிளரும் = கணக்கெடுக்கும்.
ஒவ்வா = ஒவ்வ.

---

* மக்கள், தேவர், விலங்கு, புள், நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் ஆகிய ஏழுவகைப் பிறப்பாகலான், கடலேழின் மேல் வைத்துக் கூறினர்.

துணையில்லாவுயிர் = திக்கில்லாதது.
உண்டி = உணவு.
ஐயாறு = திருவையாறு.
இருநாழிநெல் = (ஒரு) படியரிசி.
அன்னை = அன்னபூரணி.

18. நல்லூர்ப் புராணம்

449. அரியனா யயன்மாற்கு மருமறைக்கு மன்பிலர்க்கு மன்பா னோர்கட்
குரியனாய்த் திலத்துணெய்போ லுட்புறம்பெங் கணுநிறைவா யுயிரீ சற்குக்
கரியனாய் விளங்குநல்ல நாயகனா ரிடத்திலென்றுங் கலந்து வாழும்
பெரியநா யகியுபய பதமலரை யனுதினமும் பேணி வாழ்வாம். (26)

(இ - பொ.) பிரம்ம விஷ்ணுக்களுக்கும், சதுர்வேதங்களுக்கும், அன்பில்லாதவர்களுக்கும் அறியவொண்ணாத அருமையானவனாயும், அன்புடைய அடியார்களுக்கு எள்ளுக்குள் எண்ணெய் போல உரித்தானவனாயும், சர்வான்மாக்களின் உள்ளும் புறமுமாக வியாபித்துக் கூப்பிடற்குச் சாட்சியமானவனாயும் விளங்கும் தெய்வநாயகனிடத்தில் எந்நாளுமே கலந்து வாழ்ந்து வரும் பெரியநாயகி யம்மன் பாதார விந்தங்களைச் சதா வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அரியன் = அருமையானவன்.
உரியன் = உரிமையானவன்.
திலம் = எள்.
ஈசல் + கு = சீழ்க்கை யடித்துக் கூப்பிடலும்.
பேணி = போற்றி.

19. வீரசிங்காதன புராணம்

450. தண்ணறா வொழுகு செங்கேழ்த் தாமரைத் தவிசின் மாதும்
வெண்ணிலா விரிக்கு மேனி விளங்கிழை வாணி யுந்தன்
கண்ணென வுடைய பச்சைக் கவின்பெறு முமைமா தென்றாய்
வண்ணவான் கமல மேய்க்குந் திருவடி மனத்துள் வைப்பாம். (27)

(இ - பொ.) குளிர்ந்த தேனொழுகும்படியான செங்கமலாசனத்து வரும் இலட்சுமியையும், சந்திரப்பிரகாசம் போலும் திருமேனி கொள் வெண்டாமரையாளாகிய சரஸ்வதியையும், தன்னிரு கண்களெனக் கொண்ட பச்சைவடம் பூண்ட உமாதேவியாகிய என்னம்மையின் பாதபங்கயங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) நறா = தேன்.
செங்கேழ் = செந்நிறம்.
தவிசு = ஆசனம்.
வாணி = சரஸ்வதி.
பச்சை = பச்சைவடம்.
(பச்சைப்பட்டாலான ஒருவகைச் சேலை.)

20. சீகாளத்திப் புராணம்

451. பூமக ளிறைஞ்ச நெற்றிப் புதுமணி திலகந் தோய்ந்து
தாமரை நகுமு கத்தோர் தான்பெறப் பணிக ளங்க
மாமதி புரையு மங்கேழ் வயங்குசீர் மலர்த்தாட் குன்றக்
கோமக ளருண்ஞா னப்பூங் கோதையை வணக்கஞ் செய்வாம். (28)

(இ - பொ.) இலக்குமிதேவி தன் நெற்றியின் சுட்டித் திலகமானது பூமியில் தோயும்படியாக வீழ்ந்து போற்றவும், அங்காதி பாதம் முழுவதும் பதும நிதியால் இழைத்த திருவாபரணங்கள் விளங்கவும், செந்தாமரையை மதிக்கத்தக்க திருவடிகளுடைய (மலையரையன் பெற்ற மகளாம்) ஞானப் பூங்கோதை யம்மனை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) தாமரை = பதுமநிதி, பதுமராகம்.
மதி = மதிப்பு.
புரையும் = போலும்.

21. திருக்கழுக்குன்றப் புராணம்

452. பஞ்சொக்க நெகிழ்ந்தன்னப் பரிசொக்க நடக்குமடிப் பசுந்து ழாயோன்
றுஞ்சொக்க விளங்குதரத் தூசொக்க மலைந்தமுலைச் சுடர்ப்பூந் திங்கட்
பிஞ்சொக்க வயங்குநுதற் பிரசொக்க மொழியுமொழிப் பேரண் டஞ்சூழ்
மஞ்சொக்க வளரளக மலைச்சொக்க நாயகியை வணக்கஞ் செய்வாம். (29)

(இ - பொ.) பஞ்சின் மெல்லடியும், அன்ன நடையும், பசிய துளவமாலை யணிந்த மகாவிஷ்ணு துயிலும் ஆலிலை யொத்த வயிறும், பட்டாடையையொத்த மிருதுவான முலைகளும், மூன்றாம் பிறைச்சந்திரனைப் போன்ற புருவங்களும், பிரசைகளுக்குத் தக்க மதுர வார்த்தையும், ஆகாயத்தை மூடிய மேகத்துக்குச் சமானமான அளகபாரமும் கொண்டுவளர் திருக்கழுக்குன்றம் சொக்கநாயகியைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) துஞ்சு = துயில்வதாகிய ஆலிலை மேற்று.
உதரம் = வயிறு.
தூசு = பட்டாடை.
பிரசு = பிரஜை, பிரசுரத்துக்கும்.

22. திருக்காளத்திப் புராணம்

453. அளவிலாத் தோற்றமீ ருயவற்றிற் போகமா யமர்ந்தெஞ் ஞான்று
மளவிலா வழிதுயரா ஞெந்திளைத்த வளவிலா வுயிர்க்குத் தாயா
யளவிலா வருட்டீம்பா லினிதருத்தி யளவிலா வூழி வாழ
வளவிலா வானந்த மருண்ஞானப் பூங்கோதைக் கன்பு செய்வாம். (30)

(இ- பொ.) நால்வகைத் தோற்றத் தெழுவகைப் பிறப்பில் எண்பத்து நான்கு லட்ச யோனி பேதமாய், தனுகரணபுவன போகங்களைப் பெற்று அளவிலாப் பொய்ச் சமயங்களை நம்பி எந்நாளுமே . நொந்திளைக்கும் எண்ணில்லா

உயிர் வர்க்கங்களுக்குத் தாய்வழியாய், அளந்தறிதற் கொண்ணாத திருவருண்முலைப் பாலைக் கொடுத்தூட்டி, சொல்ல முடியாத யுகாந்த காலம் வாழ்ந்துவர, சச்சிதானந்தம் தந்தருள் ஞானப் பூங்கோதையம்மனுக்கு அன்பு செலுத்துவாம். (எ-று.)

(அ - ப.) தோற்றம் = (நால்வகை) அண்டஜம், சுவேதசம், உற்பீசம், சராயுசம்.
அவற்றில் = தனுவாதியவற்றில்.
அளவு + இலா = முகத்தற் கருவியாகிய படி மரக்காலைப் போலில்லாது குடம் ஆதியபோலும்.
ஊழி = உகாந்த காலம்.

23. செவ்வந்திப் புராணம்

454. பனிகொள் வரையிற் பிறந்தபிடி பரனா ரிடத்திற் படர்ந்தகொடி
முனிவ ரிமையோர் மகிழவற முப்பத் திரண்டும் வளர்த்தருளும்
வனிதை வடிவேலனைப் பயந்த மடந்தை மட்டு வார்குழலா
ளினிய பதமா மிருபோதுந் தலைமேற் றரிப்பா மிருபோதும். (31)

(இ - பொ.) பனிச்சாரலான இமயவரையில் பிறந்த பெண்ணானையும், பரமசிவனிடத்திற் படர்ந்தோடி யேறின கொடியிடையும், முனிவர்களும், தேவர்களும் மகிழ்ச்சி யடையும்படியாக முப்பத்திரண்டு தான தருமங்களையும் வளர்த்தருள் வனிதையும், வடிவேலாயுத முடைய சண்முகக் கடவுளைப் பெற்றெடுத்த மடந்தையுமான மட்டுவார் குழலீசுவரியின் மலரடியிணைகளை இரவும் பகலும் சிரமணிவாம். (எ – று.)

(அ - ப.) பிடி = பெண்யானை.
கொடி = கொடியிடை.
இமையோர் = தேவர்.
இருபோது = துணைமலரடி.
இருபோதும் = இரவும் பகலும்.

24. அருணாசல புராணம்

455. காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந் தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக வழகொழுகு முகத்தி னாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித் தெரியாத மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணா முலையாளைச் சிந்தை சேர்ப்பாம். (32)

(இ - பொ.) மேகம் போன்ற கூந்தலையும், கிருபை வழிந்தொழுகுகின்ற இரண்டு கடைக்கண்களையும், தந்தங்களின் காந்தியிளமை யாகிய சந்திரிகைபோற் பிரகாசிக்கப் புழுகு தங்கிய அழகு பொருந்திய முகத்தையும், கச்சணிந்த தனங்களையும், அதிக வழகையுடையதாயொருவருக்குந் தெரியாத இடையையும் சிறப்புப் பொருந்திய பாதங்களையுமுடைய அருணாசல தலத்தில் வீற்றிரா நின்ற உண்ணாமுலையம்மையை மனத்தில் நினைந்து கொள்ளுவாம். (எ-று.)

(அ-ப.) குழல் = கூந்தல்.
மூரல் = புன்சிரிப்பு.
மருங்குல் = இடை.
புழுகு = புனுகு.

25. திருவெண்காட்டுப் புராணம்

456. அடையலர்தம் புரமூன்று மடர்த்தபிரான் புவனமுய்ய வாடா நிற்பான்
பெடைதழுவுஞ் சுவேதவனப் பெடைசூழுஞ் சுவேதவனப் பெருமா னார்தந்
தொடைதிகழு மணிப்புயமுந் திருமார்புங் குழைத்தகொங்கைத் துணையி னாளை
யிடைசிறிய நாயகியை யருட்பெரிய நாயகியை யிறைஞ்சு வோமே. (33)

(இ - பொ.) பகைவராகிய அசுரரின் முப்புரத்தையுஞ் சுட்டுச் சாம்பராக்கியவனும், உலகம் உய்யும்படி தாண்டவம் புரிவோனும், (பெண் அன்னங்களைத் தழுவும் ஆண் அன்னங்கள் சூழ்) திருவெண்காட்டுச் சிவபெருமானுடைய கொன்றைப் பூமாலையணிந்த மணிப் புயத்திலும், திருமார்பிலும் குழையக் கலந்த முலைகள் உடையவளாம் சிற்றிடைச்சியாகிய திருவருட் பெரிய நாயகியம்மனைப் போற்றுவாம். (எ-று.)

(அ - ப.) அடையலர் = பகைவர்.
அடர்த்த = சாம்பராக்கிய.
பெடை = பெட்டை, பெண்பறவை.
சுவேதம் = அன்னம்.
வனப்பு = அழகு.
சுவேதவனம் = வெண் காடு.
தொடை = தொடையல், மாலை.
குழைத்த = குழைந்துகலந்த.

26. திருவிரிஞ்சைப் புராணம்

457. சுரபு ரத்திறை யரியயன் றொழும்பரஞ் சுடரைச்
சுரபு ரத்திறை யருந்துபா லுதவிய தேனை
யரபு ரத்துறை யமர்ந்திடு மயிலையா ரமுதைக்
கரபு ரத்துறை யிறைவியைக் கருதுவேன் கருத்தால். (34)

(இ- பொ.) இந்திரன் திருமால் பிரமன் தொழும் பரஞ்சுடரும், திருஞான சம்பந்தருக்கு ஞானப்பாலுதவிய தேனும், இறைவன் இடப்பாகத்தமரும் மயிலும், அமுதும், கரபுரம் என்னும் திருவிரிஞ்சையில் எழுந்தருளியுள்ள இறைவியுமாகிய பார்வதியை மனத்தில் சிந்திப்பாம். (எ-று.)

27. தீர்த்தகிரிப் புராணம்

458. அன்னையென வுலகமெலா மளித்திருந்துங் கன்னிகை யாமசல மானை
யென்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட தீர்த்தமலை யிறையோன் பாகந்
தன்னையக லாமயிலை மயிலோனுக் கமுதுதவுந் தனத்தி னாளைப்
புன்னைநறுங் குழலிவடி வழகிநா யகியையன்பாற் போற்று வோமே. (35)

(இ-பொ.) உலகமெல்லாம் படைத்தளிக்காநின்றதாயென விருந்தும், கன்னியாகவே இருக்கும் மலைமானாய், அடியேனையுமோர் பொருட்படுத்தி ஆட்கொண்ட தீர்த்தகிரிச் சிவபெருமான் வாமபாகத்தை விட்டுப் பிரியாத மயில் தோகையாய், மயில்வாகனனாகிய பாலசுப்ரமண்யனுக்குப் பாலூட்டிய தனபாக்கியமாய், புன்னைப் பூங்கூந்தலுடைய வடிவழகிய நாயகியைத் தியானிப்பாம். (எ-று.)

(அ - ப.) அன்னை = அம்மை.
கன்னி = குமரி.
அசலம் = மலை.
மயிலோன் = முருகன்.

28. பழைய காஞ்சிப் புராணம்

459. பண்டுசிவ னிடத்துதித்திவ் வண்டமுழு தையுமுதவும் பரிவி னாலே
சண்டதுண்டக் கனற்பால விழிக்கால வுருத்திரனைத் தரணி யாவு
முண்டகொண்ட னிறத்தானை முண்டகனை விழிகளினா லுதவும் பான்மை
கண்டதனா லபிதானங் காமாட்சி யெனுமுமையைக் கருதி வாழ்வாம். (36)

(இ - பொ.) அனாதிய சிவபெருமானிடத்துக் கூடியிருந்து, அண்டசராசரங்கள் முழுவதையும் படைத் தளிக்கும் ஓர் பரிபக்குவத்தினாலே, சூரிய பிறை போன்ற கனல் வடிவமான நெற்றியங்கண் உருத்திரனையும், உலக முண்ட நீல மேக சரீரனாகிய விஷ்ணுவையும், பங்கயனாகிய பிரம்மனையும், தமது திருக்கண் வழியாகப் பெற்றெடுத்ததனால் வரும் காரணப் பெயர் கொள் காமாட்சியம்மனைப் பணிவாம். (எ-று.)

(அ-ப.) பரிவு = பக்குவம்.
சண்டன் = சூரியன்.
துண்டம் = பிறை.
கொண்டல் = மேகம்.
முண்டகம் = தாமரை.
அபிதானம் = காரணப்பெயர்.

29. கந்த புராணச் சுருக்கம்

460. மாற்கரிய செம்பதத் தோன்றேவி யாகி
வல்வினையே னெனதாவிக் காவி யாகி
மேற்கருணைத் திருவுருவ முடையா ளாகி
வித்தகமா யைந்தொழிற்கும் வித்தாய் நின்ற
சேற்கருங்கட் டளவநகைக் களபக் கொங்கைச்
சிற்பரையிங் கெமையாளு முமையாள் செம்பொற்
காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலங் குவித்தருந்துங் கமலந் தீர்வாம். (37)

(இ-பொ.) திருமாலுக்குங் கண்டறிதற் கருமையான சேவடியுடைய சிவபெருமான் தேவியாராய், ஊழியனாகிய அடியேன் உயிர்க்கு உயிராய், கருணா

கடாட்சத் திருவுருவ முடைத்தானவளாய், சிருஷ்டியாகிய ஐந்தொழிற்கும் ஞான வித்தாய் நின்ற அங்கயற் கண்ணியினளாய், முல்லை மலர்ந்த புன்னகையுடைளாய், கலவைச் சாந்தணிந்த முலையுடைய சிற்பரையாய், இம்மையிலேயே எம்மைப் போன்றவரை ஆட்கொள்ளும் உமாமகேசுவரியுமான அம்மையின் திருவடிச் செம்பொன் கமலங்களை நமது தலையின் வைர முடியாகத் தரித்துக் கைகுவித்திறைஞ்சி மலமாயா கன்மந் தீர்ப்பாம். (எ-று.)

(அ - ப.) வித்தகம் = ஞானம்.
சேல்கருங் கண் = அங்கயற்கண்
தளவம் = முல்லை.
அரும் துங்கமலம் = திரிமலம்.

30. திருவாவடுதுறைப் புராணம்

461. கற்புமிகுங் கருணையினாற் கவுணியர்க்குப் பால்சுரந்து கயிலை வெற்பைச்
சுப்பிரமாக் கிப்பெருமே ருவைவளைத்துத் தலைவர் பொருஞ்சூதை வென்று
செப்புநான் மறைக்கடங்காப் பரவெளியை வடுப்படுத்தித் திகழ்ந்து வாழு
மொப்பிலா முலையுபயத் தாட்கபயங் கூறிமகிழ்ந் துளத்துள் வைப்பாம். (38)

(இ - பொ.) தலைவர் கயிலாயத்தில் இடையீடின்றிச் சேர்ந்திருந்தும், பிரிவுற்றார்க்குரிய வெண்மை நிறமாகத் தம்மைச் செம்மையாக்கியும், தம் நாயகர் மேருவையொரு தினங் குழைத்தன் மாத்திரத்தினாலேயே சாய்தலுடைத்தாகத் தாம் பிரதிதினமும் குழையப்பட்டும் சாயாளாகியும், நான்கு வேதங்கட்கும் அதீதமான பரவொளியாந் தம் நாதரை வாலிபப் படுத்தியும், கற்பு மிகுந்த காருண்யத்தினால் சம்பந்தர்க்கு ஞானப் பால் சுரக்க ஊட்டியும், வாழ்ந்து வாரா நின்ற ஒப்பிலா முலையம்மன் பாதங்களிடம் அடைக்கலம் புகுவாம். (எ - று.)

(அ - ப.) சுப்பிரம் = வெண்மை.
வடு = வடுகன் (வாலிபம்).

462. விதிபெறுபா மகண்முதலோர் யாழொடுநன் மிடறிசைய மிகுந்த பண்கொண்
டதிகரச மாப்பாடு மிசைக்கசையா வீசர்சிர மமுத மூறு
மதுரமொழி யாற்பலகாற் கம்பிதஞ்செய் திடப்பேசி மருங்கு நிற்கு
மதுலதன நாயகிதன் னிணையடிப்பூங் கமலமலர்க் கன்பு செய்வாம். (39)

(இ - பொ.) பிரம்மன் மனைவியாகிய சரஸ்வதி முதலானோர்கள், யாழிசையுடன் குரலோசையைக் கூட்டி, இராக ஞானத்துடன் அதிரசமாகப் பாடுமிசைகட்குத் தக்கபடி தலையசைக்கும் பரமசிவனுடைய சிரம் அமுத மூறிய மதுர மொழிகளால் பல விசையும் அசையுமாறு பேசிப் பக்கத்திருக்கும் அதுலதன நாயகியாரின் திருவடிப் பூங்கமலவிணைகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) பாமகள் = சரஸ்வதி.
மிடறு = குரல்.
கம்பிதம் = அசைவு.
மருங்குல் = பக்கம்.
அதுலம் = ஒப்பில்லாதது.

31. காஞ்சிப் புராணம்

463. ஊன்பிலிற்று மழுவாளி கலவிதனி
லொண்ணாதென் றோர்ந்து நஞ்சந்
தான்பிலிற்றும் பாப்பணியை நீப்பவுங்கார்
வண்டினங்க டதைந்து மூசத்
தேன்பிலிற்று நறுங்கடுக்கைத் தெரியலைப்பாம்
பெனமருண்டத் தெரிய னாறுங்
கான்பிலிற்றத் தெருண்டணையுங் காமக்கோட்
டத்துமையைக் கருத்துள் வைப்பாம். (40)

(இ - பொ.) சிவபெருமானுடைய கலவிதனில் (ஊன் சம்பந்தமான) விடங் கொண்ட அரவாபரணங் கூடாதென்று எண்ணி நீக்கிவிட, கரிய வண்டுக் கூட்டங்கள் நெருங்கி மொய்க்கவும், (அப்போதும்) தேனைக் கொப்பளிக்கானின்று மணங் கமழ்ந்த கொன்றைப் பூமாலையைக் கண்டு, பாம்பென மருண்டு அந்த க்ஷணமே, மணம் வீசத் தெளிந்து, தம் நாயகரை அணையும் காமக்கோட்டத்து உமாமகேசுவரியைத் தியானிப்பாம். (எ- று.)

(அ -ப.) பாப்பு = பாம்பு.
நீப்ப = நீக்க.
ததைந்து = நெருங்கி.
மூச = மொய்க்க.
தெருண்டு = தெளிந்து.

464. கருக்காமக் கோட்டிமிர வினையனைத்து
மொருங்கெய்திக் கலகஞ் செய்யுந்
தருக்காமக் கோட்டியெலா மறவெறிந்தா
மினியென்றுந் தகைசா லன்பு
சுருக்காமக் கோட்டினைச்சே யரைகரங்கொண்
டார்க்குமுலைச் சுவடு நல்குந்
திருக்காமக் கோட்டியம்மை சேவடிப்போ
தெப்போதுஞ் சிந்திப் பாமால். (41)

(இ - பொ.) கலகத்தை விளைவிக்கும் கருக்காகிய திமிர மல மூன்றும் ஒருங்கே யணுகிக் கர்விக்கும் அக் கூட்டங்களை யெல்லாம் முற்றும் ஒழித்தோம்; ஆகையினால், இனியெந்நாளும் எங்கள் உள்ளன்பைச் சுருக்க விடாமல், அக்கைச் செவ்விய அரையினும், ஓட்டைக் கரத்தினுங் கொண்ட பரமசிவத்துக்கு முலைச்சுவடு நல்கும் திருக்காமக் கோட்டியம்மை சேவடி மலரை எப்பொழுதும் சிந்திப்போம். (எ - று.)

(அ - ப.) கரு காம கோள் = பிறவியைத் தருகின்ற அவாவாகிய தீமையை உண்டாக்குகின்ற.
திமிர வினை = இருள் மலங்காரணமாக வரும் இருவினைகள்.
தருக்கு ஆம் = செருக்குடையனவாகும்.
கோட்டி = கூட்டம்.

சுருக்காம் = சுருக்காமல் பெருக்குவாம்.
அக்கு = அக்குமணி.
சுவடு = தழும்பு.

ஷ இரண்டாங் காண்டம்

465. முறுவலித் தருளுந் தோறு மொய்த்தெழு நிலவு பொங்கி
யுறைபடத் துளித்த வில்லே யொழுங்குறக் கிடந்தா லென்னப்
பிறைவடஞ் சுமந்த கொங்கைப் பேரமைத் தோளி மம்மர்க்
கறைதபு காமக் கண்ணி கழலிணை கருத்துள் வைப்பாம். (42)

(இ - பொ.) மணி வடம் பூண் தன பாரங்களுடைய வெண்டோளியாங் காமக்கண்ணியம்மை தாம் புன்சிரிப்பாக நகைக்கும் போதெல்லாம் மேலுக்குப் பொங்கிப் பன்னீர் தெளித்தது போலும், ஒழுங்குபட வீற்றிருக்கும் பூரணச் சந்திரனை ஒத்த திருவடியிணைகளை (நமது) மல மயக்கம் கெடும்படி துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) முறுவல் = சிரிப்பு
துளித்த = தூறிய, தெளித்த.
பிறைவடம் = சந்திர ஆரம்.
பேரமைத் தோளி = மூங்கிலை யொத்த தோளினையுடையவள்.
மம்மர் = மயக்கம்
தபுதல் = கெடுதல்

32. விநாயக புராணம்

466. சத்தியாய் விந்து வாய்மனோன் மணியாய்த்
தயங்கிய மகேசையா யுமையாய்
நித்தில வடந்தாழ் முகிழ்முலைத் திருவாய்
நெடும்புகழ் வாணியாய் வேறு
யெத்திற மிறைவ னின்றன னவனுக்
கியைதர வத்திற நின்று
மெத்திய வுயிரின் மலவிருள் கெடுத்து
விளங்குபூ ரணியையேத் தெடுப்பாம். (43)

(இ - பொ.) சத்தியாகியும், விந்துவாகியும், மனோன்மணியாகியும், மகேசையாகியும், உமையாகியும், இலட்சுமியாகியும், சரஸ்வதியாகியும், இன்னும் பலவாருகியும், தலைவன் எந்த வகையாக நின்றனனோ அந்த வகையாக அவனுக்கு அடங்கி நின்று, ஆன்மாக்களின் மலமாயாவிருளைக் கெடுத்து இரட்சிக்கும், ஒளிர் முத்து மாலை தொங்கும் குவிந்த முலையை யுடைய நெடும்புகழ் படை பரிபூரணியை ஏத்துவாம். (எ - று.)

(அ - ப.) தயங்கிய = ஒளியுடைய.
நித்தில வடம் = முத்து மாலை.
எத்திய = எடுத்த

(அ - ம்.) தயங்கிய நித்தில வடந்தாழ் முகிழ் முலை நெடும் புகழ் பூரணியை ஏத்தெடுப்பாம்.

33. திருத்தணிகைப் புராணம்

467. சீரணி சிருக்கு மணிவடஞ் சங்கு
திகிரிசூ லப்படை யிலைவேற்
போரணி பாச மங்குசங் கழைவில்
பூங்கணை வேறுவே றணியா
வாரணன் மாய னரனிப முகத்த
னனங்கனென் றிவர்தொழிற் கெல்லாங்
காரண மாத றெளித்தருள் கொழிக்குங்
கன்னியை யுன்னியேத் தெடுப்பாம். (44)

(இ - பொ.) பூங்கணை தொடுக்கும் கருப்பு வில்லேந்திய மன்மதன், சதுர்வேதனாகிய பிரம்மன், சங்கு சக்கர மேந்தித் துளசி மாலையணிந்த விஷ்ணு, சூலாயுதமும் மூவிலை வேலுமுடைய உருத்திரன், பாசாங்குசமுடைய விநாயகர் என்று சொல்லப்பட்ட இவர்தம் செயல்களுக் கெல்லாம், காரணகர்த்தாவாயிருந்தும் கிருபா கடாட்சம் புரியும் கன்னிகா பரமேசுவரியைத் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) சிருக்கு = சுருக்கு.
கழை = கரும்பு.
அனங்கன் = மன்மதன்.

(அ - ம்.) 1. சீரணி ஆரணன்.
2. சிருக்குமணி வடஞ் சங்கு திகிரி மாயன்.
3. சூலப்படையிலைவேல் அரன்.
4. போரணி பாச மங்குச இப முகத்தன்.
5. கழைவில் பூங்கணை யனங்கன்.

34. பேரூர்ப் புராணம்

468. கங்கைநதி சடைக்கரந்த கணவனு
ருருக்கலந்த தனக்கே யல்லாற்
றுங்கமணிக் கோடிரண்டா யிரம்படைத்த
கரியெவர்க்குந் தூண்டன் முற்றா
தங்கணெடும் புவனத்தென் றமைந்தனள்போற்
பாசமொடங் குசங்கை யேந்து
மங்கலமிக் கருள்பேரூர் மரகதவல்
லியினிருதாள் வனசம் போற்றி. (45)

(இ – பொ.) கங்கா நதியைச் சடா முடியிலொளித்த நாயகராஞ் சிவ பெருமான் திருவுருவில் (இரண்டறக் கலந்து வாம பாகம் பெற்ற தன் திருநாமமே யல்லாமல், நெடிய பூலோகத்தில் மற்றெவர்க்கும் இரண்டாயிரங் கொம்புடைய ஐராவதமென்ற பேர் பொருந்தா தென அவதரித்து மெய்ப்பிப்பவள் போல் பாசாங்குசமேந்தி வரும் விநாயகப் பெருமானைப் பெற்றருள் பேரூர் மரகத வல்லியம்மனின் உபய பாதார விந்தங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ- ப.) தனக்கேயல்லால் = தன்பேருக்கேயல்லாமல்
தூண்டல் முற்றா = தூண்டிச் சொல்லவும் முடியாது.

35. திருவானைக்காப் புராணம்

469. ஆணவ மகன்ற சுத்த வறிவலா லுருவ மில்லாத்
தாணுவி னகற லின்றிச் சகத்தினைந் தொழிலு மாற்றிக்
கோணவ மனைத்து நீக்கிக் குறுகிய வுயிர்கட் கெல்லாம்
பூணவ வின்ப நல்கும் பூரணிக் கன்பு செய்வாம். (46)

(இ - பொ.) ஆணவாதி மும்மலங்கள் அணுகாமல் அனாதியே யகல நின்ற பரிசுத்த அறிவல்லாமல் வேறே உருவமில்லாத சிவபெருமானைப் பிரிவின்றி உலகத்தின் சிருஷ்டியாகிய ஐந்தொழிலும் நடத்தித் தன்னை யடைக்கலம் புகுந்த உயிர்கட்கெல்லாம் கோணுதலான அவலட்சண மனைத்தையும் போக்கிப் பேரின்பத்தை விளைவிக்கும் பரிபூரணியைப் பணிகுவாம். (எ - று.)

(அ - ப.) அகல்தல் இன்றி = பிரிவின்றி.
கோண் அவம் = அவலட்சணம்
பூண் நவ இன்பம் = பேரின்பம்.

470. எண்ணிறந்த தாயர்வயிற் றிருந்துபிறந்
திடுந்துயர மெனைத்து நீங்க
மண்ணிறந்து புனலிறந்து வயங்கியசெந்
தீயிறந்து வளியி னோடு
விண்ணிறந்து பெருங்கருணைத் தாயாகித்
தனதகட்டின் விரவ வைத்துக்
கண்ணிறைந்த கவின்காட்டு மகிலாண்ட
நாயகியைக் கருத்துள் வைப்போம். (47)

(இ - பொ.) எண்ணி முடியாத தாயினர் வயிற்றினின்றும் பிறந்து வருந் துயரங்கள் ஒரு சிறிது மில்லாமல் நீங்கிவிட, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமாகிய ஐந்து பூதங்களையும் இறக்கும்படி செய்து, பின்பு பேரருள் பூண்ட அன்னையாய்த் தனது கர்ப்பத்திலே அடியேனை யணுக வைத்துக் கண்ணிறைந்த வடிவழகைக் காட்டும் அகிலாண்ட நாயகியைக் கருதி அஞ்சலி செய்வாம். (எ - று.)

(அ - ப.) புனல் = அப்பு (நீர்).
வளி = வாயு
விண் = ஆகாயம்.
அகடு = வயிறு
விரவ = அணுக.
கவின் = அழகு.

36. சிவதருமோத்தரவுரை

471. அப்பாலைக் கப்பாலைக் கப்பாலா
யறிவரிய வமலை தன்னை
யப்பாலுந் தானாகித் தொழிலைந்து
மியற்றாதே யியற்று வானை

முப்போது மலர் தூவி முடிசாய்த்து
மனத்தகத்து முன்னு வாரைத்
தப்பாதே பிறப்பறுக்குஞ் சிவகாம
சுந்தரியைப் பணிவாந் தாண்முன். (48)

(இ - பொ.) மாயை பெருமாயை யெனக் கூறிய விரண்டனுக்கு மப்பாலாய், ஆன்மாக்கள் அறிதற்கரிதாய், மலமில்லாத சிவசத்தியாய்ச் சருவ வியாபியுமாய், ஐந்தொழிலுந் தான் செய்யாமல் தன் சந்நிதி மாத்திரத்திலே காரியப்படுத்துபவளுமாய்த் தனது சீபாதங்களில் மூன்று காலங்களும் மலர்களைத் தூவி இதய கமலத்தில் தியானித்து வணங்கும் அடியவர் பிறப்பை நிச்சயமாய் அறுப்பவளுமாகிய சிவகாம சவுந்தரியின் சீபாத கமலம் பணிவாம். (எ - று.)

37. பூவாளூர்ப் புராணம்

472. மணியொளியு மலர்மணமும் வயங்கிரவிக் கதிருமதிக் கலையும் போலத்
துணிவருளுஞ் சிவபெருமா னுடன்பிரியாத் தனதியல்பைத் தொல்லை யான்மாப்
பிணியொருவ வெடுத்தருளுந் திருமேனி யிடத்துமிகப் பிறங்கக் காட்டி
யணிவிரவி வீற்றிருக்கும் பராபரையை யெஞ்ஞான்று மகத்துள் வைப்பாம். (49)

(இ - பொ.) மணியும் ஒளியும் போலவும், மலரும் மணமும் போலவும், சூரியனும் சுடரும் போலவும், சந்திரனும் பிரகாசமும் போலவும், அதி தீவிரமாக அருள் தரும் சிவ பெருமானுடன் பிரியாச் சுபாவத்தை அனுதியே ஆன்மாக்களின் பாசபந்தந் தொலையும்படி திருவவதாரஞ் செய்தருளும், வாம பாகமாக விருந்து காட்டி, அலங்கார மலிந்தெழுந்தருளியிருக்கும் பராபரையை எந்நாளும் மனத்துள் வைப்பாம். (எ - று.)

(அ - ப.) துணிவு = அதி தீவிர பக்குவம்.
தொல்லை = தொன்மை.

473. நங்கழ லடுத்தவர்க ணன்மையிது போலத்
தங்குவர்க ளென்றுழைத ரித்தவரொ டொப்பப்
*பைங்கிளியை யங்கைகொடு பண்ணுரை பயிற்றுங்
குங்குமச வுந்தரிதன் கோலநினை வாமால். (50)

(இ - பொ.) நம் திருவடியை வழிபட்டடுத்தவர்கள் பெறும் பேரின்பமாதிரியாகவே மான்கரமேந்திய பரமசிவனோடும் தங்கி வாழ்வார்களென்று பசிய கிளி மொழியால், உள்ளங் கைநெல்லிக் கனியெனப் பண்ணிசை பாடாநின்ற குங்கும சௌந்தரியின் திருக்கோலத்தைக் கண்டு சேவிப்பாம். (எ - று.)

(அ - ப) உழை = மான்.
பயிற்றும் = பாடிப் பழகும்.

---

*பைங்கிளி யொன்றைக் கையில் கொண்டு பண்ணிசையுடன் பாடப் பழக்குவிக்கும் எனவும் கொள்க.

38. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

474. உரையேறு சைவநெறி வளர்ந்தேறச் சமணரெலா முட்கி மாழ்கிப்
புரையேறக் கண்டவர்க ளானந்தக் களிப்பேறப் புகழ்நா வேந்தைக்
கரையேற விட்டபிரா னொருபாகம் வளர்கருணைப் பிராட்டி யான
தரையேறு புகழ்ப்புலிசைப் பெரியநாயகி சரணந் தலைமேற்கொள்வாம். (51)

(இ-பொ.) சுத்தாத்துவித வைதிகச் சைவ சித்தாந்தச் சமய நெறி வளர்ந்தோங்கி வரவும், சமணர்களெல்லாரும் வெட்கி இறந்து படவும், வீட்டு வழி கண்டடைந்தவர்கள் ஆனந்த மடையவும் ஆக, திருநாவுக்கரசு சுவாமிகளைக் கரையேற விட்ட சிவபெருமான் தம் வாமபாகமாக எழுந்தருளிய கருணாகடாட்சியாம் திருப்பாதிரிப்புலியூர் பெரிய நாயகியம்மனுடைய சரணாம் புயங்களைத் தலைமேற் கொள்வாம். (எ- று.)

(அ - ப.) உட்கி = வெட்கி
மாழ்கி = இறந்து.
புரை = வீடு

475. சொல்லாலும் வல்லாலுந் துணைத்திறுமாந் தெழுந்தடர்ந்த சூதை வென்ற
வல்லாலுந் வல்லோனை வல்லாலென் றிருசுடரு மலர்க்கை கொண்டே
யல்லாலும் படிபுதைத்த தல்லாலிவ் வுலகுய்யத் தவத்தும் வெல்லு
நல்லாளைப் புலிசைநக ரருந்தவநா யகியுமையை நயந்து வாழ்வாம். (52)

(இ - பொ.) புகழப்படுகின்ற வலிமை வாய்ந்த, பருத்து உயர்ந்து எழுந்து இறுமாந்து வல் எனும் சூதாடும் கருவியை வென்ற இருமுலைகளையுடையவளும், வல்லவனாகிய சிவபெருமானுடைய இரு கண்களையும் தம் மலர்போன்ற கைகள் கொண்டு உலகம் இருளடையும்படி புதைத்தவளும், இந்த உலகம் உய்யும்படி தவத்தினால் சிவனை வெல்லுகின்ற புலிசை நகரில் உள்ள உமாதேவியாம் அருந் தவநாயகியை வணங்கி வாழ்வாம். (எ - று.)

39. திருச்செந்தூர்ப் புராணம்

476. ஊடலி னுடைந்த சங்க மொளிர்சடைப் பிறைவெண் கீற்றின்
மாடுறப் பொருத்தும் போழ்து மகிழ்நருட் குறித்து நோக்க
வேடுறு தளவப் போதி னிளநிலா முறுவல் பூத்துப்
பீடுறு மதியிற் செய்த பெண்ணடி வணக்கஞ் செய்வாம். (53)

(இ – பொ.) (கலவியின்கண் தன்னைக்கட்டி) ஊடாடியதனால் உடைபட்ட சங்கத்தைச் சடாமுடியினொளிர் பாலசந்திரன் மாட்டு வைத்துப் பௌரணை யாக்கும்போது, (அதுவும் போதாதென்று நாயகர் தம்மைக் குறிப்பான் கண்ணோக்குமாறு) விரும்பாநின்ற முல்லையம்போது போன்று பல்வரிசை தர நகைத்து, இள நிலா காட்டிப் பாட்டியமாகச் செய்தருளும் பெண்டகைப் பிராட்டியை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) ஊடல் = ஊடாடுதல்.
மாடு = மாட்டு.

மகிழ்னர் = மணவாளர்.
தளவம் = முல்லை.
முறுவல் = புன்னகை.
பீடு = பெருமை.

40. கடம்பவனப் புராணம்

477. நாதவிந்து வாயோக போகசக்தி யாகிக்கா ரணநான் காகி
யோதுசதுர் வியூகியாய்ப் பின்னமாய்ப் பரையா யுன்ம னியுமா
யேதமறு வீரசத்தி யாப்பலவாய் மேலாகு மெம்பி ராட்டி
யாதிமது ரேசர்பங்கி லங்கயற்க ணம்மைபத மகத்துள் வைப்பாம். (54)

(இ - பொ.) பரநாத பரவிந்துவாய், சர்வயோக போக சத்தியாய், அறிவு, நிறை, ஓர்ப்பு (பொறுமை), கடைப்பிடி என்ற நால்வகைக்குணக்காரணியாய், கன்னி, கௌமாரி (குமாரி), மங்கை, மடந்தையாய், பருவமுடையவளாய், தீவிரதரியாய், பராபரையாய், மங்கையர்க் கரசியாய், வீரமுடையவளாய், சத்தியாய், இன்னும் பலவாய் மேன்மை பொருந்தி வளரும் எம் தலைவியும் ஆதிமதுரேசர் வாமபாகமானவளுமான அங்கயற்கண்ணம்மையின் பாத கமலங்களுக்கு அன்பு செலுத்துவாம். (எ - று.)

(அ - ப.) பின்னம் = விரைவு.
உன்மனி = மன்னிக்கும் மன்னியாய்.
பிராட்டி = பெருமாட்டி..

41. உத்தரகோசமங்கைப் புராணம்

478. காரேறு கருங்குழலுந் திருநுதலுஞ் சுடரிலைவேற் கண்ணுங் கஞ்சத்
தாரேறு திருமார்புங் கரும்புருவத் தடந்தோளுங் கருணை காட்டி
நீரேறு சடாமவுலிப் பெருமான்ற னொருபாக நீங்கா தோங்கும்
வாரேறு பூண்முலையாண் மலர்பதத்தை யெந்நாளும் வழுத்தல் செய்வாம். (55)

(இ - பொ.) கார் நிறங்கொண்ட கூந்தலும், புருவம் வளைந்த நெற்றியும், வேலைப்போன்ற கண்களும், தாமரை மலர்மாலையணிந்த மார்பும், சதுர்ப்புஜங்களுமாகக் கொண்டு விளங்கி, சடாகங்காதரனாகிய சிவபெருமான் தன் இடப்பாகமாக ஓங்கி வுளரும் உத்தரகோச மங்கையம்மன் மலர்ப்பாதத்தை எந்நாளைக்கும் வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ம்.) கரும் புருவத் திருநுதலும்.

42. கடம்பர்கோயிற் புராணம்

479. பூங்கமல மலர்பதமும் புனைமணிமே கலையுடையும் பொருவி னுன்கு
தேங்கமல மலர்க்கரமுஞ் சிற்றிடையுந் திருநயனச் சிறப்புஞ் செம்பொற்
கோங்கமலர் முகையனைய கனதனமுங் குளிர்ந்தமதி முகமுங் கொண்டென்
பாங்கமலன் றன்னொடும் வாழாவுடைநா யகியிருதாள் பற்றி வாழ்வாம். (56)

(இ - பொ.) பாதபங்கயமும், மேகலாபரண உடையும், சதுர்ப்புஜ செங்கமலக் கரங்களும், சிற்றிடையும், திருக்கண்விசாலமும், கோங்கமலர்முகையைப் போன்ற செம்பொன் கனதனபாரமும், குளிர்ந்த சந்திர பிம்பம் போன்ற முகாரவிந்தமுங் கொண்டு அடியேனெதிர பரமசிவனோடும் வாழும் ஆவுடைநாயகியின் திருவடியிணைகளைத் துணையாகக் கொண்டு வாழ்வாம். (எ - று.)

43. வசவ புராணம்

480. கலைம டந்தையுங் கந்தக் கமலையு
நிலைமை தங்கட்கு நீடப் பணியவாழ்
தலைமை யாலுயர் சங்கரி யம்பிகை
மலைம டந்தை மலர்ப்பதம் வாழ்த்துவாம். (57)

(இ - பொ.) சகல கலைஞானமுமுடைய சரஸ்வதியும், மணமுடைய செங்கமலோற்பவியாகிய இலக்குமியும், தங்கள் நிலையான வாழ்க்கை நீண்ட காலம் நிலைத்து வரும்படியாக, அஷ்டாங்க பஞ்சாங்கமாய்ப் பணியும் தலைமையினால் உயர்தரு சங்கரியும், அம்பிகையுமான இமவான் மகளாம் பார்வதியம்மன் மலர்ப்பதங்களை வாழ்த்துவாம். (எ - று.)

44. சரப புராணம்

481. இருளாகி வெளியாகி யிருள்வெளிக டமைநீங்கி யெழுதா வேதந்
தெருளாத பரையாதி திரிவிதசத் திகளாகிச் செய்கைக் கெய்தாப்
பொருளாகி நின்றபிரா னணிவெள்ளி யம்பலத்துட் புரியா நின்ற
வருளாடல் கண்டுகந்த வங்கயற்க ணம்மைபதத் தன்பு செய்வாம். (58)

(இ - பொ.) இராப்பகலென்னும் காலமாய், இரவு பகலில்லாத பேரின்பமாய், சதுர்வேதங்களாலும் தெளியவொண்ணா இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்று சத்திகளாய், திருவருட்செயலின் பரம்பொருளாகி நின்ற சிவபெருமான் வெள்ளியம்பலம் அடைந்து ஆடாநின்ற தாண்டவத்தைக் கண்டு மகிழ் அங்கயற்கண் அம்மைபதத் தியானம் புரிவாம். (எ - று.)

(அ - ப.) தெருளாத=தெரியாத.

45. சீர்காழிப் புராணம்

482. ஒருநிலையே யுலகனைத்தும் பொருணிலைசேர்
வெண்டிருநீ றுயர்த்து வேதந்
தருநிலையால் வளர்ந்தோங்க விரங்குமரு
மறைக்குழவி தன்பா லன்பாற்
பெருநிலைசேர் முலைக்கண்ணுஞ் சிலைக்கண்ணு
மிரங்கியவெம் பிராட்டி யன்பர்
கருநிலைதீர்த் தருள்காழித் திருநிலைநா
யகிதுணைத்தாள் கருத்துள் வைப்பாம். (59)

(இ - பொ.) உலகெலாம் ஒரே நெறியாகச் சேரும் சைவ சமயப் பொருள் நிலையான விபூதி விளங்கித் திருநெறித் தமிழ் வேத பாராயணத்தை வளர்ந்தோங்க விரங்கிப் பாடப் புகும் திருஞான சம்பந்தமென்னுஞ் செல்வத்துக்குப் பெருநிலைசேர் அன்பினால் கிருபாநோக்கங் கொண்டு முலைப்பால் கொடுத்த எம்பெருமாட்டியும், அடியார்களுடைய பிறப்பைத் தவிர்த்தவளுமான சீர்காழித் திருநிலை நாயகி துணைத்தாளைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) நிலை = நிலைமை.
சிலைக்கண் = வில்லைப்போலும் வளைந்த புருவமுடைய கண்கள்.
கருநிலை = பிறவி.

483. அகலி னாயகி மணியெனச் சுடரையுய்த் ததற்கரு மறைக்காட்டி
னிகலி னாயகி லாண்டநல் கியமுத லிடத்திருந் தொருகோடி
பகலி னாயகி யாதியைப் படைத்துநீள் பழமறைக் கொழுந்தாய
புகலி னாயகி பெரியநா யகிமலர்ப் பொன்னடித் துணைபோற்றி. (60)

(இ - பொ.) அகலில் மாணிக்கம் ஒளித்ததுபோல, விளக்கைத் தூண்டிய எலிக்குத் திருமறைக் காட்டில் வல்லபத்துடன் சகல புவனங்களையும் அரசு செலுத்தும்படி கொடுத்த சிவபெருமானின் இடப்பாகமாக அமர்ந்து, கோடி சூரியப் பிரகாசமென விளங்கி, நீள் பழமறைச் சிவக்கொழுந்தாகிய சீர்காழி பெரிய நாயகியம்மன் பாதாரவிந்தங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) அகலின் = கலசத்தின்.
நாயகிமணி = மாணிக்கம்.
சுடரை = விளக்கை.
உய்த்தற்கு = தூண்டற்கு.
இகலின்ஆ = வல்லபத்தாலாம்.
நல்கிய = கொடுத்தருளிய.
முதல் = முதல்வன்.
புகலி = சீர்காழி.

---

46. திருவேற்காட்டுப் புராணம்

484. முந்துபெருங் கருணையினாற் பரைமுதல சத்திகளாய் முறைமைத் தாக
வைந்துபெருந் தொழினடத்தி மூன்றுதிறத் தான்மூல மகற்றி யாள
விந்துமுதன் மூன்றாகி விளங்குமுபா தானங்கண் மேவி விண்ணோர்
வந்துபணி வேற்காட்டில் வாழ்சாந்த நாயகிதாண் மனத்துள் வைப்பாம். (61)

(இ - பொ.) முற்படுந் திருவருட்பேற்றால், சிற்சத்தி, பராசத்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி இவர்களாய், இவர்களின் முறைமையாகவே உயிர்க்கொளியாதல், பிராணாதிவாய்வாதல், பஞ்சபூதமாதல், ஐம்பொறியுணர்வாதல், மற்றவினைத்துணையாதல் ஆகிய ஐம்பெருந்தொழிலையும் நடத்தி, ஞாயம், சோதனைப் பொருத்தம் என்னும் மூன்று திறத்தாலும், மூலமலாதிகளைப் போக்கியாள்வதற்காக விந்து, நாதம், பரம் ஆய மூன்றுமாகி விளங்கும், துணைக்காரணங்களாகச் சேர்ந்திருந்து, விண்ணவர்கள் வந்து பணியாநின்ற திருவேற்காட்டில் வாழும் சாந்தநாயகியின் திருவடியைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) முந்து = முன்பு.
உபாதானம் = துணைக்காரணம்.
மேவி = சேர்ந்திருந்து.

47. சானந்த கணேச புராணம்

485. அலகின் முதுபே ரண்டமளித் தருளு மயிலையயன் முதலாம்
பலரு மிறைஞ்சு முயரரசின் பாலிற் படர்ந்தபசுங் கொடியை
யிலகு மொருகொம் புடைக்கரியை யீன்ற பிடியையுளக் கமலத்
துலவு மிளவோதிமப் பெடையை யுன்னிப் புகழ்ந்து வணங்குவாம். (62)

(இ - பொ.) கணக்கில்லாத பெரிய பேரண்டங்களைப் படைத்தளிக்கும் மயிற்சாயலையுடையாய் —

(அ - ப.) அலகில் = எண்ணில்லாத.
மயில் = மயிலின் சாயல்.
உயர் + அரசு = உயர்ந்த அம்பலத்தரசு.
ஓதிமம் = அன்னம்.
பெடை = பெட்டை.

48. கணேச புராணம்

486. பானிறநீ றணிதுகிரின் றூநிறக்குன் றிடம்படர்பைங் கொடியைப் பாண்செய்
தேனிமிர்தண் டாமரைச்செம் பூமகளு மகள்ககனஞ் செறியுந் தேவர்
கோனினிது மகிழ்ச்சியோ டரமகளிர் தொழுதேத்துங் கொம்பை யோங்கி
வானிமிர்குன் றரசன்மக ளாயுலகந் தருமுமையை வணக்கஞ் செய்வாம். (63)

(இ - பொ.) பால்போலுந் திருநீறணியப்பட்ட பவளவண்ணனும் பரமசிவனுடைய இடப்பாகம் படர்ந்தேறும் பசுங்கொடியாய், கீதங்கள்பாடும் வண்டுக்கூட்டங்கள் மொய்க்கும்படியான தாமரையில் பிறந்தோர்களாகிய இலக்குமியும், சரஸ்வதியும், வானுலகத் தேவர்களும், தேவேந்திரனும், அரமகளிரும், தொழுதேத்திவரும் கொம்பனையளாய், வானுயர்ந்த இமவான் மகளுமாய, உலகம் தந்தருளும் உமாமகேசுவரியை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) பால்நிறநீறு = வெண்ணீறு.
துகிர் = பவளம்.
குன்று = மலை.
பைங்கொடி = பசுங்கொடி.
பாண் = பண்.
பூமகள் = இலக்குமி.

நாமகள் = சரஸ்வதி.
ககனம் = வானம்.
தேவர்கோன் = இந்திரன்.
குன்றரசன் = மலையரையன்.

49. திருவாப்பனூர்ப் புராணம்

487. கானேறு தருநிழல்விண் மகளிர்குழற் காரிருட்குங் கணவர் சூடும்
வானேறு மிளிர்தருவெண் மதியினுக்குங் குவியாது மலர்ந்து ஞானந்
தானேறு மன்பருளத் தடந்தோன்றித் தண்ணளிசூழ் தருநீள் வாசத்
தேனேறுமலர்க்குரவங் கமழ்குழலா ளடிக்கமலஞ் சிரமேல் வைப்பாம். (64)

(இ - பொ.) மணமேறிய கற்பகத்தரு நிழலில் வசிக்கும் தெய்வப் பெண்களின் காரிருள் கூந்தலுக்கும், நாயகர் சூடும் விண் ஏறி வெளிச்சந்தரும் வெண்ணிலாவுக்கும் ஒடுங்கிவிடாது, ஓங்கி மலர்ந்து ஞானவழியிலே நிற்கும் அடியார்களுடைய உள்ளன்பில் பிரவேசப்பட்டுப் பேரின்ப மயமான மணத்துடன், தேன் நிறைந்த குரவமலர் பரிமளிக்குங் *பூங்குழலாகிய பார்வதியம்மனின் திருவடிக் கமலங்களைச் சிரஞ்சூடுவாம். (எ - று.)

(அ - ப.) கான் = மணம்.
விண்மகளிர் = இந்திராணி முதலான தேவ மகளிர்.
உளத்தடம் = உள்ளன்பு.

50. திருப்பூவணப் புராணம்

488. மன்னுமழை தவழ்குழலு மதிநிகருந்
திருமுகமு மலர்ப்பூங் கையும்
பன்னுதமிழ்ப் பால்சுரக்கும் பயதோரமு
மறைகொழிக்கும் பவள வாயுந்
துன்னுமணி திகழுடையுந் துடியிடையுந்
துலங்கிடவைந் தொழிற்கும் வித்தாய்ப்
பொன்னனையா னிடத்தமர்ந்த மின்னனையாள்
பொற்பாதம் போற்றல் செய்வாம். (65)

(இ - பொ.) மேகத்தைப் போலும் தவழாநின்ற கருங் கூந்தலும், சந்திரனையொத்த முகவிலாசமும், பூங்கமலக் கரங்களும், தேவாரத் தமிழுக்காக ஞானப்பால் சுரக்கும் முலைகளும், வேதம் ஓதுவிக்கும் பவழம் போன்ற வாயும், ஆடையாபரணங்களும், மின்னலைப் போலுந் துடிக்கும் இடுப்பும் கொண்டு விளங்கி, சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களுக்கும் ஓர் வித்தாய், பொன்வண்ணனாகிய சிவபெருமான் இடப்பாகத்தமர்ந்த மின்னொளியாம் பார்வதியின் பொற்பாத கமலம் போற்றி. (எ - று.)

(அ - ப.) மழை = மேகம்.
பயோதரம் = முலை.

---

*எனவே, இந்திராணி முதலான விண்மகளிர் குழலினும் மிகுந்த கருமையும் சந்திரனை விட மிகவும் வெளுத்த குரவமலரும் உடைய குழலாள் பார்வதி.

அணிதிகழ் உடை = ஆடையாபரணம்.
பொன்னனையான் = பொன்வண்ணனாகிய சிவபெருமான்.
மின்னனையாள் = மின்னொளி போன்ற பார்வதி.

51. மயூரகிரிப் புராணம்

489. மருவலுறு தன்னை யுந்தோற் ருவிருளாய் மறைத்துப்பின் கருணை மல்கிக்
குருவடிவாய் வந்துமலந் தனையகற்றித் தனைச்சிவனைக் குறிப்பிற் காட்டிப்
பெருகியமுத் தியையுயிர்க்குக் கொடுத்தருளு மெந்தாயெம் பெருமான் வாமத்
தருகிருக்கு மங்கயற்க ணுமையவடன் சரணமல ரகத்துள் வைப்பாம். (66)

(இ - பொ.) சம்பந்தப்பட்டுவரும், தன்னையுமறியாத மாயாவிருள்போன்ற திரோபவத்தில் மறைப்பித்துப் பின்னர் உயிர்களிடத்துக் கருணை கொண்டு விளங்கும் குரு வடிவமாய் வந்து, மூலமலந்தனைப்போக்கி, தன்னையுந் தலைவனையுஞ் சின்முத்திராங்க மரபானுணர்த்திக் காட்டிப் பேரின்ப முத்தியை ஆன்மாக்களுக்குக் கொடுத்து இரட்சிக்கும் என் தந்தையுமான சிவபெருமானுடைய வாம பாகத்தில் வீற்றிருக்கும் அங்கயற்கண் அம்மையின் சரணாரவிந்தங்களை அகமும் புறமும் வைத்து வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) தன்னையுந் தோற்ருவிருள் = திரோபவம்.

52. திருமயிலைப் புராணம்

490. கொங்குலா மலர்க்குழலும் பிறைநுதலுங்
கயல்விழியுங் குமுத வாயுஞ்
சங்கமா மணிமிடறுங் கழைப்புயமு
மலர்க்கரமுந் தரள மாலைத்
துங்கமா கிரிமுலையுங் கொடியிடையும்
பதுமவடித் துணையு முள்ள
வெங்கணா யகியையெழின் மயிலையிற்கற்
பகக்கொடியை யிறைஞ்சி வாழ்வாம். (67)

(இ - பொ.) கொக்குப் போலும் வெண்மையான மலர்கள் முடித்த கொண்டையும், சந்திரப் பிறைபோன்ற நெற்றிப் புருவமும், சேல் கண்டையைப் போன்ற கண்களும், செவ்வாம்பல் நிற வாயும், சங்குபோலும் அழகுடைய கழுத்தும், அம்பருத்தூணியைப் போன்ற புயங்களும், செங்கமல மலர் போன்ற கரங்களும், முத்துமாலை பூண் மலைபோன்ற முலையும், துகில் கொடி கட்டிய இடுப்பும், பாதபங்கயங்களும் உடைய, அடியேங்கள் தலைவியாம், திருமயிலை கற்பக வல்லித் தாயாரை வணங்கி வாழ்ந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) கொங்கு = கொக்கு, (கோங்குப் பூவும்).
கழை = மூங்கிலால் வளைந்த அம்புக்கூடு.
தரளம் = முத்து.
கொடி = துகிற்கொடி.
பதுமம் = தாமரை.

53. ஆதிபுரிப் புராணம்

491. துய்யபரா பரைமுதலாஞ் சத்தியா
    யைந்தொழிற்குந் தோற்ற மாகி
யுய்யவரும் விந்துமோ கினிமானும்
    விளங்குமுபா தான மேவி
வெய்யமல விருளழுந்திக் கிடந்திடுமூன்
    றணுவினுக்கும் விருப்பி னீடும்
வையமெலாம் படைத்துவளர் வடிவுடைநா
    யகிமலர்த்தாள் வணக்கஞ் செய்வாம். (68)

(இ - பொ.) தூய்மையான பராசத்தி முதல் சிற்சத்தி, இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியா சத்தியாய், சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களுக்கும் கண்ணோக்க மாகி, உய்விக்கும் பொருட்டு விந்து மோகினி வடிவமாம் துணைக்காரணமும் ஆகி, வெவ்விய மும்மல விருளில் அழுந்திக் கிடக்கும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகையார்க்கும், நீண்ட வையகம் யாவையும் விரும்பிக்கொடுத் தருளும் வடிவுடைய நாயகியார் திருத்தாள் மலர்களை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) துய்ய = தூய.
தோற்றம் = கண்ணோக்கம்.
மான் = உருவம்.
உபாதானம் = துணைக்காரணம்.
அணு = ஆன்மா.

54. திருவொற்றியூர்ப் புராணம்

492. படிமிசையி லருளொளியாய்ப் பராபரசத் தியதாகிப் பரவி நின்று
நெடியவனான் முகனாதி யுயிர்த்தொகைக டாம்போற்று நிலையும் பொற்பாந்
தடவரைபோ லிருதனமும் பிறைநுதலு மலர்விழியுந் தயங்கா நிற்கும்
வடிவுடைய மங்கையெனு மாதாவி னிருதாளை வணக்கஞ் செய்வாம். (69)

(இ - பொ.) திருநெடுமாலும், நான்முகப் பிரமனாதி ஆன்மகோடிகளும் போற்றிவரும்படியான, பொன்மயமான சேவடிகளும், மலைபோன்ற தனபாரங் களும், மூன்றாம் பிறையை யொத்த விற்புருவமும், கருணை நோக்கமும் கொண் டசையாமல், உலகமெலாம் கருணாகடாட்சியாய், பராபரசத்தியாய் நின்று விளங் கும் வடிவுடைய மாணிக்கமென்னுந் தாயின் இரு தாள்களையும் வணக்கஞ் செய் வாம். (எ - று.)

(அ - ப.) பொற்பு = பொன் மயம்.
தயங்கா = அசையாமல்.

55. திருவாலங்காட்டுப் புராணம்

493. கரியமலர்த் தடங்குவளைக் கலகவாட்கட் கடையதனா
    லைந்தொழிலுங் களியுற் றீசன்
புரியவரு ணோக்கருளிப் புரந்தராதி புனையுமணி
    மகுடநிரை பொழியுங் காந்தி
பரிபுரச்சீ றடிப்பதுமச் செய்யதோட்டுப் பஞ்சியொழுங்
    கெனப்பரவப் பணிய நல்குந்
தெரிவரிய பரமாய வாலங்காட்டுச் சேயிழைவண்
    டார்குழலைச் சிந்தை செய்வாம். (70)

(இ - பொ.) கருங்குவளை மலர் போலும், (வாளைப் பழித்த) கடைக்கண் மாத்திரத்தினாலேயே சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களும், தந்நாயகனாகிய பரமசிவன் நடத்துவது போலவே தாமும் களிப்பால் நடத்தியருளி, இந்திரன் முதலான மணி மகுடந்தரித்த தேவர்கள், பளபளப்பைச் சொரியும் பாதச் சிலம்பை, பஞ்சின் மெல்லடி சரணார விந்தமெனப் பணிந்து வழிபட, அவர்கட்கு வரந்தந்து இரட்சிக்கும் திருவாலங்காட்டுச் சேயிழை வண்டார் குழலாளாகிய உமாமகேசுவரியை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) கட் கடையதனால் = கடைக் கண்ணால்.
நிரை = கூட்டம்.
பொழியுங் காந்தி = ஒளி பொழியும்.
பரிபுரம் = பாதச் சிலம்பு (நூபுரம்)

56. அவிநாசிப் புராணம்

494. மருங்கருணா லையவேணி வள்ளலா ரிடத்திருந்தும் வலப்பா கத்தி
ளொருங்கருணா லையத்துடனா றிருதரும முயர்ந்தோங்க வுலகம் வாழ
நெடுங்கருணா லையநேமி நிகழ்புகழ்சேர் புக்கொளியூர் நிலைசெய் ஞானப்
பெருங்கருணா லையச்செல்வப் பேருடையாள் சீறடியின் பெருமை சார்வாம். (71)

(இ-பொ.) சுற்றுப் பக்கமெல்லாம் தொங்கி யாடுஞ் சடையுடைய சிவ பெருமான்றன் இடப்பக்கமாகவிருந்து வலக்கையினால் ஒரு மொத்தமான முப்பத்திரண்டு தருமமும் உயர்ந்தோங்கி நடைபெறவும், அதனால் உலகம் வாழ்ந்து வரவும், அருணனுக்கு ஆலயமாகிய உதயகிரி வரைக்கும் சென்று நிலவும் புகழ்சேர் திருப்புக்கொளியூரில் நிலையாக வெழுந்தருளும் ஞான வடிவுடைய கருணாலயச் செல்வியின் சிற்றடிகளைச் சேர்ந்து துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) மருங்கு அருள் நால் ஐய வேணி = சுற்றுப்புற மெல்லாந் தொங்கி யாடுஞ் சடை.
நால் + ஐ + அத்துடன் = இருபதுடன்
ஆறு இரு தருமம் = பன்னிரண்டு தருமம்
நெடுங்கு = நீள.
அருண ஆலைய நேமி = உதயகிரி.

57. திருமுருகன்பூண்டிப் புராணம்

495. அயங்கொள் வார்சடை யாரிடத் தமர்ந்த வாரணங்கை யன்னையைப் போதந்
தயங்கு மாமணி விளக்கினைத் தாவர சங்க கோடியைக் காக்கு
நயங்கொ ணாரியை நான்மறைத் தலைவியை நல்கு பேரரு ளாளை
முயங்கு பூண்முலை வல்லியென் னம்மையை முறைமை யிற்பணி வாமால். (72)

(இ - பொ) கங்கையணிந்த சடாபாரனாம் சிவபெருமானுடைய இடப்பாக மாயமர் ஆரணங்காய், அன்னபூரணியாய், ஞானம் ஒளிரா நின்ற மாணிக்க விளக்காய், தாவர சங்க கோடிகளைக் காப்பாற்றும் நாரணியாய், வேத முதல்வியாய், திருவாபரணம் அணிந்த முலையுடைய வல்லியாம் பார்வதியம்மையாரை நெறிமுறையுடன் பணிவாம். (எ - று.)

(அ - ப.) அயம் = நீர்.
ஆரணங்கு = அணங்கு.
தயங்கும் = ஒளிரும்.
மாமணி = மாணிக்கம்.
நாரி = நாரணி
முயங்கு பூண் = பூண் தழுவும்

58. பவானிகூடற் புராணம்

496. பண்பெற்ற மறைக்கிழவன் கையாறக்
கருங்கால படர்கா லாற
வெண்பத்து நான்குநூ றாயிரந்தா
யருஞ்சுமக்கா திளைப்பிங் காறத்
தண்பெற்ற பெருங்கருணை யதுகொழிக்குங்
கடைக்கணருள் தந்தாட் கொண்டெடன்
புண்பெற்ற பவந்துடைத்த வேதநா
யகிமலர்த்தாள் போற்றல் செய்வாம். (73)

(இ - பொ.) படைக்கும் தொழிலுடைய பிரம்மன் கைகளாறவும், கருத்த நிறத்தனாகிய எமன் கால்களாறவும், எண்பத்து நான்கு இலட்சம் தாய்மார்கள் வயிறாரவும், கருணாகடாட்சம் பெருகும் குளிர்ச்சி பொருந்திய கடைக்கண் அருளைத் தந்தாட் கொண்டு, அடியேன் பிறவிப் புண்ணைத் துடைத்தாற்றிய வேதநாயகியம்மன் திருவடிக் கமலங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) மறைக்கிழவன் = சதுர்வேதன்
கருங்காலபடர் = கருநிறம் படர்ந்த காலன்.
நூறாயிரம் = இலட்சம்
கொழிக்கும் = கொட்டிக் கொடுக்கும்.

59. கருவூர்ப் புராணம்

497. நதிகாட்டும் புனற்கழனி வளங்காட்ட வறங்காட்டு நலஞ்சேர் வஞ்சிப்
பதிகாட்டும் பசுபதியோ ரிடங்காட்ட வலங்காட்டும் பரையை மேலாங்
கதிகாட்டுங் கருங்குயிலை யருள்காட்டுங் கயலிரண்டு காட்டுந் தூய
மதிகாட்டு மடமயிலை வடிவுடைய நாயகியை வணங்கி வாழ்வாம். (74)

(இ - பொ.) ஆற்று நீர்ப் பாய்ச்சலால், பயிர் சேமப்பட, அறமுதல் நான்கையுங் காட்டும் நலத்தினர் சேர்ந்து வாழ் கருவூர் என்னுந் புனித தலத்தில் உள்ள சிவபெருமானுக்கு வாமபாகமாகவிருந்து ஊர்வலஞ் செய் பராபரையாய், உயர்ந்த சாயுச்சிய பதவியைத் தரக் கூவியழைக்கும் குயிலின் குரலுடையவளாய், கருணை நோக்க முடைய கயற்கண்ணியாய், மடமயில் போன்ற சாயலுடையவளாகிய மதிமுக வடிவுடைய நாயகியை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) கழனி = வயல். (ஈண்டுப் பயிர்மேற்று).
நலம் = நலமுடையோர் மேல்

வஞ்சி = கருவூர்.
வலம் = திருவலம்.
கதி = வழி

60. திருமாணிக்குழிப் புராணம்

498. தருணநறை மலர்க்கோயிற் பூமகளு நாமகளுஞ் சார்ந்து போற்றக்
கருணைபுரி வாமனேச் சுரனுதவி நாயகனைக் கலந்து வாழும்
பொருணிறைந்து வளந்தருபூஞ் சோலைவா மனபுரத்துப் புளகக் கொங்கை
யருணமலர் வதனவுமை யம்புயாட் சியின்மலர்த்தா ளகத்துள் வைப்பாம். (75)

(இ - பொ.) மணமுடைய செந்தாமரை மலர் என்னுங் கோவிலில், தம் நாயகர்களாகிய பிரம்ம விஷ்ணுக்களுடன் சரஸ்வதியும் இலக்குமியும் சார்ந்தடைந்து போற்றிவரக் கருணை புரியும் வாமனேச்சுரனைக் கலந்து, அருட் செல்வம் பொருட் செல்வம் இரண்டும் நிறைந்த வளப்பந்தரும் பூங்காவனங்கள் சூழ்ந்த வாமன புரத்தில் வாழ்ந்துவரும் புடை பெயர்ந்த முலைகளையுடைய முகாரவிந்த வல்லியாம் அம்புசாட்சியின் பாதபங்கயங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) சார்ந்து = துணை பற்றி
பொருள் = அருட் செல்வம், பொருட் செல்வம் ஆய இரண்டும்.
புளகக் கொங்கை = விம்மின முலை.
அம்புய ஆட்டி = புயவலிமையுடையவளுக்குமாம்.

61. திருவோத்தூர்ப் புராணம்

499. அன்புநிறைந் தவருளத்தில் வெளியாக
விருந்தருளு மதுவே யன்றி
வன்புநிறைந் தவருளத்துந் தோன்றும
லிருந்தருளி மயலைத் தேய்த்துத்
துன்பநிறைந் திடும்பிறவிப் பெருங்கடற்குத்
தோணியுமாய்த் தொலையா முத்தி
யின்பமெனுங் கரையேற்று மிளமுலைநா
யகிமலர்த்தா ளிறைஞ்சி வாழ்வாம். (76)

(இ - பொ.) அன்பு நிறைந்தவர்களின் உள்ளத்தில் வெளிப்படையாக விருந்து வரமருள்வதும், அது வல்லாமல் வம்பு நிறைந்தவர்களுடைய உள்ளத்திலும் தோன்றுமல் மறைந்திருந்தருளி, மயக்க மலமாகிய மூன்றையும் தேய் பிறை போலச் சுருக்கி (நாசஞ் செய்து) துன்பம் நிறைந்த பிறவியென்னும் பெருங்கடலைக் கடப்பதற்கு ஒரு துணையான மரக்கலமுமாய், நித்தியானந்த முத்தியென்னும் அக்கரையை ஏறச் செய்யும் இள முலை நாயகியாம் உமய பார்வதியை ஏத்தி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) வன்பு = வன்மை (கல்மனம்).
மயல் = (மும்மல) மயக்கம்.
தேய்த்து = நிலவைப் போல முழுதும்.
தோணி = மரக்கலம், படகு.
தொலையா முத்தியின்பம் = நித்தியானந்த முத்தி.

---

62. திருச்சுழியற் புராணம்

500. இணைமாலைச் சொலுங்கூந்த லிமையமட மங்கையரா
வணைமாலைக் கணையாக்கித் திரிபுரத்தி லனலூட்டி
பணைமாலை யொழிப்பதற்குப் பவளவிதழ்த் தேனூட்டுந்
துணைமாலைத் தாய்கமலச் சேவடியைத் தொழுவாமே. (77)

(இ - பொ.) அரவணையில் துயிலும் திருமாலைப் பாணமாக்கிக் கொண்டு முப்புரங்களையும் எரித்த பரமசிவனுக்குத் தமது பருத்தெழுந்த முலை மயக்கத்தைத் தவிர்ப்பதற்காகப் பவளவாயின் அதராமிர்தத்தை யூட்டி மகிழ்விக்கும் (மாலைப் பொழுதையொத்த கூந்தலையுடைய இமயமலை தரும்) பெருந்துணைத் தாய் அம்மையின் சேவடியைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) இணைமாலை = மாலை(ப் பொழுதை)யிணை.
அரா அணை (மால்) = பாம்பைப் படுக்கையாகக் கொண்ட
கணை = பாணம் [விட்டுணு.
பணைமால் ஐ = பணைத்தெழுந்த முலை மயக்கம்.
இதழ்த்தேன் = அதராமுதம்.
பவள = பவள வாயுடைய.
துணைமால் = பெருந்துணை.

---

63. மருதூர்ப் புராணம்

501. பனிவரையின் முளைத்துவிழிச் செழுங்கருணைத்
தளிரீன்று பார வெள்ளித்
தனிவரையிற் பெருந்தருவைத் தழுவியண்ட
கோடிமுற்றுந் தழைத்து மிக்க
முனிவரைய ருளங்கிளர்சத் ததுபூத்துச்
சித்தெனுங்காய் முகிழ்த்தா னந்தக்
கனிவரையா தேகொடுக்கு மழகியபைங்
கொடியிருதாள் கருது கிற்பாம். (78)

(இ - பொ.) பனி சொரியும் இமயவரையில் முளைத்து உற்பத்தியாகி, கருணை நோக்கமும், திருவருட் செயலுமெனுந்தளிர் விட்டு, (சொக்க) வெள்ளியங் கிரிதனில், சிவபெருமான் என்னும் பெரிய கற்பகத் தருவைத் தழுவியோடி, அண்டகோடிகளெல்லாம் தழைத்து, மிகுதியும் முனிவர்கள், இருடிகள் உள்ளன்பில் சத்தென்னும் பூப்பூத்து, சித்தென்னுங் காய் காய்த்து, ஆனந்தமென்னும் பழம் பழுத்து, அளவில்லாமல் தரும் அழகிய பைங்கொடியின் திருவடிகளைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) பனிவரை = இமயம்
முளைத்து = தோன்றி
விழிச்செழுங்கருணை = கருணை நோக்கம்.
பாரவெள்ளி = சொக்க வெள்ளி.
பெருந்தரு = கற்பகம்.
முகிழ்த்து = குவியக் காய்த்து.
வரையாதேகொடுக்கும் = அளவில்லாமல் கொடுக்கும்.

64. ஆதித்தபுரிப் புராணம்

502. ஆசகலு மணிவிளக்கை யருட்கனியைச் சிவானந்த வமுதை யன்பர்
நேசமெனும் பால்பருகும் பூங்கிளியை யுலகருளி னிறுத்துந் தாயை
வாசமலர்க் கருங்குழலை யாதித்த புரசயில மன்னி வாழு
மீசனிடத் தமர்ந்தவளை ஞானநாய கியைநித்த மிறைஞ்சி வாழ்வாம். (79)

(இ- பொ.) இருளையொழிக்கும் மாணிக்க விளக்காய், அருள்பழுத்த கனியாய், சிவானந்த ஆரமுதாய், அடியார்களுடைய சிவநேசமென்னும் பாலைப்புசிக்கா நின்ற பஞ்சவண்ணக்கிளியாய், உலகமெலாம் ஊட்டிக்காப்பாற்றி வரும்தாயாய், நறுமணமுடைய பூங்குழலியாய், ஆதித்தபுரத்தில் நிலையாக வாழ்ந்து வரும் ஈசனுடைய இடப்பாகம் அமர்ந்தவளாயுமுள்ள ஞானநாயகியம்மனை நாள்தோறும் போற்றி வழிபடுவாம். (எ - று.)

(அ - ப.) ஆசு = குற்றம்.

65. திருக்குற்றலப் புராணம்

503. இமையவரைக் குலக்கொழுந்து கயிலைவரை
மேருவரைக் கிறைவி வேதச்
சிமையவரைத் திரிகூடச் சிவக்கொழுந்து
மணக்குமொரு செழும்பூங் கொம்பு
கமையவரைப் புரக்கவருட் கடல் சுரந்து
மடைதிறந்த கண்ணு ளென்னுஞ்
சமையவரைத் தலைவிகுழல் வாய்மொழியம்
பிகைதிருத்தா டலைமேற் கொள்வாம். (80)

(இ - பொ.) இமயமலையின் குலக்கொழுந்தாய், வெள்ளியங்கிரியுடன் பொன்னம்பொருப்புக்கு அரசியாய், சதுர் வேதகிரியைப்போன்ற திரிகூடத்தில் எழுந்தருள் சிவபெருமான் மணந்து வருமோர் மங்களகரமான பூங்கொம்பாய், சாதுக்களை இரட்சிக்கும் பொருட்டாகத் திருவருட்டுணையாம் கடன் மடை திறந்த முலைக்கண் சுரந்தவளென்னும் சைவசமயத் தலைவியாய், பூங்குழலினளாய், குழல் வாய் மொழியென்னும் பெயருடன் விளங்கும் அம்பிகாபரமேசுவரியின் திருவடித் தாமரைகளைச் சிரமேல் முடிப்பாம். (எ - று.)

(அ - ப.) இறைவி = அரசி.
சிமையம் = உச்சி,

திரிகூடம் = திருக்குற்றாலம்.
மணக்கும் = மணம் முடிக்கும்.
கொம்பு = கொம்பனை.
கமையவர் = சாதுக்கள்.
புரக்க = காக்க.
மடை = முகத்துவாரம், அணை.

504. அம்பரத்தி னிடைத்தோன்று மாருதம்போ
லம்பரத்தி லருளாய்த் தோன்றி
யம்பரத்தி னம்புரவா னொருதனுப்போ
லிருதனுவு மமைந்தொன் றாகி*
யம்பரத்தின் விசிகரம்போ லத்துவித
மாகியண்ட மனைத்து மீன்றா
ளம்பரத்தி னமர்கடந்த வருள்விழிச்சண்
பகக்கோதை யடிசார்ந் துய்வாம். (81)

(இ - பொ.) ஆகாயத்தின்கண் தோன்றும் காற்றைப்போலப் பரமசிவனிடத்தில் திருவருட் சத்தியாய்த் தோன்றியும், மேகமண்டலத்தினின்று உண்டாகும் வில்லைப்போலத் திருமேனி இரண்டும், அமையப்பெற்று ஏகமாகியும், கடலிற் றோன்றுகின்ற அலைகளைப் போல இரண்டற்றதாகிய அகிலாண்டமும் பெற்றவளாம் பீதாம்பர ஆடைதரிக்குங் கிருபாகரியான சண்பகக் கோதையம்மன் திருவடியை அடைந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அம்பரம் = ஆகாயம்.
அம் + பரம் = பரமசிவம்.
அம்பரம் = திசை.
அம்பு = மேகம்.
தனு = தனுசு.
அம்பரம் = கடல்.
விசிகரம் = அலை.
அத்துவிதம் = இரண்டற்ற வொன்று.
அம்பரம் = பீதாம்பரம்

505. பூதபல போதவுயிர் தேககர ணாதிமுறை
போக புவனாதி களெலா
மாதியுமை வாணிதிரு வாயகில லோகநிறை
வாக வருள்கூறு மொருதாய்
நாதர்கயி லாசகிரி வாசர்திரி கூடநட
ராசருட னாத வடிவாய்
வேதமொழி யோதிவிளை யாடுகுழல் வாய்மொழிமெய்ஞ்
ஞானபரை பாத நினைவாம். (82)

---

* செம்மையும் நீலநிறமும் போலச் சிவனும் அம்மையும் ஆமென்க.

(இ - பொ.) சரசுவதியாகவும், இலக்குமியாகவும், உமா மகேசுவரியாகவும் வந்து, சர்வஅண்டங்களிலும் நிரம்பிய பஞ்சபூத சம்பந்தமான நானாவித உயிரினங்களுக்குத் தக்கபடியே தனுகரணாதி புவன போகங்களை யெல்லாம் கொடுத்து இரட்சிக்குமோர் தாயாய், கயிலாசகிரி வாச நாதரான திருக்குற்றால நடராச மூர்த்தியுடன் நாத கீதத்தோடு வேதாத்தியயன மோதி விளையாடும் புல்லாங்குழல் ஓசையினளாகிய மெய்ஞ்ஞான வள்ளியம்மனைத் துதிப்பாம்.(எ-று.)

(அ-ப.) பூதம் = ஐம்பூதமும்.
பலபேதம் = நானாவிதம்.
நாதவடிவு = சங்கீதவுரு.
குழல் (வாய்)மொழி = குழல் போலுங் குரலுடைய உமையம்மை.

66. திருநெல்வேலிப் புராணம்

506. பரிபுரமு மலரடியு மரை நூன்மாலைப் பட்டுடையு
நுணுகிடையும் பார மேருப்
பொருவுமிரு தனமும்வளைக் கரமுமெங்கோன் பூட்டியமங்
கலநாணும் புனைபொற் றோடு
மருமலருங் குழலுமதி முகமுஞ்சோதி மணிவயிரச்
சுட்டியும்பட் டமுஞ்செவ் வாயுங்
கருணைபொழி தருவிழியு மழகுபூத்த காந்திமதி
தேவியைநங் கருத்துள் வைப்பாம். (83)

, **(இ-பொ.)** கால்சதங்கையும், திருவடிப் பங்கேருகமும், தாமரை நூல் வரிசை யோடிய பட்டாடை உடையும், நுண்மையான நுசுப்பும், மேருகிரியை யொத்த தனபாரமும், கங்கணங் கட்டிய கரமும், எம்பெருமானாகிய சிவபெருமான் முடிபோட்ட மாங்கல்யதாரணக் கழுத்தும், பரிமளமான பூ முடித்த கொண்டை, யும், சந்திரபிம்பம் போன்ற முகமலர்ச்சியும், வயிரமணிச் சுட்டியின் சோதியும், நெற்றியிற் கட்டிய பட்டமும், அதராமுத வாயும், கருணை நோக்கமும் கொண்டு விளங்கும் காந்திமதியம்மனைக் கருதி வணங்குவாம். (எ-று.)

(அ-ப.) பரிபுரம் = நூபுரம். (பாதக்கிண்கிணி).
மரைநூல் = தாமரை நூல்.
மாலை = வரி
நுணுகிடை = நுசுப்பு.
வளை = கங்கணம்.
தோடு = பூவிதழ்.
மணிவயிரம் – வயிரமணி.

507. நிருத்த னற்புத னெல்லையி னித்தலு
மருத்தி யுற்றறஞ் செய்தமை யாண்டவள்
மருத்த ருங்குழ லாள்வடி வாள்பதங்
கருத்துள் வைத்துக் கருதி வணங்குவாம். (84)

(இ-பொ.) அற்புத நடனம் செய்யும் தாண்டவராயனுடைய சன்னிதானத்தில் எப்போழ்துமே உண்பிக்கும்படியான தருமம் செய்து, எம்மையெல்லாம் ஆட்கொண்டு இரட்சித்தவளாகிய மருமலர்ப் பூங்குழலினளாம் வடிவாம்பாள் திருவடிகளை மனமாரப் பணிந்து வணங்குவாம். (எ—று.)

(அ-ப.) நிருத்தன் = நடனமாடும் நடராசன்.
அருத்தியுற்று = ஆசையுற்று.
எமை = எம்மை.
மருத்தரும் = மணக்கும்.

67. மருதவனப் புராணம்

508. பொன்னிலகு பனிவரைக்கண் முளைத்தருள்வண்
டளிர்குழைத்துப் பொற்பி னோங்கிப்
பன்னுமிள மதிச்சடிலப் பவளமலை
யிடத்தினிது படர்ந்து மேன்மை
யென்னுமுகை முகிழ்த்துவகை பூத்துமணந்
திடைமருதி லிமையோர் போற்ற
மன்னுபுகழ்ப் பெருநலமா முலையெனச்சொல்
பசுங்கொடியை வணங்கு வாமால். (85)

(இ-ப.) பொன்மயமான, பனி சொரியும் இமயமலையில் பொன்மயமான முளை கிளம்பி, கருணை நோக்கமென்னுந் தளிர் அலங்கரிப் பென்ன ஓங்கி வளர்ந்து, சந்திரசடாதர னென்னும் பவழமலையின் மேல் படர்ந்தோடி, மேற்கொள்ள லென்னும் அரும்பு அவிழ்ந்து, ஒழுங்கு என்னும் பூப்பூத்து, பேரின்பமென்னும் மணம் கமழ்ந்து தேவர்கள் போற்றும்படியாகத் திருவிடைமருதூரில் எழுந்தருளும் பசுங்கொடியாம் பயோதரவல்லியம்மனை வணங்குவாம். (எ-று.)

(அ-ப.) குழைத்து = தளிர்த்து.
பொற்பு = அலங்கரிப்பு.
இளமதி = பாலசந்திரன்.
சடிலம் = சடை
மேன்மை = மேற்கொள் தன்மை.
முகை = அரும்பு.
முகிழ்த்து = அரும்பி.

68. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

509. ஆரணியைப் பெருங்கருணை வடிவாளை
யுலகங்க ளனைத்து மீன்ற
காரணியைச் சிற்ப ரையன்புதல்
விதனைக் கடுக்கை யென்னுந்
தாரணியை யானனத்தர் சிவலோகத்
தியாகரிடந் தன்னில் வாழும்
பூரணியை யெழிற்றிருவெண் ணீற்றுமையை
யெப்போதும் போற்றி வாழ்வாம். (86)

(இ-பொ.) வேத நாயகியாய், கருணையே திருமேனி வடிவமானவளாய், சர்வ அண்டங்களையும் ஈன்றருள் காரண முதல்வியாய், சிற்பரையாய், இமயவரையின் புத்திரியாய், கொன்றைப் பூமாலை சூடிய ஐம்முகத்தவராகிய சிவலோகத் தியாகர் இடப்பாகத்தில் வாழும் பரிபூரணியாய் விளங்கிய திருவெண்ணீற்று உமையம்மனை எப்போதும் போற்றுவாம். (எ - று.)

(அ-ப.) கடுக்கை = கொன்றை.
ஐயானனத்தர் = ஐம்முகன், பகவன்.

69. மயூராசலப் புராணம்

510. பாலினுறு நீர்போ லாணவமா தியவகன்று பகருஞ் சுத்தஞ்
சாலுமறி வுருவாகுந் தனிப்பரனைக் கலந்தும்வயாத் தரித்த லின்றி
ஞாலமெலா மினிதீன்று காத்தழிக்கு மாடலை நடாத்தி யைந்து
கோலமதா யுலகளிக்கும் பராபரையை யெமதுளத்திற் கொண்டு வாழ்வாம்.(87)

(இ-பொ.) பாலிற் கலந்த நீர் போன்ற ஆணவம், மாயை, காமியம் ஆய மும்மலத்தையும் நீக்கி, அனாதியே பரிசுத்த அறிவுருவான தற்பரனாகிய பரமசிவனைக் கூடிக் கலந்திருந்தும் கருப்பமட்டுந் தரித்தலில்லாமல், இச்சா மாத்திரத்தினாலேயே உலகங்களை யெல்லாம் படைத்துக் காத்தழிக்குந் திருவிளையாடலை நடத்தி, உயர்ந்த மேதாவிகளால் வாழ்த்தப்படும் பஞ்சவர்ணக்கிளியாம் பராபரையம்மனை யாம் பூசித்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) வயா = கருப்பம்.
ஆடல் = திருவிளையாடல்.

70. திருப்பெருந்துறைப் புராணம்

511. தூயநா மத்தருவ முருவமெவை
யெனினுமொரு தோன்றல் போன்றே
பாயநா னிலவரைப்பின் கணுமமர்வா
ளெனறெரித்த படியே போல
வாயநா தங்கடந்த வான்மநா
தக்கடவு ளமர்ந்தற் கேற்ப
மேயநா யகிசிவயோ காம்பிகைதன்
விரைமலர்த்தாண் மேவி வாழ்வாம். (88)

(அ-பொ.) பரிசுத்தனாகிய தம் நாயகன் கொள் அருவ உருவ வடிவிற் கேற்பத் தாமும் இமயமலையின்கண் அவதரித்து வந்திருப்பாளெனத் திருட்டாந்தப்படுத்தினது போல், நாதாதீதங் கடந்த ஆன்மநாதக் கடவுள் எழுந்தருளிய தற்கிணங்க, அருவுருவம் பெறும் சிவயோகாம்பிகையம்மனின் திருவடிக் கமலங்களைப் பூசித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) தோன்றல் = மன்னன்.

71. காசி ரகசியம்

512. இறைவனில் வெண்ணிறஞ்செந் நிறமுளார்
முகக்கண்ணா யிருக்குஞ் சீரு
மறைதருத வளப்பிறைதாழ் தருகுழற்பின்
னலும்வன் னியமரங் கையு
மறைகெழுமு மேதகவும் வாய்ந்துமா
தேவியென மருவி நாளு
நிறைதருபே ரருள்கொழிக்கு மன்னபூரணி
மலர்த்தா ணினைந்து வாழ்வாம். (89)

(இ-பொ.) வெண்டாமரையிலுள்ளவளாகிய சரஸ்வதியும், செந்தாமரையிலுள்ளவளாகிய இலக்குமியும், சன்னிதான முகத்துக் கெதிரில் சேவித்துக் கொண்டிருக்கும் சிறப்பும், தாழ் குழற் கூந்தலில் சந்திரப் பிறையணிந்த பின்னல் சடையும், வன்னிக்கு(துதிக்கு)த் தக்க கனிகரமும், வேதத்தினிலைபெறும் மேன்மையும் கொண்டு விளங்கிய இறைவனாகிய பரமசிவத்துடன் உமாமகேசுவரியென வீற்றிருந்து, நிறைந்த திருவருட் பேற்றை யெந்நாளுங் கைகொடுக்கும் அன்னபூரணியம்மன் திருவடி மலர்களைப் பூசிப்பாம். (எ - று.)

(அ-ப.) தவளம் = வெண்மை.
தாழ்குழல் = நீள்சடை (பின்னல்).
வன்னி = வர்ணிப்பு, துதி.
மேதகவு = மேன்மை.
கொழிக்கும் = கைகொடுக்கும்.
வன்னி = கிளி; கிளித்துருய் பிடித்த கையு மெனல் பொருந்தும்.

(அ - ம்.) இறைவனில் உமாதேவி யென மருவி நாளும் எனவாம்.

---

72. திருநாகைக்காரோணப் புராணம்

513. கருந்தடங்க ணம்மையுறார் தமைச்சாரா
வெங்கோபக் கடுங்க டாப்பா
கருந்தடங்க ணம்மையெவன் செயுமனமே
மதனாரோர் காற்றீ ராமோ
கருந்தடங்க ணம்மையுறப் பரப்பியமர்க்
கினுமெவனாங் கடனா கைக்கட்
கருந்தடங்க ணம்மையிரு கமலமலர்ச்
சேவடிகள் கருது வாமே. (90)

(இ-பொ.) மனமே! இனிமேல் பிறப்பில்லா முத்தர்களை யண்ட முடியாத, எருமைக் கடாவாகனனும் எமனுடைய கரியகுண்டுக்கண்களும், வெவ்வியகோபாவேசமும், பிடிவாதமும் நம்மை என்ன செய்யும்? அதுவல்லாமல் தீரா மோகத்தையுடையவரும், ஒவ்வொரு காலம் வெறுத்துத்தள்ளி விடாநின்ற தமது கணமாகிய மாதர் கூட்டத்தை, ஏவி மன்மதன் (நமக்கு) மயக்கம் மிகப் பரப்பிப் போர் செயினும், யாது தீங்காகப் போகிறது? ஒன்று மில்லையாகையினால், கடலடுத்த நாகைக்காரோணத்தில் எழுந்தருளிய நீலாயதாட்சியம்மையின் தாமரை மலர் போலும் சிவந்த திருவடிகளிரண்டையும் நாம் துதிப்பாம். (எ - று.)

(அ-ப.) அம்மையுருர் = மேல் பிறப் பிலா முத்தர்.
கடுங்கடாப் பாகர் = (எருமைக் கடாவேறும்) எமன்.
உந்து அடங்கள் = பிடிவாதமும்.
எவன் செயும் = என்ன செய்யும்.
அமர்க்கினும் = போர் செய்யினும்
கருந்தடங்கண் = நீலாயதாட்சி.

514. சுரும்புமுரல் கருங்குழலுஞ் செவ்வாயும்
வெண்ணகையுந் தொடிப்பொற் றோளும்
விரும்புபர ஞானநிறை கொங்கையுஞ்
செங்கையுங் கதிர்த்துமிளிர் செம்பட்டும்
பெரும்புவன முழுதமைசிற் றுதரமுமங்
கலநாணும் பிணைகண் ணோட்ட
மரும்புகருந் தடங்கண்ணி சேவடியுந்
துதித்துமனத் தமைத்து வாழ்வாம். (91)

(இ - பொ.) வண்டுகள் கீதம் பாடும் கரிய பூங்குழலும், சிவந்த வாய் வெண்பல் சிரிப்பினழகும், பொன் வளையலணிந்த கரங்களும், திருஞானப் பால் நிறைந்த முலைகளும், செங்கைகளும் அதிகமாக மின்னியொளிர் செவ்விய பட்டாடையும், பெரிய உலகங்களை யெல்லாம் அடக்கிக் கொண்டுள்ள சிறிய வயிறும், மாங்கல்ய தாரணமும், கருணை நோக்குமுடைய நீலாயதாட்சி யம்மனின் சேவடிகளைத் துதித்து வாழ்வாம். (எ-று)

(அ - ப.) சுரும்பு = வண்டு.
முரல் = கீதம் பாடல்.
தொடிப் பொன் = பொற்றொடி, பொன்வளையல்.
விரும்பு பரஞானம் = திருஞானப் பால்.
செங்கை = சிவந்த கை.
உதரம் = வயிறு.
சிற்றுதரமும் = சிற்றிடை வயிறும் ஆம்.

73. திருக்குடந்தைப் புராணம்

515. திருக்கையிடத் தெழுந்துலகஞ் சிறிதுபுரி
பெருவெள்ளந் திவலை யாகித்
தருக்கையொழிந் திடவளவில் பெரும்புவனத்
துயிர்ப்பயிர்க டழைய வாழு
மிருக்கைவிழிக் கடையாக்கொண் டெழுகருணைப்
பெருவெள்ள மெங்கும் போர்ப்ப
வருக்கைமிளிர் குடந்தையமர் மங்களநா
யகிமலர்த்தாள் வணங்கி வாழ்வாம். (92)

(இ - பொ.) சிவபெருமான் தமது திருக்கரங்களைக் கொண்டு, சிறுபோதுலகம் நடாத்தும் ஒரு பெரிய காருண்யக் கடலும் சௌரிய மொழிந்து துளிப்பிரமாணமாய்விட, உலகத் துயிர்களாகிய பயிர்கள் தழைத்து வாழும் இருப்பிடம்

தம் கடைக்கண்ணாகவே கொண்டு கருணை வெள்ள மெழுப்பி எங்கும பாய்ந்தோட வொழுங்கு காட்டும் திருக்குடந்தை மங்கள நாயகியம்மன் மலரடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) திவலை = துளி.
தருக்கு = சௌரியம்.
இருக்கை = இருப்பிடம்.
போர்ப்ப = ஊறிப்பாய.
வருக்கை = ஒழுங்கு.

74. மாயூரப் புராணம்

516. பரவுபிற ரபயவர தம்புனைந்தும் பாவனை யாம்படி யானாண்
வுரவுமிகு மவைமலர்க்கை யமைத்தமைத்த படியகில வுயிர்க்கு மாற்றிக்
கரவுதவிர் தரவனைய வுபயமே திருப்பெயராய்க் கதிர்ப்பப் பூணாற்
றரவுமதி புனைவார்பா லமரஞ்ச னாயகிதா ளடைந்து வாழ்வாம். (93)

(இ - பொ.) தன்னை வழிபடும் அன்பர்கட்கு அச்சத்தை நீக்கி அருள் புரியும் பாவனையாக அபய வரத கரங்களைப் பெருமையுடன் காட்டிக் காட்டி எல்லா உயிர்கட்கும் அருள்புரிந்து வஞ்சகத்தைப் போக்கி, " அபயாம்பாள் " என்னும் பெயரைப் பெருமையுடன் பெற்று, அரவும் மதியுமணிந்துள்ள சிவபெருமானிடம் அமர்ந்துள்ள அஞ்சல்நாயகி திருவடிகளையடைந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அவை = அவல், திரட்சி.
தரவு = தலைவன் கட்டளை, தண்டற்காரன்.
உபயம் = உபகாரம், மகிமை.

517. வாவிபொலி பிரமவன மாயூர மெனுமொருபேர் மருவி யோங்கத்
தூவியன முணராத முடிச்சரப மொருமயிலாத் தோன்றி யாங்கு
மேவியமர் தருவிடப மரங்கமா நடம்புரிய விழைந்து நோக்கி
யோவியெலா முளமகிழ்பூத் தமர்ந்தொழுகும் பசுமயிலை யுன்னி வாழ்வாம். (94)

(இ - பொ.) தடாகங்களால் பொலிவுற்று விளங்கும் பிரமவனம் மாயூரம் எனும் பெயர் பெற்றோங்கப் பிரமனால் தேடியறிய முடியாத திருமுடியினையுடைய சரபாவதாரங் கொண்ட சிவபெருமான், ஒரு மயிலின் வடிவெடுத்துத் தாம் எழுந்தருளிய இடபத்தையே ஆடரங்காகக் கொண்டு நடனமாட, அதனை விரும்பி நோக்கி மனமகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் மயிலம்மையை நினைந்து வாழ்வாம். (எ - று).

75. உறையூர்ப் புராணம்

518. சுருக்காந்தி கழுமாறு செய்வாமன் பிணையன்றே தொட்ட பாசத்
தருக்காந்தி யக்கமெலா மறவொழிப்பாம் புவனமெலாஞ் சலிக்கத் தோன்றும்
பெருக்காந்தி வலையாகச் சடைவைத்தா ருளம்வைத்துப் பெரிது பார்க்குந்
திருக்காந்தி மதியம்மை மருக்காந்தி மரைமலர்த்தாள் சென்னி சேர்ப்பாம். (95)

(இ - பொ.) உலகமெல்லாஞ் சலிக்கும்படி தோற்றி யெழும் வெள்ள மாகிய கங்கையைத் துளியளவினதாகச் செய்து சடாபாரத்தில் வைத்துத் தரித்த வராகிய பரமசிவம் விருப்பங்கொண்டு நோக்கிவரும் திருக்காந்திமதியம்மையின் பாத பங்கயங்களைச் சிரமேற் சூடுவாம். (சூடி) அனாதியாகத் தொடர்ந்த பாசச் செருக்கால் விளையுங் கலக்கமெல்லாம் அறவே ஒழிப்பாம். (ஒழித்து) அடியார் களுக்குச் செய்வன திருந்தச் செய்து வருவாம். இவ்வன்பினை யென்றும் சுருக்கா மற் பெருக்குவாம். (எ - று.)

(அ - ப.) அன்றே = அநாதியே.
தருக்கு = செருக்கு.
தியக்கம் = கலக்கம்.

76. திருவம்பர்ப் புராணம்

519. மணங்கமழுங் கோகனத மலரெனவுட்
குறித்திரவி வருத்த றீர்ப்பா
ணிணங்கவிருள் வணங்கலென வாக்கமுத
லரமாத ரெல்லா ருந்தங்
குணங்கிளருங் கருங்குழருழ்த் திடவுவக்குஞ்
சேயடிப்பூங் கோதை யோதை
யுணங்கருஞ்சீர் வம்புவனப் பூங்குழனா
யகியைமனத் திறுத்தி வாழ்வாம். (96)

(இ – பொ.) மணம் வீசும் தாமரை மலரனெக் கருதிச் சூரியன் வருத்தா வண்ணம், இராச் சேர வணங்குமாப் போல, இலக்குமி முதலான தேவமாதர் களெல்லாம் தத்தம் மணம் மிக்க அளகபாரந் தாழ்ந்து மறைக்க வீழ்ந்திறைஞ்சும் சேவடிகளையுடைய பூங்கோதையாம் (ஈரம் வாங்காத சிறப்புடைய) திருவம்பு வனப் பூங்குழல் நாயகியைத் தியானித்து வருவாம். (எ - று.)

(அ - ப.) ஆக்கம் = இலக்குமி.
அரமாதர் = தெய்வப் பெண்கள்.
உவத்தல் = வேண்டித் துதித்தல்.
சேயடி = சேவடி, செம்மையான பாதம்.
ஓதை = ஓதம்.
உணங்கல் = வற்றல், வாடல்.

520. கலைபொருணச் சுநர்விளர்த்த சிவந்தவர
விந்தமெனக் கருதற் கேற்ப
வலைவரும்பொன் வாணியம ரங்நிறத்தா
மரையேயா யமர ராஞ்சு
நிலைவிழைநர் பசுங்கமல மெனக்குறித்தற்
கேற்புறவங் நிகழ்ச்சி யேயாய்
மலைவகலப் பொலியுமுக வம்புவனப்
பூங்குழல் பொன்மலர்த்தாள் போற்றி. (97)

(இ - பொ.) கல்வியை விரும்பினோர் வெண்டாமரையையும், செல்வத்தை விரும்பினோர் செந்தாமரையையும் போற்றி வருவதற்கிணங்கியும், இலட்சுமி, சரஸ்வதியுமான திருவடித் தாமரையினளாய், நன்னிலை விரும்புவோராந்தேவர் கள், பசுங்கமல மெனக் குறித்தற்கேற்ப முகாரவிந்தமுடையவளாய, திருவம்பு வனமெழுந்தருளும் பூங்குழல் நாயகியின் பொன்னடிகள் போற்றி. (எ - று.)

(அ - ப.) நச்சுனர் = நத்துவோர், விரும்புவோர்.
விளர்த்த = வெளுத்த.
சுநிலை = நன்னிலை
அரவிந்தம் = தாமரை.
விழைநர் = விரும்புவோர்.

77. திருவாளொளிப்புற்றூர்ப் புராணம்

521. வன்மையுறு தனக்கேற்ப வன்குரன்மா னங்கை
கொண்ட மணிமா ணிக்கத்
தன்மையுறு பரன்பொருவ மரகதத்தின் றன்மை
யுற்றுத் தளிரி னான்ற
மென்மையுறு தனக்கேற்ப மென்கு ரற்பைங்
கிளியங்கை விரவக் கொண்ட
நன்மையுறு வண்டுவார் பூங்குழ னாயகி
மலர்த்தா ணண்ணி வாழ்வாம். (98)

(இ - பொ.) மாணிக்க மணிவண்ணனாகிய பரமசிவன் தம் கைக்குத் தக்கதானதோர் மானேந்துவதை யொப்பத் (தாமும் தமக்கொப்பதாம்) மரக தத்தின் நிறம் பெற்றுத் துளிரினும் மிருதுவாய்ப் பேசும் பசுங்கிளியை உள்ளங்கை மேல் கொண்டு வளர்க்கும் வண்டுவார் பூங்குழல் நாயகியம்மன் மலரடிகளைச் சேவிப்பாம். (எ - று).

78. விளத்தொட்டிப் புராணம்

522. வயங்குமிரு கரத்துவிரல் பத்திலும்பத்
துருவாய் மால்வந்து தோன்ற
வுயங்குமம ரர்கணிமிர வொருங்கசுரர்
தலைசாய வுறுபோ ராற்றி
யியங்குமுயி ரஃதிலுயி ரெல்லாநன்
களித்தருளு மிறைவி யுள்ள
மயங்குமெமை யும்புரக்குங் கரும்பிரத
நாயகியை வணக்கஞ் செய்வாம். (99)

(இ - பொ.) (தருமம்) நடமாடும்படியான இரு கரங்களின் விரல்கள் பத்திலும் திருமால் தசாவதாரம் வந்து அவதரிக்கவும், வருந்தும்படியான தேவர் கள் சீர்படவும், அசுரக் கூட்டம் முழுமையும் தலைசாய்ந்து உருளவும் பெரும்போர் செய்து விளங்கும் தம் உயிர்த் துணையில் சர்வ ஆன்மாக்களையும் படைத்தளித்

தருள் அரசியாம் (மனமயங்கிய நம்மையும் காக்கவல்ல) கரும்பிரத நாயகியைக் கை குவித்து வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) வயங்கும் = (வழங்கும்) நடமாடும்.
உயங்கும் = வருந்தும்.
நிமிர = சீர்பட.
ஒருங்கு = எல்லாம்.
இயங்கும் = (இரங்கும்) விளங்கும்.
கரும்பிரதம் = கரும்புச் சாறு.

79. கோயிலூர்ப் புராணம்

523. ஓரறிவு முதலாவை யறிவுயிர்ப்பைங்
கூழ்தழைய வொருங்கு காக்கும்
பேரறிவு வெளிப்படுப்பா னூறுணர்ச்சி
யுயிர்ப்பயிர் முன்பிறங்கக் காத்துக்
காரறிவு தபக்களைந்து காரண
நோக்குறும் பெரியோர்கட் கானந்த
நேரறிவு மயமான நெல்லைநா
யகிமலர்த்தா ணினைந்து வாழ்வாம். (100)

(இ - பொ.) ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர் வரையுமுள்ள பயிர்கள் எல்லாம் தழையும்படி காத்துவரும் ஓர் பேரறிவைப் பகிரங்கப் படுத்தும் பொருட்டாகப் பரிசவுணர்ச்சியைப் பிராணவாயு மூலமாய் உண்டாகி வரப் பாதுகாத்தும், முன்னொரு நாள் சுதன்மையின் பத்திக்கு உவந்து தாமே அரதன வல்லியாய்த் தற்காத்து நின்றும், அஞ்ஞானத்தைக் கெடவொழித்துப் பேரின்ப நோக்கமே கொண்ட பெரியோர்கட்குச் சச்சிதானந்தப் பரமுமாம் நெல்லைநாயகி யம்மன் திருவடிகளைத் தியானித்து வருவாம். (எ - று.)

(அ - ப.) ஓரறிவு = புல் மரம் முதலவுற்றறியும் ஓரறிவுயிர்
ஐயறிவுயிர் = வானவர், மக்கள், நரகர், விலங்கு, புள். ஆன செவியறிவொடு ஐயறிவுயிரே.
பைங்கூழ் = பயிர்.
ஊறு = பரிசம்.
உயிர்ப் பயிர் = பிராணவாயு.
பிறங்க = உண்டாக.
காரறிவு = அஞ்ஞானம்.
ஆநந்த நேரறிவு மயம் = சச்சிதானந்தபரம்.

524. சத்தியநிட் களநிருவி காரநிரஞ் சனபரசை தன்னி யத்தை
மெத்தியநன் மலர்மணத்திற் பிரியாமை யுருவிடத்தும் விளங்கக் காட்டிப்
பொத்தியபே ரவிச்சைகெடுத் தெவ்வுயிர்க்குஞ் சுவாநுபவப் பொலிவு நல்கு
நித்தியகல் யாணபரா பரையிருபொற் றாட்கமல நினைந்து வாழ்வாம். (101)

(இ - பொ.) மெச்சிய நல்மலர் மணத்திற் பிரியாமைபோல, சத்திய சகள சந்தோஷ நிரஞ்சன பரசை தன்னியப் பொருளை உள்ளும் புறமுமாக விளங்கக் காட்டிப் பொத்திக் குத்துகின்ற அறியாமையை யொழித்து, எல்லாவுயிர்களுக்கும், சுவானுபவ இன்பத்தைக் கொடுத்தருளும், நித்திய கல்யாண குணவதியம்மன் பொற்பாத கமலங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) நிட்களம் = சகளம்.
நிருவிகாரம் = சந்தோஷம்.
மெத்திய = மெச்சிய.
உரு = உடல்.
பொத்திய = மூடிய (வுமாம்).
அவிச்சை = அறியாமை.

80. திருக்குறுக்கைப் புராணம்

525. பற்றுமொரு கழைகுழைத்தோர் கணைதொடுத்தா
னுடல்பொடித்த பரம யோகி
சற்றும்வணங் காதமுடி நனிவணங்க
வவன்சா பஞ்சரம்போற் போமோ
முற்றுமிவை காரணமா தலினழியா
வெனக்கருப்பு மூறி வில்லு
மெற்றுமது மலர்க்கணையுங் கொண்டருண்ஞா
னாம்பிகைதா ளிறைஞ்சி வாழ்வாம். (102)

(இ - பொ.) கைப்பற்றுமோர் கருப்புவில்லை வளைத்துப் பூங்கணை விடுத்த வனாகிய மன்மதன்றன் உடலைச் சாம்பராக வெரியச் செய்த சற்றும் வளையாத் திருமுடியையுடைய பரமசிவன் நன்றாய் வளையும்படியாக அம் மன்மதன் வில் சரமாரியாகப் போமோ ? போகாதென்ற இம்முடிவான காரணத்தால், என்றும் அழியாத செங்கருப்பு வில்லொன்றும், வாங்கி விடும்படியான மலர்க்கணையொன்றுந் தனக்கெனச் சொந்தமாகக் கொண்டருள் ஞானாம்பிகையம்மன் திருவடிக் கமலங்களைத் துதித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) கழை = கரும்பு.
குழைத்து = வளைத்து.
கணை தொடுத்தான் = மன்மதன்.
பொடித்த = எரித்துச் சாம்பராக்கிய.
சாபம் = வில்
சரம் = பாணம்.
மூறி = வலிவு.
எற்றும் = தொடுக்கும்.

526. இறையவனெத் திறநிற்பா னிறைவியுமத்
திறநிற்பா ளென்று நன்னூ
னிறையவுணர்ந் தவர்கருணை யாலுரைக்கு
மாத்தமொழி நிசமே யாக

மறையவனா தியருணரான் யோகீச
　　னாய்க்குறுக்கை மருவு ஞான்று
பொறையருள்கூர் ஞானமுணர்ந் துடன்மருவு
　　பூரணியைப் போற்றி வாழ்வாம். (103)

(இ - பொ.) காதலன் எவ்வாறு நின்றொழுகுவானோ அவ்வாறே காதலியும் நடந்து கொள்வாளென நல்ல நூலாராய்ச்சி நிரம்பிய பெரியோர்கள் உரைத்தருளும் பழமொழி உண்மையென்றே நம்பும்படியாகத் திருக்குறுக்கையந் தலத்தில் பிரம்மாதி கடவுளராலும் அறியவொண்ணாத பரமசிவன், யோகீஸ்வரனாய் எழுந்தருளியபோது சின்மோன முத்திராங்க ஞானத்தைத் தெரிந்து தானும் உடன் கூடும் ஞானாம்பிகையம்மனை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) ஆத்தமொழி = ஆப்தமொழி.

81. தனியூர்ப் புராணம்

527. நிலவுபுழு கீசர்கலப் பினுக்கேற்ப மணத்த வெளி நிகழ்ச்சி யானோ
பலவுயிரும் புரந்தருளு மதற்கேற்ப மணத்தவகப் பண்பி னானோ
குலவுமிரு பொருட்பெயர்கொண் டனையெனவா னோர்பரவக் குளிர்பூஞ் சோலை
கலவுதனி யூரமருஞ் சாந்தநா யகிமலர்த்தாள் கருதி வாழ்வாம். (104)

(இ - பொ.) நிலவிய புனுகு சட்டநாத வள்ளலார் தம் கலவைக் கேற்ப மணம் மணக்கும் ஒரு காரணத்தானோ? அல்லது சர்வ ஆன்மாக்களையும் காத்து இரட்சிப்பதற்கேற்ற குணப்பொறுமையானோ? குலவாநின்ற இருபொருள் படுந்திரு நாமங்கொண்டாயெனத் தேவர்கள் வழிபடும் (குளிர்ந்த பூஞ்சோலைகளையுடைய) தனியூர்ச் சாந்தநாயகியம்மனின் பாதாம்புயங்களைப் பணிவாம். (எ-று.)

கலப்பு = கலவைச் சாந்து, கலவி.
சாந்தம் = சாந்துக்கும் சாத்மீகத்துக்கு மாகலான் சாந்தநாயகியென்று பெயராம்.

82. சூதசங்கிதை, பூருவகாண்டம், உத்தரகாண்டம்

528. பரம்பொருளிற் பிரியாத தன்னியல்பை
　　யிருவிடத்தும் பயிலத் தோற்றி
நிரம்புறுமன் படைப்பாதி யைந்தொழிலு
　　மியற்றிவினை நிகளஞ் சீத்திட்
டுரம்பெறுசன் மார்க்கநிலை யளித்துயிர்கட்
　　கொழிப்பில் சுகமுறுத்த நாளும்
வரம்பிலருட் டாயாகி யெடுத்தணைக்கும்
　　பராபரையை வாழ்த்தி வாழ்வாம். (105)

(இ - பொ.) ஆன்மாக்களுக்கு எந்நாளுமே நித்தியானந்தச் சுகவாழ்வளிக்கும் காரணமாகப் பரம்பொருட் சிவத்தும் இணைபிரியாத தமது காருண்யத்தையுள்ளும் புறமுமாகக் கொண்டு தோன்றி, சர்வ அண்டங்களும் - நிரம்பச் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களையும் நடத்திக் கொண்டே பாசவினையைப் பற்றற

ஒழித்தடையும் பயனான சுத்தசன்மார்க்க சைதன்ய நிலையைக் கொடுத்துத் தாய் போல் எடுத்தணைக்கும் பராபரையம்மனைப் போற்றி வாழ்த்துவோம். (எ - று.)

வினை நிகளம் = பாசபந்தம்
இருவிடம் = உள்ளும் புறமும்.
பயில = செபிக்க
சீத்தல் = நீத்தல்
வரம்பு = எல்லை

529. ஓங்குபரா பரையாதி விருப்பறிவு தொழிலாகி யொப்பி லின்பம்
வீங்குபர போகமுத வுங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தேங்குதனு முதலொருநான் குஞ்சுமப்ப வுபாதானத் திரய மேவிப்
பாங்குபெறு மொருமுதலாய் நின்றருணின் மலசிவையைப் பாடி யுய்வாம்.(106)

(இ - பொ.) ஆன்மாக்கள் அசுத்த மல சம்பந்தத்துடன், தனுவாதி நான் கடைய, உடனே இச்சை ஞானம் கிரியை ஆகிய முத்துணைக் காரணா சத்தியால் சுத்தமாக்கித் தன்வயிற்படுத்தும் படியான ஓங்கி வளர் பராபரை முதலா விரும்பும் அறிவின் திருவருட் செயலாய், ஒப்பில்லாத பேரின்ப முத்தி விளைவாம் பரமானந்த போக முதவுங் கருணாகர வடிவாய், நின்றருளிய பரிசுத்த நாயகி யம்மனைப் பாடி வாழ்வாம். (எ - று.)

விருப்பு = இச்சை
அறிவு = ஞானம்
தொழில் = கிரியை
விசுத்தம் = சுத்தம்
அசுத்தம் = அசிங்கம்

530. திரிவித சதசத் தாகிய வுயிர்கள்
செம்பிற்கா ளிதம்பொர வன்றே
யுரிமையிற் புணர்ந்த கரியவன் மலத்தை
யுழல்புக ரறிவொழித் துணரு
மரியசன் மார்க்க நெறியினின் றொருவி
யவிர்பர சிவவொளிப் பிழம்பிற்
பரிதியின் விழிபோற் கலப்புற வருளும்
பராபரை பாதமேத் தெடுப்பாம். (107)

(இ - பொ.) சத சத்தாகிய விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவித உயிர்களும் செம்பிற் களிம்பு போன்று கலந்த மூல மல விருளைப் போக்கி, அறிவாலுணர் பெரிய சன்மார்க்க நன்னெறியில் நின்றும், பாவப் பிணி யொழியப் பரசிவவொளிப் பிழம்பில் கதிரவனுங் கண்ணும் போல இரண்டறக் கலக்க வருளும் பராபரையம்மன் பாதாம்புயங்களை ஏத்தி வருவாம். (எ - று.)

திரிவித = மூவித
காளிதம் = களிம்பு
பிழம்பு = திரட்சி

531. பேரணியும் பல்வகையண் டங்கடொறு முயிர்க்குயிராய்ப் பிறங்கா நின்று
நீரணியு நிழல்போலத் தோன்றானுக் கொருதுணையாய் நிலவு வாளை
வாரணியு முலைப்பனுவ லாட்டிமுதற் சத்திகளாய் வயங்கு வாளைத்
தாரணியு நறுங்கூந்தற் பூரணியைக் காரணியைச் சரணஞ் சார்வாம். (108)

(இ - பொ.) கோடானு கோடிப் பேர்களையுடைய சர்வ அண்டங்கள் தோறும் உயிர்க்குயிராய் நிறைந்திருந்து, நீரும் நிழலும் போலப் பழம் பொருளாகிய பரமசிவனுக்கு ஒரு துணைவியானவளும், கச்சணிந்த முலைகளையுடைய சரஸ்வதி இலக்குமி முதலிய சத்தி மயமாய் விளங்குபவளுமான நறுமணப் பூங்குழலாளாம் மாலிகாபரண காரணீசுவரியை வணங்குவாம். (எ - று.)

(அ-ப.) துணை = துணைவி
பனுவலாட்டி = சரஸ்வதி
(அ-ம்) தாரணியும் காரணி.

83. திருக்கோவலூர்ப் புராணம்

532. செங்கமலை கலைமடந்தை திருமானான் முகன்செம்பொற்
றுங்கமலை வரிவில்லான் சுரரன்பர் சிரநாக்க
ணங்கமலை மறையங்கஞ் செவியகத்திற் றிருக்கோவற்
பொங்கமலை பெரியநா யகிபொற்றாண் மலர்தொழுவாம். (109)

(இ - பொ.) திருமால், நான்முகன், தேவர்கள், மற்றையன்பர்கள் யாவரும் நான்மறை யாறங்கஞ் செபித்து வழிபடும்படியான செம்பொன் மலையை வில்லா வளைத்த சிவபெருமானுக்கு வாமபாகமானவளும், இலட்சுமியும் சரஸ்வதியும் சிரத்தாலும் நாவாலும் கண்ணாலும் பொங்கி உள்ளன்பால் வணங்கியும் வாழ்த்தியுந் தரிசிக்கும் அமலையாம் திருக்கோவலூர் பெரியநாயகியம்மனின் பொற்பாத கமலங்களைப் போற்றுவாம். (எ - று,)

(அ-ப.) அங்கம் = ஆறங்கம்.
செவி = செபிக்கும்.
அகத்தில் = உள்ளன்பில்.

(அ-ம்.)
1. திருமால், நான்முகன் சுரர் அன்பர் மறையங்கஞ் செவி செம்பொன் துங்கமலை வரிவில்லான் அங்கம் மலை (பவளும்).
2. செங்கமலை, கலைமடந்தை, சிரநாக்கண் அகத்திற் பொங்கு அமலை (யும்).
3. திருக்கோவல் பெரியநாயகி.

84. திருத்தினை நகர்ப் புராணம்

533. பொருந்தடல்வெங் கயமுகனைக் குகனையளித் தவளைமலர் பொதுளுந் தூய
விருந்தடங்கண் மலியுமிம கிரிமகளை மிடற்றினிடத் திருண்ட வால
மருந்தடங்க வயின்றபிரான் றிருநடங்கண் டுவகையினான் மலர்ந்த நீலக்
கருந்தடங்க ணுமையவளை யடிதொழுது வினைகடமைக் கடிந்துவாழ்வாம்.(110)

(இ - பொ.) பொருந்திய யானை முகனாகிய பிள்ளையாரையும், முருக வேளையும் பெற்றெடுத்தவளாய், செந்தாமரை மலர்போலும் தடமுலைகள் துலங்கும் மலைமகளாய், கண்டத்தினிடமாகக் கரிய வாலகால விடத்தைக் குடித்த சிவபெருமான் நடனத்தைக் கண்ட உற்சாகத்தினால், தம் நீலோற்பலக் கண்களை விழிக்கும் உமா மகேசுவரியின் திருவடிகளைத் தொழுது தீவினைகள் முழுமையும் பற்றறத் தொலைத்து வாழ்வாம். (எ - று.)

(அ-ப). பொருந்தடல் = நெருங்கிக் கொல் (எனவும்)
குகன் = முருகன்
பொதுளும் மலர் = செந்தாமரை
இருந்தடங்கள் = தடமுலைகள்
மலியும் = துலங்கும்
ஆல மருந்து = ஆல கால விடம்
அயின்ற = புசித்த
உவகை = உற்சாகம்
நீலக்கருந்தடங்கண் = நீலோற்பலக் கண்கள்

---

85. இருடி விந்தப் புராணம்

534. பரைமுதல் விருப்பு ஞானம் பகரருந் தொழிலாய் நின்றே
யரியவைந் தொழின டத்து மம்பிகை யுமைய மோகி
யுரைபெறு மிருடி விந்தத் துறைதிரு முத்து வாளி
திருவடி வணக்கஞ் செய்து தீர்ந்திடாப் பிறவி தீர்ப்பாம். (111)

(இ - பொ.) பராசத்தி, இச்சா சத்தி, ஞானக் கிரியா சிற்சத்தியா நின்று, அருமையான பஞ்ச கிருத்தியங்களை நடத்தும் அம்பிகையும், உமா மகேசுவரியுமாம் பாடல் பெற்ற இருடிவிந்தத் தலத்தெழுந்தருளும் திரு முத்துவாளியம்மன் திருவடிகளை வணங்கி, நீங்காப் பிறவியை ஒழிப்பாம். (எ - று.)

(அ-ப.) முதல் = சிற்சத்தி.
விருப்பு = இச்சா.
தொழில் = கிரியா.
மோகி = மோகினி.

---

86. திரிசூலகிரிப் புராணம்

535. சந்தடருந் திரிசூல சைலத்தாளைத் தகுபரையோ
டாதியிச்சை யறிவு செய்கை
யைந்தகுதி யாயுயிரை யாக்கிநோக்கி யழித்துமறைத்
தனுக்கிரகம் புரிந்தின் பார
நந்தரிய மலபாகம் வருத்திஞான நணுகுவிக்கு
மருண்மயமா நண்ணி னாளைச்
சுந்தரியைப் பார்ப்பதிநா யகியை நாளுந் தொழுதுவிட
யத்துனியைத் தொலைத்து வாழ்வாம். (112)

(இ - பொ.) பரை, சித்தி, இச்சா, ஞான, கிரியையாகிய ஐவகையாய் உயிர்வருக்கங்களை உண்டாக்கியும், கண்ணோக்கியும், அழித்தும், மறைத்தும், அநுக்கிரகித்தும், கெடற்கரிய மலத்தைப் பரிபாகமாக்கி, ஞானப்பேரின்பத்திற் சேர்க்கும் திருவருளே திருமேனியாக உடையவளாய், பிளவு நெருங்கிய திரிசூல மேந்தும் மலைமகளாம் சுந்தரியான பார்வதி நாயகியை எந்நாளும் துதித்து ஐம்புல நோயை ஒழித்து வாழ்வாம். (எ - று.)

(அ-ப.) சந்து = பிளவு
நந்தரிய = கெடற்கரிய
விருத்தி = வளர்ச்சி
துனி = பிணி
சித்தி = சிற்சித்தி

87. புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

536. பன்னரிய மகிமைநிறை யானந்தப் பெருகொளியே படிவ மாகி
யுன்னருமங் களநிறைந்து விளங்கிருந் தொழில்கொழிப்ப வுலகுக் கெல்லா
மன்னையென வைந்தொழிற்கும் வித்தாகிப் புவனங் களனைத்து முய்ய
மன்னுபெருங் கருணைபொழி தையனா யகிமலர்த்தாள் வணக்கஞ் செய்வாம்.
(113)

(இ - பொ.) மகிமை நிறைந்த பேராநந்தப் பிரகாசமே யோர் வடிவமுடைய தாய், சுபமங்க்ள கரபூரணமாய், அலங்காரக் கோலங் கொண்டு விளங்கி, மக்கட்கெல்லாந் தாய் போல வந்து, பஞ்ச கிருத்தியங்களுக்கும் வித்தாகி, பூலோகமெல்லாம் உய்யத் தனிப் பெருங்கருணையைப் பொழியும் தையநாயகியம்மன் தாள் தாமரை மேல் தலை வணங்குவாம். (எ - று,)

(அ-ப.) பன்னரிய மகிமை நிறை = கூறுவதற்கரிய பெருமை பொருந்திய.
படிவம் = வடிவம்
உன்னரும் மங்களம் = சுப மங்களகரம்
உலகுக் கெல்லாம் = மக்கட்கெல்லாம்

537. கரும்புருவச் சிலையும்வரிக் கயல்விழியும்
வள்ளைவார் காது முல்லை
யரும்புமிள நகையுஞ்செங் கனிவாயும்
பிறைநுதலு மமுத வாக்கும்
பொருந்தியமங் கலநாணு மலர்க்குழலும்
விளங்கவெழிற் புள்ளூர் மேவுந்
திருந்துமணங் கமழ்சாந்து கழுத்துமைவா
லாம்பிகைதாள் சிரமேற் கொள்வாம். (114)

(இ - பொ.) வில்லைப் போலும் வளைந்த கரும் புருவமும், சேல் கண்டையைப் போன்ற கண்களும், (பாலடைச்) சங்கு நேர் காதுகளும் முல்லையரும்பையொத்த சிறுநகைப் பற்களும், செவ்விய அதராமுத வாயும், பால சந்திரனைப் போலும் நெற்றியும், அமுதப் பேச்சும், திருமங்கலத் தாலியும், பூவணிந்த கூந்தலும் விளங்கும்படியாகப் புள்ளிருக்கும் வேளூரில் வீற்றிருக்கும், மணம் பொருந்திய கலவைச் சாந்தணிந்த உமையவளாம் வாலாம்பிகையம்மன் தாள் தாமரையைச் சிரமேற் கொள்வாம். (எ - று.)

வள்ளை = சங்கு (பாலடை)
புள்ளூர் = புள்ளிருக்கும் வேளூர்.

கரும்பு வில்லைப் போன்ற திருமேனி யுருவமெனினும் ஒவ்வும். மூன்றும் பிறையைப் போலும் வளைந்த புருவமெனினும் தகும். வள்ளை = வள்ளியெனக் கொண்டு, ஆபரணமணிந்த செவிகளும் எனவும் கொள்ளலாம்.

88. பழனிப் புராணம்

538. அருவுருவந் தணிந்தசச்சி தானந்த நிமலனருட் சித்தி முத்திக்
கொருமுதல்வி தொழிலைந்து மியற்றியநால் வகைத்திறனு முயிர்க்கு நல்கி
யிருவினையொத் தவரேத்த மனத்தவிசி லினிதுவீற் றிருந்தெஞ்ஞான் றுங்
கருணைபொழி பெரியநா யகிமலர்ச்சீ றடியெமது கருத்துள் வைப்பாம். (115)

(இ – பொ.) சதாசிவமாய்க் குளிர்ந்த சச்சிதானந்த பரமசிவத்தின் மோட்ச சாம்ராச்சியத்துக்கொரு முதல் இறைவியாய், பஞ்ச கிருத்தியங்களையும் நடத்தி, ஆன்மாக்களுக்குச் சாலோக சாமீப சாருப சாயுச்சியமாய நால்விதப் பதவிகளும், புண்ணியத்திற்கேற்பக் கொடுத்து, இருவினையொத்த பரிபக்குவ ஞானிகள் போற்றவும், அவர்கள் இருதய கமலத்தில் வீற்றிருந்து, எந்நாளும் கருணை மழை பொழியும் பெரியநாயகியம்மன் சிற்றடியை நமது கருத்துட் கொள்வோம். (எ - று.)

அருவுருவம் = சதாசிவம்
தணிந்த = குளிர்ந்த
சீறடி = சிற்றடி

89. திருச்செங்கோட்டுப் புராணம்

539. சீர்பெற்ற செழுஞ்சடையுந் திருக்குழலுந் திகழ்நு தலுஞ் சிவந்த நோக்குங்
கூர்பெற்ற கயல்விழியுங் குழைப்பணியுங் குழைத்தோடுங் குமுத வாயுந்
தார்பெற்ற கதைக்கரமுஞ் சரிக்கரமுந் தடவுரமுந் தனப்பொன் மார்பு
மேர்பெற்ற வதள்துகிலுமி கற்பதமுஞ் சிலம்படியு மிதயஞ் சேர்ப்பாம். (116)

(இ - பொ.) சடநாகஞ் சடைக்குச்சணிந்த பின்னல் சடையும், விற்புருவமும், கருணை நோக்கும், அங்கயற்கண்ணும், காதணிக் கவச குண்டலமும், செவ்வாம்பலை யொத்த வாயும், கதாயுதமேந்திய கைகளும், வைரமான மார்புத் தனங்களும், பட்டாடையும், பாதச் சிலம்பணிந்த செந்தாமரைத் திருவடிகளும் உடைய பார்வதியம்மனைத் துதிப்பாம். (எ - று).

சடை = பின்னல் சடை (பிறவும்).
குழைப்பணி = காதணி.
குழைத்தோடு = கவசகுண்டலம்.
குமுதம் = செவ்வாம்பல்.
தடவுரம் = வைரம்.
அதள் = தோல்.
அதள் துகில் = தோலாடை.

90. சுசீந்திரப் புராணம்

540. இமையா சலமீன் றகுமா ரிசொலற்
கமையா வுலகந் தருமன் னைவிணோர்
தமையாண் முகிறங் கைசிவன் புணர்மா
துமையா ளையுவந் துதினந் தொழுவாம். (117)

(இ - பொ.) இமயமலையில் மேனகை ஈன்ற கன்னியா குமரியாய், சொல்ல முடியாத அண்டகோடிகளைப் படைக்கும் தாயம்மையாய், விண்ணாதி எண்டிசைத் தேவ திக்குப் பாலகர்களையும் ஆண்டருள் முகில் வண்ணன் தங்கையாய், சிவபிரான் மருவிப் புணர் மாதரசியாம் உமாமகேசுவரியை உவப்பாக நாள் தோறும் பணிவாம். (எ - று.)

(அ - ப.) உவந்து = விரும்பி மகிழ்ந்து.
முகில்(வண்ணன்) = விஷ்ணு.

91. திருப்பைஞ்ஞீலிப் புராணம்

541. சுரும்பிருக்கு மலர்க்குவளை தரித்தாளைச்
சிவஞான சொரூபத் தாளை
யரும்பிருக்கு மலர்க்கணையைந் தெடுத்தாளைத்
தடுத்தெனை வந்தாட்கொண் டாளை
விரும்பிருக்கும் பரவியபே ரொளியெளியேன்
விழிகளிக்க வெளிநின் றாளைக்
கரும்பிருக்கும் வாசகியை நீணெடுங்கண்
ணாயகியைக் கருத்துட் சேர்ப்பாம். (118)

(இ - பொ.) வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும் குவளை மலர் சூடினவளாய், சிவஞானவடிவப் பிரகாசத்தினளாய், ஐந்து வகையான மலர்களை யுடையவளாய், அடியேனைத் தடுத்தாட் கொண்டவளாய், விருப்பமாக வழிபடும் எளியேன் கண் களிகூறும்படி தரிசனந் தந்தவளாய், (வெல்லப்) பாகனைய மொழியளாய் விளங்கும் நீள்நெடுங்கண் நாயகியைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) சுரும்பு = வண்டு.

92. குளத்தூர்ப் புராணம்

542. ஓங்குமட லுடனெதிர்த்தாங் குடைவுற் றெல்லையுண்
ணெகிழ்ந்துவனத் தொளியாச் சின்னாள் வைகி
நாங்கொள் பகைதவிர்ந் துய்வதெவ் வாறென்று
நாடிமுன்போ தரமிக நாணியஞ் சங்க
ளீங்கிவற்றைத் தினந்தொழப்பெற் றுயர்ந்தோமென்றே
யிந்திரைநா மகளையவர் நிறங்கொண் டெய்தித்
தாங்கும்வகை பனித்தொளிர் நூபுரங் கொண்டுற்ற
தைலமு தாம்பிகை யினடிகள் போற்றி. (119)

(இ - பொ.) ஓங்கிய பாதார விந்தத்துடன் மிகவும் நாணத்தக்க கமலங்கள் ஒருநாள் எதிர்த்துப் பொருது, கெட்டலைந்துட் குழைந்து, சிலநாள் வனவாசமுமிருந்து, ஐயோ! நாம் கொண்ட பகையை எவ்வாறு தவிர்த்துய்வதென்றெண்ணி, சன்னிதானத்தின்முன் போய் நின்று, இப்பூதியையே எப்போழ்துந் துதித்துப் பூசப்பெற்றோ மென்றதுபோல், செந்தாமரை இலட்சுமியாகவும், வெண்டாமரை சரஸ்வதியாகவும் வடிவெடுத்துத் தம்மையாட் கொள்ளும் வண்ணம் பணியாநின்ற, அமுதாம்பிகையம்மன்றன் சதங்கையணிந்த திருவடிகட்கு வணக்கம். (எ - று.)

93. திருநாவலூர்ப் புராணம்

543. மருமலிமென் மலர்தொடுத்து வழங்கிய பைங்கழைச்
சிலைக்கை மதன வேளைத்
திருநுதற்கண் டிறந்தெரித்த முன்னவன்மான்
மழுச்சூலஞ் செங்கை யேந்து
மொருவனிடப் புறமிதய முலகனைத்து
மதிசயிப்ப வொருங்கு கொண்ட
பொருவிறிரு நாவனக ரமர்ந்தமனோன்
மணியுமையைப் போற்றல் செய்வாம். (120)

(இ - பொ.) ஐவகையான மலர்க்கணைகளைத் தொடுத்து விடும் கரும்பு வில்லவனாகிய மன்மதனை நெற்றிக்கண்ணா லெரித்த முதல்வனும், மழுவொடு மான் திரிசூலத்தைத் திருக்கரங்களில் தாங்கும் ஒருவனுமான பரமசிவன் தன்னை உலகங்களத்தனையும் அதிசயிக்கும்படியாக முற்றிலும் வாமபாகங் கொள் திருநாவலூர் மனோன்மணியம்மையைப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) வழங்கிய = வயங்கிய, (விடுத்த)
பைங்கழை = பசுங்கரும்பு.
பொருவில் = ஒப்பில்.
அமர்ந்த = எழுந்தருளிய.

94. திருப்பனந்தாட் புராணம்

544. வேதாந்தத் துட்பொருளை யாதிபரா பரையையன் பின்விரும்பா நெஞ்சிற்
றீதார்ந்த தமியனையுந் தடுத்தாட்கொண் டருள்புரியுந் தேவி தன்னைத்
தாதார்ந்த மலர்ப்பொழிற்றென் பனந்தாளில் வளம்பெருகத் தானின்றோங்கு
நாதாந்தப் பேரொளியைப் பெரியநா யகியைநித நவிற்றி வாழ்வாம். (121)

(இ - பொ.) வேதாந்தத்தின் மறைபொருளாய், ஆதி பராபரையாய், அன்பின் வழியறியாத நெஞ்சு கபடனான அடியேனைத் தடுத்தாட் கொண்டருள் புரியுந் தேவியாய், பூங்காவனங்கள் நிறைந்த திருப்பனந்தாளில் சகல வளப்பங்களும் மேன்மேலும் வளர எழுந்தருளும் மௌனாதிக்கப் பேரொளியாம் பெரிய நாயகியம்மனை நாள்தோறும் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) வேதாந்தத்துட் பொருள் = சைவசித்தாந்தம்.
தமியன் = தனியன்.
நாதாந்தம் = (நாதத்துக்கு அந்தம்) மௌனம்

---

95. வேப்பத்தூரார் திருவிளையாடற் புராணம்

545. பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
யிங்கெமக் கருள வல்ல விணையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
வங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி. (122)

(இ - பொ.) மேன்மேலும் பொங்கிவரும் அருட்செல்வமும், பொருட்செல்வமும், கல்வி கேள்வியும், வாய்மையும், ஆசார ஒழுக்கமும், இம்மையிலேயே கொடுத்தருள வல்ல (ஒப்பில்லாத) நம் பெருமாட்டியாம், தாமரைத் தடாகமுள்ள மதுரைப் பவளமலைபோலுஞ் செம்மேனியுடைய சிவபெருமானை இணைபிரியா அங்கயற்கண்ணியம்மன் பாதபங்கயங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) பொங்குரு = மேன்மேலும் வளர்.
இங்கு = இம்மை.
பிராட்டி = பெருமாட்டி.
கூடல் = மதுரை.
வரை = மலை.

---

96. காவேரிப் புராணம்

546. சஞ்ஞைநா யகன்க ரங்க டமந்துரந் ததுபோ லெந்த
மஞ்ஞையென் றன்மை போக்கி யறிவருட் டொழில்வி ளக்கிச்
செய்ஞ்ஞைமித் திகச்சி றப்பிற் சிறந்தமா மறைசை மேவி
மஞ்ஞையின் சாயல் வாய்ந்த மலைமகட் கடிமை செய்வாம். (123)

(இ - பொ.) சஞ்ஞை என்பவளுக்கு நாயகனுகிய சூரியன் தன் கிரணங்களால் இருள் நீக்கியது போலவே நமது அறியாமையைப் போக்கி, திருவருட் செயலே துணையென விளங்கும் பூசத் திருவிழாக் கோலத்துடன் வேதாரண்யத்தில் எழுந்தருளும், மயில் போலுஞ் சாயலுடைய மலைமகள் நாயகிக்கு ஆட்பட்டு ஒழுகுவாம். (எ - று.)

(அ - ப.) சஞ்ஞை = (சன்னை) சரசஞ் செய்பவள்.
தமம் = இருள்.
அஞ்ஞை = அறியாமை.
அறிவருட்டொழில் = திருவருட்செயல்.
செய்ஞ்ஞை மித்திகம் = செய்யும் நைமித்திகம்.
(நித்திய) நைமித்திகம் = (நித்திய) பூசைத் திருவிழா.
மறைசை = வேதாரண்யம்.

இதிகாசாதிகள்

97. சிவரகசியம்

547. உருவமா யருவா யுணர்வுமா யொழியா தொளிருநல் வியோமமு மாகி
மருவுமா மாயை பரையுமா யுலகின் மதிக்குமெய்ப் பொருளுமா யகண்ட
சொருபமா யொன்றா யறிவுறா தொளிருஞ் சுயம்பிர காசமா யடியார்
கருவுறா தருளாற் காத்தருள் புரியுங் கவுரிதன் கருணையே பணிவாம். (124)

(இ - பொ.) பெண்பால் உருவமாய், கிடைத்தற் கருவமாய், பேரறிவான தாய், சிதாகாச நித்தியமாய், ஆதிபராபரையாய், உலகத்தின்கண் நம்பத்தக்க தெய்வமாய், அகிலாண்ட கோடியாய், ஒன்றாய் (ஒன்றொடு போகாமல்,) பலவாய்க் கண்ட உயிரினுக்கோர் உண்மையாகி, நன்றான சுயம் பிரகாசமாய், அன்பர்கள் பிறவிப் பிணியை அடையாமல் காத்து இரட்சிக்கும் கௌரி நாயகியம்மன் கருணாம்புயங்களைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) உருவம் = வடிவம்.
அருவம் = வடிவின்மை.
வியோமம் = ஆகாசம்.
மாமாயைபரை = ஆதிபராபரை.
கவுரி = பார்வதி.

98. அரிச்சந்திர புராணம்

548. கனத்தாள் வெங்கய முகனுங் கந்தனுஞ் சம்பந்த னும்பாலுண் கும்ப
தனத்தாளே யறம்வளர்த்த கரத்தாளே திரிபுரங்க டழலா வேவச்
சினத்தாளே சிறியோர்கள் செய்தபிழை பொறுத்திரக்கஞ் செய்யுஞ் செய்ய
மனத்தாளே நின்கமல மலர்த்தாளே யென்றலைமேல் வைத்தாள் வாயே.(125)

(இ - பொ.) மகா கனம் பொருந்தியவளாய், விநாயகப் பெருமானும், முருகக் கடவுளும், திருஞானசம்பந்தரும் பாலுண்ட கும்பத் தனத்தினளாய், அறம் முதல் நான்கும் வளர்த்த கனிகரத்தினளாய், முப்புரங்களும் நெருப்பால் வெந்து போகச் (சிவனைச்) சினந்தவளாய் விளங்கி, சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பொறுப்பது கடனாக விளங்கும் குணவதியம்மனே! நின் பாதாம்புயங்களை அடியேன் சிரமேல் வைத்து ஆண்டருள்வாய். (எ - று.)

(அ - ப.) தழல் = தணல்.

சாத்திரங்கள்

99. சிவஞானசித்தியார்

549. ஈசனருளிச்சையறி வியற்ற லின்ப
மிலயமொடு போக மதிகார மாகித்
தேசருவ மருவுருவ முருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்

பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்
டாசகலு மடியருளத் தப்பனுட னிருக்கு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். (126)

(இ - பொ.) சிவபெருமானுடைய திருவருளாயும் இச்சா ஞானக் கிரியையாயும், இலய போக அதிகாரமாயும், ஒளிபொருந்திய அருவம், அருஉருவம், உருவமாகியும், தேவியாகியும், உலகோடு செல்வங்களாகியும், எண்ணரிய உயிர்களையெல்லாம் ஈன்று திருவருள் நோக்கம் புரிந்து, பெரும்போகங்களை நல்கிப் பிறப்பு இறப்புக்களைப் போக்கி, மலமகன்ற அடியாருள்ளத்துச் சிவனுடன் வீற்றிருக்கும் அம்மையின் திருவருள் மயமாகிய திருவடித் தாமரைகளைத் தலைமேல் சூட்டிக்கொள்வாம். (எ - று.)

100. சைவசமய நெறி

550. ஒன்றாகி யைந்தொழிற்கு மைந்துவித முற்றுயிரு
ணின்றாள்பொற் பாதநினை வாம். (127)

(இ - பொ.) தான் ஒருத்தியே ஆகியும், படைப்பு முதலிய ஐந்தொழில்களுக்கு ஐவகைச் சத்தி வடிவமாய் உயிர்க்குள் நின்றவள் பொன்னடிகளைப் போற்றுவாம்.(எ. - று.)

101. பரமத திமிரபானு

551. ஐந்தொழிலுஞ் செய்யாதே செய்யு மமலையடி
வந்தனைசெய் வாந்தூய் மலர். (128)

(இ - பொ.) படைப்பு முதலிய ஐந்தொழில்களையும் தாமே நடத்தாமல் தமது பரை, சித்தி, இச்சா, ஞானக்கிரியைகளால் நடத்துவிக்கும் பரிசுத்த வல்லியின் தூய மலரடிகளை வந்தனை செய்து வழிபடுவாம். (எ - று.)

(அ - ப.) அமலை = பரிசுத்தவல்லி.
வந்தனை = வந்தனம்.

(அ - ம்.) ஐந்தொழிலுஞ் செய்யாதே செய்யும் அமலை தூய் மலரடி வந்தனை செய்வாம்.

102. இறைவனூற் பயன்

552. பெற்றாளைச் சிற்றுயிரைப் பேருயிரு ணீங்காளைப்
பொற்றாளிற் சூட்டுவநாட் போது. (129)

(இ - பொ.) சிறிது பொழுதுக் கெல்லாஞ் சர்வ ஆன்மாக்களையும் பெற்றவளாயும், பெரிதும் உயிர்த்துணையினின்றும் நீங்காதவளாயும் விளங்கும் பார்வதி தேவியின் பொன்னடிகளாகிய பூமலரைத் தலையில் சூட்டிக் கொள்வாம். (எ-று.)

(அ - ம்.) சிறு (பொழுதில்) உயிரைப் பெற்றாளைப் பேருயிருள் நீங்காளை, பொற்றாள் நாட்போது சூட்டுவம்.

நாள் போ(கிற)து ஆகையால் பொற்றாளினைச் சூட்டுவம் எனினும் பொருந்தும்.

103. சிவராத்திரி கற்பம்

553. அனைத்துயிரு நீங்கா வமலைநீங் காளென்
மனத்தினுமுள் ளாள்குறையென் மற்று. (130)

(இ - பொ.) உயிர்கள் அனைத்திலும் விட்டு நீங்காத பரிசுத்தவல்லி அடியேன் இருதயத்திலும் குடிகொண்டுள்ளாள். இனிப் பிரிந்து நீங்கமாட்டாளாகையால் நமக்கென்ன குறை? ஒன்றுமில்லை. (எ - று.)

(அ - ம்.) அனைத்துயிரும் நீங்கா அமலையென் மனத்தினு முள்ளாள் நீங்காள் குறையென் மற்று.

104. பதிபசுபாச விளக்கம்

554. மூவர்க்கு முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கு மனத்திற்கு நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கு முனிவர்க்குஞ் சித்தர்க்கு நாகர்க்கும்
யாவர்க்குந் தாயாகு மெழிற்பரையை வணங்குவாம். (131)

(இ - பொ.) பிரமாதி தேவர் மூவர்க்கும் முதற்காரணமாய், படைப்பு முதலான மூன்றுக்கும் வித்தகமாய், வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாப் பேரறிவாய், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், சித்தர்களுக்கும், நாகலோகத்தார்க்கும், மற்ற யாவர்களுக்கும் தாயைப் போலாகும் அழகாம்பிகையை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) வித்து = வித்தகம் = (நன்மை).
எழிற்பரை = அழகாம்பிகை.

105. சித்தாந்த தரிசனம்

555. ஒன்றா யநேகவித சத்தியா யுன்மனையாய்
நின்றாடன் பாத நினை. (132)

(இ - பொ.) தான் ஒருத்தியாயும், பலவிதமான ஆறு கோடி மாயா சத்திகளாயும், உன்னதனான பரமசிவன் மனைவியாயும் நின்ற பார்வதியம்மன் பாதங்களை (மனமே நீ) நினைப்பாயாக. (எ - று.)

(அ - ப.) உன் = உன்னதம். (கடைக் குறை.)
மனை = மனைவி.
நினை = நினைப்பாயாக.

106. சுருதிசார விளக்கம்

556. ஆதி பிரமத் தொருசத்தி யபினா சத்தி யாயதன்பாற்
பேத சத்தி யாயதன்பாற் பின்னா பின்ன சத்திகளா
யோது நாம ரூபமாய் விரிந்து முடிவி னொன்றாகிப்
போத மயமாய் நின்றாடன் பொற்றா மரைத்தாள் போற்றுவாம். (133)

(இ - பொ.) ஆதி பிரம்மானந்த சத்தி வழியாய், ஏகாதிபத்திய சக்கர வர்த்தினியாய், சுப்பிரபேதம் என்னும் சிவாகமத்தின்பால் அதிதேவதையாய், சுயேச்சையிலேயே தீவிரதர சத்தினிபாதமாய், ஓதி வரும்படியான நாமரூப மாய், கிரியையாக விரிந்ததோர் முடிவாகி, விவேக போத விளக்கமாய் நின் றொழுகிய அம்பிகையாம் கௌரியின் பொற்றாமரைப் பாதங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) பிரம்மம் = பிரமாநந்தம்.
சத்தி = சத்தியவதி.
அபினம் = ஒற்றுமை.
பேதம் = சுப்பிரபேதம்.
அது அன்பால் = அன்பதால் (சுயேச்சை).
பின்னாபின்னம் = பின்னும் (விரைவுக் குறிப்பு.)
ரூபம் = வடிவம்.
போதம் = விவேகபோதம்.
பொற்றாமரைத்தாள் = பொற்பாத கமலம்.

---

107. சித்தாந்த சிகாமணி

557. மாயையெனு மணல்கொடுல கெனுஞ்சிற்றி விழைத்தாடும் வளமை யானை
மூயமல விருளிரிக்குஞ் செழுஞ்சுடரை யுயிர்களெல்லா முன்ன மீன்ற
தாயையொரு பரசிவனைப் பெயராக்குஞ் சமவாய சத்தி தன்னைத்
தூயவறி வானந்த வடிவானை மலைமகளைத் தொழுதல் செய்வாம். (134)

(இ - பொ.) மாயை மாயை யென்று சொல்லும்படியான மணலைக் கொண்டு உலகம் என்னும் சிறு வீட்டைக் கட்டி வாழும் வாசவியாய், மூடிய மல விருளை ஒழிக்கும் பரஞ்சோதியாய், அநாதியே உயிர்களை யெல்லாம் பெற்றெடுத்த தாயாய், ஒரு பெருங் கடவுளாம் சிவபெருமானை வலப்பாகங் கொண்டவளாய், சுத்த ஞானாநந்த வடிவுடையவளாய் விளங்கும் பருவதவர்த்தினியம்மனைப் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) சிற்றில் = சிறுஇல் = (சிறு வீடு).
இழைத்தாடும் = கட்டி வாழும்.
மூய =மூடிய.
இரிக்கும் =அழிக்கும்.
ஒரு பெயராக்கும் =கைவசமாக்கும்.
சமவாயம் =சமபாதி.

108. மகாராஜா துறவு

558. இருட்கலி வலியின் ஞானநன் னெறிக ளிறந்துயிர் கொடுநெறி மேவி
மருட்கொடு கலங்கா வகைகலி யென்றும் வந்தணு காப்பதி தன்னிற்
றெருட்கதி கருணை யுருவதாய் நின்று தெளிவிக்கு மிறைவியெங் குருவோ
ரருட்கடல் பெரிய நாயகி யுலகுக் கனை முதல் வியைப்பணிந் திடுவாம்.(135)

(இ - பொ.) உயிர்கள் மல மாயா கன்மத்தினுல் நல்ல ஞான நெறிகளை இழந்து கொடுந்தொழிற்காளாய், மயங்கிக்கலங்குரு வண்ணம், என்றைக்குமே பிறவியில்லாததோர் பதிஞானத்தில் திருவருட் பிரகாச வடிவமாய் இருந்து தெளிவிக்கும் அரசியாய், நமது சமய சந்தான பரமாசாரியர்களுக்குக் காருண்யக் கடலாய், உலகங்கட்கெல்லாம் மூத்த தாயாரான பெரியநாயகி யம்மனை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) இருள் =மாயை.
கலி =கன்மம்.
வலி =ஆணவம்.
கலி =பிறப்பு.

109. விஞ்ஞான சாரம்

559. அமலபஞ்ச கிருத்தியங்க ணடத்துமதற் கர்தார மாகி ஞளை
விமலருளத் தகலாளை யெனையொர்பொரு ளாயாண்ட விஞ்சை யாளை
நிமலமுது கிரியிலமர் பெரியநா யகியையொரு நிமலை தன்னை
முமலவிருட் கிரவியையென் கண்மணியைப் பணிந்திடுவா மூன்று போதும்.(136)

(இ - பொ.) பரமசிவன் நடத்தும் படைப்பு முதலான ஐந்தொழிற்குங்கூட ஆதாரமானவளாய், அவ்விறைவனுடைய உள்ளன்பை விட்டு அகலாதவளாய், அடியேனையும் ஒரு பொருட்டாக மதித்தாட் கொண்ட பேரறிவினளாய், பரிசுத்த வல்லியாய் மும்மலவிருளுக்கும், (நீக்க நின்ற) சூரியப்பிரகாசம் போன்ற கண்மணியாய், திருமுதுகுன்றத்தில் வீற்றிருக்கும் பெரிய நாயகி யம்மனை (எக்காலும்) முக்காலும் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) அமலன் =சிவன், ஆதிகாரணம்.
ஆதாரம் =துணை, ஆதரவு.
விஞ்சை =விச்சை (அறிவு.)
முதுகிரி =திருமுதுகுன்றம்.

110. நிஷ்டானுபூதி

560. அரியநா யகியளவைக் கனுதினமு நெக்குருகு மடிய ரன்புக்
குரியநா யகியெங்குந் தானுகி நீங்காம லொளிர நின்ற
கரியநா யகிகோவற் பிரானிடத்தி லெப்போதுங் கலந்து வாழும்
பெரியநா யகியுபய பதமலரை யனுதினமும் பேணு வோமே. (137)

(இ - பொ.) அனுமானம், பிரத்தியட்சம், ஆகமம் ஆய மூன்றுக்கும் அரிய பெரிய நாயகியாய் (உடல் குழைய வென்பெலாம்) நெக்குருகும் அடியார்க்கு எந்நாளும் உரிமையான நாயகியாய், எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண நாயகியாய், திருக்கோவலூர்ச் சிவபிரானிடத்தில் எப்போழ்துமே கூடி வாழ்ந்து வரும் பெரியநாயகியம்மன் பாதாரவிந்தங்களைச் சதா தியானஞ் செய்வாம். (எ - று.)

(அ - ப.) அளவை = பிரமாணம்.
நெக்குருகும் = உள்ளுருகும்.
கோவல் = கோவலூர்.
பிரான் = பெருமான்.
பதமலர் = பாதாரவிந்தம்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

நான்காம் பகுதி

சபா நாயகர் வணக்கம்

1. பெரிய புராணம்

561. உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (1)

(இ - பொ.) உலகத்துள்ள எல்லாருக்குமே, அளவை யாதிப் பிரமாணங்களால் உணர்ந்தறிந் துரைத்தற்கு அரிய பெரியவனும், வெண்ணிலா தவழ்ந்து உலாவிய கங்காதரச் சடாமுடியனும், கோடானு கோடி சூரியப்பிரகாசம் உடையவனும், திருவம்பலத்தின் கண்ணே நடனம் ஆடுபவனுமான நடராசனுடைய செம்பொற் சிலம்படி மலரைச் சேவித்து வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ப.) உலகு = உலகத்தின்.
எலாம் = எல்லாவுயிர்களும்.
வேணி = சடை.
அலகு இல் = அளவில்லாத.

562. ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மான டஞ்செய் வரதர்பொற் றாடொழ. (2)

(இ - பொ.) வண்டுகள் கீதம் பாடி மொய்க்காநின்ற பூம்பொழில் சூழ்ந்த தில்லையம்பலத்தின்கண் திருத்தாண்டவம் செய்யாநின்ற அபய வரதராகிய சபா நாயகரின் பொற்சிலம்படிகளைத் தொழப் பெறுவதே, ஊன சம்பந்தமான மானிடப் பிறவியை எடுத்ததின் உறுதிப்பாட்டைச் சாரும் முத்தியாம். (எ - று.)

(அ - ப.) ஊன் = சதை.
தேன் = வண்டு.
வரதர் = அபயவரதர்.

563. ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியாய் நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. (3)

(இ - பொ.) ஆதிமத்தியாந்தரகித மாகியும், அளவையாதிக் கருவிகளாலும் அளந்தறிதற் கொண்ணாததோர் பேரளவாகியும், சோதிப்பிரகாச உணர்ச்சி

யுடைத்தாகியும், தோற்றும் பரம் பொருள் வடிவாகியும், ஏகநாயகப் பெருமானாகியும், பெண், ஆண், அதுவாகியும், ஞானபோதிப்புக்குத் தக நின்று நடனமாடும் தில்லையம்பலப் பொது நடத்தரசின் போற்றும்படியான வீரக்கழல் சிலம்புக்குப் போற்றி. (எ - று.)

(அ - ப.) போதி = போதிப்பு.

564. கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
யற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி. (4)

(இ - பொ.) கற்பனையறக் கடந்த பரஞ்சோதியாகிய சபாபதி தம் காருண்யமே ஒரு திருவுருவமாய், அற்புதமான திருக்கோலங்கொண்டு சதுர்வேத சிகரத்தின் மேலாஞ் சிற்பர சிதாகாசமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று, மிகுதியும் நடனஞ் செய்யாநின்ற பூந்தாமரையடிகளுக்குப் போற்றி போற்றி. (எ-று.)

(அ - ப.) வியோமம் = சிதாகாசம்.
பொற்பு = மிகுதி.

2. உபதேச காண்டம்

565. விரவு மாயிரந் திருமுகப் பகீரதி விரிக்கு
முரவு வெண்டிரை யொருமருங் கலைப்பவொண் சடைமே
லரவ கன்பண மொடுக்குற வருநடம் புரியும்
பரம னங்கதப் பரிபுரப் பதம்பணி குதுமே. (5)

(இ - பொ.) அழகிய சடைமுடியின்மீது குடிகொண்டிருக்கும் ஆயிரந் திருமுகங்களை யுடைய ஆகாயக் கங்கை பரப்புகின்ற ஒலி பெற்ற வெள்ளிய அலைகள் ஒரு பக்கத்திலே மோத, (அதைக் கண்ட) அச்சடையிலுள்ள (பாம்புகள் அகன்றிருக்கும்) படங்களை ஒடுக்கிக் கொள்ளும்படி அரிய ஆநந்தத் தாண்டவம் புரிந்தருளும் சிவபெருமானுடைய அரவமாகிய சிலம்பை யணிந்த திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அங்கதம் = தோளணி பாம்பு.
பரிபுரம் = நூபுரம், சிலம்பு.

3. கோயிற் புராணம்

566. பூங்கமலத் தயனுமலர் புண்டரிகக் கண்ணானுந்
தாங்குபல புவனமுமேற் சகலமுமா யகலாத
வோங்குமொளி வெளியேநின் றுலகுதொழ நடமாடுந்
தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலம்போற்றி. (6)

(இ - பொ.) பூந்தாமரைப் பிரம்மனும், செந்தாமரைக் கண்ணனாகிய விஷ்ணுவும், அன்னவரால் படைத்துக் காத்துத் தாங்கப்படும் பல கோடி அண்டங்களும், அவற்றுளுள்ள சர்வ ஆன்மாக்களும், பத்துத் திசையும் கண்டு தொழும்படியாக,

ஓங்கிய சிதாகாசத்தின் மத்தியிலே தாண்டவஞ் செய்யும், தேன் மணம் கமழ் சோலைகளையுடைய தில்லைச் சிதம்பரநாதர்க்குப் போற்றி. (எ - று.)

(அ - ப.) உலகு = உலகிலுள்ள உயிர்கள்.

567. ஆரணங்கண் முடிந்தபதத் தானந்த வொளியுலகிற்
காரணங்கற் பனைகடந்த கருணைதிரு வுருவாகிப்
பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி. (7)

(இ - பொ.) நான்கு வேதங்களின் முடிமேல் புனைந்த திருவடிகளையுடைய ஆநந்தப் பேரொளி உலக காரணக் கற்பனையெலாங்கடந்தோர் கருணைத் திருவுருவாம் நடராச மூர்த்தியாகி, சிதம்பரத்திற் சிறந்த தெய்வ சபா மண்டபத்தில் பரமேசுவரியுடன் ஆடும் ஆநந்தத் தாண்டவத்தைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) கற்பனை = கற்பிதம்.
பெரும்பற்றப் புலியூர் = சிதம்பரம்.
அணங்கு = பெண்.
அணங்கு = அழகு.

568. தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவிலநு பூதியதா
யற்புதமா யாரமுதா யானந்த நிலையவொளிப்
பொற்பினதாய்ப் பிரிவிலதாய்ப் பொருளாகி யருளாகுஞ்
சிற்பரமா மம்பரமாந் திருச்சிற்றம் பலம்போற்றி. (8)

(இ - பொ.) தனிப் பரம்பொருளாய், பரந்த வியாபகப் பத முத்தியாய், பேரின்பவநுபூதியாய், அற்புதாகாரமாய், ஆரமுத வெள்ளமாய், அலங்காரமான தேசோமயாநந்த நிலையமாய், எப்பொருளும் பிரிவிலதாய், அருட்டுணையாகுஞ் தெய்வச் சிதம்பரமாந் திருச்சிற்றம்பல வடிகட்குப் போற்றி. (எ - று.)

(அ - ப.) பரபதம் = பரமபதம் (இடைக்குறை).
தாவில் = அழியாத.
அநுபூதி = அனுபவத்து வந்த நிட்டை.

569. வையகமின் புறநின்ற மருமலிபொற் பதம்போற்றி
கையமரு நிலைபோற்றி கருணைமுக மலர்போற்றி
மெய்யிலகு மொளிபோற்றி விரவியெனை யெடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி திருச்சிற்றம் பலம்போற்றி. (9)

(இ - பொ.) பூலோகமெல்லாம் மகிழ்வடையும்படியாகக் காப்பாற்றி நின்று நடனமாடிய பொன்னடித் துணைகட்கும், போற்றிய அபயகர வரதத்துக்கும், திருவருள் முகவிலாசத்துக்கும், திருமேனியின் திருப்புகழ் கோலத்துக்கும், வணங்கிய அடியேனையும் கலந்து எடுத்தாட் கொண்ட செய்ய திருவடிகட்கும், நின்ற தெய்வ சபைக்கும் வணக்கம். (எ - று.)

(அ - ப.) வையகம் = உலகம்.
பொற்பதம் = பொற்பாதம்.
கை அமரும் நிலை = அபயகரவரதம்.
விரவி = கலந்து.

4. சேக்கிழார் நாயனார் புராணம்

570. சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
வேராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி. (10)

(இ-பொ.) நான்கு வேதங்களும், உபநிடதங்களும், தில்லை வாழ் அந்தணர்களும், பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களும், தொழுதேத்தி நிற்கப் பரந்த கடல் சூழ்ந்த நிலவுலகமெல்லாம் ஈடேறும்படி திருச்சிற்றம்பலத்தின் கண்ணே எடுத்தாடிய திருவடிகட்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) சீராரும் = சீராகக்கணக்கெடுத்த இருக்காதியவென விரியும்.
பாராரும் = பராமரிக்கும்.
ஏராரும் = அழகு பொருந்திய.

5. திருவாதவூரர் புராணம்

571. இதந்தரு மடந்தையொ டிசைந்துயி ருடம்புபோல்
விதம்படு லகங்களின் விரிந்தொளி விளங்குவார்
மதங்கமொ டுந்துபி வளங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழ லிறைஞ்சுவாம். (11)

(இ - பொ.) இனிமையைத் தரும் மகேசுவரியோடு கலந்து, உயிரும் உடம்பும் போலப் பெண், ஆண் வகைப்படும் பிரபஞ்சோற்பத்தியில் வியாபகமாகப் பரவி விளங்குபவரும், மிருதங்கம் துந்துபி முதலாய இன்னிசைக் கருவிகளுடன் சிதம்பரத்தில் நடனஞ் செய்பவருமான நடராசரின் வீரக் கழலடியைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) இதம் = இனிமை.
மடந்தை = மங்கை.
விதம்படு = பெண், ஆண் வகைப்படும்.
மதங்கம் = மிருதங்கம்.
துந்துபி = துந்துமி.

6. அருணகிரிப் புராணம்

572. விழைவாமிரு வினைவேரெனு மிருளோடவு மெமதுட்
பழைதாமருண் மயமாகிய பதிஞானமு முறவு
மிழைநேரிடை மடவாளுமை யிசைபாடவு மாடு
மழகார்தரு மதிருங்கழற் பெருமானவ ரடியே. (12)

(இ - பொ.) பிறவி சம்பந்தமாம் இருவினையிருள் என்னும் வேரோடவும், (எம்முள்) பழம்பொருளாம் திருவருண் மயமாகிய பதிஞான முற்றடையவும், நேரிழை நுசுப்பினளாகிய மடவரலாம் உமையவள் இசைந்து பாடவும் அழகிய நடராசப் பெருமானது திருவடிகளின் பொற்சிலம்பு அதிர்ச்சி யுண்டாக நடிக்கும். (எ - று.)

(அ - ப.) விழைவாம் = கலப்பாம்.

7. திருவிளையாடற் புராணம்

573. உண்மையறி வானந்த வுருவாகி யெவ்வுயிர்க்கு முயிராய் நீரின்
றண்மையனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசரா சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் ஞனந்தக் கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கு
மண்மையதா யம்பலத்து ளாடியருள் பேரொளியை யகத்துள் வைப்பாம்.(13)

(இ - பொ.) சத்து, சித்து, ஆனந்தமே திருமேனியாகக் கொண்டு, எல்லாச் சீவான்மாக்கட்கும் பரமான்மாவாகி நீரில் தட்பமும், நெருப்பில் வெப்பமும் போலத் தன்னை நீங்காமல் உடனின்று சகல கோடி உயிரினங்களையும் பெற்றருளிய பெண்வடிவேற்ற தனது ஆனந்தக் கொடியாகிய சிவகாமவல்லி யம்மையார் களிகூரும்படி எல்லாருந் தரிசித்தற் கெளிதாய், பொற்சபையி னிடத்தே திருவைந்தெழுத்துத் திருநடனம் புரிந்தருளும் பேரொளிப் பிழம்பாகிய நடராசப் பெருமானை யாம் உள்ளத்தில் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) 1. வெம்மை = வெப்பம்.
2. அண்மை = அருகு.

574. பொருமாறிற் கிளர்தடந்தோ ளொருமாறன்
மனங்கிடந்த புழுக்க மாற
வருமாறிற் கண்ணருவி மாருது
களிப்படைய மண்ணும் விண்ணு
முருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூசலெனத்
தடுமாறி யுழலு மாக்கள்
கருமாறிக் கதியடையக் கான்மாறி
நடித்தவரைக் கருத்துள் வைப்பாம். (14)

(இ - பொ.) போர்புரியுந் தொழிலிற் கிளர்ச்சி பொருந்திய பூரித்த தோளை யுடைய ஒப்பற்ற இராசசேகர பாண்டியனது மனதில் நிலைத்திருந்த துன்பம் ஒழியவும், பெருக்கெடுக்கும் ஆற்றுநீர் போலக் கண்களிலிருந்து, ஆநந்தக் கண்ணீர் இடையருதொழுகி மகிழவும், விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும் தமது வடிவ மாறி ஊசலாடுதல் போல மேல் போவதும், கீழ்வருவதுமாகத் தடுமாற்ற முற்றலையும் ஆன்மாக்கள் அப்பிறவிக் கடலை யொழித்து மோட்சமாகிய கரையைச் சேரவும், கால் மாறி நடித்த சிவபெருமானை மனத்தில் தியானிப்போம். (எ - று.)

(அ - ப.) ஊசல் = ஊஞ்சல்.
புழுக்கம் = துன்பம்.

---

8. சிதம்பர புராணம்

575. நீர்தாங்கு பார்தாங்கு நெடுமாலு மலரயனு நிரந்து போற்ற
வார்தாங்கு புளகமிகு களபமுலை மலைவனிதை மகிழ்ந்து காணத்
தார்தாங்கு சடாமவுலி நிலவெறிப்பப் பொதுவினடந் தயங்கா நிற்குஞ்
சீர்தாங்கு வேதாந்த நாதாந்தப் பரஞ்சுடரைச் சிந்தை செய்வாம். (15)

(இ - பொ.) நீராற் சூழப்பட்ட பூமியைக் கூர்மாவதாரங் கொண்டு, தாங்கிய விஷ்ணுமூர்த்தியும், தாமரை யாசனராகிய பிரம்மதேவரும், நெருங்கி

நின்று துதிக்கவும், கச்சையணிந்து புளக மிகுந்து கலவைச் சாந்தை யணிந்த தனங்களையுடைய சிவகாமியம்மையார் மகிழ்ந்து நின்று தரிசிக்கவும், கொன்றைப் பூமாலையைத் தரித்த சடாமுடியினிடத்தே சந்திரன் நிலவை வீசவும், கனகசபை யினிடத்தே திரு நடனஞ் செய்தருளா நின்ற வேத முடிவிலும், நாத முடிவிலும் விளங்குகின்ற மேலான சோதி வடிவமாகிய நடேசப் பெருமானைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) 1. புளகம் = மகிழ்ச்சி.
2. களபம் = கலவைச்சாந்து.
3. வனிதை = பெண்.

576. உருவமொரு நான்காகி யருவுருவத்
திருவுருவ மொன்றே யாகி
யருவமொரு நான்காகி யப்பாலா
யப்பாலு மளவி டாதே
பொருவிகந்த வுயிர்கடொறும் புணராமற்
புணர்ந்தருளோ டொழிந்தெல் லோர்க்குங்
கருதரிய திருச்சிற்றம் பலத்திலகும்
பேரொளியைக் கருத்துள் வைப்பாம். (16)

(இ - பொ.) நான்கு உருவத் திருமேனியுடையவராகியும், ஓர் அருவுருவத் திருமேனியுடையவராகியும், நான்கு அருவத் திருமேனியுடையவராகியும், அந் நவந்தரு பேதத்தைக் கடந்தவராகியும், அதற்கு மேலும் அளவிடப்படாதன வாகிய ஒப்பில்லாத ஆன்மாக்கள் தோறுங் கூடாமற் கூடி யாவர்களுக்குங் கருணை பாலித்து, நினைத்தற்கரிய திருச்சிற்றம்பலத்தின்கண்ணே விளங்கா நின்ற பெரிய சோதி வடிவினராகிய நடேசப் பெருமானை மனத்துள் வைத்துத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) உருவம் 4 = பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன்.
அருவுருவம் 1 = சதாசிவம்.
அருவம் 4 = விந்து, நாதம், சத்தி, சிவம்.

577. அருமறையின் சிரத்தொளியா யனந்தமாய்ப் பூரணமா யசலமாகி
யொருமுதலா யுண்மையா யுணர்வாகி யானந்த வுருவமாகி
யிருமலமற் றிருப்போர்கள் விருப்பாகி மணிமன்று ளென்று ஞானத்
திருமகிழ நின்றுடுஞ் சிதம்பரத்தை யெந்நாளுஞ் சிந்தை செய்வாம். (17)

(இ - பொ.) வேதங்களின் சிரோரத்தினமாய், அநந்தவிலோசனமாய், பரிபூரணமாய், கயிலாசவாசியாகிய ஓர் முழுமுதலாய், மெய்ஞ்ஞான அறிவின் ஆநந்த வடிவமாய், மூலமலம் அற்றவர்களுக்கு விருப்பினைப் பயப்பதாகி எந் நாளுமே தில்லையம்பலத்தில் சிவகாமியம்மன் மகிழும்படி நடனமாடும் நடராசப் பெருமானைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) இருமலம் = மூலமலம்.
ஞானத்திரு = சிவகாமியம்மன்.

9. சேது புராணம்

578. பூமாது பொலிவெய்த முகுந்தன் காக்கும்
புவிமாது வளம்பெருகப் புலமை சான்ற
நாமாது நலந்தழைப்ப விருள்கால் சீக்கு
நகைநிலவு தவழ்மவுலி நன்னீர்க் கங்கை
மாமாது புனறுளிப்ப மறைகள் வாழ்த்த
வளர்தில்லை யம்பலத்துள் வாம நீங்காத்
தேமாது விழிகுளிர்ப்ப வமரர் போற்றத்
திருநடஞ்செய் நூபுரத்தாள் சென்னி சேர்ப்பாம். (18)

(இ - பொ.) இலக்குமி விலாசம் உண்டாக்கவும், திருமாலின் காப்பு மேல் வரும் பூமாதேவி வளப்பம் பெருக்கவும், புலமை மிக்க சரஸ்வதி தன் வாக்கைக் காட்டவும், இருளை யொழிக்கும் (இளநிலா தவழ்சடையின்) கங்கை நீர் தெளிக்கவும், வேதங்கள் வாழ்த்தவும், இடப்பாகத்தை நீங்காத சிவகாமியம்மன் கண் குளிரக் காணவும், தேவர்கள் போற்றவும், தில்லையம்பலத்தின்கண் திருநடனஞ் செய்யாநின்ற நடராசப் பெருமானின் பாதக்கிண்கிணிகளைச் சேவிப்பாம். (எ-று.)

(அ - ப.) துளிப்ப = தெளிப்ப.
நூபுரம் = கிண்கிணிச் சதங்கை.

10. இலிங்க புராணம்

579. பூமேவு கதிர்விரிக்கும் பொன்பூத்த புண்டரிகப் புலியூர் மன்றுட்
டேமேவு புயலளகச் சிவகாம சுந்தரிகட் டெளிவண் டேயப்
பாமேவு பெருஞ்சுருதி தழங்கமுழங் கிசைமுழவம் பலநின் றார்ப்பத்
தூமேவு மானந்த நிருத்தமிடும் பொருளிணைத்தா டொழுதல் செய்வாம்.(19)

(இ - பொ.) செந்தாமரையில் வந்த இலக்குமியின் நாயகனும் கோவிந்தராசப் பெருமாள் வாழும் தில்லையம்பலத்தில், மணம் பொருந்திய அளகபாரமுடைய சிவகாமசுந்தரி கண் மலர்ந்து காணவும், மூவாயிரவர் வேதாத்தியயனம் செய்யவும், முழங்கி இசைக்கும்படியான குடமுழா, முரசு முதலான பல வாத்தியங்கள் ஒலிக்கவும், பரமானந்தத் தாண்டவம்புரி கனகசபாபதியின் குஞ்சிதபாதத்தைத் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) புலியூர் புண்டரிகம் = தில்லை கோவிந்தராசர்.
புயலளகம் = கருங்குழல்.
தழங்க = ஓத.
முழவம் = குடமுழா.
ஆர்ப்ப = ஒலிக்க.

11. பிரமோத்தர காண்டம்

580. பூமேவு சதுர்முகனுந் திருமாலும் போற்றிசெயத்
தேமேவு குழலுமையாள் செழுங்குவளை விழிகளிப்ப
மாமேவு மிதழிநறு மழைதுளிப்ப மணிமன்றந்
தாமேவி நடம்புரியுந் தனிப்பொருளை வணங்குவாம். (20)

(இ - பொ.) பங்கயனுகிய நான்முகனும், திருமாலும் போற்றி நிற்கவும், மணம் பொருந்திய பூங்குழலுடைய உமாமகேசுவரி, செழுங்குவளையைப் போன்ற கண்களால் கண்டு களிப்பவும், அழகிய கொன்றை மலர்களின் மணம் மிகுதியாய்த் தளிர்த்து வீசவும், திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளித் தாண்டவஞ் செய் தனிப் பரம்பொருளாகிய நடராசப் பெருமானை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) மழை = மிகுதி.

12. கூர்ம புராணம்

581. சீர்பூத்த குழவிமதி யமுதிறைப்பக்
கங்கையெழுந் திவலை தூற்ற
வார்பூத்த பொம்மன் முலைக் கௌரியிரு
கண்களிப்ப வானோர் போற்ற
வேர்பூத்த மணிமன்றத் தானந்த
நடம்புரியு மெண்டோண் முக்கட்
கார்பூத்த மணிமிடற்றோன் கமலமலர்ச்
சேவடியெங் கருத்துள் வைப்பாம். (21)

(இ - பொ.) இளம்பிறை தேவாமிர்த மிறைத்தாலன்ன நிலா வெளிச்சந்தரவும், கங்கையானவள் பன்னீர் தெளிக்கவும், கச்சணிந்த தன பாரமுடைய கௌரியம்மன் தன்னிரு கண்களால் களிப்பவும், தேவர்கள் எல்லாருந் துதித்துக் கொண்டாடவும், அழகுபொருந்திய மணியம்பலத்தில் ஆநந்த நடனம் புரி எண் தோள் முக்கண்ணனுகிய நீலகண்ட நடராசப் பெருமானின் பங்கயச் சேவடியைப் பணிந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) அமுதிறைப்ப = நிலவெறிப்ப.
பொம்மல் = பார மிகுதி.

13. வாயு சங்கிதை

582. சீர்பூத்த வுயர்கொன்றைச் செழுமலர்த்தேன்
செஞ்சடைமேற் சிந்தச் செவ்விக்
கார்பூத்த விமயமயில் களிதூங்கப்
பதஞ்சலிமா முனிவன் காணப்
போர்பூத்த வரிப்புலிக்கான் முனிபோற்ற
வயங்குமணிப் பொதுவி னன்கா
யேர்பூத்த நடம்புரியு மிறைமுதலை
வணங்கியுளத் திருத்து வாமே. (22)

(இ - பொ.) உயர்ந்த கொன்றை மலர், செஞ்சடைமேல் நின்று தேன் சிந்தவும், இமாசல மயிலணங்காகிய சிவகாமசுந்தரி கண்டு ஆநந்திக்கவும், பதஞ்சலி மகா முனிவர் தரிசிக்கவும், புலிக்காலராகிய வியாக்கிரபாதர் துதிக்கவும் விளங்கிய மாணிக்கப் பொன்னம்பலத்தில் ஆநந்தத் தாண்டவஞ் செய் நடராசப் பெருமானை வணங்கி வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ப.) சீர்பூத்த = சிவப்பும் மஞ்சளுமாகக் கலந்து பூத்த.

14. திருக்கூவப் புராணம்

583. சீர்கொண்ட மலைமாதின் றிருநுதல்கண்
டராப்பகைவெண் டிங்க ணீக்கி
யார்கொண்ட சடையரவ மல்குலைக்கண்
டடற்கையுழைப் பகைய யர்த்து
நேர்கொண்ட வுழைவிழிகண் டருகுறுமெய்ப்
புலிப்பகைநீத் திருப்ப நின்றே
யேர்கொண்ட தனித்தில்லை நடம்புரியெம்
பெருமானை யிறைஞ்சல் செய்வாம். (23)

(இ - பொ.) மலைமகளாகிய சிவகாமவல்லி யம்மையின், நெற்றியைக் கண்டு வெண்ணிலாவெனக் கருதியதால் நிலவின் பகையாகிய பாம்பை யொழித்தும், சடையாடுமப் பாம்பு அம்மையின் அல்குலை யொத்திருந்ததால், கொல்லுதற் பகையை விட்டும், அம்மனின் கண்களைக் கண்டு மானெனக் கருதிய தால், பக்கத்திலிருக்கும் புலியின் பகையாகிய மழுவை மழுங்கியும் நின்று நடன மாடிய தில்லையம்பல நடராசப் பெருமானைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) பாம்பானது சிவகாம வல்லியம்மனின் நெற்றியைக்கண்டு பழம் பகையாகிய சந்திரனைவிட்டு விடவும், அல்குலைக் கண்டு தானெனக் கருதித் தன்னை யாருங் கொல்லாமல் காப்பாற்றிக் கொள்ளவும், மான்போலுங் கண்களைக் கண்டு பக்கத்திருக்கும் புலியும் மான் தானெனப் பயமொழித்துக் கொள்ளவுமாக நின்று நடனம் புரியும் நடராசன் எனவும் உரைநிகழ்ச்சி. இதுபோல் புலிக்கும் ஒருரை பொருந்தும்.

---

15. திருவையாற்றுப் புராணம்

584. சொல்லாலும் பொருளாலு மேவர்செயுந் தொழிலாலும்
விழியாலுஞ் சுருதி யாலு
நல்லார்க ளளவாலு மிருவராலு நாடரிய
பேரொளியாம் ஞான மூர்த்தி
யெல்லாருந் தொழுதிறைஞ்சுந் தில்லைமன்று ளிலங்கியெழும்
விராட்புருட னிதயந் தன்னிற்
செல்லாத நாதாந்த சிரத்தினின்று திருநடஞ்செய்
தான்பதமே சிந்தை செய்வாம். (24)

(இ - பொ.) வாய்ச் சொல்லினாலும், பொருளின் பாகுபாட்டாலும், காட்சியினாலும், வேதங்களினாலும், நல்லவர்களின் அளவையாதிப் பிரமாணங்களினாலும், யாகம் முதலிய செயல்களினாலும், பிரம்ம, விஷ்ணுக்கள் இருவராலும் நாடியறிதற்கரிய பேரொளியாம் ஞான மூர்த்தியாய், சர்வ சமயங்களும் வந்து தொழும்படியான தில்லையம்பலத்தில் எழுந்தருளும் விராட்புருஷனாய், வாக்கு மன மணுகாத பூரண வெளியினின்றாடும் நடராசப் பெருமான் சேவடிகளைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) ஏவர் செய்யுந் தொழில் = யாகம் முதலிய செயல்கள்.
விராட் புருஷன் = ஆண்களில் சிறந்தவன்.

16. நல்லூர்ப் புராணம்

585. பூமேவு சதுர்முகனுந் திருமாலு
மிருபாலும் போற்றி நிற்ப
நாமேவு கலைமகளுந் திருமகளுந்
தொழுமுமையா ணயந்து காணக்
காமேவு பெரும்பற்றப் புலியூரம்
பலத்தினடங் காட்டா நின்ற
தேமேவு மலரிதழி மிலையுமர
னடியிணைகள் சிந்தை செய்வாம். (25)

(இ - பொ.) பதுமனுகிய நான்முகன், திருமால் இவர்கள் போற்றி நிற்கவும், சரஸ்வதி, இலக்குமி இவர்களால் தொழப்பட்ட சிவகாமவல்லி தரிசிக்கவும், சோலைகள் சூழ்ந்த சிதம்பரத்தின் பொன்னம்பலத்தில் நடித்தருளாநின்ற கொன்றை சூடியாம் நடராசப் பெருமான்றன் திருவடி இணைகளைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) பூமேவு சதுர்முகன் = பிரம்மன்.
பூமேவு திருமால் = பூமிக்கொழுநனுகிய விட்டுணு.

பூமேவு இருவருக்குஞ் சம பாகமாக்கிக் கொள்க. இதுபோலவே,

நாமேவு = நாவில் மேவும் கலைமகள்.
நாமேவு = நாம் மேவும் திருமகள்.

17. வீரசிங்காதன புராணம்

556. சீர்பெறுசிற் பரமாகிச் சிற்பரத்திற் றற்பரமாய்த் தேவ ராதிப்
பார்பெறுபல் லுயிராகிப் பல்லுயிருக் குணர்வாகிப் பரவிச் செம்பொன்
வார்பெறுவெற் புறுங்கொங்கைச் சிவகாம வல்லியருள் வாமத் தாகி
யேர்பெறுபொற் புலியூர்ச்சிற் சபையினட மிடுதிருத்தா ளிறைஞ்சி வாழ்வாம்.

(இ - பொ.) சிறந்த சித்துப் பரம்பொருளாய், சிற்பரச் சுயம்புவாய், தேவர்கள் முதலான விரிந்த பல வுயிர்களாய், அவ்வுயிர்களின் உணர்வாய், நிறை செம்பொன் கச்சணிந்த தனபாரங்களைக் கொள் சிவகாம வல்லியம்மனின் வலப்பாகமாய், சிதம்பரத்தின் தெய்வ சபையில் நடனமிடும் நடராசப் பெருமானுடைய சேவடிகளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) தற்பரம் = சுயம்பு.

18. அருணசலப் புராணம்

587. முதிருஞ்சுவை மதுரம்பெற மொழியுந்தமிழ் விரகன்புகழ்
பதிகம்புனை பவனம்பினர் பவபஞ்சன னமலன்கதி
ருதிரும்படி பகிரண்டமு முடையும்படி யிலகும்படி
யதிரும்படி நடனம்புரி யதிருங்கழ லதிருங்கழல். (27)

(இ- பொ.) மிகுந்த இனிமை உண்டாகப் பாடுகின்ற திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளால் தோத்திரம் செய்யப்பட்ட பதிகமாகிய மாலையை அணி

கின்றவராகியும், தம்மை யடைந்தவர்களது பிறவியைக் கெடுப்பவராகியும், மலரகிதராகியும் விளங்கி, சூரியனுதிரவும், பகிரண்ட முடையவும், விளங்குகின்ற பூமி அதிரவும், நடனத்தைச் செய்யாநின்ற மிகவும் ஒலிக்கின்ற வீரகண்டா மணியைத் தரித்துள்ளதாகிய நடேசரது சிறந்த பாதத்தை வணங்குவோம். (எ - று.)

(அ - ப,) விரகன் = காதலன், புலவன்.
பஞ்சனம் = அழிக்கை, நாசம்.

19. காஞ்சிப் புராணம்

588. சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளு
மறைக்கோவுந் தழல்கால் சூல
மங்கேந்து மம்மானுந் தத்தமது
தொழிறலைநின் றாற்றச் செய்தோர்
பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
விருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்கேந்து மணிமன்றுட் குனித்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம். (28)

(இ - பொ.) நான்கு வேதப் பிரம்மனாகவும், (செந்தாமரை மலர்போன்ற) உள்ளங்கையில் சங்கமேந்து விஷ்ணுவாகவும், சூலாயுதபாணியான உருத்திரனாகவும் நின்று படைப்பு முதலிய ஐந்தொழில்களையும் நடத்தி, இடப்பாகமாகக் கொண்ட சிவகாம சுந்தரவல்லி கண்டு மகிழும்படியாகவும், பதஞ்சலி, வியாக்கிர பாதரென்கிற முனிவர்கள் பணிந்து போற்றவும், தில்லையம்பலத்தின்கண் நடித்தருள் நடராசப் பெருமானைத் துதித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) குடங்கை = உள்ளங்கை.
புத்தேள் = (கடவுள்) விஷ்ணு.
மறைக்கோ = வேதன் (பிரமன்).
குனித்தருளும் = ஆடியருளும்.

ஷ இரண்டாங்காண்ட முடிவு

589. அஃறிணையு முயர்திணையு மெனப்பகுத்த
வுயிர்கடொறு மவையே யாகிச்
சிஃறொழிலுஞ் செய்யாது செய்துவினைத்
திறனருத்திச் சிறியே னெஞ்சக்
கஃறனையுங் கரைத்துருக்கித் தடுத்தாண்ட
கச்சி யேகம்ப மேய
பஃறலைய பாப்பரசி னங்கதத்தான்
குஞ்சிதத்தாள் பரசி வாழ்வாம். (29)

(இ - பொ.) (மக்கள், தேவர், நரகர்) உயர்திணை, (மற்றுயிருள்ளவுமில்லவும்) அஃறிணையெனப் பாகுபட்ட ஆன்மாக்கள் தோறும், உயிர்க்குயிராய்ச் சம்பந்தப்பட்டுச் சிறிதும் தம்மாற் செய்யப்படாமல், எல்லாந் தம் சத்திகள் வல்லபத்தால் நடை பெறச் செய்து, வினைப்படியே இன்பத்தைப் புசிப்பித்தும், அடியேன் வன்னெஞ்சமாகிய கல்லையும் உருக்கிக் கரைத்துத் தடுத்தாட்கொண்ட கச்சி ஏகம்பரத்தமர்ந்த நடராசமூர்த்தி, ஆயிரம் பணா முடிகளையுடைய ஆதிசேஷன் தலைகளும் அதிரும்படியாக நடித்தருளிய பாதங்களை வழிபட்டு வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) திணை = இனம்.
பரசி = வழிபட்டு.
கஃறணை = கல்தணை.
பாப்பரசு = ஆதிசேஷன்.
அங்கதத்தாள் = கீழூன்றிய பாதம்.
குஞ்சிதபாதம் = ஆட எடுத்திட்ட பாதம்.

20. விநாயக புராணம்

590. மூத்தமக னிடத்தார்வ மீன்றெடுத்த
பிதாமகற்கு முதிரு மாற்றாற்
பூத்தபொழிற் சென்னைநகர்ப் புகுந்துபிர
சன்னமுகப் புத்தே ளன்ப
ரேத்தெடுப்பப் பிரசன்ன மாயிருக்கு
மாலயத்து ளெய்தி மன்றும்
கூத்தியற்று மிளைப்பாறுஞ் சிதம்பரே
சுரர்மலர்த்தாள் குறித்து வாழ்வாம். (30)

(இ - பொ.) பெற்றெடுத்த அப்பனுக்கு மூத்த பிள்ளையின்மேல் அன்பு அதிகரிக்கு மாகையால், பூம்பொழில் சூழ்ந்த சென்னையம்பதியைச் சேர்ந்து, ஆங்கு அன்பர்கள் போற்றிவரும் பிரசன்ன விநாயகர் கோயிலுட் கொலுவெய்தி, ஆநந்தத் தாண்டவம் புரியும் சிற்சபாபதியான சிதம்பரேசருடைய திருவடிக் கமலங்களை முடி சூடி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) ஆர்வம் = அன்பு.
முதிரும் ஆற்றால் = அதிகரிக்கும் ஆகையால்.
பூத்த பொழில் = பூம்பொழில்.
மன்று = மன்றாடிக் கோரிக் கொள்ளும் விதம்.

21. திருத்தணிகைப் புராணம்

591. உலகிரு ளுருவத் தொளிகளி னிரித்தாங்
குறுபொரு ளெவற்றையுந் தெரித்துள்
விலகிருண் முழுது மருள்கொடு துமித்து
விராயொளிர் தன்னையுந் தன்னா
விலகுயிர் தனையுந் தெரித்தறி வுறுக்கு
மியல்பினெக் காலமும் பிறழா
தலகிலற் புதக்கூத் துமையினைக் காட்டு
மடிகள்சே வடிகளைப் பணிவாம். (31)

(இ - பொ.) உலக மூடிய அந்தகார விருளைச் சோம சூரியாக்கினியால் ஒழித்து, ஆங்குள்ள பொருள்களை யெல்லாம் நன்கு விளக்கிக் காட்டிய பிறகு, சரீரமுடைய ஆணவ இருள் முழுமையும் திருவருட் பரஞ்சோதியினால் அறுத்துத் தள்ளி, உயிர்க்கு உயிராகக் கலந்துவரும் தான் இன்னவனென்றும், தன்னால் நடைபெறும் ஆன்மா இன்னதென்றும் தெரிவிக்கும்படியானதோர் தகுதியினின்றும் விலகாமல் வகை வகையான பல அற்புதக் கூத்துக்களைச் சிவகாம வல்லியம்மனுக்கு ஆடிக்காட்டும் நடேச மூர்த்தியின் சேவடிகளைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) ஒளிகள் = சோம சூரியாக்கினி.
தெரித்து = தெரிவித்த பிறகு.
துமித்து = அறுத்து.
விராய் = கலந்து.
இயல்பு = தகுதி.
பிறழா = பிசகா.

22. பேரூர்ப் புராணம்

592. திருமார்பன் முதலான தேவருக்கெல்
லாமறையோன் சிவனே யாமென்
றொருவாய்மை மறைகரைந்த துண்மையெனத்
தெளிந்துலக முய்ய முத்தீ
மருவாருங் குழலுமைபத் தினிவளர்ப்ப
விடக்கரத்து வயங்க வேந்திப்
பெருவாழ்வு தரவரசம் பலத்தாடும்
பேரொளியைப் பேணி வாழ்வாம். (32)

(இ - பொ.) (திருவமருமார்பன் ஆகிய) மகாவிஷ்ணு முதலான தேவர்களுக்கெல்லாம் பரம இரகசியமானவன் சிவன் ஒருவனேயென்று சத்தியவாக்கினுல் வேதம் முறையிட்டது உண்மை தானென உலகுயிரெல்லாமறிந்து சீவிக்கும்படியாய், முத்தரும்பிய பற்களால் புன்னகைபுரி கருங்குழலின் சிவகாம வல்லியை வாமபாகமாகக் கொண்டு திருச்சிற்றம்பலத்தில் தாண்டவமாடும் நடனசபாபதியை நாம் பெருவாழ்வடையப் போற்றி வருவாம். (எ - று)

திருமார்பன் = இலக்குமி காந்தன்
மறையோன் = இரகசியமானவன்
வாய்மை = சத்தியம்

23. திருவானைக்காப் புராணம்

593. பொன்னணிநூ புரஞ்சிலம்ப வடிபெயர்க்குந்
தொறுமங்கைப் புணர்செந் தீயு
மின்னெளிவே ணியிற்புனலு மெழுந்துபொறி
திவலையிவை விரவ வீசி
மன்னியநீள் பகைமுடிப்ப வடலமுயன்
ருங்கிரண்டும் வயங்கி யாடத்
துன்னியபே ரொளிமன்றி னடநவிற்றும்
பெருமானைத் தொழுது வாழ்வாம். (33)

(இ - பொ.) பொன்னுபரணமாகிய கிண்கிணிச் சதங்கை பூண்சரணங்களிரண்டும் மாறியாடும் போதெல்லாம், உள்ளங்கையிலுள்ள செந்தீப் பொறிகளும், சடாபாரத்திலுள்ள கங்கை நீர்த்துளிகளும், சிந்தியெழுந்து தம் பகையை முடிப்ப, ஒன்ருேடொன்று மோதிச் சமராடும்படியாகக் கனக சபா மண்டபத்தில் தாண்டவம் புரியும் நடராசப் பெருமானைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ம்.) அங்கைப் புணர் செந்தீ = மழு.

24. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

594. பூமேவு மயன்மாலுஞ் சதிமுறைவாத்
தியமியற்றப் புலித்தா ளோனு
நாமேவு வியாகரண பாடியஞ்செய்
பதஞ்சலியு நயந்து போற்ற
வோமேவு பொருளகண்ட சச்சிதா
னந்தவெளி யுருவ மாகித்
தேமேவு மலர்மன்று ளுமைகாண
நடம்புரிதாள் சென்னி சேர்ப்பாம். (34)

(இ - பொ.) பிரம்ம தேவர், மகாவிஷ்ணு, இவ்விருவரும் தாள்வொத்துப்படி இன்னிசைகள் ஒலிக்கவும், (நமக்காக வியாகரண பாடிய மியற்றிய) பதஞ்சலியர், வியாக்கிரபாதர் முதலியோர் போற்றி நிற்கவும், சிவகாமவல்லியம்மன் தரிசிக்கவும், ஓங்காரப் பிரணவப் பொருள் வடிவமாம், அகண்ட சச்சிதானந்த உருவாகிய நடராச மூர்த்தியாய்த் தில்லையம்பலத்தின்கண் தாண்டவஞ்செய்யும் திருவடி மலர்களைச் சென்னி சூட்டுவாம். (எ - று.)

(அ - ப.) சதி = தாளவொத்து.

25. கடம்பவனப் புராணம்

595. சிவமாகிச் சத்தியாய் நாதவிந்து
வாய்ச்சதா சிவமு மாகி
நவமாரு மகேசனுருத் திரனெடுமா
லுன்முகன்மற் றியாவு மாகித்
தவமாரு மிரசிதசிற் சபையில்வலத்
தாண்மாறித் தையல் காண
வுவமான மின்றிநிருத் தம்புரியும்
பேரொளியை யுளத்தில் வைப்பாம். (35)

(இ - பொ.) நவந்தரு பேதமான சிவம், சத்தி, நாதம், விந்து என்ற அருவ மயமாகியும், சதாசிவமென்ற அருவுருவ மயமாகியும், மகேசன், உருத்திரன், நெடுமால், நான்முகன் என்ற உருவத் திருமேனியாகியும், மன்ற மெல்லா மொன்று சேர்ந்ததை ஒவ்வும் வெள்ளியம்பலத்தின்கண் சிவகாம வல்லியம்மன் பார்க்கும்படியாக வலக்காலை மாற்றி ஒப்புவமை இல்லாமல் தாண்டவம் புரியும் நடேசப் பெருமானைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) தவம் = ஒருநிலை.
இரசிதம் = வெள்ளி.

26. உத்தரகோசமங்கைப் புராணம்

596. பூமேவு மடற்கமலப் பொகுட்டுறையு
மந்தணனும் பொலிவி னேங்கித்
தேமேவு பசுந்துளபத் திருமாலுங்
காண்பரிய செல்வ ரேனும்

பாமேவு பதஞ்சலியும் புலிப்பதனுங்
கண்டுதினம் பணிந்து போற்ற
மாமேவு மணிமன்று ணடம்புரிபொற்
பதமிறைஞ்சி வழுத்தால் செய்வாம். (36)

(இ - பொ.) கமலாசனத் தெழுந்தருள் பிரமதேவனும், துளசி மாலையணியும் திருமாலும் கண்டறிதற்கொண்ணு அடிமுடியுடையவராகிய நடராசப் பெருமான், திருச்சிற்றம்பலத்தின்கண், பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களால் நாள்தோறும் பணிந்து போற்றும்படியாகத் தாண்டவஞ்செய் பொன்னடிகளைப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) தேமேவு = தேன் பொருந்திய
பாமேவு = பாயும்
மாமேவு = மகத்துவமுடைய

செல்வரேனும் என்றமையால், காண்பரிய அப்பிரம்ம விஷ்ணுக்களும் (பதஞ்சலி, வியாக்கிரபாதரும் மன்றுள்) கண்டு தினம் பணிந்தனர் எனவும் பெறப்படும்.

27. கடம்பர் கோயிற் புராணம்

597. உறுதி யாகிய சூக்குமந் தூலமென் றுரைக்குங்
குறைவின் மூலமந் திரத்தையே திருவுருக் கொண்டு
மறுவி லாமணி மன்றுணின் றிருவர்வாழ்த் தெடுப்பப்
பிறவி நோய்கெட நடம்புரி பிரானடி பணிவாம். (37)

(இ - பொ.) முத்தி உறுதியைப் பயப்பதாகிய சூக்கும பஞ்சாட்சரம், தூல பஞ்சாட்சரம் என்று சொல்லும் மந்திரத்தைக் காரண பஞ்சாட்சரத்தால் திருவுருவங்கொண்டு, மாணிக்க மணி மண்டபத்தில், பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் வாழ்த்தி வழிபடும்படியாகவும், பிறவிப் பிணி நீங்கும்படியாகவும், தாண்டவமாடுகின்ற நடராசப் பெருமான் திருவடிகளை வணங்குவோம். (எ - று.)

(அ - ப) சூக்குமம் = சூட்சமம்.
(குறைவில்) மூலம் = (நிறைந்த) காரண பஞ்சாட்சரம்.
மறுவில் = குற்றமற்ற, சுத்த.

28. சரப புராணம்

598. வையம் யாவையும் பவமெனும் வாரிவாய்ப் பட்டுப்
பொய்யில் வீந்திடா வகையருள் புணர்ந்துமை காண
வைய சிற்பர வம்பலத் தாடிய கமலச்
செய்ய தாண்மலர் சிந்தையுஞ் சென்னியுஞ் சேர்ப்பாம். (38)

(இ - பொ.) எல்லா உலக ஆன்மாக்களும், பிறவிக் கடலில் வீழ்ந்து பொய்ச் சமயத்துட்பட்டுழலா வண்ணம், கருணை நோக்குக் கொண்டு, திருச்சிற்றம்பலத்தில் நடனமாடிய நடராசப் பெருமானின் செங்கமலச் சேவடிகளைச் சிந்தையிலும் சிரத்திலும் சூடிக்கொள்வாம். (எ - று.)

வாரி = (கடல்) வாரிதி
பொய் = பொய்ச்சமயம்
ஐய = அழகிய

29. சிவராத்திரிப் புராணம்

599. சீர்தந்த கமலமலர்த் திசைமுகனுந்
திருமாலுந் தேவர் கோவுங்
கூர்தந்த நகப்புலிக்காற் றவமுனியும்
பதஞ்சலியுங் குழைந்து போற்ற
வார்தந்த கலசமுலை மலைவனிதை
விழிகளிப்ப மன்று ளாடுங்
கார்தந்த மணிமிடற்றுக் கடவுடிரு
வடியிணைகள் கருத்துள் வைப்பாம். (39)

(இ - பொ.) செந்தாமரை ஆசனனாகிய நான்முகப் பிரம்மனும், சீர்தந்து காக்கும் மகா விஷ்ணுவும், தேவர் கோவாகிய தேவேந்திரனும், புலிக்காலராகிய வியாக்கிரபாத முனிவரும், பன்னக வடிவராகிய பதஞ்சலி முனிவரும் ஏகமாகக் கூடிப் போற்றி நிற்கவும், கச்சணிந்த கும்பத் தனமுடைய மலைமகளாகிய சிவகாம சௌந்தரவல்லி கண்டு மகிழவும், சிதம்பரத்தில் தாண்டவஞ் செய்யும், நீலகண்ட பரமசிவனாகிய நடேசப் பெருமானுடைய திருவடியிணைச் சேரத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) கார்தந்த = கரிய.

30. சிவராத்திரி புராணச் சுருக்கம்

600. பொய்கண்டேன் பொய்கூடும் புலன்கண்டேன்
புலன்கொளுயிர் பொருந்தி வாழு
மெய்கண்டேன் மெய்காட்டும் வீடுகண்டேன்
வீட்டின்ப மிகவும் கண்டேன்
மொய்கண்டேன் றிருத்தில்லை வாணனுரு
வைந்தெழுத்து முயங்கி வாழ்த்திக்
கைகண்டேன் மன்றுள்வரு கால்கண்டேன்
வினையொன்றுங் கண்டி லேனே. (40)

(இ - பொ.) ஐம்புலச் சேட்டைகளாலுட்படும் உயிர்கள் பொருந்தி வாழா நின்ற தூலதேக சம்பந்தத்தைக் கண்டேன். கண்டதும் பொய்ச் சமய வேடமென்றுணர்ந்தேன். உணர்ந்ததும் பொய் பொய்யாய்ப் போகப் பற்றறுத்துக் கொண்டேன். வினையொன்றுங் காணேன். அதனால் மெய்யான வழிகாட்டுமோர் விடுதலையடைந்தேன். அடைந்ததால் வரும் பேரின்பத்தை யனுபவித்தேன். தில்லை மூவாயிரவரையும் தரிசித்தேன். சிதம்பரேசனுடைய பஞ்சாட்சர மந்திரத்தையும் உச்சரித்து வாழ்த்திக் கைகுவித்துப் பணிந்தேன். சிற்றம்பலத்தில் நடிக்கும் திருவடி நடனமும் கண்டு களித்தேன். (எ - று.)

(அ - ப.) முயங்கி = முழங்கி, (தழுவியும்).
மொய் = திருக்கூட்டம்.

---

31. புலியூர்ப் புராணம்

601. சீர்மேவு மலரயனுந் திருமாலுஞ்
சேவடியு முடியுந் தேட
நீர்மேவு மன்பருள நிறைந்துநிரு
மலமாகி நீங்கா தோங்குந்
தேர்மேவு மணிவீதி திகழ்தில்லை
யம்பலத்தே திருக்கூத் தாடு
மேர்மேவு பேரொளியாஞ் சிதம்பரத்தை
யெந்நாளு மிதயஞ் சேர்ப்பாம். (41)

(இ - பொ.) பதும ஆசனனாகிய பிரம்மனும், மகாவிஷ்ணுவும் அடிமுடி தேட, உள்நீர்மையுடையதும் அடியார்களுடைய உள்ளத்தில் நிறைந்து பரிசுத்தமாய் நிலைத்தோங்குவதும், கோபுரத்தைப் போலும் மாடவீதிகளையுடைய தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடுவதுமாம் பேரின்ப வாழ்வாகிய சிதம்பரமூர்த்தியை எக்காலமும் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) நீர்மேவும் = நீர்மை கொளும்.
தேர்மேவும் = தேர்போலும் கோபுரம்.
ஏர்மேவும் = சிறப்புப் பொருந்திய

602. பங்கய னாதி யாகப் பரசிவாந் தத்தின் மேலா
யெங்கணும் பரந்து வைகி யேகமா யியல்பா யோங்கி
மங்கையோர் பங்கின் மேவ வளரொளி மன்று ளாடும்
பொங்குயர் ஞானா னந்தப் பொருளினைப் புந்தி செய்வாம். (42)

(இ - பொ.) பரசிவமுதலாகப் பிரம்மன் ஈறாகக் கூறும் நவந்தரு பேதத்துக்கும் மேற்பட்டதாய் எங்கணும் பரந்த வியாபகமாய், ஒழுங்கினோங்கிய சிவகாம சுந்தரி வாமபாகமாய், கனக சபா மண்டபத்தில் தாண்டவமாடும் சச்சிதானந்தப் பரம்பொருளாம் நடராச மூர்த்தியைச் சேவிப்பாம். (எ - று.)

603. ஏதமில் கார ணத்தாற் சராசர மெல்லா மாகி
யாதியாய் நடுவா யீறா யநாதியா யருளா லோங்குஞ்
சோதியார் வடிவ மாகிச் சுரர்தொழச் சுடர்சேர் பொன்னின்
போதமார் சபையு ளாடும் புனிதனைப் போற்றல் செய்வாம். (43)

(இ - பொ.) முதல், துணை, நிமித்த காரணங்களால் சராசர மயமான பிரபஞ்சங்கள் எல்லாமாய், ஆதி, மத்தி, அந்தி, அநாதியாய்த் திருவருளால் ஓங்கிய பரஞ்சோதி வடிவமாகித் தேவர்கள் தொழும்படியாகப் பொன்னம்பலத்தின்கண் தாண்டவமாடும் பரிசுத்தனாகிய நடராசப் பெருமானை வணங்குவாம். (எ - று.)

32. கணேச புராணம்

604. நிலமுதலைம் பூதவடி வாகியதற்
கப்பாலாய் நிகழா நின்ற
குலவுபர விந்துவாய்ப் பரநாத
மாய்க்குணமுங் குறியு மின்று
யிலகியநான் மறைகடந்த பொருளாகி
யருளாகி யிமவா னீன்ற
திலகநுத லுமைகாண மன்றுணடம்
புரியொருவன் றிருத்தாள் போற்றி. (44)

(இ - பொ.) நிலம், நீர், வளி, தீ, வெளியாய பஞ்சபூத வடிவாகியும், அதற்கப்பால் நடைபெற்றுக் குலவிவரும், பரவிந்து, பரநாதமாய், குணங்குறியில்லாததாய், நான்கு வேதங்களுக்கும் அதீதமான ஆகமப் பரம்பொருளாய், இமயவரயன் ஈன்றருள் சிவகாமியம்மன் கண் காணத் திருச்சிற்றம்பலத்துத் தாண்டவஞ் செய் சபாநாயகருடைய திருவடிகட்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) நிகழா நின்ற = நடைபெறும்.
திலகநுதல் = நெற்றிப்பொட்டு.

33. திருவாப்பனூர்ப் புராணம்

605. விரிசடைமின் னொளிவிரிப்பப் பகீரதிவெண்
டிரைபுரட்ட மிளிர்பூங் கொன்றை
சொரிநறுஞ்செந் தேன்றுளிப்ப மலைமகள்கண்
டுளங்களிப்பச் சுடர்க்கண் மூன்றும்
புரிபவுரி யினிற்சுலவத் தமருகநா
தங்கறங்கப் புவனம் வாழப்
பரிபுரவே தஞ்சிலம்பப் பொதுநடஞ்செய்
பரம்பொருளைப் பணிந்து வாழ்வாம். (45)

(இ - பொ.) விரிந்த சடாபாரம் மின்னலைப் போல ஒளிவீசவும், கங்கை நுரைத்த அலைகளடித்துப் புரட்டவும், கொன்றைப் பூங்கொத்து பரிமளம் வீசித் தேன் சிந்தவும், சிவகாமவல்லியம்மன் கண்டு மனம் பூரிக்கவும், சோம சூரியாக்கினிகளாம் முக்கண்களும் நடனத்தில் சுழன்று வரவும், உடுக்கை ஓசை ஒலிக்கவும், உலகமெல்லாம் வாழ்ந்து வரவும், வேதமாம் கிண்கிணிச் சதங்கை அதிர்ந்தொலிக்கவுமாகப் பொன்னம்பலத்தில் நடனமாடும் நடராசப் பெருமானைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பகீரதி = கங்கை.
பவுரி = கூத்து.
சுலவ = சுற்றிவர.
தமருகம் = உடுக்கை.
கறங்க = ஒலிக்க.
பரிபுரம் = சதங்கை.
சிலம்ப = ஒலிக்க.

34. திருப்பூவணப் புராணம்

606. பூமேவு திருமாலும் புண்டரிகத் தயனும்
புரந்தரனும் வானவரும் புங்கவரும் போற்றப்
பாமேவு பண்டருஞ்சொற் பரிவுமையாள் காணப்
படர்தருசெம் பவளநறுஞ் சடைதாழ மிலைச்சுந்
தேமேவு செழுங்கொன்றை தேன்றுளிப்ப விருள்கால்
சீக்குமிளமதி நிலவெண் டிசாமுகஞ்சென் றெரிப்ப
மாமேவு மணிமன்று ணடம்புரியு மெங்கோன்
மன்னுபரி புரமலர்த்தாள் சென்னியிற் சேர்ப்பாம். (46)

(இ - பொ.) (பூமியின் கொழுநனாகிய) மகாவிஷ்ணு (பூந்தாமரையனாகிய) பிரம்மதேவன், தேவேந்திரன், தேவர்கள், முனிபுங்கவர்கள் இவர்களெல்லாஞ் சுற்றிப்போற்றவும், பண்டைத் தமிழ்ப் பாமாலை பெற்ற சிவகாமவல்லியம்மன் கண்டு தரிசிக்கவும், செம்பவளக் கொடிகளைப் போலப் படர்ந்தோடிய சடாபாரந் தாழ்ந்தசையவும், சூடிய மணம் கமழும் கொன்றைப்பூ தேன் சிந்தவும், இருளைப் போக்கும்படியான பாலசந்திரன் அட்டதிக்குஞ் சென்று நிலவுகாயவும், மாணிக்கப் பொன்னம்பலத்தில் தாண்டவம் புரியும் எம்பெருமானாகிய நடராச மூர்த்தியின் சதங்கையணிந்த பாதபங்கயங்களைச் சிரமேல் சூடுவாம். (எ - று.)

(அ - ப.) புண்டரிகம் = தாமரை.
புங்கவர் = முனிவர்.
மிலைச்சும் = அணியும்.
துளிப்ப = துளிதுளியாகச் சிந்த.

35. திருத்தணிகைப் புராணச் சருக்கம்

607. பருதிமதி மேதினிநீர் பாவகன்கால்
வெளியுயிர்சீர் பரந்த மேனி
மருவிமல ரயன்றிருமான் மணிகண்டன்
மகேசனொடு சிவனு மாகிச்
சுருதிபுக ழைந்தெழுத்தின் பொருளாகி
யுலகினிலைந் தொழிலு நீடப்
பெருகியபொன் னம்பலத்திற் கூத்தாடும்
பெருமானைப் பேசி வாழ்வாம். (47)

(இ-பொ) ஆன்மாக்கள் எடுத்த சரீரங்கள் தோறும் கலந்து சூரியன்) சந்திரன், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமாகியும், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவனாகியும், வேதங்கள் புகழா நின்ற பஞ்சாட்சரப் பொருளாகியும், உலகத்தில் படைப்பு முதலாகிய ஐந்தொழில்களும் நடைபெறப் பொன்னம்பலத்தில் கூத்தாடும் நடேசப் பெருமானைப் போற்றி வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) பாவகன் = அக்கினி.
கால் = காற்று.
வெளி = ஆகாயம்.
மணிகண்டன் = (நீலகண்ட) உருத்திரன்.

36. திருவொற்றியூர்ப் புராணம்

608. உலகுபுகழ் மாலயனு மும்பர்கோ னுமோவாம
லடிபணிந்தே யுவந்துபோற்றப்
பலகலைதேர் வியாக்கிரனும் பதஞ்சலியும் பணிந் தெழுந்து
பல்லுயிர்க்கும் வரங்கள் கேட்ப
மலைமகளு மிடப்பாலின் மகிழ்ந்துகாண வானவர்க
ளனைவோரும் வணங்கி யேத்தத்
திலகமெனுந் திருச்சிற்றம் பலத்துளாடுஞ் செங்கமலப்
பொற்பாதஞ் சிந்தை செய்வாம். (48)

(இ-பொ.) உலகத்தில் புகழ்ந்து வரும் திருமால், பங்கயன், தேவேந்திரன் இவர்கள் இடைவிடாமல் அடிபணிந்து, உள்ளன்பாகப் போற்றவும், சகல கலாஞான முடைய வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர் இவர்கள் எல்லா உயிர்களுக்கும் வரங்கள் கேட்டு நிற்கவும், சிவகாமவல்லியம்மன் வாமபாகமாகவிருந்து கண்டு மகிழவும், தேவர்களெல்லாம் வணங்கி ஏத்தவும், மேன்மையான திருச்சிற்றம்பலத்துள் தாண்டவமாடும் பொற்பாத கமலங்களைச் சிந்தித்து வருவாம். (எ-று.)

(அ-ப.) உம்பர்கோன் = இந்திரன்
உவந்து = வேண்டி
திலகம் = மேன்மை.

37. திருவாலங்காட்டுப் புராணம்

609. சீரணிந்த மிடற்றிஞெளி காளிநீலச் சேயரிக்க*
ஞெளிபோலத் திகழச் செல்வி
யேரணிந்து புடவிமுதற் றுங்குஞ்சத்திக் கினிமையுற
வலத்தாளை யியல வூன்றி
யாரணிந்த வானமுத லனைத்துந் தாங்க
வமைத்திடத்தா ளுயர்த் ***தனந்த விகற்ப மேவு
நீரணிந்த நடந**விற்று மாலங்காட்டு நின்மலனைச்
சின்மயனை நினைதல் செய்வாம். (49)

(இ-பொ.) சிறந்த காளகண்டமானது காளியின் சிங்கப் பார்வையைப் போன்ற நீலம் பூத்து விளங்கக் கருணை பூண்டு உலகமெல்லாங் காக்கும் சிவகாம சுந்தரிக்கு அதிக இன்பமாக வலக்காலைக் கீழூன்றி, இடக்காலை ஆகாய முதலாக எண்டிசையுந்தாங்கி நிற்ப உயரத்தூக்கிப் பற்பல வகையான நீர்விளையாட்டைப்

---

*. தேவிமார்கள் பலரில் காளியை மட்டும் சிங்கப் பார்வைக்கு ஒப்பாக்கியது ஏனென்றால், இவள் சிங்க வாகனம் உடையவளாகலானும், ஈசன் காளி மர்த்தனன், காளகண்டன் எனப் பேருடையான் ஆகலானுமாம்.

** நீர் விளையாடலாகிய மீன் முதலியவற்றின் நீச்சல் வகைகளைப் போலுமாம்.

*** ஊர்த்துவ நடனம்.

போலுமாம் நடனங்கள் செய்யும் திருவாலங்காட்டுச் சின்மயானந்த நடேசப் பெருமானைத் தியானிப்பாம். (எ-று)

(அ-ப.) புடவி = உலகம்.
விகற்பம் = வகை.

38. அவிநாசிப் புராணம்

610. பூமேவு மணிமாட மகலாத கலைவாணி புணர்பூ மானு
மாமேவு மிருண்மானு மழைமானு மழகுருவம் வளர்கோ மானுங்
காமேவு மியமானு மணுகாத வெளிமன்றிற் கருணை ஞானத்
தேமேவு மொழிமானி னுடனாடும் பேரொளியைச் சிந்தை செய்வாம். (50)

(இ-பொ.) பூமண்டலத்தார் வீடுகள் தோறும் (விலகாது) விலாசமாயிருக்கும் சரஸ்வதி நாயகனாகிய பிரம்ம தேவனும், காரிருள் மேகத்தைப் போலும் அழகிய வடிவினனான திருமாலும், கற்பக மரத்தினையுடைய இந்திரனும், அணுக முடியாத தில்லையம்பலத்தில் கருணைஞானத் தேன் மொழியென்னும் சிவகாம சுந்தரியம்மனுடன் நடனமாடும் பரஞ்சோதியான நடராசப் பெருமானைத் தியானிப்பாம். (எ-று)

(அ-ப.) இயமான் = இந்திரன்
(இருள்) மானும் (மழை) மானும் =
(இருள்) போன்ற(மேகம்) போலும்.

39. திருமுருகன் பூண்டிப் புராணம்

611. வேதவா கமங்கட் கெட்டா விழுப்பொரு ளாயெஞ் ஞான்று
மாதியாய் முதலு நள்ளு மந்தமுங் கடந்து நின்ற
சோதியா மருண்மெய்ஞ் ஞானச் சொரூபவம் பலத்து நின்று
போதினான் முகன்மால் போற்றப் புரிந்தரு ணடனம் போற்றி. (51)

(இ-பொ.) வேதாகமங்களுக் கெட்டாத மேன்மையுடைய பரம்பொருளாய், எந்நாளுமே ஆதிமூலமாய், முதல், நடு, ஈறில்லாமற் கடந்து நின்ற பரஞ்சோதியாய், மெய்ஞ்ஞான அனுபவ அருள் வடிவமாய், பொன்னம்பலத்துள் நின்று, நான்முகனும், திருமாலும் போற்றும் படியாக நடிக்கும் நடனத்தைப் போற்றுவாம். (எ-று)

(அ-ப.) விழு = விழுப்பம்.
ஆதி = சிவன்.
நள் = நடு.
போதி = போதன்.

40. பவானிகூடற் புராணம்

612. படித்துநான் முகத்தோனு முனிவருங்கண்
ணருவிகொடு பணியச் செம்புட்
கொடித்துழா யனுமமரர் கோமானு
மானந்தக் குரவை மூழ்கத்

தடித்துநேர் மருங்குன்மலைக் கொடியுவகை
பூப்பவொளி தழைக்க மன்று
ணடித்துவே தாந்தமுடிக் கெட்டாத
பரஞ்சுடரை நாடல் செய்வாம். (52)

(இ-பொ.) பிரம்மதேவர் முனிபுங்கவர் பலருடன் கூடி வேதாத்தியயனம் செய்து பணியவும், கருடக்கொடி யோனாகிய துளவமாலை யணிந்த விஷ்ணு, தேவர்க்கரசனாகிய இந்திரனுடன் களிப்புக் கடலில் மூழ்கவும், மின்னலைப் போலும் இடையுடையாளாகிய சிவகாம சுந்தரவல்லி கண்டு மகிழவும், தில்லையம்பலத்தில் வேடிக்கையாக நடித்து, வேதாந்த முடி காட்டாத சைவசித்தாந்த பரஞ்சுடராம் நடராச மூர்த்தியை நம்பித் தொழுவாம். (எ-று.)

(அ-ப.) கண்ணருவி = ஆநந்தக் கண்ணீர்
செம்புள் கொடி = கருடக்கொடி.
துழாயன் = துளசிமாலை யணிந்த விஷ்ணு.
குரவை = கடல்.
தடித்து = மின்னல்.
மருங்குல் = இடை.
மலைக்கொடி = மலைமகள்.
உவகை = உவப்பு.

41. கருவூர்ப் புராணம்

613. நீர்தந்த கமலமல ரயனெடுமா
லமரர்தரு நீழல் வைகும்
போர்தந்த குலிசன் முதலியர் பரவப்
புலியுமொரு பணியும் போற்றக்
கார்தந்த குழலிமைய வனிதைமுக
மலர்ந்துவிழி களிப்ப நாளுஞ்
சீர்தந்த கனகமணி மன்றாடும்
பேரொளியைச் சிந்தை செய்வாம். (53)

(இ - பொ.) நீர்வண்ணனாகிய நெடுமால் கமல மலரில் உதிப்பவனாகிய பிரம்மன், கற்பகத் தருநீழல் வீற்றிருக்கும் (போர்க்குரிய வச்சிராயுதனாகிய) இந்திரன், தேவர் முதலானவர்கள் பணிந்து வழிபடவும், பதஞ்சலி வியாக்கிரபாதர் போற்றி நிற்கவும், கருங்குழலையுடைய மலைமகளாகிய சிவகாம சுந்தரி கண்டாநந்திக்கவும், கனக சபா மண்டபத்தில், எந்நாளுமே ஆடி நடிக்கும் நடேச மூர்த்தியை வணங்குவாம். (எ-று)

(அ-ப.) நீர்தந்த நெடுமால் = நீலவண்ணனாகிய திருமால்.
குலிசம் = வச்சிராயுதம்
வனிதை = வனதேவதை.

42. திருமாணிக்குழிப் புராணம்

614. அருவுருவங் கடந்துசுடர் சச்சிதா
னந்தவொளி யகள வாழ்வே
பொருவரிய பரையாதி சிற்சத்தி
வடிவமுமாய்ப் பொலிந்து தோன்றிக்
கருமருவா துயிரனைத்தும் பேரின்ப
சுகோதயத்திற் கலப்ப ஞானத்
திருமலியு மணிமன்று ணடம்புரியுஞ்
சபாபதிதாள் சிந்தை செய்வாம். (54)

(இ-பொ.) ஆன்ம உயிர்களனைத்தும் பிறவிப் பிணியை யணுகாமல், பேரின்ப சுகத்தை அடைந்து உய்வதற்காக ஒப்பில்லாத பரை, சித்தியாதி பஞ்ச சத்தி வடிவமாய், உருவம் அருவம் அருவுருவம் ஆகிய மூன்றுங் கடந்த சச்சிதானந்தப் பெருவாழ்வே சிதம்பரத்தில் தாண்டவஞ் செய்யும். ஆகையால் அத் தாண்டவராயன் தாமரை யடிகளைச் சிந்தித்து வணங்குவாம். (எ-று.)

(அ-ப.) அகளம் = அகலம்.

43. திருச்சுழியற் புராணம்

615. மெய்யனைக்குன்ற வில்லியை மான்மழுக்
கையனைக்கொடுங் காலனைக் காய்ந்தவென்
னையனைத்தில்லை யம்பலக் கூத்தனைச்
செய்யனைச்சிந்தை செய்வதென் செய்கையே. (55)

(இ-பொ.) மெய்ஞ்ஞான தேசிகனாய், மேருவில்லை யுடையவனாய் மானும் மழுவும் ஏந்திய கையனாய், கொடிய எமனைக்(காலாலுதைத்துச்) சினந்த ஐயனாய், தில்லையம்பலக் கூத்தனாய் நின்ற நடராசப் பெருமானைத் தியானிப்பதே என் தொழில். (எ-று)

(அ-ப.) காய்ந்த = சினந்த
செய்யன் = செவ்வண்ணன்.

44. திருக்குற்றாலப் புராணம்

616. வானாகி வளியாகிக் கனலாகிப் புனலாகி வளர்பா ராகி
பூனாகி யுயிராகி யொன்றாகிப் பலவாகி யுலகம் யாவுந்
தானாகிப் புறமாகி யறமாக யறம்வளர்த் தாடாள மேந்தக்
கோனாகி நடம்புரியுஞ் சித்திரப்பொற் பொதுவுடையான் கோலம் போற்றி. (56)

(இ-பொ.) ஆகாயம், காற்று, அனல், நீர், நிலம் ஆய ஐம்பூதத்தாலாகி ஊன் சம்பந்தப்பட்ட உயிர்கள் ஒள்றும் பலவுமாய் நின்ற உலகமெல்லாவற்றிற்கும் உள்ளும் புறம்புமான அறக்கடவுளாய், முப்பத்திரண்டு அறமும் வளர்க்கும் சிவகாம சுந்தரி தாளம் கொடுத்து நிற்க, தாண்டவம் புரிகோமானாய், ஆணிப் பொன்னம்பல மேவும் நடேசனுடைய திருக்கோலத்தைப் போற்றி வருவாம். (எ-று.)

(அ-ப.) வளி = காற்று.

45. திருநெல்வேலிப் புராணம்

617. அருமறையின் முழுமுதலா யகண்டபரி பூரணமா யனந்த கோடிப்
பெருகொளியா யுபநிடதம் பேசரிய சிற்பரமாய்ப் பேரா னந்தத்
தருகருணை வடிவாகித் தாம்பிரசபை யூடுநின்று தக்கோர் போற்றத்
திருநடனம் புரிந்தருளுஞ் செம்பதுமக் குஞ்சிதத்தாள் சிந்தை செய்வாம். (57)

(இ-பொ.) நான்கு வேதங்களின் முழுமுதற் கடவுளாய், அகிலாண்ட பரிபூரணமாய், கோடானு கோடிப் பிரகாசப் பெருக்கமாய், உபநிடதங்களாலும் எடுத்துப் பேசற்கரிய சிற்பரனாய், பேரானந்தத்தைக் கொடுக்கும் தாம்பிர சபை மண்டபத்தின் இடையே நின்று, மேலோர்கள் போற்றி வாழ்த்தும்படியாகத் திருநடனமாடி யருளும் சீர்பாத கமலங்களைத் துதிப்பாம். (எ-று.)

(அ-ப.) அகண்டம் = அகிலாண்டம்.
தாம்பிரம் = செம்பு.
ஊடு = நடுவு.
குஞ்சிதத்தாள் = தூக்கியாடுங்கால்.

---

46. திருபாசூர்ப் புராணம்

618. கார்மன்னு மேனிக் கவின்கண்ண னெண்கண்ணன் மற்றைச்
சீர்மன்னு தேவர் மறையாவுந் தெரிக்க வொண்ணா
வேர்மன்னு சோதி யருண்மேனி கொண்டென்று மன்றுட்
பார்மன்னு மாடல் பயில்பாதம் பணிந்து வாழ்வாம். (58)

(இ-பொ.) நீலமேக சரீரனாகிய மகா விஷ்ணுவும், நான்கு முகப் பிரமனும், மற்றுமுள்ள தேவர்களும், இப்படிப்பட்டவனென்று அறிந்து சொல்ல முடியாத கடவுள், நடராசமூர்த்தங் கொண்டு, எந்நாளுமே சிற்றம்பலத்தில் பார்க்கத்தக்க தாண்டவமாடும் பாதாரவிந்தங்களைப் பணிந்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) அருண்மேனி கொண்டு = நடராச கோலம் பூண்டு,

---

47. மயூராசலப் புராணம்

619. வானந்தங் கடந்திலகு செஞ்சடில மோடுழையு மழுவு மாடத்
தேனந்து மலர்க்கரத்தாற் றொழும்புலியும் பதஞ்சலியுந் தரிசித் தாட
மீனந்த மாங்கண்ணா லுமைநாடக் கனகமன்றில் விளங்கி யென்று
மானந்த நடம்புரியு மொருபொருளி னிருசரணை யகத்துள் வைப்பாம். (59)

(இ-பொ.) வானிடு (இந்திர) வில்லைப்போலும், அழகு வண்ணம் அதிகரித்த சடாமுடி விரிந்தாடவும், மான்மழுவாடவும், தேனிறைந்த மலர்களைக் கொண்டு பூசிக்கும் பதஞ்சலி வியாக்கிர பாத முனிவர்கள் தரிசித்தாடவும், மீனாட்சியம்மனும் சிவகாம சுந்தரி நாடிநோக்கவும், கனக சபா மண்டபத்தில் எழுந்தருளி, என்றுமே ஆநந்த நடனஞ் செய்யும் ஒரு பரம் பொருளாம் நடராசப் பெருமானின் சரணாரவிந்தங்களைத் தியானிப்பாம். (எ-று.)

(அ-ப.) வான் = வான் மீகம் = குங்குமப் பூவுக்கு
மாதலால் அவ்வண்ணச் சடையெனினுமாம்.

வான் = வான்மிகம். (வானடுவில்.)
சடிலம் = சடை
உழை = மான்.
நந்தும் = வளரும்.
மீன் அந்த மாங்கண் = மீனாட்சி.

48. திருப்பெருந்துறைப் புராணம்

620. அரைப்புலித்தோன் மயிருகுப்பக் காற்புலித்தோன்
மயிர்முகிழ்ப்ப வணிபல் பாம்பும்
வரைப்பகன்று குலையவொரு பாம்புநிலை
நின்றுநனி மகிழ மேக்குத்
திரைப்பயமா தலைஇக்கவலக் கிழக்கிளங்கன்
னிகையின் பந்திளைப்ப நீர்சூழ்
தரைப்பயனு மணிமன்று ணடநவிலு
மொருமுதலைச் சரணஞ் சார்வாம். (60)

(இ-பொ.) இடுப்பில் கட்டிய புலித் தோலாடையின் மயிர் உதிரும் படியாக, வியாக்கிரபாத முனிவர் மயிர்க் கூச்செறிந்து கைகுவிக்க, அரவாபரணங்களெல்லாம் எல்லை விட்டகலும்படியாக, பதஞ்சலி மாமுனிவர் ஒரேநிலையாக நின்று ஆநந்திக்க, மேலே அலைமோதும் கங்கை கலங்கிப் புலம்ப வாமபாகத்திருக்குஞ் சிவகாம சுந்தரி இன்பம் அனுபவிக்க, நீரும் நிழலும் நிலமும் போன்ற தெய்வ மணி மன்றத்தில் நடன மாடும் ஒரு முதல்வனும் நடராசப் பெருமான் திருவடிகளையடைவாம். (எ-று.)

(அ-ப.) உகுப்ப = உதிர.
முகிழ்ப்ப = குவிப்ப.
வரைப்பு = எல்லை.
குலைய = கலைய.
மேக்கு = மேல்.
திரைப்பயமாது = கங்கை.
அலைஇக்கவல = கலங்கித்தளும்ப.
திளைப்ப = அனுபவிக்க
நீர்சூழ்தரை = நீர்நிழலான நிலம்

49. காசி ரகசியம்

621. வில்லாருந் திருமேனி முதலானுள் காண்பதன்றி விளங்கம் மேனிக்
கெல்லாரு மாடையா பரணமா யிருப்பவையோ டெல்லாங் காணச்
செல்லாரும் பொழிற்றில்லை மணிமன்று ணடநவிலுந் தேவ தேவன்
சொல்லாருங் குஞ்சிதத்தா ணெஞ்சிதத்தாள் விதமுருகித் துதித்து வாழ்வாம்.

(இ - பொ.) வில்போலும் வளைந்த திருமேனியைச் சிவகாம சுந்தரி கண்டானந்திக்கவும், மற்றெல்லாரும் திருமேனிமேற் பூணும் புலித்தோலாடை

ளையும், அரவாபரணத்தையுமே பதஞ்சலி வியாக்கிர பாதராகத் தரிசிக்கவுமாய் மேகங்கள் தவழாநின்ற பூம்பொழில்சூழ் தில்லையம்பலத்தின்கண் நடிக்கும் நடராசப் பெருமானுடைய அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதத்தை உள்ளபடியே கசிந்துருகி வணங்கி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) முதலாளுள் = முதல்வி.
செல் = மேகம்.

50. திருநாகைக் காரோணப் புராணம்

622. மண்களிக்க நெடுஞ்சடையிற் குறுந்திவலை யெழவழல்கை வயங்கா நிற்கக்
கண்களிக்க வொளிருமுகத் திளங்காறை வரவெளியாய்க் கதிர்மன் றேறி
விண்களிக்க வெழுசுடர்பே ரருண்முகம்பாய் தரமற்றோர் மேனி முற்று
மெண்களிக்க நடநவிலு மிறையவர்குஞ் சிதமலர்த்தா ளிறைஞ்சி வாழ்வாம்.

(இ - பொ.) நெடிய சடாபாரத்தில் விளங்கும் கங்கையினின்றும், மண்ணால் மத்தித்ததோர் சிறுதுளி யெழுந்து கையிலிருந்த மழுவாயுதத்தின்மேல் விழவும், அதைக் கண்ணுக் கழகாக முகத்தில் நிலச்சாந்து போலிட்டுக் கொண்டு, பகிரங்கமாய்த் தில்லையம்பல மேறி வானுலகத்தார் கொண்டாடவும், சூரியாக்கினிகள் தண்ணென்று குளிர் திருவருள் நோக்கம் போலக் காணவும், இடப்பாகத்துள்ள சிவகாம சுந்தரி கண்டு மகிழவும், நாடகஞ்செய் நடராசப் பெருமான் திருவடிகளை வாழ்த்தி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) மண்களிக்க = மண்ணால் மத்தித்த.
இளங்காறை = நித்திலச் சாந்து.

51. திருக்குடந்தைப் புராணம்

623. மன்னுமலப் பகைப்புணர் தீர்த்தான்ம மகடூஉப் புணரும் வலியான் மிக்குத்
துன்னுநிக மாகமஞ்சொல் வலியா லாட்கொளும் வலியாற் றோலா வன்பா
லின்னுநட நவில்வலியா லாடல் வல்லாரெனும் பெயர் பூண்டேம் மன்றுட்
பன்னுகரு ணையின்மருவு மாதேவர் குஞ்சி தத்தாள் பரசி வாழ்வாம். (63)

(இ - பொ.) மலமாயா கன்மப் பகையாந் தொடக்கைப் பற்றறுத்துவிட்டு, ஆன்மாவென்னும் பெண்ணைப் புணர்கிற வல்லவனும், நிறைந்த வேதாகமங்களிற் சொல்லும் பிரமாணப்படியே ஆட்கொள்ளும் ஆண்டவனுமாய், அன்பின் பெருக்கால் மேன்மேலும் நடமாடுகிற வழக்கங் கொண்டு, இன்னமும் ஆடுவார் என்ற பெரும்பேர் (பூண்டு) விளங்க, தில்லையம்பலத்தில் திருவருள் நோக்கத்துடன் எழுந்தருளும் நடராசப் பெருமான் பாதகமலங்களைப் பணிந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) மகடூஉ = மகள்.
துன்னும் = நிறையும்.
தோலாவன்பு = குறையாத அன்பு.
இன்னும் = மேன்மேலுன்.
பரசி = பரவி.
ஏம மன்று = பொன் அம்பலம்.

52. மாயூரப் புராணம்

624. மாடுவா னகைநோக்க நாடுவா னவர்பலரும் வணங்கி வாழ்த்த
வூடுவான் பொழிவதெனப் பாடுவான் புலவர்துதி யுரைப்ப யாமு
நீடுவான் முதலியவை யோடுவான் வளிபொருவல் நீத்தா னந்தங்
கூடுவா னம்பலத்து ளாடுவான் குஞ்சிதத்தாள் குறித்து வாழ்வாம். (64)

(இ - பொ.) பொன்னுலகத்து வாழும், தேவர்கள் பலர் வணங்கி வாழ்த்தவும், ஊடுருவப் பெய்யும் மழையைப்போல் புலவர்கள் தோத்திரம் பாடிக் குறையிரக்கவும், நெடிய ஆகாய முதலா வெண்டிசையும் கால்விட்டோடுகின்ற, (பிராண) வாயுவான மனத்தைப் பற்றற நீக்கி, நாம் ஆநந்த நிலையத்திற் கூடியிருக்கவும், திருவம்பலத்திலாடும் நடராசப் பெருமானுடைய நாடகக் கழலை நம்பி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) மாடு வான் = பொன் உலகம்.
ஊடு வான் = ஊடுருவிய மழை.
பாடுவான் = பாட.
ஓடுவான் = ஓடும்.
கூடுவான் = கூட.
ஆடுவான் = ஆடுபவன்.

53. உறையூர்ப் புராணம்

625. தோற்றமொரு கைத்துடியிற் றிதியபயந் தருகரத்திற் றொலைவோர் செங்கை
யேற்றகவைக் கொழுந்தழலிற் றிரோபவமூன் றியதாளி லெடுத்த தாளின்
மாற்றரிய வருள்வயங்க விருமுனிவர் பணிந்தேத்த மறைகள் வாழ்த்தச்
சாற்றரிய வம்பலத்தி னடநவிலும் பெருமானைச் சார்ந்து வாழ்வாம். (65)

(இ - பொ.) படைப்பை உடுக்கையேந்தும் கையிலும், காப்பை அபய வரதக் கரத்திலும், இறப்பை மழுவாயுதமேந்திய செங்கையிலும், மறப்பைக் கீழூன்றிய பாதத்திலும், அநுக்கிரகம்மேல் தூக்கிய குஞ்சிதத்திலும் ஆக நடந்து வரப் பதஞ்சலி வியாக்கிரபாதர் பணிந்தேத்தவும், வேதங்கள் வாழ்த்துக் கூறவும், ஆணிப் பொன்னம்பலத்தில் நடனமாடும் நடராசப் பெருமானை அடைக்கலம் புகுந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) துடி = உடுக்கை.
திதி = இரட்சிப்பு.
தொலைவு = அழிப்பு.
திரோபவம் = மறப்பு.

54. திருவம்பர்ப் புராணம்

626. அலங்குலமர்க் கரமூன்று முத்தொழிலாற் றிடுமியாமொன் ருற்றே மாயி
னிலங்குபய னென்னையென வெண்ணுபுமற் றிரண்டுநவிற் றிருதா ளுள்ளுங்
கலங்குதறீர்த் தருளொன்றைக் காட்டிடுதல் பூண்டொருகை கவியா நிற்கத்
துலங்குமணி மயமன்று ணின்றுநடம் புரிமுதலைத் தொழுது வாழ்வாம்.

(இ - பொ.) அலங்காரமான மலர்க்கரங்கள் மூன்றும், சிருஷ்டி, திதி, சம்மாரம் ஆய முக்கிரியைகளை நடத்தும்படிக்கும், மற்ற இரு கரங்கள் நாம் ஒன்று சகிக்கத் தாளமாட்டோமாயின் பெரிய தாய் போல வேறொரு கரமானது வந்து ஆதரிக்கவும், கீழூன்றிய சீர்பாதம் இரண்டினுள்ளும், ஒன்று கலக்கந்தீர் மறப்பென்றும், மேல் குஞ்சிதமாகிய மற்றொன்று அநுக்கிர மென்றுங் குறித்துக் காட்டுதல் பூண்டு கவியவுமாக ஆணிப்பொன்னம்பலத்தில் நின்று நடனம் செய்யும் முதல்வனாகிய நடராசப் பெருமானைத் தொழுது வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அலங்கு = அலங்காரம்.
கலங்குதல் தீர்த்து = மறைத்து.

55. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

627. மண்ணாடு தலையெடுப்ப வானாடு பணிந்திறைஞ்ச மாற்றா ரஞ்சும்
புண்ணாடு குலிசனயன் மான்முதற்புத் தேள்பலரும் போற்றி வாழ்த்த
வுண்ணாடு ஞானியருள் ளுவப்பூறக் கட்கடைமற் றுமைமேற் செல்லக்
கண்ணாடு மணிமன்று ணடநவிலும் பெருமானைக் கருதி வாழ்வாம். (67)

(இ - பொ.) தேவர்கள் பணிந்து போற்றவும், (பகைவர் அஞ்சும் இரணப் புண்ணில் ஆடாநின்ற) வச்சிராயுதனாகிய இந்திரன், பிரம்மன், விஷ்ணு, முதலானவர்கள் பலர் வாழ்த்தி வணங்கவும், சிவயோக ஞானவான்கள் உற்று வந்து வேண்டவும், மண்ணுலகத்தார் எல்லாம் தலையெடுத்து நலமாக வாழவும் ஆகத் திருச்சிற்றம்பலத்தின்கண் சிவகாமவல்லியம்மன் மேல் கடைக்கண் பார்வையுண்டாக நாடகம் நடிக்கும் நடராசப் பெருமானை நம்பி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) மண்நாடு = உலகத்தார்.

56. விளத்தொட்டிப் புராணம்

628. பூட்டுவார் சிலையு மம்பும் பொருப்புமா லாகக் கொண்டு
மூட்டுவார் சமழ்ப்ப நக்கு முப்புரம் பொடித்த வள்ளல்
காட்டுவா ரின்றி யெல்லாங் காண்பதற் கியைய மன்று
ளாட்டுவா ரின்றி யாடு மண்ணலுக் கன்பு செய்வாம். (68)

(இ - பொ.) மேருவை வளைந்த வில்லாகவும், திருமாலைப் பூட்டும் பாணமாகவுங்கொண்டு மூட்டிய நாண் நாணும்படியாக முப்புரங்களையும் நகைத்தெரித்துப் பொடி செய்த வள்ளலும், சுட்டிக் காட்டுவாரில்லாமலே எல்லாக் காட்சியுந் தானாக விளங்கிக் காண்பதற்கியைந்த திருச்சிற்றம்பலத்தில், (தன்னை யொருவரும் ஆட்டுவிப்பாரின்றித் தானாகவே உண்ணாடியாடும் அண்ணலுமான நடராசப் பெருமானுக்கு அன்பு பாராட்டுவாம். (எ - று.)

(அ - ப.) வார்சிலை = வளை வில்.
அம்பு = பாணம்.
மூட்டுவார் = நாரி.
சமழ்ப்ப = நாண

நக்கு = நகைத்து.
பொடித்த = (எரித்துப்) பொடிப் படுத்திய.

(இ - பொ.) வில்லும் பாணமும் கையிலிருக்க, ஏன் விடவில்லை யென்றால் வில்லுக்கு மேருவும், பாணத்துக்குத் திருமாலுமாகவாயினும், நாரிக்கென் செய்வதென நாணி நகைத்ததும் ஒன்று. இரண்டாவது, முப்புரத்தசுரர்கள் தமக்குச் சரிசமானமான வீர சூரர்கள் அல்லராகலானும், தாம் இதற்கு முந்தி (பிந்தி) எப்பொழுதும் இத்தகைய பெரும் வில்லுடனும் பாணத்துடனும் போருக்குச் சென்று எவர் மேலும் பிரயோகிக்கவில்லை யாகலானும், கல்லென நகைத்தல் என்பதும் ஒன்று.

57. கோயிலூர்ப் புராணம்

629. தூலவுட லன்னமயஞ் சூக்கவுடல் பிராணன் முதற்றொக்க மூன்றா
வேலவமர் காரணமெய் யானந்த மயமென்பா ரிசைத்த மூன்றுஞ்
சாலவெழு மானந்த மயமாக யாவர்களுந் தடங்கை கூப்பக்
கோலமணி மன்றாடுஞ் சிற்பரனை யற்புதனைக் குறித்து வாழ்வாம். (69)

(இ - பொ.) அன்ன மயமானது தூலதேக மென்றும், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயமாகிய மூன்றும் சூக்கும தேகம் என்றும், ஆநந்த மயமானது காரண தேகமென்றும் முத்தர்களால் மொழியப்பட்ட மேற்படி தூல, சூக்குல, காரண சரீரங்கள் மூன்றிலுமாகச் சம்பந்தப்பட்டு வந்து பிறந்த யாவர்களும், ஆநந்தக் கண்ணீர்விட்டுக் கைகுவித்துத் தொழும்படியாகத் தில்லை மணிமன்றில் நடனமாடும் அற்புத நடராசனைப் போற்றுவாம். (எ - று.)

58. திருக்குறுக்கைப் புராணம்

630. மண்ணாதி யாறாறுக் கப்பாலா யெப்பாலும் வயங்கா நின்ற
விண்ணாதி யெட்டுருவந் தொரு நிறைந்து மறைமுதனூல் விரித்துக் கூறு
மெண்ணாதி கடிந்தடியோ மிதயாதி கவர்ந்து மன்றத்தென் றாமோங்கற்
பெண்ணாதி யெவருமகிழ் தரநடஞ்செய் பெருவாழ்வைப் பேணி வாழ்வாம். (70)

(இ - பொ.) உலகமெங்கும் விளங்கா நின்ற பிருதிவி முதலான முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட தொண்ணூற்றாறு தத்துவமாய், வானாதி எட்டுத் திக்குகள் தோறும் நிறைந்து வேதாகமங்கள் எடுத்து விவரித்துக்கூறும். வாக்கு மனோதீதமாய், தொழும்பராகிய நமது உடல், பொருள், ஆவி மூன்றையுங் கிரகித்துக்கொண்டு, சிவகாமவல்லியம்மன் முதலாய பெண்பாலர்களும் கண்டு மகிழும் படியாகத் தில்லையம்பலத்தில் எந்நாளும் தாண்டவமாடும் பேரின்ப வாழ்வாகிய நடராசப் பெருமானைப் பூசித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) ஆறாறு = முப்பத்தாறு.
எப்பாலும் = உலகமெங்கும்.
வயங்கல் = விளங்கல்.
எட்டுருவம் = எண்டிசை.

மறை முதனூல் = வேதாகமம்.
விரித்து = விவரித்து.
எண்ணாதி = மனோவாக்கு.
இதயாதி = உடல், பொருள், ஆவி.

59. தனியூர்ப் புராணம்

631. காட்டிடு வானுந் தானாய்க் கண்டிடு வானுந் தானா
யூட்டிடு வானுந் தானா யுண்டிடு வானுந் தானாய்
வேட்டிடு வானு மண்ணும் விராயதற் கேற்ப மன்றி
லாட்டிடு வானுந் தானா யாடுவாற் கடிமை செய்வாம். (71)

(இ - பொ.) தானே காட்டப் பட்டவனுமாய், தானே காணப்பட்டவனுமாய், தானே ஊட்டப்பட்டவனுமாய், தானே உண்ணப்பட்டவனுமாய், ஆகாயம் பூமியெங்கும் நிறைந்து, அடியார்கள் வேண்டிடுவதற்கேற்பத் தானே யாளப் பட்டவனுமாய், தில்லையம்பலத்தில் நடனம் ஆடுவானாகிய நடராசனுக்கு அடிமை பூண்டு ஒழுகுவாம். (எ - று)

(அ - ப.) வேட்டிடுவதற்கேற்ப = வேண்டிடுவதற்கேற்ப.
ஆட்டிடுவானும் = ஆண்டிடுவானும்.

60. சூத சங்கிதை

632. பூமலிமென் கடுக்கையணி யொடுபணியும் பிறையொடுதண் புனலுந் தோளி
லேமமுடி யினில்வடிவொற் றுமைநோக்கி லியைந்தாட விமையோர் போற்றத்
தூமறைகள் வாழ்த்தெடுப்பத் துடிமுதல வைந்திடத்தைந் தொழிலுந் தோன்றக்
காமருபொன் மன்றிலன வரதநட நவில்வானைக் கருத்துள் வைப்பாம். (72)

(இ - பொ.) திருமுடியினில் மூன்றும் பிறையும், கங்கையுமாய், தோளில் கொன்றைப் பூமாலையும், அரவா பரணமுமாம் வடிவம் கொண்டு, சிவகாம வல்லியம்மன் எதிரில் கலந்தாடவும், தேவர்கள் துதிக்கவும், வேதாகமங்கள் வாழ்த்தெடுத்துக் கூறவும், துடி முதலான வைந்திடங்களிலும் பஞ்ச கிருத்தியங்கள் நடக்கவுமாக, ஆணிப் பொன்னம்பலத்தில் எந்நாளுமே தாண்டவம் புரியும் நடராசப் பெருமானை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) வடிவொற்று = வடிவங்கொண்டு.
அனவரதம் = நாள்தோறும், என்றும்.

61. குளத்தூர்ப் புராணம்

633. முன்னொருவன் றிருகுசினக் கேழலாகி முதுநிலங்கீண்
டுடலிளைப்ப வரந்தை கூர்ந்து
பன்னெடுநா ணேடியறி வரியசெம்பொற் பதந்தூக்கி
யுமையவளோர் பாங்கர் மேவ

மன்னுமறை யுணர்ந்தபுலிக் காலினானு மாதவத்துப்
பதஞ்சலியு மெளிதிற் காணப்
பொன்னவையி னற்புதக்கூத் தருளினாடும் பூரணனை
யிதயமலர் பொருந்தச் சேர்ப்பாம். (73)

(இ - பொ.) முன்னொரு காலத்தில் மும்மூர்த்திகளுள் ஒருவனான விஷ்ணு, மகா உக்கிரமுடையதோர் வராகமாய்ப் பூமியைக் கிண்டியும் கிளறியும் தோண்டி உடல் மெலிந்திளைத்துத் துன்பமெய்தப் பல நாட்களாகத் தேடியும் அறிதற்கரிய திருவடியைத் தூக்கி நிறுத்தி, சிவகாமசுந்தரி ஒருபக்கங்கண்டு விரும்பவும், வேதாத்தியயனம் அறிந்த மாதவத்தினராம் பதஞ்சலி வியாக்கிரபாதர் அருகிலிருந்து சேவிக்கவுமாக ஆணிப் பொன்னம்பலத்தில் அற்புத நடனம் ஆடியருளும் நடராசப் பெருமானை உள்ளன்போடும் வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) திருகுசினம் = கோபாவேசம்.
கேழல் = பன்றி.
கீண்டு = கீறி, கிழித்து, கிண்டி.
அரந்தை = துன்பம்.
பொன் + அவை = பொன்னம்பலம்

62. வேப்பத்தூரர் திருவிளையாடற் புராணம்

634. திருமேவுஞ் சதுர்வேதச் சீர்மேவும் பரஞ்சோதி
யருண்மேவுந் திருவுருக்கொண் டம்மையுடன் செம்மைபெற
மருமேவும் பெரும்பற்றப் புலியூர்மா மணிமன்றுட்
குருமேவும் படிமேவுங் கூத்தாடுங் கழல்போற்றி. (74)

(இ - பொ) தெய்விகமான நான்கு வேதங்களிலும் கொண்டாடப்பட்ட பரமசிவம், அருளே திருமேனியானதோர், நடராச மூர்த்தங்கொண்டு, சிவகாம சுந்தரியம்மையுடன் சரிசமானமாகச் சிதம்பரத்தின்கண்ணுள்ள ஆணிப்பொன்னம்பலத்தில், கூத்துக் குருநாதனென்று சொல்லும்படியாய்த் தாண்டவமாடும் (அவன்) திருவடிகளுக்கு வணக்கம் (எ - று.)

(அ - ப.) திருமேவும் = தெய்விகமாம்.
சீர்மேவும் = கொண்டாடும்.
அருள்மேவும் = அருளும்.
மருமேவும் = மருவும்.
குரு மேவும்படி மேவும் = குருநாயகமென்று மெச்சும்படி.

635. கதிதரு மறைகள் பாடக் கருணைகண் காட்டித் தென்னன்
றுதிசெய யாருங் காணாச் சோதிநின் றதிர வீசித்
திதமுறு மதுரை யந்தன் சிற்பர வெளியாந் தொல்லைப்
பொதுவினுண் மாறி யாடும் பூங்கழல் போற்றி போற்றி. (75)

(இ - பொ.) நிலைபெற்ற மதுரையின் சிதாகாசமயமா வெள்ளியம்பலத்தில், பிரம்ம விஷ்ணுக்கள் முதலான எவராலுங் கண்டறிதற் கொண்ணாப் பரஞ்சோதியாகிய நடராசமூர்த்தி, தென்னானனாகிய எமனும் பயந்து துதிசெய்யும்படியாக நின்றெதிர்த்து, வேதங்கள் முழங்க நற்கதி தரும் கிருபா நோக்கத்தை

யாவருக்குங் காட்டி நடனமாடும்படியான பூந்தாமரைச் சேவடிகளுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) தென்னன் = தென்திசைப்பாலன் (எமன்).
யாரும் = எவர் ஒருவரும்.
திதம் = நிலை, உறுதி.

இதிகாசம்

63. சிவரகசியம்

636. அருமறை யதனு லளப்பதற் கரிதா யகண்டிதா னந்தநல் வடிவாய்
மருவுபே ரொளியாய் மதிப்பதொன் ருகா மனமணி விளக்கதாய் மயறீர்ந்
துருகுமெய் யன்ப ருளநடம் புரிந்தே யொழிவரு தெங்கணு மேவித்
தெருளதா யருளும் பலத்தினின் ருடுஞ் சேவடி சென்னிசேர்த் திடுவாம். (76)

(இ - பொ.) அரிய வேதங்களாலும், அளவையாதிப் பிரமாணங்களைக் கொண்டும் அளந்தறிதற் கொண்ணுததாய்ப் பரிபூரண ஆனந்த வடிவழகாய், பேரின்பப் பிரகாசமாய், ஒன்ருலும் மதிப்பிடக் கூடாத மாணிக்க விளக்காய், பற்றற்றுருகி வழிபடும் மெய்கண்ட அன்பர்களுடைய உள்ளன்பில், ஆநந்த நடனம் செய்து, எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற திருவருள் மயமாய்த் தில்லையம் பலத்திலும் நின்ருடும் நடராசப் பெருமானுடைய சேவடிகளைச் சிரமேற் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) அகண்டிதம் = பூரணம்.
மனமணி = மனனமணி = மாணிக்கம்.

ஒழியாமல் எம்முள்ளத்து மேவித் தெருளதாய் அருள் என்றும் உரை நிகழும்.

சாத்திரங்கள்

64. சிவஞான சித்தியார்

637. ஆதிநடு வந்தமிலா வளவில் சோதி
யருண்ஞான மூர்த்தியா யகில மீன்ற
மாதினையு மொருபாகத் தடக்கி வானேர்
மகுடசூளா மணியாய் வையம் போற்றப்
பாதிமதி யணிபவளச் சடைக டாழப்
படரொளியம் பலத்தாடும் பரனுர் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம். (77)

(இ - பொ.) ஆதி, நடு, அந்தமில்லாத திருவருட் பரஞ்சோதியாம் ஞானனந்த மூர்த்தியாய், அண்ட கோடிகளைப் பெற்றடுத்த சிவகாம சுந்தரியை வாமபாகங் கொண்டவராய், தேவர்கள் முடிமகுடத்தின் சூடாமணியாய், உலகங் ள் போற்றிவர, பிறைச் சந்திரனை யணியுஞ் செம்பவளம் போன்ற சடைகள்

தாழ்ந்தசையும்படி பொன்னம்பலத்தாடும் நடராசப் பெருமானுடைய திருவடிக் கமலங்களைச் சிரமேற் கொண்டு, சோர்வடையாத பேரன்பு வளர்ந்து வர வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) சூளாமணி = மாணிக்கம் (சூடாமணி.)

65. சிவப்பிரகாசம்

638. ஓங்கொளியா யருண்ஞான மூர்த்தி யாகி
யுலகமெலா மளித்தருளு முமையம்மை காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்று
ணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்புந்தி
யிலுமுற வணங்கிப் போற்றல் செய்வாம். (78)

(இ - பொ.) எல்லா உலகங்களையும் படைத்திடும் சிவகாம சுந்தரியம்மன் கண்டு களிக்கும்படியான பேரருட் பிரகாச மோங்கிய ஞான நடராச வடிவமாய், மணம் வீசும் கொன்றைப் பூமாலையும், நிலவும், கங்கையும், பாம்பும் வளர்ந்த சடாபாரத்தின்மேல் ஒரு சேரவைத்துக் கட்டி, நீங்கற்கரிய பிறவித் தொடர் தானாய் விலகி விடவும், வானவர்கள் வாழ்த்தி வழி படவுமாகத் திருச்சிற்றம்பலத்தில் தாண்டவம் புரியும் திருவடிப் பூம்பங்கயங்களைச் சிரமேற் சூடிக் கைகுவித்து வணங்கிப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) தேம்கமழும் = மணம் வீசும்.

தேங்கமழு—மழுவுந் தேங்கிக் குளிர்ச்சியடையும்படியான கொன்றையும், திங்களும், கங்கையும் எனவுங் கூடும்.

66. சிவதருமோத்தரம்

639. திருமாலும் போதினனுந் தேவருமா முனிவருமே செறிந்து போற்ற
மருவாரும் பொழினிலவுந் தில்லைமணி மன்றுடன் மகிழ்வோன் றன்னை
யுருவாகித் தானுயிர்கட் குருவாக்கி யளித்தடக்கி யுய்யச் செய்யும்
பெருமானை நிருமலனைச் சிவனையடி பணிந்துளத்திற் பேணு வாமே. (79)

(இ - பொ.) மகாவிஷ்ணுவும், பிரம்ம தேவனும், தேவர்களும், முனிவர்களும் சுற்றிப் போற்றும்படியாக, மணம் நிறைந்த பூஞ்சோலைகள் சூழச் சிதம்பரம் ஆணிப் பொன்னம்பலத்தில் சிவகாம சுந்தரியுடன் கூடி மகிழப்பட்ட நடராசனாய், ஆன்மாக்களுக்குத் தானே உருவ முதல் நான்காய், தனுகரணங்களுடன் உண்டாக்கியும், புவன போகங்களை அளித்தும், அடக்கிச் சம்மரித்தும், மறைத்தநுக்கிரகிக்கும் சிவபெருமானாய் நின்ற பரிசுத்த பரன்றன் திருவடிகளைப் பணிந்து தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) போதினன் = பிரம்மன்.
செறிந்து = சுற்றி.

640. சின்மயனைச் சிவனைமல வலிதொலைய விஞ்ஞான கலர்க்குஞ் செப்புஞ்
சொன்மயனைத் துகளிலியைத் துலையிலியைப் புலியரவுஞ் சுரர்க்கொப் பாரும்
பொன்மயனும் புகழவருள் புரிவானை யனைத்துயிரும் பொருந்திப் பேத
மின்மையனைப் பதம்பணிவா ரெணியவர மெணியபடி யெய்து வாரே. (80)

(இ – பொ.) சின்மயாநந்த சிவமாய், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ஆய மூவகை ஆன்மாக்களுக்கும் மல மாயா கன்மங்களை யொழிக்க உபதேசிக்குஞ் சொற்பொருளுணர்ந்தவனாய், யாதொரு குற்றமும் இல்லாத பரிசுத்தனாய், தூரமல்லாத சமீபமானவனாய், பதஞ்சலி வியாக்கிர பாதரும் தில்லைவாழ் அந்தணர்களும், இரணியவன்மனும் புகழ்ந்துபோற்ற, கருணா கடாட்சம் செய்பவனாய், உயிர்களனைத்துங் கலந்திருந்து யாதொரு பேதமுமில்லா திருக்கப்பட்டவனாய், விளங்கும் நடராசப் பெருமான் திருவடிகளைப் பணியப் பட்டவர்களே எண்ணியபடி வரங்களை அடைவார்கள். (எ - று.)

(அ – ப.) துகள் = குற்றம்.
துலை = தூரம்.
சுராக்காப்பார் = தில்லை வாழந்தணர்.
பொன்மயன் = இரணியவன்மன்.

67. சங்கற்ப நிராகரணம்

641. பூமேலான் மாலமரர் போற்றமணி மன்றாடி
யோமேலா னென்னுள்ளத் துண்டு. (81)

(இ - பொ.) பிரம்ம தேவனும், திருமாலும், தேவர்களும் போற்றித் துதிக்கும்படியாகத் திருச் சிற்றம்பலத்தின்கண் நடனம் புரிந்து தாணோ! மேலானவனாகிய நடராசப் பெருமான் அடியேன் உள்ளன்பில் உள்ளார்.(எ-று).

(எப்போழ்துமே இருந்துள்ளார் என்றபடி.)

(அ - ப.) பூமேலான் = பிரம்மன்.
மன்றாடியோ = சபையில் ஆடி-தாணோ

மன்றாடியோ மேலான் என் உள்ளத்து உண்டு என்றதனால் அதற்கு முன்னமேயே உண்டுபோலும். ஏனெனில் (என் உள்ளத்து) அறையிலாடித் தானே (வாணன்) அம்பல மேறியிருக்கவேண்டும் என்ற தைரிய மிகுதியாம்.

68. உருத்திராக்கவி சிட்டம்

642. இயலின் வழிவழுவா தீசனையர்ச் சித்து
முயலு முனிவரர் முன்றோன்றி—யயன்முதலோர்
காணமணி மன்றுணட மாடுங் கடவுளடி
பேணிமற வாமலிருப் பேம். (82)

(இ - பொ.) வைதிக வழியொழுங்கின்படியே பூசனை புரிந்து வரும் பதஞ்சலி வியாக்கிரபாதர்கள் முன்தோன்றி நின்று, பிரம்மன் முதலான

தேவர்கள் கண்டு தரிசிக்கும்படியாக, ஆணிப் பொன்னம்பலத்தில் தாண்டவ மாடும் நடராசப் பெருமான் திருவடிகளைப் போற்றி மறவா திருப்போம். (எ - று.)

(அ - ப.) இயலின் வழிவழுவா = நெறிமுறை தவறாது.
பேணி = போற்றி.

69. பதிபசுபாச விளக்கம்

643. முன்னை நான்மறை முடிவினில் வீற்றிருப் பவனை
யன்னை யத்தனா யுலகெலா மமர்ந்திடு பவனை
யென்னை யாளுடை யிறைவனை யிருண்மலங் கழியப்
பொன்னி னம்பலத் தாடிய புனிதனைத் தொழுவாம். (83)

(இ - பொ.) நான்கு வேதங்களின் முடிவிலும், முன்னமேயே வீற்றிருக்கப் பட்டவனாய், உலகங்கட் கெல்லாந் தந்தை தாய் போலத் தயவுடையவனாய், அடியேனை ஆட்கொள்ளும் ஆண்டவனாய், ஆணிப் பொன்னம்பலத்துளாடும் புனிதனாகிய நடராசப் பெருமானை நமது பாசவிருள் நீங்கும்படியாகப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) அன்னை = அம்மை.
அத்தன் = அச்சன், (அப்பன்.)

நான்மறையின் முன்னையும் முடிவிலுமாக வீற்றிருப்பவன் என்பது பொருள்.

70. ஞானப்பிரகாச வெண்பா

644. உலகளந்த மாலவனு மோதிமமூர் தேவுங்
குலமறையுங் காணாத கோமா—னிலகலுறு
முள்ளக் கைலாயவோங் கன்மிசை நின்றாடும்
வள்ளலுக்கு முண்டோகைம் மாறு. (84)

(இ - பொ.) உலகளந்த பெருமாளாகிய மகாவிஷ்ணுவும், அன்னவாகனனாகிய பிரம்ம தேவனும், தேவகுலத்தவர்களும் கண்டறிதற்கொண்ணா சபாபதியும், விளங்கும்படியான உள்ளமென்னும் திருக்கயிலாயப் பேரம்பலத்தில் தாண்டவமாடும் வள்ளலுமான நடராசப் பிரபுவுக்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறும் உண்டோ? (எ - று.)

(அ - ப) ஓதிமம் = அன்னம்.
குலமறை = சந்ததி.
கோமான் = கொற்றவன்.
இலகல் = விளங்கல்.
கைம்மாறு = பதிலுதவி.

கைம்மாறுண்டென்ற தைரியத்தால் சொன்னது. எங்ஙனமெனில் கைகுவித் தஞ்சலி செய்வதே (கைம்மாறுக்கும்.)

71. சிவஞான தீபம்

645. சீராரக் கரமுதலாங் கலைகள் யாவுஞ்
சிவஞ்சத்தி முதலியதத் துவங்கள் யாவு
மேராருஞ் சராசரமா முயிரி யாவு
மெண்ணரிய புவனமு மற்றியாவு மெல்லா
மாராத கருணையினா லாக்கி நோக்கி
யழித்திரவி விழிநறையு மலரும் போலப்
பேராம லுயிர்க்குயிராய் மன்று ளாடும்
பெருமானை யவனருளாற் பேணு வாமே. (85)

(இ - பொ.) அக்கர விலக்கண முதலா அவத்தைப் பிரயோக மீறான அறுபத்து நான்கு கலை ஞானங்கள் எல்லாமுமாய், சுத்த வித்தை முதலாய சிவதத்துவங்கள் யாவுமாய் யாண்டும் எக்காலத்துமுமாய், ஆதாரமான கிருபா கடாட்சத்தினால் சரம் அசரமாகச் சொல்லும் எல்லா அஃறிணை உயிர்களையும் எண்ண முடியாத சர்வாண்டங்களின் எல்லா உயர் திணைகளையும் உண்டாக்கிக் கண்ணோக்கிப் பிறப்பழித் தொழித்து, கண்ணுங் கதிரவனும் பூவும் மணமும் போலக் கலந்து, உயிர்க்குயிரான அத்துவித முத்தியாய், தெய்வ மணிமாடத்துள் தாண்டவமாடும். நடராசப் பெருமானை யவனருளாலே யவன்ருள் வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) யாவும் எல்லாம் = யாண்டும் எக்காலத்தும்.
நறை = மணம்.

72. மகாராஜா துறவு

646. திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத் திருந்திழை யுமையுளங் களிப்பப்
பொங்கரா வொடுநற் புலிமுனிவர் கண்மால் போதயன மமரர்கள் போற்றத்
துங்கநான் மறைகடு தித்திட வைந்து தொழில்விரிந் திடப்பொது வதனிற்
செங்கழ லதிர நடஞ்செயும் பொருளைத் தினம்பணிந் திடரொழித் திடுவாம். (86)

(இ - பொ) சந்திரனை யணிந்த சடாமுடியினின்றும் கங்கை நீர் தெளிக்கவும், சிவகாம சுந்தரி வல்லியம்மன் களிக்கவும், பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள், பிரம்ம, விஷ்ணுக்கள், தேவர் முதலானவர்கள் போற்றிப் பணியவும், நால் வேதங்கள் கொண்டாடவும், ஐந்தொழில் நடந்தேறி வரவுமாகத் தில்லையம்பலத்தில் செந்தாமரைப் பாதச் சிலம்புகள் அதிரும்படியாகத் தாண்டவமாடும் நடராசப் பெருமானை நாள்தோறும் வணங்கி, நமது பிறவித் துன்பத்தை ஒழித்துக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) துளிப்ப = துளித் துளியாகச் சொரிய.
திருந்திழை = திருத்தமாகச் செய்யப்பட அணிகலன்.

73. பஞ்சாதிகார விளக்கம்

647. பெருங்கருணைக் கடறதும்பித் திருவுருவந் தரித்துப்பே
சருமாசான் மறைந்த வாருயிரை யெடுத்தே
யிரும்புகழ்சேர் விஞ்ஞான கலராதி மூவரெனத்
தொகுத்துத் தனுவாதி யீந்துமும் மாயை யினில்

வருஞ்சகலர்க் கிருவினையொப் பாக்கிமல பாகம்
வருவித்துத் திருவடிக்கீழ் வைப்பான் மன்றதனு
ளருங்கருணை யைந்தொழிற்கூத் தாடுமிறை யடிகளக
கமலத் தொளிவளரக் கருதியிருத் திடுவாம். (87)

(இ - பொ.) திருவருட் பெருங்கருணைக்கடல் நிறைந்ததோர் திருமேனி கொண்டு, பாசபந்தத்தில் அழுந்தி மறைந்துகிடந்த ஆன்மாக்களை விஞ்ஞான கலர், பிரளயா கலர், சகலர் என மூன்றுவகைத் தொகைப்படுத்தி, தனுகரண புவன போகங்களைக் கொடுத்து, மும்மலத்தால் வருந்தி வருமிம் மூவர் முதலான யாவர்களுக்கும், இருவினை யொப்பு மலபரிபாகம் வரச் செய்து, திருவடியின்கீழ் வைத்தாளும் பொருட்டாகத் தில்லைக் கனக சபையில் தாண்டவமாடும், ஐந்தொழில் உடையவராகிய நடராசப் பெருமான் திருவடிகளை மகிழ்ச்சியுடன் வணங்கித் தோத்தரிப்பாம். (எ - று.)

(அ - ப.) ததும்பல் = நிறைதல்.
தொகுத்து = தொகையெடுத்து.
சகலர்க்கு = (இங்கு) சகலமானவர்.
வைப்பான் = வைக்கும் பொருட்டு.

74. வைராக்கிய சதக உரைக் காப்பு

648. அம்பல வாண னடியிணை தொழுவார்க்
கின்பமும் வீடு மெளிதினில் வருமே. (88)

(இ - பொ.) தில்லை அம்பலவாணனுகிய நடராசப் பெருமான் திருவடி இணைகளை வணங்கி வழிபடுவார்களுக்கெல்லாம் பேரின்பமும், முத்திசாம்பிராச்சியமும் மிக எளிதில் வந்து சித்திக்கும். (எ - று.)

75. சிவபுண்ணியத் தெளிவு

649. உலசினு முயிரினு மொன்றி நின்றருள்
குலவிய வொளியுயிர் குறிக்க வைந்தொழி
லிலகிய மன்றினு ளெழினடஞ் செய்வோன்
வலமிகு மலரடி வழுத்து வாமரோ. (89)

(இ - பொ.) உலகத்திலுள்ள சர்வ சீவான்மாக்களிலும் கலந்திருந்து, திருவருள் துணைப்பட்ட பேரொளியும், பஞ்ச கிருத்தியங்களிலும் விளங்கிய உயிர்ப்பைக் குறிப்பிப்பதற்காகத் தில்லையம்பலத்துள் ஆநந்தத் தாண்டவம் செய்பவனுமான நடராச மூர்த்தியின், மிகவும் வல்லபம் பொருந்திய பாதாம்புயங்களை வாழ்த்தி வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அரோ என்பது அசை. அரோ! வென வாழ்த்துவாம் என்பதற்கும் உரைபாட்டாம்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

ஐந்தாம் பகுதி

சிவகாமியம்மை வணக்கம்

1. உபதேச காண்டம்

650. உலகு மேருவு மண்டமு முறைமுறை யுதவி
யலகில் பல்லுயி ரளித்தவைக் களன்வயி னருளி
நிலவு வெண்பிறைச் சடிலமற் றோர்புடை நின்றாண்
மலர்சி லம்படி வழுத்துபு கருத்துற மதிப்பாம். (1)

(இ - பொ.) உலகங்களையும், மேருவையும், அண்டகோடிகளையும் வழி வழியாகத் தந்து, அவைகளில் வசிக்கும் அளவிறந்த பல சீவராசிகளை ஈன்று, அச்சீவராசிகளுக்கு (வினையின்.) அளவாகப் போகங்களைக் கொடுத்து, நிலவொளி பரப்பும் இளம்பிறையை அணிந்த சடைமுடியையுடைய சிவபிரானது இடப் பாகத்தில் வீற்றிருக்கும் உமாதேவியாரது சிலம்பணிந்த மலர்போலுந் திருவடி களைத் துதித்து, மனத்தில் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) புடை = பக்கம்.
வழுத்துபு = வாழ்த்தி.

2. கோயிற் புராணம்

651. மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி
யொன்றியமங் கலநாணி னொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ் சிவகாம சுந்தரித
ணின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி. (2)

(இ - பொ.) தெய்வசபையின் மாணிக்க விளக்கொளி போன்ற சிவகாம சுந்தரியின் முகாரவிந்த நகைப்புக்கு வணக்கம். சுபமங்களகரமான பெற்றாலிக்கு வணக்கம். உலகத்தோரும், தேவர்களும் பத்திமை செலுத்தித் தொழ, அன்னவர் கட்குத் திருவருள் சுரந்தூட்டும், அலங்காரமாக நின்ற திருக்கோலத்திற்கு வணக்கம். திருவடி நீழலுக்கும் வணக்கம். (எ - று.)

(அ - ப.) உம்பர் = தேவர்.
திருநிலை = திருக்கோலம்.

3. தேவாங்க புராணம்

652. திவளமலை நெடுந்தரங்கத் தெய்வநதி
மதிகுலவி செக்கர் வேணி
துவளமலை வரியபதஞ் சலியுமொரு
புலியுமெதிர் தொழுது நிற்பத்

தவளமலை யில்லியெனுந் தொல்லையருள்
டில்லைமணிச் சபையி லாடும்
பவளமலை யிடத்துவளர் பசுங்கிளிபொற்
பதநளினம் பணிதல் செய்வாம். (3)

(இ - பொ.) விளங்கும் ஒலியுள்ள பெரிய அலைகளும் தெய்வத் தன்மையும் உள்ள கங்கையும், சந்திரனும் பொருந்திய சிவந்த சடையானது, அசையும்படி மயக்கமில்லாத பதஞ்சலி முனிவரும், ஒப்பில்லாத வியாக்கிரபாதரும், திருவோலக்கத்தினிடத்து வணங்கி நிற்க, வெள்ளிய கயிலை மலையை வசிக்கும் வீடாகவுடையவரென்று அறிவுடையவர் சொல்லுகின்ற பழைமையான கருணைக்கிடமான சிதம்பரம் என்னும் புனித தலத்தில் இரத்தின மன்றின்கண் ஆநந்தத் திருநடனம் செய்கின்ற பவளமலை போலுந் திருமேனியையுடைய நடராசப் பெருமானது வாமபாகத்திலெழுந்தருளிய பசுமை நிறமுள்ள கிளிபோன்ற சிவகாமவல்லியம்மையாரது அழகிய பாத தாமரைகளை வணங்குவோம். (எ - று.)

(அ - ப.) திவள் = திகழ்.
தரங்கம் = அலை.
செக்கர் = சிவப்பு.
நளினம் = தாமரை.

4. சேக்கிழார் நாயனார் புராணம்

653. பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. (4)

(இ - பொ.) எங்கெங்கும் பரவி எழுந்து வந்த சமணமத முதலாகிய புறச்சமயங்களின் இருள் நீங்கவும், உச்சியிற் பழுத்த வைதிக சைவசித்தாந்த நன்னெறியின் திருநீற்று ஒளி விளங்கவும், பிறவித் துன்பம் கெட்டொழியவுமாகச் சிகாழி—சம்பந்தம் பெருமானுக்குத் திருமுலையினின்றுஞ் சுரந்த ஞானப்பாலை அமுது செய்யும்படி கொடுத்த சிவகாம சுந்தரி வல்லியம்மையின் பாதாம்புயங்கட்கு வணக்கம். (எ - று.)

5. திருவாதவூரர் புராணம்

654. ஆடக சிதம்பர வணங்குமை யணங்கிலா
நாடக னனந்தசுக நன்குபுனை பங்கினா
ளேடக மணம்பொருவ வெங்கணு மிசைந்துளாள்
பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம். (5)

(இ - பொ.) சிதம்பரம்—பொன்னம்பலத்தின் உமாமகேசுவரியும், நோயில்லாமல் நாடகம் நடிக்கும் முடிவிலாச் சுகானந்தனாகிய நடராச மூர்த்தி(யை) நன்கு மருவிய வாமபாகத்தினளும், பூவும் மணமும் போல எங்கும் எல்லா உயிர்களிடமும் பெருங்கருணையுடையவளுமான சிவகாம சுந்தரியின் பாடக மணிந்த பாத தாமரைகளைத் தோத்திரிப்பாம். (எ - று.)

(அ - ப.) ஆடகம் = பொன்.
அணங்குமை = உமாமகேசுவரி.
அணங்கு = நோய்.
ஏடகம் = பூவிதழ்.

அணங்கில் (ஆ-நாடகன்) = தேவர்க்காடும் அழகிய கூத்துடையான்.

ஏட்டுப் பிரதியில் சொன்னமாதிரியே யெம்முள்ளத்தும் கலந்துள்ளாள் என்பதும் ஓர் உரை.

(மதுரை) திருவேங்கடத்திலிருந்து பல தலங்களெங்கும் பிரசன்னமானவள் என்றும் உரை.

6. சிதம்பர புராணம்

655. இருபதமுந் துடியிடையுந் திகழுடையுந்
தனதடமு மியற்பொற் பூணுங்
கருவிழியுஞ் செவ்வாயும் வெண்ணகையும்
பசுந்தோளுங் கழு நீர்க்கையும்
பொருவருமங் கலநாணுங் கந்தரமும்
புரிகுழலும் புனிதன் கண்ணும்
திருவருளு முலாவுமெழிற் சிவகாம
சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம். (6)

(இ - பொ.) இரண்டு திருவடிகளையும், உடுக்கை போன்ற இடையையும், விளங்குகின்ற பீதாம்பரத்தையும், இயல்பாகப் பொருந்திய பொன்போன்ற தேமல் படரப் பெற்ற பெருத்த தனங்களையும், கரிய கண்களையும், சிவந்த வாயையும், வெள்ளிய பற்களையும், பசிய தோள்களையும், செங்கழுநீர் மலர்பிடித்த திருக்கரத்தையும், ஒப்பில்லாத திருமங்கல்ய நாண் தொங்குகின்ற திருக்கண்டத்தையும், முறுக்குப் பொருந்திய கூந்தலையும், பரிசுத்தராகிய நடேசப் பெருமானது திருநோக்கமுந் திருவருளும் பொருந்துகின்ற அழகையுமுடைய சிவகாமியம்மையாருடைய திருவடிகளைச் சிரமேற் சூட்டிக்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) மங்கலநாண் = மாங்கல்யம்.
கந்தரம் = கண்டம் (கழுத்து).

7. பிரமோத்தர காண்டம்

656. பூரணியைத் தனுகரண புவனபோ
கங்கடமைப் புரக்கு மாயா
காரணியைப் பசுபாச மலமகல
மெய்ஞ்ஞானக் கண்ணிற் றேன்று
மாரணியைப் பரமசிவ னானந்த
நடத்தின் வைத்தவருட் கண்ணாளைச்
சீரணிகொள் பொழிற்றில்லைச் சிவகாம
சுந்தரியைச் சிந்தை செய்வாம். (7)

(இ - பொ.) பரிபூரணியாய், தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து இரட்சிக்கும் காரண முதல்வியாய், ஆன்மாக்களின் பாசபந்தம் நீங்கும்படியாக, மெய்ஞ்ஞானங் கொடுத்துத் தோன்றும் ஆரணியாய், நடராசப் பெருமானுடைய ஆநந்தத் தாண்டவத்தின் மேல் கண் வைத்த கருணை கடாட்சியாய், (சிங்கார வனங்கள் நிறைந்த சிதம்பரம்) சிற்றம்பலத்தில் வரும் சிவகாமசுந்தரி யம்மனைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) புரக்கும் = காத்திரட்சிக்கும்.
சீரணிகொள் பொழில் = சிங்காரவனம்.

8. திருக்கூவப் புராணம்

657. வன்னிகரம் வளர்வுறநற் பணிபயில
வருவார்க்குச் சுவர்க்க மீந்து
பன்னுநுதன் மதியடியார் பரிபுரங்கொண்
டெழிற்கனி மெல்லிதழி யாரப்
பொன்னனுகு மலரவைசேர்ந் திசைகௌரி
மறையோதி புரிந்து தாழத்
தன்னையிடத் திருத்துபரம் பொருளைநிக
ருமையம்மை சரணிற் றாழ்வாம். (8)

(இ - பொ.) கரத்தில் அக்கினித் தீ வளர்ந்தெரியவும், திருப்பணி கைங்கரியம் புரியவருந் தொண்டர்களுக்குச் சுவர்க்காதிபத்தியம் கொடுத்தும், பிறைச் சந்திரன் போன்ற நெற்றியினையும், சிலம்பணிந்த கால்களையுமுடைய கௌரியம்மை அழகிய கனிகளையுடைய கொன்றையினது பொன் போன்ற மலர்களைக் கொண்டு அருச்சித்து வேதம் ஓதி விரும்பி வணங்கவும், தன்னை இடப்பாகத்திற் கொண்டு விளங்கும் அம்பலக் கூத்தனுக்கு ஒப்பான சிவகாமியம்மையின் திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

9. நல்லூர்ப் புராணம்

658. பொன்னாரு மணிமார்பப் புயல்வண்ணன்
றனக்கிளைய பூவை தன்னைக்
கன்னாரி யாலசைத்துக் கருதார்முப்
புரமெரித்த கடவுள் பாகத்
தெந்நாளு மிருந்தாளை யிமையமலை
மருந்தாளை யெம்மை யீன்று
பன்னாளு மருள்புரியுஞ் சிவகாம

சுந்தரியைப் பணிதல் செய்வாம். (9)

(இ - பொ.) இலக்குமியை மார்பினிடமாகத் தரித்த நீலமேக சரீரனும் விஷ்ணுவுக்குத் தங்கையாய், மேரு வில்லுக்கு நாணில்லையே யென்று அதைக் கவனியாமல், முப்புரங்களையும் நகைத்தெரித்த பரமசிவன் வாமபாகத்தில் எந்நாளும் வீற்றிருந்தவளாய், இமயமலையிற் பிறந்த அமிர்தவல்லியாய், விளங்கி,

சிறியேமாகிய நம்மையெல்லாம் பெற்றெடுத்து எந்நாளும் அருள் நோக்கம் புரியும் சிவகாம சுந்தரியைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) பொன்னார் = இலக்குமி.
நாரி = நாண்.

10. விநாயக புராணம்

659. சீதளசந் திரகலையுந் தினகரன்வெம்
மையுங்கனலிற் செறிந்த தேசும்
போதளவு நறுமணமும் போலிறைவன்
குணமான புனிதை வேறாய்க்
கோதளவு முயிர்சிவத்தைக் காமுறவே
சிவகாமங் கொண்டு நின்ற
காதளவுங் கருந்தடங்கட் சிவகாம
சுந்தரியைக் கருத்துள் வைப்பாம். (10)

(இ - பொ.) சந்திரனும் குளிர்ச்சியும், சூரியனும் வெப்பமும், அக்கினியும் செம்மையும், பூவும் மணமும் போல, நடராசப் பெருமானுக்குத் தக்க மதிமுகமும், விரகதாபம் செய்ய முலையுமுடைய குணவதியாய், பிறவிக் குற்றத்தை அடையும் ஆன்மாக்களின் முத்தி நன்மையைக் கருதியே பெருங்காதல் கொண்ட காதளவு மோடுங் கரும்புருவக் கண்ணாளாயுள்ள சிவகாமசுந்தரியம்மனைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) சிவம் = முத்தி.
சிவகாமம் = பேரன்பு.

11. திருவானைக்காப் புராணம்

660. இளங்குழவிப் பிணிக்கீன்ற தாய்மருந்து
நுகர்வது போலிருளின் மாண்ட
களங்குலவு மலமுயிர்கட் கொழியவரு
ணடங்காணுங் கடன்மீக் கொண்டு
வளங்குலவு தனதுபெருங் கற்புமொரு
கணவரிறை மாண்புந் தோன்ற
விளங்குமிர ணியமின்றி னின்றருளு
மணிவிளக்கை விளம்பி வாழ்வாம். (11)

(இ - பொ.) இளங்குழந்தையின் நோய் நீங்கத் தாய் மருந்துகள் புசிப்பது போலவும், அஞ்ஞான விருளில் கட்டுப் பட்ட ஆன்மாக்களின் மலமாயாகன்மம் ஒழிவற்காக, ஆநந்தத்தாண்டவம் தரிசிக்கும்படியான ஓர் கடமையை மேலாகக் கொண்டு, சொற்றிறம்பாத தன் பெருங்கற்பும், தலைவனாகிய நடராசப் பெருமான் பெருமையும் தெரியும்படியாக விளங்கிய பொன்னம்பலத்தில் எழுந்தருளும் மாணிக்க விளக்காகிய சிவகாம வல்லியம்மனைப் போற்றி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) நுகர்வது = புசிப்பது.
மாண்பு = மாட்சிமை.
இரணியம் = பொன்.

---

12. உத்தரகோச மங்கைப் புராணம்

661. உலகமுழு தும்பயந்துங் கன்னிமைநீங்
காதிறைபா லுவந்து வைகி
யலகிலுயிர்க் கருள்சுரந்து பேரறமெண்
ணான்கியற்றி யனைத்துங் காக்குந்
திலகநுதற் செங்கனிவாய்ச் சிவகாம
சுந்தரியாந் தேனைச் செம்பொன்
மலையரையன் குலவிளக்கை யிருடீர
வெமதகத்துள் வைத்து வாழ்வாம். (12)

(இ - பொ.) சர்வாண்டங்களைப் படைத்தும் கன்னிப் பருவம் நீங்காது, நடராசப் பெருமானிடம் வாமபாகம் பெற்றும் சர்வான்மாக்களுக்கு மேலும் திருவருள் நோக்கங் கொண்டு, முப்பத்திரண்டு தருமஞ் செய்து காப்பாற்றியும், வரும் நெற்றிப்பொட்டிட்ட சிவகாம சுந்தரியாம் செங்கனி வாய்த் தேனான செம்பொன் இமய வரயன் குலவிளக்கை நமது அஞ்ஞான விருள் நீங்கும்படியாக உள்ளத்துள் வைத்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) கன்னிமை = குமரிப் பருவம்.
எண் + நான்கு = முப்பத்திரண்டு.

---

13. கடம்பர் கோயிற் புராணம்

662. வளைத்த தெண்டிரை யுடுத்தபூ விடத்தருண் மகற்கா
வளித்த தாய்முனம் புரிதொழின் மீட்டுமாற் றுதல்போற்
றளித்த வாருயிர்ப் பொருட்டரு ணடந்தனி காணாத்
திளைத்தெக் காலமுங் கண்டரு டேவிதா டொழுவாம். (13)

(இ - பொ.) கடலால் வளைந்து சூழப்பட்ட உலகத்தின் கண்ணே பிள்ளை யில்லாக் குறைக்காக உருகிய ஒருத்தி (பூர்வம் பெரியோர்களால் அநுட்டித்துக் கோரிவந்த) விரதம் முதலானவற்றை இன்றும் நாளைக்கும் அனுட்டானத்தின் கீழ்க்கொண்டு வருவது போலப் பரந்த ஆன்மாக்களின் பொருட்டாகவே, தில்லை யம்பலத்தில் நடராச மூர்த்தியின் தாண்டவத்தைக் கண்டு மகிழும் சிவகாம சுந்தரியின் திருவடிகளை எக்காலமுந் துதிப்பாம். (எ-று.)

(அ - ப.) தெண்டிரை = தெளிந்த அலை வீசும் கடல்.
முனம் புரிதொழில் = பழைய அநுட்டானம்.
மீட்டும் = இன்றும் நாளைக்கும்.
தளித்த = தழைந்த.
திளைத்து = அனுபவித்து.

14. சிவராத்திரி புராணம்

663. கடிகமழ்கட் கமலமலர்க் கட்டிகிரிக்
கரனொரு சூகரம தாகிப்
படியிடந்து மறிவரிய பதப்பவள
மலைமருங்கிற் படரும் பச்சைக்
கொடிகொடிய பவக்கடலிற் குளித்தழுந்தா
தின்பமுத்தி கூடும் வண்ண
மடியவருக் கருள்புரியுஞ் சிவகாமி
யம்மைபதத் தன்பு கூர்வாம். (14)

(இ - பொ.) சுகந்த—பரிமள செந்தாமரைக் கண்ணனாகிய சக்கராயுதன் வராகாவதாரங் கொண்டு, பூமிமுழுவதும் தோண்டித் தேடியுங் காண்டற்கரிய திருவடிகளை யுடையனாம் நடராசமூர்த்தி யென்னும் சிவந்த பவள மலையின் மேற் பக்கமாய்ப் படர்ந்தோடும் பசுங் கொடியாய், அடியார்களெல்லாம் கொடுமையான பிறவிப் பெருங் கடலில் மூழ்கியழுந்தாமல், பேரின்ப முத்தியைக் கூடியடையும் வண்ணம் கருணாகடாட்சம் செய்யா நின்ற சிவகாம சுந்தரியின் பாதாரவிந்தங் கட்கு அன்பு செலுத்துவாம். (எ-று.)

(அ - ப.) கடிகமழ் கண் = சுகந்த பரிமளம்.
கமலமலர்க் கண் = செந்தாமரைக் கண்ணன்.
திகிரிகரன் = சக்கரபாணி.
சூகரம் = பன்றி.
இடந்து = தோண்டி.

15. புலியூர்ப் புராணம்

664. ஒருமுகமு மிருகுழையு முக்கண்ணு
நாற்புயமு மொளி சேர்பூணு
முருவழகு மைந்தொழிலு முயராறு
முகன்றனக்கன் றுறுபா லூட்ட
வருமலைபோ லெழுதனமும் வடிவெட்டு
மொன்பானு மகிழ்ந்து பெம்மான்
றிருவுறுப்பாற் பத்துருவஞ் செறிந்தசிவ
காமிபதஞ் சிரமேற் கொள்வாம். (15)

(இ - பொ.) முகாரவிந்தம் ஒன்றும், கவசகுண்டலம் இரண்டும், கண் மூன்றும், நான்கு புஜமும், திருவாபரண மணிந்த வடிவழகும், ஐந்தொழிலும், சுப்ரமணியர் அவதாரமான திருஞான சம்பந்தப் பெருமானுக்கு முன்னொரு நாள் திருஞானப் பாலூட்ட வரும் மலைபோலெழுந்த தன பாரமும் கொண்டு, எட்டுத்திக்கும் நவகண்ட பூமியும் பரிபூரணமாய் நிறைந்து, நடராச மூர்த்தியின் வாம பாகமாய்ப் பத்து மாற்றுத் தங்கம் போல் பழுத்த சிவகாம சுந்தரியின் பாதார விந்தத்தைச் சிரத்தின் மேல் சூடுவாம். (எ-று.)

(அ-ப.) ஒளிசேர் பூண் = திருவாபரணம்.
உருவழகு = வடிவழகு.
தனக்கு = தானான சம்பந்தற்கு.
உறுபால் = ஞானப்பால்.
வடிவெட்டு = எண்டிசை.
ஒன்பான் = நவகண்ட பூமி.
பத்துருவம் = பத்துமாற்றுத்தங்கம்.
(பற்றுதற்கும்.)

16. திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

665. சொற்பொருளு முடலுயிருஞ் சுடரொளியும்
விரைமலருஞ் சுவையும் பாலு
நிற்குநிறை வெனக்கலந்து சிவத்திலங்
நியமாகி நிலவு மண்டம்
பற்பலவும் படைத்தளிக்குந் தாயாகி
வினைச்சமமாம் பருவந் தோன்றுஞ்
சிற்பரையைத் தில்லைநகர்ச் சிவகாம
சவுந்தரியைச் சிந்தை சேர்ப்பாம். (16)

(இ - பொ.) சொல்லும் பொருளுமாய், உடலும் உயிருமாய், விளக்கும் வெளிச்சமுமாய், பூவும் மணமுமாய், பாலும் சுவையுமாய் நின்ற தன்மையே போல நடராச மூர்த்தியுடன் கலந்திருந்து, வேருகத் தோற்றும் பிரபஞ்சங்கள் பலவற்றை உண்டாக்கிப் பாதுகாக்கும் அன்னையாய், இருவினை யொப்பு—மலபரிபாகமாம் பரிபக்குவத்தில் வந்து காட்சி தரும் சிற்பரையான தில்லையம்பலம் சிவகாம சவுந்தரியைத் தியானிப்பாம். (எ-று.)

(அ-ப.) வினைச்சமம் = இருவினையொப்பு
பருவம் = பரிபக்குவம்.

17. திருவோத்தூர்ப் புராணம்

666. கருணைபொழி விழிமலரு மதிமுகமுங்
குறுமூரல் கதித்த வாயு
மருணவெயில் பொழியுமணி மங்கலநா
ணெளிர்மிடறு மாரம் பூண்ட
தருணமுகிழ் முலையுமிடு கிடையுமிளந்
தளிரடியுந் தயங்கக் காட்டித்
தெருண்மலிய வெமதுளம்வாழ் சிவகாம
சுந்தரியைச் சிந்தித் துய்வாம். (17)

(இ-பொ.) கருணை மழை பொழிகின்ற மலர்க் கண்களும், சந்திர வதனமும், புன்னகை மிகுந்த செவ்வாயும், சூரியப் பிரகாசம் போல் துலங்கும் திருமாங்கல்யத் தாரணக் கழுத்தும், (முத்து) இரத்தினரம் பூண்ட பக்குவமான இளமுலையும்,

சிறிய இடையும், பஞ்சின் மெல்லடியும் விளங்கக் காண்பித்து, அடியேமுடைய உள்ளன்பில் தேசோமயானந்தமாக விளங்கிய சிவகாம சுந்தரியம்மனைத் தியானிப்பாம். (எ–று.)

(அ-ப.) மதிமுகம் = சந்திரவதனம்.
குறுமூரல் = புன்னகை.
கதித்த = மிகுந்த.
மிடறு = கழுத்து.
இடுகு இடை = ஒடுங்கிய சிற்றிடை.
இளந்தளிரடி = பஞ்சின் மெல்லடி.

18. திருப்பாகூர்ப் புராணம்

667. துன்னு முற்பவம் பாறிட வுயிர்க்குமெய்ச் சுடரைப்
பொன்னி னம்பலந் தன்னிடைப் பரிவொடும் போற்றி
மன்னு மாநடங் காணுபு வணங்கியே வாழு
மன்னை தன்னடி சென்னிவைத் துன்னுது மன்பால். (18)

(இ-பொ.) ஆன்மாக்களுக்குத் தொடர்ந்து வரும் பிறவி ஒழிந்தோடி நிவாரண மாவதற்காகப் பொன்னம்பலத்தின்கண் நடராச மூர்த்திமேல் அன்பு செலுத்தி அவ்விறைவன் தாண்டவத்தைக்கண்குளிரக் கண்டு வாழும் சிவகாம சுந்தரியின் பாதார விந்தத்தைச் சிரமேல் வைத்து முடித்துத் தியானிப்பாம். (எ–று.)

(அ-ப.) துன்னும் = தொடரும்.
காணுபு = கண்டு.
உன்னுதும் = நினைப்போம், தியானிப்போம்.

19. மயூராசலப் புராணம்

668. மலைவல்லி யம்பலவன் வாமவல்லி
யகிலாண்ட வல்லி யென்றுந்
தலைவல்லி வேணுபுர மகற்களிக்கப்
பால்பெருகுஞ் சாந்தந் தோய்ந்த
முலைவல்லி யடியவரைக் கருக்குழியா
ழாதெடுத்து முத்தி நல்குங்
கலைவல்லி சிவகாம வல்லிபதஞ்
சொல்லினிலை கண்டு வாழ்வாம். (19)

(இ-பொ.) பருவதவர்த்தினியும், அம்பல வாணன் இடப்பாகமானவளும், அகிலாண்ட நாயகியும், என்றும் மங்கையர்க் கரசியும், சீகாழி சம்பந்தமூர்த்தி யுண்டு களிக்கும் படியாக ஞானப் பால் சுரந்து பெருகும் கலவைச் சாந்தணி தன கோடியும், அன்பர்களைப் பிறப்பென்னும் நரகத்தில் ஆழ்ந்து போகா வண்ணம் தூக்கி யெடுத்து மோட்சத்தைக் கொடுக்கும் கலா வல்லபியுமான சிவகாம சுந்தர வல்லியின் சரணாரவிந்தங்களைப் பாடி நன்னிலையை யடைந்து வாழ்வாம். (எ–று.)

(அ-ப.) மலைவல்லி = பருவதவர்த்தினி.
அம்பலவன் = அம்பலவாணன்.
தலைவல்லி = மங்கையர்க்கரசி.
வேணுபுரம் = சீகாழி.
மகன் = சம்பந்தன்.
முலைவல்லி = தனகோடி.
கலைவல்லி = கலாஞானவல்லபி.

20. திருப்பெருந்துறைப் புராணம்

669. மாறுகரு தாதுமுகின் மழைபொழிவ
தெனினுமுடல் வளமா மின்முன்
னூறுபல வாமிடையீ டுளததுபோ
லாதுவள முயிர்கண் மேவி
வீறுமணி மன்றுணட மென்றுமூற்ற
நோக்கி விளங்கா னந்தப்
பேறுபெறக் காட்டலெனு மருண்மழைபெய்
பசுமுகிலைப் பேணி வாழ்வாம். (20)

(இ-பொ.) கைம்மாறு வேண்டாமலே மேகம் மழை பொழிவதானாலும், உடல் நலத்துக்குக் குளிர் பனி காற்று முதலாய இடையூறுகளையும், வீடிடிதல் வெள்ளச் சேதம் முதலாய ஊறுபாடுகளையும் உண்டாக்குவது. ஆகையினால் அப்படிப் போலல்லாது ஆன்மார்த்தத்தைக் கருதி உயிர்களின் பிறவித்துன்பம் பற்றறுவதற்காக ஆணிப்பொன்னம்பலத்தில் (நடராசப் பெருமான்) நடனத்தை எந்நாளும் தரிசித்து, (அவ்வான்மாக்களுக்கு வேண்டிய) சின்மயானந்தப் பேரின்ப வாழ்வடைய அருள் செய்தலெனுங் கருணை மழையைப் பொழிகின்ற பசுங் கொண்டலான சிவகாம சுந்தரியைப் போற்றுவாம். (எ-று.)

(அ-ப.) மாறு = கைம்மாறு.
முகில் = மேகம்.
ஊறு = ஊறுபாடு.
இடையீடு = இடையூறு.

21. காசிரகசியம்

670. யாதுபுரி யினுந்தனக்கென் றொன்றும்வேண்
டான்புரியு மிறையே போற்செந்
தாதுபுரி பொதுநடனங் காண்டல்புரி
வதுமுயிர்க டமக்கே யாக்கிக்
கோதுபுரி பவந்தவிர்ந்து குலவுசிவா
னந்தவெள்ளங் குளிப்பக் காணும்
போதுபுரி கருங்கூந்தற் சிவகாம
சவுந்தரிதன் பொற்றாள் போற்றி. (21)

(இ-பொ.) திருவருட் செயலால் யாதொன்று செயினும், தனக்கெனவோர் கைம்மாறும் வேண்டாமலே செய்யும் இறைவனாகிய நடராசனைப் போல, பின் தொடர்ந்து துன்புறுத்தும் பிறவிப் பிணியை வேரறுத்து ஆன்மாக்களெல்லாஞ் சிவானந்தவாழ்வாகிய வெள்ளத்தில் குளித்து மூழ்கக் காணும் ஒரு காலத்தைக் கருணை புரியவே பொன்னம்பலத்து நடிக்கும் நடனத்தைக் கண்டு மகிழும் கருங்குழலியாகிய சிவகாம சவுந்தரியின் திருவடிகளுக்கு வணக்கம். (எ-று.)

(அ-ப.) செந்தாது = செம்பொன் (அம்பலம்).
பவம் = உற்பவம்.
போது = காலம்.
தனக்கென்றென்றும் வேண்டான் = தனக்கெனவொன்றில்லாதான்.

22. திருநாகைக் காரோணப் புராணம்

671. பெற்றதாய் தன்பதியைக் காதலிக்கக்
காதலிக்கும் பெட்பிற் காட்ட
லுற்றபோ தேகாணு மிளமழவென்
பதுதனக்கே யுண்மை யாகச்
சொற்றமா தேவையுயிர் காதலித்து
நோக்கநடந் தொலையா மன்றி
லற்றமே வாதவைநன் றுற்றிநிற்கும்
பராபரை தாளடுத்து வாழ்வாம். (22)

(இ-பொ.) பெற்ற தாயானவள் தன் கணவருக்குக் காதல் எழுப்பும் போதே விரக மூளுவன், பிள்ளைக் கொன்றைச் சுட்டிக்காட்டும் போதே ஆசையாய்க் காண்பன் என்னும் பழமொழிக்குச் சான்றாக, நடராசப் பெருமானைக் காதலிக்கச் செய்து, ஆன்மாக்கள் எல்லாம் நடனத்தை ஓயாமற் கண்டு மகிழும்படியாகத் தில்லை யம்பலத்தில், சோர்வடையாமல் காதலித்து நோக்கும் சிவகாம சுந்தரியின் திருவடிகளை அடைக்கலம் புகுந்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) பதி = கணவன்.
பெட்பு = பெருமை.
மழவு = பிள்ளை.
அற்றம் = சோர்வு.
மேவாது = அடையாது.

23. திருக்குடந்தைப் புராணம்

672. ஊட்டியரு ளும்பர்பிரா னுண்மைமுனி
வரர்க்குரையா துரைத்தாற் போல
வீட்டியிரு வினையவற்றுட் கட்டுண்டு
திரியுயிர்கட் கேலாத் துன்பம்

வீட்டியளப் பரியசுக மேவவிடங்
        கொடுக்குமத் தேவினைக் காட்டாது*
காட்டியொளிர் பொன்மன்றுண் மணிவிளக்கி
        னிற்பாளைக் கருதி வாழ்வாம். (23)

(இ-பொ.) தேவதேவ மகாதேவன் தக்ஷிணாமூர்த்தமாய், சனகாதி முனிவரர்கட்குத் திருவருளை யூட்டிச் சொல்லாமற் சொன்னது போலவே, இருவினைக் கீடான காயத்துட் கட்டுப் பட்டுழலும் துன்பங்களை யடையா வண்ணம் பாச பந்த மறுத்து, ஆன்மாக்கள் அளவில்லாத சுகத்தை யடையும்படியாக இடப்பாகங் கொடுத்திருக்கும் நடராசப் பெருமானைக் (உலகத்தார்க் கெல்லாம்) கைக் கொண்டு சுட்டிக் காட்டாது கண்மாத்திரமாகவே காட்டுவிக்கும் பொன்னம்பல மாணிக்க விளக்கான சிவகாம சுந்தரியைத் தியானஞ் செய்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) ஈட்டி = வலியத்தேடிக்கொள்ளல்.
வீட்டி = நாசமாக்கி.
மேவ = அடைய.
ஊட்டியருள் = மிடற்றினிடமாகத் திருவருள் புரிந்த நீலகண்டமேனி யெனினுமாம்.
ஊட்டி = மிடறு.
உண்மை = சின்முத்தி ராங்கமரபையுமாம்.
உரையாது உரைத்தல் = வாயாற் சொல்லாமல் நடத்திக் காட்டல்.

24. மாயூரப் புராணம்

673. கரமூன்று மடியிரண்டுஞ் சிருட்டிமுத
        லைந்தொழிலுங் கதிப்ப வாற்றச்
சிரமூன்று நான்குமுளார் சேவிப்ப
        வெண்முறுவல் செவ்வாய்த் தோற்றிப்
புரமூன்று மெரித்தார்செய் நடங்காண்ட
        லதுவலிக்கப் போத லாய
திரமூன்று மிரண்டனுக்கும் வினைமுதலாம்
        பராபரைதாள் சேர்ந்து வாழ்வாம். (24)

(இ-பொ.) படைத்துங் காத்தும் துடைத்தும் வருகின்ற முக்கரங்களுள், ஒரு கை படைக்க இன்னொரு கை காக்க, மற்றொரு கை துடைக்க, ஒருகால் மறைக்க, மறுகால் அனுக்கிரகிக்க ஆக ஐந்தொழில்கள் மிகுதியாய் நடக்கவும், பிரம்ம விஷ்ணுக்கள் சேவிக்கவுமாக முப்புரங்களையும் புன்னகை புரிந்தெரித்த நடராசப்பெருமான் நடிக்கும் நடனத்தைக் கண்டு, அவ்வைந் தொழில்களும் தன்னால் நடைபெறப் போதுமான உறுதி நிலையாக ஊன்றும் திருவடிகளிரண்டுக்கும் வினை முதற்காரணியாம் சிவகாம சுந்தரியின் பாதங்களைச் சேர்ந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) கதிப்ப = மிகுதியாக.

---

* வாமபாகங் கொடுத்த பரமசிவனைக் காட்டாது நடராச மூர்த்தத்தைக் காட்டும் சிவகாமி யெனவும் உரை நிகழ்ச்சி.

25. உறையூர்ப் புராணம்

674. திருநெடுமான் முதலியபல் லுயிர்த்தொகைக
ளிடத்துநனி செழித்து நாளும்
வருநெடுமா கருணைசுரந் திடவொளிர்பொன்
னம்பலத்தின் மறைகள் காணா
வொருநெடுமா தேவனுஞற் றானந்தத்
திருநடங்கண் டுவத்தல் பூண்ட
கருநெடுமான் மருட்டுவிழிச் சிவகாம
சுந்தரிதாட் கமலம் போற்றி. **(25)**

(இ-பொ.) விஷ்ணு முதலான பல ஆன்மகோடிகளிடத்து எந்நாளுஞ் செழித்து வளர்ந்தோங்கி வரும் கருணை நோக்கம் சுரக்கும்படி விளங்கிய பொன்னம்பலத்தின்கண் வேதங்களாலும் கண்டறிதற் கொண்ணா வொருபெருந் தேவனாகிய நடராசப் பெருமான் நடிக்கும் ஆநந்தத் தாண்டவத்தைக்கண்டு அக மகிழ்வு கொள்ளும், மானை மருட்டிய கருநெடுங் கண்ணினளாம் சிவகாம சுந்தரியின் பாதாம்புயங்களைப் போற்றுவாம். (எ-று.)

(அ-ப.) திருநெடுமால் முதலிய பல்லுயிர் = மாலயனாதி பசுக்கள்
உஞற்றல் = நடித்தல்.
உவத்தல் = விரும்பல்.

26. திருவம்பர்ப் புராணம்

675. தனக்கென வொன் றாயினும்வேண்
டாதவனே பெருங்கருணைச் சத்தனாளு
மனக்கினிய சத்தியுமத் தகையளே
யெனப்புகலும் வார்த்தைக் கேற்பச்
சினக்குமெழு பவப்பகைதீர்ந் தெவ்வுயிருஞ்
சிவானந்தத் தெண்ணீர் மூழ்க
வனக்கனக மன்றவன்செய் நடங்காணும்
பராபரையை வணங்கி வாழ்வாம். **(26)**

(இ - பொ.) எந்நாளும் பெருங்கருணையை யுடைய பகவான் தனக்காக யாதொரு கைம்மாறும் வேண்டாதவனே. மனம்போல் நடந்து கொள்ளும் பகவதியும் அத்தகையவள்தான் என உலகத்தார் சொல்லிக் கொள்ளுவதற் கிணங்க, எழுவகைத் தோற்றமாய்ச் சீறும் பிறவிப் பகையைப் பற்றறத் தீர்த்து, சர்வ சீவான்மாக்களுஞ் சிவானந்த சுகவாரியில் மூழ்கியெழும்படி, ஆணிப் பொன்னம்பலத்தில் நடராசப் பெருமான் நடனத்தைக் கண்டு மகிழும் சிவகாம சுந்தரியை வணங்கி வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) சினக்கும் = சினவும் (நசிக்கும்.)
வனக்கனகம் = செம்பொன்.

27. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

676. அழியாத சிவானந்த சாகரமா
லாதியுயி ரனைத்துந் தோய்வா
னொழியாத பெருங்கருணை யூற்றெடுப்ப
மறையாதி யொருங்கு தேர்ந்துங்
கழியாத சிவபெருமான் மணிமன்று
ணவிற்றுநடங் காண்டல் பூண்ட
பழியாத கருங்கடைக்கட் சிவகாம
சுந்தரிதாள் பரவி வாழ்வாம். (27)

(இ - பொ.) திருமால் முதலான ஆன்மகோடிகள் யாவும் கெடாத சிவானந்த சாகரத்தில் மூழ்கித் தோயும்படி பூரணமான திருவருட் பெருங் கருணை வேதாகம முதலான யாவுமுணர்ந்தும், அளவிடற் கொண்ணாத நடராசப் பெருமான் ஆணிப் பொன்னம்பலத்தில் நடிக்கும் நடனத்தைத் திருமால் முதலான ஆன்ம கோடிகள் யாவும், கெடாத சிவானந்த சாகரத்தில், மூழ்கித் தோயும்படி, பூரணமான திருவருட் பெருங்கருணை ஊற்றெடுத் தோடப் பார்த்துக் களிக்கும் புகழ்கருங் கடைக் கண்ணாளாகிய சிவகாம சுந்தரியின் பாத கமலங்களைப் பணிந்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப,) ஒருங்கு = எல்லாம்.

28. விளத்தொட்டிப் புராணம்

677. வெருளினால் வகையாம் யோனி விரவுபு தோன்றித் தோன்றி
யிருளினா லுயிர்க ளெல்லா மிளைத்திடா தின்ப மெய்தத்
தெருளினான் மிக்கோர் வாழுஞ் சிதம்பர மன்று ளென்று
மருளினா னடனங் காணு மம்மைதா ளகத்துட் கொள்வாம். (28)

(இ - பொ.) அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்ற நால் வகைத் தோற்றத்துள் பிறந்து பிறந்து, மாயா விருண்மலத்தினால் உயிர்கள் இளைத்துலவாமல், பேரின்பம் எய்துவதற்காகத் தெளிந்த மகான்களான தில்லை மூவாயிர முனிவர்கள் வாழுஞ் சிதம்பரத்தின் ஆணிப்பொன்னம்பலத்தில் நடராசப் பெருமான் எந்நாளும் நடிக்கும் நடனத்தைக் கண்டு மகிழும் சிவகாம சுந்தரியைத் தியானிப்பாம். (எ-று.)

(அ-ப.) வெருளின் = அஞ்சத்தக்க.
விரவுபு = கலந்து.

29. கோயிலூர்ப் புராணம்

678. பூணரிய கழுதிரத மிந்திரசா லங்கனவிற் புவனங் கண்டு
காணரிய தமைக்கண்டு சீவரெலாந் தாமேயாய்க் காணு மாறு
கோணரிய சிதாகாசப் பெருந்தலத்தோர் பொருளியற்று கூத்துக் காணும்
யாணரியற் சிவகாம சுந்தரிபொற் றாமரைத்தா ளிறைஞ்சி வாழ்வாம். (29)

(இ - பொ.) ஆன்மாக்கள் பொய்யான இவ்வுலகம் பேய்த்தேரென்றும், இந்திரசால மென்றும், கனவென்றும், கண்டொழிந்து விட்டுக் காண்டற் கருமையான தம்மைத்தாமறிந்து தாம் தாமாகவே முத்தியடைவதற்காக, வளைந்த சிதாகாச மயமான சிதம்பரத்தின்கண் நடராசப் பெருமான் நடிக்கின்ற நடனத்தைக் கண்டு தரிசிக்கும் அழகிய சிவகாம சுந்தரியின் பொற் பாத கமலங்களைப் போற்றி வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) கழுது + இரதம் = பேய்த்தேர்.
கோண் அரிய = வளைந்த.
யாணர் இயல் = அழகிய.

30. திருக்குறுக்கைப் புராணம்

679. மாலாதி யுயிரிடத்து வைத்தபெருங் கருணைவள மலித லால்விண்
காலாதி யைம்பூதக் கலப்புரு தவையின்பக் கலப்பு மேவ
மேலாதி முதல்வனியற் றானந்த நடங்காணும் விரதம் பூண்ட
சேலாதி மருட்டும்விழிச் சிவகாம சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம். (30)

(இ - பொ.) திருமால் முதலான சர்வ சீவான்மாக்களிடத்தும் வைத்ததோர் திருவருட் பெருங்கருணை மேன்மேலும் நிறைந்தோங்கலால், மண், நீர், தீ, வாயு, வான் ஆய ஐம்பொறிகளிலுஞ் சம்பந்தப்படுத்தாமல், பேரின்ப மன்றத்துள் கலந்து வாழ்வதற்காக, மேலோனும் ஆதிமூலனுமான நடராசப் பெருமான் நடிக்கும் ஆநந்த நடனத்தைக் காணத் தக்க விரதம் பூண்டொழுகி, சேல் முதலாமானையு மருட்டுந் திருக் கண்களுடைய சிவகாம சுந்தரியின் பாதாம்புயங்களைச் சிரஞ் சூடுவாம். (எ - று.)

(அ-ப.) மாலாதி = திருமால் முதலான.
விண்காலாதி = விண்காற்று தீ நீர் மண்.
அவை = சிற்சபை.
மேல் = ஆதிமுதல்வன், நடராசன்.
சேல்ஆதி = சேல், கெண்டை, மான் முதலிய.

31. தனியூர்ப் புராணம்

680. இருட்கரு மலக்கோட் பட்டவிணர்த் துழாய் நெடுமா லாதி
மருட்பசு வருக்க மெல்லா மயக்கொழிந் தின்ப மேவத்
தெருட்பரஞ் சுடர்மன் றாடுந் திப்பிய நடனங் காணு
மருட்சிவ காம வல்லி யடிமலர்க் கன்பு செய்வாம். (31)

(இ - பொ.) கரிய ஆணவ மல விருளால் பீடிக்கப்பட்ட துளசீதரனும் விஷ்ணு முதலான எண்ணிறந்த சீவ வருக்கங்கள் எல்லாம் மயக்கமாகிய பிறவியை யொழித்துப் பேரின்ப மடைதற் பொருட்டுத் தில்லையம்பலத்தின்கண் நடராசப் பெருமான் தாண்டவமாடும் திவ்வியமான நடனத்தைக் கண்டருள் சிவகாம சுந்தரியின் திருவடிக் கன்பு செலுத்துவாம். (எ - று.)

(அ-ப.) இணர்த்துழாய் = துளசி.
திப்பியம் = திவ்வியம்.

32. சூதசங்கிதை

681. மாலாதி யெண்ணில்பல வுயிர்ச்சேய்க
ளிடத்துநனி வளரா நிற்குந்
தோலாத பெருங்கருணை சுரப்பவிர
ணியமன்றுட் சுடர்ந்தெந் நாளு
மேலாய வானந்தத் திருநடனங்
காணுமொரு விரதம் பூண்ட
சேலாருங் கருநெடுங்கட் சிவகாம
சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம். (32)

(இ-பொ.) மகாவிஷ்ணு முதலான எண்ணிறந்த சீவராசிகளாகிய குழந்தைகளிடத்து, மிக அதிகமாக வளர்ந்தோங்கிவரும் திருவருட் பெருங்கருணை மேன்மேலும் சுரப்பெடுத்து ஊட்டி வருவதற்காக ஆணிப் பொன்னம்பலத்தில் (நடராசப் பெருமான் நடிக்கும்) பேரானந்தத் திருநடனத்தைக் கண்டு மகிழும் விரதமுடைய, சேற்கெண்டையைப் போலும் கருநெடுங் கண்ணினளாம் சிவகாம சுந்தரியின் பாதகமலங்களைச் சிரஞ் சூடுவாம். (எ - று.)

(அ-ப.) சேய் = குழவி.
நனி = மிகவும்.
தோலாத = தோல்வியற்ற.
இரணியமன்று = பொன் அம்பலம்.
சுடர்ந்து = சுடர் விளக்குப் போன்று.
காணும் = கண்டு மகிழும்.
சேலாருங் கருநெடுங்கண் = அங்கயற்கண் அம்மை.

---

33. குளத்தூர்ப் புராணம்

682. நீர்பூத்த முகிலனைய குழலின் றேசு
நிலவுமுழு மதிவதனப் பொலிவுஞ் சீர்சால்
வார்பூத்த முலைமுகிழின் வனப்பு நுண்ணூன்
மானுமணி யிடையழகுங் காணுந் தோறு
மார்பூத்த மலர்ச்சடிலப் பகவனோகை யகத்தடங்
காதெழ நடஞ்செய் தன்னோ வென்னச்
சீர்பூத்த மன்றினவ னிடத்தின் வாழுஞ்
சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். (33)

(இ - பொ.) கரியமேகம் போன்ற கூந்தலினழகும், முழுமதியனைய முகத்தினழகும், சிறப்புப் பொருந்திய கச்சணிந்த தனத்தினழகும், நூல்போன்ற நுட்பமான இடையினழகும் பார்க்குந்தோறும், ஆத்திமாலையினை யணிந்த சடாபாரத்தினையுடைய சிவபெருமான் எல்லையிலா மகிழ்ச்சியுடன் திருநடனஞ் செய்து அன்னோ என்னச் சிறப்பினையுடைய பொன்னம்பலத்தில் அப்பெருமானது இடப்பாகத்தில் எழுந்தருளியுள்ள சிவகாம சுந்தரியைச் சிந்தித்து வணங்குவாம். (எ - று.)

சாத்திரங்கள்

34. சிவப்பிரகாசம்

683. பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானங் கிரியை பரபோக ரூபந்
தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்க டாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்றாய்
விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்று ளாடல் காணு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். (34)

(இ - பொ.) பரை ஆதி இச்சை ஞானம் கிரியை என நின்று, ஆன்மாக்களுக்குப் பரபோக ரூபத்தைக் கொடுத்தருளும் திருவருளே திருமேனியாகக் கொண்டு, விந்து மோகினி மான் என்னும் மாயைகளைப் பொருந்திக் காரியப் படுத்தி, இவ்வாறெல்லாமாகியும் தான் ஒன்றேயாய், மலமாயைகளிற் பொருந்தாது சுத்தமாய், பரமசிவனது ஐந்தொழில்களுக்கும் தானே காரணமாய், உலகத்துள்ள உயிர்களது பிறவித் துன்பம் ஒழியும்படி பொன்னம்பலத்திலே ஆனந்த நடனம் செய்தருளும் நடராசப் பெருமானது திருநடனத்தைக் கண்டருளுகின்ற சிவகாமியம்மையாரது திருவருள் வடிவான திருவடித் தாமரை மலர்களைச் சிரசின் மேல் வைத்து வணங்குவாம். (எ — று.)

35. சிவதருமோத்தரம்

684. அப்பாலைக் கப்பாலைக் கப்பாலா
யறிவரிய வமலை தன்னை
யெப்பாலுந் தானாகித் தொழிலைந்து
மியற்றாதே யியற்று வாளை
முப்போது மலர்தூவி முடிசாய்த்து
மனத்தகத்து முன்னு வாரைத்
தப்பாதே பிறப்பறுக்குஞ் சிவகாம
சவுந்தரியைப் பணிவாந் தாண்முன். (35)

(இ - பொ.) மாயைப் பெருமாயை எனக் கூறிய விரண்டினுக்குமப்பாலாய், ஆன்மாக்கள் அறிதற்கரிதாய் மலமில்லாத சிவசத்தியுமாய்ச் சருவ வியாபியுமாய், ஐந்தொழிலுந் தான் செய்யாமல் தன் சந்நிதி மாத்திரத்திலே காரியப் படுத்துபவளாய், மூன்று காலங்களும் தனது சிபாதங்களில் மலர்களைத் தூவி இதய கமலத்தில் தியானித்து வணங்கும் அடியவர் பிறப்பை உறுதியாயறுப்பவளாய் விளங்கும். சிவகாம சவுந்தரியினது சீபாத கமலங்களைப் பணிவாம். (எ—று.)

(அ - ப.) முன்னல் = நினைத்தல்.

36. சங்கற்ப நிராகரணம்

685. செடச் செயலோ ரைந்தினையுஞ் செய்யாதே செய்யு
மடக்கொடிதாள் வைப்பா மனத்து. (36)

(இ - பொ.) தேகத்தின் ஐம்புலச் சேட்டைகளையும், ஆன்மா பட்டுழலா வண்ணம் திருவருட்புரியும் மடக் கொடியினளாகிய சிவகாம சுந்தரியின் திருவடிகளைத் தியானிப்பாம். (எ - று.)

((அ - ப.) செடம் = சடம் (தேகம்).

37. உருத்திராக்க விசிட்டம்

686. பேருயிரு ணீங்காளைச் சிற்றுயிரைப் பெற்றாளைப்
பாரிறுவா யாக்கிப் பரித்தடக்கி — யாரருளுஞ்
செய்யுமக ளங்க சிவகாம சுந்தரியைக்
கையினலர் தூய்ப்பணிவாங் கண்டு. (37)

(இ - பொ.) உயர்திணைச் சீவன்களைப் பெற்றுவிட்டு நீங்காதவளாய், அஃறிணைச் சீவன்களைப் பெற்றுக் காப்பவளாய், முடிவில் சர்வான்மாக்களையும் அடக்கித் திரோபவித்து அநுக்கிரகஞ் செய்யும் புனிதவதியான சிவகாம சவுந்தரியைக் கைம்மலர்கள் கொண்டு பூசித்துப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) இறுவாய் = முடிவு.
பரித்து = பரிந்து.
ஆரருள் = திருவருள்.
அகளங்கம் = பரிசுத்தம்.
தூய் = தூவி.

38. சிவஞானதீபம்

687. தற்பரனுக் குலகுதவு கரணுமாகிச் சாற்றி
லளவறு பேத சத்தி யாகி
யற்புதமாய் விந்துமோ கினிமா னாகி
யனைத்தினையும் படைத்துயிர்கட் கன்னை யாகிச்
சொற்பரவு மறைமுதலாங் கலைக ளானுந்
தொழிலானு நினைவானுந் தொடரொ ணாத
சிற்பரையைப் பொற்பொதுவி லாடல் காணுந்
திருவருளைப் பவமகலச் சிந்தை செய்வாம். (38)

(இ - பொ.) உலகப் படைப்பில் சிவபெருமானுக்கு உதவியாகப் பல விதச் சத்திகளாகி, அற்புதமாய் விந்து, மோகினி, மானுமாகி, எல்லாவற்றையும் படைத்து, உயிர்கட்கெல்லாம் அன்னையாகி, வேதங்களாலும் கலைகளாலும் நினைவாலும் செயலாலும் அறியமுடியாத சிற்பரையை, பொன்னம்பலத்தில் நடராசரின் நடனத்தைக் கண்டு மகிழும் சிவகாம சுந்தரியம்மையை நம் பிறவித் தொல்லை நீங்குமாறு தியானிப்பாம். (எ-று.)

---

* இச் செய்யுள், சங்கற்ப நிராகரணம் என்னும் நூலில் இல்லை.

39. மகாராஜா துறவு

688. அருளுருவா யுயிர்கடமக் கன்னையாகி
யஞ்ஞானந் தனையகற்றி யமல மாகி
மருளிலதாய் மெய்ஞ்ஞான மாகுமுத்தி வாய்த்திடவே
காத்தருளி வானோ ரேத்த
விருள்கெடவே மிளிருமிருங் கழல்க ளார்ப்ப
விறைபுரியுந் திருநடத்தாற் களித்து வாழுந்
தெருண் மருவு மறைநான்கும் பரவுந்தில்லைச்
சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். (39)

(இ - பொ.) மூலமலவிருள் கெடும்படி விளங்கும் இருசரணங்களும் ஒலிக்க நடராசப் பெருமான் புரியும் தாண்டவத்தைக் கண் குளிரக் கண்டு வாழும், திருவருள் வடிவமானதோர் தாயாய் வந்து ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தைப் போக்கித் தெளிந்து பரிசுத்தமான மெய்ஞ்ஞான முத்தியடையும்படியாகக் காப்பாற்றித் தேவர்கள் கொண்டாட நான்கு வேதங்களும் வழிபடும் தில்லை—சிவகாம சுந்தரியம்மனைத் தியானிப்பாம். (எ – று.)

(அ - ப.) மிளிரும் = துலங்கும்.
ஆர்ப்ப = ஒலிக்க.

40. பஞ்சாதிகார விளக்கம்

689. மலர்விரையுங் கதிரொளியு முயிருடலு மணியின்
வளர்தேசு முருநிழலு மலிபொருளோ ருரையு
நிலவுதல்போ னிட்களத்தைப் பிரியாது மருவி
நிகழ்சகளத் தப்பதிக்கு நிறைமனையாய் மன்னி
யுலகுயிர்மைந் தர்கள்பி றவிப்பசிகெ டவெந்நாளு
மோவாதா னந்தவமு தூட்டியவ்வீட் டிருத்துந்
திலகநுதற் சிவகாம சுந்தரியார் பாதச்
செங்கமலந் தலைமீதிற் றிகழுறவைத் திடுவாம். (40)

(இ - பொ.) பூவும் மணமுமாய், ஒளியும் வெப்பமுமாய், உயிரும் உடலுமாய், மணியும் அழகுமாய், உருவமும் (நிழல்) சாயலுமாய், மூலமும் உரையுமாய், (ஒன்றுக் கொன்று) சம்பந்தப் பட்டிருத்தல்போல, கலப்பின்மையிற் பிரியாமல் நடராசப் பெருமானுடன் கலந்திருக்குமோர் கற்பின் மனையாட்டியாக விளங்கி, அண்ட சராசர சீவன்களாம் புதல்வர்களின் பிறவி யென்னும் பசி கெடும்படியாக, எந்நாளுமே யொழியாத ஆனந்த வமுதூட்டி, முத்தி வீட்டிலிருத்தும் (சிரோமணியாகிய) சிவகாம சுந்தரியின் பாத கமலங்களைச் சிரமேல் அணிவாம். (எ–று.)

(அ - ப) விரை — மணம்.
தேசு = காந்தி (அழகு).
நிட்களம் = கலப்பின்மை.
ஓவாது = ஒழியாது.

41. சிவபுண்ணியத் தெளிவு

690. ஒற்கமி லிருண்மலத் தொளியி னீங்கியே
நற்கதி பெறவரு ணயந்து போற்றுவாஞ்
சிற்கனன் றன்னொடு சிறப்பி னோங்கியே
கற்கொளி போன்றுளாள் கமல பாதமே. (41)

(இ - பொ.) அடக்கமில்லாத ஆணவ மலமயமாமிப் பிறவியினின்றும் நீங்கி, நல்ல கதி மோட்சத்தைப் பெற்றுய்வதற்காகச் சிற்சபேசனாகிய நடராசப் பெருமானோடு, சிறப்பா வோங்கி யெழுந்தருளியிருக்கும் மாணிக்க விளக்குப் போல்பவளாகிய சிவகாம வல்லியின் பாதகமலங்களையன்பாற் பணிவாம். (எ - று.)

(அ - ப.) ஒற்கம் = அடக்கம்.
சிற்கனன் = சிற்சபேசன்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

ஆறாம் பகுதி

தட்சிணாமூர்த்தி வணக்கம்

1. திருவிளையாடற் புராணம்

691. கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலா
யெல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம
னினைந்து பவத்தொடக்கை வெல்வாம். (1)

(இ - பொ.) கல்லால மரத்தின்கீழ் வீற்றிருந்து, வேதம், வேதாங்கம் முதலிய எல்லாக் கலைகளையுங் கற்றறிந்த நூற் கேள்வியையுடைய முனிவர்களாகிய சனகன், சனந்தன், சனாதனன், சனத்குமாரன் என்னும் நால்வருக்கும், மனோவாக்குக் காயங்கட் கெட்டாத பரிபூரணப் பொருளாயும், வேதங்கட்கதீதப் பட்டதாயும், தானே யெல்லாப் பொருளுமாய், அப்பொருள்கள், தானல்லதுமாயிருந்த உண்மைப் பொருளை, அஃதசைவற்று நிற்குமாபோல், தாமுமசைவற விருந்து சின்முத்திரையாற் காட்டி, (வாக்காற்) குறிப்பாற் கூறிய தட்சிணாமூர்த்தியைத் தற்போதமாகத் தியானியாமல், அருள்வழியாகத் தியானித்துப் பிறவிப் பாசத்தை ஒழிப்பாம். (எ - று.)

(அ - ப.) வேதாங்கம் = மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம்.

2. திருவாவடுதுறைப் புராணம்

692. செம்மலர்நோன் றாள்சேர வொட்டாம
லுயிரையெலாந் தியக்கஞ் செய்யு
மம்மலங் கழீஇமிகுநல் லன்பரொடு
மருவினீ ரடையு முத்தி
யிம்முறையா மெனநால்வர்க் கிருவிரற்சின்
முத்திரையா லியம்பி யாற்கீழ்
மன்மதன்மே னுதற்கணிறீஇ வீற்றிருந்த
குருபரனை வணக்கஞ் செய்வாம். (2)

(இ - பொ.) திருவடி பூசை செய்த பார்வதியையும் அருகிற் சேரவொட்டாமல் தடுத்துச் சர்வான்மாக்களையுஞ் துன்பப் படுத்தும் மலமாயா கன்மங்களைப் போக்கி, மிக்க நல்லன்பர்களுடன் சேர்ந்து, ‘நீவிர் அடையத்தகும் முத்தியு

பாய மௌனம் இவ்வாறு தா’ னென்று, (பெருவிரலும் சுட்டு விரலுமாகிய) இரு விரலாலுஞ் சின்முத்திராங்க மரபினால், சொல்லாமற் சொல்லிக் கல்லாலின் கீழிருந்து மன்மதனை நெற்றிக் கண்ணாலெரித்து, எழுந்தருளி இருந்த தட்சிணா மூர்த்தக் கடவுளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) செம்மலர் = செம்மலரடி.
நோன்ருள் = அநுட்டித்த பார்வதி.
தியக்கம் = (மயக்கம்) துன்பம்.
ஆற்கீழ் = கல்லால மரத்தின் கீழ்.
நுதற்கண் = நெற்றிக் கண்.

3. திருவானைக்காப் புராணம்

693. மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயி
ரம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ. (3)

(இ-பொ.) மலமாயா கன்மம் வேரற்றுப்போகும்படியாக ஒழித்துச் சர்வான் மாக்களும், தம் திருவடி நீழலை அடைந்துய்வதானதோர் உண்மையை, கையின் சின் முத்திராங்க மரபினால் சனகாதி முனிவர்கள் நால்வர்க்கும் பற்றிக் காட்டிய தட்சிணாமூர்த்தியை யல்லாது மற்றத் தெய்வங்களை நம்மனம் மனனஞ் செய்யாதாம். (எ - று.)

(அ - ப.) மொய்த்துயிர் = ஆன்ம கோடிகள்.
அடங்கும் = அடைந்துய்யும்.
கைம்மலர்க் காட்சி = சின்முத்திராங்க மரபில்.
கதுவ நல்கிய = பற்றிக் காட்டும்.
செம்மல் = தட்சிணாமூர்த்தி.

4. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

694. இருள்வினையா திகளகலக் கடைக்கணளித்
தறமாதி யின்ப நான்கி
னொருமுடிவே புத்திமுத்தி யாகவதி
லொன்றைந்து முணர்பத் தாகப்
பொருள்விரவப் பத்திலொன் றின் புணர்ப்பெழுத்தஞ்
சக்கரத்திற் போத ரூபந்
தெருளவருள் பரமகுரு தட்சிணா
மூர்த்திபதஞ் சிந்திப் பாமால். (4)

(இ-பொ.) ஆன்மாக்களின் இருவினையும், மும்மலமும் நான்கு கரணமாய வெல்லாம் விட்டொழியும் படியாகி, அருள் நோக்கம் புரிந்து, அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்குக்கும், ஒரு முடிவான முத்தி இன்பத்தை அடைந்துய் வதற்காக நமசிவய வென்ற ஐந்தெழுத்துடன் சிவயநம வென்பதுங் கூட்டிப்

பத்தாகவும், பொருள் விசேடித்த இப்பத்தின் ஒரு பகுதியான காரண பஞ்சாட்சரத்தில் வந்து சொல்லாமற் சொல்லும் பரமஞானாச்சாரியனான தட்சிணாமூர்த்தியின் பாதங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) புத்தி முத்தி = முத்தியுபாயம்.
விரவ = கலக்க.

5. பவானிகூடற் புராணம்

695. நிறைமதி முகமு முக்கணு மூரனிலவு
செவ்வாயு மீரி ரண்டு
நறைமலர்க் கரமுஞ் செபமணி வடமு
ஞானமுத் திரையுமாய் நால்வர்க்
கறநெறி யுணர்த்தி யருள்செய்து
கல்லா லணிநிழ லினிதுவீற் றிருந்த
மறைமுத னடுவீ றறியொணா ஞான
வடிவினைக் கருத்தினில் வைப்பாம். (5)

(இ - பொ.) வேதங்களாலும், முதல், இடை, கடை அறிதற்கொண்ணாப் பூரண சந்திரனைப் போன்ற திருமுகமும், மூன்று கண்களும், புன்சிரிப்போடு கூடிய சிவந்த வாயும், நறுமணமுடைய செந்தாமரை போன்ற நான்கு கரங்களும், உருத்திராக்க மணிமாலையும், சின்முத்தி ராங்கமுமாய் விளங்கி, சனகாதி நால்வருக்கும், அறமுதலா நான்கை அறிவித்ததுந் திருவருள் துணை செய்வித்து, கல்லால மரத்தின் நீழலில் சுகமாக விற்றிருக்கும் தட்சிணாதிக்க மூர்த்தத்தைத் துதிப்பாம். (எ—று.)

(அ - ப.) செபமணிவடம் = உருத்திராக்க மாலை.
ஞானமுத்திரையுமாய் = சின்முத்திராங்கமாய்.

6. திருமாணிக்குழிப் புராணம்

696. சநகர்முத னால்வருக்கு மும்மலநீத்
தத்துவிதச் சார்பு நல்கி
யநகமுறு மற்றையரு மருந்தவஞ்
செய்தற்புதா னந்த மெய்தத்
திநகரஞ்செய் விமானத்தென் றிசைவளருந்
தட்சிணா மூர்த்தி தேவன்
கநகமலர்ப் பதத்துணைக ளககமலத்
தனுதினமுங் கருதி வாழ்வாம். (6)

(இ - பொ.) சநகர் முதலான முனிவர்கள் நான்கு பேருக்கும், மலமாயா கன்மத்தைப் போக்கி, அத்துவித முத்தியைக் கொடுத்தருளவும், சற்றுப் பக்குவமான மற்ற வான்மாக்களும், தவமாதி செய்து ஞானாநந்தம் அடையவுமாகச் சூரிய

விமானத்தில், தென்பாலின் முகமாகி (வடவால்) இருந்தருளும் தட்சிணாமூர்த்திக் கடவுளின் திருவடி பொற்பாத கமலங்களை எந்நாளும் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) நல்கி = நல்கியருளவும்.
எய்த = அடையவும்.

7. மருதூர்ப் புராணம்

697. மறந்தருமும் மலச்செருக்கின் மருளாமற்
பாகமுற வருத்தி யெங்கு
நிறைந்தவருட் சுடர்கொளுவி யுயிர்ப்போத
மொழித்தயிக்க நிலைமை யீட்ட
வறந்தருநற் சனகாதி முனிவரர்க்கு
வடநிழற்பா லமைந்து ஞானத்
திறந்தருமுத் திரைகாட்டுந் தட்சிணா
மூர்த்தி பதஞ்சிந்தை செய்வாம். (7)

(இ - பொ.) பிறவிக் கேட்டைத்தரும், (ஆணவம், மாயை, காமியம் என்ற) அகங்காரத்தில் மருண்டலையாமல் மலபரிபாகம் வருவித்து, எங்கும் நிறைந்த திருவருட் பரஞ்சோதியைக் கொளுத்தி, ஆன்மாவின் தற்போதம் நீக்கி, ஐக்கிய நிலைமையை யடைந்துய்யச் சம்பாதிக்க வேண்டுமானால், அறமுதலா நான்கு முணர்ந்த சனகாதி முனிவரர்கட்கு, வடவால மரத்தின் கீழ் இருந்து, சின்முத்திராங்க மரபைக் காட்டும் தட்சிணாதிகரமூர்த்தியின் பாதாரவிந்தங்களைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) மறம் = தீமை.
செருக்கு = அகங்காரம்.
திறந்தருமுத்திரை = சின்முத்திராங்கம்.

8. திருக்குற்றாலப் புராணம்

698. ஆல்வருக்கந் தனிலுயர்ந்த வட நிழற்கே
தென்முகங் கொண்டறவோ ராய
நால்வருக்கு ளிருவருக்கு மொருவருக்கு
நவின்றருளி நவிலொ ணாத
நூல்வருக்க மொருவருக்கு நுவலாம
னுவன்றனை நுதற்கண் ணனைப்
பால்வருக்கைக் கனியையருட் பசுந்தேனைப்
பரவாமற் பரவல் செய்வாம். (8)

(இ - பொ.) கல்லால மரத்திலுயர்ந்த வடவால் நிழலின் கீழ் தென்பாலின் முகமாகவிருந்து, முனிவர்களாய சனகாதி நால்வர்களுக்கும், அறம், பொருளாய இரண்டு பாலும், இன்பமாய மற்றொரு பாலும் உபதேசித்தருளி வெளிப்படுத்தப் படாத வீட்டுப் பால் ஒன்றையும், சொல்லாமற் சொல்லி அருளினவனாய், நெற்றிக்கண்ணனாய், பால் முப்பழமானவனாய், திருவருட் பசுந்தேன் போல்பவனாய் விளங்கும் தட்சிணாமூர்த்தியை மேலுக்குப்புகழாமல் உள்ளன்போடு வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அறவோர் = முனிவர்.
இருவருக்கு = பொருள், அறம்.
ஒருவருக்கு = இன்பம்.
நூல்வருக்கம் ஒருவருக்கு = வீடு.
வருக்கைக்கனி = முப்பழம்.
பரவாமல் = மேலுக்குப்புகழாமல்.

9. திருநெல்வேலிப் புராணம்

699. புநிதநிறை தனுகரண புவன போகம்
புணர்சரா சரமனைத்தும் பொருத்தி நாளு
மநகவொளி காட்டுமரு வுருவி னானை
யத்துவிதச் சைவநிலை யமருந் தேவைச்
சநகர்முத னால்வருக்கு மமுத ஞானந்
தனை யுணர்த்துஞ் சற்குருவைத் தழற்கண் ணானைத்
திநகரரா யிரங்கோடி திகழுஞ் சோதித்
தட்சிணா மூர்த்திபதஞ் சிந்தை செய்வாம். (9)

(இ - பொ.) பரிசுத்தமான தனுகரண புவனபோக சம்பந்தமான சராசரங்களெல்லாம் பொருந்தி, எந்நாளும் திருவருட் பரஞ்சோதி காட்டுஞ் சதாசிவனாய், சுத்தாத்துவிதச் சைவசித்தாந்தத்தில் வருங் குலதெய்வமாய், சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் முத்திஞானம் உணர்த்துவிக்குஞ் சற்குருவாய், அழல்விழியனாய், ஆயிரங் கோடி சூரியப் பிரகாசமுமான தட்சிணாமூர்த்தியின் பாதங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) அநகம் = மாசின்மை.
அமுதம் = முத்தி.
தழல் = அழல்.
திநகரர் = சூரியர்.

10. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

700. மதியினுயர் சனகாதி மாதவர்க்கா லடியிருந்து
பதிபசுபா சத்தினுறு பரப்பினைத்தன் மலர்க்கைவிர
னுதியதனாற் கருணையொடு நுண்ணியதா யறிவித்தோன்
புதியமலர்த் தாளிரண்டும் போற்றிவணங் கிடுவோமால். (10)

(இ - பொ.) அறிவின் மிக்க சனகாதி முனிவர்களுக்கு வடவால மரத்தின் கீழிருந்து, பதிபசு பாசத்தின்கண் உற்ற விளக்கத்தை, மலர்க் கை விரல்களின் முனையினால் காருண்ணியத்துடன் வெகு நுட்பமாக (மோன ஞானம்) அறிவித்தவனும் தட்சிணாமூர்த்தியின் மலரடிகள் இரண்டையும் போற்றி வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) நுதி = முனை.

11. காசி ரகசியம்

701. மாலம ராடி வாவென நடுவன்
வந்துகொண் டேகுமுன் பிரியுஞ்
சீலம ராடி வாவினும் திகழுந்
திருமதி முகமுணா துச்சிப்
பாலம ராடி வாய்நிழல் பொருவப்
பதிபெரும் பேறுளங் கொடுகல்
லாலமராடி வாழ்தரு பெருமா
னடிமலர்க் கன்புசெய் திடுவாம். (11)

(இ-பொ) மயக்கமானது போர் செய்ய, இமயன் வந்து வாவென்று சொல்லி அழைத்துக் கொண்டு போகு முன்னர், சொல்லளவில் பிரியேனென்று சொல்லி, பிரிதலாகிய ஒழுக்கத்தினின்றும் தவறாத மாதரது முகவழகையே நினைத்திராது, உச்சிப் போதில் சூரியன் எதிர் நின்ற கண்ணாடியின் நிழல் புறந் தோன்றாது தன்னிலை நின்றாற் போலத் திருவருட் பிரகாசத்தின்முன் ஆன்ம போதந் தோன்றாது அருள் நிலையில் நிற்கச் சிவபோகத்தையே நாடிக் கல்லால மரத்தடியிலே குரு முகூர்த்தமாக எழுந்தருளிய பெரிய பெருமான் திருவடி மலருக்கு அன்பு செய்வாம். (எ-று.)

அமராட என்பது அமராடி எனத்திரிந்தது. நடுவன் வந்து வாவெனக் கொண்டு ஏகு முன் எனக்கூட்டுக. சீலமறாள். என்பது எதுகை நோக்கிச் சீலமராள் எனத் திரிந்தது. மரஅடி—மராடி என்றாயிற்று.

---

12. திருநாகைக் காரோணப் புராணம்

702. பதிபசு பாச மென்னப் படுமொரு மூன்றுஞ் சுத்தம்
பதிநிலை யொன்றற் கொன்று பயில்வியாப் பியமா மின்னும்
பதியொடு பசுக்க லக்கும் பண்புமிற் றென்றோர் செங்கைப்
பதிவிர லளவிற் சேர்ப்பிற் பகர்பவற் கடிமை செய்வாம். (12)

(இ – பொ.) பதி பசு பாசமென்னப்பட்ட முப்பொருளும், முத்தி நிலையை அடைதற்கானதோர், அருத்தா பத்திப் பொருள் பயிற்சியும், பதிஞானத்தோடு பசுக்கலக்கும் விதமும், இத் தன்மைத் தென்று ஒரு செங்கையின் சின்முத்திராங்க மரபினால், (சொல்லாமல்) சொல்லும் தட்சிணாமூர்த்திக்கு அடிமை பூண்டொழுகு வாம். (எ - று.)

(அ – ப.) சுத்தம் பதிநிலை = முத்திநிலை.
ஒன்றற்கு = சேர்தற்கு.
வியாப்பியம் = அருத்தாபத்தி.
இற்று = இத்தன்மைத்து.

13. திருக்குடந்தைப் புராணம்

703. விதிவிலக் குயிர்க்கே யன்றி மிளிர்தமக் கில்லை யென்று
துதிமறை யுரைத்த வாறே துணிதரத் தாமா காதாய்
மதியமை தெற்கு நோக்கி வடக்குமா ணாக்கர் நோக்கப்
பொதியவிழ் கல்லா னீழற் பொலிபவர்க் கன்பு செய்வாம். (13)

(இ - பொ.) உலகத்தில் விதித்தன செய்தலும், விலக்கியன வொழிதலும், ஆன்மாக்களுக்கே யன்றித் தமக்கு யாதொன்றுங் கிடையாதென வேதங்கள் சொன்னபடியே, தாமொரு பற்றும் இல்லாதவராய், அறிவோடுங்கூடித் தெற்கு முகமாகவிருந்து, (சனகாதி முனிவர்களாகிய) மாணாக்கர்கள் வடதிசை பார்க்க (தளிர்ந்த) கல்லால மரத்தின் நிழலின் கீழ் விளங்கும் தட்சிணாமூர்த்திக்கு அன்பு செலுத்துவாம். (எ-று.)

(அ - ப.) பொதியவிழ் = மலரரும்பவிழ்ந்த.

14. மாயூரப் புராணம்

704. மான்மல ரவன்முன் னோர்தொன் முதலென வழுத்தற் கேற்பச்
சூன்மலர் கருணை யாலோர் தொன்முத லமர்ந்தான் மாக்கள்
கான்மல ரடங்கு முண்மை கைம்மலர்க் காட்சி யாலே
தான்மலர் தரத்தெ ரிக்குந் தம்பிரான் சரணஞ் சார்வாம். (14)

(இ – பொ.) பிரம்ம விஷ்ணுக்கள் முதலான முன்னோர்கள் பழம் பொருள் எனச் சொல்வதற்குத் தக்க, (மேகம் போற் சொரியும்) காருண்யத்தினால், தொன்று தொட்டே பதிந்து, ஆன்மாக்களெல்லாந் திருவடியடையுமோர் உண்மையைக் கையின் சின்முத்திராங்க மரபின் மோன தரிசனத்தினால், மலரும் மணமும் போல் காட்டும் தட்சிணாமூர்த்தியின் சரணங்களை அடைவாம். (எ-று.)

(அ - ப.) மால் = திருமால்.
மலரவன் = பிரம்மன்.
தொன் முதல் = பழம் பொருள்.
சூன் முகில் = கருமேகம்.
தொன் முதல் = தொன்று தொட்டு.
கான்மலர் = மலரடி.
கைம்மலர் = மலர்க்கை.

15. உறையூர்ப் புராணம்

705. முழுதுணர் முனிவர் தேற மூவகைப் பாச மாயப்
பழுதற வொழிந்தான் மாக்கள் பதநிழ லடங்கு முண்மை
செழுமலர் பொருவு மங்கை விரல்களாற் றெரித்தி யாருந்
தொழுதெழக் கல்லா னீழல் வதிபவர் துணைத்தாள் போற்றி. (15)

(இ - பொ.) சனகர் முதலான முனிவர்கள் தெளியும்படியாக ஆணவம், மாயை, காமியம் ஆய பாசங்கள் மூன்றையும் ஐயந்திரிபறவொழித்து, ஆன்மாக்

கள் பதமுத்தியடையும் உண்மையை, செந்தாமரை போன்ற திருக்கரவங்குலி களால், (சின் முத்திராங்க மரபில்) குறிப்பினுணர்த்தி யாவர்களும் தொழுதெழும்படியாகக் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியின் துணையடிகளுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) தேற = தெளிய.
பழுதற = ஐயந்திரிபற.
பதநிழல் = பதமுத்தி.
யாரும் = யாவரும்.

16. திருவம்பர்ப் புராணம்

706. செய்தொழிலி னளவுமருட் சத்திபதி
தலினளவுஞ் சித்தாந் தத்த
ரெய்பொருளி னளவுமுத்தி யிருப்பளவு
மத்துவிதத் தியல்புந் தேறக்
கொய்மலர்நே ரொருகைவிர லொவ்வொன்று
மடக்கி யிணைகூட்டி யான்றோர்
மெய்கெழும வினிதுணர்த்தி யாலடிவா
ழரசடியை விரும்பி வாழ்வாம். (16)

(இ - பொ.) ஆன்மாக்கள் முத்தியடைதற்குரிய காரண காரிய அளவும், அருட்சத்தி பதிவதன் அளவும், சித்தாந்திகள் அடையும் பொருளின் அளவும் முத்தியின் இருப்பளவும் அத்துவிதத்தின் இயல்புமாகியவற்றைச் சின் முத்திராங்க மரபில் இனிமையாக எடுத்து விளக்கும் கல்லால மரத்தின் கீழுள்ள தட்சிணாமூர்த்தியின் இணையடிகளை விரும்பி வாழ்வாம். (எ-று.)

17. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

707. மன்னிய பிணிக்கோட் பட்டு
வருந்துவா ரின்ப மெய்தத்
துன்னிய மருந்து கட்டிச்
சுமந்திடு பிடகரே போற்
பன்னிய மலக்கோட் பட்டார்
பரகதி யடைய நாளு
மின்னிய ஞான போதஞ்
சுமப்பவர் விரைத்தா ளுள்வாம். (17)

(இ - பொ.) நீடித்த நோயால் மெலிந்து வருந்துவாரெல்லாம் இன்பமடையத்தக்க அவுடதங்களைக் கட்டிக்கொண்டு சுமந்துவரும் வைத்தியர்களைப் போல, மும்மல சம்பந்தத்தால் பிறவிப் பெரும் பிணிப் பட்டவர்கள் பதமுத்தியடைவதற்காக, எந்நாளுஞ் சிவஞான போதத்தைச் சுமக்கப்பட்டவராம் தட்சிணாமூர்த்தியின் பாதங்களைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) மன்னிய = நீடித்த
பிடகர் = வைத்தியர்.
உள்வாம் = துதிப்பாம்.

18. விளத்தொட்டிப் புராணம்

708. கற்றகல் வியினாற் பந்தங் கடந்திட லரிதே யென்று
சொற்றது விளக்கி யாங்குச் சுருதியா கமமுன் னாய
முற்றவு முணர்ந்த நான்கு முனிவரர்க் கருளிச் செய்து
கொற்றமா ராலின் கீழ்வாழ் குரவனுக் கன்பு செய்வாம். (18)

(இ - பொ.) வேதாகமங்கள் முதலான முற்றுமுணர்ந்த சனகாதி முனிவர்களுக்குக் கல்வி கற்றலினால் பாசபந்தத்தைக் கடப்பது அரிதெனச் சொல்லும் சொல்லை விளக்குவித்தாற்போல, மோன ஞானம் அருளிச் செய்து, வடவால மரத்தின் கீழ் இராசாங்கமாய் வாழும் பரம தேசிகற்கு அன்பு செலுத்துவாம். (எ—று.)

(அ - ப.) சொற்றது = சொன்னது.
கொற்றமார் = வலிவான, கனத்த.
விளக்கியாங்கு = விளக்குவித்தாற் போல.

19. கோயிலூர்ப் புராணம்

709. கற்றுணர் முனிவர் நால்வருங் காண்பான் காட்சிகாண் பொருளொரு மூன்று
மற்றுணர் குறியு மமைந்தபா வனையு மறைதரு குணங்களு மகன்று
முற்றுணர் பூரண பரசுக சொரூப முதல்வராய் மருவவோர் கல்லா
னற்றுணர் மலர்க்கைக் குறியொடு மருவு ஞானதே சிகனடி பணிவாம். (19)

(இ-பொ.) வேதாகமங்களைக்கற்றுணர்ந்த சனகாதி முனிவர்கள் நால்வரும் காணும் காட்சியாய், ஆணவம், கன்மம், மாயை யாகிய மூன்றையும் ஒழித்து, முழு ஞானத்துடன் பரசுக சொரூப முதல்வராய், கல்லால மரத்தினடியில் சின் முத்திராங்க மரபால் உண்மை ஞானத்தை உபதேசிக்கும் தட்சிணாமூர்த்தி யெனும் ஞானதேசிகன் திருவடிகளைப் பணிந்து உய்வாம். (எ - று.)

20. திருக்குறுக்கைப் புராணம்

710. எங்குமவ னன்றி யோரணு வுமசை யாதென்ப தியாருந் தேரத்
தங்குசிவ யோகிருந்த ஞான்று யிரெலா மிருந்த தன்மை தேர்ந்துங்
கொங்குமலர் மலரென்று கருதாதிட் டவன் சேர்ந்தார்க் கொல்லி யாகப்
பொங்குநுதல் விழிமலர்ந்த பரமகுரு சாமி பொற்றாள் போற்றி வாழ்வாம். (20)

(இ - பொ) உலகமெங்கும் வழங்கும் அவனன்றியோரணுவும் அசையாதென்ற திருவாக்கை, எல்லாரும் உணரும்படியாகத் தங்கிய சிவயோகஞ் சாதித்த நாளில் அவ்வியோக வின்பத்துள் உயிர்களெல்லாமும் இருந்த நிலைமையை அறிந்தும் யோசியாமல், கொங்காதி ஐம் மலர்ப் பகழிகளை விடுக்கும் மன்மதன் எரிந்து சாம்பராக நெற்றிக் கண் திறந்த பரம ஞானாசாரியாராந் தட்சிணாமூர்த்தியின் பொன்னடிகளைப் போற்றி வாழ்வாம். (எ—று.)

(அ-ப.) ஞான்று = நாள்
சேர்ந்தார்க்கொல்லி = நெருப்பு

21. தனியூர்ப் புராணம்

711. உணர்பவ னுணர்த்து வோனென்
றுணர்த்திரு வகையா ளுள்ளு
முணர்பவன் பசுவே தானே
யுணர்த்து வோனென றெளித்தாங்
குணர்வன வுணர வோர்நா
லுணர்ந்தவர்க் குணர்த்தி யுண்மை
யுணர்பவ ராமால் வாழ்முற்
றுணர்ந்த வர்க்கன்பு செய்வாம். (21)

(இ - பொ.) அறிவான், அறிவிப்பான் என்று உணரப்படும் இரண்டு வகுப்பினர் உள்ளும், பசு ஆகிய ஆன்மா அறிபவன் என்பதனை அறமுதல் நாலு மறிந்த சனகாதி முனிவர்களுக்குத் தெளிவித்து மேலே உணரவேண்டிய பதமுத்தியைத் தெரிந்தும், சின்முத்திராங்க மரபா யுண்மை ஞானம் உபதேசிக்கும், நெருங்கியடர்ந்த வடவால மரத்தின்கீழ் வாழ் முழுதுமுணர்ந்த தட்சிணா மூர்த்திக் கடவுளுக்கு அன்பு செலுத்துவாம். (எ—று.)

(அ- ப.) பசு = ஆன்மா.
தெளித்து = தெளிவித்து.

22. சூதசங்கிதை

712. பகரரிய தன்றொழிலு மேலான
வருட்சத்தி பதிவு மென்றுந்
தகரரிய நித்தியமு முயிர்கடிரு
வடிநீழற் சையோ கத்தாம்
புகரரிய வுண்மையுஞ்செங் கைம்மலர்க்காட்
சியிற்றெரித்துப் போதம் பூப்ப
நிகரரிய கல்லாலின் புடையமர்ந்த
மாமணியை நினைத்து வாழ்வாம். (22)

(இ - பொ.) எடுத்தியம்புவதற்கரிய தன் தொழிலும், மேன்மையான அருட்சத்திப் பதிவும், அழியாத ஆன்ம நிலைபேறும், உயிர்கள் இறைவன் திருவடிநீழலில் கூடும் உண்மையும் சின்முத்திராங்க மரபில் கல்லால மரத்தின் அடியில் இருந்து தெளிவிக்கும் தட்சிணாமூர்த்தியாகிய மாமணியைத் தியானித்து வாழ்வாம். (எ - று.)

23. திருச்செங்கோட்டுப் புராணம்

73. ஆல மாநிழற் கீழிருந் தருங்கலை யருள் செயுந் திருவாயு
மால மாநிழற் கண்டமுந் தென்முகத் தழகுமோர் குறும்பூத
மால மாநிழற் றிடமித பதமுநா லத்தமு மவற்றோர்கை
யால மாநிழ லிதுவெனு ஞானமுத் திரையுமுற் றகஞ்சேர்ப்பாம். (23)

(இ - பொ) கல்லால மரத்தின் நிழற் கீழிருந்து, நான் மறை யாறங்க முதலாய கலைஞானங்களை (சனகாதி முனிவர்களுக்கு) உபதேசிக்குந் திருவாயும், ஆலகால விடமுண்ட நீலகண்டமும், தென்முகத்தின் முகமாயிருந்த கொலுவழகும், குறுகிய முயலகன் என்னும் ஒரு பூதத்தை மிதிக்கும் மலர்கள் நிறைந்த பாதங்களும், நான்கு கரங்களும் அவற்றுள் ஒன்று அகலமான நிழலைத் தரக்கூடியதென்னும் ஞான முத்திராங்கமுமாகியவற்றை உற்று நோக்கி நிட்டை கூடுவாம்.(எ-று.)

(அ - ப.) நிழல் கண்டம் = நீலகண்டம்.
ஆலம் = மலர்
அத்தம் = கை
ஆலம் = அகலம்.

சாத்திரங்கள்

24. சத்திய ஞானபோதம்

714. கல்லா லின்புடை நல்லார் தொழுதெழச்
சின்முத் திரையொடுந் தென்றிசை மூர்த்தியாய்த்
தனுது மொழியைத் தடக்கை யினேந்தி
யனாதி முத்தன் யானென வமர்ந்தாங்
கறம் பொருளின்ப மருளிய பின்றை
மொழியா மொழியான் முதுவீ டளித்த
பெருந்தகைப் போற்றுதும் பிறப்பறும் பொருட்டே. (24)

(இ - பொ.) கல்லால மரத்தின் கீழ் நல்லோர்களாகிய சனகாதி முனிவர்கள் பணிந்து நிற்க, சின்முத்திராங்க மரபோடும், தென் பாலின் முகமாய்த் தம்முடைய அபய வரதத்தை யுள்ளங்கை யெனத் தாங்கிக்கொண்டு ஆதி மத்தியாந்தமில்லாத முத்திநாதன் யானே யென எழுந்தருளி, அறமும், பொருளும், இன்பமும் உபதேசித்த பிற்பாடு, சொல்லாத சொல்லால் மோட்ச வீடளித்த, பேரருளுடையானாகிய தட்சிணாமூர்த்தியை, நமது பிறப்பறும் பொருட்டாகப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) தடக்கை = உள்ளங்கை.
பின்றை = பின்னை.
மொழியா மொழியால் = சொல்லாத சொல்லால்.
முதுவீடு = பேரின்ப வீடு.
பெருந்தகை = பேராண்மை.

25. பதிபசுபாச விளக்கம்

715. வீரா தனத்தி லெழுந்தருளி மின்னிற் சிறந்த வேணியராய்த்
தீரா வையந் தீர்த்தருளுஞ் சின்முத் திரைச்செங் கையினராய்ப்
பாரோர் விண்ணோர் பணிந்தேத்தப் பரம குருவாய்ப் பலகாலு
மோரா னீழ லமர்ந்தாரை யுள்ளும் புறம்பும் வணங்குவாம். (25)

(இ - பொ.) மின்னலைப் போன்றும் சிறந்த சடாதரராய் வீரசிங்காதனத்தில் எழுந்தருளியிருந்து, நீங்காத சந்தேகத்தை ஐயந்திரிபறத் தெளித்தருளும் ஞானமுத்திராங்க மரபினராய்ப் பூலோக வாசிகளும் வானுலகத்தாரும் பணிந்தேத்திவர, எக்காலமும் ஓர் கல்லால மரத்தின் நிழற்கீழ் பரம ஞானாசாரியனாய் விளங்கும் தட்சிணாதிக்க மூர்த்தியை உள்ளும் புறம்புமாக வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) வீராதனம் = வீரசிங்காதனம்.
வேணி = சடை.
பலகாலும் = எந்நாளும்.

716. மூலமா யெவைக்கு மறிவொணா வுருவாய் மும்மலங் களைந்தவர்க் கெளிதா
யாலபோ சனஞ்செய் தழிவிலா தவனா யருமறைச் சிரத்தொளிர் பவனாய்ப்
பாலலோ சனனாய்ப் பசுத்தொறும் பதியாய்ப் பக்குவச் சனகனா தியர்க்கா
யாலமா நீழ லமர்ந்துறை பவனை யகத்தவி சிருத்தியின் படைவாம். (26)

(இ - பொ) அண்ட சராசரங்களெவைக்கும் மூலகாரணமாய், திரிமலமும் பற்றற அகன்ற அடியார்க்கெளியனாய், ஆலகால விடத்தை யுண்டழியா நீலகண்டனாய், அரிய வேதங்களின் முடியில் விளங்கப்பட்டவனாய், பரிபாலனஞ் செய்யும் கருணைநோக்கனாய், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவர்க்கும் பசுபதியாய், பரிபக்குவப்பட்ட சனகாதி முனிவர்களுக்காகக் கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளும் தட்சிணாமூர்த்தியை உள்ளன்பாகிய ஆசனத்தில் வீற்றிருக்க வைத்துப் பேரின்ப மடைவாம். (எ – று.)

(அ - ப.) பசுத்தொறும்பதி = பசுபதி
தவிசு = ஆசனம்.

26. சித்தாந்த தரிசனம்

717. சற்குருவாய் முன்னாட் சனகாதி கட்கருளு
முக்கணனை நாவே மொழி. (27)

(இ - பொ.) பரமஞானாசாரியனாய், முற்காலத்தில் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரராகிய நால்வர்கட்கும், அறமாதி நான்கும் அருள் புரியும் முக்கணனாகிய தட்சிணாமூர்த்தியை மனமே ! நாவாரத் துதி. (எ - று.)

(அ- ப.) சற்குரு = நல்லகுரு.

27. தேவாங்க புராணம்

718. வருபிறவி நெடுங்கேதக் கொடுங் கோடை
யொடுங்காம வடவைத் தீயு
மொருவவரு வடநிழலின் மூவாத
நால்வர்தம துளத்தி னூடு
பொருவரிய மெய்ஞ்ஞானப் பயிரெழுந்தா
னந்தசிவ யோக வாய்ப்பக்
கருணைமழை பொழிமவுனக் கயிலைமுகி
லிணையடிப் பொற்கமலஞ் சேர்வாம். (28)

(இ - பொ.) படைப்புக் காலந் தொடங்கி ஆன்மாவை விடாது பற்றி வருகின்ற பிறவியாகிய, பெரியதுன்பமாகிய தீயவேனிலுடனே, காம நோயாகிய வடவாமுகாக்கினியும் நீங்கப் பெரிய கல்லால மரத்தின் நிழலின் கண் (எழுந்தருளிய) கெடாத (சனகர் முதலாகிய) நால்வர் தமது மனத்தின்கண், ஒப்பில்லாத உண்மை ஞானமாகிய பயிரானது முளைத்து, பேரின்பமாகிய சிவதத்துவானுபவம் சித்திக்கும்படி, கருணையாகிய ஞான மழையைப் பெய்த ஞானத்தையுடைய கயிலைமலையின்கண் எழுந்தருளிய மேகம் போன்ற (ஞானதேசிகராகிய தட்சிணாமூர்த்தியுடைய அழகான தாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகளையும், எமது பிறவித்துன்பம் நீங்குமாறு வழிபட அடைவேம். (எ - று.)

(அ – ப.) கேதம் = துன்பம்.

28. ஞான விளக்கம்

719. கல்லாலின் கீழிருந்த கண்ணுதலை மாமேரு
வில்லாற் புரமெரித்த வேதியனைச்—சொல்லாமற்
சொல்லிப் பிறப்பறுத்த தூயவனை நன்னெஞ்சே
சொல்லிப் பல்காலுந் தொழு. (29)

(இ - பொ.) கல்லால மரத்தின் நிழற் கீழிருந்த நெற்றிக் கண்ணனாய், மேருவை வில்லாகக்கொண்டு திரிபுர தகனஞ் செய்த வேத முதல்வனாய், சனகாதியற்குச் சொல்லாமற் சொல்லிப் பிறப்பறுத்த பரிசுத்தனாய் விளங்கும் தட்சிணாமூர்த்தியை நற்குணமுடைய நெஞ்சமே பலகாலமும் தோத்தரித்துத் தொழுவாம். (எ - று.)

720. அன்னை வயிற்றி லமுக்கிச் சிலகாலம்
பின்னை யுலகிற் பிறப்பித்து - மன்னுகலை
யெல்லா மறியவெனக் கென்போல வந்தாண்ட
கல்லாலா முற்றுமெனைக் கா. (30)

(இ - பொ.) தாயாருடைய கர்ப்பத்தில் பத்துமாத காலமாய் வைத்திருந்து, பிற்பாடு உலகத்திலே பிறக்கும்படி செய்து, அடியேன் சகல கலைஞானங்களையும் அறிந்துய்ய அடியேனைப் போலவே மானிடச் சட்டை சாத்தி வந்து ஆட்கொண்ட, கல்லால மர நீழலிலிருக்கப் பட்ட தட்சிணாமூர்த்தியே! ஏழையேனை முழுமையும் காப்பாயாக. (எ - று.)

29. அதிரகசியம்

721. பால னாயனை திருமுலை பருகினும் பருவ
வேல வார்குழ லிதழ்வெள்ளத் தழுந்தினு மிளையாக்
கோல னாயுயி ரிழப்பினுங் குறிக்கொளா தொழியே
னால நீழலி லமர்ந்தமுக் கண்ணனுக் கன்பே. (31)

(இ - பொ.) பாலகனாயிருந்து, அன்னையின் முலைப்பாலைப் புசிப்பதாயிருந்தாலும், வேல் போன்ற கண்களையுடைய பூங்குழலினார் அதராமிர்தத்தை உண்டழுந்தினாலும், கோலாகலக் குமரனாயிருந்து உயிரைப் போக்கிக் கொண்டாலும், வடவால மரத்தின் நிழலில் எழுந்தருள் முக்கண்ணனாகிய தட்சிணாமூர்த்தியின் அன்பைத் தியானியாது மறவேன். (எ - று.)

(அ - ப.) ஏலவார் குழல் = மயிர்ச் சாந்தையணிந்த கூந்தலையுடைய பெண்.
இதழ்வெள்ளம் = அதரபானம்.

உ

கணபதி துணை

ஏழாம் பகுதி

வைரவக் கடவுள் வணக்கம்

1. கந்த புராணம்

722. பரமனை மதித்திடாப் பங்க யாசன
னொருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம். (1)

(இ - பொ.) முற்காலத்தில் சிவபிரானை அவமதித்த தாமரை யாசனனாகிய பிரம்மதேவனது ஒப்பற்ற நடுத்தலையைக் கிள்ளி, மற்றைய தேவர்களது உதிரத்தையும் கருவத்தையும் வாங்கிக் கொண்டு, அவர்களுக்குத் தண்டனை புரிந்த வைரவக் கடவுளைத் துதிப்பாம். (எ—று.)

723. வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம். (2)

(இ - பொ.) கடுங்கோபமுள்ள வடவா முகாக்கினியானது, தன்மீது போர்த்துக்கொண்ட கருநிறமமைந்த புகையைப் போலவும், ஆலாலத்தைப் போலவும், சிவந்த பிரகாசமுடைய திருமேனியின்மீது விசேடித்த சிறப்பமைந்த நீலமணியின் நிறம் வாய்ந்த சட்டையணிந்துள்ள வைரவக் கடவுளின் பொன்மயமான திருவடிகளைத் துதிப்பாம். (எ—று.)

(அ- ப.) ஆலம் = விடம்.

---

2. பழைய காஞ்சிப் புராணம்

724. கொச்சையறி வுற்பவமாங் கொள்கையினா லரிபிரமர் கூடி வீணின்
மெய்ச்சமரம் புரிந்திகலி யொருவரொரு வரைமிகவும் வெறுக்கு நாளி
லச்சுறவுற் றவரகந்தை விடுமாறு நெருக்கி யினிதருளே செய்யுங்
கச்சிவடு கக்கடவுண் முச்சிகைவேற் படையினையே கருதி வாழ்வாம். (3)

(இ - பொ.) அஃறிணை யுயிராகிய அன்ன வராகப் பிறப்படைந்ததனால், பிரம்ம, விஷ்ணுக்கள் சேர்ந்து சண்டையிட்டுப் பகைத்து, ஒருவர்க்கொருவர் மிகவும் வெறுத்துக்கொள்ளும் நாளில், அவர்கள் கர்வத்தை விடும்படியாகப் பயப்படுத்தியும், நெருக்கி யமுக்கியும் திருவருள் புரியுங் காஞ்சி வடுகக் கடவுளின் முத்தலைச் சூலாயுதத்தினைப் போற்றுவாம். (எ-று.)

(அ - ப.) கொச்சை = கீழ்மை.
அறிவுற்பவம் = அறிவு உற்பத்தி.
சமரம் = சண்டை.

இகலி = பகைத்து.
அச்சறவுற்று = பயப்படுத்தி.
வடுகன் = வைரவன்.

3. திருவாவடுதுறைப் புராணம்

725. காலன் மார்பிறக் கான்மலர் நீட்டிய
சீலன் கோயிற் றிறமிகழ்ந் தோர்களைச்
சூல மேற்றுஞ் சுழல்விழிக் கேத்திர
பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவாம். (4)

(இ-பொ.) எமனுடைய மார்பு முறியும்படி (மலர் போலும்) காலைத் தூக்கி நீட்டி உதைத்தருளிய குணசீலனும் வடுகக் கடவுளின் கோயிற் பெருமைகளை இகழ்ந்து பேசியவர்களைச் சூலாயுதத்தால் குத்தும் சுழல் கண்ணனுகிய வைரவக் கடவுளின் பொன்னடிகளை நம்பிப் பணிவாம். (எ-று.)

(அ-ப.) இற = முறிய.
நீட்டிய = நீட்டியுதைத்த.
ஏற்றும் = குத்தும்.
கேத்திரபாலன் = பூபாலன், வைரவன்.

4. காஞ்சிப் புராணம்

726. எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே
தெளியுமா வலியைச் செற்ருேற் செகுத்துரிக் கவயம் போர்த்த
வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வாம். (5)

(இ-பொ.) கடல் சூழ்ந்த உலகத்தின்கண் விசுவாசமில்லாமல் எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் பார்த்து அடிக்கும் என்னும் பழமொழிக் கிணங்க, பூர்வம் மாவலி தலைமேல் கால் தூக்கிய வாமனனை அழித்து, அவன் தோலைக் கவசமாகப் போர்த்துக் கொண்ட கச்சிக் காவலரும், காருண்ய மூர்த்தியுமான வயிரவமூர்த்திக்கு அன்பு செலுத்துவாம். (எ - று.)

(அ-ப.) இருநீர் = ஈரலைகளையுடைய கடல்.
வைப்பில் = வையகத்தில்.
செகுத்து = அழித்து.
அவயம் = அவயவம்.

5. திருவானைக்காப் புராணம்

727. உலக மளித்தல் சுதந்தர மன்றுவண
முயர்த்தோற் கெனவ வன்சே
யிலகு முருவம் பொடித்த வன்பா
லெழுந்து படைப்புஞ் சுதந்தரமன்

றலர்மெல் லணையாற் கெனவவனை
யரங்கத் திசைமாமு கனாக்கிப்
பலரும் வெருவப் பொழிநெய்த் தோர்ப்பயிக்கம்
புகுந்தோன் பதம் பணிவாம். (6)

(இ-பொ.) கருடக் கொடியோனாகிய மகாவிஷ்ணுவுக்கு உலகம் அளித்துப் பாதுகாத்தல் சுதந்தரமான தன்றென்று கூற, உயிர்களைப் படைப்பதும் பதுமனுக்குச் சுதந்தரமான தன்றென்று பிரம்மதேவன் தலை அழிய நான்முக முடையவனாக்கி, பலரும் அஞ்சச் சிந்துமவ் இரத்தத்தில் பிச்சை யெடுத் தோனாகிய முழு நீற்றுருவ வைரவ மூர்த்தியின் பாதம் பணிவாம். (எ-று.)

(அ-ப.) சுதந்தரம் = உரிமை.
உவணம் = கருடன்.
அரங்க = அழிய.
வெருவ = அஞ்ச.
நெய்த்தோர் = இரத்தம்.
பயிக்கம் = பிச்சை.
பயிக்கம் புகுந்தோன் = பிச்சாடனன்.

6. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

728. தருணமலர்க் கோயிலிறை யுச்சிமுடிக்
கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி
யருணநீர்ப் பலிக்கிமையோர் நடுங்கவலம்
வந்து மாற்காவி நல்கி
மருணனிசெய் மூவிலைவேண் மணிநாக
முடுக்கையிவை வயங்க வேந்திக்
கருணைமறம் பூண்டெழில்செய் கடைஞாழல்
வயிரவரைக் கருதி வாழ்வாம். (7)

(இ - பொ.) செந்தாமரையில் வாழ் பிரம்மனுடைய உச்சிமுடிக் கபாலத்தை உள்ளங் கையிலேந்திக் கொண்டு தேவர்கள் பயந்து நடுங்க வலம்வரும்படியாகச் சூரியோதய பலிபிச்சை எடுத்துத் திருமாலுக்கு ஆவி கொடுத்து, மயங்கிய போரை வெல்லத்தக்க மூவிலைச் சூலமும், மாணிக்கமுடைய பாம்பும், உடுக்கையு மாக இவை விளங்கத்தாங்கி, மறக்கருணை பூண்டு, கொன்றைப் பூவணியும் வைரவமூர்த்தியைக் கருதித் துதிப்பாம். (எ - று.)

7. திருச்செந்தூர்ப் புராணம்

729. கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையா
னஞ்சு கம்மிலொன் றற்றிடக் கிள்ளியே
மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்நிறக்
கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவாம். (8)

(இ - பொ.) கிளியைப் போல வேதாத்தியயனம் செய்யும் பிரம்மதேவனுடைய ஐம்முகத்தில், ஒருதலையற்று விழக்கிள்ளி, மேகத்தினும் அதிகமான கருநிறங்கொண்ட (யானைத்தோல்) போர்த்துக் கொள்ளும் வைரவ மூர்த்தியின் பொன்னடிகளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) கிஞ்சுகம் = கிள்ளை.
கஞ்சுகம் = சட்டைப் போர்வை.

8. கடம்பவனப் புராணம்

730. கருதரிய லளிதைபர னெற்றி யிற்றோன் றிச்சூல கபால மேந்தி
வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனா யண்ட தத்து வங்கண் மாற்றி
யரிசரும கஞ்சுகியாய் வேதவெகி னூர்ந்து முன்போ லவையுண் டாக்கி
யிருமைபெறக் காத்தருளுங் கேத்திர பாலன் றிருத்தா ளேத்தல் செய்வாம். (9)

(இ - பொ..) உமையம்மையின் நாயகராம் பரமசிவன் நெற்றியில் தோன்றிச் சூலமேந்தி, பிரமனுடைய கபாலத்தையுமேந்தி, நரசிங்கமூர்த்தியின் உடலைக் கிழித்து, அதன் தோலை இடுப்பில் உடையாக அணிந்தும், வயிரவன் எனும் பெயரைத் தாங்கி, அண்ட தத்துவங்களை மாற்றி யமைத்து, சீவான்மாக்களை இருமை பெறக் காத்தருளும் கேத்திரபாலனும் வயிரவமூர்த்தியைப் போற்றி வணங்குவாம். (எ - று.)

9. கடம்பர் கோயிற் புராணம்

731. கயிரவ நாண்மலர்க் கவின்க ணார்மயற்
செயிரவ நாடொறு மியற்றி யேதிரி
யுயிரவ நானென வொருது காத்தருள்
வயிரவ நாதனை வணங்கி வாழ்த்துவாம். (10)

(இ - பொ.) ஆம்பற் பூவைப்போலும் அலங்காரக் கண்களுடைய மாதர்களின் நோயை எந்நாளுமே யுண்டாக்கித் திரியும் மனத்துள் நான் எனது என அலையாமல் இருக்கக் காத்து இரட்சிக்கும் வயிரவக் கடவுளை வணங்கி வாழ்த்துவாம். (எ -று.)

(அ - ப.) கயிரவம் = ஆம்பல்.
செயிரவம் = நோய்.
ஒருது = அலையாது.

10. புலியூர்ப் புராணம்

732. விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா புரத்தினிது மேவி னோர்கண்
மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற் சூலத்தின் மருவ வைத்தே
யுதிப்பாலன் னையர்முலைகண் மீட்டருந்தா வகைமுத்தி யுதவுந் தில்லைப்
பதிப்பால வயிரவன்றன் பாதசரோ ருகங்களென் றும்பரவி வாழ்வாம். (11)

(இ - பொ.) விதியால் வந்த படைத்தலான பிறவி வினையைத்தவிர்க்கும் புலியூரின்கண் வாழப்பட்டவர்களுக்கு மதிப்பில்லாமல் துன்புறுத்தும் மலமாயா கன்மத்தை மூன்றிதழ்களுடைய சூலாயுதத்தில் அடக்கி, மீண்டும் பிறந்து தாயினர் முலைப்பாலை உண்ணாவண்ணம், பதமுத்தியை உபகரிக்கின்ற தில்லையம்பலம், (பால) வயிரவக் கடவுளின் பாதாம்புயங்களை என்றைக்கும் போற்றி வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) விதி = படைப்பு.
வியாக்கிரமாபுரம் = புலியூர்.
தில்லைப்பதி = தில்லையம்பலம்.
சரோருகம் = தாமரை.

11. சீர்காழிப் புராணம்

733. துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள்வலிதனை வாங்குஞ்
சிங்க வேற்றுரி யரைக்கசைத் துலகெலாந் தேர்ந்தளந்த வன்மேனி
யங்கம் யாவுமோர் கதையதாக் கொண்டத ளங்கியாப் புனைகாழிச்
சங்க வார்குழைச் சட்டைநா யகன்றுணைத் தாமரைச் சரண்போற்றி. (12)

(இ-பொ.) நவரத்தின கசிதமான தம்பத்தைப் பிளந்துகொண்டு வந்து, இரணியன் வயிற்றைக் கிழித்து அவன் புயவலிமையை வாங்கும் நரசிங்கத்தைக் கொன்று, அதன் தோலை இடுப்புக்கு ஆடையாக அணிந்தும், ஈரடியாலே மூவுலகளந்தோனாகிய வாமனன் உடல் உறுப்புக்களை யெல்லாம் ஒரு கதாயுதமாகக் கொண்டும், தோலை உடையாக உடுத்தும் சீகாழிச் சங்கின் கவசகுண்டலராகிய சட்டை நாயகருடைய இரண்டு பாதார விந்தங்களுக்கும் வணக்கம். (எ-று.)

(அ - ப.) சிங்க ஏறு = நரசிங்கம்.
அதள் = தோல்.

12. திருப்பூவணப் புராணம்

734. அரிபிரம ரகந்தைகெட வண்டங்க
ளுடைந்தெரியு மங்கிக் கோட்பட்
டுரியபல வுலகமெலா மொழிந்திடுநா
ளவர்கடம துடன்மேற் கொண்டு
குருதிவாய் கொப்பளிக்குங் கூரயின்மூ
விலைச்சூலங் கொண்ட திண்டோட்
கருவரைநேர் தருவடுகக் கடவுளெமைப்
புரப்பக் கைகூப்பு வாமே. (13)

(இ-பொ.) ஆகாயமெல்லாம் பற்றி எரியும் அக்கினிச் சுவாலைப் பட்டு, சுதந்தரமான பல உலகங்களும் ஒழிந்திடுங் காலத்திலே பிரம்ம விஷ்ணுக்களின் கர்வம் கெட்டொழியும்படியாக, அவர்கள்தம் உடல்மேல் பாய்ந்து, இரத்தத்தைச் சொரிவிக்கும் கூரிய வேலும், மூவிலைச் சூலமுங்கொண்ட (மலைபோலும்) புய

வலிமையுடைய வடுகக் கடவுள், நம்மைக் காக்கும்படியாக நாம் அவர்க்குக் கை கூப்பி அஞ்சலிப்பாம். (எ - று.)

(அ-ப.) அண்டங்கள் = ஆகாய முழுதும்.
உடைந்தெரியும் = பற்றி எரியும்.
குருதி = இரத்தம்.
அயில் = வேல்.
கருவரை நேர்தரு திண்டோள் = மலைபோன்ற புயவலிமை.

13. அவிநாசிப் புராணம்

735. அஞ்சுகனை யாதிலகு மாடரவக்
கங்கணனை யகலும் வானில்
விஞ்சுகனை மாரிநிகர் மேனியனை
வாசியென விரைந்து தாவும்
பைஞ்சுகனை யேயெரித்த புக்கொளியா
ரெயில்காவல் பரிக்கும் வீரக்
கஞ்சுகனை வேணிமலர்க் கிஞ்சுகனைப்
பரசுகனைக் கழறல் செய்வாம். (14)

(இ-பொ.) அழகிய சுகங்குறையாது விளங்கியாடும் அரவாபரணனாய், பரந்த ஆகாசத்தின் மிகுந்த மழைபோலும் திருவருளுடைய திருமேனியனாய், பாணம் விடுத்துக்கொண்டே சமீபித்துவரும் மன்மதனை எரித்த சிவபிரானுடைய எல்லைக் காவல் காக்கும் வீரவைரவனாய் விளங்கும் சிவந்த கொன்றை மலர் அணிந்த சடாதரனும் பரமசுகனைத் துதிப்பாம். (எ-று.)

(அ-ப.) விஞ்சு = மிகுதி.
கனைமாரி = கனத்த மழை.
வாசி = பாணம்.
பைஞ்சுகன் = மன்மதன்.
புக்கொளியார் = பரமசிவன்.
கிஞ்சுகம் = சிவப்பு.

14. பவானி கூடற் புராணம்

736. பொருதலை யுகளும் வேணிப் புனிதனே பரமென் றுள்ளங்
கருதலை யயனீ யென்னக் குடிலையுங் கழறத் தேரு
வொருதலை யுகிராற் கிள்ளி யும்பர்மா லுதிரம் வாங்கும்
விரிதலைச் சூலச் செங்கை விமலனை வணக்கஞ் செய்வாம். (15)

(இ-பொ.) ஐம்முகம் பொருந்தி உள்ளதால் சிவபெருமானென்று கருதிக் கர்வித்த வனும், பிரணவத்துக்குப் பொருள் சொல்லாதவனும் நீதானென்ன கூறி, பிரம்மனின் ஒரு தலையை நகத்தினாற் கிள்ளி, திருமால் உதிரத்தை வாங்கும் மூவிலைச் சூலாயுதபாணியனாகிய வைரவனை வணங்குவாம். (எ - று.)

(அ-ப.) பொருதல் = ஒவ்வல்.
கருதல் = நினைதல்.
குடிலை = பிரணவம்.

15. திருவோத்தூர்ப் புராணம்

737. வேரிமலர்ப் பண்ணவன்றன் சிரமொன்றை
நகநுதியால் வீட்டி யுற்ற
சோரிமலர் தலைநிலத்திற் பாயாதச்
சிரத்தேற்றுத் தொடர்ந்து போந்து
வாரிமலர்க் கண்வளர்மா னெற்றி யெற்றிக்
குருதிகொடு மமதை நீக்குங்
காரிமலர்க் கழலிரண்டுங் கரமிரண்டுங்
கூப்பிநிதங் கருதி வாழ்வாம். (16)

(இ - பொ.) செங்கமலாசனனாகிய பிரம்மதேவனுடைய தலைகளில் ஒன்றை நகங்களினால் கிள்ளி, ஒழுகிய இரத்தம் பூமியிற் விழாமற்படி அம்பில் கோத்துக் கொண்டு, அதேவிரைவில்போய்ச் சமுத்திரத்தில் பள்ளி கொள்ளும் திருமால் நெற்றிக்கிலக்காகவிட்டு மூளையைப் பேர்த்துக் கர்வத்தைப் போக்கும் வைரவருடைய மலர்ப்பாதங்களிரண்டையும் எந்நாளும் இரு கரங்களாலும் கூப்பி வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) வேரி = மணம்.
நுதி = முனை.
சோரி = உதிரம்.
அச்சிரம் = அஸ்திரம்.
பாயாது = பாயாமற்படி.
ஏற்று = கோத்து.
தொடர்ந்து = உடனே புறப்பட்டு.
எற்றி = பிரயோகஞ் செய்து.
குருதி = இரத்தம்.
மமதை = கர்வம்.
காரி = வைரவர்.

16. மருதூர்ப் புராணம்

738. கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று
வாய்முடுவற் குதிரை யானைப்
பாணியிற்கங் கணம்புனைந்த வுரகமணி
வெயில்விரிக்கும் பண்பி னானை
வேணியரன் றிருக்கோயில் காப்பானை
நிருவாண வேடத் தானை
வாணிலவு முத்தலைவேல் வடுகனைச்செந்
தமிழ்பாடி வணக்கஞ் செய்வாம். (17)

(இ-பொ.) கோணி வளைந்த மூன்றாம் பிறைச் சந்திரனைப்போல், கூரிய வக்கிர தந்தமுள்ள நாயைக் குதிரை வாகனமாகக் கொண்டவனாய், கையில் கங்கணமாகக் கட்டிய அரவத்தின் மாணிக்கம் வெயில் போல் பிரகாசிக்கத் தக்கவனாய், சடாதரனாகிய சிவபெருமான் கோயிலைக் காக்கப்பட்டவனாய் விளங்கி, நிருவாண வேடங்கொண்டவனாய் (வாழ்ந்து நிலைபெறும்) முத்தலைவேல் வடுகனை செந்தமிழ்ப் பாமாலையால் துதித்து வணங்குவாம். (எ-று.)

(அ-ப.) முடுவல் = நாய்.
உரகம் = பாம்பு.
வாணிலவு = வாழ்நிலவு.

17. ஆதித்தகிரிப் புராணம்

739. பரநாத வரைமணிகிண் கிணியொலிப்பப்
படமெடுத்துப் பார்க்குந் துத்தி
வரநாக கங்கணத்தான் மாலகந்தை
யிருளகற்ற வந்த சோதி
யுரனாரும் வித்துருமச் செஞ்சடையா
னருளுத்தி யுயரா தித்த
புரமேவு மணிவரைவாழ் சட்டைநா
யகன்மலர்த்தாள் போற்றி வாழ்வாம். (18)

(இ - பொ.) பரநாத மணிச்சிலம்பு கிண்கிணியென ஒலிக்கும்படியாகப் படமெடுத்தாடும் பொறிகளையுடைய அரவை ஆபரணமாக அணிந்தவனாய், ஆணவ மலவிருளை நீக்கவரும் பரஞ்சோதியாய், மார்பினிடமாக அணியும் பவளம் போன்ற செஞ்சடைக் கடவுளின் அருளுடைய கங்கையின் வளப்பம் பெருகும் ஆதித்தபுரத் திருக்கோயிலில் வாழ் சட்டை நாயகனுடைய பாதாம் புயங்களைப் போற்றி வாழ்வாம். (எ – று.)

(அ-ப.) துத்தி = படப்பொறி.
மாலகந்தை = ஆணவமலம்.
உரன் = மார்பு.
வித்துருமம் = பவழம்.
உத்தி = கங்கைநீர்
அணிவரை = திருக்கோயில்

18. திருநெல்வேலிப் புராணம்

740. பகருமறைப் பணைவனத்திற் பண்டிருந்த தாபதர்க
ணிகரிலவந் தவமெனவே நெறியிலவர் செயும்வேள்விப்
புகர்முகவெங் கரியுரித்த புரிசடையோ னெல்வேலி
நகரினிது புரந்தசட்டை நாதனிரு பதம்பணிவாம். (19)

(இ-பொ.) சொல்லா நின்ற வேதாரண்யத்தில், பூர்வமிருந்த சைன முனிவர்கள், பிரமாணமில்லாத அவத்தைத் தவமென்று நெறியில்லாமற் செய்யும் யாகத்தின் கரிய யானையை உரித்த சடாதரனாகிய ஈச்சுரனுடைய திருநெல்வேலித்

ஞாலத்தை இனிது காத்த சட்டைநாதர் திருவடியிணைகளைப் பாடிப் பணிவாம். (எ – று.)

(அ-ப.) மறைப்பணை வனம் = வேதாரணியம்.
தாபதர்கள் = (சயின) முனிவர்கள்.
புரந்த = பாதுகாத்த.

19. மருதவனப் புராணம்

741. மேலையோர் கற்பத் திறுதியிற் கதிர்கண்
மேவுடுக் கணங்கள் கீழுறத்தீம்
பாலையொத் திருசங் கீன்றமுத் தினங்கள்
பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியந் தோணி
விளங்கிடு வடுகனாங் கடவுள்
காலைமென் போதை யுச்சியிற் கொள்வாங்
கடுந்துயர் மாலைதீர்ந் திடவே. (20)

(இ - பொ.) முன் ஒரு கற்ப கால முடிவில் மின்னொளிகளையுடைய நட்சத்திரக் கூட்டங்கள் கீழுதிர்ந்தாற் போல, பால் என வெளுத்த சங்குகள் ஈனும் முத்துத் தினுசுகள் பரவும்படியாகப் பூமியைச் சுற்றி வளைத்தெழுந்த கடலில் மிதந்த சீகாழியின் தோணிபுரம் என விளங்கும் வடுகநாதக் கடவுள் திருவடிக் கமலங்களை நமது கடுந்துயராம் மலமயக்க மொழிய உச்சி மேற்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) இறுதி = முடிவு
உடுக்கணம் = நட்சத்திரக் கூட்டம்,
வேலை = கடல்.
புகலி = சீகாழி.

20. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

742. புயற்காரின் வருமகவான் பணிவள்ளல்
பணிவிடைகள் பொருந்தி நாளுஞ்
செயற்காக வெங்கள் குலந்தனை
யடிமைகொண் டுவளர்தே வதேவ
னயற்காதி யமலனருள் செய்தபுர
மெனவுலக மனைத்துங் கூறும்
வயற்காழி நகர்ச்சட்டை நாதனிரு
பதமலரை வணங்கி வாழ்வாம். (21)

(இ - பொ.) மேகநாயகனாகிய இந்திரன் பணியும் வள்ளலாகிய சிவபெருமானுக்கு எந்நாளும் திருத்தொண்டு செய்வதற்காக, நம்முடைய குலத்தை அடிமையாகக் கொண்டு வளரும் தேவதேவனும், பிரம்மாதி தேவர் முதலானவர்களுக்கும் வரம் அளிக்கும் முதல்வனாகிய பரமசிவம் ஏற்படுத்தியதாம் என உலகமெல்லாங் கொண்டாடும் வயல் வளப்பமுடைய சீகாழிச் சட்டைநாதனுமான வைரவ மூர்த்தியின் பாதாம்புயங்களிரண்டையும் வணங்குவாம். (எ - று.)

21. காசிரகசியம்

743. தளம்பொலி மலரோ னாதி வானவர் தாழ்ந்து போற்ற
வுளம்பொலி காசி மேவு முயிர்கள் செய்பாவ மெல்லாங்
களம்பொலி யாது தண்டங் கண்டற லொழித்து முத்தி
வளம்பொலி வகைசெய் கால வயிரவற் கன்பு செய்வாம். (22)

(இ - பொ) தாமரைக் கமலாசனனாகிய பிரம்மாதி தேவர்கள் தாழ்ந்து போற்ற உள்ளம் மகிழும் காசியில் வாழ்கின்ற சீவாத்துமாக்கள் செய்த பாவங்களை யெல்லாம் தண்டிக்காது பணிந்து தண்டனிடக் கண்டே (வினையை) வேரற ஒழித்து, முத்தி சாம்பிராச்சியம் அடைய வழிகாட்டும் காலவயிரவற்கு அன்பு பூண்டொழுகுவாம். (எ - று.)

(அ - ப.) காலவயிரவர் = (காலகாலன்) யமனைத் தண்டித்த வைரவக் கோலம்.

22. திருநாகைக் காரோணப் புராணம்

744. பெருகுதன் புகழு ளேனோர் பிரதாப மடக்கி யாங்கு
முருகுதங் கலரின் மேலான் முண்டவெண் கபாலத் தூடு
கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீ ரேற்ற
திருகுதீர் வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம். (23)

(இ - பொ.) பெருகிய தன் பிரதாபத்துள் மற்றவர்களுடைய புகழை அடக்கிக் கமலாசனத்தின் மேல்வரும் பிரம்மனுடைய முண்டமான கபால ஓட்டில் கருகியநீலமேக சரீரம் கவிழ்ந்து புரண்டாலன்ன, சிவந்த இரத்தங்கொண்ட கள்ளமில்லா வடுகக் கடவுளின் சேவடிகளைச் சிரமேல் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) புகழ் = பிரதாபம்.
முருகு = தேன்.
செந்நீர் = இரத்தம்.
புத்தேள் = கடவுள்.

23. திருக்குடந்தைப் புராணம்

745. எழுவகைத் தாதுங் கூடி னியங்கிடு முயிரொன் றேனு
நழுவிடி னியங்கா வென்று நவிறலை வெளிசெய் தாங்கு
முழுவலி நெடியோ னாதி மொய்த்த வானவர்மெய் நெய்த்தோர்
வழுவறக் கபாலத் தேற்ற வடுகனை வணங்கி வாழ்வாம். (24)

(இ - பொ.) இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் ஆய தாதுவகை ஏழுங்கூடித்தான் உயிர்கள் நடைபெறும். இல்லாவிட்டால் ஒன்றும் நடைபெற மாட்டாது என்று சொல்லுவதைப் பிரசித்தப் படுத்தி முழுவன்மை அடைய மகாவிஷ்ணு முதலான தேவகூட்டங்களின் தேக இரத்தத்தைக் குற்றமற்ற பிரம்ம கபாலத்தில் எந்திய வடுகநாதக் கடவுளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) இயங்கிடும் = நடைபெறும்.
நவிறல் = நவில்தல் (சொல்லுதல்).
நெய்த்தோர் = இரத்தம்.
ஏற்ற = ஏந்திய.

24. மாயூரப் புராணம்

746. ஓங்குநாற் படைமுன் னஞ்சு மொள்ளுகிர்ப் படையுந் தேசு
வீங்குசக் கரமுன் னுன வெம்படை யஞ்சு மஞ்சுந்
தாங்குசூற் படையுங் கொண்டோர் தலைக்கல நெய்த்தோ ரேற்ற
பாங்குசேர் வடுகப் புத்தேள் பதமலர்க் கன்பு செய்வாம். (25)

(இ - பொ.) ஓங்கிய சதுரங்க சேனைகளும் அஞ்சத்தக்க நகக் கூர்மையும், அழகிய சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், கதையாய ஐம்படையையும், பயப் படத்தக்கதோர் சூலாயுதத்தையும் தாங்கிக் கொண்டு, பிரம்ம கபாலத்தில் இரத்தம் கொட்டிப் பாய்ச்சும் பெருந்தகையனும் வடுகநாதக் கடவுளின் பாத தாமரைகளுக்கு அன்பு செலுத்துவாம். (எ - று.)

(அ - ப.) நாற்படை = ரத கஜ துரக பதாதிகள்.
சூற்படை = சூலாயுதம்.
தலைக்கலம் = பிரம்மகபாலம்.

25. உறையூர்ப் புராணம்

747. உலகமூன் றினுக்குந் தானே யொருமுத லெனத்தெ ரித்தாங்
கலகிறீப் பொறிக டும்பி யலங்குமுத் தலைவே ருங்கி
வலனுடை மாய னுதி வானவர் செருக்கு மாறப்
பலருமுன் னஞ்ச நெய்த்தோர்ப் பலிகொண்டோன் சரணஞ் சார்வாம். (26)

(இ - ப.) சுவர்க்க, மத்திய, பாதாள மென்ற திரிலோகங்களுக்கும் தானே ஒரு முதல்வனெனத் தெரிவித்துக் கையில் அளவில்லாத தீப் பொறிகளைச் சிந்திப் பிரகாசிக்கும் முத்தலை வேலாயுதத்தைத் தாங்கி வலம்புரிச் சங்க மேந்திய மாயோன் முதலான வானவர்களின் கர்வமடங்கவும், அவர்கள் பற்பலவாறு பயப் படவுமாக இரத்தபலி வாங்கும் வைரவக் கடவுளின் சரணாரவிந்தங்களைச் சார்ந் தடைவாம். (எ - று.)

(அ - ப.) உலக மூன்று = சொர்க்க, மத்திய, பாதாளம்.
தெரித்து = தெரிவித்து.
அலங்கும் = ஒளிவீசும்.
வலன் = வலம்புரிச்சங்கம்.

26. திருவம்பர்ப் புராணம்

748. சுவைமுனந் தெரிந்து பின்புதற் குதவுந்
தூத்தவ வேட்டுவர் பொருவச்
செவைமலர்க் கிழவன் றலைச்சுவை முன்னந்
தெரிந்து பின்னக் குதவுகிரு

நவைகொண்மா னெய்த்தோர்ச் சுவைமுனந் தெரிந்து
நயந்துபி னத்தலைக் குதவுங்
கவைபடு திறற்சூ லமுங்கரங் கொண்ட
கடவுடன் சேவடி போற்றி. (27)

(இ - பொ.) முன்னே சுவை பார்த்துப் பின்பு தனக்குதவும் கண்ணப்ப நாயனாரைப் போலச் செந்தாமரையனாகிய பிரம்மன் தலைச் சுவையை முன்னே யுணர்ந்ததால், பின்னும் வளர்த்த நகமும் பழியாநின்ற திருமால் உதிரத்தைச் சுவைத்து முன்ன மினிமை யடைந்ததால், பின்னுமத்தகைய சமயங்கட்குதவா காரண வெற்றியுடைய சூலாயுதமும், கையிற் கொண்டேந்தும் வைரவக் கடவுளின் சேவடிகளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) தற்குதவும் = தனக்குதவும்.
தூத்-தவ-வேட்டுவர் = கண்ணப்பர்.
பொருவ = போல.
செவைமலர்க் கிழவன் = பிரம்மன்.

27. திருவாளொளிப்புற்றூர்ப் புராணம்

749. மறைகமழ் கபாலத் தோடு மாயவன் மேனி நெய்த்தோர்
துறைகமழ் கொடிய வெந்தீச் சூலமுங் கரத்திற் றாங்கி
முறைகம ழுலகில் யார்க்கு மூடிய செருக்கு மாய்க்கு
மிறைகமழ் வடுகப் புத்தே ளிணையடிக் கன்பு செய்வாம். (28)

(இ - பொ.) பிரம்மாவின் கபால ஓட்டில் மகாவிஷ்ணுவின் உதிரத்தை வாங்கும் கொடிய வெந்தீச் சூலத்தைக் கையில் தாங்கிக் கொண்டு, உலகத்தில் யாரார்க்குக் கர்வம் மூடியதோ அக் கர்வத்தை மாய்க்கும் இறைவனான வடுகப் பெருமானுடைய திருவடி இணைகளுக்கு அன்பு பூண்டு ஒழுகுவாம். (எ—று.)

28. விளத்தொட்டிப் புராணம்

750. இருட்பெரு நிரய மேவற் கேதுவாஞ் செருக்கு மேவில்
வெருட்பெருந் தண்ட மேவு மிகவுமென் றுணர்த்தி யாங்கு
மிருட்பெருஞ் செயலி னீங்கா மாலுடம் புரித்துப் போர்த்த
வருட்பெரு வடுகன் செம்பொ னம்புயப் பாதம் போற்றி. (29)

(இ - பொ.) அதியந்தகாரமான நரகம் அடைவதற்குக் காரணமாம் கர்வத்தைப் படைத்தால், மிகவுங் கொடூரமான தண்டனைக்குட்பட வேண்டுமென்று தெரிவித்து, மயக்கமான கொடுஞ் செயல்விட்டு நீங்கா உக்கிர நரசிங்கத்தைப் பிளந்து தோலை யுரித்துப் போர்த்த பேரருள் உடையோனாகிய வடுகக் கடவுளின் பொற்பாத கமலங்களைப் போற்றுவாம். (எ—று.)

(அ - ப.) இருட் பெருநிரயம் = பேரிருள் நரகம்.
தண்டம் = தண்டனை.
உடம்புரித்து = உடம்பின் தோலுரித்து.

29. கோயிலூர்ப் புராணம்

751. தெருட்பெரு நலன வாவித் தீவிர தரத்துற் றோர்க்கு
மருட்பெரு மாயை நூறி வல்வினைப் படலங் கீறிச்
சுருட்பெருங் கொடிய துக்க நிவர்த்தியுஞ் சுகத்தின் பேறு
மருட்பெருஞ் செயலா னல்கும் வடுகனை யடைந்து வாழ்வாம். (30)

(இ - பொ.) தெளிந்ததோர் பேரின்பத்தை இச்சித்து, தீவிரதரத்தை அடைந்தோர்களின் பெரு மயக்கமான மாயையை அழித்து, வல்வினை யென்னும், படலத்தைக் கீறி, சுருள்போல் பெருகுங் கொடுந்துக்க நிவாரணமும், பரமசுகத்தின் முத்திப் பேறும், திருவருட் செயலால் அருள்புரியும் வடுகக் கடவுளை அடைக்கலம் புகுந்து வாழ்வாம். (எ — று.)

(அ - ப.) அவாவி = கோரி.
நூறி = அழித்து.
தீவிரதரம் = அதியவசரம்.

30. திருக்குறுக்கைப் புராணம்

752. ஆக்கும் வினைமலர வனதன் றென்றற்
கவனுத் தமாங்க நான்குங்
காக்கும் வினைமாய வனதன் றென்றற்
கவன்மேனி கழிநெய்த் தோருந்
தாக்கும் வினையாள ருந்தேர் சான்றுரைக்கக்
கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு
போக்கும் வினைச்சூற் படையு பாங்கமுங்கொள்
வடுகனடி போற்றி வாழ்வாம். (31)

(இ - பொ.) தாழ்ந்த சிறுத்தொண்டருமறிந்து சாட்சி கூற, உண்டாக்கும் படைப்புத் தொழில் பிரம்ம தேவனுடையதல்ல வென்பதாய் அவனுடைய நான்கு முகமும், பாதுகாக்குந் திதித் தொழில் விஷ்ணுவினுடையதல்ல வென்பதாய் அவனுடைய இரத்தம் ஒழுகும் தேகமும் விளக்கும், கூரிய நகவொழுங்கும் உயிரைப் போக்கத்தக்க சூலாயுத மேந்திய கையும் கொண்ட வயிரவருடைய திருவடிகளைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) உத்தமாங்கம் = தலை.
வினையாளர் = குற்றேவலாளர்.
சான்று = சாட்சி.
உபாங்கம் = கை.

31. தனியூர்ப் புராணம்

753. மறைபுகழ் தானே யோம்ப வயங்கு கேத்திரத்தி னெல்லை
பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்ப்பினுக் கேற்ற தண்டங்
குறையற வியற்று தண்ட தரன்குறு காது தானே
முறையுற வுஞற்றிப் போக்கு முதல்வனை வணக்கஞ் செய்வாம். (32)

(இ - பொ.) வேதங்களால் புகழ்ந்து கொண்டாடத் தக்க சிவபெருமான் கோயில் எல்லையருகில் உடலை விட்டிறந்தவர்களின் பாவ சம்பந்தத்துக் கீடான தண்டனையைக் குறைவில்லாமல் நிறைவேற்றும் எமன் நெருங்காதவண்ணம் எல்லாந்தானே நெறி முறையாகச் செய்து, பாவத்தைப் போக்கி முத்தி தரும் வடுகநாதக் கடவுளை வணங்குவாம். (ப—று.)

(அ - ப.) கேத்திரம் = தலம்.
தண்டதரன் = எமன்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

எட்டாம் பகுதி

துர்க்கா தேவி வணக்கம்

1. திருப்பரங்கிரிப் புராணம்

754. பரங்கிரியின் மேவியருந் தவமிழைத்து விறல்சேர்ந்து பாரு ளோங்கித்
திரங்குலவு மவுணனையே வீட்டியவன் சிரமிதித்த சிலம்பி னாளை
வரங்குலவு வேலவனார் மணக்கோலங் கண்டிருந்த மகிழ்ச்சி யாளைக்
கரங்குலவு சங்காழி தரித்துவளர் துர்க்கைதனைக் கருத்துள் வைப்பாம். (1)

(இ - பொ.) திருப்பரங்கிரியிலிருந்து அருமையான தவஞ்செய்து வீர வலிமை பெற்று, உலகத் தோங்கித் திரங்குலவும் மகிடா சூரனைக் கொன்று, அவன் தலையை மிதித்த பாதச் சிலம்பினளாய், வரந்தரும் நமது வடிவேலருடைய (தெய்வயானை) திருமணக் கோலம் கண்டு மகிழ்ந்தவளாய், கைகளிரண்டிலும் சங்கு சக்கரம் தரித்து வளரும் துர்க்கா தேவியைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) விறல் = (வெற்றி) வலிமை.
அவுணன் = மகிடாசூரன்.
சங்காழி = சங்கு, சக்கரம்.

2. திருவாப்பனூர்ப் புராணம்

755. கருநடங் கழிக்கு மீசன் கடுமுய லகன்மேற் றான்செய்
திருநட மதற்கொவ் வாதென் செய்துவென் றிருக்க வெற்பி
னுருநடந் தனைய மேதி யுயர்சிர நெரிய நின்று
பெருநடஞ் செய்யுந் தெய்வப் பிராட்டியை வணக்கஞ் செய்வாம். (2)

(இ - பொ.) பிறப்பின் நடமாட்டத்தைக் கழிக்கும் நடராசப் பெருமான், முயலகன்மீது தான் நடிக்கும் திருநடனமும் இதற்கொப்பாகாது என்று சும்மா விருக்க, மலையசைந்தாற்போன்ற எருமைக் கடாவின் தலைநசுங்கி நொறுங்கும்படியாக நின்று பெரியதோர் நடனமாடும் தெய்வப் பிராட்டியாந் துர்க்கா தேவியம் மனை வணங்குவாம். (எ—று.)

(அ - ப.) மேதி = எருமை.
நெரிய = நசுங்கி நொறுங்க.

3. காசி ரகசியம்

756. நிறைகட லுடுத்த வைப்பி னிகரற முழங்கிப் பாயு
மிறைகெழு கூற்ற மூரும் வெந்தொழின் மகிட மஞ்சக்
கறைகெழு பிசித வூண்கொள் கருமகி டஞ்சாய்த் தும்பர்
குறையற முடித்த தெய்வக் கொற்றியை வணக்கஞ் செய்வாம். (3)

(இ - பொ.) கடலால் வளைந்து சூழப்பட்ட உலகத்தின்கண், எதிரின்றிக் கர்ச்சித்துப் பாய்கின்ற பயங்கரமான எமதருமன் ஏறிவரும் பெருஞ் சாமர்த்திய எருமைக் கடாவும் அஞ்சும்படி நரமாமிச பட்சணஞ் செய்யும், கரிய மகிடா சூரனைக்கொன்று, தேவர்களின் குறையை நிவர்த்தி செய்த கொற்றவையாந் துர்க்கா தேவியை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) வைப்பு = வையம்.
இறைகெழும் = பயங்கரமான.
ஊரும் = ஏறும்.
வெந்தொழில் = பெருஞ்சாமர்த்தியம்.
மகிடம் = எருமைக் கடா.
கறைகெழு = அசுசியான
பிசிதவூண் = இறைச்சி உணவு.
கருமகிடம் = மகிடாசூரன்.
உம்பர் = தேவர்.
கொற்றி = கொற்றவை.

4. திருவாளொளிப்புற்றூர்ப் புராணம்

757. அழலவிர் குடங்கை யேந்து மரதன புரத்துப் பெம்மான்
கழல்வழி பாடுசெய்து கடுங்கொலை மகிடஞ் சாய்த்துப்
புழல்படு காற்பூ வோன்முற் புலவர்க ளுவப்ப நாளுஞ்
சுழல்விழி மடங்க லூருஞ் சூராரிப் பிணவை யுள்வாம். (4)

(இ - பொ.) நெருப்பை உள்ளங்கையில் ஏந்தியுள்ள அரதனபுரத்துச் சிவபெருமானை வழிபட்டு, கொடுங்கொலைத் தொழிலுடைய மகிடாசுரனைக் கொன்று, தாமரை மலரில் வாழும் பிரமன் முதலிய தேவர்கள் மகிழும் வண்ணம் சுழலும் விழிகளையுடைய சிங்கத்தின்மீது ஏறிவரும் துர்க்கா தேவியைச் சிந்தித்து வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) புழல்படு காற்பூ = துளைபொருந்திய காம்பையுடைய தாமரைப் பூ.
குடங்கை = உள்ளங்கை.
மடங்கல் = சிங்கம்.

உ
கடவுள் துணை
திருச்சிற்றம்பலம்

ஒன்பதாம் பகுதி

வீரபத்திரக் கடவுள் வணக்கம்

1. கந்த புராணம்

758. அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ருடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம். (1)

(இ - பொ.) யாகசாலைக்கு வந்து தங்களுக்குரிய அவிர்ப்பாகங்களை உண்ணுகின்ற தேவர்கள் அனைவரும் இறக்கவும், முனிவர்களும் மறையவர்களும் ஓட்டமெடுக்கவும், சிறந்த யாகம் அழியவும் தக்கனைக் கொன்றருளிய வீரபத்திரக் கடவுளின் திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) அவி = அவிர்ப்பாகம்.
வெருவி = பயந்து.
தடிந்திடு = கொன்றிடும்.

2. நல்லூர்ப் புராணம்

759. சண்ட பானுவாந் தகைமுக மாயிர மிரட்டி
யண்ட பித்திகை யளாவணி கரமனற் புலிங்கங்
கொண்ட கண்கண்மூ வாயிரங் கொடுமக மழித்தென்
றெண்டு கொண்டருள் * வீரபத் திரன்பதந் தொழுவாம். (2)

(இ - பொ.) சூரியப்பிரகாசம் போன்ற முகாரவிந்தங்கள் ஆயிரமும், ஆகாயத்தை அளாவும் கரங்கள் இரண்டாயிரமும், அக்கினித் தீப்பொறி பறக்கும் கண்கள் மூவாயிரமுமாக அவதாரங் கொண்டு, தக்கனுடைய யாகத்தை அழித்து என்னையுந் தொண்டனாகக் கொண்டருளும் வீரபத்திரக் கடவுளின் பாதத்தை வணங்குவாம். (எ - று.)

* சிறுத்தொண்டரையும் என் குற்றேவலையும் ஏற்றுக்கொள் எனவும் உரை.

3. வீரசிங்காதன புராணம்

760. நீர துற்றிடு நெடுஞ்சடை முடிகொணன் னிமலன்
சீர தற்றிடச் செய்சிறு விதிமகஞ் சிதைக்கும்
போர துற்றிடப் புரிந்துபிற் குடந்தைமா மடம்வாழ்
வீர பத்திரன் விரைமலர்த் தாண்மிலைச் சிடுவாம். (3)

(இ - பொ.) நெடுஞ்சடா முடியில் கங்கைநீர் தரித்த சிவபெருமானைச் சிறப்பாக வரவேற்காமல் தன் விருப்பப்படி செய்யுந் தக்கனுடைய சிறிய யாகத்தை அழிக்கும் வண்ணம் முதல் முதல் போரை முடித்துக் கொண்டு, பின்னர்க் கும்பகோண மடாலயத்துள் வாழும் வீரபத்திரருடைய திருவடிக் கமலங்களை தலைமேல் சூடிக்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) சிரதற்றிட = மரியாதை தப்ப.

4. சீகாளத்திப் புராணம்

761. அருவரைக் குலங்கள் பந்தினடி பெயர்ந்துருள் வார்க்கும்
விரிதிரைக் கடல்புரண்டு வியனில முழுதும் போர்ப்பக்
குருமல ரண்ணலண்டங் குலுங்கிடச் சிறைய டிக்கொள்
சரபமாய் நரமடங்க றனையடர்த் தவனைத் தாழ்வாம். (4)

(இ - பெர்.) எண் குலப் பர்வதங்கள் அடியோடு பேர்ந்துருளவும், உயர்ந்து ஒலிக்கும் விரிந்த அலைகடலானது கரைபுரண்டு உலகத்தை மூழ்த்தவும், கொன்றை சூடியாம் சிவபெருமானுடைய கயிலாசங் குலுங்கவும் (ஆகச்) சிறகுகளினுலடிக்கும் சரபாவதார மெடுத்து நரசிங்கத்தைக் கொன்ற வீரபத்திரனை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அருவரைக்குலங்கள் = எண்குலப் பருவதங்கள்.
வார்க்கும் = உயர்ந்து (இறைச்சும்.)
சரபம் = எண்கால் புள்.
நரமடங்கல் = நரசிங்கம்.

5. பழைய காஞ்சிப் புராணம்

762. சத்துருவி னிலைமைபெறு தக்கன்மக
மடுநாளிற் றலைமை சான்ற
பத்துருவம் பெறுதிருமான் முதலாய
பண்ணவர்தம் படிவம் யாவு
முய்த்துருவு தனிவாட்கை யுறுவாழ்க்கை
பெற்றவுருத் திரமூர்த் திப்பொற்
பத்திரையன் புறுவீர பத்திரன்சித்
துருவினையே பரவல் செய்வாம். (5)

(இ - பொ.) இயல்பாகவே சத்துருவின் குணங் கொண்ட தக்கன் யாகத்தை அழிக்கும் நாளில், முதலாளியாயிருந்த (தசாவதாரத்) திருமால் முதலான தேவர்களுடைய வடிவழகு யாவற்றையும் சேர்த்துருவி அறுக்குமோர் வாளாயுதத்தைக் கரபூஷணமாகப் பெற்ற அகோர ருத்திர மூர்த்தியான, அழகிய பத்திரை யென்பவள் அன்புறும் வீரபத்திரருடைய அலங்கார கோலத்தையே பணிவாம். (எ-று.)

(அ - ப.) தலைமை சான்ற = முதலாளியாயிருந்த.
கையுறு வாழ்க்கை = கரபூஷணம்.

6. திருச்செந்தூர்ப் புராணம்

763. * ஆளு டைத்தனி யாதியை நீத்தொரு
வேள்வி முற்ற விரும்பிய தக்கனார்
நீள்சி ரத்தை நிலத்திடை வீட்டிய
வாள்ப டைத்த மதலையைப் போற்றுவாம். (6)

(இ - பொ.) எம்மையெல்லாம் ஆளாகவுடைய தனி முதல்வனும் பரம சிவத்தை விட்டு, யாகம் ஒன்று முடிக்க விரும்பிய, தக்கன்றன் நீண்ட தலை நிலத்தில் படும்படி கொன்று வீழ்த்தும் வாளாயுதமுடைய வீரபத்திரச் சுவாமியை வணங்குவாம். (எ - று.)

*(எம்மையெல்லாம்) ஆட்கொண்டருளிய எனவும் உரை.

7. வசவ புராணம்

764. பார பத்திர வம்பு பலகைவில்
கோர பத்திரந் தண்டுகைக் கொண்டுடன்
வார பத்தியி றக்கன் மகஞ்செற்ற
வீர பத்திரன் மெய்ப்பத மேத்துவாம். (7)

(இ - பொ.) கனமான இருப்புக்கணையும், வில்லும், கேடகமும், கோரமான உடைவாளும், தண்டும் கையோடு கொண்டவராய், பத்தி யுரிமையில்லாத தக்கனுடைய யாகத்தை உடனே அழித்த வீரபத்திரக் கடவுளின் திருவடியிணைகளை ஏத்திப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) பாரபத்திர அம்பு = கனத்த இருப்புக்கணை.
பலகை = கேடகம்.
கோரபத்திரம் = உடைவாள்.
வாரம் = பத்தியுரிமை.

சார பத்திர மிக்கிலாத் தக்கனைப்
பார பத்திர பரணியிற் பற்றியே
கோர பத்திரங் கொண்டு வதைத்திடும்
வீர பத்திரன் மெய்ப்பத மேநம
என்றும் பாடம்.

8. சரப புராணம்

765. கரமிழப்பத் தழற்கடவுள் கண்ணிழப்ப
விண்ணிரவி கருதாத் தக்கன்
சிரமிழப்பப் பனித்திகிரி கலையிழப்பத்
தேவர்பிரான் றிண்டோள் கொண்ட
வுரமிழப்பத் திருமாலுந் திசைமுகனு
முனிவரரு முடைந்து தங்கள்
வரமிழப்ப வுருத்தெழுந்த வயவீர
பத்திரன்றாள் வணக்கஞ் செய்வாம். (8)

(இ - பொ.) அக்கினி தேவன் கையிழந்து போகவும், (வானின்) சூரியன் கண்ணிழந்து போகவும், (நினைக்க வொண்ணாத) தக்கன் தலையிழந்து போகவும், சந்திரன் கிரணமிழந்து போகவும், இந்திரன் (புயவன்மையுடைய) மார்பிழந்து போகவும், திருமால், நான்முகன், மற்றைய முனிவரர்கள் இவர்களெல்லாந் தளர்ந்து தத்தம் வரங்களை இழந்து போகவுமாக அதியுக்கிரமாக வெழும் தீர வீரபத்திரன் திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) தழற் கடவுள் = அக்கினி தேவன்.
பனித்திகிரி = சந்திரன்.
தேவர் பிரான் = இந்திரன்.
வயம் = வெற்றி.

அக்கினி நாவிழந்தும், சூரியன் பல்லிழந்தும், இந்திரன் ஊக்குருவியாகப் பறந்தும், சந்திரன் காலால் தேய்வுபட்டும் போனதாக உரை பாடம்.

766. தடங்கடலி னெழுங்காள விடமருந்தி
யெமைப்புரந்த தலைவ யாங்க
ளடங்கமடிந் திடாவண்ண மருள்புரிவா
யெனவமர ரடைந்து போற்றத்
திடம்படரு மூழித்தீக் கொப்பாகி
யுலகமெல ாஞ் செறுக்கு நார
மடங்கல்வலி தொலை யவருட் சரபவுரு
வாமிறைதாள் வணக்கஞ் செய்வாம். (9)

(இ-பொ.) பரந்த கடலின்கண் உண்டான கரிய விடம் புசித்து எம்மையெல்லாங் காப்பாற்றிய தலைவனே! ஊழித்தீக் கொப்பான திடத்துணிவும் கோபமுங் கொண்டு உலக மெல்லாஞ் சம்மரிக்கும் நரசிங்கத்தின் வலிமை தொலையவும், இப்போது நாங்கள் யாவரும் மடிந்து போகா வண்ணம் பாதுகாக்கவும் அருள் செய்வா யெனத் தேவர்கள் நெருங்கிப் பிரார்த்திக்க, அப்போதே சிவபெருமான் அருள்புரியும் சரபவுருவான வீரபத்திர சுவாமியை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) தடம் = விசாலம்.
காளம் = கருப்பு.
புரந்த = காத்த.
திடம் = துணிவு.
ஊழித்தீ = காலாக்கினி.
செறுக்கும் = நெருக்கிக்கொல்லும்.
நாரமடங்கல் = நரசிங்கம்.

9. திருவோத்தூர்ப் புராணம்

767. துய்யமக நாள்யமுனை துதைந்தாடி மாதுமையைச்
செய்யமக ளாவளர்த்துத் தீவணர்க்கீந் தவரைப்பி
னையமக லாதவனென் றவமதித்துச் சிறுவிதிசெய்
வெய்யமக மழித்துவந்த வீரனிரு தாள்பணிவாம். (10)

(இ - பொ.) பரிசுத்தமான மக நட்சத்திரத்தன்று, காளிந்தி நதியை அடைந்து நீராடி, உமாமகேசுவரியைத் திருக்குமாரியாக வளர்த்து, செந்தீ

வண்ணராகிய சிவபெருமானுக்குத் திருக்கல்யாணம் செய்துகொடுத்தும், மீண்டும் அவரைத் தெளிவில்லாத பித்தனென அவமதித்துச் சிறுபோது செய்யுந் தக்கன் யாகத்தை அழித்த வீரபத்திரக் கடவுளின் இரு சேவடிகளையும் பணிவாம். (எ – று.)

(அ - ப.) யமுனை = காளிந்தி.
துதைந்து = நெருங்கி.
செய்ய மகள் = தாட்சாயணி.
தீவணர் = சிவபெருமான்.
சிறுவிதி = சிறுபோது.
வெய்யன் மகம் = தக்கன் யாகம்.
வீரன் = வீரபத்திரன்.

10. திருப்பெருந்துறைப் புராணம்

768. மேயசிவ நிந்தைபுரி வெய்யவர்க்குப்
புரிகழுவாய் வேறின் றன்னார்
மாயவொறுத் திடலன்றி யென்னுமறைக்
கிலக்கியமா வாள்கைக் கொண்டு
தீயமகம் புரிதக்கன் சிரமறுத்துச்
சேர்ந்தாருஞ் சிதையச் செய்த
நாயகமா விறல்வீர பத்திரநம்
பனைவணங்கி நயந்து வாழ்வாம். (11)

(இ – பொ.) மனதறிந்து சிவநிந்தை புரியும் கொடியவர்களுக்கு வேறொன்றையும் தேடாமல், அவர்கள் கழுமரத்தில் மாயும்படியாக வருத்தியலைப்ப தென்னும் வேதத்துக்குத் திருட்டாந்தமாகத் தீய யாகஞ் செய்யுந் தக்கன் தலையை யறுத்து அவனைச் சேர்ந்த திருமால் முதலானவர்களைச் சிதைத்த வாளாயுதத்தைக் கையிலே கொண்ட வெற்றி நாயகமாம் வீரபத்திரரை வணங்கியும் மன்றாடியும் வாழ்த்துவாம். (எ–று.)

(அ - ப.) மேய = மேவிய.
சிவநிந்தை = சிவாபராதம்.
கழு = கழுமரம்.
ஒறுத்தல் = அலைத்தல்.
நம்பன் = நம்பப்பட்டவன்.

11. திரிசூலகிரிப் புராணம்

769. தன்னிகரில் கொடியதக்கன் வேள்வியினை நாட்டிச்
சங்கரனை யன்றியக்க மாயிர வனமரர்
துன்னுமறை முனிவர்திக் குக்கடவுளர் மாலயனுஞ்
சூழமிகுஞ் சூழ்ச்சியினாற் றுவன்றிமுடிக் குறுங்காற்

சின்னபின்ன மாத் தடிந்தோ னருளதனா லென்றுங்
திரிசூல வரையடியிற் குணதிசையி லமர்ந்து
மன்னுமுயிர் பயங்கெடநற் காவலினைப் பூண்டு
வாழ்கின்ற வீரனிரு மலரடிக டுதிப்பாம். (12)

(இ - பொ.) தனக்கெதிரில்லாத கொடிய தக்கனானவன் யாகமொன்றை நியமித்து, சிவபெருமானைத் தவிர, மற்றைத் திருமால், பிரம்மன், தேவேந்திரன், தேவர்கள், வேதாத்தியயனஞ் செய்யும் முனிவர்கள், எட்டுத் திக்குப் பாலகர்கள் ஆய எல்லாருஞ் சூழ, மிக சூழ்ச்சியாகத் துவக்கி முடித்து வருஞ் சமயத்தில், அவன் தலையைச் சின்னபின்னமாக அறுத்தவனும், திருவருட் கொண்டு எந்நாளும் திரிசூலகிரியின் அடிவாரத்தில், கிழக்கு முகமாக எழுந்தருளி, மன்னுயிர்களின் பிறவிப் பயங்கெட, பாதுகாப்புக் கொண்டு வாழ்பவனுமான வீரபத்திரன் மலரடிகள் இரண்டையும் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) அக்கம் ஆயிரவன் = ஆயிரங் கண்ணன், இந்திரன்.
துவன்றி = துவக்கி.
தடிந்தோன் = அறுத்தவன்.
பயங்கெட = துணிவடைய.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பத்தாம் பகுதி

காளியம்மை வணக்கம்

1. திருச்செங்கோட்டுப் புராணம்

770. கொம்மை வெம்முலைக் களிற்றொடுங்
குழைகவர் கூர்விழி மானோடுஞ்
செம்மை பெற்றபொற் கலையொடுந்
திகழ்நுதற் றிருவருண் முகமான
விம்மி தங்கொளம் புலியொடுஞ்
சிங்கமேல் விளங்குமின் செங்கோட்டி
லம்மை நம்மையா ளழகிய
நாயகி யடிமல ரிணைபோற்றி. (1)

(இ - பொ.) யானையைப் போலத் திரண்டுருண்ட முலைகளும், மானைப் போலச் சேர்மானமாம் கூரிய கண்களும், சிவந்த பட்டாடை மேகலையும், பூரண சந்திரனைப் போல விளங்கும் நெற்றி நித்திலத் திருவருள் விலாச முகமும் கொண்டு சிங்க வாகனத்தின் மேல் ஆரோகணிக்கிற மின்னொளியாய்த் திருச்செங்கோட்டு அம்மையாராம், நம்மை ஆள் அழகிய நாயகியாரின் திருவடி மலரிணைகளுக்கு வணக்கம். (எ-று.)

(அ - ப.) கொம்மை = திரட்சி.
குழைகவர் = சேர்மானம்.

செவ்வனே வளைந்த மூன்றும் பிறையைப்போலத் திகழும் புருவங்களும் எனவும் உரை.

---

2. தேவாங்க புராணம்

771. உந்துதிரை நெடுங்கடல் போலொலித் தடர்ந்த
அரக்கர்வெந் நிட்டோடி வீழ
முந்துபரம் பொருளித யம்பரத் துதித்த
தேவலனை முழுதுங் காக்க
கந்துபொரு கடகளிறு கலங்குறு கண்டீர
வவர்வ வாகன நடாத்தி
வந்துதிரு வருள்புரிந்த சவுட நாயகி
திருத்தாள் வழுத்தல் செய்வாம், (2)

(இ-பொ.) மோதி அலைக்கின்ற நெடிய கடல் போல ஆரவாரிக்கும் அசுரக் கூட்டங்கள் புறமிட்டோடி இறப்ப முற்படுமாறு, சிவபெருமானுடைய மனக்கடலில் திருவவதரித்த தேவாங்க முனிவனை, எப்போதுங் காக்கும் பொருட்டுக் கட்டுத் தறி தாங்கும் மதத்த யானைகளானவை அஞ்சும்படி சிங்க வாகனத்தைச் செலுத்திக் கொண்டு எழுந்தருளி வந்து திருவருள் செய்த சவுட நாயகியம்மையினது திருவடிகளைத் தோத்திரஞ் செய்வாம். (எ-று.)

(அ-ப.) அம்பரம் = ஆகாசம்.
கண்டீரவம் = சிங்கம்.

3. அரிச்சந்திர புராணம்

772. அந்தரியா மளையமலை யாலகாலி யம்பிகை
மாதரி கௌரி யாளியூர்தி
வந்தரிநான் முகன்வணங்கு மலர்த்தாட்சூ ரிவைரவிதா
ருகவைரி மதங்கி நீலி
கந்தரியோ கினிசூலி நீலிநாக கங்கணி
சங்கவிரி மலைகாளி வால
சுந்தரிசா முண்டி திரிசூலி கோலத்
துணையடியெம் முடிமீது சூடினேமால். (3)

(இ-பொ.) அந்தரியே! சாமளா தேவியே! அமலையே! ஆலகாலியே! அம்பிகையே! மாதுருவே! கௌரியே! யாளிவாகனியே! பிரம்ம விஷ்ணுக்கள் வந்து வணங்கும் மலரடிகளையுடைய சூரியே! வைரவியே! தாருகனைக் கொன்ற வீரியே! மதங்கியே! நீலகண்டியே! யோகினியே! சூலபாணியே! நீலாயதாட்சியே! நாகபூஷணியே! சங்கரியே! விமலையே! காளியே! பாலசுந்தரியே! சாமுண்டியே! திரிசூலியே! நின்னுடைய திருக்கோலமான அடியிணைகளை எம்முடைய முடிமேல் சூடிக்கொண்டோம். (எ-று.)

(அ-ப.) யாமளை = சாமளாதேவி
மாதரி = மாதுரு
நீலி = நீலாயதாட்சி
நாககங்கணி= நாகபூஷணி

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதினொன்றும் பகுதி

சுப்பிரமணியக் கடவுள் வணக்கம்

1. கந்த புராணம்

773. மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்றவி ராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி. (1)

(இ—பொ.) ஆறுதிருமுகங்கள் துதிக்கத் தக்கன. அத்திரு முகங்களிற் சுரக்கின்ற திருக்கருணை துதிக்கத் தக்கது. அனைவரும் துதிக்கும்படி விளங்கும் பன்னிரண்டு திருப்புயங்கள் துதிக்கத்தக்கன. காஞ்சிமாநகரத்தின் கண்ணுள்ள மாமரத்தினடியில் எழுந்தருளி இருக்கும் முருகக் கடவுளின் தாமரைமலர் போலும் திருவடிகள் துதிக்கத் தக்கன. அம்முருகக் கடவுளின் சேவற் கொடியும், மயில் வாகனமும் துதிக்கத் தக்கன. அவரது திருக்கரத்தி லேந்திய வேலாயுதமுந் துதிக்கத்தக்கது; துதிக்கத் தக்கது. (எ–று.)

(அ-ப.) ஏவரும் = எவரும்.
வைகும் = எழுந்தருளும்.

774. இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமா சேயைப் போற்றுவாம். (2)

(இ-பொ.) இரும்பினாற் செய்யப்பட்ட அரத்தாற் குறைக்கப்படும் எஃகமென்னும் வேலை யுடைய மலைக் குறவர்தம் புதல்வியாகிய வள்ளி நாயகியார்பால் வைத்த விருப்பத்தை அழிவினை யுடைய போர்க்களத்தில், அங்கேயறியுமாறு தோன்றக் காட்டிய திருப்பரங் குன்றமென்னும் திருப்படை வீட்டிலெழுந்தருளிய இளைய பிள்ளை யாரைத் துதிப்பாம். (எ–று.)

(அ - ப.) இருப்பு + அரம் = இருப்பரம் -இரும்புஅரம்.
பொருப்பர் = மலைக்குறவர்.
அரங்கமர் = போர்க்களம்.

775. சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்
டரலை வாயிடு மெஃக மேந்திய
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம். (3)

(இ-பொ.) சூரபதுமனைக் கடலிடை யொழித்து, மார்பைப் பிளந்து, அவன் ஈரலை வாயிற் பெய்யும் வேற்படையைத் தாங்கி, மூங்கில் காடு அடர்ந்த வெள்ளிமலையாகிய திருக்கயிலாயத்தை யகன்று, திருச்சீரலைவாயென்னுந் திருப்படை வீட்டி லெழுந்தருளிய இளைய பிள்ளையாரை வணங்குவாம். (எ-று.)

(அ-ப.) சூர் = சூரபதுமன்.
அலைவாய் = அலைகடல்.
எஃகம் = எஃகினாற்செய்த வேல்.
வேரல் = மூங்கில்.
ஐவாய்தரு = காடடர்ந்த.

776. காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
வாவினன் குடிவரு மமலற் போற்றுவாம். (4)

(இ-பொ.)கற்பகச் சோலைக்குத் தலைவனாகிய இந்திரன் வசிக்கின்ற அழகிய தேவலோகத்தை யடைந்து நன்கு குடியேறவும், சூரபன்மனாகிய முதல்வன் இறக்கவும், தாமரையில் வசிக்கும் பிரம்மன் பிரணவார்த்தத்திற்கு மயக்க மெய்தவும், திருவாவினன்குடி யென்னும் திருப்படை வீட்டிலெழுந்தருளிய மலரகிதராகிய இளைய பிள்ளையாரைத் துதிப்பாம். (எ-று.)

(அ-ப.) காவினன் = இந்திரன்.
காமர் = அழகு.
விளிய = சாக.
பூவினன் = பிரமன்.
குடிலை = பிரணவம்.
மாலுற = மயங்க.
அமலன் = மலமற்றவன்.

777. நீரகத் தேதனை நினையு மன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீந்திடுந்
தாரகத் துருவமாந் தலைமை யெய்திய
வேரகத் தறுமுக னடிக ளேத்துவாம். (5)

(இ-பொ.)நற்குணம் அமைந்த மனதின்கண் தம்மைத் தியானிக்கின்ற அன்புடையாரது பெருமைமிக்க இருதயத்தில் சுழலச்செய்யும் பிறப்பினை நீக்குகின்ற, பிரணவ சொரூபமாகிய முதன்மைத் தன்மை வாய்ந்த திருவேரகம் என்னும் திருப்படை வீட்டிலே எழுந்தருளிய ஆறு திருமுகங்களுடைய இளையபிள்ளையாரது திருவடிகளைத் துதிப்பாம். (எ-று.)

(அ-ப.) நீரகம் = உள்ளன்பு (பூமண்டலம்).
பேரகம் = இருதயம்.
அலமரும் = அசையும்.
தாரகம் = பிரணவம்.

778. ஒன்றுதொ ருடலை யொருவி யாவிமெய்
துன்றுதொ ருடலைத் தொடங்கி யைவகை
மன்றுதொ ருடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ ருடிய குமரற் போற்றுவாம். (6)

(இ-பொ.) உயிர்கள் சங்கார கிருத்தியத்தால் ஒடுங்குந்தோறும் திருநடனஞ் செய்யாது நீங்கியும், அவை சரீரத்தடையும் படைப்பு தோறும், திருநடனஞ் செய்யாநின்றும், (ஐவகை மன்று தோருடிய வள்ளல்) பஞ்ச சபைகளிலும் திருநடம் புரியாநின்ற இறைவர் விரும்ப மலைகடோறும் திருவிளையாட்டியற்றும் இளைய பிள்ளையாரைத் துதிப்பாம். (எ-று.)

(அ-ப.) ஒன்றுதோறு = ஒன்றுபடுந்தோறும்.
ஒருவி = நிறுத்தி.
துன்றுதோறு = சம்பந்தப்படுந்தோறும்.
காமுற = களிப்ப.
குமரன் = குமரனை.

பஞ்ச சபை:—தில்லை, மதுரை, திருவாலங்காடு, திருநெல்வேலி, திருக்குற்ருலம். இவை முறையே, பொற்சபை, வெள்ளி சபை, இரத்தினசபை, தாமிரசபை, சித்திரசபை ஆகும்.

779. எழமுதி ரைப்புனத் திறைவி முன்புதன்
கிழ முதி ரிளநலங் கிடைப்ப முன்னவன்
பழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம். (7)

(இ-பொ.) வள்ளி நாயகியார் முன்னர், புன்செய்த் தானியம் விளையும் புனத்திலெழுந்தருளும் தாம் கொண்டருளிய மிக்க வயோதிகப் பருவத்திலேயே இளமைப் பிராயத்திற்குரிய காம நுகர்ச்சி துய்க்கும்படி மூத்த பிள்ளையாரை, இளமை வாய்ந்த யானையைப் போன்று வருவதை விரும்பிய, பழமுதிர் சோலையிலெழுந்தருளி, அழகிய பகவனென்னுந் திருநாமத்தை யுடைய இளைய பிள்ளையாரைத் துதிப்பாம். (எ-று.)

(அ-ப.) முதிரைப் புனம் = புன்செய்த் தானியம்.
இளநலம் = இளம் பிராயம்.

780. ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலர் திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வா
ழாறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம். (8

(இ-பொ.) சர்வ சங்கார காலத்தும் அழிவில்லாமல் வேற்றுமை அடையாதிருக்கும் வளப்பம் பொருந்திய காஞ்சி மாநகரத்திலே யாவராலும் கூறப்படும் சிறப்பையுடைய குமரகோட்டத்தில் வீற்றிருந்தருளும் சிறந்த ஆறு திருமுகங்களையுடைய இளைய பிள்ளையாரது திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) ஈறு = கடைசி
இறுதி = முடிவு.
கோட்டம் = கோயில்.

2. உபதேச காண்டம்

781. பூத்த கற்பகப் பொன்னுல கிமையவர்க் கிரங்கிக்
காத்த சேவகன் கடம்பணி பன்னிரு தடந்தோ
ளேத்த நாடொறுந் தழும்புமென் னாத்தட வரலாற்
சேத்த கிண்கிணிச் சீறடி சென்னி சேர்த்துதுமே. (9)

(இ- பொ.) மலர்களைப் பொதுளிய கற்பகச் சோலை சூழ்ந்த வானுலக வாசிகளாகிய தேவர்கட்குத் திருவுள மிரங்கிக் காத்தருளிய, தேவசேனாதிபதியாகிய முருகப் பிரானுடைய கடப்ப மலர் மாலையணிந்த விசாலித்த பன்னிரு திருப்புயங்களையும் தினமும் துதித்தலால், தழும்பேறிய எமது நாவின்கண் ஊர்தலினாலே சிவந்த கிண்கிணி தரித்த அவரது சிற்றடியைச் சிரத்திற் சேர்ப்போம். (எ-று.)

(அ - ப.) இமயவர் = தேவர்.
கடம்பு = கடப்பமாலை.
நாடொறும் = நாள்தோறும்.
தடவரலால் = ஊர்தலால்.
சேத்த = சிவந்த.

3. கோயிற் புராணம்

782. தேராட்டிக் கயங்காட்டுந் திரண்மாக்கள் பயமூட்டிப்
போராட்டிப் புறங்காட்டிப் போங்காட்டிற் புலால்கமழு
நீராட்டிச் சூர்மாட்டி நிகழ்நாட்டிற் புகழ்நாட்டும்
பேராட்டிச் சீராட்டும் பிள்ளையார் கழல்போற்றி. (10)

(இ-பொ.) தமது தேரை நடத்தி, கீழ்மைக் குணத்தைக் காட்டும் திரளான சேனைகளைப் பயமுறுத்தியும், போராட்டுவித்தும், புறங்காட்டச் செய்தும் போர்க்களத்தில் பிண நாற்றம் அடிக்கும் இரத்தத்தில் புரட்டியும், சூரபதுமனை வேலால் மாட்டிக் கொன்றும், முப்பத்தாறு திருப்படை வீடுகளிலும், தம் திருப்புகழை நிலை நாட்டும் பேர்வகித்து, ஆன்மாக்களைச் சீராகப் பாதுகாக்கும் இளைய பிள்ளையாராம் சுப்ரமண்யரின் திருவடிகளுக்கு வணக்கம். (எ-று.)

(அ - ப.) தேர் ஆட்டி = தேர் நடத்தி.

4. சேக்கிழார் நாயனார் புராணம்

783. பாறுமுக முப்பொருந்தப் பருந்துவிருந் துணக்கழுகு
நூறுமுக மாயணைந்து நூழில்படு களம்புகுத
மாறுமுகந் தருநிருதர் மடியவடி வேலெடுத்த
வாறுமுகன் றிருவடித்தா மரையிணைக ளவைபோற்றி. (11)

(இ - பொ.) புறமுதுகிட்டோடுந்தோறும், பருந்து விருந்துண்ணும்படியாகவும், கொல்லுஞ் சமயத்தைப் பார்த்துக் கழுகுகள் கொலைக்களம் புகுந்து வரவும் ஆகக் கெட்டெண்ணமுடைய இராக்கதர்கள் இறப்ப வடிவேலெடுக்கும் ஆறுமுகக் கடவுளின் திருவடித் தாமரை யிணைகட்கு வணக்கம். (எ-று.)

(அ - ப.) பாறுமுகம் = புறமுதுகிட்டோடுந்தோறும்.
நூறு முகம் = கொல்லுஞ்சமயம்.
நூழில் = படுகளம், கொலைக்களம்.
நிருதர் = அரக்கர்.

5. திருவாதவூரர் புராணம்

784. துங்கமத கும்பவுயர் தும்பிமுகர் தம்பிசீர்
தங்குஞெகி ழஞ்சிறுச தங்கைகள் புலம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதா
ளங்கைமலர் கொண்டுமிகு மன்புடனி றைஞ்சுவாம். (12)

(இ-பொ.) மும்மதம் பெருகிய மத்தகம் உயர்ந்த யானைமுக விநாயகர்க்குத் தம்பியாம் சுப்ரமண்யக் கடவுள் தாயாராகிய உமாமகேசுவரி கண்குளிரப் பார்க்கும்படி, செம்பொன்னாலொளிர் சிறு சதங்கைகள் ஒலிக்க வந்துலாவும் திருவடிகளைக் கைகுவித்தவராய் நின்று அன்போடு பணிவாம். (எ-று.)

(அ - ப.) துங்கமதம் = மும்மதம்.
கும்பம் = மத்தகம்.
ஞெகிழ் = அவிழ.
தம்பி = இளைஞன்.

6. அருணகிரிப் புராணம்

785. தரணிதலத் தினிதிருந்து சார்ந்துசிவ
புரமமலன் சரணஞ் சார்வா
னிரவுபக லெனுமிரண்டு மில்லாத
நிட்டைபெற வெண்ணி யாமே
யரனமல னருள்குமர னருணகிரிச்
சாரலினா லயத்தின் கீழ்பால்
வரமுடைய கோபுரவாய் தனிநிலவு
கந்தனடி வணங்கு வாமே. (13)

(இ-பொ.) பூலோகத்தில் சுகமாக வாழ்ந்திருந்து, அப்பால் திருக்கயிலாய பதவியை யடைந்து, சிவபெருமான் பாதத்தில் (சார்ந்து) இராப்பக லற்ற மெய்யான நிட்டையினைப் பெறுவதற்காகப் பரமேசுவரன் அருளிய குமாரனும், அருணகிரிச்சாரல் ஆலயத்தின் கீழ்க் கோபுரவாயிலில் எழுந்தருள்பவனுமான கந்தப்பன் திருவடிகளை நாம் போற்றி வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) தரணி = பூமி
சிவபுரம் = கயிலாயம்.
சார்வான் = சார்ந்து.
பெற = பெறுவதற்காக.
அரன் = அயலன்.
(அ - ம்.) யாமே எண்ணி வணங்குவாமே.

7. திருவிளையாடற் புராணம்

786. கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப்
பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ரூரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோ ராற்று
மறங்குலவு மகத்தழலு மவுணமட
வார்வயிற்றி னழலு மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கஞ் செய்வாம். (14)

(இ - பொ.) சுழலுகின்ற அலைகளையுடைய கரியகடலும், கரிய உடல் பொருந்திய அசுரராகிய பெரிய கடலுங் கலங்கவும், மேகங்கள் வந்து இளைப் பாறுகின்ற உச்சியையுடைய கிரவுஞ்ச பர்வதமும், சூரபதுமனது மார்பகமாகிய மலையும் பிளக்கவும், வேதமுணர்ந்த அந்தணர் செய்கின்ற புண்ணிய சொரூப மாகிய யாகாக்கினியும், அசுர மாதர்களது வயிற்றில் துன்பமாகிய அக்கினியும் மூண்டெரியவும் செய்யவல்ல வீரத்தன்மை பொருந்திய வேற்படையைத் தாங்கிய வேள் என்று சொல்லப்படும் முருகக் கடவுளது செவ்விய திருவடியைத் தொழுவோம். (எ-று.)

(அ-ப.) கறங்கு = சுழல்.
திரை = அலை.
அவுணர் = அரக்கர்.
பொருப்பு = மலை.
மறம் = சினம்.
மடவார் = மங்கையர்.
அழல் = தழல்.

---

8. சிதம்பர புராணம்

787. விடலரிய பெருந்தெய்வச் சிறைமீள
மறைமுனிவர் விண்ணோர் வாழ
மடலவிழ்கற் பகநிழலு மரசிருப்பு
மமருலகு மகவா னெய்தக்
கடலுததி யோலமிடக் கிரிவீழச்
சூரனுரங் கலங்கச் செங்கை
யடலயில்வேற் பணிகொண்ட வொருகுமர
னிருசரண மகத்துள் வைப்பாம். (15)

(இ - பொ.) தேவர்கள் நீங்குதற்கரிய பெரிய சிறைச் சாலையினின்று மீளவும், வேதங்களை அறிந்த முனிவர்களும் தேவர்களும் வாழவும், தேவேந்திரனுனவன், இதழ் விரியப் பெற்ற பூக்களையுடைய கற்பகத் தருவின் நிழலையும், அரசாட்சி செய்தற்குரிய அத்தாணி மண்டபத்தையும், தேவலோகத்தையும் அடையவும், (சூரபத்மன் மாமர வடிவமாகிய விடத்தில்) பெருக்கை யுடைய கடலானது ஓலமிட்டு அலறவும், கிரவுஞ்சகிரி இரண்டாகப் பிளந்து விழவும், சூரபத்மனது

மார்பு கலங்கவும், தமது சிவந்த கரத்தினிடத்தேயுள்ள வலிமையுங் கூர்மையும் பொருந்திய வேலாயுதத்தைப் பணிகொண்டருளிய ஒப்பில்லாத குமரக் கடவுளினுடைய இரண்டு திருவடிகளையும் மனதில் தியானிப்பாம். (எ-று.)

(அ-ப.) மகவான் = தேவேந்திரன்.
அயில் = ஓலம்.
உத்தி = நீர்.

9. சேது புராணம்

788. குலவுமலை மகள்கலச முலைப்பால் வாசக்
குமுதமவள் கொழுநர் மறைகொழிக்கும் செல் வி
நிலவுமுக மலர்கமழச் செய்துமுன் னோனெடுந்
துளைக்கைப் பிடித்தேறி நெற்றிப் பட்டத்
துலவியிவ ரொருமூவ ருவப்ப மாலோ
டும்பர்கணங் களிதூங்க வுலக மூடுங்
கலபமர கதமயிலூர் கழற்கால் வென்றிக்
கந்தனைவந் தனைசெய்து கருத்துள் வைப்பாம். (16)

(இ- பொ.) விளங்குகின்ற பார்வதியின் கலசம் போன்ற முலைப்பாலருந்திய செவ்வாயுடன், சிவபெருமானும் மலைமகளும் முகம் மலரும்படி செய்து விநாயகருடைய துதிக்கையைப் பிடித்தேறி நெற்றிப்பட்டத்தினிடத்தே உலவி இவரோடு ஏனைய பார்வதி பரமசிவன் கலைமகள் ஆகிய மூவரும் மகிழ, திருமாலோடு தேவர்கள் களிப்புமிக, உலகை மூடும்படியான கலாபத்தையுடைய பச்சைமயிலின் மீது ஏறிவரும் வீரக்கழலை அணிந்த காலினையுடைய வெற்றி பொருந்திய முருகனை வணங்கி மனத்துள் வைப்பாம். (எ - று.)

10. திருப்பரங்கிரிப் புராணம்

789. சுருதிமழை பிலிற்றியிடுஞ் சதுர்முகனார்
சடங்கியற்றத் தோகை பாகன்
கருதிவிழி விருந்தருந்தக் கண்ணிறைந்த
மேனியான் கைந்நீர் வார்ப்பத்
தருதியெனக் கையேந்திப் பரிதிமதி
விளக்கேந்தத் தந்தி மாதை
வருதியெனக் கைப்பிடித்துப் பரங்கிரியின்
மணந்தவனை வணக்கஞ் செய்வாம். (17)

(இ-பொ.) வேத மந்திரங்களை மழைபோல் வருஷிக்கும் பிரம்ம தேவராகிய பிராம்மணர், திருமணத்தை முன்னிருந்து நடத்தவும், பெற்றவராகிய பரமசிவம் கண் களி கூர்ந்து விருந்தை உபசரிக்கவும், ஆயிரங் கண்ணனாகிய இந்திரனாகிய, பெண்ணுக்கு அப்பன் கன்னிகா தானஞ் செய்து கொடுக்கவும், அப்படியே கொடுப்பாயெனச் சூரியனுஞ் சந்திரனும் கையேந்துவது போல விளக்கெரியவுமாகத் தெய்வயானையே வருவாயெனக் கைகூட்டிப் பிடித்துத் திருப்பரங்கிரியில் திருமணம் செய்த முருகக் கடவுளை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) பிலிற்றியிடும் = தூற்றும்.
தந்திமாது = தெய்வயானை.

790. ஞாலம் போற்ற யான்விரும்பி நாடும் பொருளை யளித்தருள்வான்
மாலை யெனவே கடம்பணிந்த மார்பன் வரிவண் டிசைபாடுஞ்
சோலை யுடுத்த பழனிமலைத் தூயன் மகரஞ் சுலவியிடும்
வேலை தனிலே வேலைவிட வேலை புரிந்தான் பதம்பணிவாம். **(18)**

(இ-பொ.) உலகமெல்லாங் கொண்டாட, அடியேன் விரும்பி நாடிய பொருளை அளித்தருளப்பட்டவனும், கடப்பமாலையை அணிந்த மார்பனும், வண்டுகள் கீதம் பாடுகின்ற சோலைகள் சூழ் பழனிமலைப் பரிசுத்தனும், மகரமீன்கள் சுழன்று நீந்தும் கடலிலே வேலை விட்டவனுமான சுப்ரமண்யக் கடவுளின் பாதம் பணிவாம். (எ—று.)

(அ - ப.) ஞாலம் = உலகம்.
சுலவியிடும் = சுழலும்.
வேலை = கடல்.

11. திருவாரூர்ப் புராணம்

791. பூவலர் கற்பகப் பொன்னின் மாநகர்
மேவிய தனியர சோங்க வீரைவாய்
மாவிழ வெறிந்தபோர் மதுகை வாகைவேற்
சேவகன் சேவடி சென்னி சேர்த்துவாம். (19)

(இ – பொ.) கற்பகச் சோலைகள் சூழப்பெற்ற தெய்வலோக ஆட்சி என்றும் நிலைபெற்று ஓங்கும்படியாகக் கடலிடத்தே மாமர வடிவாக நின்ற சூரபத்மனை அழித்த வலிமையும் வெற்றியு முடைய வேலாயுதத்தையுடைய வீரனான முருகப்பெருமானது திருவடிகளைச் சிரமேற்கொள்வாம். (எ-று.)

12. இலிங்க புராணம், பூருவகாண்டம்

792. தெய்வ யானையுந் திருந்தெழில் வருமுலை சுமந்து
நையு நுண்ணிடை வள்ளியு நன்கினி தமர
மைத வழ்ந்தபூஞ் சோலைமால் வரையக மருவுங்
கையி லங்குவேற் கடவுள்பொற் கழலிணை பணிவாம். **(20)**

(இ - பொ.) திரண்டுருண்டு வரும் முலைகளைச் சுமந்து, நைந்த நுண்ணிடையரான வள்ளியுந் தெய்வயானையும் இரு புறமும் வீற்றிருக்க, தவழும் நீர் நிறைந்த பூஞ்சோலைகள் சூழும் மலைநாடுகளில், கையிற்பிடித்த வேலாயுதத்துடன் எழுந்தருளும் சுப்ரமணியக் கடவுளின் பொன்னடிகளைப் போற்றுவாம். (எ-று.)

(அ - ப.) மைதவழ்ந்த = நீர் வளம் நிறைந்த.

ஷ உத்தர காண்டம்

793. பூமலி தருவி னிழலினிற் பசும்பொற்
புனை முடி யமரரேத் தெடுப்பக்
காமனைங் கணையுங் கடந்தவாட் டடங்கட்
புலோமிசை களிநலம் தழையத்
தேமலர்ச் செழுந்தார் வாசவன் மகிழ்ந்து
சிறந்திடச் சிந்துவே றிரித்து
மாமுத றடிந்த முருகவேள் கமல
மலரடி தலைமிசைக் கொள்வாம். (21)

(இ - பொ.) கற்பக மரத்தின் கீழிருந்து, பசும்பொன் கிரீடமணிந்த தேவர்கள் வாழ்த்துக் கூறவும், மன்மதனுடைய பஞ்ச பாணங்களும், சற்று விலகிச் செல்லத்தக்க, வாள் போலுங் கண்களை யுடைய இந்திராணி (தன் மங்கல நாணைக்கண்டு) களிகூர்ந்து பூரிக்கவும், மணமிக்க செழிய பூமாலை அணியும் இந்திரன் மகிழ்ச்சியோடு சிறப்பெய்திடவும், வைடூரிய மிழைத்த வேலாயுதத்தைப் பிரயோகித்து மாமரவுருவமாய் வரும் சூரபதுமனைக் கொன்ற முருகக் கடவுளின் பாதாம்புயங்களைத் தலைமேற்கொண்டு வாழ்வாம். (எ - று.)

(அ-ப.) புலோமிசை = இந்திராணி.
வாசவன் = இந்திரன்.
தடிதல் = கொல்லல்.

---

13. பிரம்மோத்தர காண்டம்

794. இறுதியெனத் தகுவியர்போய்க் கைம்மையெய்த
வயிராணி யின்ப மெய்தப்
பிறைகளொரு நான்கனைய திறன் மருப்பு
வெள்ளானைப் பிடரி யேறி
மறுகுதொறும் பொன்னுலகின் வானவர்கோன்
பவனிவரச் சூரன் மாயச்
சிறிதுகடைக் கண்சிவந்த சேவகன்கிண்
கிணிச்சரணஞ் சென்னி வைப்பாம். (22)

(இ-பொ.) தத்தம் கணவர் இறந்த முடிவுகாலம் (பதினாறும் நாள்)என்ன அரக்கிகளெல்லாம் முன்நேரத்திலேயே விதவைகளாகவும், இந்திராணி தாலி வலிமையால் மகிழ்ச்சி அடையவும், பொன்னுலகத்தை யாள் தேவேந்திரன், வளர் பிறையைப் போலும் நான்கு மருப்புக்களையுடைய வெள்ளை யானையின் புறங்கழுத்தின் மேலேறி வீதி வீதியாய் உலா வரவும், சூரபதுமன் மாளச் சிறிது கடைக்கண் சிவக்கும் குமாரக் கடவுளின் சதங்கை யணிந்த சரணங்களைச் சிரமேல் வைத்துப் பூசிப்பாம். (எ-று.)

(அ - ப.) இறுதியென = முடிவுகாலமென்ன.
தகுவியர் = அரக்கிகள்.
கைம்மை = விதவை.
ஐராணி = இந்திராணி.

பிடரி = புறங்கழுத்து.
மறுகுதொறும் = வீதிகள் தோறும்
சேவகன் = காப்பவன்.

14. கூர்ம புராணம், பூருவ காண்டம்

795. கள்வாய் மடுத்துப் புரையேறிக் கனைத்துக் குமட்டி யெதிரெடுக்கும்
புள்வாய் கடப்ப நறுந்தெரியல் புரளுந் தடந்தோள் வரையனைத்தும்
வெள்வே னெடுங்கட் குறத்தி முலைவேழ முழக்கக் களிகூருந்
தள்ளா மதுகை முருகனிரு சரண மெமது தலைக்கொள்வாம். (23)

(இ-பொ.) தேனை யுண்டு தெவிட்டியதால், மயக்கந் தலைக்கேறிக் கீதங்களைக் கனைத்துப் பாடும் வண்டுகள் மொய்த்த கடப்ப மலர் மாலை புரள் விசாலமான (மார்பு) தோளென்னும் மலைமுழுமையும் வேலைப்போலும் நெடிய கண்களுடைய வள்ளி நாயகியின் முலையாகிய யானை முயங்கிக் களிப்புண்டாக்கும் (அழியா) வெற்றி வேல் முருகனுடைய இரு சரணாரவிந்தங்களையும் எம்முடைய தலைமேற் கொண்டு வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) கள் = தேன்.
மடுத்து = உண்டு.
புரை = மயக்கம்.
குமட்டி = தெவிட்டி.
எதிர் எடுக்கும் = கீதம் பாடும்.
புள் = வண்டு.
தெரியல் = மாலை.
மதுகை = வெற்றி.

ஷை உத்தர காண்டம்

796. தாரக னுடலம் போழ்ந்து தடிசுவைத் துதிர மாந்தி
யீரல் வாய்ப்பெய்து புன்றோ லென்பொடு குதட்டி மூளை
வார்குடர் விழுங்கி மாருப் பசியொடுங் கடைவாய் நக்கும்
போர்கெழு சுடர்வே லெந்தை பொன்னடி சென்னி வைப்பாம். (24)

(இ - பொ.) தாரகா சூரனுடைய உடலைப் பிளந்து தசையைச் சுவைத்து இரத்தத்தைக் குடித்து, ஈரலை உண்டு, புன் புலாலை எலும்போடு மென்றும், மூளையைக் குடல் மணியோடு விழுங்கியும், நீங்காத பசியோடு கடைவாயை நக்கா நின்ற போர்க்குரித்தாம் சுடர் வேலையுடைய சுப்ரமண்யக் கடவுளின் பொன்னடியைச் சிரமேல் வைத்து வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) உடலம் = உடல்.
போழ்ந்து = பிளந்து.
தடிசுவைத்து = தசையைச்சுவைத்து.
குதட்டி = மென்று.
குடர் = குடல்.
புன்தோல் = புன்புலால்.

15. காசி காண்டம்

797. இலைமுகப் பைம்பூண் டாங்கி யேர்குடி யிருந்த கொம்மை
முலைமுகிழ் பூத்த வள்ளி முயங்குதோள் வெற்பி னானை
மலைமுகம் புழுங்க வாட்டி மாமுத றடிந்து வெய்ய
கொலைபழுத் தொழுகும் வைவேற் குழகனை வணங்கல் செய்வாம். (25)

(இ - பொ.) மார்பில் அசைந்தாடும் திருவாபரணங்களைத் தாங்கி, அழகே குடி கொண்டிருக்கும் மலர்ந்த குவி முலையாளாகிய வள்ளியம்மன் தழுவும் மலை போன்ற புயங்களுடையவனும் கிரவுஞ்ச மலையை உக்கிரமாகப் பிளந்து, சூரபதுமன் முதலாகச் சிங்கமுகா சூரன், தாருகா சூரன் யாவரையும் கொன்று, கொடுங் கொலை பழுத்தொழுகும் கதிர்வேல் குமரனுமான சண்முகத்தை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) பைம்பூண் = திருவாபரணம்
கொம்மை = அழகு.
முகிழ் = குவிப்பு.
முயங்கு = தழுவு.
மலைமுகம் = கிரவுஞ்சம்.
புழுங்க = உக்கிரமாக.
தடிந்து = கொன்று.
குழகன் = குமரன்.

16. வாயு சங்கிதை, பூருவ காண்டம்

798. உணங்கிவெம் பிறவிக் கழிந்திடு மடியர்க்
குணங்கன்மி னென்றுரைப் பதுபோன்
மணங்கமழ் கமலச் சேவடிப் போதில்
வயங்கிய தண்டை நின்றொலிப்பப்
பணங்கெழு பாந்தள் படப்புடைத் தாலும்
பச்சிள மயிலின்மேற் றோன்று
மணங்குமை வயிறு வாய்த்திட வந்த
வறுமுக மொருவனைத் தொழுவாம். (26)

(இ - பொ.) தவத்தால் வாடி மெலிந்து கொடும் பிறவியை யொழித்திடும் அடியார்களுடைய நற்குண சரிதங்களைப் படியுங்களென்று உலகத்தார்க்குரைப்பது போல, மணமிக்க செந்தாமரையை யொத்த திருவடியில் பூண் கிண்கிணிச்சதங்கை ஒலிக்க, பருத்த பாம்பின் படத்தை யடித்தாடும் பசிய விள மயில் மேல் வரும் பார்வதி தனயனும் ஆறுமுகக் கடவுளைப் பணிவாம். (எ-று.)

(அ - ப.) உணங்கி = மெலிந்து.
கன்மின் = கற்றுக்கொள்ளுங்கள்.
பாந்தள் = பாம்பு.
புடைத்துஆலும் = அடித்துஆடும்.

௬ உத்தர காண்டம்

799. தாமுறை பதங்க ணீங்கித் தலைதடு மாறி நெஞ்சி
லேமமுற் றிரங்கி வானோ ரெம்மைநீ காத்தி யென்ன
வாமுறையறியா னாகி யழலெனக் கொதிக்கும் வெஞ்சூர்
மாமுத றடிந்த வெள்வேல் வலத்தனை வணங்கு வாமே. (27)

(இ - பொ.) தாந்தாம் வசிக்கும் தானங்களைவிட்டு நீங்கி, (மகுடக்கிரீடமேது மில்லாமல்) தலைவிரிகோலமாய், நெஞ்சத்தில் கலக்கங் கொண்டிரங்கிய தேவர்கள், "ஐயனே! நீ எங்களைக் காப்பாற்றுவா"யென்று ஓல மிட்டு அலறு வதைத் தாளாதவனாய், நெருப்புப் போல் கொதிக்கும் வெவ்விய சூரபன்மன் முதலான அசுரர்களைக் கொல் வெற்றி வேலேந்தும் வலக்கையனாய் விளங்கும் சுப்ரமணியனை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) பதங்கள் = இருப்பிடங்கள்.
தலைதடுமாறி = தலைவிரி கோலமாகி.
ஏமம் = கலக்கம்.
வாமுறை = குறைவிண்ணப்பம்.
வெள்வேல் = வெற்றிவேல்.

17. மச்ச புராணம்

800. குமரகுரு பரமுருக சரவணசண் முகவிபவ குகவென் றேவாழ்த்
துமரனெதிர் வேட்பவுப தேசித்த பரஞானச் சுடரா யப்பாற்
றமரநெடுந் திரைக்கடலு ளொளித்த கொடுஞ்சூரு டலந்தடிந்து வானத்
தமரர்சிறை மீட்டருளு மறுமுகத்தெம் மான்மலர்த்தா ளகத்துள் வைப்பாம். (28)

(இ - பொ.) குமரா ! குருபரா! முருகா! சரவணா! சண்முகா! வைபவா!குகா! என்று வாழ்த்தியழைக்கும் சிவபெருமான் எதிரிருந்து கேட்கப் பிரணவத்தின் பொருளையுபதேசித்த பரஞானச் சுடராய், அப்பால் ஒலிக்கும் நெடிய அலைகடலில் புகுந்தொளித்த கொடுஞ்சூரபதுமன் உடலைக் கொன்று, வானுலகத்துத் தேவர்கள் சிறையை மீட்பித்தருளும் ஆறுமாமுகன் பாத பங்கயங்களைத் தியானிப்பாம். (எ-று.)

(அ - ப.) குமர = குமார.
தமரம் = பேரொலி.
சண்முகம் = ஆறுமுகம்.
விபவ = வைபவ.
குகன் = அங்கீகரிப்பவன், சிங்கமுகனுமாம்.

18. சங்கர நாராயணர் கோயிற் புராணம்

801. மாமுத றடிந்த வொள்வெல் வலத்தனா யிருந்துங் கோடி
காமர்வண் டுழலுங் கூந்தற் கதிர்முலை வள்ளி மைக்கட்
டாமவேல் புரளுங் தோறுந் தனதுளங் குழையுஞ் செவ்வே
டேமரு கமல மன்ன சேவடி சென்னி வைப்பாம். (29)

(இ -பொ.) சூரபத்மன் முதலானவர்களைக் கொன்ற வெற்றிவேல் தாங்கும் (கோப) வல்லவனுயிருந்தும், கோடிக்கத் தக்க ஆசையான வண்டுகள் மொய்க்கும் அளக பாரத்தையும் தனபாரத்தையு முடைய வள்ளியம்மனின் மைதீட்டிய வேல் போலுங் கண்கள் குளிர்ச்சியான பார்வையால் உருண்டு வருந்தோறும், தம்முடைய உள்ளம் உருகி யொன்றுபடுஞ் சுப்ரமணியக் கடவுளின் மணம்மிக்க செந்தாமரைக்கிணையான சேவடிகளைச் சென்னியில் சேர்ப்பாம். (எ-று.)

(அ - ப.) வலத்தன் = வல்லவன்.
காமர் = ஆசை.
உழலும் = மொய்க்கும்.
தாமம் = சுகம்.
புரளல் = உருளல்.

19. தக்ஷிண கைலாச புராணம்

802. தானவர்க ளுரங்கெடுத்து வானவர்கள்
புரங்கொடுத்த தலைவன் வேத
ஞானவரம் பெதுகொலென வரன்கேட்ப
வுரைத்த பரஞான போதன்
கானவரம் புனத்திலொரு குறமகள்
பின்னுற நடந்த கமலபாதன்
றேனமருந் தொடைமுருக னெருவேல
னிருதாளெம் சிந்தை சேர்ப்பாம். (30)

(இ - பொ.) (சூரபதுமனுதி) அசுரர்களுடைய வலிமையைக்கெடச்செய்து, தேவர்களுக்குப் பொன் நாட்டைக் கொடுத்த தலைவனும், ஈச்சுரன் ஞானவழியெதுவென்று கேட்க, மோன மென்றுரைத்த குருபர ஞான போதகனும், வேடர்களுடைய தினைப் புனத்தில் குறமகளாகிய வள்ளியின் பின் நடந்த பாதாம்புயனும், மணம் கமழும் கடப்ப மலர் மாலையணிந்த முருகேசனுமான வடிவேலனுடைய இருபாதங்களைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ -ப.) தானவர் = அவுணர்.
புரம் = சுவர்க்கபுரம்.
கானவர் = வேடுவர்.
புனம் = தினைப்புனம்.

20. பிரபுலிங்க லீலை

803. பாக மொருபெண் குடியிருக்கும் பரம னணியிற் பரித்தமணி
நாக நுழைவுற் றுடல்சுருண்டு கிடந்து நகுவெண் டலைப்புழையிற்
போக மெல்லத் தலைநீட்டிப் பார்த்து வாங்கப் போகுமொரு
தோகை மயில்வா கனப்பெருமா டுணைத்தாட் கமலந் தொழுதிடுவாம். (31)

(இ - பொ.) பாதி உடம்பின் கண்ணே பார்வதியானவள் நிலைத்திருக்கப் பெற்ற கடவுளாலே ஆபரணம் போல், தாங்கப்பட்ட மணியை யுடைய பாம்பு,

சீறுகின்ற வெண்டலையினது துளையில், நுழைந்து உடல் சுருண்டு கிடந்து, புறத்திற் போதற் பொருட்டு, மெள்ளத்தலையை நீட்டிப் பார்த்து உள்வாங்காநிற்க, (அக்கடவுளிடத்தே)செல்லுகின்ற கலாபத்தையுடைய மயிலாகிய வாகனத்தையுடைய முருகக் கடவுளது இரண்டு பாதங்களாகிய தாமரை மலர்களை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) புழை = துளை.
பரித்த = தரித்த.

21. திருக்கூவப் புராணம்

804. நான்குமுகன் றொழுமைந்து முகனீன்ற வாறுமுக நாதன் றன்னை
வான்குலவு மொருகடவுள் யானையின்பா கனைப்புனத்து வடிவு கூர்ந்த
மான்குறுக வேங்கையுரு வெடுத்தானை யசுரர்குல மாய்த்துப் பேய்க்கட்
கூன்குருதி யொடுமளவிப் புதுவிருந்திட் டானைநம துளத்துள் வைப்பாம். (32)

(இ- பொ.) நான்முகப் பிரம்மனால் தொழப்படும் ஐம்முகப்பகவானாகிய பரமசிவன் பெற்றெடுத்த ஆறுமாமுகக் கடவுளாய், வானுலகத்து இந்திரன் மகளாகிய தெய்வயானையின் பக்கல் இருப்பவனாய், தினைப் புனத்தில் (வள்ளியம்மனென்னும்) வடிவுடைய மான் சந்திக்க (அதைப் புசிக்கும் நிமித்தம்) வேங்கை (மர) உரு வெடுத்தவனாய், (சூரபன்மனாதி) இராட்சசர் வம்சத்தை (அடியோடு) மாய்த்து, பேய்க் கூட்டங் கட்கெல்லாம் சதையும் இரத்தமுமாய்க் கலந்து, ஓர் புதிதான விருந்திட்டவனாய் உள்ள முருகனை உள்ளன்புள் வைத்து வணங்குவாம். (எ - று.)

(அ -ப.)வான்குலவும் ஒரு கடவுள் = தேவேந்திரன்.
ஆனை = தெய்வயானை.
வடிவுகூர்ந்தமான் = வள்ளி.
குறுக = நெருங்கவும்.
ஊன்குருதி = இரத்த மாமிசம்.
அளவி = கலந்து.

அசுரர்குலம் ஆய்ந்து எனினும் ஒவ்வும். என்னை? அசுரர் குலம் ஒன்றில்லாமல் ஆராய்ந்து பேய்க்கு விருந்திட்ட என்றவாறும்.

22. விருத்தாசலப் புராணம்

805. திருக்குமரம் போல்வாருந் திருப்பாதங் கண்டாரை
யுருக்குமரன் றிருக்குமர னுற்றாரைச் செற்றாரை
முருக்குமரன் சூரனுக்கு முழுவயிர னம்முளத்தைத்
தருக்குமரம் பைக்கனிபோற் றந்தானைச் சிந்தைசெய்வாம். (33)

(இ - பொ.) பாதித்திருப்பித்தூக்கும் உதைபோல் நீளும் திருவடி நடனம் கண்ட அடியார்களுள்ளத்தை உருக்கும் நடராசன் குமாரரும், நெருங்கிய பந்துக்களான தேவர்களை அழிக்கவரும் மாமரவுருவமான சூரபதுமனுக்கு முழுதும் கூர்மையான வேலாயுத முடையவரும், நம் முள்ளத்தை இனித்த வாழைப் பழம் போல் கனிவித்தவருமான சண்முகக் கடவுளைச் சிந்திப்பாம். (எ-று.)

(அ - ப.) திருக்கும் = திருப்பித்தூக்கும்
அரம் = உதை
வாரும் = நீளும்.
செற்றார் = பகைவர்
முருக்கும் = அழிக்கும்.
மரன் = மாமரவுருவன்.
முழுவயிரன் = முழுதும் கூரியவேலாயுதன்.
தருக்கும் = இனிக்கும்.
அரம்பைக்கனி = வாழைப்பழம்.

23. திருவையாற்றுப் புராணம்

806. கேச வன்பதி தாதா வாழ்பதி கேடி லம்புவி நானா பாலம்
வாச வன்பதி கோகோ கோவென மாறு கொண்டேழு சூர்வேர் போயற
வீசு துந்துபி தேதோ தாவென வேலை வெந்தற மேலே தூளெழ
வாச றும்படி கூர்வே லேவிய வாறி ரண்டுகை யானே வாழிய. (34)

(இ - பொ.) விஷ்ணுலோகமாகிய வைகுண்டமும், பிரம்மன் வாழிடமாகிய சத்திய லோகமும், இந்திரனுடைய சொர்க்கலோகமும், பூலோகமும், மற்றும் அநேகமான உலகங்களும், கோவே! கோமானே! எனக் கோ வென்றலற, மாறுபாடு கொண்டு போர்க்கு வரும் சூரபதுமனாதி சேனைகள் வேரோடு மாளவும் காற்றால் வீசுகின்ற துந்துமி தே-தோ தாவென முழங்கக் கடல் வற்றிப் போகவும், அதன்மேல் செந்தூள் கருந்தூள் எழுந்து படியவும், இன்னும் சில குற்றங்களும் நீங்கும்படி கூர் கொண்ட வேலாயுதத்தைப் பிரயோகித்த பன்னிரு கையனும் ஆறுமுகக் கடவுள் வாழ்ந்து வருக. (எ - று.)

(அ - ப.) கேசவன் = சேவகன் (மொழிமாற்று)
காப்புக்காவலனாகலான்.
தாதா = (தாய்க்குத்தாய் = பாட்டி)
பிரம்மனுக்குச் சமானம்.
பாலம் = ஞாலம்.

24. நல்லூர்ப் புராணம்

807. கள்ள றாமலர்க் கருங்குழற் கன்னியர் காதல்
கொள்ளு பேதைய னிவனெனத் தனதுளங் குறித்தே
யெள்ளு றாவகை தன்னடிக் கேவல் கொண்டருளும்
வள்ளி காதலன் மலரடி மனத்துள் வைத்திடுவாம். (35)

(இ- பொ.) தேன் வற்றாத மலர்களைச் சூடிய கருங்குழலின் கன்னியா குமரிகள் தங்காதற் சிறப்பைக் கொள்ளும் பேதைமையானவன் இவன்தானெனத் தமதுள்ளத்திற் குறிப்பிட்டு உலகம் ஏசாவண்ணமாய்த் திருவடிக்கு அடியேனை ஏவலாளனாகக் கொண்டருளும் வள்ளி நாயகனாகிய சுப்ரமண்யக் கடவுளின் சரணாரவிந்தங்களை மனத்துள் வைத்துப் பூசிப்பாம். (எ - று.)

(அ - ப.) எள்ளுறாவகை = ஏசாவிதம்.
ஏவல் = ஏவலாளன்.

25. வீரசிங்காதன புராணம்

808. எல்லை தீரருட் பெருக்கினா லெளியனா மென்பிழை யெண்ணாம
னல்ல சீரடி யாரொடு மொருவனா நயந்தெனை யினிதாண்ட
வல்லி மான்மக ளின்புறத் தழுவிய வரைபக வெறிந்தோன்றா
ளல்லு நண்பக லுந்துதித் திடுவதுற் பவமற வழகாமால். (36)

(இ—பொ.)எல்லையில்லாத திருவருட் பெருக்கத்தால், ஏழையனாம் அடியேன் பிழைகளை ஒரு சிறிதுங் கொள்ளாமல், நல்ல சிவனடியார் திருக் கூட்டத்தோடு என்னையும் ஒருவனாக விரும்பியாட்கொண்ட, மானைப் போல் துள்ளிக்குதிக்கும் வள்ளியம்மன் மகிழத் தழுவிப் புணர், கிரவுஞ்ச மலையைப் பிளந்தோனாகிய சண்முகக் கடவுளின் திருவடிகளைப் பிறவிப்பிணி நீங்க இரவும் பகலுமாகத் துதிப்பது அழகாம். (எ - று.)

(அ-ப.) அல் = இரா.
நண்பகல் = உச்சிக்காலம்
உற்பவம் = உற்பத்தி, பிறப்பு.

26. சீகாளத்திப் புராணம்

809. பன்னிரு கமலக் கையும் பற்பல தொழில் விளைப்பத்
தன்னமர் தாய்முலைப்பா றன்கவா னிருந்துண் ணுங்கான்
முன்னவ னகலந் தாழ்ந்த மொய்தலைத் தொடை புரட்டும்
பொன்னடி யிளைய சேயெம் புந்தியி லுலவு மன்றே. (37)

(இ -பொ.) பன்னிரு திருக்கரங்களும் பற்பல செயல் நடாத்தி விளையாடத் தன்னுடைய தாயின் முலைப்பாலைத் தான் தொடை மீதிருந்து உண்ணும் போது, மூத்த பிள்ளையார் நீளமான யானை முகத்தால் தொடையினின்றும் புரட்டித் தள்ளும் இளஞ்சேயோனாகிய சுப்ரமணியக்கடவுளின் பொன்னடிகள் நம் அறிவினில் உலாவிவரும். (எ - று.)

(அ - ப.) பற்பல தொழில் விளைப்ப = பல திருவிளையாடல்கள் புரிய.
கவான் = தொடை.

810. வளர்செழுங் குருதிச் சூட்டு வாரணம் வலனு யர்த்த
வொளிகெழு பரிதி வைவே லொருபெருங் கருணை மூர்த்தி
களிமகிழ் சிறந்து தான்வாழ் கற்களி னொருகல் லன்றே
வளியவென் மனத்தி னுள்ளு மகன்றில னிருக்கு மன்னோ. (38)

(இ-பொ.) சிவந்த இரத்தத்தைப் போல் வளர்ந்த கொண்டையை யுடைய சேவலானது, வெற்றிக்கொடி உயர்த்திப் பிடிக்கவும், பிரகாசம் பொருந்திய கதிர் வேலுடையதோர் பெருங்கருணை மூர்த்தியான சிவசுப்ரமணியக் கடவுள் தான் அதிக விருப்பமாய் வாழ்ந்து வரும் பல திருக் குன்றங்களில் (யானும்) ஒரு குன்றமென்றே அடியேன் இருதயத்தினுள்ளும் அகலாமல் கனியக் குடி கொண்டிருப்பது. (எ - று.)

(அ-ப.) சூட்டுவாரணம் = சேவல்.
வலன் = வெற்றிக்கொடி.
பரிதியைவேல் = கதிர்வேல்.
கற்களில் = குன்றங்களில்.

27. திருக்கழுக்குன்றப் புராணம்

811. வெருவேலைஞ் ஞூற்றிரட்டி விழிபடைத்தா யமரரொடும் விடாது துன்ப
மருவேலை மழைநிறத்தாய் மலரகத்தா யெனத்தனது மலர்க்கண் சாத்திப்
பெருவேலை பொருதலைக்குங் கருவேலைக் கவுணர் கணப்பெருகு வேலைக்
கொருவேலை விடுத்தானை யிருவேலை யுந்தமியேற் குணரல் வேலை. (39)

(இ - பொ.) ‘‘வானிடு வில்லின் நிறத்தவா! கற்பக மலர் மாலை யணிந்தவா! ஆயிரங்கண் படைத்தவா !இனி பயப்படேல். தேவர்களோடு (இனிமேல்) ஓயாது துன்பத்தை யடையேல். நான்காப்பாற்றுகிறே’’ னெனத் தனது அருள் நோக்கத்தைக் காட்டி, பெரிய கரையை மோதி அலைஅடிக்கும் கருங்கடலுக்குச் சமானமான அசுரர்கள் சேனைக்கடலுக்கு ஒரேவேலாயுதம் விடுத்துக்கொன்றவனுகிய சண்முகக்கடவுளை இரவும் பகலுமாகத் துதிப்பதே அடியேனுடைய தொழில். (எ - று.)

(அ - ப.) வெருவேல் = அஞ்சேல்.
ஐஞ்ஞூற்றிரட்டி = ஆயிரம்.
மருவேல் = அடையேல்.
ஐமழைநிறம் = மழைக்காலத்துப் பஞ்ச வண்ண வானவில்.
பெருவேலை = பெருங்கரை.
பொருது அலைக்கும் = மோதி யலையடிக்கும்.
கருவேலை = கருங்கடல்.
அவுணர்கணம் = அசுரக் கூட்டம்.
பெருகு வேலை = சேனைக்கடல்
இரு வேலை = இராப்பகல்.
தமியேன் = தனியேன்.

28. திருக்காளத்திப் புராணம்

812. முழுதுலகங் களிசிறப்ப முனிவர்குழா மமரர்குழாங்
கழிபெருந்துன் புறவெழுந்த கவிர்தலைமா முதறடிந்து
பொழிமதவெள் ளானைமிசைப் புரந்தரனுக் கரசளித்துக்
கெழுசுடர்வே ணம்பிதண்டைக் கிண்கிணிச்சீ றடிதொழுவாம். (40)

(இ - பொ.) உலகமுழுதுங் களிப் பெய்தும்படியாக, முனிவர் கூட்டமும், தேவர் கூட்டமும் மிக்க துன்பமடையும்படி தோன்றிய மாமரவடிவாய் நின்ற சூரபத்மனை அழித்து, வெள்ளை யானையை வாகனமாகவுடைய இந்திரனுக்கு விண்ணுலக ஆட்சியை அளித்துக் கையில் ஒளிபொருந்திய வேலாயுதத்தைக் கொண்டு விளங்கும் முருகக் கடவுளுடைய, தண்டையுங்கிண்கிணியுமணிந்து விளங்குஞ் சிறிய திருவடிகளைத் தொழுவாம். (எ - று.)

29. அருணாசலப் புராணம்

813. கொந்தாரு மலர்ச்சோலை யருணைநெடுங் கோபுரத்திற் குமர வேளை
வந்தாரை வாழ்விக்க வடவீதி தனிலுறையு மயிலி னானைக்
கந்தாருங் கடக்களிற்று மகவாற்குத் தருநிழலுங் கனக நாடுந்
தந்தானை யலர்கடப்பந் தாரானைப் பணிவர்தா டலைமேற் கொள்வாம். (41)

(இ- பொ.) பூங்கொத்துக்களையுடைய சோலைசூழ்ந்த அருணாசலத்தின் கிழக்குக் கோபுர வாயிலுக்கடுத்த, மேற்புற மண்டபத்திலிருக்கின்றவரும், தம்மை அடைந்தவர்களைப் பிழைப்பிக்கச் செய்ய, வட வீதியிலே வாசஞ் செய்கின்ற மயில் வாகனத்தை யுடையவரும், தறியிற் கட்டப்பட்ட மதம்பொருந்திய ஐராவதத்திலேறுகின்ற தேவேந்திரனுக்குத் தேவலோகத்தையும், கற்பக மரத்தின் நிழலையும் கொடுத்தவரும், கடப்ப மலர் மாலையைத் தரித்தவருமாகிய சிவசுப்ரமணியக் கடவுளை வணங்குகின்ற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல் வைத்துக் கொள்வாம். (எ-று.)

(அ - ப.) கொந்து = கொத்து.

---

30. திருவெண்காட்டுப் புராணம்

814. எண்காரும் புனக்குறவர் தமக்குறவ னெனவணுகி யேனல் காத்துத்
தண்காருஞ் சைவலமு மனையகுழல் வள்ளிதனந் தழுவுங் கோவை
வெண்காட்டன் றிருமகனை மயிலோனை யமரர் சிறைவிடுத்த வேளைக்
கண்காணப் பரவினர்தம் பிறவியெனும் பெருஞ்சிறையைக் கடப்பர் தாமே.(42)

(இ - பொ.) கொல்லைக் குறவர் நினைக்குந்தோறும், அவர்களுக்கு உறவினன் போல நெருங்கித் தினைப்புனம் காத்தும், குளிர்ச்சியான மேகத்தை யொத்த கூந்தலும், மலைபோன்ற தனபாரமு முடைய வள்ளியைப் புணருங்கோமானாய், திருவெண்காட்டுச் சிவபெருமான் திருமகனாய், மயில் வாகனனாய் விளங்கும், தேவர்கள் சிறையை விடுவித்த குமர வேளை, கண்ணாரத் தரிசித்துத் துதித்தவர்கள் தத்தம் பிறப்பென்னும் பெரிய சிறைக் கூடத்தைக் கடப்பர். (எ-று.)

(அ - ப.) புனம் = கொல்லை.
ஏனல் = தினைப்புனம்.
சைவலம் = சைலம்
பரவினர் = வணங்கினவர்.

(அ - ம்.) தண்காரும் (அனைய)குழல். சைவலமும் (அனைய)தனம்.

---

31. திருவிரிஞ்சைப் புராணம்

815. அந்திப்போ தழகுறவே நடித்தருளும் வழித்துணைவ ரருளுங் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி யயிலெடுத்து வருஞ்செவ் வேளைச்
சந்திப்போ மலர்சொரிவோம் புகழ்ந்திடுவோ மவன்கமலத் தாளுந் தோளுஞ்
சிந்திப்போ மாதலினா னமதுபழ வினைகளெல்லாஞ் சிந்திப் போமே. (43)

(இ - பொ.) மாலைப் பொழுதின் செந்நிற அழகுண்டாக, நடனம் ஆடும் வழித் துணைவராம் சிவபெருமான் பெற்றருளும் கோமானும், வணங்கித் துதிப்போர்கள் நினைத்தபடியே மயில் மீதேறி வேலாயுத மெடுத்து வரும் குமரவேளுமான சிவசுப்ரமணியக்கடவுளை நாம் எல்லாரும் கோட்டத்திற்குப் போய் முதலில் தரிசிப்போம். பின்பு மலர்களைக்கொண்டு பூசிப்போம். அப்பால் வாயாரப் போற்றுவோம். கடைசியில் அவன் பாத பங்கயங்களைக் கைகூப்பித் தெண்டனிடுவோம். அதனால் நமது வினைகளெல்லாம் சிந்திப் போய்விடும். (எ-று.)

(அ - ப.) சிந்திப்போம் = வணங்குவோம்.
சிந்திப்போம் = சிதறிப்போம்.
அந்திப்போது = மாலைநேரம்; இராக்காலத்துக்குமாம்; எனவே நள்ளிருளில் ஆடிய நடனமெனக் கொள்க.

32. தீர்த்தகிரிப் புராணம்

816. புள்ளி னாயகன் மிசைவருங் குரிசிலும் பொகுட்டுக்
கள்ளி னாயகன் றனவிதழ்ப் போதனுங் காணா
வெள்ளி நாயக னகத்தவள் விருப்பினா லளித்த
வள்ளி நாயகன் பதமலர் மனத்தினில் வளர்ப்பாம். (44)

(இ - பொ.) மலைத்தேன் அரும்பி இதழ் அகன்ற கமலாசனனாகிய பிரம்மதேவனும், பட்சிக்கரசனாகிய கருடாழ்வான் மேல்வரும் மகாவிஷ்ணுவும் அடி முடி தேடிக் காணாத வெள்ளியங்கிரிச் சிவபெருமான் பார்வதி தேவியுடன் விருப்பமேலீட்டால் அளித்தருளிய வள்ளி மணாளனும் சண்முகக்கடவுளின் மலர்ப் பாதங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ-ப.) புள்ளின் நாயகன் = கருடன்.
குரிசில் = (கொற்றவன்) திருமால்.
பொகுட்டுக்கள் = மலைத்தேன்.
இனாய் = அரும்பி.
அகன்றஇதழ் = இதழ் அகன்ற.
போதன் = பிரம்மன்.
நகத்தவள் = மலைமகள்.
வள்ளிநாயகன் = வள்ளிமணவாளன்.

33. பழைய காஞ்சிப் புராணம்

817. அனித்தமெனுஞ் சிறைப்பிறவிப் பெரும்பிணிக்கு
மருந்திதுவென் றறிவி லாய்ந்து
முனித்தவரெண் டிருவேகாம் பரத்திறைவ
ரினிதெனவே முன்ன மீயுங்
கனிக்குவினை பேராசை தணியாம
லெந்நாளுங் கருணை கூர்ந்தே
தனித்தொருமா வடியினுறை யறுமுகவ
னிருசரணஞ் சரணஞ் செய்வாம். (45)

(இ - பொ.) விருப்பின்மையென்னும் சிறைப்பட்ட பிறவிப்பெரும் பிணிக்கு மருந்து இன்னது தானென்று அறிவால் சீர்தூக்கி, முனிவர்களெல்லாம் எண்ணித் தொழும் காஞ்சி ஏகாம்பரநாதர், முன்னொருகால் (விநாயகருக்கு) இனிதென்று தந்த பழத்தினால் விளைந்த பேரவா தணியாமல் ஒரு மாமரத்தின் கீழ்க்கருணை கூர்ந்து உறைபவராம் ஆறுமுகக் கடவுளின் உபயசரணங்களுக்குச் சரணஞ் செலுத்துவாம். (எ-று.)

(அ - ப.) அனித்தம் = அனிச்சம் (விருப்பின்மை.)

34. கந்த புராணச் சுருக்கம்

818. தேவர்குலப் பெருங்கமல மிடுக்கணான திமிரமகன்
றளியோடு சிறந்து வாழ
மாவலிசே ரவுணர்குலக் குவளைவாடி மண்ணினிடைச்
சுருங்கியிட வந்த பானு
தூவடிவேற் குமரேச னடியனேன்புன் சொல்லினுக்கு
மிரங்கியருள் சுரக்கும் பெம்மான்
பூவடியா மிருபோது மூன்றுபோதும் பூசைபுரிந்
தன்பினோடு புகழ்ந்து வாழ்வாம். (46)

(இ – பொ.) தேவர் குலமென்னும் ஓர் பெருங் கமல மலரானது துன்பமாகிய இருளை விலக்கி மணத்துடன் வாழவும், மகாவலிமையையுடைய அசுரர் குலமென்னும் குவளைப்பூவானது வாடி மண்ணில் அழிந்து போகவும், உதித்ததோர் சூரிய மூர்த்தியும், வடிவேலனான குமரேசனும், அடியேனுடைய புன்சொல் பாமாலைக்கும் இரங்கி யருள் சுரக்கும் பெருமானுமான சண்முகக் கடவுளினது உபய பாதார விந்தங்களை முக்காலும் பூசை செய்து அன்பாக வாழ்த்தி வணங்குவாம். (எ - று.)

(அ-ப.)இடுக்கண் = இடையூறு.
திமிரம் = இருள்.
குவளை = பூடு.
பானு = சூரியன்.
இருபோது = இணையடி மலர்.
மூன்றுபோதும் = முப்போது.

35. திருவாவடுதுறைப் புராணம்

819. மாறு கொண்டசூர் மார்பிரு கூறுறச்
சீறு கின்றவை வேல்பெறு சேவக
னூறு கின்றகள் ளுண்டுவண் டூர்கடம்
பேறு கின்றபொற் றாண்மல ரேத்துவாம். (47)

(இ - பொ) மனமாறாட்டம் கொண்ட. சூரபதுமன் மார்பு இருபிளவாகும்படி அதிவேகமாகப் பாயும் கதிர் வேலுடைய வீரனும் சுப்ரமணியக் கடவுளின் கடப்பமலர் மாலைகளில் ஊறிய தேனுண்டு களிக்கும் வண்டுகள்கீதம் பாடும் பொற் பாத கமலங்களைத் துதிப்பாம். (எ - று.)

(இ - பொ.) மாறு = மாறுபாடு (கள்ளவேடம்)
சீறுகின்ற = வேகம்.
சேவகன் = வீரன்.
கடம்பு = கடப்பமலர்
ஏறுகின்ற = போதையேறிப் பாடுகின்ற.
(அ - ம்.) சேவகன் கடம்பு ஊறுகின்ற கள்ளுண்டு
ஊர் ஏறுகின்ற பொற்றாள்.

36. காஞ்சிப் புராணம்

820. முருகோட்டந் தரப்பாயு மும்மதமு
மூற்றெடுப்ப முறிவிற் கோட்டு
மொருகோட்டு மழகளிற்றை யிருகோட்டு
முதுகளிறு வுலவக் காட்டிப்
பருகோட்ட நறைவேட்டுப் பைங்கோட்டுத்
தினைப்புனத்துப் பரண்மேற் கொண்டு
குருகோட்டும் பெடைமணந்த குமரகோட்
டத்தடிகள் குலத்தாள் போற்றி. (48)

(இ–பொ.) தேன் (மணத்துடன்) பெருக்கெடுத்தோடுவதுபோலப் பாயும் மதம் மூன்றும் ஊற்றெடுத்துப் பொழிய, முறியாமல் வில்போல் வளையும் கொம்பொன்றுடைய விநாயகக் கடவுளை, இரண்டு கொம்புகளை யுடைய பெரிய யானை உருவமாக உலாவிவரச் செய்து பயங் காட்டுவித்து, பருகத்தக்க அதராமுதம் வேண்டி, மலைநாட்டின் திணைப்புனத்தில் மஞ்சம் பரணை மேல் இருந்து கொண்டு (சேவல் முதலான) பறவைகளோட்டும் வள்ளியம்மனைத் திருக்கல்யாணம் புரிந்த குமரகோட்டத்துக் குமாரசாமியின் குலவும் திருவடிகள் இரண்டுக்கும் வணக்கம். (எ - று.)

(அ - ப.) முருகு ஓட்டம் = தேன்பெருக்கு.
கோட்டும் = வளையும்.
பருகு = குடிக்கும்.
ஓட்டும் = (ஓட்டம்) உதடு.
வேட்டும் = வேண்டும்.
நறை = தேன்.
பைங்கோடு = மலைநாடு.
பரண் = பரணை.
குருகு = பட்சிகள்.
குலத்தாள் = குலதருமத்துக்குத் தக்க சேவடிகள் எனினும் தகும்.

37. விநாயக புராணம்

821. மரந்துளைந்த கணையானுஞ் சோவெறிந்த
திறலானு மதிக்குந் தோறுஞ்
சிரந்துளக்க வலைகடலுஞ் சேணிகந்த
பெருவரையுந் திறத்திற் குன்றக்

கரந்துளக்குங் குறுமுனிக்குங் கருத்தின்
மயல்பூட்டி யகைதவஞ்சால் வெற்பி
னுரந்துளைத்த சேயிலைவேல் வலனுயர்த்த
விளையவனை யுளத்துள் வைப்பாம். (49)

(இ - பொ.) நெடுங்காலமாயொலிக்கும் கடலையும், ஆகாயத்தில் ஊடுருவிய விந்தகிரியையும், தம் வல்லபத்தினால் குன்ற வைத்த கரங் கொண்டொளிர் அகத்திய முனிவருக்கே மன மாறாட்டஞ் செய்த கபடமான மாயமலையின் வடிவனும் கிரவுஞ்சனுடைய மார்பை (பூர்வம்) மரத்தின் இலைகள் தோறும் துளைத்த காண்டீபனாகிய அர்ச்சுனனும், வருணனால் மழை பெய்வித்த இந்திரனும் ஆய தன் மைத்துனன், மாமன் இருவரும் மதித்து மெச்சிக் கொள்ளும்படி யாகத் துளைத்த வெற்றி வேலாயுத மேந்தும், சிவசுப்ரமணியக் கடவுளை உள்ளக் கமலத்துள் வைத்துப் பூசிப்பாம். (எ - று.)

(அ-ப.) மரந்துளைத்தகணையான் = அர்ச்சுனன்.
சோவெறிந்த திறலான் = இந்திரன்.
மதிக்குந்தோறும் = மெச்சமெச்ச.
சிரந்துளக்க = தலையசைக்க.
சேண் இகந்த = ஆகாயம் ஊடுருவிய.
கரந்துளக்கும் = கரங்கொண்டொளிரும்.
குறுமுனி = அகத்தியன்.
கைதவம் = வஞ்சனை.

38. திருத்தணிகைப் புராணம்

822. ஓங்கொளியாய் விசும்பாதி தொறுமியலுந்
தனதியல்பை யுருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோற் பலபொறியாய்ப்
பரமர்விழி பயந்த ஞான்று
தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்
ளொளிபடர்ந்து தெளிநீர்ப் புக்கு
நீங்கிவிளை யாட்டயர்ந்து தணிகையமர்
பெருவாழ்வை நினைந்து வாழ்வாம். (50)

(இ - பொ.) பிருதிவியாதி பஞ்சபூதங்களிலும் பரஞ்சோதியாய் விளங்கும் தனது சுயம் பிரகாசத்தைத் திருவுருவத்தாலும் நன்றாய்க் காட்டுவித்தாற் போல் பவனுடைய ஆறுதிருப்பொறிகளைச் சாட்சாத் பரமசிவம் நெற்றிக்கண் மூமாய்ப் பிறப்பித்த நாளில் தேசோமயமாய ஆகாயம் எல்லாம் பதிந்து, பின்பு வாயு சம்பந்தமாய் நிறைந்து, அப்பால் தழற் பிழம்பாய் அக்கினியில் கலந்து கடைசியில் கங்கை-சரவணம் புகுந்து, அதையும் விட்டுத் திருவிளையாடலாகத் தானே தணிகாசலத்தில் எழுந்தருள் பெரிய வாழ்வாம் சண்முகக் கடவுளைத் தியானித்து வருவாம். (எ-று.)

(அ-ப.) பயந்த ஞான்று = பெற்ற அன்று.

39. பேரூர்ப் புராணம்

823. காமர் மல்கிய வுருவிலை தன்றெனக்
கருத்தின் முன்னுறத் தோன்றுங்
காம னல்லுடல் பொடித்த கண்ணிடத்
துமைகண வனார்நிக ரில்லாக்
காமர் மல்கிய வுருவெனத் தோற்றிய
காளை யையடி யார்தங்
காம முற்ற மிக்கருளு மங்குலி
நகர்க்கந் தனைப்பணி வாமால். (51)

(இ-பொ.) அழகு நிறைவுருவம் இதல்லவெனக் கருத்தில் கருதும்படியாக மிக அழகற்றுத் தோன்றும், மன்மதனுடைய சரீரத்தை எரித்த உமாமகேசுவரரின் நெற்றிக் கண்ணினிடமாக ஒப்பில்லாத பேரழகு நிறைந்த வடிவமெனத் தோன்றிய குமாரக் கடவுளாய் அன்பர்களுடைய எண்ணம் பூர்த்தியாக மிகுதியும் கொடுத்து இரட்சித்தருளும் பேரூர்க் கந்தசாமியைப் பணிவாம். (எ-று.)

(அ-ப.) காமர் = அழகு.
முன்னுற = நினைக்க.
பொடித்த = பொடிபடஎரித்த.
நிகரில்லாக்காமர் = ஒப்பில்லாப்பேரழகு
காளை = குமரன்.

---

40. திருவானைக்காப் புராணம்

824. இருமுது குறவர் நாப்ப ணிளமையோ டிருந்து சேயென்
றொருவரும் பெயரும் வேறே யொருவருஞ் சாமி யாகாக்
குருபர னிறைஞ்ச வுண்மை கொடுத்தொரு சாமி யென்னும்
பொருவரும் பெயரும் பூண்ட புனிதனைப் புகழ்ந்து வாழ்வாம். (52)

(இ-பொ.) பெரிதும் பழைய குறவர் மரபிலே இளம் பெண்ணாக வந்த வள்ளியம்மன் சகிதமாயிருந்து, சேயோனென்ற அருமைத் திரு நாமமும், வேறாக நீங்குதலின்றிக் குலதெய்வம் போலக் காக்கும் பரமசிவன் வேண்ட, அவர்பால் பிரணவ ஞானத்துக்கு மோனமே பிராணமென உண்மையைச் சொல்லுமோர் தகப்பன் சாமியாம் ஒப்பில்லாத பால சுப்ரமண்யன் என்னும் பேர்கொள் பரிசுத்தனைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) இருமுது குறவர் = தாய்வழியாலும் தந்தை வழியாலும் சந்ததி வந்த பழங்குறவர்.
நாப்பண் = குலத்தின் நடு.
வேறே யொருவருஞ் சாமியாகா = வேறாய புறச் சமயத்தார் ஒருவருக்குஞ் சாமியல்லாத வெனினும் அமையும்.

இதன் பொழிப்புரை தெளிவாயில்லை. இவ்வுரை யாசிரியர் எதனை ஆதாரமாகக் கொண்டு எழுதினாரென்று விளங்காமையின், அப்படியே விடுக்கப் பட்டது.

41. பூவாளூர்ப் புராணம்

825. உயர்ந்தவரு மல்லவரு மோங்கியதன் னோக்காற்
*பயந்தழுவி னொப்பரெனல் பாரையறி வித்தாங்
கியைந்தமக வான்மகளொ டேனல்வளர் மாதும்
புயந்தழுவ நின்றபுனி தற்கடிமை செய்வாம். (53)

(இ - பொ.) நான்முகப் பிரம்மன் மாத்திரம் எண்டிசையிலுந்தன் கண்களைச் சரிவரப் பார்ப்பானேல் உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் சமானமாய் விடுவாரென்பதை உலகத்தார்க்கு அறிவிப்பவன் போல், (உயர்ந்திசைந்த ஐசுவரிய வந்தனான) இந்திரன் மகளாம் தெய்வயானையைத் திருமணம் புரிந்ததோடு (நில்லாமல்) திணைப்புனத்து வளர்ந்த ஏழை மாதாம் வள்ளியம்மையும் தம் கரங்களால் புணரநில் பரிசுத்தனாம் சுப்ரமணியருக்கு அடிமை பூண்டொழுகுவாம். (எ - று.)

(அ - ப.) பயம் = பிரமன்.
இயைந்த = இசைந்த.
மகவான் = இந்திரன்.
ஏனல் = திணைப்புனம்.

42. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

826. ஆரணமா கமமெவைக்குஞ் செந்தமிழ்க்குங்
குரவுபூண் டவருந் தேறக்
காரணமா மோரெழுத்தின் பொருள்விரித்துச்
சூருரமுங் கலங்க மாட்டி
வாரணமா தொடுவள்ளி நாயகிதன்
மணிப்புயத்தின் மகிழ்ந்து வாழு
மேரணிவேற் புலிசைநகர்க் குமரவேள்
பதமலர்க ளிறைஞ்சி வாழ்வாம். (54)

(இ - பொ.) வேதாகமங்கள் எல்லாவற்றிற்கும், செந்தமிழ்ப்புராணேதிகாசங்கள் முதலானவற்றிற்கும், குரவ மலர் மாலை பூண்ட பரமஞானாசாரியனாந் தட்சிணாமூர்த்தியே தேறித் தெளியும்படியாக ஓம் என்னும் பிரணவ அட்சர காரண மொன்றினுக்கு மௌனந்தான் பொருள் என விவரித்தும், சூரபதுமனாதியசுரர்களின் துணிவை நடுநடுங்கக் கொன்றும், தெய்யவானை யோடு வள்ளி நாயகி சமேதராய் மகிழ்ந்து வாழ்கின்ற திருப்பாதிரிப்புலியூர் கதிர்வடிவேல்

---

* பயம் = ஈண்டு முப்பேரைக் குறித்தலால் தகுவதே என்னை? பிரம்மன் நீர், தடாகம்...

1. பிரம்மன் பயம் ஓங்கியதன் நோக்கால் தழுவின் பிரம்மன் படைப்பில் பார்க்குமளவில் செல்வந்தன் அங்க அடையாளமும், ஏழையின் அங்க அடையாளமும் ஒன்றே.

2. ஒரே தடாகத்தில் செல்வந்தனும் ஒரு பக்கம் நீர் குடிக்கிறான். ஏழையும் அதே பக்கம் நீர் அருந்துகிறான். இப்படிப் பல உதாரணங்கள்.

குமரவேளாகிய சண்முகக் கடவுளின் பாதகமலங்களைத் துதித்து வாழ்வாம். (எ - று.)

(அ-ப.) குரவு = குராமலர்.
வாரணமாது = தெய்வயானை.
புலிசைநகர் = திருப்பாதிரிப்புலியூர்.

43. திருச்செந்தூர்ப் புராணம்

827. வண்டடை கிடந்தின் னிசைமுரன் றெழுதேன்
வாய்மடுத் துண்டுகா லுழக்க
விண்டுடைந் தலருங் கடம்பணி தடந்தோள்
வெற்பெலாம் பொற்புலாஞ் சுடர்வேற்
கெண்டையந் தடங்கட் குறக்கொடி களபக்
கிளரொளி முலைவனப் பெழுதக்
கண்டுகண் டுள்ளங் களிப்பருச் செந்தூர்க்
கந்தனை வந்தனை புரிவாம். (55)

(இ - பொ.) இனிமையான கீதங்கள் பாடாநின்ற வண்டுக் கூட்டங்கள் மொய்த்துத் தேனைக் குடித்துக் கொண்டே கால்களால் மிதித்து நடக்க, நன்றாய் மலர்ந்திருக்கும் கடப்பமலர் மாலை யணியும், திரண்ட புசங்களென்னும் மலைமேலெல்லாம், பொன்போல் உலவும் கதிர்வேலுடையவனும் சேல் கெண்டையைப் போலுங் கண்களையுடைய குறமகளாம் வள்ளியம்மன் தெய்வயானை இவர்களுடைய தனபாரங்களின் அழகு, எழுந்து விம்முந்தோறும் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரிக்கும் திருச்செந்தூரனாகிய கந்தசாமியை வந்தனை செய்வாம். (எ - று.)

(அ - ப.) அடைகிடந்து = மொய்த்து.
முரன்று = ஒலித்து.
மடுத்து = குடித்து.
உழக்க = மிதித்து நடக்க.
விண்டுடைந்தலரும் = மலரும்.
களபம் = யானை.
களபக்கிளரொளி = தெய்வயானை
களிப்பு அரு = நீங்காத மகிழ்ச்சி

44. கடம்பவனப் புராணம்

828. மருளாரும் பவத்தொடரை மாற்றியதென்
னன்மகளாய் மவுலி சூடிப்
பொருளாரும் புவிவிசயஞ் செய்தரசு
செலுத்தியமும் முலைப்பூந் தேனைத்
தெருளாருந் தமிழ்மதுரை நாதன்மணஞ்
செயவிதிநூற் சடங்கு செய்தே
யருளாருங் கடம்பவனத் துறைகுமர
குருபரனை யகத்துள் வைப்பாம். (56)

(இ-பொ.) மலையத்துவச பாண்டியன் திருக்குமாரியாய், வந்தவதரித்து மகுடஞ்சூடிக் கொண்டு பாச பந்தத்தால் மயக்கும், பிறவித் தொடர்ச்சியைப் பற்றற வேருக்கும் விஷயமான திக்விசயஞ் செய்வதோடு, அரசாங்கச் செங்கோலையும் செலுத்திய மும்முலைப் பூந் தேனுளாம் தடாதகைப் பிராட்டியாரைத் தெளிவான தமிழ் பேசும் மதுரையின்கண் சோமசுந்தரக் கடவுள், வேதவிதிப் படி மணந்து உக்கிர குமார பாண்டியனைப் பெற்றெடுத்த கடம்பவனம் வாழ்குருபரனும் சுப்ரமணியக் கடவுளைத் தியானிப்பாம். (எ – று.)

(அ-ப.) தென்னன் = மலையத்துவச பாண்டியன்.
மவுலி = மகுடம்.
புவிவிசயம் = திக்விசயம்.
அரசு = அரசாங்கம்.
செலுத்திய = செங்கோல் ஓச்சிய.
தென்னன்மனைவிபேர் காஞ்சன மாலை.

45. உத்தரகோச மங்கைப் புராணம்

829. வெள்ளிவரை நடப்பதெனப் பதம்பெயர்க்கு
நான்மருப்பு வேழ மூர்ந்து
தள்ளருஞ்சீர் விண்ணரசு தலையெடுப்பக்
கவிழிணர்மாத் தடிந்த வேலோன்
கொள்ளைவரி வண்டலம்புங் குழலெழில் சேர்குற
மடந்தை கொங்கை தோயுங்
கள்ளவிழ்தார்ச் செவ்வேட னடிபணிந்து
பிறவிவனங் கடத்தல் செய்வாம். (57)

(இ-பொ.) வெள்ளியங்கிரி நடந்தாலென்ன அசைந்து அடியெடுக்கும் நான்கு தந்தங்களையுடைய வெள்ளையானையின் மேல் பவனி வந்து, தள்ளவொண்ணாத பொன்னுலகமும், அதனரசனான இந்திரனுந் தலையெடுத்து வாழும்படி மாமரவடிவமான சூரபதுமனைக் கொன்ற வேலாயுதத்தவனும் கூட்டம் கூட்டமாக வரிசை வரிசையாக வண்டுகள் கீதம் பாடும் கூந்த லழகுடையாளாகிய குறமகளாம் வள்ளியின் தனங்களில் குழையும் தேன் ஒழுகிய கடப்பமலர் மாலை யணிந்த குமர வேளின் திருவடிகளைப் பணிந்து பிறவிக் கடலை கடப்பாம். (எ-று.)

(அ - ப.) வெள்ளிவரை = வெள்ளியங்கிரி.
பதம் பெயர்க்கும் = அடியெடுக்கும்.
நான்மருப்புவேழம் = ஐராவதம்.
ஊர்ந்து = ஏறி.
சீர்விண் = பொன்னுலகம்.
அரசு = அரசாங்கமும்.
தலையெடுக்க = (மேன்மேலும்) முன்னுக்குவர.
கவிழ்இணர்-மா = கவிழ்ந்து மூடியமாமரம்.
தடிந்த = கொன்ற.
கொள்ளை = கும்பல்.

வரி = வரிசை.
அலம்பும் = ஒலிக்கும்.
பிறவிவனம் = பவசாகரம், பிறவியாகிய காடு.

---

46. கடம்பர் கோயிற் புராணம்

830. பன்னிரு விழியுந் தோளும் பாணியும் பிறைக்கு நேராம்
பன்னிரு தரைப்பண் டுண்ட படைகளும் பதமுங் காட்டிப்
பன்னிரு மலனே யாறு பங்கய முகனே விண்மேற்
பன்னிரு பருக்கு மேலாம் பதந்தருங் குகனே போற்றி. (58)

(இ - பொ.) மூன்றும் பிறைக்கு நிகராம் கோர தந்தங்களுடைய இராக்கதரைப் பூர்வம், களத்தில் உண்ட வேல் முதலான பன்னிரண்டாயுதங்களும், அவற்றைத் தாங்கும் பன்னிரு கரங்களும், பன்னிரு திருக்கண்களும், அடையாளமான கோழிக் கொடி, மயில், வாகனம் முதலானவையும் காட்டித் துதிக்கும் நிருமலனே, செந்தாமரை போன்ற ஆறுமாமுகனே, வானுலகத்தாராகிய பற்பல தேவர்களுக்கும் மேலான சாயுச்சிய பதவியைத் தரும் குகப்பெருமானும் சுப்ரமணியக் கடவுளே, வணக்கம். (எ-று.)

(அ-ப.) பாணி = கை.
பிறைக்கு நேராம் பல் = வக்கிரதந்தங்கள்.
நிருதர் = இராக்கதர்.
படை = ஆயுதம்.
பதம் = அடையாளம்.
நிருமலன் = பரிசுத்தன்.
நிருபர் = தேவர் (அரசர்க்கும்).

---

47. வசவ புராணம்

831. வந்த சூரன் மயில்வடி வாகவே
சுந்த ரத்தனி வேலாற் றுணித்தெறிந்
தந்த ரத்த ரருந்துய ராற்றிய
கந்த வேளைக் கருத்தி லிருத்துவாம். (59)

(இ - பொ.) வந்தெதிர்த்த சூரபதுமனானவன் மயில் வாகனமாகும்படி அழகிய ஒப்பற்ற வடிவேலினால் மார்பையிருபிளவாகத் துணித்தெறிந்து, அந்தரவாசிகளாகிய தேவர்களின் பெருந்துயரத்தைப் போக்கியாற்றுவித்த கந்தசாமிக் கடவுளை மனத்திலிருத்தி வழிபடுவாம். (எ - று.)

(அ - ப.) அந்தரத்தர் = தேவர்கள்.

---

48. சரப புராணம்

832. *அடிமுடியொன் றில்லாத சிவபோகத்
திருவுருவத் தம்மை ஞானக்
கொடியுதவுங் குக்குடநற் கொடியானை
யுலகமெலாங் கொடுமை நீடும்

படிபுரியுஞ் சூரனுரம் பரவையுரங்
கிரியினுரம் பதைப்பச் சாடும்
வடிகிரண வயிலிலைவேற் குமரனிரு
பதகல மனத்துள் வைப்பாம். (60)

(இ-பொ.) ஆதியந்த மில்லாத சுயம்புவாம் சிவானந்த போகத் திருவுருவத்தில் (வாமபாகமாகக் கலந்திருக்கும்) அம்மையாராம் பார்வதி பெற்றெடுக்கும் கோழிக் கொடியனும், எல்லாவுலகங்களிலும் (அக்கிரமமாகக்) கொடுமையே செய்து திரியும் சூரபதுமன் வலிவையும், கடல் வலிவையும், கிரவுஞ்சத்தின் வலிவையும் பதை பதைக்கக் கொல்லும் கூர்மையான கதிர் வேலையுடையவனும் குமாரசாமியின் இருபாத பதுமங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) அடிமுடி = ஆதியந்தம்.
குக்குடம் = கோழி.
பரவை = கடல்.
கிரி = கிரவுஞ்சம்.
சாடும் = கொல்லும்.
வடிகிரண அயில் = வடித்துச் சுவாலித்த கூர்.
இலைவேல் = இலைபோலும்வேல்.

அடிமுடி யொன்றும் இல்லாதாகவே, அந்தர்யாமியாம் சிவபோகத் திருவரும் என்க.

---

49. சிவராத்திரிப் புராணம்

833. சூராட்டுப் பயில்சயிலத் துணைமுலைத்திண்
டகுவியர்மை தோயும் வாட்கண்
ணீராட்டுப் பெறமறநீ டவுணருடற்
புலவலகை நிறையத் தேக்கிப்
பாராட்டுத் தரவடிவேற் படைபணித்த
கரனரன்பார்ப் பதிக்குச் செல்வச்
சீராட்டுப் பிள்ளையெனு முருகன் முருகவிழ்
மலர்த்தாள் சென்னி சேர்ப்பாம் (61)

(இ - பொ.) மலைபோல் முலைகளிரண்டுடைத்தாய், குற்றம் பொருந்திய விளையாடல் புரியும் கொழுத்த இராட்சசிகளின் மையிட்ட வாள் போலுங் கண்ணினின்றும் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகும்படி, வஞ்சனையான சூரபதுமனாதி இராட்சதர்களின் உடல்களைப் பேய்க் கூட்டங்கள் நிறைந்து தேங்கிப் பிடுங்கி யுண்ண உபசரிக்கும் பலமான வடிவேலேந்திய கையனும், பார்வதி பரமசிவனுக்குச் சீராட்டும் செல்வப் பிள்ளையுமான முருகேசனுடைய தேனிறைந்த பாதபங்கயங்களைச் சிரமேல் சூடுவாம். (எ-று.)

(அ - ப.) சூராட்டு = கோதாட்டு.
சயிலம் = மலை.
தகுவியர் = இராட்சசிகள்.

கண்ணீராட்டுப்பெற = அழுது புலம்ப.
அவுணர் = அரக்கர்.
அலகை = பேய்.
பாராட்டு = உபசரிக்கும்.
உத்தரம் = பலம்

(உடலில் நன்ருகப்பட) (அலகு - ஐ)—கூர்மையைப் பூராவும் செலுத்தி. பார் சூட்டும் - பூமியில் புரட்டும் பலமான வடிவேல் எனினும் ஒவ்வும்.

834. இரங்குன்றன் றஞ்சமெக் கென்றுமக
வான்முத லோ ரிரப்ப நீண்ட
கரங்குன்றம் படைத்தனைய கரிமுகத்தோ
னரிமுகத்தோன் கதங்கொள் சூரன்
வரங்குன்ற மயிலுகைத்தங் கயிலெடுத்த
மலர்க்கரத்தோன் மஞ்சு துஞ்சும்
பரங்குன்றத் திருந்தசெவ்வே ளடிக்கடிச்செம்
பதுமமலர் பணிதல் செய்வாம். (62)

(இ - பொ.) இந்திரன் முதலான தேவர்கள் இரந்து வேண்டவும் உடனே அடியார்களுக்கு இரங்கும் உன் அடைக்கலத் துணை எமக்கென்று கிடைக்குமோவென்று இரந்து வேண்டவும், (நீண்ட தும்பிக்கையும், மலை போன்ற யானை முகமுமுடைய) தாருகா சூரனையும், (அவரவர்கள் பெற்ற) வரங்களெல்லாம் அழிய, மயில் வாகனத்தின் மேலேறி வேலாயுதமெடுத்துக் கொன்ற மலர்க்கையனும், மேகங்கள் தவழும் திருப்பரங்குன்றத்தில் இருந்து வாழ் குமரவேலுமாம் சிவசுப்ரமண்யக் கடவுளின் பாதாரவிந்தங்களை அடிக்கடி பணிவாம். (எ - று.)

(அ - ப.) மகவான் = இந்திரன்
கரிமுகத்தோன் = தாருகா சூரன்
அரிமுகத்தோன் = சிங்கமுகன்
கதம் - கொள் - சூரன் = உக்கிரமுடைய சூரபதுமன்
உகைத்து = ஊர்ந்து
மஞ்சு = மேகம்
துஞ்சும் = தவழும்
செம்பதுமம் = செந்தாமரை

835. ஈரலைவா யசங்கவரப் பிணங்கிடக்குங் களத்தமர் நீத்தெய்தி நொய்தில்
வாரலைவா யுறுமொருமா வரையோரொன் ரேரிரண்டா வகிர்ந்த வேலோன்
வேரலைவா யழிக்கமென்ரேட் கவின்படைத்த வள்ளிசுர வேழத் தோடுஞ்
சீரலைவாய் வருமடிகளடியரடிப் பொடிமுடியிற் சேர்த்தல் செய்வாம். (63)

(இ - பொ.) ஈரல் குலையைக் காகங்கள் கொள்ளையடிக்கக் குவிந்து கிடக்கும் பிணக்காட்டில் போரை முடித்துக்கொண்ட உடனே புறப்பட்டுக் கடலில் ஒளிந்த சூரபதுமன் முதலானவருடலை இரு பிளவாகப் பிளந்த வேலாயுதத்தவனும், மூங்கிலையும் பழித்த மெல்லிய தோள் அழகின் வள்ளி தெய்வயானையோடுந் திருச்செந்தூரின்கண் பிரசன்னமாய் வரும் கடவுளுமான சண்முகப்

பெருமான்றன் அடியார்களின் அடிப்பொடியை நஞ்சிரோ பூஷணமாகப் பூண்டு கொள்வாம். (எ - று.)

(அ - ப.) வாயசம் = காகம்
நொய்தில் = எளிதில்
வாரலை = கடல்
வகிர்ந்த = பிளந்த
வேரல் = மூங்கில்
அழிக்க = துடைக்க (கலைக்க)
கவின் படைத்த = அழகுடைய
சுர வேழம் = தெய்வ யானை
சீர் அலைவாய் = திருச்செந்தூர்
அடிப்பொடி = பாததூளி

836. * பெருவாவிக் கயனயனக் குறத்தி முகாம்புய மலர்த்தும் பெட்பினென்று
மொருவாவி னன்குடிலைப் பொருள்விரித்துத் தாதைதனக் குரைத்தோ னூர்கா
மருவாவி நன்குடிஞைப் புனன்மலர்த்தே னுடனளவி வயற்குப் பாயுந்
** திருவாவி னன்குடிவாழ் செவ்வேடன் சேவடிகள் சிந்தை செய்வாம். (64)

(இ - பொ.) பெரிதும் தாவித் துள்ளுஞ் சேல்கண்டை போலுங் கண்ணினளாம், குற மகளாகிய வள்ளியின் முகாரவிந்தத்தை மலரச் செய்யும் அன்பினனும், என்றும் வெளிப்படாதிருந்த பிரணவத்துக்குப் பொருள் (மோனந்தானென) விவரித்துத் தந்தையாரான (தட்சிணாமூர்த்திக்கே) உபதேசித்தவனும், பரவிய சோலைகள் சூழ்ந்த ஏரி நீரும் தேனைப்போலினிக்கும் ஆற்று நீரும் கலந்து பாயும் வயல்களுடைய திருவாவினன்குடி வாழ் குமரவேளுமான சிவசுப்ரமண்யக் கடவுளின் சேவடிகளைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) பெருவாவி = பெரிதுந்தாவி
கயல் நயனம் = அங்கயற்கண்
குறத்தி = குறமகள் (வள்ளி)
முகாம்புயம் = முகாரவிந்தம்
பெட்பு = அன்பு
ஒருவா இனம் = வெளிப்படா இரகசியம்
குடிலை = பிரணவம்
தாதை = தந்தை
ஊர்காமரு = சோலைகள் சூழ்
வாவி = ஏரி
குடிஞை = ஆறு
அளவி = கலந்து

---

* பெருவாவி = பெருந் தடாகத்தின் என்றும் பொருள் கூறலாம்.

** ஊரும், தோட்டமும், துறவும், வீடும், தேன்போலினிக்கும் நீர் வளப்பமும் பொருந்தி மருத நிலமெனத் தகும் திருவாவினன்குடி எனவும் பொருள் சிறக்கும்.

837. பாரகத்தும் விசும்பகத்தும் பயின்முனிவ
   ரிமையவர்தம் பழங்க ணீங்கத்
தாரகத்தொன் மறையுருவாய் மருவுசிவ
   சத்திதரு சத்தி யால்வெஞ்
சூரகத்தைத் துளைப்படுத்தி யொருதோகை
   யேறியிரு தோகை மாரோ
டேரகத்தி லிருந்தபிரா னென்னகத்தி
   லிருக்கவிடர்க் கிடமின் றென்பால் (65)

(இ - பொ.) பூலோகத்தும், வானுலகத்தும், சஞ்சரிக்கின்ற முனிவர்கள், தேவர்கள் தத்தம் துன்பங்கள் நீங்கி வாழ, உண்மையான பழைய வேத வடிவமாம் உமையவள் தரும், வேலாயுதத்தினால் கொடுஞ் சூரபதுமனாதி கூட்டத்தைத் துளைத்துக் கொன்று, வள்ளி தெய்வானை சமேதராக மயில்வாகனத்தின் மேல் ஆரோகணித்துத் திருவேரகத்தின்கண் எழுந்தருளி இருக்கும் சண்முகக் கடவுள் அடியேனுள்ளத்துக் குடிகொண்டிருப்பதால், என்மாட்டு யாதொரு இடுக்கணுக்கும் இடமில்லை. (எ - று.)

(அ - ப.) பாரகம் = மண்டலம்
விசும்பகம் = விண்டலம்
பயில் = (பழமையாய்) சஞ்சரிக்கும்
சத்தி = வேல்
தோகை = மயில்
தோகை = கோதை
இடர் = இடுக்கண்

838. நீடலுறழ் கருங்கனங்கள் படிந்துமுழ வெனமுழங்க நிரந்து தும்பி
பாடல்புரி தரத்தழைத்த பாசடைச்சந் தனப்பணை யிற்படருஞ் செய்ய
கோடலலர் விளக்கேந்தக் குலமயினா டகம்புரியுங் குன்று தோறு
மாடல்புரி முருகனிரு சரணமலர் பரவிவினை யகற்றி வாழ்வாம். (66)

(இ - பொ.) வண்டுக் கூட்டங்கள் நெடு நேரமாய்த் தூய தேனைக் குடித்து மேள வாத்தியமென ஒலித்துக் கீதங்கள் பாடத் தழைத்தோங்கும் பசுமையான சந்தன மரத்தின் கிளைகளின்மேல் படர்ந்தோடும் செங்காந்தளின் மலர்கள் விளக்கேந்துஞ் சமயம் பார்த்து மயிலினங்கள் கலாபத்தை விரித்தாடும் குன்றுகள் தோறும் ஆடல் புரி முருகேசனுடைய இரண்டு சரணாரவிந்தங்களையும் பணிந்து நம் பாவத்தைப் பற்றறுத்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) நீடல் உறழ் = நெடு நேரம்
கரும் கனம் கள் = அசல் தேன்
படிந்து = குளித்துண்டு
முழவு = (மேளம்) மத்தளம்
நிரந்து = முறையாக
தும்பி = வண்டு
பாசடை = பசுமையேறிய, பசிய இலை
பணை = கிளை
செய்யகோடல் = செங்காந்தள்

839. உருத்தணியாய் வருமசுர ருடறுணிக்கு நெட்டிலைவே லுரவோய் துன்பக்
கருத்தணியாப் பெருவெயிலுட் டிளைத்திளைத்த களையகலக் கருணைக் கண்டந்
திருத்தணியார் கழனிழற்கீ ழென்றுவழி படுமடியா ரிதயத் துள்ளுந்
திருத்தணியாம் பதியகத்தும் வாழ்குமர குருபரன்றாள் சிரமேற்கொள்வாம். (67)

(இ - பொ.) "சதுரங்க சேனா முகத்துடன் வந்தெதிர்க்கும் (சூரபதுமனாதி) அசுரர்களுடைய உடலைத் துணித்திரு பிளவாக்கும் நெட்டிலை வேலாயுதத்தவனே! துன்பத்தையே விளைக்கும் இப் பிறப்பானது இறந்து தணியாததோர் பெருங்கானலில் அகப்பட்டு அழுந்தி இளைத்த இளைப்பு அகலும்படி அருள் நோக்கம் புரிந்து, நினது செம்பொற் சிலம்பொலி திருவடி நீழலின்கண் (எம்மை) நிறுத்திக் காப்பாற்று" என்றிவ்வாறாக வழிபட்டொழுகும் அன்பர்களுடைய இருதய கமலத்துள்ளும், திருத்தணிகாசலத்துமாய் வாழ் குருபரனாம் குமாரசாமிக் கடவுளின் சரணாரவிந்தங்களைச் சிரமேல் சூடிக்கொள்வாம். (எ-று.)

(அ - ப.) உருத்து அணி = சதுரங்க சேனை
கரு = பிறப்பு
திளைத்து = அடிபட்டு
கருணைக் கண் தந்து = அருள் நோக்கம் புரிந்து

உருத்து = உரு தரித்துத் தரித்து அணியணியாய் வரும் அசுரர் எனினுமாம்.

கோபித்துக் கும்பல்கும்பலாக வரும் அசுரர் எனினுமாம்.

840. பொருவினறு மலர்பொதுளுந் தண்டலைசூழ் கதிரைநகர்ப் புனிதன் பாத
முருகியுளத் தழுத்திவினை நீறழுத்து மாறெழுத்து முணர்ந்து நாவின்
முருகசர வணபவசண் முககுகவென் றனுதினமு மொழிவோர் தங்கண்
மருமருவு கமலமல ரடிமுடியின் மீதுவைத்து வணங்கல் செய்வாம். (68)

(இ - பொ.) சரிசமான மணங்கமழ்ந்த மலர்களால் செழிக்கும் சோலைகள் சூழ் கதிர்காமத்துச் சுப்ரமணியருடைய பாதங்களை உருகிய தம் உள்ளத்திற் பதித்து, பிறவி வினையை நீறாக்கும் சடாட்சரங்களை யறிந்து வாக்கில், "முருக! சரவணபவா! சண்முகா! குகா" என்று எப்போதும் தோத்திரஞ் செய்வோர்களின் நறுமணச் செங்கமல பாதங்களை நமது முடிமேல் சூடி வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) பொருவில் = ஒப்பில்லாத.
பொதுளும் = செழிக்கும்.
தண்டலை = சோலை.
கதிரை = கதிர்காமம்.

---

50. புலியூர்ப் புராணம்

841. ஒருசொற்கத் தைந்தருவி னிழலுறைந் துயர்மகவான் சசியா மாதி
னிருசொற்கங் களின்முயங்க விடர்க்கரிவெவ் வரிசூர னிறக்கப் பந்த
கருசொற்க மயர்வகலக் கதிர்வேல்விட் டகத்தியற்கா கமனூ றன்னைத்
தருசொற்கந் தன்றனது தாளிணைக ளெமதுசிரந் தரித்து வாழ்வாம். (69)

(இ - பொ.) சொர்க்க லோகத்திலே கற்பக முதலாய பஞ்ச தருக்களின் நீழலிற்கொலுவிருந்து, இந்திரன் இந்திராணியினுடைய தனபாரங்களிரண்டினையும் தழுவி வாழ்வதற்காக, தாருகன், சிங்கமுன், சூரபதுமனாதி அசுரர்களிறக்கவும், நரகலோக முற்றுஞ் சோம்பல் நீங்கி எதிர்பார்க்கவும், ஒரு கதிர் வேலைவிட்டு இப் பால், அகத்திய முனிவர்க்குச் சிவாகமங்களை யுபதேசித்த கந்தசாமிக் கடவுளின் திருவடியிணைகளை நம்முடைய தலைமேற் பூண்டு வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) ஐந்தரு = அரிசந்தானம், கற்பகம், சந்தனம், பாரிசாதம், மந்தாரம்.
சசி = (சதி) இந்திராணி.
இருசொற்கம் = இருமுலை.
முயங்க = தழுவ.
இடர்க்கரி = தாருகன்.
வெவ்வரி = சிங்கமுகன்.
சூரன் = சூரபதுமன்.
பந்தகருசொற்கம் = நரகலோகம்.
அயுர்வு அகல = சோம்பல் நீங்க.
தருசொல் = உபதேசிக்கும்.
கந்தன் = கந்தசாமி.

51. சீர்காழிப் புராணம்

842. அலமடையுங் கொடுஞ்சூரன் குலமடியப் புள்ளினங்க ளமரை வேட்ட
பலமடையப் பெரும்பூமி பலமடையக் கரும்பகட்டிற் படருங் கூற்றன்
வலமடையுங் கரம்வருந்தா நலமடையும் பிரமாதி வானோர் தங்க
பலமடையத் தனதுகர தலமடையும் வேலெறிந்தோன் சரணம் போற்றி. (70)

(இ - பொ.) சஞ்சலப் படுத்தும் கொடிய சூரபன்மன் முதலான அசுரர் குலங்கள் மடிந்து சாயவும், கழுகாதிப் பறவைகள் போர்க்களத்தை (பிணக்களமாக) மெச்சித் தின்னவும், பெரிய இப்பூலோகம் சுகமடையவும், கரிய எருமைக் கடாமேல் வரும் எமன் உடம்பில் பலங்கொள்ளவும் அஞ்சலி செய்யும் கைகளானவை நோகாமல் நன்றாயிருக்கப் பிரமாதி தேவர்கள் தத்தம் இருப்பிடங்களைச் சேரவுமாகத் தனது கையிலே இருந்த வேலாயுதத்தைப் பிரயோகிக்கும் சிவசண்முகக் கடவுளுடைய சீர்பாதம் போற்றி. (எ - று.)

(அ - ப.) அலம் = சஞ்சலம்.
அடையும் = அடைவிக்கும்.
பலம் = நலன்.
பலம் = வலிவு.
பகடு = எருமை.
வலமடையுங்கரம் = குவிக்கும் கை.
தங்கள் தலம் = தத்தம் இருப்பிடம்.

52. சானந்த கணேச புராணம்

843. காவிசெங் கமல மாம்பல் செழுங்குமிழ் காந்த ளென்னும்
பூவொடு வழங்கு மேனற் புனத்துறு மொருகொ டிக்கு
மேவுநன் னீழல் செய்து வேங்கையைந் தருவாய் நின்ற
கோவையம் பிகைப யந்த குமரனை யிறைஞ்சல் செய்வாம். (71)

(இ - பொ.) கருங்குவளை, செந்தாமரை, ஆம்பல், செங்குமிழி, செங்காந்தள் என்னும் இத்தகைய பூக்களோடு இயங்கும் திணைப்புனத்து, வள்ளிக்கொடி தாவி மேலேறுதற்குத் தகுதியான குளிர் நிழலைத் தந்து வேங்கைமரமாய் நின்ற கோமானும், பார்வதி தனயனுமாம் குமாரசாமிக் கடவுளைக் கோரிக் கொள்வாம். (எ - று)

(அ - ப.) காவி = கருங்குவளை.
வழங்கும் = இயங்கும்.
ஏனல் = திணை.
கொடி = கொடியிடை(ச்சி)
அம்பிகை பயந்த குமரன் = பார்வதி தனயன்.

கருங்குவளை(க் கண்ணும்), செந்தாமரை (முகமும்), ஆம்பல் நிறமும், காந்தளங்கையுமுடைய வள்ளிக் கொடி என அலங்காரப் படுத்தப் பொருள் கோடலும் ஒன்று. காவியாதி பூக்கள் செறிந்த திணைப்புனமென்பது மற்றொன்று.

---

53. கணேச புராணம்

844. கறைமிடற்றெம் பிரானுதற்கட் டோன்றிநெடுஞ்
சரவணப்பூங் கயத்தின் வைகி
யிறையருளாற் றடங்கயிலை வரைதனிற்போந்
திலங்குமயி லேந்திச் செங்கட்
பிறையெயிற்றுப் பேழ்வாய்த்திண் குறட்படைமுன்
செலச்சென்று பெருஞ்சூ ரோடு
மறையவுணர்த் தடிந்தமரர் சிறைமீட்ட
வறுமுகன்ற ளகத்துள் வைப்பாம். (72)

(இ – பொ.) எம்பெருமானாகிய நீலகண்ட பரமசிவத்தின் நெற்றிக் கண்ணிடமாக அவதரித்துச் சரவணப் பொய்கையில் விளையாடுகையில், தந்தையார் உத்தரவுப்படியே கயிலாயகிரிக்குச் சென்று கதிர்வேலைத் தாங்கிக் கொண்டு சிவந்த கண்ணும், பிறை போன்று வளைந்த பல்லுடன் பிளவுபட்ட வாயுடைய பூத கணங்கள் எல்லாம் முன்னே நடந்து செல்ல, உடன் சென்று, பெருஞ்சேனா பலமுடைய சூரபதுமனாதியரோடும் மறைந்த அசுரர்களைக் கொன்று தேவர்களின் சிறை மீட்பித்த ஆறுமுகக் கடவுளின் சேவடிகளைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) கறை மிடறு = நீலகண்டம்.
பிறையெயிறு = கோர தந்தங்கள்.
பேழ் வாய் = பிளவுபட்ட வாய்.
குறள்படை = பூதப்படை.
தடிந்து = கொன்று.

54. திருவாப்பனூர்ப் புராணம்

845. கருமாவை யரிவிழிப்பங் கயமாவைப்
புணர்திருமால் கமல நாபிப்
பெருமாவை யகம்படைக்கும் பிரமாவை
யுற்றுணராப் பிரண வத்தின்
குருமாவை நுகர்வதுவே குணமாவை
கலும்புனஞ்செல் கோட்டு மாவைப்
பொருமாவை வேற்குமரன் புதுவிரைத்தா
மரைமலர்த்தாள் போற்றல் செய்வாம். (73)

(இ - பொ.) கருவண்டு போலும் அழகிய இரேகை விழியினளாம் கமலையைப் புணர் திருமாலின் நாபிக் கமலத்திலே தோன்றிய மிகவும் பெரிதான உலகத்தைப் படைக்கும் பிரம்மன் உற்று நோக்கி அறிய வொண்ணாப் பிரணவ ஞானத்துக்குரைதர வந்த குமரகுருவும், மேன்மை பொருந்திய வள்ளியை அநுபவிக்கும் காரணமாகவே நாள்தோறுங் காலை வேளையில் தினைப்புனஞ்செல் தெய்வயானை சமேதனுமாம் வேலாயுதபாணியின் பரிமளமான சரணாரவிந்தங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) கருமா = கருவண்டு.
ஐயரி = அழகிய இரேகை.
பங்கயமா = பங்கயவல்லி (இலக்குமி).
கமலநாபி = நாபிக் கமலம்.
பெருமா வையகம் = பேருலகம்.
மாவை = (வள்ளி) அழகியை.
நுகர்வது = அநுபவிப்பது.
கோட்டுமா = தெய்வ யானை.
பொரும் = சமானமாய்வரும்.

தினைமா வுண்ணும் வசங்கண்டே நாள் தோறும் காலை நேரத்தில் கொல்லைக்கு வந்து விடும் யானைமுகத்துக்குச் சரியான தம்பியுமாம் ஐவேல் குமரன் எனவும் பொருள் தரும்.

---

55. திருப்பூவணப் புராணம்

846. தலம்புகழ்வச் சிரத்தடக்கை யிந்திரன்றந்
தருள்பாவை தன்னேர் வள்ளி
நலம்புகழ்செவ் வேளரற்கு ஞானவுப
தேசமருண் ஞான மைந்தன்
றுலங்குகிர வுஞ்சகிரி துளைபடவெஞ்
சூரனுரங் கிழிய வேலை
கறங்கவயில் வேல்விடுத்த கந்தனைப்பந்
தனையகற்றிக் கருத்துள் வைப்பாம். (74)

(இ - பொ.) உலகமெல்லாம் புகழும் வச்சிராயுதக் கையனாகிய இந்திரன் (கன்னிகா தானமாகத் தரும்) தெய்வயானையாலும், (அவளுக்கு ஈடான) வள்ளியாலும், சுகமனுபவிக்கும் குமரவேளாய், (தட்சிணா மூர்த்தியாய் இருந்த) சிவபெருமானுக்கே பிரணவ ஞானோபதேசஞ் செய்யும் ஞான குருவாய், கிரவுஞ்சமலையைத் துளைபட விடித்து, கிரவுஞ்சன் மார்பு கிழியும்படியாகவும், கடல் கலங்கும் படியாகவும் கூரிய வேலாயுதம் விடுத்தவனுமாய் நின்ற கந்தசாமிக் கடவுளை நமது பந்த பாச மகற்றிக் கொள்ளத் தியானிப்பாம். (எ - று.)

(அ -ப.) தலம் = பூதலம்.
பந்தனை = பந்தபாசம்.

56. மயூரகிரிப் புராணம்

847. *பிரணவந்தா ரகப்பிரமங் குடிலையெனு
மோரெழுத்தின் பொருளைப் பேசென்
றரியதிரு வடிவணங்கா தஞ்சலிசெய்
மலரயனைச் சிறையில் வைத்தே
யுருகியவன் பொடுவணங்குங் குறுமுனிவற்
கெப்பொருளு முரைக்கும் வைவேல்
முருகன்மல ரடிமனத்தி னுறவணங்கி
யறிபொருள்கண் முழுதும் தேர்வாம். (75)

(இ - பொ.) ஓங்காரத்துக்கு ஆதாரமான முத்தி சிதாகாசந்தானென்னும் ஓரட்சரத்தின் பொருளை விவரி யென்று சொல்லவே, கிடைத்தற்கரிய திருவடிகளையும் வணங்கி யஞ்சலி செய்யாப் பிரம்மதேவனைச் சிறைப் படுத்தியும், என்பெலாம் நெக்குருகிய அன்போடும் வணங்கிய அகத்திய முனிவருக்கு ஆகமாந்தமாய வெல்லாப் பொருள்களும் உபதேசித்தும் இருக்கும் கூரிய வேலாயுதமேந்தும் முருகேசனுடைய சரணாரவிந்தங்களை மனதார வணங்கி அறியத் தக்கவை யாவும் தெரிவாம். (எ - று.)

(அ - ப.) பிரணவம் = ஓங்காரம்.
தாரகம் = ஆதாரம்.
பிரமம் = முத்தி.
வணங்காதஞ்சலிசெய் = வணங்கி யஞ்சலி செய்யாத.
குறுமுனி = அகத்தியன்.

57. திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

848. பரமனுதல் விழியிலுதித் தந்தரமே னிமிர்ந்து
பகீரதியிற் றவழ்ந்துநிறை பன்னீருங் குடித்துச்
சரவணத்தொட் டிலினேறி யறுவர்முலை யுண்டு
சங்கரியின் மடியிலிருந் தோமெனுஞ் சொற்பேசி

---

*தாரகம், பிரமம், குடிலை இவை மூன்றும் பிரணவ மென்னும் ஒரே பொருளைக் குறித்த பல சொல்லாய் விரிந்த தென்னுந்துணிவால் உரை கோடலுமுண்டு.

யரன்மலையி னின்றெவையும் படைத்தலைவாய் நடத்தங்
கசுரர்தமைத் தொலைத்தமரர்ப் புரந்துலகை வலம்வந்
திரவிசத கோடியெனத் தணிகையமர்ந் தருளுமெழின்
ஞானசத்தி தரனிணை யடியேத் தெடுப்பாம். (76)

(இ - பொ.) பரமசிவனுடைய நெற்றிக்கண்ணினிடமாகத் தோன்றியும், அந்தரத்திலெழுந்து பாகீரதி நதியில் மூழ்கத் தவழ்ந்து பன்னீர்போல் நிறைந்த தண்ணீரைக் குடித்தும், சரவணப்பொய்கையாஞ் சிறுதொட்டிலில் ஏறி விளையாடியும், கார்த்திகை முதலாம் ஆறு நட்சத்திரங்களின் திருமுலைப் பாலையுண்டும், சங்கரியின் மடி மீதிருந்து, ஓம் எனும் பிரணவத்தின் பொருளை (சங்கரர்க்கு) உபதேசித்தும், கயிலாயத்தில் இருந்து கொண்டே, (பிரம்மனுக்குப் பதிலாகத் தாமே) எல்லாவற்றையும் படைத்தும், கடல் போல் பெருகி வந்த அசுரர்களைக் கொன்றழித்தும், தேவர்களைக் காத்தும், உலகத்தைத் திக்விசயஞ் செய்தும், தணிகாசலத்தில் எப்பொழுதும் கோடி சூரியப் பிரகாசம் போல் துலங்கியெழும் மெய்ஞ்ஞான வேலாயுத பாணியின் துணையடிகளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) அறுவர் = கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர் பூசம், பூசம்.
அரன்மலை = கயிலாயம்.
அலைவாய் = (திருச்செந்தூர்) கடல்.
இரவிகோடி = கோடி சூரியப் பிரகாசம்.
சதம் = எப்பொழுதும்.
சத்திதரன் = திருக்கை வேலாயுதன்.
சேனா சமுத்திரத்துடன் சென்றென்றும் உரைபாடம்.

58. திருமயிலைப் புராணம்

849. நீர்பூத்த சடாமகுடத் தெம்மானீன்
றளித்தவொரு நேயன் றன்னைச்
சீர்பூத்த குருமணிமா மகுடமணிந்
திதண்மணிப்பாற் சென்ற தேவை
வார்பூத்த முலையுமையா டிருமுலைப்பால்
பருகியவாய் மணியை ஞான
வேர்பூத்த சிங்கார வேலனெனுங்
கண்மணியை யிறைஞ்சி வாழ்வாம். (77)

(இ - பொ.) சடாமகுடத்துக் கங்கையைத் தரித்தவனாகிய எம்பெருமானாம் சிவபெருமான் பெற்றெடுத்ததோர் விசுவாசமானவனாய், (தினைப்புனத்துப்) பரண் காவலாய் இருக்கும் வள்ளியம்மனிடம், சிறந்த மாணிக்க மகுடம் பூண்டு சென்ற தேவனாய், நன்னடக்கை யுடைய உமாமகேசுவரியின் திருமுலைப் பால் உண்சுப்பிரமணியாய், ஞானமே வடிவான கண்மணியாய் விளங்குஞ் சிங்கார வேலனைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) நேயன் = விசுவாசன்.
குருமணி = மாணிக்கம்.
இதண் = பரண்.
மணிப்பால் = வள்ளியினிடம்.
வாய்மணி = சுப்பிரமணி.
ஏர்பூத்த = வடிவுடைய.

59. ஆதிபுரிப் புராணம்

850. அருகனைத்து நிலவுமிழ்வெண் மணல்பரந்த
வாதிபுரி யதனி னீங்கா
துருகனை யொத் தருள்சுரக்குஞ் சண்முகனைக்
காங்கெயனை யொளிர்வே லேந்து
முருகனைவா ழமரர்சிறை விடுத்தவனை
முளரிமலர் நயன மாயன்
மருகனையென் கண்மணியை வள்ளிமண
வாளனையாம் வணக்கஞ் செய்வாம். (78)

(இ - பொ.) எப்பக்கம் பார்த்தாலும் நிலாவெளிச்சம் போல வெள்ளிய மணல் விலாசமாம் திருவொற்றியூரின் கண்ணே பிரசன்ன மாயிருந்து, சதா உருகிய பொன்போல் திருவருள் துணைசெய்யும் சண்முகனாய், கங்கை மைந்தனாய், கதிர்வேலேந்தும் முருகனாய், தேவர்கள் சிறை மீட்டு வாழ வைத்தவனாய், செந்தாமரைக் கண்ணனாகிய திருமாலின் மாப்பிள்ளையாய், அடியேன் கண்ணுக்கு மணியொளியாய், வள்ளி மணவாளனாய் விளங்கும் சிவசுப்ரமண்யக் கடவுளை நாம் வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அருகனைத்தும் = எல்லாப் பக்கமும்.
ஆதிபுரி = திருவொற்றியூர்.
காங்கேயன் = கங்கை மைந்தன்.
முளரி மலர் நயனம் = செந்தாமரைக்கண்.

60. திருவொற்றியூர்ப் புராணம்

851. வார்புனையுந் தனவள்ளி யானைபுண
ரீராறு மணித்தோண் மார்பும்
பார்வெருவப் பொருஞ்சூரன் படவிடுத்த
வயில்வேலும் பவுரி கொண்டு
கார்குலவ நடமாடு மஞ்ஞையுமம்
மஞ்ஞையின்மேற் கலந்தி ருந்த
சீர்குலவு கந்தனிரு பொற்பதமு
*மறுமுகமுஞ் சிந்தை செய்வாம். (79)

(இ - பொ.) புகழும் கந்தசாமியின் ஆறுமுகத்தழகையும், கச்சணிந்த தனத்தினராம் வள்ளி தெய்வயானைமார் இருவரையும் புணர்ந்து மகிழ் பன்னிரு

---

* மறுமுகமும் = (இம்மையே யல்லாமல்) மறுமைக்குஞ் (சிந்திப்பாம்) என்பதும் உரைபாடம்.

கரமுடைய மார்பழகையும், உலகம் நடுங்கத் தொந்தரவு செய்யும் சூரபதுமனுதியர் மேல் படும்படி விட்ட வடிவேல் அழகையும், மப்பு மந்தாரமான காலத்தில் பரத நாட்டியப் படியே நடித்தாடும் மயிலழகையும், அத்தகைய மயில் மேல் கூடியிருந்த பொற்பாதத்தினழகையும் தரிசித்து ஏத்துவாம். (எ - று.)

(அ - ப.) வார் = கச்சு
வள்ளியானை = வள்ளிதெய்வயானை.
பவுரி = பரத நாட்டியம்.
மஞ்ஞை = மயில்.
(அ - ம்.) சீர்குலவு கந்தனறுமுகமும்.

61. திருவாலங்காட்டுப் புராணம்

852. ஓர்தரு பரமீ தென்ன வோமெனு நாதத் தோங்கி
யார்தரு பயனை யீசற் கருளுரு வாகி நல்கிச்
சூர்முத றடிந்து வானந் தொழுதவிந் திரற்கு நல்கும்
பார்புக ழாலங் காட்டுக் கந்தனைப் பணிதல் செய்வாம். (80)

(இ – பொ) அருளே திருவுருவமான குமரகுருவாய் (உமாம கேசுவரியின் மடிமே)லிருந்து கொண்டு, தட்சிணாமூர்த்தமான பரமசிவத்தின் முன்னிலையில், அடைய வேண்டிய முத்திக்கு வழி இது தானென்று குறிப்பால் ஓமெனுஞ் ஒலியள வாய்ப் பிறந்தோங்கிய ஓங்கார வடிவமாம் விநாயகப் பெருமானைக் கடைக்கண் காட்டியும், சூரபதுமனுதி யசுரர்களைக் கொன்று, தேவர்கள் தொழுது வந்த தேவேந்திரனுக்குச் சொர்க்க லோகத்தைக் கொடுக்கும், உலகெலாம் திருப்புகழ் பெற்ற திருவாலங்காட்டிலுள்ள கந்தசாமிக் கடவுளைக் கையெடுத்துப் பணிவாம். (எ - று.)

(அ-ப.) ஓர்தருபரம் = அடைய வேண்டிய முத்தி.
ஈதென்ன = இதுதான் வழியென்ன.
ஈசற்கு = ஈசன் முன்னிலைக்கு.
நல்கி = (கொடுத்தும்) கடாட்சித்தும்.
வானம் = வானத்தை
தொழுத இந்திரற்கு = தேவர்களால் தொழப்பட்டு வந்த இந்திரனுக்கு
ஓமெனும் நாதத் தோங்கியார் தருபயன் = (ஓங்கார வடிவுடைய) விநாயகன்.

62. அவிநாசிப் புராணம்

853. செருநடமா லயற்கரிய திறலசுரன்
முடிசிதறச் சினந்த வீரங்
கருநடமா ரியமருவக் கரமெனுமீ
ரொன்பானிற் கவிஞர் போற்றப்
பெருநடமா டுங்கடவுள் புக்கொளியா
லயநிலயம் பிறங்கச் சூழ்ந்த
திருநடமா ளிகையமர்வேள் செவ்வேள்பொற்
சீறடிகள் சிரத்தில் வைப்பாம். (81)

(இ -பொ.) போர்க்களத்திலே பிரம்ம விஷ்ணுக்களாலும் வெல்வதற்கு அரிதான அவ்வளவு வலியவனும் சூரபதுமன் தலை சிதறிப் போகும்படி சினந்து கொன்ற வீரபராக்கிரமத்தைக் கன்னட முதலாக ஆரிய மீருகவுள்ள பதினெண் மொழிகளாலும், கவிவாணர்கள் போற்றும்படி பெரிய நடனங்கள் செய் கடவுளும், புக்கொளியாலயத்துள் விளங்கும் திருநட மாளிகையின்கண் எழுந்தருள் செவ் வேளுமான குமாரசாமியின் பொன்மயமாம் சிற்றடிகளைச் சிரமேல் வைத்துப் பூசிப்பாம். (எ - று)

(அ - ப.) செருநடம் = போர்க்களம்.
கருநடம் = கன்னடம்.
ஆரியம் = வடமொழி.
அக்கம் = எழுத்து
ஈரொன்பான் = பதினெட்டு.
புக்கொளி = அவிநாசி.

63. திருமுருகன் பூண்டிப் புராணம்

854. வான்ப ணிக்கதிர் மதிநுதற்
குறக்கொடி வனமுலைச் சுவடோங்குங்
கான்ப ணிச்சிறை வரிச்சுரும்
பிசைத்திடுங் கடப்பமார் பனைச்சூர
னூன்ப ணித்திடுஞ் சுடரிலை
வேற்படை யுகந்ததிண் புயத்தானைத்
தேன்ப ணித்திடு மலர்கொடு
போற்றியே சேவடி துதிசெய்வாம். (82)

(இ - பொ.) ஆகாயத்தின் மூன்றும் பிறைச் சந்திரனை மதிக்கும், வளைவான புருவங்களுடைய குறமகளாம் வள்ளியின் தனபாரத்தழும்பின் மேல் புரண்டோங்கும் வண்டுகள் கீதம் பாடும் கடப்பமலர் மாலை மார்பனும், சூரபதுமனுடலை வருத்திக் கொல்லும் (கதிர்) வேலாயுத பாணியுமான சண்முகக் கடவுளை நறுமணமலர்களால் பூசித்துத் திருவடியில் சேவித்துக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) பனிக்கதிர் = பாலசந்திரன்.
மதி = மதிக்கும்.
நுதல் = புருவம் (நெற்றிக்கும்)
குறக்கொடி = குறமகள்.
சுவடு = தழும்பு.
வரிசுரும்பு = வண்டு.
ஊன் = உடல்மேல் (தசை).
பனித்திடும் = வருத்தும்.
பனித்திடும் = கமழும்.
உகந்த = தாங்கிய.
தேன் பனித்திடும் = தேன்துளிர்க்கும் மலர் எனினும் ஒவ்வும்.

64. பவானிகூடற் புராணம்

855. உருக்கரத்தி னயிலாழி யவன்கணுநான்
முகன்சிரமு முயர்வான் செல்வத்
தருக்கரத்தி நிரைகளும் வேய்ந்தவ
னுதற்க ணுதித்துநிசா சரர்களாய
செருக்களத்தி னகங்கலங்க வுலகமெலா
மகிழ்ந்துகளி சிறப்பச் செய்ய
திருக்கரத்தி னெருதனிவேற் படைவாங்கு
முருகன்மலர்த் திருத்தாள் போற்றி. (83)

(இ - பொ.) இடக்கரத்தில் கூரிய சக்கராயுதத் தோனுகிய மகாவிஷ்ணுவின் கண்ணையும், நான்முகனுடைய பிரம்ம கபாலத்தையும், செல்வத்து உயர்ந்த இந்திரன் செருக்கடைந்ததாலிழந்த வச்சிராயுதத்தையும் அலங்காரமா யுபயோகப்படுத்திக் கொண்ட சிவபெருமானின் நெற்றிக் கண்ணினிடமாகத் தோன்றி, போர்க்களத்தில் இராக்கதர்கள் எல்லாந் திகில் கொண்டிறப்பவும், உலகத்தில் எல்லாரும் மகிழவுமாகச் செவ்விய திருக்கரத்தில் ஒரு வெற்றி வேலாயுதத்தை விட்டெறியும் முருகேசனுடைய திருவடித்தாமரைகளுக்கு வணக்கம். (எ-று.)

(அ - ப.) உருக்கரம் = இடக்கரம்.
அயில் ஆழி = கூரிய சக்கராயுதம்.
உயர்வான் செல்வம் = செல்வம் உயர்வான், (இந்திரன்).
தருக்கு = செருக்கு.
வேய்ந்தவன் = அணிந்தவன்.
நிசாசரர் = இராக்கதர்.
செருக்களம் = போர்க்களம்.

65. கருவூர்ப் புராணம்

856. உரைதரு சுருதி வேத வுபநிட தத்தி னுச்சிப்
பரையருள் விழிக ளிப்பப் பார்விசும் புய்யத் தோன்றி
வரைபக முருக்கி வெஞ்சூர் மாமுத றடிந்து முந்நீர்க்
குரைகடல் குடித்த வைவேற் குமரனுக் கன்பு செய்வாம். (84)

(இ - பொ.) பாராயணஞ் செய்யாநின்ற நால்வேத உபநிடதங்களின் உச்சி மேவும் உமாமகேசுவரி கண்குளிரக் கண்டு மகிழவும், மண்டலமும் விண்டலமும் நலத்துடன் வாழ்ந்து வரவுமாகத் திருவவதாரஞ் செய்து கிரவுஞ்ச கிரியைப் பிளந்து, சூரபதுமனுதி யசுரர்களைக்கொன்று குரைக்கும் கடல் கடலாக வாரிக் குடித்த கதிர்வேலவனும் குமாரசாமிக் கடவுள்மேல் பத்திமை செலுத்துவாம். (எ - று.)

(அ - ப.) உரைதரு = பாராயணஞ்செய்.
சுருதி = மந்திரம், இசை.
பார் விசும்பு = பூமியாகாயம்.
முந்நீர் = கடல்.

66. திருமாணிக்குழிப் புராணம்

857. நிலந்திரிய மேருநெடு வரைதிரிய
நேமிவரை நெளிய விண்ணின்
றலந்திரியப் புருகூத னுளந்திரிய
மாலயனுஞ் சலிப்பச் சற்றே
புலந்திரிய முனிவர்குழா மிந்திரஞா
லந்திரித்துப் போர்செய் சூரன்
வலந்திரிய வேறிரித்த குமரவேள்
பதமலர்கள் வணங்கி வாழ்வாம். (85)

(இ - பொ.) நிலவுலகம் அலையும்படிக்கும், இமோத்கிரி பருவதம் சுழலும் படிக்கும், சூரிய சந்திரர்கள் தலை நெளியும்படிக்கும், விண்டலத்தின் தேவேந்திரன் உட்பட்ட தேவர்கள் அனைவரும், மனங்கலங்கும்படிக்கும், பிரம்மாவும் விஷ்ணுவும் சற்று இளைத்துத் தோய்ந்து துக்கப்படும்படிக்கும், முனிவர்கள் எல்லாம் ஐம்புலத்தும் மாருட்டங் கொள்ளும்படிக்கும், மாயா ஜாலங் காட்டிப் போர் செய்யா நின்ற சூரபதுமனைச் சேனையோடு கலக்கிக் கொல்ல வேலாயுதத்தைப் பிரயோகிக்கும் குமாரசாமியின் பாதாம்புயங்களைப் பணிந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) நிலம் = உலகம்.
நேமிவரை = பானுமதி.
விண்ணின் தலம் = விண்டலம்.
புருகூதன் = இந்திரன்.
இந்திரஞாலம் = இந்திரஜாலம்.
திரித்து = திரிவித்து.
வலம் = சேனை.
திரிய = கலங்க.

நேமிவரை நெளிய = அஷ்டகுல பருவதங்களும் தலை நெளிய எனவும் உரைபாடம்.
வேறிரித்து = வேரோடு முறித்த எனவும் உரைபாடம்.

67. திருவோத்தூர்ப் புராணம்

858. தந்தையைப்போ னதிமதியு மரவுமணிந்
தன்னையைப் போற்றடக்கை பாசங்
கொந்தொளியங் குசம்பரித்தான் முன்னவனென்
றன்னையைப் போற்கோது தீர்ந்த
சுந்தரப்பொன் மணியணிந்து தூயதந்தை
போற்கரத்திற் சுடர்வேற் சூல
மைந்துபெறத் தரித்தருளும் பன்னிருகைச்
சேவகன்பொன் மலர்த்தாள் போற்றி (86)

(இ - பொ.) முன்னவனுகிய விநாயகப் பெருமான் அப்பனைப்போலக் கங்கையும், திங்களும், பாம்பும் பூண்டு கொண்டு, அம்மனைப்போலக் கையில் பாச

மும் (சிலுக்கக் கொத்தும்), அங்குசமும் தரித்தனனென்று, தாமும் தம் அண்ணனுருக்குச் சரியாய்த் தாயைப்போல மாசில்லாத சுந்தரமான மணிமாலை பூண்டு கொண்டு, தந்தையைப் போலக் கையில் கதிர்வேலுடன் சூலாயுதத்தையும் வலிவோடு தரித்தருள் பன்னிருகைச் சேவகனும் சிவசுப்ரமணியக் கடவுளின் பொற்பாத கமலங்களுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) பரித்து = தரித்து.
கோதுதீர்ந்த = மாசிலாத.
மைந்து = வலிவு.

68. மருதூர்ப் புராணம்

859. மைவேலை குருகுபெயர்க் குன்றநெடுஞ்
சூதமவண் வஞ்ச வெம்போர்
செய்வேலை குடிதுடைத்துக் கூறிரண்டு
படுத்திவிண்ணோர் தியக்கந் தீர்க்குங்
கைவேலை நிகர்க்குமென மால்மகடன்
விழிவேலைக் களிக்குந் தேவைப்
பொய்வேலைப் புரிந்துழலும் புலனடங்கக்
கருத்தினிடைப் போற்றல் செய்வாம். (87)

(இ – பொ.) கருங்கடலின் வெண்மணல் குவிந்த குன்றத்தின் மேல் மாமர வடிவான இராக்கதன் வஞ்சனையான போர்க் கோலங் கொண்டபொழுதே அவனை இருபிளவாக்கி அவன் குலமுழுதும் அழித்து, தேவர்களின் கலக்கத்தை நீக்கிய கையின் வேலாயுதத்தைப் பெயர்க்குமென (திருமாலின் மகளாம்) வள்ளியின் கண் வேல் களிக்குஞ் சண்முகக் கடவுளைத் தப்பெண்ணங்கள் நினைந்துழல் சப்தாதி ஐம்புலன்களுமடங்கும்படி மனதாரப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) மைவேலை = கருங்கடல்.
குருகுபெயர் குன்றம் = மணல் மேடு.
சூதம் = மாமரம்.
செய்வேலை = செய்யும் போது
குடிதுடைத்து = குலமழித்து.
தியக்கம் = கலக்கம்.
மால்மகள் = வள்ளி.

69. ஆதித்தபுரிப் புராணம்

860. மயில்களிக்க வருமேகம் வள்ளியெனுங்
கொடிபடர வளர்சந் தான
மயிலெனுஞ்செங் கதிருதிப்ப வாறுமுக
மாகியபே ரமுத வாரி
பயில்புயத்திண் சிகரமிசைத் தேவதந்தி
விளையாடும் பதும ராகச்
சயிலமுமை மணவாளன் மகிழ்ந்தளித்த
முருகனடி சார்ந்து வாழ்வாம். (88)

(இ- பொ.) புள்ளிமயில் களிக்கப் படர்ந்து வரும் மேக மந்தாரமும், வள்ளி யென்னும் கொடி படர்ந்தேறத்தக்க சந்தானமும், வேலாயுத மென்னும் செஞ்சுடர்ச் சூரியனுதிக்க ஆறுமா முகத்திற்கான பேரமுதக் கடலும், பழகிய புச பலபராக்கிரமத்தின் மேல், தெய்வயானை விளையாடாநின்ற பதுமராக மலையும், பார்வதியும் பரமசிவனும் மகிழ்ந்தளித்த குமரனுமாம் முருகேசன் திருவடிகளை அடைந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) தேவதந்தி = தெய்வயானை.
சயிலம் = மலை.

70. திருக்குற்ருலப் புராணம்

861. வேறுமுகந் தொறுந்தோறும் பிறந்துழலுஞ்
சனனவிடாய் விருப்ப மூலச்
சேறுமுக மர்யைமலங் கழியவிரு
வினைப்பழைய தீட்டுந் தீரக்
கூறுமுகந் தொறுமகரக் குழைதாவி
வள்ளிதெய்வக் கொடிகட் சேல்பா
யாறுமுகம் பெற்றகொற்றத் தானந்தக்
கடற்பரவி யாடல் செய்வாம். (89)

(இ - பொ.) வெவ்வேறு உருவமான முகங்கள் தோறும், பிறந்துழல் இப் பிறவியை விட்டுவிடவும், மூலமலத்துடன் மாயைமலங் கழியவும், பூர்வகருமமான இருவினை தீரவும், (வேண்டுமானுல்) வலப்பாகமும், வாமபாகமும் ஆய இருபக்கமும் மகரக் குழைகளைத் தாங்கிய வள்ளி தெய்வயானை யென்னுஞ் சேல் கண்டைகள் பாயும் ஆறு மாமுகமுடைய சுப்ரமண்யக் கடவுளென்னும் ஆநந்தக் கடலிற் படிந்து ஆடல் புரிவாம். (எ-று.)

(அ-ப.) விடாய் விடுப்ப = விட்டுவிட.
மூலச் சேறு = மூலமலம்.
கொற்றத்து = அரசாங்கத்து.

71. திருநெல்வேலிப் புராணம்

862. உறுதிதரு மிபமுகவ னுறுதுணை வனுதல் விழியார்
பெறுபுதல்வ னுயர்மாவைப் பிளந்த வடிவே லுடையோன்
குறுமுனிவ னகமகிழக் கோதறு செந்தமி ழுரைத்தோ
னறுமுகவ னிருசரண மனுதினமு மனத்தில் வைப்பாம். (90)

(இ - பொ.) உறுதியில் கைகொடுக்கும் யானைமுக விநாயகரின் கூடப் பிறந்த சகோதரனும் தம்பியும், நெற்றிக் கண்ணுடைய பரமசிவம் பெற்றெடுத்த குமாரனும், உயர்ந்த மாமரவடிவமாய் வரும் சூரபதுமன் மார்பைப் பிளந்த வடி வேலுடைத்தானவனும், அகத்திய முனிவர் மனம் மகிழும்படியாகச் சுத்த செந்தமிழ் (சிவாகமாந்தங்களை) உபதேசித்தவனுமாம் ஆறுமுகக் கடவுளின் இரண்டு சரணங்களை எந்நாளுந் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) உறுதிதரு = சத்தியமாய்க் கொடுக்கும்
இபமுகவன் = யானை முகன்.
உறு துணைவன் = சகோதரன் (தம்பி)
நுதல் விழியார் = ஈச்சுரர்.
மாவை = மாமரத்தை.
குறுமுனிவன் = அகத்தியன்.

72. மருதவனப் புராணம்

863. சத்திதனை யனைவள்ளி காந்தனைக்கந்
தனையசுரர் தம்மை வென்ற
சத்திதனை யுறுமலர்க்கைத் தலத்தனையன்
போர்கடமி தயமாம் பங்க
சத்திதனை யிடைமருதூர்க் குமரனை
நெஞ்சேபணி யென்றன்பான் மன்னே
சத்திதனை யவனுகந்தின் னருளெனக்குத்
தருமஃதுன் சகாய மாமால். (91)

(இ - பொ.) உமாதேவியின் மைந்தனாய் வள்ளியின் மணவாளனாய், இராக்கதர்களையெல்லாம் வெல் சத்திவேலாயுத மிருக்கும் மலர்க்கையனாய், அன்பர்களுடைய இருதயங்குடி கொள் பங்கய பாதநிலையனும் திருவிடைமருதூர்க் குமாரசாமியை நெஞ்சமே நீ பணிந்து வருவாய். என்பாலுள்ள விசுவாசவிரக்கத்தைக்கண்டு அவன் மகிழ்ந்து எனக்குத் திருவருள் துணையாவனாகையால், அது உன் சகாயம். (எ-று.)

(அ - ப.) சத்தி தனையனை = உமை மைந்தனை.
வள்ளிகாந்தன் = வள்ளி மணாளன்.
சத்திதனை = வேலாயுதத்தை.
அன்போர்கள் = அன்புடையோர்கள்.
பங்கசத்திதனை = பாதபங்கய நிலையினை.
என்றன்பால் = என்பால்.
மன் நேசத்து இதனை = இதமான விசுவாசத்தை·
உகந்து = உவந்து.

73. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

864. ஆயிரத்தின் மீதிருநான் கண்டமினி
தாண்டிருந்த வசுரன் றன்னைக்
காயிருவேல் கொடுதடிந்தோங் கமருலகு
முயர்மதவெண் களிறு நீடு
வேயிருதோ ளயிராணி சுகமுமொரு
சதகோடி விளங்குஞ் செங்கைத்
தூயவன்பெற் றிடச்செய்த தோன்றலெழின்
மலரடியைத் துதித்து வாழ்வாம். (92)

(இ – பொ.) ஆயிரத்தெட்டு அண்டங்களையும், அரசாண்டுகொண்டிருந்த இராக்கதனாம் சூரபதுமனைக் கதிர்வேல் கொண்டு கொன்று, ஓங்கிய தேவலோகமும், உயர்ந்த வெள்ளானையின் வாழ்வும், (மூங்கில் போன்ற கரத்தினளாம்) இந்திராணியின் சுகமும், கையில் வச்சிராயுதமுள்ள இந்திரன் (முன்போல்) அடையும்படிக்கு உதவி செய்த மன்னனாய சண்முக சுந்தரக் கடவுளின் பாதார விந்தங்களைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) ஆயிரத்தின் மீது இரு + நான்கு = ஆயிரத்தெட்டு.
இனிதாண்டு = அரசாண்டு.
காயிருவேல் = கதிர்வேல்.
அமருலகும் = தேவலோகமும்.
வெண்களிறு = வெள்ளானை.
ஐராணி = இந்திராணி.
சதகோடி = வச்சிரம்.
செய்த = உதவிபுரிந்த.
தோன்றல் = மன்னன்.

74. மயூராசலப் புராணம்

865. முந்தனைமா ரறுவர்முலை யருந்தியவா
யினனிமைய முளைத்த வல்லி
தந்தனைய னறைகமழுங் கடம்பணியுந்
தடம்புயனுஞ் சாமி நாதன்
வந்தனைசெய் பவருளத்தி னமுதமணி
மயிலைமலை வாழும் வைவேற்
கந்தனைநற் சிந்தையில்வைத் தெந்தமைவா
திக்கும்வினை களைந்து வாழ்வாம். (93)

(இ – பொ.) பூர்வம் கார்த்திகை முதலான அறுவர் (களின்) தாய்ப்பாலுண்டு பூரித்தவனும், இமாசலத்தில் பிறந்தவளாம் பார்வதியம்மனுடைய குமாரனும், மணம் கமழ்கின்ற கடப்ப மலர் மாலை யணியுந்தோளை யுடையவனும், சாமிநாதனும் வந்திக்கும் அடியார்களுடைய உள்ளத்தின் மணியமுதனுமாய், மயிலையில் வாழும் (வெற்றி வேலேந்திய) கந்தசாமிக் கடவுளைச் சிந்தித்து, நம்மை வாதிக்கின்ற இருவினைகளையும் நீக்கி வாழ்வாம். (எ – று)

(அ - ப.) அவாயினன் = மகிழ்ந்தான்.
இமயமுளைத்த வல்லி = பார்வதி.
தனயன் = குமாரன்.
அமுதமணி = மணியமுதம்.

866. பவமாதித் துயரகற்றி யடைந்தவர்க்கின்
பருண்மயிலைப் பருப்ப தத்தி
னவமாநற் குறக்கொடியைத் தெய்வானைப்
பிடியை மணநயந்து தூய

தவமாமெய்க் கொண்டிலகும் பாலசித்தற்
குயரருளைத் தந்தன் னோற்குச்
சிவஞான தேவனெனப் பெயரருள்சண்
முகத்தேவன் றிருத்தாள் சேர்வாம். (94)

(இ-பொ.) தன்னை யடைந்து வலம் வந்தவர்களுக்குப் பிறவி முதலான துயரங்களை ஒழித்து, முத்தியைக் கொடுக்கும் மயிலாசனத்தில், சிநேகவாஞ்சையான குறமகளாம் வள்ளியையும் தெய்வானையையும் திருமணம் புரிந்து, பரிசுத்தமான மெய்த் தவங்கொண்டு விளங்கும் பாலசித்தற்கு உயர்ந்த திருவருள் புரிந்து அன்னவற்குச் சிவஞான தேவனெனப் பெயர் கொடுக்கும் சண்முகத் தேவருடைய திருவடிகளை அடைவாம். (எ-று.)

(அ - ப.) பருப்பதம் = பருவதம்.
நலம் = கேண்மை (நெஞ்சம்)
பிடி = பெண்ணானை.

75. திருப்பெருந்துறைப் புராணம்

867. புரமுதல்வென் றுறுபுகழ்மாத் திரங்கொண்ட
தந்தையினும் பொருமோ ரியானை
யுரனறவென் றதனெடுமூர் தியுங்கொண்டு
மிகுசிறப்பை யுறுமுன் னோனும்
பரவுறச்சூர் தடிந்தவற்றோ டோங்குகே
தனமொருகை பற்றப் பெற்ற
விரவுமல மருந்துறையும் பெருந்துறைக்
குமாரனடி மேவி வாழ்வாம். (95)

(இ - பொ.) முப்புரங்களும் எரிய வென்று புகழொன்றையே கொள் தந்தையாராகிய பரமசிவனைக்காட்டிலும், பெரிய கசமுகா சூரனென்னும் யானையை வலுவொழிய வென்ற தோடு, அவனையும் பெருச்சாளி வாகனமாகக் கொண்டு, பெருங்கீர்த்தியை அடை விநாயகரே சிறப்பிக்கும்படியாகச் சூரபதுமனைக் கொன்ற பிரபாவத்தோடு மயில் வாகனமும் கோழிக்கொடியும் ஒரு பக்கம் பிடிக்கப் பெற்ற (மும்மலத்துக்கும் மருந்துள்ள) திருப்பெருந்துறைக் குமாரசாமிக் கடவுளின் திருவடிகளை அடைந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) ஊர்தி = பெருச்சாளி வாகனம்.
முன்னோன் = விநாயகன்.
கேதனம் = கோழிக்கொடி.
விரவுமலம் = மும்மலம்.

கயா சூரனைக் கொன்றுரி போர்த்த தந்தையாரைப் பார்க்கிலும் என்க.

தந்தையாகிய பரமசிவன் கொன்ற கயாசூரனைக் காட்டிலும் பலத்த கசமுகாசூரனை யெனினுந்தகும்.

76. காசி ரகசியம்

868. இருகூட்டு வளர்பறவை யிரண்டுரு
மிருவருமுள் ளிடத்து நாண
வொருகூட்டு வளர்பறவை யிரண்டுளொன்று
துவசமற் றொன்றூர்தி யாக்கி
யருகூட்டு பஞ்சடிமென் பிடியுமானுந்
தழுவ வமர்போ ரேற்றை
வருகூட்டு நுழையாது போற்றுவா
மிருவினையு மாற்று வாமே. (96)

(இ – பொ.) சேவல் மயில் என்ற இரண்டு கூட்டலால் வளர் பட்சிகள் இரண்டும் போலச் சூரன் பதுமன் என்னும் இருவரும் ஓர் உடலில் உறைந்திருந்து போர்க்களத்து வெட்கிமாளவே, ஒன்றைக் கொடியாகவும், மற்றொன்றை வாகன மாகவும் ஏற்றுக் கொண்டு, அருகிருந்து நினைப்பூட்டுகிற பஞ்சின் மெல்லடி யாராம் வள்ளி தெய்வயானை தழுவ வீற்றிருக்கும் போர்ச்சிங்கத்தை, மேல் பிறவிக்கு ஆளாகாது போற்றுவாம். போற்றி இம்மையே இருவினையும் ஒழித்துக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) கூட்டு = கூட்டல்.
பறவை யிரண்டு = சேவல், மயில்.
இருவர் = சூரன், பதுமன்.
கூட்டு = கூடு + உ.
துவசம் = கொடி.
பிடி = (தெய்வ)யானை.
மான் = (குற) மான், வள்ளி.
போரேறு = போர் வீரன்.

77. திருநாகைக் காரோணப் புராணம்

869. மீனேறு கடல்வறப்ப விண்ணேறு
மலைகுலைய வெள்ளே றூருங்
கானேறு கடுக்கையினுர் கையேறு
கழுமுளினுங் கடுவே றொட்டுக்
கூனேறு மதிநுதலார்க் கொண்டேறு
பொருமமரர் குலவி வாழ்வான்
வானேறு விதம்பசிய மயிலேறு
சேவகனை வாழ்த்தி வாழ்வாம். (97)

(இ - பொ.) இடபாரூடராய், மணம் மிக்க கொன்றைப் பூமாலையணிந்த பரமசிவத்தின் கையிலுள்ள சூலாயுதத்தைப் பார்க்கிலும், அதி கடூரமாம் தம் வேலா யுதத்தை யெடுத்துச் சூரபதுமனுதியரின் சேனைக்கடல் வற்றவும், ஆகாயம் வரை எட்டிய கிரவுஞ்சகிரி பிளந்திரண்டாகவும், மூன்றும் பிறைச்சந்திரனைப் போலும் வளைந்த புருவங்களுடைய தேவமாதர்களுடன் தேவர்கள் எல்லாம் குலவி வாழ்ந்து வானுலகம் சேமப்படவுமாகப் பச்சை மயிலேறும் வீரனும் சுப்ரமணியக் கடவுளைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ- ப.) வெள்ளேறு = இடபம்.
கானேறு = மணங்கமழ்.
கழுமுள் = சூலம்.
கூனேறுமதி = மூன்றாம் பிறை.
வாழ்வான் = வாழ்ந்து.
வானேறுவிதம் = வானுலகம் நலமடைய.
சேவகன் = வீரன்.

மீனேறிய கடல் வற்றவும், மேருகிரி வில்லா வளையவும் செய்... ...கடுக்கையினாரெனவும் முடிக்க.

"மீனேறு கடல் வறப்ப விண்ணேறு மலைகுலைய ,,. இவ்வளவில் சிவனுக்கும் முருகனுக்குஞ் சிலேடை.

870. வரையுதித்த வொருகொடியைப் புணர்ந்துதெய்வ
யானையுரு மருவிச் சத்தி
யுரைசெயுமோர் பாற்பொலியப் பெருமையின்மே
லாவதனா லொப்பா காது
கரையுமொரு மொழிப்பொருளை யரற்குணர்த்தி
யுயர்ந்துபொலி கருணை யானை
விரைசெய்நறுங் கடம்பணியுந் தடம்புயனைப்
பராயின்ப வெள்ளத் தாழ்வாம். (98)

(இ - பொ.) மலையிற் பிறந்ததோர் மகளாம் பார்வதிக்குச் சமானமான வடிவம் வாய்ந்து, சத்தியெனச் சொல்லத்தகும் தெய்வ யானை தன்னொரு பக்கல் விளங்க, தன்னேரிலாத ஒலியாம் ஓங்கார மென்னும், ஒருமொழியின் பொருளைச் சிவபிரானுக்குப் பேரின்ப முத்தி கைவல்யத்தினால், உணர்வித்தோங்கிய பெருங்கருணையுடையவனாய், மணம் கமழ் கடப்ப மலர் மாலையணி புயாசலனும் சண்முக சுந்தரக் கடவுளைப் பணிந்து ஆநந்த வெள்ளத்தில் குளிப்பாம். (எ - று.)

(அ - ப.) கரையும் = ஒலிக்கும்.
ஒப்பாகாது = நிகரின்றி.
தடம்புயன் = புயாசலன்.
பராய் = பரவி.
இன்பவெள்ளம் = ஆநந்தவெள்ளம்.

78. திருக்குடந்தைப் புராணம்

871. நீர்முதல்யா முதலென்று நெடியோனா
தியரென்று நிகழ்த்தா வண்ணஞ்
சூர்முதலே திகள்சிறிதும் வடுச்செய்யாத்
தன்கரத்திற் றுணைப்பூந் தாளிற்
பார்முதலாக் குன்றலையு மவன்முதலோர்
முடியும் வடுப்படுத்த நோக்கி
நார்முதனெஞ் சிருவர்முலை நிறம்புயத்துஞ்
செயமகிழ்வே ணமையாள் வானே. (99)

(இ – பொ.) நீதான் முதல்வன் யான்தான் முதல்வனென்று திருமால் பிரமன் ஆகியோர் சண்டையிடாதபடி, சூரபத்மன் முதலிய பகைவர்களால் வடுவுண்டாகாத தன்னுடைய கையினாலும் காலினாலும் உலகைப் படைக்கும் பிரமனுடைய தலைகளையும் முற்பட்ட ஒரு முடியினையும் குட்டியும் உதைத்தும் வடுப்படுத்த, அதனைப்பார்த்து, அன்பு நிறைந்த மனத்தையுடைய வள்ளி தெய்வயானை ஆகிய இருவரும் தமது தனங்களைக் கொண்டு மார்பிலும் புயத்திலுல் அணைத்துத் தழுவ மகிழும் செவ்வேளாகிய முருகப்பெருமான் என்றும் நம்மை ஆட்கொள்பவன் ஆவான். (எ–று.)

குறிப்பு :- ‘ஓம்’. என்னும் பிரணவத்தின் பொருள் தெரியாது அகங்காரத்துடன் சென்ற பிரமனை முருகப் பெருமான் குட்டிச் சிறைப்படுத்திய நிகழ்ச்சி இப்பாடலில் கூறப்பெற்றுளது. இதனால் முருகனே பரம்பொருள் என்பது விளக்கப் பட்டது. இவ்வரலாற்றைக் கந்தபுராணத்துட் காண்க.

79. மாயூரப் புராணம்

872. நெடுவரைவிற் பவளவொளி படுவரையைக்
கூறுசெய்து நிலவு மண்டத்
தொடுவரைவி லுயிர்க்குமுடன் முதலியதன்
கூறுசெயு மொருவேல் கொண்டோர்
கொடுவரையைக் கூறுசெய்து கடன்மாவுங்
கூறுசெய்து கொடும்பக் கஞ்சார்ந்
தடுவரையிற் பொலிமயின்மேற் பொலிதருசே
வகன்மலர்த்தா ளடுத்து வாழ்வாம். (100)

(இ-பொ.) சிவபெருமான் வில்லாகக் கொண்ட பவளம் போன்ற செவ்வொளிபொருந்திய மகாமேருமலையைப் பிளந்தும், விளங்குகின்ற அண்டங்களோடு எல்லையில்லாத உயிர்களையும் உடல்களையும் கூறு செய்யும் ஒப்பற்ற வேலாயுதத்தைக் கொண்டு, ஒப்பற்ற கொடுந்தன்மை பொருந்திய கிரவுஞ்சமாகிய மலையினைப் பிளந்தும், கடலில் மாமரவடிவாக நின்ற சூரபதுமனைப் பிளந்தும், அச்சூரபதுமனின் உடலின் ஒரு கூருகிய மலைபோற் பொலிந்து தன் பக்கம் வந்த மயிலின் மீது வீற்றிருக்கும் வீரனாகிய முருகப் பெருமானுடைய மலர்ச் சேவடிகளையடைந்து வாழ்வாம். (எ-று.)

80. உறையூர்ப் புராணம்

873. திருவமிகு தேவர்தொழு தேவனா
தலிற்றேவர் செம்ம லீன்ற
பருவமட மகளையும்பைந் துளவணியும்
பிறைக்கோட்டுப் பன்றி குன்றி
வெருவவரு வேடர்தொழு வேடனா
தலின்வேடர் வேந்த னீன்ற
வுருவமக ளையுமணந்தின் பெவர்க்குமரு
ளொருமுருக னொளிர்தாள் போற்றி. (101)

(இ-பொ.) செல்வத்தின் மிக்க தேவர்கள் பணியும் தேவாதி தேவனாகலின் தேவேந்திரன் பெற்ற மங்கைப் பிராயத்துத் தெய்வயானையையும், துளவமாலை யணிந்த (மகாவிஷ்ணு) பிறை போலுங் கோர தந்தத்துடன் எடுத்த வராக அவதாரம் ஒடுங்கி அஞ்சத் துரத்திவரும் வில்வேடராகிய பரமசிவனும், ஓர் காலந் தொழுது கேட்கத்தக்க குமரகுரு வேடமுடையானாகலின், வேட்டுவர்க்கிறைவன் பெற்ற வடிவழகிய வள்ளியையும் திருமணம் புரிந்து, எல்லார்க்கும் பேரின்பத்தை யருள் முருகேசனுடைய சீர்பாதங்கட்கு வணக்கம். (எ - று.)

(அ-ப.) திருவமிகு = பெருஞ்செல்வம்.
தேவர்செம்மல் = தேவேந்திரன்.
பருவமட மகள் = மடமங்கையாம் தெய்வயானை.
வெருவ = அஞ்ச.
உருவமகள் = வடிவழகியாம் வள்ளி.
ஒளிர்தாள் = சீர்பாதம்.

81. திருவம்பர்ப் புராணம்

874. வள்ளியபங் கயக்கிழவன் முடிகொடுத்த
லொடுவணங்கு மற்றை வானோர்
தெள்ளியபொன் முடிகொடுத்த புறச்சுவட்டுப்
பொலிவினெடுஞ் சிறிய நாயேங்
கொள்ளியசூட் டலினெமது முடிகொடுத்த
வகச்சுவடுங் குலவக் கொள்ளு
மொள்ளியகை காலொடம ரொருமுருகப்
பெருமானை யுன்னி வாழ்வாம். (102)

(இ - பொ.) வளப்பம் பொருந்திய தாமரை மலரில் வாழும் பிரமன், குட்டும்படி தன் தலையை வளைத்துக் கொடுத்ததோடு, ஏனைய தேவர்கள் தம் பொன் முடிபுறச்சுவட்டில் படும்படி வணங்கிய பொலிவோடும் சிறியநாய் போற் கடைப்பட்ட அடியேங்கள் தலையிற் சூட்டலின் எமது முடிகொடுத்த அகச்சுவட்டுடன் விளங்கும் ஒளிபொருந்திய கை கால்களுடன் விளங்கும் முருகப் பெருமானை உளத்தில் நினைந்து வாழ்வாம். (எ - று.)

82. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

875. கரியபுனற் கடல்சுருங்கச் செய்யபுனற்
கடல்பெருகக் கனமு லாவும்
பெரியமலை விழுந்தழுந்தக் குணபமலை
யெழுந்துயரப் பிறங்கு வானோ
ருரியநகர் வாழ்வுறமற் றவுணர்நகர்
தாழ்வுறவே லொருகை தொட்ட
வரியபுக ழொருமுருக னிருசரண
முப்பொழுது மடுத்து வாழ்வாம். (103)

(இ - பொ.) கருங் கடல் நீர் சுண்டவும், இரத்தக் கடல் பெருக்கெடுத்தோடவும், கனத்த கிரவுஞ்சகிரி பிளவுபட்டு வீழ்ந்தழுந்தவும், பிணமலை யெழுந்து

வளர்ந்துயரவும், உயர்ந்த தேவர் குலத்துடன் சொர்க்க லோகம் வாழ்ந்து வரவும், இராக்கதர்கள் யாவரும், (வீரமாயேந்திர) பட்டணத்துடன். அழிந்து தாழ்வடையவுமாகக் கையில் வெற்றி வேலைத் தொடுத்தேவிய அற்புதக் கீர்த்திவாய் முருகக் கடவுளின் இரண்டு சரணங்களை முக்காலமும் அடுத்தடுத்துப் பூசித்து வணங்கி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) கரியபுனல் கடல் = கருங்கடல் புனல்.
சுருங்க = சுண்ட.
செய்யபுனல் = செந்நீர்.
குணபம் = பிணம்.
பிறங்கு = உயரிய
தொட்ட = தொடுத்த.
அரிய = அற்புத.

குணடம் = பேய் பிசாசுகள் (பிணக்காட்டில்) மலை போன்றெழுந்துயர்ந்து கூத்திடவும் என்றும் உரை நிகழ்வதே.

---

83. விளத்தொட்டிப் புராணம்

876. சிரமணிமுச் சியுநுதலிற் பட்டமுஞ்சுட்
டியும்பொட்டுந் திருவெண் ணீறு
முரமணியு மைம்படையு மணிக்குழையு
மரைஞாணு மொளிவிட் டோங்கக்
கரமணியும் வளையிருகாற் சிலம்பொலிக்கத்
தொட்டில்வளர் கதிர்வெற் பீன்ற
வரமணிகண் ணின்மணிசுப் பிரமணிய
விளங்குழவி மலர்த்தாள் போற்றி. (104)

(இ - பொ.) முடிகோதிய உச்சிக்கொண்டையும், நெற்றிப்பட்டமும், சுட்டிகையும், சாந்துப் பொட்டும், விபூதி தூளனமும், மார்பின் முத்து இரத்னா மணிவடப் பதக்கமும், குஞ்சு மணிக் கெச்சை கட்டிய வெள்ளியரைநாண் கயிறும், பிரகாசம் ஓங்கப் பெருகிக் கையில் காப்பு, கொலுசு, பௌத்திரமும், திருவடிகளிரண்டின் பொற்சிலம்பும் ஒலிக்கத் தொட்டிலில் கண் வளரும் (அழல் வண்ணனாகிய பரமசிவன் பயந்த வரத்தின் மணியும், கண்மணியுமான சுப்பிரமணியச் சேயின் மலரடிகளுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) முச்சி = உச்சிக் கொண்டை.
சுட்டி = சுட்டிகை.
பொட்டு = சாந்துப்பொட்டு.
உரம் அணியும் ஐம்படை = மணிவடப்பதாரம், ஐம்படைத்தாலி.
மணிக்குழை = குஞ்சுமணி.
கரம்அணியும்வளை = கையின் காப்பு கொலுசு.
கதிர்வெற்பு = அண்ணாமலை (அக்கினிமலை).
இளங்குழவி = முருகன், சேய்.

84. கோயிலூர்ப் புராணம்

877. யோகநிலை யினர்மூலா தாரமுதற்
புண்டரிக மொராறு ஞான
பாகநிலை யினர்காம மாதியிரு
ளோராறும் பரவிப் பூப்பப்
போகநிலை நில்லாது புரியுமிளங்
கதிரின்முகம் பொலிய மேனி
யேகநிலை யருள்புரிய வொளிர்குமரக்
கடவுளடி யிறைஞ்சி வாழ்வாம். (105)

(இ - பொ.) யோகிகளின் மூலாதார, முதல் ஆருதாரத் தாமரைகள் பரந்து மலரவும், ஞானவான்களைப் பற்றும், காமாதி யாறிருள் நிலை நில்லாது போகவுமாகப் புன்னகை புரியும் சூரியப் பிரகாசம் போன்ற முகம் விளங்கி, திருவருள் துணையே திருமேனியாகக் கொண்டொளிர் குமாரசாமியின் திருவடிகளைப் போற்றி வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) மூலாதாரம் முதல் = மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி
பூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை முடிவாம்.
காமாதி = காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என ஆறு.

(அ - ம்.) யோகநிலையினர் மூலாதார முதல் புண்டரிக மோராறு பரவிப் பூப்ப, ஞானபாக நிலையினர் காமமாதி யிருளோ ராறும் நிலை நில்லாது போக.

85. திருக்குறுக்கைப் புராணம்

878. மழையேறு முழுமலையு மெழுமலையுந்
தோளவுணர் வருக்க மாய
பிழையேறு கருங்கடலும் பெருங்கடலு
மொருங்கடலும் பிறங்கு வானத்
துழையேறு தலைமறந்தா ரொருங்கேறு
தலுமுளங்கொண் டொருகை தொட்ட
தழையேறு சமரவேற் குமரவே
டிருவடிக டலைமேற் கொள்வாம். (106)

(இ - பொ.) மேகங்கள் தவழ் கிரவுஞ்ச கிரியையும், மலைபோல் எழுந்துருண்ட புயங்களையுடைய அரக்கர்கள் வகுப்பாம் சேனைக் கடலையும் ஒருங்கே கொன்றடக்கவும், உயர்ந்த வானுலகத்தில் குடியேறுதலை மறந்த தேவர்கள் யாவரும் பழையபடி அங்கிருந்து வாழவுமாகத் திருவுள்ளங்கொண்டு, ஒருகையால் தொட்டு விட்ட இலை போலும் வெற்றி வேலுடைய குமாரசாமியின் திருவடிகளைத் தலைமேற் கொண்டு பூசிப்பாம். (எ - று.)

(அ - ப.) வானத்துழை = வானுலகத்தில்.
ஏறுதல் = குடியேறுதல்.

86. தனியூர்ப் புராணம்

879. நஞ்சுமுகந் திறைக்குமெயிற் றரவணியுந்
தந்தையென நரலை யுண்ட
மஞ்சுமுகங் கவிழமதம் பொழிகவுண்முன்
னோனெனப் பல்வரத்தான் மாண்டு
விஞ்சுமுகம் பலகண்ட கொக்கிறுத்து
மிளிரிளவல் வெய்யேம் பாச
மஞ்சுமுக வருள்பொழியு மாறுமுகப்
பெருமானை யடுத்து வாழ்வாம். (107)

(இ - பொ.) நஞ்சை முகத்து வெளிப்படுந்தும் பற்களையுடைய பாம்பினை யணிந்த தந்தையாம் சிவபெருமானைப் போலவும், கடல் நீரை யுண்டு மழை பொழியும் மேகம் வெட்கும்படியாக மத நீரைப் பொழியுங் கபோலத்தினையுடைய தமையனும் விநாயகப்பெருமானைப் போலவும், பல வரங்களால் மாட்சிமைப்பட்டுப் பன்முகங்களோடு மாமர வடிவாக நின்ற சூரபதுமனை வேலாற் பிளந்தழித்து விளங்கும் இளையோனும், கொடியேங்களது ஐந்து பாசங்களுங் கெடத் திருவருள் பொழிபவனுமாகிய ஆறுமுகப் பெருமானைத் தஞ்சமாக அடைந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பாசம் அஞ்சு = ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்பன.

நரலை = கடல்
மஞ்சு = மேகம்
கொக்கு = மாமர வடிவாய் நின்ற சூரபதுமன்
மாண்டு = மாட்சிமைப்பட்டு.

87. சூதசங்கிதை, பூருவகாண்டம் உத்தரகாண்டம்

880. அறிவுருவத் தனக்குறையு ளுருவெடுத்தொள்
ளறிஞருக்கூ றுற்ற னோக்கி
முறியவடர்த் தெறிதல்பொர வொருகுருகுப்
பெயர்க்குன்றை முனிவி ருதை
நறியகுலப் புகழ்க்கிழுக்கு விளைப்பதென்றுட்
சினத்திருந்த நாம வொண்கூர்
செறியிலைவேல் கொடுதடிந்த சேயிலைப்பூண்
மார்பவிறற் சேய்தாள் போற்றி. (108)

(இ - பொ.) அறிவே வடிவாக விளங்குஞ் சிவபெருமான் தமதன்பர்கட்கு ஒரு துன்பம் உண்டான காலத்து உருவெடுத்து வந்து அத்துன்பம் வினைத்தவர்களை அழித்தலை ஒப்ப, கிரவுஞ்சன் என்னும் பறவையின் பெயரையுடைய மலைவடிவாய் நின்று மாயஞ் செய்த அரக்கனை, வெறுப்பில்லாத தம் தந்தையின் குலப் புகழுக்கு இழுக்கு விளைப்பதாகுமெனக் கருதிச் சினங் கொண்டிருந்த அச்சந்தரத்தக்க ஒளிபொருந்திய கூரிய இலைவடிவாகிய வேலைக்கொண்டு பிளந்து அழித்த குழந்தையாகிய இலைவடிவான ஆபரணத்தை மார்பில் அணிந்துள்ள வெற்றியினையுடைய முருகப் பெருமானது திருவடிகளுக்கு வணக்கம். (எ-று.)

881. தெண்டிரை யுத்தி புடையுடுத் தோங்குஞ்
சீர்வள ருலகநன் கேத்து
மண்டர்தம் பிரானு மிடத்தில் வாழ்ந்திலகு
மம்மையுஞ் செவ்விழி களிப்பத்
தண்டையுஞ் சிலம்பு மிணையடி யொலிப்பச்
சார்ந்துமற் றவர்நடு வமரு
மண்டழல் கதுவுஞ் செய்யவேற் கரத்து
வரதனை நிரதமேத் தெடுப்பாம். (109)

(இ-பொ.) அலைகளையுடைய கடலால் சூழப்பட்டோங்கும் பூவுலகமானது நன்கு துதிக்கும் அண்டர் நாயகனும் பரமசிவனும், இடப்பாகத்தில் வாழ்ந்தொளிரும் பார்வதியம்மனும் கண்களிக்கும்படியாகத் தண்டையுங் கிண்கிணிச் சிலம்பும் பாதங்களில் ஒலிக்கும்படி பூண்டு வள்ளி தெய்வயானை நடுவில் எழுந்தருள் (மிகுதியும் நெருப்புப்போல் பற்றி எரியும்) கதிர் வேற்கையனும் சிவசுப்ரணியக் கடவுளை நிரந்தரமும் ஏத்துவாம். (எ - று.)

(அ - ப.) உத்தி = கடல்.
அண்டர்தம்பிரான் = தேவாதி தேவன்.
இடத்தில் = இடப்பாகத்தில்.
மற்றவர் = மன்றல் புரிந்தவராம் வள்ளி தெய்வயானை.
மண்டு அழல் = மிகுதீ.
கதுவும் = எரியும்.
நிரதம் = நிரந்தரம்.

882. அணிகைவரை குடையாக்கொண் டாவினங்காத்
தருளரவ வணையா னேத்துந்
திணிகைவரை வயமா வினம்பகையின்
றுலவுநலஞ் சிறக்குந் தெய்வத்
தணிகைவரை மிசைநிலவு மாறுமுகப்
பரஞ்சுடர்தன் சரணந் தாழ்வாம்
பிணிகைவரை தரவருளுஞ் சிவஞான
மெந்நாளும் பிறங்க மாதோ. (110)

(இ-பொ.) கோவர்த்தன கிரியைக் குடையாகக் கொண்டு பிடித்து ஆனிரைகளைப் பாதுகாத்தருள் சேஷசயனனாகிய மகாவிஷ்ணு ஏத்திக் கொண்டாடுவதும், கைம்மலையாகிய யானையும் புலியாதி காட்டு விலங்குகளும் ஒன்று சேர்ந்துலாவும் நலஞ் சிறந்ததுமாம் தெய்வத் தன்மை பொருந்திய தணிகாசல மீது விளங்கும், ஆறுமுகக் கடவுளின் சரணங்களைப் பிறவிப் பிணி நீங்கிச் சிவஞானவருள் எந்நாளும் உண்டாகத் தாழ்ந்து பணிவாம். (எ-று.)

(அ - ப.) அணிகை வரை = கோவர்த்தனகிரி.
அரவணையான் = சேஷசயனன்.
வயமாவினம் = புலியாதி காட்டு மிருகம்.
பிணிகை = பிறவிப் பிணி.
வரைதர = நீங்க.
பிறங்க = நிறைத்துவர.

883. அணிகேச வன்பது மாலயன் வாழ்த்த வருடருஞ்சீர்
வணிகேச னென்ன மறைநான்கு மேத்தும் வரதனெழிற்
றணிகேசன் சேவடித் தாமரை தாழ்துந் தயங்குநெஞ்சே
திணிகேச பாச மடவார் நமன்றுயர் தீர்ந்திடவே. (111)

(இ - பொ.) பிறவிப் பாசத்துக்கே ஆளாக்கும் பெண்களென்னும் எமபடர்கள் துயரம் தீரும்படியாகத் தியங்குகின்ற நெஞ்சமே கேசவனாகிய விஷ்ணுவும், பதுமாசனனாகிய பிரம்மனும் போற்றி வாழ்த்த அருள்புரி சிறந்த வாணிகத் தலைவனென்ன நான்கு வேதங்களாலும் துதிக்காநின்ற வரப்புதல்வனும், திருத் தணிகேசுவரனுமான சண்முகசுந்தரக் கடவுளைத் தாழ்ந்து பணிவோம். (எ - று).

(அ - ப.) வரதன் = வரப்புதல்வனாகிய முருகன்.
திணிகேசம் = வகிரிழை, கூந்தலுடைய மடவார்.

88. திருக்கோவலூர்ப் புராணம்

884. பாயூரம் பணிவடமால் பலநாளும் பகையவுணர்க்
கேயூரன் பனத்தனொடு மிடைந்தோடா திளைப்பாற்றுங்
கேயூர மீராறு கிளர்தோளன் றிருக்கோவன்
மாயூரன் றிருச்சரணஞ் சரணாக மன்னுவாம். (112)

(இ-பொ.) ஊரும் (தொழிலையுடைய) அழகிய பாம்பையும் ஆல இலையையும் பாயாயுடைய விட்டுணுவும், விருப்பத்தோடு நடத்துகின்ற அன்ன வாகனத்தையுடைய பிரம்மனும் பல நாளும் பகைவர்களாகிய அவுணர்க்கு இடைந்து ஓடாது இளைப்பு ஆற்றும் திருக்கோவலூரில் யாகங் காண எழுந்தருளிய மயில் வாகனமுடைய சண்முகத்தின் அழகிய திருப்பாதங்களைச் சரணடைவோம்.(எ–று.)

89. திருத்தினைநகர்ப் புராணம்

885. உந்துதிரைக் கடல்சுவறக் கிரவுஞ்ச
வரைகிழிபட் டுளைந்து மாய
மைந்தமையுந் தடந்தோள்வெஞ் சூரனுடல்
பகவெறிந்த வடிவேற் செங்கைக்
கந்தனையம் பிகைக்கரனா ருரைத்தசிவ
ரகசியமெய்க் காதை யாவுஞ்
சந்தவரை முனிக்குரைத்த குகனை வணங்
கிடுமவர்தா டலைமேற் கொள்வாம். (113)

(இ - பொ) உயர்ந்தெழும் அலைகளை யுடைய கடல் சுண்டவும், கிரவுஞ்சகிரி பிளவுபட்டு உள்ளிருந்த கிரவுஞ்சன் வருந்தி மாளவும், வலிமையுடைய புயாசலனும் சூரபதுமன் முதலானார் உடல் கிழியவுமாக விட்டெறிந்த வடிவேலாயுதக் கையனும் கந்தசாமியாய், பூர்வம் பார்வதிக்குப் பரமசிவன் உரைத்த சிவரகசிய முழுவதும் சந்தனாசலத்து அகத்திய முனிவருணரக் கூறிய சூரனுமாயுள்ள சுப்ரமணியக் கடவுளைப் பணியும் தொண்டர்களின் திருவடிகளை நமது சிரமேற் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) உந்து = உயர்ந்தெழு.
சுவற = சுண்ட
உளைந்து = வருந்தி.
மைந்து = வலிமை.
பக = கிழிய.
சந்தவரை = சந்தனப் பொதியமலை.

90. இருடிவிந்தப் புராணம்

886. புனத்துறை சிறுமான் வந்து புணர்பெரு மாலை மேலோர்
மனத்தினை மயக்கு மன்றிற் பெயநடை வரையு நந்தீ
வினைக்கொடுங் குவடுஞ்சாய வேல்விடு மாசை மாருத்
தனிப்படுஞ் சோதி யானை விசாகனைச் சார்ந்து வாழ்வாம். (114)

(இ - பொ.) தினைப் புனத்துலாவும், சிறு மானினமாகிய வள்ளியை வந்தணைகிற பெருமானாய், அகத்தியர் முதலான மேலோர்களின் மனத்தினை மயக்குதலன்றி வேறுகுண மில்லாத பேர்வழியான, கிரவுஞ்ச கிரியையும், நம் தீவினையாகிய கொடுங்கிரியையும், சாய்ந்தழிய வேலாயுதத்தை விடுகிற மாருத அன்பினையுடைய பரஞ்சோதியனாய குமாரசாமிக் கடவுளை யடைந்து பணிந்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) சிறுமான் = மானினி (பெண்.)
குவடு = குன்று.
தனிப்பெருஞ்சோதி = தற்பரஞ்சோதி.

91. திரிசூலகிரிப் புராணம்

887. திரிவிலன் பர்கடுதித் திடவுந் தேவர்கள்
வரமிகு மசுரர்செய் வாதை நீங்கவும்
விரிகடல் சுவறவும் வேல்வி டுத்தவன்
முருகெழு மலர்ப்பத முடியிற் சூடுவாம். (115)

(இ - பொ.) ஒரே மனமுடைய அன்பர்கள் துதித்து வணங்கவும், மிகுதியான வரங்களுடைய அசுரர்கள் செய்யும் வாதனையைத் தேவர்கள் நீங்கி வாழவும், பரந்த கடல் சுண்டிப்போகவுமாக வேலாயுதத்தை விட்டவனும் சிவசண்முகக் கடவுளின் மலரடிகளைச் சிரோபூஷணமாகச் சூடிக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) திரிவு + இல் = மாறெண்ணமில்.
சுவற = வற்ற.
முருகெழு = தேன் துளிக்கும்.

92. புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்

888. தாங்குபெரும் புவனமெலாம் பணியுமிரு
திருவடித்தா மரையு நீங்கா
தோங்குபெருங் கருணைவழிந் தொழுகுதிரு
முகங்களோ ராறுந் தெய்வத்

தேங்கமழுங் கடம்பணியும் பன்னிரண்டு
தடம்புயமுந் திகழ மன்னுங்
காங்கெயனைப் பரிதிபுரி வளர்குமர
குருபரனைக் கருத்துள் வைப்பாம். (116)

(இ - பொ.) பெரிய பூலோகத்தின்கண் எல்லோரும் போற்றும் திருவடித் துணைத் தாமரையும், பெருங் காருண்ய மோங்கி வழிந்தொழுகும் ஆறுமாமுகமும், தெய்வலோகத்து மணங்கமழும் கடப்ப மலர் மாலை யணியும் பன்னிரண்டு புயாசலமுமாக மன்னி விளங்கும் கங்கை மைந்தனாய், கோடி சூரியப் பிரகாசனாய், பரிதிபுரியில் வீற்றிருக்கும் குமரகுருபரனுமாய சிவ சுப்ரமணியக் கடவுளைத் தியானிப்பாம். (எ - று)

(அ – ப.) காங்கேயன் = கங்கை மைந்தன்.
பரிதிபுரி = புள்ளிருக்கும் வேளூர்.

889. அளிதருசிந் தையரான வமரர்பெருஞ் சிறைமீள வகிலம் வாழப்
பிளிறுமயி ராவதமும் பொன்னுலகும் விண்ணவர்கோன் பெறமே வண்ட
வெளிமுகடு மதிரவெதிர் வருசூர னுளங்கலங்க விளங்கு செங்கை
யொளிதிகழ்வே லெடுத்தமுத்துக் குமரநாய கன்மலர்த்தா ளுளத்துள் வைப்பாம்.

(இ - பொ.) இரக்கமான எண்ண முடையராம், தேவர்களின் பெருஞ் சிறை மீளவும், பூஉலகம் வாழவும், கர்ச்சிக்கும் ஐராவதமென்னும் யானையையும், பொன்னுலகத்தையும், தேவேந்திரன் பெற்று வாழவுமாக (திருவுளங்கொண்டு) மண்டல விண்டல மெல்லாம் அதிர எதிர்க்க வரும் சூரபதுமன் மனங்கலங்கும் படி செங்கையின் கதிர் வேலாயுதத்தை யெடுத்துக் கொன்ற முத்துக்குமார சாமி யின் மலர்ப் பாதங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) அளிதருசிந்தை = கனிந்தவுள்ளம்.
பிளிறும் = கர்ச்சிக்கும்.
அண்டவெளிமுகடு = அண்ட பகிரண்டம்.

தேவர்கள் வாழவும், சூராதி யசுரர்கள் மாளவும் ஆக வேலெடுத்தவர் என்க.

93. திருவேரகப் புராணம்

890. பூமாது புணர்மாலும் போற்றரிய
மூவிலைவேற் புனிதர் கேட்ப
வோமாதி மந்திரத்தி னுண்மையெலா
முணர்த்து முறையுரைத்துக் காட்டி
யாமாதி யந்தமிலா வைந்தொழிலுங்
கடவியப்பா லறிவாய் நிற்குங்
கோமானை யேரகத்தி லுறைசாமி
நாயகனைக் குறித்து வாழ்வாம். (118)

(இ - பொ.) இலக்குமியைப் புணர் திருமாலும், போற்றுதற்கரிய மூவிலைச் சூலாயுதமேந்தும் பரமசிவன் கேட்கும்படி ஓங்காரப் பிரணவத்தின் உண்மை யாகிய ஞான மெல்லாம் உணர்த்த வேண்டிய நெறி முறைப்படியே (குமர

குருவாயிருந்து) உபதேசித்துக் காட்டியும், ஆதியந்த மில்லாத சுயம்புவா யிருந்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களைச் செலுத்தியும், (வள்ளி தெய்வ யானையாராகிய) பெண்பாலரின் மத்தியில் அறிவோடு கூடி நிற்கும் தலைவனும் திருவேரகம் வாழ் சாமிநாதக் கடவுளைப் போற்றி வாழ்வாம். (எ - று)

(அ - ப.) மூவிலைவேல் = திரிசூலம்.
கடவி = செலுத்தி.
கோமான் = கொற்றவன்.
சாமிநாயகன் = சாமிநாதன்.

தட்சிணாமூர்த்தி யாயிருந்த பரமசிவமாம் சாமிக்கே குமரகுருவாய் வந்து உபதேசித்ததினால் சாமிநாதன் என்றும் முருகருக்கொரு பெயருண்டு.

891. காந்திமுக மலர்போற்றி கற்பதரு வெனவருளுங் கருணை போற்றி
வாய்ந்ததுணைப் புயம்போற்றி வாமகர மிடைசெறிந்த மாண்பு போற்றி
சேர்ந்ததண்ட கரம்போற்றி கோவணநீ டெழில்போற்றி சித்தாந் தத்திற்
போந்தபொரு ளருளுமலைக் குமரநா யகன்றிருத்தாள் போற்றி போற்றி. (119)

(இ - பொ.) சைவ சித்தாந்தத்தில் தக்க பொருள்களை (அகத்தியர்க்கு) உபதேசித்தருள் திருவேரகம் குமாரசாமியின் திருவடிகளுக்கு வணக்கம். அழகிய முக மலர்ச்சிக்கு வணக்கம். கற்ப மரத்தைப்போல் கைகொடுக்கும் கருணா கடாட்சத்துக்கு வணக்கம். திரண்டுருண்ட புஜங்கள் இரண்டுக்கும் வணக்கம். இடுப்பில் இடக்கரம் வைத்து நின்ற சிங்காரத்துக்கு வணக்கம். வலக்கை கொண்ட தண்டத்துக்கு வணக்கம். நீளார் கோவணத்துக்கு வணக்கம். (எ - று)

(அ - ப.) முகமலர் = முகாரவிந்தம்.
வாமகரம் = இடக்கை.
தண்டகரம் = (வலக்கை) தண்டம்.
போந்த = தக்க.

மாமனாராகிய இந்திரற்குக் கற்பக நன்னிழலைக் கொடுத்துள்ள காரணத்தால் கருணையையும் கற்பகத் தருவென்றார்.

தண்டகரத்தால் தண்டாயுதபாணி யென்றும்,

கோவணத்தால் கோவணாண்டி யென்றும் முருகன் வழங்கப்படுகிறார்.

892. பாரகமுந் துயர்நீங்க விண்ணகமுங் குடியேறப் படரு முள்வாட்
சூரகமு மலையகமு மலையகமுந் துகள்படுத்திச் சுடர்வேற் றாங்கி
நேரகமுங் கற்பகநன் னிழலகமு மிந்திரற்கு நிறுத்தி நாளு
மேரகமு மென்னகமும் பிரியாத விளையானை யிறைஞ்சல் செய்வாம். (120)

(இ - பொ.) முள் படர்ந்த வாளாயுதம் போன்ற (கொடுங்குணத்தின்) சூரபதுமனாதி யசுரர்களையும், (கிரவுஞ்சனுடன்) கிரவுஞ்ச கிரியையும், (சுண்டிடக்) கடலையும், அழித்துத் தூள் தூளாக்கிய கதிர் வேலைக் கைக்கொண்டு, உலகமெலாந் துயர் நீங்கி நலமடையவும், வானுலகமெல்லாம் தேவர்கள் குடியேறி வசிக்கவும், இந்திரன் பொன்னுலகத்தில், கற்பக நன்னிழலில் பொலிவுற்றிருக்கவுமாக நிலைபெறக் காப்பாற்றி எந்நாளும் என் உள்ளன்பை விட்டு விலகாத திருவேரகம் (மூத்த பிள்ளை யாருக்கு) இளைய சகோதரனான சண்முகசுந்தரக் கடவுளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) படருமுள்வாள் = முள்போலுங் கூர்மையுள்ள வாளாயுதம் -
சூரகம் = சூரபதுமன்
மலையகமும் = கிரவுஞ்சகிரி
அலையகம் = கடல்
துகள் = தூள்
சுடர்வேல் = கதிர்வேல்
நேரகம் = சொர்க்கம்

திருவேரகத்திலும் அடியேனுள்ளத்திலும் எந்நாளும் பிரியாத இளையானெனவும் மூல பாடம் போலும் உரை நிகழும்.

94. பழனிப் புராணம்

893. சேயிரவி யொளிகவற்று மாமணிப்பொன் முடியுஞ்
செம்முகமுங் கருணைபொழி நயனமுஞ் செவ்வாயுந்
தூயநறும் புழுகொழுகுஞ் செழுமணிப் பொற்குழையுந்
தொடைநிறைந்த துணைத்தோளுஞ் சுடரிலைவேற் படையு
மாயுமறை நூன்மார்புங் களபநறுஞ் சாந்து
மணிமணிப் பூணாரமும் பொன்னொலிய லுடையழகும்
பாயொளிக்கிண் கிணிபுனைந்த சீறடியுங் படைத்த
பழனிமலைக் குமரனையாம் பணிதல் செய்வாம். (121)

(இ - பொ.) சிவந்த சூரியப் பிரகாசத்தையும், கவளீகரிக்கும் மாணிக்கம் பதித்த பொற்கிரீடமும், செந்தாமரை முகமும், கிருபா கடாட்ச நோக்கமும், (செவ்விய வாயின்) திருவாக்கும், பரிசுத்த மணம் கமழ் புனுகு சட்டப்பொட்டின் ஒழுங்கும், நவரத்தினமிழைத்த பொற் கவச குண்டலமும், கடப்ப மலர் மாலையணிந்து நிறைந்த தோள்களும், கதிர் வேலாயுதமுடைய கையும், வைதிகமான பூணூல் தரித்த மார்பும், (மார்பில்) கலவைச் சாந்தணிந்த மணமும், முத்தாரங்களும், இரத்தின ஆரங்களும், பட்டுப் பீதாம்பரவுடுக்கையின் அழகும், சாந்தியான கிண்கிணிச் சிலம்பணிந்த சிற்றடியும் கொண்டு விளங்கிய பழனிக் குமாரசாமியைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) சேயிரவி = செஞ்சுடராம் சூரியன்
கவற்றும் = கவளீகரிக்கும்
மாமணி = மாணிக்கம்
செம்முகம் = செங்கமலமுகம்
கருணை மொழிநயனம் = கிருபா நோக்கம்
தொடை = மாலை
ஒலியல் = ஆடை
உடை = உடுப்பு
சீறடி = சிற்றடி

95. சுசீந்திரப் புராணம்

894. தேவயா னையைத்தினஞ் செயிர்க்கும் வல்லிநீ
தாவுமான் வயிற்றவ தரித்தி யென்றுபின்
மேவவேள் விமலையில் வேட்ட வேட்டுவப்
பாவைசேர் சரவண பவனை வாழ்த்துவாம். (122)

(இ- பொ.) தெய்வ யானையை நாடோறும் கோபிக்கப்பட்டவள் ஆகையால் நீ (தாவிக் குதிக்கும்) மான் வயிற்றில் பிறக்கக் கடவதெனக்கட்டளையிட்டுப் பின், அவ்வாறே வேள்வி மலைக்குச் சென்று, வேட்கை கொண்ட வேடராசன் மகளாகிய வள்ளியைச் சேர்ந்தணையும் சரவணபவா நந்தனை வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ப.) தேவயானை = தெய்வயானை
செயிர்க்கும் = கோபிக்கும்.
வல்லி = வல்லவி
வேட்ட = வேண்ட

96. திருப்பைஞ்ஞீலிப் புராணம்

895. பாகைநிகர்த் திடுசுரகுஞ் சரிசொலமு
தனவமுதம் பதத்தை நேரா
நாகநகர்ப் பெரும்பதஞ் சிற்றிடைக் கொடிக்குப்
படைக்கொடி கணுக ரெய்த
மாகனக குயவிபத்திற் கிபங்கொடுத்துப்
புணர்ந்தானை மயூரத் தோகை
வாகனனைக் குறவனிதை மோகனனைக்
குகனையன்பின் வணங்கு வாமால். (123)

குறிப்பு :—இப்புராணங்கிடைக்கப் பெருமையால் ஒப்பு நோக்கி உண்மைப் பொருள் காணமுடியவில்லை.

97. குளத்தூர்ப் புராணம்

896. சீருலவும் பனிமலையி னுதித்தமடப்
பிடியொருபாற் சிறந்து வாழு
மேருலவுங் கதிர்மதியந் தவழ்சென்னிப்
பவளவரையின் பாற்றோன்று
மோருவகைக் கரித்துணையாய்க் கிரவுஞ்ச
வோங்கலைச்சேர் கரியைப் போரி
னேருலவிப் பொருதழித்த சிங்கமென
துளக்குகையி னீங்கி டாதே. (124)

(இ - பொ.) இமய மலையி லுற்பவித்த பார்வதியம்மனை இடப்பாகங் கொண்டு வாழ்ந்து உலாவி வரும் நிலாத் தவழ்கிற சடாமுடியுடை (பவள மலை போல் செம்மேனியனும்) சிவபெருமான்றன் நெற்றிக் கண்ணில் தோன்று

மோர் குலமகனாய்க் கிரவுஞ்ச மலையுடன் கிரவுஞ்சனையும், சமரில் எதிர் தாக்கிக் கொண்டழிக்கும் சிங்கமான சிங்கார வேலன் அடியேன் உள்ளன்பாகிய குகையினின்றும் நீங்கிடான். (எ - று.)

(அ - ப.) உவகைக் கரித்துணை = குலமகன்.
ஓங்கல் = மலை, வலிமையுடையோனாம் கிரவுஞ்சனுக்கும்.
சிங்கம் = சிங்காரத்துக்கும்

குறப்பெண்ணாகிய வள்ளியைக் குறவனாக வந்து மணந்தவனாதலால், குறவன் என்ற கருத்தமை சிங்கம் = (குறக்குலம்) என்றார்.

98. திருநாவலூர்ப் புராணம்

897. கற்பகவொள் ளயிலெறிந்த கந்தனையா கண்டவற்குக் கனக நாடுங்
கற்பகநன் னிழலரசு மளித்தகரு ணாகரனைக் கனிந்தன் போடு
கற்பகவள் ளிக்கொடியைக் கலந்தவடி வேலவனைக் கதிரோ னூருங்
கற்பகழித் திருநாவ லூர்முருகன் றாடொழுது கவலை தீர்வாம். (125)

(இ - பொ.) கிரவுஞ்ச கிரி பிளந்து வெடிக்கும்படியாகக் கதிர் வேலை எறிந்த கந்தசாமியாய், தேவேந்திரனுக்குப் பொன்னுலகமும், கற்பக மரத்தின் நீழலிலமர் அரசாங்கமும் கொடுத்துதவியருள் கருணாகரக் கடவுளாய், உத்தமியான வள்ளி கனிகரமான உள்ளன்போடு கலந்தணை வடிவேலனாய், சூரியனுடைய ஆயிரங்கோடி காலங்களைக் கடந்த பழந்திரு நாவலூர் முருகேசன் திருவடிகள் தொழுது நமது மனக்கவலையைப் போக்கிக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) கற்பக = கிரவுஞ்சக (கல் + பகல்)
ஆகண்டவன் = இந்திரன்
கனகநாடு = பொன்னுலகம்
கற்பகம் = கற்பு
கற்ப-கழி = கற்ப காலம் கழிந்த

99. திருப்பனந்தாட் புராணம்

898. பருப்பதங்க டமைத்துளைத்துச் சூரனுடல் பொடிபடுத்திப் பவங்கள் சாய
விருப்பினொடு புரந்தரனுக் கரசளித்துத் தேவர் சிறைமீட்ட கோமான்
மருப்பதுமத் திசைமுகனுந் திருமாலுந் தொழற்கரிய வள்ள லான
தருப்பொலிய வளப்பமுறு தாலவன வேலனிரு சரணஞ் சார்வாம். (126)

(இ - பொ.) பாவங்களெல்லாந் தொலைய, கிரவுஞ்ச கிரியின் ஓர்கடனான கிரவுஞ்சனைத் துளைத்துக் கொன்றும், சூரபதுமன் சரீரத்தைத் தூளாக்கியும், தேவர்கள் சிறைமீட்டு, தேவேந்திரனுக்கு அன்பால் அரசளிக்கும் கொற்றவனாய் பிரம்ம விஷ்ணுக்களால் வணங்கரிய பாதாம்புயனாம் சிவபெருமானென்னும் வள்ளலாகிய கற்பகத்தரு செழித்தோங்கி வளரும் திருப்பனந்தாள் வாழ் சிவசுப்பிரமணியக் கடவுளின் பாதஞ் சார்ந்து பணிவாம். (எ - று)

(அ - ப,) தாலவனம் = பனங்காடு (திருப்பனந்தாள்).

(அ - ம்) பவங்கள் சாய பருப்பதங் கடமைத் துளைத்துச் சூரனுடல் பொடிபடுத்தி, தேவர் சிறை மீட்டு, புரந்தரனுக்கு விருப்பினொடு அரசளித்த கோமான் திசைமுகனுந் திருமாலுந் தொழற்கரிய மருப்பதும் (சரண) வள்ளலான தரும கிரவுஞ்ச முதலான மலைகள் தமைத்துளைத்தெனினும் என்பது உரைபாடமே.

100. வேப்பத்தூரர் திருவிளையாடற் புராணம்

899. விடந்தரு மடங்க லென்ன விண்ணவ ரெண்ணந் தன்னைத்
தொடர்ந்தமர் கடந்த சீற்றச் சூருடல் பிளந்த ளைந்த
வுடம்பிடிப் படைத்த டக்கை யுத்தம மயூர வூர்தி
கடம்பமர் மன்றற் றொங்கற் கந்தனைச் சிந்தை செய்வாம். (127)

(இ - பொ.) தேவர்களின் குறையையெண்ணி, சண்டையில் விட முடைச் சிங்கமெனக் கோபித்து, சூரபதுமனைப் பிளந்து கலக்கிய வேலாயுதத்தை உள்ளங் கையோடு பிடிக்கும் உத்தமனும், மயில் வாகனனும், மணமுள்ள கடப்பமலர் மாலையோனுமான கந்தசாமிக் கடவுளைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) மடங்கல் = சிங்கம்
உடம்பிடி = உடன் பிடிக்கும்
படை = வேல்
தடக்கை = உள்ளங்கை
மன்றல் = மணம்
தொங்கல் = மாலை

101. காவேரிப் புராணம்

900. இரணிய மீண்டு மிந்திரா தியர்க
ளிடும்பைவிட் டொழிந்திட முன்னா
ளிரணிய கருப்பன் றனைப்பெரு மாலோ
னிகலுறு கேழலின் வடிவா
யிரணியாக் கனைக்கொன் றுலகினி லிறுமாந்
தெழுந்தபோ தொருமருப் பொசிக்கு
மிரணிய முலைமா தின்புடன் பயந்த
விளையமைந் தனைப்பணிந் திடுவாம். (128)

(இ - பொ.) யாதொரு துன்பமும் இல்லாமல் இந்திராதி தேவர்களெல்லாம் பொன்னுலகம் அடைந்து வாழும்படியாக முன்னொரு நாளில் இரணியகருப்பனென்னும் பிரம்மனைப் பெற்ற திருமால், வலியுடைய சுவேத வராக அவதாரமெடுத்து, இரணியாட்சனைக் கொன்று, உலகெலாம் அகங்காரங் கொண்டு எழுந்த போது, அதன் ஒரு கொம்பை ஒடிக்கும் (இரண்டு தனபாரங்களுடைய பார்வதியன்பால் பெற்ற இளவலாம்) சிவசண்முக சுந்தரக் கடவுளைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) இரணியம் = பொன், நாடு.
இடும்பை = இடுக்கண்.
இரணிய கருப்பன் = பிரம்மன்.
இகலுறு = வலிவுடைய.
கேழல் = பன்றி.
இரணியாக்கன் = இரணியகசிபின் தம்பி
இறுமாந்து = அகங்கரித்து.
மருப்பு = கொம்பு.
ஓசிக்கும் = ஒடிக்கும்.

இதிகாசங்கள்

102. சிவரகசியம்

901. அரவணை யவனு மன்ன வூர்தியு மறிக லாத
பரவரும் பொருட்கு வேதப் பழம்பொருள் பகர்ந்த கோமான்
குரவணி குழலாள் வள்ளிக் கொடிபடர் குவவுத் திண்டோட்
சரவண பவன்பொற் பாத தாமரை தலைமேற் கொள்வாம். (129)

(இ-பொ.) சேஷசயனனாகிய விஷ்ணுவும், அன்ன வாகனனாகிய பிரம்மனும், (அடிமுடி) அறியவொண்ணாது பரந்து வியாபித்திருக்கும் தட்சிணாமூர்த்தப் பரம்பொருட்கே வேதத்தின் பழம்பொருளாம் ஓங்காரப் பிரணவத்தின் உண்மையைக் கூறும் குமர குருவும், கூந்தல் மணமுடைய வள்ளி (யென்னும் பெண்) கொடி படர்ந்தேறும், குவிந்து திரண்ட வலுவுடைத் தோள்கள் பொருந்திய சரவணபவானந்தன் சரணாரவிந்தங்களைத் தலைமேல் சூடிக்கொள்வாம். (எ—று.)

(அ - ப.) பரவரும் = பரந்து வியாபிக்கும்.
குரவு = மணம்.
குவவு = குவிவு (குவிந்த).

103. நல்லாப்பிள்ளை பாரதம்

902. வந்த வேளை யெரித்த மலர்க்கணான்
றந்த வேளைத் தயித்தியர் காலனை
யெந்த வேளையு மெம்முள நீங்கலாக்
கந்த வேளைக் கருத்து ளிருத்துவாம். (130)

(இ - பொ.) (பஞ்ச பாணத்துடன்) வரும் மன்மதனை எரித்த நெற்றிக் கண்ணானும் பரமசிவன் தந்தருள் குமர வேளாய், அவுணர்குலக் காலனாய், இராப் பகல் எந்த வேளையும், அடியேம் உள்ளன்பில் விட்டு நீங்காத கந்தசாமிக் கடவுளைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) தயித்தியர் = இராக்கதர்.
காலன் = எமன்.

104. கல்லாடம்

903. பாய்திரை யுடுத்த ஞாலமுடி வென்ன
முடங்குளை முகத்துப் பஃறேரு ளவுணனெடு
மிடையுடு வுதிரச் செங்களம் பொருது
ஞாட்பினுண் மறைந்து நடுவறு வரத்தால்
வடவைநெடு நாக்கின் கிளைகள்விரிந் தென்னச்
செந்துகிர் படருந் திரைக்கடற் புக்குக்
கிடந்தெரி வடவையிற் றளிர்முக மீன்று
திரையெறி மலைகளிற் கவடுபல போக்கிக்
கற்செறி பாசியிற் சினைக்குழை பொதுளி
யகறிரைப் பரப்பிற் சடையலைந் தலையாது
கீழிணர் நின்ற மேற்பகை மாவி
ஞேருட விரண்டு கூறுபட விடுத்த
வழியாப் பேரளி யுமைக்க ணின்று
தற்பெயர் புணர்த்திக் கற்பினெடு கொடுத்த
வமையா வென்றி யரத்தநெடு வேலோய்
கீழ்மே னின்றவக் கொடுந்தொழிற் கொக்கின
கூறி ரண்டாய் வொருபங் கெழுந்து
மாயாப் பெருவரத் தொருமயி லாகிப்
புடவிவைத் தாற்றிய பஃறலைப் பாந்தண்
மண்சிறுக விரித்த மணிப்படந் தூக்கி
விழுங்கிய பல்கதிர் வாய்தொறு முமிழ்ந்தென
மணிநிரை சிந்தி மண்புக வலைப்பக்
கார்விரிந் தோங்கிய மலைத்தலைக் கதிரென
வோவறப் போகிய சிறைவிரி முதுகிற்
புவனங் காணப் புகழொடு பொலிந்தோய்
போழ்படக் கிடந்த வொருபங் கெழுந்து
மின்னன் மாண்ட கவிரலர் பூத்த
சென்னி வாரணக் கொடும்பகை யாகித்
தேவர்மெய் பனிப்புற வான்மிடை யுடுத்திரள்
பொரியிற் கொறிப்பப் புரிந்தபொரு ளுடித்
தாமரை பழித்த கைமருங் கமைத்தோ
யொருமையு ளொருங்கி யிருகை நெய்வார்த்து
நாரத ஞேம்பிய செந்தீக் கொடுத்த
திருகுபுரி கோட்டுத் தகர்வரு மதியோய்!
முலையென விரண்டு முரட்குவடு மரீஇக்
குழற்காடு சுமந்த யானைமகட் புணர்ந்தோய்!
செங்கட் குறவர் கருங்காட்டு வளர்த்த
பைங்கொடி வள்ளி படர்ந்தபுய மலையோய்!
இமயம் பூத்த சுனைமாண் டொட்டி

லறிவிற் றங்கி யறுதாய் முலையுண்
டுழன்மதில் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்!
ஓமெனு மெழுத்திற் பிரமம் பேசிய
நான்மறை விதியை நடுங்குசிறை வைத்துப்
படைப்புமுதன் மாய வான்முதற் கூடித்
தாதையு மிரப்பத் தனையது விடுத்தோய்
கூடஞ் சுமந்த நெடுமுடி நேரி
விண்டடை யாது மண்புகப் புதைத்த
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்!
ஆறுதிரு வெழுத்துங் கூறுநிலை கண்டு
நின்றாட் புகழுநர் கண்ணாட் பொலிந்தோய்!
மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
யிறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா ரறிய நீயே யாதலின்
வெட்சிமலர் சூழ்ந்த நின்னிரு கழற்கால்
குழந்தை யன்பினோடு சென்னிதலைக் கொள்ளுது
மறிவுநிலை கூடாச் சின்மொழி கொண்டு
கடவுட் கூறா வுலவா வருத்தியுஞ்
சனனப் பீழையுந் தள்ளாக் காமமுந்
தற்படு துயரமு மடைவுகெட் டிறத்தலுந்
தென்புலக் கோமகன் றீத்தெறு தண்டமு
நரகொடு துறக்கத் துழல்வரு பீழையு
நீளா திம்பரின் முடித்து
மீளாக் காட்சி தருதியின் றெனவே. (131)

(இ-பொ.) பரந்த கடலினைச் சூழப் பெற்ற உலகத்தார் யுகமுடி வென்னுமாறு பலதோள்களையுடைய சிங்கமுகா சூரனுடனே, (ஆகாயத்தில்) நெருங்கின விண்மீன்கள் உதிரும்படி போர்க்களத்தில் போர் செய்து சாவாமல், பாதியிலரசுரிமை யறுதற்குக் காரணமாகிய வரத்தினால், போர்க்களத்தில் ஒளித்து, வடவைத் தீயினது நெடிய நாவின் கிளைகள் விரிந்தாற்போலச் செம்பவழக் கொடிகள், படர்தற் கிடமாகிய அலைகளையுடைய கடலினிடத்தே புகுந்து, அகன்ற அலைகளையுடைய பரந்துள்ள அக்கடலில் எரியா நிற்கிற வடவைத் தீப்போலத் தன்னிடத்தில் தளிர் விட்டு அலையெறிகின்ற மலைகளைப்போலக் கோடுகள் விட்டுக் கல்லிற் செறிந்த பாசிபோல, கிளைகளின் இலை தழைத்து வேரசைந்து, பூங்கொத்துக்கள் அசையாமல், கீழாய் நின்ற முற்பகையாகிய மாவினது ஒருடம்பானது இரு கூறாம்படி ஏவின குறை பெருங் கருணையையுடைய பார்வதி எதிர் நின்று தன் பெயரைச் சாத்திக் கற்பித்தலுடனே கொடுத்த, அடங்காத வெற்றியினையுடைய நீண்ட செவ்வேற் படையை யுடையோய், கீழ் மேலாக நின்ற வத்தீத் தொழிலையுடைய மாவினை இரு கூறாக்கியதில், ஒரு கூறெழுந்து பெரிய வரத்தினால், அழியாதவொரு மயிலுருவமாகிய பூமியைத் தலையில் வைத்துத் தாங்கிய,

ஆதிசேடன் மண்ணுஞ் சிறுகும்படி பரப்பின, மணிப்படத்தைக் கொத்தி மேலே யெடுத்து, (முன்னே) விழுங்கின, பல கதிர்களை வாய்கள் எல்லாவற்றாலும் உமிழ்ந்தாற்போல, மணிவரிசையை மண்ணிற் புகுமாறு சிதறி வருத்தலால், மேகமானது பரவப்பெற்றுயர்ந்த மலையினிடத்தே, ஞாயிறு பொலிந்தாற்போல், ஒழிவற நீண்ட சிறை விரியாநின்ற, அதன் முதுகிலே, உலகங் காணும்படி புகழுடனே விளங்குவோய்! பிளவுபடக் கிடந்த வேறொரு கூறெழுந்து, கொடிய பகையின் விளக்கமாகிய அழகு மாட்சிமைப்பட்ட முருக்கம் பூப்போன்ற செஞ்சூட்டுப் பொலிவு பெற்ற தலையையுடைய கோழியாகி, தேவர்களுடம்பு நடுக்கமடையப் பொரிபோல ஆகாயத்தில் நெருங்கின மீன் கணங்களைக் கொறித்தலால், அது விரும்பின கருமத்தை, தேவர்க்கு இடுக்கண் இல்லாது கருதி, தாமரை மலரை இகழ்ந்த திருக்கரத்தின் வலம் பக்கத்தில், கொடியாக அமைத்துக்கொண்டோய்! ஐம்பொறியுமொரு வழியாக மனத்தைச் செல்லுமிடத்துச் செல்லவிடாது ஒருவழிப்படுத்தி, நாரத முனிவன் இரு கையாலும் நெய்யை வார்த்து, செய்து முடித்த வேள்வியால் தரப்பட்ட திருகுதலை யுடைத்தாய், முறுக்கொடு கூடின கொம்பினையுடைய ஆட்டின்மேல் வருகின்ற மதியினையுடையோய்! மாறுபாட்டினையுடைய இரண்டு மலைகளென்னுமாறு முலைகள் பொருந்தக் கூந்தற் காட்டினைச் சுமந்த தெய்வயானையைச் சேர்ந்தோய்! சிவந்த கண்களையுடைய குன்றவாணர் கரிய காட்டில் காப்பாற்றின வள்ளியாகிய பசிய கொடியானது படரப்பெற்ற திருத்தோள்களாகிய மலையினையுடையோய்! இமயமலையிலுண்டாகிய மாட்சிமை பொருந்திய பொய்கையிலுண்டாகிய மலராகிய தொட்டிலில், அறிவோடு பொருந்தி ஆறு தாயார் முலையுண்டு திரியாநின்ற, முப்புரத்தைச் சிரிப்பாகிய நெருப்பினால் எரித்த சிவபெருமானானவர் தொழுது நின்று துதிக்க, அவர்க்குக் குருமொழியை வைத்தோய்! பிரமமாகப் பேசின நான்கு வேதங்களையுடைய பிரம்மனை, ஓமென்னுமக்கரத்தால் நடுங்குதற் கேதுவாகிய சிறைப்படுத்தி, படைப்பு முதலிய தொழில்கள் நடவாமையாலே, அவை நடக்கும்படி, தேவர்களும், தந்தையாகிய சிவபிரானும், வேண்ட விலங்கு விடுத்தோய்! கூடமானது தாங்கிய நெடிய குவடுகளையுடைய நேரி மலையானது, ஆகாய வழியைத் தடுக்காது, மண்ணிலழுந்தும்படி மறைத்த அகத்திய முனிவன் தெளியும்வண்ணம், பெரிதாகிய வேதார்த்தத்தை விரித்துரைத்தோய்! ஆறு திருவெழுத்துக்களும் சொல்லுகின்ற நிலையையறிந்து உனது திருவடியைத் துதிப்போரது கண்ணினுள்ளே விளங்குவோய்! அறதனப் பிறப்பிடத்தை யறிவோராகிய மதுரை வாணிகரது பெரிய குடியில் பிறந்து, இறையோன் கூறின கூற்றிற்குப் பரணர் முதலானோர் கேட்க, பெரிய தமிழில் பரந்த உலகில் உள்ளார் அறியும்படி பொருள் விரித்த அரிய தமிழ்ப் புலவனும் நீயேயாதலால், அறிவு நிலை பெறாத, எமது சில சொற்களை யேற்றுக்கொண்டு, கடவுளாகிய உன்னைப் புகழாமைக் கேதுவாகிய கெடாத ஆசையும், பிறவித் துன்பமும் ஒழிக்கப்படாத, காம நுகர்ச்சியும், தன்னாலுண்டாகிய துன்பமும், முறை தப்பி நடத்தலும், இயமன் நெருப்புப்போல வருத்துகிற ஒருத்தற்றுன்பமும், நரகத்தும் சுவர்க்கத்தும் உழலாநின்ற துன்பமும், நீள விடாது இம்மையிற்றானே முடிவுசெய்து, இப்பொழுதே மீளாத முத்திப் பேற்றைத் தருவையென்றெண்ணி, வெட்சி மலர்மாலை யணியப்பெற்ற, உனது வீரக்கழலணிந்த இரண்டு திருவடிகளையும், குழந்தையன்பினால் யாம் எமது சிரத்திலேற்றுக் கொள்வோம். (எ - று.)

(அ - ப.) பாய்திரை = கடல்
உடுத்த = சூழ்ந்த
ஞாலம் = தாலம், பூமி
முடங்குளை = சிங்கம்
பஃறோள் = பலதோள்
உடு = நட்சத்திரம்
செங்களம் = சேனைசைனியம்
ஞாட்பு = யுத்தகளம்
வடவை = வடவாமுகாக்கினி
துகிர் (துகில்) = பவளக்கொடி
கவடு = மரக்கொம்பு
பொதுளி = செழித்து
சடை = வேர்
இணர் = பூங்கொத்து
மேற்பகை = முற்பகை
மா = மாமரம்
அமையாவென்றி = அடங்காவெற்றி
அரத்த = செம்மையான, பொன்மை
கொக்கு = மாமரம்
புடவி = புவனம்
ஆற்றிய = தாங்கிய
பஃறலைப்பாந்தள் = ஆதிசேடன்
ஓவறப்போகிய = ஒழிவறநீண்ட
சிறைவிரி = கலாபம் விரிந்த
போழ்பட = பிளவுபட
மாண்ட = மாட்சிமைப்பட்ட
கவிர் அலர் = முருக்கம்பூ
சென்னி = கொண்டை (யின்மேல்)
வாரணம் = சேவல்
பனிப்புற = (சிலிர்த்து வேர்த்து) நடுங்க
வான்மிடை = ஆகாயத்தில் நெருங்கியுள்ள
அமைத்தோய் = (கொடியாக) நியமித்துக்கொண்டோய்
கோட்டுத்தகர் = ஆட்டுக்கடா
ஓம்பிய = ஓம்பி, உவந்து
முரண் = மாறுபாடு
குவடு = மலை
மரீஇ = சேர்ந்து, நெருங்கி
கூந்தல்காடு = நீண்டடர்ந்த கூந்தல்
ஆனைமகள் = தெய்வயானை
கருங்காடு = தினைப்புனம்
சுனை = பொய்கை
தொட்டில் = (குழந்தை) ஊஞ்சல்
உழல்மதில் = முப்புரம்

விதி = பிரமன்
படைப்புமுதல் = சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியம்
மாய = நடவாமல் நின்றுவிட
வான்முதல்கூடி = (வானவர்கள்) தேவர்கள் சூழ்ந்து
தாதையும் = சிவனும்
தளை = விலங்கு (கட்டு)
கூடம் = அண்டம்
நேரி = ஒரு மலை; இது சோழ நாட்டிலுள்ளது.
மணிக்காலறிஞர் = வணிகர்
தடையாது = தடுக்காது
ஆறுதிரு எழுத்து = சடாட்சரம்
அருந்தி = ஆசை
சனனப்பிழை = பிறவித்துன்பம்
தென்புலக் கோமகன் = எமன்
துறக்கம் = சொர்க்கம்
நீளாது = நீளவிடாது
இம்பரின் = இம்மையிலேயே
மீளாக்காட்சி = மீளாத முத்தி
தருதி = தருவை

---

105. சிவஞான சித்தியார்

904. அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை
திருமறைமா முனிவர்முனி தேவர்கடந் தேவன்
சிவனருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன் கையிற்
பூநீர்கொர்ண் டோவாது போற்று மடியார்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன்
கழலிணைக ளெஞ்சிரத்திற் கருத்தில் வைப்பாம். (132)

(இ - பொ.) வேதங்கள் நான்கும், வேதாங்கம் ஆறும், ஆகமம் இருபத்தெட்டும் அறுபத்துநான்கு கலைஞான மாதியவும் உணர் அகத்தியற்குப் (பின்னொருகால்) ஓங்காரத்துட்பொருளை விவரிக்கக் காருணிய குமர குருவும், வைதிகமான முனிசிரேட்டர்களால் துதிக்கப்படுகிற தேவாதிதேவனும், சிவபெருமானுடைய செல்வப் புதல்வனும், தவசிகளுக்குப் பிரசன்னமான தெய்வமும், போர்முகத் தோடி யொளியாது கால் மாட்டே உயிரை விட்டு விடும் சுத்த வீரரின் வீராதி வீரரும், கையில் மலரும் நீருங்கொண்டு இடைவிடாது பூசிக்கும் அன்பர்களின் பிறவியினி மறுமைக்கில்லா வண்ணங் கிருபை கூர்ந்து நற்கதி தருகிற கந்தசாமியுமான கடவுளின் திருவடியிணைகளை நம் சிரத்திலும் உள்ளன்பிலும்

வைத்துத் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) ஓத்து = ஓங்காரத்து, வேதம்.
குருளை = இளமை.
பொரு மறையார் = (போரில் ஒளியாதவர்) எதிர் நின்று சமராடுபவர்.
கழல்வீரர் = வீரத்தைக் காட்டும் அணியாகிய கழலைக் காலில் அணிந்த வீரர்.
ஓவாது = இடைவிடாது.
கரு = பிறவி.

வடகயிலாய சிவ பெருமானுக்கு ஓங்காரத்துட் பொருளை விவரித்தது போல், தட்சிண கயிலாய அகத்தியர்க்கும் முருகன் உபதேசித்தார் என்பதாகும்.

106. சிவப்பிரகாசம்

905. வளநிலவு குலவமர ரதிபதியாய் நீல
மயிலேறி வருமீச னருண்ஞான மதலை
யளவில்பல கலையங்க மாரணங்க ளுணர்ந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்விற லண்ணா
வுளமருவு சூரனுர மெமதிடும்பை யோங்க
லொன்றிரண்டு கூறுபட வொளிதிகழ் வேலுகந்த
களபமலி குறமகடன் மணிமுலைகள் கலந்தகந்தன்
மலரடி யிணைகள் சிந்தை செய்வாம். (133)

(இ - பொ.) சுகம் நிறைந்த தேவர் குலத்துக்கு அதிபதியாய், நீலக்கலாப மயில் மீதில் ஏறிவருகிற (சிவபெருமானருள்) ஞானக்குழந்தையும், வேத வேதாங்கங்கள், கலைஞானங்கள் பல அளவின்றி யுணர்ந்த அகத்தியர்க்கு ஓங்காரத்துட் பொருளை உபதேசித்த குமரகுருவும், பிறருடைய வலிமையை ஒரு பொருளாக எண்ணாத ஊக்கத்தையுடைய சூரபதுமன் மார்பும், எமது பிறவித் துன்பமும், கிரவுஞ்சகிரியும் ஆகிய இவை மூன்றும் இரு கூறும்படி ஒளிவிளங்கிய வேலை விரும்பிச் செலுத்திய, கலவைச் சாந்தணி குலமகளாகிய வள்ளியின் அழகிய தன பாரங்களைக் கூடியருளினவருமான முருகக் கடவுளின் செந்தாமரையடி யிணைகளைச் சிந்திப்பாம். (எ - று.)

(அ - ப.) நீலம் = நீலக்கலாபம்.
ஓத்து = ஓங்காரத்து.
விறல் = வலிமை.
ஓங்கல் = கிரவுஞ்சமலை.
உகந்த = விரும்பிய.
மணி = அழகிய.

107. பரமத திமிரபானு

906. அமரர்க் கபயகர மன்றளித்த வென்றிக்
குமரற் காணுமென் குறை. (134)

(இ - பொ.) இந்திராதி தேவர்களுக்கு முன்னொருநாள் அபயகரங் கொடுத்து இரட்சித்த வெற்றி (வேல்) குமாரசாமிக்கு (அன்பராகிய நாமெல்லா ரும்) ஆளாகையினால் இனி நமக்கென்ன குறை (ஒன்றுமில்லை.) (எ - று.)

(அ - ப.) வென்றி = வெற்றிவேல்.
குமரற்கு = குமரனுக்கு.
ஆணும் = ஆள் + நாம்
நாம் என்கு உறை = நாம் யாரென்றால் ...... குமரன் காண் என்பதூஉம் ஓர் பக்குவிக்கு.
என்குறை = அடியேன் குறைபாடான தரித்திர மெல்லாம்
ஆணும் = தடுத்தல் ஆணையாம்.

108. தேவாங்க புராணம்

907. பனிப்பவனி யுறப்படரு மவுணரெனு
மிருளறக் கோபதியைச் சூழ்ந்த
துனிப்பனியு மருட்குளிரு மொளிப்பவினை
மாயைமுக சோமன் மட்கக்
கனிப்பவள விதழ்ச்சசிதன் னிதயபங்கே
ருகமலர்க் கதிர்வாய் செவ்வேற்
றனிப்பருதி யனுப்பு மின்பத
தடங்கடல் சார்ந்தாகந் தீர்வாம். (135)

(இ - பொ.) பூமியிலுள்ள மக்கள் உடல் நடுக்கமடைய, அவர் மேற் செல்லாநின்ற அசுரரென்கிற இருளானது நீங்கவும், இந்திரனைச் சுற்றிய துன்பமாகிய அச்சமும், மயக்கமாகிய மாயையும் மறையவும், போரையும் வஞ்சத்தையும் தன்கண் கொண்டுள்ள கிரவுஞ்ச மலையானது ஒளி கெடவும், கொவ்வைக் கனியையும் பவழத்தையும் ஒத்த சிவந்த இதழையுடைய இந்திராணியினது மனமாகிய தாமரை மலரவும், ஒளி பொருந்திய சிவந்த வேலாகிய ஒப்பில்லாத சூரியனை விட்டருளிய, இன்பப் பெருங்கடலாகிய முருகனை யடைந்து பிறவியை ஒழிப்பாம். (எ – று.)

(அ-ப.) கோபதி = இந்திரன்.
பங்கேருகம் = தாமரை மலர்.

109. சைவசமயநெறி

908. அமரரிடர் தீர்த்தே யவர்க்கருளும் வென்றிக்
குமரனடி சிந்திப்பாங் கூர்ந்து. (136)

(இ - பொ.) (அசுரர்களால் துன்பப்பட்ட) தேவர்களின் சிறை மீட்டு, அவர்கட்குப் பொன்னாட்டையுதவி யருளும் வெற்றிவேலுடைக் குமாரசாமியின் திருவடிகளைக் கைகூப்பிப் பத்தியுடன் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) வென்றி = வேல் மேற்று.
சூர்ந்து = (மிகுந்து) பக்தியோடு.

110. சங்கற்ப நிராகரணம்

909. என்னிருளை நீக்கு மிமையோர்க் கிடர்கடியும்
பன்னிருதோட் பாலன் பதம். (137)

(இ - பொ.) (இந்திராதி) தேவர்களின் துன்பத்தைப் போக்கி இரட்சிக்கும் பன்னிரு கரங்களுடைய ஆறுமுகக் கடவுளின் பாத தரிசனம் அடியேனுடைய மூலவிருண்மலத்தைப் போக்கும். (எ - று.)

(அ - ப.) இருள் = மூலமலம்.
கடியும் = நீக்கும்.
பாலன் = பாலசுப்ரமணியன்.

குறிப்பு:—இச் செய்யுள் சைவ சித்தாந்த நூல்களுள் ஒன்றாகிய சங்கற்ப நிராகரணம் என்னும் நூலில் இல்லை. இப்பெயருடைய வேறு நூல் இருந்தாலுமிருக்கலாம்.

111. உருத்திராக்க விசிட்டம்

910. வதைத்துத் தயித்தியரை வானோர் துயரைச்
சிதைத்தவர்க்கு விண்ணளித்த தேவன்—மதர்த்தவிழி
வள்ளிமண வாளன்மலர்த் தாளிணை பணிவாம்
விள்ள வினையாம் விடக்கு. (138)

(இ - பொ.) (சூரபதுமனாதி) அசுரர்களை வதைத்துக் கொன்று, (இந்திராதி) தேவர்களின் துயரத்தைப் போக்கி, அவர்கட்குச் சுவர்க்காதிபத்தியங் கொடுத்து இரட்சித்த மகாதேவனும், கண்ணுக்கழகான வள்ளி மணவாளனுமாம் சிவசண்முகக் கடவுளின் மலரடிகளை, நமது வினைக்கீடான தேகம் விட்டொழியும்படியாகப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) தயித்தியர் = அசுரர்.
மதர்த்த = அழகிய.
விள்ள = விட்டொழிய.
விடக்கு = ஊன் (சரீரம்)

112. பதிபசுபாச விளக்கம்

911. அறுவிதச் சமயத் தோர்க்கு மறுமுகச் சாமி யாகிச்
செறிபரப் பிரமம் யாமே யென்றுசின் மயிலி லேறிக்
குறுமுனிக் கருளிச் சீவக் குகைதொறும் வீற்றி ருந்த
மறுவிலாக் குகனைப் போற்றி மாய்த்தனன் பிறவி யெல்லாம். (139)

(இ - பொ.) (சைவமுதலான) அறுவகைச் சமயத்தார்க்கும் ஆறு முகக் கடவுளாய், சிறியதோர் மயில் வாகனத்தின் மேலேறி வந்து எங்கும் நிறைந்த பரப் பிரம்ம வஸ்து யாம்தாமே யென்ன அகத்திய முனிவருக்கு உணர்த்தி, ஆன்மாக்களின் உள்ளமாம் குகைகள் தோறும் வீற்றிருந்து வருகிற மாசிலாமணிக் கடவுளைத் துதி செய்தே என் பிறவியாகிய துன்பங்களை யெல்லாம் பற்றற வொழித்துக் கொண்டேன். (எ - று.)

(அ - ப.) சின் =சின்மை (சின்ன).

---

113. மகாராஜா துறவு

912. கடிகமழ் கரிய கூந்தற் கனிமொழித் துவர்வாய்த் தெய்வப்
பிடிதனக் கோட்டால் வள்ளிப் பெண்கொடி படருஞ் செய்ய
படிபுகழ் புயமாங் குன்றிற் பாயவண் கழுநீர் நீப
மடலவிழ் செழுந்தார்ச் செவ்வேண் மலரடி வணக்கஞ் செய்வாம். (140)

(இ-பொ.) பரிமளமான கருங்குழல் மணமும், கனிமதுர மொழியும், செந்துவர் வாயுமுடைய தெய்வயானையின் தன மென் கொம்பரால் வள்ளி யென்னும் பெண்கொடி படர்ந்தோடும் புகழ்வாய்ந்த புயாசலத்தின் மேல் செங்கழு நீர்ப்பூவொடு கடப்ப மலர் மாலையணிந்த சிவ சுப்ரமணியக் கடவுளின் திருவடி மலர்களை வணங்குவாம். (எ – று.)

(அ - ப.) கடிகமழ் =மணங்கமழ்.
தெய்வப்பிடி =தெய்வயானை.
கோடு =கொம்பர்.
கழுநீர் =செங்கழுநீர்.
நீபம் = கடப்ப மலர்.
மடலவிழ் =மலர்ந்த.
செழுந்தார் =பத்திமாலை.
தெய்வப்பிடி தனக்கு =தெய்வயானையைப் பார்க்கிலும்.
ஓட்டால் = அதிகமாக ஓடவல்ல. (வள்ளிக்கொடி என்பாருமுளர்)

---

114. பஞ்சாதிகார விளக்கம்

913. கனகடலின் முடிமீதிற் சுடரவிடுஞா யிறுபோற்
கடிநீலக் கலபமயிற் றுரகமிசைத் தோன்றி
வனசரர்தந் தருண்மானுங் கடவுளர்கோ னுதவு
மாதவயா னையுமிருபான் மன்னுற வெந்நாளு
நினையடியார் பவநோயிற் சாராமற் காத்து
நிறைசுக பூரணவாரி குறைவற வேயுதவும்
புனைமலர்நீ பத்தொடையா னூபுரமா முளரிப்
பொன்னடிநஞ் சென்னியிலும் புந்தியிலும் வைப்பாம். (141)

(இ - பொ.) வன வேடராகிய குறவர்கள் கொடுத்த வள்ளியம்மனும் தேவேந்திரன் கொடுத்த தெய்வயானையும் (ஆக இருவரும்) இரண்டு பக்கத்திலும்

இருக்க, ஒலிக்கின்ற கடலின் கிழக்குத் திக்கில் உதயமாஞ் சூரியனைப் போல், பச்சைக் கலாப மயில் மேல், மனம்போல் தரிசனை தந்து எந்நாளும் தன்னைத் தியானிக்கும் அன்பர்கள் பிறவிப்பிணியடையாமல் காப்பாற்றி (அவர்கட்கு)ப் பரிபூரண சுத்தானந்தக் கடலைத் தாராள்மாகத் தந்தருள் கடப்ப மலர் மாலையணுகிய சிவசண்முக சுந்தரக் கடவுளின் சிலம்பணி பொற்பாத கமலங்களை நம் சிரத்திலும் உள்ளன்பிலும் வைத்துப் பூசிப்பாம். (எ - று.)

(அ-ப.) முடிமீதில் = கிழக்கில்.
கலபம் = கலாபமயில்.
துரகம் = மனம்.
வனசரர் = வனவேடர்.
கடவுளர்கோன் = தேவேந்திரன்.
மாதவயானை = தெய்வயானை.
பவநோய் = பிறவிப்பிணி.
நிறைபூரணம் = பரிபூரணம்.
குறைவற = நிரம்ப.
நூபுரம் = சதங்கை.
முளரி = தாமரை.

115. வைராக்கிய சதக உரைக் காப்பு

914. சமர புரிக்குகன் விமல மலர்த்தா
ளெமதுளம் வைக்குது முமல மறற்கே. (142)

(இ - பொ.) மல மாயா கன்மமாகிய மும்மலமும், வேரறுவதற்காகவே திருப்போரூர் (ஆண்டவனும்) முருகேசன்றன் பரிசுத்தமான பாதங்களை நம்முடைய உள்ளன்புள் வைத்து வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) சமரபுரி = போரூர்.
முமலம் = மும்மலம்.
அறற்கே = அறுவதற்கே.

116. வைராக்கிய தீப உரைக் காப்பு

915. போரூ ரிறைவன் சீரூர் தாளை
யேரூர் தரநினை நேரூர் நெஞ்சே. (143)

(இ - பொ.) என்னுடன் சமான மாயிருக்கும் நெஞ்சமே! நீ திருப்போரூர் ஆண்டவராம் முருகேசனுடைய திருவடித் தாமரைகளை முத்தி தரும்படியாகப் பிரார்த்தனை செய். (எ - று.)

(அ - ப.) போரூரிறைவன் = திருப்போரூர் ஆண்டவனாகிய முருகன்.
சீரூர் தாளை = திருவடிகளை.
ஏரூர் = முத்தி வீடு.
நேரூர் = சமானமான.

117. அவிரோதவுந்தியார் உரைக் காப்பு

916. உலகமெலா மீன்ற வொருத்திதனப் பாலுண்
டிலகு கவிதை மழையீச — னிலவு
புயமலைப்பாற் பெய்தசுகப் போரூர் வாழ்வானம்
புயமலர்த்தா ளென்முடிக்குப் போது. (144)

(இ - பொ.) சர்வாண்டங்களையும் படைத்த அகிலாண்ட நாயகியின் திருமுலைப்பாலுண்டு, சிவபெருமான்றன் புயாசலத்தின் மேல் (மாலையாய் விழும்படி) தேவாரமென்னும் பாமாரி பொழிந்த திருப்போரூர்—முருகேசன்றன் பதாம்புயங்களே அடியேன் தலைக்கு மலராகும். (எ - று.)

(அ-ப.) ஒருத்தி = பார்வதி.
பால் = மேல்.
அம்புயமலர்த்தாள் = பாதாம்புயம்.

118. நிஷ்டானுபூதி

917. கடல்சுவற நெடுமாயக் கிரிவிழச் சூரனுரங் கலங்கச் செம்பொன்
மடலவிழ்கற் பகநிழலில் வலாரியும்வந் தரசிருப்ப மகங்க ளோங்க
விடலரிய விபுதர்சிறை விடமுனிவர் செய்தவங் கண்மேலு மோங்க
வடல்கெழுவே லேவியவோ ராறுமுகனடி யிணையை யகத்துள் வைப்பாம்.(145)

(இ - பொ.) பிடிபட்டிருந்த தேவர்களின் சிறைவிடுபடவும் தேவேந்திரன் கற்பக நீழலில் வந்திருந்து அரசு நடத்தவும், மக முதலான ஓங்கி நடைபெறவும், முனிசிரேஷ்டர்கள் செய்யும் தவமுதலானவை மேன்மேலும் சித்தியாகவும், (எண்ணங்கொண்டு) கடல்வற்றிச் சுண்டவும், நெடிய கிரவுஞ்சகிரி இடிந்து விழவும், சூரபதுமனுடைய மார்பு பிளந்து கலங்கவுமாகக் கொல் கதிர் வேலை விட்ட ஆறுமுகக் கடவுளின் திருவடியிணைகளை நெஞ்சகத்துள் வைத்துப் பூசிப்பாம். (எ - று.)

(அ - ப.) சுவற = சுண்ட
வலாரி = இந்திரன்
விபுதர் = தேவர்
அடல்கெழு = கொல்லத்தக்க

119. சிவபுண்ணியத் தெளிவு

918. அந்தமா தியுமிலா வாண வத்தொடும்
பந்தமா னவைகெடப் பணிந்து போற்றுவாஞ்
சந்தமார் தடவரைத் தமிழ்க்க டற்கருள்
கந்தவேள் பூங்கழற் கமல பாதமே. (146)

(இ - பொ.) சந்தனுசலப் பொதியத்தின் தமிழ்க் கடலாகிய அகத்திய முனிவர்க்குப் பிரணவ மந்திர இரகசியத்தைக் காட்டியருள் கந்தசாமியின் பொற்பாத கமலங்கள் அனுதி ஆகையால், நாம் நமது ஆணவ மலத்தோடு சம்பந்தப்பட்ட மாயாகன்மங்கள் கெடும்படி அப்பொற்பாத கமலங்களைப் பணிந்து வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ப.) அந்தமாதியுமிலா = அனுதி
பந்தமானவை = மாயாகன்மம்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் பகுதி

தெய்வயானையம்மை, வள்ளியம்மை வணக்கம்

1. திருப்பரங்கிரிப் புராணம்

919. வார்கொண்ட கொங்கையெனுங் கோடுதன்னால்
வடிவேலர் பன்னிருதோள் வரையைப் பாய்ந்து
தார்கொண்ட கடம்பதனை யுழக்கி யோகத்
தண்பரவை படிந்திறைவர் தடங்கண் வண்டின்
போர்கொண்ட விழிக்கருணை மதத்தை யூற்றிப்
பொருபடையா யென்வினையைப் பொடித்து நாளும்
பார்கொண்ட பரங்கிரிவாழ் தெய்வ யானை
பதமலரை யிதயமலர் பதித்து வைப்பாம். (1)

(இ - பொ.) கச்சணிந்த தனங்களென்னுங் கொம்பினால் முருகப் பெருமானுடைய பன்னிரு தோள்களாகிய மலையினிடத்தே மோதி, கடப்ப மலர் மாலையைத் துவைத்து, சையோக மென்னும் குளிர்ந்த கடலில் மூழ்கி, இறைவர் கண்ணாகிய வண்டினிடம் போர்த்தொழில் பொருந்திய வேல் போன்ற கண்களிலிருந்துண்டாகும் அருள் என்னும் மதத்தைப் பொழிந்து, அவ்வருட்கண்ணையே படையாகக் கொண்டு எனது பழவினையை அழித்து, எப்போதும் திருப்பரங்குன்றத்தில் வாழும் தெய்வ யானைப் பிராட்டியாரின் பாத மலர்களை மனமாகிய மலரின் கண்ணே பதிய வைத்து வணங்குவாம். (எ - று.)

---

920. மணிகொண்ட மானிடத்து முளைத்து வேடர்
மனைபதிந்து பசுந்தழையாய் மருவுஞ் சோதி
யணிகொண்டு தழைந்தருளிக் கொழுகொம் பாகக்குமரன்
புயந்தழுவி வெள்ளி யசல மேறிக்
கணிகொண்ட புகழ்பூத்தென் வினையைக் காய்த்துக்
கவின்பழுத்துக் கண்டவர்க்குக் கருணை யூற்றிப்
பணிகொண்ட வள்ளியெனுங் கொடியென் னுள்ளப்
பங்கயத்தைச் சுற்றியிடப் பதித்து வாழ்வாம். (2)

(இ - பொ.) அழகிய மானினிடமாகத் தோன்றி, வேடர்மனையில் தங்கி, பசுந்தழையாகிய அணியினை அணிந்து செழிப்புடன் வளர்ந்து, கொழுகொம்பாக முருகப்பெருமான் புயத்தைத் தழுவிப் படர்ந்து வெள்ளிமலைமீதேறி, வேங்கை மர

வடிவாய் நின்ற அம்முருகனிடமாகப் புகழாகிய பூவைப் பூத்து, எனது தீவினையைச் சினந்து அழித்து அழகாகிய கனிபழுத்துத் தன்னைக் கண்டு வணங்கியவர்க்குக் கருணை பொழிந்து அடிமை கொண்ட வள்ளிநாயகியார் என்னுங்கொடி என் உளத்தாமரையைச் சுற்றியிருக்கும்படியாகச் சிந்தித்து வாழ்வாம். (எ - று.)

2. திருத்தணிகைப் புராணம்

921. இறைகதித்த சூர்முதலை யிறுப்பவர னேயிளையோ னான வாற்றான்
முறைகதித்த விருசுடரே முகத்துவிழி யெனத்தெரிக்கு முறைமை யேய்ப்ப
நறைகதித்த மலர்க்கழுநீர் நளினமவன் விழியருகு நலக்க வேந்தி
நிறைகதித்த வுளத்தொடிடம் வலமமர்ந்த மாதர்பத நினைத்தல் செய்வாம். (3)

(இ – பொ.) இந்திரனைச் சினந்து வருத்திவந்த சூரபதுமன் முதலாய அசுரர் கூட்டத்தை அழிக்கச் சிவபெருமானே முருகப் பெருமானாக அவதரித்த தன்மையாலே, அச்சிவபெருமான் முகத்தில் விளங்கும்படியான சூரிய சந்திரர்களான இருசுடரே முருகப் பெருமானுடைய திருமுகத்து இருவிழியாகுமெனத் தெரிவிக்குமுறைமை யொப்பத் தேன்றுளிக்கும் கழுநீர் மலரையும் தாமரை மலரையும் அம்முருகன் விழிகட்கருகே நலஞ் சிறக்க ஏந்திக் கொண்டு கற்புமேம்பட்ட உள்ளத்தோடு இடப்பக்கமும் வலப்பக்கமும் அமர்ந்துள்ள தெய்வயானைப் பிராட்டியார், வள்ளியம்மையார் திருவடிகளை நினைந்து வழிபடுவாம். (எ - று.)

3. திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

922. சங்கரிதன் மருமகளைச் சங்கரிதன் மகளைச்
சங்கரிக்குஞ் சங்கரனை மாமனெனுந் தயலை
வெங்கரிதந் திடுபிடியை விண்ணவர்கோன் சுதையை
விண்ணவர்கள் பணிந்தேத்தும் விண்ணுலகத் தணங்கைப்
பைங்கழுநீர் விழியாளைப் பைங்கழுநீர் நிறமே
படைத்தாளைப் பைங்கழுநீர் செங்கரங் கொண்டாளைச்
செங்கமலை தருமமுதைக் கந்தரிடத் தமருந்தெய்வ
யானையைத் தொழுது திருவருள் பெற்றிடுவாம். (4)

(இ - பொ.) சங்கமேந்தியாகிய மகாவிஷ்ணுவின் குமாரத்தியாய், செங்கமலத் துற்பவியாகிய இலட்சுமிதேவி பெற்ற மகளாய், வெள்ளையானையான ஐராவதம் கொணர்ந்து காத்த பெண்ணாய், தேவேந்திரன் வளர்ப்பு மகளாய், தேவர்கள் வணங்கிப் போற்றும் சுவர்க்கலோகக் கன்னிகையாய், குவளைக் கண்ணினளாய், செங்கழுநீர் நிறை மேனியளாய், செங்கழுநீர் மலரைக்கொண்ட கரத்தளாய் சங்கரியை மாமியென்னும் மருமகளாய், (சம்மரிக்கின்ற) சங்கரனை மாமாவென்னுந்தையலாய் விளங்கி, கந்தசாமிக் கடவுளிடத்தமர் மனையாட்டியான தெய்வயானையைப் பணிந்து திருவருள் துணையைப் பெறுவாம். (எ - று.)

(அ-ப.) சங்கரி = சங்கு உடைய அரி, திருமால்
தயலை = தையல்
வெங்கரி = வெண்கரி (வெள்ளை யானை)

பிடி = பெண் (யானை)
சுதை = சுதனுக்குப் பெண்பால்
பைங்கழுநீர் = குவளை, ஆம்பல், கழு நீர்ப்பூ
செங்கமலை = இலக்குமி
அமுது = அமுதுக்குச் சமானமான பெண்ணுகிய தெய்வயானை

923. மாதவனேர் மாதவனுய் மாதவஞ் செய்திடலும்
வனமானுய் வந்தெதிர்ந்த மலர்மானைப் புணரப்
பூதலமங் கையருருவா யவதரித்து வள்ளிப்
பொருப்புறையும் பொருப்பர்மனை விருப்பமுடன் வளர்ந்து
தீதகலுந் தினைகாத்து வேங்கையுரு வெடுத்த
செவ்வேளை யவ்வேளைச் சேர்ந்திரு கைக்கோளுங்
காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமருங்
கன்னியெனும் வள்ளிகழ லுன்னிவழுத் திடுவாம். (5)

(இ - பொ.) மகாவிஷ்ணுவின் தவப்புதல்வியாய், (சுப்ரமணியரை மணக்கத்) தவஞ் செய்யவே (அங்கோர் சிவ முனிவர் கட்டளைப்படி) வனமகிமையாய் வந்தெதிர்ப்பட்ட தோர் புள்ளிமான் வயிற்றை அடைந்து பூலோக பாலகியாய், வள்ளிக் குழியில் பிறந்தும், மலை வாசமாம் குறவர் குடியில் ஆசையாய் வளர்ந்து வந்தும், குணமுடைய தினைப்புனங்காத்திருந்தும், வேங்கை மரமாய் வேடங் கொண்ட குமரவேளை யப்போதே களவு, கற்பென்னும் இருவகையொழுக்கங் கொள்கையால் பேரின்பத்துட் சேர்ந்தணைந்தும் தலைவனுடைய வலப்பாகத் தெழுந்தருளியுள்ள கன்னிகையாம் வள்ளியம்மனின் திருவடிகளைத் தியானித்து வாழ்த்துவாம். (எ - று.)

(அ-ப.) மாதவன் = மகாவிஷ்ணு
வனமான் = வனமான்மியம்
மலர்மான் = புள்ளிமான்
வள்ளி = வள்ளிக்குழி
அவ்வேளை = அப்போதே
கைக்கோள் = கைக்கிளை (ஒருதலைக் காமம்)
மாது = மகள்
அவ்னுய் = அச்சுப்ரமணியன் ஞாபகமாய் மாதவஞ் செய்திடலும் என விளக்குவாருமுண்டு.

4. மயூராசலப் புராணம்

924. கானமுறுங் கலைமகள்செங் கமலமகண் முதன்மகளிர் கருதிப் போற்று
ஞானமகட் கொருபாகந் தருதேக னெங்களைய னுளும் வாழ்த்து
மானமரு மகள்சித்தன் மகளெனச்சொன் மாட்சிதரு மகணுற் கோட்டின்
யானைமக ளிந்திரனுக் கரியமகண் மருமலர்த்தாட் கன்பு செய்வாம். (6)

(இ - பொ.) (சங்கீத சாகித்திய) ஞானமுள்ள சரஸ்வதி, செங்கமலோற்பவியாகிய இலக்குமி முதலான தேவமாதர் கவனமாகத்துதிக்கும் ஞானப் பூங்கோதையாம் பார்வதிக்கு ஓர் இடப்பாகங் கொடுக்கும் நமது சிவபெருமான் எந்நாளுமே வாழ்த்தி வருகிற மருமகளும், மன்மதனுடைய அக்காளெனச் சொல்வதற்கிணங்க (குமரவேளுக்குச்) சுகபோக மாட்சிமையருளும் மணமகளும், நான் மருப்புகளுடைய யானையான ஐராவதத்தின் முதல் வளர்ப்பு மகளும், தேவேந்திரனுக்கு இரண்டாவது வளர்ப்பு மகளுமான தெய்வயானையின் பாதபங்கயங்கட்கு அன்பு பூண் டொழுகுவாம். (எ - று.)

(அ - ப.) சித்தன்மகள் = சித்தசன் அக்காள்.

925. புள்ளிமயில் வருபாக னிமயவரை மயிலுதவும் புதல்வன் சூரை
யள்ளியயி லெனவயிலுக் கருளினோ னாறுமுகத் தம்மான் வேண்டத்
தெள்ளியயி லெனவிடியைத் தந்தவனுக் குவகையருள் சிறப்பி னானை
வள்ளிமயி லைப்பணிந்து கள்ளமயலைத் தணந்து வாழ்கு வாமே. (7)

(இ - பொ.) புள்ளிமயில் மேல் வரப்பட்ட (தெய்வ) யானைப்பாகனும், இமாசலத்துக் குலமகளாம் பார்வதியருள் தனயனும், சூரபதுமாதியசுரர்களின் (இரத்தத்தை) யள்ளி யுண்ணென வேலாயுதத்துக் கிரையாக்கினவனுமான ஆறுமுக மாமன் தன்னை வேண்டவும், தான் உடனே தினைமா விடியைக் கொடுத்துத் தெள்ளியுண்ணுமென, குமரன் உண்ண, உள்ளன்பு மிக்குப் பேரின்பமருள் சிமாட்டியாம் வள்ளியம்மனைப் பணிந்து நமது கள்ளத்தனமான பிறவி நீங்கி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) பாகன் = (தெய்வ) யானைப்பாகன்.
இமயவரைமயில் = பார்வதி
அம்மான் = மாமன்
அயில் = உண்
இடி = தினையிடிமா

926. ஐவராயரு நிறையண்ணல்… … … … …
லுய்வ தாகவோர் பன்னிரு புயத்தினு முழக்கித்
தைவம் பாரிரு கொங்கைமால் யானைக டணக்குந்
தெய்வ யானை பொற்றாண்மலர் சென்னிமேற் சேர்ப்பாம். (8)

(இ – பொ.) பிரம்மாதி கடவுளராய்ப் பஞ்சகிருத்தியங்களுந் (தானொருவனே) நடத்தும் ஆறுமுகற் கடவுளும், முழுமுதற் கடவுளையே அடங்காப் பேரின்பத்துள் ஆழ்த்துவிப்பதற்காக, அவன்றன் பன்னிரு புயாசலத்தினும் புரண்டுருள் யானைகளன்ன (கச்சணிந்த) இரண்டு கும்பத்தனங்களுடைய தெய்வ யானையின் பொற்பாத கமலங்களைச் சிரமேல் முடிப்பாம். (எ – று.)

(அ - ப.) ஐவர் = கிருத்தியகர்த்தர்
நிறையண்ணல் = முழுமுதற் கடவுள்
உய்வதாக = வாழ்வதற்காக
உழக்கி = புரட்டியுருட்டி
தைவம்பு = தைத்த கச்சு
தணக்கும் = அன்ன (விலங்கும்)

குறிப்பு:- மயூராசலப் புராணம் வரவழைத்துப் பார்க்கக் காலமின்மையால் சிதைந்துள்ள முதலடியைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

927. விள்ளுநறுந் துணர்கொழுதி யஞ்சிறைய சுரும்பரிசை விழைந்து பாடுங்
கள்ளவிழு மலர்க்கூந்தற் குவளைவிழிப் பவளவிதழ்க் கதித்து மீறித்
தள்ளரிய வடம்புனைந்து குரும்பையெனத் ததும்பி மிகத்தடித் தண்ணுந்த
வள்ளமுலைத் திருவழகி வள்ளிமலர்ப் பாடகத்தாள் வணக்கஞ் செய்வாம். (9)

(இ - பொ.) கோதிய பூங்கொத்து மணத்துடன் மலர்ந்ததும், அழகிய சிறகுகளுடைய வண்டினங்கள் கூடிக் கீதம் பாடத்தகுந் தேன் நிறைந்தொழுகு கூந்தலும், குவளை போன்ற கண்ணும், பவளவாயிதழும் பொருந்திய மணிவடம் பூண்டஅழகு சுந்தரியும், தள்ளற் கருமையாய்ப் பருத்து மிகுந்து தென்னம் பிஞ்சு போல் விம்மிப் பருத்து மேல் நோக்கும் கிண்ணம் போன்ற முலைகளையுடைய வள்ளி நாயகியின் பாடக மணிந்த பாதாம்புயங்களை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) விள்ள = மலர
நறுந்துணர் = மணமுள்ள பூங்கொத்து.
கொழுதி = கோதி
சுரும்பர் = வண்டு
இசை = கீதம்
விழைந்து = கூடி
கள் அவிழும் = தேன் நிறை
கதித்து = பகுக்கப்பட்டு
வடம் = மணிவடம்
குரும்பை = தென்னம்பிஞ்சு
அண்ணுந்த = மேல் நோக்கிய
வள்ளம் = கிண்ணம், வளமுமாம்

---

5. பழனிப் புராணம்

928. பழுதிலறு தொழின்மறையோர் துதிக்கையுந் தானமும்
படைத்துப் பருமந் தாங்கிச்
செழுமணிப்பூ ணிழைத்த முலைத்துணை மருப்பும்
பூணுதலுந் திருவி னேங்கிக்
கொழுமலர்க்கூ தளந்தொடுத்த கண்ணி யும்பூங்
கடம்பு நறுங்குரவும் வேய்ந்த
வெழிறரும்பா கனுக்குவகை யுதவுதெய்வ
யானைபத மிதயஞ் சேர்ப்பாம். (10)

(இ - பொ.) குற்றமில்லாத ஓதலாதியறுதொழிலாளராம் வேதியர்களால் தொழப்பட்ட தகுதியுடைய மாங்கல்ய தாரணமணிந்து, பருத்தழுந்திய இணைமுலைக் கொம்பரும், (தாயாரான) இலக்குமியைப் பார்க்கிலும் அதிகமான ஆபரணம் பூண்டவளும், தூதுளைமலர் போன்ற கண்ணுடையவளும், கடப்பமலர் மாலையணிந்த சண்முகசுந்தரனும் பாகனுக்குப் பேரின்பக்காதலை எழுப்புபவளுமான தெய்வயானையின் பாதங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப) அறுதொழில் = ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல்.
துதிக்கையும் = துதிக்கத்தக்க
பருமம் = பருமன் (போலி)
கெழுமணிப்பூண் = பொற்றாலி
பூணுதல் = அணிதல், பூணல்
கூதளம் = தூதுளை
உவகை = மகிழ்ச்சி
தானம் = கன்னிகாதானத்துக்கும்
செழுமணிப்பூண் = செம்பவள மாலை என உரைக்கும் உரையாசிரியரு முளர்.

929. கண்ணகன்மா விரும்புவியி வின்றோர்
புதிதென்ன வுமுட்கவன்று வேடர்
துண்ணெனமு விருமுகமு மேனையவும்
படைகளுந் தோன்றாமற் றோன்றிப்
பண்ணவர்கண் கவரவளர் வேங்கைகொழு
கொம்பரெனப் படர்ந்து பற்றுந்
தண்ணமலர் பொதுள்வள்ளிப் பசுங்கொடிச்செந்
தளிரடிகள் சரண்புக் கேமால். (11)

(இ - பொ.) அகன்று விசாலித்த பெரிய இப்பூலோகத்தின்கண் இன்றைக்கு (என்னவோ) புதுமையாயிருக்கிறதென்று வேடர் குலமெல்லாந் திடீரென ஆச்சரியப்படும்படி ஆறுமுகத்தையும், பன்னிரு கரங்களையும் வேலாதியாயுதங்களையும், கோழிக் கொடியையும், மயில் வாகனத்தையும், தெய்வ யானையையும் காட்டாமல் தனியாகப் புறப்பட்டு வந்து, தேவர்களால் மறைக்கப்பட்ட வேங்கை மரமாம் சுப்பிரமணியக் கடவுளையோர் செழுங்கொம்பென்ன படர்ந்தோடிப் பற்றியேறும் பனிமலர் நிறைந்த பசுங்கொடியாம் வள்ளியின் செஞ்சரண் துளிர்களைச் சரணஞ் செய்வாம். (எ - று.)

(அ - ப.) மா இரும்புவி = பிரம்மாண்டம், பேருலகம்
புதிது = புதுமை
உள்கவன்று = அதிசயித்து
துண்ணென = திடீரென
பொதுள் = செழி
ஏனையவும் = மற்றவும்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதின்மூன்றும் பகுதி

திருநந்தி தேவர் வணக்கம்

1. கந்த புராணம்

930. ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம். (1)

(இ - பொ.) பத்துப் புராணங்களைச் சிவபிரானுக்குக் கூறியும், செப்பமாகிய பல வேதங்களை உணர்ந்திருந்தும், அஞ்ஞான மயக்கத்தாற் பொய்ச் சபதங்கூறிய வியாச முனிவர் ஆகாயத்திற்றூக்கிய கரத்தைத் தம்பிக்கச் செய்தருளிய நந்தியம் பெருமானது திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ-ப.) மெய்யறுசூள் = பொய்ச்சபதம்.

பத்துப் புராணமாவன:- சைவம், பௌடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரம்மாண்டம்.

குறிப்பு:- வியாச முனிவர் காசியிலே விசுவநாதர் சந்நிதியிலே இரண்டு கைகளையும் உயர்த்தி நின்று விட்டுணுவே பரப்பிரமம் என்று சொல்லிய போது, திருநந்திதேவர் சினங்கொண்டு அக்கைகள் எடுத்த வண்ணமே அசைவற நிற்கும்படி சபித்தருளினர் என்னும் வரலாறு இச்செய்யுளிற் குறிக்கப்பெற்றது காண்க.

2. தீருவிளையாடற் புராணம்

931. வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற் றாக்கி
யந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பை யாக்கு
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம். (2)

(இ - பொ.) திருக்கயிலாயகிரியில் வந்து சிவபெருமானுடைய திருவடியில் வணங்குகின்ற (திருமால் முதலிய) கணக்கில்லாத தேவர்களது கிரீடங்களிற் பதித்துள்ள வரிசையிலிருந்து இரத்தினங்கள் சிந்தும்படி பிரம்மாயுதத்தினாலடித்து, அந்திக்காலத்திலும், பகற்காலத்திலும், அடியார்கள் திருவலகிடுங் குப்பையாகச் செய்யுந் திருநந்தி தேவராகிய எம்பெருமானது திருவடியாகிய தாமரை மலரைச் சிரமேற் கொள்வாம். (எ-று.)

(அ-ப.) வேத்திரம் = பிரம்பு.

3. சிதம்பர புராணம்

932. புரிசடையெம் பரனருளாற் சடைமுடியு
நுதல்விழியும் புயங்க ணான்குஞ்
சுரிகைபிரம் புழைமழுவும் படைத்துரிய
கணாதிபர்க டொழுது போற்ற
வரியபர மானந்த சிவஞான
போதமெனு மருநூ றன்னைத்
தெரியவிரித் தருணந்தி தேவன ரு
ணிணைந்து வினைதீர்து மன்றே. (3)

(இ - பொ.) முறுக்குப் பொருந்திய சடையையுடைய எமது சிவபெருமானது திருவருளால், சடை முடியையும், நெற்றிக் கண்ணையும், நான்கு புயங்களையும், உடைவாளும், பிரம்பும், மானும், மழுவுமாகிய இவைகளையுந் தரிக்கப் பெற்ற சிவபெருமானிடத் துரிமை பூண்டொழுகுகின்ற கணநாதர்கள், வணங்கித் துதிக்க அடைதற்கரிய சிவானந்தத்தைத் தரத்தக்கதாகிய சிவஞான போதம் என்னும் அருமையாகிய சாத்திரத்தைச் சனகர் முதலிய முனிவர்களுக்குத் தெரிய விரித்து உபதேசித்தருளிய திருநந்தி தேவருடைய திருவருளைத் தியானித்து, இருவினைகளினின்று நீங்குவாம். (எ-று.)

(அ-ப.) நுதல் = நெற்றி
உழை = மான்.
சுரிகை = உடைவாள்.

4. சேது புராணம்

933. போதனுறை மலர்முகிழா தமரர் கோமான்
புரநிலைமை குலையாது மருது போழ்ந்த
பாதனுறை கடல்சுருங்கா தரிணஞ்சூ ரல்படை
மழுவாண் சுரிகைகரம் பரித்துப் பாந்தட்
காதனுறை சிதறுபுனற் கங்கைசூடுங் கண்ணுத
லெம்பரன் மதியுங் கதியு நல்கு
நாதனுறை திருக்கயிலை காவல் பூண்ட
நந்தியைநம் புந்தியின்க ணயந்து வாழ்வாம். (4)

(இ - பொ.) பிரமன் தங்கி வாழும் தாமரை மலர் கூம்பாமலும், தேவேந்திர லோகம் நிலை குலையாமலும், மருதமரத்தை உதைத்து முறித்துப் பிளந்த திருமால் தங்கியுள்ள கடல் வற்றாமலும் இருக்க, பொற்பிரம்பும் மழுப்படையும் உடைவாளும் கையில் தாங்கி, பாம்புக்காதன் சிதறிய கங்கையைச் சடையில் வைத்த நெற்றிக்கண்ணையுடைய எம்பரம் பொருளாம், நமக்கு நல்லறிவும் நற்கதியும் அளிக்கும் சிவபெருமான் அமர்ந்திருக்கும் திருக்கயிலையில் காவல் பூண்டொழுகும் நந்தியெம்பெருமானை நம்மனத்தின்கண் விருப்புடன் நினைந்து வாழ்வாம். (எ-று.)

5. திருவாரூர்ப் புராணம்

934. இருள்கெழு மணிமிடற் றிளநி லாமுடி
யொருவனே கடவுளென் றுலகந் தேறுவான்
விரிதரு முதுமறை வியாத மாமுனி
கரமலர் கொய்ததோர் கடவுட் போற்றுவாம். (5)

(இ - பொ.) சடாமுடியில் பாலசந்திரனை யணிந்த நீலகண்ட பரமசிவன் ஒருவனே கடவுளென்று உலகமெலாம் அறியும் பொருட்டுப் புகழ்பெற்ற வேதவியாச முனியின் மலர்க்கையைக் கண்டித்த நந்தியெம் பெருமானைப் போற்றுவாம். (எ-று.)

(அ-ப.) மறைவியாதன் = வேதவியாசன்.
கொய்தல் = சுருக்கல்.

---

6. மச்ச புராணம்

935. விரிந்தகொடு முடிதாங்கி விண்ணுலகு
மெண்டிசையும் விளக்க வெண்மை
புரிந்துயர்ந்த திண்கயிலைப் பொருப்பிடத்திற்
பச்சைமயில் பொருந்தும் பாகம்
பரிந்துசெழுங் கதிர்பரப்பும் பவளநிறக்
கருமிடற்றெம் பரமன் வேலை
தெரிந்தமரர்க் கருள்புரியு நந்தீசர்
பாதமலர் சென்னி சேர்ப்பாம். (6)

(இ - பொ.) விரிந்த ஆகாயம் வரைக்கும் எட்டி எட்டுத்திக்கும் விளங்க வெண்ணிறங் கொண்டுயர் திருக்கயிலாசத்தில் பச்சை மாமயி லணங்காகிய பார்வதியம்மனைக் கூடியிருக்கும் வாமபாகத்தில் செங்கதிர்ப் பிரகாசம் போன்ற பவளத்தின் வண்ணராம் நீலகண்ட பரமசிவத்தின் சமய மறிந்து, தேவர்களையுட் செல்லக் கட்டளையிடும் நந்திகேசுவரரின் பாதாம்புயங்களைச் சிரஞ் சூடுவாம். (எ-று.)

(அ-ப.) கொடுமுடி = உச்சி.
கருமிடறு = நீலகண்டம்.
வேலை = சமயோசிதம் *

பனிச் சாரலாலும், மேகங்களாலும், அருவிகள் ஓட்டத்தாலும், வெண்ணிறமே காணப்படல்.

பரம்பொருள் இட்ட குற்றேவல்படியே தேவர்கட்கு அருள்பவன் நந்தி என்பதும் படும்.

பரமசிவன் செயல் தமக்குத் தெரிந்த மட்டில் தேவர்க்கருள்பவர் நந்தி எனினும் தகும்.

* சமயோசிதம் 4. = காலம், இடம், பொருள், ஏவல்.

7. திருக்கூவப் புராணம்

936. பாக்கு லங்கள் பழிச்சுமை நெஞ்சமும்
வாக்கு மங்கை வடிவு நிகர்த்தொளி
தேக்கும் வெள்ளிச் சிலம்புட னெம்மையுங்
காக்கு நந்தி கழறெழு தேத்துவாம். (7)

(இ - பொ.) நால்வகையான பாக்களாலும், பாவினங்களாலும் போற்றற்குரிய தூய உமையின் மனத்தையும், படிகம் போன்ற சரஸ்வதி தேவியின் திருமேனியையும் ஒத்த ஒளிமிகுந்த வெள்ளியங்கிரியோடு அடியேமாகிய எம்மையும் காப்பாற்றி வரும் நந்தியெம் பெருமானுடைய திருவடிகளை வணங்கி வாழ்த்துவாம். (எ - று.)

(அ-ப.) பாக்குலம் = வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலி என்னும் நால்வகைப்பாவும், துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்களுமாம்.
பழிச்சும் = வாழ்த்தி வர்ணிக்கும்.
வாக்குமங்கை = வாணி.
வெள்ளிச்சிலம்பு = வெள்ளியங்கிரி, கயிலைமலை
வெள்ளிச் சிலம்பு என்பதனுல் வரும் பெருமை நோக்கின்,
பாக்குலங்கள் = பாவாணர்கள்.
பழிச்சும் = பாடவும்.

நெஞ்சம் எதன்மேல் நிற்கும்?–வெள்ளி.
சரசுவதி யழகு எந்த ஞாபகந்தரும்—(கால்) சிலம்பு.

---

8. நல்லூர்ப் புராணம்

937. அந்திவான் பிறைமுடி யண்ணல் வந்தனை
முந்திவா னுறைதரு முகுந்த னுன்முக
னிந்திரா தியர்கள்வந் திறைஞ்சு மெம்பிரா
னந்திவா னவன்பத நளின மேத்துவாம். (8)

(இ-பொ.) பூர்வத்து விண்ணுலக வாசிகளாகிய பிரம்ம விஷ்ணுக்களும், இந்திராதி தேவர்களும் வந்து வாழ்த்தித் தொழாநின்ற எம்பெருமானும், மாலைக் காலத்துப் பாலசந்திரனைச்சடாமுடியின் கண்ணுடைய கடவுளுமான சிவபெருமானுக்கு வாகனமாம் நந்தியெம் பெருமான்றன் பாதாம்புயங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ-ப.) அந்திவான் = மாலைக்காலம்.
அண்ணல் = கடவுள்.
வந்தன் = வாகனம்.
நளினம் = தாமரை.

* வந்தன் = வந்தான் என்னும் வடபதப் பிரயோகமாகக் கொண்டு, பூசித்தற் குரியோனென்றும் உரை உரைப்பர் சில உரையாசிரியர்.

9. சீகாளத்திப் புராணம்

938. செம்பொரு ளாகமத் திறந் தெரித்தரு
நம்பவ மறுத்தநன் னந்தி வானவ
னும்பர்த மணிமுடி யுரிஞ்சக் கன்றிய
வம்பவிழ் மலரடி மனத்தி ருத்துவாம். (9)

(இ-பொ.) செம்பொருளையுணர்த்தும் ஆகமத்தின் இயல்பை அறிவித்து வினைப்பயன் ஒழியாத நமது பிறவியைப் பற்றறுத்த நந்தியெம் பெருமானது கழலடியிணை தேவர்கள் தம் மணிமுடிகளால் பணிய, அதனால் சிவந்த செந்தாமரை மணமுடைய சேவடியைத் தியானஞ் செய்வாம். (எ-று.)

(அ-ப.) செம்பொருள் = பரம்பொருள்.
உரிஞ்ச = (உரிய) கழல்.
கன்றிய = கனிந்து சிவந்த (இரங்கிய)
வம்பு = மணம்.
செம்பொருள் = சொல் லருபொருளுமாம்.
[தக்கன் யாகத்ததாய்ப் பொருள் கோடவே)
உரிஞ்ச = (மணிமுடி) தேயும்படி.
கன்றிய = கோபித்த எனவாம்.

10. தேவாங்க புராணம்

939. படருமிருட் கொடும்பிறவிப் பாவவனந்
தனைச்சிதைத்துப் பந்த பாசத்
தொடரதனை யறுத்துவினைத் தறிமுரித்து
மனப்பாகைச் சுளித்து ஞானத்
திடமருவி நெடுங்கயிலைத் தடங்கிரிவாழ்
பரஞ்சுடரின் றிருமுன் னோங்கு
மடல்குலவு நந்தியெனுங் கடவிகட
களிற்றிணை தாட்கன்பு செய்வாம். (10)

(இ - பொ.) பரவிய மயக்கமாகிய கொடிய பிறவியென்னும் பாவமாகிய காட்டை அழித்து (அழித்தற்பாலனவாகிய பொருள்களில்) கட்டுண்டிருக்கிற ஆசையாகிய விலங்கை அறுத்து விட்டு, வஞ்சகமாகிய கட்டுத் தறியை யொடித்து, மனமாகிய பாகனைக் கோபித்து, அறிவாகிய வலிமையடைந்து, பெரிய கயிலையாகிய விசாலமுள்ள மலையின்கண் எழுந்தருளிய சிவபெருமானது சந்நிதானத்தில் உயர்ந்து வலிமையுடனே விளங்குகின்ற நந்தீசர் என்னுந் திருநாமத்தையுடைய மதம் பொருந்திய ஆண்யானை போன்றவனுடைய திருவடிகட்கு அன்பு செய்வாம். (எ - று.)

11. திருக்கழுக்குன்றப் புராணம்

940. கண்ணனையுங் கமலமலர்க் கண்ணனையு
மமரரையுங் ககன வாசி
விண்ணனையு முமைபாக னவையகத்தே
நிரந்தரமும் விலக்குந் தோறும்

தண்ணனைய துழாய்மணமுந் தாமரையின்
விரைமணமும் தாருத் தாரின்
வண்ணனையின் மணமுமணந் துடையபிரம்
புடையானை வணக்கஞ் செய்வாம். (11)

(இ – பொ.) (திருக்கயிலாயத்தில்) உமையை வாமபாகமாக உடைய சிவ பெருமான் கொலுக் கூடத்திலே, செந்தாமரைக் கண்ணனாகிய மகாவிஷ்ணுவையும், செங்கமலாசனனாகிய பிரம்ம தேவனையும், ஆகாய வாசிகளாகிய இந்திராதி தேவர்களையும், எப்போதும் வரவொட்டாமல் விலக்குந்தோறும் துளசிதள மணமும், தாமரை மணமும், கற்பக மலரின் மணமும் கலந்து கமழ்ந்து வீசுகிற பிரம்பு கொள் நந்தி எம்பெருமானை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) கண்ணன் = திருமால்.
(கமலமலர்க்) கண்ணன் = (கமலமலரின்) கண்மேலிருப்பவன்.
விண்ணன் = இந்திரன், பிரமன்
நிரந்தரம் = எப்போதும்
விலக்குந்தோறும் = விலக்கும் போதெல்லாம்.
தாருத்தார் = கற்பகம்

'கண்ணனையுங் கமல மலர்க்கண்ணனையு மாயிரமா கண்ணனுன விண்ணனையும்' எனவும் பாடம்.

குறிப்பு:- பிரமன், திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் கூட்டமாகக் கயிலைப்பதியின் திருமுன் நெருக்கிக் கொண்டு வருங்கால் நந்திதேவர் பிரம்பால் அவர்களைத் தள்ளி ஒதுக்கி ஒழுங்கு படுத்துவதால், பிரம்பில் தாமரை, துளசி, கற்பகமலர் மணம் கலப்பதாயிற்றென்க.

12. திருக்காளத்திப் புராணம்

941. அந்தி வெண்பிறை சூடு மவிர்சடை
முந்து மான்மழு மூன்றுக ணன்குதோ
ளெந்தை போல்வெள்ளி வெற்பினி னினிதமர்
நந்தி சேவடி நாண்மலர்ப் போற்றுவாம். (12)

(இ-பொ.) மாலை நேரத்து வெண்ணிலாப் பிறை சூடும் சடாமுடியும், மான்மழுவும், முக்கண்ணும், சதுர்ப் புயங்களுமுடைய எம் தந்தையாராம் பரம சிவத்தைப் போல, வெள்ளியங்கிரியில் எழுந்தருளியிருக்கும் நந்தீசுவரரின் சேவடிக் கமலங்களைப் போற்றிச் சேவிப்பாம். (எ - று.)

(அ-ப.) அந்தி = மாலை நேரம்.
வெண்பிறை = வளர் பிறை(க்கும்)
எந்தை = எம் தந்தை.

13. காஞ்சிப் புராணம்

942. அங்கணன் கயிலை காக்கு மகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லா முதற்குரு நாத னாகிப்
பங்கயந் துளவ நாறும் வேத்திரப் படைபொ றுத்த
செங்கையெம் பெருமா னந்தி சீரடிக் கமலம் போற்றி. (13)

(இ - பொ.) அருட் கண்ணனாகிய சிவபெருமானுடைய திருக்கயிலாயத்தைப் பாதுகாப்பதானதோர் செயலை மேற்கொண்டு நமது சமய சந்தான குரவர்களுக்கெல்லாம் முதன்மையான குருநாதனாய், தாமரை, துளசியாதியால் மணம் வீசும் பிரம்பைச் செங்கை யேந்திய நந்தி எம் பெருமானுடைய திருவடிக்கமலங்கட்கு வணக்கம். (எ - று.)

(அ-ப.) அங்கணன் = அழகிய கண்ணையுடையவன்.

14. விநாயக புராணம்

943. வெள்ளி மால்வரை விமலனார் விளம்பிய வேதந்
தெள்ளு மாகம புராணங்கள் செழுங்கலை பிறவு
முள்ள வாறுதேர்ந் துலகெலாம் வழங்கமுன் னுரைத்த
வள்ள லாகிய நந்தியங் குரவனை மதிப்பாம். (14)

(இ - பொ.) வெள்ளியங்கிரியினிடத்தே பரிசுத்தனும் சிவபெருமான் மொழிந்த தெளிவான வேதாகம புராணங்கள் செழுங்கலை முதலாக மற்றும் பிறவற்றை உள்ளபடியே அறிந்து, (அவற்றை) உலகத்து ஆன்மாக்கட்கெல்லாம் உபகரிக்க முதன் முதலே சொல்லும் வள்ளலாம் நமது நந்தியங் குருநாதனை நம்பி வணங்குவாம். (எ - று.)

(அ-ப.) செழுங்கலை = கலைஞானம்.

(அ-ம்.) தெள்ளும் வேதாகம புராணங்கள் செழுங்கலை பிறவும்.

15. திருத்தணிகைப் புராணம்

944. கள்ளகந் தளித்த மலர்த்தலைச் சேக்குங் கடவு ணாரணன் முதலானோ
ருள்ளகந் தழும்ப மலர்ப்பத மமைத்திட் டுடலெலாந் தழும்ப வேத்திரத்தின்
வள்ளலங் கமலத் தனிக்கர மமைத்த வரதனைக் கற்றைவெண் கதிர்கால்
வெள்ளியங் கயிலை காவல் பூண்டருளும் வீரனை வார்கழல் பணிவாம். (15)

(இ - பொ.) தேனும் வண்டும் தத்தளிக்கிற செந்தாமரை மலரிலிருக்கும் பிரம்ம விஷ்ணுக்கள் முதலாந் தேவர்களுடைய உள்ளமானது தழுதழுப்பத் திருவடி தீட்சை செய்வதோடு, உடலெல்லாங் காய வடுப்படும்படி, வள்ளற்றன்மையான அழகிய தாமரை போன்ற கரத்துப் பிரம்பைக் கொள் அபய வரதனும், கோடி சூரியப் பிரகாசமுடைய வெள்ளியங்கிரிக்குக் காவலனுமான வீரனும் நந்தி கேசுவரன்றன் திருவடிகளைப் பணிவாம். (எ-று.)

(அ-ப.) கள்ளகம் = தேனும் வண்டும்.
தளித்த = தத்தளித்த.
சேக்கும் = சிவக்கும்.
வரதன் = அபய வரதன்.
கற்றைவெண் கதிர்கால் = கோடி சூரியப்பிரகாசம்.

உள்ளம் ததும்பவும், எனவே உள்ளம் பொங்கிவழிய என்னும்.

16. பேரூர்ப் புராணம்

945. உலகம் யாவையு மொருநொடிப் பொழுதி னுண்டு சக்கர மாதி
மலர்கை யேந்திய நாரணன் முதலிய வான வர்குழா மெல்லா
மலகி லார்வமு மச்சமுந் தழீஇ நிரையாக நின்றனர் போற்ற
விலகு வேத்திரச் சிறியகோற் பணிபுரி யேந்தல் பூங்கழல் போற்றி. (16)

(இ - பொ). ஒரு நொடிப் போதிலே உலக முழுமையும் உண்டுமிழ்வதோடு சக்கர முதலான பஞ்சாயுதங்களைச் செங்கரந் தாங்கும் மஹா விஷ்ணு முதலான தேவர்கள் கூட்டமெல்லாம் அளவில்லாத பயபக்தி கொண்டு வரிசைக் கிரமமாக நின்று சிவபெருமானைப் போற்றும்படியாய், விளங்கும் பிரம்பின் செங்கோலால் கட்டளையிடும் காவலனும் நந்தியெம் பெருமான் பூம்பதத் துணைகளைப் போற்றுவாம்.

(அ - ப.) குழாம் = கூட்டம்.
ஆர்வம் = பக்தி.
அச்சம் = பயம்.
நிரை = வரிசைக்கிரமம்.
நின்றனர் = நின்றவராக.
சிறியகோல் = செங்கோல்
பணி = கட்டளை.

நின்று தன்னை வணங்கும் படியாகவுமாம்.

---

17. திருவானைக்காப் புராணம்

946. எங்குநிறைந்த பேரறிவென் றியம்பு பொருளுமான் மாவுந்
தங்குமலமும் பகுத்துணர்ந்த தனதுள்ள கம்போற்றெ ழுதுபுகுந்த
துங்கமுனிவர் முதலோரைச் சுடர்கைப் பிரம்பால் வேறுவே
றங்கணிறு விப்பணிபு ரியுமண்ணல் மலர்த்தா ளெண்ணுவாம். (17)

(இ - பொ.) எங்கும் நிறைந்த பேரறிவென்று சொல்லும் பதிப்பொருளும், பசுப்பொருளும், பாசப்பொருளும், பகுத்தறிந்த தமதுள்ளன்பு போலவே மாணவராகத் தொழுது புகுந்த சனத்குமாரர் முதலான முனிவோர்களைத் திருக்கைப் பிரம்பினால், தனித்தனியே இடங்கொடுத்து (உட்கார வைத்துக்) கற்பிக்கும் நந்தியெம் பெருமான் மலரடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) சுடர்கை = திருக்கை.
வேறு வேறு = தனித்தனி.
அங்கண் = அகன்ற இடம்.
நிறுவி = நிருமித்து.
பணிபுரியும் = சொல்லும்,
முனிவர் = *சனத்குமாரர்.

*இவர், பிரமன் புத்திரர். விஷ்ணு அம்சம். சதச்சிருங்க மலையில் யோக மிருக்கையில் சிவமூர்த்தி தரிசனந்தரவும் இவர் சும்மாயிருந்ததால் நந்திதேவரால் ஒட்டகமாகச் சபிக்கப்பட்டு, சிவபூசையால் நிவர்த்தி பெற்றவர். பின்பு நந்தி தேவரிடம் உண்மையறிந்தவர்.

18. பூவாளூர்ப் புராணம்

947. தத்தமக் கிறைவ ராய்ந்து தகச்செயு முறையுந் தென்பா
லுத்தமன் முறையு மும்பரா தியோர்க் குருது நீங்கக்
கைத்தலப் பிரம்பி னோச்சிக் கண்ணுதல் சேவை யார்க்கும்
பத்தியி னருளு நந்தி பணிமலர்ப் பாதம் போற்றி. (18)

(இ - பொ.) தத்தமர்க்கு உரிய இறைவரை ஆராய்ந்து பார்க்கும் வேலையெல்லாம் தேவர்களுக்கு உண்டாகாமல் நீங்க, தம் மணம் பொருந்திய பிரம்பினால் பத்தியுடைய அனைவர்க்கும் சிவபெருமான் சேவை கிடைக்குமாறு செய்யும் நந்தியெம்பெருமானின் குளிர்ந்த கமல மலர்ப் பாதங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) உம்பர் = தேவர்.
உருது = உண்டாகாமல்.
ஓச்சி = செலுத்தி.
கண்ணுதல் = நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான்.

19. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

948. திருமருமா லயன்முதலோர் மணிப்பிரம்பின்
வழிபுரியத் தேவ தேவன்
கருணைவிழி கடைக்கணித்த பணிகள்புரிந்
தத்துவிதக் கலப்பான் மும்மைப்
பொருள்வினவிப் பெறுஞான போதத்தைச்
சனத்குமரர் போற்ற நல்குங்
குருமணியைத் திருநந்தி நாயகனைப்
பரம்பரையிற் குறித்து வாழ்வாம். (19)

(இ - பொ.) திருமாலும், மற்ற பிரம்மாதி தேவர்களும் கரும்பிரம்பின் உத்தரவுப்படியே சிருட்டி திதி நடத்தவும், தேவாதி தேவனாகிய சிவபெருமான் கடைக்கண்ணால் கிருபா நோக்கம் புரிந்த பணிவிடைகளைச் செய்து, அத்துவித முத்தியிற் கலந்துய்வதற்காகப் பதி, பசு, பாசமாய முப்பொருள்களையுஞ் சுவானுபவமாய்க் கேட்டுத் தெளிந்து பெற்ற சிவஞான போதத்தைச் சனத் குமாரர்க்குச் சந்ததி பீடமாய்க் கையாண்டு வர உபதேசித்துக் கொடுத்துதவும் குருநாதராம் நந்தி தேவரை இனிமேல் வருஞ் சந்தான பரம்பரையாய்க் கொண்டாடி வாழ்ந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) திருமருமால் = இலட்சுமிபதி.
மணிப்பிரம்பு = கரும்பிரம்பு.
பணிகள் = பணிவிடைகள் (திருப்பணிக்கும்)
அத்துவிதக் கலப்பு = அத்துவித முத்தி.
மும்மைப் பொருள் = முப்பொருள்களாகிய பதி, பசு, பாசம்.
குருமணி = நந்திபகவான், மாணிக்கத்துக்கும்.

20. கடம்பவனப் புராணம்

949. வாங்கரு மாதவ வடிவாஞ் *சிலாதமுனி
மகவாகி வளர்ந்தெட் டாண்டிற்
பாங்குறு மாதவம் புரிந்து பரனுரு
நித்தியத் துவமும்பண் பாற்பெற்றே
யோங்கயில் வண்சுரிகை பிரம்புழை மழுநம்
மீசனுவந் துதவச் செங்கை
தாங்கி நெடுந்தடங் கயிலை காத்தருணந்
தீசர்பதந் தலைமேற் கொள்வாம். (20)

(இ - பொ.) நீங்காத பெருந்தவக் கோலமாம், சிலாத முனிவரின் திருக்குமாரராய் வளர்ந்து, எட்டாவது பிராயத்திலேயே முறைப்படி தவத்தைச் செய்ததும், சிவ சாரூப்பிய நித்தியத்துவங்களைத் தக்கபடி பெற்று, ஓங்கிய சூலம், உடைவாள், பிரம்பு, மான், மழு முதலானவைகளை நமது பரமேசன் கனிந்து தந்துதவவும் திருக்கரத்தில் தாங்கி, நெடிய கயிலாச கிரியைப் பாதுகாத்தருள் நந்திகேசுவரர் பாதாம்புயங்களைத் தலைமேற் சூடிக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) வாங்கரும் = நீங்கற்கரிய.
பாங்குறு = முறைமைப்படி.
பரனுரு = சிவசாரூப்பியம்.
நித்தியத்துவம் = நித்திய தத்துவம்.
பண்பால் = தக்கபடிக்கே.
ஓங்கயில் = நீண்ட சூலம்.
உழை = மான்.

21. சிவராத்திரிப் புராணம்

950. செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற்
றனிவிழியுந் திண்டோ ணான்குங்
கையதனிற் சுரிகைமழுப் பிரம்புகவை
யடிச்சிறுமான் கன்றுந் தாங்கி
வையமுத லனைத்துலகுந் தொழுங்கயிலை
மலைகாக்க மதியஞ் சூடு
மையனருள் பெற்றநந்தி யடிக்கமல
முடிக்கமல மாக வைப்பாம். (21)

(இ - பொ.) தணல் போலுஞ் சென்னிறமான சடாமுடியும், நெற்றியங் கண்ணும், வலுத்த சதுர்ப்புஜங்களும், கையில் உடைவாளும், மழுவாயுதமும், பிரம்பும், துள்ளிக் குதிக்கும் புள்ளிமானும் தாங்கிக்கொண்டு, பூலோக முதலான

---

*சிலாத முனிவர் சிவபெருமான் கட்டளைப்படி புத்திர காமேட்டி யாகம் நடத்துவதற்காகத் தல சுத்தி செய்ய உழுகையில், கொழுமுனைப்பட்டுப் பேழையொன்றகப் பட்டது. அதைத் திறக்கவே நந்தியம் புதல்வர் இருப்ப, சாரு லட்சணை யென்னும் தம் மனைவியிடம் கொடுக்க, அவர்களிடம் வளர்ந்தவர் நந்திதேவர்.

சகலாண்டங்களுந் தொழுதிறைஞ்சுந் திருக்கயிலாய மலையைக் காவல் பூண்டிருப்பதற்காகச் சந்திரசேகரனான பரமசிவத்தின் திருவருளடைந்த நந்தி எம்பெருமானின் திருவடிக் கமலங்களை நமது தலைக்கு வைர முடியாகச் சூடிக்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) கவையடி = பிளவடி.
மதியஞ்சூடும் ஐயன் = சந்திரசேகரன்.
முடிக்கமலம் = வைரமுடி.

22. புலியூர்ப் புராணம்

951. ஒருநந்தி தனிலிவர்ந்தே யொருநந்தி
தலைச்சூடி யுலக மெல்லாந்
தருநந்தி யுமையுடனே சார்ந்தபெருங்
கயிலைதனிற் காவல் பூண்டே
கருநந்தி யிடவருள்வான் கரநான்குங்
கண்மூன்றுங் கலந்த ஞானத்
திருநந்தித் தலைவனுயர் சிவாகமங்க
டேர்ந்தானைச் சிந்தை செய்வாம். (22)

(இ - பொ.) இடபவாகன மொன்றில் ஆரோகணித்தே, திருமேனி முழுதும் அரவாபரணம் அணிந்து, உலகத்தார்க் கெல்லா நன்மையையுந் தருஞ் சிவபெருமான் உமா மகேசுவரியுடன் எழுந்தருளிய திருக்கயிலாயத்தைக் காவல் பூண்டொழுகி, பிறவி கெடும்படி வேரறுக்கப்பட்டவனும், நாற்கரம், முக்கண் ஆதிய கலந்துள்ள அத்துவித ஞானச் சிவாகமங்களில் தேர்ந்த குருநாதனுமாம் நந்திகேசுவரரைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) நந்தி = 1. இடபம். 2. பாம்பு. 3. சிவன்.
கரு = பிறவி.
நந்தியிட = கெடும்படி.
கலந்தஞானம் = அத்துவித ஞானம்.

23. சீர்காழிப் புராணம்

922. ஆதி யிடையீ றில்லா னருளேகண்
ணாகநின்றோ னமலன் பாத
மீதி லிறைஞ்சிட நணுகும் வாசவனான்
முகனெடியோன் மிடைந்த போது
போதிர் விலகுதி ரெனலாற் றருமலரம்
புயந்துளவம் பொதிந்த தெய்வத்
தீதின் மணம்படைத்த மணிப்பிரம் புடையதிரு
நந்தி திருத்தாள் போற்றி. (23)

(இ - பொ.) முதல் நடு முடிவில்லாதவனும் அருளே திருமேனியான கிருபா நோக்கமுடையவனுமாம் பரிசுத்தனாகிய பரமசிவத்தின் பாதாம்புய மீதில்

பணிந்திறைஞ்சுவதற்காக வரும் பிரம்மா, விஷ்ணு, இந்திரன் ஆய இவர்கள் மூவரும் நெருங்கியபோது, செல்லுங்கள் விலகுங்கள் என்னுங் குறிப்பால், கற்பக மலராலும், தாமரைப் பூவாலும், துளசிதளத்தாலும் நிறைந்த சுகந்த மணமுடைத் தாம் மணிப்பிரம்பேந்தும், நந்தி தேவரின் திருவடிகட்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) ஆதி-இடை-ஈறு = முதல் நடு முடிவு.
அருளேகண் = கிருபா நோக்கம்.
வாசவன் = அமரர்கோன்.
மிடைந்த = நெருங்கிய.
போதிர் = போமின்.
விலகுதிர் = விலகுமின்.
தருமலர் = கற்பகத்தருமலர்.
அம்புயம் = தாமரை.
பொதிந்த = நிறைந்த.
தீதின்மணம் = சுகந்தம்.

சிவனைப் பணிய வந்தவர்களை நந்தி உபசரிக்க வேண்டுமாதலாலும் வந்த மூவரும் சற்றுயர்ந்தவர்களாகலானும் அவர்கள் வரவை எதிர்கொள்ளுங்கால், சுற்றியிருக்கும் பூதகணங்களை யெல்லாம் பார்த்து ஒரு வேளை போதிர் விலகுதிர் என்று நந்தி சொன்னாலுஞ் சொல்லியிருக்கலாம்.

சிவனைப் பணிய வந்தவர்களை நந்தி தேவரா செல்லுங்கள், விலகுங்கள் என்பர் என்றால் 'ஆம்'. எப்படி? போ—விலகவே வா என்பன மரியாதையன்றாகலான் வாங்கள் வாருங்களேன் என எதிர்கொண்டழைத்தனராம் என்பதும் ஒன்று.

24. கணேச புராணம்

953. மணியொளிர்பொற் பூண்பிரம் போடுழை
மழுவா ளுறைச்சுரிகை வயங்குகையு
மணிநிறவல் விடக்களமு நுதல்விழியு
மதிபுனை செஞ்சடையும் வாய்ப்ப
மணிபெறநீ றணிந்தபர சிவனெனநற்
சிலாதரற்கு மருவு கண்ணின்
மணியெனவெண் கயிலையிடத் தமர்ந்தநந்தி
தேவனடி வணக்கஞ் செய்வாம். (24)

(இ - பொ.) ஒள்ளிய பொற்பூண் போட்ட மணிப் பிரம்போடு, மான், மழு, உறையுடன் கூடிய உடைவாள் (இவை நான்கும்) விளங்கிய சதுர்ப்புஜங்களும், மணி போன்று கறுத்த நீலகண்டமும், நெற்றிக்கண்ணும், நிலாவணிந்த சடாமுடியும், விபூதி உருத்திராட்ச தாரணமுமுடைய பரமசிவனைப் போல வந்து, சிலாதர முனிவர்க்குக் கண்மணியெனத் தகும் பிள்ளையாயவதரித்து, வெள்ளியங்கிரியினிடத்துக் காவலமர்ந்த நந்தி தேவர் திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) களம் = கண்டம்.

(அ - ம்) மணிபெற நீறணிந்த சிவனென மணியொளிர் பொற்பூண் பிரம்போ ... ... சடையும் வாய்ப்ப நற்சிலாதரற்கு மருவு கண்ணின் மணியென. —இப்படியும் திருப்பி உரை கோடலாம்.

25. திருவாப்பனூர்ப் புராணம்

954. கரியமணி கண்டனைச்செங் கண்ணுதல்வா
        னவனை முனிக் கணஞ்சூழ் வெள்ளித்
திருவரையிற் றனிமுதலைப் பசியநறுங்
        கொடியினொடுந் தரிசித் தேத்து
மரியயனிந் திரனமரர் தமையுமடி
        யாரெனுத்த னடிக்கு ளாக்குங்
குருமணிவேத் திரத்தடக்கை நந்திதிரு
        வடிமுடிமேற் கொண்டு வாழ்வாம். (25)

(இ - பொ.) முனிவர்கள் சூழ்ந்த வெள்ளியங்கிரியின் ஒப்பற்ற முதற் கடவுளாய், நீலகண்டமுமாய், நெற்றிக்கண்ணுடைய பரமசிவத்தைப் பச்சிளங் கொடியாகிய பார்வதி தேவியுடன் தரிசித்துப் போற்றும் பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள் தம்மையும் சிவனடியாரென்றழைப்பத் தன் திருவடிகளாக்கும் குருநாதனும், கையில் மணிப்பிரம்புடையவருமாம் நந்திகேசுவரருடைய திருவடித் தாமரைகளைத் தலைக்கு வைர முடியாகப் பூண்டு வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) கரிய மணிகண்டன் = நீலகண்டன்.
மணிவேத்திரம் = மணிப்பிரம்பு.

26. திருப்பூவணப் புராணம்

955. திகழ்மகுட சேகரமுஞ் சிறுபிறையு
        நுதற்கண்ணுஞ் செங்கை நான்கு
மகிழ்சுரிகைப் பிரம்பினுடன் மான்மழுவும்
        படைத்தந்தி வண்ண நண்ணி
யிகபரநல் கெம்பெருமா னிணையடிவீழ்ந்
        தயன்முதலோ ரெந்த ஞான்றும்
புகழ்கயிலை மலைக்காவல் பூண்டதிரு
        நந்திபதம் புந்தி கொள்வாம். (26)

(இ - பொ.) விளங்கிய மகுட முடியும், முடியில் மூன்றும் பிறைச் சந்திரனும், நெற்றிக்கண்ணும், நாற்கரங்களிலும் ஒளிர் உடைவாள், பிரம்பு, மான், மழுவைக் கொண்டும், அந்தி வண்ணம் போல் செம்மேனி பெற்று, இகபர சாதனத்தைத் தரும் எம்பெருமானாகிய பரமசிவத்தின் துணையடிகளில் வீழ்ந்து, பிரம்மாதி தேவர்கள் எந்நாளும் போற்றி வாழ்த்தும் கயிலாய மலையைக் காவல் பூண்ட நந்தி தேவர் சரணங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) இகம் = இம்மை.
பரம் = மறுமை.
புந்தி = புத்தி, அறிவு.

27. திருமயிலைப் புராணம்

956. வடகயிலைத் திருவாயிற் காவலனைச்
        சிலாதரன்றன் மகவைத் துத்திப்
படவரவை யரைக்கசைத்த பரமனைச்
        செஞ்சடையின் மதிபதித்த கோவைத்

தடவரைக்கைச் சிலையெம்மான் றிருமுன்னர்
நெருங்குமலர்த் தவிசோ னாதிக்
கடவுளர்மேற் படும்பிரம்பொன் றுடைய
திருநந்தி தனைக்கருத்துள் வைப்பாம். (27)

(இ - பொ.) இடுப்பில் அரவக் கச்சையணிந்த பரமசிவனாய், செஞ்சடாபாரத்தில் சந்திரனணிந்த கோமானாய், மேருவை வில்லாகக் கொண்ட எம்பெருமானாய் விளங்கும் சிவபிரான் சன்னதியின்கண் வந்து நெருங்கும் தாமரைக் கமலாசனனாகிய பிரம்மாதி தேவர்கள் மேல் அடிபடும் பிரம்பொன்றுடைய திருக்கயிலாயக் கோபுரவாயிலின் காவலனும் சிலாதர முனிவரின் திருக்குமாரனுமாம் நந்திகேசுவரனை மனத்துள் வைத்து வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) துத்திப்படவரவு = புள்ளிகள் கொண்ட படமுடைய பாம்பு.
அசைத்த = கட்டிய
பதித்த = தரித்த

28. ஆதிபுரிப் புராணம்

957. நான்முகனு நெடியோனுந் திகழ்வாயில்
காத்துநிற்க நகைவாய் விண்டு
தேன்வழியுஞ் செம்பதும மலர்ந்ததெனத்
தழைந்திலகு செங்கை நான்கின்
மான்மழுவுஞ் சுடர்வாளு மணிப்பிரம்புந்
தாங்கி வெள்ளிவரை மேல்வாழு
மேன்மைபெறு திருநந்தி நாதன்
மலர்த்தாள் சிரசின்மேற் கொள்வோமே. (28)

(இ - பொ.) மிக்க ஒளியுடன் விரிந்து மலர்ந்து தேன் சொட்டும் செந்தாமரை மலரெனத் தழைத்து விளங்கும் கரங்கள் நான்கிலும், மான், மழு, உடைவாள், மணிப்பிரம்பு இவைகளைத் தாங்கிக்கொண்டு, பிரம்ம விஷ்ணுக்கள் கோபுர வாயிலிலேயே காத்துக்கொண்டிருக்க, வெள்ளியங்கிரி மேல் வாழும் மேன்மையான நந்திதேவரின் மலரடிகளைச் சிரஞ் சூடிக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) நகைவாய் = மிக்க ஒளியுடன்
விண்டு = விரிந்து மலர்ந்து

குறிப்பு :— நகைவாய் விண்டு = புன்னகை புரிந்து என்று பொருள் கொள்ளல் பொருத்தமாகும்.

29. அவினாசிப் புராணம்

958. சந்திகண வாகுதிசேர் புக்கொளிநா யகர்சிவந்த சரணப் போதில்
புந்திதண வாவிருத்திப் பொற்புயங்க ணான்கிலங்கப் புடைசேர் கையாற்
றந்திகண வோதையின்மத் தளமதிர்த்து மறுகாவஞ் சலிகொண் டேத்து
நந்திகண நாதனடி நாளுமற வாதபடி நயந்து சேர்வாம். (29)

(இ - பொ.) சந்திகள் தோறும் புதிய யாகங்கள் நடத்தும் அவினாசி ஈசுரரின் செங்கமலக் கழலடிகளில் புந்தி பூர்வமான அன்பைச் செலுத்தி, பொற்

ரேளணி பூண்ட சதுர்ப்புயங்களும் குலுங்க, பக்கவாட்டில் கைகளால், ஆண் யானையின் கர்ச்சனையைப் போலும் மத்தளம் அடித்துத் திரும்பி, குவிந்த கைகளுடையவராய்த் துதிகொண்டேத்தும் பூத நாதனான நந்தியெம்பெருமானை எந்நாளும் மறவாதபடி போற்றித் திருவடிகளைச் சேர்வாம். (எ - று.)

(அ - ப.) புக்கொளி = அவிநாசி
புந்திகண் = இதயத்தின் கண்
அவா இருத்தி = அன்புவைத்து
பொன் = பொன்னாலாய வாகுவலயம்
புடை = பக்கம்
தந்திகணம் = ஆண் யானை
ஓதை = ஓசை (யின் திரிபு)
மறுகா = திரும்புமுகமாக
கணநாதன் = பூதநாதன்

30. திருமுருகன் பூண்டிப் புராணம்

959. மலர்க்கருங் குழன்மலை மகளாய கன்மன்றின் முன்றினின் மேவுஞ்
சொலற்கரும் புகழரிய யனிந்திரன் சுரர்கண் மாதவ ரேனோ
ரிலக்கமின் றியகணத் தினர்யா ரையுமிரு மருங்கினுஞ் சேர
விலக்கும்வேத் திரத்திருப் படைக்கரத் தினான்விரை மலர்ப்பதம் போற்றி. (30)

(இ - பொ.) பூ மலர்கள் சூடிய கருங் கூந்தலின் மலைமகளாம் பார்வதியின் நாயகனான பரமசிவத்தின் சபா மண்டபத்தருகில் வந்தடையும் (சொல்ல முடியாத பெரும் புகழ் கொள்) பிரம்மா, விஷ்ணு, இந்திரன், தேவர்கள், முனிவர்கள் மற்றும் உள்ளவர்களுடன் கணக்கில்லாத பூத கணத்தோர்களையும், இரண்டு பக்கமும் ஒதுங்கி நிற்கும்படி விலக்குவிக்கும் திருமணிப் பிரம்பின் கைக்காரராகிய நந்தி எம்பெருமானின் பூம்பாதங்களைப் போற்றுவாம். ((எ - று.)

(அ – ப.) மன்று = மன்றம் (சபை)
முன்றில் = வாயில்
மருங்கு = பக்கம்

31. பவானிகூடற் புராணம்

960. பணியுந் திங்களும் பகையறப் புனைசிவ பரஞ்சுடர்த் திருமுன்றிற்
றணியு நெஞ்சராய்த் தாழ்ந்திடும் வானவர் தடநெடு முடிமோலி
மணியும் கற்பகமா லையுஞ்சிந் திடவந்து தாக்கிடு செங்கை
யணியும் வேத்திரப் படையுள நந்திஎம் மடிகள்சே வடிபோற்றி. (31)

(இ - பொ.) பாம்பையும், நிலவையும் பகையில்லாமல் சூடிய பரஞ்சோதியாஞ் சிவபெருமான் கோபுர வாயிலில், (பிரம்மாதி) தேவர்களெல்லாம் உள்ளன்பினராய்த் தத்தம் மகுட மணியுடன் கற்பகமாலையுஞ் சிந்தத்தக்கதாய் தாழ்ந்து பணியும் வண்ணம், வந்தெச்சரித்துத் தட்டும் மணிப்பிரம்பேந்திய திருக்கையின் நந்தியெம்பெருமான் சேவடிகளுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) பணி =பாம்பு
திருமுன்றில் =கோபுர வாயில்
தடநெடுமோலி =அகன்ற பெரிய மணிமகுடம்

(அ - ம்.) முன்றில் வானவர் தணியு நெஞ்சராய்த் தட நெடு முடிமோலி மணியும் கற்பக மாலையுஞ் சிந்திடத் தாழ்ந்திடும் (வண்ணம்)

சிந்து=இதன் பதப்பிரயோகமாவது :—மணி சிந்தவும் மாலையுதிரவு மாகக் கொள்க.

32. கருவூர்ப் புராணம்

961. அந்தி வான்பிறையு மானு மடன்மழுப் படையு மேந்தித்*
தந்தி வீழுரிவை போர்த்த தனிமுத லுருவந் தாங்கித்**
புந்தி மாலகல ஞான போதக வெயில்வி ரிக்கு
நந்தி வானிரவி நாடி நமதிரு ணலிவு செய்வாம். (32)

(இ - பொ.) மாலைக்கால நிலாவையும், நேர் மானையும், வெற்றியுடைய மழுவாயுதத்தையும் தாங்கி, யானைத்தோல் போர்த்த ஒப்பற்ற முதற் கடவுளாம் பரமசிவத்தின் திருவுருவத்தைக் கொண்டு, அறிவில் கலக் கவரும் அஞ்ஞானம் நீங்கத்தக்கதாய், சிவஞான போதமென்னும் வெய்யில் பரப்புகிற நந்தீசுவரனும் சூரியனைக் கிட்டி நமது இருள்மல சம்பந்தமாகிய பிறவியை நசிப்பாம். (எ - று.)

(அ - ப.) அடல் =வெற்றி.
நலிவு =நசிவு.

33. மருதூர்ப் புராணம்

962. அண்டபிண்ட பூதபேதஞ் சுமக்கும்
பிரகிருதி யகண்ட பாரங்
கொண்டவெலா மணுவொன்றிற் கூட்டிவைத்த
வணுவனந்த கோடி முற்றும்
பண்டையருட் சத்திவசத் தேற்றியந்தச்
சத்திதன்னிற் பாதி யாக்கித்
தண்டலின்றித் தாங்குமவன் றன்னைத்
தாங்குநந்தி திருச்சரணம் போற்றி. (33)

(இ - பொ.) பிருதிவியாதி புறப்பஞ்ச பூதங்களையும், உட் பஞ்ச பூதங்களையுஞ் சுமந்து வரும் பிரபஞ்சத்தின் அபின்னமானதோர் பெருஞ்சுமை கொண்ட எல்லாத் தூல தேகங்களையும், சூட்சுமமான அறிவிற் கலக்க வைத்து,

---

* ஏந்தியென வற்புறுத்தியதாலும், பிறைக்குச் சூடி என வாராமையாலும் ஷ பிறை மானுக்கு வந்ததென்றே கொள்க.

** தாங்கி யென்ற விதப்பால், தனி முதலின் சாருப்பியத்தைப் பெற்றதென்பதோடு கூட, அவரை வாகனமாகத் தாங்கி யெனவுமாம்.

(அவ்வாறு கலந்த) அனந்தகோடி ஆன்மாக்கள் யாவற்றையும் அநாதியே திருவருள் துணையாம் பராசக்தியின் வயமாக்கி, அப்பராசக்தியின் திருமேனியில் ஒரு பாகமாகக் கூடியிருந்து கெடாதிரட்சிக்கும் பரமசிவனை வாகனமாகத் தாங்கும் நந்திகேசுவரன் திருவடிகட்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) அண்டம் = புறம்.
பிண்டம் = அகம்.
பிரகிருதி = பிரபஞ்சம்.
அகண்டம் = அபின்னம்.
பாரம் = சுமை.
அணு = சூட்சுமம்.
அணு = ஆன்மா.
தண்டல் = கெடுதி.
தாங்கும் = இரட்சிக்கும்.
தாங்கும் = சுமக்கும்,

34. திருக்குற்றாலப் புராணம்

963. நேத்திரங்க ளொருமூன்றும் புயநான்கும்
விழிமணியு நிறைநூன் மார்புஞ்
சாத்துபுலித் தோலுடையும் வெண்ணீறும்
விரிசடையுஞ் சடைமேற் பாம்பும்
காத்திரள்கைம் மான்மழுவுங் கண்ணுதலா
மெனத்தோற்றிக் களங்கார் மாற்றி*
வேத்திரத்தின் படைதரித்த விடைமுகத்தெம்
பெருமானை வேண்டல் செய்வாம். (34)

(இ - பொ.) முக்கண் பார்வையும், நாற் கரங்களும், உருத்திராட்ச கண்டியும், விபூதி தூளனமும், மார்பில் நிரம்பிய பூணூலும், புலித்தோல் ஆடையும், உடுக்கையும், விரிந்த சடாபாரமும், சடை மேலாடு பாம்பும், திரண்டு. காக்கவல்ல செங்கையில் மான் மழுவும் உடைய நெற்றியங்கண் பரமசிவனென வந்து, ஒன்றுக் கிரண்டு மணிப்பிரம்புகளைத் தாங்கிய இடபமுகத்தின் நந்தி எம் பெருமானை வேண்டி வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) விழிமணி = உருத்திராட்சம்.
சாத்து = சாத்துதல், அணிதல்.
மாற்றி = கைம்மாற்றுக்கு.
களங்கார் வேத்திரம் = கரும்பிரம்பு.

களங்கார் = கருமை பொருந்தியது எனவும் களங்கமுள்ளது எனவும் பொருள்படும்.

* களங்கார் மாற்றி வேத்திரம் = களங்கமில்லாத பிரம்பு
மாற்றி = என்பது இல்லாத எனப் பொருள்படும்.

35. திருநெல்வேலிப் புராணம்

964. புதுமல ரிதழியார் புனையும் வேணியான்
கதிதரு திருமலைக் கயிலை காவல
னதியணி பவனரு ணந்தி நாயகன்
மதுமல ரடியிணை வணங்கி வாழ்த்துவாம். (35)

(இ-பொ.) கொன்றைப் பூமாலை யணியுஞ் சடாமுடியனும், கங்காதரனும், நற்கதியைத் தருபவனுமான பரமசிவன் வீற்றிருக்கும் கயிலையங்கிரிக்குக் காவலாளியாகிய திரு நந்தி தேவரின் திருவடி மலரிணைகளை வணங்கி வாழ்த்துவாம். (எ-று.)

(அ - ப.) ஆர் = ஆரம்.

(அ - ம்.) புது மலரிதழி ஆர் புனையும் வேணியான் நதி அணிபவன் அருள் கதிதரு திருமலைக்கயிலை காவலன் நந்தி நாயகன் மது………………வாம்.

36. மருதவனப் புராணம்

965. முழுதுலகு நிறைபிரமம் பரம னேயென
மறைகண் மொழியுந் தன்மை
வழுதியென்பான் முதுகி லடிபடு பொழுதிற்
கண்டிருந்து மயங்கு வோர்க்குக்
குழுவுறுமால் விரிஞ்சன் முதல்வா னவர்மேற்
கைப்பிரம்பு கொண்டு தாக்கிச்
செழுமணித்தண் கயிலையின்பாற் றெளிவிக்கு
மவன்மலர்த்தாள் சிரத்திற் கொள்வாம். (36)

(இ - பொ.) உலகம் முழுவதும் நிறைந்துள்ள பரப்பிரமம் பரமசிவனே யென வேதங்களெல்லாங் கூறுந்தன்மையினை, (வந்தியின் பொருட்டுப் பிட்டுக்கு மண் சுமந்த கூலியாளாகிய சோம சுந்தரக் கடவுள் முதுகில் அரிமர்த்தன பாண்டியன் அடித்த பிரம்படி) அரிமர்த்தன பாண்டியன் முதுகில் படும்போது கண்டிருந்தும், அதில் ஐயங்கொண்டு மயங்குவோர்க்குக் கூட்டமாகச் சிவபெருமானை வழிபட வரும் திருமால் இந்திரன் முதலான தேவர்கள்மேல் கைப்பிரம்பு கொண்டு தாக்கிப் படிகமணியென விளங்கும் குளிர்ந்த கயிலைமலையில் தெளிவுபடுத்தும் அந்தக் கயிலைக் காவலனாகிய நந்தி யெம்பெருமானுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்குவாம். (எ - று.)

குறிப்பு:—வந்தியின் கூலியாளாக வந்த சிவபெருமான்மீது பட்ட பிரம்படி உலகிலுள்ள எல்லாவுயிர்களின் மீதும் பட்ட வரலாற்றைக் கீழ்வருந் திருவிளையாடல் செய்யுட்களால் அறிக:—

பாண்டியன் முதுகிற் பட்டது செழியன் பன்னிய ருடம்பினிற் பட்டது
ஆண்டகை யமைச்சர் மேனிமேற் பட்ட தரசிளங் குமரர்மேற் பட்டது
ஈண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட திவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்ட தெவ்வுயிர்க்கும் போதன்மேற் பட்டவத்
தழும்பு. 1.

பரிதியு மதியும் பாம்புமைங் கோளும் பன்னிறம் படைத்த நாண்மீனும்
இருநிலம் புனல்கா லெரிகடுங் கனல்வா னென்னுமைம் பூதமுங் காருஞ்
சுருதியு மாறு சமயவா னவருஞ் சுரர்களு முடிவருந் தொண்டின்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட மதுரைநா யகனடித் தழும்பு. 2.

வானவர் மனிதர் நாகர்புள் விலங்கு மாசுணஞ் சிதலெறும் பாதி
ஆனபல் சரமும் மலைமரங் கொடிபுல் லாதியா மசரமும் பட்ட
ஊனடை கருவும் பட்டன தழும்போ டுதித்தன உயிரி லோவியமும்
தானடி பட்டன சராச ரங்கள் தமக்கு உயிராயி னோன்தழும்பு. 3.

37. திருநல்லூர்ப்பெருமணப் புராணம்

966. கங்கை வேணியன் கயிலையிற் கதிர்மணிக் கோயிற்
றுங்க வாயிலி னின்று வானவர் முடித்தொகைமே
லங்கை வேத்திரந் தாக்கி நீணெருக் குறுதகற்று
மெங்க ணாயகன் பதமல ரிறைஞ்சுவா மென்றும். (37)

(இ - பொ.) கங்கையைச் சடாமுடியில் தரித்த பரமசிவனார் எழுந்தருள் திருக்கயிலாயத்தின் மணிக் கோபுர வாயிலில் நின்று கொண்டு, பிரம்மாதி தேவர்கள் (கூட்டம் கூட்டமாக வரவும்) அவர்கள் திருமுடிக் கிரீடத்தின் மேல், கைப்பிரம்பினால் தட்டி, நெருங்கி நெருக்காது விலக்குவிக்கும் எம் குரு நாயகனுடைய பாதாம்புயங்களை எந்நாளுந் துதிப்பாம். (எ-று.)

38. மயூராசலப் புராணம்

967. புந்தி யானினைப் பதரிதாங் திருக்கயிலா
யத்திறைவன் புனலார் வேணி
யந்தி வான்மதி யணியுமண் ணன்மல
ரடிபணிவா னண்ணுந் தேவர்
பந்தி மாமகுட நிரைவில கிடவேத்
திரமென்னும் படைகொண் டோச்சு
நந்தி தேவர் பணிந்து நந்தமது
வினைதொலைத்து நந்தா துய்வாம். (38)

(இ - பொ.) வாக்கு மனோ தீதமாய்ச் சிந்தித்து, அளவிடற் கரியதாம் திருகயிலாச வாசனும், கங்கை நிறைந்த சடாமுடியில் மாலைக்காலப் பிறைச் சந்திரனைப் பூண் அண்ணலுமான பரமசிவத்தின் திருவடி மலர்களைப் பணிவதற்காகச் சன்னிதானம் நெருங்குந் தேவர்களை, அவர்கள் கிரீடங்கள் வாங்கும்படி, வெள்ளிப் பிரம்பைக் காட்டித் தட்டுகிற நந்தி எம்பெருமானை வணங்கி நம்முடைய வினைப்பிறவியை நீக்கிக் கெட்டலையாமல் வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அந்திவான் = மாலைக்காலம்
நந்தாது = கெடாது

39. திருப்பெருந்துறைப் புராணம்

968. முத்தியை யடைவோர் ஞான முந்துற வடைதல் போலச்
சத்தியை யொருபால் வைத்த பிரான்றனை யடைவோர் முந்திப்
பத்தியை யியற்றித் தன்னை யடைதரப் பண்பார் யோக
சித்தியை யடைந்த நந்தி தேவனை வணக்கஞ் செய்வாம். (39)

(இ-பொ.) மோட்சத்தை அடைய விரும்பினவர்கள், ஞான மார்க்கத்தை முதல் முதல் கண்டறிதல் போல, பார்வதியை யொருபாகங் கொண்ட சிவபிரான் (திருவடிகளைச் சேர இச்சித்தவர்கள்) முதலில் பத்திமை புரிந்து தன்வழிச் சேரும்படிக்குத் தக்கதான சிவயோக சித்தியை அடைந்துள்ள நந்திதேவரை வணங்குவோம். (எ-று.)

(அ - ப.) முந்துற = முற்பட

---

40. காசி ரகசியம்

969. மறைமுழுதும் வகுத்துணர்ந்த வாதரா
யணமுனி வன்மதி மாழாந்து
நிறையகில நாதனெதிர் நாரணனே
பிரமமென நிகழ்த்த லோடு
மறைதருமவ் வகிலேசன் முன்பு
நாட்டிய சயத்தூண வனேயாக
முறைநிறுவி யருள்கொழிக்கு நந்திபிரா
னடிக்கமல முடிக்கொள் வாமே. (40)

(இ-பொ.) வேதம் யாவும் வகையாக அறிந்த வியாச மஹா முனிவன் மதி மயங்கி, காசி விசுவநாதர் சன்னதிக் கெதிரில் (நின்று கொண்டு) நாராயணன்ருன் பரப்பிரம்மமென்று சாதிக்க, (உடனே வேதத்தில் கூறும்) அந்த லோக நாதனுக்கு முன் (சிவமே பரமென) அவ்வேத வியாசனைத் தம்பிக்கச் செய்து கொடிக்கம்பமாக முறையே நிறுத்தித் திருவருள் புரியும் நந்தியெம்பெருமான் திருவடிக்கமலங்களைச் சிரமேல் சூடிக்கொள்வாம். (எ-று.)

(அ - ப.) வாதராயணமுனிவர் = வியாசர்
மாழாந்து = மயங்கி
நிகழ்த்தல் = (சாதித்துச்) சொல்லல்
சயத்தூண் = கொடிக்கம்பம்
நிறுவி = நிறுத்தி

---

41. திருநாகைக் காரோணப் புராணம்

970. பதிமரபிற் பரவிரண்டாஞ் சிவனென
யாவரும் புகலப்பட்டு மெங்க
டுதிவிரவு குருமரபின் முதற்குரவ
னென்றெடுத்துத் தூற்றப் பட்டோ

னாதியமைவச் சிரங்கதைசு தரிசனமுற்
படைநோன்மை நொறுங்க வாய்ப்பெய்
ததிவிரைவி னெழுசூரற் படைப்பெருமா
னடிக்கமல மடுத்து வாழ்வாம். (41)

(இ-பொ.) பதியிலக்கண முறைமையில் துதிக்கும் இரண்டாவது சிவமென எல்லோராலுஞ் சொல்லப்படுவதோடு நமது பெரும் புகழுடைய சந்தான குரவர்களில் முதற்குருநாதன் என்றும் போற்றப்பட்டவனும், (மற்றும்) இந்திரன், பிரம்மா, விஷ்ணு இவர்களின் கூரிய வச்சிராயுதம், கதாயுதம், சக்ராயுதம் இவை தாம் முன்படைந்த தவ வலியுடன் தூள் தூளாக, சீக்கிரமாக வெழுந்து சிறக்கும் வெள்ளிப் பிரம்புடையவனுமான நந்தி எம்பெருமானின் திருவடிக்கமலங்களில் அடைக்கலம் புகுந்து வாழ்ந்து வருவாம். (எ - று.)

(அ - ப.) மரபு = முறைமை
பரவு = துதி
குருமரபு = குருகுலம்
முற்படை = முன்பு அடை
நோன்மை = தவவலி
சூரல் = பிரம்பு

42. திருக்குடந்தைப் புராணம்

971. புரவனைக் கொருபா னல்கு புராணன்பா லனைத்துந் தேர்ந்து
குரவனைச் சிவனே யென்று பாவனை செயச்சொல் கூற்றும்
பரவனைத் துயர்க்கு மாக்கிப் பதிவருக் கத்து மேய
வுரவனைக் கயிலை காக்கு மொருவனைப் பணிதல் செய்வாம். (42)

(இ-பொ.) நம்மை எல்லாம் இரட்சிக்கும் அன்னையாகிய பார்வதி தேவிக்கு ஓர் இடப்பாகந்தரும் பழம் பொருளாகிய பரமசிவனிடம் (வேதாகமாதி) யாவும் உணர்ந்து, சர்வ சீவராசிகளுக்கும் குருநாதன் சிவபெருமான் தானேயென்று சிந்திக்கக் கட்டளையிடுங் காரணனாய் பதியிலட்சணமுடைய அறிஞனாய், கயிலங்கிரியைப் பாதுகாக்கும் ஒப்பற்ற ஒருவனாய நந்திகேச்சுரனை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) புரவனை = புரவு + அன்னை
புராணன் = புராதனன்
குரவன் = குரு
கூற்றம் = காரணம்
உரவன் = அறிஞன்

43. மாயூரப் புராணம்

972. வண்ணம் பொலியு மேருமால் வரையை மேவுநசை யினர்சீர்
விண்ணம் பொலியு மிளாவிருத மேவலென மான்மறி யினெடு
தண்ணம் பொலியுங் கைப்பரமற் சாரும் விருப்ப ரறிவுடையோ
ரெண்ணம் பொலியுந் தனைச்சார விருக்கு மொருவன் பதம்பணிவாம். (43)

(இ - பொ,) பொன்மயமாக விளங்கும் மகாமேரு மலையை அடைய விரும்புவோர், சிறப்பும் மேன்மையும் பொருந்திய இளாவிருத வருடத்தை மேற்கொள்ளுதல் போல, மான்மறியேந்திய குளிர்ச்சியும் அழகுமுடைய திருக்கைகளையுடைய பரமசிவனை அடையும் விருப்பினையும் அறிவினையும் உடையவர் எண்ணம் நிறைவேறத் தன்னை வந்து அணுகும்படியாகத் திருக்கயிலையில் காவல் மேற்கொண்டிருக்கும் நந்தியெம் பெருமான் திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

44. உறையூர்ப் புராணம்

973. முடிகெழு கூடன் மாறன் முழுப்பரஞ் சிவனே யென்றே
ரடிகொடு தெரித்த பின்னு மயங்கு வார்க்கறி விப்பான்போல்
வடிவுடை மாய ஞதி வான வர்களைப் பிரம்பா
னெடியவெண் கயிலை வெற்பிற் புடைக்குநின் மலன்ருள் போற்றி. (44)

(இ - பொ.) மதுரையை ஆண்ட முடியணிந்த அரிமர்த்தன பாண்டியன் முழுமுதற் பரம்பொருள் சிவபெருமானே என்பதை, வந்தியின் கூலியாளாக வந்த சிவபெருமான் மீது அடித்த பிரம்படி தன் முதுகின் மேற்பட்டது கொண்டு உலகினர்க்குத் தெரிவித்த பின்னும், மயக்கங்கொள்வார்க்கு அறிவிப்பான் போல், அழகிய வடிவுடைய திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்களைப் பிரம்பால் நீண்ட வெண்மையான கயிலைமலையிலிருந்து கொண்டு அடிக்கும்படியான மலமற்ற நந்தியெம் பெருமானுடைய திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

45. திருவம்பர்ப் புராணம்

974. சிகர மேவிய கைலாயஞ் சிறப்புறக் காத்த லோடு
மகர மேவிய நீர்வைப்பும் வானமு மதித்து நாளும்
பகர மேவிய பேராளன் பரசி வனவனப் பேர்மே
லகர மேவிய பேருங்கொ ளண்ணலை யெண்ணு வாமே. (45)

(இ-பொ.) மகா உன்னதமான கயிலையங்கிரியைச் சிறப்புடன் பாதுகாப்பதுடன் (மகர மீன்கள் பாயும் கடலால் சூழப்பட்ட வையகத்தாராலும், வானகத்தாராலும் போற்றி மதிக்கப்பட்டு எந்நாளும் அலங்காரமுடைய, பேரருளாளனும், பரமசிவனைப் போல்பவனும், அவன் திருநாம முள்ளவனும், மேல் அகரவுயிர் போல் அறிவுடையவனுமான நந்திகேசுவரனைச் சிந்திப்பாம். (எ-று.)

(அ - ப.) சிகரம் = உச்சி
மகரம் = மீன்
நீர் = கடல்
வைப்பு = வையகம்
பகரம் = அலங்காரம்

46. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

975. வெள்ளியங் கயிலை காவல் விண்ணவர் குழாம் விலக்க
றெள்ளிய வுபதே சித்தல் சிறந்தவிம் மூன்று மாற்ற
வொள்ளிய சுரிகை சூர லொருபெருங் குரவுத் தன்மை
நள்ளிய நந்திப் புத்தே ளுண்மலர்ப் பாதம் போற்றி. (46)

(இ - பொ.) வெள்ளியங்கிரியின் காவலுக்கும், தேவர் கூட்டங்களை வழி விடுதலுக்கும், (மாலாதியர்க்குச்) சிவாகமங்களை உபதேசிக்கவும் ஆய இம்மூன்றும் சரிவர நடத்துவதற்காகப் பிரகாசமான முறுக்குப் பிரம்புடன் பேரறிவாய் விளங்கும் நந்திகேசுவரருடைய பாதபங்கயங்களுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) சுரிகை = சுரி = முறுக்குள்ளது
(உடைவாளுக்கும்)
பெருங்க உரவு = பேரறிவு
நள்ளிய = நட்புப் பொருந்திய
புத்தேள் = தேவர்

47. விளத்தொட்டிப் புராணம்

976. முந்தி வானவ ரேத்து முதல்வரை
யந்தின் மேய வபர சிவனெனு
நந்தி நாயக னாண்மலர்ப் பாதமுட்
சிந்தி யாவினை சிந்தியுய் வாமரோ. (47)

(இ - பொ.) விட்டுணுவாதி தேவர்கள் போற்றும் முதல்வரான பரமசிவத்துக்குச் சமானமாய் (கயிலாசத்தில்) அபரசிவனென்று துதிக்கும் நந்திகேசுவரனுடைய பாதாம்புயங்களை யுள்ளத்துத் தியானித்து பூர்வவினையைப் போக்கிக் கொண்டு சீவிப்பாம். (எ - று,)

(அ - ப.) அந்தில் = அவ்விடம் தொடுகுறி
அபரசிவம் = எதிர்சிவம் (இரண்டாவது சிவம்.)

48. கோயிலூர்ப் புராணம்

977. தம்மை வந்தடைந்த நல்லோர் தம்மை நன்குணர்ந்த வத்தை
மும்மையுங் கடந்து தாமே முழுதும் தம்மை வாய்ப்பச்
செம்மைநன் னெறிசால் வேத சிரப்பொருட் சேவை நல்கு
மெம்மையா ளுடைய நந்தி தேவரை யிறைஞ்சல் செய்வாம். (48)

(இ - பொ.) தம்மைச் சரணாகதியாக வந்தடைக்கலம் புகுந்த நல்லோர்களை நன்காராய்ந்தறிந்து, அவர்கள் ஜாக்கிராதி பஞ்சாவத்தைகளை அம்மை, இம்மை, மறுமைக்கும் நீங்கித் தம்போல் எல்லா வல்லபமுமாந் தன்மையுண்டாகப் போதுமான செந்நெறி பயக்கும் வேதத்தின் பரம்பொருள் தரிசனையைத் தாராநின்ற (நம்மையாள்) நந்திதேவரைப் போற்றி வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அவத்தை = அவஸ்தை
சிரப்பொருள் = பரம்பொருள்

49. திருக்குறுக்கைப் புராணம்

978. பஞ்சா வரணத் தடைநீங்கிப் பங்கேருகனா தியர்புறத்தே
பஞ்சா ரடியா ளொருபாகன் பாதங்கலக்க விடல்போல்வெப்
பஞ்சாம் வகைநிற் பவரகத்தே பஞ்சபாசத் தடையொழிந்தின்
பஞ்சா ரொளியிற் கலக்கவிடும் பரமனந்தி பதம்பணிவாம். (49)

(இ - பொ.) (திருக்கயிலாயத்தின்) வெளியே நின்று காத்துக் கொண்டிருக்கும் பிரம்மாதி தேவர்கள், அஞ்சு பஞ்சப் பிராகாரத் தடுப்பையும் நீங்கி, பஞ்சு போலு மெல்லடியுடையவளாம் பார்வதி பாகனாகிய பரமசிவன் பாதங்களில் கலந்தடைக்கலம் புகச் சன்னிதானத்துக்குள்ளே விட்டனுக்கிரகிப்பது போல், வெவ்விய பிறவியானது, வேரறச் சாகும்படி உறுதியாய் நின்ற உண்மையாளரிடத்தேயும், அடைபட்ட ஆணவாதி மும்மலங்களையும் போக்கிப் பேரின்பாத்துவிதத்தில் இரண்டறக் கலப்பிக்கும் மகாநந்திகேசுரனுடைய திருவடிகளைச் சேவிப்பாம். (எ - று.)

(அ - ப.) பஞ்ச + ஆவரணம் = ஐம்பெரும் மதில்.
தடை = தடுப்பு.
பங்கேருகன் = தாமரையாசனன் (பிரமன்)
பஞ்சு ஆர் அடி = பஞ்சின் மெல் அடி
வெப்பம் = வெம்பிறவி
பஞ்ச பாசம் = கரியமலம், ஐந்து மலம்.
அடை = அடைப்பு
பரமநந்தி = மகாநந்தி தேவர்.

50. தனியூர்ப் புராணம்

979. என்வ ணக்கமு மேற்கு மிறையவன்
றன்வ ணக்க முளங்கொடு சார்பவர்
முன்வ ணக்கஞ் செயப்பொலி முன்னவன்
பொன்வ ணக்கஞ் செய்புண்ணிய பாதமே. (50)

(இ - பொ.) (அஷ்டாங்க சாஷ்டாங்க பஞ்சாங்கமாகிய) எவ்வித வந்தனை வழிபாடுகளையும் அங்கீகரித்துக் கொள்ளும் இறைவனாகிய பரமசிவனை உள்ளன்போடு சேவிப்பவர்களும் முதன் முதல் தொழுதிறைஞ்சும் (முதற் கோபுர வாயிற் காவலனான) நந்தியெம்பெருமானின் புண்ணியமுடைய பொன்னடிகளை நெஞ்சே போற்றுவாம். (எ-று)

(அ - ப.) என் வணக்கமும் = எவ்விதமான வணக்கமும்
ஏற்கும் = ஒப்புக் கொள்ளும்
முன்னவன் = முதலானவன்.

(அ - ம்.) புண்ணிய பொற் பாதமே.

51. சூதசங்கிதை

980. மின்னிடித் திடுமா மோலி விரிஞ்சன்மான் முதல்விண் ணோருக்
கன்னடித் திடுகண் டத்தோனங் கயிலையிற் றனின்பந்
துன்னடி யருளு முன்னர்ச் சுஃறெருலிச் சூர லோச்சித்
தன்னடி யருளும் வள்ள ருமரை யடியுள் வைப்பாம். (51)

(இ - பொ.) மின்னலைப் போலப் பளிச்சுப் பளிச்செனச் சொலிக்குங்கிரீடங்களுடைய பிரம்ம விஷ்ணு முதலான தேவர்களுக்கு நள்ளிருளிலாடிய நீலகண்ட பரமசிவன் திருக்கயிலாயத்தில், தனது பரம சுகமான பாதத்தைக் கொடுத்து இரட்சிக்கும் முன்னரே, வெள்ளிப் பிரம்பால் ஓங்கிச் சுருக்கென ஓர் அடிகொடுக்கும் வள்ளலாகிய நந்திதேவரின் சரணாரவிந்தங்களைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) மோலி = மகுடம்
அல்நடித்திடும் = இருளில் நடிக்கும்
சு°ரொலி = சுக்ரன் (வெள்ளி) இருக்கும்
ஓச்சி = ஓங்கி.

52. திருத்தினைநகர்ப் புராணம்

981. அண்டமெலாங் கோதை பெனப்பூண் டுமதை
அழித்து மறித்தழகு வாய்ப்பப்
பண்டைநிலை மையிற்பு ரிந்து மாட்டயருங்
கணங்கடொழும் பதியாய் மானுங்
திண்டிறல் வெம்மழுச் சுரிகை பிரம்புணி
கரநான்குஞ் செறிமுக் கண்ணுங்
கொண்டிலகு மபர சிவமெனு நந்தி
தேவனருள் குறித்து வாழ்வாம். (52)

(இ - பொ.) உலகத்தெல்லா உயிர்களையும் ஒழுங்குடனே காத்திரட்சிக்கவுட்பட்டும், பின்பு அவைகளின் பாச பந்தங்களை அழித்துப் போக்கியும், கடைசியாய் அழகான ஞான நிலையிற் சேர்ப்பித்தும் ஒருவிதத் திருவிளையாடல் புரியும் (பூதகணத்தால் துதிக்கப்படும்) பசுபதியாம் பரம சிவனையொப்ப, திண்ணிதான வெள்ளிப் பிரம்பும், வலிவுடைய உடைவாளும், வெவ்விய மழுவும், சதுர்ப் புஜங்களும், நிறைந்த முக்கண்களுமாகக் கொண்டு விளங்கும் எதிர்சிவமான நந்திதேவன் திருவருள் துணைக்காக வாழ்த்தி வழிபடுவாம். (எ - று.)

(அ - ப.) எலாம் = எல்லாவுயிரும்
கோதை = ஒழுங்கு
மானும் = ஒக்கும்
சுரிகை = உடைவாள்

புரிந்தும் பூண்டும் அழித்தும் எனவே முறையே ஆக்கி, அளித்து, அழித்தெனவுமாம்.

53. திரிசூலகிரிப் புராணம்

982. இந்திரன் மால யனாதி யாவரும்
வந்து துன்னிய சிவசபையின் மாறுகொண்
டுய்ந்தன மெனவவ ரொதுங்க வோச்சிய
நந்தி யெங்நாளுமென் னுள்ளத்து நண்ணுமே. (53)

(இ - பொ.) (திருக்கயிலாயத்தின்) தெய்வ சபையில் வந்தடைந்த பிரம்மா விஷ்ணு இந்திரன் முதலான தேவர்கள் எல்லாரும், யாம் பசு கரணம் யாவும் மாறிச் சிவகரணம் அடைந்தீடேறினோமென்று (சற்றே) ஒதுங்கி நிற்கும்படியாகப் பிரம்பெடுத்து நோக்கும் நந்தி தேவர் எந்நாளும் அடியேன் உள்ளத்துக்குள் கலந்து நிற்பர். (எ - று.)

(அ-ப.) துன்னிய = அடைந்த
சிவசபை = தெய்வசபை
ஒதுங்க = ஒத்த

54. புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்

983. பொடியணியு மேனியுமுப் புரிநூல்சூழ்
மணிமார்பும் புனையு மின்னற்
கொடிதிகழுஞ் செஞ்சடையும் விழிமூன்றுங்
கரநான்குங் குலவு மானும்
வடிமழுவுஞ் சுடர்வாளு மணிப்பிரம்பும்
விளங்க வெள்ளிவரை காத்தையன்
முடிவரிய திருவாய்மை செலுத்துநந்தி
நாயகன்றாண் முடிமேற் கொள்வாம். (54)

(இ - பொ.) விபூதி பூசிய திரு மேனியும், பூணூல் போட்ட விசாலமான மார்பும், (கொடிக்கால் மின்னும்) மின்னல் கொடி போன்று சிவந்த சடாமுடியும், முக்கண்ணும், சதுர்ப் புஜமும், குலாவுகின்ற மானும், மழுவாயுதமும், உடைவாளும், வெள்ளிப் பிரம்பும் ஆய இவைகள் விளங்க, வெள்ளியங்கிரியைக் காவல் பூண்டு, ஐயனாகிய பரமசிவத்தின் முடிவில்லாத திருவாக்கின் கட்டளைப்படியே நடந்து கொள்ளுகிற நந்திதேவரின் தாள் மலரை நமது முடிமேற் சூடிக்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) திருவாய்மை = திருவாக்கு.
செலுத்தும் = நடந்துகொள்ளும்.

55. திருநாவலூர்ப் புராணம்

984. அந்தி வண்ண னாலயமுன் வாயிலிற்
றந்திரன் கரத லங்கொள் வேத்திர
னந்தி யெம்பிரா னளின மென்பதஞ்
சிந்தை செய்குவார் தீமை தீர்குவார். (55)

(இ - பொ.) அந்தி வண்ணனாகிய பரமசிவனுடைய கோயில் கோபுர வாயிலின் காவற்படைத் தலைவனும், திருக்கையில் பிரம்பைக் கொண்டவனுமான நந்தியெம்பெருமானுடைய பாதாம்புயங்களைத் தியானிப்பவர் பிறவி வினையை நீங்குவர். (எ - று.)

(அ - ப.) தந்திரன் = காவற்படைத் தலைவன்.
நளினம் = தாமரை.

இதிகாசங்கள்

56. சிவரகசியம்

985. சிலையுடைச் சிலைஎம் பிரான்றிகழ்க் கயிலைக்கண்
ணிலைமை பெற்றிடுங் கணங்களின் முதன்மையு நிகரில்
புலமை பெற்றிடும் சைவதேசிகர்க் கெலாம் பொருவி
றலைமையும் பெற்ற நந்திதா டலைமிசைக் கொள்வாம். (56)

(இ - பொ.) மேருவை வில்லாகக் கொண்ட, நமது பரமசிவன் விளங்கும் கயிலாசத்தின்கண், நிலையான சிரஞ்சீவிகளாக விருக்கும் பூதகணங்களுக்கெல்லாம் முதன்மையான அதிபதியாகவும், ஒப்பில்லாத பாண்டித்தியமுடைய

சமய சந்தானாச்சாரியர் கட்கெல்லாம் தனித்தலைமைக் குருநாதனென்னும் பேர் பெற்றவராகவும் விளங்கும் நந்திதேவரின் பாதாம்புயங்களைத் தலைமேற் சூடிக் கொள்வாம். (எ - று.)

(அ - ப.) சிலையுடைச் சிலை = மேரு, வில்.

சாத்திரங்கள்

57. சைவசமய நெறி

986. நம்பன் கணத்துக்கு நாதனரு ணந்திபதம்
வம்பலர்கைக் கொண்டு பணிவாம். **(57)**

(இ - பொ.) நம்பத்தக்கவனாகிய பரமசிவனுடைய பூதகணங்களுக்கெல்லாம் நாயகனும் அறமுதல் நான்கை அருளியவனுமான நந்திதேவரின் மணமுடைய பாதாம்புயங்களைக் கைகூப்பித் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) நம்பன் = நம்பத்தக்கவன்.
வம்பு = மணம்.

58. பரமத திமிரபானு

987. வந்தீசர் போற்று மகேசன் றிருவாய்த
ணந்தீசர் தாளிணைக் காணும். **(58)**

(இ - பொ.) அரி, அயன், இந்திராதி தேவர்கள் போற்றும் மகேசுவரனாகிய பரமசிவத்தின் கோயிற் கோபுர வாயிலில் காவல் கொண்டிருக்கும் நந்திதேவர் துணைப் பாதங்கட்கு நாமெல்லாரும் அடிமை. (எ - று.)

(அ - ப.) ஈசர் = பிரமன், மால், இந்திரன்.
திருவாய் = கோபுரவாயில்.
ஆணும் = ஆள் + நாம் = அடிமை நாம்.

59. நிஷ்டானுபூதி

988. முந்துசஞ் சிதங்க டீர மும்மலக் கங்குல் பாற
வந்தியும் பகலு மில்லா வாதித்த ணகத்திற் றோன்ற
விந்தியம் புலன்கண் மாய வின்ப வாரிதியின் மூழ்க
நந்தியெம் பெருமான் பாத நளினமெஞ் சிரமேல் வைப்பாம். **(59)**

(இ - பொ.) பூர்வம் தாமாகத் தேடிக்கொண்ட தீவினைகளெல்லாம் தீரவும், ஆணவாதி மும்மலவிருளழிந் தோடவும், இப்பால் இராப்பகலில்லாத பரஞ்சோதியுள்ளத்தில் தோன்றவும், (அதனால்) இந்திரியங்களெல்லாஞ் (சுடப்பட்டு) மாயவும், உடனே ஆனந்த சாகரத்தில் மூழ்கிச் சுகிக்கவும், யாங்கள் நந்திதேவரின்பாதாம்புயங்களைச் சிரமேல் சூடிப் பூசிப்போம். (எ - று.)

(அ - ப.) சஞ்சிதம் = பூர்வவினை
கங்குல் = இருள்
இந்தியம் = இந்திரியம்
இன்பவாரிதி = இன்பக்கடல்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதினான்காம் பகுதி

இடபதேவர் வணக்கம்

அவினாசிப் புராணம்

989. முற்சிலம்பு விடுமதனை முளரியங்கண்
ணாலெரித்த முதல்வர் வேதச்
சொற்சிலம்பு புக்கொளியார் கோதைபா
கத்துடனே தோற்றஞ் செய்யும்
விற்சிலம்பு நிகர்மேனி விடையிடபத்
தனித்தேவர் மிளிர்மா ணிக்கப்
பொற்சிலம்பு கிண்கிணிசேர் புனைவுதரு
கனைகழல்கள் போற்றல் செய்வாம். (1)

(இ - பொ.) முன்னொரு காலத்தில் வனசமாதிச் சில பாணங்கள் பிரயோகித்த மன்மதனை அழற் கண்ணாலெரிக்கும் தலைவராய், வேதங்கள் முறையிடும் திருப்புக்கொளி அவினாசி ஈச்சுரர் (இடப்பாகத்தில்) பெருங் கருணையம்மை சமேதராய்த் தோன்றி ஆரோகணிக்கும் ஒள்ளிய மலை போலுந் திருமேனி யுடைய ஊர்தியாம் இடப தேவர் தம் ஒள்ளிய மாணிக்கப் பொற்சிலம்பின் கிண்கிணி யோசை சேர ஒலிக்கும் பாதங்களைப் போற்றுவாம். (எ - று).

(அ - ப.) முற்சிலம்பு = முன்சில் அம்பு
முளரி = நெருப்பு
சிலம்பு = சிலம்பு, ஒலிக்கும்
வில் = ஒளி
சிலம்பு = மலை
விடை = இடபம்
தனித்தேவர் = நந்திதேவர்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதினைந்தாம் பகுதி

ஐயனார் வணக்கம்

திருச்செந்தூர்ப் புராணம்

990. அரிய பூரணை புட்கலை யாமிரு
தெரிவை மார்முலைச் செங்கள பத்தொளி
விரவு சுந்தர மேருவொப் பாம்புயக்
குரிசி றண்டைக் குரைகழல் போற்றுவாம். (1)

(இ - பொ.) அருமையான பூரணை, புட்கலை என்று மிரண்டு தேவிமார்களின் முலையிற் பூசிய கலவைச் சாந்தின் (பிரகாசமான) மணம் கமழும் அழகிய மேரு மலை போலும் புயங்களுடைய ஐயனாரின் சதங்கைகள் ஒலிக்கும் பாதங்களை வணங்குவாம். (எ-று.)

(அ-ப.) குரிசில் = ஐயன்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதினாறாம் பகுதி

நவவீரர் வணக்கம்

1. திருப்பரங்கிரிப் புராணம்

991. பரையி னூபுர மணிகளிற் பிறந்திடும் பாலர்
பொருவில் சூரனைக் கிளையொடும் பிடுங்கிய புயத்தார்
முருக வேளடி நிழலெனப் பிரிந்திடா முறையோர்
விருது மேவிய நவமெனும் வீரரைப் பணிவாம். (1)

(இ-பொ.) பராசத்தியின் பாதச் சதங்கைச் சிலம்பில் பிறந்த பெண்கள் சிவமூர்த்தியை விருப்பால் நோக்கிக் கருப்பெற அவதரிக்கும் பிள்ளைகளும், ஒப்பில்லாத சூரபதுமனையவன் குலத்தோடு வேரறப் பிடுங்கிய புஜகரத்தினர்களும் சுப்பிரமணியக் கடவுளின் நிழலே கதியெனும் நெறி முறையுடையவர்களுமான வெற்றியையுடைய வீரவாகு தேவர் முதலான நவவீரர்களின் பாதங்களைப் பணிவாம். (எ-று.)

(அ-ப.) நூபுரம் = சதங்கை.
விருது = வெற்றி.

நவ வீரர்கள்:—வீரவாகு, வீர கேசரி, வீர மகேந்திரன், வீரமகேசன், வீரபுரத்தான், வீரராக்ஷன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் என்பவர்கள்.

2. திருத்தணிகைப் புராணம்

992. ஈர வான்மதி மிலைச்சிய பொலஞ்சடை இறைவனா ரருள்கூரக்
கார வாவிய குழலுமை நூபுரக் கதிர்மணி யிடைத் தோற்று
நார வாவியி னறுமலர்க் காவிநேர் நயன மாதர்க ளீன்ற
வீர வாகுவை முதலிய வீரர்தம் விரைமலர்ப் பதம்போற்றி. (2)

(இ-பொ.) காரிருளைப் போன்ற கூந்தலின் உமா மஹேசுவரி தமது பாதச் சிலம்பினின்று தோன்றும், ஆசைக் கினிய மணமுள்ள கருங்குவளை மலர் போலுங் கண்களையுடைய பெண்மணிகளைக் குளிர்ந்த வெண்ணிலா அணியும் பொன்னிற மாஞ் சடைமுடியுடை இறைவனாகிய பரமசிவன் அருள் கூர்ந்து நோக்கப் பெற்றெடுத்த வீரவாகு தேவர் முதலான நவவீரர்களின் மணங் கமழும் பாதாம்புயங்களுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) ஈரவான் = குளிர்ந்த.
மிலைச்சிய = சூடிய.
பொலம் = பொன்மயம்.
காரவாவிய = கரிய
காவி = கருங்குவளை.

3. திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

993. வெருவீர வாகுலத்தின் வினைவீர வுலகின்
விழைவீரத் தீவினைகண் மேலை வரவீர
மருவீர வாகுமிசை வருவீரற் கிளைய
மயில்வீர னயில்வீரன் வள்ளி யணைவீரன்
றிருவீர வாகுமுந் நான்குடை யத்திருத் தணிகைச்
செயவீரன் பின்புமையாள் சிலம்பி னவதரித்த
பொருவீர வாகுமுத லொன்பது வீரர்களாம்
புயவீர மலரடிக்குக் கரவீரம் புனைவாம். (3)

(இ - பொ.) அச்சம் அற, வருத்தமானது மேன்மேலும் உண்டாகாமல் பிரபஞ்சத்தில் பிறந்து மறுமையில் தீவினை வந்தணுகாவழி இழுத்துப் பிடிக்கும் வீரியமான பெருச்சாளி வாகனத்துக்கு மேல் வரும் கணபதிக்கு இளையவனும், மயில் வாகனனும், வடிவேலாயுதனும், வள்ளி மணவாளனும், வெற்றியின் பன்னிரு கரங்கள் உடையவனும், திருத்தணிகைத் தணிகாசலனுமான சுப்பிரமணியர்க்குப்பின் (தம்பிமார்களாய்) உமாமஹேசுவரியின் சிலம்பி லவதரித்த (பெண்மணிகளின் புத்திரர்களாம்) வீரவாகு முதலான நவவீரர்களின் பாதபங்கயங்களைக் கரங்கூப்பித் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) வெருவு = அச்சம்.
ஈர = அற, இழுக்க.
ஆகுலம் = வருத்தம்.
ஆகு = பெருச்சாளி
ஆகுமிசைவருவீரன் = கணேசன்.

4. திருவேரகப் புராணம்

994. ஆர வார வேலை வேலையாக வேலை வேலையுஞ்
சூரன் மார்பு மேவு மேவு தோகையார தோகையார்
பார மேறு தானை தானை யாதுவாகை வாகைசூழ்
வீர வாகு தேவராதி வீரர் பாத மேவுவார். (4)

(இ - பொ.) கடலிரைச்சல் போலிரைகின்ற வெள்ளத்துடன் வருஞ் சூரபதுமன் மார்புக் கிலக்காய் அப்பொழுதே தமது வேலாயுதத்தை விடும் மயில் வாகனரும், வள்ளி தெய்வயானைமாரின் தனபாரமேறும் ஆண் சிங்கமாகிய சுப்பிரமணியரின் கலை கசங்காது, உண்மையாகவே பக்கத்தில் சூழ்ந்து கொண்டிருக்கும் வீரவாகு தேவர் முதலான ஒன்பதின்மரின் பாதங்களைச் சரணாகதியாக அடைவர். (எ - று.)

(அ - ப.) ஆரவாரம் = இரைச்சல்.
வேலை = கடல், பொழுது.
தானை = கலை.
நையாது = கசங்காது.
வாகை = உண்மை.
வாகு = பக்கம்.

5. பழனிப் புராணம்

995. பாலொளிவெண் ணீற்றினர்செம் பவளவொளிச்
சடையின் பார்ப்பதி தன்பாலர்
சூலொளிவாட் பலகையர்சூர் முதறடிந்த
வேற்கிறைவர் துணைவர் தூய
வாலொளிய கூரெயிற்றர் வீரவாகு
வைமுதலோர் மணியிற் றேற்றம்
போலொளிரொன் பதின்மரையும் விரைமலர்தூய்த்
தூய்ப்பணிந்து போற்றுவாமால். (5)

(இ – பொ.) பால்போலும் வெளுத்த விபூதி தாரணராய், பவளம் போலுஞ் சிவந்த சடாமுடியினராய், பார்வதிக்குப் (பேர) புத்திரர்களாய், கருக்கான வாளாயுத மேந்திய பல கரங்களுடையவராய், சூரபது மனாதியசுரர்களைக் கொன்ற வேலாயுதக் கடவுளுக்குத் துணைவராய், பரிசுத்த வெண்மையும் கூர்மையுமுடைய தந்த வரிசைகளுடையவராய் மாணிக்க முதலான நவரத்தினங்கள் போல் பிரகாசிக்கும் வீரவாகு தேவராதி ஒன்பது பேர்களையும், மணமிக்க மலர்களால் (தூவித்தூவிப்) பூசித்துப் பணிவுடன் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) சூலொளி = கருக்கு.
தடிந்த = கொன்ற.
வால் = வெண்மை.
தூய்த்தூய் = தூவித்தூவி.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதினேழாம் பகுதி

வீரவாகு தேவர் வணக்கம்

1. கந்த புராணச் சுருக்கம்

996. பொங்குகிரி களிற்றலைமை யோதும் போது
பொற்புடைய பொற்கிரிமுன் னிற்குமாபோற்
றங்குதிறற் புகழ்வீரர் தம்மை யெண்ணிற் றானேமுன்
னெண்ணவருந் தலைமை யாளன்
பங்கமிலா நீடுலகை மூடுமல்லின் பகைவனவன்
பகைவ னவன் பகைவ னானேன்
மங்கலிலாப் புகழ்வீர வாகுவாய வரிசிலைக்கைக்
குரிசிலையாம் வணங்கல் செய்வாம். (1)

(இ - பொ.) அஷ்டகுல பர்வதங்களுக்கும் தலைமையாயுயர்ந்த தெதுவெனச் சொல்லப் புகுந்தால், அழகிய மேருமலையே முதலாவதாக நிற்கும். அது போல வெற்றியும் புகழுந்தங்கிய வீரர்களெண்மரில் முதன்மையாக எண்ணப் படும் தலைவனும், வேறுபாடில்லாத நெடிய உலகத்தை மூடிக்கொள்ளும் இருளுக்குப் பகைவனும் சூரியனைக் கோபித்த பானுகோபனுக்குச் சத்துருவாய் வந்து கொன்றவனும், என்றும் அழியாப் புகழ் படைத்த கையில் நீண்ட வில்லேந்தும் வீரவாகு தேவரை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) பொற்கிரி = மேருமலை.
பங்கம் = வேறுபாடு.
அல்லின் பகைவன் = சூரியன்.
அவன் பகைவன் = பானுகோபன்.
குரிசில் = ஆண்மகன்.

2. திருச்செந்தூர்ப் புராணம்

997. வடுத்த மாவிரு பிளவாகச் சோதிவேல்
விடுத்த வானவ னடிவிடாது போற்றியே
யடுத்த வானவர் சிறையகற்றச் செம்மணி
கொடுத்த வாள்வீர வாகுவை வழுத்துவாம். (2)

(இ - பொ.) (இளங்காயரும்பி) மாமர வடிவாக நின்ற சூரபதுமன் மார்பை இரு பிளவாகும்படி கதிர் வேல் விடத்தவறாத சுப்பிரமணியக் கடவுளின் திருவடியை என்றும் மறந்து விடாது போற்றிக் கொண்டடுத்துக் காத்திருந்த தேவர்களின் சிறை நீக்கி மீட்பதற்காக, மாணிக்கமாதி நவரத்தினங்கள் போல் கணக்கெடுத்த வீரவாகு தேவர் (முதலானோரை) வாழ்த்தி :வழிபடுவாம். (எ - று.)

(அ-ப.) வடுத்த = இளங்காயரும்பிய (விடுபடவும்)
விடு = விட.
வழுத்தல் = வாழ்த்தல்.
தவானவன் = தவறாதவனாகிய முருகன்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதினெட்டாம் பகுதி

வேல் மயில் சேவல் வணக்கம்

1. செவ்வந்திப் புராணம்

998. ஓகை யாற்றிரை முன்னாளி லுழக்கு மாவினையும் வாட்டு
மேக வெவ்வரையி னெல்லை யிடித்திடு மிமையோர் போற்றத்
தோகை மேலுலவு கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை. (1)

(இ - பொ.) முன்னாள் கடலில் மாமர வடிவமாய் நின்று வருத்தும் பாவியாகிய சூரபதுமனாதியோரை உவகையால் வாட்டுவதும், கிரவுஞ்ச கிரியைப் பிளந்து, கிரவுஞ்சன் மேல் இடித்துத் தள்ளுவதும், தேவர்கள் போற்றும்படியாக மயில் மேல் உலவிவரும் கந்தசாமிக் கடவுள் திருக்கரத்திருப்பதும், வெற்றியே கைக்கொள்வதுமான வேலாயுதத்தை வணங்குவதே நமக்குப் பெரிய வேலை. (எ -று.)

(அ-ப.) ஓகை = உவகை.
திரை = கடல்.
உழக்கும் = வருத்தும்.
வாகை = வெற்றி.
சுமக்கும் = தாங்கும்.

2. திருச்செந்தூர்ப் புராணம்

999. அரம டங்கலுந் தழைசெல மூலமே லாயுத்
தரம டங்கலும் பொருவுசூர் மாமுத றடிந்தே
நரம டங்கலுந் துதிப்பருங் குமரனாட் கமலக்
கரம டங்கலுங் கலஞ்செய்வே லென்கவிக் கருத்து. (2)

(இ - பொ.): பாதாளமட்டுக்கும் கீழ்ப்படியத் தன்னுடைய ஆணை தழைந்து செல் மூலகாரணமாய், வடதிசை எமன் போன்றிருந்த சூரபதுமன் முதலானோரைக் கொன்று, நரசிங்கமாகிய மகாவிஷ்ணுவுந் துதித்தற்கரிய குமாரக் கடவுளின் செந்தாமரை நிகர்கரங்கள் அடங்கலுந் திருவாபரணமாய் விளங்கும் வேலாயுதமே அடியேன் கவிகளுக்கெல்லாம் கருத்தாகும் பலன்• (எ - று.)

அரம் = பாதலம்.
மூலம் = காரணம்.
மடங்கல் = கீழ்ப்படிதல், எமன், சிங்கம்.
உத்தரம் = வடக்கு.
அடங்கலும் = முற்றும்.

3. திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

1000. பாலயிலுங் குழவியெனப் பாரி லுதியாமற்
பாறையினுங் கடியமனப் பாவையர் மாலுருமற்
சேலயிலுங் கொக்கென வெந்தீமை புரியாமற்
சேனையிலும் யானையிலுஞ் சிந்தனை வையாமற்
சூலையிலு நமன்றூதர் வாதையிலும் படாமற்
சூறையிலுங் கொடிய மனஞ்சுழன்று திரியாமற்
காலையிலும் பாம்பயிலுங் கார்மயிலை யுகைத்தோன்
கையயிலை மாலையினுங் காலையினும் பணிவாம். (3)

(இ - பொ.) பால் குடிக்குங் குழந்தையென உலகில் பிறவி யெடுக்காமலும், கல்லினும் வலிய மனத்தினராம் பெண்களை இச்சியாமலும், சேற்கண்டைகளையுண் கொக்குக்கதையெனக் கொடுந்தீமைகளைச் செய்யாமலும், ஆனைசேனை வேணுமென்ற கவனம் வைக்காமலும், சூலாயுத தாரிகளாம் எமதூதர்களின் உபத்திரவத்தில் அகப்படாமலும், சுழற்காற்றிலும் கொடிய மனமானது திரிந்தலையாமலும், வாய்உண்ட பாம்பைத்தின் மயில் மேல் ஏறினவனுகிய (சிவசண்முகக் கடவுளின்) கையில் உள்ள வேலாயுதத்தைக் காலைமாலையிரு வேளைகளிலும் வணங்குவாம். (எ - று.)

(அ - ப.)		
	குழவி	= குழந்தை.
	பாவையர்	= பெண்கள்.
	மால்	= ஆசை.
	சூறை	= சுழல் காற்று.
	கால்	= காற்று.
	அயிலல்	= உண்ணல்.
	உகைத்தல்	= ஏறுதல்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பத்தொன்பதாம் பகுதி

மயில் வணக்கம்

திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

1001. அருமயிலை யொருபொருளுக் கடிமையிலை பிறருக்கந்
தகனுக்காண் மையிலையடி யேன்பால் வருதற்
கெருமையிலை சிறுமையிலை யின்மையிலை பகைஞர்க்
கெளிமையிலை மடமையிலை யிழிதகைமை யிலைநோய்
பொருமையிலை வறுமையிலை பொய்மையிலை பிறவிப்
புன்மையிலை தீமையிலை பொருமையிலை மகவான்
றருமயிலை வனமயிலை மணந்த திருத்தணிகைச்
சண்முகனா ருவந்தேறுந் தனிமயிலைத் தொழவே.

(இ - பொ.) தேவேந்திரன் தந்த தெய்வ யானையையும், தினைப்புனத்து வள்ளியம்மனையும் மணந்த மணவாளனும் திருத்தணிகை சண்முக சுந்தரக் கடவுள் ஏறிய ஒப்பற்றதோர் மயிலைத் தொழுது வருவதால், அடியேனுக்குக் கிடைத்தற்கரியதோர் பொருளில்லை (2) யாரொருவர்க்கும் அடிமையாய்ப் போவனில்லை (3) என் மாட்டு வருவதற்குத் தக்க ஆண்மையும் எருமையும் எமனுக்கில்லை (4) இகழ்ச்சி என்பதே கிடையாது (5) எங்கும் இல்லை என்ற வாக்கில்லை (6) பகைஞர்களுக்குப் பயப்படுவதில்லை (7) அறியாமை இல்லை (8) எவ்வொரு துன்மார்க்க நடத்தையுங் கிடையாது (9) இருமல் முதலான நோய்களில்லை (10) தரித்திர மென்பதில்லை (11) பொய்யே கிடையாது (12) அற்பத்தனமான பிறப்பில்லை (13) தீமையில்லை (14) பொருமையும் இல்லையாம். (எ-று.)

என்றதனால்,
1. தானாகக்கிடைப்பது.
2. எஜமானனாய்ப் போவன்.
3. யானடியனாகலான்.
4. புகழ்ச்சியே உண்டாம்.
5. இரந்தாலும் இருக்கிறது.
6. துணிவுடைமை
7. அறிவுடைமை.
8. சன்மார்க்கம்.
9. சுகமுடைமை.
10. செல்வம்.
11. உண்மை.
12. முக்தி.
13. நன்மை.
14. கருணை.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபதாம் பகுதி

சேவல் வணக்கம்

திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

1002. மஞ்சேவல் கொளுமகவான் வந்தேவல் புரிய
மகிதலமு மேவல்கொளு மாசூர பன்ம
னெஞ்சேவ லெனப்பிளந்து நிணங்கொறித்துச் சொரிசெந்
நீரருந்திக் கொக்கரித்து நிலவுலக மனைத்து
முஞ்சேவல் செய்யவிரு சிறைநீழல் பரப்பி யுவந்தேவல்
விரைந்து குகனுயர் வலக்கை யமருஞ்
செஞ்சேவற் கொடிக்கடி யேன்றினமேல் புரியத்
தீவினையு மெனதேவற் றிறத்தி னகன்றிடுமே.

(இ-பொ.) மழை பொழியும்படி மேகங்களை ஏவுகின்ற தேவேந்திரனும் வந்து குற்றேவல் செய்ய உலக மெல்லாம் தன் ஆணையைச் செலுத்தும் சூரபதுமனுடைய நெஞ்சுத் துணிவைப் பிளந்தும் அவன் கொழுப்பைக் கொறித்துத் தின்றும், சொரிந் தோடுகிற இரத்தத்தைக் குடித்துக் கொக்கரித்தும், சர்வாண்டங்களும் உய்யும்படியாக இரு சிறகுகளினால் நிழல் பரவக்கொடுத்தும் பணிவிடைக்குத் தயாராயிருந்தும் குகப்பெருமானாகிய முருகக் கடவுளின் வலபாரிசமாய் பறந்தாடும் சேவலங் கொடிக்கு ஏழையேன் நாள்தோறும் தொண்டு பூண்டொழுகத் தீவினையாகிய யானென்பதற்று விடுமாம். (எ - று.)

(அ - ப.) மஞ்சு = மேகம்.
மகவான் = இந்திரன்.
நிணம் = கொழுப்பு.
நெஞ்சேவல் = நெஞ்சு துணிவு.
உஞ்சு = உய்கை.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்தொன்றாம் பகுதி

திருமால் வணக்கம்

1. திருப்பரங்கிரிப் புராணம்

1003. முன்னொருநா ளரியதவ மிழைத்தருளி முனிவருக்கு முன்னர்க் காட்சி
யுன்னியகா லாதிவரா கத்தினோடு நரசிங்க வுருவங் காட்டி
தன்னிகரில் கமலையுடன் முருகர் மணக்கோல மெழுந்தகைமை நோக்கிப்
பன்னுபுகழ்ப் பரங்கிரியி லிருந்தபவ ளத்திரளைப் பணிதல் செய்வாம். (1)

(இ - பொ.) முன்னொரு காலத்தில் அரிய தவத்தினைச் செய்த முனிவர் ஒருவருக்கு, ஆதிவராக, நரசிங்க உருவங்காட்டி, ஒப்பற்ற திருமகளுடன் முருகப் பெருமான் தெய்வயானைப் பிராட்டியாரை மணந்த திருமணக் கோலங் கண்டு பவளமலை போல் விளங்கிய திருமாலை வணங்குவாம். (எ-று.)

---

2. மச்ச புராணம்

1004. கண்ணகன் ஞாலந் தருமெண்கட் கடவுடனை யுந்திக் கமலம் பூத்த
பண்ணவன் பார்முழுது மளந்துண் டுமிழ்ந்த பரமனுயர் பச்சை மேக
வண்ணவன் மதகரிக் கருளுங் கடவுணெடுந் தடங்கடற்குள் வளரா நின்ற
வண்ணலஞ் சேல்வடி வெடுத்த நாரணன்பொற் றாமரைத்தா ளகத்துள்
வைப்பாம். (2)

(இ - பொ.) பரந்த உலகத்தைப் படையாநிற்கும் எட்டுக் கண்களையுடைய நான்முகனை நாபிக்கமலத்தில் உற்பவித்த பகவானும், சுவர்க்க-மத்திய-பாதாள மென்கிற மூவுலகங்களையும் ஈரடியால் அளந்ததுடன் உண்டு உமிழ்ந்த பரமாத்மாவாய், உயர்ந்த பச்சைப் பீதாம்பர முடுக்கும் நீலமேக சரீரனும், கஜேந்திரனுக்கு மோட்சங் கொடுக்கும் கரிவரதனாய் நீண்ட கரையையுடைய பாற்கடலில் கண்வளரா நின்ற பள்ளி கொண்டானும், மச்சாவதாரம் எடுத்த நாராயணனுமான மகாவிஷ்ணுவின் பாதாம்புயங்களை மனனஞ் செய்வாம். (எ - று.)

(அ - ப.) எண் கண் கடவுள் = சதுர்முகன்.
உந்திக்கமலம் = நாபிக்கமலம்.
பார்முழுதும் = மூவுலகும்.
நெடுந்தடம் = நீண்டகரை.
வளரா = கண்வளர்.
சேல்வடிவு = மச்சாவதாரம்.
நாரணன் = நாராயணன்.

3. பவானிகூடற் புராணம்

1005. அஞ்சிறைவண் டினங்குழுமி யலம்ப முகையுடைந்து மடலவிழ்ந்த செம்பொற்
கஞ்சமக ளினிதுறையு மணிமார்பும் வனமாலை கமழ்திண் டோளும்
பஞ்சவிதப் படைக்கரமு மணிமுடியும் பார்முழுது மளந்த பைம்பொற்
செஞ்சரண விணைமலரு நினைந்தாதி கேசவனைத் தியானஞ் செய்வாம். (3)

(இ - பொ.) அழகிய சிறகுகளை யுடைத்தாய் வண்டுக் கூட்டங்கள் ஒன்றுகூடிக் கீதம் பாடத்தகும் மொக்கெடுத்து முழுதும் மலர்ந்த செங்கமலாசனத்திருமகள் இனிது வசிக்கிற அழகிய மார்பையும், துளசி மாலைகள் தொங்கும் திண்ணிய தோள்களையும், சக்கர முதலான ஐவகை ஆயுதங்களையும், மாணிக்கம் பதித்த வைரமுடியையும், உலகெலாம் அளந்த செம்பசும் பொன் சரணாரவிந்தம் இரண்டையும் உடைய ஆதிகேசவப் பெருமாளைத் தியானிப்பாம். (எ-று.)

(அ - ப.) குழுமி = கூடி.
அலம்ப = ஒலிக்க.
முகை = மொக்கு.
உடைந்து = விட்டு.
மடல் = மலர்.
செங்கஞ்சம் = செங்கமலம்.
பொன் மகள் = இலட்சுமி.
வனம் = பிருந்தாவனம் (துளசி).

4. திருநெல்வேலிப் புராணம்

1006. முருகலர் குழல்வை வேற்கண் மோகினி வடிவமாகி
யிருவினை தெய்வமென்றே யெண்ணிய முனிவர் செய்யுந்
தருமமுந் தவமு மாற்றித்தற் பரனிடத்து வைகுங்
கருமுகில் வண்ணன் செய்ய கமலத்தாள் வணக்கஞ் செய்வாம். (4)

(இ - பொ.) தேன் பொருந்திய மலர்களை யணிந்துள்ள கூந்தலினையும், கூர்மையான வேல் போன்ற கண்களையுமுடைய மோகினி வடிவங் கொண்டு கருமமே கடவுளென்றெண்ணிய முனிவர்கள் செய்யும் தருமமும் தவமும் பயன்படாமற் செய்து, சிவபெருமானிடத்துத் தங்கும் கரிய மேகம் போன்ற நிறத்தை யுடையவனாகிய திருமாலினுடைய தாமரை மலர் போன்ற திருவடிகட்கு வணக்கம் செலுத்துவாம் .(எ-று)

5. திருச்செங்கோட்டுப் புராணம்

1007. சங்கு சக்கரஞ் சரோருக மிரண்டினிற் றரித்தொரு பெருங்கார்வந்
தங்கு தித்தென்றும் பருமிம் பருமனை வருமமைந் தேத்தப்
பங்கயத் திருவுரம் பெறவரம் பெறப்பணித் தவர்பணித் தூங்குஞ்
செங்க ணத்தினர் கருங்கணத் தினர்படச் செயிர்த்தவ ரமைக்காப்பார். (5)

(இ - பொ.) சங்கு சக்கராயுதங்களைத் தாமரை மலர் போன்ற இரண்டு கைகளிற்றாங்கி, ஒப்பற்ற பெரிய மேகம் வந்து உதித்ததென்று மண்ணுலகத்தவரும்

விண்ணுலகத்தவரும் எல்லோரும் அமைதியுடன் துதிக்கத் தாமரை மலரில் வாழும் திருமகள் மார்பை இடமாகப் பெறத் தவஞ் செய்ய அளித்து, ஆதிசேடன் மீது பள்ளி கொள்ளும் சிவந்த கண்ணையுடையவரும் கருநிறம் பொருந்திய இராவணாதி அரக்கர்களைச் சினந்து அழித்தவருமாகிய திருமால் எம்மைக் காப்பாராக. (எ-று.)

6. இதிகாசம் – மகாபாரதம்

1008. ஆக்கு மாறய னாமுத லாக்கிய வுலகங்
காக்கு மாறுசெங்கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னாமவை வீந்தநாண் மீளப்
பூக்கு மாமுத லெவனவன் பொன்னடி போற்றி. (6)

(இ - பொ.) படைக்குந் தொழில் செய்தலால் பிரமனாகவும், படைத்தவுலகங்களைக் காக்குந் தொழிலைச் செய்தலால் செந்தாமரைக் கண்ணனாகிய கருணைக் கடலாந் திருமாலாகவும், அவற்றை அழிக்குந்தன்மையால் சிவனாகவும் ஆகி, அவை அழிந்த நாளில் மீண்டும் எல்லாவற்றையுந் தோற்றுவிக்கின்றவன் எவனோ அவன் அழகிய திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

1009. அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமக டலைவனைத் தேவ தேவனை
யிருபத முளரிக ளிறைஞ்சி யேத்துவாம். (7)

(இ - பொ.) அறிதற்கரிய வேத முதல்வனாய், சக்கர பாணியாம் மாயா விநோதனாய், நீல மேக சரீரனாய், செந்தாமரைக் கண்ணனாய், இலட்சுமீபதியாய் விளங்கும் தேவராஜனான மஹா விஷ்ணுவின் பாதாம்புயங்கள் இரண்டையும் வணங்கி வாழ்த்துவாம். (எ - று.)

(அ - ப.) ஆழி = சக்கரம்.
கருமுகில் = நீலமேகம்.
முளரி = தாமரை.

7. நல்லாப்பிள்ளை பாரதம்

1010. ஆரணனை யாரணத்துட் பொருளை யண்ட
மளந்தானை யளக்கரிய வாடலானைக்
காரணனைக் காரணங்கள் கடந்தோன் றன்னைக்
கண்மணியைக் கண்மணிக்கு ளொளியாய் நின்ற
பூரணனைப் பூரணப் பொற்கலசக் கொங்கைப்
பூமாது நாயகனைப் பொருவில் செங்கை
வாரணனை வாரணமுன் வந்துதோன்று
மாதவனைக் காதலுடன் வணங்கி வாழ்வாம். (8)

(இ - பொ.) வேதநாயகனாய், வேதத்துட் பரம் பொருளாய், உலக மூன்றும் அளந்தவனாய், அளவில்லாத லீலா விநோதனாய், மூலகாரணனாய், காரணங்களெல்லாங் கடந்த காரியானுகூலனாய், கிருபா நோக்கமுடைய கண்மணியாய்,

ெ

கண்மணிக்கோர் உள்ளொளியாய், பரிபூரணனாய், பூரண கும்பத் தனங்களையுடைய இலக்குமீ காந்தனாய், ஒப்பில்லாத செங்கையில் சங்கமேந்தியவனாய், கஜேந்திரன் முன்வந்து தோன்றி இரட்சிக்கும் மாதவனாயுள்ள வரதராஜனை அன்பால் வணங்கி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) வாரணம் = சங்கு, யானைக்கும்.
செங்கைவாரணனை = செங்கைக் காப்புடையவனாய் என்றுமாம்.

8. குசேலோபாக்கியானம்

1011. தாவகிச் சிரத்தினிற் சரண்வைத் தாடினோன்
பூவகிற் கரும்புகை போர்த்த பொற்குழன்
மாவகிர்க் கருங்கண்வேய் வாட்டுந் தோட்டுணைத்
தேவகி தனயனைச் சிந்தை செய்குவாம். (9)

(இ - பொ.) பூவாலும், அகில் கட்டையின் புகையாலும், நிறைந்து பரிமளித்த பொன்னாபரணமணி கூந்தலும், மாவடுவின் பிளப்பை யொத்த கண்களும், மூங்கிலைப் பழித்த தோள்களுமுடைய வாசுதேவ தேவகியின் குமாரனும், தாவிய காளிங்கனென்னும் பாம்பின் முடியில் திருவடியூன்றி யாடியவனுமான கிருஷ்ணமூர்த்தியைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) அகி = பாம்பு (காளிங்கன்)
வேய் = மூங்கில்.

9. பகவற்கீதை

1012. ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கள் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மின்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம். (10)

(இ - பொ.) பிருதிவியாதி ஐவகைப் பூத சம்பந்தமான தேகமும், மனமாதி கரணங்கள் நான்கும், ராஜஸமாதி முக்குணங்களும், நல்வினை தீவினை என்ற இரண்டும் இல்லாமல் எல்லாராலும் திகைதப்பி நிற்கும் பொய்ப்பிறவியாம் மாயா—யிருள் நீங்க ஞானப் பிரகாசப் பொருளை விவரித்து, (அருச்சுனனுக்கு) உபதேசித்த பகவானும், கையில் விளங்கும் சக்ராயுதமுடைய செந்தாமரைக் கண்ணனுமாம் ஸ்ரீமத் கண்ணபிரானைத் தியானிப்பாம். (எ—று.)

(அ - ப.) குணங்கள் = இராஜசம், தாமசம் சாத்மிகம்.
பொய்யிருள் = பொய்ப்பிறவி.
ஞானக்கதிர்ப்பொருள் = ஞானப் பிரகாசப் பொருள்.
விரித்த = விவரித்த
புத்தேள் = பகவான்.

10. பிரபோத சந்திரோதயம்

1013. திருமடந்தை தன்காதலன் சிவந்ததாண் மலருங்
கருணையந் தடங்கண்களுநாபி யங்கமலத்
தொருகுழந் தையுமுடுத்த பொன்னுடையுந் தொடுத்த
மருமலிந்த பைந்துளவு மென்மனத்துள் வாழியவே. (11)

(இ - பொ.) உந்திக் கமலத்திலே யுதித்த, குழந்தையாஞ் சதுர்முகப் பிரமனையும், உடுக்கின்ற பட்டுப் பீதாம்பர உடையையும் (உடைய) இலட்சுமீபதியாம் மஹா விஷ்ணுவின் செந்தாமரைப் பாதங்களும், கிருபா கடாட்சவீக்ஷண்யமும், மணமுள்ள துளசி மாலையும் அடியேன் மனத்துள் வாழ்வதாகுக. (எ — று.)

(அ - ப.) திருமடந்தை = திருமகள்.
பொன் ஆடை = பட்டுப் பீதாம்பரம், (சரிகை அங்க வஸ்திரத்துக்கும்).

11. தேவாங்க புராணம்

1014. தருவுமிரு நிதியுமெனத் தருமுபய பதுமகர தலகம் பீரன்
பருவமதி நயவதன ராசயரா சேந்திர னருள்பாலன் சீல
மருவுசுக வசன வங்கார திருமலைப் போடயநிருபன் மகிழ்ந்து போற்றுங்
திருவளரும் பாதாள ராய வரதனைத் தினமும் சிந்தை செய்வாம். (12)

(இ - பொ.) கற்பக முதலிய ஐந்து தருக்களையும் இரண்டு நிதிகளையும் போலத் தன்னையடைந்திருக்கின்ற இரப்பவர்களுக்கு மாருது கொடுக்கின்ற, தாமரை மலர் போன்ற இரண்டு கரங்களையும், வீரத்தையுடையவனும், பூரண சந்திரன் போலும் இன்பமுள்ள முகத்தையுடைய இராஜ்ய (இராசேந்திரன்) போடன் என்னும் அரசர்க்கு அரசன் பெற்றருளிய புத்திரனுமாய், நல்ல ஒழுக்கம் பொருந்திய இன்பமாகிய சொல்லையுமுடைய வங்காரு திருமலைப் போடயனென்னும் அரசன், மகிழ்ந்து தோத்திரஞ் செய்கின்ற தெய்விக மிகுந்த பாதாள வரதராஜனைத் தினமும் மனனஞ் செய்வாம். (எ - று).

(அ - ப.) இரு நிதி = சங்கநிதி, பதுமநிதி.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்திரண்டாம் பகுதி

திருமகள் வணக்கம்

1. காசி காண்டம்

1015. மூவுலகு மிடரியற்று மடலவுண
னுயிரொழிய முனிவு கூர்ந்த
பூவையுறழ் திருமேனி யருட்கடவு
ளகன்மார்பிற் பொலிந்து தோன்றித்
தேவருல கினும்விளங்கும் புகழ்க்கொல்லா
புரத்தினிது சேர்ந்து வைகும்
பாவையிரு தாடொழுது பழமறை
தேர்குறு முனிவன் பழிச்சுகின்றான். (1)

(இ-பொ.) சொர்க்க-மத்திய-பாதாளமென்கிற மூன்றுலகமும் துன்பம் விளைக்கின்ற இராட்சசனும் இராவணனுடைய உயிர் நீங்கக் கோபிக்கும், பூப் போலுந் திருமேனியையுடைய மகாவிஷ்ணுவின் மார்பில், பிரகாசமாக விளங்கி, தேவலோகமெலாம் புகழ்கின்ற கொல்லாபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பதுமையைப் போன்றவளாம் இலட்சுமியின் திருவடிகளைப் பழமையான வேதங்களை உணர்ந்த அகத்திய முனிவன் பணிந்து போற்றுகின்றான். (எ-று.)

ஆதலால் நாமும் பணிந்து போற்றுவாம் என்பது கருத்து.

(அ-ப.) முனிவு கூர்ந்து = கோபித்து.
உறழ் = நிகர்.
குறுமுனி = அகத்தியன்.
பழிச்சுகின்றான் = வாழ்த்துகின்றான்.

1016. கொழுதியிசை யளிமுரலுந் தாமரைமென் பொகுட்டிலுறை கொள்கை போல
மழையுறழுந் திருமேனி மணிவண்ண னிதயமலர் வைகு மானே
முழுதுலகு மினிதீன்ற வருட்கொம்பே கரகமல முகிழ்த்தெந் நாளுங்
கழிபெருங் காதலிற் றொழுவோர் வினைதீரவருள்கொழிக்கும் கமலக் கண்ணாய். (2)

இ - பொ.) ஒரே கும்பலாகக் கூடிக்கொண்டு வண்டுகள் கீதம் பாடும் செந்தாமரை மலரில் வசிப்பதுபோலவே, நீலமேக சரீரனும், ஸ்ரீமந் நாராயணனுடைய (மார்பின்) இருதய மலரில் வாழ்கின்ற மானனையாளே ! அகிலாண்டமும்

அன்பில் பெற்றெடுத்த கொம்பனையே! (மின்னலும்) தெறிக்கத்தக்க செங்கமலக் கண் உடையவளே ! உன்னை எந்நாளும் கரங்கள் குவித்துப் பேரன்பால் தொழும் எனக்கும் என்போல்வாருக்கும் பிறவி வினை தீரக் கிருபை செய்வாய். (எ—று.)

(அ - ப.) கொழுதி = கோதி (கும்பு கூடி)
அளி = வண்டு.
முரல் = கீதம்.
மழை யுறழும் = மழை நிகர்க்கும்.
வைகும் = வாழும்.
முகிழ்த்து = குவித்து.
கழிபெருங்காதல் = அடங்காத பேரன்பு.
கொழிக்கும் = தெறிக்கும்.

1017. கமலைதிரு மருமார்பன் மனைக்கிழத்தி
செழுங்கமலக் கையாய செய்ய,
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலான்
றனையீன்ற விந்தை தூய
வமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலு
ளவதரித்தோ யன்பர் நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிரும் செழுஞ்சுடரே
யெனவணக்கஞ் செய்வான் மன்னே. (3)

(இ - பொ.) கமலவல்லியே! மகாவிஷ்ணுவின் மனையாட்டியே! செந்தாமரைக் கையுடைய அன்னையே, பரிசுத்த வதியே! பசிய கருப்பம் வில் வளைக்கும் மன்மதனைப் பெற்ற வீர லட்சுமியே! துல்லியமான அமுதம் நிறைந்த கும்பத் தனங்களுடைய புஜகரியே! பாற்கடலிற் பிறந்த பகவதியே! தாசர்களுடைய நெஞ்சினில் ஆணவாதி சேட்டைகள் அகல விளங்கும் செஞ்சுடர் போன்ற நாராயணியே! யெனப்பலவாறும் வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) மனைக் கிழத்தி = மனையாட்டி
பசுங்கழை = கரும்பு.
குழைக்கும் = வளைக்கும்.
வேனிலான் = மன்மதன்.
விந்தை = வீரலட்சுமி.
திமிரம் = மூலமலம்.

1018. மடற்கமல நறும்பொகுட்டி லரசிருக்குஞ்
செந்துவர்வாய் மயிலேமற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றே மணிவண்ண
னுலகமெலாங் காவல் பூண்டான்
படைத்தனனுன் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் றானுந்
துடைத்தனனின் பெருஞ்சீர்த்தி யெம்மனோரா
லெடுத்துச் சொல்லற் பாற்றே (4)

(இ - பொ.) இதழ்கள் மலர்ந்துமணமுடைய செந்தாமரையில் வீற்றிருக்கும் சிவந்து துவரிய வாயின் மயிலணங்காம் இலட்சுமியே! ஒரு பட்சத்துக்கு உன் கடைக்கண் உத்தரவு கேட்டல்லவோ சர்வாண்டங்களையும் நான்முகப் பிரமன் படைத்தனன்! மகாவிஷ்ணு கொடுத்துப் பாதுகாத்தனன்! பாலசந்திரனை யணிந்த பரமசிவன் அழித்தனன்! ஆகையால் இன்னும் நின் பெரும் புகழை எம்போலியரால் எடுத்துச் சொல்லவும் படுமோ! (எ - று.)

(அ - ப.) மடல் = இதழ்.
படைத்தன்றே = கொண்டல்லவா ?
பெருங்கீர்த்தி = பெரும்புகழ்.
எம்மனோர் = எம்போலியர்.
சொல்லற்பாற்றே = சொல்லற்பாலதோ.

1019. மல்லனெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கு மன்னர் யாருங்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகி
னிகரில்லாக் காட்சி யோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகை புனைவீரர் தாமு
மல்லிமலர்ப் பொகுட்டுறையு மணியிழைநின்
னருணோக்க மடைந்து ளாரே. (5)

(இ-பொ.) செந்தாமரைக் கமலத்து வசிக்கும் இலட்சுமி தேவியே ! நின் கிருபா நோக்கத்தை, மிகப்பழைய இத் தொல்லுலகத்தில் உள்ள எல்லாரும், பட்சபாதமில்லாமல் தனிச் செங்கோல் செலுத்தும் மன்னவர்களும், கல்வியிலும் பேர் அறிவிலும் கட்டழகிலும் ஒப்பில்லாத ஞானிகளும், காட்சியாளர்களும் வெல்லத் தக்க ஆயுதத்தினால் பகைவரை வேரறுத்து யுத்தகளத்தில் வெற்றி மாலையணி வீரர்களும் அடைந்துள்ளார். (எ-று.)

(அ-ப.) மல்லல் = மிகுதி
நெடும் = நெடுங்காலம் (பழமை)
அனைத்தும் = அனைத்துயிரும்
புரக்கும் = ஆளும்
காட்சியோர் = ஞானிகள்
படை = ஆயுதம்
பகை = பகைவர்
வாகை = வெற்றிமாலை

1020. செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவே வேலை
யங்கணால கிருடிரக்கு மலர்கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணி
லெங்குளைநீ யவணன்றே மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்ப தம்மா (6)

(இ-பொ.) செந்தாமரைப்பூங் கமலத்தில் பிரகாசித்து விளங்கும் அழகிய திருமேனியுடைய திருமகளே ! அலை கடலால் சூழப்பட்ட உலகின் இருளைப் போக்குகிற சூரியனையும், சந்திரனையும், (தேவர்கள் யாகத்துக்காகக் கூட்டி வளர்க்கும்) அக்கினியையும், யாவர்க்கும் உதவுகிற பூங்கொடியம்மையே ! நீ நெடிய கானகம், மலை, மண் முதலாய் எங்கிருக்கின்றாயோ அங்கல்லவோ உன் இலட்சுமி விலாசம் பொருந்திய பல்வளமும் மேம்பட்டு விளங்குவது! (எ - று.)

(அ-ப.) பொலம் = அழகு
திரு = திருமகள்
அலர்கதிர் = சூரியன்
வெண்மதி = வெண்ணிலா
பொங்கழல் = கொதிக்குந் தீ

1021. என்றுதமிழ்க் குறுமுனிவன் பன்னியோடு
மிருநிலத்தி லிறைஞ்ச லோடு
நன்றுனது துதிமகிழ்ந்தோ நான்மறையோ
யித்துதியை நவின்றோர் யாரும்
பொன்றலரும் பெரும்போக நுகர்ந்திடுவ
ரீங்கிதனைப் பொறித்த வேடு
மன்றன்மனை யகத்திருப்பின் வறுமைதரு
தவ்வையவண் மருவல் செய்யாள். (7)

(இ - பொ.) என இவ்வாறாகக் குறுமுனிவனாகிய அகத்தியன் துதித்துத் தன் பத்தினியாகிய உலோபா முத்திரையோடு பெரிய நிலத்தில் விழுந்து வணங்கியவுடன், “நல்லது; உனது துதியைக்கேட்டு மகிழ்ச்சியடைந்தோம். நான்கு வேதங்களிலும் வல்லனே ! இத் துதிப் பாடல்களை ஓதியவர் யாவரும் அழியாத பெரிய போகத்தை அனுபவிப்பர் ; இவ்வுலகில் இப் பாடல்கள் எழுதப்பெற்ற ஏடுகளை விளக்கம் பொருந்திய வீட்டின்கண் வைத்திருப்பின், வறுமையைத்தரும் மூத்தாள் தங்கமாட்டாள்” என்று வரமளித்தாள் திருமகள். (எ - று.)

2. திருப்பரங்கிரிப் புராணம்

1022. திரண்டு முனிவ ரிருபாலுஞ் சிறந்து தினமும் சேவிப்ப
வரந்தந் தருளும் பெண்கொடியை வடிவேற் குமரன் மணக்கோலம்
புரிந்த வழகையிரு விழிக்கு விருந்தா யருந்தும் புத்தமுதைப்
பரங்குன்ற மமர்ந்த செழுந்திருவைப் பணிந்து திருவைப் பொருந்துவாம். (8)

(இ - பொ.) நாள்தோறும் முனிவர் கூட்டங்கள் திரண்டுவந்து இரு புறமும் நின்று சேவிக்க அவர்களுக்கு வரங்கொடுக்கும் பெண்கொடியாய், வடிவேல் ஏந்தும் குமாரக் கடவுளுக்கு (தமது குமாரிகளாகிய வள்ளி தெய்வயானையைக் கொடுத்து)த் திருமணக்கோலஞ் செய்வித்த சுந்தரியாய், நமது இரண்டு கண்களுக்கு நூதனமாயுண்ணத் தகும் புது அமிர்தமாய், திருப்பரங்குன்றத் தெழுந்தருளிய] இலட்சுமி தேவியை வணங்கிப் பேரின்பச் செல்வத்தை அடைவாம். (எ-று.)

(அ-ப.) விருந்து = புதுமை
புத்தமுது = புது அமுதம்
செழுந்திரு = திருமகள்
திரு = செல்வம்

3. திருவாரூர்ப் புராணம்

1023. தண்கமலத் திருந்தீச னடிக்கமல மனக்கமலந் தன்னில் வைத்து
வண்கமலக் கண்ணனை மணவாள னெனப்பெறுவான் மாதவஞ்செய்
தொண்கமலா லயமெனும் பேரொளி யார்ந்த திருவாரூர்க் குகந்தணிந்த
பெண்கமலங் கைக்கமலம் பிடித்தகொடி தனைதொழுது பெரிது வாழ்வாம். (9)

(இ-பொ.) தண்டாமரைத் திருவாயிருந்து செந்தாமரைக் கண்ணனாகிய மகாவிஷ்ணுவைத் தனக்கு மணாளனாகக் கொள்ளும்பொருட்டு, பரமேசனுடைய பாத பங்கயங்களை இருதய கமலத்தில் வைத்துப் பெரிய தவத்தைச் செய்து கொண்டே ஒள்ளிய கமலாலயமென்னும் பேரழகு வாய்ந்த திருவாரூரில் மகிழ்ந்திருந்த கமலவல்லியும், கையில் செந்தாமரைப் பூவேந்துபவளுமாம் இலட்சுமி பிராட்டியைத் துதித்துப் பெருவாழ்வு வாழ்வாம். (எ - று.)

(அ - ப) உகந்து = மகிழ்ந்து.

4. மச்ச புராணம்

1024. கந்தருவ ரியக்கர் விஞ்சை வல்லவர் வானகத் தமரர் கருவி யாழ்ப்பண்
முந்திருவ ராயிரங் கணிந்திர னான்முகன் மறையோர் முனிவோர் நாகர்
வந்திருதாண் மலர்துதிப்ப மாயவன் செம்மணி மார்பின் மருவி வாழுஞ்
செந்திருவி னறுங்கமலச் சுந்தரப் பொற்பா தமலர் சென்னி சேர்ப்பாம். (10)

(இ - பொ.) கந்தருவர், இயக்கர், வித்யாதரர், (யாழிசையில் வல்ல) தும்புரு நாரதர், வானுலகத்துத் தேவர்கள், ஆயிரங்கண் தேவேந்திரன், சதுர்முகப் பிரமன், வேதியர், முனிவர், நாகலோகத்தினர் இவர்கள் யாவரும் வந்து உபய சரணாரவிந்தங்களைத் துதிக்க, ஸ்ரீமந் நாராயணனுடைய துளசி மாலையணி மார்பில் பொருந்தி வாழும் இலட்சுமி பிராட்டியாரின் மணம் பொருந்திய அழகிய பொற்பாத கமலங்களைச் சிரமேல் சேர முடிப்பாம். (எ - று.)

(அ - ப.) கருவி யாழ்ப்பண்முந்து இருவர்- தும்புரு நாரதர்.

5. திருச்செங்கோட்டுப் புராணம்

1025. நானிலத் தவர்நம தியரெனச்சீல நண்புறி லவர்க்கெல்லா
மாநிலத் தவண்மா நிதிமுதல் வளம்வழங்கு பொன்மலர்க் கோதை
தேனலர்ந் துளவணிந் தவன்றிரு வுரந்திளைத் திடுதனப் பாவை
வேனிலற் புதவேந்தை வேதனைப் பெறுமென் கொடியடி சேர்வாம். (11)

(இ - பொ. உலகத்தார் பகவதியே யெனச் சிறிது நட்பு பாராட்டினும் அவர்களுக்கெல்லாம் பூலோகத்து அஷ்ட ஐஸ்வர்யங்களும் தரும் பங்கஜவல்லியாய் ஒரு வித மணங்கமழ் துளவ மாலையணிந்த மஹாவிஷ்ணுவின் மார்பில், பெருகும் தனலட்சுமியாய், வேனிலாளியாம் மன்மதனையும், பிரம்மதேவனையும் பெற்ற மென்கொடியாய் விளங்கும் மாதாவின் திருவடியை யடைவாம். (எ - று.)

(அ - ப.) நமதியர் = பகவதி
திளைத்திடும் = பெருகும்
தனப் பாவை = தனலட்சுமி
வேனில் அற்புத வேந்து = மன்மதன்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்திமூன்றும் பகுதி

பிரமதேவர் வணக்கம்

1. திருச்செங்கோட்டுப் புராணம்

1026. பாணியைப் புவியைக் கனலைப் பவனத்தை விண்டனை யாக்கி
வாணியைத் திருநாவில் வைத்துல கெலாமறைப் பொருள்விரித் தோதி
வேணி யர்த்த நாரீசனை யுளக்கம லத்தினில் விளங்கக்கண்
டேணியைத் திடுமிறைய வன்மறையவனிணை யடிமலர் போற்றி. (1)

(இ - பொ.) சடாமுடியுடைய அர்த்தநாரீச்சுரரை உள்ளக் கமலத்தில் தரிசிக்கும்படியாய் வழிபட்டு, நீரையும், நிலத்தையும், நெருப்பையும், காற்றையும், ஆகாயத்தையும் உண்டாக்கினதுடன் சரஸ்வதியை நாவில் வைத்துக் கொண்டு, உலகத்தார் எல்லாருக்கும் வேதத்தின் பரம்பொருளை விவரித்துச் சொல்லிவரும் ஓர் கீர்த்தியை வகிக்கும் சிருட்டிக் கடவுளாம் பிரம்மதேவரின் உபய பாதாரவிந்தங்களுக்கு வணக்கம். (எ - று.)

(அ - ப.) பாணி = நீர்
பவனம் = காற்று
ஆக்கி = உண்டாக்கி
அர்த்தநாரீசன் = நாரிபாகன்
ஏண் = கீர்த்தி
இயைத்திடும் = இயைந்திடும் (வகிக்கும்)

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்திநான்காம் பகுதி

கலைமகள் வணக்கம்

1. கந்த புராணம்

1027. தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம். (1)

(இ-பொ.) அழிவற்ற உலகங்களெல்லாவற்றையும் படைத்த நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவன் மனைவியாய் அவ்வுலகந் தோறும் நிறைந்த பல ஆன்மாக்களின் நாக்களிலெல்லாம் வீற்றிருக்கும் நன்மை வாய்ந்த கலைமகளாரது, தாமரை மலர் போலும் திருவடிகளைச் சிரசிற் சூடித் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) தா அறும் = அழிவில்லாத.

---

2. திருவிளையாடற் புராணம்

1028. பழுதகன்ற நால்வகைச் சொன்மல ரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகி யணிபெற
முக்கண் மூர்த்தி தாளிற்
றெழுதகன்ற வன்பெனுநார் தொடுத்த லங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத் தாளடி
முடிமேற் கொண்டு வாழ்வாம். (2)

(இ - பொ.) குற்றமற்ற (பெயர், வினை, யிடை. யுரி) யென்னும் நால்வகைச் சொற்களாகிய (நால்வகை) மலர்களையு மெடுத்து, பத்தியுண்டாக்கப் பரப்பி, அஷ்டதிக்குகளிலும்ப ரந்த மணம் வீசி, மதுர மொழுகி, பரந்த அன்பாகிய நாரால் தொடுத்த பாமாலையை யலங்காரம் பெறத் திரி நேத்திரங்களையுடைய சிவபெருமானது திருவடியில் வணங்கிச் சாத்த, கீற்றுகளையுடைய ஆண் வண்டுகளும், பெண் வண்டுகளும் கிண்டுதலால் விரிந்த வெள்ளிய இதழ்களுடைய தாமரை மலரில் வீற்றிருக்குஞ் சரஸ்வதியம்மையின் திருவடியை முடிமேலணிந்து வாழ்வாம். (எ-று.)

(அ-ப.) அலங்கல் = பாட்டு, பாமாலை.
சுரும்பு = வண்டு.
முண்டகம் = தாமரை.

3. சேது புராணம்

1029. கவளமத கரியுரிவைப் போர்வை மூடுங்கண்ணு
தலோன்புகழ் விரிக்குங் கலைகள் யாவும்
பவளவிதழ்ப் பசுங்குதலை மொழியிற் காட்டும்
பைந்தொடியை யந்தணன்றோய் பரும வல்குற்
றுவளுமணி மருங்குலிள நிலவெண் மூரற்
சுந்தரியை வெண்கமலத் தோட்டுவட்டத்
தவளமதி நடுவமர்வா லெகினம் போலுந்
தையலைமை யலையகற்றித் தாளிற் றாழ்வாம். (3)

(இ-பொ.) வெறி கொண்ட யானைத் தோலைப் போர்வையாகப் போர்த்துக் கொள்ளும் நெற்றிக் கண்ணனாகிய பரமசிவத்தின் பெருமைகளை விவரித்துரைக்கின்ற (வேதமுடனாகம புராண விதிகாசமுதல் வேறுமுள) கலைகளெல்லாம் பவளம் போன்ற இதழ்களையுடைய பச்சிளங்கிள்ளையாம் மதலை வாக்கில் பாடிக் காட்டும் பச்சை வளையலணி பாரதியாய், பிரமதேவன் களிக்கும் பருமவல்குல் துவளும் சிற்றிடையுடன் மூன்றாம் பிறை போன்ற புன்சிரிப்புடை சுந்தர வல்லியாய், வெண்டாமரைப் பூவென்னும் வட்ட வடிவமான வெண்ணிலா மத்தியில் எழுந்தருளும் அன்னத்தை நிகர்த்த ஆரணங்காம் சரச்சுவதியின் திருவடிகளில் ஆசாபாச மொழித்து வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) கவளமதம் = மத்த மதம் (மதவெறி)
குதலை மொழி = மழலைச்சொல், பொருள் நிரம்பாத சொல்.
துவளு மணிமருங்குல் = சிற்றிடை.
வெண்மூரல் = வெண்முத்துப் போலும் பல்வரிசைகொள் நகை.
தோட்டு = தோடு (பூவிதழ்)
தவளம் = வெள்ளை
வால் = வெண்மை.
எகினம் = அன்னம்

4. திருவாரூர்ப் புராணம்

1030. விரைப்போதன் முகப்போது பிரியாது
தனிவண்டு வெண்பால் வேலைத்
திரைப்போது மமுதநிறத் தேனடைந்தோர்
பவக்கடலைத் தீர்த்து முத்திக்
கரைப்போதும் படியெடுக்குந் திருஞானத்
தனிப்புணை வெண்கமலை செந்தாள்
மரைப்போது மனப்போது வைத்தினி
முப்போதும் வாழ்த்தல் செய்வாம். (4)

(இ-பொ.) மணம் பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனது முகத் தாமரையைவிட்டுப் பிரியாத ஒப்பற்ற வண்டும், வெள்ளிய பாற்கடலிற்றோன்றிய அமுத நிறத்தை ஒத்த தேனுமாய்த் தன்னை அடைந்தவர்களுடைய பிறவிக் கடலை யொழித்து, முத்தியாங் கரையில் சேர்க்கும் திருஞானத்தனித் தெப்பமாக

விளங்கும் வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகளது சிவந்த திருவடியாகிய தாமரை மலரை மனத்தாமரையில் வைத்து இனிதாக முப்போதும் வாழ்த்தி வழிபடுவாம். (எ-று.)

(அ-ப.) வேலை = கடல்.
பவக்கடல் = பிறவிக்கடல்.
திருஞானத்தனிப்புணை = அழகிய ஞானத்தனித்தெப்பம்
வெண்கமலை = கலைமகள்.
மரைப்போது = தாமரைமலர்.
முப்போது = காலை, நண்பகல், மாலை.
மனப்போது = உள்ளமாகிய மலர்.
விரைப்போதன் = தாமரைமலரிலுள்ள பிரமன்.

5. மச்ச புராணம்

1031. வெண்மலரும் வெண்பணியும் வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்து வாச
வெண்கமலம் வீற்றிருந்து பழங்கருணை
பூத்து வண்டு விளரி பாடக்
கண்மலரு மாயிரந்தோ டவிழ்த்துமுகை
நெகிழ்த்த கமலத்தில் வாழெண்
கண்மலருஞ் சதுர்முகத்தோ னாவில்வளர்
வாணிபதங் கருத்துள் வைப்பாம். (5)

(இ-பொ.) மலர்ந்த கிருபா நோக்கமும், வெண்டமிழ் வார்த்தையும், வெள்ளாடையுடுப்பும், வெண்மையான அழகிய திருமேனியுமாய் அலங்கரித்துக் கொண்டு, மணம் மிக்க வெண்டாமரை மேல் எளுந்தருளியிருப்பதுடன், பூர்வ ஞானத்தினால், காருண்யங் கொண்டு வண்டுகள் கீதம் பாடத் தேன் நிறை ஆயிரமிதழ்களையும் அலரச் செய்து முழுதும் மலர்ந்த செங்கமலத்தில் வாழ் எண் கண்ணனாகிய சதுர்முகன் நாவிலும் வளர் சரஸ்வதியின் பதத்துணைகளைப் போற்றுவாம். (எ-று.)

(அ-ப.) வெண்மலர் = மலர்ந்தகிருபாநோக்கம்.
வெண்பணி = வெண்டமிழ் வார்த்தை
வெண்கலை = வெள்ளாடை.
வெண்மணி = அழகிய வெண்டிருமேனி.
வேய்ந்து = அலங்கரித்துக்கொண்டு
விளரி = கீதம்.

6. திருக்காளத்திப் புராணம்

1032. புத்தகஞ் செபவடம் புனித ஞானமா
முத்திரை குண்டிகை முழுது மேந்தெழிற்
கைத்தலத் தமிர்தினைக் கலைமடந் தையை
முத்தமிழ்க் கிழத்தியை முடிவணங் குவாம், (6)

(இ - பொ.) சுவடி, செபமாலை, சுத்தாத்விதச் சித்தாந்த ஞான சின்முத்திரை, கமண்டலம் இவையெல்லாஞ் சதுர்க்கரங்களிலுந் தாங்குகிற அமிர்த வல்லியாய் (இயல், இசை, நாடக மென்கிற) முத்தமிழ்க்குந் தலைவியான சரச்சுவதி தேவியைச் சிரம் வணங்கித் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) செபவடம் = செபமாலை.
புனித ஞானமாம் முத்திரை = சுத்தாத்துவிதச் சித்தாந்த ஞான சின் முத்திரை.
குண்டிகை = கமண்டலம்.
கிழத்தி = தலைவி.

7. திருவாவடுதுறைப் புராணம்

1033. காரிலகு கூந்தன்மலர்ப் பின்னலுஞ் சுட்டியு முடியுங்களநெற்றிச்
சீரிலகு பட்டமுந் தோளுங் குழையுமுகமும் விழிச்சேலு மூக்கு
மேரிலகு சிற்றிடையும் பட்டுடையும் பைங்கிளி யொன்றேந் துகையும்
பூரணகும் பமும்பூர நாயகிபொற்ரு ளிணையும் போற்றி யுய்வாம். (7)

(இ - பொ.) கரிய மேகம் போன்ற அளகபாரத்தில் பூமுடித்த பின்னல் சடையும், சுட்டிகையும், முடியும், தோழியர் கூட்டமும், நெற்றியிற் சிறந்த பட்டமும், தோள்வரை தொங்கும் கவசகுண்டலமும், முகவிலாசமும், அங்கயற் கண்ணும், மூக்குத்தியும், சிற்றிடையும், பட்டாடையும், பச்சைக்கிளியான தமிழை (நூல்களை) ஏந்தொரு கரமும், பூரண கும்பத்தனமும் பொருந்தி விளங்கும் கற்பூர நாயகியாம் சரஸ்வதியின் பொன்னடிகளைப் போற்றி வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) களம் = கூட்டம்.
தோளுங்குழை = தோள்வரை தொங்கு கவச குண்டலம்.
முகம் = முகவிலாசம் (மேல்)
விழிச்சேல் = கயற்கண் (மேல்)
மூக்கு = மூக்குத்தி (மேல்)
பைங்கிளி = பைந்தமிழ் (மேல்)
வந்தது
பூரநாயகி = கற்பூரநாயகி

8. திருச்செந்தூர்ப் புராணம்

1034. ஒருதனித் திகிரிக் கதிர்நிறங் கவின
வொளிர்செய் பொன்னுடை மருங்கிலங்கக்
குருமணி மௌலி யிலகிவில் லிமைப்பக்
குறுநகை முறுவல்முத் தரும்ப
மருமலர்க் கழுநீர் புத்தகம் வரத
மணிவட மலர்க்கரம் வயங்கத்
திருவரு ணிறைந்தென் னுளங்குடி புகுந்த
செல்விபொற் சேவடி பணிவாம்.

(இ - பொ.) தனக்குத் தானே நிகரான தோர் வட்ட வடிவமாம் சூரிய வண்ணத்தின் அழகுதரப் பொன் ஆடை இடுப்பில் விளங்கவும் மாணிக்க மகுடம் முடியில் துலங்கிச் சொலித்துப் பிரகாசிக்கவும், சிரிக்கும் இளநகை யானது முத்துப்போன்ற பற்களைத் தோற்றுவிக்கவும், செங்கழுநீர் மலர், புத்தகம், அபயவரதம், செப மணி மாலை இவைகள் கரமலர் நான்கில் ஒளிரவும் ஆய இத்திருவருட் கோலத்துடன் எங்கும் நிறைந்து அடியேன் உள்ளன்பில் குடி கொண்டுள்ள செல்வியாம் சரஸ்வதியின் பொன் அடிகளை வணங்குவாம்.(எ-று.)

(அ - ப.) ஒருதனி = தன்னந்தனி.
திகிரி = வட்டம்.
மணிவடம் = செபமாலை.
கதிர் நிறம் = சூரியவண்ணம்.
கவின் = அழகு.
பொன்உடை = பொன் பட்டாடை
மருங்கு = இடுப்பு.
குருமணி = மாணிக்கம்.
மௌலி = தலைமுடி.
வில் இமைப்ப = ஒளி ஒளிர.
குறுநகை = முறுவல், புன்முறுவல்.
அரும்ப = முளைப்ப.

---

9. சிவராத்திரிப் புராணம்

1035. கார திருங்கயிலைமலைக் கண்ணுதன் முப்புர மெரிக்கக் கருதுமந்நா
ணீரதிகந் தருந்தரங்கத் தடங்கடல் சூழ்ந்திடும் புடவிநெடுந் தேரூர்ந்த
சாரதிதன் றிருநாவி னடியருளத் தினிதிருக்குந் தவள மேனிப்
பாரதிசெம் பதப்பதுமத் துணைப்போது முப்போதும் பரவல் செய்வாம். (9)

(இ - பொ.) மேகங்கள் குமுறித் தவழும் கைலாசகிரியின் நெற்றிக் கண்ணனாகிய பரமசிவம் திரிபுவன தகனஞ் செய்ய வெண்ணிப் புறப்பட்ட அன்று (மிகுந்த நீர்த்திரைகளை மோதுங் கடல் சூழ்) பூலோகத்தையே ஒரு பெருந் தேராகச் செலுத்திய சாரதியாம் பிரும்ம தேவருடைய திருநாவிலும், அடியார்களுடைய உள்ளன்பிலும் இன்பமாய் எழுந்தருளியிருக்கும் வெள்ளை மேனிகொள் சரஸ்வதியின் பாத பங்கயங்க ளிரண்டையும் முக்கால்வலம் வந்து பணிவாம். (எ - று.)

(அ - ப.) அதிரும் = குமுறும்
அந்நாள் = அன்று
தரங்கம் = அலை
புடவி = பூமி
பாரதி = சரஸ்வதி

10. சீர்காழிப் புராணம்

1036. கருமழைத் தண்டுளி பொழியுங்கால் மதியொளியு மொளிகாலு முத்தின்
பருமணிமா லையுமபய வரதமும் புத்தகமும் வடப்பளிக்குந் தாங்கி
முருகுயிர்க்கு நறுந்தவள முளரி யாலயத் திருந்தமுது பிராட்டி
யிருபதமுங் கடைப்பிடித்தேனெப்பதம் வாராத பதமெனக்கு மன்னே. (10)

(இ-பொ.) குளிர்ச்சியோடு பெய்கின்ற மாரி காலத்துச் சந்திரஒளி போன்ற திருமேனியுடன் மார்பில் ஒளியுடைய முத்திரத்தின மாலையும், கைகளில் அபயவரதம், புத்தகம், கண்டி (கமண்டலம்) தாங்கி, தேன்துளிர்க்கும் மணமுள்ள வெண்டாமரை யென்னும் கோயிலிலிருந்த முதுமொழிக்கரசியாம் சரஸ்வதியின் இரண்டு சரணங்களையும் உறுதியாக நம்பினேன். ஆதலால் அடியேனுக்கு வராத பதம் எப்பதம்?

(அ - ப.) முத்தின்பருமணி = முத்திரத்தினம்.
வடப்பளிங்கு = பளிங்குவடம். அதாவது படிகமாலை—செபமாலை.
முருகு உயிர்க்கும் = தேன் துளிர்க்கும்.
தவளமுளரி = வெண்டாமரை.

11. திருவாப்பனூர்ப் புராணம்

1037. உரைதமிழ் மூவர்நா வினூற்றெழுமமுதைச் சங்கத்
திருக்கும் வெண்முத்தைக் கற்றோரென் னுமீக்கூட்டுத் தேனை
வரைத்தமிழ் முனிவ னெஞ்சமலர்க் கமலப்பூஞ் சேக்கைத்
திருத்தகு மரசவன்னப் பேட்டினைச் சிந்தை செய்வாம். (11)

(இ - பொ.) செந்தமிழ்த் தேவாரத்தை (அப்பர், சுந்தரர், சம்பந்தரென்கின்ற) மூன்று பேர் நாவிலும் ஊற்றென எழுந்து பொங்கச் செய்த அமுத வல்லியாய் தலை—இடை—கடையென்ற முச்சங்கத்தும் இருந்து வந்த முத்துத்தாண்டவியாய் (கல்வியைக் கசடறக்) கற்றறிந்தோர்களெனும் தேனிக்கள் சேகரிக்கும் மகரந்தமாய், பொதியமலை அகஸ்திய முனிவரின் இருதயத்து மலரும், தாமராசனியாய் விளங்கும் அன்னபூரணியாம் சரஸ்வதியைத் தியானிப்பாம். (எ-று.)

(அ - ப.) வரைத் தமிழ் முனிவன் = பொதியை மலை அகத்தியன்.
அரசவன்னம் = கலைமகள்.

12. திருப்பூவணப் புராணம்

1038. அரியசுவை தருமமுத வருவிபாய்ந்
தொழுதருண மண்டலஞ் சேர்
விரிகதிர் வெண்மதிக் கற்றை
வெண்கமல பீடிகைமேல் வீற்றிருந்து
பரவருறற் கலைகளெலாம் பவளவாய்
திறந்துரைக்கும் பனுவ லாட்டி
திருவடிக டமையெமது சிரத்தினிலுங்
கருத்தினிலு மிருத்து வாமே. (12)

(இ - பொ.) கிடைத்தற்கரிய தேவாமுதம் போல் சுவை தரக்கூடிய நீரருவிகள் பாய்ந்தொழுகும் ஆகாயத்தைச் சார் சூரியமண்டலத்தின் விரிந்த கிரணங்களால், வெண்ணிலாவைப் போல் திகழ் வெண்டாமரை யாசனத்தின்மீது எழுந்தருளியிருந்து பரவிக் கொண்டாடாநின்ற, நல்ல கலைஞானங்களை எல்லாம், தன் பவளம் போன்ற வாயால் எடுத்து மொழியும் நாமகளின் திருவடிகள்தமை நம்முடையசிரமேற் கொண்டு தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) அருண மண்டலம் = சூரியமண்டலம்.
பீடிகை = பீடம், ஆசனம்.
பனுவலாட்டி = பாமகள், சரஸ்வதி.

13. மயூரகிரிப் புராணம்

1039. சேவுயர் கொடியோன் புள்ளர சுயர்த்தோ
னன்னவா கனத்தனன் றேவர்
காவலன் வசிட்டன் முதலிய முனிவர்
காசினி யோர்கள் கீழுலகின்
மேவின ரெவரு மூமரா காமே
விளங்குறு தொழிலெலா நடப்ப
நாவுறை கலைமா மடந்தைதன் சரண
நளினமா மலர்வணங் குதுமே. (13)

(இ - பொ.) இடபக் கொடியனாகிய பரமசிவன், கருடக்கொடியோனாகிய மகாவிஷ்ணு, அன்ன வாகனனாகிய பிரமதேவன், தேவேந்திரன், வசிட்டர் முதலான முனிவர்கள், பூலோக வாசிகள், பாதாளலோகத்திலிருப்பவர்கள் ஆகிய எல்லோருமே (வாயில்லாத) ஊமைகள் ஆகா வண்ணமாய், வேண்டும் காரியங்கள் யாவும் நடைபெற்றுவர அவ்வவர் நாவில் வீற்றிருக்கும் கலைமகளாம் வாணியின் சரணாபுயங்களை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) சே = இடபம்.
புள் அரசு = கருடன்.
காவலன் = அரசன்.

14. திருமயிலைப் புராணம்

1040. நிலமுதற் படைத்திடு நேய னாவினின்
றிலகவன் றுணைவியா யெழில்கொள் பாரதி
யுலவும் வெண்கமல மேலுறையும் வாணிதன்
மலரடி முடிமிசை வணக்கஞ் செய்குவாம். (14)

(இ - பொ.) பூலோக முதலான சகல சிருஷ்டியும் நடாத்துகிற பிரம்மதேவன் திருநாவில் இருந்து வளர் மனைவியாய்ப் பிரசித்தி கொள் சரஸ்வதியும் (நடமாடுகிற) வெண்டாமரைக் கமலத்தின் மேல் வாழ் மணியுமாம் கலைமகளின் திருவடி மலர்களை முடிமேற் சூடி வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) நிலம் முதல் = பூலோக முதலாம் மேலேழுலோகம் கீழேழு லோகம்.
பிருதிவி முதலாய ஐம்பூதங்களையுங் கூடவாம்.

15. திருவோத்தூர்ப் புராணம்

1041. சாற்று நற்றமிழ்ப் பேற்றுக் கென்குறை
நோற்று வாணிதாள் போற்று நெஞ்சமே. (15)

(இ - பொ.) நெஞ்சமே நீ சரஸ்வதியினுடைய திருவடிக் கமலங்களைப் பூசித்துப் போற்றி வருவாயாக! வந்தால் உனக்கு இயல், இசை, நாடகமென்று சொல்லும்படியான செந்தமிழ்ச் செல்வத்துக்கு என்ன குறைவு? ஒரு குறையுமில்லை. நிறைந்த புலவனாகலாம். (எ-று.)

(அ - ப.) பேற்றுக்கு = செல்வத்துக்கு.
நோற்று = பூசித்து.

16. மயூராசலப் புராணம்

1042. தெள்ளோதப் பயக்கடலி னரவணையிற்
றுயில் கூருந் திருமா லுந்தி
யுள்ளோதொ ணாவுவகை மீக்கொளவந்
தவன்வதன மொருநான் கிற்குங்
கள்ளேந்திக் கயல்விழிச் செவ்வாயி
னொருமுகங்காட் டிக்காத லூட்டும்
வெள்ளோதி மத்தினை நம்முள்ள
மெனுங்கமல மதின்மேவச் செய்வாம். (16)

(இ - பொ.) தெளிந்து குளிர்ச்சி பொருந்திய கடலிலும் சேஷசயனத்தின் மேலும் கண்வளர் மகாவிஷ்ணுவின் நாபிக்கமலத்தில் சொல்ல முடியாத மகிழ்ச்சியதிகரிப்பில் வந்த பிரம்மதேவனுடைய நான்கு முகங்களுக்கும், சேல் கண்டையைப் போலுங் கண்களுடைய தன் முகவொளியைக் காட்டலுடன், சிவந்த வாயினால் களிக்கத்தக்க சரச வார்த்தைகளைப் பேசி ஒருதலையின்பத்தைக் கொடுக்கும் அன்ன வண்ணமாம் சரஸ்வதியை நமது உள்ளன்பென்னுஞ் செங்கமலத்தில் எழுந்தருள வழிபடுவாம். (எ - று.)

(அ - ப.) ஓதம் = ஈரம், குளிர்ச்சி.
பயம் = நீர்.
வெள் ஓதிமம் = வெண்மையான அன்னம்.
ஓதொணா உவகை = பெருமகிழ்வு.
மேவ = எழுந்தருள.

(அ - ம்.) 1. கயல்விழி முகங்காட்டி.
2. செவ்வாயினோடு கள்ளோதிக் காதலூட்டும்.

17. இருடிவிந்தப் புராணம்

1043. கருகிருட் கயமெனுங் கடலை நீக்கியே
யொருவிலாக் கல்வியங் கரையி லுய்த்திடும்
புரையிலொண் பாரதி கலைகள் போற்றுமா
னிருபதந் தொழுபவர்க் கில்லை துன்பமே. (17)

(இ - பொ.) மூலமலவிருள் மயமான பிறவி நோயென்னுங் கருங்கடலைக் கடக்கச் செய்து, என்றும் அழிவில்லாத கல்வி என்னும் அக்கரையில் சேர்த்து உச்சீவிக்கச் செய்யும், பரிசுத்தவல்லியான பாரதியும், செந்தமிழாதி மொழிகளைப் போற்றி வளர்க்கும் (மானனைய) சரஸ்வதியின் திருவடிகளிரண்டையும் தொழு வோர்க்குத் துன்பம் இல்லை. (எ - று.)

(அ - ப.) கயம் = பிறவிநோய்.
ஒருவிலா = அழிவில்லாத.
புரையிலா = குற்றமில்லாத.

18. தேவாங்க புராணம்

1044. முதிர்பொறுமைக் கரைசிறந்து கருணைநறும்
புனல்பருகி முழுமெய்ஞ் ஞானம்
புதியமலர் விரிந்தடக்க மெனுங்கமடங்
குடியிருந்து புகழ்கொண் டோங்கு
மதிவலவர் தமதிதய வாவிதோறும்
விளையாடி வளர்பே ரின்பத்
ததிமதுர குணநயவெள் ளனப்பேடு
தனைப்பாடி யருள்பெற் றுய்வாம். (18)

(இ - பொ.) தேறிய பொறுமை யென்னு மெல்லையாற் சிறப்படைந்து, கிருபையாகிய நல்ல நீரையருந்தி நிறைந்த உண்மை ஞானமாகிய புதிதாகிய பூக்கள் மலரப்பட்டு, ஐம்புல வடக்க மென்கின்ற ஆமைகள் குடியிருக்கப்பட்டுக் கீர்த்தி பெற்றுயர்ந்த, அறிவில் வல்லோராகிய பெரியோருடைய மனமாகிய குளங்களெவ்விடத்தும் விளையாடி வளருகின்ற பேரின்பத்தையும், மிக்க இனிமை யையும், சீர்மையையும், நன்மையையுமுடைய வெள்ளிய பெண் அன்னம் போல்ப வளாகிய கலைமகளைப் பாடியருள் பெற்றுய்வாம். (எ - று.)

(அ - ப.) கமடம் = ஆமை.

இதிகாசங்கள்

19. சிவரகசியம்

1045. நான்முக னுவின் மேவி நான்மறை வடிவா யின்னந்
தானரும் பொருள்க டேரத் தடக்கையின் முறையுந் தாங்கித்
தேனலர் கமலப் போதிற் செழித்து வீற்றிருக்கு மம்மை
கான்மலர் போற்றி நாளுங் கருத்துற வணக்கஞ் செய்வாம். (19)

(இ - பொ.) சதுர்முகப் பிரம்மனுடைய நாவில் இருந்து, இன்னுஞ் செவ் வையான அரும்பெரும் பொருள்களைத் தான் தேர்ந்துணர்வதற்காக இருக்காதி நான்கு வேதங்களாம் புத்தகங்களை உள்ளங்கையில் தாங்கிக் கொண்டு, (தேன் துளிர்க்கும்) செங்கமலாசனத்தின் மேல் சிறப்பாக எழுந்தருள் சரச்சுவதியம்மை யின் பாதாம்புயங்களைப் போற்றி எந்நாளும் உள்ளன்போடு வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) தடக்கை = உள்ளங்கை.
முறை = புத்தகம்.

20. மகாபாரதம்

1046. பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரென
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள். (20)

(இ-பொ.) பொதிய மலையிலே பிறந்து, பாண்டியனது கீர்த்தியிலே கிடந்து, சங்கப் பலகையிலே இருந்து, வைகை நதியில் ஏட்டில் தவழ்ந்து சென்ற பேதைப் பருவமுடைய கலைமகள், நெருப்பிலே வேகாது நிலைபெற்று, படித்தவர் நினைப்பிலே நடமாடி, ஒரு பன்றியின் கொம்பிலே விளையாடிய பாவையாய் நம் பக்கத்திலே (அறிவினிடத்தே) வளர்ந்து வருகின்றாள்.

குறிப்பு :—1. பொருப்பென்றது, ஈண்டு அகத்தியன் தங்கித் தமிழ் வளர்த்த பொதியமலையினை.

2. வைகையேட்டில் தவழ்ந்ததும், நெருப்பிலே நின்றதும், திருஞான சம்பந்தர், மதுரையில் சமணர்களோடு சமயவாதம் செய்தபோது தேவாரப் பதிகப் பாடல்களை ஓலையில் எழுதி வைகையிலும், நெருப்பிலும் இட்டகாலையில் வைகையில் எதிர் ஏறியும், நெருப்பில் எரியாதும் நின்ற அற்புத நிகழ்ச்சிகளாம்.

21. அரிச்சந்திர புராணம்

1047. மருப்பவள வாக்குவிந்து திரண்டு முத்துவட
மணிந்து குடமெனவே வயங்கிச் செம்பொற்
பொருப்பவள வாவளர்ந்து ததும்பி விம்மிப்
புடைபரந்த களபநறும் புளகக் கொங்கைத்
திருப்பவள வாயாளைத் தேனை மானைச்
செழும்படிக நிறத்தாளைத் திகழ்வெண் கஞ்சத்
திருப்பவளை யுலகேழு மீன்ற தாயை
யெனதி தயகமலத்தே யிருத்தி னேனே. (21)

(இ-பொ.) முத்தாரம் பூண்டு சுற்றிலும் கலவைச் சாந்தின் மணம் கமழ்வதும், யானைக் கொம்புகள்போல் வளைவாய்க் குவிந்து திரண்டு குடம்போல விளங்குவதும் பொன்மலை போலவ்வளவு செந்தூக்காக வளர்ந்து நிறைந்து விம்மிப் பரவியதுமாய் இரு தனங்களுடைய பவளம் போன்ற செவ்வாயினளாய், மான் விழியினளாய், தேன் போன்ற சொல்லினளாய், படிக வண்ணத்தின் திருமேனியினளாய், வெண்டாமரை மேல் இருப்பவளாய், ஏழுலோகங்களையும் பெற்ற அன்னையாகிய சரஸ்வதியை அடியேன் இருதய கமலத்தில் இருத்திப் பூசிக்கிறேன். (எ-று.)

(அ - ப.) ததும்பி = நிறைந்து.
புடை = இரட்டை.
தேனை = தேன்மொழியை.
மானை = மான்விழியை.

22. (சாஸ்திரம்) தொல்காப்பியம்

1048. தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே. (22)

(இ - பொ.) நாம் அருமையான (இயல், இசை, நாடகமென்ற) முத்தமிழ் இலக்கணத்தின் பொருட்டாகவே வெண்டாமரைப் பூங்கோவிலில் வீற்றிருக்கும் (நமது) சரஸ்வதியம்மனைத் துதிப்பாம்.

குறிப்பு :—இச் செய்யுள் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் இல்லை. தலைப்பில் சாஸ்திரம்-தொல்காப்பியம் என்று எழுதப்பட்டுள்ளது. இது, எந்தச் சாத்திரத்தைச் சேர்ந்த எந்தத் தொல்காப்பியமென்பது விளங்கவில்லை. உரை எழுதிவைத்த பெரியார் இதனை ஓரிலக்கண நூலில் வந்த வாழ்த்துச் செய்யுளாகக் கருதியே உரை வகுத்துள்ளார்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்தைந்தாவது பகுதி

சூரியமூர்த்தியாதியர் வணக்கம்

1. அவிநாசிப் புராணம்

1049. விண்ணார்ந்த மணிமறுகில் விரவு
மொருசகட் டிரத மிசைய னாகிப்
பண்ணார்ந்த மறைமுனிவர் பாணிதரும்
பாணிகொண்டு பதுமம் பாத்துத்
தண்ணார்ந்த மதிநிலவு தாழ்சடையெம்
புக்கொளிவாழ் சயம்பு ஞானக்
கண்ணார்ந்த பேரொளியைக் கதிரவனை
எதிர்பணிந்து கருத்துள் வைப்பாம். (1)

(இ - பொ.) ஆகாயத்துலவும் சுழல் காற்றின் வழியாய்ச் சம்பந்தப்பட்டதோர் ஒற்றைச் சக்கரத் தேர்மேல் புறப்படுபவனாய், கீதத்துடன் வேதங்களைப் பாடும் முனிவர்கள் (காயத்ரி மந்திரஞ் சொல்லிக்கொண்டே) கையால் மூன்று தரம் அள்ளிக் கொடுக்கும் தீர்த்தத்தை யுட்கொண்டதே (பதுமநிதி) அக்கினியை அவர்கள் யக்ஞத்துக்குக் (கோடானு கோடியாய்ப்) பங்கிட்டுக் கொடுத்து, குளிர்ச்சி பொருந்திய சந்திரனையணி சடாதரனாகிய திருப்புக்கொளீஸ்வரனான் மெய்ஞ்ஞானக்கண்ணை யடை பெரும் பிரகாசனும் சூரியபகவானைக் கிழக்கு முகமாக நின்று பணிவாம். (எ-று.)

(அ - ப.) மறுகு = வழி.
விரவு = சம்பந்தப்படு.
சகடு = சக்கரம்.
பாணி = கை நீர்.
பதுமம் = அனல்.
பாத்து = பங்கிட்டு.

2. பவானி கூடற் புராணம்

1050. மாயிரு ஞாலங் கோத்த வல்லிருட் படலம் வாங்கி
யாயிரங் கரத்தாற் றைவந் தனைத்துயிர்க் கறிவீந் தன்பாற்
சேயிரு விசும்பு போற்றுந் திருநணா வுடையான் செல்வக்
கோயில் வாழிரவிப் புத்தேள் குரைகழல் வணக்கஞ் செய்வாம். (2)

(இ - பொ.) பெரிய இப் பூலோகத்தையெல்லாம் மூடி வருகிறதோர் பேரிருளை நீக்கித் தன் ஆயிரங் கிரணங்களாலும் சுவாலித்து, சர்வகோடி யான்மாக்களுக்கும் நல்லறிவு கொடுத்து உயர்ந்த வானவர்களால் போற்றப்படும்

பவானிகூடல், திருநணுவீச்சுரன்றன் திருக்கோயிலின் ஒருசார் வாழ்ந்துவரும் சூரிய நாராயணனுடைய பாதங்களை வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) படலம் = மிகுதி.
தைவந்து = சுவாலித்து.

3. மருதூர்ப் புராணம்

1051. பயில்பிறவிக் கங்குன் மலப்பட மொழித்துப்
பத்தருளப் பதுமம் பூப்பக்
கயிலையுறை மருதீசன் கண்ணாகி
யுதித்தெழு செங்கதிரோன் றன்னை
யயில்விழியார் தனந்திளைத்துக் கேவலத்தின்
முழுகுமவர்க் ககிலங் காணத்
துயில் விலக்கி வெயில் விரிக்குஞ் செம்பரிதிப்
புத்தேளைத் தொழுதல் செய்வாம். (3)

(இ - பொ.) பழக்க வாசத்தால் தொடர் பிறப்பாகிய பேரிருள் மல பந்தத்தைப் பற்றற வொழித்து அடியார்களின் இதயகமலம் பூத்துவரத் திருக்கயிலாச வாசனாகிய பரமேசன்றன் கண்ணுக்குக் கண்ணாய் உதயஞ் செய்தோங்கு செஞ்சுடர்க் கிரணங்களுடையவனும், வேல்விழி மாதர்தந் தனமே யனுபவித்து, துக்க சாகரத்துள் முழுகுபவருக்குத் தூக்கத்தைப் போக்கிச் சர்வாண்டமுந் தெரிய வெய்யிலை விரித்துக் காட்டுபவனுமாய சூரியநாராயண பகவானைத் தொழுவாம். (எ - று.)

(அ - ப.) பயில் = பழகல்.
கங்குல் = இருள்.
மலப்படம் = மலபந்தம்.
பதுமம் = தாமரை.
கதிரோன் = சூரியன்.
திளைத்து = அனுபவித்து.
கேவலம் = துன்பம்.
அகிலம் = சர்வாண்டம்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்தாறும் பகுதி

கங்கா தேவி வணக்கம்

காசி இரகசியம்

1052. மாற்றவ ளிடப்பான் மேவி வாழ்வதை யுணர்ந்து வள்ளல்
போற்றரும் வலப்பான் மேவிப்புரிந்து வந்தாட நின்றோர்
சாற்றருங் கொடிய பாவத் தளையழித் தறங்க ளெல்லாம்
மேற்றி நன்கருளுந் தெய்வக் கங்கையை யிறைஞ்சல் செய்வாம்.

(இ - பொ.) சக்களத்தியாகிய பார்வதி, பரமேசனுக்கு வாமபாகமாக இருந்து வாழ்வதை யறிந்து அவற்குப் போற்றற்குரிய வலப்பாகமா யெழுந்தருளி, சரியையாதி செய்துவந்து விளையாடாநின்ற அடியார்களின் சொல்லமுடியாத கொடும் பந்த பாசங்களை யறுத்து, முப்பத்திரண்டு தான தருமங்களையுஞ் சரிவர நடத்தும் கங்காதேவியைத் துதிப்பாம். (எ-று.)

(அ - ப.) மாற்றவள் = சக்களத்தி.
பாவத்தளை = பாசபந்தம்.
ஏற்றி = சரிவர நடைபெறச் செய்து.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்தேழாம் பகுதி

காவேரியம்மை வணக்கம்

காவேரிப் புராணம்

1053. மாவேரி னல்லுருவிற் பொற்கென்று
மலைமகள் கைம்மலரின் முன்னாட்
டுவேரி னுற்பவித்த கங்கையினும்
விழுமியதாய்த் துறுமிப் பூத்த
பூவேரியமுனையிற் பொங் கிடவபீட்
டங்களெலாம் பொழியப் போந்த
காவேரி மாநதியைக் கைக்கமலங்
குவித்திறைஞ்சிக் கருத்துட் கொள்வாம்.

(இ - பொ.) மேம்பட்ட அழகிய உருவினைக் கொண்டு பொன்னி என்னும் பெயருடன் பார்வதியின் கையில் முற்காலத்தில் தூய்மையுடன் தோன்றி, கங்கையினும் சிறந்ததாய் நிறைந்து பெருகி அழகிய யமுனைநதி போல் பொங்கி எல்லோருடைய எண்ணங்களும் நிறைவேறும்படி அருளுடன் வந்த காவேரி நதியினைக் கைம்மலர் குவித்து வணங்கிக் கருத்துள் வைப்பாம். (எ - று.)

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்தெட்டாம் பகுதி

துவாரபாலகர் வணக்கம்

அவிநாசிப் புராணம்

1054. கான்றமணி வாயரவ கங்கணமங்
கரமருவக் கழல்கட் பார்வை
மூன்றிலகச் சுடர்மவுலி முடியோங்கப்
பிறையெயிறு முகநி லாவ
வூன்றுகதை மீதொர் கரந் தாள்
மாறவைத்த விரண்டோங் கல்போன்று
தோன்றியிரு பாலுறையுந் துவாரபா
லகர்பாதந் தொழுது நிற்பாம்.

(இ - பொ.) வாயில் விஷாக்கினியைக் கக்கும்படியான சர்ப்பம் கங்கணம் போல அழகிய கைத்தலத்துப் பொருந்தவும், பொன்வண்டு போன்ற கண்கள் மூன்று விளங்கவும், பிரகாசமான (பொன்) கிரீடம் தலையில் உன்னதமாய்க் காட்டவும், மூன்ரும் பிறையைப்போல் வளைந்த கோர தந்தங்கள் முகத்தில் விசாலிக்கவும் ஊன்றிய கதாயுதத்தின் மேல் வைத்த கையொன்று கால் ஒன்று (வலமிடமாக இடம் வலமாக) மாறி நிற்கவும், இரண்டு யானைகளுக்குச் சமானமாய்த் தோன்றி, இரு பக்கத்தும் வாழ் துவாரபாலகருடைய சரணங்களை நிலையாகத் துதித்து வருவாம். (எ - று.)

(அ - ப.) கான்ற = கக்க.
மணி = விஷம், மாணிக்கமுமாம்.
அரவகங்கணம் = அரவாபரணம்.
ஓங்கல் = யானை.

(அ - ம்.) ஊன்று கதை மீது வைத்ததோர் கரம் தாள்மாற.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

இருபத்தொன்பதாம் பகுதி

திருஞானசம்பந்த மூர்த்தி வணக்கம்

1. பெரிய புராணம் -இரண்டாங்காண்டம்

1055. வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தருள
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (1)

(இ - பொ.) வேதத்தின் நெறிகள் தழைத்தோங்கி வரவும், அவற்றுள்ளே மிக்க வைதிக சைவ சித்தாந்தம் விளங்கி மேலுக்கு வரவும், பூதங்களின் தொடர் வழிவழி பொலிவுறவும், தூய திருவாய் மலர்ந்தருளியவராகிய, குளிர்ந்த வளமுடைய வயல்களாற் சூழப்பட்ட, புகலி என்னும் சீர்காழித் திருத்தலத்தில் அவதரித்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய இரண்டு திருவடிகளாகிய மலர்களையும் தலைமேற் சூட்டிக் கொண்டு அத்துணையாலே, அவர் செய்த திருத்தொண்டினது திறங்களைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) வேத நெறி = வேதத்தின் நெறிகள்.
சைவத்துறை = சைவசித்தாந்த நெறி.
பூத (பரம்பரை) = பூதங்களின் தொடர்வழி,
சீதம் = குளிர்ச்சி.
புகலி = சீகாழி.
திருத்தொண்டு = திருத்தொண்டினது திறங்கள்.
பரவுவாம் = போற்றுவாம்.
பூதபரம்பரைபொலிய = உயிர்கள் வழிவழி மேம்பாடடைய.
பூதம் = உயிர்கள்.

2. கந்த புராணம்

1056. பண்டை வல்வினை யினாற்பா யுடுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம். (2)

(இ - பொ.) முற்காலத்தில் பழைய தீவினையினால் பாயையே ஆடையாகத் தரித்துக் கொண்டு திரியும் சமணரை வெற்றி கொண்டு திருவால வாயில் வீற்றிருந்தருளி வெண்ணிறமுள்ள திரு நீற்றின் பிரகாச மோங்கும்படி புரிந்தரு

ளிய குளிர்ந்த முத்தமிழ் விரகனென்னும் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளது உண்மைப் பேருன திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) கூடல் = திருவாலவாய்.
விரகன் = உற்சாகமுள்ளோன்.

3. உபதேச காண்டம்

1057. தெள்ளருந்தமிழ் வேட்கையிற் செலுத்துமென் சிறியே
னுள்ள மோர்தொறுஞ் சுவைப்பன வுமைதிரு முலைப்பால்
வள்ளம் வாக்கிநின் றூட்டிட மாந்திய காழிப்
பிள்ளை சீறடித் தாமரைக் கரதலம் பிரசம். (3)

(இ - பொ.) உமா தேவியார் தமது திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் விடுத்துண்பிக்க, உண்டருளிய சீர்காழிப் பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்திகள் சிற்றடி யென்னுந் தாமரை மலரில் விளையும் விருப்பந் தருகின்ற சிறந்த தேன் தெளிந்த அருமையான தமிழ் வேதத் திருப்பாடல்களில் அவா மிகுதியாற் செலுத்தும் தாழ்ந்த சிறியேனுடைய மன முணருந்தோறும் இனிப்பன. (எ - று.)

(அ - ப.) வேட்கை = அவா.
வள்ளம் = கிண்ணம்.
மாந்திய = குடித்த
பிரசம் = தேன்.

4. அருணகிரிப் புராணம்

1058. அருந்தி யுமையருள்கிண்ணத் தடிசிலை வேதா கமத்திற்
றிருந்துபயன் செந்தமிழா லெமக்களித்த தேசிகனைக்
குரும்பைமுதி ராண்பனையிற் குருத்துதிக்கத் தமிழ் கூறிக்
கருஞ்சமணர் களைக்கழு வேற்றிய மீளிகழல் பணிவாம். (4)

(இ - பொ.) உமாமஹேசுவரி பொற்கிண்ணத்துப் பீச்சிக்கொடுத்தருளிய முலைப்பாலமுதத்தையுண்டு வேதாகமங்களிலே சொல்லப்படும் பயனுடைமையான வற்றையெல்லாம், செந்தமிழ் தேவாரமாக எம்போல்மாருக்கு உபகரித்த சமயாசாரியனும், ஆண்பனையில் பெண்பனையைப் போலக் குருத்தாதியுற்பத்தியாகத் தமிழ்ப்பாசுரம் பாடி, வலுத்த சமணர்களைக் கழுமரத் தேற்றிய வல்லவனுமாம் திருஞான சம்பந்த மூர்த்தியின் திருவடிகளைத் துதித்து வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) அடிசில் = அமுது.
குரும்பை = பிஞ்சு.

குறிப்பு:--திருஞான சம்பந்தர் ஆண்பனை பெண்பனை யாகும்படி பாடிய பாடலைக் கீழே காண்க:-

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

5. திருவிளையாடற் புராணம்

1059. கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனைவேவ நோக்கிக் குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம். (5)

(இ - பொ) தீவிழியால் மீன கேதனனாகிய மன்மதனைச் சாம்பராகும்படி பார்த்து, கற்பின் வழி நிற்கும் அவனது மனைவியாகிய பெண்யானை போலும் நடையுடைய ரதி தேவி குறையிரந்து விண்ணப்பித்து யாசிக்க பிறகு உயிர் தந்து காத்த, மணத்துடன் விகசித்த கொன்றை மாலையணிந்த சடாபாரத்தையுடைய தந்தையாராகிய சிவபெருமானைப் போல (தாம் மதுரை மா நகரத்திற் சைவத் திருமடத்தில் வீற்றிருக்கையில் பாண்டியனேவலால் சமணர் மீன திருமடத்தில் தீயிட) அவர்கள் கொளுவிய தீயினைக் கொடி யேந்திய கூன் பாண்டியனைச் (சுரநோயாகப் பற்றி)த் துன்புறுத்தும்படி திருக்கண்ணோக்கஞ் செய்துஅவனது கற்பினையுடைய மனைவியாரும் பிடிபோலும் நடையுடையவருமாகிய மங்கையர்க்கரசியம்மையார் வேண்டிக்கொள்ள, (அவர் வேண்டு கோளுக்கிரங்கி,) பிறகு சுரநோய் தீர்த்து உயிர் காத்தளித்த சிகரங்கள் பதித்த மாளிகைகளையுடைய சீர்காழிப் பதியில் திருவவதாரஞ் செய்த திருஞான சம்பந்த மூர்த்திநாயனாரைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) கடுக்கை = கொன்றை.
மீனக்கொடியன் = மன்மதன்.

6. சேது புராணம்

1060. சங்கமணிக் குழைதயங்கத் தழைந்த
காதுந்தனி விடையு முதலபல தணப்பில்காட்சி
பொங்கு மடையாளங்கள் புகன்று போற்றிப்
பொருவிறந்த பரஞ்சுடரைப் புந்திக் கெட்டா
வங்கணனை வழுதியுடல் வெப்புநீங்க வணிதிகழ்
வெண்டிரு நுண்டூ ளள்ளிச் சாத்துஞ்
செங்கைவிரல் கொடுகுறித்துத் தெரிக்குந் தோன்றல்
சிற்றடியின் பெருந்தகைமை சிந்தை செய்வாம். (6)

(இ - பொ.) அழகிய சங்க வெண்தோடு விளங்கும் காதும், ஊர்தியாம் விடையும், பிறைச் சந்திரனும், திருநீறும் ஆகிய நீங்காத காட்சிகளை, மேம்பட்ட அடையாளங்களாகக் கூறித் துதித்து, ஒப்பற்ற பரஞ்சுடராகிய அறிவுக் கெட்டாத அருட் கண்ணையுடையவராகிய சீகாழியில் திருத் தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமானை, கூன்பாண்டியன் உடலில் பற்றிய வெப்பு நோய் நீங்க அழகிய வெண் திரு நீறு அணியும்படியான செந்தாமரை மலர் போன்ற திருக்கையிலுள்ள சுட்டு விரலால் குறித்துக் காட்டித் 'தோடுடைய செவியன்' என்னுந் திருப் பதிகத்தால் தந்தையாகிய சிவபாதஇருதயருக்குத் தெரிவித் தருளிய அழகிற் சிறந்த குழந்தையாகிய திரு ஞானசம்பந்தப் பெருமானது சிற்றடியின் பெருமையினை உளத்தில் நினைந்து வணங்குவாம். (எ - று.)

குறிப்பு:—திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த அடையாளத் திருப் பதிகத்தைக் கீழே காண்க:-

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென்உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானி வனன்றே.

7. திருப்பரங்கிரிப் புராணம்

1061. மறுவில் சீர்காழி வேந்தை மலைமகள் பாலுண் டோனைப்
பெறுகரித் தோலைப் போர்த்த பிஞ்ஞகன் பழைய சோமன்
குறைபெறு துண்டம் வேணி தரித்தவன் கொடுக்க நாலோ
டறுபது கலையை வாங்கு மையனைப் போற்றி செய்வாம். (7)

(இ - பொ.) யானைத் தோலைப் போர்த்துக் கொண்ட பித்தனும், பழமையான மூன்றாம் பிறைச்சந்திரனைச் சடைமுடியில் அணிந்தவனுமாம் பரமசிவன் அறுபத்து நான்கு கலைஞானங்களும் கொடுத்தருளப் பெற்றுக் கொள் ஐயா துரையாய், மலை மகளாகிய பார்வதியின் திரு முலைப்பால் உண்ட பாலகனாய், குணங் குடிகொண்ட சீர்காழி வேந்தராகிய திருஞான சம்பந்த சுவாமிகளைப் போற்றுவாம். (எ - று.)

(அ - ப.) மறுஇல் = குற்றம் இல்லாத (குணமான)
வேந்து = ஏந்தல்.
பிஞ்ஞகன் = பித்தன் (திவாகரம்) பிஞ்ஞகம் என்னுந் தலைக் கோலத்தை உடையவன் என்பதும் பொருள்.

8. திருவாரூர்ப் புராணம்

1062. புதியசுவை யாரமுதம் பொழிந்த ஞானப்பொங்கு
பசுந்தமிழ்ப் பனுவற் புரைதீர் தெய்வக்
கதிரொளி எண்டிசை பரப்பிக் கரையிலாத
காரமணெட் டிருளொதுக்கிக் கறைதீர் முத்திப்
பதிபுகுது நெறிதெரித்துப் பழைய சைவப்பைம்
பொன்மணி மகுடமெழில் படைப்பத் தோன்று
மதியகடு தொடுகுடுமி மதில்சூழ் காழி
வைதிகச்சூ ளாமணியை மனத்துள் வைப்பாம். (8)

(இ - பொ.) அதியற்புதத்துடன் தித்திப்பு நிறைந்த அமுதம் பங்கிட்டுக் கொடுத்தாற் போலும், ஞானானந்தமே பொங்கிவழி திரு நெறித்தமிழ் வேதமாம் தேவாரமென்னுங் குணங்கொள் தெய்வமயப் பரஞ்சோதியைத்திக்கெட்டும் பரவச் செய்து எல்லை யில்லாத எட்டுச் சமணக் கூட்டங்களெனும் அந்தகார விருளை யொதுக்கித் தள்ளியும், சுத்தாத்துவித முத்தி மாநகர் புகுந்தடை விதத்தைத் தெரிவித்தும் பழமையான சைவமென்னும் பசும் பொன் மாணிக்க மகுடாபிஷே

கத்துடன் தோன்றும் (சந்திர மண்டலத்தைத் தொடுஞ் சிகரங்களுடைய மதில் சூழ்) சீர்காழி வைதிகச் சூளாமணியாம் திருஞான சம்பந்தரைத் தியானிப்பாம். (எ - று.)

(அ-ப.) புதிய = அற்புத,
சுவையார் = மதுரம் நிறைந்த,
பொழிந்த = சொரிந்த.
புரைதீர் = குற்றமில் (குணமான).
கரையிலாத = எல்லையற்ற.
கறைதீர் = களங்கமில்.
நெறி = விதம் (வழி).
அகடு = நடுவு.
குடுமி = உச்சி.

9. இலிங்க புராணம்

1063. என்புவார் குழலும் பொருகயல் விழியும்
எழில்பெறு திங்கட்வாண்முகமும்
பொன்பிறழ் திதலை பூத்தவெம் முலையும்
பூந்தளி ரடியும்வாய்த் திலங்கு
மின்புரை மருங்குற் பெண்கொடி யாகி
மெல்லவந் தெழுந்திட விறைதா
ளன்பினிற் பாடுங் காழிமா முகிலி
னடிமலர் சென்னியில் வைப்பாம். (9)

(இ-பொ.) சாம்பராய்ப் போன அஸ்திகள் எல்லாம் நிறைந்த கூந்தலுடன், சேற்கண்டையைப்போன்ற கண்ணும், அழகிய மதி முகமும், வாள்நுதலும், பொன் போல் தேமல் படர்ந்த முலையும், பூவன்ன மெல்லிய பாதங்களும் ஆகக் கொண்டு விளங்குவதோர் மின்னிடையாளாம் பெண்கொடியாக வந்து மெல்லவெழுந்து வருவதற்காக, இறைவனாகிய பரமசிவத்தின் பாதங்களை யன்பாகப் பாடும் சீகாழிக் கொண்டலாம் திருஞான சம்பந்த சுவாமிகளின் திருவடி மலர்களைச் சிரமேல் சூடுவாம். (எ-று.)

(அ-ப.) வாள் = ஒளி.
திதலை = தேமல்.
மின்புரை மருங்கல் = மின்னிடை.
முகில் = கொண்டல்.

குறிப்பு:—திருஞான சம்பந்தர் திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணுருவாக்கப் பாடிய பதிகப் பாடலைக் கீழே காண்க:-

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல் கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

10. பிரமோத்தர காண்டம்

1064. சுழியும் புனற்செஞ் சடையாளர் பங்கிற்றோகை துணைமுலைக்கண்
வழியும் கொழும்பாற் கடலுண்டு பாவக்கோடை மலிந்து சுட
வொழியும் பசும்புல்லென வுலக மொடுங்கா தோங்கத் தண்ணளியாற்
பொழியுங் கவிதைக் காழிமுகில் பொன்னங் கமலத் தாடொழுவாம். (10)

(இ - பொ.) உலகத்தின் கண் (பிறவிப்) பாவமாகிய கோடைக் கானலானது அதிகரித்துச் சுடவே உலர்ந்தொழியும் பசும் புல்லென ஆன்மாக்கள் ஒடுங்கிப் போகாது ஓங்கிவளர வேண்டுமென்ற கருணையினால் சுழல் கொண்டு பாயுங் கங்கையைச் சடையினிடமாகச் சூடிய சிவபெருமான்றன் வாமபாகத்து மயில் சாயலாம் பார்வதி யம்மையாரின் திருமுலை மூலமாய் பொங்கிவழிகிற ஞானப் பாற்கடலில் பூரணமாய்க் குடித்துத் தேவாரமென்னும் பாமாரியை வருஷிப்பதோர் கொண்டலான சீர்காழித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய பொற் பாத கமலங்களைப் போற்றித் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) கோடை = கானல் (வெயில்)
சுழியும் = (அலைகள்) சுருட்டும்.

---

11. கூர்ம புராணம்

1065. வெள்ளாங் குருகி னிளம்பிள்ளை
விளையாட் டயர முகையவிழுங்
கள்ளார் கமலத் தடம்புடைசூழ்
காழி நகரி னிடைத்தோன்றி
நள்ளார் சமயக் குறும்பெறிந்து
நங்கைபாகன் பதம்போற்றித்
தெள்ளா ரமுதக் கவிதை பொழி
சிறுவன் பாதந் தலைக்கொள்வாம். (11)

(இ - பொ.) வெள்ளை வெளேரென்ற நாரைக் குஞ்சுகள் நீந்தி விளையாடத்தக்க அவ்வளவு அதிசயமாய் மொக்குகள் மலரும் தேன் நிறைந்த தாமரைத் தடாகங்கள் சூழ் சீர்காழிப் பதியில் அவதரித்து உடனே நட்பின் கிழமையறியாச் சமண சமயாதிய வற்றின் சேட்டைகளை யறுத்து எறிந்து, உமாபதியின் பாதங்களைத் தியானித்துக் கொண்டே, தேவாரமென்னும் தெளிந்து நிரம்பும் அமிர்த பாமாரிபெய் கொண்டலாம் திரு ஞான சம்பந்தப் பிள்ளையாரின் பாதாம்புயங்களைத் தலைமேல் கொள்வாம். (எ—று.)

(அ - ப.) வெள்ளாம் = வெண்மையாம்.
குருகு = நாரை.
முகை = அரும்பு.
நள்ளார் = நட்பிலார்
நங்கைபாகன் = நாரிபாகன். (திவாகரம்)
சிறுவன் = சிறுத்தைப் புலிக்குச் சமானமானவன்.

12. காசி காண்டம்

1066. கேழ்கிளர் புனிற்றுத் திங்கள்
கிடந்தொளிர் சடையோன் பங்கி
றாழிருங் கூந்தற் பேதை
தடமுலைத் தீம்பான் மாந்தி
யேழ்நில வரைப்பு முய்ய
வீர்ந்தமிழ் மாரி பெய்த
காழிமா முகிலின் செய்ய
மலரடி கருத்துள் வைப்பாம். (12)

(இ - பொ.) ஒளி நிறைந்த மூன்றாம் பிறைச் சந்திரன் இருந்து பிரகாசிக்கும் சடாமுடியனான பரமசிவனுடைய வாம பாகத் தெழுந்தருள் அழகிய தாழ் குழலினளாம் பார்வதியாரின் திருமுலைப்பால் குடித்து, ஏழுதலை முறையும் உய்யும் படியாகத் தேவார மென்கிற பாமாரி பொழிந்திடு கொண்டலாம் சீகாழி திருஞான சம்பந்த சுவாமிகளின் சரணாரவிந்தங்களைத் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) கேழ் = ஒளி.
கிளர் = நிறை.
புனிற்று = இளஞ்பிஞ்சு.
தாழிருங்கூந்தல் = தாழ்குழல்.
வரைப்பு = எல்லை.
ஈர்ந்தமிழ் = தண்டமிழ்.
முகில் = மேகம்.
ஏழ்நிலைவரைப்பும் = ஏழு லோகங்களும் என்று சொல்வோருமுளர். இனிக் கீழேழு மேலேழு பதினாலு லோகமும் பொதுப்படக் கூறினார் எனவுஞ் சொல்வர் சிலர்.

---

13. வாயு சங்கிதை

1067. சூழ்சுடர் மணிச்சூட் டரவின்வாய் நஞ்சாற்
சுழன்றுவீழ் நாயகனை யுய்வித்
தேழிசை யாளிதாழ் கருங்குழன் மடந்தை
யெழில்வள ரிளமுலை முகட்டில்
வீழ்தரச் சிறந்த மணம்புணர் வித்து
மிக்கபே ரருளினைக் கொடுத்த
காழிமா முகிலின் கமலமொத் திலங்கு
கனைகழல் வணங்குதல் செய்வாம். (13)

(இ - பொ.) ஒளி பொருந்திய மாணிக்கத்தை உச்சியிற் கொண்டுள்ள பாம்பால் தீண்டப்பட்டு உயிர்நீத்த வணிகனைத் (திருமருகல் என்னும் திருக் கோயிலில்) 'சடையா யெனுமால்' என்னும் திருப்பதிகம் பாடி உயிர் பெற்றெழச் செய்து, அவனுடன் மணம் புரிந்து கொள்வதற்கு வந்த நீண்ட கரிய கூந்தலை யுடைய கன்னியாகிய வணிக மாதின் அழகிய தனங்களைச் சாரும் வண்ணம்

மணம் புரிவித்துப் பேரருள் புரிந்த, ஏழிசையில் வல்ல சீகாழியில் அவதரித்த தேவார மழை பொழியும் மேகமாகிய திருஞான சம்பந்தப் பெருமானுடைய தாமரை மலர் போன்ற சதங்கை யணிந்த திருவடிகளை வணங்குவாம். (எ - று.)

வணிகனது விடம் நீங்கத் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரத் திருப்பதிகத்தின் முதற் பாடலைக் கீழே காண்க :—

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.

14. மச்ச புராணம்

1068. பொருகயற்க ணுமைமுலைப்பா லருந்தியருந்
தமிழ்ப்பதிகம் புரமூன் றெய்த
வொருவனைப் பாடிச்சமணக் குறும்பகற்றிக்
கைதவன் கூனொழித்தே யென்பைத்
திருவுருவாச் செய்து சிவசமயமே
சமயமெனச் செகத்தி லோங்கக்
கருணைபுரி பிரமபுரக் கௌணியர்கோ
னிருசரணங் கருத்துள் வைப்பாம். (14)

(இ - பொ.) கயல் போலுங் கண்களுடைய உமாமகேசுவரியின் திருமுலைப்பாலைக் குடித்தும், திரிபுவன தகனஞ் செய்த முழுமுதற் கடவுளாம் பரம சிவனை அரும்பெரும் தமிழ்ப் பதிகங்களால் பாடியும், சமணர்களுடைய குறும்புத்தனமான சேட்டைகளை நீக்கியும் பாண்டியனுடைய கூனை யொழித்து நிமிர்த்தியும், அஸ்தியை எடுத்துப் பழையபடியே அங்கம் பூம்பாவையாய் வரப்படுத்தியும், சைவசமயமே மெய்ச்சமயமென்று உலகில் பரவக் கிருபா கடாட்சஞ் செய்த சீர்காழி அந்தணர் குலாதிபனும் திருஞான சம்பந்தமூர்த்தியின் சரணங்களிரண்டையும் தியானிப்பாம். (எ - று.)

(அ - ப.) பொருகயல் = கயலொத்த.
கைதவன் = பாண்டியன்.
சைவசமயம் = சீவகாருண்ய ஒழுக்கம், சிவசம்பந்தமான சமயம்,

குறிப்பு :—திருஞான சம்பந்தர், பாண்டியன் கூன் நீங்கப் பாடிய பாடல்:—

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக.
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

15. திருக்கூவப் புராணம்

1069. அங்க மான தணங்கினு மேம்படு
மங்கை யாகப் படைத்து மகளெனப்
பங்கை யாதனன் வெள்குறப் பார்த்தருள்
பொங்கு ஞானசம் பந்தனைப் போற்றுவாம். (15)

(இ - பொ.) கமலாசனனாகிய பிரமதேவனும் வெட்கிப் போகும்படி அஸ்தியாய்ப் போனதைத் திருப்பதிகம் பாடித் தெய்வப் பெண்ணினுஞ் சிறந்ததோர் மங்கலமுடைப் பூம்பாவையாக உண்டாக்கித் தனக்குக் குலமகளாகத் திருக்கண் சாத்திப் பூரித்தருளும் திருஞான சம்பந்தமூர்த்தியைப் போற்றி வருவாம். (எ - று.)

(அ - ப.) அங்கம் = அஸ்திக்கும்.
அணங்கு = இலட்சணமானவள் (தெய்வப் பெண்)
மங்கை = மங்கலமானவள்.
மகள் = ஈண்டுக் குலமகளுக்கு
வெள்குற = வெட்கிப்போக.
பார்த்தருள் பொங்கு = திருக்கண் சாத்திப் பூரித்தருள்.

16. திருவையாற்றுப் புராணம்

1070. வீதிகண் டவர்சீசீ சீயென வேத
வஞ்ச கர்பாழ் வாய வீணர்கள்
வாதிடுஞ் சமண வேரோ டேயற
வாழ்க வந்தணர் வானோ ரானென
வோது பண்டித ஞானா சாரியன்
யோக சுந்தை யனோதா தோதிய
வாதி வெங்குரு நாடாள் வேதிய
னாயபுங்கவன் மேன்மேல் வாழிய. (16)

(இ-பொ.) தெருத் தெருவாய்ப் பார்த்தவர்களெல்லாம் சீச்சீ யென்று இகழ் வேத விரோதிகளும், பாழாய்ப் போன பேச்சுகளைப் பேசும் வீணர்களும், விதண்டா வாதிகளுமான சமணர்களைக் குலத்துடன் வேரறுத்து, உள்ளன்புடைய மகான்கள் வாழும்படி, தெய்வப் பசுவென ஞானப் பாலைச் சுரந்து பாடும் பாண்டித்திய சமயா சாரியனுமாய்ச் சின்முத்திராங்க யோகத்திருந்து சொல்லாமல் சொன்ன ஆதிமுதல் குருநாதனும் தட்சிணாமூர்த்தியின் இருப்பிடமாகிய சீர்காழியைக் காத்துவரும் கௌணியனுமாய் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமான் மேன்மேலும் வாழ்க. (எ-று.)

(அ-ப.) வானோர் ஆன் = காமதேனு

குறிப்பு :—'வாழ்க அந்தணர் வானவரானினம்' என்னும் பதிகம் பாடிச் சமணரைப் புனல் வாதத்தில் வென்ற சைவ சமய ஞானாசாரியராகிய யோகியாம் ஓதாதுணர்ந்த ஆதியாகவுள்ள வெங்குருவென்னும் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தர் என்பதே பெரியபுராண வரலாறு, தேவார வரலாற்றுக் கொத்த பொருத்தமான உரை என்க.

17. நல்லூர்ப் புராணம்

1071. கோழி வந்த கொடியவன் றாதையை
வாழி வந்தனை செய்து வழுத்திடு
மாழி வந்த வமுதை நிகர்கவிக்
காழி வந்த கவுணியற் போற்றுவாம். (17)

(இ- பொ.) (கோழியுடன் வந்த) சேவல் கொடியுடையோனாகிய முருகக் கடவுளின் தந்தையராம், பரமசிவத்தை வாழ்த்தி வணங்கித் திருப்பாற்கடலில் கடைதிடு தேவாமிர்தத்துக்குச் சமமான பாசுரங்களைப் பாடும், சீகாழியில் அவதரித்த வேதியர் குலாதிபனும் ஞானசம்பந்தப் பெருமானைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) கோழி = சேவல் (மேல்).
கொடியவன் = கொடியை உடையவன்.
தாதை = தந்தை.
ஆழி = கடல்.
கவுணியன் = (சற்) குணமுடைய ஞானசம்பந்தன்(கவுணிய குலத்தினன்.)

17. சீகாளத்திப் புராணம்

1072. மேவரும் பரமானந்த வீட்டினுட்
டாவினன் மணங்காணிய சார்ந்தவர்
யாவரும்புகு வித்தருள் செந்தமிழ்ப்
பாவலன் மலர்த்தாண் முதல்பற்றுவாம். (18)

(இ-பொ.) குற்றமில்லாத தமது திருமணங் காண வந்தவர்கள் யாவரையும் மேவுதற் கொண்ணாத பரமானந்த வீட்டில் புகுத்துவித்தருளும் செந்தமிழ்த் தேவாரப் பாவலோனாகிய திருஞான சம்பந்தன் திருவடி மலர்களைப் பற்றுவாம். (எ-று).

(அ - ப.) மேவரும் = அடைதற்கரிய
நா இல் = குற்றமில்லாத;
நன்மணம் = நல்ல திருமணம்
காணிய = காணும்பொருட்டு
சார்ந்தவர் = அடைந்த அடியார்களை

குறிப்பு :—திருஞானசம்பந்தர் தம் திருமணங் காண வந்தவர்களைச் சோதியிற் கலக்கச் செய்தபோது பாடிய பதிகம் :—

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

18. திருக்கழுக்குன்றப் புராணம்

1073. கண்ணைப் பாடசையு மிருகனங் குழையைக்
கமழ்குழலைக் கனகச் செப்பை
விண்ணைப் பாடகத் தாளைக் கழைத்தோளைக்
கலந்து திருமேனி தோன்றப்
பண்ணைப் பாடலத் தாறு பதம்பாடும்
பொழின்மயிலைப் பதியென் பாய
பெண்ணைப் பாடிய புகலிப் பிள்ளையைப்
பாடித்துயரம் பெயரச் செய்வாம். (19)

(இ- பொ.) கண்களையும் பக்கத்திலசைந்து கொண்டிருக்கும் கனத்த இரண்டு குழைகளையும், பரிமளிக்கும் அளகத்தையும், பொற்செப்பினை யொத்த தனங்களையும், ஆகாய வெளிபோன்ற இடையினையும், பாடகங்கள் பூண்ட பாதங்களையும், பசிய மூங்கிலை யொத்த தோள்களையும் பொருந்தித் திருவுருவந் தோன்றும்படி எலும்பாகிய பெண்ணைக் குறித்துத் திருப்பதிகம் அருளிச் செய்த சீர்காழியில் திருவவதாரஞ் செய்தருளிய திருஞான சம்பந்த சுவாமிகளைப் பாடித் துதி செய்து எம்முடைய பிறவித் துன்பம் நீங்கும்படி செய்வாம். (எ-று.)

குறிப்பு :—திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கிய போது பாடிய பதிகம் :—

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

---

20. திருவெண்காட்டுப் புராணம்

1074 இருகுடங்கொண் டொருகுடத்தில் வெண்பொடி
பெண் கொடி யாகவெழு வித்தோனைத்
திருவருளாற் பாலருந்தி யேடதனை
யாற்றிலிட்ட தெய்வக் கோனை
யருமறையின் றலைக்கொழுந்தை யாகமத்தின்
றனிமுதலை யடியார் வாழ்வைப்
பரசமய கோளரியைக் கௌணியர்சூ
ளாமணியைப் பகரு வோமே. (20)

(இ- பொ.) வெளுத்துப் பொடியாய்ப்போன அஸ்தியைப் பதனித்த குண்டம் ஒன்றில் தம் இரு உள்ளங் கைகளாலுந் தொட்டுப் பதிகம் பாடி அங்கம் பூம்பாவையை எழுப்புவித்தவனாய், அம்மையின் கிருபையால் திரு முலைப் பால் உண்டு, ஏடுகளை ஆற்றில் விடுத்த தெய்வத் தன்மை பொருந்தியவனாய், அரும் பெரும் வேத சிரோமணியும், ஆகமமாகிநின்ற தனி முதற் கடவுளான பரமசிவத்தின் அன்பர்கட்குகந்த வாழ்க்கைத் துணைவனாய், பர சமயங்களுக்குச் சிங்கமாய், குணமுடைய வேதியர் குலச் சூடாமணியுமாய் விளங்கும் திருஞான சம்பந்தனைப்பாடிப் பணிவோம். (எ - று.)

(அ - ப.) இரு குடம்கொண்டு = உள்ளங்கை யிரண்டுங்கொண்டு,
இரண்டு தனங்களைக்கொண்டு.
பர சமயம் = அயல் சமயம்.
கோளரி = சிங்கம்.

21. திருவாவடுதுறைப் புராணம்

1075. பரசமயர் வயிறெரியத் தமிழ்ப்பதிகந்
தீயிலிட்டுப் பசுமை யாக்கிக்
கரவுடைய பொய்ச்சமணர் கழுவேறப்
பாசுரம் வைகையின் மீதேற்றிப்
புரவலன்கூ னிமிர்த்தினிய தமிழ்நாட்டைச்
சோணாடு போலச் செய்த
சிரபுரக்கோன் சிற்றடிப்பொற் றாமரைப்போ
தெப்போதுஞ் சிரமேற் கொள்வாம். (21)

(இ - பொ.) அயல் சமயத்தினராகிய சமணர் பவுத்தர்களுடைய வயிறு எரியத் திருப்பதிகத்தை வைகை நீரிலிட்டு எதிர் ஏறிச் செல்லச் செய்தும், திருப்பதிகம் பாடிப் பாண்டியனுடைய கூனை நிமிர்த்தும் வெற்றிகொண்டு சமணர்களைக் கழுவேறச்செய்து பாண்டி நாட்டைச் சோழநாடுபோலத் திருநீற்றின் ஒளி விளங்கும்படியாகச் செய்த சிரபுரம் என்னும் சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தப்பெருமானுடைய பொற்றாமரை போன்ற சிறிய திருவடிகளை எப்போதும் எம் தலைமேற்கொண்டு வணங்குவாம். (எ - று.)

22. காஞ்சிப் புராணம்

1076. பரசமய கோளரியைப் பாலரு
வாயனைப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேய மெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங்
கவுணியர் தங்குல தீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ
விளங்களிற்றை விரும்பி வாழ்வாம். (22)

(இ - பொ.) வேற்றுச் சமயங்களை வென்றடக்கிய ஆண் சிங்கமும், உமையம்மை யளித்த ஞானப் பாலுண்ட பால்மணம் மாருத பாலகனும், அழகிய வயல்கள் சூழப்பெற்ற சீகாழிப் பதியில் அவதரித்த திருஞானசம்பந்தப்பெருமானும், உலகமெலாம் ஓதிப் பேரொலி செய்யும்படியாகத் தேவாரத் தமிழ் மறையை அருளிச் செய்தவனும், கவுணியர் குல விளக்கும், எமது உள்ளத்திற் கலந்து எம்மை ஆட்கொண்ட வெற்றி பொருந்திய மழ விளங்களிற்றைப் போன்றவனுமாகிய எங்கள் சமயாசாரிய சுவாமிகளை விருப்புடன் வணங்கி நல்வாழ்வு பெறுவாம். (எ-று.)

23. பேரூர்ப் புராணம்

1077. தவந்த வென்பிணைப் பெண்ணெனப் படைத்துஞ்சார் மழவ
னுவந்த பெண்ணுயி ரளித்து மொட்டா தெதிர்புத்த
னிவந்த சென்னியை யுருட்டியு முத்தொழி னிறுவிப்
பவந்த டுத்துயிர்க் கருளுஞ்சொற் பனவனைப் பணிவாம். (23)

(இ-பொ.) சாம்பராய்ப் போன எலும்பிணைப் பெண்ணுருவாகப் படைத்தும், முயலகன் என்னும் நோயால் வருத்தமுற்ற கொல்லிமழவன் என்னும் அரசனது பெண்ணின் உயிரைக் காத்தும், எதிர்த்து வாதிட்ட சாரிபுத்தன் என்பவனுடைய தலையில் இடி விழச்செய்து! அழித்தும் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத் தொழிலினைப்புரிந்து உயிர்களின் பிறவித் துன்பத்தைத்தடுத்து வீட்டுலகை அருளக்கூடிய தேவாரப் பதிகங்களை அருளிச்செய்த அந்தணர் குலத்தில் தோன்றிய சீகாழி திருஞானசம்பந்தப்பெருமானை வணங்குவாம். (எ - று.)

24. திருவானைக்காப் புராணம்

1078. மழலை இன்னமு தூற்றெழ மாசை வள்ளத்துக்
குழலின் மென்மொழி யுமையவள் கொடுத்த பால்கமழப்
பழகு செந்தமிழ்ப் பாட லந்தேன் வடித்தாடு
மழக னஞ்செவி யூட்டிய வறிஞனை யடுப்பாம். (24)

(இ-பொ.) மழலைச் சொல்லாகிய இனிய அமுத வாக்கால் அம்மே! அப்பா! என்றழைக்க, குழலின் மென்மொழி உமையம்மையார் பொற் கிண்ணத்துத் தமது திருமுலைப்பாலைக் கறந்து சிவஞானத் தின்னமுதங் குழைத்து ஊட்டிய ஞானப் பாலுண்டு கமழும் திருவாயால் பழகிய செந்தமிழ்த் தேவாரத் திருப்பதிகப் பாடலாகிய தேனைப் பொழிந்து, ஆனந்தத் தாண்டவமாடுகின்ற அழகனும் அம்பலக் கூத்தனது அழகிய செவியில் ஊட்டிய திருஞானசம்பந்தப்பெருமானை அடைக்கலமாக அடைவாம். (எ-று.)

25. பூவாளூர்ப் புராணம்

1079. மட்டுவிரி நறுந்துளப மாலாலு
மயனுலு மறையி னுலுஞ்
சுட்டியறியாத பெருஞ்சுகப் பொருளை
யொருவிரலாற் சுட்டிக் காட்டி
மெட்டிளமென் முலையுமையாள் கொடுப்ப
வருந்திய வமிழ்த முழுதுமாங்கே
கொட்டியது போற்கவிதை கொழித்தகவு
ணியர்மணிதன் குலத்தாள் போற்றி. (25)

(இ-பொ.) தேன் நிறைந்த மணம் பொருந்திய துளசி மாலையணிந்த திருமாலாலும், பிரமனுலும், வேதங்களாலுஞ் சுட்டிப் பார்த்தறியாத பேரின்பப் பொருளாகிய சிவபெருமானை ஒரு விரலால் சுட்டிக்காட்டி, மிக்க இளமையும் மென்மையும் பொருந்திய தனங்களையுடைய உமையம்மையார் கொடுப்ப அருந்திய ஞானப் பாலாகிய அமிழ்தம் முழுவதையும் அப்பொழுதே கொட்டியதுபோல் தேவாரத்

திருப்பதிகமாங் கவிதைகளைப் பொழிந்து கொழித்த கவுணியர் குலமணியாகத் தோன்றிய திருஞானசம்பந்தப்பெருமானுடைய சீரிய திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

---

26. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

1080. தாது நிலை யொன்றேழா மயிலையினிற்
பாணினியுஞ் சமழ்ப்ப வாக்கி
யேதுனுத லுபமான வளவெவையும்
பிரத்தியக்கத் தெய்தக் காட்டி
யோதுமுறை வேதமு மோதாதுணர்ந்தே
முத்தியு மீங்குதவி யாண்டே
நாதனெழிற் பூந்தராய்க் கவுணியநா
யகன்பதங்க ணயந்து வாழ்வாம். (26)

(இ-பொ.) எழுவகைத் தாதுக்களில் ஒன்றாகிய எலும்பைக்கொண்டு எழுவகைத் தாதுக்களாலாகிய அழகிய பூம்பாவையின் வடிவத்தைத் திருமயிலாப்பூரில் திலோத்தமையும் வெட்கும்படியாகப் படைத்து, ஏது முதலாகிய அளவை எவையும் கண்கூடாகக் காணவல்ல காட்சியளவையிற்காட்டி, வேதங்களையெல்லாம் ஓதாதுணர்ந்து இவ் வுலகில் தம் திருமணங் காண வந்தவர்கட்கெல்லாம் முத்தியுங்கொடுத்து ஆண்ட தலைவனாகிய சீகாழியில் அவதரித்த கவுணிய குல திலகனும் திருஞானசம்பந்தப்பெருமானது திருவடிகளை விரும்பி வாழ்வாம். (எ - று.)

---

27. உத்தரகோச மங்கைப் புராணம்

1081. காரமண ரிருட்குறும்பு கரந்தொளிப்ப
விலங்குதிரைக் கடல்வாய்ச் சூழ்ந்த
பாரடைய நீற்றிநொளி நிலவெறிப்பப்
புகழ்நிலவு பரவா நிற்பச்
சீரளவுந் தமிழ்ப்பதிகத் தின்னமுதம்
பொழியுமதிச் செல்வன் வான்றோய்
தாரணியும் பொழில்புடைசூழ் சண்பை யர்கோன்
பதகமலந் தலைமேற் கொள்வாம். (27)

(இ-பொ.) கரிய நிறமுடைய சமணர்களுடைய அறியாமை பொருந்திய குறும்புச் செயல்கள் மறைந்து ஒளிக்கவும், கடலாற் சூழப்பட்ட உலகம்முழுவதும் திருநீற்றின் நிலவொளி வீசவும், புகழாகிய ஒளி எங்கும் பரவி நிற்கவும், சிறப்புப் பொருந்திய தேவாரத் திருப்பதிகமாகிய இனிய அமுத மழையைப் பொழியும் ஞானச் செல்வனும், ஆகாயமளவு முயர்ந்துள சோலைகள் சூழப்பெற்ற சண்பை என்னும் சீகாழிக்குத் தலைவனுமாகிய திருஞானசம்பந்தப்பெருமானுடைய திருவடித் தாமரைகளைத் தலைமேற் சூடிக்கொள்வாம். (எ - று.)

28. கடம்பர் கோயிற் புராணம்

1082. பொன்பூத்த கிண்கிணிச் செஞ்சீறடியும்
யோகவுடைப் பொலிவும் வேத
மின்பூத்த முந்நூலும் வெண்ணீறுந்
திகழ்மார்பும் விரிபொற் றோளு
முன்பூத்த திருக்கரமு மிணைவிழியுங்
குறுநகையு முதல்வன் பான்மெய்
யன்பூற்றுங் கனிவாயும் பெற்றமழ
விளங்களிற்றை யண்மி வாழ்வாம். (28)

(இ - பொ.) பொன்னாற் செய்யப்பெற்ற அழகு பொருந்திய கிண்கிணி என்னும் அணிகலனை அணிந்துள்ள சிவந்த சிறிய திருவடியும், யோகவுடையின் அழகும், வேத விதிப்படி அணிந்துள்ள ஒளி திகழும் முப்புரிநூலும், திருவெண்ணீறும் விளங்குந் திருமார்பும், அளவாகப் பருத்த அழகிய தோளும், முன்பு இரு மருங்கும் நீண்டு தொங்கும் அழகிய திருக் கைகளும், இரண்டு திருவிழிகளும், புன்னகையும், இறைவன்பால் வைத்துள்ள மெய்யன்பினைத் தேவாரப் பாடல்களால் வெளிப்படுத்தும் கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயும் பெற்றுள்ள மழவிளங்களிறுபோன்ற திருஞானசம்பந்தப்பெருமானை அடைந்து வாழ்வாம்.(எ-று.)

(அ - ப.) மழவிளங்களிறு = மிக்க இளந் தன்மை பொருந்திய ஆண் யானைக் கன்று
கனிவாய் = கொவ்வைக் கனிபோன்ற வாய்

29. சிவராத்திரிப் புராணம்

1083. வெங்குருவிற் கவுணியர்தங் குலத்துதித்து
மீனவன்றன் வெப்புங் கூனு
மெங்குமிசைபெற மாற்றி யமணரெண்
ணாயிரவர் கழுவினேற வேற்றிப்
பங்கமிலென் பரிவையுருப் படைத்துயிர்பெற்
றெழப்பதிகம் பாடி மேன்மை
தங்குமறைத் திருஞான சம்பந்தன்
ருட்டுணைக டலைமேற் கொள்வாம். (29)

(இ - பொ.) வெங்குரு என்னும் சீகாழிப்பதியில் கவுணியர் குலத்தில் தோன்றி, பாண்டியனுடைய வெப்பு நோயையும், கூனையும் எங்கும் புகழுமாறு நீக்கி, சமணர் எண்ணாயிரவரைக் கழுவேறச்செய்து, குற்றமற்ற எலும்பைப் பெண்ணுருவாக உயிர்பெற்றெழப் பதிகம் பாடி மேன்மை தாங்கிய மறையவராகிய திருஞானசம்பந்தப்பெருமானது இரண்டு திருவடிகளையுந் தலைமேற்கொண்டு வணங்குவாம். (எ - று.)

30. புலியூர்ப் புராணம்

1084. வெம்பந்த முறுமணுக்க ளிடரகற்று
மரன்மனையாய் மேவு மன்னை
கொம்பந்த மாகவளர் குவிமுலைப்பா
லமுதுண்டு குழையப் பாடு

மம்பந்த முறப்பெருகு மந்நாளிற்
றோணியா யமர்சீர் காழிச்
சம்பந்த முனிவர் சரண்முப் பொழுதுந்
தாழ்ந்துவினைத் தன்மை தீர்ப்பாம். (30)

(இ - பொ.) கொடிய மலங்களால் பிணிக்கப்பட்டுள்ள உயிர்களின் துன்பத்தை நீக்கியருளும் சிவபெருமான் மனைவியாய் வீற்றிருக்கும் உமையம்மையளித்த திரு முலைப் பாலுண்டு, உள்ளங் குழைந்து தேவாரப்பதிகம் பாடிய, கடல் நீர் பொங்கி உயர்ந்த அந்த நாளில் உயிர்களைக் காக்கத் தோணியாக விளங்கித் தோணிபுரம் என்னும் பெயர்பெற்ற சீகாழிப்பதியில் அவதரித்த திருஞானசம்பந்தப்பெருமான் திருவடிகளை மூன்று பொழுதும் வணங்கி நம் பழ வினைகளைப் போக்குவாம். (எ-று.)

31. சீர்காழிப் புராணம்

1085. குழுவேறச் சமண்முக ரழலேற
விடுத்ததனைக் கூடற் கோமான்
வழுவேறு முடலேற வுடன்முரணா
மனமுரணா மாற்றி யன்னார்
கழுவேற வெண்ணீறு மைந்தெழுத்தும்
விரித்துலகைக் கதியி லேற்றி
மழுவேறுங் கரத்தான்ற னருளேறுங்
கவுணியர்கோன் மலர்த்தாள் போற்றி. (31)

(இ - பொ.) எண்ணாயிரம் என்று சொல்லும்படியான சமணமுனிவர்கள் மதுரையில் சிவனடியார்கள் தங்கியிருந்த திருமடத்தில் வைத்த தீயினைக் குற்றம் பொருந்திய பாண்டியனுடலில் பற்றச் செய்தும், (அப் பாண்டியன் மனைவியாகிய மங்கையர்க்கரசியார் வேண்டுகோட்கிணங்கி) அவனது வெப்பு நோயும் உடற் கூனும் அறியாமையும் நீங்கச் செய்தும், அச் சமணர்களைக் கழுவேறச் செய்தும், திருவெண்ணீறும், திருவைந்தெழுத்தும் பரவச் செய்து உலகு உயிர்களை நற்கதியடையச் செய்தும், மழுவாயுத மேந்திய கையினையுடைய சிவபெருமானுடைய அருள் மிகப் பெற்ற கவுணியர் குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமானது தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

32. திருவாப்பனூர்ப் புராணம்

1086. பெருமுலைப்பா லகன்பிரமன் கண்டறியாப் பெருந்தகைமேற்
பொருமுலைப்பான் மெழுகினுளம் புரைந்துருகத் தமிழ்பாடு
மருமுலைப்பா லரும்பனைய மணிமுறுவன் மலைமகளார்
திருமுலைப்பான் மணங்கமழ்வாய்ச் செல்வனையாம் பரவுவாம். (32)

(இ - பொ.) பெரிய முல்லை நிலத்துக் கோபாலனாகிய திருமாலும், பிரமனுங் கண்டறியாத பெருமையுடையவனாகிய சிவபெருமான்மீது அனலிற்பட்ட மெழுகுபோல் உள்ளம் உருகித் தேவாரத் திருப்பதிகம் பாடும்படியான, பால் போன்ற வெள்ளிய முல்லையரும்பை யொத்த பற்களையுடைய பார்வதியம்மையாரின் திருமுலைப்பாலயின்ற மணங்கமழும் பாலறாவாயனும் திருஞானசம்பந்தப்பெருமானை யாம் துதிப்பாம் (எ - று.)

(அ - ப) பெருமுலைப்பாலகன் = பெரிய முல்லை நிலத்திற்குரிய திருமால். முல்லை என்ற சொல் 'முலை' என இடைக் குறையாய் வந்தது.

மருமுலைப்பால் அரும்பு அனைய = மணம் பொருந்திய முல்லையினது பால்போன்ற வெள்ளிய அரும்பை ஒத்த. ஈண்டும் முல்லை என்னும் மலரைக் குறிக்குஞ் சொல் 'முலை' என இடைக்குறையாய் நின்றது.

33. திருப்பூவணப் புராணம்

1087. திருப்பிரம புரத்தமர்ந்த சிவனருளா
லுமைகலசத் திருமு லைப்பால்
விருப்பொடுமங் கமுதுசெய்து மிகுசைவத்
துறைவிளங்க வேத மோங்கக்
கருக்குழிவீழ்ந் தலறுமமண் கையரெலாங்
கழுவேறக் கருதி மாற
னெருப்புறுவெப் பகன் றிடவெண் ணீறெடுத்துச்
சாத்தினர்தா ணினைதல் செய்வாம். (33)

(இ - பொ.) திருப்பிரமபுரம் என்னும் சீகாழியில் வீற்றிருக்கும் சிவபெருமான் திருவருளால் உமையம்மையார் அளித்த திருமுலைப்பாலினை விருப்புடனருந்தி மேம்பட்ட சைவத்துறை விளக்க மெய்தவும், வேதநெறி தழைத்தோங்கவும், பிறவிக் குழியில் வீழ்ந்து வருந்தும் சமண வஞ்சகர்கள் கழுவேறவுங் கருதி பாண்டியனுடைய உடலிற்பற்றியிருந்த வெப்பு நோயகன்றிடத் திருவெண்ணீறெடுத்துச் சாத்திய திருஞான சம்பந்தப் பெருமானது திருவடிகளைச் சிந்தித்து வணங்குவாம். (எ-று.)

குறிப்பு :—திருவெண்ணீறு சாத்தியபோது திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகம் கீழே காண்க:—

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.
ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

34. மயூரகிரிப் புராணம்

1088. அம்பிகைதன் முலைப்பாலி லறிவுகுழைத்
துண்டபிரா னழகார் சோம
விம்பமெனு மலர்முகத்தான் றிருமருகல்
வணிகப்பெண் விடந்தீர்த் தாண்டோ
னம்புகின்ற சைவரெலா மீடேறச்
சமணர்கழு நண்ணச் செய்த
வும்பர்பிரான் றிருநீற்றான் சம்பந்த
னிணையடிக ளுளத்துள் வைப்பாம். (34)

(இ - பொ.) உமாதேவியார் தம் திருமுலைப்பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்து அதிற் சிவஞானத்தைக் குழைத்து ஊட்ட உண்டவனும், அழகுபொருந்திய முழுமதி போன்ற ஞான ஒளி மலர்ந்த திருமுகத்தையுடையவனும், திருமருகலில் வணிகனுக்கு அரவு தீண்டியதால் உண்டான விடத்தைத் தீர்த்து வணிகப் பெண்ணை ஆட்கொண்டு அவ்விருவருக்கும் திருமணம் புணர்த்தவனும், நம்புகின்ற சைவ அடியார் எல்லாரும் நற்கதி அடையவும், சமணர்களைக் கழுமரத்தில் ஏறவுஞ் செய்தவனும், தேவர் தலைவனும் சிவபெருமானது திருநீற்றை அணிந்து அதனைப் பரவச் செய்தவனுமாகிய திருஞானசம்பந்தப் பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் உள்ளத்துவைத்துத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) சோமவிம்பம் = சந்திரபிம்பம்.
உம்பர்பிரான் = தேவர்கள் தலைவன், சிவபெருமான்.

35. திருமயிலைப் புராணம்

1089. வீழியிதழ் மடந்தைதன்மெய் யத்தியைப்
பெண்ணரசாக் கும்வேந்தை வாவு
மாழிபுடை சூழ்மதுரை யமணிருள்கீண்
டெழுந்தசுட ரவனை யவ்வூர்
வாழிறைவன் வெப்பகல வருளமுதம்
பொழிந்தவியன் மழையை ஞானக்
காழிநகர் மறைவேந்தைக் கவுணியர்தங்
குலக் கொழுந்தைக் கருதி வாழ்வாம். (35)

(இ - பொ.) வீழிக்கனி போன்ற அதரத்தையுடைய ஒரு பெண்ணின் சரீரத்தெலும்பைப் பெண்ணுருவாகச் செய்த இறைவரும், அலைகள் தாவி வரும்படியான கடல் சூழ்ந்த மதுரையிலிருந்த சமணர்களாகிய இருளைக் கிழித்து உதயமாகிய ஞானசூரியரும், அந்த மதுரைமா நகரில் அரசு செய்து கொண்டிருந்த கூன்பாண்டியனுக்கு உண்டாகிய வெப்பு நோய் தீரும்படி அருளமிர்தமாகிய மழையைப் பொழிந்த பெரிய மேகம் போன்றவரும், மெய்ஞ்ஞானிகள் நிறைந்துள்ள சீகாழி என்னுந் திருப்பதியில் திருவவதாரஞ் செய்த சிவபாத இருதயர் என்னும் அந்தணர் புதல்வரும், கவுணியர் குலக்கொழுந்தாயிருப்பவருமாகிய திருஞானசம்பந்த சுவாமிகளைத் தியானித்து வாழ்வாம். (எ - று.)

(அ - ப.) அத்தி = எலும்பு.
ஆழி = கடல்.
வாவும் = தாவும், தாண்டும்.
சுடர் = சூரியன்.

36. ஆதிபுரிப் புராணம்

1090. கும்பந்தன் னிடத்துதித்த முனிவரன்செந்
தமிழ்நாட்டிற் குண்டர் மாயை
கம்பந்தம் பின்செய்து கலதைதனின்
மயங்கு கவுரியன் மேலுற்ற
வெம்பந்த மிகுகூனும் வெப்பினொடு
நீக்கியொளிர் வெண்ணீ றீந்த
சம்பந்தப் பெருமான்றன் சரணார
விந்தமலர் தலைமேற் கொள்வாம். (36)

(இ - பொ.) குடத்திற்றோன்றிய அகத்திய முனிவன் செந்தமிழ் வளர்த்த பாண்டி நாட்டில் வாழ்ந்த குண்டர்களாகிய சமணர்கள் மாயைகள் புரிந்து நடுங்கத்தக்க செயல்களைச் செய்து கூறிய கலக மொழிகளைக் கேட்டு மயங்கிச் சமண மதத்தை மேற்கொண்ட பாண்டியன் உடலிற் பொருந்தியிருந்த கொடிய கூனலையும், வெப்பு நோயினையும் நீக்கி ஒளிரும்படி வெண்ணீறணிந்த திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருவடித் தாமரைகளைச் சிரமேற் கொண்டு வணங்குவாம். (எ - று.)

(அ - ப.) கும்பந்தனிடத் துதித்த முனிவரன் = அகத்திய முனிவன்.
செந்தமிழ் நாடு = பாண்டிநாடு.
குண்டர் = பருத்த உடலுடைய சமணர்.
கலதை = கலக மொழி.
கவுரியன் = பாண்டியன்.

37. அவிநாசிப் புராணம்

1091. செம்புகலி லெழுதுபுகழ் வளவர்பிரான்
றிருமகளார் திருநின் றோங்க
வெண்புகலி யமண்மாறத் தென்னர்புவி
வெண்ணீறு விளங்கி வாழ
நம்புகலி யாளுடைய பிள்ளையெனுந்
தெள்ளுதமிழ் ஞான தீபம்
பம்புகலி நீர்த்தரங்கப் பொய்கைமருங்
கலர்கமல பதம்பெற் றுய்வாம். (37)

(இ - பொ.) செப்புப் பட்டையங்களில் எழுதும்படியான பெரும்புகழுடையவரான சோழ மன்னன் திருமகளான மங்கையர்க்கரசியாரின் மங்கலநாண் நிலைபெற்றோங்கவும், வெற்றுரைகளைப் பேசுகின்ற சமண சமயத்தினர் நீங்கவும், தென் பாண்டி நாட்டில் வெண் திருநீற்றொளி விளங்கி வாழவும், நமது புகலி என்னும்

சீகாழிப் பதியில் அவதரித்த, சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற குழந்தையாகிய திருஞானசம்பந்தப் பெருமானென்னும் திருப்பெயரையுடைய தெளிந்த தமிழில் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடியருளும் ஞானச்சுடரின், ஒலிமிக்க அலைகளையுடைய நீர்த்தடாகத்தினிடையே மலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளை அடைந்து வாழ்வாம். (எ-று.)

(அ - ப.) வளவர்பிரான் திருமகளார் = மங்கையர்க்கரசியார்.
திரு = மங்கல நாண்.
புகலி = சீகாழி.
ஞானதீபம் = அறிவுச்சுடர், ஞான விளக்கு.

38. திருமுருகன் பூண்டிப் புராணம்

1092. மருந்தி னார்ந்த சொன்மலைக் கொடிகொடுத்
திடுமணித் திருமுலைத் தீம்பா
லருந்தி யாகம வேதநூல் வரம்பெலா
மறிந்து பல்லுயிர்க் கெல்லாந்
திருந்து நன்னெறி காட்டிவெவ் வமணிருள்
சீத்து நீற்றொளி தேக்கி
விரிந்த சைவமார்த் தாண்டனாங் கவுணிய
வேதியன் பதம் போற்றி. (38)

(இ - பொ.) அமுதம் போன்ற இனிய சொல்லினையுடைய மலைமகளாகிய பார்வதியம்மையார் அளித்த திருமுலைப்பாலுண்டு, ஆகமங்கள் வேதங்களின் பொருள் முடிபெல்லா முணர்ந்து, எல்லாவுயிர்கட்குந் திருத்தமாகிய சைவ நன்னெறியே மெய்ந்நெறியென உணர்த்தி, கொடிய சமண சமயமாகிய இருளைப் போக்கித் திருநீற்றொளி விளக்கி நிலைக்கச் செய்து, சைவ ஒளி பரப்பும் சூரியனாகிய கவுணிய குல அந்தணர் மரபில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருவடிகளைப் போற்றும். (எ-று)

(அ - ப.) மருந்து = அமுதம்.
மலைக்கொடி = பார்வதி.
மார்த்தாண்டன் = சூரியன்.
வரம்பு = எல்லை, பொருள் முடிவு.
ஆகமம் — சிவாகமங்கள் இருபத்தெட்டு.
வேதம் = நால் வேதங்கள்.

39. பவானிகூடற் புராணம்

1093. பொய்கைவாய்த் திருத்தோணி புரத்தமர்ந்தா
ரொடுஞ்சயிலப் புனிதப் பாவை
கைகளாற் றிருமுலைப்பால் கறந்தூட்ட
வமுதுண்டு கடல்சூழ் வைய
முய்யவான் சைவநெறி தழைத்தோங்க
வமணிருள் போயொழியச் சீர்சால்
வைகைநா டீடேற வருள்பொழியுங்
கவுணியர்கோன் மலர்த்தாள் போற்றி. (39)

(இ - பொ.) சீகாழியிலுள்ள பிரமதீர்த்த மென்னும் திருக்குளக்கரையினிடத்தே எதிரே திருத்தோணியில் வீற்றிருக்குஞ் சிவபெருமானோடு பார்வதிதேவியாரும் எழுந்தருளி வந்து, தமது கையால் திரு முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து சிவஞானங் குழைத்து ஊட்ட, அவ்வமுதத்தை உண்டு, கடலால் சூழப் பட்ட உலகுயிர்களெல்லாம் உய்யவும், சிறந்த சைவநெறி தழைத்தோங்கவும், சமணிருள் அகலவும், சிறப்புமிக்க வைகையாறோடும் பாண்டிநாடு திருநீற்றொளி விளங்கி மேன்மையடையவும், திருவருட்டேவார மழைபொழியும் கவுணியர் குலத்தலைவனாகிய திருஞானசம்பந்தப் பெருமானுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

(அ - ப.) தோணிபுரம் = சீகாழி.
சயிலப் புனிதப்பாவை = பார்வதி.
வைகை நாடு = பாண்டிநாடு.
சைவநெறி = சைவசமயம்.

40. கருவூர்ப் புராணம்

1094. பொன்புனை கமலச் செல்வி போற்றுபே ரெழிலுந் தூய
வன்புநல் லறமுங் கற்பு மவயவ மாக ஞான
முன்புரு வமைந்த பேதை முற்றிய வென்புக் காவி
பின்பருள் புரிந்த காழிப் பிள்ளைதாட் கன்பு செய்வாம். (40)

(இ - பொ.) பொற்றாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியும் போற்றக் கூடிய பேரழகும், அன்பும், நல் அறமும், கற்பும் உறுப்பாகப் பெற்று முன்பு ஞான வடிவாய்த் திகழ்ந்த சிவநேசச் செட்டியாரின் மகளாகிய பூம்பாவையின் இறந்து பட்ட எலும்புக்கு உயிருண்டாகும்படி பதிகம் பாடி அருள் செய்த சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரது திருவடிகட்கு அன்பு செய்வாம். (எ-று.)

(அ - ப.) கமலச் செல்வி = திருமகள்.
பேதை முற்றிய என்பு = இறந்துபட்ட பூம்பாவையின் எலும்பு.
காழிப் பிள்ளை = திருஞானசம்பந்தர்.
அவயவம் = உறுப்பு.
ஆவி = உயிர்.

41. திருச் சுழியற் புராணம்

1095. பிரமபுரச் செழுஞ்சுடரை வேணுபுரக் கோவைப்
பேசுகொச்சை வயவமுதைப் பூந்தராய்ப் பேற்றைச்
சிரபுரக்கல் விக்கடலைப் புறவநான் மறையைத்
திருத்தோணி புரக்கனியைச் சண்பை நறுந்தேனை
விரகுறு காழிப்பொருளைக் கழுமலப் பேரொளியை
மிகுபுகலிக் குணவரையை வெங்குரு நாயகத்தைத்
தரணியம ணழித்த பரசமய கோளரியைத்
தப்பாமன் மெய்ப்பான்மை யன்பினிற் றாழ்ந்துவப்பாம். (41)

(இ - பொ.) பிரமபுரத்துதித்த செழுமையான சுடரும், வேணுபுரத்தலைவரும், கொச்சை வயத்தின் அமுதமும், பூந்தராயின் தவப் பேறும், சிரபுரத்தின் கல்விக் கடலும், புறவத்தின் நான்மறையும், திருத் தோணிபுரத்தின் கனியும், சண்பையின் நறுந்தேனும், சீகாழிச் செல்வமும், கழுமலத்தின் பேரொளியும், புகலிக் குணமலையும், வெங்குருவின் நாயகமும் ஆகிச் சமண இருளைப் போக்கியதால், 'பரசமய கோளரி' என்னுங் காரணப் பெயர் பெற்ற திருஞானசம்பந்தப் பெருமானைத் தப்பாமல் மெய்யன்புடன் வணங்கி உள்ளம் உவப்பாம். (எ-று.)

குறிப்பு:—இப்பாடலில் சீகாழிக்குரிய பன்னிரண்டு பெயர்கள் வந்துள்ளன. அப்பெயர்களாவன :—

(1) பிரமபுரம் (2) வேணுபுரம் (3) புகலி (4) வெங்குரு (5) தோணிபுரம் (6) பூந்தராய் (7) சிரபுரம் (8) புறவம் (9) சண்பை (10) காழி (11) கொச்சை வயம் (12) கழுமலம்.

42. மருதூர்ப் புராணம்

1096. நாடேறும் வைகையி லேடெதிர் சென்றேற
நடலைதரு சமண்மூகர் நவைக டீர்ந்து
வீடேறுந் திறமின்றி யிடும்பை யேறி
வெங்கழு விலேற வெறிவேம்பு சூடி
சூடேறுஞ் சுரத்தொடு கூனொழிந்து தேகஞ்சுக
மேறச் சைவநெறித் தொண்டர் முற்று
மீடேறத் தண்டரளச் சிவிகை யேறு
மிருங்காழிப் பிள்ளைப்பத மேத்து கிற்பாம். (42)

(இ - பொ.) பாண்டி நாட்டில் ஏறிச் செல்கின்ற வைகை நதியிலே திருப்பதிகம் வரைந்த ஏடு எதிர் ஏறிச் செல்லவும், பொய் மிகுந்த சமண ஊமைகள் குற்றந் தீர்ந்து வீட்டை அடையுந்திறம் அறியாது துன்பம்மிகப் பெற்றுக் கொடிய கழுவில் ஏறவும், மணம் பொருந்திய வேப்பமாலையினை அணிந்த பாண்டியன் வெப்பம் மிகுந்த சுரநோயுடன் கூனும் ஒழிந்து உடல் நலம் பெறவும், சைவ சமயத் தொண்டர்கள் எல்லோரும் நற்கதியடையவும் முத்துச் சிவிகையின்மீது எழுந்தருளிவரும் சீகாழியில் அவதரித்த திருஞான சம்பந்தப் பிள்ளையாரின் திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) நடலை = பொய்.
மூகை = ஊமை.
நவை = குற்றம்.
தரளம் = முத்து
தரளச் சிவிகை = முத்துப் பல்லக்கு.
இடும்பை = துன்பம்.

43. ஆதித்தபுரிப் புராணம்

1097. ஆரமணு மிருணீங்க மானியமைச்
சகமுளரி யலரத் துன்பத்
தாரகைபோய்ச் சிவசமய மெழுந்திருப்பப்
பதிகவொளி தழைப்ப வீசி

வீரமணிச் சின்னமெனுங் குக்குடமுன்
முழங்கிடப்பின் விளங்கித் தோன்றும்
பாரதனிற் பானுவெனுந் திருஞான
சம்பந்தன் பதங்கள் போற்றி. (43)

(இ - பொ.) நிறைந்த சமண இருள் நீங்கவும், மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் உள்ளத் தாமரைகள் மலரவும், துன்பமாகிய நட்சத்திரங்கள் மறையவும், சைவசமயம் மேலெழும்பவும், தேவாரத் திருப்பதிக வொளிதழைத்து வீசவும், வெற்றிச் சின்னம் என்னுங் கோழி கூவவும், பின் விளங்கித் தோன்றும் பூவுலகத்தில் சூரியன் என்று சொல்லும்படியான திருஞான சம்பந்தப் பெருமானது திருவடிகளைத் துதிப்பாம். (எ - று.)

(அ - ப.) மானி = மங்கையர்க்கரசியார்.
அமைச்சர் = மந்திரியாகிய குலச்சிறையார்.
தாரகை = நட்சத்திரம்.
வீர மணிச் சின்னம் = வெற்றித் திருச்சின்னம்.
பானு = சூரியன்.

44. திருக்குற்றுலப் புராணம்

1098. மதுரேசர் திருநாட்டு வந்தசமண் கழுவேற மாருச் சைவஞ்
சதுரேற மனுநீதி தழைத்தேறத் திருவேடு தமிழ்சேர் வைகை
யெதிரேறத் தொண்டர்குழா மீடேறப் பரசமய விருள்விட்டோடக்
கதிரேறு மணிச்சிவிகை யேறினுன் சரணமந்தக் கரணஞ் சேர்ப்பாம். (44)

(இ - பொ.) மதுரைச் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளியுள்ள பாண்டி நாட்டில் வந்து குடியேறிய சமணர்கள் கழுவேறவும், மாறுபடாத சைவசமயம் அரசாங்கத்தில் வீற்றிருக்கவும், மனுநீதி தழைத் தோங்கவும், தமிழ் மறையாந் தேவாரத் திருப்பதிகம் எழுதப்பெற்ற திருவேடு வைகை நதியில் எதிர் ஏறிச் செல்லவும், அடியார் கூட்டங்கள் மேன்மையடையவும், வேற்றுச் சமய இருள் விட்டு நீங்கவும், ஒளி பொருந்திய முத்துச் சிவிகையில் ஏறியருளிய திருஞான சம்பந்தப் பெருமானை நம் மனத்துள் சேர்ப்பாம். (எ - று.)

45. திருநெல்வேலிப் புராணம்

1099. வரைவன வரதனை மகிழ்ந்து பாடவே
பரையுமை திருமுலைப் பாலை யுண்டவர்
தரைபுகழ் ஞான சம்பந்தர் சண்பையார்
விரைமல ரடியிணை விரும்பிப் போற்றுவாம். (45)

(இ - பொ.) மூங்கில் குத்தில் எழுந்தருளி யாருக்கும் வரமளிக்குஞ் சிவ பெருமானை மகிழ்ந்து பாடுதற்காகவே பராசத்தியாகிய பார்வதியம்மையார் அளித்த திருமுலைப்பால் உண்டவரும், பூலோகம் புகழும்படியான சண்பை என்னும் சீகாழியில் அவதரித்தவருமாகிய திருஞான சம்பந்தப் பெருமானது, மணம் மிகுந்த தாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகளையும் விருப்புடன் போற்றுவாம். (எ-று.)

(அ - ப.) வரைவனம் = மூங்கில் காடு, திருநெல்வேலி.
சண்பையார் = திருஞான சம்பந்தர்.
சண்பை = சீகாழிக்கொரு பெயர்.

46. மருதவனப் புராணம்

1100. சிவஞானக் கடலருந்திக் கருமைகொடு
திசைகளெங்குந் தெரிய மின்னித்
தவரினஞ்சூழ்ந் திடவுலக முணரவிடித்
தமண்கோடை தணப்ப வோங்கு
புவனமதிற் சைவநெடும் பயிர்தழைப்பப்
பரங்கருணைப் பொருப்பின் மீது
கவிமழைகள் சொரிபுறவக் கவுணியக்
கொண்டலைநா ளுங்கருத்துள் வைப்பாம். (46)

(இ - பொ.) சிவஞான மென்னுங் கடல் நீரையருந்திக் கருமைநிறங் கொண்டு, திசைகளெங்குந் தெரியும்படியாக மின்னி, தவசிகள் கூட்டஞ் சூழ்ந்திட, உலகம் உணர இடித்து, சமண சமயக் கோடையாலுண்டாகிய வெப்பந் தணிய, ஓங்கிய உலகத்தில் சைவப் பெரும் பயிர்தழைப்ப மேலான கருணை என்னும் மலையின்மீது, கவி மழைகளைப் பொழியும்படியான, புறவமென்னும் பெயருடைய சீகாழியில் தோன்றிய கவுணிய குலக் கொண்டலை எப்போதும் மனத்துள் வைப்பாம். (எ - று.)

(அ - ப.) பொருப்பு = மலை.
தவரினம் = தவசிகள் கூட்டம்.
புவனம் = உலகம்.

47. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

1101. சோணாடு தனக்கெழிலாம் புகலிதனிற்
கவுணியர் பாற்றோன்றி நீடு
கோணாக மணிதருசெஞ் சடைப்பெருமா
னருண்மேவிக் குவல யத்துண்
மாணாருஞ் சைவநெடுஞ் சுடரேற்றிச்
சமணிருளின் வலிமை நீக்கி
யாணான பெண்ணையுரு பெண்ணாகச்
செய்தவர்தா ளகத்துள் வைப்பாம். (47)

(இ-பொ.) சோழநாட்டுக்கு அழகு செய்யும்படியான சீகாழியில் கவுணியர் குலத்தில் தோன்றி, நீண்ட நாகத்தை ஆபரணமாக அணியுஞ் சிவந்த சடையினையுடைய சிவபெருமானுடைய அருளைப்பெற்று, பூலோகத்துள் மாட்சிமை பொருந்திய சைவமென்னும் பெரிய விளக்கினை ஏற்றி, சமண சமய இருளின் வலிமையைப் போக்கி, ஆண் பனையைப் பெண்பனையாக்கியருளிய திருஞானசம்பந்தப் பெருமானது திருவடிகளை மனத்துள் வைப்பாம். (எ - று.)

(அ - ப.) பெண்ணை = பனை.
குவலயம் = பூமி.

48. மயூராசலப் புராணம்

1102. தழுதழுப்ப வழுமகவு பாலருந்து
மெனுமொழிக்குச் சான்றே யாகத்
தொழுதகுதந் தையைக்காணா தழுதரிய
பரசுகத்திற் றொடக்குண் டன்பான்
முழுமலமா யையைநீக்கு ஞானப்பா
லுமையருள முன்னந் தேக்குங்
கழுமலப்பே ரூரின்வரும் பிள்ளையடி
யுள்ளிவினைக் கரிசு தீர்ப்பாம். (48)

(இ - பொ.) ‘அழுதபிள்ளை பால் குடிக்கும்’ என்னும் பழமொழிக்கு எடுத்துக் காட்டாகத் தொழத்தகுந் தந்தையைக் காணாது அழுது, பெறுதற்கரிய பரசுகத்தில் தொடக்குண்டு, அன்பால் மலமாயை முழுதும் நீக்கும் ஞானப் பாலை உமையம்மை கொடுக்க உண்ணும் கழுமலம் என்னும் சீகாழியில் தோன்றிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரின் திருவடிகளை நினைந்து தீவினையாகிய மாசினைத் தீர்ப்பாம். (எ - று.)

49. திருப்பெருந் துறைப் புராணம்

1103. பாலள வின்னாளண்பான்றெறு வியர்ப்பார்த்து வந்த
மாலள வின்னான் கொள்ளவண் பாலோர் சிறுபோழ்துண்பான்
மேலள வுலகின் றலை விமலனைக் கண்டு காட்டி
நூலள வொருநூல் சொற்ற நோன்மையாற் றொழுது வாழ்வாம். (49)

50. காசி ரகசியம்

1104. திருமடத் தமண ரிட்ட செய்யதீ வழுதிமேனி
யுருகிடப் பற்றி யன்னின் றெல்லை யவ்வமண ரோடு
கருகிடப் பற்றி யன்னார் வயிற்றுளுங் கலப்பச் செய்த
பொருவரு முத்தீச் செல்வர் பொன்னடி சென்னி சேர்ப்பாம். (50)

(இ - பொ.) மதுரையில் சிவனடியார்கள் தங்கியிருந்த திருமடத்தில் சமணர்களிட்ட தீயானது கூன் பாண்டியனுடைய உடல் உருகும்படிப்பற்றி வெப்பு நோயாக நின்றும், விரைவில் அச்சமணர்கள் தீயிலிட்ட ஏடு கருகச் செய்தும், அவர்கள் வயிற்றினுள் கலக்கவுஞ் செய்த ஒப்பற்ற முத்தீ வேட்கும் அந்தணர் குலத்தில் தோன்றிய செல்வராகிய திருஞான சம்பந்தப் பெருமானது பொன் போன்ற திருவடிகளைத் தலை மேற்கொள்வாம். (எ - று.)

(அ - ப.) முத்தீ = ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினியம்.
வழுதி = பாண்டியன்.

51. திருநாகைக்காரோணப் புராணம்

1105. இருமுது மாதர் தங்கூ னிருகரங் கொடுமுயன்று
கருதுறத் தீர்த்ததா சரதியுங் கண்ணனு நாண்கொள்ளக்
குருமதிக் குலத்து வேந்தன் கூனொரு சொல்லாற் றீர்த்த
பொருவருங் காழி ஞான பூரணற் கடிமை செய்வாம். (51)

(இ - பொ.) வயது முதிர்ந்த மந்தரை என்பவளுடைய கூனலை இரு கைகளைக் கொண்டு முயன்று உருண்டை வில்லாலடித்துத் தீர்த்த இராமனுங் கண்ணனும் நாணும்படி, ஒளி பொருந்திய சந்திர வமிசத்தில் வந்த பாண்டியனுடைய கூனலை ‘ வேந்தனும் ஓங்குக ’ என்னும் ஒரு சொல்லால் நீக்கிய ஒப்பற்ற சீகாழியில் அவதரித்த ஞானபூரணராகிய திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அடிமை செய்வாம். (எ - று.)

52. திருக்குடந்தைப் புராணம்

1106. காலமே கருத்தா வென்று கரைபவ ரூம ராகக்
கோலமே பொலியுங் கொங்கிற் கொடும்பனிக் காலத் தீமை
சாலமே வியது ணர்ந்து தவிர்த்து மாதேவன் சீர்த்தி
ஞாலமேல் விரித்த காழி நாடனைப் பாடி வாழ்வாம். (52)

(இ - பொ.) காலமே கடவுள் என்று கூறும் சமணர்கள் ஊமையாகவும், அழகு நிறைந்த கொங்கு நாட்டில் கொடிமாடச் செங்குன்றூரில் கொடிய பனிக் காலத்தால் உண்டான தீமை நீங்கவும், மகாதேவனைப் புகழ்ந்து ‘ திருநீலகண்டப் ’ பதிகம் பாடிய காழி நாடனாகிய திருஞான சம்பந்தப் பெருமானைப் பாடி வாழ்வாம். (எ - று.)

குறிப்பு : பனியினால் உண்டாகிய நளிர்சுரம் அகலப்பாடிய திருநீலகண்டத் திருப்பதிகத்தைக் கீழே காண்க :—

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெருதிரு நீலகண்டம்.

53. மாயூரப் புராணம்

1107. தமரொடு வெள்ள நீந்தத் தவமுயன் றெழுநா ளாற்றி
யமர்கொடுங் கணையொன் றுய்த்து வருந்து மாலவன் போலாது
தமரொடு வெள்ள நீந்த நாவாய்க்கட் டவிழ்த்து தாவா
தமரொரு பதிகஞ் செவ்வாய் மலர்ந்த வர்க்கடிமை செய்வாம். (53)

(இ - பொ.) தமது வர்னர சேனைகளோடு கடலைக் கடப்பதற்காக ஏழு நாட்கள் தவஞ் செய்தும், கொடிய அம்பொன்றைக் கடலில் விடுத்தும் வருந்திய திருமால் போலின்றி, தமது அடியார்களோடு ஆற்று வெள்ளத்தைத் திருக்கொள்ளம்பூதூரில் கடப்பதற்காக ஓடத்தைக் கட்டவிழ்த்து விட்டுக் குற்றமற்ற

திருப்பதிகம் ஒன்றைப் பாடிச் செலுத்திய திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அடிமை செய்வாம். (எ - று.)

குறிப்பு :—ஓடத்தைத் தானே செல்லப் பாடிய பதிகம் :—

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நாட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தையார் தொழ
நல்கு மாறருள் நம்பனே.

---

54. உறையூர்ப் புராணம்

1108. பான்மணக்குஞ் செவ்வாயுந் தேன்மணக்கும்
பங்கயப் பூம்பைந் தாரோடு
நூன்மணக்குந் திருமார்பு மருண்மணக்கு
மிருவிழியு நூறை யோடு
சேன்மணக்கும் வயற்காழித் திருஞான
சம்பந்தத் தேவ னின்பச்
சான்மணக்கு மலரடியு முள்ளுவாம்
வினையனைத்துந் தள்ளு வாமே. (54)

(இ - பொ.) பால் மணம் வீசும் சிவந்த வாயும், தேன் மணங்கமழும் தாமரை மலர் மாலையோடு முப்புரி நூலணிந்த திருமார்பும், அருள் நிறைந்த இரு கண்களும், மலங்கு என்னும் மீனோடு சேல் என்னும் மீனுங்கலந்து வாழும் வயலால் சூழப்பெற்ற சீகாழியில் அவதரித்த திருஞான சம்பந்தப் பெருமானின் மிக்க மணங்கமழுந் தாமரை மலர் போன்ற திருவடியும் ஆகியவைகளை உள்ளத்தில் நினைந்து நம் பழ வினையைப் போக்குவாம். (எ - று.)

---

55. திருவம்பர்ப் புராணம்

1109. அளிகிளர் சரியையாதி யாற்றுந ரடையும் பேறு
தெளிகிள ரிஃதிதென்று தெரிக்கு நூலிறைக்கு மாறாக்
களிகிளர் திருமணத்திற் கலந்தநாற் றிறத்தெல் லோரு
மொளிகிளர் சோதி சேர வுறுத்தினார்க் கடிமை செய்வாம். (55)

(இ - பொ.) அருள் விளங்கும் சரியை முதலான நால்வகைத் தொண்டு களைச் செய்பவர் அடையும் பயன் இவையெனத் தெளிவாகக் கூறும் ஞான நூல் களின் முடிவுக்கு மாறாகக் களிப்புமிக்க தம் திருமணத்திற் கலந்து காணவந்த நால்வகை நெறியில் நின்ற எல்லோரும் அருட்பெருஞ் சோதியிற் சேரச் செய்த திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அடிமை செய்வாம். (எ - று.)

(அ - ப.) சரியையாதி—சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

சாரியையாதியோர் அடையும் பேறு—சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பன,

56. திருவாளொளிப்புற்றூர்ப்புராணம்

1110. ஒருமுனி சாபத் தீமை கழிதர வுளுப்பஃ றுது
மருவுகல் லணங்கு செய்த மாயவ னாணங் கொள்ளத்
துருவரும் பொடியெ லும்போர் தோகை யஞ்சாய லாகப்
பொருவரு மலர்வாய் விண்ட புதல்வனைப் போற்றி வாழ்வாம். (56)

(இ - பொ.) கவுதவ முனிவன் சாபத்தால் கல்லாய்க், கிடந்த எழுவகைத் தாதுக்களோடு கூடிய அக் கல்லுருவை அகலியை என்னும் பெண்ணாகச் செய்த திருமால் நாணங் கொள்ளும்படி, பொடியாகச் சாம்பராய்ப் போன எலும்பைத் தோகை மயில்போன்ற சாயலினையுடைய பூம்பாவை என்னும் பெண்ணாகும்படி, தேவாரப் பதிகம் பாடிய திருஞான சம்பந்தப் பெருமானை வணங்கி வாழ்வாம். (எ - று.)

---

57. விளத்தொட்டிப் புராணம்

1111. மருங்கலை யுடுத்த காழி வாவி யொண்கரை மேனின்று
பெருங்கலை சிறிதுந் தேராப் பித்தனை யழுத ழைத்தாங்
கருங்கலை யனைத்தும் பெற்ற வாண்ட கையடியே நெஞ்சக்
கருங்கலை யுருக்கி யாட்கொள் கவுணியன் மலர்த்தாள் போற்றி. (57)

(இ - பொ.) கடலால் சூழப்பெற்ற சீகாழியிலுள்ள திருக்கோயிலின் குளக்கரையில் நின்று, பெருங்கலைகளால் சிறிதும் ஆராய்ந்து அறிய முடியாத சிவ பெருமானை அழுது அழைத்து (உமையம்மை அளித்த ஞானப்பாலையுண்டு) அப் பொழுதே அருங்கலை யனைத்தும் ஒருங்கே உணரப் பெற்ற ஆண்டகையாகிய திருஞான சம்பந்தப் பெருமானது திருவடியே எமது கருங்கல் நெஞ்சையுருக்கி ஆட்கொள்ளக் கூடியது. ஆதலின், அக்கவுணியனது மலரடிகளை வணங்குவாம். (எ - று.)

---

58. கோயிலூர்ப் புராணம்

1112. அருமறை யேகமென்ற தமையுமென் றுணர்த்தல் போல
வொருமறை யவன்மால் சுட்டியுணர்தரா வொன்றைச் சுட்டித்
திருமறை யவனுங் காணச் சிறந்தொரு விரலாற் காட்டும்
பெருமறை முழங்குங் காழிப் பிள்ளைதாள் சென்னி சேர்ப்பாம். (58)

(இ - பொ.) அரிய வேதங்கள் இறைவனை ஏகன் என்று கூறுவது பொருந்தும் என்று உணர்த்துதல் போல, பிரமனும் திருமாலும் சுட்டி உணர முடியாத ஒப்பற்ற பரம்பொருளைத் தமது திருவிரலால் தம் தந்தையாம் சிவபாத இருதயர் காணச் சுட்டிக் காட்டிய பெரிய வேதங்கள் முழங்கும் சீகாழியில் அவதரித்த திருஞான சம்பந்தப் பெருமானுடைய திருவடிகளைத் தலைமேற் கொள்வாம். (எ - று,)

59. திருக்குறுக்கைப் புராணம்

1113. எழுதரிய மறைமொழிபுக் குழுதறியாச்
செவித்தொளையி னிழுதை யோராய்ப்
பழுதமையும் புறச்சமயர் கெட்டோ மெனத்
தமிழ்ப்புகலிப் பதிநீர்ப் பொய்கை
முழுதமையுங் கரை நின்றோர் மழவாகி
யழுதறியா முதலை நோக்கி
யழுத மறைக் குழவியடி தொழுதகையே
மாகிவினை யழுவந் தீர்வாம். (59)

(இ - பொ.) எழுதாக் கிளவியாகிய வேதத்தைக் கேட்டறியாத செவியினையுடைய அறிவில்லாதவராகிய குற்றம் பொருந்திய புறச் சமயத்தாராகிய சமண பவுத்தர்கள் கெட்டோமென்று சொல்லும்படி, தமிழ்மணங் கமழும் சீகாழிப் பதியிலுள்ள பொய்கைக் கரையில் நின்று, குழந்தையாகப் பிறந்து அழுதறியாத முதல்வராகிய திருத்தோணியப்பரை நோக்கி அழுத மறையவர் குலக் குழந்தையாகிய ஞானசம்பந்தப் பெருமானது திருவடிகளைத் தொழுத கையை உடையோமாகி வினைத் துன்பம் நீங்கப் பெறுவாம். (எ - று.)

60. தனியூர்ப் புராணம்

1114. தண்மைதன் மட்டுமாகத் தாழ்ந்தொரு முனிபாலேற்ற
வண்மை மந்திரத்தாற் பாலைகடந்த மாறுணங் கொள்ள
வுண்மையாய் மலர்ந்து மண்ணுள் ளளவு மற்றொன்று காம
வெண்மையிற் பாலை நெய்த லியற்றினோன் சரணஞ் சார்வாம். (60)

61. சூத சங்கிதை

1115. காழி நெடுவரை யுதித்துக் கருதரிய
சிவஞானக் கதிர்கள் வீசி
வாழி பரம்பொருட் குரவனருட் கயிற்றிற்
பிணிப்புண்டு வளரஞ் ஞானப்
பாழி மிகுபொய்ச் சமணக் குருட்டிருள்
கெட்டுடைந் தோடப் பாற்றிநீற்றன்
பாழிய தாமரை மலர்த்தி விளங்கிய
நல்லிளங் கதிரை யகத்துள் வைப்பாம். (61)

(இ - பொ.) சீகாழியிலுள்ள நீண்டமலையில் தோன்றி நினைத்தற்கரிய சிவஞானக் கதிர்கள் வீசி, பரம்பொருளாம் குருநாதனுடைய அருளாகிய கயிற்றில் கட்டுண்டு, பாழிகளில் வாழ்கின்ற அஞ்ஞானப் பொய்ச் சமணக்குருட்டிருள் உடைந்தோட அழித்து, திருநீற்றினிடம் ஆழ்ந்த அன்புடையவர் உள்ளத் தாமரையை மலரச் செய்து விளங்கிய நல்ல இளங்கதிர்ச் சூரியனும் ஞானசம்பந்தப் பெருமானை மனத்துள் வைப்பாம். (எ - று.)

62. திருக் கோவலூர்ப் புராணம்

1116. அஞ்ஞானத் துவராடை யமணர்மத முதலான
விஞ்ஞாலத் திழிசமய விருங்கடலி னிடைப்படா
மெஞ்ஞானத் துறுவிக்கும் வியன்காழிக் கவுணியர்கோன்
நஞ்ஞானச் சரண்டொழுவார் சரணெமக்குச் சரணாமே. (62)

(இ - பொ.) அறியாமையுடன் காவியுடை அணிந்துள்ள சமண மதம் முதலான இவ்வுலகிலுள்ள இழிந்த சமயமாகிய கடலில் அகப்படாமல், நம்மை மெய்ஞ் ஞானத்தை அடையும்படி செய்யும் சிறந்த காழியிற் றோன்றிய கவுணிய குலத்தலைவனது ஞானத் திருவடிகளைத் தொழுவாருடைய திருவடிகள் எமக்குப் புகலிடமாகும். (எ - று.)

63. புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்

1117. பூழியன் வெஞ்சுர நீங்கக் கூனிமிரச்
சமணொழியப் புனித வெண்ணீ
றேழுலகுந் தொழுதேத்த வெடுத்தளித்துச்
சிவசமய மிலகச் செய்தே
யூழிகடற் கொண்டிடினு மூரினுள் வந்தணுகா
தென்று ரைக்கும் செல்வக்
காழிநகர் விளங்கவளர் கவுணியர் தங்குல
மணியைக் கருத்துள் வைப்பாம். (63)

(இ - பொ.) பாண்டியன் வெப்பு நோய் நீங்கவும், கூன்நிமிரவும், சமணர் ஒழியவும், புனிதமான வெண்ணீற்றை ஏழுலகங்களுந் தொழுது துதிக்கும்படியாக எடுத்து அளித்துச் சைவ சமயத்தை விளங்கச் செய்து, ஊழிக்காலத்தில் கடல் பொங்கிவந்தாலும் ஊரினுள் வந்தணுகாது என்று உரைக்கும்படியான செல்வம் மிக்க சீகாழி நகர் விளங்க வளரும்படியான கவுணிய குல மாணிக்கமாகிய திருஞானசம்பந்தப் பெருமானை மனத்துள் வைப்பாம். (எ –று.)

64. பழனிப் புராணம்

1118. முரசதிரும் பிரமபுர முனையெழுந்து தமிழ்முழங்க முழக்கி வேதந்
தரைசெறிநன் மாக்களுய்ய மறைவன மொரீக் கடம்பாட விசார்ந்தங்க
ணரசுநிழ லெண்பெருங் குன்றமண் வெள்ளத்திரண் முருக்கிய சீலங் காக்கும்
பரசமய கோளரியை வேதியர்சூ ளாமணியைப் பணிதல் செய்வாம். (64)

(இ - பொ.) சைவ சமய முரசை முழக்கிச் சீகாழியிலிருந்து சைவப்படையெழுந்து தமிழ் வேதத்தை முழக்கிக் கொண்டு, வேதநெறி நின்ற மக்கள் உய்யும் பொருட்டு, மறைக்காட்டை விட்டு நீங்கி மதுரையை அடைந்து, அங்கே எட்டு மலைகளில் அரசு செதுத்திவந்த சமண வெள்ளப்படைகளை வென்று உலகமெல்லாங் காக்கும் பரசமய'கோளரியும் அந்தணர் குலமணியுமாக விளங்கும் திருஞானசம்பந்தப் பெருமானை வணங்குவாம். (எ - று.)

இதிகாசம்

65. சிவரகசியம்

1119. குவிகை யேறிய மணிமுடிப் பாண்டியன் கூன்போய்க்
கவிகை யேறுசிங் காதனத் தேறிடக் கழுவி
லவிகை யேறுற வமணர்க ளேற வெண்டரளச்
சிவிகை யேறிய கவிஞன்றாள் சென்னியிற் சேர்ப்பாம். **(65)**

(இ - பொ.) கைகூப்பி வணங்கிய மணிமுடியணிந்த பாண்டியனது கூன் நீங்கப்பெற்று, வெண் கொற்றக் குடை நிழற்றப்படும் சிங்காதனத்து ஏறவும், கழுவிலேறி அழிவதற்குச் சமணர்கள் அக்கழுமரத்திலேறவும், வெள்ளிய முத்துப் பல்லக்கின் மீதேறிய முத்தமிழ்க் கவிஞனாகிய திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளை முடிமேற் கொள்வாம். (எ-று.)

சாத்திரங்கள்

66. ஒழிவிலொடுக்கம்

1120. வேதாக மப்பவுரி வீசுங் களாசநிலை
யாதார வெற்பி லபிடேகம் — போதத்
திருளிலெழு பானு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை. **(66)**

67. சைவசமய நெறி

1121. வெப்பொழிய மீனவற்கு நீறளித்த வேதியன்றா
ளெப்பொழுதுஞ் சிந்திப்பாம் யாம். **(67)**

(இ-பொ.) மீனக் கொடியினையுடைய பாண்டியனது வெப்பு நோய் நீங்கும்படியாகத் திருநீறளித்த அந்தணர் குலத்துதித்த திருஞானசம்பந்தப் பெருமானது திருவடிகளை எப்போதும் யாம் சிந்திப்பாம். (எ-று.)

68. பரமத திமிரபானு

1122. பூம்பாவாய் போதியோ வென்றழைத்த பூசுரன்றா
ளும்பாவா லேத்தி நயப்பாம். **(68)**

(இ - பொ.) திருமயிலையில் வாழ்ந்த சிவநேசச் செட்டியார் திருமகளாகிய பூம்பாவையின் எலும்பைப் "போதியோ பூம்பாவாய்" என்று முடியும் தேவாரம்பாடியழைத்துப் பெண்ணுருப் பெற்று எழச்செய்த மறையவர் குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமானைப் பாக்களால் துதித்து விரும்பி வழிபடுவாம், (எ - று.)

69. சங்கற்ப நிராகரணம்

1123. ஈசனருளா லெரியிட் டேடெடுத்து வாதுவென்ற
பூசுரனைப் பாத நினைப்போம். (69)

(இ - பொ.) மதுரையில் சமணர்களோடு கனல்வாதஞ் செய்தபோது, திருப்பதிகம் எழுதிய ஏட்டை நெருப்பிலிட்டு, இறைவனருளால் வேகாது எடுத்து, வாதில் வென்ற அந்தணர் குலத்துதித்த திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருவடிகளைச் சிந்திப்பாம். (எ - று.)

குறிப்பு :—நெருப்பிலிட்டு வேகாதெடுத்த திருப்பதிகத்தைக் கீழே காண்க:-

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகவம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

70. இறைவனூற்பயன்

1124. ன்பினைப் பெண்ணுக்கு மியற்சம்பந்த னேழிசைப்பாட்
ன்பிறப்புந் தீர்த்தளிக்கு மன்பு. (70)

(- பொ.) திருமயிலாப்பூரில் கபாலீச்சரம் அமர்ந்த சிவபெருமான் திருமுன்பு எலும்பினைப் பெண்ணுருவாக்கப் பாடிய திருஞானசம்பந்தப் பெருமானது ஏழிசையும் பொருந்திய ‘மட்டிட்டபுன்னையம்’ என்னும் பாடல் என்பிறப்பைத் நீர்க்கும் இன்பப் பாடலாகும். (எ - று.)

71. உருத்திராக்க விசிட்டம்

1125. வெந்துறு மென்பை வியக்க வுலகெல்லாஞ்
சந்த வியலாற் பெண்ணெனச் சமைத்தான்—வந்தெதிர்த்த
சாவகரை வென்று தறிநு தியின் வைத்த விறற்
சேவகன்றாள் வைப்பாஞ் சிரத்து. (71)

(இ - பொ.) நெருப்பில் வெந்த எலும்பை உலகவர் வியக்கும்வண்ணம் சந்தமமைந்த தேவாரப் பாடலைப் பாடிப் பெண்ணுருவாக்கியவனும், வந்து எதிர்த்து வாது செய்த சமணரை வென்று கழுவேறச் செய்தவனுமாகிய வெற்றி வீரனும் திருஞானசம்பந்தப் பெருமானது திருவடிகளைத் தலைமேல் வைத்து வணங்குவாம். (எ - று.)

72. பஞ்சாக்கரமாலை

1126. கல்லேன் பிறநூல்கள் காழியர்கோன் பாட்டல்லாற்
சொல்லேன் சுரரைத் தொழநினையே னல்லசிறு
செஞ்சதங்கை கொஞ்சுதண்டைச் சிற்றடிக்கன் பாகவெழுத்
தஞ்சதங்கை யாமலக மாம். (72)

(இ - பொ.) சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருமுறைகளையல்லால் பிற நூல்களைக் கற்க மாட்டேன். அத்திருமுறைப் பாடல்களை யல்லாமல் எதனையும் எந்நாவினால் சொல்ல மாட்டேன். தேவர்களை வணங்க நினைக்கமாட்டேன். அப்பெருமானுடைய சிறு செஞ்சதங்கையும் கொஞ்சும் தண்டையும் அணிந்த சிறிய திருவடிகளிடத்து அன்பு செய்வதால் ஐந்தெழுத்தும் எனக்கு அங்கை நெல்லிக்கனி யென வந்தெய்தும். (எ - று.)

திருஞானசம்பந்தப் பெருமானே என் குருநாதன் என்பது கருத்து.

73. சித்தாந்த தரிசனம்

1127. திருப்பா சுரத்தானற் சித்தாந்தஞ் செய்தோன்
றிருப்பாத மென்றன் சிரம். (73)

(இ - பொ.) தேவாரத் திருப்பதிகப் பாசுரத்தால் நல்ல சைவ சித்தாந்தக் கொள்கைகளின் முடிவுகளை விளக்கியருளிய திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளை என் தலைமேற் சூடி வணங்குவேன். (எ - று.)

குறிப்பு :—'திருப்பாசுரம்' என்பது சிறப்பாக 'வாழ்க அந்தணர்' என்னுந் திருப்பதிகத்தையே குறிப்பதாகும் என்பதைத் தேவாரத் திருமுறையிற் காண்க. இப்பாசுரம் எழுதப் பெற்ற திருவேடே வைகை நதியில் எதிர் ஏறிச் சென்றது. இப்பதிகக்தின் முதற் பாடலிலுள்ள 'வேந்தனும் ஓங்குக' என்னும் மந்திரத் தொடரே பாண்டியன் கூனை நிமிர்த்தது. இப்பதிகத்துள் மக்கள் கடைப் பிடித்து உய்வதற்குரிய சித்தாந்தக் கருத்துகள் சுருக்கமாகவும் தெளிவாகவுங்கூறப் பெற்றுள்ளன.

74. சிவபுண்ணியத் தெளிவு

1128. பிறையணி மௌலியான் போதை யாளொடுஞ்
சிறையணி புனற்றடத் தீர மேவியே
நிறையமு தருத்தவுண் ணெகிழப் பாடுநான்
மறையவன் மலர்ப்பதம் வணங்கி வாழ்த்துவாம். (74)

(இ - பொ.) பிறைச் சந்திரனைச் சடாபாரத்தில் அணிந்துள்ள சிவபெருமான் பார்வதியோடும் காவலை யுடைய அழகிய நீர் நிறைந்த பிரம தீர்த்தக் கரையை அடைந்து, ஞானப்பாலூட்ட உள்ளம் உருகத் தேவாரத் திருப்பதிகம் பாடும், மறையவர் குலத்தில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமானுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி வாழ்த்துவாம். (எ-று.)

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

முப்பதாம் பகுதி

வாகீச மூர்த்தி வணக்கம்

1. கந்தபுராணம்

1129. பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றேணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம். (1)

(இ-பொ.) பொய் வார்த்தைகள் நிறைந்த சில நூல்களை எடுத்துக் காட்டாகக் கூறுகின்ற கொடியவர்களாகிய சமணக்கபடிகள் முற்காலத்திலே, கட்டிக் கடலிலிட்ட பெரிய கருங்கல்லே தெப்பமாக மிதக்கக் கரையேறின பரிசுத்தரான திருநாவுக்கரசு சுவாமிகளது திருவடிகளைப் பணிந்து துதிப்பாம். (எ-று.)

---

2. உபதேச காண்டம்

1130. முப்பணைத்திற மூவரிற் காட்டியோர் முதலாய்க்
கப்பனைத்து மாருயிரெனக் கவைத்தரு வானேற்
கொப்பனைத்திரு நாவினுக் கரசனு மொருபே
ரப்பனைத்தொழு தகற்றுவது மும்மலத் தவலம். (2)

(இ-பொ.) முக்கிளைகளின் இயல்பைத் திரிமூர்த்திகளின் தோற்றத்தால் விளக்கி, தான் ஒரு மூலமாய், அக்கிளைகளிற் கிளைக்கும் வளார் முதலியவை, அரியவுயிர்த் திறங்களாகக் கிளைத்ததொரு மரவடிவமாகிய சிவபெருமானுக்கு உரிமையுடையவரும் திருநாவுக்கரசரென்னும் ஒப்பற்ற திருநாமத்தையுடையவருமாகிய அப்பர் சுவாமிகளை வணங்கி மும்மலத்தால் விளையுந் துன்பங்களை ஒழிப்பாம். (எ - று.)

(அ-ப.) மூவர் = பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்,
மும்மலம் = ஆணவம், மாயை, கன்மம்.

---

3. அருணகிரிப் புராணம்

1131. பன்னெடு நாளமண் வைகிப் பருவமுறப் பசுபாசஞ்
சின்மய னின்னருள் பெற்றுச் சிறுபிணியுந் தீர்ந்தானை
யின்னிசை யாலிய வியம்பி வாகீச னெனுநாமந்
தன்னையு நின்மல னருளாற் றரித்தானைத் தாள்பணிவாம். (3)

(இ-பொ.) நீண்ட நாட்கள் சமண சமயத்தைச் சார்ந்திருந்து பசுபாசங்கள் நீங்குதற்குரிய பக்குவ காலம் வந்த போது சிவபெருமானின் அருள்பெற்றுச்

சூலை நோய் நீங்கப் பெற்றவனும், இன்னிசையால் திருத்தாண்டகமென்னுந் தேவாரப் பதிகத்தைப் பாடி அப்பெருமானால் வாகீசன் என்னும் பெயர் சூட்டப் பெற்றவனுமாகிய திருநாவுக்கரசர் பெருமானது திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

4. திருவிளையாடற் புராணம்

1132. அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ண லஞ்செழுத்தா லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம். (4)

(இ-பொ.) முப்பத்திரண்டு தருமங்களையும் (இறைவர் அளித்த ஈராழி நெல்லைக் கொண்டு) நடத்திய பெருஞ்செல்வியாகிய உமாதேவியாரை இடப்பாகமாகக் கொண்ட சிவபெருமானது ஸ்ரீபஞ்சாட்சர மந்திர மாகிய புணையினாலே, அஞ்சாமற் பெரும் பாவச் செயல்களை யொழியாத வஞ்சகராகிய சமணர்கள் கருங்கல்லோடு பிணித்து விடுத்த நீல நிறம் பொருந்திய பெரிய கடலையும், எவ்வகையினருக்கும் நீந்திக் கரை காண்டற்கரிய எழுவகைப் பிறவி என்று சொல்லப்படுங்கடலையும் நீந்தி யொழித்த தலைவராகிய திருநாவுக்கரசு நாயனாரது திருவடிகளைப் பணிவாம். (எ - று.)

(அ - ப.) மறப்பெருஞ்செய்கை = பெருங் கொடுஞ்செயல்.

குறிப்பு :—கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறியபோது திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகத்தைக் கீழே காண்க:—

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

5. சேதுபுராணம்

1133. தேவரையு முனிவரையுந் துளவ மார்பிற்
றிருவரையுங் குரவரையுஞ் செல்வ மிக்கோர்
யாவரையு மேவல்கொளு நெற்றிநாட்டத் திறைவரை
முன்னிகந் திருந்த வெண்ணந் தோன்றச்
சேவரையு நெடுங்கொடியன் றகைமை யெல்லாத்
திசைவரையுஞ் செலத்தமிழன் செய்யுள் பாடு
நாவரையர் புகழ்மொழிகள் வரைந்து கூறி
நயந்தவர்செய் திருத்தொண்டு வியந்து வாழ்வாம். (5)

(இ-பொ.) தேவர்களையும் முனிவர்களையும், துளவ மாலையணிந்த திருமாலையும், வியாழ குருவையும், செல்வம் மிக்க இந்திரன், குபேரன் முதலிய யாவரையும் குற்றேவல் கொள்ளும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை முன்பு பிரிந்திருந்த எண்ணந்தோன்ற, இடபக்கொடியினையுடைய சிவபெருமானுடைய

பெருமைகளை யெல்லாம் எல்லாத் திசைகளிலுஞ் செல்லும்படி, தேவாரத் திருப்பதிகம் பாடிய நாவரையர் புகழ்மொழிகளை எழுதியும் சொல்லியும், அவர் செய்த திருத் தொண்டினைப் பாராட்டியும் வாழ்வாம். (எ-று.)

---

6. திருப்பரங்கிரிப் புராணம்

1134. நீறு குளிர மேனியிலே நீறு பூசி நெடுங்கிடங்கி
லூறு கடன்மேற் கல்லிறுக வூறு படாது மிதந்தருளி
யாறு தரித்த கடவுளைநல் லாறு தருதியெனுந் தமிழன்
வீறு பகரு நாவினுக்கு வேந்தர் பாதம் பணிவாமே. (6)

(இ-பொ) சமணர்கள் அடைத்து வைத்த சுண்ணாம்பு நீற்றறை குளிர்ந்திருக்கும்படியாக உடம்பிலே திருநீறு பூசி ஊறுபடாதிருந்தும், கல்லோடு கட்டிக் கடலில் தள்ளியபோதும் ஊறுபாடின்றிக் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறியும், கங்கையைச் சடையிலணிந்துள்ளவனாகிய கங்காதரனை நன்னெறி அருளுவாயாக என்னும் வீறு பதிகம் பாடிய திருநாவுக்கரசர் திருவடிகளை வணங்குவாம். (எ–று)

குறிப்பு:—சமணர் திருநாவுக்கரசரை நீற்றறையிலிட்டபோது பாடி ஊறு படாதிருந்த தேவாரப் பாடலைக் கீழே காண்க:—

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

---

7. திருவாரூர்ப் புராணம்

1135. ஆலநிழ லமர்ந்தபிரா னருளினாலே யன்றொருகற்
புணையாக வாழி நீந்தி
ஞாலமுழு துய்த்தருள நவையிலாத நறுந்தமிழின்
பலமினிது நாளு நல்கிச்
சாலமிகு பாவமுது வேனில்வெம்மைத் தழலாற
வாகமநூற் றருமஞ் சான்ற
சீலநிறை சைவநெறி நிழல்பரப்புந் திருநாவுக்
கரசனடி சிந்தை செய்வாம். (7)

(இ-பொ) கல்லானின் கீழமர்ந்த சிவபெருமான் திருவருளாலே முன்றொரு சமயம் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்து உலகம் முழுதும் உய்யும் வண்ணம் குற்றமற்ற நறுமணங் கமழும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடிப் பயனளித்தும், மிக மேம்பட்ட தேவாரப் பாடலால் வேனில் வெம்மைத் தழல் ஆறவும், ஆகமநூல் தருமங்களைக் கொண்டுள்ள ஒழுக்கம் மிகுந்த சைவநெறியாகிய நிழலைப் பரப்பும் திருநாவுக்கரசர் திருவடிகளை மனத்தில் நினைந்து வழிபடுவாம். (எ - று.)

8. இலிங்கபுராணம்

1136. கூற்றினுங் கொடிய பறிதலைச் சமணர்
கொட்டுநீற் றிடையினு ளிருத்தி
நீற்றவங் நீறு விரைகமழ் புழுகு
நெய்சொரிந்தா லெனக் குளிர
மாற்றறு பசும்பொன் வடவரை குழைத்து
மாற்றலர் புரமெரி மடுத்தோன்
போற்றருங் கமலச் சேவடித் துணைகள்
போற்றிய தலைவனைத் தொழுவாம். (8)

(இ-பொ.) இயமனினுங் கொடிய தலைமயிரினைப் பறித்துக் கொண்டு நிற்குஞ் சமணர்கள் சுண்ணாம்புக் காளவாயில் உட்கார வைத்துத் தீ மூட்டியகாலையில் அது புழுகும் கத்தூரியுஞ் சொரிந்தது போல் குளிர்ச்சியடையும்படி, மாற்றற்ற பசும் பொன்மயமாகிய மகாமேருமலையை வில்லாக வளைத்துப் பகைவர்களாகிய திரிபுர அசுரர்களை எரித்த சிவபெருமானது புகழ்தற்கரிய தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளையும், 'மாசில் வீணையும்' என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்த தலைவனாகிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

9. பிரமோத்தர காண்டம்

1137. ஆரண நன்னிலை யறியாச் சாக்கியர் களருங் கற்றூண்
பாரறிய மருங்க சைத்துப் படுநீ ரிற்புக வுந்த
வாரண நல்லுரி யானை யேத்தி முங்நீர் வடதளிரி
னாரணன் போலினி தமர்ந்த நாவலன் பொற்றா டொழுவாம். (9)

(இ-பொ.) வேத நன்னெறியறியாத சாக்கியர்கள் உலகமறியப் பெரிய கற்றூணோடு கட்டிக் கடலிற் பாய்ச்சியபோது, யானையினது உரியைப் போர்த்துள்ள சிவபெருமானைத் துதித்துச் 'சொற்றுணை வேதியன்' என்னும் பதிகம் பாடித் திருப்பாற் கடலில் ஆலிலையில் பள்ளி கொண்ட திருமால் போலக் கல்லையே தெப்பமாகக் கொண்டு இனிது வீற்றிருந்த திருநாவுக்கரசர் பெருமானது பொன்போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

10. கூர்ம புராணம்

1138. புல்லா ராய சமண்புலையர்
பொருந்த வீக்கிக் கடற்புகுத்துங்
கல்லே புணையாக் கரையேறிக்
கவர்வாய்ப் புள்ளின் வாய்கிழித்த
கொல்லே றுயர்க்குங் காமாரி
குளிர்பொற் கமலத் தாள்பழிச்சுஞ்
சொல்லே புணையாப் பவக்கடலுங்
கடந்தோன் பாதந் துதித்திடுவாம். (10)

(இ-பொ.) பகைமை கொண்ட அற்பர்களாகிய சமண்புலையர்கள் கல்லோடு கட்டிக் கடலில் தள்ளியபோது, கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறி, சரபப்புள்ளின் வாய்கிழித்த, கொல்லுந் தன்மை வாய்ந்த இடபக்கொடியினை உயர்த்த, காமாந்தகனாகிய சிவபெருமானது குளிர்ச்சி பொருந்திய பொற்றாமரை மலர் போன்ற திருவடிகளைத் துதிக்கும் 'நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்தையே தெப்பமாகக் கொண்டு உவர்க்கடலையும், பிறவிக் கடலையும் ஒருங்கே கடந்தவராகிய திருநாவுக்கரசர் பெருமானது திருவடிகளைத் துதித்து வணங்குவாம். (எ - று.)

11. காசிகாண்டம்

1139. கருவாழிக் கரைகாணாச் சாக்கியர்கள் கற்றூணிற் சிக்க யாத்துப்
பெருவாழி யிடைவீழ்ப்ப வதுபுணையாக் கரையேறிப் பெட்பி னுள்ள
முருகாமெய் மயிர்பொடிப்ப வோங்கெ யின்மூன் றெரித்தோனை யுவந்துபாடுந்
திருநாவுக் கரசனிரு சேவடிப் பூங்கமல மலர்சென்னி சேர்ப்பாம். (11)

(இ-பொ.) பிறவிக் கடலின் கரை காணாத சாக்கியர்கள் கற்றூணோடு கட்டிப் பெரிய கடலிடத்தே தள்ள, அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறி, அன்பினால் உள்ளங்கரைந்துருகி மெய்ம்மயிர் சிலிர்ப்ப, திரிபுரங்களை எரித்த சிவபெருமானை மகிழ்ந்து பாடிய திருநாவுக்கரசர் பெருமானது தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளைத் தலைமேற்கொண்டு வணங்குவாம். (எ–று.)

(அ–ப.) கருஆழி = பிறவிக்கடல்.
ஓங்குஎயில் = திரிபுரம்.
பெட்பு = அன்பு.
புணை = தெப்பம்.

12. வாயு சங்கிதை

1140. வலஞ்சுழி யுந்தி வயிற்றெழு நோயு
மயக்கிடு பிறவிவெந் நோயும்
கலங்கியே யகலக் கரைபொரு திரங்கு
கருங்கட லுண்முளைத் தெழுந்த
விலங்கொளிப் பவள வரைநிகர் முதலை
யின்னிசைத் தமிழினாற் பாடிப்
புலன்களைந் தினையும் வென்று மெய்ஞ்ஞானம்
பூத்தவன் பொன்னடி தொழுவாம். (12)

(இ-பொ.) அடிவயிற்றில் தோன்றிய சூலைநோயும், மயக்கினை உண்டு பண்ணும் கொடிய பிறவிநோயும் கலக்கமுற்று ஓடும்படி, கடலுள் முளைத்தெழுந்த ஒளி பொருந்திய பவளமலை போன்ற முதல்வனாகிய சிவபெருமானை இன்னிசை

பொருந்திய தமிழ்த் தேவாரத் திருப்பதிகம் பாடி ஐம்புலன்களையும் வென்று மெய்ஞ்ஞானம் மலரப் பெற்ற திருநாவுக்கரசு சுவாமிகளுடைய பொன் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

குறிப்பு:—திருநாவுக்கரசர் சூலை நோய் நீங்கப் பாடிய திருப்பதிக முதற் பாடலைக் கீழே காண்க :—

கூற்றாயின வாறு விலக்க கிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்,
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்,
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட,
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

13. மச்ச புராணம்

1141. பெருநாவ லிருநிழற்கீழ்க் குளிர்புனற்குண்
முளைத்தெழுந்த பெம்மான் செம்மை
திருநாவுக் கிசைத்தமிழா லலைகடலி
னிடைபிணித்த தனிக்கற் றூணன்
னொருநாவா யெனமிதப்ப வீற்றிருந்தங்
கைந்தெழுத்தி னுண்மை யோதுந்
திருநாவுக் கரசரிரு பிரச மலர்ச்
சேவடியைச் சிந்தை செய்வாம். **(13)**

(இ-பொ,) பெரிய நாவல் மரத்தின் கீழுள்ள குளிர்ந்த நீரில் தோன்றிய சிவபெருமான் மீது செம்மையான திருத்தொண்டு புரியுந் திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகத்தால், அலைகளையுடைய கடலினிடத்தே சமணர் கல்லோடு கட்டித் தள்ளியபோது, அக்கல்லே தெப்பமாகப் பெற்று அதன்மீது வீற்றிருந்து திருஐந்தெழுத்தின் உண்மைப் பெருமையினை உலகினர்க்கு உணர்த்திய திருநாவுக்கரசு சுவாமிகளது தேன் பொருந்திய தாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகளையுஞ் சிந்தித்து வணங்குவாம். (எ-று.)

14. சங்கர நாராயணர் கோயிற் புராணம்

1142. கரைபொரு திரங்கு விரிதிரைக் கடலிற்
கட்டின ரிட்ட கற்றிரளே
பரிவுறு புணையா வதனில் வீற்றிருந்து
பழுத்த பாண் மிழற்று வண்டினமார்
முருகவி ழிதழித் தொடைசடை முடித்த
முதல்வனை வழுத்திய கோமான்
மருவுயிர்த் தினிய முருகு கொப்பளிக்கு
மலரடி வணங்குதல் செய்வாம். **(14)**

(இ-பொ.) கரையில் மோதி ஒலிக்கும்படியான விரிந்த அலைகளையுடைய கடலில் சமணர்கள் கல்லோடு பிணித்துச் செலுத்தியபோது அக்கல்லையே தெப்ப மாகக் கொண்டு வீற்றிருந்து, இனிய இசையினை மிழற்றும் வண்டுக் கூட்டங்கள் மொய்க்கும்படியான தேன் பொருந்திய கொன்றை மலர் மாலையினைச் சூடிய சடையினையுடைய சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய மணம் பொருந்தித் தேன்பிலிற்றுஞ் செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

---

15. திருக்கூவப் புராணம்

1143. மருக்கு லாவு மறைவனத் தொன்றிய
திருக்க பாடந் திறந்தசொல் வேந்தனை
யருட் குலாவு மறிவினை மூடிய
விருட் கபாடந் திறக்கவு மேத்துவாம். (15)

(இ-பொ.) மணங்கமழும் திருமறைக் காட்டில் மறைகளால் பூசிக்கப் பெற்று மூடப்பட்ட திருக்கோயில் வாயிற்றிருக் கதவுகளைப் 'பண்ணினேர் மொழி' என்னுந் திருப்பதிகம் பாடித் திறந்த அருள் நிறைந்த திருநாவுக்கரசு சுவாமிகளை நம் அறிவினை மூடியுள்ள அறியாமையாகிய கதவு திறக்க வேண்டித் துதித்து நாம் வணங்குவாம். (எ-று.)

குறிப்பு :—திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் கதவு திறக்கப் பாடிய பதிகப் பாடலைக் கீழே காண்க :—

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னூர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னுலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

---

16. திருவையாற்றுப் புராணம்

1144. செஞ்சடையார் புகழ்விதைத்துத் திருஞானநீர் தேக்கி
யஞ்சுகளை யறுத்துடனே யமணர்களை வேரறுத்துப்
பஞ்சநதிக் கயிலையினிற் பயன்விளைந்து புகலூரிற்
றஞ்சமுதற் கண்டபிரான் சரண கமலம்போற்றி. (16)

(இ-பொ) சிவந்த சடையினை யுடைய சிவபெருமானுடைய புகழாகிய விதையை விதைத்துத் திருஞானமாகிய நீரைத் தேக்கி, பஞ்சேந்திரியமாகிய களைகளைக் களைந்து, அதனேடு சமண சமயமாகிய களைகளை வேரோடறுத்து, ஐந்து நதிகளையுடைய கயிலையினிற் பயன் விளைந்து, திருப்புகலூரில் சிவபெருமானைத் தஞ்சமாக அடைந்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

---

17. நல்லூர்ப் புராணம்

1145. பூவி னுற்றிடு புங்கவன் மான்முதற்
றேவர் கட்கர சாகிய தேவனா
ரேவல் பெற்றகத் தென்றும் புயத்திடு
நாவி னுக்கர சின்பத நண்ணுவாம். (17)

(இ-பொ.) தாமரை மலரில் வாழும் பிரமன், திருமால் முதலாகவுள்ள தேவர்கட்கெல்லாம் அரசாக விளங்கும் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்துவரும் திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை அடைவாம். (எ-று.)

குறிப்பு :—இப்பாடலின் மூன்றாவதடியின் இறுதியிரண்டு சீரின் பொருட்பொருத்தம் விளங்கவில்லை.

18. சீகாளத்திப் புராணம்

1146. வேற்று ருக்கொள் விதியறி யாவரன்
கீற்று வெண்பிறைக் கேழ்கிளர் செஞ்சடை
யாற்று ணாச்சுமை யேற்று மருந்தமிழ்
மாற்ற ருந்தவத் தோனை வழுத்துவாம். (18)

(இ-பொ.) அன்னத்தின் உருக் கொண்ட பிரமனால் அறிய முடியாத சிவபெருமான் பிறைச்சந்திரனை யணிந்த சிவந்த சடையினையுடைய தலைமேல் பொதிசோறு சுமந்து வருமாறு, அருமையான தமிழ்ப்பதிகம் பாடியருளிய நிலைத்தவத்தையுடையவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்குவாம். (எ-று.)

19. திருக்கழுக்குன்றப் புராணம்

1147. குறித்தகுல திலகவல்லிக் கிளைவளைப்ப
வளைப்புண்டு கொடிய நாகம்
பறித்தகுருந் தினைமீட்டு நீற்றறையின்
வன்னிவென்று படருங் கோட்டு
வெறித்தமத மாக்களையும் விலக்கி
முழங்கிய வத்திமீதே குண்டர்
செறித்தகல் லான்மிதந்து வருந்திரு
நாவுக்கரசு நிழற்சேர்ந்து வாழ்வாம். (19)

(இ-பொ.) குறித்த தங்கள் குலத்திற் பிறந்த திலகவதியா ரென்னும் பெயருள்ள சுற்றமாகிய தமக்கையார் பரமசிவத்தின் திருவருளால் சேர்ப்பிக்க, சைன சமயம் விட்டுச் சைவசமயத்தில் சேர்ந்து கொடியதான அரவந்தீண்டியிறந்த இளமைப் பருவமுள்ள அப்பூதி நாயனாருடைய மூத்த புதல்வனது உயிரைமீட்டும், நீற்றறையில் நெருப்பை வென்றும், நீண்ட கொம்பினை யுடையதாய் மதவெறி பிடித்த யானைகளை விலக்கியும், ஒலிக்கா நின்ற கடலின்மேல் சமணர்கள் கட்டியிட்ட கற்றூணை தெப்பமாக மிதந்து கரைசேர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடி நீழலில் சேர்ந்து வாழ்வாம். (எ-று.)

20. செவ்வந்திப் புராணம்

1148. புத்தியற் றிருக்கும் பொய்யர் புறச்சம யத்தை நீங்கிச்
சத்தியப் பொருளை யோர்ந்து தலைவனை யறிந்து சைவ
… … … … …ஞானப் பழத்தினை யொரு கற்றுணா
… … … … …க்கரசனை வணங்குவோமே. (20)

குறிப்பு :—இப்பாடலின் பின்னிரண்டடிகள் குறைந்து காணப்படுகின்றன.

---

21. திருவெண்காட்டுப் புராணம்

1149. இற்றூணின் மரகதத் தினொளி பகலுமிருள்
காட்ட வெழுந்து காமன்
விற்றூணி மலரெடுத்து விளையாடுந்
திருவாமூர் விளங்க வந்தோன்
கற்றூணைப் பிடித்துவளை கடல்கடந்தோ
னிருபாத கமல மன்ன
பொற்றூணைப் பிடித்துநம திடராழி
கடந்து கதிபுகுத லாமே. (21)

(இ-பொ.) இல்லத்திலுள்ள மரகதத் தூண்கள் பகலிலும் இருள் காட்ட, மன்மதன் எழுந்து வில்லில் அம்பருத் தூணியிலிருந்து மலரம்பை எடுத்துவைத்து எய்து விளையாடும் திருவாமூர் விளங்க வந்தவனும், கற்றூணைத் தெப்பமாகக் கொண்டு கடல் கடந்தோனுமாகிய திருநாவுக்கரசருடைய தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளாகிய தூணைப்பிடித்துக் கொண்டு துன்பக்கடலைக் கடந்து நற்கதியடையவாம். (எ-று.)

---

22. திருவாவடுதுறைப் புராணம்

1150. கற்பெருந்தூண் புணையாகக் கடல் கடந்த
யாற்றிலெழிற் கயிலை கண்டு
பற்பணியின் விடந்தீர்த்த பூதிமக
வுயிரளித்துப் பதிகச் சொல்லாற்
பொற்புருவே தாரணியக் கதவுதிறந்
தருட்புகலூர்ப் போயருளிற் சேர்ந்த
வற்புதநா வுக்கரசி னடியிணைப்பூ
முடியிலுற வமைத்தல் செய்வாம். (22)

(இ-பொ.) கற்பெருந் தூணைத் தெப்பமாகக் கொண்டு கடல் கடந்தும், திருவையாற்றில் கயிலைக்காட்சிகண்டும், விடந்தீண்டியிறந்த அப்பூதியடிகள் மகனுக்கு உயிரளித்தும், திருப்புகலூர்ச் சிவபெருமான் அருளிற் சேர்ந்த அற்புதனாகிய திருநாவுக்கரசனுடைய இரண்டு திருவடி மலர்களையும் முடிமேல் வைத்து வணங்குவாம். (எ-று.)

23. காஞ்சிப் புராணம்

1151. இடையறாப் பேரன்பு மழைவாறா
மிணைவிழியு முழவா ரத்தின்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சு
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம். (23)

(இ-பொ.) இடைவிடாத பேரன்பும், அன்பு நீர்வழியுங் கண்களும், வலிய உழவாரப்படை நீங்காத கையும், சிவபெருமான் திருவடியினிடத்தே பதித்த நெஞ்சும், ஒழுக்கநடை மாறாத துறவும் கொண்டு விளங்கும் திருநாவுக்கரசர் பெருமானது ஞானப் பாடல் நீங்காத சிவந்த வாயினையும், சிவவேடப் பொலிவின் அழகினையுந் துதித்து வாழ்வாம். (எ-று.)

---

24. பேரூர்ப் புராணம்

1152. விஞ்சை கற்பன வேறிலை விடையவன் பதங்க
ளஞ்சு மேயென வறியவெவ் வுலகுங்கற் புணையா
நெஞ்சு துட்கெனா நெடும்புனல் வேலையும் பிறவி
வஞ்ச வேலையு நீந்திய மன்னனைப் பணிவாம். (24)

(இ-பொ.) சிவபெருமானுடை திருவைந் தெழுத்தை யல்லாமல் கற்க வேண்டிய வித்தை வேறில்லையென்று எல்லாவுலகங்களும் அறியும்படி, கல்லையே தெப்பமாகக் கொண்டு நெஞ்சம் அஞ்சத்தக்க நீண்டகடலையும், வஞ்சம் நிறைந்த பிறவியாகிய கடலையுங் கடந்த திருநாவுக்கரசரை வணங்குவாம். (எ-று.)

---

25. திருவானைக்காப்பு புராணம்

1153. கொண்ட லாடிய விழிகளுங் கோலவெண் ணீற்று
வண்ட லாடிய மேனியு மல்கு மானந்த
முண்ட தாங்கெதி ரெடுத்தென வோதுசெம் பாட்டுங்
கண்டு கேட்டருணாவினுக் கரசினை வைப்பாம். (25)

(இ-பொ.) மேகம் போல் கருணைமழைபொழியுங் கண்களும், அழகிய திருநீறு சண்ணித்த திருமேனியும், நிலைபெற்ற பேரின்பத்தை உண்டு அதனை வெளிப்படுத்துவதுபோல் பாடுந் தேவாரப் பாடல்களையும் முறையே கண்டுங் கேட்டும் திருநாவுக்கரசு சுவாமிகளை மனத்துள் வைப்பாம். (எ - று.)

---

26. பூவாளூர்ப் புராணம்

1154. கருங்கடலிற் றமையழுந்தப் பெருஞ்சிலையி
னாறப்பிணித்துக் கண்ணோ டாமை
யொருங்குறுத்த வமணர்கு ழாந்துயர்க்க
டலினோரும் கழுந்தவுமிழ் பைந்தேற

னெருங்கிதழ்ப்பொற் கொன்றையும்வெண் டும்பையும்
பாசறுகு முடிநிலவ வைத்தார்
தருங்கருணைக் கடன்முழுகிக் கருங்கடலின்
மிதந்தவரைச் சரணஞ் சார்வாம். (26)

(இ-பொ.) கரியகடலில் தம்மை யழுந்தும்படி பெரிய கல்லினோடு நன்றாகப் பிணித்துத் தள்ளிய சமணர் கூட்டந் துயர்க்கடலில் ஒருங்கே யழுந்த, தேன் வழியும் நெருங்கிய இதழ்களையுடைய பொன் போன்ற கொன்றை மலரினையும், வெண்மையாகிய தும்பை மலரினையும் பசிய அறுகினையும் திருமுடியிலணிந்துள்ள சிவபெருமான் அருளிய கருணைக்கடலில் மூழ்கித் தேவாரத் திருப்பதிகம் பாடிக் கரிய கடலில் மிதந்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை அடைவாம். (எ-று.)

27. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

1155. திரையேற விட்ட கற்றூண் புணர்ப் பறச்சொற்
றுணைப்பதிகந் திருந்தப் பாடி
விரையேற விட்ட நறையிதழி முடியர
னருளால் வென்றி மேவ
விரையேற விட்ட சமணற வுயிர்கள்
பவக்கடனின் றென்று மேவக்
கரையேற விட்ட பிரான்புகழ் விளைத்த
நாவரசைக் கருதி வாழ்வாம். (27)

(இ-பொ.) அலைகடலில் கற்றூணோடு கட்டிச் செலுத்தியபோது அக்கட்டு நீங்கும்படி, 'சொற்றுணை வேதியன்' என்னும் பதிகத்தைத் திருத்தமுறப்பாடி, மணமும் தேனும் பொருந்திய கொன்றை மலரினைத் திருமுடியிலணிந்துள்ள சிவபெருமான் திருவருளால் வெற்றிபொருந்தச் சமணர்கள் ஒழிய, உயிர்கள் பிறவிக் கடலினின்றும் என்றும் கரையேற விட்ட சிவபெருமானுடைய புகழைப்பரப்பிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை நினைந்து வாழ்வாம். (எ-று.)

28. திருச்செந்தூர்ப் புராணம்

1156. கலக மிடும்பொய்ச் சமணர் குழாங்கட்டிக் கடலினிடை புகுத்த
வுலகம்பரவ விடுத்தகல்லே யுயரும் புணையாக் கரையேறி
யிலவ விதழோர் பங்கமைத்த வெம்மான் கமலத்தாள் பழிச்சுஞ்
சொல வின்புணையாப் பவக்கடலுங் கடந்தான் சரணத்துணை துதிப்பாம். (28)

(இ-பொ.) கலகஞ் செய்கின்ற பொய்யினை யுடைய சமணர் கூட்டம் கல்லோடு கட்டிக்கடலில் தள்ளியபோது, உலகம் புகழ, அக்கல்லையே உயரிய தெப்பமாகக் கொண்டு கரையேறி, இலவு போன்ற இதழ்களையுடைய உமாதேவியாரை இடப்பாகங்கொண்ட சிவ பெருமானுடைய திருவடிகளைத்துதித்த அந்த ஐந்தெழுத்தையே தெப்பமாகக் கொண்டு பிறவிக்கடலையுங் கடந்த திருநாவுக்கரசருடைய இரண்டு திருவடிகளையுந் துதிப்பாம். (எ-று.)

29. உத்தரகோச மங்கைப் புராணம்

1157. தொலையாத பவக்கடல்யாங் கடத்துமெனப்
பிறர்க்குணரச் சொல்வார் போல
நிலையாத புறச்சமயக் குறும்பரிறு
குறப்பிணித்த நெடுங்கல் லோடு
மலையாடு பெரும்பரவை யழுந்தாத
கன்மிதப்பா யாழி நீந்தித்
தலையாய பொருளுணர்ந்த வாகீசர்
மலர்ச்சரணஞ் சரண மாதோ. (29)

(இ-பொ.) அழியாத பிறவிக்கடலை யாங்கடப்போமெனப் பிறர் அறியும்படி சொல்வார் போல, நிலைத்து நிற்காத வேற்றுச் சமயக் குறும்பர்களாகிய சமணர்கள் கல்லோடும் இறுகப் பிணித்துக் கடலிற்றள்ளிய போது, அழுந்தாமல் அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக்கடந்து, தலையாய செம்பொருளாம் சிவபெருமானை உணர்ந்த திருநாவுக்கரசருடைய திருவடிகளே நமக்குச் சரணும். (எ-று.)

30. கடம்பர் கோயிற் புராணம்

1158. ஞானந்தங் கருணீருண் டமண்பாழி
யிடித்துவினை கருத்தெஞ் ஞான்று
மீனந்தங் குலகாசைக் கடுங்கோடை
யிரிந்தோட வெம்மான் சைவத்
தானந்தங் கருட்செல்வம் தழைத்தோங்கத்
தாண்ட சீர்ப்பதிக மென்னு
மானந்தம் பொழிமுகிலை யகமலரைத்
தொழுதுவினை யகன்று வாழ்வாம். (30)

(இ-பொ.) மெய்ஞ்ஞான மென்னும் அருள் நீரையுண்டு, சமணப்பாழிகளை யிடித்து, நம்வினைபோல் கருநிறங்கொண்டு, எப்பொழுதும் குற்றம் பொருந்திய உலக ஆசை என்னுங் கடுங் கோடை அஞ்சியோட, எம் சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிவத்தலங்கள்தோறும் அருட்செல்வந்தழைத்து ஓங்கத் திருத்தாண்டக மென்னும் ஆனந்த மழை பொழியும் மேகமாகிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தொழுது தீவினை நீங்கப் பெற்று வாழ்வாம். (எ-று.)

31. சிவராத்திரி புராணம்

1159. காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச்
சென்றமசெய் காமனுமைம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை
யத்தியதள் புணைந்து போர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிக
மிசைத்தமிழிற் சிறக்கப் பாடு
நாவரசு பதம்பரசு நமக்குயர்
பொன்னுட்டரசு நல்கு மன்றே, (31)

(இ-பொ.) இந்திரன், பிரமன், திருமால் முதலிய தேவர்களுக்காக யோகத்தைக் கலைக்க ஐந்து மலர்க்கணைகளைத் தொடுத்த மன்மதனை நெற்றிக் கண்ணால் விழித்தெரித்து, புலி, யானை ஆகியவற்றின் தோலை உடுத்தியும் போர்த்தியுங் கொண்ட தேவர்கட் கெல்லாம் அரசனாகிய சிவபெருமான் திருவுளம் மகிழும்படி தேவாரத் திருப்பதிகத்தை இசைத் தமிழில் சிறப்பாகப் பாடிய திருநாவுக்கரசருடைய திருவடிகளைத் துதிக்கும் நமக்கு அப்பெருமான் பொன்னுலக வாழ்வை அளிப்பார். (எ - று.)

32. புலியூர்ப் புராணம்

1160. வில்லரைய னஞ்சமோடு நீற்றறை
வெவ்வேழ முனமேவப் பண்ணிக்
கல்லரையினாறப்பிணித்துக் கடல் வீழ்த்த
        வதுபுணையாக் கருணை செய்ய
வல்லரையாம் பாடுவமென் றஞ்செழுத்தின்
        பதிகத்தை வாழ்த்திச் சேர்ந்த
சொல்லரைய நல்லபத நளினங்க
        ளென்னாளுந் துதிப்பாஞ் சூழ்ந்தே. (32)

(இ - பொ.) சமணர்கள் சூழ்ச்சியினால் நந்திவர்ம பல்லவன் என்னும் அரசன், பாற்சோற்றோடு நஞ்சுகலந்தூட்டவும், நீற்றறையிலிடவும், யானையைக் கொண்டு இடறும்படியும் ஏவச் செய்து, கல்லோடு பிணித்துக் கடலிற்றள்ள அக்கல் தெப்பமாகும்படி அருள் செய்த சிவபெருமானைப் பாடுவோமென்று திருவைந்தெழுத்துப் பதிகத்தைப் பாடிக்கரை சேர்ந்த திருநாவுக்கரசருடைய திருவடித் தாமரைகளை எந்நாளுந் துதிப்போம். (எ - று.)

33. சீர்காழிப் புராணம்

1161. விடற்கரிய கொடும்பாசத் தொடரறுத்
        தைம்புலனாய வேழஞ் சீறி
யடற்கரியின்மும் மதமு மமணருடைத்
        துன்மதமு மழிய நூறித்
தடக்கடலைக் கன்மிதவை யாலுழக்கிச்
        சிவஞான தானம் வீசுங்
கடக்களிறென் றுலகேத்த வருநாவுக்
        கரசர்பதங் கருதி வாழ்வாம். (33)

(இ - பொ.) விடுதற்கரிய கொடிய பாசமாகிய கயிற்றை அறுத்து, ஐம்புலனாகிய யானையைச் சினந்து, கொல்லுந் தன்மை வாய்ந்த மும்மத யானையினையும், சமணர்களையும் உடைத்து, அச்சமணர்களுடைய தீய சமயத்தை அழித்து, பெரிய கடலைக் கல்லாகிய தெப்பத்தினால் கலக்கி, சிவஞானமாகிய மதசலநீரின் மணம் வீசுங் கடகளிறென்று உலகமெலாம் துதிக்கும்படியான திருநாவுக்கரசர் திருவடிகளை நினைந்து வாழ்வாம். (எ - று.)

34. சானந்த கணேச புராணம்

1162. அற்படு மிடற்றின னருளி னாலொரு
கற்புணை யாகமாக் கடல் கடந்தவ
னற்பெயர் தன்னையே நவிறி யுள்ளநீ
பற்பல பிறவியாம் பரவை நீந்தவே. (34)

(இ - பொ.) உள்ளமே! நீ திருநீலகண்டன் திருவருளினால் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடல் கடந்த திருநாவுக்கரசரின் நல்ல திருப்பெயரையே சொல்லிப் பற்பல பிறவியாகிய கடலைக் கடப்பாயாக. (எ - று.)

35. திருவாப்பனூர்ப் புராணம்

1163. மண்ணாசை பெண்ணாசை மூன்று நீத்து
மனத்தாசை யறவெறிந் தானந்த நீர்பாய்
கண்ணாசை சிவபெருமான் காட்சிக் காக்கி
கருத்தாசை யவனருட்கே கைம்மா றாக்கி,
யுண்ணாசை மருந்தனையார் புகலூர் மன்று
முழவாரப் படையாளி யுருகிப் பாடும்.
பண்ணாசைத் திருநாவுக் கரையன் பாதம்
பத்திபழுத் தொழுகநெஞ்சிற் பதித்து வாழ்வாம். (35)

(இ - பொ.) மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்றையும் விட்டு, மனத்தின் கண் ஆசையை அறவே நீக்கி, ஆனந்த அருவி பாயுங் கண்ணாசையைச் சிவபெருமானைக் காணுங் காட்சிக்கேயாக்கி, மனத்திலுண்டாகும் ஆசையை அவ்விறைவன் திருவருட்குக் கைம்மாறாக ஆக்கி, திருப்புகலூரில் வீற்றிருக்கும் உண்ணுதற்கு ஆசைப்படும் அமுதம் போன்றவராகிய சிவபெருமான் ஆசைப்படும்படியாக உள்ளம் உருகித் திருத்தாண்டகம் முதலிய தேவாரப் பதிகங்களைப் பாடியருளிய, உழவாரப் படையினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளைப் பத்தி கனிந்தொழுக நெஞ்சிற் பதியவைத்து வாழ்வாம். (எ - று.)

குறிப்பு :—திருநாவுக்கரசர் உள்ளம் உருகிப் பாடிய திருத்தாண்டகத்தைக் கீழே காண்க :—

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்ன டிக்கே போது கின்றேன்
பூம்புகலூர்மே வியபுண் ணியனே.

36. திருப்பூவணப் புராணம்

1164. அருள்பெருகுந் திலகவதியா ரருளா லமண்சமய மகற்றி யன்பாற்
கருதரிய கற்புணையாற் கடனீந்திக் கருவேலை கடப்பான் சீர்த்தி
மருவு திருவாமூரில் வைதிக சைவந்தழைப்ப வந்து தோன்றித்
திருவதிகைப் பதிவரு செந்தமிழ் நாவுக்கரையர் பதஞ்சிந்தை செய்வாம். (36)

(இ - பொ) புகழ்மிக்க திருவாமூரில் வைதிக சைவந்தழைத்தோங்க வந்து அவதரித்து, பெருகும் அருளுடைய தமக்கையாம் திலகவதியார் இறைவனருளால் சமண சமயத்தினின்றும் மீட்கப் பெற்று, சிவபெருமான் மீது வைத்த பேரன்பினால் கல்லாகிய தெப்பத்தால் கடலைக் கடந்து, பிறவிக்கடலைக் கடக்க வேண்டித் திருவதிகைப் பதிக்கு வந்த செந்தமிழ்ப் பாமாலை பாடுவதில் வல்ல திருநாவுக்கரசர் திருவடிகளைச் சிந்திப்பாம். (எ - று.)

37. மயூரகிரிப் புராணம்

1165. மணிவயிற்றற் சூலைதவிர்த் தங்கையினிற் புனைசூல மவன்றோட் டட்டி
யணிதிதழ்தன் றிருப்பாதஞ் சிரஞ்சூட்டிச் சிவனாலு மப்ப னெம்மா
பணிவிடையி லுயர்வுற்றோன் வேளாளர் குலம்விளக்கும் பரிதி போல்வான்
றணிவில் புகழ்த்திருநாவுக் கரையனிரு சரணமலர் தலைமேற் கொள்வாம்.(37)

(இ-பொ) அழகிய வயிற்றிலுண்டான சூலை நோயினை நீக்கி, அழகிய கையினிற் பிடித்துள்ள சூலத்தினால் தோளில் முத்திரையிட்டு, அழகிய தன் திருவடியைத் தலையின் மேற் சூட்டிச் சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற அப்பரென்னும் பெயருடைய எம் தலைவனும், திருத்தொண்டில் மேம்பட்டவனும், வேளாளர் குலத்தை விளக்கவந்த சூரியன் போன்றவனும், குன்றாத புகழுடையவனுமாகிய திருநாவுக்கரசர் பெருமானுடைய திருவடித் தாமரைகளிரண்டையுந் தலைமேற் கொள்வாம். (எ - று.)

38. ஆதிபுரி புராணம்

1166. தெருண்மிகும் பேரன்பி னுக்கோர் கொள்கலமா
யளப்பரிய தெய்வக் கற்பின்
வருதிலக வதிவருத்தங் கண்டிறை வன்விடுஞ்
சூலை வழிதான் காட்டப்
பெருகொளி வெண்ணீ றணிந்து சாக்கியர்தம்
மதம்பொய்யாம் பெருமை காட்டிக்
கருநிறத் தெண்டிரைக் கடலிற் கண்மிதப்ப
வந்தவர்தாள் கருத்துள் வைப்பாம். (38)

(இ - பொ) தெளிந்த மிக்க பேரன்பினுக்கோர் உறைவிடமாயும், அளவிடற்கரிய தெய்வத்தன்மை பொருந்திய கற்பின் நெறி நின்று வருபவருமாகிய திலகவதியாருக்குத் தன் தம்பியாகிய மருள் நீக்கியார் சமண மதஞ் சார்ந்ததால் உண்டான வருத்தத்தைக்கண்டு சிவபெருமான் அனுப்பிய சூலை நோய் நல் வழி காட்ட மிக்க ஒளி பொருந்திய திருவெண்ணீறணிந்து, சமணர்கள் மதப் பொய்

யின் பெருமையினை வெளிப்படுத்திய, கருநிறத்தினையுந் தெளிந்த அலைகளையுமுடைய கடலில் கல்லே தெப்பமாக மிதப்ப அதன்மீது வந்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை மனத்துள் வைப்பாம் (எ - று.)

39. திருவாலங்காட்டுப் புராணம்

1167. குரவர்தங் குறிப்புக்காகக் கலன்கழி கொள்கை பூண்டு
பரனடி யடைந்தநங்கை பணியணி யாகத் தாங்கி
விரவிய வமுதத் தீஞ்சொன் மெல்லிசை வீறும் பாவா
லரன்மகிழ் சிறந்த நாவுக்கரசினை யகத்துள் வைப்பாம். (39)

(இ-பொ.) தம் தாய்தந்தையர் தமக்கு மணம் பேசிய கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர் நீத்தார் என்னுஞ் செய்தியைக் குறிப்பாக அறிவிக்க அறிந்து, கைம்மை நோன்பினை மேற்கொண்டு திருவதிகை வீரட்டானத் திறைவனை யடைந்த நங்கையாகிய திலகவதியார் செய்து வந்த திருத்தொண்டினைத் தாமும் அணியாகக் கொண்டு, இனிய அமுதம் போன்ற இன்சொல் மெல்லிசையால் மேம்பட்டு விளங்குந் தேவாரப்பாடலால் சிவபெருமானை மிகவும் மகிழ்ச்செய்த திருநாவுக்கரசர் பெருமானை மனத்துள் வைப்பாம். (எ – று.)

40. திருமுகன் பூண்டிப் புரர்ணம்

1168. பற்ற லார்புரம் பொடிபட நகைத்தவன் பதமலாற் பிறவிக்கு
மற்று வேறிலை மருந்தெனத் திருந்திய மாசிலன்புடை யானைத்
துற்ற சாக்கியர் பிணித்திடு நெடியகற் றூணையஞ் செழுத் தோதி
யெற்று வாரியின் மிதந்திடப் பணித்தவா கீசனைத் துதிசெய்வாம். (40)

(இ - பொ.) பகைவர்களது திரிபுரத்தைச் சிரித்தெரித்த சிவபெருமானுடைய திருவடிகளல்லாமல் பிறவியாகிய நோய்க்கு வேறு மருந்தில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்த, திருந்திய குற்றமற்ற அன்புடையானை, நெருங்கிய சமணர்கள் கல்லுடன் பிணித்துக் கடலிற்பாய்ச்சிய போது, அக்கற்றூணைத் திருவைந்தெழுத்துப் பதிக மோதி அலைவீசும்படியான கடலில் தெப்பமாக மிதந்திடச் செய்த திருநாவுக்கரசர் பெருமானைத் துதிப்பாம். (எ - று.)

41. பவானி கூடற்புராணம்

1169. அடலயிற் சூலப்பொரு படைத்திருக்கை
யமலன தருளினுற் கொடிய
விடலையிற் றீய வஞ்சக வமணர்
வீக்குகற் றூணொடு மிட்ட
கடலையும் பிறவிக் கடலையும் பஞ்சாக்
கரவருட் பாதையிற் கடந்து
நடலைவாழ் வொழிந்து முத்திவாழ் வடைந்த
நாவினுக் கரையாதா டொழுவாம். (41)

(இ-பொ.) வலிமையுங் கூர்மையும் கொல்லுந்தன்மையுமுடைய சூலப் படையைத் திருக்கையிலேந்திய சிவபெருமானருளால், கொடிய காளையினுந்தீய வஞ்சகச் சமணர்கள் கற்றாணோடு கட்டித்தள்ளப்பட்ட கடலையும், பிறவிக் கடலையும் ஐந்தெழுத்தின் அருட்டுணையால் கடந்து, பொய் வாழ்வொழித்து முத்தி வாழ்வடைந்த திருநாவுக்கரசர் திருவடிகளைத் தொழுவாம். (எ - று.)

42. கருவூர் புராணம்

1170. சூழிமால் யானை தாழப் பிணித்த கற்றூணந் தாழா
தாழிவாய் மிதப்ப மேலா மைந்தெழுத் துணர்வி னோங்கிக்
காழிவாழ் ஞானம் பூத்த கவுணியக் கொழுந்தை நட்ட
வாழிவா கீசர் வாச மலர்ப்பதம் வணங்கல் செய்வாம். (42)

(இ-பொ.) முகபடாத்தையுடைய கொல்லும் யானை குனிந்து பணியவும், தம்மைப் பிணித்துத் தள்ளல் பெற்ற கற்றூண் காலந் தாழ்த்தாது கடலிடம் தெப்பமாக மிதக்கவும், மேலான ஐந்தெழுத்துணர்வில் மேம்பட்டு, சீகாழியில் அவதரித்த ஞானம் மலரப்பெற்ற கவுணியர் குலக் கொழுந்தாகிய திருஞானசம்பந்தப் பெருமானை நட்புக் கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகளுடைய மணம்பொருந்திய தாமரைமலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ- று.)

43. திருவோத்தூர்ப் புராணம்

1171. உருகலுலு முழுவலெனு முவாக்கடலு ளந்ததும்பிப்
பெருகுமருட் கடலழுந்திப் பிறவியெனும் பெருங்கடலுந்
திருகுமனத் தமணரிடுந் திரைக்கடலும் விடநீந்தி
வருமொருநா வுக்கரசின் மலர்ப்பதங்க ளிறைஞ்சுவாம். (43)

(இ-பொ.) உருகுதற்கேதுவாகிய எழுமையுந் தொடர்ந்து வரும்படியான உழுவலன்பாகிய மதியைக் கண்டு கடல்போன்ற உள்ளம் பொங்கித்ததும்பி, பெருகிவருகின்ற அருட்கடலில் அழுந்தி, பிறவி என்னும் பெருங்கடலையும், மாறுபட்ட மனத்தினையுடைய சமணர்கள் கல்லினோடு கட்டியிட்ட அலையினையுடைய கடலையும் விட்டு நீந்தி வரும்படியான ஒப்பற்ற திருநாவுக்கரசு சுவாமிகளுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

44. திருச்சுழியற் புராணம்

1172. புல்லோடுந் தழையோடும் பூசிப்பார் தமக்கெதிரே
வல்லோடுந் தனத்துமலை மகளோடு வருவானைச்
சொல்லோடும் பொருளோடுந் துயரோடும் படிபாடிக்
கல்லோடு மிதந்தானைக் கருத்தொடும் பணிகுவாமால் (44)

(இ-பொ.) அறுகம் புல்லினையும், தழைகளையும், பூக்களையுங் கொண்டு பூசனைபுரிவர்க் கெதிரே, சூது கருவியை யொத்த தனத்தினையுடைய பார்வதியோடு வருகின்ற சிவபெருமானை, சொற்பொருத்தம் பொருட்பொருத்தம் அமைய, துன்

பம் நீங்கி ஓடும்படியாகத் திருப்பதிகம் பாடி, கடலில் சமணர் கட்டி வீழ்த்திய கல்லையே தெப்பமாகக் கொண்டு மிதந்து வந்த திருநாவுக்கரசு சுவாமிகளைக் கருத்துடன் வணங்குவாம். (எ-று.)

45. மருதூர்ப் புராணம்

1173. உடல்குழைய மொழிகுழற விழிநீர்மல்க
  வுளத்தி லன்பு கனிந்தொழுக வுரகனுச்சிக்
கடல்புடைசூழ் புடவியிடைத் தலங்க டோறுங்
  கவியலங்க லணிந்தரனைக் கண்டு போற்றி
நடைநடந்து காறளந்திட் டிருகையூன்றி நடுக்கமுறத் தவழ்ந்து
  பொய்கை நன்னீர் மூழ்கி,
வடகயிலைப் பொருப்பை யாறதனிற் கண்டவா கீசரிணை
  மலர்த்தாள் வணக்கஞ் செய்வாம். **(45)**

(இ-பொ.) உடம்பு குழைய, சொல்தடுமாற, கண்களில் நீர் வழிய, உள்ளத்தில் அன்புகனிந்து ஒழுக ஆதிசேடன் உச்சியில் தங்கியுள்ள கடல் சூழ்ந்த இவ்வுலகிலுள்ள தலங்கள் தோறும் சென்று இறைவனுக்குப் பத்திமையாற் பாமாலை சூட்டிப் பணிந்து போற்றி, நடையாக நடந்து கால் தளர்ந்து தேய்ந்த பிறகு கையூன்றி நடந்து, அதுவுந்தேய நடுக்கமுற்று மார்பால் தவழ்ந்து சென்று. ஆண்டவன் காட்டிய பால்புரை பனி நீர்ப் பொய்கையில் மூழ்கி, வடகயிலையில் சிவபெருமான் உமையோடு வீற்றிருக்குங் காட்சியைத் திருவை யாற்றில் கண்டுகளித்த திருநாவுக்கரசருடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

46. ஆதீத்தபுரிப் புராணம்

1174. மல்லாருஞ் சூலையெனா மருவினை யொப்பாற்
  பவுத்த மாயா பேத
மில்லாமற் றிலகவதி யாரென ஞானத்
  தரனாறிணைத்தாள் சேர்ந்தே
கல்லாலோருததிதனைக் கடந்து பாதிரிப்
  புலியூர்க் கண்டு தீதிற்
செல்லாத சொல்லர சினிலை பரவி
  மகிழ்பூத்துச் செழித்து வாழ்வாம். **(46)**

(இ-பொ.) வருத்துகின்ற சூலைநோயென்னும் இருவினை யொப்பினால் பவுத்த மாயபேதமில்லாமல் திலகவதியாரைப் போல ஞானத்தால் சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையுஞ் சேர்ந்து, கல்லையே தெப்பமாகக் கொண்டு ஒரு கடலைக் கடந்து திருப்பாதிரிப்புலியூர் இறைவனைக் கண்டு பாடிய தீய நெறியிற் செல்லாத திருநாவுக்கரசு சுவாமிகளுடைய பெருமையினைத் துதித்து மகிழ்ந்து செழித்து வாழ்வாம். (எ-று.)

47. திருக்குற்றாலப் புராணம்

1175. திருநீற்றை மெய்யழுத்தி யஞ்செழுத்தை
நெஞ்சழுத்திச் சிலைக்கை மார
னுருநீற்றும் பெருமானை யுறவழுத்திச்
சமணரெனு மொன்னார் மூட்டும்
பொருநீற்றுக் குடவறையுங் கடகரியும்
விடவரவும் புறங்கண்டாழிக்
கருதீத்தங் கடப்பவொரு கற்றோணி
யுகைத்தானைக் கருத்துள் வைப்பாம். (47)

(இ-பொ.) திருவெண்ணீற்றைத் திருமேனியிலணிந்து, திருவைந்தெழுத்தை நெஞ்சத்திருத்தி, சிலைக்கைக் கொண்டு மலர்க்கணை தொடுத்த மன்மதனை நெற்றிக் கண்ணாலெரித்த சிவ பெருமானை நன்றாகப் பாடித் துதித்து, சமணப் பகைவர்கள் மூட்டிய நீற்றறையினையும், மதம் பொருந்திய யானையினையும், விடம் பொருந்திய பாம்பினையும் வென்று, கருங்கடலைக் கற்றோணியால் கடந்த திருநாவுக்கரசரைக் கருத்துள் வைப்பாம். (எ-று.)

---

48. திருநெல்வேலிப் புராணம்

1176. குண்டர்பா யுடையர் வெங்கொடிய பாதகர்
தெண்டிரை யிடத்திடு சீலை மிதப்பவெம்
மண்டர்நா யகனெழுத் தஞ்சு மோதியே
தண்டமிழ் பாடினார் சரணம் போற்றுவாம். (48)

(இ-பொ.) குண்டரும், பாயுடை உடையவரும், மிகக் கொடிய பாதகருமாகிய சமணர்கள் கடலினிடைக் கல்லோடு பிணித்துத்தள்ளிய போது அக்கல்லே தெப்பமாகும்படி தேவர் தலைவனும் சிவபெருமானுடைய திருவைந்தெழுத்தை யோதித் தண்டமிழ்ப் பதிகம் பாடிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

---

49. மருதவனப் புராணம்

1177. வடமருவு தென்னிழலிற் கருணைவடி
வாய்விளங்கு வரதன் போல
விடமமிர்த மெனப்பருகிச் சூலந்தோண்
மிசையேற்று விடைமேற் கொண்டு
தடமருவு தரணியிடைத் திகழ்ந்திடு
வாகீசர் பதசரோ ருகத்தைத்
திடமுறுமன் பொடுதினமுஞ் சிந்திப்போஞ்
துயர்களெலாஞ் சிந்திப் போமால். (49)

(இ-பொ.) கல்லால மரத்தின்கீழ் அருளே வடிவாகத் திகழும் குருநாதன் போல, நஞ்சை அமுதமெனப் பருகிச் சூல முத்திரையினைத் தோள்மேலேற்று, இடபமுத்திரையுங் கொண்டு பெரிய இப்பூவுலகில் திகழ்கின்ற திருநாவுக்கரசருடைய தாமரைமலர் போன்ற திருவடிகளை உறுதியான அன்புடன் நாடோறுஞ் சிந்தித்துவரும் நம்முடைய துன்பங்களெல்லாங் கெட்டொழியும். (எ-று.)

50. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

1178. பறிதலைப்பா யுடைக்கொடிய பாதக ராகிய
குண்டர் பல்லோர் கூடி
யெறிதிரையார் கலியினிடைச் சிலையினோடு
பிணித்திடலு மிலங்கு மேன்மை
நெறிதருமஞ் செழுத்தினைக் கொண்டது கடந்தோன்
மலரடியை நினைந்து மன்னும்
பிறவியெனப் பகர்ந்திடு நீள்கட லதனைக்
கடந்திடுவாம் பெரிது மன்றே. (50)

(இ-பொ.) தலையைப்பறித்துக் கொண்டும் பாயை உடையாகக் கொண்டுந் திரியுங் கொடிய பாதகராகிய குண்டராம் சமணர்கள் பலர்கூடி, அலைவீசுங்கடலினிடத்தே கல்லோடு கட்டி விட்டபோது, மேன்மை பொருந்திய நன்னெறிகாட்டுந் திருவைந்தெழுத்தினைக் கொண்டு அக்கடலைக் கடந்த திருநாவுக்கரசரது தாமரை மலர் போன்ற திருவடிகளை நினைந்து, நிலைபெற்ற பிறவி யென்று சொல்லப்படும் நீண்ட கடலைக் கடப்பாம். (எ-று.)

---

51. மயூராசலப் புராணம்

1179. இப்பிறவிக் கடல்கடப் பானெண்ணு மனத்
தினர்யாரு மினிதாய் மாதர்
துப்புறுமா மயலுவரி காராழி
நீற்ற றையுந் துணுக்கென்றேறி
மைப்படுவி டோதன முங் கடந்து
மதமலைக டந்துவந் தவெங்க
ளப்பரிரு பதங்கருதிற் செப்புவதென்
னோயவர்கட் கண்ணுந் தானே. (51)

(இ-பொ.) இப்பிறவிக்கடலைக் கடக்க எண்ணும் மனத்தினர் யாவரும் மாதர் மயலாகிய கடலையும், கருங்கடலையும், நீற்றறையினையும் விரைவில் வென்றேறி, விடங் கலந்த உணவினையும் வென்று வந்த எங்கள் அப்பர் பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் நினைத்தாற்போதும். வேறு சொல்லுவதென்? அப்பிறவிக் கடலைக் கடந்தேறுவர். (எ-று.)

---

52. திருப்பெருந்துறைப் புராணம்

1180. பாலிடை நஞ்சங் கண்டு பதைபதைத் தோடி யோர்பா
னூலிடை யவருண் பாக்கு நுவன்றமா லயனுண்ணுணப்
பாலிடை நஞ்சங் கண்டு பதைப்பின்றித் தாமுண்டோர்பா
னூலிடை யவரே யென்னப் பொலியு நோன்மையர் தாள்போற்றி. (52)

(இ-பொ.) திருப்பாற் கடலில் தோன்றிய நஞ்சைக்கண்டு பதைபதைத்து அஞ்சியோடி, இடப் பாகத்தில் நூல்போன்ற இடையினையுடைய பார்வதியையுடைய சிவபெருமானை உண்ணும்படி வேண்டிய திருமாலும் பிரமனும் உண்ண

முடியாத பாற்சோற்றிற் கலந்த நஞ்சைக் கண்டுபதைபதைத்து அஞ்சாமல் தாம் உண்டு உமைபங்கன் என்று சொல்லும்படியாக விளங்கும் பெருமையினையுடைய அப்பர் பெருமான் திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

53. காசி ரகசியம்

1181. அருப்பிள முலையாள் பாகத் தண்ணலா ரினிது மேய
திருப்புக லூருக் கப்பேர் யோகமே யென்று செப்பக்
பொருப்புமுள் ளுருகப் பாடிப் புகுந்து பேரின்பந் துய்த்த
விருப்புறு புகழ்சா னாவின் வேந்தர்தாள் வணக்கஞ் செய்வாம். (53)

(இ-பொ.) அரும்புபோன்ற குவிந்த இளமையான தனங்களையுடைய உமாதேவியை இடப்பாகத்துக் கொண்டு விளங்கும் சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்புகலூருக்கு, அப்பெயர் காரணப் பெயரே என்று சொல்லும் படியாக, மலைகளும் உள்ளம் பெற்று உருகுமாறு திருப்பதிகம் பாடி இறைவன் திருவடியை அடைக்கலமாக அடைந்து இரண்டறக்கலந்து பேரின்பந்துய்த்த, யாவரும் விரும்பத்தக்க புகழ் வாய்ந்த திருநாவுக்கரசர் தாள்களை வணங்குவாம். (எ-று.)

54. திரு நாகைக் காரோணப் புராணம்

1182. எழுபது வெள்ளஞ் சேனை யெடுத்திடு பலகற் கொண்
செழும ணிப்பரவை யொன்றே கடந்த வெஞ்சிலை யோனான
வழுவம ணிடுகல் லொன்றான் மறிகடல் பிறவி வேலை
முழுவதுங் கடந்த வெங்கண் முதல்வனுக் கன்பு செய்வாம். (54)

(இ-பொ.) எழுபது வெள்ளம் வானரசேனைகள் கொண்டு வந்த பற்பல கற்களைக் கொண்டு செழுமையான மாணிக்கங்களையுடைய ஒரு கடலின்கண் அணை கட்டி அதன்வழியாக அக்கடலைக் கடந்து இலங்கைக்குச் சென்ற வில்லைக் கையிலேந்திய இராமன் நாணும்படி, குற்றம்பொருந்திய சமணர் தம்மோடு கட்டித் தள்ளிய கல் ஒன்றினால் அலைகளையுடைய கடலையும், பிறவிக்கடலையும் ஒருங்கே கடந்த எங்கள் முதல்வராகிய திருநாவுக்கரசரிடம் அன்பு செலுத்துவாம். (எ-று.)

55. திருக்குடந்தைப் புராணம்

1183. ஒருகவி மீட்பான் காலைஞ் சோலையென் றெழுதி யச்சம்
பெருகவுந் தோற்றி யுய்த்த பெருஞ்சிலை யிராமனாணத்
தருகவப் பூதிமைந்தன் றனையெனக் கால காலற்
கருகலில் பதிகம் பாடி யருளினோற் கன்பு செய்வாம். (55)

56. மாயூரப் புராணம்

1184. பெறுமண் நிறத்த மைத்தும் பிறங்குபொன் னுடம்பிற் போர்த்து
முறுபெருங் காவல் பூண்டோர்ந் துறங்கு மாயவன் போலாது
பெறுமணி பொன்னெ லாங்கைப் பேருழ வாரத் தாற்சோ
வுறுபுறம் விட்டா னந்த வுறக்கஞ் செய்பவர் தாளுள்வாம். (56)

(இ-பொ.) கவுத்துவம் என்னும் மணியை மார்பிலணிந்தும், ஒளி வீசும் பொன்னுடையை உடம்பில் போர்த்தும், மிக்க காவல் பூண்டு அறிதுயில் செய்யும் திருமால் போலல்லாமல், நவமணிகளையும், பொன்னையும் கையிலுள்ள உழவாரப் படையால் மதிற்புறத் திற்கப்பாலுள்ள அகழியிற்றள்ளி விட்டுப் பற்றில்லாமல் ஆனந்த உறக்கஞ் செய்யும் அப்பர் பெருமான் திருவடிகளை உள்ளத்தில் வைப்பாம், (எ-று.)

57. உறையூர்ப் புராணம்

1185. கந்தைமிகை யாங்க ருத்தும் கையுழ வாரப்
படையுங் கவின்வெண் ணீறுஞ்
சிந்தையிடை யருவன் புஞ்சிவ ஞானம் பழுத்
தொழுகு செய்ய வாயுந்
தந்தையொடு தாயிலான் றிருவடி தைவரு
மனமுந் தாரைக் கண்ணு
நிந்தையறு முழுத்துறவு முடைய பிரானடி
பணிந்து நீடு வாழ்வாம். (57)

(இ-பொ.) உடுத்தியிருக்குங் கந்தைத் துணியும் வேண்டாமென்னும் பற்றற்ற உள்ளமும், கையில் உழவாரப் படையும், அழகிய திரு வெண்ணீறணிந்த மேனியும், மனத்தில் சிவன்பால் இடைவிடாத அன்பும், சிவஞானம் பழுத்தொழுகும் படியான சிவந்த வாயும், தந்தை தாயில்லாத சிவபெருமான் திருவடிகளை இடையருது நினைத்துக்கொண்டிருக்கிற மனமும், தாரையாக அன்பு நீர் வழிகின்ற கண்ணும், குற்றமற்ற முழுத்துறவு முடைய அப்பர் பெருமான் திருவடிகளை நினைந்து நீடுவாழ்வாம். (எ-று.)

58. திருவம்பர்ப் புராணம்

1186. ஆலம்பெற் றிருண்ட கண்டத் தண்ணல் பானேமி கொள்ளக்
காலம்பெற் றலரொன் றற்காக் கண்ணிடு மால்போலாது
சீலம்பெற் றருமை யாமோர் செந்தமிழ்ப் பதிகம் பாடிச்
சூலம்பெற் றுயர்ந்த வையர் துணையடி முடிமேல் வைப்பாம். (58)

(இ-பொ.) ஆலகால விடத்தையுண்டு இருண்ட கண்டத்தையுடைய சிவ பெருமானிடம் சக்கரப்படை பெறுவதற்காக வழிபாடு செய்யும் போது ஒரு மலர் குறைய அதற்காகத் தன் கண்மலரையிட்டு வழிபட்ட திருமால் போலல்லாமல், சீரிய ஒழுக்கம் பெற்று, அருமையாக ஒரு செந்தமிழ்ப் பதிகம் பாடிச் சூல முத்திரை பொறிக்கப்பெற்று மேம்பட்ட தலைவராகிய அப்பர் பெருமானுடைய இரண்டு திருவடிகளையுந் தலை மேல் சூடிக்கொள்வாம். (எ-று.)

59. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

1187. ஒரோவொரு மாதர்மாமை நோக்கியுள் ளழிந்து மாழ்குஞ்
சரோருக னெடுமா லாதி வானவர் சமழ்ப்புக் கொள்ள
வரோதய மடவார் மாமை சிந்துமுண் மதியா ராகிப்
பரோபகா ரத்தொண் டாற்றி யிருந்தவர் பாதம் போற்றி. (59)

(இ-பொ.) ஓரொரு பெண்ணின் அழகைப்பார்த்து உள்ளழிந்துடையும் பிரமன் திருமால் முதலிய தேவர்கள் வெட்கங் கொள்ளும்படி, தேவலோக அரம்பையர்கள் தம்மைச்சூழ்ந்தபோது அவர்கள் அழகைச் சிறிதும் உள்ளத்தில் மதியாமல் திருப்புகலூரில் உழவாரத்தொண்டு செய்துகொண்டிருந்த அப்பர்பெருமான் திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

60. விளத்தொட்டிப் புராணம்

1188. மணிவடஞ் சிறுக்கு நேமி வரிவளை மலர்க்கை தாங்கிப்
பணிபடு மதனுற் பந்தப் படுபிணி யொழியார் நாண
வணியுழ வாரந் தாங்கி யையனைப் பணிந்து பந்தப்
பிணியொழித் துயர்ந்த ஞானப் பெருந்தகைப் பிரானை யுள்வாம். (60)

(இ-பொ.) மணிவடம், சிறிய சக்கரம், சங்கு இவைகளைக் கையில்தாங்கி, மன்மதனுடைய மலர்க்கணையால் உண்டாகின்ற காம இச்சை நீங்கப் பெருத பிரமன் திருமால் முதலியோர் நாணும்படி, அழகிய உழவாரப்படை தாங்கிச் சிவபெருமானைப் பணிந்து, பாசப்பிணி யொழித்து உயர்ந்த ஞானப்பெருந் தகையாகிய அப்பர் பெருமானை நினைந்து வணங்குவாம். (எ-று.)

61. கோயிலூர்ப் புராணம்

1189. உறவினுக் கிகற்கு நஞ்ச வுணவினுக் கமுதி னுக்குப்
பிறவினுக் கொரு தன்மைத்தாய் நின்றருள் பெற்ற மேவி
மறவினுக் குணர்வி னுக்கு மேற்படு நிலைமை வாய்ந்த
துறவினுக் கரசு நாவுக் கரசினைத் தொழுதல் செய்வாம். (61)

(இ-பொ.) உறவினையும், பகைமையினையும், நஞ்சினையும், அமுதத்தினையும், பிறவற்றையும் ஒரு தன்மைத்தாய்க் கருதி இறையருள்பெற்று, மறப்பு நினைப்புக்கு மேற்பட்ட நிலைமை வாய்ந்த துறவினுக்கு அரசாக விளங்குந் திருநாவுக்கரசர் பெருமானை வணங்குவாம். (எ-று.)

62. திருக்குறுக்கைப் புராணம்

1190. இருளென்று சொலத்திரிவார் மனம் மேவ
நீற்றறையு ளிருந்து முற்றேம்
வெருளென்று துயர்க்கடலு ளவரழுந்தக்
கருங்கடற் கன்மிசை மிதந்து
மருளென்று மாருத வெண்ணீறுங்
கண்மணியு மைந்தெ ழுத்தும்
பொருளென்று தெரிவித்த புண்ணிய
வாகீசர் பதம்போற்றி வாழ்வாம். (62)

(இ-பொ.) இருளென்று சொல்லும்படியான உடலுடையராய்த் திரிகின்ற சமணர்களுடைய மனம் போன்ற நீற்றறையுளிருந்தும், அச்சமணர்கள் யாம் அஞ்சினேம் என்று கூறித் துன்பக்கடலுள் அழுந்தவும் கரிய கடலில் கல்லைத் தெப்ப

மாகக்கொண்டு மிதந்து, என்றும் அருள்மாருத வெண்ணீறும் கண்மணியும் ஐந்தெழுத்தும் பொருளென்று உலகிற்குணர்த்திய திருநாவுக்கரசர் திருவடிகளை வணங்கி வாழ்வாம். (எ-று.)

63. தனியூர்ப் புராணம்

1191. முகத்தின் மணமுழு திடந்து முன்னவன் பாதங் காணு
னகத்தி ஞணடைய வங்கை யலர்செறி யுழவா ரத்தி
னிகத்தின் மண்மே லிடந்தவ் விறையடி தலைமேற் சூட்டச்
சுகத்தி னல்லூரிற் பெற்ற தூயரைத் துதித்து வாழ்வாம். (63)

(இ-பொ.) பன்றியின் உருக்கொண்டு முகத்தால் மண்ணைத் தோண்டி, முதல்வஞகிய சிவபெருமானுடைய திருவடியைக் காணமுடியாத திருமால் உள்ளத்தில் வெட்கமடையும்படியாக, அழகிய கையிற்பிடித்த உழவாரப் படையால் இவ்வுலகில் திருக்கோயில்கள் தோறுஞ்சென்று தரையிலுள்ள புற்களைச் செதுக்கித் திருநல்லூரில் அச்சிவபெருமான் திருவடி தலைமேற்சூட்ட இன்பமடைந்த தூயராகிய அப்பர்பெருமானைத் துதித்து வாழ்வாம். (எ-று.)

64. சூதசங்கிதை

1192. பரசிவமென் றடியவரைப் பகருமறை
களிதூங்கப் பலரும் போற்றப்
பிரசநறுங் கடுக்கைமுடி யப்பிரன்போல்
விடநுகர்ந்து பெயராச் சீற்றப்
புரசைநெடுங் களிற்றினைவென் றெழுவிடைவென்
முழுவிடைசூல் பொலியக் கொண்ட
வரசுதிருப் பாதமலர் பரசுபுமெய்ப்
போதமுநீ யமைந்து வாழ்வாம். (64)

(இ-பொ.) சிவனடியாரைச் சிவன் எனவே கூறும் சாத்திரங்கள் களிப்படையவும், பலரும் போற்றவும் தேன் பொருந்திய மணம் மிக்க கொன்றை மலர் மாலையை முடியிலணிந்துள்ள பரமசிவன்போல் விடமுண்டு, சினம் மிக்க யானையை வென்றும் தோளினிடத்தே இடபக்குறி, சூலக்குறிகளைப் பொலியக் கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளைத் துதித்து மெய்ஞ்ஞானம் பெற்று அமைதியுடன் வாழ்வாம். (எ-று.)

65. புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்

1193. அருகரமைத் திடுநீற்றி னறைமுதலாந்
தீங்கடி யார்க்கணு காதெனும்
பெருமையெடுத் துலகறியக் காட்டிமக
ரஞ்சுழலும் பெருநீர் மல்குங்
கருநிறத்தெண் டிரைக்கடலிற் கன்மிதப்ப
வருநாவுக் கரசின் செம்பொற்
றிருவடித்தா மரைமலரைப் பவக்கடலின்
கரையேறச் சிந்தை செய்வாம். (65)

(இ-பொ.) சமணர்கள் அமைத்த நீற்றறை, கொல்லும் யானை முதலான தீங்குகள் அடியார்க்கு இடர்செய்யா என்னும் பெருமையினை யெடுத்து உலகறியக் காட்டி, கருநிறக்கடலில் கல்மிதப்பவருந் திருநாவுக்கரசரின் செம்பொற்றிருவடித் தாமரை மலரைப் பிறவிக்கட லினின்றுங் கரையேறச் சிந்தை செய்வாம். (எ-று.)

---

66. பழனிப் புராணம்

1194. மலராசி நெறியரிடுங் கற்புணைவா
ரிதிமிதப்ப மறைவல் லோன்பாற்
பலராசி பகர்திருப்பா திரிப்புலியூர்க்
கரைசார்ந்து பவநோய் தீர்வான்
புலராசி நெறியொருவிச் சிவசமய
நெறியினிடைப் போந்து ஞானச்
சலராசி படிந்ததமிழ் வாகீசர்
சரணமலர் தலைமேற் கொள்வாம். (66)

(இ-பொ.) அறியாமையினையுடைய சமணர்கள் கட்டியிட்ட கருங்கல்லே, கடலில் தெப்பமாக மிதக்க அதன்மேலமர்ந்து மறைவல்லோனாகிய சிவபெருமானிடம் பலர் வாழ்த்துக்கூறத் திருப்பாதிரிப்புலியூர்க்கரையை அடைந்து பிறவி நோய் தீர்ப்பவனாய், ஐம்புலன்களை வென்று சைவ சமயத்தையடைந்து ஞானக் கடல் படிந்த திருநாவுக்கரசர் திருவடிகளைத் தலைமேற் கொள்வாம். (எ-று.)

இதிகாசம்

67. சிவ ரகசியம்

1195. கதிருலாவிய சபைதொறுங் காலொன்று தூக்கி
யதிரவீசி நின்றாடிய தாண்டவத் தவர்க்கே
மதுரமாத் திருத்தாண் டகச்செந் தமிழ்வகுத்த
சதுரநா வினுக்கரையன் றன்சரண மேசரணம். (67)

(இ-பொ.) ஒளிபொருந்திய சபைகள் தோறும் ஒரு காலைத் தூக்கி அதிர வீசியாடிய ஆனந்தத் தாண்டவர்க்கே இனிய பெரிய திருத்தாண்டக மென்னுஞ் செந்தமிழ்த் தேவாரப் பதிகம் பாடிய சதுரப்பாடுடைய திருநாவுக்கரசருடைய திருவடிகளே நமக்குச் சரணம். (எ-று.)

சாத்திரங்கள்

68. சைவசமய நெறி

1196. பரித்தரிப்பாம் பாசம் பரமசிவன் பாதத்
தரித்துயர்ந்த வாகீசர் தாள். (68)

(இ-பொ.) பரமசிவனுடைய திருவடிகளைத் தலைமேற் கொண்டு சிவபெருமானால் திருநல்லூரில் திருவடி சூட்டப்பெற்று மெய்ஞ்ஞானம் பெற்றுயர்ந்த திருநாவுக்கரசருடைய திருவடிகளைத் தலைமேற் சுமந்து நம் பாசங்களைப் போக்குவாம். (எ-று.)

69. பரமததிமிர பானு

1197. தரித்திடுவா மெம்முட் சிவனடி தன்னுச்சி
பரித்தசொல் வேந்தன் பதம். (69)

(இ-பொ.) திருநல்லூரில் சிவபெருமான் சூட்டிய திருவடியை முடிமேற் கொண்டு மகிழ்ந்த திருநாவுக்கரசர் திருவடிகளை எம் உள்ளத்தில் வைப்பாம். (எ-று.)

70. சங்கற்ப நிராகரணம்

1198. வாக்கிய லினாலே மறைவனத்து வன்கதவை
நீக்கினன்று ணீங்காதென் னெஞ்சு. (70)

(இ-பொ.) தன்வாக்கால் 'பண்ணினேர்மொழி' என்னும் இயற்றமிழ்ப் பதிகம் பாடி, திருமறைக் காட்டில் மறைகளால் பூசித்து மூடப்பெற்ற கதவைத் திறக்கச் செய்த திருநாவுக்கரசர் திருவடிகள் என் நெஞ்சை விட்டு எப்போதும் நீங்கமாட்டா. (எ-று.)

குறிப்பு:— மேற்குறித்த சங்கற்ப நிராகரணம் சித்தாந்த சாத்திரத்தைச் சேர்ந்ததன்று.

71. இறைவனூற்பயன்

1199. வாக்கியலால் வன்சதவை மாமறைகாட் டிற்றிறந்த
வாக்கிறைவன் பாத நினைவாம். (71)

(இ-பொ.) வாயினின்று தோன்றிய இயற்றமிழ்ப்பாவால் வலிய கதவினை பெருமை பொருந்திய திருமறைக் காட்டில் திறந்தருளிய திருநாவுக்கரசருடைய திருவடிகளைச் சிந்திப்பாம். (எ - று.)

72. உருத்திராக்க விசிட்டம்

1200 கொன்னதிகை யீசன்முன் கூற்றாயின வாறே
யென்னுமிசை பாடியிசையுடனே—யன்னவனா
லின்னலொரீஇ வாகீச னென்னும் பெயர்பெற்றான்
றன்னடிவைப் பாமெந் தலை. (72)

(இ-பொ.) பெருமைபொருந்திய திருவதிகை விரட்டானேசுரர் முன் 'கூற்றாயினவாறு' என்னும் இன்னிசைப்பதிகம் பாடிப் புகழோடு அப்பெருமானால் சூலை நோய் நீங்கப்பெற்று, திருநாவுக்கரசன் என்னும் பெயர் பெற்றவனுடைய திருவடிகளைத் தலைமேல் வைத்து வணங்குவாம். (எ - று.)

73. சித்தாந்த தரிசனம்

1201. நின்றதிருத் தாண்டகத்தா னீடுயிர்பொய்ப் போதமற
வன்றுரைத் தோன்றாளகம் வைப்பாம். (73)

(இ-பொ.) ‘நின்ற திருத்தாண்டகம்’ என்னும் தேவாரப் பதிகத்தால், மிக்க உயிர்கள் பொய்யறிவு கெட்டொழியும்படி அன்று அருளுபதேசஞ் செய்த திருநாவுக்கரசருடைய திருவடிகளை உள்ளத்துள் வைப்பாம். (எ - று.)

74. சிவபுண்ணியத் தெளிவு

1202. திரைபொரு கடலிடைச் செறித்துத் தீயமண்
புரையினர் விடுசிலை புணைய தாகவே
யுரைதரு மைந்தெழுத் துணர்ந்து பாடலாற்
கரைவரு மப்பர்தாள் கருதுவா மரோ. (74)

(இ-பொ.) அலைவீசுகின்ற கடலினிடத்தே குற்றம் பொருந்திய தீய சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலிற்றள்ளியபோது கல்லையே தெப்பமாகும்படி “சொற்றுணை வேதியன்” என்னும் திரு ஐந்தெழுத்துப் பதிகம் ஓதிக் கரையேறிய அப்பர் சுவாமிகளுடைய திருவடிகளைச் சிந்திப்பாம். (எ-று.)

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

முப்பத்தொன்றும் பகுதி

சுந்தர மூர்த்தி வணக்கம்

1. கந்த புராணம்

1203. வறந்திடு பொய்கை முன்னிரம்ப மற்றவ
ணுறைந்திடு முதலை வந்துதிப்ப வன்னதா
லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம். (1)

(இ-பொ.) வெகுநாளைக்குமுன் வற்றிய தடாகம் முதலில் நீர் நிரம்பவும் அந்நீரில் முன்னிருந்த அம்முதலை வந்து பிறக்கவும், அம்முதலையாயிலிறந்த பார்ப்பனச் சிறுவன் அக்காலத்திற்குரிய வயதுடன் வளர்ந்து வரவும் திருப்பாடல் ஒன்றருளிச் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவடிகளைத் துதிப்பாம். (எ-று.)

2. உபதேச காண்டம்

1204. உரவு மென்னுளத் தறிகடித் தொருவல தாகி
விரவு முத்தமிழ் மும்மதச் செருக்கொடு மேவுந்
தரவு றுங்களி மீக்கொளச் சங்கிலி யகற்றிப்
பரவை யிற்படிந் தாடுறு மொருதனிப் பகடு. (2)

(இ-பொ.) சிவபெருமானால் அருள்புரியப்பெற்ற ஆனந்த மீக்கூரச் சங்கிலி நாச்சியாரை விட்டுப் பிரிந்து, பரவை நாச்சியார் இடத்திற்கூடி இன்புற்ற ஒப்பற்ற சிறந்த ஆண்யானை போலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மிகவும் வன்மையுற்றிருக்கும் எனது மனமாகிய தறியினின்றும் நீங்காமல் கலந்துள்ள முத்தமிழென்னும் மதத்தைப் பொழிந்துகொண்டு களித்திருப்பர். (எ-று.)

(அ-ப.) மும்மதம் —கர்ணமதம், கபோலமதம், பீஜமதம்.

3. அருணகிரிப் புராணம்

1205. வடகயிலை மலைபிரித்து வந்துதித்திம் மண்டலமெங்
கடவடகைந் தாட்கொளலுங் கட்டுரைத்துப் பதிகமவ
னடிநிழலை யடைந்தாரை யறிவித்தே யெமக்கிந்தப்
படிமுழுதும் புகழ்நிறுவு மாரூரர் பதம்பணிவாம். (3)

4. திருவிளையாடற் புராணம்

1206. அரவக லல்குலார் பாலசை நீத்தவர்க்கே வீடு
தருவமென் றளவில்வே தஞ்சாற் றியதலைவன் றன்னைப்
பரவைதன் புலவிதீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானா
ளிரவினிற் றூதுகொண்டே னிணையடி முடிமேல் வைப்பாம். (4)

(இ-பொ.) பாம்பின் படம் போலும் பரந்த கடிதடமுடைய மாதரிடத்தில் ஆசையை யகற்றினவர்களுக்கே மோட்சங் கொடுப்போமென்று கணக்கில்லாத தேவவாக்கியங்களில் திருவாய் மலர்ந்தருளிய சிவபெருமானைப் பரவை நாச்சியார் கொண்ட ஊடலைத் தவிர்க்கும்படி பேய்களுந் துயில் புரியும் நடு இரவில் தூதாகக் கொண்டருளிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரது உபயபாதங்களை எமது முடிமேல் அணிந்து கொள்வாம். (எ-று.)

(அ-ப.) பானாள் = பாதிநாள்.

---

5. சேது புராணம்

1207. தாது கொண்ட மலச்சுரியற் பரவை யென்பாடனத்
துணைமேன் மயற்குளிரின் றளர்வு தீர
வேது கொண்டு விழையுநெறி விரும்பிமாலும்
விரிஞ்சனுமுன் றொடராத வெளியை யாரும்
யாது கொண்டு மறிவரிதா யெங்குமான
விரும்பொருளை தெருங்கு மிருளிரவின் மீளத்
தூது கொண்டார் தமையெமையாட் கொள்வீரென்று
சொல்லியவார் பதம்புல்லித் தொழுதல் செய்வாம். (5)

(இ-பொ.) மகரந்தத்தையுடைய மலரையணிந்த சுருண்ட கூந்தலையுடைய பரவையென்பவளின் இரண்டு தனங்களையணைய வேண்டுமென்கிற மையலாகிய குளிரால் ஏற்பட்ட வருத்தம் நீங்க, அத்தனங்களை வேதாகக் கொள்ளும் நெறியை விரும்பித் திருமாலும் பிரமனுந் தேடிக் காண முடியாதவனும், யாரும் எதைக் கொண்டும் அறிவதற்கரிதாய் எங்கும் நிறைந்தவனுமாகிய பெரியபொருளை நெருங்கிய இருள் பொருந்திய இரவின்கண்ணே மீளவும் பரவையாரிடம் தூதனுப்பிய சுந்தரரை, எமை ஆட்கொள்வீரென்று சொல்லி, அவர் திருவடிகளை இறுகத் தழுவிக் கொண்டு வணங்குவாம். (எ-று.)

---

6. திருப்பரங்கிரிப் புராணம்

1208. பரவை தனக்குத் தூதுரையாய் பரமா வெனவோர் வேதியனா
யரியு மயனு மறியாத வடியு முடியும் பரவைமனை
மருவும் வாயிற் படிகாண வந்து திரும்பும் வலக்கையிற்
பரசு தரனை யெடுத்த தமிழ்பகர் சுந்தரனைப் பணிவாமே. (6)

(இ-பொ.) பரவையினிடம் தூது சென்று வரவேண்டுமென வேண்டிக் கொள்ளப் பரமசிவன் ஒரு வேதியன் வடிவங் கொண்டு, திருமாலும், பிரமனுங்

காணாத அடியையும் முடியையும் பரவையார் வீட்டிலுள்ள வாயிற்படி காணும்படி வந்து திரும்புகின்ற, வலக்கையில் பரசு என்னும் ஆயுதத்தைக் கொண்டு விளங்குஞ் சிவபெருமானை மேம்பட்ட தமிழால் தேவாரத் திருப்பதிகம் பாடிய சுந்தர மூர்த்தி சுவாமிகளை வணங்குவாம். (எ-று.)

7. திருவாரூர்ப் புராணம்

1209. ஆழி மாகடன் ஞாயிறணைந் தெனச்
சூழி வெங்களி றூர்ந்து சுரர்தொழ
வாழி வேதண்டம் வந்தரு டம்பிரான்
றோழன் சேவடி சென்னியிற் சூட்டுவாம். (7)

(இ-பொ.) ஆழ்ந்த பெரிய கடலைச் சூரியன் அணைந்தது போல முகபடாத்தை அணிந்துள்ள கொடிய ஆண்யானை மீதிவர்ந்து தேவர்கள் வணங்கும்படியாகக் கயிலைமலை வந்தருளிய தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளைத் தலைமேல் சூட்டிக் கொள்வாம். (எ-று.)

8. இலிங்க புராணம்

1210. விதலை யுற்றழுத தற்தைதாய் மகிழ
விரிதிரைப் புனலிடை வாழு
முதலை வாய்க்கொண்டு தன்னகட் டொடுக்கு
முகிழ்நகை செய்யமென் கனிவாய்
மதலை யைக்கரைவாய்த் தந்திடப் பரவை
மாகட லமுதினிற் கனிந்த
குதலை யங்கிளவி பங்கனை வழுத்துங்
குரிசிலைப் பரவுதல் செய்வாம். (8)

(இ-பொ.) நடுக்கமுற்று அழுத தந்தையுந் தாயும் மகிழ விரிகின்ற அலையினையுடைய நீர் பொருந்திய குளத்தில் வாழும் முதலையால் விழுங்கப்பெற்று அதன் வயிற்றினுட் சென்று விட்ட பாலகனைக் கரையில் தரும்படியாக, அமுதம் போன்ற இனிய சொற்களையுடைய பார்வதியை இடப்பாகங் கொண்ட சிவபெருமானைத் திருப்பதிகம் பாடித் துதித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் துதிப்பாம். (எ-று.)

9. பிரமோத்தர காண்டம்

1211. தாது நிறைக்கும் பசுந்துளபத்
தாமத் தோனுஞ் சரோருகச்செம்
போதி னகத்துச் சகமீன்ற
புத்தே டானு மறியானை
மாதி னிடத்தின் முனிவொழிய
வாரூர்ச்செம் பொன்மணி மறுகிற்
றூது நடத்துங் கவிராசன்
றுணைத்தாட் கமலந் தொழுதிடுவோம். (9

(இ-பொ.) மகரந்தம் நிறைந்த துளசி மாலையணிந்த திருமாலும், தாமரையிலமர்ந்து உலகைப் படைக்கும் பிரமனும் அறிய முடியாத சிவபெருமானை, பரவையார் கொண்ட ஊடலைத் தீர்க்கும் பொருட்டுத் திருவாரூரிலுள்ள அழகிய திருவீதியிலே தூது நடக்கச் செய்த நாவலர் கோனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய இரண்டு திருவடிகளாகிய தாமரைகளை வணங்குவாம். (எ-று.)

---

10. கூர்ம புராணம்

1212. உரவுநீர்த் திரைகடலின் மலரயனோ
டுலகனைத்து முந்தி பூத்த
கரியமால் வெண்கேழ லுருவாகித்
தனித்தேடி யின்னுங் காணா
முருகுலாந் தாமரைத்தாள் சிவப்பூரப்
புரமெரித்த முருவ லானைப்
பரவைபாற் றூதேகப் பணித்த நாவலன்
மலர்த்தாள் பணிதல் செய்வாம். (10)

(இ-பொ.) பிரமனையும் உலகங்களையும் நாபிக்கமலத்தில் தோற்றுவித்துக் கடலிற் றுயிலுங் கரிய திருமால் வெண்ணிறப் பன்றியின் உருவெடுத்து நிலத்தை அகழ்ந்து காணமுடியாத சிவபெருமானுடைய தாமரை மலர் போன்ற திருவடிகள் சிவக்கும் வண்ணம், திரிபுரங்களைச் சிரித்தெரித்த அச்சிவபெருமானைப் பரவையார்பால் தூது செல்லப் பணித்த நாவலனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பணிவாம். (எ-று.)

---

11. காசி காண்டம்

1213. கதழெரி நேமி தூண்டிக் கராங்கவர் குரவ னீன்ற
மதலையை யழைத்த செங்கண் மாலென வருந்து றாம
லதிர்கட லமுத மென்ன விருந்தமிழ்ப் பதிகம் பாடி
முதலைவாய்ப் பிள்ளை தந்த முதல்வனை வழுத்தல் செய்வாம். (11)

(இ-பொ.) தீயைப் போன்ற சக்கராயுதத்தை ஏவி முதலையால் பற்றப் பெற்ற கசேந்திரனைக் காப்பாற்றிய திருமாலைப் போல் வருந்தாமல், அமுதம் போன்ற செந்தமிழில் திருப்பதிகம் பாடி முதலை வாயிலிருந்து பிள்ளையை வரவழைத்த முதல்வனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை வாழ்த்தி வணங்குவாம். (எ-று.)

---

12. வாயு சங்கிதை

1214. மகத்தில் வாழ்சனி யாயனை யென்றுவான்
பகைத்த மூவெயில் செற்றவற் பாடியே
முகத்திற் கண்ணா முளைத்தெழு ஞானமா
மகத்திற் கண்ணா மடைந்தவாற் போற்றுவாம். (12)

(இ-பொ.) ,மகத்திற் புக்கதோர் சனியென்காணாய்' என்னுந் திருப்பதிகத்தைத் திரிபுரம் எரித்த சிவபெருமான் மீது பாடி முகத்திற் கண்ணும் அகத்தில் ஞானக் கண்ணும் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்குவாம். (எ-று.)

---

13. மச்ச புராணம்

1215. மாதுயரப் பவக்கடலை யொழித்தடிய
ரிடத்துறையு மழு லாளன்
மீதுசெழுந் தமிழ்மாலை பாடியுளத்
துறுமாலை விரைசேர் கஞ்சப்
போதுநிகர் பதம்வருந்தப் பரவைமனைப்
புறத்தணைந்து புகல்வீ ரென்று
தூதுசெலப் பணித்தருளுஞ் சுந்தரர்செந்
தளிர்த்துணைத்தாள் தொழுதல் செய்வாம். (13)

(இ-பொ.) மிக்க துயரந்தரும் பிறவிக் கடலை ஒழித்து அடியாருள்ளத் துறையும் மழுப்படையினையுடைய சிவபெருமான் மீது செழுந்தமிழ்ப் பாமாலை பாடி உள்ளத்துள மையலை, மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகள் வருந்தப் பரவையார் வீட்டினையடைந்து தூது சொல்வீராக வென்று வேண்டிய சுந்தரர் பெருமானுடைய சிவந்த தளிர் போன்ற இரண்டு திருவடிகளையும் வணங்குவாம். (எ-று.)

---

14. சங்கரநாராயணன் கோயிற் புராணம்

1216. ஏனமாய் மாயோன் வேலை யிருநிலங் கீண்டுங் காணாத்
தேனவிழ் கமல மன்ன சேவடி படியிற் றோய
நானவார் குழலி பங்கினாதனைத் தூது விட்ட
வானுலா பொழில்சூழ் நாவலன் மன்னனை வணங்கல் செய்வாம். (14)

(இ-பொ.) பன்றியின் வடிவெடுத்த திருமால் நிலத்தை இடந்து காண முடியாத தேன்பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகள் பூமியிற் படும்படி மயிர்ச்சாந்தினை யணிந்த பார்வதியை இடப்பாகங் கொண்ட சிவபெருமானைப் பரவையார்பால் தூதனுப்பிய, வானளாவிய பொழில்கள் சூழ்ந்த திருநாவலூரில் அவதரித்த சுந்தரர் திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

---

15. திருக்கூவப் புராணம்

1217. கன்று காமங் கழன்றிலர் தம்முரு
வென்று மோர்வாரி தென்றிருப் போன்றனை
யன்று தூது வனாக வரிவைபாற்
சென்று வாவென்ற தீரனை வாழ்த்துவாம். (15)

(இ-பொ.) வருத்துகின்ற காம இச்சை நீங்கப் பெருதவர் தம்முருவைக் காண்பதரிதென்றிருக்குஞ் சிவபெருமானை, அன்றொரு நாள் தூதுவனாகப் பரவையாரிடஞ் சென்று வருகவென்று வேண்டிய வல்லமையுடையவராகிய சுந்தரர் பெருமானை வாழ்த்துவாம். (எ-று.)

16. திருவையாற்றுப் புராணம்

1218. அத்தியுரித் தருளியெனை யாளியை யென்னம் மானைச்
சித்திரமா தங்கனைச் செந்தீப் புலியைப் போரேற்றைப்
பத்திவலை யால்வளைத்துப் பணியுந் தொண்டாற் பிடித்த
நத்திலகும் வயனாவ ணம்பி திருப்பதம் போற்றி. (16)

(இ-பொ.) யானையை உரித்தருளி என்னை ஆட்கொண்டவனை, என் தலைவனை, அழகிய உமாதேவியாரை அங்கத்திற் கொண்டவனை, செந்தீப் போன்ற கண்களையுடைய புலியை யுரித்த வீரனைப் பத்திவலையால் பிணித்துப் பணி செய்யுந்தொண்டினால் தன் வசப்படுத்திய சங்குகள் விளங்கும்படியான வயல்கள் சூழ்ந்த திருநாவலூரில் அவதரித்த நம்பியாரூரர் பெருமான் திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

17. நல்லூர்ப் புராணம்

1219. வற்ப டைத்து வருமுலை மாதுவா
ழிற்ப டைத்தை விடம்பிறி தின்றெனச்
செற்ப டைத்த செழும்பொழிற் குண்டையூர்
நெற்ப டைத்த வன்றன்னை நினைகுவாம். (17)

18. சீகாளத்திப் புராணம்

1220. மாத ரிற்கண் மழுவலத் தேந்திய
வாதி யைத்திரு மாலும றிகலாப்
பாத முற்றுஞ் சிவந்திடப் பண்டொர்நா
டூது விட்ட புலவற் றொழுவமால். (18)

(இ-பொ.) மழுப்படையை வலக்கையிலேந்திய சிவபெருமானது திருமாலுந் தேடிக்காணாத திருவடிகள் சிவக்கும்படியாகப் பண்டொருநாள் பரவையார் வீட்டிற்குத் தூதனுப்பிய நாவலராகிய சுந்தரர் பெருமானை வணங்குவாம். (எ-று.)

19. திருக்கழுக் குன்றப் புராணம்

1221. வழிவிடுத்த தொருநதியொண் பொன்கொணர்ந்த
தோராறு வரும்பொன் வாங்கிக்
கழிகொடுத்த தொருபொய்கை யளித்ததொரு
கயங்கரவு கரந்த சேயை

மொழிவசத்திற் கவைபோலிப் பரவையிணங்
குவதரிது முதல்வா வென்று
விழிதரித்து மரிகாணுப் பாதனைத்தூ
தேவினனை விழைந்து வாழ்வாம். (19)

20. செவ்வந்திப் புராணம்

1222. தீங்கும் பெருமா நிலத்திடருந் தீரத்தீரத் திரைகடலிற்
றூங்கும் பெருமாளுடன் வேதன் றுதிக்கும் படிக்குச் சுடர் கிரியா
யோங்கும் பெருமாள் புகழ்பரவி யோராயிரம் பொலனொரு மொழிக்கு
வாங்கும் பெருமாள் சவுந்தரியப் பெருமாள் பதத்தை வணங்கிடுவாம். (20)

(இ-பொ.) தீமைகளும் மாநிலத்து இடருந்தீரக்கடலில் துயிலும் திருமாலுடன் பிரமனுந் துதிக்கும்படி ஒளிவடிவாக ஓங்கி வளர்ந்த சிவபெருமானுடைய புகழைப்பாடி ஒரு சொல்லுக்கு ஓராயிரம் பொன் பரிசாகப் பெறும் பெருமானாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

21. திருவெண்காட்டுப் புராணம்

1223. இருமுதலை யடைந்துநரை முடியசைய
வாவண மொன்றேந்திப் போந்த
வொருமுதலை நவநீத புரியானை
வழக் கேற்றி யுரைத்த சோவை
யருமுதலை குழவிதர மறையொழுகுங்
கனிவாயா லமுதப் பாடற்
றருமுதலை யடிபணிந்து கருமுதலை
வேரினொடுங் தள்ளு வோமே. (21)

(இ-பொ.) இருமிக்கொண்டு நரைத்த முடியசையக் கையில் ஓலையொன்றை ஏந்திக் கொண்டுவந்த ஒப்பற்ற முதல்வனை, திரு வெண்ணெய் நல்லூரில், ‘நம்பி ஆரூரன் எனக்கு அடிமை’ என்னும் வழக்கை அவையில் கூறிய தலைவனை, பெரிய முதலை, குழவியைத் தரும்படியாக வேதம் பயிலுங் கனிவாயால் அமுதமயமான தேவாரப்பாடல் பாடியருளிய முதல்வராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை அடிபணிந்து நம் பிறப்பை வேரோடு நீக்குவாம். (எ-று.)

22. திருவாவடுதுறைப் புராணம்

1224. மணைப்பாச மகற்றவன்று வந்துவழக்
குரைத்தாண்ட வரதர் தம்மைத்
தினைப் போதிற் பரவையிடத் தெனைக்கூட்டு
மெனத்தூது செலுத்தி வாழ்ந்து
வினைப்போகங் கடந்தவ முனிவரெதிர்
கொளக்கரிமேற் வெள்ளி வெற்பின்
பனைத்தாரோ னுடன்போன பாவலன்பொன்
னடிக்கமலம் பரவு வாமே. (22)

(இ-பொ.) இல்வாழ்க்கைப்பற்றை அகற்ற அன்று திருவெண்ணெய் நல்லூரில் அந்தண வடிவங் கொண்டு வந்து ஓலைகாட்டி அடிமை என்று கூறி வழக்குரைத்து ஆட்கொண்ட சிவபெருமானை, திருவாரூரில் தினைப்பொழுதிற்குள் பரவையாரிடம் என்னைச் சேர்த்துவையும் எனத் தூதனுப்பி வாழ்ந்து, வினைப்போகங் கடந்த தவ முனிவர்கள் எதிர் கொண்டழைக்க யானை மீதேறிக் கயிலை மலைக்குப் பனம் பூமாலையணிந்த சேரமான் பெருமாள் நாயனுருடன் சென்ற பாவலனுகிய சுந்தரர் பெருமானுடைய பொற்ருமரை மலரை யொத்த திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

23. காஞ்சிப் புராணம்

1225. ஒருமணத் தைச்சிதைவு செய்துவல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
யிருமணத் தைக்கொண் டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச் சீர்த்திருத்தொண் டத்தொகைவிரித்த
பேரருளின் பெருமாளென்றுந்
திருமணக் கோலப் பெருமாண் மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வ மாமால். (23)

(இ-பொ.) புத்தூரில் நடைபெறத் தொடங்கிய திருமணத்தைத் தடுத்து வலிய வழக்கிட்டு ஆட்கொண்ட சிவபெருமானைக் கொண்டே இருதிருமணங்களைச் செய்து கொண்டு, அவனைத் தூதுவனுகவும் ஏவல்கொண்ட வன்மையுடையவனும், உலக மெல்லாம் உய்யப் பெருமை பொருந்திய அடியார் புகழ் மணங்கமழுஞ் சிறப்புடைய திருத்தொண்டத்தொகை பாடிய பேரருளினையுடைய பெருமையாளனும், என்றுந்திருமணக் கோலத்துடன் விளங்கும் பெருமையுடையவனும், வேதநெறிப் பொருளை விளக்கும் பெருமானுமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் எமது குலதெய்வ மாவார். (எ-று.)

24. பேரூர்ப் புராணம்

1226. ஆடு பாம்பணிந் தம்பலத் தாடிய வழகன்
பாடு பாப்பல பகர்ந்துமற் றிம்மையிற் பயனுங்
கூடு மேலையிற் பயனுங்கோ தனைத்தையு மொருவும்
வீடும் வாங்கும்வா ணிகத்துறு விரகனை வியப்பாம். (24)

(இ-பொ.) படமெடுத்தாடும் பாம்பை அணிந்த அம்பலத்தாடும் அழகன் மீது திருப்பதிகம்பல பாடி இம்மையிலடையத்தக்க பயனையும், மறுமையிலடையத் தக்க பயனையும், குற்றமனைத்தும் நீங்கப்பெற்ற வீட்டின்பத்தையும் வாங்கும் வாணிகத்துறையில் மேம்பட்டு விளங்கும் சுந்தரர் பெருமானை வியந்து பாராட்டி வணங்குவாம். (எ-று.)

25. திருவானைக்காப் புராணம்

1227. அடிமை யானவர்க் கருளையுந் தன்னையு முயிரிற்
படியிலா வகைய ளிப்பது பாருளோ ரறிய
வடிவின் மாண்டவ ளொருத்தி தூதென விறைவழங்க
நொடியின் மாலைசெய் வன்றொண்ட ரடிமலர் நுவல்வாம். (25)

(இ-பொ.) தமக்கு அடிமையானவர்கட்கு அருளையும் தன்னையும், ஏனை உயிர்கட்கு ஒப்பிலாவகையில் அருளையும் அளிப்பதை உலகோர் அறிய, அழகில் மாட்சிமைப்பட்ட பரவை நாச்சியாரிடம் தூதாக இறைவனை அனுப்ப விரைவில் திருப்பதிகம் பாடும் வன்றொண்டராகிய சுந்தரமூர்த்திகளுடைய திருவடித் தாமரைகளைத் துதிப்பாம். (எ-று.)

---

26. பூவாளூர்ப் புராணம்

1228. நீடியதண் கயிலாயத் தாடியிற்றனி
மலவுரு நிழற்ற வாங்கே
கூடிவரும் பெருங்கிழமை குறித்துமறு
பிறப்பிடத்துங் குழகன் முன்னின்
றூடியபெண் டகைதுனிதீர்த் துழிதருதோ
ழமையருள வுவப்பாற் பெற்றுப்
பாடியெனை யாண்டமுனைப் பாடிவள
நாடனையே பாடி வாழ்வாம். (26)

(இ-பொ.) உயர்ந்த குளிர்ந்த கயிலையினிடத்தே கண்ணாடியில் தனது மலமற்ற உருத்தோன்ற அப்பொழுதே அவ்வுருவம் தம்முடன் கூடிவரும் உரிமை குறித்து, அவ்வுரு மறு பிறப்பில் தோன்றிய விடத்தும் சிவபெருமான் முன்னின்று ஊடல் கொண்ட பரவையாரது வருத்தத்தைப் போக்கத் தூது செல்லும்படியான தோழமை அருள, மகிழ்வுடன் பெற்று திருப்பதிகம் பாடி என்னை ஆட் கொண்ட திருமுனைப் பாடி வள நாடனாம் சுந்தரனைப் பாடி மகிழ்வாம். (எ-று.)

---

27. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

1229. புண்ணியம் பொலிந்த கைலைமால் வரையிற்.
காட்சியிற் புணரிரு மடவார்
நண்ண விவ்வுலகின் மெய்யுறு போக
நயக்குநா ணணிதுனி தொலைய
வண்ணலே பலகாற் றூதினி லாட
வவ்வருட் கலப்பினால் வாய்ந்த
வெண்ணெயி லாண்ட நாவலூர் நம்பி
விரைமலர்ச் சேவடி பணிவாம். (27)

(இ-பொ.) புண்ணிய வடிவாய்த் திகழும் கயிலைமலையில் காட்சியிற் புணர்ந்த இருபெண்கள் இவ்வுலகிற் பிறந்து மெய்யுறு போகம் விரும்பும் நாளில் ஊடல் நீங்கக் கயிலைப்பதியே பலகால் தூது நடக்க, அவ்வருட்கலப்பினால் வாய்ந்த தொடர்பால் திருவெண்ணெய் நல்லூரில் அடிமையோலை காட்டி ஆட்

கொள்ளப்பெற்ற நாவலூரில் அவதரித்த நம்பி ஆரூரர் பெருமானது தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பணிவாம். (எ-று.)

28. உத்தரகோச மங்கைப் புராணம்

1230. அனைத்துலகும் பணிகேட்பத் தனிமுதன்மை
பூண்டுறையு மலகில் சோதி
கனைத்திருமு குரறரைந்த கவுணொசி
நோக்கிசை நடையிற் கழிமூப்பெய்தி
யெனக்கிவன் மற்றடியன் விலைக்கலங் காண்
மிணந்தணி ரென்றீர்த்தாட் கொண்ட
வினைப்பகைஞர் நாவலூர் நாவலர் தாட்டுணை
துணையா வேட்டு மன்றே. (28)

(இ-பொ.) உலகனைத்தும் பணி செய்யத் தனி முதன்மை பெற்று விளங்கும் அலகில் சோதியனாகிய இறைவன், கனைத்து இருமுகின்ற குரலையும், திரைந்தகன்னத்தையும், மங்கிய கண்களையும், அசைந்த நடையினையுமுடைய மிக்க மூப்படைந்த அந்தணவடிவங் கொண்டு வந்து "எனக்கு இவன் அடியன்; இதற்கான அடிமையோலை காண்மின் அந்தணர்களே" என்று கூறித் திருவெண்ணூர் அவையில் ஆட்கொண்ட, நம் தீவினைப்பகைஞராகிய நாவலூரில் அவதரித்த நாவலர் திருவடிகளைத் துணையாக விரும்புவாம். (எ-று.)

29. கடம்பர் கோயிற் புராணம்

1231. பழுதறத் துறந்து ளோர்க்கே பரமருள் பரனைப் பாவாற்
றொழுதொரு பரவை தன்பாற் றூதிடைச் செலுத்தித் தூய
மழவினை முதலை வாயின் வரவழைத் தந்த ணாள
ணழுகை தீர்த்தருளு மெங்கோ ணடியவர்க் கடிமை செய்வாம். (29)

(இ - பொ.) முற்றத் துறந்தவர்க்கே வீடளிக்கும் பரம்பொருளைப் பாமாலை பாடிப் பணிந்து, பரவையாரிடந் தூதனுப்பி, தூய குழத்தையை முதலை வாயினின்றும் வரவழைத்து, அக்குழந்தையின் தந்தையான அந்தணனது அழுகை தீர்த்தருளும் எமது தலைவனாகிய சுந்தரர் அடியவர்க்கு யாம் அடிமை செய்வாம்.(எ-று.)

30. சிவராத்திரிப் புராணம்

1232. மங்குனிறத் திருநெடுமால் வளையெயிற்றுப்
பெருங்கேழல் வடிவந்தாங்கி
யங்கணில முழுதுமுழு தறிவரிய
கமலமலரடிகள் சேப்பச்
சங்கணிகைக் குதலைமொழிச் சரவைவிழிப்
பரவையென்பா டன்பாலன்பாற்
பொங்கிருளிற் சந்திரனை நடப்பித்த
சுந்தரனைப்போற்றல் செய்வாம். (30)

(இ - பொ.) மேகம் போன்ற கருநிறம் பொருந்திய திருநெடுமால் வளைந்த பற்களையுடைய பன்றியின் வடிவெடுத்து நிலத்தை அகழ்ந்து அறிதற்கரிய தாமரை மலர் போன்ற திருவடிகள் சிவப்பெய்த, சங்கவளையலணிந்த கைகளையும், மழலை மொழியினையும், அம்புபோன்ற விழியினையுடைய பரவை என்பவளிடம் வைத்துள்ள அன்பால் மிகுந்த நள்ளிருளில் சந்திரனைத் தலையிலணிந்த சிவபெருமானைப் போற்றுவாம். (எ - று.)

---

31. புலியூர்ப் புராணம்

1233. முந்தானைப் பரவையெழு முழுவிடத்தை
யாரமுதா முனியா துண்ட
கந்தரனைப் பரவையின்பாற் றூதனுப்பிக்
கருணையினாற் கராவின் வாயி
லந்தரனை மகவுடலை யழைப்பித்துத்
தமிழ்ப்பாட்டி லருளைச் சேர்ந்த
சுந்தரனைத் தொழுதுளத்தே நினைந்து
நினைந்துருகி மலத்துரிசு தீர்வாம். (31)

(இ - பொ.) யாவர்க்கும் முற்பட்ட சிவபெருமானை, கடலிற்றோன்றிய நஞ்சை அமுதமென வெறுப்பின்றி உண்ட கரிய கண்டத்தையுடையவனைப் பரவையினிடம் தூதனுப்பி, அருளினால் முதலை வாயினின்றும் குழந்தையை வரவழைத்துத் தேவாரத் தமிழ்ப்பாடல்கள் பாடி அருள்பெற்ற சுந்தரர் பெருமானைத் தொழுது உள்ளத்தே நினைந்து உருகி மலமாகிய குற்றத்தைப் போக்குவாம். (எ - று.)

32. சீர்காழிப் புராணம்

1234. இருக்காதி மறைகாணா விணைத்தாளை
மறலிமிடி யிடருந் தாளை
திருக்கேள்வன் விழிபுனைந்த செழுந்தாளை
யரக்கன் முடிதிரித்த தாளை
யொருக்காலுக் கிருக்காலாய்ப் பரவைமனை
யகந்தேடி யுறுமா செய்தோன்
மருத்தாழா மலர்ந்ததுணை மலர்த்தாளை
யகத்தாழ வணக்கஞ் செய்வாம். (32)

(இ - பொ.) இருக்கு முதலிய வேதங்கள் காணாத இரண்டு திருவடிகளை, இயமன் முடியினை இடருந்தாளை, திருமகள் கணவனாகிய திருமால் கண்மலர் சாத்திய செழுமையான திருவடிகளை, இராவணன் முடிகளை நசுக்கிய திருவடிகளை, ஒரு முறைக்கு இருமுறையாகப் பரவையார் வீடு தேடிச் செல்லுமாறு செய்த சுந்தரர் பெருமானின் மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகளை அகத்துள் வைத்து வணக்கஞ் செய்வாம். (எ - று.)

33. சானந்த கணேச புராணம்

1235. அன்றுவன் செங்கலை யரும்பொன் னாக்கிய
தென்றமிழ் நாவலன் றீயவென் னையுந்
துன்றிய நலந்திகழ் தூய னாக்குவ
னென்றவ னிணையடி யிறைஞ்சு வேனரோ. (33)

(இ-பொ.) அன்று திருப்புகலூரில் வன்மை பொருந்திய செங்கல்லை அருமையான பொன்னாக்கிய, தென்றமிழ் நாட்டில் திருநாவலூரிற் றோன்றிய சுந்தரர் பெருமான் தீயவனாகிய என்னையும் நிறைந்த நலமுடைய தூயவனாக்குவனென்று அவன் இணையடிகளை வணங்குவேன். (எ-று.)

34. திருவாப்பனூர் புராணம்

1236. ஏற்றுயாகொடி நந்திருமுதுகுன்
றத்திறைவரைப் பொருள் குறித்தேத்திச்
சாற்றயபதிக விலையெனத் தனக்குத்தரும்
பொருள் முழுவது மணிமுத்
தாற்றினில் விழ்த்திக் குளத்தினி லெடுத்துப்
பரவையி லன்றுபுக் களித்தோன்
சேற்றினில் விளையாச் செழுமலர்க் கமலச்
சேவடி சென்னி சேர்த்துதுமே. (34)

(இ-பொ.) இடபக் கொடியினையுடைய நம் திருமுது குன்றத்து எழுந்தருளியுள்ள இறைவரைப் பொருள் குறித்துப் பாடி, பாடலுக்குப் பரிசாக அளித்த பொருள் முழுவதையும் மணி முத்தாற்றிலிட்டுத் திருவாரூரிலுள்ள கமலாலயக் குளத்தில் எடுத்துப் பரவையினிடங் கொடுத்தவராகிய சுந்தரரது, சேற்றினில் விளையாச் செந்தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தலைமேற்கொண்டு வணங்குவாம். (எ-று.)

35. திருப்பூவணப் புராணம்

1237. காதலுடன் மிகுமின்பக் கடிமணப்பூம்
பந்தரின்கீழ்க் கலைவல் லோர்முன்
மாதவன்போய் வந்திவனம் வழித்தொண்ட
னென்றி சைக்கும் வழக்கினாலே
பாதிமதி நுதற்பரவை யிடையிருளிற்
பங்கயப் பொற்பாதஞ் சேப்ப
சோதிதனைத் தூதுகொண்ட சுந்தரன்றாள்
சந்ததமுந் தொழுது வாழ்வாம். (35)

(இ-பொ.) காதலுடன் இன்பம் மிகும் கடிமணப் பந்தரின் கீழே கலைவல்ல அந்தணர் முன், பெரிய தவசிபோல் வந்து இவன் நம் வழித் தொண்டன் என்று கூறிய வழக்கினாலே, பாதிமதி போன்ற நெற்றியினையுடைய பரவையினிடத்தே நள்ளிருளில் தாமரைமலர்போன்ற அழகிய திருவடி சிவப்பச் சோதி வடிவினாகிய சிவபெருமானைத் தூதாகக் கொண்ட சுந்தரர் திருவடிகளை எப்போதுந் தொழுவாம். (எ-று.)

36. மயூரகிரிப் புராணம்

1238. நம்பினவன் முனிவினாற் பிரிந்தாலுந்
தடுத்தாள்வர் நாயன் மாரென்
றம்புவியெலா மறியச் சிவபெருமான்
றடுத்தடி யனாக்கி யையஞ்
செம்பதுமம் வருந்தநடந் தெடுத்திட்டும்
பரவை யிடைச் சேர்த்துந் தூதா
லிம்பர்மிசை யாளவந்த சுந்தரன் றன்
பாதமென திதயத் தாமே, (36)

(இ–பொ.) நம்பப்பெற்ற அடியவன் சினத்தால் பிரிந்தாலும் தலைவன் தடுத்து ஆட்கொள்வான் என்று அழகிய உலகம் எல்லாம் அறியச் சிவபெருமான் தடுத்தாட் கொண்டு, அடியனாக்கி, அழகிய மென்மையான தாமரைமலர் போன்ற திருவடிகள் வருந்த நடந்து, பரைவையாரிடந் தூதாகச் சென்று, இவ்வுலகில் ஆட்கொள்ள வந்தவதரித்த சுந்தரர் பெருமான் திருவடிகள் என் மனத்திடத்ததாம். (எ–று.)

37. திருமயிலைப் புராணம்

1239. அறைகழ லாரூரர் தமைமணி
மருகிற் றூதுவிடுத் தருளினானை
நிறைவழு வாப்பரவை படிந்துயர்ந்த
முலைக்கிரி சார்ந்துநில மேலோங்க
முறைதவருத் திருப்பதிக மாரிபொழிந்
திடும்புயலை முதிய ஞான
மறையவனை யெமையாளுஞ் செந்தமிழ்ச்
சுந்தரனை நிதம்வணக்கஞ் செய்வாம். (37)

(இ-பொ.) ஒலிக்கின்ற வீரக்கழலினையணிந்துள்ள திருவாரூர்ப் பெருமானை அழகிய தெருவில் தூதனுப்பியவனை, கற்பு வழுவாத பரவை நாச்சியாரை அணைந்து உயர்ந்த தனமாகிய மலையைச் சார்ந்து உலகெலா முய்யத் தேவாரத் திருப்பதிக மழை பொழிந்திடும் மேகத்தை, முதிய ஞான மறையவனை, எமை ஆளும் செந்தமிழ்ச் சுந்தரனை நாடோறும் வணங்குவாம். (எ-று.)

38. ஆதிபுரிப் புராணம்

1240. கடுத்தாளுங் களமறைத்துத் தொடர்ந்து
வழக்குரைத் துநின்று மண்ணிற்காண
வெடுத்தாளுஞ் சாதனமுந் தனதையன்
றந்தைகை யினெழுத்துங் காட்டித்
தடுத்தாளும் பெருமான்றன் பதஞ்சேப்பப்
பரவைமனை தனக்குத் தூது
விடுத்தாளு மகிமைபெறு சுந்தரன்
ருளினை சிரசின்மேற் கொள்வோமே. (38)

(இ-பொ.) நஞ்சுபொதி கண்டத்தை மறைத்து, தொடர்ந்து கற்ருேர் அவையின் கண் வழக்குரைத்து நின்று, கண்ணுற்காண்பதற்குரிய சாதனமாகிய அடிமை ஓலையிலே தகப்பன் அவன்தந்தை ஆகியோர் கையெழுத்துங் காட்டித் தடுத்தாட் கொண்ட சிவபெருமானுடைய திருவடிகள் சிவக்கும் வண்ணம் பரவை வீட்டுக்குத் தூதனுப்பும்படியான மகிமை பெற்ற சுந்தரர் பெருமானுடைய திருவடிகளைச் சிரமேற் கொள்வாம். (எ - று.)

---

39. திருவாலங் காட்டுப் புராணம்

1241. சுருதியு மரியும் வானோர் தொகுதியுந் தொழும்பு பூண்டுங்
கருதியுந் தெளிய மாட்டாக் கடருளை யிரவி னூடே
யொருதிரு வனையா டன்பாற் றூதென வுழல வேவிப்
பருதியி னுலக நல்கு நம்பிதாள் பரவிச் சேர்வாம். (39)

(இ - பொ.) வேதமும் திருமாலும் தேவர்கள் கூட்டமும் அடிமை பூண்டும் நினைந்தும் அறிய முடியாத கடவுளை, நள்ளிரளிலே ஒப்பற்ற திருமகளையொத்த வடிவழகுடைய பரவை நாச்சியாரிடத்தே தூதாகச் சென்று அலையும்படி ஏவி, சூரியன் போல் ஞான ஒளியைப் பரப்பி உலகை உய்விக்கும்படியான, நம்பியாரூரர் திருவடிகளைத் துதித்து அவரை அடைவாம். (எ - று.)

---

40. திருமுருகன் பூண்டிப் புராணம்

1242. துங்க மால்விடைச்சோதி யைப் பரவைபாற்
றூது சென்றிடச் செய்தும்
வெங்க ராவாயின் மதலையை
யாவரும் வியப்புற வருவித்துந்
தொங்க லாரிதழிச் சடைத்தம்பி
ரான்ருேழ ஞுயரு ளின்பந்
தங்கு பாப்பல பாடிய சுந்தரன்
சரண மஞ்சலி செய்வாம். (40)

(இ - பொ.) தூய்மையான திருமாலாகிய விடையின்மீது எழுந்தருளியுள்ள சோதியைப் பரவையாரிடம் தூது செல்லும்படி செய்ததும், கொன்றை மலர்மாலையை அணிந்துள்ள சடையினையுடைய சிவபெருமான் தோழனுய் அருளின் பந்தங்கும் பாப்பல பாடிய சுந்தரர் திருவடிகளைக் கைகூப்பி வணங்குவாம். (எ - று.)

---

41. பவானி கூடற் புராணம்

1243. தடுத்தவர் கமலமுகிழ் முலைக்கனிவாய்த்
தண்ணகைக் கரியமென் கூந்தல்
வடத்தளி ருதர மரகதப் பசுந்தோண்
மதரரி விழிமலை மடந்தை

யிடத்திறை யவனையிருபதஞ் சிவப்ப
விரவினிற் பரவை பாற்றூது
நடத்திய வாரூர்ச்சுந் தரப்பெருமா
ணகைமலர்ச் சேவடி தொழுவாம். (41)

(இ-பொ.) தன்னைத் தடுத்து ஆட்கொண்டவராகிய, தாமரை முகை யொத்த தனங்களையும் கொவ்வைக் கனிபோன்ற வாயினையும், குளிர்ச்சி பொருந்திய முத்து போன்ற பற்களையும், கரிய மேன்மையான கூந்தலையும், ஆலிலை போன்ற வயிற்றினையும், மரகதம் போன்ற பசிய தோளினையும், மதர்த்த செவ்வரி பரந்த கண்களையுமுடைய மலைமகளாகிய பார்வதியை இடப்பாகங் கொண்டு விளங்குஞ் சிவபெருமானை, இரண்டு திருவடிகளுஞ் சிவக்கும்படி இரவில் பரவையார் வீட்டிற்குத் தூதனுப்பிய, திருவாரூர்ச் சுந்தரர் பெருமானது ஒளி பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம். (எ-று.)

42. கருவூர்ப் புராணம்

1244. வெள்ளியங் கிரியை நீங்கி நாவலூர் மிளிரத் தோன்றி
யொள்ளிய தோகை பாகன் சாதனத் தோட்டிக் குள்ளாய்த்
தெள்ளிய பரவை யாழ்ந்து சங்கிலி சிமிழ்ப் புற்றுசு
தள்ளிய களிற்றின் பாத தாமரை தலைமேற் கொள்வாம். (42)

(இ-பொ.) கயிலைமலையை விட்டு நீங்கி, திருநாவலூரில் அவதரித்து, ஒளி பொருந்திய தோகைமயில் போன்ற சாயலை யுடை உமை பங்கன் அருளிய அங்குசத்திற்கு அடங்கித் தெளிந்த பரவையாரின்பத்து ஆழ்ந்து, சங்கிலியார் தனங்களைப் பொருந்தி, குற்றங்களைப் போக்கிய ஆண்யானை போன்ற சுந்தரர் பெருமானது திருவடித் தாமரைகளைத் தலைமேற் கொள்வாம். (எ-று.)

43. திருச்சுழியற் புாரணம்

1245. வேலாலவ் வரைதடிந்த வித்தகனைப் பெற்றவனைக்
கீலால முடியானைக் கிளர்சனகா தியர்க்கருளும்
பாலால நிழலானைப் பரவைபாற் றூதுவிட்ட
வாலால சுந்தரன்ற னடிக்கமலம் பழிச்சுமால். (43)

(இ-பொ.) வேலாயுதத்தால் கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகப் பெருமானை ஈன்றவனை, பூமாலை யணிந்த முடியை உடையவனை, ஞானவொளி பொருந்தி சனகாதி முனிவர் நால்வர்க்கும் ஆலின்கீழ் அறமுரைத்தவனைப் பரவைபால் தூதுவிட்ட ஆல சுந்தரன் திருவடித் தாமரைகளைப் போற்றித் துதிப்பாம். (எ-று.)

44. மருதூர்ப் புராணம்

1246. காதுகொண்டு கேட்கு மவர்க்கின்ப வெள்ளங்
கரைபுரள மனங்கொண்டு களிக்கின் னேர்கட்
கேதுகொண்ட பாசவிருட் படலநீக்கி யிணையி
லருட்சுட ரெங்கு மெறிப்ப வெற்பின்

மாதுகொண்ட பாகர்விருப் பாகத் தோன்றி
வரமதுர பாகப் பாலை மல்கத்
தூதுகொண்டு நடந்திளைத்த வடியிற் சாத்துஞ்
சுந்தரர்தஞ் சீர்த்தியினைத் துதித்தல் செய்வாம். (44)

(இ-பொ.) காதாற் கேட்பவர்க்கு இன்ப வெள்ளங் கரை புரண்டோட மனத்திற் கொண்டு களிக்கின்றவர்கட்குப் பாசவிருட் படலத்தை நீக்கி இணையிலா அருட்சுடர் எங்கும் எறிப்ப, பார்வதி பங்கனும் இறைவன் விருப்பாகத் தோன்றிவர, மதுரமான பாலை ஒப்ப, தூது சென்று நடந்திளைத்த இறைவனடியிற் சாத்துஞ் சுந்தரர் தம் பாமாலையின் சிறப்பினைப் போற்றி வாழ்வாம். (எ-று.)

45. ஆதித்தபுரி புராணம்

1247. இருமுலைமா மலையின்மணிப் பணிபூட்டிப்
பரவையமு தின்பந் துய்த்தோன்
மருமுறியைக் கிழித்து மறியலை முன்ன
மேவியதோர் பயத்திற் போன
வொருமுதலை வரவழைத்துக் கடனாகத் தோன்றல்
வரவுரைக்கும் பாடற்
றருமுதல்வ னாலால சுந்தரன் சேவடிப்
பதுமஞ் சார்ந்து வாழ்வாம். (45)

(இ-பொ.) இரண்டு முலைகளாகிய மலையின்கண் மாணிக்க அணிகளை அணிந்து பரவையினிடம் அமுத இன்பந் துய்த்தவனும், இறைவன் காட்டிய அடிமை ஓலையைக் கிழித்து மறித்து அலைத்து அவையினர் முன் அச்சத்துடன் சென்றவனும், ஒரு முதலையின் வாயினின்று குழந்தை வரப்பதிகம் பாடிய முதல்வனுமாகிய ஆலால சுந்தரரின் திருவடித் தாமரைகளை அடைந்து வாழ்வாம். (எ-று.)

46. திருக்குற்றாலப் புராணம்

1248. புவியாசைக் கழைசுழிந்து தலைவரா
வணக்கூடம் புகுந்து பொற்பூண்
டவிராத கொம்பிரண்டு மேவியொரு வல்லி
தொடர் தளையை நீவிக்
குவியாரம் புனைபரவை கொங்கை யானையின்
பொருட்டு குழைதோய் சங்கச்
செவியானைத் தூதுவிட்ட கவியானை
தனைத்தின முஞ்சிந்தை செய்வாம். (46)

(இ-பொ.) புவியாசையாகிய கரும்பை வெறுத்துத் தலைவராம் சிவபெருமான் அடிமையா வணந் திருமணப் பந்தரில் கட்டப் பொற்பூணணிந்த தனங்களையுடைய வல்லி போன்ற புத்தூர் சடங்கவி சிவாசாரியார் பெண்ணின் திருமணந் தவிர்ந்து, மாலையணிந்த தனங்களையுடைய பரவையார் பொருட்டுச் சங்

கக் குழையினைக் காதிலணிந்துள்ள சிவபெருமானைத் தூதனுப்பிய கவியானையாகிய சுந்தரரைச் சிந்தை செய்வாம். (எ-று.)

47. திருநெல்வேலிப் புராணம்

1249. கடிகமழ் கொன்றையங் கண்ணி வேய்ந்துவெண்
பொடியணி மேனியன் புகழைப் பாடவே
படிமிசை நாவலம் பதியில் வந்தவ
ரடியிணை சிரமிசை யணிந்து போற்றுவாம். (47)

(இ-பொ.) மணம் கமழ்கின்ற கொன்றைமலர் மாலையினை யணிந்து வெண்டிருநீற்றைப் பூசியுள்ள திருமேனியினையுடைய சிவபெருமான் திருப்புகழைப் பாடுதற்காகவே இப் பூவுலகில் திருநாவலூரில் வந்தவரித்த சுந்தரர் பெருமானுடைய இரண்டு திருவடிகளையுந் தலைமேலணிந்து போற்றுவாம். (எ-று.)

48. மருதவனப் புராணம்

1250. முதலை வளரா ருறு தந்திட
வையாறெய்தி முடிவில் லாத
முதலை நெடுந்தமிழொடு செந்தமிழ்க் கவிதையாற்
றுதித்து மொழியா விக்கண்
முதலையொரு மகவுதரச் செய்துகந்த
முன்னோனை முகிழ்மென் கொங்கை
முதலையிதழ்ப் பரவை மணாளனை வணங்க
நமதெண்ண முந்துந் தானே. (48)

(இ-பொ.) முதலைகள் வாழும்படியான காவிரியாறு வழிவிடத் திருவையாறடைந்து, முடிவில்லாத முதல்வராகிய சிவபெருமானை மேன்மைபொருந்திய செந்தமிழ்த்திருப்பதிகம் பாடித் துதித்து, தடாகத்திலிருந்த முதலையைக் குழந்தை தரச்செய்து மகிழ்ந்த முன்னோனை, முகிழ்த்தமென்மையான கொங்கையினையுடைய பரவை நாச்சியாரின் கணவனை வணங்க நமது மனம் முற்படுக. (எ-று.)

49. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

1251. பரவையெழு கொடுங்காள விடத்தை
யெடுத்துண்போனைப் பாங்கி னோங்கப்
பரவையணி சடையானை நெடியதிரி
சூலமெனும் படையி னானைப்
பரவையுறு புலவிதனைத் தீர்த்து
வருகென விடுத்த பண்பினானைப்
பரவையிரு நூறுதரந் தினமனமே
யுனக்குறுதி பகர்கின் றேனே. (49)

(இ-பொ.) கடலில் தோன்றிய நஞ்சை எடுத்துண்டவனை, பொங்கிவந்த கங்கையைச் சடையில் வைத்தவனை, நீண்ட திரிசூலப்படையுடையவனாகிய சிவ பெருமானைப் பரவையினிடத்துண்டான ஊடலை தீர்த்து வருக எனத் தூதனுப்பிய பெருமையுடைய சுந்தரமூர்த்திசுவாமிகளை, நாள்தோறும் இருநூறுமுறை துதிக்க வேண்டும் மனமே! யான் உனக்கு உறுதியாகக் கூறுகின்றேன். (எ-று.)

50. மாயூராசலப் புராணம்

1252. அத்தாவென் னாருயிரே யம்பொன்மலை
வல்லிபங்கா வரனே யென்னா
வித்தாரம் புகன்றுருகிப் பழிச்சுநருக்
கருள்பரியும் விமலன் கேட்பப்
பித்தாவென் றரும் பதிக மோதுதிரு
நாவலூர் பெருமான் றாளை
யித்தேகத் தியாங் துதிக்க வெத்துணை
தேகங்கடவ மியன்ற வம்மா. (50)

(இ-பொ.) தலைவனே! ஆருயிரே! உமைபங்கா! அரனே! என்று வித்தாரக் கவிபாடித் துதிக்கின்றவர்களுக்கு அருள்புரியும் விமலன்கேட்டு மகிழப் "பித்தா பிறைசூடி" என்னும் அருமையான திருப்பதிகம் பாடிய திருநாவலூர்ப் பெருமான் திருவடிகளை இப்பிறவியில் துதித்தால் மட்டும் போதாது. இன்னும் பல பிறவியெடுக்க வேண்டும். (எ-று.)

51. திருப்பெருந்துறைப் புராணம்

1253. வரைபல பலபெ யர்த்து மருவு பன்னாண் முயன்று
புரையறச் செறித்தோ ருந்தி கடந்தமால் புந்திநாணத்
தரைகிழித் தெழுமோ ருந்தி தான்வழி விடமுன் பாடி
விரைய வையாறு மேய விமலர்தாள் சென்னி சேர்ப்பாம். (51)

(இ-பொ.) பலமலைகளைப் பெயர்த்துப் பன்னாள் முயன்று அணைகட்டிக் கடல் கடந்த திருமால் நாணும்படி தரையைக் கிழித்துக்கொண்டோடும் காவிரியாறு வழி விடும்படி 'பரவும்பரிசு' என்னும் பதிகம்பாடி விரைவில் திருவையாற்றையடைந்த மல மற்றவராகிய சுந்தரர் திருவடிகளைத் தலைமேற்சூட்டிக் கொள்வாம். (எ-று.)

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
हरिद्वार

PRINTED AT THE RAJAN ELECTRIC PRESS, MADRAS-1